# மதராஸ் புல்லடின் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் IV.] 1912-ம் ஞு டிசம்பர் மீ 10உ [இலக்கம் 2.
v 1914

### மூன்றுவது சம்புடம் மூன்றுவது லக்கத்தின் சுருக்கம்.

## கூட்டுத்தொழிலின் மூலாதாரமான சித்தாந்தங்கள்.

———(:o:)———

சென்னை திருவல்லிக்கேணி கெல்லெட் இன்ஸ்டிடியூடில் ரிஜிஸ்ட்ராரவர்கள் செய்த உபன்யாசத்தை ஒட்டியது.

இன்று என்முன் இருப்பவர்கள் அனேகமாய் எல்லாரும் மாணுக்கர்களானதால் கூட்டுத்தொழிலின் ஆசாரத்தைப்பற்றிப் பேசாது முறையைப்பற்றியும் சித்தாந்தத்தைப்பற்றியுமே பேசுகிறேன்.

மனிதர்கள் ஒன்று சேர்ந்து வேலைசெய்வதின் கருத்து மூன்று விதமாய் இருக்கலாம்; எல்லோரும் ஒருவர் லாபத்துக்காக வேலைசெய்யலாம் (உதாரணம் அடிமைகள் வேலைசெய்வது); அல்லது ஒருவரோ மற்றவர்கள் எல்லோருடைய நன்மைக்காக வேலைசெய்யலாம்; அல்லது, எல்லோரும், பொதுவாய், வேலைசெய்யும் எல்லோருடைய நன்மைக்காக வேலை செய்யலாம். கூட்டுத்தொழிலின் தட்பமென்னவென்றால் ஒவ்வொருவனும் தன் அயலான் நன்மையைத் தேடுவதினுலேயே தன் நன்மையைத் தேடிக்கொள்ளுகிறுன். கூட்டுத்தொழில் முறையில் உழைப்பவர்களுக்கெல்லாம் நடு நீதியாய் லாபத்தில் ஒரு பாகம் கிடைக்கிறது. லாபத்தைப் பங்கிடுவதில் கஷ்டமானவிதிகளொன்றும் கூட்டுத்தொழில் முறையில் வேலைசெய்பவர்கள் ஏற்படுத்திக்கொள்ளுவது இல்லை. தவிரவும் ஏழைகள் பணக்காரர்கள் என்னும்வித்தியாசம் இல்லாமல் தேச

161982

த்திலுள்ளவர்களெல்லோரும் பொதுவாய் எல்லா ஐசுவர்யத்தையும் நிரவிப் பகிர்ந்து அனுபவித்து வரவேண்டுமென்பதும் அதன் கொள்கையல்ல அவரவர்களுக்கு இப்போதுள்ள தனித்தனியான சொத்து பாத்தியத்தில் பிரவேசிப்பது இல்லை; ஆனால் ஒவ்வொருவரையும் பொது நன்மைக்காகக் கொஞ்சம் கொடுக்கவேண்டுமென்பதுதான் அதன் குணம்.

இம்முறையில் இனாம் கேட்பதில்லை; ஏனென்றால் கொடுப்பவனுக்கு அது நலமாயினும் வாங்குபவன் கௌரவத்தை அழிக்கிறது. ராஜாங்கத்தில் கொடை கொடுத்தால் மனதுக்கு சம்மதம் உண்டாகக்கூடாத பந்தங்களுடன்தான் கொடுப்பார்கள். ஒருவனிடம் கொடைவாங்குவதை கௌரவமுடையவன் விரும்பமாட்டான். அதேமாதிரி கூட்டுத்தொழிற் சங்கமும் நன்கொடையொன்றையும் அபேக்ஷிக்காது. ஒருவன் கொடுத்தால் அதற்குத் தகுந்த பிரதி பலன் அவன் அடைவதானால்தான் அக்கொடையை ஏற்றுக்கொள்ளலாம். வெகுமானமின்றிச் செய்யப்படும் வேலையையும், யோசனையையும் சாமர்த்தியத்தையும் மட்டுந்தான் பெற்றுக்கொள்ளும்; பணத்தை நன்கொடையாகக் கொடுத்தால் மறுக்கும்.

இந்த தேசத்தில் ஜனங்கள் மற்றவர்களிடம் தருமம்பெறப்பாத்தியமுண்டென்று நினைக்கிறார்கள். இது கூட்டுத்தொழில் கோட்பாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டதல்ல. "பஞ்ச்" என்னும் பத்திரிகையில் ஒருகதை எழுதியிருக்கிறது. ஒரு அமெரிக்கா தேசத்து மனிதன் லண்டனில் வந்திருந்தபோது அங்கங்கு சில்லரை "இனாம்" கொடுப்பதில் அலுத்துப்போய் வண்டி ஏறினார். வாலிபன் ஒருவன் பக்கத்தில் வந்து "வழக்கப்படி" உள்ள காசு கொடுக்கும்படி கேட்டான். அவர் எனக்கு என்ன செய்தாய் காசுகேட்கஎன்றார். வண்டியில் ஏறும்வரையில் ஏறுவதைப் பார்த்துக்கொண்டிருக்க இல்லையா என்று கேட்டானாம். அவன் ஒரு காரணம் கண்டுபிடித்துவிட்டான். ஒன்றும் காரணம் இல்லாமல் பொருள் கேட்பது பிழை.

ஐக்யநாணயச் சங்கங்கள் பணத்தை வீண்செலவு செய்வதை ஒப்புக்கொள்ளுவது இல்லை. ஆகையால் சங்கத்தில் கடன் வாங்குவதில் அவமானம் ஒன்றுமில்லை. நியாயமான செலவுக்குத்தான் சங்கங்கள் கடன்கொடுக்கின்றன. ஐக்யநாணயச்சங்கங்கள் கடன் வாங்காதே என்று சொல்லுவது இல்லை. பிரதிப்பலன் கொடுக்கக்கூடிய உபயோகத்தில் செலவிடத்தான் கடன் வாங்க வேண்டும் என்று சொல்லுகின்றன. கடன் என்றால் மனிதர்களுக்கு எப்போதும்பயம். ஆயினும் பிறர்பணத்தை உபயோகப்படுத்தினால் அந்தப்பணத்தின் உபயோகத்துக்குக் கூலியல்லது வாடகை கொடுத்துவிட வேண்டுமென்று வெகு காலமாய் ஜனங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் கடன் வாங்குவது தன்மானத்துக்குக் கேடு விளைப்பதில்லை. கடன் வாங்குவது சிலவேளையில் நியாயமாக நினைக்க கூடியதாயுமிருக்கலாம். ஒருவனுக்கு



ஒரு பெரிய கிராமம் பிதிரார்ஜிதமாய்க் கிடைத்து அன்று ஆகாரத்துக்கு இல்லாமல் இருந்தால், நிலத்தைவிற்று ஒரு வேளை சாப்பிடவேண்டுமென்று எண்ணுவது பிழையென்று யாரும் ஒப்புக் கொள்ளுவார்கள். அந்தமாதிரி எவ்வளவோ சந்தர்ப்பங்களில் கடன்வாங்குவது பிழையல்லாததாய் இருக்கலாம்.

சாதாரணமாய் உலகத்தில் நம்பிக்கையின்பேரில் மட்டும் ஒருவரும் கடன் கொடுப்பது இல்லை. தகுந்த ஜாமீன் வேண்டும். ஐக்ய நாணயச்சங்கத்தில் அப்படியில்லை. ஏனென்றால் கடன்வாங்கத்தகுந்தவரைத்தான் அவைகள் மெம்பர்களாய்ச்சேர்த்துக் கொள்ளுகின்றன. சங்கங்களில் மெம்பர்கள் ஒருவருக்கு ஒருவரிடம் உள்ள நம்பிக்கை விளங்கும்படி ஒவ்வொருவரும் மற்றவர் கடன்களுக்கு கூட்டு ஜவாப்பாகிறார்கள். சத்தியமுடையவர்கள்தான் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப் படுகிறனராகையால் இதில் அபாயமில்லை.

இந்த ராஜதானியில் கிராம நாணயச் சங்கங்களில் கடன் வாங்குபவனாவது அவன் ஜாமீந்தாராவது நிலம் உடையவனாயிருப்பானாகையால் நிலம் விற்கப்பட்டாவது கடன் ஈடாகிவிடும். இன்னும் முழுதும் நபர் ஜாமீனில் நம்ப ஆரம்பிக்க இல்லை.

கூட்டுத்தொழில் மூன்று வகையாகும்:-நாணயத்துக்காக, சாமான்கள் விற்பனைக்காக, சாமான்கள் உற்பத்திக்காக.

இந்த தேசத்தில் நமக்கு நாணயச் சங்கங்கள்தான் ஆரம்பமாய்த் தோற்றுகிறது. இங்கிலாந்து தேசத்தில் சரக்குவாங்கி விற்கும் சங்கங்கள் தான் ஆரம்பமாய் இருக்கிறது. 1906-ல் 1400-ஸ்டோர்கள் அங்கு இருந்தன. அவைகளின் முதல் 330-லக்ஷம் பவுன். 630-லக்ஷம் பவுன் வருஷவியாபாரம். நம் தேசத்தில் இந்த மாதிரிப் பிரயத்தனம் பிரபலமடைய இல்லை. திருவல்லிக்கேணி ஸ்டோர்தான் நிகரில்லாததாய் ஓங்கி இருக்கிறது. மதுரை கோயம்பத்தூர் ஸ்டோரும் பஞ்சையல்ல; ஆயினும் நாணயச் சங்கங்கள் செய்யும் வியாபாரத்துக்கு ஸ்டோர்கள் ரொம்பவும் குறைவுதான். ஸ்டோரில் சில கஷ்டங்கள் உண்டு (1) கொஞ்சமாவது முதல் வேண்டும்; நாணயச் சங்கம்போல் கடனில் வியாபாரம் செய்யமுடியாது (2) வேலை செய்பவர்கள் அதிகமாக வேண்டும் (3) ஓயாது வேலை செய்யவேண்டும் (4) கடன் கட்டு வியாபாரம் உதவாது.

நாணயச் சங்கங்கள் இந்த ராஜதானியில் கொஞ்சம் பிரபலமாயிருக்கின்றன. இவ்வகைச் சங்கங்களுக்கு உற்பத்தி ஸ்தலம் ஜர்மனி. ஆரம்பகர்த்தா ரய்பெய்சன் என்பவர். பலர் கூட்டு ஜவாப்பால் சொத்து பெலன் இல்லாமலே கடன் வாங்கலாம் என்று அவர்தான் நிர்ணயித்தார்.

கூட்டு ஜவாபில் கடன் வாங்குவது சிறிய ஊர்களில் சாத்தியம். ஒருவரை ஒருவருக்கு நன்றாய்த் தெரிவதால் அபாயமில்லை,

நகரச் சங்கங்கள் இந்த ராஜதானியில் 30-இருக்கின்றன; மெம்பர்கள் பங்குத்தொகை யவ்வளவுதான் பாத்தியப் படுவார்கள். இது ஜாயிண்டு ஸ்டாக்கு பாங்கிபோல்தான். ஆனால் பின்சொன்ன பாங்கிகளில் பங்கெடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் எண்ணங்கள் நேர்விரோதம்; கூட்டுத்தொழில் சங்கங்களில் எல்லாரும் பங்கெடுத்து இருப்பவர்கள்தான். ஒவ்வொருவரும் மற்றவர்கள் நன்மையைத் தேடுவார்கள்.

## இந்தியாவில் கூட்டுத்தொழில் ஏற்பட்ட சரித்திரம்.

ம-ா-ா-ஸ்ரீ ராவ்சாயப் கே. விஜயராகவாச்சாரியார் அவர்கள் எம். ஏ. எழுதியது.

ஐக்ய நாணயச் சங்கச் சட்டம் (இந்தியா 1904-ளுத்திய 10-வது ஆக்ட்) 1904-ளு ஆரம்பத்தில் அமுலுக்கு வந்தது. இந்த ஆக்ட் நாணயச் சங்கங்களைப்பற்றி மட்டுந்தான் ஏற்பட்டதென்று அதன் பெயரிலிருந்து விளங்கும். ஆனால் அது நாட்டு நாணயச்சங்கம், நகர நாணயச்சங்கம் என்னும் இருவகைச் சங்கங்களுக்கும் சம்பந்தமானது. நகர நாணயச் சங்கங்கள், தொழிலாளிகள் வியாபாரிகள் ஒருவரை ஒருவர் தெரியாமல் இருக்கக்கூடிய பெரிய ஊர்களில் வசிப்பவர்களின் உபயோகத்திற்காகவும், கிராமச்சங்கங்கள் முக்கியமாய் விவசாயிகளாயும் ஒருவரை ஒருவர் தெரிந்தும் இருக்கும் சின்ன இடங்களில் வசிப்பவர்களுக்காகவும் அமைக்கப்படுவது. கிராம நாணயச் சங்கங்களில் மெம்பர் பொறுப்பு வரையறுக்கப்படாதது; அதாவது, ஒவ்வொருவரும் மற்றொவ்வொருவருடைய கடனுக்கும் முழு பாத்தியத்துக்குள்ளாவார்கள். நகரச் சங்கங்களில் பங்களவுதான் பாத்தியம் ஏற்படும். இரண்டுவகைச் சங்கங்களிலும் விவகாரங்கள் குறிப்பிட்ட இடங்களில்தான நடக்க வேண்டும். 10 நபர்களுக்குக் குறையாமல சேர்ந்து ஒரு சங்கமாய் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று மனுசெய்து கொண்டால் அப்படியே ரிஜிஸ்டர் செய்யப்படுவார்கள். இந்த ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்படும் சங்கங்களின் விவகாரங்களுக்குக் கவர்ன்மெண்டார் ஸ்டாம்பு, ரிஜிஸ்ட்ரேஷன், தொழில் வரி இவைகளை வஜா செய்து இருக்கிறார்கள். ஆரம்பத்தில் கவர்ன்மெண்டார் சங்கங்களுக்குக் கடன் கொடுத்து பணஉதவி செய்தார்கள். ஒவ்வொரு ராஜதானிக்கும் ஒரு ரிஜிஸ்ட்ரார் நியமிக்கப்பட்டு ஆக்டை பரிபாலித்துவருகிறார்.

சென்னை கவர்ன்மெண்டார் கனம் P. ராஜகோபாலாசாரியார் அவர்களை முதல் ரிஜிஸ்ட்ராராய் நியமித்தார்கள். அவர் அதற்குத்தகுந்தவர். 1904-ளு ஜூலை-மீ வேலை ஒப்புக்கொண்டார். புதிய ஏற்பாட்டை நடப்புவிக்க அவர் சக்தி உடையவராய் இருந்தார். கூர்மையான புத்தியுள்ளவரா யிருப்பதுடன் ஜனங்களுடைய குணத்தை நன்றாய்த் தெரிந்தவர். இந்த தேசத்து ஜனங்கள் கூட்டுத்தொழிலைப்பற்றி ஒன்றும் தெரியாதவர்களாயும் நவீன ஆசாரங்களை எளிதில் கைப்பற்றாதவர்களாயும் இருந்ததுதான் அவருக்கு முக்கிய சிரமம். மேலும்இந்த ராஜதானியில் சிலர் கவர்ன்மெண்டார் இச்சங்கங்களை ஏற்படுத்



துவதில் ஏதோ அந்தரங்கத்தில் ஒரு கபடக்கருத்து வைத்துக்கொண்டு இருக்கலாம் என்று எண்ணினார்கள். இத்துடன்கூட அங்கங்கு அநேகம் பண்டுகள் மோசக்காரர்களால் ஏற்படுத்தப்பட்டு அழிந்தன. ஆர்பத்னட்டுக் கம்பெனியும் 1906-ளு ஒடிந்தது. இதனாலெல்லாம் உண்டான பீதியைத் தணித்து கனம் P. ராஜகோபாலாசாரியார் அவர்கள் வேலை செய்யவேண்டியதாய் இருந்தது. பண்டுகளில் ஜனங்கள் சேர விரும்பியதாலேயே ஒற்றுமையாய் வேலைசெய்ய அவர்களுக்குள்ள ப்ரியம் வெளிப்பட்டது. இந்த தைரியந்தான் கூட்டுத்தொழில் சங்கங்கள் அதிக சிரமத்தின்மேல்தான் பலமாய் ஊன்றிக்கொண்டன.

———:-:———

## இந்தியாவிலும், வெளிதேசங்களிலும் கூட்டுத்தொழில்.

(ம-ா-ா-ஸ்ரீ மதுரை ஐக்கோர்ட்டு வக்கீல் கே. இராமஸ்வாமிஐயர் பி. ஏ. பி. எல்., எழுதியது.)

———:(o):———

இந்தியாவில் கூட்டுத்தொழில் ஏற்படுத்தப்பட்டது 1904ளு இந்தியா பத்தாவது ஆக்டு அமுலுக்கு வந்தது முதல் தான். ஒவ்வொரு ராஜதானிக்கும் தனித்தனியே ரிஜிஸ்ட்ரார் என்னும் உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டு, அவர்கள் வருஷந்தோறும் கூடிப்பேசிப் பிரயத்தனங்கள் செய்வதால் அநேகம் நாணயச்சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வெளியிலுள்ள மற்ற நாகரீகமுள்ள தேசங்களில் கூட்டுத்தொழில் முறைப்படி ஏற்பட்டுள்ள சங்கங்கள் நாலுவகை (1) நாணயச்சங்கம் (2) விவசாயச்சங்கம் (3) கைத்தொழில் சங்கம் (4) ஸ்டோர்கள்.

இதுவரையில் 1, 4 வகைச் சங்கங்கள்தான் இந்த தேசத்தில் ஏற்பட்டுள்ளன. இந்தியா 1904 ளு 10 ஆவது ஆக்டுப்படி நாணயச்சங்கங்கள் நகரச் சங்கங்களென்றும் நாட்டுச் சங்கங்களென்றும் இருவகை; பின் சொன்னவைகளில் முக்கியமாய் விவசாயிகள் தான் சேர்ந்து இருக்கவேண்டும். அவர்கள் சங்கத்தின் கடன்களுக்கு வரையறுக்கப்படாத பொறுப்புடையவர்கள். ஒத்தக்கடைச்சங்க மெம்பர்கள் சிலர் சேர்ந்து ஒரு முனிசிபாலிடி எரு டெப்போவை ஒரு வருஷம் குத்தகையாய் வாங்கி வியாபாரம் செய்ததில் 700 ரூபாய் லாபமடைந்தார்கள். எருவும் சரசமாய் விற்றார்கள். இந்தப் பணத்தை தங்களுக்குள் பிரித்துக் கொள்ளாமல் சங்கத்துக்காக ஒரு கட்டிடம் கட்டினார்கள்.

# ராமனாதபுரம் ஜில்லா கூட்டுத்தொழிலினர் முதல் மகாநாடு கூடியது.

இது 1912-ம் ௵ ஜனவரி ௴ 20, 21 தேதியில் வடமலைபுரத்தில் நடந்தது. மதுரை மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் ஜீ. சீநிவாசராவ் அவர்கள் அக்கிராசனாதிபதியாய் இருந்தார். திருச்சி ராவ்பகதூர் ஆர். நாராயணராவ் முதலான அநேகர் வந்து கூடியிருந்தார்கள். இந்த ராஜதானியில் சங்கங்கள் வியாபித்ததைப்பற்றித் தெளிவாய் அக்கிராசனாதிபதி சொன்னார். சென்னை செண்ட்ரல் அர்பன் பாங்க் மற்றச்சங்கங்களைத் தாய்போல் வளர்த்த தாயினும் கொஞ்சம் சீர்திருத்தப்பட வேண்டுமென்றார். தான் பிரிடிஷ் தீவுகளுக்குச் சென்றபோது அங்கு பற்பல இடங்களில் கூட்டுத்தொழிற் சங்கங்கள் பெரிய விஸ்தாரமான கட்டிடங்கள் உடைத்தாயிருப்பதையும், அச்சங்கங்கள் பூட்சு சோப் முதலாகிய சரக்குகள் உற்பத்தி செய்வதையும் பார்த்ததாய் எடுத்துச் சொன்னார். சங்கங்களில் உற்பத்தியான சரக்குகளினிடம் அங்குள்ள ஜனங்கள் அவற்றை அபிமானம் வைத்திருப்பதாய் சொன்னார். பின்பு மற்றவர்கள் உபன்யாசங்கள் நடந்தன. அக்கிராசனாதிபதியவர்கள் கூட்டுத்தொழில் முறை ஏற்படுத்தியதில் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் பேருதவியை விளக்கிக்காட்டி கான்பிரன்சை முடித்தார்.

# கூட்டுத்தொழிலின் அபிவிருத்தி.

## 1. இதர தேசங்களில்.

(1911-௵ பிப்பரவரி௴ பீரோ ஆவ் இகனமிக் அண்டு சோஷல் இண்டலிஜென்சு வெளிப்படுத்திய புல்லடின்.)

1910-௵ முடிவில் ஜர்மனியில் 30,500-கூட்டுத் தொழிற் சங்கங்கள் இருந்தன. மற்றச் சங்கங்களைக்காட்டிலும் இதுதான் சங்கியை அதிகம். இச்சங்கங்களில் 1909-௵வரவு செலவு 20,000,000,000-மார்க்கு என்னும் நாணய அளவு; விவகார முதல் 4,400,000,000-மார்க்குகளாம். இச்சங்கங்களுக்கு இதர பாங்குகளின் போட்டி ஒன்றுதான் கஷ்டம்.

ஆஸ்டிரியாவில் விவசாய சம்பந்தமில்லாத சங்கங்கள் 1907௵ ரயிபெய்சன் மாதிரியல்லாத நாணயச் சங்கங்களில் 469-ம் கால்நடைகளை விருத்தி செய்யும் சங்கங்களில் 279-ம், யந்திரங்களை பொதுவாய் வைத்துக்கொண்டு எல்லோரும் உபயோகப்படுத்தும் சங்கங்களில் 112-ம், வியாபாரச் சங்கங்களில் 92-ம் சாராயச் சங்கங்களில் 51-ம், சணல் சாகுபடிக்காக 34-சங்கங்களும், சிக்கரி என்னும் விதையை உணர்த்தும் சங்கங்கள் 23-ம், மாவரைக்கும் சங்கங்கள் 13-ம் ஏற்பட்டிருந்தன.

ஆப்பிரிக்காவில் எண்ணெய் அச்சயந்திரங்கள். வட ஆப்பிரிக்காவில் எண்ணெய் இறக்கும் தொழில் சமீப காலங்களில் அதிக விருத்தியடைந்து இருக்கிறது. அங்கு குடியேறியிருப்பவர்கள் சீராய் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய் யந்திரங்கள் அங்கு ஏற்படுத்தி யிருப்பதுதான் இதற்குக்காரணம். ஆப்பிரிக்காவிலுள்ள ஆல்ஜீரியா என்னும் தேசத்தில் கவர்ன்மெண்டார் ஆலிவ்பயிர் செய்பவர்களின் நன்மைக்காக புதிய ஏற்பாட்டுப்படி செய்திருக்கும் எண்ணெய் அச்சுக்கள் கொண்டுவந்து எண்ணெய்ச் சாலைகளும் உண்டுபண்ணிக் கொடுத்தார்கள். 11625 ப்ராங்குகள் இதன் செலவு. இச்சாலைகள் சுவல்பகாலத்தில் நஷ்டமடைந்து வேலை நிறுத்திவிட்டன. மூஷிபர்லெக் என்பவர் இப்படி நஷ்டம் ஏற்பட்டதன் முக்கிய காரணத்தைக் கண்பித்திருக்கிறார். அங்கு எண்ணெய்ச்சாலை நடத்தும் ஐரோப்பியர்கள் அத் தேசத்தவர்களுடைய எண்ணெய்ச் சாலையினிடம் விரோதம் பாராட்டினார்கள்; இவ்விரோதத்துடன் எல்லோரும் ஒன்று சேர்ந்து அங்கு விளையும் ஆலிவ் எல்லாவற்றிற்கும் அதிகப்படியாய் விலை கொடுத்து வாங்கினார். அத் தேசத்தவர்கள் இதை யறியவில்லை. நஷ்டமடைந்து சாலைகளை மூடிவிட்டார்

கள். இதனால் கூட்டுத்தொழில் சங்கம் எங்கு வேண்டுமென்று ஜனங்கள் தாமாய் நினைக்கிறார்களோ அங்குதான் ஏற்படுத்தவேண்டுமென்றும், சேர்ந்தப் பணத்தைக் கொண்டுதான் வியாபாரம் செய்யவேண்டுமேயன்றி கவர்ன்மெண்டார் உதவியில் நம்பிக்கை வைக்கக்கூடாதென்றும் விளங்கும். கூல்மா என்னும் இடத்தில் ஏற்பட்டிருக்கும் எண்ணெய்ச் சங்கம் வெகு லாபமடைந்திருக்கிறது.

## ஐரோப்பாவில் குடித்தனக்கார ஸ்திரீகள் சங்கம்.

அங்கங்கு போய் வீட்டில் குடித்தனம் நடத்துவதைப்பற்றி உபன்யாசம் செய்து முடிந்தவுடன் விவசாயிகளின் ஸ்திரீகளைச் சேர்த்து ஒரு சங்கமாயேற்படுத்துகிறார்கள். இதை நடத்தும் கமிட்டி ஒரு பிரசிடெண்டு அல்லது அக்கிராசனாதிபதி, இரண்டு உப அக்ராசனாதிபதிகள், 3 மெம்பர்கள் 1 காரியதரிசி, 1 ஜாரஞ்ஜி இவர்கள் அடங்கியது. சுவல்ப சந்தாதான். இந்தப்பணத்தையெல்லாம் சேர்த்து லாட்டரிகள் போடுவதும், குடித்தன சாமான்கள் வாங்கி விற்பதும் முதலிய ஏற்பாடுகளால் ஜனங்கள் கூடுகிறார்கள். வருஷத்தில் 4, 5 மீட்டிங்குகள் தான் ஏற்படுகின்றன, ஏனென்றால் அடிக்கடி கூடினால் வீட்டுவேலை கெட்டுப்போய் விடும்.

இம்மாதிரி ஸ்திரீ சங்கங்கள், குடித்தன தர்மம், தயிர் பால் செய்யும் முறை, சுகவழி, விவசாயம், ஆடுமாடுகள் வளர்த்தல், வீட்டில் வளரும் பக்ஷிஜாதிகள் வளர்த்தல்முதலிய விஷயங்களைப்பற்றிப் புஸ்தகங்கள் அடங்கிய புஸ்தகசாலைகள் ஏற்படுத்தி யிருக்கின்றன. ஸ்திரீகளுக்குக் குடித்தன விஷயங்கள் முதலிய உபயோகமான விஷயங்கள் அடங்கிய பத்திரிகைகளும் போடுகின்றன. ஈஸ்வர பக்தியை ஒட்டியும் தாங்கள் குடித்தன முறை தப்பாமல் வேலை செய்தலின் மேன்மையைப் பற்றியும் மீட்டிங்குகள் நடக்கின்றன. புஸ்தகங்கள் போடப்படுகின்றன. அம்மாதர்களுக்குள் ஐக்கியமும் ஒற்றுமையும் விருத்தியாகிறது.

## நீலகிரியில் உள்ள மலை ஜனங்களுக்குள் கூட்டுறவு.

நீலகிரியில் உள்ள படகர்கள் வெளிநாட்டிலிருந்து அங்கு குடியேறியவர்கள். கோடநாடு முதலிய கிழக்குப் பாகங்களில் சங்கியை ஜாஸ்தி; மேல் பாகங்களிலும் குண்டாசிலும் கொஞ்சம் குறைவு. அவர்கள் தொழில் விவசாயம்; சிலர் கூலிவேலை செய்கிறார்கள். சிலர் தச்சுவேலை கொல்லுவேலை செய்கிறார்கள். அவர்களுக்குள் படித்தவர்கள் சுவல்பம்.

நீலகிரி கலெக்டர் மிஸ்டர் எஸ். பி. ரைஸ் துரையின் ஏற்பாட்டின்படிக்கு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் கேயிடி, கூனூர் முதலிய இடங்களில் ஜனங்கள் நிலைமையைப்பற்றி விசாரணை செய்தார். அங்கு கொடுக்கல் வாங்கல் செய்யும் துலுக்கர்கள் (லப்பைகள்) ஆரம்பத்தில் பலசரக்குக்கடை யொன்று வைத்து, கடன் கட்டுக்கு வியாபாரம் செய்து வரவரப் படகர்களைக் கடனில் மூழ்த்துகிறார்கள். கொஞ்சகாலம் கழிந்தபின்பு அவர்களுக்காக வருஷாவருஷம் உருளைக்கிழங்கு, காப்பி எது விளைந்தாலும் சரி அது வட்டி கொடுக்கத்தான் காணுகிறது. விளையும் தான்யம் சாப்பாட்டுக்குப்போய் விடுகிறது. கடன் வரவரப் பெருகுகிறது. மீளாமல் அடிமை போல் கடன் வாங்குபவர்கள் கட்டுப்பட்டுப் போகிறார்கள்.



இவர்களை இம்மாதிரி நிலைமையினின்று விடுவிக்கும் கருத்துடன் அங்கு நான்கு கிராம நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (1) கேர்கொடா நாரல் சங்கம் (2) அணிக்கோரைச் சங்கம் (3) குருத்துக்குளிச் சங்கம் (4) சோலூர் சங்கம். இன்னும் சில ஏற்படலாம்.

## இந்தியாவில் கூட்டுத்தொழில் வியாபித்தல்.

### ஒரு எண்ணெய் உண்டுபண்ணும் சங்கம்.

மாம்பளத்தில் எண்ணெய் உண்டு பண்ணுவதற்காக ஏற்பட்ட சங்கம்.
1911-ம் வருஷம் ஜூலை 15 தேதிமுதல் டிசம்பர் 31 வரையில்
விவகாரம் நடத்திய கணக்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. 369 மூட்டை எள்ளு விலை … … … | 5742 | 14 | 3 |
| 2. எண்ணெய்ப் புண்ணாக்கு விற்பனை … | 6738 | 10 | 6 |
| 3. 369 மூட்டையில் மொத்த லாபம் … … | 995 | 12 | 3 |
| 4. இப்படி மூட்டைக்கு லாபம் … … | 2 | 11 | 2 |
| 5. மாட்டுக்குத் தீனிச் செலவு … … | 312 | 13 | 7 |
| 6. ஆள்மாகாணம் செலவு … … … | 618 | 10 | ·4 |
| மொத்தம் செலவு … | 931 | 7 | 11 |
| 7. கைக்கு வந்த லாபம். … … … | 64 | 4 | 4 |

1912 வருஷம் ஜனவரி மாத கணக்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 92½ மூட்டை எள்ளு … … … | 1492 | 7 | 8 |
| சுத்தப்படுத்துவதில் செலவு … … … | 7 | 6 | 0 |
| வெல்லம் … … … … | 28 | 2 | 6 |
| (1) மொத்தம் … | 1528 | 0 | 2 |
| ஆள் மாகாணம் செலவு … … … | 132 | 0 | 0 |
| தீனி … … … … … | 73 | 1 | 0 |
| கூலி, வண்டிச்சத்தம் முதலியன … … | 9 | 13 | 6 |
| (2) மொத்தம் … | 214 | 14 | 6 |

| | | | | |
|---|---|---|---|---|
| எண்ணெய் விற்பனை ($237\frac{1}{2}$ மணங்கு) | ... | 1459 | 7 | 1 |
| புண்ணாக்கு ... ... ... | ... | 350 | 2 | 0 |
| மொத்தம் | ... | 1809 | 9 | 11 |
| இதிலிருந்து 1 மொத்தம் போக | ... | 1528 | 0 | 2 |
| லாபம் | ... | 281 | 9 | 9 |
| இரண்டாவது மொத்தம் போக | ... | 214 | 14 | 6 |
| நிகரலாபம் | ... | 66 | 11 | 3 |
| 93 சாக்கு விலை | ... | 20 | 0 | 0 |
| கைக்கு வந்த லாபம் | ... | 86 | 11 | 3 |

இதில் ஜனவரியில் பொங்கலுக்காக 11 நாள் வேலை இல்லை.

### உபாத்தியாயர்களுக்குச் சங்கம்.

திருவையாற்றிலும் தஞ்சாவூரிலும் ஆரம்ப கலாசாலை உபாத்தியாயர்களுடைய நன்மைக்காக நாணயச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தமெம்பர்கள் எல்லாரும் ஒரே அந்தஸ்துடையவர்களாயிருப்பதால் இந்தச் சங்கங்களில் வாஸ்தவ ஐக்யம் ஏற்படக்கூடியது. மற்ற ராஜதானிகளில் மாதச் சம்பளம் வாங்கி ஜீவிப்பவர்களுக்காக சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### "துரை ராமனுதபுரம் சென்டரல் கோவாபரேடிவ் பாங்கு லிமிடெட்.

கனம் ராவ்பகதூர் ஜீ. ஸ்ரீநிவாசராவ், கனம் கே. ராமஸ்வாமி ஐயர் இவர்களுடைய எத்தனத்தின்பேரில் ஒரு சென்டரல் பாங்கி மதுரையில் ஏற்பட்டது. இதில் பாதிப் பங்குகள் அங்குள்ள சங்கங்களுக்காக நிறுத்தி வைக்கப்படும். ஆகையால் பணம் கடன் வாங்கும் சங்கங்களுக்கு இந்த பாங்கில் முக்கிய அதிகாரம் உண்டு. இது ஐக்கியக்கோட்பாட்டை முழுதும் அனுசரித்து ஏற்பட்ட சங்கம்.

### சென்னைக்கு ஓர் புதிய நகரச் சங்கம்.

ஆனரெபில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி ஐயர், ஆனரெபில் ராவ்பகதூர் மிஸ்டர் தியாகராஜ செட்டியார், திவான்பகதூர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர், திவான்பகதூர் எம். ஆதிநாராயண ஐயா, மிஸ்டர் டி. ரெங்காசாரியார், திவான்பகதூர் பி. ராஜரத்தின முதலியார், ராவ்சாகிப் வி. ஏ. பார்த்தசாரதி முதலியார் முதலியவர்கள் பிரயத்தனம் செய்து 1912வரு பிப்ரவரி மீ 6-தேதி பச்சயப்பா ஹாலில் கூடி ஒரு டவுன் பாங்கி ஏற்படுத்தத் தீர்மானித்தார்கள்.

---

## உபன்யாசங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

—(:-:)—

ஆனரபில் சர் ஆர்வி ஆடம்சன் நைட். கே. ஸி. எஸ். ஐ; ஐ. ஸி. எஸ். என்னும் பர்மா லெவ்டினண்ட் கவர்னர் உபன்யாசத்தின் சுருக்கம்.

விவசாயம் விருத்தியடைவது விவசாயம் செய்பவர் நிலைமையைப் பொருத்தது. இவனுடைய க்ஷேமம் சரசமான வட்டிக்கும் சுலபமாயும் கடன் அகப்படுவதைப் பொருத்தது. உலகெங்கும் விவசாயம் செய்பவன் தன்தொழிலை நடத்தக் கடன்வாங்குவது வழக்கம்தான்; பர்மாவிலும் அப்படியேதான். பர்மா விவசாயிகள் செலவுகாரர்களென்று சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களுக்குக் கடன்கொடுக்கும் செட்டிமாரும் அக்ரமமாய்ப் பணம் பறிப்பவர்களென்று நான் எண்ணவில்லை. கீழ் பர்மாவில் விவசாயம் விருத்தியானது செட்டிமார் பண உதவியால்தான். தங்களுக்கு வரும் கஷ்டங்களை சடுபண்ணிக் கொள்ளுவதற்காக வேண்டிய மட்டும் உயர்ந்த வட்டிக்கு கடன் கொடுக்கிறார்கள். ஆனால் விவசாயம் செய்பவர்களுக்கு தங்களுக்கு சில வேளையில் விளைச்சல் இல்லாமையால் இந்த வட்டி கொடுக்க முடியாமல் வரவரக் கடனில் அகப்பட்டுக்கொண்டு மீள முடியாதவர்களாகின்றனர். ஆகையால் அவர்களுக்கு மலிந்தவட்டியில் பணம் வேண்டியிருக்கிறது. இதற்காகத்தான் கூட்டுத்தொழில் முறை ஏற்பட்டது. ஒவ்வொரு பயிரிடுபவனும் தனியாய் தகுந்த ஜாமீனாக மாட்டான்; பலர்கூடி ஜாமீனாய் நின்றால் அவர்களுடைய கூட்டு ஜவாப்பு ஒவ்வொருவருடைய பலத்தையும் தனியே கணக்கிட்டுக் கூட்டுவதைக்காட்டிலும் ஜாஸ்தியாகும். ஒவ்வொரு சுள்ளியும் தனியே சுலபமாய் ஒடியுமாயினும் ஒருங்கு கூடியபோது என்ன கஷ்டப்பட்டும் வளைக்க முடியாததாய் இருந்த பழையகதையைக் கேள்விப்பட்டிருக்கிறோம். கூட்டுத்தொழில் முறையை யனுசரித்து ஐரோப்பா விவசாயிகள் நல்ல ஸ்திதியடைந்திருக்கின்றனர்.

கூட்டுறவால் செட்டிமார்கள் வியாபாரத்தைக் கெடுப்பதாய் எண்ணக்கூடாது. அவர்களில்லாமல் எப்போதாவது முடியுமென்று நான் எண்ணவில்லை. ஐரோப்பாவில் கூட்டுத்தொழிலின் விருத்தியால் பணம் கொடுக்கல் வாங்கல் செய்பவர்களுக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்படவில்லை. செட்டிமார் பணம் பர்மாவைவிட்டுப் போகும் ஏற்பாடு எதுவும் எனக்கு நலமென்று தோற்றவில்லை.

இன்று நாம் கூடியதன் கருத்து (1) விவசாய இலாகாவிலும் கூட்டுத்தொழில் இலாகாவிலும் இதுவரையில் என்ன செய்யப்பட்டிருக்கிறது என்

பதை ப்ரபலம் செய்விப்பது; (2) இந்த இரண்டு இலாகாவேலையிலும் ஜனங்களுக்கு ஊக்கம் உண்டு பண்ணுவது; (3) கூட்டுத்தொழில் முறையையும் சுலஸ்திரப்படி விவசாய முறையையும் போதிப்பதும் தான்.

பின்பு இரண்டு இலாகாவிலும் செய்திருப்பதைச் சுருக்கமாய்ச் சொன்னார். பர்மாவில் 14,000 மெம்பர்களுள்ள 503 சங்கங்களிருக்கின்றன; அவைகளின் விவசாரம் 22 லக்ஷம்; அதில் 20,000 ரூபாய் கவர்ன்மெண்டு கொடுத்தது.

### பர்மா ரிஜிஸ்ட்ரார் ஆகிய மிஸ்டர் இங்கலீஷ் என்பவர் செய்த உபன்யாசத்தின் சுருக்கம்.

கோவாபரேடிவ் கிரெடிட் சொஸைட்டீஸ் ஆக்ட் என்னும் ஐக்யநாணயச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கான விதி 1904ளு ஏற்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் சங்கங்கள் ஏற்படுத்த ஆரம்பித்தது 1905 ளு. இப்படியாக இதற்குள்ள பிரயத்தனம் 6½ வருஷமாய் நடந்து வருகிறது. கவர்ன்மெண்டார் ஒரு ரிஜிஸ்ட்ராரையும் ஒரு ஜாயிண்டு ரிஜிஸ்ட்ராரையும் அவர்களுக்கு உதவி செய்யும்படியான ரிஜிஸ்ட்ராரில் 5 பேரும் நியமித்திருக்கிறார்கள்.

முதல் 3 அல்லது 4 வருஷங்கள் ஐக்ய நாணயச்சங்கம் ஏற்படுத்த நியமிக்கப்பட்டுள்ள உத்யோகஸ்தர்கள் அங்கங்குள்ள நிலைமையைக்கண்டு பிடிப்பதில் செலவு செய்தார்கள். இவர்கள் செய்யும் வேலை (1) ஜனங்களுக்கு வெளிதேசங்களில் கூட்டுத்தொழில் முறையாய் என்ன செய்யப்பட்டிருக்கிறது என்றும் எப்படி சங்கங்கள் ஏற்படுத்தலாமென்றும் சொல்லுவது (2) ஏற்படும் சங்கங்களை மேல்விசாரணை செய்து கூட்டுத்தொழில் முறைப்படி நடத்துவிப்பதும் தான். சங்கங்களுக்குப் பணமுள்ள இடங்களிலிருந்து தரகர்கள் மூலமாய்ப் போகாமல் நேராய்ப் பணம் கிடைக்கும்படியாய்செய்து 100-க்கு 24 முதல் 60 வரைக்கும் வட்டி கொடுத்து வந்த ஜனங்களுக்கு 100-க்கு 9 வீதம் பணம் கிடைக்கும்படியாய்ச் செய்கிறது.

கூட்டுத்தொழில் மத்தியில் நின்றுகொண்டு லாபமடையும் தரகர்களுக்கு இடமில்லாமல் செய்கிறது. பலர் ஒன்று சேருவதால் அநேக காரியங்கள் சாதித்துக்கொள்ளலாம், பணம் மலிவாய்க் கடன்வாங்கலாம், விவசாயிகளுக்கு விளையும் சரக்குகளை மொத்தமாய் லாபகரமாய் மில்களுக்கு விற்கலாம், தங்களுக்கு வேண்டியவைகளை பெரிய வியாபாரிகளிடமிருந்து நேராய் வாங்கலாம், அல்லது தங்கள் ஆடுமாடுகளை இன்ஷியூர் செய்யலாம். குடித்தனக்காரர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று நினைத்துக் கவர்ன்மெண்டார்கள் செய்த மற்ற ஏற்பாடுகள் ஒன்றும் அதிக பலன் படவில்லை. இந்த ஏற்பாடு மட்டும் பயனுள்ளதாய் இருக்கிறது. ஏனென்றால் ஜனங்களுக்கு தங்களுக்குத் தாங்களே உதவிசெய்து கொள்ளும்படியாய் இது கற்பிக்கின்றது. சங்கம் அவர்களுடையது; அவர்களே நடத்துவது. சுயஉதவி, தம்மிடம் நம்பிக்கை, சிக்கனம் பின்வருவதை முன்யோசித்தல், ஜாக்கிரதையாய்ச் செலவு பண்ணல் முதலிய குணங்களை சங்கங்கள் விருத்தி பண்ணுகின்றன.



நல்ல ஏற்பாட்டில் உண்மையான முறைப்படி சங்கங்கள் ஏற்படுத்துவது சிரமம்தான். ஆகையால் 500 சங்கங்கள் தான் ஏற்பட்டிருக்கின்றன. யூனியன்களென்னும் கூட்டுச்சங்கங்கள் ஏற்படுவதால் ரிஜிஸ்ட்ரார் வேலை குறைகிறது. ஷிவிபோ என்னும் இடத்தில் எட்டு யூனியன்கள் சேர்ந்து மாதம் 50 ரூபாய் சம்பளத்தில் ஒரு இன்ஸ்பெக்டர் நியமித்திருக்கின்றன.

கூட்டுத்தொழில் ஜனங்களே நடத்திக்கொள்ளவேண்டியது; கவர்ன்மெண்டார் உதவியை எதிர்பார்க்கக்கூடாது.

ஒரேமாதிரிச் சங்கம் எல்லா இடத்திற்கும் ஒத்துவராது. கிராமத்துக்கு வேறு, நகரத்துக்கு வேறு, வியாபாரிகளுக்கு வேறு, மாதச்சம்பளம் வாங்குபவர்களுக்கு வேறு வேண்டியது.

இப்போது பர்மாவிலுள்ள சங்கங்களில் மொத்தம் 12,500 மெம்பர்கள் இருக்கிறார்கள். சராசரிக்கு ஆளுக்கு 110 ரூபாய் கடன் கிடைத்து இருக்கிறது. விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடனில் மூன்றிலொருபங்கு வருஷவாரிச் செலவுக்கு என்று கொடுக்கப்பட்டது. இது மாசூலில் திருப்பிக்கொடுத்து விடவேண்டும். மற்ற இரண்டு பங்குமுன்கடன் தீர்க்கவும், நிலத்தை மீட்டவும், வாங்கவும் அல்லது கால்நடை வாங்கவும் ஏற்பட்டது. இந்தக் கடன்கள் தீர்க்க கொஞ்சம் அதிககாலம் செல்லும். சங்கங்களின் பத்திரங்களில் நேரில் கையொப்பம் போடாததும் முன்கடன் தீர்த்த பத்திரங்களை வாங்கிவைக்காததும் பிழைகள்; இனிமேல் ஒருவேளை பள்ளிக்கூடங்களில் கணக்கு வைக்கும் முறை கற்பிக்க சாத்தியமாய் இருக்கலாம்; அப்போது கஷ்டம் நீங்கிவிடும் சங்கங்களின் செலவு சொல்பம்.

இச்சங்கங்களால் நிலங்கள் கடன்களினின்றுமீண்டு, கால்நடைகள் வாங்கப்பட்டு ஜனங்கள் க்ஷேமம் அடைந்திருக்கின்றனர். வம்புவழக்குகள் குறைந்திருக்கின்றன.

கூட்டுத்தொழிலைப்பற்றி ஒரு புஸ்தகம் அச்சிடப்பட்டுக் கொண்டு இருக்கிறது. ரங்கூன்கஜட், ஸ்டார் ஆப் பர்மா முதலிய பத்திரிகைகள் கூட்டுத்தொழிலைப்பற்றி எழுதியதால் ரொம்பவும் உதவி கிடைத்து இருக்கிறது. பிரசிடண்டு ரூஸ்வெல்ட் அவர்கள் சொன்னவார்த்தைகளை நம் கொள்கையை விளக்க வைத்துக்கொள்ளவேண்டும்; "இப்போதைக்காட்டிலும் நல்லமுறைப்படி வியாபாரம், (கூட்டுத்தொழில் முறையாய்) இப்போதைக்காட்டிலும் நல்ல விவசாயம், இப்போதைக் காட்டிலும் சுக ஜீவனம்".

இங்கு வந்திருப்பவர்கள் கூடி யோசனைசெய்து அபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும்.

### ராமநாதபுரம் ஜில்லா மகாநாடு கூடியது.

### அக்ராசனாதிபதி ராவ்பகதூர் ஜி. ஸ்ரீநிவாசராவின் உபன்யாசம்.

முன்னாளில் இந்த தேசத்தில் கிராமப் பஞ்சாயத்து என்றும் கிராமப் பொதுச் செலவு பண்டு என்றும் இருந்தது. கூட்டுத்தொழில் முறை அப்

பழைய ஏற்பாட்டை மறுபடியும் கொண்டுவருகிறது. முன்னாளில் அந்தந்த கிராமங்கள் தங்கள் தங்கள் சௌகரியங்களைக் கவனித்துக்கொண்டன. ஊரின் தேகசௌக்கியத்திற்காக வேண்டிய ஏற்பாடும் கல்விகற்றுக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளும் செய்து கொண்டன. நமக்கு வேண்டியவைகளை நாமே பார்த்துக்கொண்டால் ராஜாங்கம் செய்பவர்களுக்கும் சம்மதம்; நமக்கும் திருப்தி; நம் வழக்குகளை நாமே தீர்த்துக்கொண்டால் எவ்வளவு நன்மையாய் இருக்கும்!

நாம் கூட்டுச் சீட்டுப்போட்டால் பணம் சரியாய் வசூலாகாது படும் கஷ்டம் நமக்குத் தெரியும். ஐக்கியநாணயச் சங்கத்தில் அப்படி கஷ்டம் ஏற்படுவது சாத்தியமில்லை. உசிலம்பட்டியில் கள்ளர்களுக்காக சங்கம் ஏற்பட்டிருப்பதைக் கேழ்விப்பட களிக்கிறேன்.

கவர்ன்மென்டார் விசுவாசத்துடன் இச் சங்கங்களை நடத்துகிறார்கள். ஸ்டாம்பு ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தை சங்கங்களின் விவகாரங்களுக்கு வஜா செய்திருக்கிறார்கள் 15-வருஷத்திற்கு முன்பு மதுரையில் நிதி ஏற்பட்டபோது அது நிலைக்குமோவென்ற ஐயமிருந்தது. இப்போது அதற்கு ஒரு பெரிய கட்டிடம் சொந்தமாய் இருக்கிறது, பலத்தமுதலும் ஏற்பட்டுவிட்டது. ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு 70000-ரூபாய் 100–க்கு $6\frac{3}{4}$-வீதம் கடனிருக்கின்றது. இச்சங்கங்கள் இன்னும் வியாபிக்க இடம் உண்டு.

நான் ஐரோப்பாவுக்குப் போனபோது ஸ்காட்லண்டில் சங்கங்கள் பூட்ஸ், சோப் முதல் பலவகை வஸ்துக்களும் செய்வதைப் பார்த்தேன். ஆயிரக்கணக்காய் ஜனங்கள் அங்கு வேலை செய்கின்றனர். நாம் ஒன்று சேர்ந்து இந்தப் பிரயத்தனத்தை நிறைவேற்றினால் ஜனங்கள் வெளிதேசங்களுக்குக் குடியேறிப்போவது நின்றுபோய்விடும். கிணறுகள் வெட்டவும் விவசாயத்தை விருத்திசெய்ய யந்திரங்கள் வாங்கவும் சங்கங்கள் ஏற்பாடு செய்யக்கூடும். சரக்குகள் உண்டுபண்ணுவதும் இவ்வழியில் சாத்தியம். ஏன் பலர் சேர்ந்து மாடுகள்வாங்கி நெய் உண்டுபண்ண ஏற்பாடு செய்யக்கூடாது? சங்கங்களின் லாபத்தைக்கொண்டு பள்ளிக்கூடங்கள்கூட வைக்கலாம்.

### கூட்டுத்தொழிலில் இனி செய்யவேண்டியது என்ன.

(கனம் டி. ஆதிநாராயண செட்டியாரவர்கள் வியாசம்.)

இப்போது பழைய ஆக்டைச் சீர்திருத்துவதின் கருத்து நாணயச் சங்கங்கள் தவிர மற்றவகைச் சங்கங்களை உண்டுபண்ணுவதுதான். இப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்படுத்த ஜனங்களின் தலைவர்களாயுள்ள பிரமுகர்கள் ஐக்யக் கோட்பாட்டை பிரபலப்படுத்த பிரயத்தனப் படுவது அவசியம். ஐரோப்பாவில்கூட இந்தமாதிரி முயற்சி செய்யவேண்டியதாயிருக்கிறது. குடிகள் அநேகமாய் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருக்கும் இந்த தேசத்தில் இப்படிப்பட்ட பிரயத்தனம் அவசியம் என்பதற்கு சந்தேகம் என்னவந்தது? ஆனால் இக்கோட்பாடுகளை விளம்பரம்செய்யச் சிலவேளைகளில் பத்திரிகைகளில் ஏதாவது எழுதிவருவதைத் தவிர ஒரு ஏற்பாடும் நமக்குள் கிடையாது. புதிய ஆக்டு வருமுன்கூட அதைப்பற்றி எழுதுபவராவது பேசுபவராவது கிடையாது.



பம்பாயில் நடந்ததுபோல் இந்த ராஜதானியிலும் விவசாயிகளின் க்ஷேமத்தில் கவலை எடுத்திருக்கும் நம்முடைய கவர்னரவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தில் ஒரு கான்பிரன்சு நடந்தால் ஜனங்களின் ஊக்கம் அதிகப்படும்.

இந்த கான்பிரன்சு ஜனங்களுக்கும், கவர்ன்மெண்டாருக்கும் பிரதிநிதியாக சிலர்களை நியமித்து அவர்களை வருஷ முழுவதும் வேலைசெய்யும்படியாய் ஏற்பாடு பண்ணவேண்டும். இதில் ரிஜிஸ்ட்ராரவர்களும் இன்னும் இரண்டு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் மெம்பர்களாய் இருக்கவேண்டும். முன்பு ரிஜிஸ்ட்ராய் இருந்தவர்களும் மெம்பர்களாய் இருப்பது நலம்.

நாணயத்துக்காகவல்லாத மற்ற விஷயங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கூட்டுத்தொழிற் சங்கங்களையெல்லாம் கவனிக்க ரிஜிஸ்ட்ரார் பிரயத்தனம் பட்டும் போதாது. இந்தக் கமிட்டியார் கவர்ன்மெண்டுக்கு ஆலோசனை சபைபோலிருக்கவேண்டும். இப்போது கவர்ன்மெண்டில்போடும் 'மதராஸ் புல்லடின் ஆவ் கோவாபரேஷன்' என்னும் கூட்டுத்தொழில் வர்த்தமானியை இந்தக் கமிட்டியாரே பிரசுரஞ் செய்யவேண்டும். சங்கப் பரிசோதனைக்கு இவர்களே ஏற்பாடு செய்யலாம்; இன்ஸ்பெக்டர்கள் சூபர்வைசர்களுக்காக ஒரு கூட்டுத்தொழில் முறை சற்பிக்கும் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தலாம்; ஐரோப்பாவில் ஒவ்வொரு தேசத்திலும் இந்தமாதிரி சங்கம் இருக்கிறது. சர் ஹோரஸ் பளங்கட்டு என்பவர் ஏற்படுத்திய ஐரிஷ் அக்ரிகல்சரல் ஆர்கானிசேஷன் சொஸைடி என்பது ஒரு உதாரணம். டிவைன் என்பவர் "பீப்பில்ஸ்பாங்கஸ்" என்னும் புஸ்தகத்தில இந்தமாதிரி ஏற்பாட்டின் அவசியத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். இங்கு ஒரு கமிட்டி ஏற்படுத்துவதை ரிஜிஸ்ட்ரார் ஜனங்கள் எல்லோரும் விரும்புவார்கள்.

---

# விமர்சனங்கள்.

———(•)———

## கூட்டுத்தொழில் முறை வீடுகட்டுதலை உதவுவது.

(மதுரை ஐக்கோர்ட்டு வக்கீல் கனம் கே. இராமஸ்வாமி ஐயர் பி. ஏ. பி. எல். சௌத் இந்தியன் மெயிலுக்கு எழுதியிருக்கும் வியாசத்தின் சுருக்கம்.)

நகரங்களில் ஜனங்கள் நெருக்கடியாய் தேக சௌகரியங்களுக்கு ஒத்து வாராமலிருக்கும்படியான வீடுகளில்தான் இருக்கவேண்டி யிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இங்கிலாந்தில் சில நகரங்களில் ஒரு ஏக்ராவில் இவ்வளவு ஜனங்கள் வாசம் செய்யலாமென்று ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். மதுரையில் அப்படி ஒன்றும் விதியில்லை. மேற்சொன்ன இங்கிலீஷ் நகரங்களில் ஒவ்வொரு வீட்டுக்கு 354-சதுர அடி விஸ்தீரணம் கிடைக்கிறது. இதில் சராசரிக்கு 5-பேர் வாசம் செய்கிறார்கள். மதுரையில் 100-முதல் 225-சதுர அடி வரையில்தான் சாதாரண வீடுகள் இருக்கின்றன. இதில் 10, 15 பேர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நெருக்கத்தால் சாவுகூட ஜாஸ்தி ஆகிறது. கூட்டுத்தொழிற் சங்கங்களால் வீடு கட்டுவிக்கலாம்.

இங்கிலாந்தில் 3—வகைச் சங்கங்கள் இருக்கின்றன:—

(1) மெம்பர்களுக்கு வீடுகட்டக் கடன்கொடுப்பது ஒருவகைச் சங்கம்.

(2) சங்கமே வீடுகட்டி மெம்பர்களுக்கு விற்பது ஒருவகை.

(3) சங்கமே வீடுகட்டி மெம்பர்களுக்கு வாடகைக்கு விடுவது மூன்றுவது வகை.

இரண்டாவது வகை ஏற்பாடு நாம் அநுசரிக்கக்கூடியது. ஏக்ராவுக்கு 25 வீடுவீதம் 200 வீடுகட்டும்படியாய் எட்டு ஏக்ரா நிலம் வாங்கவேண்டும். 200 துண்டுகளாகப்பிரித்து ஒருவருக்கும் 10 துண்டுகளுக்கு மேற்படாமல் அவரவர்களுக்கு வேண்டியபடி பங்கிடவேண்டும். அவரவர்களுக்கு எப்படிப்பட்ட வீடுவேண்டுமென்று ஒரு பிளான் வாங்கிக்கொண்டு இதன்பிரகாரம் செலவு என்ன ஆகுமென்று மதிப்பும் போட்டு செலவில் ஐந்தில் ஒருபாகம் ஒவ்வொரு மெம்பரிடத்திருந்தும் வாங்கவேண்டும். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு பாக்கி வேண்டிய செலவிற்கு டிபாசிட்டாவது கடனாவது வாங்கிக்கொள்ளலாம். வீடுகளைக் கட்டியபின்பு மெம்பர் குடியிருந்து வரலாம். வட்டிக்கு ஈடுபண்ணும்படியாய் ஒரு வாடகை வாங்கி பாக்கிப்பணத்தை மெம்பர்களிடமிருந்து கொஞ்சங் கொஞ்சமாக வசூல் செய்யவேண்டும். முழுப்பணமும் கொடுத்தவுடன் மெம்பர்களுக்கு வீட்டில் முழுபாத்யத்தையும் கொடுத்துவிடலாம். மொத்தமாய் வேண்டிய சாமான்களை வாங்கிப்போட்டு வீடுகட்டுவது லாபகரமாயிருக்கும்.



(1912-ஆம் ஜனவரி 'ரிவ்யூ ஆவ் ரிவ்யூஸ்' என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்தது.)

### கிரெடிட் பான்சியர்.

(பெயில் என்னும் துரையவர்கள் எழுதியது.)

1858-ஆம் கிரெடிட்பான்சியர் என்னும் நில பந்தகத்தில் கடன் கொடுக்கும் பாங்கியை பிரான்சு தேசத்தில் சட்டமுறையால் ஒப்புக்கொண்டார்கள். இந்த பாங்கி இப்போது 10-லக்ஷம் டாலர்கள் கடன் கொடுத்திருக்கிறது; 456,000,000 டாலர்கள் பந்தக வழியாய் நிலுவையிற்கிறது. பிரான்சில் ஒரு சிறிய வீடு இருந்தால்கூட 100-க்கு 4-வீதம் கடன் வாங்கலாம். வருஷா வருஷம் வட்டியும் முதலுக்காக ஒரு பாகமும் கொடுக்கவேண்டும். கடனை டி[illegible] நாள்களில் இல்லையாயப் கழித்துத் தீர்த்தால் பேரனும் கவிசவும் [illegible]யாலோ; உத்தியோகத்தை இழப்பதாலோ, நிலம் சாவியாய்போவதாலோ ஒரு வருஷம் ஒன்றும் வரும்படி இல்லாவிட்டால் வட்டிமட்டும் கொடுத்தால் போதும்.

இந்த ஏற்பாட்டால் அவரவர்கள் தங்கள் பூஸ்திதியை இழக்காமல் இருக்கலாம். சிக்கனம் விருத்தியாகிறது. கடன் வாங்குவதில் ஆரம்பச் செலவு குறைகிறது. வட்டி மலிவாய் எங்கும் ஒரே ரீதியாய் இருக்கிறது. மூன்று வருஷத்துக்கு ஒருமுறை பத்திரம் புதுப்பிக்க வேண்டுவதில்லை.

———:(•):———

# சமாசாரக் குறிப்புகள்.

———:•:———

## இங்கிலாந்து ராயல் அக்கிரிகல்சுரல் சோசைட்டி என்னும் விவசாயச் சங்கத்துக்கு அரசர் கடிதம் எழுதியது.

தாம் மூன்றுவது முறை இச்சங்கத்தின் அக்கிராசனாதிபத்தியத்தை வகித்தபோது மிகவும் பரிவுடன் அச்சங்கத்தின் நன்மையைக் கோரி இனிய கடிதமொன்று எழுதினார், அச்சங்கத்தவர் சரிவர வேலை செய்ததைப் பற்றி மெச்சிக் கூறினார்.

*　　　*　　　*

தன் சங்கத்தினிடம் விசுவாசம் இல்லாமல் சங்கத்தில் சேருபவர்களை அதைரியப் படுத்தியதற்காகப் 582-நம்பர் காளிதிண்டி என்னும் கிராமச் சங்கத்தின் மெம்பர் ஒருவர் விலக்கப்பட்டார்.

*　　　*　　　*

வடமலைபுரம் சங்கத்தில் மெம்பர்களாயிருந்த அளகிரி நாயக்கர், ரங்கப்ப நாயக்கர், வெங்கடஸ்வாமி நாயக்கர், என்ற இவர்களுக்குள் நிலம் பாகம்செய்து கொள்வதில் வழக்கு ஏற்பட்டது. கச்சேரியில் வழக்குச் செய்யாமல் சங்கமே இதைத் தீர்த்து வைத்தது.

# கடிதங்கள்.

——:-:——

## கவர்னரவர்களின் சட்ட ஆலோசனைச்சபையில் ஒரு கூட்டுத்தொழில் முறையைச் சேர்ந்தவர்.

கனம் திவான்பகதூர் எம். ஆதிநாராயண ஐயாகாரு இந்த ராஜதானியில் முதன் முதல் ஏற்படுத்தப்பட்ட இருச் கிராம நாணயச் சங்கத்தின் அக்கிராசனாதிபதி. அவர் முதல் ஏற்படுத்தப்பட்ட கான்பிரன்சில் அக்கிராசனம் வகித்தவர். கூட்டுத்தொழில் முறையில் விசுவாசமுள்ளவர். அவர் கவர்னரவர்களின் சட்ட நிரூபண சபையில் மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## பல இடங்களிலிருந்து.

### ஐரோப்பாவில் கோவாபரேஷனைப்பற்றிப் போதித்தல்.

ஹலி (Halle) என்னும் இடத்து சர்வகலா சங்கத்தவர், பிரஷ்யா தேசத்து மினிஸ்டர் உத்திரவுப்படி கூட்டுறவைப்பற்றி உபன்யாசங்களாலும் மற்ற விதங்களாலும் போதிக்கும்படியாய் ஒரு காலேஜ் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஹலி விட்டன்பர்க் பிரடரிக் சர்வகலாசாலையில் 1911-வது வருஷம் கூட்டுத் தொழிலைப்பற்றி உபன்யாசங்கள் நடந்தன.

அங்குபடிக்கும் பாடங்களாவன:—

1. பொருள் சாஸ்திரம்.
2. தேசத்தில் சட்டங்களாக ஏற்படாத விதிகள்.
3. கூட்டுறவு செல்வத்தை எப்படி விருத்தி செய்யும்.
4. ஜனங்களுக்கு சங்கங்களாய்ச் சேர உள்ள அதிகாரம்.
5. தொழிலாளிகளும் சொற்ப வியாபாரிகளும் கூட்டுறவால் எப்படி லாப மடையலாம்.
6. கூட்டுத்தொழில் முறையில் விவசாயிகள் செய்யக்கூடியது.
7. பாங்கின் இன்சூரன்ஸ்.
8. கூட்டுத்தொழில் முறையால் சரக்குகள் விற்பனைசெய்யும் சங்கங்கள்.
9. கணக்குவைக்கும் ஏற்பாடு.
10. வியாபார சம்பந்தமான சட்டங்கள்.



### கூட்டுத்தொழிலின் லாபங்கள்.

(மேல்பர்மா விவசாய கான்பிரன்ஸில் மிஸ்டர் யூ. நியூன் என்பவர்சொன்னது.)

1. கூட்டுத்தொழிலால் ஒருவருக்கொருவர் உதவியும் விசுவாசமும் ஏற்படுகிறது.
2. பணம் மீற்பதையும் முன் யோசனையுடன் கடப்பதையும் ஜாஸ்தி பண்ணுகிறது.
3. ஜாயிண்டு ஸ்டாக்கு பாங்கிகளை ஜனங்களிடம் சம்பந்தப்படுத்துகிறது.
4. மலிந்த வட்டிக்குப் பணம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்வதுடன் வீண்செலவில்லாமலும் காக்கிறது.
5. கடனாளிகளை மீட்கிறது.
6. க்ஷேமநிதி உண்டுபண்ணுகிறது.
7. பணம்போட பாங்கு உண்டாகிறது.
8. சேவிங்க்ஸ் பாங்கிகளின் சௌகரியங்கள் ஏற்படுகின்றன.
9. சென்டரல் பாங்கு தேச க்ஷேமத்தை விருத்திசெய்யக் கூடும்.

* * *

டால்மேஷியா என்னுமிடத்தில் கடற்பஞ்சு பொறுக்குபவர்களுக்காக ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்விட்சர்லண்டில் ஒரு ஜோடு பூட்ஸ் செய்யும்சாலை கூட்டுத்தொழில் முறையில் உண்டாயிருக்கிறது.

# ஸர்க்யுலர்களும் இலாகா உத்திரவுகளும்.

—:(*):—

### 1911-ஞு ஜனவரி௴ 23-ஆவது தேதி ஸர்க்யுலர்.

550-சங்கங்களுக்குமேல் ரிஜிஸ்டர் ஆயிருக்கிறது. ரிஜிஸ்ட்ரார் நேராய்க் கவனித்ததுபோல் இனி எல்லாச் சங்கங்களையும் கவனிப்பது முடியாது; சரிவரச் சங்கங்கள் வேலை செய்வதற்கு ரிஜிஸ்டரார் வேலையில் கொஞ்சம் மற்றவர்களும் செய்வது அவசியம்; செங்கல்பட்டு ஜில்லாவில் உத்திரமல்லூருக்குப் பக்கத்தில் உள்ள சங்கங்கள் இவ்வகை யுதவி செய்ய ஒழுங்கான வழியில் ஆரம்பம் செய்திருக்கின்றன. 12-சங்கங்களுக்குமேல் ஒன்று சேர்ந்து யூனியனைச் செய்துகொண்டிருக்கின்றன. சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி ஒரு நிர்வாக சபை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிர்வாக சபையாரதிகாரத்துக்கு உள்பட்டு வேலைசெய்யும்படியாய் ஒரு சூபர்வைசரை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிர்வாக சபையார் சங்கங்களின் உபவிதிகளுக்குட்பட்டு கடன் சாங்க்ஷன் செய்யலாம். இந்த ஏற்பாடு சரிவர நடந்து வருகிறது. இனி சங்கங்களைப் பரிசோதனைசெய்து நிர்வாகம்செய்ய சங்கங்களை யூனியன்களாக சேர்ப்பதுதான் வழி.

2. இதற்கு சங்கங்கள் ஒன்றுக்கொன்று அருகாமையில் இருக்கவேண்டும். அவைகளுக்குக் கூட்டுத்தொழிலின் கோட்பாடுகளும் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும், பிரதிநிதிகளை அனுப்பி வேலை நடத்துவதில் பழக்கமும் வேண்டும், நடத்தும் வல்லமையுடைய மனிதர்களும் அங்கு இருத்தலவசியம். இன்ஸ்பெக்டர்கள் இப்படிப்பட்ட மனிதர்களைத் தயார் செய்ய எத்தனிப்பார்கள்.

3. யூனியன்கள் ஏற்பாடு முன்னமேயே சில சங்கங்கள் சமீபத்தில் இருந்தால், அவைகள் ஒரு சங்கக் காரியதரிசியை யாவது பஞ்சாயத்து மெம்பரையாவது பரிசோதகராய் நியமித்து அவரைக்கொண்டு தங்கள் கணக்குகளைப் பரிசோதனை செய்யும்படி ஏற்பாடுசெய்து கொள்ளலாம். இப்பரிசோதகர் ஒவ்வொரு சங்கத்தையும் மாதம் ஒருமுறையாவது பரிசோதனை செய்யவேண்டும். ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் மாதம் ஒரு ரூபாய் அவருக்குக் கொடுக்கவேண்டும். இந்த ரூபாய் பரிசோதனை நடந்த உடன் கொடுக்கப்படும். ரிஜிஸ்ட்ராராவது சங்கங்களின் பெரும்பான்மையோராவது பரிசோதகரைத் தள்ளிவிடலாம். அவர் மாதம் மாதம் ஒவ்வொரு சங்கத்தின் வரவு செலவுக் கணக்கும், தவணைகடந்த கடன்கள் கணக்கும் தயார் செய்யவேண்டும். அவர் சங்கத்தை இஷ்டமானபோது பரிசோதனை செய்யலாம்; யூனியன் ஏற்படும்போது அங்குள்ள பரிசோதகர்களுக்குள் முதன்மையானவரை சூபர்வைசர் வேலைக்கு எடுக்கவேண்டும்.



4. அனந்தபூர், செங்கல்பட்டு ஜில்லாவிலும், வாலாஜா, பெருந்துறை, சேலம், கள்ளக்குரிச்சி, திருச்சினப்பள்ளி, உசிலம்பட்டி முதலிய இடங்களில் யூனியன்கள் ஏற்படலாம். அங்கங்குள்ள இன்ஸ்பெக்டர்கள் குரூப்புகளும் பரிசோதகர்களும் ஏற்படுத்த ஏற்பாடு பண்ணி நமக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

## பிரதிப்பயன் வேண்டாது சங்கம் ஏற்படுத்துபவர்கள்.

ஐக்ய நாணயச் சங்கங்களின் கருத்து ஜனங்களுடைய செல்வத்தை விருத்தி செய்து சுய உதவியைத் தேடும் குணத்தையும் அதிகப் படுத்துவது. தரித்திரம் இல்லாது திருப்தியுடன் இருக்கும் ஜனங்களை அரசாளுவது ராஜாங்கத்தவருக்கும் லாபம்தான். கவர்ன்மெண்டாருக்கு அவைகளால் நேரான லாபம் ஒன்றுமில்லை.

ஜனங்களுக்கே முக்கிய லாபம் உண்டுபண்ணுவதாகையாலும் சுய உதவியை அபிவிருத்தி செய்வதாகையாலும் கூட்டுத்தொழிற் சங்கங்களை வெகுமானம் எதிர்பாராது ஜனங்களே ஏற்படுத்திக்கொண்டு நடத்தவேண்டும். பர்மாவில் வக்கிலாயிருக்கும் யூ. போசின் என்பவர் தம் ரஜா நாள் முழுதும் சங்கங்கள் ஏற்படுத்தவே உழைக்கின்றார்.

சம்பளமில்லாது வேலைசெய்பவர், தாம் சம்பளம் வங்காமலே வேலையை நன்றாகத்தான் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். இதனால் கூட்டுத்தொழில் கவர்ன்மெண்டார் வரும்படிக்காக செய்த ஏற்பாடொன்றும் இல்லையென்றும் விளங்கும்.

மெம்பர்கள் ஒருவருக்கொருவர் உதவுவதுபோல் கூட்டுத்தொழிலைப் பற்றித் தெரியாதவர்களுக்குக் கற்பித்து உதவவேண்டும். ஐரோப்பாவில் சம்பளமில்லாது உழைப்பவர்களால்தான் சங்கம் ஏற்பட்டிருக்கிறது.

கூட்டுத்தொழில் ஐரோப்பாவிலிருந்து வந்ததாகையில் அங்குள்ள ஏற்பாட்டைத் தெரிந்துகொள்ளவேண்டும். இதைத் தெரிவிக்கத்தான் இங்கலீஷ் உத்யோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

ஜனங்களுக்கு கூட்டுத்தொழிலைப்பற்றித் தெரிந்தவுடன் அவர்களே சங்கங்களை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

இப்படி வெகுமானமின்றி வேலைசெய்பவருக்கு இதைப்பற்றி நன்றாய்த் தெரியவேண்டும். ரிஜிஸ்ட்ராருடன் கூடப்போய் வேலை கற்றுக்கொள்ள வேண்டும். சங்கம் ஏற்படுத்தப் பிரயத்தனம்செய்ய சாவகாசம் இல்லாதவர்கள் இதில் பிரவேசிக்கக்கூடாது.

ஆகையால் கூட்டுத்தொழில் சங்கங்கள் ஏற்படுத்துபவர்களுக்கு வேண்டிய குணங்கள் விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டிய புத்தி, சம்பளத்துக்கு வேலை பார்ப்பவர்களைப்போல் வேலை கற்றுக்கொள்ளுவதுமாம். சம்பளம் விரும்பாது வேலைபார்க்கவேண்டிய சொத்தும் வேண்டும்; ஊக்கமும் செல்வாக்குக்கூட இருப்பது நலம்.

நான்காவது வால்யூம் முதலாவது சஞ்சிகையாகிய
ஜூன்மீ 10-தேதி வெளியிடப்பட்ட புல்லடின் சுருக்கம்.

# தென் கன்னடம் மலபார் ஜில்லாக்களில் சங்கங்கள் ஏற்படுத்தியது.

(ஏப்ரல், மே, 1912-வருஷம்.)

1912ஆ ஏப்ரல் மாதத்தில் தென் கன்னடஜில்லாவில் உப்பினங்காடித் தாலூகாவிலுள்ள புத்தூர் நாணயச்சங்கத்தை ரிஜிஸ்ட்ராரவர்கள் பரிசோதனைசெய்தார். அதுவரையில் புத்தூர்ச் சங்கம்மட்டும்தான் அந்தஜில்லாவில் இருந்தது. அந்தச் சங்கம் நன்றாக வேலை செய்து வந்ததுடன் கூட்டுத்தொழிற் சங்கங்களைப் பற்றிய அபிப்பிராயங்கள் வெளியில் பரவச்செய்யவும் உதவிசெய்தது. அதன் தலைமை உத்தியோகஸ்தர் ரிஜிஸ்ட்ராரவர்களுடன் அநேக ஊர்களுக்குச் சென்று சங்கங்கள் ஸ்தாபிப்பதில் உதவிசெய்தார். இவ்விதமாய் பேன்மங்களூர், பண்ட்வால், உடுப்பி, கந்தப்பூர் முதலிய ஊர்களில் சங்கங்கள் ஏற்பட்டன.

கசர்காட் என்னும் ஊரில் ரிஜிஸ்ட்ராரவர்கள் திருவையாறு தஞ்சாவூரில் ப்ரதம கலாசாலை உபாத்யாயர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கம் போல் ஒன்று உண்டுபண்ணினார்.

மஞ்சேஷ்வாரில் மீன்பிடிக்கும் செம்படவர்களுக்காக ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. இதற்குத் தலைமையாக நின்றவர் மீன் எருச்சாலை வைத்திருக்கும் மிஸ்டர் ஜோசப் ஆள்வாஸ் (Mr. Joseph Alwaraz) என்பவர்தான். அங்குள்ள செம்படவர்கள் சப்பக்காரர்கள் என்று சொல்லப்படும் சாவகாரர்களிடம் துன்பப்படுபவர்கள். சாவ்காரர்கள் செம்படவர்கள் கொடுக்கும் கடனுக்கு வட்டி வாங்குவதில்லை; ஆனால் தினந்தோறும் பிடிக்கும் மீன்களை குறைந்த விலைக்குக் கொடுக்கும்படி கட்டாயப் படுத்துகிறார்கள். இதனால் பாடுபட்டுப் பயனற்றுப் போகின்றனர். அவர்களுக்கு ஒரு நாணயச் சங்கம் எவ்வளவோ உபகாரமாய் இருக்கும். அப்படியாக அவர்கள் சொத்தற்றவருமல்ல. ஜோடி சுமார் 600-ரூபாய் பொறும்படியான படகுகள் அவர்களிடம் இருக்கின்றன; தவிரவும் பெரியவலைகளும் அவர்களிடம் உண்டு. மீன்பிடிப்பவர்களுக்கு மேற்கடல் கரையில் சங்கம் அவசியமென்று தோற்று



கிறது. தென் கன்னடத்தில் 12-புதிய சங்கங்கள் ஏற்பட்டன; ஏற்பட்ட ஸ்தலங்கள் மங்களூர், மஞ்சேஷ்வார், பீலா, உடுப்பி, கந்தப்பூர், கசர்காட் முதலிய இடங்களில் இவைகளில் நான்கு கொங்கண பாஷை பேசும் கத்தோலிக் கிரிஸ்தவர்களுக்கு கொடுவாயன், கூழல்மன்னம். பெருமுடியூர், வளாஞ்சேரி, மங்காடு, பிரிடிஷ் கொச்சின் ஆகிய இந்த 6-இடங்களிலும் சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. நிலபாத்யதை மலபாரில் விசேஷகரமாய் இல்லையாகையால் கீழ்ப்பக்கத்தில் இருக்கும் மாதிரியான சங்கங்கள் மலபாருக்கு ஏற்றனவல்ல. நில ஜாமீன்பேரில் கடன்கொடுப்பது அங்கு முடியாது. நபர் ஜாமீன்தான் உபயோகப்படவேண்டும். தவிரவும் தான்யப் பாங்குகள் மலபாருக்கு அவசியமென்று தோற்றுகிறது.

# நிதிகள்.*

ஆங்கிலேய தேசத்தில் கட்டிடங்கள் கட்டுபவர்களுக்கு உதவி செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் சங்கங்களின் முறையை அனுசரித்து கூட்டுச் சீட்டு பண்டுகள் நிதிகளாக விஸ்தரிக்கப்பட்டுள்ளன. சென்னைப்பட்டணத்தில் முதலில் ஏற்படுத்தப்பட்ட நிதி இம்பீரியல் உண்டாயிற்று. இது 1872ஆ வரையிற்றான் வேலைசெய்தது. அதேமாதிரி ஏற்பட்ட மற்ற சங்கங்களும் அநேகம் அதேகதியை அடைந்தன.

பின்பு ஸ்தாபிக்கப்பட்டுக் கிரமமாய் ரிஜிஸ்டரும் செய்யப்பட்டு அநேக நிதிகள் இந்த ராஜதானியில் விளங்கி வருகின்றன.

நிதிகளின் விதிகள்:—கூட்டுத்தொழில் முறைப்படி பார்த்தால் நிதிகள் அனுஷ்டித்து வரும் கோட்பாடுகள் பல குறைவுகளை யுடையன.

நோக்கங்கள்:—ஐக்கிய நாணயச் சங்கங்களைப் போலவே நிதிகளிலும் பணம் மீற்பது, சிக்கனம், மலிந்த வட்டிச்குக் கடன் ஏற்பாடுபண்ணிக் கொடுத்தல் ஆகிய இர் நோக்கங்களுள. ஆனால் இவைகள் சுய உதவியையும் மெம்பர்களுக்குள் அன்னியோன்யத்தையும் விருத்திசெய்வதில்லை. தவிரவும் லார் நிக்கல்சன் துரை யவர்கள் சொல்லுகிற பிரகாரம் நிதிகள் பிரதம அதிகாரம் வகிப்பவர்கள் லாபத்தை அடைவதும் நிதிகளின் வழக்கமாகையால் மெம்பர்களுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் சௌகரியம் கிடைப்பதில்லை.

மெம்பர்கள்:—கூட்டுத்தொழிற் சங்கங்களில் மெம்பர்கள் ஒரே இடத்தவராயும் ஒருவரை ஒருவர் தெரிந்தவராயும் நற்குண முடையவராயும் இருக்கவேண்டும். இந்தக் கொள்கைகள் நிதிகளுக்கில்லை.

---

* இது திருவல்லிக்கேணி கோ-ஆபரேடிவ் சொசைட்டியாரால் பரிசளிக்கப்பட்ட வியாசத்தின் பகுதி. மிஸ்டர் கே. என். சீனிவாசன் எழுதியது.

சில்லறை வசூல்கள்:—நூல் புஸ்தகவிலை, ரசீது புஸ்தகவிலை, கடன் சொத்து மதிப்புக்கட்டணம், பத்திரக்கூலி என்று பலவழியாய் நிதிகள் பணம் வாங்குகின்றன. சங்கங்கள் அப்படிச் செய்வதில்லை.

கடன் கொடுத்தல்:—நிலத்தின் ஜாமீன்பேரிலாவது பங்குத்தொகை ஜாமீன்பேரிலாவது தான் நிதிகள் கடன்கொடுக்கின்றன. கடன் வாங்குபவர்கள் குணத்தைப்பற்றி அவைகள் கவனிப்பதில்லை. கூட்டுத்தொழிற் சங்கங்கள் யோக்கியர்களாயுள்ள ஏழைகளுக்கு நபர் ஜாமீன்பேரில் கடன் கொடுக்கின்றன. ஸர் பிரடரிக் நிக்கல்சன் துரையவர்கள் பந்தகக்கடன் உள்புகுந்து பார்க்கும் அளவில் அவ்வளவாக முழுவதும் நம்பக்கூடியதல்லவென்று சொல்லியிருக்கிறார்.

லாபத்தைப் பங்கிட்டுக்கொள்ளல்:—நிதிகள் அந்தந்த வருஷத்திய லாபத்தில் எட்டிலொன்றுக்கு மேற்பட்டு க்ஷேமநிதியில் சேர்க்கிறதில்லை; ஐக்யநாணயச் சங்கங்கள் தங்கள் லாபம் முழுவதையுமாவது ஒரு பலத்த பாகத்தையாவது க்ஷேமநிதியிற் சேர்க்கின்றன.

நிதிகளின் விதிகள் மேலதிகாரிகள் லாபத்தில் ஒரு முக்கிய பாகத்தை தமக்குள் பங்கிட்டுக்கொள்ளும்படியாய் இடங்கொடுக்கின்றன. இது ஐக்கியச் சங்கங்களில்லை.

மேலதிகாரிகளுக்கு வேண்டிய அம்சங்கள்.—நிதிகளில் மேலதிகாரிகள் அநேகம் பங்குகள் எடுத்துக்கொண்டு பணத்தையும் சேமித்துவைத்து இருக்கவேண்டும்; கூட்டுத் தொழிற் சங்கங்களில் அதிகாரம் வகிக்கத் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்கள் எடுத்திருக்கும் பங்குக்கும் கணக்கில்லை; அவர்களுடைய செல்வத்துக்கும் கணக்கில்லை. நற்குணமே கணக்காகும். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் சங்கத்தில் வித்தியாசம் இல்லை. நற்குணமுடையவர் தீக்குணமுடையவர் என்றுதான் வித்தியாசம் உண்டு.

ஏழு நல் ஆசாரங்கள்.—நிதிகளில் இல்லாத ஏழு நல்ல ஆசாரங்கள் கூட்டுத்தொழில் சங்கங்களிலுள்ள:—(1) சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் சகோதரம்போல் பாவித்தல். (2) அவர்களுக்குள் லாப நஷ்டத்துக்கு கூட்டு பாத்தியம். (3) ஏழை பணக்காரர்கள் என்னும் வித்தியாசமின்மை. (4) பகிரங்கமாய் கணக்கு வைத்தல். (5) பங்கு எடுப்பவரை மெம்பராய்ச் சேர்த்துக்கொள்ளுதல். (6) அவரவர்கள் தனித்தனியே லாபத்தைத் தேடிக்கொள்ளாமல் பாதுகாத்துக் கொள்ளுவது. (7) வெகுமானமொன்றுமில்லாமல் சங்கத்தின் வேலை செய்தல்.

———:(•):———

# உபந்நியாசங்கள்.

## செங்கல்பட்டு ஜில்லா கூட்டுறவினர் மஹாநாடு.

1912ஞ மார்ச்சு மீ 25. 26. தேதி அண்டர்சன் ஆல் சென்னை.

மாட்சிமை தங்கிய கவர்னர் துரை யவர்களின் உபன்யாசம்.

நான் அதிகமாகச் சொல்லக் கூடியது ஒன்றும் இல்லை. ஆகையால் என்னுடைய உபன்யாசத்தை சீக்கிரம் முடித்துவிடுவேன். சில தினங்களுக்கு முன்புதான் இந்தக் கூட்டம் கூடுதலைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அதைப்பற்றி என்னிடம் சொன்னவர் சொல்லும்போதே நான் ஸ்வல்ப காலத்துக்குள் வேறு ராஜதானிக்குப் போகும்படியாய் இருப்பதால் இன்றைக்கு இந்த மீட்டிங்குக்கு வர முடியாது என்று என்னிடம் சொன்னார். என்னிடம் விஸ்வாசத்தினால் தான் அப்படிச் சொன்னார். அவர் அவ்வளவு ப்ரியம் வைத்ததில் சந்தோஷப்பட்டேன். ஆயினும் நான் சென்னையில் கவர்னராயிருக்கும்போது இந்த ஊரிலேயே இந்தமாதிரி மீட்டிங் நடக்கும்போது கூட்டுத் தொழில் அபிவிருத்தியில் கவலையுடையவனாயிருக்கிறேன் என்பதைக் காண்பிக்காமல் இருக்கக்கூடாது என்று எண்ணி இங்கு வந்தேன். இந்த ராஜதானியிலும், பொதுவாய் இந்தியா முழுதிலும் கூட்டுத் தொழிற் சங்கங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தியாவின் இதர பாகங்களைக் காட்டிலும் இந்த ராஜதானியில் கூட்டுத் தொழில் ப்ரபலித்து இருப்பதாகக் கேள்விப்பட்டு இந்த ராஜதானியில் கவர்னராயிருக்கும் நான் சந்தோஷப்படுகிறேன். இந்த ராஜதானியில் ஐக்யச் சங்கங்கள் முதல் முதல் செங்கல்பட்டில் ஏற்பட்டது என்று தோற்றுகிறது. இப்போது அந்த ஜில்லாவிலேயே அதிகபலப்பட்டிருக்கிறது. ஆகையால் செங்கல்பட்டு ஜில்லாவை நான் மகிழ்வுடன் கொண்டாடுகிறேன். எனக்கு செங்கல்பட்டு ஜில்லாவைப்பற்றி எப்போதும் நல்ல அபிப்பிராயம்; ஒருவேளை நான் அதில் வாசம் செய்வதால் அப்படியிருக்கலாம். நான் பார்த்தமட்டும் இந்த ஜில்லாக்காரர்கள் மற்ற எந்த ஜில்லாவிலுள்ளவர்களுக்கு சமமான புத்தியுடையவர்கள்; அவர்களுக்கு ஐக்கியக்கோட்பாட்டினால் சௌகர்யம் ஏற்பட்டிருக்கிறதென்பதில் மிகவும் களிக்கிறேன். கூட்டுத் தொழிற் சங்கங்கள் பரவுவதால் நன்மையென்பது நன்றாய்த் தெரிந்தவிஷயம். இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு விவசாயத்துக்கு வேண்டிய பணம் சரசமான வட்டிக்குக் கிடைக்கும்படியாகவும் அனாவசியமான செலவு செய்யாமல் இருக்கவும் உதவிசெய்கின்றன. எனக்கு வட்டி அதிகமாய்க் கொடுப்பது என்பது மற்றச் செலவுகளைக்காட்டிலும் அக்ரமமான செலவென்று தோற்றுகிறது. ஆகையால் வட்டி சரசப்படுத்தும் ஏற்பாடு எதுவும் எனக்கு நன்மை என்று தோற்று

றது. கூட்டுத் தொழில் வட்டியைக் குறைப்பதுடன் சிக்கனத்தை விருத்தி செய்து தேசத்தையும் நல்லஸ்திதிக்குக்கொண்டுவரும் நீங்கள் சொல்லுவதைக் கேழ்க்க சாவகாசம் இருக்கும் பொருட்டு நான் பேசுவதை இத்துடன் நிருத்திக் சொள்ளுகிறேன். இன்னொரு முறை நான் இங்கு வரும்படியான சந்தர்பம் ஏற்பட்டதில் உள்ள சந்தோஷத்தையும் சொல்லி விவசாயிகளுக்கு ஐக்கியச் சங்கங்கள் எவ்வளவு நன்மை செய்யும் என்பதில் எனக்கு உள்ள நம்பிக்கையையும் தெரிவிக்கிறேன். நானும் ஒரு விவசாயிதான். நான் அநேகம் கூட்டுத் தொழிற் சங்கங்களில் சேர்ந்து இருக்கிறேன். நீங்கள் இந்த தேசத்தில் ஸ்டோர்கள் ஒன்றும் ஏற்படுத்துவது இல்லை போலும்; உங்களவ்வளவு நாணயச் சங்கங்கள் ஏற்படுத்த முடியாயலிருக்கும் தேசங்களில் ஸ்டோர்கள் பல ஏற்பட்டு நன்மை உண்டாகின்றன.

நல்வரவு கூப்பிடும் உபந்நியாசம்.

சல்லிப்பள்ளிக் குமாரராஜா தங்களால் அன்று வரக்கூடவில்லை யென்று அநுதாபப்பட்டு எழுதியிருந்த பலர் கடிதங்களைப் படித்துவிட்டுத் தம்முடைய நல்வரவு கூறும் உபந்நியாசம் செய்தார். மாட்சிமை தங்கிய கவர்னர் துரையவர்கள் தயவு செய்து அக்கிராசனம் வகித்ததற்குக் களிகூறினார்.

நாணயச் சங்கங்கள் பல ஏற்பட்டிருக்க சரக்குகள் வியாபாரம் செய்யவும் உண்டுபண்ணவும் அதிகமாக சங்கங்கள் ஏற்படவில்லை யென்பதைச் சுட்டிக் காட்டினார். புதிய ஆக்டு செலாவணியான பின்பு இவ்வகைச் சங்கங்கள் ஏற்படும் என்று நம்பினார். அவர் அன்று கூடியதுபோல் சங்கதவர்கள் கூடுவதின் நன்மைகளை விளக்கிக் காண்பித்தார். கிராம நாணயச் சங்கங்களுக்கு வேண்டிய பணத்தை ஆகப்பண்ணிக்கொடுக்கவும் மேல் விசாரணை விசாரிக்கவும் உதவும்படியாய் யூனியன்கள் ஏற்படுத்துவதின் அவஸ்யத்தை ரிஜிஸ்ட்ரார் கவர்ன்மெண்டாருக்குக் காண்பித்து இருக்கிறார்.

திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை யவர்கள் உபன்யாசம்.

அன்று கூடிய கான்பிரன்சு பலவழியாலும் உபயோகமுடையதா யிருந்தது. மாட்சிமைதங்கிய கவர்னர் துரையவர்கள் அன்றயதினம் அக்கிராசனம் வகிக்க சம்மதித்ததின் கருணையைப்பற்றிச் சொன்னார். யூனியன்கள் ஸ்தாபிப்பதின் அவஸ்யத்தைப்பற்றியும் கான்பிரன்சுகள் நடத்தும் முறையைப்பற்றியும் பேசினார். நம் தேசத்தில் சச்சரவு ஒன்று மில்லாது ஒழுங்காய் கான்பிரன்சுகள் நடக்கின்றன. ஆயினும் அதை நடத்துவதில் சில முறைகளைப் பற்றி இன்னும் நாம் கற்றுக்கொள்ளவில்லை. சிறிய கமிட்டிகள் ஏற்படுத்திக் கொண்டு ஒவ்வொரு கமிட்டியும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி ஏற்பாடு செய்துகொண்டால் நன்மையாயிருக்குமென்று சொன்னார். 1912-ம் வருஷ 2-வது ஆக்டுப்பிரகாரம் யூனியன்கள் சுலபமாய் ஏற்படுத்தலாம் என்றும் சொன்னார்.



மற்றப் பிரசங்கங்கள்.

கனம் சர். வி. சி. தேசிகாசாரியாரவர்களும், கனம் டி. ரெங்காசாரியார் அவர்களும், சி. அருணைய நாயுடு அவர்களும் உபன்யாசம் செய்தார்கள். ஆனரபில் மிஸ்டர் ஆதிநாராயண ஐயா வந்தன வாழ்த்துக் கோரினார். இந்த ராஜதானியைப்பற்றி கருணையுடைய கவர்னர் கார்மிக்கேல் துரையவர்கள் ஞாபகம் மனதில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மாட்சிமைதங்கிய கவர்னரவர்கள் கடைசியில் சொன்ன வார்த்தைகள்.

என்னிடம் இவ்வளவு விஸ்வாசமாய் வந்தனம் அளித்ததில் மிகவும் களிக்கிறேன். நான் கடைசியில் தமிழில் பேசவேண்டியது. ஐந்து வருஷகாலமாவது இங்கு இருந்தால் ஒரு வேளை தமிழில் பேச சாத்தியமாய் இருக்கும். இப்போது 5 மாதந்தான் இருந்திருக்கிறேன் சென்னை ராஜதானியைப்பற்றியும், செங்கல்பட்டு ஜில்லாவைப்பற்றியும் எப்போதும் மனதில் நினைவு இருக்குமென்று சொன்னார். படிப்பையும், சுகாதாரத்தைப்பற்றியும் கவனிப்பதையும் தவிர்த்து கூட்டுத்தொழில் முறையைப் பழக்குவதுபோல் விவசாயிகளுக்கு நீங்கள் செய்யக்கூடுவது மற்றது ஒன்றுமில்லை. உங்கள் சங்கத்தால் விவசாயிகளுக்கு மனிதனுக்கு செய்யக்கூடும் உதவியிலெல்லாம் பேருதவி செய்கிறீர்கள். தங்களுக்கு வேண்டிய விஷயங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும்படியாய்ச் செய்கிறீர்கள்.

நான் தமிழில் பேச முடியவில்லை. நான் கற்றுக்கொண்டிருக்கும் சில வார்த்தைகளைத்தான் சொல்லக்கூடும்; நான் அவைகளைச் சரியாய் உச்சரிக்காவிட்டால் மன்னிக்க வேண்டும். அவர் வார்த்தைகளாவன:. "போய் வருகிறேன் சுகமாயிருங்கள்."

கான்பிரன்சு இரண்டாவதுநாளில் செய்த பிரசங்கக்குறிப்பு.
(ரிஜிஸ்ட்ராரவர்களால் எழுதப்பட்டது.)

உத்திரமேரூர் கனம் ஒ. எம். வெங்கிட்டநாத ஐயங்காரவர்கள் பிரசங்கத்தில் வாங்கும் கடன்கள் பத்து வருஷத்திற்குள் விவசாயிகளுக்குக் கொடுக்கு மாளாது என்று சொன்னார். கடன் வாங்குபவர்கள் எந்தக் காரணங்களுக்கு கடன் வாங்குகிறார்களோ அதற்காகவே செலவு செய்யவேணுமென்று எடுத்துக் காட்டினார்.

நீடாமங்கலம் கனம் என். சேதுராம ஐயரவர்கள் கூட்டுறவு முறையை அனுசரித்து இந்த நாட்டு விவசாயத்தை எப்படி விருத்தி செய்யலாம் என்று காண்பித்தார்.

காஞ்சிபுரம் கனம் பி. இராமச்சந்திர சாஸ்திரியாரவர்கள் நெசவுகாரர்கள் இந்த தேசத்தில் இப்போது க்ஷீணகதி யடைந்ததைப்பற்றியும் கூட்டுத்தொழில் அவர்களை எப்படிக் காப்பாற்றக் கூடும் என்றும் விளக்கினார்.

வளர்புரம் கனம் நரசிம்மாசாரியாரவர்கள் பஞ்சமர்களை சங்கங்களில் சேர்த்துக்கொள்வதின் அவசியத்தைப்பற்றிச் சொன்னார். கம்மாளம்பூண்

டிச் சங்கத்தவர் அந்த கிராமத்தில் ஒரு ஸ்கூல் நடத்துவதாய் ஏற்பாடு செய்திருப்பதைப்பற்றிப் புகழ்ந்து கூறினர்.

## திருவல்லிக்கேணி அர்பன் கோ-ஆபரேடிவ் சொசைடி லிமிடெட்.

### ஆரம்பநாள் கொண்டாட்டம் 1912-௵ ஏப்ரல்௴ 7-வது தேதி.

1912௵ ஏப்ரல்மாதம் 7 வது தேதி ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்கள் சி. ஐ. இ. அக்கிராசனம் வகிக்க அநேகம் கூட்டுறவினர் சென்னையிலிருந்தும் வெளியூரிலிருந்தும் வந்து கூடியிருந்தனர்.

கனம் கே. பி. இராமநாத ஐயர் நல்வரவு கூறினர். மிஸ்டர் டி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கூட்டுத்தொழில் முறையாய்ச் சரக்குகளை பிரிவினை செய்யும் சங்கங்களைப்பற்றி பேசினர். கூட்டுத்தொழிற் சங்கங்களில் வேலை செய்பவரே மேலானவர் என்று வற்புறுத்தினர்.

கனம் டி. கே. அனுமந்தராயரவர்கள் நாணயச்சங்கங்கள் தவிர மற்ற கூட்டுத்தொழில் சங்கங்கள் எப்படி உபயோக முள்ளனவாகலாம் என்று சொன்னர்.

கனம் சி. துரைசாமி ஐயங்காரவர்கள் உபன்யாசம் செய்தார்.

ஏ. எஸ். பொன்னுசாமி ஐயர் எழுதியனுப்பியிருந்த வியாசம் படிக்கப்பட்டது.

### ஒரு பரிசளித்தல்.

ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்கள் மிஸ்டர் கே. எஸ். சீநிவாச ஐயர் நிதிகள், குரிகள் முதலிய இந்த நாட்டுச் சங்கங்களைப்பற்றி எழுதிய வியாசத்திற்காக ஓர் பரிசு கொடுத்தனர். சங்கத்தவரால் நியமிக்கப்பட்ட கமிட்டியாரால் அந்த வியாசம் முதன்மையானதென்று தீர்மானிக்கப்பட்டு இந்தப்பரிசு அளிக்கப்பட்டது.

### அக்கிராசனாதிபதி உபந்நியாசம்.

கூட்டுத்தொழில் முறைப்படி ஏற்பட்ட நாணயச்சங்கங்கள், சரக்குகள் பிரிவினைசெய்யும் சங்கங்களுக்குத் தாழ்வுள்ளதல்லவென்று சொன்னர். சென்ட்ரல் அர்பன் பாங்காலும் அதுபோன்ற மற்ற சங்கங்களாலும் நாணயச்சங்கங்களும் பிரபலித்தன என்பது நிச்சயம். சிக்கனம், தொழில்முறை கற்றுக்கொள்ளல், சங்கம் நடத்தும் பழக்கம் இக்குணங்களெல்லாம் நாணயச் சங்கங்களால் விருத்தியாகின்றன. ஒருவரிடத்தில் ஒருவருக்கு நம்பிக்கையும், ஒவ்வொருவருக்கும் மற்றவர்களைப்பற்றி நன்றாய் தெரிவதும் ஒழுங்கான நடவடிக்கையும் சத்தியமும் சங்கங்களால் அதிகரிக்கிறது.



சங்கங்கள் வெளிகளில் ஜாஸ்தியாவது ஐக்யக்கோட்பாடுகள் வியாபித்தலை காண்பிக்கவில்லை என்னும் அபிப்பிராயத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. சென்ட்ரல் அர்பன் பாங்கைப்பற்றி சிலர் அதிருப்தியாய் சொன்னதற்கு பதிலாக அது இல்லாவிட்டால் எப்படி சங்கங்கள் ஏற்பட்டு இருக்கும், என்று கேட்டார்.

மெம்பர்கள் கூட்டு ஜவாப்புக்கு ஒப்புக்கொள்ளுவது ஜனங்களுக்கு ஐக்யமுறை நன்றாய்க் கற்பிக்கும் என்றார். கிராம நாணயச் சங்கங்களுடன் உழைத்த மிஸ்டர் ஏ. எஸ். பொன்னுசாமி ஐயர் அவைகள் நன்றாய் வேலை செய்வதாய் ஒப்புக்கொண்டு இருக்கிறார். மிஸ்டர் ஏ. வேதாசல ஐயரவர்களின் பிரயத்தனத்தால் உசிலம்பட்டியண்டை சங்கங்கள் ஏற்பட்டு கள்ளர்கள் நல்வழி நாடுகிறார்கள் என்றார். அநேக இடங்களில் இச்சங்கங்களின் லாபத்தைக்கொண்டு பள்ளிக்கூடங்கள் நடந்து வருகின்றதாகக் கேள்விப்பட்டதாய் சொன்னர். இப்படிப்பட்ட ஏற்பாடு நடந்தால் கனம் கோக்லேயவர்கள் சொல்லியபடி படிப்புக்காக வரி ஜனங்கள் கொடுக்கவேண்டாம் என்றார்.

ஸ்டோர்களால், மிஸ்டர் இராமநாத அய்யர் முதலானவர்கள் சொல்லிய லாபங்கள் கிடைக்கும் என்பதை ஒப்புக்கொண்டார். இப்போது வியாபாரிகளுக்குள் உண்டாகும் போட்டியின் துன்பம் குறையுமென்றும் நாளடைவில் நல்லகாலம் ஏற்படும் என்றும் நம்பினர்.

இம்மாதிரிச் சங்கங்கள் ராஜாங்க முறையை கற்பிக்குமென்று சொன்னர். அது உண்மையே. ராஜாங்கத்தில் மேலுக்குமேல் சம்மந்தப்பட்டு நடத்தும் சக்தி சங்கங்களால் உண்டாகும்.

வெளியூர்களில் ஸ்டோர்கள் பரவாததற்குக் காரணம் அவைகளைப் பற்றி அங்கே தெரியாததுதான். கனம் ஏ. எஸ். பொன்னுசாமி ஐயர் சொல்லியதுபோல் பலர் மற்ற ஊர்களுக்குச் சென்று இவ்விதமான சங்கங்களின் நன்மைகளையும் அவைகளை நடத்தும் விதத்தையும் பற்றிப் போதித்து வந்தால் தான் இச் சங்கங்கள் பரவுமென்று சொன்னர்.

இம்மாதிரிச் சங்கங்களில் க்ஷேமநிதி பணமாய்வைத்து இருக்க வேண்டிய அவசியமில்லையென்று சொன்னர். வீடுகளாய் வாங்குவதில் ஒருவருக்கும் ஆக்ஷேபணையிருக்க முடியாது என்று வற்புறுத்தினர்.

தமக்கு இதைப்பற்றி அதிகமாகத் தெரியாது என்று அவையடக்கமாய் சில வார்த்தைகளுடன் உபன்யாசத்தை முடித்தார்.

பின்பு அவருக்கு மாலை சூட்டினர்கள்.

மிஸ்டர் கே. பி. இராமநாத ஐயர் அவர்கள் அக்கிராசனாதிபதிக்கு வந்தனமளிக்கும்போது சில வார்த்தைகள் சொன்னர். முன்னாட்களில் ரிஷிகள்

சில நிலைகளில் சில கடவுள்களைக் கொண்டாடுவது வழக்கம்; அப்படிப்பட்ட காலங்களில் மற்ற கடவுளெல்லாம் கீழ்ப்பட்டதாக பாவிப்பார்கள். அது போல இவைகளைப்பற்றி அன்று கொண்டாடுவதாலேயால் மற்றமானதைச் சங்கங்களை கொஞ்சம் தாழ்வுபோல் சொன்னார்கள். ஆனால் எல்லாச் சங்கங்களும் ஜனங்களுக்கு நன்மையை விருத்திபண்ணும்.

## கும்பகோணம் மகாஜன கான்பிரன்சு 1912 ஞ் மேமீ 11 தேதி.

ராவ்பஹதூர் திருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் சொல்லியது:—விவசாயிகள் கடனுள்ளதையும் கஷ்டத்தையும் கூட்டுத்தொழிலால் நிவர்த்தி செய்யலாம் என்றார். ஐக்ய நாணயச்சங்கங்கள் வியாபித்திருப்பதை புகழ்ந்தும் சொன்னார். விவசாயச்சங்கங்கள் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை யென்றும் கூட்டுத்தொழில் முறையில் வேலை செய்யவேண்டுமென்று எண்ணினார்.

## மிஸ்டர் ஜோசப் என்பவர் தொர்பார்ணில் செய்த உபந்நியாசம்.

ஜனங்களுடைய அன்ப ஒற்றுமைக்கு நடந்திருக்கும் ஏற்பாடு எல்லாவற்றிலும் கூட்டுத்தொழில் முறைதான் பயன்படுமென்று நம்பினார். அவ்வளவு நன்மைசெய்யும் சக்தியும், நோக்கமும் உடையது வேறு எந்த ஏற்பாடும் இல்லை. அது இப்போது உலகெங்கும் பரவியிருக்கிறது.

# கூட்டுத்தொழில் வியாபித்தல்.

———:(o):———

## வெளிதேசங்களில்

(இண்டிபிக் அண்டு சோஷல் இண்டலி ஜன்சு புல்லடினிலிருந்து எடுக்கப்பட்டது.)

### தான்யம் சாகுபடிசெய்தல்.

அமெரிக்காவிலுள்ள கனடா என்னும் தேசத்தில் தான்யம் பயிர்செய்வதுதான் முக்கிய விருத்தி.

### தானியப்பிரிவு.

விவசாய இலாகா 1902 ம் ஞு தான்யம் பயிரிடுவோர்களுக்காக ஒரு தான்யப் பிரிவு ஏற்படுத்தினார்கள். இதில் நல்லவிதைகளே சாகுபடிசெய்பவர்கள் உபயோகப்படுத்தும்படியாய் ஏற்பாடு செய்கிறார்கள்.

கனடாமுழுதும் வயல்களில் மீட்டிங்குகளும், சந்தைகளும், ஏற்படுத்தி நல்லவிதைகளை உபயோகப்படுத்துவதையும் நல்லவிதைகளை பொறுக்கி எடுக்கும் வழியையும் போதிக்கிறார்கள்.

பயிர்களில் எது செழிப்பாயிருக்கிறதோ அதற்கு இனாம் கொடுக்கும்படியும் ஏற்பாடு செய்கிறார்கள்.

தான்யப்பிரிவின் உதவியின் பேரில் பயிரிடுபவர் சங்கங்கள் ஏற்பட்டு நல்ல விதைகளை உண்டுபண்ணுவதை அபிவிருத்தி செய்கின்றன.

### பரிசோதனைச்சங்கம்.

ஒண்டாரியோவில் தான்யங்கள் பயிரிட்டுப் பரிசோதனை செய்ய ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. வருஷாவருஷம் செய்த பரிசோதனைகளையும் அதன் பலன்களையும் எழுதி அவைகளைப் பரவச் செய்கிறார்கள்.

### பயிரிடுபவர் கம்பெனி.

மானிடோபாவில் விளையும் தான்யங்களை விற்பனைசெய்ய ஒரு கம்பெனி ஏற்படுத்தினார்கள். இதனால் தான்யங்கள் அதிக விலைக்குப்போயின. விவசாயம் செய்பவர்கள் லாபமடைந்தார்கள்.

தான்யம் விற்க ஒரு கூட்டுத்தொழில் சங்கம் பொஹிமியா என்னும் தேசத்தில் ஏற்பட்டு மிகுந்த லாபத்தைக் கொடுக்கிறது.

### விவசாயமல்லாத மற்றவகைக் கூட்டுத்தொழில்.

மிலானில் கூட்டுத்தொழில் முறையில், சரக்குகளைப் பிரிவினைசெய்யும் கம்பெனிகளுக்கு உதவிசெய்ய ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது.

அதன் கருத்துக்கள் இரண்டு. கூட்டுத்தொழில் முறையில் பிரிவினை செய்யும் சங்கங்களில் ஒரு தொழில் முறையை நிர்ணயிக்கும் பிரிவு ஒன்று ஏற்படுத்துவது. (2) புஸ்தகங்கள் வழியாய் இச்சங்கங்கள் ஏற்படுத்தும் வழியையும் அவைகளை நடத்துவதில் நடைமுறையில் வேண்டிய விதிகளையும் விளம்பரம் செய்வதும்.

இன்ஸ்பெக்டர் இச்சங்கங்களை வெகுமானம் ஒன்றும் இல்லாமல் பரிசோதனை செய்கிறார்.

### கூட்டுத்தொழில் ஆஸ்பத்திரிகள்.

கூட்டுத்தொழில் முறையில் பெல்ஜியத்தில் சில இடங்களில் ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டிருக்கின்றன.

### இன்ஸ்யூரன்ஸ் சங்கங்கள்.

பெல்ஜியத்தில் 66 இன்ஸ்யூரன்ஸ் சங்கங்கள் இருக்கின்றன.

# குறிப்புகள்.

### கூட்டுத்தொழிலால் விலை ஏறுதலைத்தடுத்தல்.

ஐரோப்பாவில் சாரண்டு என்னுமிடத்தில் பால் தயிர்ச்சாலையில் செய்திருக்கும் காரியத்திலிருந்து கூட்டுத் தொழில்முறையால் சரக்குகள் விலையில் ஏத்தம் இல்லாமல் ஒரேவிலையாய் நிறுத்தி வைக்கலாம் என்று புலப்படுகிறது.

### கூட்டுத்தொழிலைப்பற்றி ஒரு பிஷப்புபாதிரி சொல்லியது.

ஒரு பிஷப்பாதிரியார் கூட்டுத் தொழில்முறை வியாபித்தலால் எல்லோருக்கும் ஒரு ரீதியாய் க்ஷேமம் உண்டாகித் தொழிலாளிகளுக்கும் அவர்களை வைத்து வேலை வாங்குபவர்களுக்கும் அடிக்கடி உண்டாகும் கலகங்கள் ஏற்படாது என்றார்.

### சிறுவர்களுக்கு போதிக்க ஏற்பாடு.

சிறுவர்களுக்கு போதிப்பதில் தேர்ச்சிபெற்றிருக்கும் மிஸ்டர் எங் என்பவர் சிறுவர்களுக்கு கூட்டுத்தொழிலின் உண்மை முறையைப் போதிக்கவேண்டுமென்று எடுத்துக் காட்டினார்.

### ஸ்காபி சங்கம்.

இந்திலாந்திலுள்ள ஸ்காபி என்னும் விவசாயச்சங்கம் சொல்பமாய் ஆரம்பித்துப் பிரபலித்து விட்டது.

### கீழச்சேரி தான்யச்சங்கம் லிமிடெட் 969.

செங்கல்பட்டு ஜில்லாவில் காஞ்சீபுரம் தாலுகாவிலுள்ள கீழச்சேரி தான்யச்சங்கம் 1912௵ மே௴ 31 தேதி கூட்டுத்தொழில் சங்கமாய் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இதன் கருத்து ஏழைக்குடிகளுக்கு வேண்டும்போது தான்யம் கடன்கொடுத்து மாசூல்காலத்தில் ஈடுபண்ணிக் கொள்ளுவதுதான். இந்த மாதிரி பாங்கில் முக்கிய கஷ்டமென்னவென்றால் சரியாய் தான்யத்தைப்பாதுகாப்பதுதான். கஷ்டப்பட்டு இதற்காக பிரதிப்பலன் வேண்டாது உழைப்பவர்கள் இருக்கும் ஊரில்தான் இவ்வகைச் சங்கம் ஓங்கும்.

### மாம்பளம் கோவாபரேடிவ் சொஸைட்டி லிமிடெட் நெ. 922.

மாம்பளம் சொஸைட்டி இந்த ராஜதானியில் சரக்கு உற்பத்தி செய்ய ஏற்பட்டுள்ள இரண்டாவது கூட்டுத்தொழில் சங்கமாகும். இச்சங்கம் நல்லெ

ண்ணெய் உற்பத்தி செய்கிறது. தவிரவும் குடியிருக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிலம் சம்பாதித்துக் கொடுப்பதும் வீடுகட்ட உதவுவதும் இதன் கருத்துக்கள்தான். 50 ரூபாய் விலையுள்ள 400 பங்குகள்கூடிய 20000 ரூபாய் இதன் முதல். சென்னையில் உள்ளவர்கள் இதை கவனிப்பார்கள். இதற்கு ஆரம்ப பூதர்களாயிருந்த கனம் வி. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளும், டி. நடேச ஐயரும்) டாக்டர் சி. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரும் திருவல்லிக்கேணிச் சங்கம் நடத்திய பழக்கத்தால் கூட்டுத்தொழில்முறை நன்றாய்க் கற்றவர்கள்.

### கோவாபரேடரைக் கவர்ன்மேண்டார் கொண்டாடல்.

கூடூர் சொசைட்டி செக்ரிடரியாகிய மிஸ்டர் மகமத் செரிவ் என்பவர் கூட்டுத்தொழிற் சங்கத்துக்காக வேலை செய்ததின்பேரில் நெல்லூர் கலெக்டர் ஒரு பரிசளித்தார்.

## விமர்சனங்கள்.

(:-:)

ஜனவரிமாதத்திய அக்ரிகல்சுரல் ஜர்னல் என்னும் விவசாயப்பத்திரிகையில் சல்லிப்பள்ளி குமாரராஜா கூட்டுத்தொழிலைப்பற்றிச் செய்த உபன்யாசம் அடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

நான்காவது வால்யூம் முதல் சம்புடம்.

செப்டம்பர்மீ 10 தேதி பிரசுரமான புல்லடின்.

# கூட்டுத்தொழில்முறை வியாபித்த சரித்திரம்.

(:o:)

(ம-ா-ா-ஸ்ரீ ராவ்சாயப் கே. விஜயராகவாசாரியார் அவர்கள், எம். ஏ. எழுதியது.)

## III.

### சங்கங்களின் சங்கியையும் விதங்களும்.

முதல் ரிஜிஸ்ட்ரார் 1904-ம் வரு ஜூலைமாதம் வேலை ஒப்புக்கொண்டார். இந்த தேசத்தைப்பற்றி அவருக்கு நன்றாகத் தெரியுமாகையால் ஜனங்கள் கூட்டுத்தொழில் முறையை ஒப்புக்கொள்ளவேண்டுமானால் அங்கங்கு செல்வாக்குடைய படித்த மனிதர்கள் உதவி வேண்டுமென்று தெரிந்து கொண்டார். அப்படிப்பட்ட மனிதர்களும் இருந்தார்கள். முதல் முதல் திவான்பகதூர் ஆதிநாராயண ஐயரின் உதவி கிடைத்தது. அவர் செட்டில் மெண்டு டிப்டி கமிஷனராயிருந்தவர்; செங்கல்பட்டில் நிலமுடையவர். அவர் தேச நன்மைக்கு எப்போதும் முன்வந்து நிற்பவர். செங்கல்பட்டு ஜில்லாவில் திரூர் என்னும் ஊரில் ஒரு சங்கம் ஏற்பட்டது. இதிலும் அப்போது ஏற்பட்ட இன்னும் சிலசங்கங்களிலும் மெம்பர்களின் பாத்தியம் பங்குத்தொகை யவ்வளவுதான். பொறுப்பு வரையறுக்கப்படாமல் தான் கிராமச் சங்கங்கள் ஏற்பட வேண்டுமென்று சட்டமிருந்தது; அதற்கு ஜனங்கள் சம்மதப்பட வில்லை. பிரபலமான சி. அருணையநாயுடு என்பவர் அவருக்கடுத்தவராய் உழைக்க முன்வந்தார். அவருடைய ஊராகிய கீழச்சேரியில் இரண்டாவது சங்கம்ஏற்பட்டது. இதிலும் மெம்பர்களுடைய பாத்தியம் அவர்களுடைய ஷேரளவுதான். இப்போது பொறுப்பு வரையறுக்கப்படாத முறையில் மாறிவிட்டது. அந்த வருஷம் முடியுமுன் ரிஜிஸ்ட்ரார் 10 சங்கங்கள் ரிஜிஸ்டர்செய்தார். இரண்டு நகரச்சங்கங்கள் (காஞ்சீபுரம், தஞ்சாவூர்) 8 கிராமச்சங்கங்கள் செங்கல்பட்டு, தஞ்சாவூர், வடஆற்காடு, கடப்பை திருநெல்வேலி இந்த ஜில்லாக்களில் ஏற்பட்டன. சிலஊர்களில் பங்குத்தொகை முழுதும் கொடுக்கப்பட்டது. சில ஊர்களில் கொஞ்சம் கொடுக்கப்பட்டது. சில ஊர்களில் பங்குகள் பெருந்தொகையாகவும் கொடுக்கப்படாமலேயும் ஏற்பட்டிருந்தது. 1905-ம் வருஷம் மார்ச்சுமீ 31உ அவர் வருஷாந்திர ரிபோர்ட்டில் இச்சங்கங்கள் ஒன்

றும் ஐரோப்பா ரயிபெய்சன் சொசைட்டி மாதரி இல்லையென்றும், ஆயினும் காளடைவில் ஜனங்கள் பொறுப்பு வரையறுக்கப்படாத முறையில் சங்கம் ஏற்படுத்திக்கொள்ள சம்மதிப்பார்களென்றும் சொன்னார். அதற்கு ஆரம்பமாய் ஒரு பெருந்துகையளவு மட்டும் மெம்பர்கள் பாத்தியப்படும்படி பணம் கொடுக்கப்படாத பெரிய ஷேர்கள் ஏற்படுத்தினர். இது ஐரோப்பாவில் ஆஸ் சொசைட்டி என்னும் மாதரியை ஒட்டியது. ஆனால் மிஸ்டர் உல்வ் என்பவர் இவ்வகைச் சங்கங்களைக் கண்டனம்செய்திருக்கிறார். இதில் சிலவேளை மெம்பர்கள் பாத்தியமும் ஜாமீனும் பலமாய் இருப்பதாய்த் தோன்றினாலும் வாஸ்தவமாய் அப்படி பங்குத்தொகையாய் ஒப்புக்கொள்ளும் பணம் வசூல் செய்ய முடியாததாய்ப் போய்விடுகிறது என்றும் அவர் சொல்லுகிறார். அம்மாதிரிக்கஷ்டம் இந்த ராஜதானியில் ஏற்படவில்லை. 1905-ம் வருஷம் பொறுப்பு வரையறுக்கப்படாத பாத்தியத்துக்கு மெம்பர்கள் கட்டுப்படும் சங்கங்கள் 5 ஏற்பட்டன. இதில் நஷ்டம் ஏற்படாது என்று ஜனங்கள் நம்பினார்கள்; தவிரவும் அப்படிப்பட்ட பாத்தியத்துக்கு உட்பட்டால் கடன் சுலபமாய்க் கிடைக்கும் என்பதையும் தெரிந்து கொண்டார்கள். அந்த வருஷத்து ரிபோர்ட்டில் கிராமங்களில் ரயிபெய்சன் மாதிரிச் சங்கங்களை ஜனங்கள் ஒப்புக் கொள்ள இஷ்டப்படுவதாய்ச் சொன்னார்; நகரங்களில் ஷிதிபோன்ற சங்கங்களும் சரக்குகள் பிரிவினை செய்யும் சங்கங்களும் விரும்பப்பட்டன. 1905–06-ம் வருஷம்முதல் ஏற்பட்ட கிராம நாணயச்சங்கங்களெல்லாம் பொறுப்பு வரையறுக்கப்படாதவையாகும்.

இப்போது சங்கங்கள் வேண்டுமென்று வெகுபேர்கள் மனுச்செய்து கொள்ளுகிறார்கள்.



சங்கங்கள் ஏற்பட்ட ஜாபிதா.

| கோவாபரேடிவ் வருஷம். | நகரச்சங்கம். | | | நாட்டுச்சங்கம். | | | இந்த வருஷத்தில் ரிஜிஸ்டர் செய்த சங்கங்களின் மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| | மெம்பர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. | பொறுப்பு வரையறுக்கப்படாதது. | மொத்தம். | மெம்பர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. | பொறுப்பு வரையறுக்கப்படாதது. | மொத்தம். | |
| 1904—05 | 2 | ... | 2 | 8 | ... | 8 | 10 |
| 1905—06 | 7 | 1 | 8 | 4 | 5 | 9 | 17 |
| 1906—07 | 10 | 2 | 12 | 0 | 24 | 24 | 36 |
| 1907—08 | 1 | 1 | 2 | 0 | 36 | 56 | 88 |
| 1908—09 | 4 | 0 | 4 | 0 | 76 | 76 | 80 |
| 1909—10 | 4 | 1 | 5 | 0 | 193 | 193 | 198 |
| 1910—11 | 5 | 0 | 5 | 0 | 214 | 214 | 219 |
| மொத்தம்... | 53 | 5 | 38 | 12 | 548 | 560 | 598+1 கூட்டுச்சங்கம். |

# கூட்டுத்தொழில் விவசாயச்சங்கங்கள்.

(மதுரை ஐக்கோர்ட்டு வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ கே-இராமஸ்வாமி ஐயரவர்கள் பி. ஏ. பி. எல். எழுதியது)

ஐக்ய நாணயச்சங்கங்களும் விவசாய சாதகச் சங்கங்களும் இந்ததேசத்தில் சற்றேறக்குறைய ஒரேகாலத்தில் ஆரம்பித்தன. அதாவது 1905 வது வருஷம் சுமார் ஒவ்வொருவகைச் சங்கமும் ஒவ்வொரு தனி இலாகா உத்தியோகஸ்தர் சம்பந்தப்பட்டது. நாணயச் சங்கங்கள் பிரபலித்து ஓங்கியிருக்கின்றன. விவசாயச் சங்கங்களுக்கு அப்படிப்பட்ட பிரபலம் ஏற்படவில்லை. ஏன் இப்படி ?

ஐக்ய நாணயச் சங்கங்கள் ஜனங்களுக்கு எங்கு தேவையிருந்ததோ அங்கு அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் அச்சங்கங்களை ரிஜிஸ்ட்ரார் கவனித்து வந்தார். அதற்காக ஜனங்களுடன் அந்யோன்யமாய்ப் பழகினர். இப்போது 1000 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

முதல் முதல் ஏற்பட்ட விவசாயச் சங்கம் சென்னை சென்ட்ரல் விவசாயக் கமிட்டி என்பது. அதற்கு ஆரம்பம்முதல் பிரசிடண்டு ரெவினியூ போர்டு விவசாய மெம்பர் அல்லது அக்ரிகல்சுரல் டைரக்டர். மெம்பர்களாக அநேக செல்வாக்குடைய பிரபுக்கள் இருந்தார்கள். அதேசமயத்தில் ஜில்லாக்கள் தோறும் கலெக்டர் இருக்கும் ஸ்தலங்களில் சங்கங்கள் ஏற்பட்டன. கலெக்டர்களும் மற்ற ரெவினியூ இலாகா உத்தியோகஸ்தர்களும் இச்சங்கங்களை ஏற்படுத்துவதிலும் விருத்திக்குக் கொண்டு வருவதிலும் கவலை எடுத்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட முயற்சி அதிககாலம் நிற்கவில்லை. ஜில்லாச் சங்கங்கள் ஒவ்வொன்றாய் வேலைசெய்வதை நிறுத்தின. சென்னை விவசாயக் கமிட்டிகூட இவ்விஷயத்தைப்பற்றி அசட்டையாய் இருந்து விட்டது. மெம்பர்கள் தொகையும் குறைந்து கொண்டே வந்தது: ஆகையால் இந்தச்சங்கத்தை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்தவர்களே அதை முடிவு செய்யச் சிபார்சு செய்தார்கள். கவர்ன்மெண்டார் இதை முடிவு செய்யாது பலப்படுத்த என்ன செய்யலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

விவசாயச்சங்கங்களும் நாணயச்சங்கங்களும், விவசாயிகளுடைய நன்மைக்காக ஏற்பட்டன. நாணயச் சங்கங்கள் கிராமங்களில் ஏற்பட்டதால் நிலைத்து நின்றன. விவசாயச் சங்கங்கள் விவசாயமில்லாத நகரவாசிகளால் அமைக்கப்பட்டபடியால் பயனின்றி மாண்டன. விவசாயம் செய்பவர்கள் சேர்ந்து கிராமங்களில் இச்சங்கங்களை உண்டு பண்ணிக்கொண்டால், அவைகள் உபயோகமுள்ளவைகளாய் இருக்கும். கிராமங்களில் நாணயச்சங்கங்களும் விவசாயச் சங்கங்களும் ஆகிய இரண்டும் ஏற்படவேண்டுமா அல்லது இரண்டும் ஒன்று சேர்ந்து வேலை செய்யக்கூடுமா என்று பலர் கேழ்க்கிறார்கள். ஜர்மனி, ஐர்லண்டு, டென்மார்க்கு முதலிய தேசங்களில் நாணயச்சங்கங்களே விவசாய அபிவிருத்திக்கும் உதவுகின்றன.

# மதுராந்தகம் முதல்தாலுகா கூட்டுத் தொழிலினர் மகாநாடு.

(உத்தரமல்லூரில் 1912-ளு மேமீ 25, 26-ந் தேதிகளில் நடந்தது.)

இந்தக்கான்பிரன்சில் சர். வி. சி. தேசிகாசாரி அக்கிராசனம் வகித்தார். செங்கல்பட்டு ஜில்லாவின் மற்றதாலுகா களிலிருந்தும் வட ஆற்காடு தஞ்சாவூர் ஜில்லாக்களிலிருந்தும் ஜனங்கள் வந்து கூடி இருந்தார்கள்.

திவான்பகதூர் கனம் ஸ்வாமிகண்ணுப்பிள்ளை, திவான்பகதூர் எம். ஆதிநாராயணஐயா, திவான்பகதூர் ஆர். இராமச்சந்திர ராவ் முதலியவர்கள் தாம் அங்கு அன்றவரக்கூடவில்லையே என்ற வருத்தத்தைத் தெரிவித்திருந்தார்கள்.

உபசாரணைக் கமிட்டியின் பிரசிடெண்டாகிய பென்ஷன் சப் மாஜிஸ்ட்ரேட் கனம் வெங்கட கிருஷ்ண ஐயர் அங்கு இருந்தவர்கள் வந்ததைப்பற்றியுள்ள சந்தோஷத்தைச் சொல்லி உத்தரமல்லூர் யூனியன் என்னும் கூட்டுச் சங்கத்திற்கு உட்பட்டுள்ள சங்கங்களின் விவகாரங்களைப் பற்றித் தெளிவாய்ப் பேசினர்.

அக்கிராசனாதிபதி மகாநாடு கூடியதின் நன்மைகளை எடுத்துக்காட்டினார். பல சங்கங்களின் மெம்பர்களும் கூடி அங்கங்கு நடக்கும் விவகாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு நல்ல ஏற்பாடுகளைக் கைக்கொள்ளலாம் என்றார். விருந்துகள் செய்து சந்தோஷமாய் அப்படிப்பட்ட சமயங்களில் இருப்பது நலம் என்றும் எண்ணினர்.

கர்னூல் ஜில்லா கோயில்குண்டலாவில் தாசில்தாராய் இருக்கும் கனம் ராமானுஜாசாரியாரும் காஞ்சீபுரம் கனம் இராமச்சந்திர சாஸ்திரியாரும் உத்தரமல்லூர் கனம் வெங்கிட்டநாத ஐயங்காரும் உபந்யாசங்கள் செய்தார்கள். விவசாய இன்ஸ்பெக்டர் பீமராவ் அவர்கள் ஏர்களைப்பற்றியும், விதைகளைப் பற்றியும் பேசினர். பின்பு அக்கிராசனாதிபதி முடிவாய் ஒரு உபந்யாசம் செய்தார். பென்ஷன் டிப்டி கலெக்டர் சி. எஸ். சுப்பிரமணிய ஐயர் சபாநாயகருக்கு வந்தனோபசாரம் செய்யவும் மகாநாடு கலைந்தது.

# கூட்டுத்தொழிலின் அபிவிருத்தி.

## வெளி தேசங்களில்.

(ஐர்லாண்டு விவசாயச் சங்கம் ஏற்படுத்தும் சங்கத்தினர் ரிபோர்ட்டில் இருந்து எடுத்தது)

### ஐர்லாண்டு சங்கங்கள்.

| | 1-1-1910 தேதியில் | 1910-ஸு ஏற்பட்டது. | 1910-ஸு கலைந்தது. | 31-12-10 தேதியில் இருந்தது |
|---|---|---|---|---|
| 1. பால் தயிர் வெண்ணெய் முதலியவை உற்பத்தி செய்யும் சங்கம் | 301 | 11 | ... | 312 |
| 2. ,, பிரிவு | 79 | ... | ... | 79 |
| 3. விவசாயச்சங்கம் | 155 | 11 | 1 | 165 |
| 4. நாணயச் சங்கம் | 234 | 3 | ... | 237 |
| 5. பக்ஷிவர்க்கம் வளர்க்க ஏற்பட்ட சங்கம் | 18 | ... | ... | 18 |
| 6. சணல் விருத்திசெய்யும் சங்கம் | 9 | ... | ... | 9 |
| 7. கைத்தொழில் சங்கம் | 21 | ... | 1 | 20 |
| 8. காருண்யமான சங்கம் | 15 | 23 | ... | 38 |
| 9. கூட்டிச் சங்கம் | 3 | ... | 1 | 2 |
| | 835 | 48 | 3 | 880 |

### 1911-ஸு ஜுன்மீ 30-ந்தேதிக்குள் ஏற்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| மேற்சொல்லிய முதல் வகை | ... | ... | ... | ... 8 |
| ,, 3 வது வகை | ... | ... | ... | ... 3 |
| ,, 8 ,, | ... | ... | ... | ... 14 |
| | | | மொத்தம் | 25 |





விவசாயச் சங்கங்கள்.—இப்போது ஐர்லண்டில் 166 விவசாயச் சங்கங்கள், இருக்கின்றன; வருஷத்தில் 1,24,720 (பவுனளவுக்கு) வியாபாரம் செய்கின்றன. புதுச்சங்கங்கள் அதிக விருத்தி யடைந்திருப்பதாய்த் தெரியவருகிறது. சில சங்கங்கள் மெம்பர்களுக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்து வைக்க ஸ்டோர்கள் கட்டியிருக்கின்றன. சில வேளைகளில் சங்கங்களில் அங்குள்ள வியாபாரிகளுக்கு நஷ்ட முண்டாகும்படி வியாபாரம் நடத்துகிறார்கள். இது பிழை.

நாணயச்சங்கங்கள்:—தற்காலத்தில் ஒரு புது ஏற்பாடு நடைபெற்று வருகிறது. அதாவது: கூட்டுத்தொழில் வியவசாயச் சங்கங்களின் விதிகளில் நாணயச்சங்க விதிகளையும் பிணைக்கிறார்கள். இதனால், நாணயச்சங்கங்களின் லாபம் குறைவாயிருந்தால் வியவசாயச் சங்கங்களின் லாபம் ஈடுபண்ணுகிறது.

## இட்டாலி தேசம்.

மீன் பிடிப்பவர்கள் சங்கமும், மற்ற சங்கமும்:—இட்டாலியில் மீன் பிடிக்கும் தொழில் முக்கியமானதாயினும், மீன் பிடிப்பவர்கள் சங்கம் அவ்வளவு அதிகம் இல்லை. 1906 ஸு 204 சங்கங்களிருந்தன. இவைகளின் முதல் 25159 பிராங்குகள். இப்போது 312 சங்கங்களிருக்கின்றன. முதல் 76000 பிராங்குகள். க்ஷேமநிதி 35000 பிராங்குகள்.

1910 ஸு முடிவில் பலவகைச் சங்கங்களில் 172 இருந்தன. இதில் 112 சங்கங்களில் 28000 மெம்பர்களும் 55 லக்ஷம் பிராங்குமுதலும் இருந்தது.

கட்டிடச் சங்கங்கள்:—1906 ஸு முதல் 1910 ஸு முடிவதற்குள் சங்கியை 150 இல் இருந்து 379-க்கு அதிகரித்தது. 145 லக்ஷம் பிராங்குமுதல்; க்ஷேமநிதி 25 லக்ஷம்.

சரக்குகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில் சங்கங்கள்.—1906ஸு 479 சங்கங்களிருந்தன. 1910 ஸு இது 564 ஆக உயர்ந்தது. 398 சங்கத்தில் 70,719 மெம்பர்களிருந்தார்கள். முதல் 155 லக்ஷம். க்ஷேமநிதி 30 லக்ஷம்.

பின்வரும் கைத்தொழில்களுக்காக சங்கங்களிருந்தன.—(1) தையல் முதலிய வேலைகளுக்காக 48. (2) மரம் தோல் முதலிய வேலைகளுக்கு 84. (3) யந்திரம் செய்தல் முதலிய வேலைகளுக்கு 95. (4) மருந்துச்சரக்கு வேலைகளுக்கு 46. (5) சித்திர வேலைகளுக்கு 60. (6) எலக்டிரிக் வேலைகளுக்கு 60. (7) அச்சுப்போடல் 91, (8) தேக சௌக்ய அபிவிருத்திக்காக 32. (9) கட்டிடங்களுக்கு பீங்கான் செய்ய 31. (10) பற்பல தொழில்களுக்கு 10.

மருந்துச் சரக்குச் சங்கங்களுக்கு முதல் ஜாஸ்தி. ஒன்றொன்றுக்கு 192,571 பிராங்குகள் முதல்.

## இந்தியா.

பரோடாவின் 1910-1911 வருஷாந்திர ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

வருஷ ஆரம்பத்தில் 60 கிராமச்சங்கங்களும், 1 நகரச்சங்கமும் இருந்தன; அந்த வருஷத்தில் 18 கிராமச்சங்கங்களும் 1 நகரச்சங்கமும் ஏற்பட்டன. ஆக வருஷமுடிவில் 79 சங்கங்களிருந்தன.

* * *

இந்த வருஷத்தில் 19 சங்கங்கள் ஏற்பட்டன. இது அவ்வளவு அதிகமில்லை. ஆயினும் ஐந்தாவது ஆறுவது வருஷாந்திர ரிபோர்ட்டுப்படி பம்பாய் ராஜதானியில் 24 சங்கங்களும் 40 சங்கங்களும் முறையே ஒரு வருஷத்தில் ஏற்பட்டதாய்த் தெரிவதால் பரோடாவில் 19 சங்கங்கள் ஏற்பட்டது குறைவில்லை என்று தோற்றும்.

1910 ஞ டிசம்பர்மீ 17உ கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்காக ஒரு பிரத்யேகமான சங்கம் ஏற்பட்டது. அது 13 மெம்பர்களுடன் வேலை ஆரம்பித்தது. வருஷம் முடியுமுன் 66 மெம்பர்களும் ரூ. 1105–15-4 முதலும் ஏற்பட்டது.

வியாரா என்னும் தாலூக்காவிலுள்ள காட்டா சங்கத்தின் வேலை நாம் தெரிந்து கொள்ளத்தகுந்தது. கள்ளப்பராஜ்மலை ஜெனங்கள்தான் இந்தச் சங்கத்தின் மெம்பர்கள். அவர்கள் சர்க்கார் கிஸ்தி கொடுக்க அதிக வட்டியில் கடன் வாங்குவதுடன் பணம் கடன் கொடுப்பவர்களுக்கு நிலத்தில் விளைவதையெல்லாம் அவர்கள் கேழ்க்கும் விலைக்குக் கொடுப்பார்கள். இந்தச் சங்கம் சர்க்கார் கிஸ்தி செலுத்திவிட்டு, விளையும் பொருள்களை விற்பதையும் பாதுகாத்துக்கொள்ளுகிறது. இதுவரையில் 40 மெம்பர்கள் கடன் தீர்ந்து விட்டது. கள்ளப்பிராஜ் வர்க்கத்தில் பிறந்து, வியாராவில் ஏற்பட்டிருக்கும் பள்ளிக்கூடத்தில் படித்த அமார் சிங்க் என்பவர் முயற்சியால்தான் இச்சங்கம் ஏற்பட்டுப் பிரபலமாய் நடந்து வருகிறது.

### வழக்குகள்.

இதுவரையில் விவகாரம் நடத்தும்படியாய் வழக்குகள் எதுவும் ஏற்படவில்லை. சங்கங்களிலும் கலகம் கிடையாது. வம்பர்கள் சேர்க்கப்படவேயில்லை.

———(:-:)———

# உபந்நியாசங்களின் சுருக்கம்.

## கூட்டுத்தொழில் முறையும் வியவசாயமும்.

(1912-ஞ ஆகஸ்டுமீ 12-ந்தேதி செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள சைதாப்பேட்டையில் கலெக்டர் சி. ஜி. டாட்ஹண்டர் துரையவர்கள் வீட்டில் கூடியிருந்த செங்கல்பட்டு ஜில்லாக் கூட்டுறவினர்களுக்கு முன்பாக ரிஜிஸ்ட்ராரவர்கள் செய்த உபன்யாசம். அக்கிராசனாதிபதி, சென்னைத் தலைமை ஜட்ஜி ஆகிய ஆனரபில் சர் ஆர். எஸ். பென்சன் துரையவர்கள்.)

இப்போது எங்கும் கூட்டுத்தொழில் முறையை கைக்கொண்டு விவசாயத்தை விருத்தி செய்வதைப் பற்றி பேச்சு நடக்கிறது. "அக்ரிகல்சரல் ஜர்னல் ஆவ் இந்தியா" என்னும் மாதாந்தரப் பத்திரிகையில் இவ்விஷய சம்பந்தமாய் இரண்டு வியாசங்களிருக்கின்றன. ரோம் தேசத்து "பிரோ ஆப் இகனாமிக் அண்டு சோஷல் இண்டலிஜன்ஸ்" என்னும் சபையோர் பற்பல தேசங்களில் கூட்டுத்தொழில் முறையைக் கொண்டு வியவசாயம் நடந்துவருவதைப்பற்றி எழுதிப் புஸ்தக ரூபமாய் பிரசுரம் செய்கிறார்கள். 450-பக்கங்களடங்கிய புத்தகத்தில் 66-பக்கங்கள் நம்முடைய தேசத்தைப் பற்றி எழுதியிருக்கிறது. வியவசாயத்தில் கூட்டுத்தொழில் முறையை யநுசரிப்பது உலகத்தில் பிரபலப்பட்டு ஜனங்களுடைய ஸ்திதியை மாற்றுமென்றே தோற்றுகிறது. ஆகையால் இதைப்பற்றி ஆலோசனை செய்வது நியாயமே.

வியவசாயத்தில் கூட்டுத்தொழில் முறையை அநுசரித்தல் என்றால் என்ன? நான் இப்போது சொல்லப்போவது உங்களுக்கு ஆச்சர்யத்தை விளைக்கும். இங்குள்ள செங்கல்பட்டுக் கூட்டுறவினர்களாகிய நீங்களும் உங்களை அழைத்திருக்குங் கலெக்டர் துரையவர்களும் இதுவரையில் வியவசாய சம்பந்தமாய்க் கூட்டுத்தொழில் முறையில் ஒன்றும் செய்யவில்லையே என்று அநுதாபத்துடன் யோசனை செய்கிறீர்கள். இந்த ராஜதானியில் மற்ற ஜில்லாக்களைக் காட்டிலும் செங்கல்பட்டு ஜில்லாவில் கூட்டுத்தொழில் முறை அதிகமாய் அநுசரிக்கப்பட்டிருக்கிறது. மேற்சொல்லிய ரோம் தேசத்துப் புஸ்தகத்தில் வியவசாயத்தில் கூட்டுத்தொழில் முறை அநுசரிக்கப்பட்டதைப் பற்றி எழுதியதில் அந்த அந்த ராஜதானி ரிஜிஸ்தராகும் வருஷாந்திர ரிபோர்ட்டில் எழுதியிருப்பதைத்தான் சேர்த்து எழுதியிருக்கிறார்கள். இதனால் வெளிப்படுவது என்னவென்றால் அந்த வியாசம் எழுதியவர்

களின் அபிப்பிராயப்படி இப்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் சங்கங்கள் வியவசாய உதவிச் சங்கங்களே என்பதுதான். அவர்கள் கற்றுணர்ந்தவர்கள்; உலகெங்கும் ஏற்படும் கணக்கு முறைகளைக் கற்றவர்கள், இப்போது ஏற்பட்டிருக்கும் நாணயச் சங்கங்கள் வியவசாயச் சங்கங்களே என்று அவர்களுக்கு எளிதில் புலப்பட்டுவிட்டது. இதன் உண்மையை அருகிலுள்ள ஒரு வியவசாயம் செய்பவனை ஒரு கேழ்வை கேட்டால் தெரிந்து கொள்ளலாம்—"உனக்கு என்ன வேண்டும்? குடித்தன யோகக்ஷேம சிரமங்களிலிருந்து நிவர்த்தி வேண்டுமா, அல்லது சாகுபடி செய்ய விதைபொறுக்குவதைப் பற்றியும், விதை விதைப்பதைப் பற்றியும், எருவைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமா" என்று கேட்டால் போதும். அவன் உடனே சொல்லுவான்: "என் கடனிலிருந்து என்னை நிவர்த்திசெய்து விட்டால் போதும்; நெல் தாளடித்துப் பட்டரை போடுமிடத்திலேயே லப்பை வந்து நெல்லைக் கவர்ந்துகொண்டு போகாமல் நான் உழைத்து விளையும் நெல்லை என் வீட்டுக்குக் கொண்டு வந்து என் குழந்தைகளுக்குப் போட்டு சாப்பிட்டால் போதும்: இதற்கு வழி ஏற்பட்டால் பின்பு புதிய வியவசாய ஏற்பாட்டைப் பற்றி கேட்டுக்கொள்ளுகிறேன்."

ஐக்கிய நாணய அபிவிருத்தியைத் தேடும்போதே, வியவசாய அபிவிருத்தியையும் கூட்டுறவு முறையில் உதவிக்கொண்டே இருந்திருக்கிறோம். வியவசாயத்துக்கு எவ்வளவு உதவிவேண்டுமோ அதையே செய்து இருக்கிறோம். சிலவேளையில் நாம் செய்வதின் விசேஷத்தைத் தெரிந்துகொள்ளுவது நலமாயிருக்கும்; இது கல்வி கற்பிப்பதின் கொள்கையாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது கல்வி கற்பிப்பவர்கள் முதல் முதல் கற்பிக்கும்போது வெளிதேசங்களைப்பற்றிப் போதிக்க ஆரம்பிப்பதில்லை. முதலில் சிறுமியர்களுக்கு அருகிலுள்ள விஷயங்களைப்பற்றி ஞானமூட்டியன்றோ பின்பு தூரத்திலுள்ளவைகளைப்பற்றி போதிக்கின்றனர். நூதன ஏற்பாட்டில் வாலிபர்களுக்குத் தைரியம் உண்டுபண்ணுவதை முக்கியமாய் எண்ணுகின்றனர். இந்தக் கொள்கையை ஒட்டிக் கூட்டுத்தொழில் சங்கங்கள் இது வரையில் செய்திருப்பதை இகழ்ந்து பேசுவதில் பயனில்லை. அவைகளால் ஏற்பட்டிருக்கும் நன்மையைப்பற்றியே இப்போது சொல்லுகிறேன். தவிரவும் கூட்டுத் தொழிலைப்பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் பலர் ஏதோ காதில் படும் நாலுவார்த்தைகளை வைத்துக்கொண்டு சங்கங்களைப்பற்றி சிலவேளையில் கண்டனம் செய்யத் துவக்குகின்றனர். இக் காரணத்தாலும் அவைகளின் நன்மையை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன.

நான் முதல் முதல் சொல்லவேண்டிய தென்னவென்றால், வியவசாய அபிவிருத்திக்குச் சங்கங்கள் ஏற்படவில்லை என்று நாம் வருத்தப்பட வேண்டியதில்லை; ஐக்கிய நாணயச் சங்கங்களே வியவசாயத்தை விருத்திசெய்யும். சென்ற நூற்றாண்டில் பாதிக்கு மேற்பட்ட காலத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்



சங்களால் ராஜாங்கத்தவரும் தேசநன்மையை நாடும் தேசாபிமானிகளும் கவலையுற்று வியவசாயிகளுக்கு எப்படி உதவி செய்யலாம் என்று யோஜனை செய்யலானார்கள். நிலத்தைச் சீர் திருத்தவும், வியவசாயிகளுக்கு உதவிசெய்யவும் கடன் கொடுக்கவேண்டுமென்று இரண்டு சட்டங்கள் ஏற்படுத்தினார்கள். வியவசாயத்தை ஒழுங்குபடுத்த விரும்பியவருக்கு வேண்டிய பணம் கடன் கொடுப்பதாய்க் கவர்ன்மெண்டார் தீர்மானம்செய்தார்கள். வியவசாய இலாகா ஒன்று ஏற்பட்டது. வியவசாயத்தைப் பற்றி அதிகமாய்க் கற்றுத் தேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் சாமார்த்தியத்தைப் பற்றி ஜனங்கள் மேலாக நினைத்தனர்; ஆனால் அவர்களுடைய உதவியைக் கொண்டு ஒன்றும் செய்யவில்லை.

கூட்டுத் தொழிற் சங்கங்கள் வியவசாயிகளைக் கடனின்று நிவர்த்தி செய்துவிட்டு வியவசாய அபிவிருத்தி செய்து கொள்ளும்படி உதவும். மிஸ்டர் பூஷன் என்பவர் அவைகள் எப்படி உதவும் என்பதை விளக்கியிருக்கின்றனர். சங்கங்கள் செய்யக்கூடியனவாவன:—(1) முறைப்படி வியவசாயம் செய்ய உதவலாம்; (2) விரை, எரு, விலை சரசமாய்க் கிடைக்கும்படி செய்யலாம். (3) விளையும் தான்யத்தை நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்கலாம். (4) பால் தயிர் செய்வதிலும் விற்பதிலும் உதவலாம். (5) கால் நடைகளுக்கு ஆகாரத்தை சீர் திருத்தலாம். (6) நஷ்ட ஈடு செய்ய இன்சூரன்சு செய்யலாம்.

கூட்டுறவுச்சங்கங்கள் அவசியம் இருக்கும் இடங்களில்தான் ஏற்படுத்த வேண்டும்; அதற்காக வேலை செய்யவும் மனிதர்கள் வேண்டும். இவைகள் லாபமான காரியங்களையே செய்யவேண்டும். தருமத்துக்காக ஒன்றும் செய்யக்கூடாது. பரிக்ஷார்த்தமாகச் செய்யும் பிரயத்தனங்களெல்லாம் கூட்டுறவு முறைச் செயல்களாகமாட்டா. வியவசாயத்தில் நூதன ஏற்பாடுகள் பரீக்ஷை பார்க்க இச்சங்கங்கள் ஏற்ற இடமில்லை. இவைகள் லாபம் ஒன்று மட்டுமே கருத்தாய் வைக்கலாம்.

# குறிப்புகள்.

———(:o:)———

செங்கல்பட்டு ஜில்லா 591-நெம்பர் கண்ணும்புக்குளம் நாணய சங்கத்தின் ஒரு மெம்பர் குடித்திருந்ததற்காக சங்கத்தின் மகாஜனங்களால் இரண்டணா அபராதம் போடப்பட்டார். இது மிகவும் மெச்சுக்கொள்ளப்பட்டது.

திருச்சினாப்பள்ளியி லிருக்கும் வியவசாய டெபுடி டைரெக்டர் அவர்களால் பிரசுரப்படுத்தப்பட் டிருக்கிறதாவது:—

i. கொழிஞ்சி, டயிஞ்சா, சணப்பு முதலான பச்சை யெருவிதை வேணுமென்றால் நாணயச் சங்கங்கள் மூலியமாய் கொள் முதல் விலைக்கே தஞ்சாவூர் டிபோவிலிருந்தாவது, மதுரை டிபோவிலிருந்தாவது அனுப்பப்படும். அனுப்பப்படும் விதையில் $\frac{3}{4}$-பாகத்துக்கு குறையாமல் விற்கப்பட்டால், மூட்டைக்குக் கால்ரூபாய் விதம் சங்கத்துக்கு தரகு கொடுக்கப்படும்.

ii. மீன் எருவின் குணம் முதல் வருஷத்தில் அவ்வளவு பலிப்பதில்லை. அடுத்த வருஷம் மிக லாபத்தை தரும். வேண்டுமென்பவர்கள் எழுதிக்கொண்டால், மேலேசொன்ன அதிகாரி, மங்களூர் மலையாளம் முதலிய விடங்களிலிருந்து, தருவித்துக் கொடுப்பார்.

# விமர்சனங்கள்.

———(-)———

சென்ற ஜூலை மாதத்திய "அக்ரிகல்ச்சுரல் ஜர்னல் ஆவ் இந்தியா" என்னும் பத்திரிகையில், பெங்கால் ரிஜிஸ்ட்ரார் Mr. பூஷன் என்பவர் எழுதிய வியாஸத்தின் ஸாராம்சம்:—

இந்தியாவில் முதல் முதல் கூட்டுறவு முயற்சியைப் பரவச்செய்ய ஸர்க்காரின் உதவி அவசியமாக விருக்கிறது. அதை மேன்மேல் விருத்திக்குக் கொண்டுவரவும் ஸர்க்காரின் உதவி அவசியம்தான். ஆனால் வரவர படித்த கனவான்களுடைய உதவியைக்கொண்டு ஜனங்கள் தாமாகவே முயற்சிசெய்ய வேண்டியதவசியம். ஸர்க்காரின் உதவி நல்வழிகாட்ட மட்டில்தான் இருக்கவேண்டியது. இல்லாவிட்டால் க்ஷீணவியாதியால் வாடிப்போன தேகத்தையுடையவனுக்கு உள்ள வலிமைதான் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிருக்கும். * *

இந்தியாவுக்குப் பிரதானம் வியவஸாயம்தான். ஆனால் அது மிகப் பரிதபப்படத்தக்க நிலைமையிலிருக்கிறது. உழைக்கிறவர்களுக்கு வேண்டிய உதவிகள் இல்லை. செல்வமில்லை; படிப்பில்லாததால் வழியும் தெரியவில்லை. ஆனால் கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தால் அவர்களுடைய நிலைமை சீர்படும்; விருத்திக்கு வருவார்கள்; ஐரோப்பிய தேசங்களிலும் கொஞ்ச காலத்துக்கு முன் வியவசாயத்தின் ஸ்திதி இதையும் விட கேவலமாக விருந்து, இப்போதிய நிலைமைக்கு வந்ததற்கு முக்கியகாரணம் கூட்டுறவேதான். எழுபட்டு வருஷகாலத்தில் இந்த தேசத்தில் ஜனங்களுக்கு அதில் உண்டாயிருக்கும் ருசியையும் ஆவலையும் பார்த்தால் நாம் அதைரியப்படவே வேண்டியதில்லை.

* * *

டாக்டர் மான் என்பவர் எழுதுகிறார்—ஒரு கிராமத்தின் வியவசாயத்தை விருத்திக்குக் கொண்டுவர வேண்டுமானால், தனித்தனியே வியவசாயிகளுக்குச் சொல்வதை காட்டிலும் தகுந்த யோக்கியர்களைக் கொண்டு வியவசாயத்தின் முறைகளை சீர்திருத்தும்வண்ணம் ஸர்க்கார் அதிகாரிகள்முயலுவது உத்தமம். இவர்கள் சங்கமாகலாம் ஆனால் அச் சங்கத்துக்கு வருஷந்தோறும் வேலைகொடுக்கச் சரியான அலுவலிருக்கவேண்டும். சங்கத்தார்களுக்கும் வியவசாயம்தான் ஜீவாதாரமாயிருக்க வேண்டும். அவர்கள் தகுந்தவர்களாகவும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சங்கம் முன்னுக்கு வராது.

———:(o):———

# கடிதங்கள்.

———:(*):———

காஞ்சீபுரம் ௰-௩-௩-ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரியார் எழுதியது:

நெசவுகாரர் தங்களுக்குவேண்டிய பணத்தை சாவுகாரிடத்தி லிப்போது வாங்குகிறார்கள். வட்டியும் முதலும் துணி ரூபமாய்க்கொடுப்பதாக நிபந்தனை. சாவுகாரிகள் தந்திரமுள்ளவர்களாதலால், கடனை முண்டவிட்டுக் கடைசியில் பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்கைப்போல் கடன்காரர்களை உபத்திரவித்துத் துணியை அரைவிலைக்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள். கடனை உடனுக்குடனே தண்டல்செய்து வாங்கியிருக்கும் பக்ஷத்தில் அவர்களின்கதி இப்படிநேர்ந்திருக்காது. கூட்டுத்தொழில் சங்கத்தில் மெம்பராகவிருந்து கடன் பட்டிருந்தால் சிறுகச்சிறுகக் கடனைத் திருப்பிக்கொடுத்திருக்கலாம். நிர்க்கதியாகப் போகவேண்டியதில்லை.

நெசவுகாரர்களை ஒரு நெசவு சங்கமாக ஏற்பாடுசெய்து, அந்தச் சங்கத்தை மற்ற நாணயச் சங்கங்களோடு கூட்டிச் சமுதாய சங்கமாகச் செய்தால் எல்லாருக்கு முதவியாகவிருக்கும். நெசவுசங்கத்தில் அறுவடையாகும் துணியை விற்க மற்ற சங்கத்தின் மெம்பர்களே உதவலாம். பின் சொல்லிய சங்கங்களில் தங்கிப்போகும் பணத்தை வினியோகம் செய்ய நெசவு சங்கம் ஒரு தகுந்த மார்க்கமாகும்.

*　　　*　　　*

செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள தொழூர் கூட்டுறவினர்கள் தங்கள் சங்க லாபத்தின் ஒரு பாகத்திலிருந்து ஒரு பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். அது மிக்க மெச்சுக்கொள்ளத் தக்கது. எவ்வளவு சுவல்பமாகிலும் இதனால் சீலம், ஒழுக்கம், முதலியவை திருந்துவதுடன் நாமே ஏற்படுத்தினதென்று அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒரு தனி அபிமானமு மிருக்கும்.

———:(*):———

# பொறுக்கி யெடுக்கப்பட்டவைகள்.

———

நாணயம் பரவச்செய்ய ஒரு நல்லவழி.

ஒரு கிராமத்தில் தனவான்களிருந்தால் தங்களிடத்தில் தங்கியிருக்கும் பணத்தை நூறு இருநூறு மைலுக் கப்பாலுள்ள நகரங்களிலுள்ள பாங்கியில் போடுவதைக் காட்டிலும் பக்கத்திலுள்ள கூட்டு நாணயச் சங்கங்களுக்குக் கொடுப்பது நலம். சங்கத்தார்கள் எவ்வளவு ஏழையாக விருந்தாலும், அவர்களிலொருவரும் ஊரைவிட்டோடிப் போகமாட்டாரென்கிற நிச்சயமிருக்கும். அந்தச் சங்கத்துக்குக் கொடுக்கும் கடன் முழுகிப்போகாது. கடன் கொடுத்திருந்தால் நமது காலடியிலிருக்கிற சங்கத்தின் ஸ்திதியை, நாம் கவனிக்க முடியும். சங்கத்துக்கும் பயம் இருக்கும். வெகு தூரத்திலிருக்கிற நகர பாங்குகள் அப்படி நம்முடைய கட்டில் அகப்படுமா ?

## நான்காவது வால்யூம் இரண்டாவது சம்புடம்

## 1912-ஹு டிசம்பர்மீ 10 தேதி பிரசுரமான புல்லடின்.

---

# கூட்டுத்தொழில்முறை வியாபித்த சரித்திரம்.

———:(*):———

(ம-௱-௱-ஸ்ரீ ராவ்சாயப் கே. விஜயராகவாசாரியார் அவர்கள், எம். ஏ. எழுதியது.)

## IV.

கூட்டுத்தொழிற் சங்கங்கள் ஏற்பட்டு மூன்று வருஷங்கள் முடியு முன்னே இந்த ராஜதானி ஜனங்கள் எவ்வகைச் சங்கங்களை ஒப்புக்கொள்ளு வார்கள் என்பதும் அவர்களுக்கு எவை ஏற்றவை என்பதும் தீர்மானப் பட்டுவிட்டது. ரெய்பெய்சன் முறையில் அமைக்கப்பட்ட சங்கங்கள் கிராமங்களுக்கும், லூஜாட்ஷ் முறையில் ஏற்பட்ட சங்கங்கள் நகரங்களுக்கும் தகுந்த வகைகளென்று விளங்கிற்று. முதல்வகையில் ஆரம்பத்தில் பங்குத்தொகை கிடையாது. கொஞ்சகாலத்திற்குப் பின்பு சட்ட நிபந்தனையின்பேரில் பெயருக்கு மட்டும் ஒரு சுவல்ப பங்கு ஏற்படுத்த வேண்டியதாயிற்று. இந்த ராஜதானியில் எல்லாக் கிராமச் சங்கங்களும் இப்படித்தான் ஏற்பட்டிருக்கின்றன. 910 கிராமச் சங்கங்களில் 6-இல்தான் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கிறது. லூஜாட்டி முறையில் பொறுப்பு வரையறுக்கப்பட்டே இருக்கவேண்டும். தவணைகளாய்க் கொடுக்கப்படும் ஒரு பங்குத்தொகையும் வேண்டும். இவைகளில் சிலவற்றில் பங்குத்தொகை ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட வேண்டும். இந்த ராஜதானியிலுள்ள 47 நகரச்சங்கங்களில் பொறுப்பு வரையறுக்கப்படவில்லை. இரண்டாவது வருஷாந்திர ரிபோர்ட்டில் எந்த முறைதான் நிலைநிற்கு மென்று சொல்லக்கூடவில்லை என்று எழுதினர். மூன்றுவது வருஷாந்திர ரிபோர்ட்டில் ஜனங்கள் பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களில் சேர விரும்பமாட்டார்களோ வென்று இருந்த பயத்துக்கு இடமில்லை என்று வெழுதினர். இன்னும் இரண்டு முக்கியமான விஷயங்கள் தீர்மானம் செய்யவேண்டியது பாக்கியிருந்தது; சங்கங்களுக்குப் பணம் சேகரிப்பதும், சங்கங்களை மேல்விசாரணை செய்தலும்.

ஐக்கிய நாணயச் சங்கம் என்பது கடன் வாங்குபவர்களுடைய கூட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாய் ஜனங்கள் கடன் வாங்கத்தான் அதில் சேருவது வழக்கம். ஆகையால் சங்கம் ஏற்பட்டவுடன் பணம் தான் வேண்டும். பங்குத் தொகைகளைக் கொண்டு ஒரு மெம்பருக்குக்கூட கடன் கொடுப்பது சாத்தியப்படாது. ரெய்பெய்சன் முறையில் ஆரம்பத்



தில் சில நண்பர்கள் பணஉதவி செய்தனர்; இப்போது டிபாசிட்டு சுலபமாய்க் கிடைக்கிறது. இட்டலியில் "ஒல்லன்பர்க்" கிராமச் சங்கங்கள் நகர பாங்குகளினின்று கடன்வாங்கின. பிரஷ்யா முதலிய சில தேசங்களில் இராஜாங்கத்தவரே பண உதவி செய்தனர். இந்த ராஜதானியிலும் ஆரம்பத்தில் பங்குத் தொகையாகவாவது டிபாசிட்டாகவாவது மெம்பர்களிடத்தில் எவ்வளவு வசூல் ஆயிற்றோ அந்த்தொகை கவர்ன்மெண்டார்கள் கடன் கொடுத்தார்கள். ஆனால் 2000-ரூபாய்க்கு அதிகம் எப்படியானாலும் கொடுப்பது இல்லை. கடன் கொடுத்த இரண்டு வருஷம் வட்டி கிடையாது; பின்பு 100-க்கு 4-ரூபாய் விதம் வருஷத்தில் வட்டி வாங்கினார்கள். இதற்காக கவர்ன்மெண்டார் ரூ. 50,000-தனியாய் வைத்தனர். கூட்டுறவில் நம்பிய சர். டி. எம். ஆயில்டன் என்பவர் இப்படி உபயோகப்படுத்தும்படி ரூ. 5000-கொடுத்தார். இந்தப் பணத்துக்கு வட்டி 100-க்கு வருஷத்துக்கு 2-ரூபாய்; பத்து வருஷத்தில் செலுத்தலாம்.

ஆனால் இந்த மாதிரி வெளி உதவியால் கூட்டுத்தொழில் முயற்சி வியாபிப்பது சாத்தியமில்லை. தவிரவும் தர்மத்தை நம்பி ஏற்பாடு செய்வது இந்த ஏற்பாட்டிற்கும் கெடுதி, அதில் லாபம் அடையும் ஜனங்களுக்கும் கெடுதி, ஐரோப்பாவில் ஜனங்கள் எதையும் சுயமாய் நிர்வாகம் செய்யவே விரும்புகிறார்கள். படித்தவர்கள் இந்த தேசத்திலும் அதே எண்ண முடையவர்களாயிருக்கின்றனர். சாமான்ய ஜனங்கள் மட்டும் இன்னும் கவர்ன்மெண்டார் உதவியை எதிர்பார்க்கின்றனர். இந்த குணத்தைமாற்ற கிராமச்சங்கங்களைக் காட்டிலும் வேறு எந்தஏற்பாடும் சாதகமாய் இருக்கமுடியாது. ஆரம்பம் முதலே ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் உதவியின்றி பணம் சேகரிக்கவேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. இந்த தேசத்தில் திரவிய வந்தர்களாயுள்ளவர்களுடைய பணத்தின் உதவியை இதற்குத் தேடலாம் என்று அப்போது ரிஜிஸ்தாராய் இருந்த ராஜகோபாலாசாரியார் கண்டு பிடித்தார். இந்தஎண்ணத்தை நிறைவேற்றுவது எளிதல்ல. இதை நடத்துவதற்கு வேண்டிய செல்வாக்கும் ஊக்கமும் உடைய ஒருவருக்கு இதில் நம்பிக்கை யூட்டுவது சிரமமான காரியமாயிருந்தது. அப்போது ஒருவருக்கும் ஐக்கிய நாணயச் சங்கங்களைப் பற்றி தெரியாது; அப்படியிருந்தகூட சர். வி. சி. தேசிகாசாரியார், நைட் (Knight) அவர்கள் இதில் நம்பினர். அவருடைய உதவியைக் கொண்டு 1905-ஹுத்தில் சென்னை "சென்ட்ரல் அர்பன் பாங்கி லிமிடட்" என்னும் பாங்கு ஏற்படுத்தப்பட்டது. 1908-வது வருஷம் வரையில் இந்த ஒரு சங்கம்தான் இம்மாதிரியில் இருந்தது. அதுவரையில் இதன் சரித்திரமே இந்த ராஜதானியில் கூட்டுறவின் சரித்திரமாய் எண்ணலாம். ரிஜிஸ்தர் செய்யப்பட்டதினாலே மட்டும் பணம் கிடைத்துவிடாது. ஆரம்பத்தில் இருந்த கஷ்டங்களெல்லாம் அச் சங்கத்தின் காரியதரிசிக்குமட்டுந்தான் தெரியும். ஒருக்கால் ரிஜிஸ்தாருக்கும் தெரிந்திருக்கலாம். முதல் இரண்டு வருஷத்தில் அவ்வளவு பிரபலப்படவில்லை; 6—மாதகாலத்தில் பங்குத்

தொகை 4200-ரூபாயும், பிரவேசக் கட்டணம் 135-ரூபாயும் தவிர டிபாசிட்டு 500-ரூபாய்தான் கிடைத்தது. 1975-ரூபாய்தான் கடனுய் கொடுக்கப்பட்டது. முதல் வருஷம் லாபம் ரூ. 20-9-0 கிடைத்தது. பங்குத்தொகை மீது ஈவு ஒன்றும் கொடுக்க முடியவில்லை. சர் வி. சி. தேசிகாசாரியார் அவர்களின் சோர்விலா ஊக்கத்தாலும், தளரா முயற்சியாலும் இப்படி சுவல்பமாய் ஆரம்பித்த பாங்கி இப்போது ஏற்பட்டிருக்கும் பிரபலத்தை யடைந்து இருக்கிறது. அவருடைய சொந்த செல்வாக்கால் தான் அவ்வளவு நடந்தது. இப்போது பணம் தானுய் வந்து விழுகிறது. வியாபாரம் லக்ஷக்கணக்காய் நடக்கிறது. சிலர், இந்த பாங்கு கூட்டுறவு முறையில் நடத்தப்படவில்லை மெம்பர்களுக்கு ஈவுக்காக பிரயத்தனப்படுகின்றது; என்றும் இகழ்கின்றனர். ஐக்கிய நாணயத்தைப்பற்றி தெரிந்தவர்கள் சென்ட்ரல் பாங்குகள் சாதாரண பாங்கிகள்போல் வியாபார முறையில் லாபம் தேடத்தான் முயலவேண்டுமென்று சொல்லுகின்றனர். சென்னை சென்டரல் பாங்கும் இதற்கு மேல் ஒன்றும் செய்வதாய் எப்போதும் எண்ண இல்லை. அதன் எண்ணத்தை நன்கு நிறைவேற்றி விட்டது. ஜனங்களிடம் பணம் கடன் வாங்கி, கிராம நாணயச் சங்கங்களுக்கு கடன் கொடுத்து வந்தன இவைகளிடமிருந்து ஒரே விதமாய் 100-க்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டி வாங்கி வந்தது. சென்ட்ரல் பாங்கின் பங்குத்தொகையும் டிபாசிட்டும் பின் வருமாறு இருந்தது.

| வருஷம் | பங்குத்தொகை | | டிபாசிட்டு | |
|---|---|---|---|---|
| 1905-'06 | ரூ. | 4200 | ரூ. | 500 |
| 1906-'07 | ,, | 2700 | ,, | 80000 |
| 1907-'08 | ,, | 1485 | ,, | 24096 |
| 1908-'09 | ,, | 7500 | ,, | 432664 |
| 1909-'10 | ,, | 67000 | ,, | 618830 |
| 1910-'11 | ,, | 18000 | ,, | 921288 |
| 1911-'12 | ,, | 100350 | ,, | 244370 |

ஐக்கிய நாணயச் சங்கங்களும் அதிவேகமாய் ஏற்பட்டு வந்தன. திவான்பகதூர் ராஜகோபாலாசாரியார் மூன்றாது வருஷம் எழுதிய ரிபோர்ட்டில் 63 சங்கங்கள் ஏற்பட்டிருந்ததாய் எழுதினர். அப்போது சென்ட்ரல் பாங்குக்கு 81000 ரூபாய் முதல். அவர் இந்த பாங்கு இன்னும் வியாபிக்கும் என்பதைக் கண்டு கொண்டு அதற்கு மேல் கவர்ன்மெண்டார் உதவி வேண்டாம் என்று தீர்மானித்து விட்டார். இந்த சமயத்தில் அவரை திருவாங்கூர் திவானாக நியமித்து விட்டார்கள். அவருக்கு பதில் மிஸ்டர் ஆர். ராமச்சந்திரராவ் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

## கூட்டுத்தொழில் வியவசாயச் சங்கங்கள்

(மகா-ள-ளஸ்ரீ கே. இராமஸ்வாமி ஐயர் அவர்கள் பி. ஏ. பி. எல். எழுதியது)

இந்த தேசத்தில் கூட்டுறவு க்ஷேமமாய் ஊன்றவேண்டுமானால் கடன் கொடுக்கல் வாங்கல் செய்வது மட்டும் போதாது. வியவசாயத்திலும் கூட்டுறவு முறை அநுசரிக்கப்படாவிட்டால் கூட்டுறவு நன்கு பரவாது. நாணயச் சங்கங்கள் வியாபித்து இருக்கின்றன என்பதும், ஜனங்களால் விரும்பப்படுகின்றன என்பதும் உண்மைதான். ஆயினும் அவைகளால் உண்டாயிருக்கும் நன்மைகளெல்லாம் குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதும், சிரமமின்றி திருப்பி வாங்கிக் கொள்ளுவதும் தான். அநேக சாமான்ய ஜனங்கள் இந்த உபகாரங்களின் பயனை அடைந்து இருக்கின்றனர். அநேகம் வியவசாயிகளும் சாவ்கார் வலையினின்றும் மீண்டு இருக்கின்றனர். அவர்களுக்கு உபயோகமான காரியங்களுக்குத் தேவையான பணமும் அகப்பட்டது. இவ்வளவு மட்டும் சங்கம் அவர்களுக்கு உபயோகம் தான். அவர்களுடைய குணத்தையும், யோக்கியதையையும், புத்தியையும் மேலானதாக்க எவ்வளவு உதவியிருக்கின்றன என்பது இன்னும் விசாரித்துக்கொள்ள வேண்டிய விஷயம். சங்கங்களின் சங்கியை அதிகம்தான்; மூலதனமும், அவைகளின் லாபமும் நாம் களிக்கத்தகுந்ததுதான். குணத்தைச் சீர்திருத்துவதிலும், சுய உதவி, சிக்கனம், கூட்டுறவினர் என்னும் கட்டு, இவைகளை உண்டுபண்ணுவதில் சங்கங்கள் செய்திருப்பது மிகசுவல்பம். இதற்குக்காரணம் இப்போதும் இச்சங்கங்களை உண்டுபண்ணும் ஏற்பாட்டின் விதம்தான். ஒவ்வொரு சங்கமும் சர்க்கார் ஏற்படுத்துவதாய் ஜனங்கள் எண்ணுகின்றனர். பணம் சர்க்கார் பணம் என்று ஜனங்கள் சொல்லுகின்றனர். "சர்க்கார் பணம்: கெடுப்படி கொடுத்துவிடவேண்டும்" என்று ஜனங்கள் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன். அநேகம் ஊர்களில் கர்ணம் அல்லது கிராம முன்சீப்பே காரியதரிசியாய் இருக்கின்றனர். கடன் விண்ணப்பங்களை இவர்களே விசாரிக்கின்றனர். ரிஜில்தாரார் அல்லது ஒரு டிப்டி கலெக்டர் கடன் சாங்க்ஷன் செய்கின்றனர். ரெவினியூ இன்ஸ்பெக்டர்களுக்கு பதிலாய் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர்களிருக்கின்றனர். இப்படி எல்லாம் இருக்கும்போது சங்கம் ஜனங்களதே என்றும் அவர்களுடைய பிரயத்தனத்தாலேயே கடன் கிடைக்கிறது என்றும் சர்க்கார்பாங்கி இல்லை என்றும் நம்பும்படி செய்வது சாத்தியமாய் இல்லை. சர்க்காருக்கு அபரிமிதமாய் மிகுந்துபோகும் பணத்தைப் போட்டு வைக்க சர்க்கார் இந்த பாங்குகள் ஏற்படுத்தி இருக்கின்றனர் என்று சொல்லிக்கேட்டிருக்கிறேன். சிக்கனத்தையும், ஒத்துழைக்கும் வழக்கத்தையும் ஜனங்களிடம் அதிகப்படுத்தவேண்டும். பணம் சேகரிப்பதைத் தள்ளிவிட்டு வியவசாயிகளுக்கு வேண்டியவைகளைத் தேடிக்கொடுக்கவேண்டும். விளையும் தானியத்தை சரியான காலம் வரையில் வைத்துக்கொண்டிருந்தால் நல்ல விலைக்கு விற்கலாம் என்பதை வியவசாயிகளுக்கு போதிக்கவேண்டும்.

வியவசாயத்தின் நூதன முறைகள் அவர்களுக்குத் தெரியவேண்டும். இப்போது உள்ள நாணயச்சங்கங்களே வியவசாயச் சங்கங்கள்தான். மிஸ்டர் உல்வ் என்பவர் ரெய்பெய்சன் முறையில் உள்ள சங்கங்கள் எவ்வளவு நன்மை செய்வது சாத்தியம்என்பதை காண்பிக்கிறது என்றுசொல்லி இருக்கிறார். ரெய்பெய்சன் சங்கங்கள் ஏற்படுமுன்பு ஜர்மனியின் கிராமங்கள் பாழாய் இருந்தன. இவைகள் ஏற்படவே நாடெல்லாம் செழித்து விளங்கியது. வியவசாயச் சங்கங்கள் பிரபலித்தன. செல்வப் பெருக்கைக் காட்டிலும் குணம் சீர்பட்டதே மேலானது. சிக்கனமும் தொழில் முறையும் தெரிந்து விட்டது. முன்பு அசியையும் பொறாமையும் இருந்ததற்கு பதிலாய் இப்போது ஒருவருக்கு ஒருவரிடம் நம்பிக்கையும் கட்டும் உண்டாகியிருக்கிறது.' அயலான் வாழ்வே தன் வாழ்வாய் எண்ணுகின்றனர். இப்போதுள்ள ஐக்கியச்சங்கங்களைக் கொண்டே இத்தேசத்திலும் மற்றவகையில் கூட்டுறவு ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். வேறு வேறு சங்கங்கள் வேண்டாம். ஐக்கிய சங்கத்திலுள்ளவர்களுக்கே வியவசாய அபிவிருத்தியையும்பற்றி தெரியவேண்டியது. அவர்களுக்கு வியவசாயம் கூட்டுறவு முறையில் செய்வதைப்பற்றிக் கற்பிக்கவேண்டும். இன்னம் நெடுநாள் வரையில் தனியான வியவசாயச் சங்கங்கள் வேண்டாம்.

மதுரை,
19—11—12.

கே. இராமஸ்வாமிஐயர்

# மேல்விசாரணை அதிகாரிகள் அல்லது துணைச் சங்கங்கள்.

———:(o):———

(மிஸ்டர் ஜி. கே. தேவாதர் என்பவர் எழுதியது.)

சென்றவருஷம் பம்பாயில் கூடிய மஹாநாட்டின் முன்பு "மேல் விசாரணைச் சபை" யைப்பற்றி நான் ஒருகுறிப்பு எழுதிப்படித்தேன். இந்தவருஷ மஹாநாட்டில் என்ன செய்யக்கூடியது என்பதை குறிப்பிட்டுக் காட்டும்படி தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு ஏற்ப இந்தவருஷம் ஏற்ற இடங்களில் துணைச்சங்கங்கள் அமைப்பதைப்பற்றிப் பேசுகிறேன்; இவைகள் மற்றச் சங்கங்களை பரிசோதனை செய்வதைப்பற்றி முக்கியமாய் சொல்லுகிறேன்.

2. கூட்டுறவினருக்கு துணைச்சங்கங்களும் பணம் சேகரிக்கும் விதமும் அதிகக் கவலையுடன் கவனிக்க வேண்டியவிஷயமாகிக் கொண்டு வருகின்றன. ரிஜிஸ்தரார் கான்பிரன்சில், கூட்டுறவு வியாபித்தலில் யூனியன் எப்படிஉதவும் என்பதைப்பற்றி யோஜனை செய்தனர். யூனியன்கள் அல்லது துணைச்சங்கங்கள் வேண்டும் என்பதற்குக் காரணங்களாவன. (1) வரவரச் சங்கங்களின் சங்கியை அதிகரிப்பதால் ரிஜிஸ்தராரும் அவருடைய சிப்பந்திகளுமாய் சங்கங்களை மேல் விசாரணை செய்து அவைகளின் கணக்கைப் பரிசோதனை செய்ய சாத்தியப்படுகிறதில்லை; (2) கூட்டுறவு முறையைப் பரவச் செய்யவும் ஜனங்களுக்கு ஊக்கம் உண்டு பண்ணவும் அவர்களுக்கு சாவகாசப்படுகிறதில்லை; (3) புதிதாய் ஏற்படும் சங்கங்களை கட்டுக்குள் வைத்துக்கொண்டு அவைகளின் அதிகாரத்தையும் குறைத்து விடாமல் நடத்தத்தக்க அதிகாரிகள் வேண்டி இருக்கிறது (4) பணம் கடன் கொடுக்கும் சங்கங்களிடத்திலிருந்து கடனை மற்ற சங்கங்களுக்கு வாங்கிக் கொடுக்க ஒரு அதிகாரி அவசியமாயிருக்கிறது (5) பலசங்கங்களின் நாணயத்தையும் கொண்டு, ஜனங்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி பணம் சேகரித்துக் கொடுக்க ஒரு பாங்கு வேண்டி இருக்கிறது. கூட்டுறவு க்ஷேமமாய் இடையூறின்றி இருப்பதற்கு யூனியன்கள் இன்றியமையாதது.

3. மற்ற ராஜதானிகளில் மேல் விசாரணைக்கும், சில விடங்களில் பணம் சேகரிக்கவும் யூனியன்கள் ஏற்பட்டிருக்கின்றன. பர்மாவில் 24 யூனியன்களிருக்கின்றன. 280 சங்கங்கள் இவைகளில் அடங்கி யிருக்கின்றன. யூனியன்களைச் சார்ந்த சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்களில் 100 க்கு ¼ ரூபாய்விதம் யூனியன் வரி வசூல் செய்கிறது. சென்ட்ரல் பிராவின்ஸஸ்

மாகாணத்தில் சங்கங்களுக்குக் கடன் கொடுக்கும் யூனியன்கள் 4 இருக்கின்றன. சென்னை ராஜதானியில் இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. சங்கங்களால் சென்ட்ரல் பாங்குக்குக் கொடுக்கப்படும் வட்டியில் 30 இல் ஒரு பாகம் யூனியன்களுக்குப் போகிறது, சார்ந்த சங்கங்களும் யூனியனுக்கு வருஷத்தில் இவ்வளவு என்று வரி கொடுக்கின்றன. பஞ்சாபில் சங்கங்களுக்கு கடன் கொடுக்கும் யூனியன் ஒன்றுதான் இருக்கிறது. பம்பாய் ராஜதானியில் சமீபத்தில் சட்டாராவில் ஒன்று ஏற்பட்டது. யுனைடெட்ப்ராவின்சஸ் மாகாணத்தில் ஜில்லா பாங்குகள் யூனியனுக்கு பதிலாய் சுமாராய் வேலைசெய்கிறது. கூட்டுச் சங்கங்கள் ஏற்படுத்தும் பண்டுகள் சில ஜில்லாக்களில் ஏற்பட்டிருக்கின்றன. சங்கங்கள் ஏற்படுத்தவும் மேல் விசாரணை செய்யவும் சம்பளம் கொடுத்து ஒரு சூபர்வைசரை நியமித்து இருக்கின்றன. இப்போது இம்மாதிரியில் 40 ஏற்பட்டிருக்கின்றன.

4. பரஸ்பர உபகாரத்தை உத்தேசித்து ஜனங்கள் சங்கங்களாய்ச்சேருவது போல், சங்கங்கள் தமக்குள் ஒன்றுக்கொன்று உபகாரமாய் இருப்பதற்காக யூனியன்களாய் சேருகின்றன. இதன் நோக்கங்கள் மூன்று: (1) கூட்டுறவைப் பரவச் செய்தல்: (2) சங்கங்களை மேல் விசாரணை செய்தல்; (3) சங்கங்களில் பணம் அதிகமாயிருக்கும் இடத்திலிருந்து வாங்கிக்கொண்டு குறைவான இடத்தில் கொடுத்து நிறவுவது. யூனியன்களால் அதிக உபயோகம் உண்டு. அவைகளை அமைக்கப்பட்டிருக்கும் வழியால் தம்முடன் சேர்ந்திருக்கும் சங்கங்களுக்கு ஒரு அந்தஸ்தைக் கொடுக்கின்றன; அவைகளை நிலைப்படுத்துகின்றன. சங்கங்களின் சொத்தை அளந்து கடனைத் திருப்பிக் கொடுத்து விடுமா என்று ரிஜிஸ்தாராருக்குச் சொல்லத் தகுந்த அதிகாரியாய் இருக்கிறது. சங்கங்களின் கணக்கைப் பரிசோதித்துப் பார்ப்பதால் சென்ட்ரல் பாங்குக்கு உதவியாகின்றன. சிறு தொகைகளை வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு டிபாசிட்டுப்பண்ண ஏற்பாடு செய்கின்றன. சங்கங்களுக்குப் பணம் ஆகப்பண்ணிக்கொடுப்பதால் வியவசாய அபிவிருத்தியை உதவுகின்றன. அவைகள் ஜாக்கிரதையாய் கடன் கொடுக்கும்படி சிபார்சு செய்வதால் ஜனங்களுக்கு ஐக்கிய காரியத்தில் நம்பிக்கை உண்டாகிறது. சங்கங்களின் கணக்குகளைப் பரிசோதிப்பதுடன் கூட்டுறவு முறைகளை அவைகளுக்கு போதித்து, அவைகள் அம்முறையைத் தப்பாது பாதுகாக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சென்ட்ரல் பாங்குகளுக்கும் இடையே நின்று உதவுகின்றன.

5. யூனியன்களின் அவசியம் மேற்சொல்லிய விஷயங்களால் விளங்கும். ஒரு குறித்த விஸ்தீரணத்தில் இருக்கும் சங்கங்களில் எத்தனை வேண்டுமானாலும் அது சேர்த்துக்கொள்ளலாம். சட்டப்பிரகாரம் அது பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கமாயும், வரையறுக்கப்படாத சங்கமாயும் ரிஜிஸ்தர் செய்யப்படலாம். சேர்ந்துள்ள சங்கங்களின் பிரதிநிதிகள் சேர்ந்து நிர்வாக சபையை அமைத்துக்கொள்ளுகின்றன. காரியம் நடத்த ஒரு செக்ரடரியையும்



ஏற்படுத்துகிறது. சங்கங்களைப் பரிசோதனை செய்ய சம்பளம் கொடுத்து சிப்பந்தி நியமித்துக்கொள்ள வேண்டும். இந்தச் செலவு சேர்ந்துள்ள சங்கங்கள் கொடுக்கும். கணக்குகள் பரிசோதனை செய்வதால் சங்கங்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்பதை யூனியன்கள் நிர்ணயிக்கின்றன. பணம் கொடுக்க வேண்டியமட்டும் ஏற்பாடுகள் இருக்கின்றன. பம்பாய் ராஜதானியில் 8 அல்லது 9 சென்ட்ரல் பாங்குகள் இருக்கின்றன. ஆனால் மேல்விசாரணைக்கு மட்டும் தக்க ஏற்பாடு ஒன்றும் இல்லை. யூனியன்கள் தான் வேண்டும். ரிஜிஸ்தாரர் தன்னால் எல்லாச்சங்கங்களையும் பார்க்க முடியவில்லை என்று எண்ணுகிறார். யூனியன்கள் சங்க மேல்விசாரணைசெய்தால் ரிஜிஸ்தாரரும் அவர் சிப்பந்திகளும் கூட்டுறவுச் சங்கங்கள் பரவச்செய்வதை கவனிப்பார்கள் ரிஜிஸ்தாரர் முதலில் சில இடங்களில் யூனியன்கள் ஏற்படுத்தினால் தானாக மற்ற இடங்களில் ஏற்படும். சூரத்முதலிய சில இடங்களில் ஆரம்பம் செய்யத்தக்கது. தாலூக்கா யூனியன்கள் சென்னை ராஜதானிபோல் ஏற்பட்டால் அவைகளே சங்கங்கள் ஏற்படுத்துவதில் உதவலாம். சென்னையில் இப்படித்தான் ஏற்பட்டிருக்கிறது. சங்கங்களின் பொதுநன்மையை யோசிப்பதற்கு இது உதவும். கூட்டுறவுக்கொள்கைகளை சீக்கிரம் போதிக்கும். தீய எண்ணங்கள் அணுகாது சங்கங்களைக் காக்கும். பர்மா ரிஜிஸ்தாரரும் சென்ட்ரல் பிராவின்சஸ் ரிஜிஸ்தாரரும் அப்படிப்பட்ட யூனியன் ஜனங்களுக்கு நன்மை செய்யும் என்று எண்ணுகின்றனர். மேல் விசாரணைசெய்யும் யூனியன்களால் சங்கங்களுக்கு பலன் அதிகமாகும்: கூட்டுறவே இந்தியதேசத்தில் வலியடையும்.

ஜி. கே. தேவ்தர்.

(சர்வண்ட்ஸ் ஆவ் இந்தியா சொஸைடி)

# கூட்டுத்தொழில் அபிவிருத்தி.

## மற்றதேசங்களில்

### ருமேனியா நிலபந்தக பாங்கிகள்.

[ரோம்தேசத்து புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

பெரிய சொத்துக்களுக்கும் சில்லரை நிலங்களுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு ஏற்பட்டிருக்கும் தீங்குகளுக்குக் காரணம் என்னவென்றால் பெரிய சொத்துக்காரர்கள் நிலத்தை நேராய் சாகுபடி செய்யாது குத்தகைக்கு விட்டுப்போவதுதான். குத்தகை வாங்குகிறவர்கள் சில்லரையாய் குத்தகை விடுகின்றனர். இது நில முடையவர்களுக்குத் தீங்கு விளைப்பதுடன் தேசத்துக்கே கெடுதியுண்டுபண்ணுகிறது.

1909 வருஷக் கணக்குப் புஸ்தகத்திலிருந்து 159,000 "எக்டர்" அளவுள்ள நிலத்தை ஒரு குடும்பம் குத்தகை வாங்கி சில்லரைக் குத்தகையாய் விட்டதைப்பற்றி சொல்லியிருக்கிறது. இதனால் நிலம் நன்கு பண்படுகிறதில்லை. இத்தீங்கை நிவர்த்திசெய்ய 1907-08 வருஷத்தில் இவ்வளவுதான் ஒருவன் குத்தகை எடுக்கலாம் என்று சட்டம் ஏற்பட்டது. தவிரவும் குடியானவர்கள் நிலம் வாங்குவதை உதவும்படி ஒரு பாங்கும் ஏற்பட்டது.

நிலசாகுபடி திருந்தி சரியாய் நடக்கவேண்டுமானால் பணம் வேண்டும். அதிக நிலமுடையவர்களுக்கு வியவசாயம் தெரியாது; அதிக நிலம் குத்தகை எடுத்தவர்கள் பணம் செலவிடார். சில்லரைக் குத்தகைக்காரருக்குப்பணம் அகப்படாது. பெரிய சொத்துடையவர்கள் அநேகமாய் நகரங்களில் பெரிய உத்தியோகத்திலுள்ளவர்களாய் இருப்பார். ஏதாவது ஸ்திரமாய் வருஷத்தில் இவ்வளவென்று வரவேண்டியதுதான் அவர்கள் கருத்து. நிலத்தை விருத்தி பண்ணி நல்லஸ்திதிக்கு கொண்டுவர அவர்கள் எண்ணுகிறார்கள் இல்லை.

### ருமேனியா நிலபாங்கு.

1873, 1882, 1903 வது வருஷங்களில் இதைப்பற்றி சட்டங்கள் ஏற்பட்டன. கடன் வேண்டுபவர்கள் சேர்ந்து அவர்கள் முழுசொத்து ஜாமீன் பேரில் கடன் வாங்கச் சங்கங்கள் ஏற்படலாம். அவர்களுடைய முழுக்கடனுக்கும் மேல்படாது சங்கம் கடன் வாங்கலாம்.

1903 வருஷம் வரையில் இந்தச்சங்கம் நிலக்கடன் வியவகாரம் செய்யலாம். 1873 வருஷம் முதல் சங்கம்ஏற்பட்டது. இதன் நோக்கங்களாவன:—

(1) 10 வருஷத்திற்குக் குறையாமலும் 60 வருஷத்திற்கு மேற்படாமலும் தவணையில் கடன் கொடுப்பது;



(2) இதற்காக பாண்டுகள் அல்லது செக்குகள் மூலமாய் கடன் வாங்குவது.

சொத்தின் பாதிக்குமேல் கடன் கொடுக்கக்கூடாது. ருமேனியா தேசம் முழுதும் வியவகாரம் நடத்தலாம். கூட்டுறவு முறையில் பாங்கு ஏற்படவேண்டியது. எந்த பூஸ்திதியுடையவன் வேண்டுமானாலும் சேரலாம். லாபத்தில் வீதம் உண்டு. நிலம் விற்றுவிட்டால் வாங்குபவனுக்கு அவன் பாத்தியம் வந்துவிடும். இதனால் உண்டான நன்மைகளாவன:—

(1) தேசம் முழுதும் போகக்ஷேமம் சௌகரியப்பட்டது.

(2) கிரயத்தியம் ஒழுங்குபட்டது.

(3) நில ரிஜிஸ்தரேஷன் ஏற்பாடு உண்டு பண்ணிற்று.

(4) நிலத்தின்மேல் கடன் சாதாரணமாய்க் கிடைக்கிறது.

ஜர்லண்டு வியவசாய மொத்த வியாபாரச் சங்கம்:—1911 ஆம் இதன் வியாபாரம் 132,929 பவுன்.

### மொராக்கோ, அல்ஜீரியா, ட்யூனிஸ் தேசங்களிலுள்ள மகமதியர்களின் விவசாய சங்கம்.

[ரோம்தேசத்தில் போடப்படுகிற புஸ்தகத்தில் இருந்து இவைகளாவன:—

(a) செட்டு, ஒருவருக்கொருவர் உதவிசெய்ய கடன் வாங்குவது இவைகளுக்காக ஏற்பட்ட சங்கங்கள்.

1884 வருஷத்தில் அல்ஜீரியா தேசத்து கவர்ன்மெண்டார் செட்டுக்காக ஒரு சங்கம் ஏற்படுத்த உத்திரவு செய்தார். 1894 வருஷத்தில் சட்டத்தில் அதை ஓர் அங்கமாக ஒப்புக்கொண்டார்கள். அது முதல் சங்கங்கள் விருத்தி பெற்று வந்தன. 1908 வருஷத்தில் 5,15,252 மெம்பர்களும், 1,82,69,846 ப்ராங்க் முதலும் கொண்டு, 190சங்கங்கள் இருந்தன;1910ஆம் மெம்பர்கள், 540,830, முதல், 21 மிலியன் பிராங்க் இருந்தும் அல்ஜீரியாவின் 371 ஜனப்பிரிவுகளைப் பார்க்குமளவில் இச்சங்கங்கள் குறைவு என்று தோற்றுகிறது.

இச்சங்கங்கள் அதிக உபயோகமாக இருந்திருக்கின்றன. இவை 1907 ஆம் விதை ஆடு மாடு, ஏர் முதலியவை வாங்கும்பொருட்டு முதலில் பாதிக்கு மேல் கடனாகக் கொடுத்திருக்கின்றன. நல்ல சாகுபடி இல்லாத காலங்களில் திருப்பி வாங்கக் கொஞ்சம் அதிககாலம் கொடுக்கலாம். அதே வருஷத்தில் ஏழைகளுக்கு திருப்பிக்கொடுக்க மிக சுலபமாக இருக்கும்படி 40,664 ப்ராங்க் கடன் கொடுத்தார்கள்.

### ட்யூனிஸ் தேசத்தில் செட்டுச் சங்கங்கள்.

1894 வருஷத்தில் ஆரம்பித்தன. இவைகள் விதைகடன் கொடுப்பதற்காக ஏற்பட்டன. 1909௵ இவைகளின் ஆஸ்தி 16,37,518 ப்ராங்க்ஸ். இவைகளின் வருமானம் இப்பொழுது (1910௵) 4,98000 ப்ராங்க்ஸ் என்று மதிக்கப்பட்டாலும் இன்னும் நான்கு வருஷங்களில் 40 லக்ஷம் ஆகிவிடும் என்றும் கவர்மெண்டின் உதவி வேண்டாமென்றும் சொல்லுகிறார்கள்.

(*b*) ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் வியவசாயச் சங்கங்கள்.

சிக்கனச் சங்கங்கள் குலறவு என்பது பற்றி அல்ஜீரியா கவர்ன்மெண்டார் விவசாயச்சங்கங்கள் ஏற்படுத்த நிச்சயம் செய்திருக்கிறார்கள். இலாக்கா பாங்க் சம்பந்தமாக அங்கங்கே பாங்கி ஏற்பாடு செய்ய உதவிக்கொண்டு வருகின்றனர். சிக்கனச்சங்கங்களில் ஏற்பட்டிருக்கிற இந்த உள்ளூர் பாங்கிகள் 1500 முதல் 3000 ப்ராங்ஸ் வரையில் கடன் கொடுக்க ஏற்பட்டிருக்கின்றன. அல்ஜீரியா பாங்கிலிருந்து வட்டி இல்லாமல் அவர்களுக்குப்பணம் கிடைக்கின்றது.

(*c*) ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் தொழிலாளிகளின் சங்கங்கள்.

கவர்ன்மெண்டு, தான்யத்தில் செலுத்தப்படும் வரிக்குபதிலாக குடிகளின் ஆடுமாடுகளையும், பயிரையும் இன்ஷ்யூர் செய்ய ஏற்படுத்திய உள்ளூர் இன்ஷ்யூரென்ஸ் சங்கங்களைப் பின்தொடர்ந்து 1907 வருஷத்தில் அல்ஜீயர்ஸில் ஊர் முழுமையும் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணங்கொண்ட "சென்ட்ரல் அல்ஜீரியன், ட்யூனிஷியன் சங்கம்" என்று ஒரு இன்ஷ்யூரன்ஸ் சங்கம் ஏற்பட்டது.

(*d*) தண்ணீர் பாய்ச்ச ஏற்பட்டிருக்கும் சங்கங்கள்.

கவர்ன்மெண்டார் ட்யூனிஸில் தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்து பழைய மேல் ஸ்திதிக்கு அதைக்கொண்டுவர முயலுகின்றார்கள். இவ் வேலைகள் சுதேச சங்கங்களால் செய்யப்படுகின்றது; தேசத்து ராஜாங்கத்தார் வருஷம் வருஷமாக திருப்பிக் கொடுக்கும்படி கடன் கொடுக்கிறார்கள். இவைகள் ஜனங்களின் பணத்தையும் குணத்தையும் விருத்தி செய்திருக்கின்றன. இரு இடத்தில் கோவேறு கழுதை விருத்திக்காக ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது.

### வங்காள கூட்டுறவினர் சங்கத்தினரின் வேலையைப்பற்றி வருஷாந்திர ரிபோர்ட்டினின்று சுருக்கம்.

சங்கங்கள் 718 ல் இருந்து 943 க்கு விருத்தி பெற்றிருக்கின்றன. இரண்டு சென்ட்ல்ல் பாங்குகள், தாகை, பெலபோராவிலும், மிட்னபூர் முதலிய இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. மொத்தம் சென்ட்ரல் பாங்கு 7. நகரச் சங்கங்கள் 14 அதிகரித்திருக்கின்றன; மொத்த கிராமச்சங்க அதிகம் 209.



மெம்பர்கள் 29506 ல் இருந்து 38569 க்கு அதிகரித்திருக்கிறார்கள்; வியவகாரதனம் ரூ. 14,96,833 ல் இருந்து ரூ. 2607,573 ஆகியிருக்கிறது.

விருத்தி மிக்க ஸந்தோஷகரமாக இருக்கிறது. கணக்கு மூலமாக விளங்கும் விருத்தி தவிர சங்கங்கள் மற்ற விருத்திபெற்றிருக்கின்றன. சிலவருஷங்களாக சங்கங்கள் மிக வேகமாக ஏற்பட்டுக்கொண்டு வருவதாலும், அதனாலேயே கட்டுக்கொண்டதாக இல்லாததாலும், இப்பொழுது இன்னும் சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆசையை சற்று அடக்கி, கொஞ்சம் சீர்திருத்தி சேர்க்கும் வேலையைச் சங்கங்களின் நன்மையை உத்தேசித்தே கைக்கொள்ள வேண்டும்.

சுருக்கம்:—சென்ட்ரல் பாங்குகளினுடைய இவ்வருஷத்திய வேலையினின்று இவைகள் கூட்டுறவை அபிவிருத்தி செய்யும் என்றும், இவைகளுக்குட்பட்ட சங்கங்களுக்குப் பணம் கொடுத்தும், மேல் விசாரணை செய்தும் உதவி செய்யும் என்றும் நம்பிக்கை உண்டாகின்றது. இவைகள் தானாகவே விருத்தி அடையும். இன்னும் சிலவருஷங்களில் அதிக சென்ட்ரல் பாங்கிகள் ஏற்படும் என்பதால் இவைகளை ஒன்றுசேர்க்கும்படி கல்கத்தாவில் ஒரு மாகாண பாங்கி ஏற்படுத்த வேண்டும்.

இந்த பாங்கி உள்ளூர் பாங்குகளின் வேலைகளை மேல்பார்வை செய்வதுமன்றி கல்கத்தா பணக்கடையுடன் இவைகளைச் சேர்க்கும்; அதுவு மின்றி எல்லாவித கூட்டுறவையும் விருத்திசெய்யும் வியவசாய ஏற்பாடுகளும் இதை ஒத்திருக்கின்றது. நெல் பயிரிடுபவர்கள் கடன் திருப்பிக்கொடுக்கும்போது சணல் பயிரிடுபவர் கடன்கேட்கிறார்கள்; இவர்கள் கொடுக்கும்போது அவர்கள் கடன் வாங்குகிறார்கள். சில இடங்களில் கவர்ன்மெண்டார் உதவி பெற்ற பாங்கிகள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள்; ஆனால் இப்பொழுது கூட்டுறவு அடைந்திருக்கும் விருத்தியை யோஜிக்குமளவில் அவ்வித கவர்ன்மெண்ட் உதவிபெற்ற பாங்கி அவசியமில்லையென்று புலப்படுகின்றது. வேறு பெரிய ஏற்பாடு செய்யுமுன் இச்சென்ட்ரல் பாங்கிகள் விருத்தி அடைய வேண்டும்.

ஜெமீந்தாரி சங்கம் என்பது பெரிய நிலங்களின் சாகுபடிக்காக ஏற்பட்டிருக்கிறது. சுந்தர்பனின் குத்தகை எடுக்கப்பட்ட இடம் இதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. இச்சங்கத்தின் வருமானம் 25,324.

பாரெங்கா நெசவுகாரன் ஸ்டோர்ஸ் என்னும் டெக்கா பால் முதலியவை உண்டாக்கும் கூட்டுறவு சங்கம், இவை இரண்டும் உற்பத்தி சங்கங்கள். ம-ள-ள-ஸ்ரீ N. பிள்ளை அவர்களின் உதவிபெற்ற நெசவுச்சங்கம், 1578 ரூபா முதலைக்கொண்டு வேலைசெய்து விருத்திபெற்று வந்தாலும் இப்பொழுது ராய் சாயப் ப்ரமாத நாராயண சௌத்ரி அவர்களின் உதவியிலேயே ஜீவித்து வருகிறது. ஆயினும் இவர் இதற்கு அதிக சுயர்ச்சிகொடுக்க விரும்புகிறார்.

டெக்கா தயிர்பால் முதலியவை உத்பத்தி செய்யும் சங்கம் சில வியாபாரிகளால் நல்ல பால்கொடுக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. இதன் முதல் ஷேர்களாக அடையப்பட்டது. மெம்பர்களுக்குள் கடன் கொடுக்கிறார்கள். இது நலமல்ல. இதனுடைய முதலில் 7201 ரூபாயை எந்திரங்களிலும் மாடு வாங்குவதிலும் செலவிட்டிருக்கிறார்கள். இவ்வருஷம் 671 ரூபாய்க்கு பால் வித்திருக்கிறது. இச்சங்கம் மிகவும் ஜனங்களுக்கு பிரியமாக இருக்கிறது. இவ்வருஷம் இதற்கு நஷ்டமாக இருந்தாலும் இவர்கள் மெம்பரில்லாதவர்களுக்கு கொடுக்காமலும், மெம்பர்களுக்கு ஷேருக்குமேல் நாணயத்தில் கொடுக்காமலும் இருந்தால் நிச்சயம் லாபமடையும்.

விவசாயடிபார்ட்மெண்டு ஏற்படுத்தியிருக்கும்சங்கம் எலும்பு ஆகாரம் மொத்தமாக பணம்சேர்த்து வாங்கி உபயோகம் செய்ய உதவுகிறது.

## பீஹார் ஒரிஸ்ஸா இவ்விடங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் 1911—12 வருஷாந்திர ரிபோர்டிலிருந்து சுருக்கம்.

பொது:—கூட்டுறவு சங்கங்களில் 4½ வருஷம் பழக்கத்திலிருந்து நாம் அநேக விஷயங்கள் அறிகிறோம். ஒருவர் தன்னுடைய அவாவையும், பிறருடைய அவாவையும் நம்பக்கூடாது. கூட்டுறவு தானாகவே விருத்தியடைய வேண்டுமென்று விட்டுவிடக்கூடாது. அதைக் கவனித்து மிகுந்த கவலையுடன் அபிவிருத்தி செய்ய முயலவேண்டும். நன்றாய் ஏற்படுத்தப்பட்டதாயும் மேன்பார்வை பார்க்கப்படுகிறவுமான கூட்டுறவுச் சங்கம், அதில் சம்பந்தப்பட்ட யாவருக்கும் அளவற்ற சௌகரியங்கள் செய்யும்படி நடத்தப்படக் கூடியது என்று பழக்கத்தினின்று நன்கு விளங்குகிறது. மஹாஜனத்தினின்று குடியானவனை அது காப்பாற்றும். அது அவனை செட்டாகச் செய்யும்; கடுமையான வேலைசெய்யக் கற்பிக்கும்; விவசாயத்தை விருத்திசெய்யும்; அது அற்பச் சண்டைகளையும் வழக்குகளையும் நிறுத்தும்; கடைசியாக அது கிராமவாசத்தை மிகவும் சிறந்ததாகக் காண்பிக்கும். விவசாயி தன் பத்தைத் தீர்க்க கூட்டுறவே உபமானமற்றதோர் வழி. சங்கத்தில் சேர வேண்டுமென்ற அபிப்பிராயம் ஏற்கனவே ஜனங்களின் மனதில் பதிந்திருக்கிறது. பலத்த உதவியின்றி காரியத்தை சாதிப்பது சீக்கிரத்திலாகாது; ஆகையால் பீஹார் ஒரிஸ்ஸாவைபொத்த மாகாணத்தில் கவர்ன்மெண்டார் கூட்டுறவை விருத்திசெய்ய அதிகமான கவலை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். கவர்ன்மெண்டார் அதை ஏற்பாடு செய்யவேண்டியதில்லை. ஜனங்களுக்குப் பிடித்ததை உண்டுபண்ண உத்தியோகஸ்தர்களின் உதவி முக்கியம். உத்தியோக மில்லாதவர்களின் உதவி முதலில் தேவையானது. ரிஜிஸ்தாரரை இப்போது அவர்களைப்பொறுக்கி எடுக்கும்படி கேட்பதில் பயனில்லை; ஜில்லா உத்தியோகஸ்தர்தான் அதற்குச் சரியானவர்.



ராஞ்சியிலுள்ள பாதிரி ஹாப்மன் துரையவர்களின் ரோமன் காதலிக் மிஷன் சங்கமே மிகவும் சிறந்தது. கூட்டுறவு ஆரம்பவாசிகளின் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமானால் அதிகமாக சேர்ந்து வேலைசெய்வதால் தான் அது ஆகவேண்டும் என்று அவர் அறிகிறார். கொஞ்சங் கொஞ்சமாய் கற்பிப்பதால்தான் நல்ல காரியங்கள் சாதிக்கலாம் என்று அவர் எண்ணம். சாதாரணமான வழியில் போனால் வெகுகாலம் பிடிக்கும். அவ்வளவு காலம் சோட்டா நாக்பூர் சும்மா இருக்கமுடியாது. அவர் வெகு கிராமங்களைக் கற்பிப்பதால் வேலை கஷ்டம்தான்.

அது ராஞ்சியில் மிஷன் முழுவதற்கும் ஏற்பட்ட ஒரு திரட்டிய சங்கம். அந்த ஜில்லாவை 16 பாகமாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஒரு துரைக்குக் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு பாகத்திலும் அநேக சிறிய சங்கங்களிருக்கின்றன. பெயர் மாத்திரம் தனியாகக் கிடையாது. மற்றதெல்லாம் வேறு தான். ஒரு பாகத்திலுள்ள சங்கங்களெல்லாம் அதற்கு ஏற்பட்ட துரைக்குள்பட்டது. அங்கங்கே நடக்கும் விஷயங்களெல்லாம் ராஞ்சியிலுள்ள செண்ட்ரல் ஆபீஸுக்குத் தெரிகிறது. அங்கே அக்கவுண்டில் பதிந்து கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு சங்கமும் தனிமையாய் ரிஜிஸ்டராகத் தகுதியாகும் வரையில் வேலை கற்பிக்கப்பட வேண்டுமென்பது கருத்து.

சென்ற வருஷத்திய வேலையின் புனர் விமர்சை இன்னும் எனக்குவந்து சேரவில்லை. முன் வருஷங்களவ்வளவு விருத்தியடையா விட்டாலும் சங்கம் நன்றாக இருந்தது. மெம்பர்களும், முதலும் அதிகமாயிருக்கிறது. மெம்பர்களின் டிபாசிட்டுகள் கொஞ்சம் குறைந்தாலும் மொத்தமுதல் அதிகமாயிருக்கிறது. முதல் முழுவதும் மெம்பர்களால் கொடுக்கப்பட்டதுதான். கொடுக்கப்பட்ட கடன்களில் பாதிக்குமேல் திரும்பி வந்துவிட்டது.

வட்டி செலுத்துதல் தவறாமல் நடந்து வந்தது. கடன் தவணைகள் திருப்பிக்கொடுப்பது மொத்தத்தில் நன்றாக இருந்தது. பாதிரி ஹாப்மன் துரையவர்கள் கடன்களை தவறாது திருப்பிக்கொடுப்பதே ஒரு ஜயக்குறி என்று நன்கு அறிகிறார். கடன்கள் எந்த எந்த காரணங்களுக்காக வாங்கலாம் என்று கவனிப்பது மிகவும் விரும்பத்தக்கது. அக்காரணங்களாவன:—

1. ஆடுமாடு வாங்குவது மிகவும் முக்கியமானது.
2. கடன் அடைப்பது.
3. விவசாயச் செலவு.
4. நிலத்தை மீட்டுக்கொள்ளுவது.
5. வியாபாரம்.
6. நிலத்தை நன்றாய்ச் செய்வது.
7. பச்சை சாமான் வாங்குவது.

மேலே கூறிய காரணங்கள் ராஞ்சி ஆரண்ய வாசிகளின் ஸ்திதியையும், அதிகமான சாவினால் ஆடுமாடுகளுக்கு வற்றாத தேவையையும், அவர்களின் கடன்பட்ட நிலைமையையும், அடுத்த சாகுபடிக்குக்கூட விதையை மிகுத்துவைத்துக்கொள்ளும் அளவு தானியம் விதைக்கமுடியாமல் தடுக்கும் ஏழைத்தனத்தையும் நன்கு காண்பிக்கின்றது. வழக்கில் செலவிட்டிருக்கும் சிறிய தொகைதான் கொஞ்சம் மெச்சக்கூடியதோர் விஷயம்.

அந்தச் சங்கம் இன்னும் முடிந்த பாடில்லை. முக்கிய சாதனங்கள் எல்லாம் முடிவுபெற்று இருக்கிறது; ஆயினும் கணக்கற்றவளவு பாக்கி இருக்கிறது. எல்லாம் பாதிரி ஹாப்மனையும் அவரை யொற்றவர்களையும் பொறுத்தது. அவர்கள் எல்லாரும் மிகுந்த அவாவுடன் வேலை செய்கிறார்கள். வெளியிலிருந்து உதவி தேடாத சங்கமாவதற்குள் அவர்கள் அளவற்ற கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். $2\frac{1}{2}$ வருஷ வேலைக்கு அவர்கள் செய்திருப்பது மிகவும் மெச்சத்தக்கதுதான். பாதிரி ஹாப்மன் வேலையை நன்றாய் சமாளித்துக் கொண்டிருப்பதினின்று அவர் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றுவார், என்று நான் பூர்ண நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

கூட்டுறவில் வேறு விதங்கள்.—இந்த மாகாணத்தில் வேறுவித கூட்டுறவு மாதிரி ஹாப்மன் துரையவர்களுடைய வியாபார சங்கம் ஒன்றே. அதுவும் இன்னும் ரிஜிஸ்டர் ஆகவில்லை. சோட்டா நாகபூர் ஆரண்யவாசிகளை வேலைப் பழக்கமுள்ளவர்களாயும், சொந்தப்பொறுப்பு உள்ளவர்களாயும் செய்வதே பாதிரி ஹாப்மன் துரையின் கருத்து. நாணயச் சங்கம் மஹா ஜனங்களை விட்டொழிக்கவும், வியாபாரச் சங்கம் சாமான்களை கலபமாய் விற்கு மிடத்திலிருந்து அடையவும் அதற்குக் கொடுக்கவும் ஏற்படுத்தப்பட்டன. ஏற்பாடு முழுவதும் ஒன்று சேர்ந்தது; நாணயச் சங்கத்தின் மெம்பர்தான் வியாபாரச் சங்கத்தின் மெம்பராய் இருக்கலாம். ராஞ்சியில் பெரியதோர் ஸ்டோரும் அநேகபிரவுகளும் இருக்கின்றன. பாதிரி ஹாப்மன் துரைதான் எல்லாவற்றையும் நிர்வகிக்கிறார்; இப்பொழுது நடந்தேறி இருப்பதிலிருந்து மிகவும் மேன்மைக்கு இடமுண்டு என்று புலப்படுகிறது.

## 1911—12 வருஷத்தில் அஸ்ஸாம் கூட்டுறவு சங்கங்களின் வருஷாந்திர ரிபோர்ட்டிலிருந்து சுருக்கம்.

மெம்பர்களின் டிபாசிட்டுகள்:—அந்த வருஷத்தில் டிபாசிட்டுகள் 75,073 ரூபாய்களிலிருந்து 85,378 ரூபாய்களுக்கு விருத்தி அடைந்தது. அநேக சமயங்களில் இந்த டிபாசிட்டுகள் முழுதும் பொய்யாக இருக்கின்றன. கவர்ன்மெண்டிலிருந்து அபீஷ்டமான பிரகாரம் கடன்வாங்க வேண்டுமானால் மெம்பர்களின் டிபாஸிட்டுகளும் கடன் வேண்டிய அளவு இருப்பதாக காண்பிப்பது அவசியமாக இருக்கிறது. தேவையான தொகையை மகாஜனத்தாரிடமிருந்து அச்சமயத்திற்கு கடனாக வாங்கிக்கொண்டு, ஏற்படுத்துபவர் கண்மறைவாகப் போனதும் அத்தொகையை திருப்பிக் கொடுத்துவிடுவது என்ற வழக்கம் பிரபலித்திருக்கிறது; திருப்பிக் கொடுத்ததும் மெம்பர்களுக்குக் கடனாகக் கொடுத்ததாக பொய்யான கணக்கு எழுதிவைத்து விடுவார்கள். இத்தகைய மோசமிருப்பதால், சங்கம் ஏற்படுத்தும்போது அதிக டிபாஸிட்டுகளை மெம்பர்களிடமிருந்து வாங்கவேண்டும் என்பது நல்லது அல்ல என்று எனக்குத் தோன்றுகிறது.



எல்லா சங்கங்களிலும் டிபாஸிட்டுகளின்மேல் வட்டிவீதம் நூற்றுக்கு ஆறுதான்.

## 1911-12ஞல் ஆக்ரா ஔட் ஐக்யமாகாணங்களின் கூட்டுறவு சங்கங்களின் வருஷாந்திர ரிப்போர்ட்டிலிருந்து சுருக்கம்.

நெசவுகாரர்களுக்கு சிறிய அர்பன் நாணயச்சங்கங்கள்:—டந்தாவிலுள்ள நெசவுகாரர்களின் சங்கங்கள் செழித்து விளங்குகின்றன. சென்றவருஷம் 17 சங்கங்களும், 385 மெம்பர்களும் அதிலிருந்து இவ்வருஷத்தில் 20 சங்கங்களும், 541 மெம்பர்களும் ஆய்விட்டது. முதலும் விருத்தியடைந்து இருக்கிறது. எல்லாக் காரியங்களுக்கும் கடன் கொடுக்கப்பட்டாலும், நூல் வாங்கவும் துணி வியாபாரத்திற்குமே அதிகமாக பணம் செலவிடப்பட்டிருக்கிறது. டந்தாவில் சங்கம் முன்னுக்கு வருவதன் கீர்த்தி செண்ட்ரல் பாங்கின் சம்பள மில்லாத மானேஜர் ஹபிஸ்டின் மகமத் அவர்களுக்கே போகிறது. அவர் நல்ல அபிப்பிராயங்களும், செல்வாக்கும் உள்ளவர். பட்டு நெசவுகாரர்களுக்காக காசியில் உள்ள சிறிய நாணயச்சங்கங்கள் நல்ல ஸ்திதியில் இருக்கின்றன. இனிமேல் மெம்பர்கள் சாமான்களை கடைத்தெருவிலாவது, மஹா ஜனங்களுக்காவது விற்கவேண்டியதில்லை. சிலர் அதிகத் தறிகள் போட்டிருக்கிறார்கள். சிலர் சாமான்வாங்கவும் விற்கவும் கூட்டுக்கடை வைத்திருக்கிறார்கள். கூட்டுறவு அபிப்பிராயங்கள் வேர் ஊன்றி இருக்கின்றன. நாணயச்சங்கங்கள் சாமான்கள் சேர்ந்து வாங்கும் சங்கங்களாகவும் வேலை முடிந்த சாமான்களை விற்கும் சங்கங்களாயும் சீக்கிரத்தில் விருத்தியடையுமென்று பூர்ண நம்பிக்கை இருக்கிறது.

### வியாபாரிகளுக்கு சிறிய அர்பன் நாணயச்சங்கங்கள்.

இந்த வகுப்பினர்களின் சங்கங்கள் நல்ல செழிமையாய் இருக்கின்றன, 41 சங்கங்களும், 941 மெம்பர்களுமுள்ள காசியே முதல்தரமானது. ராய் பார்லி சங்கங்களின் மெம்பர்கள் அதிகமாக ஆகியிருக்கிறார்கள். கடன் திருப்பிக் கொடுப்பதும் சரிவர நடந்து இருக்கிறது. பைலாபாட்டில் கூட்டுறவு மிகவும் நல்ல அபிவிருத்தி யடைந்திருக்கிறது. ஹார்டாய், லண்டின், ஜான்பூர் இவ்விடங்களில் கூட்டுறவு நல்ல வழியில் நடக்கிறது. அலகாபாத், லக்னோ இவ்விடங்களிலும் நன்றாயிருக்கிறது. லக்னோவில் முனிஷி அவைகள்

நன்றாய் வகித்து வருகிறார். அதற்கு அடுத்த அர்பன் சங்கங்களும் நன்றாய் காரியங்களை நடத்துகின்றன. அங்குள்ள சங்கங்களைப் போலுள்ள சங்கங்களில் சாதாரணமாக மெம்பர்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்று நிர்ணயிப்பது கஷ்டம். வேறு வேறு இடங்களில் அநேக வழிகளில் வேலை செய்வதால் நல்ல பழக்கம் உண்டாகிறது. ஒரு சங்கத்திற்கும் அதிக நஷ்டம் வரவில்லை.

சங்கங்களின்வகைகள்:—இந்த மாகாணத்துக்கு இஷ்டமான சங்கம் எவ்வகை என்று ப்ரீமான்டில் என்பவர் 1909–10 வருஷத்து ரிபோர்ட்டில் சொல்லி இருக்கிறார். கவர்ன்மெண்டார் அதை ஒப்புக்கொண்டார். அவருடைய எண்ணத்தைப் போலவே தான் என்னுடைய அபிப்பிராயமும் இருக்கிறது. நல்ல ரெய்பெய்சன் சங்கங்கள் பாடபூர் ஜில்லாவில் இருக்கின்றன. ஆனால் கூட்டுறவு அங்கே அபிவிருத்தி யடையவில்லை. மற்றெங்கேயும் புதுச்சங்கங்கள் எல்லாம் ப்ரீமான்டல் துரை சொன்னபடியே இருக்கின்றன.

புதுமாதிரி சங்கத்தில் எல்லாம் காரிய தரிசியையும், பஞ்சாயத்தார்களையும் பொறுத்தது. காரியதரிசி சம்பளம் கொடுத்து நியமனம் செய்யப்பட்டவரானாலும், படிப்பில்லாத மெம்பர்களுடைய சங்கங்களில் அவர் படித்தவரானதாலும் நல்ல ஜாதியிலுதித்தவரானதாலும் நல்ல மதிப்பு பெறுகிறார். அவரவர் உள்ளூரார். ஆனால் தன்னுடைய உறவினர்களையும் நண்பர்களையும் வேலைக்குக் கொண்டுவருவார். நியமனமாகும்போதே தேர்ந்த காரியதரிசிகளாகப்பார்த்து நியமித்து, அவர்களை நன்னெறியில் நடத்தி கட்டுக்குள் வைப்பது அவசியமாகிறது. திறமையற்ற காரியதரிசிகள் சிலர் இருப்பினும், அவர்களை அநேகமாகத் தள்ளிக்கொண்டே வருகிறார்கள். படிப்பு விருத்தியாக ஆக கணக்குவைத்துக்கொள்ளும் கஷ்டமும் நிவர்த்தியாய்விடும்.

பணம் பிரித்துக்கொடுப்பதும், வசூலித்தலும் பஞ்சாயத்தார்களுக்கு ஏற்பட்டிருப்பதால் அவர்களுக்கு சங்கத்திலோர் அதிகார முண்டாகிறது. அவர்களுக்குக் கஷ்டமும்இருக்கிறது. பணம்கொடுக்க மனமில்லாத மெம்பர்களிடமிருந்து சங்கத்திற்குக் கொடுக்கவேண்டியதை கேட்பதற்காக பஞ்சாயத்தார்கள் மிகுதியான பணத்தை வைத்துக்கொள்ளுகிறார்கள். அதுவும் திருப்திகரமான வேலையன்று. ஆகையால் கிராமத்தில் முதல்தரமானவர்கள் அந்த வேலைக்கு வருவதில்லை; தேர்ச்சியில்லாதவர் வருவதால் ஜில்லா பாங்கு அவரைத்தள்ளி திறமையுள்ளவரை நியமிக்கிறது. கிராமத்தில் ஒருவருக்கு ஒருவர் கண்ணியமாயும் உண்மையாயும் நடப்பார்கள் என்று நம்புகிறேன். கிராமச் சங்கங்களை அடிக்கடி மேல்விசாரணை செய்வது அவசியம்; ஏனெனில் கிராமச் சங்கத்தை நடத்துபவர்கள் ஜில்லாபாங்கை நடத்துபவர்களைப் போல் அவ்வளவு அறிந்தவர்களல்ல. இதை ஜில்லா பாங்குக்காரர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.



உற்பத்திச் சங்கங்கள்:—காசிபட்டு நெசவு சங்கத்தின் ஸ்திதி மாறவில்லை. சென்ற இலையுதிர்காலத்தில் சங்கத்தை நிறுத்த உத்தேசித்தார்கள்; அங்குள்ள சில தருக்கர்கள் ஒத்தாசைசெய்ய ஒப்புக்கொண்டார்கள். வியாபாரம் குறைந்தது. கடன்கள் ஒன்றும் அடைபடவில்லை. சங்கத்தின் முதல் வசூலாக கடன்களும் வியாபாரமின்றி சேர்ந்திருக்கும் ஸ்டாக்கும்தான். சென்ற வருஷம் நெசவுகார மெம்பர்களால் வியாபாரம் குறைதான். பின் சொல்லுகிறபடி சீர்திருத்தம் செய்தாலொழிய பயனில்லை.

(1) பட்டு வியாபாரம்செய்யும் பணமுள்ள மெம்பர்களைத் தள்ளவேண்டும் (2) சாமான்கள் வாங்க மெம்பர்களுக்குப் பணம்கொடுத்து நெய்த துணிகளை வாங்கிக்கொள்ள வேண்டும். (3) புதிய மாதிரியாக வேலைசெய்யவும் கணக்குவைக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

காசியில் தயிர்பால் செய்யும் சங்கம் நன்றாய் நடந்துவருகிறது. ஐந்து புதிய கடைகள் ஏற்பட்டிருக்கின்றன. பால் நன்றாய் இருக்கிறது. அதிக வியாபாரமும் ஆகிறது. வருஷத்தில் லாபமதிகமாயில்லை; ஏனெனில் தயிர் பால் செய்யுமிடத்திலிருந்து கடைக்குக் கொண்டுபோகும் செலவு அதிகமாக ஆகிறது. பால் மிகுதியாயிருப்பதால் கொஞ்சம் சிரமம் ஏற்படுகிறது. இந்த இரண்டிற்கும் வேறு ஏற்பாடு செய்யப்போகிறார்கள்.

ஜான்பூரிலுள்ள கோகட்டில் சக்கரை ஆலையை விருத்திசெய்ய ஒரு கூட்டுறவு சங்கம் ஏற்பட்டு ரிஜிஸ்டரும் ஆயிற்று. வேலையில் சில கஷ்டங்களால் சங்கம் இப்போது போய்விட்டது.

மேல் விசாரணை:—பெரிய ஸென்டால் சங்கங்கள் ஜாஸ்தியானதும், அவைகளில் வேலை அதிகரித்ததும், கணக்குகளை முழுவதும் பரிசோதனை செய்ய கூட்டுறவு இன்ஸ்பெக்டர்களுக்குக் கடினமாயிருக்கிறது. என்னைக் கேட்டுக்கொண்டு அநேக பாங்குகள் இந்த வருஷம் தகுதியானவர்களான வெளியிலுள்ள பரிசோதனைக்காரர்களைக்கொண்டு பரிசோதனை செய்யும்படி ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அப்படிப்பட்ட பரிசோதனைக்காரர்கள் குறைவு. சீக்கிரத்தில் அவர்கள் அதிகரிப்பார்கள். சிறிய சங்கங்களின் கணக்குகளை ஸென்டரல் சங்கங்களிலுள்ள தேர்ச்சியுள்ளவர்கள் பரிசோதனை செய்யவேணும் என்று ஏற்பட்டிருக்கிறது. இலாகா இன்ஸ்பெக்டர்களால் மேல் விசாரணை செய்யப்படுகிறது.

சிறிய சங்கங்களை நன்கு பரிசோதனைசெய்து, கூட்டுறவைக் கற்பிக்குமாறு ஜில்லா பாங்குகளும், ஸென்ட்ரல் பாங்குகளும் திறமையுள்ளவர்களை நியமிக்கின்றன ஆனால் இலாகா இன்ஸ்பெக்டர்களின் வேலை இதுபற்றி சுலபமாகவில்லை; ஏனெனில் உள்ளூர் வேலைக்காரர்களைத் தயார் செய்வதும், சமாளிப்பதும் அதிக கஷ்டமான வேலை. மேலும் இலாகா உத்தியோகஸ்தர்கள் உள்ளூர் கிராமச் சங்கங்களையும் அர்பன் சங்கங்களையும் எப்படி வேலை

நடக்கிறது என்று பார்க்கத்தான் வேண்டும். இவைகளை நடத்தும் உத்தியோகஸ்தர்களுடன் ஸௌஜன்யமாயிருப்பதற்கு பரிசோதனை செய்பவர்கள் மிகவும் சிறந்த புத்தியும், சாமர்த்தியமும் பொருந்தியவர்களாகவே இருக்க வேண்டுமென்பது அத்தியாவசியம்.

பர்மா ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

ஐக்கிய நாணய சங்கம் ஏற்பட்டிருக்கிற இடங்களில் ஆடுமாடுகள் இன்ஷியூர் செய்ய சங்கங்கள் அன்னியில் கிராம நாணயச் சங்கம் ஏற்படுத்தக் கூடாதென்று நினைக்கின்றேன். இன்ஷ்யூர் செய்யப்பட்ட ஆடுமாடுகள் கடன் வாங்குவதற்கு நல்ல ஜாமீனாவதால் வியாதிக்கெதிர்த்துப் படை எடுக்க ஜனங்களைத் திருப்பவேண்டுமென்ற எண்ணங்கொண்டு நான் இதைச் சொல்லுகிறேன். இம்மாதிரி நிபந்தனை செய்வது மனுதாரர்களில் குறைவுண்டாக்காது.

ஆடுமாடுகள் இன்ஷ்யூர் செய்யும் சங்கங்களும் ஐக்கிய நாணய சங்கம் போலவே விருத்திக்கு வரக்கூடியவை. கடன்வாங்கும் பணம் வியாதியால் இறந்துபோன பிராணிகளுக்கு பதிலாக வேறு வாங்குவதற்கே உபயோகப்படுகின்றதாகையால், வியாதியிலிருந்து பிராணிகளைக் காப்பாற்றுவது நலமென்று தோற்றுகின்றது; ஆகையால் இன்ஷ்யூர் செய்வது கடன் வாங்குவதை முன்னிடவேண்டும். மண்டலே ரிஜிஸ்ட்ராரும் மாங்பாயா அஸிஸ்டண்ட் ரிஜிஸ்ட்ராரும் இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

வேலை ஒழுங்காக நடக்கும்பொருட்டு ஒரு ஏற்பாடு செய்யப்படவேண்டும். துணைச்சங்கங்களின் மகாசபையோர் கூடவும், கடன் கொடுக்க வாங்க ஏற்பாடுசெய்யவும், ஜனவரி பிப்ரவரி மார்ச் மாதங்களும், எப்ரல் மே மாதங்கள் பரிசோதனைக்கும், ஜூன் ஜூலை மாதங்கள் கணக்கு ஏற்பாடு செய்யவும் மீதியிருக்கும் 5-மாதங்கள் புதிதாக சங்கங்கள் ஏற்பாடு செய்யவும் உபயோகப்படுத்தப் படுகின்றன.

துணைச்சங்கங்கள் ஒப்புக்கொள்ளும் சங்கங்களுக்கு, மாசூல் காலத்தில் திருப்பிக்கொடுக்கும்படியாகக் கடன் கொடுக்கலாம்; அவைகள் ஒவ்வொரு மெம்பரும் எவ்வளவு கடன் பெறலாம் என்று எழுதவேண்டியது; கடனதிகமிருக்குமிடத்தில் மெம்பர்களின் நிலத்தை சங்கத்திற்கு மாத்திக்கொள்ள வேண்டும். வெளிக்கடனை அடைக்க ஏற்பாடு செய்யப்படும். துணைச்சங்கத்தின் மகாசபை எவ்வளவு கடனளிக்கலாமென்று தீர்மானம்செய்யும்; திருப்பிக்கொடுக்கும் சங்கங்களே நேராக கடன் கேட்கும் சங்கத்திற்கு கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

ஒருவனுக்குக் கொடுக்கக்கூடிய பணத்தில் 5-இல் மூன்று பாகம் முன் கடன்களுக்கும், ஒருபாகம் மற்ற செலவிற்கும் மற்றொருபாகம் சமயங்களுக்காக மீந்தும் வைக்கப்படவேண்டும்.



ஆனால் எல்லாக் கடன்களும் ஒரே சமயத்தில் முதல் வருஷத்திலேயே தீர்த்துவைக்க முடியாது. குடித்தனக்காரர்கள் தாமாகவே தீர்த்துக்கொள்ள முடியும்; ஏனென்றால் அவர்களுக்கு சாகுபடிக்கு வேறு பணம் அகப்பட்டு விடுகிறது.

கடன்கள் இப்பொழுது மூன்றுவிதமாக இருக்கின்றன:—(1) சாகுபடி செலவிற்காக; இது மாசூல் காலத்தில் திருப்பிக்கொடுக்க வேண்டியது. (2) ஆடுமாடுகளாக; இது 3 வருஷத்தில் தவணைகளில் கட்டப்பட வேண்டியது. (3) நிலம் வாங்குவதற்கு, முன்கடன் தீர்க்க, முதலியவைகளுக்காக; இது 3 அல்லது 4 வருஷங்களில் தவணைகளில் கட்டப்படவேண்டியது.

இப்பொழுது 486 கிராம சங்கங்களுள்பட 43 துணைச்சங்கங்கள் 10 ஜில்லாகளிலிருக்கின்றன. இவைகளின் பண்டு ரூ. 5261. இதில் ரூ. 3417 செலவு செய்துவிட்டார்கள்.

அமாரபுர துணைச்சங்கத்தில் 57 நெசவாளிகளின் சங்கங்களிருக்கின்றன. இவர்கள் பயிர்ச் செலவும் செய்வதால் இச்சங்கங்களை கிராமச் சங்கங்களாகவே சேர்த்திருக்கிறது. மண்டலே கமிஷனர் லாண்டர்ஸ் துரையவர்கள் உதவிபெற்று, ப்ளை ஷட்டில் Fly Shultle என்னும் புதிய நெசவு யந்திரம் முதலியவை வைத்தும், இவைகளின் உபயோகத்தைக் கற்பிக்க ஓர் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியும் விருத்திசெய்து வருகிறார்கள். இவ்விஷயத்தில் இவர்கள் 700-ரூ. செலவுசெய்திருக்கிறார்கள்.

நிறுத்தப்பட்ட சங்கங்கள். 1908ஞ ஜனவரிமீ 3உ முதல் 35-சங்கங்கள் நிறுத்தப்பட்டன.

| | |
|---|---|
| கணக்கில்லாமல் பெருத்தல் ... ... ... ... | 6 |
| ஒருவரே நடத்தல் ... ... ... ... ... | 2 |
| யோக்கிதை யில்லாமை ... ... ... ... | 4 |
| பணக் குறைவு ... ... ... ... ... | 9 |
| கவன மின்மை ... ... ... ... ... | 3 |
| நிர்வாகக் குறைவு ... ... ... ... ... | 4 |
| பொறுப்பு பயம் ... ... ... ... ... | 2 |
| வேலை துவக்காதது ... ... ... ... ... | 2 |
| சாவ்காரியின் ஏற்பாடு ... ... ... ... | 1 |
| விருத்திக்கு இடமின்மை ... ... ... ... | 1 |

1911-12ஞ மைசூர் ஐக்கியநாணய சங்கங்களைப்பற்றி செய்த ரிபோர்ட்டின் சுருக்கம்.

13 ஸ்டோர்களிருக்கின்றன. இவைகள் நல்ல சாமான்களை சரியான விலைக்குக் கொடுப்பதால் மிக்க உபயோகமானவை. இவைகளின் அபிவிருத்தி அதிக

என்பது தான் என் அபிப்பிராயம். எவ்வளவு சங்கம் ஏற்படலாம் என்பது எவ்வளவு நிர்வாகம் செய்ய ஜனங்கள் அகப்படும் என்பதைப் பொருத்தது. ஊக்கத்துடன் தெரிந்து வேலை செய்பவர்கள் வேண்டும். இன்னும் இரண்டொரு விஷயங்களிலும் உள்ள தப்பு அபிப்பிராயத்தையும் தெளிவு படுத்துகிறேன். பரிசோதனைக்கும் மேல்விசாரணைக்கும் உத்தியோகஸ்தர்களல்லாதவர்கள் வேண்டுமென்று சொல்லப்படுகிறது.

கவர்ன்மெண்டாருக்கு இதில் சம்பந்தம் வேண்டுமென்றே எனக்கு தோற்றுகிறது. கவர்ன்மெண்டார் இந்த முறையை உதவவேண்டும். ஆனால் இவைகளின் நிர்வாகத்திற்காக ஒரு இலாகா ஏற்படக்கூடாது. இதற்கு அதிக உத்தியோகஸ்தர்களை நியமிக்கக்கூடாது. கவர்ன்மெண்டார் பணஉதவி அதிகமாய் செய்யவேண்டுமென்பது சிலர் அபிப்பிராயம். வியாபாரத்தொழில் முறைப்படி சங்கங்கள் நடத்தப்படாவிட்டால் நல்லவழியில் பிரபலப்படமாட்டா. கவர்ன்மெண்டாரானாலும்சரி, மற்றவர்கள் யாரானாலும் தர்மத்துக்கு ஒன்றும் செய்யக்கூடாது. சில விசேஷ சந்தர்ப்பங்களில் இம்மாதிரி உதவி ஒப்புக்கொள்ளத்தக்கதாய் இருக்கலாம்; அதைப்பற்றி நான் இப்போது பிரஸ்தாபிக்கவில்லை. பஞ்சம் வந்துவிட்டால் யார் என்ன செய்ய முடியும்? கவர்ன்மெண்டார் உதவத்தான்வேண்டும். நான் சொல்லியதெல்லாம் என்னுடைய சொந்த அபிப்பிராயந்தான். கவர்ன்மெண்டார் அபிப்பிராயம் என்று நினைக்கக்கூடாது.

# குறிப்புகள்.

———(:o:)———

கட்டிடச் சங்கங்களுக்கு வேண்டிய பணம்:—கட்டிடங்களை உதவ ஏற்படும் சங்கங்களுக்கு வேண்டிய பணம் நிலபாங்கிகளும், சேவிங்ஸ் பாங்கிகளும், இன்சுயூரன்ஸ் சங்கங்களும் கொடுக்கக்கூடும்.

குடித்தனக்காரர்களின் கூட்டத்தின் தீர்மானங்கள்:—(1) பார்சல்கள் போஸ்டு மூலமாய் அனுப்பவழி பண்ணுவது (2) தரைமார்க்கமாயும் தண்ணீர் மார்க்கமாயும் போய்வர சாதனங்களை விருத்திசெய்வது (3) பள்ளிக்கூடங்களில் வியவசாயத்தைப்பற்றி போதிப்பது (4) சரக்கு உற்பத்திசெய்வது (5) பொருக்குவிதை உபயோகப்படுத்த வேண்டுமென்று சட்டம் வேண்டும் (6) கிராமப் பள்ளிக்கூடங்களில் வீட்டு நிர்வாகத்தைப் பற்றியும் வியவசாயத்தைப் பற்றியும் போதிப்பது (7) விலையின்றி விதைகொடுப்பது பிழை என்பது.

இன்ஸ்பெக்டர்களுக்குக் கற்பிக்க ஏற்பாடு:—ஆஸ்திரியாவில் கூட்டுத்தொழில் சங்க இன்ஸ்பெக்டர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டது. பரீக்ஷை நடந்தது.

கிராம வாழ்க்கை சௌகரியப்பட்டிருக்கிறது:—போக்குவரத்துக்கு சாதனங்கள் அதிகப்பட்டிருக்கின்றன. மோட்டார் வண்டிகளும் கால்சக்கர வண்டிகளும் ஏற்பட்டு விட்டன. கிராமவாசிகளுக்குப் படிக்க இடம் உண்டாகிவிட்டது. கிராமங்களில் உபந்நியாசங்களும், டிராமாக்களும் பாட்டுக் கச்சேரிகளும் ஏற்பட்டுவிட்டன. கூட்டுறவால் ஜனங்களுக்குள் நட்பு அதிகப்படும்.

இப்போது அநேக இடங்களில் தோட்டங்களுக்கு மத்தியில் நகரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் கைத்தொழில் செய்ய, நகரங்களில் வசிப்பவர்களுக்கும், கிராமங்களின் சுகம்கிடைக்கும்.

# க டி த ங் க ள்.

———:(●):———

உத்திரமல்லூர் யூனியன் சூபர்வைசர் யூனியனுக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கம்:—

631-ெந. காவானூர் புதுச்சேரிச் சங்கம் மற்றச் சங்கங்கள் எல்லாவற்றிற்கும் ஓர் தக்க உபமானம்போல் ஆகிவிடும்போலும்:—

மாதம் ஒவ்வொரு மெம்பரும் இரண்டணைப்போட்டு ஒரு பள்ளிக்கூடம் நடத்துகின்றனர். தங்கள் மக்கள் இதில் படித்தே தீரவேண்டும். மெம்பர்கள் குழந்தைகளுக்கு வேறு சம்பளம் கிடையாது, மெம்பரல்லாதவர்கள் குழந்தைகள் மாதம் 4-அணா சம்பளம் கொடுக்கவேண்டும். இப்போது 20-பிள்ளைகள் படிக்கின்றனர். இளமைதாண்டியவர்கள்கூடப் படிக்க முயலுகின்றனர். உபாத்தியாயருக்கு மாதம் 5-ரூபாய் சம்பளம்.

இந்தச் சங்கத்திற்காகக் காரியதரிசி சொந்தப்பணம்போட்டு ஒரு கட்டிடம் கட்டுகிறார்.

கம்மாளம்பூண்டிச் சங்கமும் இப்படிப் படிப்புவிஷயமாய் தீர்மானித்து இருக்கிறது. இன்னும் ஒன்றும் செய்ய இல்லை.

காஞ்சீபுரம் ம-ா-ா-ஸ்ரீ இராமச்சந்திர சாஸ்திரி எழுதியது:—

நான் மதுராந்தகத்தில் சொல்லியது என்னவென்றால் சங்கங்கள் லாபம் முழுதையும் க்ஷேமநிதியில் சேர்த்துவிடுவது அவசியம் இல்லை. கெடுப்படி கடன் திருப்பிக் கொடுப்பவர்களுக்கு இந்தப் பணத்தைக்கொண்டு அவர்கள் கொடுத்த வட்டியில் ஒருபாகத்தை திருப்பிக்கொடுத்து விடலாம். இதுதான் கடன் வாங்குபவர்களுக்குச் சவுகரியத்தை உண்டுபண்ணும்.

———

# ச ர் க் கு ய் ல ர் க ள்.

———(:-:)———

ஜெனரல் 2120-ெந. 2-ம் 2226-ெந. 2-ம் (தேதி 26-7-12)

அபராத வட்டி கணக்கிடுவதைப்பற்றி நாம் கல்லியாணதுர்க்க சங்கங்களைப் பரிசோதனை செய்யும்போது யோஜித்தோம். வாங்கியுள்ள கடனில் தவணை தானப்போது கொடுபடவேண்டியதாய் இருந்தாலும் முழுத்தொகையின் மேல்தான் அபராதவட்டி கொடுக்கவேண்டும். சங்க உபவிதிகளிலேயே பின்வரும் நிபந்தனை ஏற்படுத்தலாம்:—கடன் கொடுக்கவேண்டிய கெடுக் கடந்து மூன்று மாதத்திற்குள் கொடுக்கவேண்டிய பாகத்தை வட்டியுடன் கொடுத்துவிட்டால் மறுதவணை கொடுக்கலாம்; இந்த மூன்று மாதத்திலும் கொடுக்காவிட்டால் கணக்கை முடித்து கடன் வசூல்செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். ரிஜிஸ்டர் நோட்டில் கொடுக்கவேண்டும். அதில் பயனில்லாவிட்டால் பணம் வசூல்செய்ய ஆரம்பித்து விடலாம். எல்லாச் சங்கங்களிலும் ஒரே மாதிரியாய் விதி ஏற்படவில்லை. சில சங்கங்கள் கெடு ஒருநாள்கூடத் தவற இடங்கொடுப்பதில்லை. இது சரியான வழிதான். இந்த நிபந்தனையை மாற்ற வேண்டுவதில்லை. சில சங்கங்கள் கெடுக்கடந்து எவ்வளவுகாலம் ஆனாலும் சும்மாயிருந்து அபராத வட்டியி[illegible]ல் பணம் வசூல் செய்கின்றன, இது பிழை. சில அபராதவட்டி வசூல் செய்கின்றன. இது மட்டும்போதாது, இப்போதுள்ள சங்கவிதிகளைப் பார்த்தால் கணக்குமுடித்து, நோட்டீஸ் கொடுத்து பின்பு மறுபடியும் வட்டியுள்பட முழுத்தொகையையும் கடன் கொடுக்கவேண்டும்; இது மறுகடன் என்பது. தவணை வசூல்பண்ணாமல் இருப்பது கூடாது, பஞ்சகாலத்தில் மறுகடன் கொடுத்தாலும், தவணைப் பணம் கட்டாயம் வசூல் செய்யப்பட வேண்டும்.

இந்தமாதிரி ஏதாவது தவணை வசூலாகாமல் இருப்பதெல்லாம் வெளிப்படும்படியாய் ஒரு கடன் ரிஜிஸ்தர் ஒவ்வொரு சங்கமும் வைக்கவேண்டும். அதன் பாரம் மறுபக்கத்தில் இருக்கிறது.

———

நெம்பர். பெயர். சொத்து.

எடுத்துள்ள பங்குகள். வாங்கக்கூடிய கடன் ரூபா. ஜாமீன் நிற்கக்கூடிய தொகை.

| நேராய் வாங்கிய கடன். | | | | | | | ஜாமீன் நின்றிருக்கும் தொகை. | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி. | கடன் வாங்கியது. | | கடன் திருப்பிக் கொடுத்தது. | | பாக்கி. | இனிஷியல் | தேதி. | கடன் வாங்கியது. | | திருப்பிக் கொடுத்தது. | | | |
| | நெ. | தொகை. | நெ. | தொகை. | | | | நெ. | தொகை. | நெ. | தொகை | பாக்கி. | இனிஷியல். |
| | | | | | | | | | | | | | |

# இந்தியா.

## ஐக்கிய நாணயச் சங்கங்கள் 1911—12 (ராஜதானிவாருக.)

### சங்கங்கள் நம்பரும் மெம்பர்கள் தொகையும்.

| ராஜதானி. | | ஸென்ட்ரல். | | நகரச் சங்கம். | | கிராமச் சங்கம். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | 4 | | 5 | |
| | | சங்கங்கள். | மெம்பர்ஸ். | சங்கங்கள். | மெம்பர்ஸ். | சங்கங்கள். | மெம்பர்ஸ் | சங்கங்கள். | மெம்பர்ஸ். |
| சென்னை ராஜதானி | ... | 9 | 643 | 47 | 13527 | 916 | 51986 | 972 | 66156 |
| பம்பாய் | ... | 9 | 3611 | 75 | 6561 | 284 | 19247 | 868 | 29419 |
| பங்காளம் | ... | 7 | 236 | 61 | 9557 | 875 | 28776 | 943 | 38569 |
| ஐக்கிய மாகாணம் | ... | 31 | 2329 | 174 | 28459 | 1741 | 68981 | 1946 | 99769 |
| பஞ்சாப் | ... | 26 | 1274 | 26 | 2317 | 1717 | 89758 | 1769 | 93169 |
| பர்மா | ... | 3 | 1129 | 37 | 2150 | 691 | 16821 | 731 | 26100 |
| பிகார் ஒரிசா | ... | 8 | 414 | 39 | 1725 | 491 | 25482 | 538 | 27621 |
| அசாம் | ... | 1 | 74 | 16 | 1829 | 125 | 7855 | 142 | 9758 |
| சென்ட்ரல் பிராவின் சஸ் | ... | 25 | 1468 | 20 | 1152 | 540 | 9516 | 585 | 12136 |
| கூர்க் | ... | ... | ... | ... | ... | 22 | 2179 | 22 | 2179 |
| ஆஜ்மீர் | ... | 1 | 183 | ... | ... | 160 | 4259 | 161 | 4442 |
| மொத்தம். | ... | 120 | 11361 | 495 | 67097 | 7562 | 324860 | 8177 | 403318 |

மூலதனம்.

| ராஜதானி. | வெளிக் கடன். | சங்கங்களில் கடன். | பங்குத் தொகை. | மெம்பர் டிபாசிட்டு. | ராஜாங்கப் பணம். | க்ஷேம நிதி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சென்னைராஜதானி ... | 2041308 | 3033192 | 751723 | 1601486 | 36030 | 48320 | 7512058 |
| பம்பாய் ... | 88406 | 628975 | 687017 | 1452616 | 257439 | 86163 | 3200616 |
| பங்காளம் ... | 628200 | 717036 | 363163 | 536977 | 196942 | 160660 | 2602978 |
| ஐக்கிய மாகாணம் ... | 2662850 | 2447399 | 716623 | 607299 | 73493 | 308647 | 6816239 |
| பஞ்சாப் ... | 1411328 | 1984591 | 1698714 | 1672373 | 73976 | 149774 | 6990756 |
| பர்மா ... | 1308774 | 1310443 | 517342 | 60941 | 228979 | 95161 | 3521640 |
| பீஹார் ஒரிசா ... | 409548 | 169300 | 83404 | 148616 | 11254 | 64407 | 886529 |
| அசாம் ... | 146794 | 51846 | 68307 | 138992 | 50071 | 32407 | 488417 |
| சென்ட்ரல் பிராவின்ஸஸ் | 92219 | 513875 | 283028 | 130325 | 2300 | 34484 | 1056231 |
| கூர்க் ... | ... | ... | 31411 | 28635 | 4179 | 12202 | 76427 |
| ஆஜ்மீர் ... | 50350 | 184877 | 57305 | 129510 | ... | 229 | 422271 |
| மொத்தம் ... | 8839777 | 11041533 | 5258037 | 6507698 | 934663 | 992454 | 33574162 |

# மதராஸ் புல்லடின் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் IV.] 1913-ம் வருஷம் மார்ச்சுமீ [இலக்கம் 3.

## தஞ்சாவூர் ஜில்லாவில் கூட்டுத்தொழில்.

**Co-operation in the Tanjore District.**

———(:o:)———

தஞ்சாவூர் ஜில்லாவில் அநேக விஷயங்களில் பிரசித்திபெற்ற ஸ்தலமாகிய கும்பகோணம் சமீபகாலம் வரையில் கூட்டுத்தொழில் விஷய சம்பந்தமான ஊக்கத்தை மாத்திரம் காண்பிக்கவேயில்லை; ஆனால் இப்போது அநேக காரியங்களுக்காகக் கூட்டு முறை சம்பந்தமான சங்கங்களை ஸ்தாபிக்கத் தகுந்த பிரயத்தனம் செய்து கொண்டு வரப்படுகிறது என்று காணப்படுகிறது.

I. உள்ளூரிலுள்ள விவசாயச் சங்கத்தின் ஆதரவில் கொஞ்ச காலத்திற்கு முன் தான், 1912 ம் வருஷத்து இரண்டாவது ஆக்டின்படி ஒரு கூட்டுறவு விவசாயச் சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. அச்சங்கத்தின் நடவடிக்கையைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது; ஆனால் அடுத்த புல்லடினில் அதைப்பற்றி விஸ்தரித்து எழுதலாமென்று நம்புகிறேன்.

II. சென்ற பிப்ரவரி மாதம் 8-ந்தேதி தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கி லிமிடெட் என்னும் பாங்கியானது 1912 ம் வருஷத்து இந்திய இரண்டாவது ஆக்டின்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு வேலை துவக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதின் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஆபீசு கும்பகோணத்திலிருக்கிறது. அதின் நடவடிக்கைகள் தஞ்சை ஜில்லா முழுமையும் பரவியிருக்கலாம். அந்த பாங்கியின் முதல் தொகையின் மொத்தம் ஒரு லக்ஷம் ரூபாய். அது 100 ரூபாய் வீதமுள்ளதான 1000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இப்பாங்கியின் நிபந்தனை விதிகளை ஆராயுமிடத்து இது மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் விதிகளைச் சார்பாக உடைத்தா யிருக்கிறதாக காண்கிறது; ஆனால் இவ்விரண்டிற்கும் சில முக்கிய விஷயங்களில் வித்யாசங்களிருக்கின்றன. அவையாவன:—

(i) மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியில் கடன் வாங்குகிற ஸொஸைட்டிகளை மெம்பர்களாகச் சேர்க்க இடமில்லை, ஆனால் தஞ்சை டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்யிகில் 1000 பங்குகளில் 500 பங்குகள் கோவாபரேடிவ் ஸொஸைட்டிகளுக்காகவென்று குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

(ii) தஞ்சை பாங்கியில் பங்குகளை திரும்ப வாபஸ் பெறவாவது மாற்றவாவது செய்யலாம்; ஆனால் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியில் பங்குகளை மாற்ற மாத்திரம் கூடும்.

இவ்விரண்டு விஷயங்களும் மிகவும் கவனிக்கத் தக்கவைகள். வட்டி வீதம் டிபாஸிட்டுகளுக்கு வருஷத்திற்கு நூற்றுக்கு 6 வீதத்திற்கு மேலும் பாங்கியிலிருந்து கடன் வாங்குகிற தொகைக்கு வருஷத்திற்கு நூற்றுக்கு 7½ வீதத்திற்கு மேலும் போகக்கூடாதென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது; பங்குகளெல்லாம் வெகுவாய் எடுத்துக்கொண்டு விடப்பட்டதாகக் காணப்படுகிறது; ஜில்லாவின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் பங்குகளுக்காக அநேக அப்ளிகேஷன்கள் வந்துகொண்டே யிருக்கின்றன. இப்படிப் பங்குகளை வாங்க முன் வருதல் எப்போதும் நன்மைக் கறிகுறியாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மிஸ்டர் H. W. Wolf (உல்ப்) சொல்லியிருக்கிறபடி "ஏராளமான ரொக்கப் பணத்தை உடைத்தாயிருத்தலாவது, ஏராளமான லாபத்தைச் சம்பாதித்தலாவது விவசாய நாணயச் சங்கங்களின் முக்கிய நோக்கங்களாகமாட்டா. லாபத்திற்காக வியாபாரம் செய்தல் அவற்றின் தொழிலல்ல. அவற்றின் முதற்கடமையென்னவென்றால் அபாயங்களை விலக்குவதும் தங்களுடைய சாமான்களின் விலையை அதிகப்படுத்தாமலு மிருப்பதுதான்; ஏற்கனவே மார்க்கெட்டில் கிடைக்கக்கூடிய முதல் பணத்தை தற்காலத்தில் பெறமுடியாம லிருப்பவர்களுக்கு உபயோகமாகும்படி செய்தலும், எவ்வளவு சுலபமான வட்டிக்குப் பெறமுடியுமோ அவ்வளவு சுலபவட்டி வீதத்திற்குப் பெறும்படி செய்வதும் அவற்றின் முக்கிய நோக்கம்."

இப்பாங்கியை விருத்தி செய்வதற்காக இதின் டைரக்டர்களாகக் குறிப்பிட்டிருக்கிற பெயர்களை நோக்கும்போதே இப்பாங்கி யாதொரு குற்றமுமில்லாமல் நடைபெறு மென்பதற்குச் சந்தேகமே யில்லை.

மெம்பர்களைச் சேர்க்கும்போது நாம் முக்கியமாய் மனதில் வைத்துக் கொள்ளவேண்டியதென்னவென்றால், நமக்குப் பணம் வேண்டியதில்லை,



செக்யூரிடிதான் வேண்டுமென்பதுதான். மேலும் பாங்கியின் க்ஷேமத்தைக் கோறி அதை முன்னுக்குக் கொண்டுவருகிற தகுந்த பேர்வழிகளும் வேண்டும். ஸர் பிரடரிக் நிகல்ஸன் சொல்லும் வண்ணம் ரெய்பீஸன் முறையே அநுசரிக்கவேண்டும்.

III. 1911—1912-ம் ஷத்து ரிஜிஸ்ட்ரார் ரிபோர்ட்டில் திருவாதி சங்கத்தைப்போல தஞ்சை எலிமெண்டரி உபாத்திமார்களின் சங்கமென்று ஒன்று ஏற்பட்டிருக்கிறதாகக் காணப்படுகிறது. இம்மாதிரியாகவே சொற்ப காலத்திற்குள் உபாத்திமார்களின் சங்கங்கள் அநேகம் ஸ்தாபிக்கப்படுமென்று ரிஜிஸ்ட்ராரவர்கள் நம்புகிறார்.

IV. திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் ஸொஸைடியைப் போன்ற ஒரு பிரிவினைச் சங்கத்தை ஏற்படுத்த, கும்பகோணத்தில் சில கனவான்கள் ஆலோஜித்துக் கொண்டிருக்கிறார்கள். அதின் நிபந்தனை விதிகளின் ட்ராப்ட் ரிஜிஸ்ட்ராரவர்களின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

டி. கே. ஹனுமந்தராவ்.

---

# ஒரு கோவாபரேடிவ் ஆர்கானிஸேஷன் ஸொஸைட்டி ஏற்படுத்தவேணுமென்ற ஒரு வேண்டுகோள்.

## A plea for a Co-operative Organisation Society.

---

தேசத்திற்கு நன்மை பயக்கத்தக்க முறைகளெல்லா வற்றுக்குள்ளும் மிகச் சிறந்தது ஐக்கிய இயக்கம். இம்முறை வியாபிக்கத்தக்கதும் நெடுநாள் நிலைநிற்கும்படியானதுமான அநேக நன்மைகளை அடங்கியதாயிருக்கிறது. இது ஜனங்களுக்கு அபிவிருத்தி உண்டாக்கும் மற்ற அநேக முறைகளுக்கு அஸ்திவாரமாக யிருக்கிறது. வாஸ்தவத்தில், கூட்டுமுறையால் அடைய முடியாதது ஒன்றுமில்லை. எல்லாப்பொது இயக்கங்களையும் வெற்றிபெறச் செய்யவும் ஸ்திரமாக நிலைநாட்டவும் கூட்டுத்தொழிலின் கோட்பாடுகளை சந்தேகமறக்கற்றல் மிக அத்யாவசியமானது. ஆகையால் நாம் நமது காருண்ய கவர்ன்மென்டார் இம்முறையை ஆரம்பித்து இதற்காகப் பிரத்யேகமாய் ஒரு இலாகாவையும் ஏற்படுத்தி அபிவிருத்தி செய்து வருவதற்காக அவர்களுக்கு மிக்க வந்தனமளிக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம். மற்ற இடங்களில் ஜனங்களே இம்முறையை ஆரம்பித்து அபிவிருத்திக்குக் கொண்டுவர உழைக்கிறார்கள். இந்தியாவில் மாத்திரம் மற்ற காரியங்களுக்குள்ளபடி இவ்வியக்கத்திற்கும் கவர்ன்மெண்டார் தான் மூலகாரணம்.

இந்த ஐக்கிய இயக்கத்தின் எண்ணங்களைக் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு எடுத்துரைத்து இம்முறையைப் பரவச்செய்வது எந்த கவர்ன்மெண்டார்க்கும் மிகக் கடினமான காரியம்தான். தற்காலத்திலுள்ள சொஸைட்டிகளின் விவகாரங்களை மேல்பார்க்ககூட இப்போது இவ்விலாகாவிலுள்ள சிப்பந்திகள் (வேண்டும் அளவு இல்லை. சொஸைட்டிகளும் அவற்றின் விவகாரங்களும் வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது. சொஸைட்டிகளில் ஜனங்களுக்கு நம்பிக்கையுண்டாகவேண்டுமானால் அப்போதைக்கப்போது சங்கங்களின் கணக்குகளைப் பரிசோதனைசெய்ய வேண்டியது மிக்க அவசியமானது. இது கவர்ன்மெண்டாரால் வேண்டியபோது செய்யமுடியாது. கணக்குப்பரிசோதனையோடு மேல்விசாரணையும் ஆலோசனையும் முக்கியமாயிருக்கின்றன. இப்போது வெளியாயிருக்கிற ரிஜிஸ்ட்ராரவர்களின் ரிபோர்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற குறைகள் யாவற்றையும் அடிக்கடி கணக்குப் பரிசோதனையாலும் சமயோசித உபதேசத்தாலும் விலக்கியிருக்கலாம். இந்த இயக்கத்தை பரவச்செய்யத் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்வது எல்லாவற்றிலும் முக்கியம். தற்காலத்தில் இம்முறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கௌரவத்திற்காக வேலைசெய்யும் கனவான்கள் மிகக் கொஞ்சம். மேலும் அவர்களுடைய முயற்சி தனித்தனியாயும், ஒன்று சேராமலுமிருப்பதால் அவற்றின் பலன்கள் திருப்திகரமாயில்லை. நமது ரிஜிஸ்ட்ரார் அவர்கள் சமீபத்தில் சைதாபேட்டை உபாத்தியாயர் காலேஜில் உபந்நியாசம் செய்தபடி "கூட்டுத்தொழில் எந்த தேசத்திலேனும் தழைத்தோங்க வேண்டுமென்றால் அது ஜனங்களைப்பொருத்த காரியமாயிருக்கவேண்டும். ஆகையால்தான் இந்தியா கவர்ன்மெண்டார் கூட்டுமுறை நாணயச்சங்கங்களின் விஷயங்களில் தாங்கள் குறுக்கிடுவதைப்பற்றி வெகு ஜாக்கிரதையோடு சில கட்டுப்பாடு பண்ணியிருக்கிறார்கள். இந்த இயக்கம் மிகவும் செழித்த பொதுச் சங்கமாக வளரவேண்டுமானால் இந்தியாவும் ஐரோப்பாவை உதாரணமாகக்கொண்டு ஜனங்களின் முயற்சியாலேயே கூட்டுத்தொழில் சங்கங்களை நிலைநிறுத்தி இரக்ஷித்து வரவேண்டும்." ஆகையால் நாம் தற்காலத்தில் விரும்புவது என்னவென்றால் கூட்டுமுறையின் சித்தாந்தங்களை பிறர்க்கு உபந்நியாசம் செய்து ஒவ்வொரு வீட்டுக்கும் எட்டும்படியாய் அதை எல்லா ஜனங்களிடத்தும் பரவச் செய்யும்படியான சாமார்த்தியமுள்ள போதகர்கள்வேண்டும். வாஸ்தவத்தில் ஊக்கமுடையவர்களுக்கும், சுவதேசாபிமானிகளுக்கும் இவ்வழியில் வேலைசெய்யவேண்டிய இடமிருக்கிறது. இம்மார்க்கத்தில் வேலைசெய்வதற்காக ஒருகோவாபரேடிவ் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி தேவையென்பதைப்பற்றி மதுரை வாசியாகிய மிஸ்டர் கே. ராமஸ்வாமிஐயர் வாசித்த திறமையுள்ள வியாசம் மிக்க மெச்சத்தக்கது. அதை வாசிப்பது அவசியம். இந்த சூசனையை மேற்கொண்டு மதராஸ் ப்ராவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் என்று ஒரு சங்கத்தை ரிஜிஸ்டர் செய்வதற்காக ராஜதானியின் எல்லாப் பக்கங்களிலுமிருந்து பிரதிநிதிகளாயிருக்கும் அநேக கனவான்கள் ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு ஒரு மனு போட்டிருக்கிறார்கள். இதின் முக்கிய நோக்கமென்னவென்றால், இக்கூட்டு முறையென்ற மதத்தை போதித்து வியாபிக்கச் செய்தல். நாளடைவில் கூட்டுத்தொழிலில் இலாகாவுக்கு பரிசோதனை, இன்ஸ்பெக்ஷன், மேல் விசாரணை முதலிய விஷயங்களில் உபகாரமுள்ளதாயிருக்கும். ஆனாலும் சர்க்கார் உத்தியோகஸ்தியில்லாத இந்த கர்த்தவ்யத்தோடு ரிஜிஸ்ட்ராரவர்கள் குறிப்பிட்ட மாற்றப்படாதகனிஷ்டத்தை (Irreducible minimum) காப்பாற்றி வரவேண்டுமென்பது அத்யாவசியம். ஏனென்றால் சர்க்காருடைய மேல் அதிகாரமும் உதவியும் ரத்துசெய்யப்பட்டால் ஜனங்களுக்கு சங்கங்களிடத்து மிக்க சமுசயமுண்டாகி இம்முறை விரைவில் வளரக் காரணமாயிருந்த சக்தியும் செல்வாக்கும் அடியோடு குன்றிப்போய்விடும்.



எம். சிவராவ்.

———:(o):———

# புதுப்பிக்கப்பட்ட கடன்கள்,

## Re-Loans

———(-)———

கூட்டுமுறை அப்பியாசத்தில் உண்டான தீமைகளுக்குள் திரும்பக் கடன் பெறுதல் என்பது எல்லாவற்றைக் காட்டிலும் நிச்சந்தேகமாய் மிகக் கேடுள்ளது. இக்கெடுதி ஒரு சங்கத்தின் பிற்கால நிலைமையில் உண்டாகிறது. அதினால் தான், நான் சென்ற ஐக்கிய மாகாண மஹாநாட்டில் பழைய கடனைப் புதுப்பிப்பதின் கேடுகளைப்பற்றி ஒரு தீர்மானம் பிரேரேபனை செய்தபோது, சமீப காலம் வரைக்கும் 25 சங்கங்களை மாத்திரம் அடங்கியிருந்த தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வந்திருந்த இரண்டு கனவான்கள் எழுந்திருந்து தங்களுடைய ஜில்லாவானது அக்கேடினின்றும் விடுபட்டிருக்கிறது என்று மகிழ்ந்து கொண்டார்கள்.

கான்பிரன்ஸில் என்னுடைய பிரசங்கத்தின் அவதாரிகையின்படி நம்முடைய விவேகமுள்ள நாட்டுக் கூட்டுத்தொழிலாளர்களுக்குக் கூட தங்களுடைய சங்கங்களின் சட்டங்களின் பலஹீனம் எங்கிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள கொஞ்சகாலமாகிறது. பழைய ஜில்லாக்கள் எல்லாவற்றிலும் இக்குறை யிருக்கிறது. இத்தீமையை ஆண்மையோடு அடக்காவிட்டால் அது அம்முறையின் உயிரையே நிர்மூலமாக்கி விடும்.

முதலாவது திரும்பக்கடன் பெறுதல் மிச்சம்பிடிக்கிற அப்பியாசத்தை ரத்துசெய்கிறது. இத்தேசத்தில் மாமூலாய் கடனடைக்கத் தேவைக்கும் காலம் 5 வருஷம். கடன் தொகை அதிகமாயிருக்கும்போதும், அதிகக்காலம் நிலத்தில் செலவு செய்திருக்கும்போதும் இக்கெடுதி பெரிதில்லை போலும். ஜெர்மனி

முதலிய மற்ற மேல்நாடுகளில் இப்பேர்ப்பட்ட கடன்களின் தவணை இன்னும் அதிகமாயிருக்கிறது. ஆகையால், வாஸ்தவமாய் விவசாயத்திற்குரிய கடன்களின் மொத்தத் தவணைக்காலத்தை இன்னும் அதிகப்படுத்த ரிஜிஸ்ட்ராரையும் கவர்ண்மெண்டாரையும் கேட்டுக்கொள்ளலாம். ஆனால் 5 வருஷ காலத்திற்கு அதிகமாக நடந்துவருகிற சிற்சில சங்கங்களில் முன்வைத்த ஈடு சொத்தின் பேரிலேயே அளவான சிறிய தொகைகளாய் புதுக்கடன்கள் கொடுக்கப்படுகின்றனவென்று நான் அறிகிறேன். இதினால் என்ன ஆகிறதென்றால், சங்கத்தின் சட்டப்பிரகாரம் கடனை அடைக்கக் கொடுக்கப்பட்டுள்ள 5 வருஷகாலத்தைவிட வாஸ்தவமாய் அதிகமாகிறது. ஆனால்கடன்தொகையானது தப்பானவழியில் பிரயோகிக்கப்படாமலும், கடன் வாங்குகிற மெம்பர் உண்மையாய் மிதச்சிலவுசெய்து கடன் தொகையைக் குறைத்துக்கொண்டு வருகிறானென்று சங்கத்தின் கார்ய நிர்வாகிகள் பரிபூர்ணமாய் நம்பினால், ஸ்வயமாய் நான்—சங்கத்தின் சட்டங்களும் ஆக்டுகளும் திருத்தப்படும்வரை—அப்பேர்ப்பட்ட உபாய தந்திரத்தை கண்டுங் காணாததுமாயிருப்பேன். ஆனால், அநேக சங்கங்கள் மொத்தம் மொத்தமாய் கடன்களைப் புதுப்பிக்கும் வழக்கத்தை அப்பியசித்துக்கொண்டு வருகின்றன. தண்டனைக்குள்ளாவது தான் அப்பேர்ப்பட்ட சங்கங்களின் யோக்கியதை. உதாரணமாக, ஒரு மெம்பர் 100 ரூபாய் கடன்வாங்குவதாக் வைத்துக்கொள்வோம். வருஷக் கடைசியில் அதே சங்கத்திலிருந்து தன்னுடைய மனைவி அல்லது தன் குடும்பத்தின் பங்காளியின் பெயர்சொல்லி, பேருக்குத் திருப்பிக்கொடுத்த நாளிலேயாவது, அதற்குச் சிலநாள் முந்தியாவது பிந்தியாவது 20 ரூபாய் கடன்வாங்கி முன் கடனுக்குச் செலுத்திவிட்டு, இன்னொருவருஷம் அதிகவாயிதா பெறுகிறான். இப்படிச் செய்வதினால் சங்கத்தின் சட்டப்பிரகாரம் கொடுக்கப்பட்ட வாயிதாவாகிய 5 வது வருஷக் கடைசியில் அவன் முதலில் எவ்வளவு கடன் வாங்கினானோ அத்தொகைக்குக் கடனாளியாக யிருப்பதோடு கூட ஒரு தீமையையும் அடைகிறான். அதெப்படி யென்றால் ஆதிக்கடன் வாஸ்தவமாயிருக்க, செக்ரிடரி அல்லது பிரசிடெண்டின் உதவியால் அநேக பொய் விவஹாரங்கள் இப்போது செய்தவனாகிறான். இவ்வைந்து வருஷத்துக் கூட்டுத்தொழிலின் பயிர்ச்சியின் பலன் இவ்விதமாயிருந்தால், இச்சங்கங்கள் ஆரம்பித்திருக்க வேண்டியதேயில்லை. நான் வர்ணித்த இந்தக் கெடுதியானது என்னுடைய மானஸகல்பனை அல்லவென்பதை அந்த இலாகாவில் அநுபோகமுள்ள உத்தியோகஸ்தர்களால் ஸ்திரப்படுத்தக் கூடும். சமீபத்தில் என் நோட்டீசுக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு திருஷ்டாந்தம் இவ்விடத்தில் சொல்லத் தகுந்தது. எல்லாக் கூட்டுத் தொழிலினர் கூட்டத்திலும் மிக்க வாக்சாலத்தோடு பிரசிங்கிக்கிற பிரசிடெண்டு ஒருவர், தான் தன் சங்கத்தை ஸ்தாபிக்கும்போது ஏதோ ஒரு கடன் வாங்கினார். இப்போது நாலு வருஷ காலமாய், மிச்சம் பிடித்தல், கூட்டுறவு, சுய உதவி முதலிய அப்பியாசங்கள் செய்தும் அவர் அச்சங்கத்திற்கு முதல் வாங்கின



தொகையே கடன் கொடுக்கவேண்டியிருக்கிறது! அதே சங்கத்தின் பஞ்சாயத்து மெம்பரில் ஒருவர் தன் குடும்பத்திற் சேர்ந்தவர்களின் பேர்களின் மாற்றல் சேர்மானம் முதலிய தந்திரங்களால் 15000 ரூபாய் மொத்த விவஹாரமுள்ள அச்சங்கத்தினின்றும் 4000 ரூபாய் கடன் வாங்க யுக்திபண்ணியிருக்கிறார்!

இவ்விதமாக, திரும்பக்கடன் பெறுதல், கூட்டுத்தொழில் சங்கங்களின் முக்கிய சித்தாந்தமாகிய மிச்சம் பிடித்தலென்பதை அடியோடு தொலைப்பதோடுகூட ஜனங்களை அசத்தியக்காரர்களாயும் அயோக்கியர்களாகவும் ஆக்கிவிடுகிறது. மேலும் சங்கத்தின் பணம் நல்ல நாணயச் சங்கத்திலுள்ளபடி எளிதில் நகரக்கூடியதாயில்லாமலும், சங்கத்தின் பணமானது சில மெம்பர்களிடத்தில் மாத்திரம் அடைபட்டுப் போவதால், அப்பணத்தின் பலனை அடையாமல் போகிறார்கள்.

சுருக்கமாய், திரும்பக்கடன் பெறுதலின் அநேக கெடுதிகளுள் இவைதான் மிக முக்கியமானவை. அவற்றின் சிகிச்சையைப்பற்றி விவாதம்செய்ய இதுதகுந்த காலமாயிருக்கும். தற்கால நிலைமையினாலும், ரயத்துகளின் மூடத்தனத்தாலும், நாட்டுச் சங்கங்களின் நடவடிக்கைகளை நடத்த அக்கிராமங்களிலுள்ள சில படித்த நடு அல்லது மேல் வகுப்பினர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால் கிராமங்களில் ரயத்துகளுக்கு சங்கங்களை நடப்பிக்க வேண்டிய பயிற்சியும் விஷய ஞானமும் கிடையாது. இப்போது இவ்விரு வகுப்பினர்களின் அக்கறையும் வித்தியாசப் படுகிறபடியால், அநேக கெடுதிகள் உண்டாவது தான் இப்பேர்பட்ட காரிய நிலைமையின் பலன். மிகச் சாதாரணமான சங்கதி ஒன்று என்னவென்றால், யாருடைய நன்மைக்காக சங்கங்கள் ஏற்பட்டனவோ அவர்களை ஊமைகளாக்கிவிட்டு சில யுக்திக்காரர்கள் மட்டும் நன்மையை யடைகிறார்கள். இயல்பாய், நம்முடைய ரயத்துகள் இந்த மத்தியஸ்தர்களில்லாமல் தங்களுடைய காரியங்களை நடத்திக்கொள்ளப் போதுமான படிப்பை அடைய வெகு காலமாகும். கடன்களுக்கு வட்டியை உயர்த்துவது தான் நாம் செய்யக்கூடிய தகுந்த பரிஹாரமாக எனக்குத் தோன்றுகிறது. இப்படிச் செய்வதால் பெறக்கூடிய ரொக்கப்பணத்தை கிரஹிப்பது உபயோகமில்லாமல் போகும். ஆதியிலிருந்து நாம் தான் பணத்லதை வெகு நயப்படுத்தி விட்டோமென்று அநேகருடைய அபிப்பிராயம். நகரங்களில்கூட வருஷத்திற்கு நூற்றுக்கு 12 வீதம் வட்டி மிக மலிவு என்று கருதப்படுகிறது. சாதாரணமாய் ரயத்துகள் சாவுகாரிகளிடம் வாங்கும் கடன்களுக்கு 100 க்கு 30 வீதம் வட்டி கொடுக்கிறது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் வருஷத்திற்கு 100 க்கு 15 வீதம் வட்டியை ஒத்த வட்டி நம் சிறிய கிராமச்சங்கங்களுக்கு விலை யுயர்ந்ததாயிராது. ஆனால் திரும்பக்கடன் பெறுதல் என்னும் விஷயத்தை விட்டு மற்ற விஷயங்களுக்குப்போய் விட்டேனென்று பயப்படுகிறேன்.

சென்ற ரிபோர்ட்டில் ரிஜிஸ்ட்ராரால் சூக்ஷமமாய் காட்டப்பட்ட உத்தரவாத ரிஜிஸ்தர் (Liability Register) வழக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு முன், கீழே சுமாராய் வரையப்பட்டுள்ள ரிஜிஸ்தர் ஒவ்வொரு லொஸைட்டியும் வைத்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வதினால் பரிசோதனை உத்தியோகஸ்தர் ஒரே பார்வையில் புதுப்பித்த கடன்களெல்லாவற்றையும் பார்க்க உதவியாகுமென்று நினைக்கிறேன். இந்தமாதிரி ரிஜிஸ்தர்கள் சேலம் ஜில்லாவிலுள்ள அநேக சங்கங்களினால் வழக்கத்திற்கு ஏற்கனவே கொண்டுவரப் பட்டிருக்கின்றன.

### ...................ச்சங்கத்து உத்தரவாத ரிஜிஸ்தர்

1. மெம்பரின் தொடர்ச்சி நம்பர் ... ...
2. மெம்பரின் பெயர் ... ... ...
3. எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பங்குகளின் நம்பர் ...
4. சொத்து விவரம் (இவ்விடம் சொத்தின்பேரில் இருக்கிற கடன்களை யெல்லாம் எழுதவும்) வருஷந்தோறும் பிழைதிருத்த வேண்டியது.
5. மெம்பரின் பாகம் பிரிக்காத குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சங்கத்தில் மற்ற மெம்பர்களுமானவர்களின் பெயர்களும் பொது நம்பர்களும்.
   (a) ... ... ... ...
   (b) ... ... ... ...
   (c) ... ... ... ...
6. மெம்பர் மொத்தம் எவ்வளவு கடன் வாங்க லாயக்.
7. மற்றவர்களுக்காக மெம்பர் எவ்வளவு தொகைவரை ஜாமீனாயிருக்கலாம்.

கடன்கள் — திருப்பிக்கொடுத்த பணம்.

| தொடர்பு நெ. | தேதி. | ஜாமீன். | எதற்காக. | தொகை. | | | தேதி. | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | அ. | ப. | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | | | 6 | 7 |
| | | | | | | | | |



### ஷ்யூரிடிஷிப் ஸ்டேட்மெண்ட்.

| தேதி. | கடன் நெ. | யாருக்காக ஜாமீன். | பணத்தைத் திருப்பிக் கொடுத்த தேதி. | ஷரா. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | |

இது ஒரு வெகு சுமாரான பாவனை தான். இதை இன்னும் விஸ்தரிக்க வும் சீர்திருத்தவும் கூடும். இப்பேர்பட்ட ரிஜிஸ்தரை திருப்திகரமாய் வைத்துக்கொள்ளாத சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ரிஜிஸ்ட்ரார் சிபார்சு செய்யக்கூடாது. டிஸ்ட்ரிக்டு சங்கங்களும் சென்ட்ரல் சொஸைடிகளும் கணக்குப் புஸ்தகத்தை (Ledger) அடிக்கடி பரிசோதனை செய்வதை வற்புறுத்த வேண்டும்.

இத்தேசத்தில் கூட்டுத்தொழில் முறையின் பிற்காலத்தை உத்தேசித்து சங்கங்களைப் பரிபூர்ணமாய் சோதித்துப் பார்த்து அப்பேர்பட்ட கேடுகள் வராமலிருக்கத் தகுந்தமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது. இச்சிறிய விஷய தானத்தை, நான் சமீபத்தில் சிறந்த ராஜ தர்ம நிபுணரான ஒருவரோடு கூட்டுறவு விஷயத்தைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது அவரால் சொல்லப்பட்ட அநேக விஷயங்களைக் குறிப்பை எடுத்துச் சொல்லாமல், நான் முடிக்க முடியாது. "நம்மிடத்தில் குற்றமென்ன வென்றால், கொஞ்சகாலத்திற்குப் பிறகு முதலை மாத்திரம் அதிகரித்துக் கொண்டுபோகலாமென்றும், ஆலோசனை யென்பதை தள்ளியே விடலாமென்றும் எண்ணுகிறோம். ஆலோசனையைத் தள்ளிவிடலாமென்கிற காலம் வருமென்பதை ஊகிக்கச் சக்தியற்றவனாயிருக்கிறேன்".

பீ. ஆதிநாராயண செட்டியார்.

# கிராம நாணயச் சங்கங்களும் விவசாயக் கூட்டுத்தொழிலும்.

[மதுரை, ராமனாதபுரம் சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கியின் செக்ரிடெரி கே. ராமஸ்வாமி ஐயர் எழுதியது.]

சென்ட்ரல் அக்ரிகல்ச்சரல் கமிட்டியின் நடவடிக்கைகளையும், விவசாயச் சங்கங்களின் நடவடிக்கைகளையும் பற்றிய ரிபோர்ட்டை விமர்சிக்கும்போது, விவசாயச் சங்கங்கள் வாஸ்தவமாய் நன்மை பயக்கவேண்டுமாயிருந்தால் அவைகள் கிராம நாணயச் சங்கங்களோடு ஒத்து உழைக்கவேண்டுமென்று மதராஸ் கவர்ன்மெண்டார் சூசனை காட்டியிருக்கிறார்கள். இதைப் பற்றி திவான் பஹதூர் எம். ஆதிநாராயணய்யா ஏற்கனவே சமீபத்தில் நடந்த சென்னை ஐக்கிய நாணய மஹா நாட்டில் விஸ்தரித்துப் பேசியிருக்கிறார். பிரத்யேகமாய் விவசாயச் சங்கங்கள் ஏற்படுத்தி அதில் கிராமச் சங்கங்களின் மெம்பர்களை பங்கு எடுத்துக்கொள்ளும்படி செய்யவேணும். இவைகளை ஏற்படுத்துவது முதலில் கொஞ்சம் சிரமந்தான். மிகவும் புத்தி கூர்மையும் வியாபாரத்திறமையுமுள்ள மனிதர்கள் கிடைக்கவேண்டும். கிராமங்களில் கீழ்தரப்படிப்பு அதிகரிக்க அதிகரிக்க தகுந்த பேர்வழிகளும் கிடைப்பார்கள். கிராம நாணயச் சங்கங்களில் விவசாயக் கூட்டுமுறையைச் சேர்க்க சில உபாயங்கள் செய்யலாம். ஜாயிண்ட் லோன்கள் ஏற்படுத்தி ராஜ்ஜங்கள் ஒன்று சேர்ந்து லொஸைடியிலிருந்து பணம் கடன்வாங்கி எரு, விதை, விவசாயக் கருவிகள் முதலியவை மொத்தத்தில் வாங்கலாம். இது தான் சரியானவழி. இதனால் யாதொரு கஷ்டமும் நேராது. ஜாயிண்டுலோன் விவஹாரத்தைப பற்றி சில நிபந்தனை விதிகள் ஏற்படுத்தி அதின் பிரகாரம் வேலை நடப்பித்தல் நலமாயிருக்கும்.

ஒத்தக்கடை கிராம நாணயச் சங்கத்தாரில் சிலர் ஒற்றுமையாய் இவ்வருஷம் மதுரை முனிசிபாலிடியில் குப்பை டிப்போவை 7,820 ரூபாயிக்கு வாங்கியிருக்கிறார்கள். இத்தொகையில் காலிலொரு பங்குதான் இப்போது கொடுக்கவேண்டுவது; பாக்கியை மாதா மாதம் கொஞ்சம் கொஞ்சமாய் செலுத்தவேண்டியது. இந்த மெம்பர்கள் முதல் தவணை பணம் கட்டுவதற்காகவும் சில்லரைச் செலவுக்காகவும் 2000 ரூபாய் ஜாயிண்டுலோனுக்காக மனு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த டிப்போ மானேஜிங் கமிட்டியால் நியமிக்கப்பட்ட 2 மெம்பர்களால் நிர்வகிக்கப்படும். இவர்களுக்கு உதவியாய் கடன் வாங்கின பேர்கள் இதர மூன்று மெம்பர்களை நியமிப்பார்கள்.



இந்த டிப்போ எருவு இச்சங்கத்து மெம்பர்களுக்கு விற்கப்படும்; மீதியிருந்தால் அந்நியர்களுக்கு விற்கப்படும். கடனாக விற்பனை கிடையாது. கடைசியில் இதின் வரவு செலவு கணக்கு ஒரு ஆடிட்டரால் பரிசோதிக்கப்படும். வருஷக் கடைசியில் கிடைக்கும் லாபத்தில் கால் பங்கு கட்டட (Building) பண்டுக்கும் சேர்க்கப்படும்; மற்றொரு கால் பங்கு உதவிபுரியும் 3 மெம்பர்களுக்கு வெகுமதியாகக் கொடுக்கப்படும்; மீதத்தை எரு வாங்கின மெம்பர்களுக்கு அவர்களால் கொடுக்கப்பட்ட பங்குத் தொகைக்குச் சரியாய் பகிர்ந்து கொடுக்கப்படும். இதைப்போலவே கூட்டாய் வாங்க, எள்ளுப் புண்ணாக்கு சேகரித்தல், விவசாயக் கருவிகள் வாங்குதல் ஆகிய பிரயத்தனங்களிலேயும் பிரவேசிக்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறது.

விவசாய சம்பந்தமான யந்திரங்களை பொதுவில் வாங்க அடியிற்கண்ட நிபந்தனைகளை ஏற்படுத்தவேண்டுமென்று இச்சங்கத்தார் யோஜித்திருக்கிறார்கள்.

கரும்பாலை யந்திரம் வாங்குவதற்காக கூட்டாய் கடன் வாங்குபவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டியது. கடன் தொகை தீர வரையில் யந்திரமானது கூட்டுக்கடன் காரர்களுக்குப் பொதுச் சொத்தாயிருக்கவேண்டியது. அந்த யந்திரம், மெம்பர்களுக்கு நாளுக்கு இவ்வளவென்று வாடகைக்குக் கொடுக்கப்படும்; கடன் தொகையும் வட்டியும் கூட்டுக்கடன்காரர்கள் 5 வருஷங்களுக்குள் தீர்க்கும்படியான வீதம் வாடகைக்கு விடப்படும். ஐந்தாவது வருஷ ஆகேரில் யந்திரம் சங்கத்திற்குச் சொந்தமாகிவிடவேண்டும்: கடன் தொகையும் செலவும் போக மிச்சம் ஏதாவதிருந்தால் கூட்டுக் கடன் காரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும்.

மேலும், சமீபத்தில் ஊத்துள்ள சில நிலங்களை நாற்றங்கால்களுக்காக கூட்டுத் தொகைக்கு வாங்கி, நாற்றுகளுண்டாக்கி பெரியாறு ஜலம் வருமுன் நடவு செய்து மழை காலத்திற்கு முன் சாகுபடி செய்யவேண்டுமென்று இச்சங்கத்தார் எண்ணங் கொண்டிருக்கிறார்கள்.

# ஸர்க்யுலர்கள்.

## கடன்களும் அவற்றைத் திருப்பிக்கொடுத்தலும்

### ரிஜிஸ்ட்ரார் ஆபீசு ஸர்க்யுலர் 4987/12

*பெஜவாடா செக்ஷன், கோவாபரேடிவ் ஸொஸைடிகளின் அஸிஸ்டாண்டு ரிஜிஸ்த்ரார்* D. Dis. 715/1912, 9. 11. 1912.

அநேக சங்கங்கள் கடன் திரும்பக் கொடுப்பதற்குரிய தங்கள் நிபந்தனை விதிகளை வற்புறுத்துவதில் கண்டிப்பில்லாமலிருக்கிறதாகத் தெரிகிறது. இதினால் சில மெம்பர்களின் கடன்களை குறைக்க கூட்டுமுறை உபயோகமற்றதாய் விட்டது. மேலும் அநேக சங்கங்களில் ஒரு மெம்பர் தானே மொத்தம் எத்தொகை மட்டும் கடன் பெறலாமென்ற விஷயத்திலும், மற்றவர்களுக்காக எவ்வளவு மட்டும் ஜாமீனாக யிருக்கலாமென்ற விஷயத்திலுமுள்ள நிபந்தனைச் சட்டங்களை கவனிக்கிறதேயில்லை என்றும் காணப்படுகிறது. 5 வருஷங்களாயும் அதற்கு அதிகமாயும் நடந்தேறி வருகிற சில கூட்டுத் தொழில் சங்கங்களில் சில மெம்பர்கள் அவைகளினின்றும் விலக விரும்புவதாய் தெரியப்படுத்தி யிருக்கிறார்கள்.

2. ஒவ்வொரு சங்கமும் அபிவிருத்தி யடைந்து வருகிறதென்பதை திடப்படுத்த இன்ஸ்பெக்டர்கள் அடிக்கொருவிசை ஓடி சங்கத்தின் கணக்குகளை ஆலோசனையின்றி பரிசோதனை செய்வது போதாது. ஒவ்வொரு இடத்திலும் போதுமான நாள் தங்கியிருந்து சங்கங்களின் கணக்குகளை பூர்த்தியாய் சோதனை செய்யவேண்டும். எந்தெந்த விஷயங்களில் முக்கியமாய் சீர்திருத்தங்கள் செய்தால் மனோரத சிருஷ்டிக் கொப்பான நல்ல சங்கமாகலாமோ அப்பேர்ப்பட்ட முக்கிய விஷயங்களையெல்லாம் போதிக்க வேண்டும். அடியிற் குறித்த முக்கியமான விஷயங்களை இன்ஸ்பெக்டர்கள் கவனிக்க வேண்டும்:—

(1) ஸ்தாவர சொத்து ரிஜிஸ்டரானது நடைபெறும் பசலிக்கு திரும்ப எழுதியாயிற்றா வென்றும் ஒவ்வொரு மெம்பராலும் கையொப்ப மிடப்பட்டிருக்கிறதாவென்றும் விசாரித்து அறிந்து கொள்ளவேண்டும். உடனே அடியிற் கையொப்ப மிட்டிருக்கிறவருக்கு ஒரு நகல் அனுப்பவேண்டியது.



(2) ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு லையபிலிடி ரிஜிஸ்தர் (இதில் அடக்கம் செய்யப்பட்டுள்ள பாரத்தில்.) உடனே உண்டாக்கி அதில் நாளது தேதி வரை கணக்குகள் பதிவாயிருக்க வேண்டும். எந்த மெம்பராவது நிபந்தனை விதியில் இடங்கொடுக்கிறதைவிட அதிகமான தொகையை தான் சுதாவாக வாங்கியிருப்பதையும், அல்லது பிறருக்கு ஜாமீனாக மேற்சொன்ன விதியில் இடங்கொடுக்கிறதைவிட அதிகமான தொகைக்கிருப்பதையும் வியக்தமாய் சுட்டிக்காட்ட வேண்டும். இப்பேர்ப்பட்ட முறை கேடுகளை அந்த மெம்பர்களுக்கும் சங்கத்தார்க்கும் காண்பித்து அவற்றைப் பரிகாரம் செய்யக்கூடிய மார்க்கத்தைப் போதிக்கவேண்டும். சில பழைய சங்கங்களில் ஒரு நபர் மொத்தம் எத்தொகை வரையில் ஜாமீனாக இருக்கலாமென்பதை ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறதாகக் காணவில்லை. அது ஒரு மெம்பர் சுதாவாக எவ்வளவு வாங்கலாமோ அதைவிட இரண்டு மடங்காக யிருக்கலாமென்று தீர்மானிக்கலாம். எங்கெங்கே பொதுக்கூட்டத்தாரின் தீர்மானங்கள் அவசியமோ அவற்றைப் பெற்று சம்பந்தப்பட்ட நிபந்தனை விதியை சீர்திருத்தவேண்டும். ஒரு மெம்பர் சுதாவாக வாங்கியிருக்கும் கடன் அவனுடைய ஸ்தாவர சொத்துக்களின் நிகர விலையைவிட அரை மடங்கு அதிகமாயிருந்தாலும் சரி அல்லது சுதாவாக வாங்கியிருக்கும் கடன் தொகையும் மற்றவர்களுக்காக ஜாமீனாக நின்றிருக்கும் கடன் தொகையும் சேர்த்து அவனுடைய ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் மொத்த விலையைவிட அதிகமாயிருந்தாலும், பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்கள் இதனால் அடையக்கூடிய அபாயத்தை அச்சங்கத்தின் பொதுக் கூட்டத்தாருக்கு ஸ்பஷ்டமாய் எடுத்துரைக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட ரிஜிஸ்தரால் ஓரே பார்வையில் ஒவ்வொரு மெம்பரும் கடனைக் குறைத்துக் கொண்டு வருகிறார்களா என்பதை அறிந்து கொள்ளக்கூடும். மேலும் திருப்பிக்கொடுக்கும் முழு அல்லது பாகக் கடன் தொகையானது புதிய கடன்களால் பாதிக்கப்படுகிறதாவென்றும் அறியலாம். ஒரு மெம்பர் படிப்படியாய் கடனைக் குறைத்துக்கொண்டு வருவதாகக் காணப்படாவிட்டால் தன் சொத்தின் ஒரு பாகத்தை கிரயத்திற்கு விற்றுவிட்டு கடனை அடைத்துவிடலாமென்று அவனுக்கு புத்திமதி சொல்லவேண்டும். அப்பேர்ப்பட்ட மெம்பரால் உண்டாகும் அபாயத்தைப்பற்றி அச்சங்கத்தை எச்சரிக்கை செய்யவேண்டும். இன்ஸ்பெக்டர், சாதாரணமாக சங்கத்து ஒவ்வொரு மெம்பரோடும் விசேஷமாக சங்கத்துக்குக் கடன் கொடுக்கவேண்டிய மெம்பர்களோடும் கலந்து பேசவேண்டும். கடன் கொடுக்கவேண்டிய மெம்பர்களோடு கலந்து பேசுவதால்தான் தயார் செய்திருக்கிற லையபிலிடி ரிஜிஸ்டர் பிழையின்றி வைத்துக்கொள்ளக்கூடும். கடனில்லாத மற்ற மெம்பர்கள் பஞ்சாயத்தாரின் பட்சபாதத்தை எடுத்துரைக்கக்கூடும்.

(3) எல்லாக் கடன்களும் வாஸ்தவமாவென்றும் சரியான விஷயத்திற்கு வாங்கப்பட்டதாவென்பதையும், கடன் வாங்குகிறவர்களுக்காகவே உபயோகப்படுகிறதா வென்பதையும்பற்றி இன்ஸ்பெக்டர்கள் தாங்களே திருப்தியடையவேண்டும். சாதாரணமான மெம்பர்களும் முக்கியமாக பஞ்சாயத்து மெம்பர்களும் (மலிவான வட்டிக்குப் பணம் கிடைப்பதால்) கடன்களை வாங்கி தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறார்களா என்பதையும் இன்ஸ்பெக்டர்கள் பார்க்கவேண்டும்.

(4) நிபந்தனைச் சட்டத்தின் பிரகாரம், கடன் அடைக்கும் காலத்தை அதிகரிக்குமுன் ஜாமீன் நபர்களின் சம்மதம் எழுத்து மூலமாய் வேண்டியிருக்கிறது. ஆனால் அப்பேர்ப்பட்ட சம்மதத்தின் ரிகார்டுகள் சாதாரணமாய் பத்திரங்களோடு வைக்கப்படுகிறதில்லை. இந்த நிபந்தனை விதியின் ஷரத்துகளை பராமரிக்கிறதாகக் காணப்படுகிறது. இது சரியல்ல. பாக்கியிருக்கிற கடனுக்குரிய பத்திரத்தை அதோடு இருக்கவேண்டிய அங்கங்களோடு சேர்ந்து சரியாயிருக்கிறதாவென்று இன்஑பெக்டர் சோதனை செய்யவேண்டும். நபர் ஜாமீன் கடன் விஷயத்தில் கடனடைக்குங்காலம் அதிகப்படுத்தப்பட்டு ஜாமீன்தார்களின் சம்மதம் ரிகார்டி லில்லாவிட்டால் உடனே அச்சமதத்தை எழுத்துமூலமாய் வாங்கி வைக்கவேண்டும். அச்சம்மதம் பத்திரத்தின்பேரிலேயே குறிப்பிட்டாலும் இடலாம். யாராவது ஒரு ஜாமீன்தார் இறந்தாலும் சரி அல்லது மெம்பரல்லாமல் போய்விட்டாலும் சரி அல்லது ஜாமீனிருக்க இஷ்டமில்லாமற்போனாலும் சரி முக்கியக் கடன்காரனை பாக்கியிருக்கும் கடன் தொகையை உடனே செலுத்தும்படி செய்யவேண்டியது. அல்லது (பழைய கணக்கு முடிந்ததாக வைத்துக்கொண்டு) புது நபர் ஜாமீன் பேரில் வேறு பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ள வேண்டும்.

(5) ரிஜிஸ்தரான குத்தகைக் கடன் பத்திர விஷயத்தில், இனஸ்பெக்டர்கள், திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன் தொகையை பத்திரத்தின் பேரிலேயே பத்திரம் எழுதிக்கொடுக்கப் பட்டவனுடைய கையெழுத்தோடு வரவு வைக்கும்படி ஏற்பாடு செய்வது நலம்.

(6) அடியில் வரையப்பட்டுள்ள பாரத்தில் தவணை தப்பிய கடன்களின் ஜாப்தா ஒன்று தயார் செய்யவேண்டும். கடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய தேதிக்குப்பால் 3 மாசத்திற்குள் கடனை மீட்க வியாஜ்யம் செய்யாமலிருந்தாலும், அல்லது வேறு யாதொருவிதமான முயற்சி யெடுத்துக் கொள்ளாதிருந்தாலும் அச்சங்கத்தை கெட்ட சங்கங்களின் வகுப்பில் சேர்க்கவேண்டும. மேலும் அடியில் கையொப்ப மிட்டிருக்கிறவர் இனி லோன்கள் சாங்ஷன் செய்ய மாட்டாரென்றும், சென்ட்ரல் பாங்கிகளுக்கும் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளுக்கும் கொடுக்க வேண்டிய கடன்களின் வாயிதா காலத்தை



அதிகரிக்க சிபார்சு செய்ய மாட்டாரென்றும் எச்சரிக்கை செய்யவேண்டியது.

| லோன் நம்பர். | லோன் கொடுத்த தேதி. | லோனின் ஒட்டு மொத்தம். | லோன் எதற்காக. | பாக்கி. | செலுத்த வேண்டிய தேதி. | திரும்பப்பெற எடுத்துக்கொண்ட உபாயங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |

குறிப்புகள்:—ஏற்கனவே வாயிதா தவறின கடன்கள் விஷயத்தில், அவை இன்னொரு வருஷம் வரை லிமிடேஷன் பார் ஆகாமலிருந்தால் ரிஜிஸ்ட்ராரவர்கள் 26.7.12 ல் பிறப்பித்திருக்கின்ற ஸர்க்யுலர் நம்பர் 2120 பிரகாரம் இன்ஸ்பெக்டர் இன்ஸ்பெக்ஷன் செய்த தேதி முதல் மூன்று மாதம் அதிக வாயிதா கொடுக்கலாம்.

(7) ஒவ்வொருதரம் கடன் திருப்பிக்கொடுக்க அதிகரித்த நியமித காலம், முதல் அட்வான்ஸ் கொடுத்தபோது கொடுத்ததைவிட அதிகரிக்காமல் இன்ஸ்பெக்டர் பார்த்துக்கொள்ளவேண்டியது (லோன் லெட்ஜர் 7-வது கலம் பார்த்துக்கொள்ளவும்). அப்பேர்ப்பட்ட ஒவ்வொரு லோனும் கொடுத்த தேதி முதல் அந்தந்த நியமித காலத்திற்குள் வசூலாகிறதாவென்று பார்க்கவேண்டும். சில வேளைகளில் நியமித்த காலங்களில் தவறியிருந்தபோதிலும் 5 ல் ஒரு பாகம் திருப்பிக் கொடுத்திருந்தால் (5 ல் 2 பாகத்திற்குப் பதிலாக) வாயிதாவைத் தள்ளிவைக்கப்படுகிறது. இது சரியல்ல. இப்பேர்ப்பட்ட ஒழுங்கீனங்களை உடனே சீர்திருத்தி எவ்வளவு நியமித்த காலங்கள் ஏற்கனவே கடந்துவிட்டனவோ அவ்வளவு 5-ல் ஒரு பாகங்களை வசூல் செய்யவேண்டும்.

8. லோன்கள் சாங்ஷன் செய்யும்போது அவைகளைத் திருப்பிக்கொடுக்கும் காலத்தைத் தீர்மானம் செய்வதில் பஞ்சாயத்தார் சரியானபடி தங்களுடைய யுக்தியை உபயோகிக்கிறதில்லைபோல் காண்கிறது. சாதாரணமாக நிபந்தனைச் சட்டப்படி ஒப்புக்கொள்ளக்கூடிய மொத்த நியமித காலமாகிய ஒரு வருஷம் தீர்மானிக்கப்படுகிறது. இதற்குப் பிறகும் நிபந்தனை விதியில் மொத்தம் எவ்வளவு சொல்லியிருக்கிறதோ அந்த அளவுக்குப் பணத்தைத் திருப்பிக்கொடுக்கவேண்டிய வாயிதா காலம் தட்டுத்தடங்கலில்லாமல் தள்

ளிக்கொடுக்கப்படுகிறது. இப்படிச் செய்வதால் என்ன ஆகிறதென்றால், மூன்று மாசம் அல்லது அதற்கு முன்னதாகவே முழுமையும் தீர்ந்துபோயிருக்கவேண்டிய ஒரு கடன் 5 வருஷகாலம் வரை இழுபட்டுக்கொண்டிருக்கிறது. இவ்விஷயத்தைப்பற்றி தீர்க்காலோசனை செய்ததில், அடியிற் குறிக்கப்பட்டிருக்கிற விஷயங்களுக்காகப் பெற்ற கடன்களை அவற்றிற்கு நேரே குறிக்கப்பட்டுள்ள கெடுவுக்குள் ஜாடாவாகத் தீர்த்துவிடவேண்டுமென்று அடியிற் கையொப்பமிட்டிருப்பவர் அபிப்பிராயப்படுகிறார். வெவ்வேறு விஷயங்களுக்காக பெறப்படும் லோன்களுக்கு வெவ்வேறு கெடுவு காலம் ஏற்படுத்தியிருப்பதின் காரணங்களை இன்ஸ்பெக்டர்கள் சங்கங்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். இவ்விஷயத்தைப்பற்றி முக்கியமாய் பஞ்சாயத்தாருக்குப் போதித்து இந்த நியமித காலங்களை அமுலுக்குக் கொண்டுவரும்படி உபதேசிக்க வேண்டும். இந்த ஜாப்தாப்படி முழுக்கடனைத் திருப்பிக்கொடுக்கவேண்டிய மொத்தக் காலவரை கடந்தவுடன், இனி காலத்தை நீடிக்காமல் தவணைக்காலத்தில் காணும் முழு கடன் தொகையையும் வசூலிக்கும்படி சங்கங்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

| எதற்காக | முழுக்கடனையும் திருப்பிக் கொடுக்கவேண்டிய மொத்த நியமித காலம். |
|---|---|
| நெசவுக் காரர்களுக்கு நூல் ... | ... 2 வாரம் முதல் 4 வாரம் வரை. |
| சில்லரை வியாபாரம் ... | ... 1 மாதம் ,, 3 மாதம் ,, |
| கைத்தொழிலுக்கு வேண்டிய வஸ்துக்கள் வாங்க. ... | ... 3 ,, ,, 6 ,, ,, |
| கிரக கிருத்ய செலவுகள். உணவு முதலியவை வாங்க ... | ... 6 ,, |
| கிஸ்தி கொடுக்க ... ... | ... 6 ,, |
| விவசாயச் செலவுக்காக ... | ... 6 ,, ,, 1 வருஷம் ,, |
| தானிய வியாபாரம்... ... | ... 1 வருஷம் |
| கட்டை வண்டிகள் வாங்க ... | ... 1 ,, |
| விவாகத்தைத் தவிர மற்ற சடங்குகள் செய்ய ... ... ... | ... 1 ,, |
| கலியாணச் செலவுக்காக ... | ... 2 ,, |



| | |
|---|---|
| வீடு கட்ட ... ... ... ... | ... 2-வருஷம் |
| ஆடு மாடுகள் வாங்க ... ... ... | ... 2-வருஷம் |
| நிலத்தைச் சீர்திருத்தவும் கிணறு வெட்டவும் ... | ... 3-வருஷம் |
| பழைய கடன்களை அடைக்க ... ... | ... 5-வருஷம் |
| நிலம் வாங்க ... ... ... ... | ... 5-வருஷம் |

குறிப்பு:—மாதச் சம்பளம் பெறும் மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடன் தொகையின் மொத்தம் அவர்களுடைய 4-மாசத்துச் சம்பளத்துக்குக் அதிகமா யிருக்கக் கூடாது.

9. கணக்குப் புத்தகத்தில் காணும் குறிப்பை வைத்துக்கொண்டு கையிருப்புத் தொகையையும், போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் கட்டியிருக்கும் தொகையை பாஸ்புக்கைக் கொண்டும் இன்ஸ்பெக்டர்கள் பரிசோதனை செய்யவேண்டும். சமீபத்தில் (டெபாசிட்டாகவாவது, சென்ட்ரல் பாங்கிகளுக்கு அனுப்பியதாகவாவது, அல்லது வேறுவிதமாகவாவது) பட்டுவாடா செய்திருப்பதாகக் காணப்படும் பெரிய தொகைகளுக்கு உறுதிச்சீட்டு (Voucher)வாங்கவேண்டுமென்பதை இன்ஸ்பெக்டர்கள் நிர்ப்பந்திக்கவேண்டும்.

10. கவர்ன்மெண்டு லோன்கள் பெற்றிருக்கும் சங்கங்கள் விஷயத்தில் (ஜாப்தா புல்லடின் வால்யூம் II, 4-ம் நம்பர், 300-ம் பக்கம் பார்க்கவும்) இன்ஸ்பெக்டர்கள் இன்ஸ்பெக்ஷன் தேதியில் சங்கத்தின் பங்கு முதலும் மெம்பர்களின் டிபாஸிட்டும் சேர்ந்த மொத்தம் கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிகடன் தொகைக்குக் குறையாமலிருக்கிறதாவென்று பார்க்கவேண்டியது.

11. ஒவ்வொரு சங்கத்தின் கணக்குகளையும் இக்கட்டளைகளின்படி பரிசோதனை செய்தபிறகு, சம்பந்தப்பட்ட சங்கத்திற்கு இன்ஸ்பெக்டர்கள் எழுத்து மூலமாகக் கட்டளை யிடவேண்டும். அக்கட்டளையின் ஒரு நகலை அடியிற் கையொப்ப மிட்டிருப்பவர்க்கு மற்ற அவசியமான விஷயங்களைப் பொருத்த குறிப்புகளோடு அனுப்பவேண்டியது.

3. சங்கங்களை இம்மாதிரி அதிசூக்ஷமமாய் இன்ஸ்பெக்ஷன் செய்வதை சுலபமாக்குகிறதற்காகவும் சீக்கிரத்தில் ஒரு சர்க்கிளைச் சுற்றிவரவும், சில சர்க்கிள்களிலுள்ள சங்கங்களை மறுபடி பிரித்து, பிரத்தியேகமான கட்டளைகள் வெளியாகின்றன. இந்த செக்ஷனிலுள்ள இன்ஸ்பெக்டர்கள் 1912-ம் வருஷ டிசம்பர்மீ முடிவுக்குள் ஒருதரம் சுற்றுப்பிரயாணம் போய் வருவார்களென்று நம்புகிறேன்.

குமாஸ்தாக்கள் வைத்துக்கொண்டிருக்கும் சங்கங்களைப் பரிசோதனை செய்வதும் (கணக்குச்சரியாய் வைத்திருப்பார்களாகையால்) புதிதாய் ஸ்தா

பிக்சப்பட்டு விவகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ள சங்கங்களைச் சோதனை செய்வதும் இன்ஸ்பெக்டர்களுக்கு மிக்க சுலபமாயிருக்கும்.

4. இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொரு வாரத்து டையரியின் அடியிலும் "ரிப்போர்ட்டுக்குச் சேர்ந்த வாரக் கடைசிவரை அவரால் பூர்த்தியாய்ச் சோதனை செய்யப்பட்ட சங்கங்களின் மொத்த நம்பரைக்" குறிப்பிடவேண்டும்.

கோ-ஆபரேடிவ் சங்கங்களின்,
அஸிஸ்டெண்டு ரிஜிஸ்த்ரார்,
ஆபிசு, பெஜவாடா,
9—11—1912

பி. மீனாக்ஷி சுந்தரம்,
அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்த்ரார்.

——(:-:)——

## ஷ்யூரிடி லோன்கள்

முன் அடைமானத்தை மீட்கக் கடன் பெறுதலைப்பற்றியும், ஷ்யூரிடி லோன்களைப்பற்றியும் அஸிஸ்டண்ட் ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் வேதாசல அய்யர் எழுதிய குறிப்பு. அவருடைய நம்பர் R. C. 62/12 7-10-12. ரிஜிஸ்ட்ரார் ஆபீசு கரெண்ட் நம்பர் 4485/12, 11-10-12.

கிராமச் சங்கங்கள் யோசனையின்றி ஷ்யூரிடி லோன்கள் கொடுப்பதால் நடுவகுப்பு ரயத்துகளும் ஏழைக்குடிகளும் தங்களிடம் மிச்சமிருக்கும் வில்லங்கமில்லாத ஸ்தாவர சொத்துக்களின் ஜாமீன் பேரில் சாவுகாரிகளிடத்தில் அதிக பணம் கடன் வாங்க பிரமை ஏற்படுகிறது. ரயத்துகள் அதிகக் கடனாளிகளாகாமலிருக்க வேண்டுமென்பது இக்கூட்டுமுறையின் உத்தேசமாயிருக்க, ரயத்துகள் அதிகக் கடன் படுகிறார்கள். மேலும், சுலப வட்டியாலும் ஷ்யூரிடி பத்திரங்கள் பேரில் எளிதில் கடன் கிடைப்பதாலும், கடனாளியாகிறதும் தவணைப் பணம் காலந்தவறி செலுத்துகிறதும் அதிகரிக்கிறது. இக்குறைகளை நீக்க என்னுடைய ஸ்கீம் என்னவென்றால், ஸொஸைடியிலிருந்து கடன் பெறுதலை இரண்டாகப் பிரிப்பது (1) சாதாரணக் கடன் (2) ஸ்பெஷல் கடன்.

**சாதாரணக் கடன்**--இக்கடன் ஏழைச் சிற்பிகளுக்கும் நெசவுக் காரர்களுக்கும் ரயத்துகளுக்கும் கொஞ்சம்கொஞ்சமாகக்கொடுக்கவேண்டும். அவர்கள் அதை ஒரு தொழிலில் செலவு செய்திருக்கும் முதலை எவ்வளவு காலத்திற்குள் எடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஒரு வருஷத்திற்குள் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.



உதாரணமாக:—சில்லரைத் தொகைகளாக (1) எருவாங்கவும் (2) அறுவடைக்கு முன்னும் அறுவடை காலத்திலும் சாப்பாட்டுச்செலவுக்காகவும் (3) கிஸ்தி செலுத்தவும் கிருஷிகளுக்குக் கடன் கொடுக்கப்படும். எருபோடுவதற்காக கொடுத்த கடனை தானியமாகவாவது, பணமாகவாவது சாகுபடியாய் விற்பனைக்கு லாயக்காயிருக்கும்போது திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். சாப்பாட்டுச் செலவுக்காக கொடுத்த கடனை சாகுபடி காலத்தில் பணமாகவாவது தானியமாகவாவது திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். கிஸ்திக்காகக் கொடுத்தபணம் வியாபாரதானியங்களாகிய நெல், பருப்பு, முதலியவை அறுப்பாகி விற்பனைக்குத் தயாரானவுடன் செலுத்திவிடவேண்டும். நெசவுக்காரர்களுக்குக் கொடுத்த கடன் பிரதிவாரமாவது, இரண்டுவாரத்திற்கு ஒரு முறையாவது கடன் தொகையால் நெய்யப்பட்ட துணி விற்பனையானவுடன் திரும்ப செலுத்திவிடவேண்டும். சாதாரண லோன்கள் மே மாசம் மத்தியில் கொடுத்து அடுத்த வருஷம் அதே காலத்தில் வாபசு பெறவேண்டும். இது சுலபமாய் நிறைவேற ஒவ்வொரு ஸொஸைடியும், அவசியம் நேரும்போது பணம் வாங்கவும், பணம் வசூலானவுடன் அதைச் செலுத்தவும் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் ரொக்க நாணயம் (Cash Credit) வைத்திருக்கவேண்டும். எந்த ஸொஸைடிக்கும், முந்தின வருஷத்துக் கடன் கணக்கைத் தீர்த்து விட்டாலொழிய அடுத்த வருஷத்திற்கு (Cash Credit) ரொக்க நாணயத்திற்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

**ஸ்பெஷல் கடன்.**—சாதாரணமாகப் பழைய கடன்தீர்க்கவும் முக்கியமாக அடைமான மீட்கவும் கடன் கொடுக்கும்போது விடுவிக்கும் அடைமானம் சுவாதீனத்தோடு (with possession) கிடைக்கும் கேசுகளில் நான் கடன் கொடுப்பேன். விடுவிக்கும் அடைமானம் சாதாரண (simple) அடைமானமாயிருந்தால் அசல் கடன் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிற அதிக வட்டிவீதம் கிடைத்தால் ஸொஸைடியை கடன் கொடுக்கும்படி அனுமதி கொடுப்பேன். இங்கே கடனாளி அதைச் செலுத்தி விடும்படி ஸொஸைடியை கேட்டுக்கொள்ளலாம். அப்படி மாற்றப்பட்ட முன் கடன்களை அடைக்க, கடன் வாங்கினவர்கள் சரியாய் வருஷாந்திர தவணைப் பணத்தை செலுத்தும் விருப்பத்தைக்காண்பித்தால் தான், ஸொஸைடி ஒப்புக்கொள்ளும். இதில் ஒழுங்கில்லாவிட்டால் அசல் கடன் கொடுத்தவன் அடைமான நிலத்தின் பேரில் விவகாரம் செய்யலாம். கடனாளிகள் தவணைப் பணம் செலுத்துவதில் வெகு கிரமமாய் இருந்தால், மிக்க நிர்ப்பந்தமுள்ளவைகளையும் அதிக வட்டி விகிதமுடையவைகளையும் விடுவிக்கும்படி சங்கத்திற்குக் கட்டளையிடுவேன். இம்மாதிரி நடத்தல் கடனாளிகளை உஷார் படுத்தும்; தவணைப் பணம் செலுத்துவதில் குறித்த காலம் தவறினால் வட்டி ஏராளமாகச் சேர்ந்துபோய் அசல் கடன் கொடுத்தவன் சொத்தை விற்க ஏற்பாடு செய்வான். வருஷாந்திர வாயிதாபணத்தையும் அதிக வட்டி வீதத்தையும் ஐந்து வருஷத்திற்கு வசூல் செய்யவேண்டும். கடனாளி பணத்தைச் சரியாய் செலுத்தி

வந்தால், ஸொஸைடி அசல் பத்திரத்தை விடுவித்த தேதி முதல் அதிக வட்டிக்கும் தாழ்ந்த வட்டிக்கும் வித்யாசமுள்ள பணத்தைக் கடனாளி பேருக்கு டிபாஸிட்டாகப் போட்டுவைப்பேன்.

ஐந்து வருஷத்திற்கு வருஷத்திற்கு 5-ல் ஒரு பாகத்தைச் செலுத்த வேண்டுமென்னும் ஷரத்தோடுகூடிய கடன் முழுவதையும் 5 வருஷத்தில் செலுத்திவிடவேண்டுமென்று நான் விதி ஏற்படுத்துவேன். மேலும் அப்படி வசூலான தொகையை டிஸ்ட்ரிக்ட் பாங்கிக்கு திரும்ப அனுப்பி விடவேண்டுமென்றாவது ஏற்கனவே கடன் வாங்கியிருக்கும் பேர் வழிகளைத்தவிர இதர மனுஷ்யர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்றாவது விதியேற்படுத்துவேன். அதிகவட்டியோடு கூடிய கடன்களை தீர்த்தபிறகு ஜனங்கள் தாங்களே சமாளித்துக்கொள்ளவேண்டுமென்பதை அவர்கள் அறியும்படி செய்வதுதான் இச்சட்டத்தின் உத்தேசம் ஏற்கனவே கொடுத்த ரயத்துகளுக்கே எப்போதும் 5-வருஷ வாயிதாக் கடன்களை கொடுத்துக்கொண்டிருப்பது உபயோகமில்லை. இக்கோட்பாடுகளை அனுசரித்தால் ஸொஸைடியின் பணத்தை பஞ்சாயத்தார்களும் பணக்காரரயத்துகளும் ஏராளமாய்க்கடனாகப் பெறுவதை ரத்துசெய்யும். இது ரொக்கப்பணமில்லாமல் கணக்கைச் சரிக்கட்டலினால் வருஷாந்திர வாயிதாப் பணத்தை திருப்பிக்கொடுத்ததுபோல் காண்பிப்பதையும் ரத்துசெய்யும். எப்படியிருந்த போதிலும், சேலம் ஜில்லாவிலுள்ள ஸொஸைடிகளில் இக்கோட்பாடுகளை வழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்; ஆகையால் நான் இதை ரிஜிஸ்ட்ராரவர்களுடைய ஆக்கினைக்காக ரிபோர்ட்டு செய்திருக்கிறேன்.

—.(•):—

## APPLICATIONS for LARGER BORROWING POWER.

# அதிகமாகக் கடன்வாங்கும் பவருக்காக அப்ளிகேஷன்கள்.

கடன் வாங்கும் சக்தியை அதிகப்படுத்த ஒரு சங்கம் விரும்பினால், அது கடன்வாங்க அபிப்பிராய முடைய சிலரை உதவிசெய்யவேண்டுமென்கிற விருப்பத்தை எப்போதும் தன் நோக்கத்தில் வைத்திருக்கிறது, அப்படி கடன் வாங்குகிற பேர்வழிகளை நோக்கத்தில் வைக்காமல் விவகாரம் அறி



விப்பதால் கடன் அதிகமாக வேண்டுமென்று கேட்டால் அது நல்ல அறிகுறியாகும். ஆரம்பத்திலாவது, கடன் வாங்கும் சக்தியை அதிகப்படுத்துவதற்காகப் போடும் அப்ளிகேஷனிலாவது கடன்பெறும் சிலருக்கு உபகாரம் செய்வதற்காக என்று குறிப்பிடப்பட்டிருந்தால், மேல் விசாரணை செய்து அடக்கியாளும் உத்தியோகஸ்தர்கள் கடன் கொடுப்பதற்காக உத்தேசித்திருக்கும் நபர்கள் குறித்த காலத்திற்குள் (மொத்தம் 5-வருஷத்தில்) உத்தேசித்த கடன் தொகையைத் திருப்பிக்கொடுக்கத் தகுதியானவர்களா என்பதை கவனிக்கவேண்டும். அதாவது அவர்களுடைய வருஷாந்திர வருமானம் செலுத்தவேண்டிய வாயிதாக்களுக்குப் போதுமா என்று பார்க்க வேண்டும். இல்லாவிட்டால், ஸொஸைடியால் கொடுக்கப்பட்ட கடன் தொகையைக்கொண்டு பழைய கடனைத் தீர்க்க ஹேதுவில்லை. இனம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் ஐவேஜு உள்ள 20-பேர்களோடு இனம் ஒன்றுக்கு 10,000-ரூபாயுள்ள 3-பேர்கள் தங்கள் உத்தரவாதப்பொறுப்பு வரையறுக்கப்படாதது என்றுவாக்குத்தத்தம் செய்து அப்படிஏற்படுத்தப்பட்ட 23-பேர்களடங்கிய அச்சங்கமானது 6000-ரூபாய் கடன் (மொத்தச் சொத்து விவரம் 50,000-ரூபாய் என்று ஸ்டேட்டுமெண்டின் உறுதியின்பேரில்) வாங்குவதாக வைத்துக்கொள்வோம். இதனால் இனம் ஒன்றுக்குச் சராசரி 300-ரூபாய் கடன்பெறும் 20-பேரும் 1000-ரூபாய் பெறுமான சொத்திலிருந்து உண்டாகும் வருமானத்திலிருந்து வருஷத்திற்கு 60-ரூபாய் (300-ரூபாயிக்குள்ள வட்டியைத்தவிர) மிச்சம் பிடிப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த 20-பேர்களில் சிலர் 500-ரூபாய் கடன் வாங்குவார்கள். இவர்கள் ரூ. 1000 பெறுமான சொத்திலிருந்துஉண்டாகும் வருமானத்தில் வருஷத்திற்கு 100-ரூபாய் மிச்சம் பிடிக்கவேண்டியதாகும். வட்டிக்குக்கொடுக்க ஆயிரம் ரூபாயுடைய ஒருவன், மிச்சமில்லாமல் தன்னுடைய ஜீவனத்திற்காக வருஷத்திற்கு 100-ரூபாய் பெறும்பக்ஷத்தில் அவன் மிக்க அதிர்ஷ்டசாலியே. அப்படியானால் 500-ரூபாய் கடன் கேட்டவர்களும் 300-ரூபாய் கடன்கேட்டவர்களும் தங்களுக்குத் தாங்களே மோசம் போகிறார்கள் அல்லது சங்கத்தை மோசம் செய்கிறார்கள். உற்பத்திவிஷயத்திற்காக ஒருகடன் தொகையை உபயோகித்தால், கடனாளி கடனை 5-வருஷாந்திர வாயிதாவுக்குள் செலுத்திவிட போதுமான அளவு வருஷாந்திர வருமானத்தை உயர்த்தலாம்; இத் திருஷ்டாந்தத்தில் சங்கத்தின் மொத்த ஆஸ்தியின் உறுதியின்பேரில் கடன்வாங்க அனுமதி கொடுக்கலாம்; ஆனால் பழைய கடனைத் தீர்ப்பதற்காகக் கடன் வாங்கும் ஒருவன் தன் சொந்த சொத்தை நம்பாமல் வேறு பிறருடைய சொத்தை நம்புகிறது பிரயோஜனமில்லை. இவற்றையெல்லாம் ஆரம்பத்திலிருந்தே கடன்வாங்க உத்தேசித்திருக்கும் கடனாளிகளுக்கு ஸ்பஷ்டமாய் எடுத்துரைக்கவேண்டியது. அதாவது, தங்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சங்கத்திற்கு மனுசெய்து கொள்ளும்போது அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

காரண காரியங்களுக்குள்ள வித்யாசம் ஏற்படாமல் பிரமையுண்டானால், கடன்வாங்கும் சக்தி சொத்துவிவர ஸ்டேட்டுமெண்டுகள் ஆகிய இவைகளில் பரிச்சயமுடையவர்களுடைய ஏதுவாத சக்தி குறைகிறது. 1000-ரூபாய் சொத்துள்ள ஒருமனிதன் 500-ரூபாய் கடன் கேட்டால், அந்தசொத்தை பலவந்தமாய் விற்பனைசெய்தால் 500-ரூபாய் கிடைக்குமா என்பதை யோசிக்க வேண்டும். சொத்தின் எஸ்டிமேட் ஜாக்கிரதையாய் போட்டிருந்தால் 500 ரூபாய்க்கிடைக்கலாம். ஆனால் ஸொஸைடியின் உத்தேசம் கடனாளியின் சொத்தை விற்பனை செய்வதற்கல்ல, இந்த விசனகரமான முடிவைத் தடுக்க வேண்டிய உபாயத்தை அனுசரிக்கத்தான். இந்த உபாயம் மேற்சொன்ன உதாரணங்களில் சொன்னபடி போதுமான வளவு இல்லாதிருந்தால், எவ்வித கூட்டுறவினரும் திருப்திகரமான முடிவை (satisfactory end) திருப்திகரமான உபாயத்திற்கு (satisfactory means) சமானமாக ஒப்புக்கொள்ளக்கூடாது. ஆனால், 1000 ரூபாய் சொத்துள்ள ஒருவனுக்கு 500 ரூபாய் வரை கடன் கொடுக்கலாமென்று சங்கங்களின் நிபந்தனை விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவற்றின் அபிப்பிராயமென்னவென்றால், கடன் பெறும் 500 ரூபாயையும் லாபகரமான தொழில்களில் உபயோகிக்க வேண்டுமென்பதுதான் இதனால் வருஷத்திற்கு 100 ரூபாய் மிச்சம்பிடித்து கடனை 5-வருஷத்திற்குள் தீர்க்கக்கூடும். லாபகரமில்லாத வழியில் உபயோகித்திருந்தால் திருப்பிக் கொடுக்க கடனாளியின் சொத்தின் தற்கால விலையைத்தான் கவனிக்கவேண்டும். இதர மெம்பர்களின் சொத்தைப்பற்றி கவனிக்கவே வேண்டியதில்லை. ஏனென்றால் யாதொரு விதத்திலும் அவர்களுடைய சொத்து இவனுக்குப் பிரயோஜனப்படாது; ஆகையால், பிறர் சொத்தை வைத்துக்கொண்டு கடனாளிக்குக் கல்பனை நாணயத்தை உண்டாக்க இடங்கொடுக்கக்கூடாது.

---



# குறிப்புகள்

---

## கூட்டுத்தொழில் மொத்த விற்பனை சங்கத்தின் விசேஷமான குறிப்பு

1912-ம் வருஷத்து விற்பனை 29,094,000 பவுன். மொத்த விற்பனைச் சங்கத்தின் விலை ஜாப்தாவிலுள்ள கணக்கைப் பார்த்தால் 1912-ம் வருஷத்தில் ஸொஸைடியின் விற்பனை எண்ணியபடி 30,000,000 பவுனில்லாவிட்டாலும், ஒரு விசேஷமான குறிப்பைக் காட்டப்போதுமான அளவாயிருக்கிறது. 1911-ம் வருஷத்தில் சாமான்களைப் பிரிவினை செய்யும் இலாகாவில் மொத்த விற்பனையின் தொகை 28,141,000 பவுன். ஆனால் 1912-ம் வருஷத்தில் மொத்த விற்பனை 29,734,000, பவுன்; அதாவது முந்தின வருஷத்தைவிட ஏறக்குறைய 1,603,000 பவுன் அல்லது 100 க்கு 5·6 விதம் அதிகமாயிருக்கிறது. பயன் கொடுக்கிற தொழில்களின் ஸப்ளையோ 1911-ம் வருஷம் 6,901,814 பவுனும் 1912 ம் வருஷம் 755,110 பவுனும் அதாவது 1912 ம் வருஷத்து ஸப்ளை அதற்கு முந்தின வருஷத்தைவிட ஏறக்குறைய 655,287 பவுன் அல்லது 100 க்கு 9·4 அதிகமாயிருக்கிறது. இந்த விஷயம் சந்தோஷப்படத்தக்கதே.

## இன்ட்டர் நாஷனல் கோ ஆபரேடிவ அலையன்ஸ் என்னும் சங்கத்தின் காரிய நிர்வாக கம்மிட்டியின் வேண்டுகோள்.

இன்ட்டர் நாஷனல் கோ ஆபரேடிவ் அலையன்ஸ் என்னும் சேர்க்கையானது, அது ஸ்தாபிக்கப்பட்டு சென்ற 17 வருஷங்களுக்குள் சுமார் 70 லக்ஷம் மெம்பர்களுள்ள 8000 கூட்டுத்தொழில் சங்கங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறது. அது 24 தேசங்களிலும் 3 கண்டங்களிலும் பரவியிருக்கிறது. அது உலக விசாலமுள்ள ஒரு பெரிய பிரஜா பிரபுத்துவத்திற்குக் காரணமாகும்போல் காண்கிறது. அதன் முக்கிய கொள்கை ஸ்வேச்சையும் இணக்கமும்தான். இந்த உத்தேசங்களை நிறைவேற்றுவதற்காக, அச்சங்க காரிய நிர்வாகிகள் அப்போதைக்கப்போது பத்திரிகைகளில் அவர்களுடைய கொள்கைக்கொத்த விஷயங்களை எழுதி ஜனங்களுக்குப் போதித்துத் தங்களுடைய கொள்கைகளை அநுஷ்டிக்கச் செய்யப்போவதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். இப்போது சைனா தேசத்தில் பிரஜா பிரபுத்வம் நியமித்திருக்கிறதைப் பார்த்தால் கூட்டுத்தொழிலானது நன்றாய் அவ்விடத்தில் வேர் ஊன்றி செழித்து ஓங்குமென்று நம்பப்படுகிறது. ஏனென்றால் பிரஜா பிரபுத்வ கொ

ள்கைக்கும் கூட்டுத்தொழில் கொள்கைக்கும் உள்ள அந்யோந்ய சம்பந்தத்தால் தான். அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களிலும் புத்திக் கூர்மையுள்ள அநேக மாறுபாடுகள் நடக்கிறதைப் பார்த்தால் பலமான கூட்டுத் தொழிலுக்கு காரணமாகும்போல் காண்கிறது. இப்பேர்ப்பட்ட கூட்டுத் தொழில் முறைகளை உற்சாகப்படுத்திச் செழிக்கும்படி செய்வதுதான் இந்த அலையன்ஸின் முக்கிய நோக்கமாகும்.

பால்கன் யுத்தத்தினால் கிழக்கு தேசங்களில் அநேக ராஜாங்க மாறுபாடுகள் உண்டாயிருந்தபோதிலும் இந்த யுத்தத்தின் கஷ்டமே கூட்டுத் தொழில் முறை வளர ஒரு காரணமாகும். செர்வியா தேசத்தாரும் பல்கேரியா தேசத்தாரும் நெடு நாளாய் கூட்டுத்தொழிலை விருத்தி செய்துகொண்டு வருவதும் தவிர அநேக நன்மைகளையும் அதினால் அடைந்திருக்கிறார்கள். சமீபத்தில் இந்தக் கூட்டுத்தொழில் முறையானது எல்லாத் தேசங்களிலும் எல்லா ஜனங்களாலும் அநுசரிக்கும்படியாய் அவ்வளவு நன்றாய் வேரூன்றி விடுமென்று தோன்றுகிறது. இந்த இன்டர் நாஷனல் (அதாவது பரஸ்பர ராஜாங்க சம்பந்த) முறையில் ஐரோப்பா தேசங்களில் அநேக அலுவல்களைச் சேர்ந்தவர்களும், அநேக ஜாதியாரும் சேர்ந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் ஜீவனத்திற்கு வேண்டிய சாமான்களின் விலை உயர்ந்து விட்டதாலும், தங்கள் தங்கள் நிலைமையைச் சீர்ப்படுத்திக் கொள்ளவும்தான். இந்தக் கூட்டுத் தொழில் முறையை நிலைநாட்ட, மெம்பர்கள் நல்ல கூட்டுறவோடு, மேலான காரியங்களை கைக்கொண்டு சரியான கூட்டுத்தொழிலினர்களாக வேண்டும். கிளாஸ் கோவில் (Glasgow) இவ்வருஷம் கூடப்போகும் கூட்டுத்தொழில் மகா சபையில் கூட்டுத்தொழிலினர்களின் கடமைகளைப் பற்றி நன்றாய் தர்க்கித்து விவரிக்கப்படும். பரஸ்பர ராஜாங்க சம்பந்த வியாபாரத்தின் அபிவிர்த்தியைக் காட்டப்போகிறபடியால் இந்தப் பொதுவான சபைக்கு எல்லாத் தேசங்களிலிருந்தும் கூட்டுத்தொழிலினர்களை வரவழைக்கப்படுமென்று நம்பப்படுகிறது. இப்போது பிறந்த புதுவருஷமானது இந்த அலையன்ஸுக்கு ஜெயத்தைக் கொடுக்கவேண்டுமென்று விரும்பப்படுகிறது.

## கோ-ஆபரேடிவ் மீட்டிங்கு.

வடமலப்புறம் ஜனவரி மாசம் 27-ந்தேதி— ராமநாதபுரம் ஜில்லா வடமலப்புறம் சர்க்கிளின்கூட்டுத் தொழிலினர் மாசாந்திர உற்சவ நாள் நடங்கம் கிராமம் கூட்டுத்தொழில் சங்கத்தாரால் துலுக்கப்பட்டி ஸ்டேஷனுக்கடுத்த வாச்சக்காரப்பட்டி சத்திரத்தில் ஜனவரி மாசம் 26-ந் தேதி அன்று மதுரை வாசியாகிய மிஸ்டர் கே. ஆர். வெங்கட்டராமையரின் அக்கிராசனத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. வந்த விசிட்டர்களில் முக்கியமானவர்கள் மதுரை-ராமநாதபுரம் சென்ட்ரல் கோ-ஆபரேடிவ் பாங்கியின் காரியதரிசியாகிய மிஸ்டர் K. ராமசாமி ஐயர் பி. ஏ. பி. எல். கோவில்பட்டி கவர்ன்மெண்டு அக்ரிகல்ச்சரல் பாரத்தின் மானேஜராகிய மிஸ்டர் திருமுருகநாதபிள்ளை, கூட்டுத்தொழில் சங்கங்களின் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஆர். நாராயணஐயர், கூட்டுத்தொழில் சங்கங்களை கௌரவத்திற்காக ஒழுங்குபடுத்துகிற மிஸ்டர் ஆனந்தராவ், ஸ்ரீவல்லிபுத்தூர் பெர்மனென்ட் பண்டின் காரியதரிசியாகிய மிஸ்டர் டி. ஷண்முகசுந்தர முதலியார். சாத்தூர் தாலூகாவிலுள்ள சுமார் 20 சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பிரசங்கங்கள் பின் கண்டவர்களால் செய்யப்பட்டன. (1) அக்ரிகல்ச்சரல் இன்ஸ்பெக்டரால் சிறப்பான பஞ்சு விவசாயத்தையும் விவசாயக் கூட்டுத்தொழிலைப் பற்றியும் (2) நாணயச் சங்கங்களும் சாமான்களை விநியோகிக்கும் சங்கங்களும் தங்களுடைய பரஸ்பர நன்மைக்கு என்ன செய்யுமென்பதைப்பற்றி மிஸ்டர் கே. ராமஸ்வாமி ஐயராலும், கோ-ஆபரேடிவ் சங்கங்களில் பணம் கட்ட விசேஷமான சாதனங்களைப் பற்றி மிஸ்டர் என். அனந்த ஐயங்காராலும் சங்கங்களினால் போடப்படுகிற கூட்டுத்தொழில் ரோட்டுகளின் விசேஷங்களைப்பற்றி மிஸ்டர் ஆர். ஆனந்தராவாலும் பத்திரிகைகள் வாசிக்கப்பட்டன. படிக்கப்பட்ட பத்திரிகைகளெல்லாம் மிகவும் தெளிவாகவும் புத்தி கற்பிக்கும்படியாகவும் இருந்தன. கூட்டுத் தொழில் சங்கங்களின் வேலைக்கும் பெர்மனென்டு பண்டு வேலைக்குமுள்ள வித்யாசங்கள் தெளிவாய் காண்பிக்கப்பட்டன. இவ்விதமாக மிகவும் சந்தோஷமாக காரியக்ரமங்கள் நடந்தன. கடைசியில் சேர்மனுக்கும் டைரக்டர் ஆப் அக்ரிகல்சருக்கும் இன்னும் வந்திருந்த இதர விசிடர்களுக்கும் வந்தனமளிக்கப்பட்டு மீட்டிங்கு முடிவு பெற்றது. மிஸ்டர் ஆர். ஆனந்தராவ் பிரசிடெண்டுக்குப் பூமாலை சூட்டினார்.

## லீஜ் (பெல்ஜியம்) என்னும் பட்டணத்தில் ஒரு கூட்டுத்தொழில் வித்யாசாலை.

'கோவாபரேடிவ் ந்யூஸ்' என்னும் பத்திரிகையில் ஒரு நிருபர் ஜனவரி மாதம் 25-ந் தேதி எழுதியது:—

வியாபாரத்திற்கு முக்கிய ஸ்தலமாகிய லீஜ் என்னும் நகரில் ஒரு கூட்டுத்தொழில் வித்யாசாலை ஸ்தாபனம் செய்வதற்காக தகுந்த பிரயத்தனங்கள் நடந்து வருகின்றன. அம்மாகாணத்தில் 83 சங்கங்களிருப்பதை நோக்கில், இம்மாதிரி பரீக்ஷிக்க லீஜ் நகரம் சரியான மத்தியஸ்தலமென்று கருதவேண்டும். இராஜ நீதியில் நிபுணராகிய எமிலி வெண்டர் வெல்ட் (Emile Vender Velde) என்பவர் இந்த வித்யாசாலையில் உபந்யாசம் செய்கிறவர்களில் ஒருவர். இப்பள்ளிக்கூடம் நல்ல மேல்தரக் கல்வி கற்பிக்குமென்பதற்கு இதுவே ஓர் அத்தாக்ஷி. அவ்விடத்தில் ஒழுங்காய்க் கற்பிக்கப்படும் பாடங்களாவன:—

4

**கூட்டுத் தொழிலின் கோட்பாடுகள், கூட்டுத்தொழில் சங்கங்களின் உபயோகங்கள், பெல்ஜியம் முதலிய நாடுகளின் கூட்டுத் தொழிலின் சரித்திரம், கோவாபரேடிவ் ஆர்கானிஸேஷன், வஸ்துக்களைப் பிரிவினை செய்தல், உற்பத்தி செய்தல், பண்ட மாற்றல், கூட்டுத் தொழிலுக்குரிய வித்தை, ஆசாரத்திற்குரிய ஐக்கியம். இவையின்றி சாதனையாய் வியாபாரத்திற்குரிய சட்டம், கூட்டுத்தொழிலுக்குரிய சட்டம், வியாபாரத்திற்குரிய தந்திரங்கள், வாங்கலும், விற்றலும், சரக்குகளை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளல், ஆகிய இவைகளும் கற்றுக்கொடுக்கப்படும்.**

### ராக்டேல் ஈக்விடபில் பயனீர்ஸ் ஸொஸைடி.

பெயர் பெற்றிருக்கும் இந்த ஸொஸைடியின் வருஷவர்த்தந்தியானது சென்ற ஜனவரிமீ 18௳ கொண்டாடப்பெற்றது. ஸொஸைடியிலிருந்த மொத்த மெம்பர்கள் 19,281 பேர்களென்றும், பிரஸ்தாப வருஷத்தில் 550 பேர் அதிகரித் திருக்கிறார்களென்றும் காரியதரிசியின் ரிப்போர்ட்டினாலே தெரிய வருகிறது. மற்றும் அந்த ரிப்போர்ட்டிலிருந்து விளங்குவதாவன:—பங்கு மூலதனத்தின் மொத்தம் 367,969 பவுன், அதாவது, 4,158 பவுன் முந்தின வருஷத்தைக்காட்டிலும் அதிகமாயிருக்கிறது. வருஷத்தில் நடந்தேறிய மொத்த விற்பனை 404,693 பவுன், அதாவது அதற்கு முந்திய வருஷத்தைக்காட்டிலும் 17,852 பவுன் அதிகம்; வட்டியுள்பட கிடைத்தலாபத்தின் மொத்தம் 70890 பவுன், எனவே அதிகரித்தலாபமானது 2,783 பவுன். பிரஸ்தாப வருஷத்தில் கல்வி யபிவிருத்திக்காக அளிக்கப்பட்ட கிராண்டு 709 பவுன், எனவே 36 பவுன் அதிகரித்திருக்கிறது. 1844-ம் வருஷம் டிசம்பர்மாசம் 21௳யிலிருந்து 1912-ம் வருஷம் ஸெப்டம்பர்மாஸம் 10௳ வரையிலான மொத்த விற்பனை 14,584,287 பவுன்; கிடைத்த லாபத்தின் மொத்தம் 23,55,274 பவுன். அதே காலத்துள் கல்வியபிவிருத்தியை உத்தேசித்துக் கொடுக்கப்பட்ட பணத்தின் மொத்தம் 40,169 பவுனாகும்.

### கூட்டுறவும் அதன் சத்துருக்களும்.

**கோ-ஆபரேடிவ் நியூஸ்** என்றும் பத்திரிகைக்கு ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஆஸ்டிரியா தேசத்திலே கூட்டுத்தொழில் முயற்சியானது பிரமிக்கச் செய்யும்படியான விதிகளோடு கூடின மசோதாவினாலே ஆழமாக அசைக்கப்பட்டு நிற்கின்றது. கூட்டுத்தொழில் சம்பந்தமான டிஸ்ட்ரிப்யூடிவ் (வஸ்துக்களைப் பிரிவினை செய்யும்) சங்கங்களின் கிளை ஸ்தாபனங்களை அம்மசோதா விலக்குகின்றது. இதல்லாமலும் இப்போது நடைபெற்று வரும் எல்லாக்கிளை ஸ்தாபனங்களும் இன்னும் இரண்டு வருஷத்திற்குள் கலைந்துவிட வேண்டுமென்றும் அம்மசோதா குறிப்பிடு



கின்றது. சங்கமிருக்கும் இடத்திலாவது சங்கத்திற் கருகிலாவது கைத்தொழிற் கூடங்கள் கட்டப்படவேண்டும். சங்க ஸ்தாபனங்களுக்கு வெளியிலே அவை கட்டப்படும் பட்சத்தில் அவ்விடத்திலேயோ அவ்விடத்திற் கருகாகவோ வசிக்கும் குறைந்த பட்சம் 50 பேராவது சேர்ந்திருப்பது அவசியமாகும்.

அந்த மசோதாவின் நோக்கமென்னவெனில் இம்முயற்சியைச் சிதல் சிதலாகப் பிரித்துவிடவேண்டுமென்பதும், பிரித்து அவ்விதமேயே வைத்திருக்கவேண்டுமென்பதுவுந்தான். இந்த முயற்சியின் எழுச்சிக்கு இஃதோர் ருசுவாகவும் அதன் எதிரிகளுக்கு ஆசக்தி கொடுக்கின்றது. வேஷகொள்கை கொண்டதாயும் துலங்குகின்றது. தவறிப்போன முந்தியகொள்கைகளெல்லாம், பொறுக்க முடியாதென்று கூறக்கூடிய தற்போதைய மசோதாவைக்காட்டிலும் கடினமானவை யென்று சொல்ல வியலாது. ஆனால் ஆஸ்டிரியாவில் நடைபெறும் முயற்சி அதற்கு உதவியாயிருக்கும் பட்சத்தில் இந்த ஹானிகரமான விதிகள் ஒருபோதும் அமுலுக்கு வரமாட்டாவென்பதை யாம் தெளிவுறச் சொல்லலாம்.

அடியிற்கண்டவை 'பிழைக்கும்வழி'யிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டவை.

**ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு ஒரு அனுகூலம்:**—ஐக்ய நாணய சங்கங்களுக்கு உண்டாகும் லாபத்துக்கும் பங்காளிகளுக்கு அவை பிரித்துக் கொடுக்கும் தொகைகளுக்கும் வருமானவரி விதிக்கப்படமாட்டாது.

**தொழுவூர் ஐக்ய நாணயச் சங்கம்:**—ஐக்கிய நாணயச் சங்கங்களில் ஏற்படும் லாபத்தில் நூற்றுக்கு 10 ரூபாய்வீதம் தர்ம கார்யத்திற்குச் செலவு செய்யலாம் என்று ஐக்ய நாணயச் சங்கத்து ஆக்டில் மாறுதல் உண்டாயிருக்கிறது. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த தொழுவூர் கிராம சங்கத்தார் ரிஜிஸ்ட்ராரின் உத்தரவின்பேரில் சொந்தமாக எலிமெண்டரி ஸ்கூல் ஒன்றை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள்.

**கோ-ஆபரேடிவ் ஸொஸைடிகளுக்கு இன்ஸ்பெக்டர்கள்:**--நாளதுமாசம் நடந்த சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்த்ரி ஐக்யநாணய சங்கங்கள் இப்போது இல்லாத இடங்களில் புதிதாய் ஸ்தாபிக்க, ரெஜிஸ்ட்ராருக்கு மனுக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கிறபடியால் இந்தப் புது ஸொஸைடிகள் ஸ்தாபிப்பதிலும், ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸொஸைடிகளை மேல்விசாரணை செய்வதிலும், அவருக்கு ஒத்தாசையாக அதிக இன்ஸ்பெக்டர்கள் புதிதாய் நியமிக்கப்படவேண்டுமென்று ப்ரேரேபித்தார். **அதற்கு பதில் ஸர் ஜான் அட்கின்ஸன் அடுத்த**

பட்ஜட்படி 16 இன்ஸ்பெக்டர்கள் புதிதாய் நியமிக்கப் படுவார்களென்றும், ரெஜிஸ்ட்ரார் இன்னும் அதிக இன்ஸ்பெக்டர்கள் வேண்டுமென்று கேட்டால் நியமிக்கப்படுமென்றும் சொன்னார். ரெஜிஸ்ட்ரார் மிஸ்டர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையும் ஸபையின் விவாதத்தில் கலந்துபேசி, போதுமான இன்ஸ்பெக்டர்கள் இல்லாததினால், புதுஸொஸைடிகள் ரெஜிஸ்டராகவில்லையென்று நினைப்பது பிசகென்று சொன்னார். ஆனால் மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளைக்கு முன்னொருதடவை ஸிப்பந்திகள் குறைவாயிருப்பதாலேயே புது ஸொஸைடிகள் ஸ்தாபிப்பது தடைப்பட்டிருக்கிறதென்று சொன்னார். உண்மையென்னவெனில், இந்த ஸொஸைடிகள் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்படும் திறமையையும் அவைகளின் நோக்கங்கள் நிறைவேறிவரும் மாதிரியையும் பார்த்து கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் ப்ரமித்து அவைகள் அவ்வளவு தீவிரமாய் செல்லக்கூடாதென்று நினைக்கிறார்கள்.

**டென்மார்க்கில் விவசாயிகளின் சீரான நிலைமை:**—டென்மார்க்கு தேசத்தாராகிய டேன்ஸ் ஜாதி ஜனங்களைப்பற்றி டாக்டர் ஈகன் பின்வருமாறு தெரிவிக்கிறார். ஐரோப்பாக்கண்டத்து எல்லாத்தேசத்தாரிலும் டேன்ஸ் ஜனங்களே விவஸாய விஷயத்தில் ரொம்ப செல்வ ஸம்பத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் சராசரியில் உள்ள செல்வப்பெருக்கை உத்தேசிக்கையில் டென்மார்க்கு தேசமானது இங்கிலாந்துக்குஅடுத்தபடியென்னலாம். ஆனால் டென்மார்க்கில் சிலரிடத்தில் பணம் ஏராளமாயும் சிலரிடத்தில் பணம் மிகக் குறைவாயும் இல்லாமல் நிறவி எல்லாரிடத்திலும் கிட்டத்தட்ட ஸமனாகவே இருக்கிறது. அங்கே ரொம்ப பணக்காரர்கள் கிடையாது. ஒவ்வொருவனும் சாதாரணமாய் தக்க ஐவேஜியுள்ளவனாகவே யிருக்கிறான். அவர்கள் இப்பொழுதுள்ள மேலான நிலைமையை மூன்று வழிகளால் அடைந்தார்கள். அவையாவன:—

(1) கல்வி (2) கோவாபரேஷன் ஏற்பாடு (3) விவேகத்தோடு செய்யப்படும் ஸர்க்கார் உதவி.

தற்போது டென்மார்க்கு விவஸாயிகள் தனியாக ஒன்றும் வாங்குவதில்லை. கோவாபரேடிவ் சங்கத்தார்களுடைய நிபுணர்கள் பயிருக்குவேண்டிய விதைகளைப் பரீக்ஷித்து நல்லவைதான் என்று சொல்லுகிற விதையைத்தான் வாங்குகிறார்கள்.

உரங்களையும் கோவாபரேடிவ் ஸங்கங்கள் மூலமாய்த்தான் வாங்குகிறார்கள். விவசாயி மாம்ஸத்துக்காக தன்னுடைய பன்றிகளை தானாகவே கொல்லுகிறதில்லை. அவைகளைக் கோவாபரேடிவ் பன்றி யிறைச்சி பாக்டரிகளுக்கு அனுப்பிவிடுகிறான். இதனால் என்ன தெரிகிறது, டென்மார்க்கு தேசத்தார்களுக்கு கோவாபரேடிவ் முயற்சி கைகூடி, கவர்ன்மென்டாரும் சரியான



படி உதவிசெய்து, தகுந்த கல்வியும் கொடுக்கப்பட்டு வந்ததால்தான் அவர்கள் தற்பொழுது ஐரோப்பாவில் விவஸாய விஷயத்தில் ரொம்ப மேம்பாடும் செல்வமும் உள்ளவர்களாயிருந்து வருகிறார்கள். இந்த மூன்று ஸாதனங்களுமில்லாவிட்டால் இப்படிப்பட்ட நிலைமையை யடைந்திருக்க முடியாதென்று நன்றாய் விளங்குகிறது.

நமது தேசத்தில் கோவாபரேடிவ் முயற்சியில் அக்கறையுள்ளவர்கள் மேலே சொன்ன விஷயங்களைக் கவனிக்கவேண்டுவ தவசியம். டென்மார்க்கு தேசம் மேலான ஸ்திதியடைவதற்கு காரணமாயிருந்தவைகள் இந்தியாவின் க்ஷேமாபிவிருத்திக்கும் ஸாதகமாயிருக்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

**இலவம் பஞ்சு:**—இலவம் பஞ்சில் இரண்டு மூன்று வகைகள் உண்டு. இந்தியா, கொச்சி சீனா, ஜாவா தீவு முதலிய இடங்களில் இலவு விசேஷமாய் வளருகிறது. ஜாவாவில் இலவமரம் வயற்புறங்களிலும் சாலையோரங்களிலும் அதிகமாயுண்டாகும். சில ஐரோப்பியர்கள் அதைப்பயிரிட்டு வளர்க்கிறார்கள். காய்முற்றியவுடன் அதை யுடைத்து காய்களிலுள்ள பஞ்சைக் கையினாலாவது, யந்திரங்களினாலாவது கடைந்து அதிலுள்ள விதை தூசிகள் முதலியவைகளைப் பிரித்தெடுக்கிறார்கள். விதைகளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. பஞ்சை ப்ரெஸுகளில் கொடுத்து அழுத்தி சாக்குகளில் கட்டுகிறார்கள். ஆஸ்ட்ரேலியாவுக்கு அனுப்பப்படும் சாக்குகள் ஒவ்வொன்றிலும் 60 முதல் 80 ராத்தல் வரையில் பஞ்சு இருக்கும். ஐரோப்பா அல்லது அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் சாக்குகளில் இன்னம் அதிகம் பஞ்சு சேர்த்துக் கட்டுவார்கள். அவைகள் ஒவ்வொன்றும் 99 ராத்தல் நிறையுள்ளவையாயிருக்கும். ஜாவாவில் பஞ்சை ரொம்ப ஜாக்ரதையாக சுத்தம் செய்வதால் அவைகளை மறுபடியும் சுத்தம் செய்யாமலே உபயோகிக்கலாம். மெத்தைகளுக்கு இலவம் பஞ்சு உபயோகிப்பது தேகஸுகத்துக்கு ரொம்ப நல்லது என்று மேல்நாட்டார் குதிரை மயிர் உபயோகித்து வந்ததற்குப் பதிலாக இலவம் பஞ்சை இப்போது உபயோகித்துவர ஆரம்பித்து விட்டார்கள். மற்ற நார்களையும் விட இது நல்லதென்று உபயோகப்பட்டு வருகிறது. மேலும் இலவம் பஞ்சை அழுத்தினால் அது அழுந்தி பின்பு பழையபடி ஆகிவிடுகிற குணம் ரொம்ப உண்டு. இதனிடத்தில் இந்த குணம் ரொம்பகாலம் குறைந்து போகாமல் இருக்கிறது. குதிரைமயிரும் நார்களும் அடைத்த மற்ற மெத்தைகளைவிட இலவம்பஞ்சு மெத்தை அதிகநாள் கெடாமல் இருக்கிறதாம். இலவம்பஞ்சு மெத்தைகள் லேசாகவும் ஸுலபமாய்க் கையாளக் கூடியவையாகவும் இருக்கின்றன. இந்த மெத்தைகளுக்கு கொஞ்சம் பஞ்சு போதுமாகையால் குதிரைமயிர் மெத்தையைவிடக் குறைந்த விலையுள்ளவையாயிருக்கின்றன. இலவம் பஞ்சு மெத்தைகள் குளிர்ச்சியானவையல்ல

வென்று சொல்வதற்குத் தகுந்த ஆதாரமில்லையென்று சொல்லலாம். ஏனென்றால் உஷ்ணதேசங்களில் இலவம் பஞ்சானது மெத்தைகளுக்கும் நாற்காலிகளுக்கும் உபயோகிக்கப்படுகிறது. இலவம் பஞ்சில் இன்னும் அநேக சௌகர்யங்கள் இருக்கின்றன. அது சீக்கிரத்தில் ஈரத்தை க்ரகிப்பதில்லை. ஈரம் சீக்கிரத்தில் காய்ந்துவிடுகிறது. அதிலிருக்கக்கூடிய க்ருமிகளைக் கொல்லுவதற்கு அதை உஷ்ணப்படுத்தலாம். அதனால் பஞ்சின் குணம் ஒன்றும் கெடாது. இலவம் பஞ்சு அடையாய் ஒட்டிக்கொள்வதில்லை யாகையால் ரணசிகிச்சைகளுக்கும் உபயோகப்படுகிறது. இதற்கு மிதக்கும் தன்மை ரொம்ப இருப்பதாலும், கார்க்கு, கலைமான் ரோமம் இவைபோலல்லாமல் தண்ணீரில் பலநாளிருந்தாலும் இந்தக் குணம் இருப்பதாலும், இதை லைப்பெல்ட் அதாவது உயிர்க் கச்சைகளும், லைப்பாய்களும் அதாவது ஜீவரக்ஷண மிதப்புகளும் செய்வதில் உயயோகிக்கலாம். இலவம் பஞ்சை முப்பதுநாள் வரையில் தண்ணீரில் அமிழ்த்தி வைத்திருந்தால் அதன் மிதக்கும் தன்மையில் நூற்றுக்கு 10-பங்குதான் குறைகிறது. காயவைத்தால் குறைந்துபோனது திரும்பி வந்துவிடுகிறது. இலவம் பஞ்சை தனியாகவாவது, பருத்தியினுடன் கலந்தாவது நூல் நூற்பதற்காக ஜெர்மனியில் ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம். தொப்பி செய்வதிலும், கன்காட்டன் என்னும் ஒருவித வெடிமருந்து செய்வதிலும் இலவம்பஞ்சு உபயோகப்பட்டு வருகிறது.

**கோ-ஆபரேடிவ் பாங்கிக்குக் கட்டிடம்.**—செங்கல்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூக்கா உத்தரமல்லூர் கோ-ஆபரேடிவ் பாங்கிக்கு ஓர் ஆபீஸ் கட்டிடம் கட்ட திவான் பகதூர் எல் டி. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை சமீபத்தில் அஸ்திவாரக்கல் நட்டார். கட்டிடம் இரண்டு மாடிகளை உடையதாயிருக்கும். சென்னை மாகாணத்திலுள்ள ஐக்கிய நாணய கிராம பாங்கிகளில் திருச்சினாப்பள்ளி ஜில்லா லால்குடியிலுள்ளதும், செங்கல்பட்டு ஜில்லா உத்தரமல்லூரிலுள்ளதுந்தான் பெரியவை. லால்குடி பாங்கிக்கு ஒரு கட்டிடத்தை விலைக்கு வாங்கிவிட்டார்கள். உத்தர மல்லூர் கட்டிடம் வேலை முடிந்த பிறகு வழக்கமாயிருக்கவேண்டிய தஸ்தவேஜி அறை முதலியவற்றோடு ஒரு புஸ்தகசாலையும் ஒரு ரீடிங்கு ரூம் உள்ளதாயிருக்கும்.

**பாங்கி விஷயமான சட்ட நிரூபணம்.**—இந்தியா கவர்ன்மெண்டில் வர்த்தகம் கைத்தொழில் டிபார்ட்மெண்டுக்கு ஸெக்ரிடரியாகிய ஆனரபில் மிஸடர் எந்தோவனும் அப்பர் இந்தியா (வட இந்தியா) சேம்பர் ஆப் காமர்ஸ என்னும் வர்த்தக ஸங்கத்து மெம்பர்களும், ஸமீபத்தில் ஒன்றுகூடியபோது பேசப்பட்ட விஷயங்களில் பாங்கிகள் ஏற்படுத்துவதையும், நடத்துவதையும் ஒழுங்குபடுத்த முடியுமா என்பதைப்பற்றி ஆலோசித்தார்கள். மிஸ்டர் எந்தோவன் அப்போது குறிப்பிட்டதென்னவென்றால்.—



(1) பாங்கி வியாபாரத்தில் மற்ற வியாபாரங்கள் சேரும்படி விடலாமா?

(2) ஒரு குறித்த காலத்துக்குள் மூலதனத்தில் குறிப்பிட்ட பாகம் பங்குகள் எடுத்துக்கொண்டால் தான் பாங்கிகளை ரிஜிஸடர் செய்யலாம் என்ற நிபந்தனை ஏற்படுத்தலாமா?

(3) "பாங்கி" என்ற பெயரை இன்னார்தான் உபயோகப்படுத்தலாம் என்று சட்டம் ஏற்படுத்தவேண்டுமா?

(4) பாங்கிக் கம்பெனியார் கொடுக்கவேண்டிய பணத்துக்குத் தக்கபடி மூலதனமும் ரிஸர்வு பண்டும் சேர்ந்து நூற்றுக்கு இவ்வளவு என்ற ஒரு குறித்த அளவு ஏற்படவேண்டுமென்ற கல்கத்தாவில் சிலர் சொன்னார்கள். இது மெம்பர்களுக்குப் பிடித்ததா?

இவைகளுக்குக் கிடைத்த பதில் என்னவெனில்.—

(1) பாங்கிகள் வேறு வியாபாரங்களோடு ஸம்பந்தப்பட்டாவது அவைகளுக்கு உட்பட்டாவது இருக்கக்கூடாது.

(2) ஒரு குறித்த காலத்துக்குள் மூலதனத்தில் ஒரு குறிப்பிட்ட பாகம் பங்குகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

(3) பாங்கி என்ற பெயரை வர்த்தகர்கள் உபயோகப்படுத்துவது ஸம்பந்தமாய் தக்க விதிகள் ஏற்படவேண்டும்.

(4) மூலதனமும் ரிஸர்வ் பணமும் சேர்ந்து பாங்கி கொடுக்கவேண்டிய பணத்துக்கு ஒரு அளவு ஆகிறவரையில் டிவிடெண்டு பிரித்துக் கொடுக்கக்கூடாது, என்றார்கள்.

## விவஸாய கோவாபரேஷன்.

இந்த சங்கத்தார் செய்யக்கூடிய காரியங்கள் என்னென்னவென்று 'கிருஷிகன்' பத்திரிகை எழுதியிருக்கிறது:—

(1) மெம்பர்களில் தெரிந்தெடுத்த சிலரைக் கொண்டு விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்களால் பரீக்ஷித்துத் தெரிவிக்கப்பட்ட நூதன பயிர்களை சாகுபடி செய்யும் நூதன முறைகளை அநுஷ்டிக்கவும் ஏற்பாடு செய்வது.

(2) இபபடி சாகுபடி செய்த நூதன பயிர்களைப் பற்றிய விவரங்களை மற்றவர்களுக்குத் தெரியும் விதமாய்ப் பத்திரிகைகள் மூலமாய் வெளியிடல்.

(3) சங்கத்தின் மெம்பர்களின் உபயோகத்துக்காக கரும்பாலை, இரும்புக் கலப்பைகள், பல்மரம் முதலான விவஸாயக் கருவிகளைத் தருவித்து மெம்பர்களுக்கு விலைக்குக் கொடுத்தல்.

(4) மருக்களைந்து தெரிந்தெடுத்த நல்ல விதை தினுசுகளைத் தருவித்து மெம்பர்களுக்கு விலைக்குக் கொடுத்தல்.

(5) அயலிடங்களிலிருந்து மீன் எரு, பிண்ணாக்கு, வெடியுப்பு எரு முதலிய எருக்களைத் தருவித்து மெம்பர்களுக்கு விலைக்குக் கொடுத்தல்.

(6) விவசாய அபிவிருத்தியைப்பற்றிப் பிரசுரமாகும் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் வாங்கி மெம்பர்கள் வாசிக்கும்படி ஒவ்வொருவருக்கும் முறையே அனுப்புதல்.

(7) கிராமத்திலுள்ள கால்நடைகள் அபிவிருத்தி யடைவதற்காக நல்ல ஜாதி மாப்பிள்ளைக் காளையொன்று விலைக்கு வாங்கி வைத்துக்கொள்ளுதல்.

(8) நல்ல ஜாதிப் பசு ஒன்று வாங்கி, அதை நல்ல ஜாதிக்காளையைக் கொண்டு தாவ விட்டு, அதில் பிறக்கும், கன்றுகளுக்குக் கணக்கு ஏற்படுத்தி விவரங்கள் பதிந்து வைத்து, இவ்விதமாக அந்த உயர்ந்த ஜாதிக் கால்நடைகளை வர்க்க விருத்திசெய்தல்.

(9) சங்கத்தின் மெம்பர்களின் உபயோகத்துக்காகக் கால்நடை மேய்ச்சல் நிலங்களை வேலியிட்டு பந்தோபஸ்து செய்து புல்வளர்த்தல்.

(10) சங்கத்தின் மெம்பர்களின் குரும்பாடுகள் வர்க்கவிருத்தியாவதற்கும், கம்பளி ரோமம் அபிவிருத்தியாவதற்கும், உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஆட்டுக் கடாக்களை விலைக்கு வாங்கி ஆட்டுக்கிடைகளில் கலக்கவிடுதல்.

(11) சங்கத்தின் மெம்பர்கள் சாகுபடி செய்யும் பயிர்களை கால்நடைகள் சேதப்படுத்தாமல் காக்க காவற்காரரை நியமித்துக்கொள்ளல்.

(12) சங்கத்தின் மெம்பர்களின் விளைபொருள்களை லாபகரமான விதமாய் விற்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தல்.

(13) கால்நடை வியாதிகளையும் பயிர்களுக்குண்டாகும் நோய் நொடிகளையும் நிவர்த்திக்க அவசியமான சிகிச்சை தேடுதல்.

# கூட்டுத்தொழிலின் அபிவிருத்தி.

## இந்தியா—மதராஸ்.

1911-12-ம் வருஷத்து கூட்டுத்தொழில் நாணயச்சங்கங்களின் நடவடிக்கையைப்பற்றிய வருஷாந்திர ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது:—

இவ்வருஷத்தில் சென்ட்ரல் சொசைடிகள் 5-லிருந்து 6-யும், அர்பன் சொசைடிகள் 30-லிருந்து 40-யும், கிராமச்சங்கங்கள் 595 + 1 யூனியனிலிருந்து 969 + 3 யூனியன்களாயும் அதிகரித்திருக்கின்றன. அப்படியே சென்டரல் சொசைடியின் மெம்பர்களின் மொத்தம் 420-லிருந்து 643-யும், அர்பன் சொசைடியின் மெம்பர்களின் மொத்தம், 9,596 லிருந்து 13,527-யும், கிராமச் சங்கங்களின் மெம்பர்கள் மொத்தம் 44,102-லிருந்து 66,156—யும். அதிகரித்திருக்கின்றன. கூட்டுத்தொழில் சங்கங்களின் மூலதனமானது 49,15,023 ரூபாயாயிருந்து 74,63,739. ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

* * *

பொதுவாய் ராஜதானியிலும், குறிப்பிட்டுச் சொல்லுமிடத்து ஏற்கனவே ஸ்தாபனமாயிருக்கிற சங்கங்களுள்ள அனேக ஜில்லாக்களிலும் இன்னும் நாணயச் சங்கங்களை விருத்திபண்ண வேண்டுமென்ற நோக்கமே ஜனங்களுக்கு உண்டாயிருக்கிறது. உத்தரவாதப் பொறுப்பு வரையறுக்கப்படாமலிருக்க வேண்டுமென்கிற ஷரத்து மனுதார்களைத் தடைபண்ணவில்லை. முதலில் இம்மாதிரி உத்தரவாதத்தை கிராமத்தார் விரும்பாவிட்டாலும், இதில்லாத பட்சத்தில் வெளியிலிருந்து முதல் தங்களுக்கு உபயோகப்படாது என்பதைத்தெரிந்து கொள்வதால் அந்த ஷரத்துக்கு அனுஸரணையாய் ஒப்புக்கொள்வதுபோல் காண்கிறது.

சர்க்கார் தனசகாயம் செய்யவேண்டுமென்பது அடியோடு ஒழிந்து போய் விட்டது. கவர்ன்மெண்டாரின் மேல்விசாரணையும், தணிக்கையும் இருந்தாற்போதும். சங்கங்களுக்கு வேண்டிய பணத்தை நீண்ட காலத்திற்கு அடமானத்தின் பேரில் கொடுக்க முதலாளிகள் தயாராயிருக்கிறார்கள்.

* * *

இவ்விராஜதானியின் தற்கால க்ஷேமநிதியின் மொத்தம் 2,07,500 ரூபாய். இது சென்ற வருஷத்தை விட 100-க்கு 60 வீதம் அதிகமாயிருக்கிறது. மற்ற மாகாணங்களில் (உதாரணமாக பம்பாயில்) க்ஷேமநிதியை தொழிலின் மூலதனமாய் உபயோகிக்கலாமென்று சங்கங்களுக்கு அநுமதி

கொடுப்பது வாடிக்கைபோல் காண்கிறது. இவ்விராஜதானியில் யாதொரு சங்கமும் தன் க்ஷேமநிதியை தானே வைத்துக் கொள்ளக்கூடாது. ஜில்லா அல்லது செண்ட்ரல் பாங்கிகளில் போட்டுவைக்கவேண்டும். மதராஸ் செண்டரல் அர்பன் பாங்கியின் க்ஷேமநிதி மதராஸ் பாங்கியில் போடப்பட்டிருக்கிறது. க்ஷேமநிதியிலிருந்து உண்டாகும் லாபத்தை, யூனியன் முறைகளைச் சீர்திருத்தவும், விஸ்தரிக்கவும் உபயோகப் படுத்துவதற்காக யோசனைகள் ரிவின்யூ போர்டில் நடந்து கொண்டிருக்கின்றன.

கலியாணச் செலவுக்காக கடன் வாங்குவது வர வர அதிகரித்து வருகிறது. இது நாட்டுச் சங்கங்களைக் காட்டிலும் நகரச் சங்கங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

*　　　*　　　*

முன் கடன்களை அடைக்கக் கடன் வாங்குவதும் அதிகரித்திருக்கிறது.

*　　　*　　　*

பின் வரும் புதிய நகர பாங்கிகள் விசேஷமாய் கவனிக்கத்தக்கவை. தஞ்சாவூர் எலிமெண்டரி உபாத்தியாயர்களின் சங்கம் (கி. 835) தஞ்சை முனிசிபாலிடி எல்லைக்குள்ளுள்ள எலிமெண்டரி உபாத்தியாயர்களின் வேண்டுகோளின்படி ஏற்படுத்தப்பட்டது. முனிசிபாலிடி முதலிய ஆபீசுகளில் அமர்ந்திருக்கும் சொற்ப சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்களுக்குள்ள சொற்ப தேவைகளை கொடுத்து உதவும்பொருட்டு செய்யும் ஏற்பாடுகளில் இது தான் ஆரம்பம். இம்மாதிரி சங்கங்களில் சேர்ந்தது காலரகோடு எலிமெண்டரி உபாத்திமார்களின் சங்கம். சமீபகாலத்தில் இப்பேர்ப்பட்ட உபாத்திமார் சங்கம் அநேகம் ஏற்படுமென்று எண்ணுகிறேன்.

இப்பட்டணத்தில் நடு வகுப்பினர்களுக்காக (middle classes) ஏற்படுத்தப்பட்டிருக்கிற மதராஸ் சிடி கோ ஆபரேடிவ் பாங்கி லிமிடெட். (கெ. 900) சுத்தமான நாணயச் சங்கங்களுள் முதலானதாயிருக்கிறது. இப்போதைக்கு அது ஸ்தாபிக்கப்பட்டு மூன்றுமாதங்கள் தானாயிருந்தபோதிலும் மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டே வருகிறது. இதைத்தவிர, மதராஸ் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களின் கூட்டுத்தொழில் பாங்கி (The Madras Government Servant's Co-operative Bank) என்ற ஒரு சங்கம் கவர்ன்மெண்டாரின் அநுமதியின் பேரில் கெ. 980 வது சங்கமாக ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வருஷத்தில் ரிஜிஸ்தரான சங்கங்களுக்குள் 601 நெம்பர் மத்திரிரி நகர பாங்கி லிமிடெட், சிற் சில விஷயங்களில் மிக அதிசயிக்கப்படத் தக்கதாயிருக்கிறது. அந்த பாங்கி மத்திரிரி ரிமௌண்ட் டிபோவின் சூப்ரெண்டெண்டாகிய மேஜர் ஜி. எச். பாட்கார் அவர்களின் தயாளகுணத்தால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த சொஸைடி ரிஜிஸ்தர் செய்வதற்கு முன்னேயே அவர் அக்கிராமக் குடிகளுக்கு கூட்டுமுறையின் சித்தாந்தங்களை உபதேசித்திருக்கிறார். அப்படிச் செய்ததின் பலனாக இப்போது, கூட்டுத்தொழில் முறையின் கிராம சொட்டுகளுக்கும், கிராம வகாதாரத்துக்கும் ஒரு கருத்துப் பாடமாக விளங்குகிறது: மத்திரிரி பாங்கி டிபோவின் மேலதிகாரிகளுக்கு நன்மை செய்வதைத்தவிர அநேக குதிரைக்காரர்களுக்கும் மாட்டுவண்டிக் காரர்களுக்கும் சொற்ப வட்டிக்குப் பணத்தைத்தந்து, அதை கெடுவு தப்பாமல் திருப்பிக் கொடுக்கவும் திட்டம் செய்கிறது. இந்த பாங்கி மேஜர் பாட்கார் அவர்களின் சீர்திருத்தத் திறமையின் உத்கிருஷ்டமான வேலையாயிருக்கிறது.

*　　　*　　　*

கடன்கள்.—கடன்களை மீட்கக் கொடுத்த கடன் தொகையின் மொத்தம், மொத்தக்கடன் தொகையில் 100-க்கு 47·5 விதமாயிருக்கிறது. இது சென்ற இரண்டு வருஷங்களைவிட அதிகம். ஆனால் உற்பத்திக் காரியங்களுக்காக மொத்தத்தில் 100-க்கு 50.7 விதம்தான் பட்வாடா செய்யப்பட்டது. இத்தொகை சென்ற இரண்டு வருஷங்களில் 100க்கு 54·4 விதமிருந்தது. உற்பத்திக்கல்லாத இதர காரியங்களுக்கு 1909-11-ளுல க்கு 1·7 விதமிருக்க இவ்வருஷம் மொத்தத்தில் 1.8 விதம் கொடுக்கப்பட்டது. ரூபாய் 250-ம் அதற்கு மேற்பட்ட தொகையுள்ள கடன்களுக்கு சென்ற இரண்டு வருஷங்களில் மொத்தத்தில் நூற்றுக்கு 19·5 விதம் கொடுத்திருக்க, இவ்வருஷம் நூற்றுக்கு 23·9 விதம் கொடுக்கப்பட்டது. ஸ்தாவர சொத்தின்பேரில் நூற்றுக்கு 43·2 விதமும், நபர் ஜாமீன் பேரில் நூற்றுக்கு 55·7 விதமும் கடன் கொடுக்கப்பட்டது. இவை சென்ற இரண்டு வருஷங்களில் முறையே நூற்றுக்கு 47·4 விதமும், நூற்றுக்கு 50·7 விதமுமாயிருந்தது. நபர் ஜாமீன்மேல் கடன்கொடுப்பதை துரிதப் படுத்துவதைப் பற்றி இந்த இலாகா மிகவும் மேலாக நினைக்கிறது. கூட்டுத்தொழில் முறையாய் நோக்கின் இது சரியான வழிதான். ஆனால், அதர்மத்துக்கஞ்சாத பேர் வழிகளின் கையில் இந்த ஷ்யூரிடிஷிப் முறை அநேக துர்விநியோகங்களுக்கு ஹேதுவாகிறது. இப்படி ஷ்யூரிடிஷிப்பின்மேல் கடன் கொடுப்பதற்கு நல்ல சங்கங்களுக்குத்தான் அநுமதி கொடுக்க வேண்டும்.

*　　　*　　　*

சங்கங்களில் காணப்படுகிற முக்கியமான துர்விநியோகங்களையும், அபாயமான அல்லது அயோக்யத்தனமான அப்பியாசங்களையும் நான் ஒன்பது முக்கிய பாகங்களாகப்பிரிப்பேன்.—

1. மிகுதியான கையிருப்பு.—யாதொரு சங்கமும் கையிருப்பில் அதிகமாய் ரொக்கம் வைத்துக்கொள்ளக் கூடாது. அப்படி அதிகமாயிருந்தால் மெம்பர்களுக்கு கடனாக பட்வாடா செய்யவேணும் அல்லது செண்ட்ரல் பாங்கிகளில் போட்டுவைக்க வேணும். வரவுப் பணத்தை சரியான கணக்குகளில் வரவுக் காண்பிக்காமல், சொற்பகாலம் வரை துர்விநியோகம் செய்து கொண்டிருந்தால், அதைக் கையிருப்புப்போல் காண்பிப்பது தான் இயல்

பான யுக்தி. பரிசோதனை செய்கிறவரையில் இக்குறிப்பு மிகச்சாதாரணமாயிருக்கிறது. பரிசோதனை செய்யப்பட்டால் அப்போது சிக்ரிடெரி அல்லது பிரஸிடெண்டு குறையும் பணத்தை அன்றையதினம் மாத்திரம் இன்ஸ்பெக்டருக்கு எதிரில் காண்பித்து விட்டு பிராஸிக்யூஷனினின்றும் தப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

2. பஞ்சாயத்தார்களுக்குக் கடன் கொடுத்தல்.—பஞ்சாயத்தார்கள், கடன் பெறுவதற்கு முதல் பாத்தியஸ்தர்களென்றும் அல்லது பெரிய கடன்கள் வாங்க சுதந்திர முடையவர்களென்றும் அநேக சங்கங்கள் அபிப்பிராயங் கொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் சங்கங்கள் ஏற்படுத்துவதற்காக கிராமத்தின் பிரதான ஜனங்களை அவர்கள் கடன்களினின்றும் விடுவிக்கிறதாக ஆசை காட்டுவது அவசியமாயிருந்திருக்கும். ஆனால், தற்கால நிலைமை அப்படியில்லை. மிகக்கண்டிதமான ஷரத்துகளின்படி அவர்களை பலாத்காரம் செய்யலாம்.

3. பினாமி கடன்கள்.—ஒரு பிரசிடெண்டு அல்லது சிக்ரிடெரி, தன்னை பக்ஷபாதமில்லாதவரென்று பாவிக்கும் பொருட்டு தன் சிநேகிதரொருவருக்குக் கொடுக்கும்படி செய்வார். ஆனால் வாஸ்தவத்தில் அப்பணம் தனக்காகத் தானிருக்கும். இப்படிச் செய்வதினால், ஒருவன் தான் சட்டப்பிரகாரம் வாஸ்தவமாய் மொத்தம் எவ்வளவு கடன் பெற லாயக்கோ அதைவிட அதிகம்பெற ஒரு சாதனமாகிறது.

4. ரசீதுகொடுக்க மறுத்தல்.—சாதாரணமாய் ரயத்துகள் ரசீது பெறுவதில் மிக அசிரத்தையாயிருக்கிறார்கள். அவர்கள் ரசீது கேட்கிறதுமில்லை, பெற்றாலும், அவற்றைப் பத்திரப்படுத்துவதுமில்லை. ஒரு சிக்ரடெரி அல்லது பிரசிடெண்டு ரசீதை நிறுத்திக்கொண்டு, தண்டனைக்குள்ளாகாமல் வரவுப் பணத்தைத் தானே உபயோகித்துக் கொள்ளலாம். இவ்விதமாக கடனாளி தன் கேஸை ரூபிக்க முடியாமல் போகிறது.

5. நபர் ஜாமீன்.—ஸ்தாவர சொத்துக்களின்பேரில் கடன் கொடுப்பதை விட, நபர் ஜாமீன்மேல் கடன் கொடுப்பது நல்லது என்று கூட்டுத் தொழிலைச் சேர்ந்தவர்கள் மிகப்பரிந்து பேசுகிறார்கள். இந்த ஏற்பாட்டினால், 500 ரூபாய்கூட சொத்தில்லாத ஒரு மெம்பர் பலபேர்களுக்கு 1000 ரூபாய் வரை ஜாமீன் கொடுத்திருக்கிற அநேக திருஷ்டாந்தங்கள் வெளிக்கு வந்திருக்கின்றன.

6. பழையபாக்கி வசூலிப்பதின் அசிரத்தை.—தாங்களே சங்கத்திற்கு பெருந்தொகைக் கடன்களைக் கொடுக்கவேண்டியிருக்கும் சில பஞ்சாயத்தார்கள், இயல்பாய்க் கொடுக்கவேண்டிய மற்ற கடனை வசூல்செய்கிற விஷயத்தில் மிக அசிரத்தையாயிருக்கிறார்கள். சில சங்கங்கள் பாக்கிபணத்தை வசூல் செய்வதில் மிக்க அசிரத்தையாயிருக்கின்றன. இவற்றிற்குச் சரியான சிகிச்சை அச்சங்கங்களை அடியோடு ரத்து செய்வதுதான்.



7. மெம்பர்களுக்குப் புதுப்பித்த கடன்கள்.—தவணை தப்பிய கடன்களை வெளிக்காட்டாதிருக்க அப்போதைக் கப்போது அக்கடன் பத்திரங்களை புதுப்பிக்கும்படி கடனாளிகளுக்குக் கட்டளையிடப்படுகிறது. இப்படிச் செய்வது மிக்க அபாயத்திற்கிட முண்டாகும். இதை ரத்துசெய்ய புதிதாக லையபிலிடி ரிஜிஸ்தர் என்ற ஒரு ரிஜிஸ்தர் ஒவ்வொரு சங்கமும் வைத்திருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்.

8. சங்கங்களுக்குப் புதுப்பித்த கடன்கள்.—சில சமயங்களில் செண்ட்ரல் அல்லது டிஸ்டிரிக்ட் பாங்கிக்கு வாயிதா மிஞ்சிய ஒரு தவணைப் பணத்தைக் கொடுப்பதற்காக ஒரு சங்கம் இரண்டாவது அல்லது 3-வதுதரம் கடனுக்காக மனு செய்துகொள்வது வழக்கம். மெம்பர்களுக்கு வேண்டுமென்று சில சங்கங்கள் இடைவிடாமல் செண்டரல் பாங்கிகளுக்கு கடனுக்காக மனுசெய்து கொள்ளுகின்றன. ஆனால்அப்பேர்ப்பட்ட கடனை சிபார்சு செய்கிறவருக்கு, அப்பணம் சரியாய் உபயோகிக்கப்பட்டதாவென்று கண்டுபிடிக்க முடியாது. இவ்வபாயத்தை விலக்க அடிக்கடி சங்கங்களைப் பரிசோதனை செய்வது அவசியமாயிருக்கிறது.

9. ஒருவரே நடத்தும் சங்கம் ஒன்பதாவதும் கடைசியுமான அபாயம்.—ஒருவனே ஒரு சங்கத்தின் நடவடிக்கைகளை யெல்லாம் நடத்திக்கொண்டு வரும்பொழுது, அவன் அதர்மத்திற்கும் அஞ்சாதவனாயிருந்தால் மேற்சொன்ன கெடுதிகளெல்லாம் பிரசன்னமாயிருப்பதோடுகூட அவைகளைக் கண்டுபிடிக்கவும் முடியாமலிருக்கும். ஒரு கிராமத்தில் பொதுவாய்க் கல்லாமையே இவ்வாபத்திற்கு இடமாயிருக்கும். ஆனால் கல்வியேயில்லாமல் அநேக கிராமங்கள், முக்கியமாய்க் கள்ளர் பிரதேசங்களில், இருக்கின்றன. அவைகள் தங்கள் கிராம விஷயத்தைப் பொறுத்தமட்டில் மிக்க ஜாக்கிரதையோடிருக்கின்றன. இது இப்படியிருக்க, படிப்பு அதிக முள்ள கிராமாந்தரங்களில் கிராமத்தார் அவர்களுடைய சங்கத்தை ஒருவரே நடத்துவதுபோல் பார்க்கிறார்கள்.

* * *

க்ரூப்புகள்.—அநேக சங்கங்களடங்கிய க்ரூப்புகளை இதுவரை யூனியன்களாக ரிஜிஸ்தர் செய்யப்படாதிருந்தாலும் இப்போதைய ஆக்டின் பிரகாரம் இனிமேல் யூனியன்களாக ரிஜிஸ்டர் செய்யப்படலாம்; ஒரு க்ரூப்பு அக்கம் பக்கத்திலுள்ள 3-முதல் 10-சங்கங்களை அடங்கியிருக்கிறது; அவைகள் க்ரூப்பு பரிசோதகர் ஒருவரால் பார்க்கப்பட்டு ஒழுங்காய் வைக்கப்படுகின்றன. க்ரூப்பிலுள்ள ஒவ்வொரு சங்கமும் அவருக்கு மாதம் ஒரு ரூபாய் விழுக்காடு கொடுக்கிறது. 1911-12-ம் வருஷத்தின் இறுதியில் இவ்விராஜதானியில் 27 சங்கங்களடங்கிய அப்பேர்பட்ட க்ரூப்புகள் 18-இருந்தன. ஒரு க்ரூப்பானது இயல்பாய் ஏற்ற சமயத்தில் அந்தந்த இடத்துக்குரிய யூனியன் ஏற்பட ஹேதுவாகிறது.

## தானிய பாங்கிகள்

1912-ஞு மேமீ 31தேதி ரிஜிஸ்டரான (நெ. 968) கீழ்ச்சேரி தானிய பாங்கியைத் தவிர, இவ்வருஷத்தில் ரிஜிஸ்தர் ஆன கிராமச் சங்கங்களெல்லாம் ரொக்கபணச் சங்கங்கள். இச்சங்கத்தைப் பின் தொடர்ந்து (நெ. 977) பாகல்பட்டி கூட்டுத்தொழில் தானிய விளைபொருள் பாங்கி, லிமிடெட், புத்தூர் கூட்டுத்தொழில் தானிய பாங்கி லிமிடெட், (நெ. 978) ஆகிய இவ்விரண்டு சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

## கூட்டுத்தொழிலின் மற்ற ரூபங்கள்.

இதுவரை கணக்கிற்கல்லாத மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் கவர்ன்மெண்டாரின் ஸ்பெஷல் அநுமதியின் பேரில் தான் 1904 ஞு 10 வது ஆக்ட் 29 வது செக்ஷன்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இப்போது நடைபெறும் 1912 ஞு 2 வது ஆக்டின்படி ரிஜிஸ்ட்ரார் எவ்வித கூட்டுத்தொழில் சங்கத்தையும் ரிஜிஸ்தர் செய்யலாம்; அவ்வண்ணமே, வீடுகட்ட நிலம் வாங்கவும், திருவல்லிக்கேணி கோவாபரேடிவ் ஸ்டோருக்கு நல்லெண்ணெய் உற்பத்திசெய்து ஸப்ளைசெய்யவும் (நெ 922)மாம்பலம் கூட்டுத்தொழில் சங்கம் என்ற ஒரு சங்கம் 1912 ஞு ஏப்ரல் மீ 2 ந்தேதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. நாணயமல்லாத மற்ற சங்கங்களுக்காக அநேக மனுக்கள் ரிஜிஸ்தாருக்கு வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் ஆலோசனையிலிருக்கின்றன. (நெ. 938) குன்னூர். ஆங்லோ-இந்தியன் லீக் கோவபரேடிவ் ஸ்டோர்ஸ், லிமிடெட் சரக்குகளைப் பிரிவினை செய்யும் சங்கங்களிலொன்றாய் 1912 ஞு மே மீ 9 ந்தேதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. இதற்கு எதிரிடையாக, உதகமண்ட் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், வருஷா வருஷம் அடையும் நஷ்டத்தால் சீக்கிரத்தில் அழிந்துபோகும் போல் காண்பது மிக விசனிக்கத் தக்கதாயிருக்கிறது. இவ்வருஷம் ஆகேரிலிருந்து மாம்பலம் சங்கம் ஏற்படுவதற்குமுன், நம்முள் ஒரே உற்பத்திச் சங்கமாயிருந்த (நெ. 21) பெரிய காஞ்சீபுரம் நெசவுக்காரர் யூனியன் பொறுப்பு வரையறுத்த சங்கமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

## மற்ற தேசங்களில்.

### ஜெர்மனி

ஜெர்மன் கூட்டுத்தொழில் சங்கத்தின் சென்ட்ரல் லீக்கின் சென்ற வருஷத்திய பலனைச்சேர்க்க மிக்கத் திருப்திகாமாயிருக்கிற தென்று கோவாபரேடிவ் பியூல் என்னும் பத்திரிகை வெளியிடுகிறது. சென்ற வருஷத்தின் கடைசியில் அதில் மொத்த மெம்பர்களின் தொகை 1,325,000 இப்போது 15 லக்ஷத்திற்கு அதிகமாகவே யிருக்கிறதாம். விற்பனையை நோக்கின் அது 1911 ம் ஞுல் 25,300,000 பவுனிலிருந்து 1912 ஞுல் இன்னும் 5,000,000 பவுன் அதிகமாயிருக்கிறது.



ஜெர்மன் கூட்டுத்தொழில் மொத்த விற்பனைச்சங்கத்தின் அபிவிருத்தி குறிப்பில் வைக்கத்தக்கதாயிருக்கிறது. அதின் மொத்தவிற்பனை 5,200,000 பவுனிலிருந்து 1912 ம் ஞுல் 7,000,000 பவுனுக்கு அதிகரித்திருக்கிறது. இதற்கிசைய ஜெர்மன் கோவாபரேடிவ் மொத்த விற்பனையின் உற்பத்தி இலாகாவின் அபிவிருத்தியும் அதிகரித்திருக்கிறது.

சென்ற வருஷத்தில் நடந்த முக்கியமான விஷயங்களுக்குள் ஜாயிண்ட் கோவாபரேடிவ் அண்ட் ட்ரேட் யூனியன் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடியின் ஸ்தாபனம் மிக கவனிக்கத்தக்கது. நிகழும் வருஷத்தோடு லீக் ஏற்படுத்தி 10 வருஷம் முடிவாகப் போகிறது. இதற்குள் அது நல்ல வெற்றியை யடைந்திருப்பது மகிழ்ந்தக்கதென்று எல்லாரும் ஒப்புக்கொள்ள யாதொரு ஆக்ஷேபனையு மிருக்காது.

### இட்டாலி.

இட்டாலியின் வடமேற்கு பாகத்தில் இப்போது மீன் பிடிக்கிறவர்கள் அதாவது செம்படவர்களின் கூட்டுத்தொழில் சங்கங்கள் ஐந்து இருக்கின்றன. கூட்டுமுறையில் மீன்பிடிக்கும் தொழிலைத்தவிர இச்சங்கங்கள் மத்தியஸ்தனைத் தள்ளிவிட்டு மீனை நேரே தாங்களே விற்கும். சொந்த மீன் பிடிக்கிற படகுகளை உடைத்தாயிருக்கிறதைத் தவிர, இச்சங்கமானது செம்படவர்களுக்கு ஒரு நூல்கட்டவும், மீனை தன் சொந்தக்கடைகளிலேயே விற்கவும் உத்தேசித்திருக்கிறது.

### ஸ்விட்ஸர்லண்ட்.

1912-ம் ஞுத்தில் ஸ்விஸ் கூட்டுத்தொழிற் சங்கங்களின் யூனியனுக்குச் சேர்க்கப்பட்ட சங்கங்களின் மொத்தம் 348-லிருந்து 369-ய் அதிகரித்திருக்கிறது. அவ் யூனியனின் மொத்த விற்பனை 1,283,840-பவுனிலிருந்து 1,490,840 பவுனுயதிகரித்திருக்கிறது.

ஆனால் உற்பத்தி மார்க்கத்தில் முயற்சி யுண்டாயிருப்பது சென்ற வருஷத்திய விசேஷமான குறிப்பாயிருக்கிறது. அந்த யூனியனின் வைக்கமானது, பேஸல் என்னும் பட்டணத்தில் ஏற்படுத்தியிருக்கும் பாதரக்ஷை உண்டுபண்ணும் கைத்தொழிலாலும், ஜ்யூரிச் என்னும் இடத்திலுள்ள முக்கியமான மாவு அரைக்கும் யந்திரத்தை வாங்கியிருப்பதாலும் வெளியாகிறது. இவைகளெல்லாம் யூனியனின் பிற்கால நற்கதிக்கு ஒரு அறிகுறியாயிருக்கிறதாக எடுத்துக்கொள்ளலாம்.

இந்த ஸ்விஸ் கூட்டுமுறையின் விசேஷம் என்னவென்றால், ஸ்விட்ஸர்லண்டில் பிரெஞ்சு, ஜெர்மன், இடாலியன் ஆகிய மூன்று பாஷைகள் பேசப்பட்டாலும், ஜாதி, பாஷை [illegible]. இந்த யூனியன் ஒவ்வொரு பாஷையிலும் பிரசுரிக்கப்படுகிற ஒரு தனிக் கூட்டுத்தொழில் பத்திரிகையையும் உடைத்தாயிருக்கிறது.

# மதராஸ் ஐக்கியநாணயச் சங்கங்களின் கான்பிரன்ஸ்.

———:(o):———

முதலாவது மதிராஸ் ஐக்கியநாணயச் சங்கங்களின் மாகாண கான்பிரன்ஸ் 1912-ம் ௵ டிசம்பர் ௴ 21-ந்தேதி யன்று மாலை பச்சையப்பன் கலாசாலை ஹாலில் கூடியது. ராஜதானியின் எல்லாப் பாகங்களிலு மிருந்தும் அநேக டெலிகேட்டுகள், உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தரல்லாத மற்ற கனவான்கள் முதலினோர் விஜயம் செய்திருந்தார்கள். மாட்சிமை தங்கிய கவர்னர் தன் எடிகாங்கோடு சுமார் $2\frac{1}{4}$-மணிக்கு வந்துசேர்ந்தார். கனம் ஸர் ஜான் அட்கின்ஸன், திவான் பஹதூர் பி. ராஜரத்தின முதலியார், திவான் பஹதூர் எம். ஆதிநாராயணய்ய பந்துலு, மிஸ்டர் டி. ரங்காச்சாரியார், திவான் பஹதூர் எல். டி. ஸ்வாமிகண்ணுப்பிள்ளை ஆகிய இக்கனவான்கள் அவரை நல்வரவுடன் எதிர்கொண்டு அழைத்து ஹாலுக்கு அழைத்துச் சென்றார்கள்.

## நல்வரவுப் பிரசங்கம்.

திவான் பஹதூர் பி. ராஜரத்தின முதலியார் அவர்கள் நல்வரவு கூறியழைத்ததன் சாராம்சம் பின்வருமாறு:—

இந்தக் கான்பிரன்ஸைத் திறந்து தாழ்ந்த, இப்பிரயத்தனம் மேன்மேலும் செழித்து வளர்ந்து பலன் தரும்படி ஆசீர்வதிக்க இவ்விடம் விஜயம் செய்திருக்கும் நமது மாட்சிமைதங்கிய கவர்னர் பெருமானாகிய லார்ட் பென்ட்லண்டுக்கு விசேஷ வந்தனம் அளிக்கிறோம். இவர் வந்துசேர்ந்த இரண்டுமாத காலத்திற்குள் எத்தனையோ ராஜாக்கள், ஜமீன்தார்கள் மற்றுமுள்ள பெரிய கனவான்கள் முதலினோருக்குப் பேட்டி கொடுத்தும், அநேக வித்யாசாலை போன்ற பொதுஸ்தானங்களை நேரில் போய்ப்பார்த்தும், அநேக விஷயங்களைத் தாமே நேரில் பார்த்துத் தெரிந்துகொண்டு மிருக்கிறார். இவ்வளவு காரியங்களுக்கு மத்தியில் மிக்க அசௌகரியத்தோடு இந்த மீட்டிங்குக்கு விஜயம் செய்ய சாத்தியப்பட்டதற்காகவும், அதனால் நமக்கு உண்டான கௌரவத்திற்காகவும் நாம் அவர்களுக்குப் போதுமான அளவு வந்தனமளிக்க சக்தியற்றவர்களா யிருக்கிறோம். தமக்குள்ள பற்பல ஜோலிகளுக்கிடையில் இக்கான்பிரன்ஸில் அக்கிராசனத்தை வகிக்க ஒப்புக்கொண்டதற்காக கனம் ஸர் ஜான் அட்கின்ஸன் அவர்களுக்குக் நாம் வந்தன மளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.



கனவான்களே, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் இத்தேசத்தாருக்கு அளிக்கப்பட்ட நன்மைக ளெல்லாவற்றிலும் கூட்டுமுறைதான் மிக முக்கியமாகவும், நாளடைவில் நல்ல பலனைக் கொடுக்கக் கூடியதுமாகவும் காணப்படுகிறது.

இம்முறை ஆரம்பித்து எட்டாவது வருஷமாகிய 1912 ம் ௵ ஜூன் மாஸம் 30 ந்தேதி ரிபோர்ட்டைப் பார்த்தால் சங்கங்களின் மொத்தத் தொகை 1910-11 ம் ௵ 596 லிருந்து 972 க்கு அதிகரித்து விட்டது: மெம்பர்களின் மொத்தத்தொகை 44,102 லிருந்து 66,156 க்கு அதிகரித்து விட்டது: தொழில் முதலை 49,15,022 ரூபாயிலிருந்து 74,63,739 ரூபாயிக்கு அதிகரித்து விட்டது. ஆனால் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தத்தொகையானது முந்தின வருஷத்தில் 40,546 ரூபாயும் இவ்வருஷத்தில் 36,030 ரூபாயுமா யிருப்பது கவனிக்கத்தக்க விஷயமே.

கனவான்களே, மேற்குறித்த தொகைகளே சகல விஷயங்களையும் அறிவிக்கின்றன. வியாக்யானமே அனாவசியம். சிலநாட்களுக்குமுன், ஐக்கியநாணயச் சங்கங்களின் முதல் ரிஜிஸ்ட்ராராயிருந்த திவான் பஹதூர் பி. ராஜகோபாலாச்சாரியாரிடத்திலிருந்து என்னால் பெறப்பட்ட ஒரு கடிதத்தில் தம்மால் இந்த மீட்டிங்குக்கு வரமுடியாமற் போனதைப்பற்றி தம் விசனத்தைக் காண்பித்துவிட்டு அவர் குணத்துக்கேற்ற வணக்கத்தோடு பின்வரும் விசேஷ குறிப்பையும் தெரிவித்திருக்கிறார்:—"நான் 1904 ம் ௵ இக்கூட்டுமுறையை ஆரம்பித்தபோது நம்முள் சிற்சில பேர்கள் மாத்திரம் இம்முறையினின்றும் ஏதாவது நன்மையுண்டாகக் கூடுமென்று நம்பினோம். ஆனாலும், முழுவதும் இப்போது ஒரு பெரிய விஷயமாகவே ஆய்விட்டது. இம்முறை ஆரம்பித்து எட்டு வருஷங்கள்தான் ஆயினவென்று நிஜப்படுத்துவது கஷ்டம்." ஆம். இச்சொற்பகாலத்தில் இவ்வளவு சித்திபடைந்திருக்கிறது அதிசயிக்கத் தக்கதுதான். இதுவரை தொட்டது நம்முன்னிருக்கும் விசாலமான நிலத்தின் ஒரு பின்னம்தான். நம்மால் தொடப்படாமலேயிருக்கும் ஜமீன்தாரி, இனாம் கிராமங்களைத்தவிர ராஜதானியில் 33,000 சர்க்கார் கிராமங்களிருக்கின்றன. கிராமக்காரிய நிர்வாகத்திற்காக ஒரு கிராமத் தலைமையின் கீழ் குரூப் செய்யப்பட்டு இருக்கின்றன. தற்காலத்தில் முன்னேயே ஏற்படுத்தப்பட்ட கோ ஆபரேடிவ் நாணயச் சங்கங்கள் சுமார் 3,000 கிராமங்களுக்கு உதவுகின்றன. ஆனால் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் வெகுவாய் இல்லவே இல்லை. இப்படியாக இவ்விரண்டு மார்க்கத்திலும் இயக்கத்தை விருத்திசெய்ய வேண்டிய வழியிருக்கிறது. இம்முறையினுடைய விருத்தியை ஜாக்கிரதையாய்க் கவனித்து வருபவர்களின் அபிப்பிராயமென்னவென்றால், கவர்ன்மெண்டார், கடன் வாங்குவதற்காக கிராம நாணயச் சங்கங்கள் ஒரே திரளமாய் அதிகரிக்கும்படி தேற்றுவதைத் தவிர;

உற்பத்தி செய்வதற்கும், பிரிவினை செய்வதற்கும், விவசாய விளைபொருள்களை விற்பனை செய்யவும் கூட்டுறவு விவசாயச் சங்கங்களை அதிகரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தகுந்த காலம் வந்துவிட்டது. தாத்கால நிலைமையில் பின் சொன்னவைகளை ஏற்படுத்துவது கொஞ்சம் கஷ்டம் தான். அதனால் விசேஷ ஜாக்கிரதையும் ஆதரவும் வேண்டியிருக்கிறது. அதற்காக ஸ்பெஷல் சிப்பந்திகளும் அவசியமா யிருக்கின்றனர். 1912ஹு ஜுன் மாதக் கடைசியில் புதிய நாணயச்சங்கங்கள் ஏற்படுத்துவதற்காக நூற்றுக்கணக்கான மனுக்கள் பைசல் செய்யப்படாமலிருப்பதாகத் தெரியவருகிறது. இப்போது இம்முறையின் வெற்றியானதுகொஞ்சங்கூட சந்தேகத்திற்கிடமில்லாமல் நிலை நாட்டப்பட்டிருக்கிறபடியால், காலதாமத மன்னியில் மனுக்களை பைசல் செய்யவும் எவ்வெவ்விடங்களில் புதிய சங்கங்கள் ஏற்படுத்த சௌகரிய மிருக்கோ அவ்வவ்விடங்களில் ஏற்படுத்தவும் போதுமான டிப்டி கலெக்டர் முதலிய சிப்பந்திகளை சாங்க்ஷன் செய்ய கவர்ன்மெண்டார் எள்ளளவும் தாமதிக்கக்கூடாது. ரிஜிஸ்தாரின் வேலையும் இப்போது மிக்க அதிகரித்து விட்டது. அவருக்கு முதலாவது க்ரேட் டிப்டிகலெக்டர் அந்தஸ்துள்ள ஒரு பர்சனல் அஸிஸ்டண்டை உதவிக்காகக் கொடுப்பது மிக்க அவசியம்.

இப்போது எப்பக்கத்திலும் பரவப்பட்டும், கொஞ்ச காலத்திற்குள் மேல்மேல் அபிவிருத்திக்கு வரவும் கூடிய இந்த இலாகாவை நேரே சர்க்காரின் சுவாதீனத்தில் ஏன் வைத்துக்கொள்ளக் கூடாதென்ற பிரச்னம் ஆலோசிக்கத் தக்கது. ரிவின்யூ போர்ட்டின் மத்திய வர்த்தித்தனமும் இனி அனாவசியம். இவ்விலாகாவைக் கவர்ன்மெண்டார் எடுத்துக் கொண்டால் ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா மாதிரி வேலை சீக்கிரமாய் முடியும்.

சமீபத்தில் சிம்லாவில் நடந்த ரிஜிஸ்ட்ரார்களின் கான்பிரவிஸில், "தற்காலத்தில் கணக்குத் தணிக்கை செய்கிறவும் இன்ஸ்பெக்ஷன் செய்கிறவுமான சிப்பந்திகளை சர்க்கார அதிகாரத்தினின்றும் நீக்குவது விரும்பத் தக்கதல்ல" ஆனால் அதற்கு எதிரிடையாக "சங்கங்களின் விருத்திக்குச் சரியாய் சிப்பந்திகளையும் அதிகரிக்க வேண்டும்," அவைகள் சென்ட்ரல் பாங்கி அல்லது யூனியன்களின் சுவாதீனத்திற்குள் இல்லாமல் ரிஜிஸ்ட்ராரின் ஆளுகைக்குள் இருக்க வேண்டுமென்று ஒரே மனதாய்த் தீர்மானிக்கப்பட்டது. இந்த அபிப்பிராயத்தை நானும் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். அப்பேர்ப்பட்ட சுவாதீனத்தைப் பின்வாங்குவதற்கு கவர்ன்மெண்டார் எண்ணங் கொள்வதற்கு முன் எவ்வளவோ காலமாகுமென்பது என்னுடைய திடமான அபிப்பிராயம். அது திரவிய சகாயத்தை வேண்டுமென்றாலும் பின்வாங்கி விடலாம்; ஆனால் சுவாதீனத்தினின்றும், மேல் விசாரணையினின்றும் பின் வாங்க முடியாது. இதுவரையிலும் இம்முறை ஜெயம் பெற்றதற்கும் ஒரு புதுமுயற்சியை விருத்தி செய்ததற்கும், ஜனங்களுக்குள் நம்பிக்கை



உண்டு பண்ணினதற்கும் காரணம் ஸர்க்கார் மேல் விசாரணையும் சர்க்கார் தணிக்கையுமாகிய அபயந்தான்.

## மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களின் ப்ரசங்கம்.

மனமுவந்து உங்களால் இன்றையதினம் இவ்விடத்திற்கு நான் அழைக்கப் பட்டதனால் மிகவும் கௌரவிக்கப் பட்டவனாயிருக்கிறேன். இந்த முதலாவது கூட்டுத்தொழிலின் சம்பந்தமான ஐக்கியநாணய மஹாநாட்டிற்குத் திரளான ஜனங்கள் வந்திருப்பது மிகவும் சந்தோஷப்படத் தக்கது. இவ்விராஜதானியானது ஸர் பிரடிரிக் நிகல்ஸனுடைய வேலைக்காக பெருமை கொள்ளத்தகும். அவர் தன்னுடைய ஊழியத்தால் ஐக்கியநாணயமுயற்சிக்கு, மதிராசுக்கு மாத்திரமே யல்லாமல் இந்தியா முழுவதுக்கும், மூலகாரணமாயிருக்கிறார். இப்போது செய்திருக்கிற அபிவிருத்தியைப் பார்த்து அவரோடு கூட வேலை செய்தவர்கள் சந்தோஷமடைந்து தேறுதலடையலாம். இச் சந்தோஷ விஷயத்தில் நான் உங்களோடு மனப்பூர்வகமாய்க் கலந்து, பிற்காலத்தில் சர்வ ஜயத்தையு மடையவேண்மென்று விரும்புகிறேன், ஐக்கியத்தினால் பலத்தை யடைகிறோம். கூட்டுறவின் கோட்பாடு என்னவென்றால் பரஸ்பர சகாயம், இணக்கம், அல்லது ஒரு பொதுக் காரியத்திற்காக ஒன்று சேர்தல். அது பிரகிருதி தர்மம் என்றும் அபிவிருத்தியாகிற பரிணமத்தின் முக்கிய அங்கம் என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் டார்வினும் அவருடைய சிஷ்யர்களும் காட்டியிருக்கிறபடி பரிணமத்திற்கு மற்றொரு பெரிய குணாங்கம் இருக்கிறது. அதாவது, ஜீவனத்திற்காகப் போராட்டம் (அதிக பலவான் மாத்திரம் பிழைத்திருத்தல்) இதை தொழிலாளிகளுக்காக போட்டி' என்று மொழிபெயர்க்கலாம். இந்தப் போட்டி, கூட்டுமுயற்சி என்கிற இரண்டு சார்புக்கும் இடைவிடாச் சண்டையாயிருக்கிறது; கூட்டுமுயற்சி அபிவிருத்தி யடையவேண்டுமென்றால் மனிதனுடைய ஞானத்தினாலும் அநுதாபத்தாலும் செய்யக்கூடிய உதவிகளெல்லாம் வேண்டியிருக்கிறது.

### கூட்டுமுயற்சியின் ரூபங்கள்.

கூட்டுமுயற்சி அநேக தேசங்களில் அநேக மாதிரி ரூபங்களை உடைத்தாயிருக்கிறது. ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் லாண்ட்பாங்க என்று சொல்லப்பட்ட நிலவிஷயமான பாங்கி, விவசாய நாணயம், விவசாய இசைப்பு என்கிற ரூபங்களை உடைத்தாயிருக்கிறது. க்ரேட் பிரிடனில் முக்கியமாய்க் கூட்டுத்தொழில் செய்யும் பிரிவினை, உற்பத்தி (பொருள்களின்) ஆகிய இவைகளின் ரூபமாயிருக்கிறது. இந்தியாவில் கூட்டுத்தொழில் நாணய பாங்கிகளின் ரூபமாக, சமீபத்தில் மிஸ்டர் ஹென்றி உல்ப் சொன்னபடி, அது ஸ்தாபிக்கப்பட்டு ஏழு வருஷங்களுக்குள் ஒப்பற்ற ஜயத்தை அடைந்திருக்கிறது. 1904 ஹுத்து ஆக்டின் உத்தேசம் கூட்டுறவு நாண

யச் சங்கங்களை ஏற்படுத்துவதுதான். இவ்விராஜதானியை மாத்திரம் தனியே நோக்கும் போது, 1905–6 ம் வருஷத்தில் மொத்தச் சங்கங்கள் 25 ம் அவற்றின் மொத்தம் மெம்பர்களின் தொகை 2,733 ம் இருந்தன. 1911–12–ம் வருஷத்தின் தொகையைப் பார்த்தால் மதிராஸ் பிரஸிடென்ஸியில் சங்கங்கள் 969 ம் மூன்று யூனியன்களும், மெம்பர்களின் மொத்தம் 66,856 ம் இருக்கின்றன—இது ஒரு அதிசய அபிவிருத்தியைக் காண்பிக்கும் விசேஷ குறிப்பு. இந்த நாணய பாங்கிகள் நமக்குப்பெரும் பாக்கியமாக மலிவான பணத்தை அதாவது பணத்தைச் சொல்ப வட்டிக்குக் கொடுக்கின்றன. ஆனால் மாமூலாய் இவை நல்ல ஜாமீன் மேல்தான் கொடுக்கின்றன. இப்பேர்ப்பட்ட சங்கங்களில்லா விடில், தத்கால மொத்தக் கடன்களுக்காக செலுத்தப்பட்டிருக்கிற வட்டி இப்போதைவிட ஒரு லக்ஷம் ரூபாய் அதிகமாயிருந்திருக்கும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இவை யெல்லாம் எல்லோருக்கும் நன்மையையே உண்டாக்கி யிருக்கவேண்டும்.

## மலிவான பணம்.

சொல்ப வட்டிக்குப்பணம்கிடைப்பது பிரதிகூலங்களை உண்டாக்குகிறது இவ்விடத்தில் அந்நிலைமையில் தானிருக்கிறது. கடன் வாங்குகிறது அதிகமாயிருக்கிறதென்பதையும், இப்போது திருப்பிக் கொடுக்கவேண்டிய கடன்களின் மொத்தம், கூட்டுமுயற்சி ஆரம்பிப்பதற்கு முன் யிருந்ததைவிட தாரதம்மியத்தின்படி அதிகமா யிருக்கிறதென்பதையும் அலக்ஷியம் செய்யக்கூடாது. ஆனாலும் காலாவர்த்தியில் இந்த அசௌகரியம் மறைந்துபோய் மிச்சம் பிடிக்கிறதென்கிற கூட்டுத்தொழிலினால் அப்பியசிக்கப்பட வேண்டியதாயும் பிரசங்கிக்கப்பட வேண்டியதாயு மிருக்கிற, தர்மமானது, அசாத்தியமான கடன் வாங்குகிறதற்குண்டாகிற ஹேதுக்களைக் கண்டித்து மேற்கொள்ளுமென்று நம்புகிறேன். இந்த கோ ஆபரேடிவ் நாணய முறையினால் உண்டாகும் பிரயோஜனமென்கிற சமுத்திரம் வரம்பெற்றதா யிருக்கிறது. அது இப்போது ரொம்பவும் யௌவனத்திலேயே யிருக்கிறதென்று சொல்லலாம். அதைப் பலப்படுத்தவும் காப்பாற்றவும் என்னமாதிரி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இன்று ஆலோசிக்கக் கூடியநாள்.

## ஜேயத்திற்குவேண்டிய சாதனங்கள்.

இன்றையதினம் தர்க்கிக்கப்போகிற உங்களுடைய தீர்மானங்களின் கமூகாவில் காணுவித பிரபோதங்கள் செய்திருக்கிறதை நான் அறிகிறேன். அத் தீர்மானங்களைப்பற்றி நான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கப் போகிறதில்லை. சமுத்திரங்களைக் கடந்து அந்நிய நாட்டுக்குச் செல்லுகிறவர்கள், புதிய நாட்டிலிருந்தபோதிலும் தங்களுடைய ஸ்வபாவத்தை மாத்திரம் மாற்றுகிறதேயில்லை என்று பழைய பழமொழி ஒன்று இருக்கிறது. எந்த தேசத்திலானாலும் கூட்டுமுறையானது முக்கியமாய் ஸ்வே



ச்சையுள்ள சுய ஆளுகையுடைய முறையாகிறது. அது விருத்தியடைவதற்குக் கவர்ன்மெண்டார் மேல் சாராமல் அதன் மெம்பர்களின் ஞானம், விழிப்பு, நாணயம் முதலியவைகளைப் பொருந்திருக்கிறது. அதனுடைய க்ஷேமம் முதலியவை கிராமச் சங்கத்தையே பொறுத்திருக்கிறது. எதுவரை கிராமச்சங்கங்கள் தங்களுடைய விவகாரங்களைத் தாங்களே புத்தியோடு சமாளித்துக்கொண்டும், அயலார்களின் சேர்க்கையாலுண்டாகும் பலன்களைத் தெரிந்துகொண்டும் வேலையை நடத்திக்கொண்டு போகிறார்களோ அதுவரை கூட்டுமுறை மேன்மேலும் விருத்தியடைவதற்குத் தடையேயிராது. நாம் எப்போதும் கூட்டுமுறையின் லக்ஷணபூர்த்தியை நம்முடைய மனதில் தியானித்துக்கொண்டேயிருக்கவேண்டும். உங்களுக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஆதரவு கிடைத்து உங்கள் முயற்சி கைகூடும். இன்னும் காலாவர்த்தியில் இம்முறையானது பலத்துப்போய் சர்க்காரின் ஆதரவின்றியே தழைத்தோங்குமென்று நம்புகிறேன். ஆனால் அக்காலம் இன்னும் வரவில்லை. இருந்தாலும் சர்க்காரால் கொடுக்கப்பட்டிருக்கிற முதலின் தொகை மிகவும் கொஞ்சமாயிருக்கிறதைப் பார்க்க மிக்க சந்தோஷகரமாயிருக்கிறது. தற்காலத்தில் பரிசோதனையும் தணிக்கையும் சர்க்காரைச் சேர்ந்ததாயிருக்கிறது. உங்கள் முறையில் பொது ஜனங்களுக்கு நம்பிக்கையுண்டாவது வெகுசாய்ப் பரிசோதனை தணிக்கை இவற்றின் திறமையைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய இந்த இரண்டுவேலைகளையும் தகுதியான சிப்பந்திகளைப் போதுமான அளவு வைத்துக்கொண்டு செய்யவேண்டியது.

ஆனால் இன்ஸ்பெக்ஷனும் ஆடிட்டும் மாத்திரம் போதாதென்று என் அபிப்பிராயத்திற் படுகிறது. கூட்டுமுறையின் க்ஷேமமும் விருத்தியும் வித்தையைப் பொறுத்திருக்கிறது. இம்முறையானது ஒவ்வொருவருடைய மூளையிலும், மனதிலும் வேரூன்றியிருக்கவேண்டும். அது சாசுவதமாயும் திடமாயுமிருக்க வேண்டுமானால் பிறரால் சொல்லி முடியாது. நீங்கள் வித்தையைக் கற்று அம்முறையின் கோட்பாடுகளை நீங்களே அறிந்துகொண்டு உங்களுடைய விவகாரங்களை நீங்களே சமாளித்துக்கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அப்பேர்ப்பட்ட வித்தையை விருத்திசெய்ய எவ்வித முயற்சிகள் செய்துகொண்டு வருகின்றன என்பது நான் இப்போது புதிதாய் வந்தவனாதலால் எனக்குத் தெரியாது. இப்பிரயத்தனத்தில் கவர்ன்மெண்டார் எவ்வளவு பாகத்தை வகித்திருக்கிறார்களென்பதும் எனக்குத் தெரியாது.

இப்பொழுது கவர்ன்மெண்டார் இந்த மார்க்கத்தில் உதவிபுரிய வேண்டுமா அல்லது அப்படி உதவினால் எம்மட்டும் உதவ வேண்டுமென்பதைப் பற்றியும் நான் யாதொரு அபிப்பிராயமும் சொல்லப்போகிறதில்லை. மட்டு

ஜனங்களிடத்தில் அபிமானமுள்ளவர்களுடைய ஆதரவையும் இன்னும் மற்ற திக்குகளிலிருந்து வரும் ஆதரவையும் பெற்று உங்கள் முயற்சி கைகூடும் என்று நம்புகிறேன்.

## முன்னடைந்திருக்கும் அபிவிருத்தி.

இத்தேசத்தில் கூட்டுறவு நாணயமுறை வெற்றி யடைந்திருப்பதற்கு அத்தாக்ஷி 1912 ம் ௵த்து ஆக்டுதான். கூட்டுத்தொழில் சங்கங்கள் இப்போது நாணயத்திற்கு மாத்திரமல்லாமல், பிரிவினை செய்தற்கும், உற்பத்தி செய்வதற்கும் (பொருள்களை) விவசாய விளைபொருள்களையும் கருவிகளையும் விற்று அல்லது வாங்கவும், விதைகள் அல்லது எரு முதலானது ஸப்ளை செய்யவும், மாடுகளை இன்ஷ்யூர் செய்யவும், இன்னும் மற்ற விஷயங்களுக்கும் ஏற்படுத்தலாம். உண்மையில், சாதாரணமாய் மெம்பர்களின் சிக்கனம் கைத்தொழில் முதலியவை விருத்தியடைவதற்காகச் சங்கங்கள் ஏற்படுத்தலாம். ஆனால் இவ்விராஜதானியில் அப்பேர்ப்பட்ட முயற்சிக்கு ஏதேனும் வழி இருக்கிறதா என்று ஒரு சந்தேகம் வருகிறது.

## பரவுதலுக்கு இடம்.

விதை வாங்குவதைப்பற்றி நான் இதுவரை சொன்னேன். இவ்விராஜதானியில்சுத்தமான பருத்திவிதை ஸப்ளைசெய்ய விவசாய இலாகாதான் முதலில் ஆரம்பித்திருக்கிறதென்று அறிகிறேன். சுத்தமான விதையைப் பிரிவினை செய்வதால் நல்ல பயனைக்கொடுத்துவருகிறது. சென்ற வருஷத்தில் நான்கு ஜில்லாக்களில் மாத்திரம் விவசாயிகளுக்கு நேரில் விற்ற பருத்தி விதையின் அளவு 170,000 பவுண்டு. இதன் விலை கடை விலையைக்காட்டிலும் அதிகமாயிருந்தாலும் விதையின் சுத்தத்தினால் இதற்குப்பெரிய போட்டி உண்டாயிற்று. கூட்டு முயற்சிக்கு இதொரு சமயம். ஒரு கூட்டுத்தொழில் சங்கம் இந்த விதையை மொத்தத்தில், தனித்தனி ரயத்துகள் வாங்குவதைவிட மலிவாய் வாங்கலாம். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் சுமக்கிற கூலியும் குறையும். இதேமாதிரி, கிருஷ்ணா, கோதாவரி முதலிய ஜில்லாக்களில் வேண்டிய ஏராளமான எருவும் சங்கங்களின் மூலமாய் அதிக சுலபமாய்ப் பெறலாம். இன்னும் இம்முறை முக்கியமாய் விவசாயம் சிக்கன விஷயங்களில் செலுத்தப்பட்டு நல்ல அபிவிருத்தி யுண்டாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. விவசாய விஷயத்தில் கூட்டு முறையை உபயோகப்படுத்தத் தனி ஏற்பாடுகள் செய்யலாம்.

## விவசாயம்.

தருந்தகாலம் கிட்டும்போது கூட்டுமுறைக் கோட்பாடுகளை உபயோகப்படுத்த விவசாயம் நல்ல சாதனமாகும். நாளடைவில் இம்முறையை கைத்



தொழில்களில் பிரயோகப்படுத்தவும் வசதிகள் ஏற்படும். இதில் மேன்மேலும் வெற்றியுண்டானால்தான் தொழில் முதலும் பரஸ்பர நம்பிக்கையும் விருத்தியடையும். அது இத்தேசத்தில் செழிக்க வேண்டுமானால் மெல்ல மெல்லத்தான் வளர்ச்சி பெறவேண்டும். அதின் அஸ்திவாரம் அகலமாயும், ஆழமாயு மிருக்கவேண்டும். இக்கூட்டுமுறையைத் தவிர வேறு எவ்வித ஆசாரமுறையும் இவ்வஸ்திவாரங்களைப் பலப்படுத்தாது. அதின் செய்கை சிக்கன விஷயத்திற்குக் கட்டுப்பட்டதல்ல. அது ஜனங்களின் ஆயாசத்தைக் குறைப்பதும் அவர்களுக்குத் தொழில்முறையைப் பயிற்சி செய்வதையும் தவிர தங்கள் வாழ்நாளில் சன்மார்க்கத்தைக் கற்பிக்கவும் உதவுகிறது. அது இத்தேசத்து நிதிகள், பஞ்சாயத்தார்கள் முதலிய பழைய வழக்கங்களினாலும் சங்கங்களினாலும் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. கிராம கூட்டுமுறை நாணய பாங்கிகளின் சமாசரிப்பானது ஸர் விவகாரங்களை ஆளுவதற்கும் லோகோபகாரஞ் செய்யுங்குணத்தை அப்பியஸிக்கவும் ஆரம்பஸ்தானமாகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாம் கூட்டு முயற்சியானது.

## பிரசிடெண்டாகிய கனம் ஸர் ஜான் அட்கின்ஸன் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.

கனவான்களே,

இன்றைய தினம் இக்கான்பிரன்ஸைத் திறப்பதற்கு நம் மேன்மை பொருந்திய கவர்னர் அவர்கள் இவ்விடம் விஜயம் செய்தது நம்முடைய அதிர்ஷ்டமேயாம். அவருடைய நானாவித அலுவல்களின் நடுவில் இவ்விடத்திற்கு விஜயம் செய்ததற்காக நாம் அவருக்கு மனமுவந்து வந்தனஞ் செய்கின்றோம். உபசரணைக் கமிட்டியின் சேர்மன், இக்கான்பிரன்ஸுக்கு நான் விஜயம் செய்திருப்பதன் சம்பந்தமாய் ஏதோ குறிப்பிட்டார். கமிட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்கி இந்த மீட்டிங்கின் அக்கிராசனத்தை வகிப்பது எனக்குப் பெருஞ் சந்தோஷத்தைத் தருகின்றது.

நான் 1904 ம் ௵ முதல், கூட்டுத்தொழில் முறையில் சம்பந்தப்பட்டவனாயிருக்கிறேன். இந்த முறைக்கே பிதாவாய் விளங்குகிற ஸர் பிரடிரிக் நிகல்ஸனோடு ரிவென்யூ போர்டில் நான் உடன் உத்தியோகஸ்தராக விருந்தேன். கூட்டுத்தொழில் முறை உற்பத்திக்கே நாம் ஸர்பிரடிரிக் நிகல்ஸனுக்குக் கடன்பட்டவராக யிருக்கிறோம். நீங்கள் செய்கிற பிரபோதங்கள் அல்லது சிபார்சுகள் எல்லாம் சர்க்காரால் நன்றாய் ஆலோசிக்கப்பட்டு பிரதிபலனை அடைவீர்களென்று நான் திண்ணமாய்ச் சொல்லுவேன். இத்தேசத்தில் கூட்டுத்தொழில் சங்கங்களை விருத்தி செய்யும்போது எச்சரிக்கையோடும், யூகத்தோடும் ஜாக்கிரதையோடும் செய்ய வேண்டியது.

இப்போது அடைந்திருக்கிற பலன்களைப் பற்றி சற்றுயோசித்துப் பாருங்கள். சங்கங்கள் அதிவிரைவாக விருத்தியாவதைப்பற்றிப் பார்ப்போம்:—

1905-06-ம் வருஷத்தில் 25-சங்கங்கள் இருந்தன. அவைகளின் மொத்த மெம்பர்கள் 12,733. 1911-12-ம் வருஷத்தில் 969-ஸொஸைடிகளும், 3-யூனியன்களும் இருந்தன. அவற்றின் மெம்பர்களின் மொத்தம் 65156 1912-ம் வருஷம் ஜூன் மீ 30௳ ஸொஸைடிகளின் மொத்தம் முதல் ரூபாய் 74,63,739–இச்சங்கங்களில் 20,23,36-ரூபாய் கடனாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழு வருஷங்களுக்குள் இந்த நல்ல தன்மைக்கு வந்திருப்பது ஆச்சரியப்படத்தக்க தல்லவா?

ஜாயிண்ட் ஸ்டாக் அல்லது வர்த்தகத் திரவிய முயற்சி இத்தேசத்தில் கடைத்தேறவில்லை. எந்த வருஷாந்திர ரிப்போர்ட்டைப் பார்த்தாலும் இது பகிரங்கமாய் வெளிப்படும். ஜாயிண்ட் ஸ்டாக் முயற்சி முன்னுக்கு வருமென்பதற்கு யாதொரு அடையாளமும் காணவில்லையென்று ஒரு உள்ளூர் பத்திரிகையில் காணப்படுகிறது. "டைரக்டர்களின் அநுபோகமின்மையும், மானேஜிங் ஏஜண்டின் அபேக்ஷையும், வேலையின் கஷ்டமான தன்மையும் இந்த அபஜெயத்திற்குக் காரணமாயிருக்கானும் இருக்கலாம். ஜாயிண்ட் ஸ்டாக் தளர்ச்சி யடைந்து கொண்டிருக்க, கோ ஆபரேடிவ் முறை மாத்திரம் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இதற்கு அநேக காரணங்கள் உண்டு. பலவிதமாய் சமாதானம் சொல்லக்கூடும். நாணயச்சங்கங்களின் வேலை மிகச் சுலபமாயிருக்கின்றன. நாணயச் சங்கங்கள் விருத்தி யடைவதற்கு 'சாமீப்யம்' சூக்ஷ்மமாகக் காணப்படுகிறது. அது எப்படியென்றால் கிராமச்சங்கம் பரஸ்பர சிநேகமுள்ளவர்களையே மெம்பர்களாகச் சேர்க்கிறது. ஆனால் ஜாயிண்ட் ஸ்டாக் உலகம் முழுவதிலுமிருந்து மெம்பர்களைத் தாக்கல் செய்யப்பார்க்கிறது. ஜனங்களுக்கு வெளியூர்களில் தங்கள் பணத்தைப்போட விருப்பமிருக்கிறதில்லை. கோ ஆபரேடிவ் முறை செழித்தோங்குவதற்குக் காரணம், உபசாரணைக் கமிட்டி சேர்மன் சொன்னபடி கவர்ன்மெண்டாரின் ஆதரவும், உதவியும் காரணமாயிருக்குமோ?

கவர்ன்மெண்டாரை, கோ-ஆபரேடிவ் முறைவிருத்தியை, திருப்திகரமாயும் அபாயமில்லாமலும் அபிவிருத்திப்படுத்தத் தகுந்த உபாயமெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமென்பது இந்தக் கான்பிரன்ஸின் முதல் தீர்மானமாகக் காணப்படுகிறது. அந்தத் தீர்மானத்தைப் பற்றி நான் வியாக்யானம் செய்யப் போகிறதில்லை. சென்ற ஏழுவருஷங்களுக்குள் சங்கங்கள் ஒன்றுக்கு நாற்பதாக அதிகரித்து விட்டனவென்பதை ஞாபகப்



படுத்துகிறேன். முன்னால் இன்னும் நன்றாய் விருத்திக்கு வரவேண்டுமென்பது எப்போதும் கவர்ன்மெண்டார் உள்ளத்தில் இருக்கிறதென்பதை நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். ஜனங்களுக்குள்ள உற்சாகத்தால் கூட்டுத் தொழில் முறையை மேன்மேலும் வியாபிக்கச்செய்ய, பிரயத்தனம் செய்யப்படுவதாய் எவ்வளவோ சொல்லுகிறார்கள். ஆகையால் அந்த உற்சாகத்தை மிதப்படுத்தி ஸொஸைடிகளைச் சரியான வழியில் நடத்துவதுதான் முக்கிய கவலை.

நாணயச் சங்கங்களின் விஷயங்களை நிர்வகிக்க முடியாமல் போனதைப்பற்றி அநேக உதாரணங்கள் நம்முடைய காதுக்கு எட்டியிருக்கின்றன. ரிஜிஸ்தாரும் அவருடைய ஆபீசர்களும் தங்களால் கூடியமட்டும் சிகிச்சைகள் செய்து பகிரங்கப்படுத்தாமல் அப்பேர்ப்பட்ட சங்கங்களை சீர்திருத்தி யிருக்கிறார்கள்.

கூட்டுறவு விருத்தியாவதற்கு முக்கியமான கருவிகள் இரண்டு. முதலாவது, இம்முறையின் கோட்பாடுகள் பரவும்படி உபந்யாசம் முதலியன செய்வது.

இரண்டாவது அம்முறையை ஒழுங்காய்ச் சீர்ப்படுத்தி அமைத்தல். புதுச்சங்கங்களை, கவர்ன்மெண்டாரின் உதவி யில்லாமல் ஏற்பாடு செய்ய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இச்சங்கங்கள் விருத்தியாவதால் ஜனங்களுக்கு வித்தையும் பயிர்ச்சியும் உண்டாகி, தங்கள் விவகாரங்களை தாங்களே சமாளிக்கச் சக்தியுண்டாகிறது. சாமான்களை உண்டாக்குகிறதற்கும் கைத்தொழில் விருத்தியாவதற்கும் வேண்டிய கூட்டுறவுக்குத் தேற்றம் எப்போதும் நம்மவரிடத்திலுண்டு. ஒவ்வொரு ஆசார சிக்கன முறைகளோடும் கூட்டுறவு முறையைக் கலக்க ஆரம்பிக்கிறார்கள். விவசாயத்தொழிலிலும், கைத்தொழில்களிலும், சாமான்களை உண்டாக்குவதிலும் அவற்றை விநியோகம் செய்வதிலும் இப்படி இன்னும் அநேக வழிகளிலும் கூட்டுறவு முறையை வியாபிக்கச் செய்யலாம்.

இக்கூட்டுறவு முறைக்கு சன்மார்க்கத்தைக் கற்பிக்கும் சக்தியும் உண்டு. இந்த முறையை சரியாய் நடத்தினால் கட்குடியர்கள் முதலானவர்களைச் சீர்திருத்தலாம்.

கனவான்களே, இந்தக் கோ ஆபரேடிவ் சித்தாந்தங்களை அறிந்து கொள்வதாலும் அவற்றை அநுபோகத்துக்குக் கொண்டுவருவதாலும் அதிக உற்சாக முண்டாகக்கூடும். ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் அநேக ஸொஸைடிகள் ரிஜிஸ்டர் செய்வதற்காக அப்ளிகேஷன்கள் வந்திருப்பது ஆச்சரியமல்ல. அவ்வளவு மனுக்களையும் கவர்ன்மெண்டார் மிக்க அநுதாபத்தோடு கவனிப்பார்கள். ஆனால் நம்முடைய விருத்தியின் விதம் அபாயத்துக்கிட மில்லாமலும் திருப்திகரமான வழியிலும் நடக்கிறதென்பதை நாம் நன்றாய் உறுதிப்படுத்த வேண்டும்.

## தீர்மானங்கள்.

### கிராம நாணயச்சங்கங்கள்.

1. இந்த ராஜதானியில் இன்னும் அநேக கிராம நாணயச்சங்கங்கள் வாஸ்தவத்தில் தேவையாய் இருக்கின்றனவென்று இந்தக்கான்பிரன்ஸ் நம்பி, இந்த எத்தனத்தின் விருத்தியை திருப்திகரமானவும் அபாயமில்லாததுமான வழியில் துரிதப்படுத்தவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொள்கிறது.

இந்தத் தீர்மானம் மிஸ்டர் கே. இராமாநுஜா சாரியாரால் பிரேரேபணை செய்யப்பட்டு மிஸ்டர். சி. அருணைய நாயுடுவால் ஆமோதிக்கப்பட்டு, ஒற்றுமையாய் நிறைவேற்றப்பட்டது.

### ஜாதி வித்யாசங்கள்.

2. இந்த மஹாநாடு கூலி வேலைக்காரர்களுக்கும், கைத்தொழிலாளிகளுக்கும் என்றே பிரத்யேகமாய் ஏற்பட்டிருக்கும் உற்பத்திச் சங்கங்கள் மிகவும் நன்மையை விளைவிக்குமென்று எண்ணினபோதிலும் ஜாதி, மதம், வகுப்பு வித்யாசங்களை ஆதாரமாய்க்கொண்டு சங்கங்களை அமைப்பது கூட்டுத்தொழிலின் பிரதானமான கொள்கைகளுக்கு விரோதமாய் இருக்குமாகையால் கூடியமட்டும் விலக்கப்படவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறது.

இதை மிஸ்டர் வீ. வெங்கடாச்சாரியார் பிரேரேபணை செய்ய மிஸ்டர் எம். சின்னையநாயுடுவால் ஆமோதிக்கப்பட்டு கடைசியில் நிறைவேற்றப்பட்டது.

### உற்பத்திச் சங்கங்களும், பிரிவினைச் சங்கங்களும்.

3. ஐக்கியமுறை உற்பத்திச் சங்கங்களையும் பிரிவினைச்சங்கங்களையும் ஏற்படுத்துவது இந்த இராஜதானியின் கைத்தொழில் அபிவிருத்திக்குச் சாதகமாய் இருக்குமென்ற நம்புதலுடன் இவ்விரண்டு அம்சங்களுடன் நாணய விவகாரங்களில் சேர்ப்பது உண்மையான ஐக்கியக் கோட்பாடுகளுக்கு விரோதமல்லவென்று இந்தக்கூட்டத்தினர் திண்ணமாய் எண்ணுகிறார்கள்.

மிஸ்டர் கே. பி. இராமனுதய்யர் இத்தீர்மானத்தைப் பிரேரேபணை செய்ய, மிஸ்டர் வி. என். சீனிவாசய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு பிறகு நிறைவேற்றப்பட்டது.

### விசேஷ விவசாயச் சங்கங்கள்.

4. இந்த ராஜதானியில் பொறுக்கி யெடுக்கப்பட்டதகுதியான இடங்களில், கீழே குறிப்பிட்ட காரியங்களுக்கு, விசேஷ விவசாய ஐக்கியச் சங்கங்கள் ஸ்தாபிக்க இது ஏற்ற சமயம் என்று இந்த மஹாநாடு எண்ணுகிறது.—

(i) எரு, விதைகள், கருவிகள், யந்திரங்கள் முதலியவைகளைச் சேர்ந்து வாங்குதல்.

(ii) லாபகரமாய் விளைவுப் பொருள்களை விற்பனை செய்தல்.

(iii) விவசாயத்தில் மேலான முறைகளைப் பரவச்செய்தல்.

(iv) புதிய மேலான முறைகளின் பயனை ரூபிப்பதும் போதிப்பதும்.

இது செல்லபல்லி குமாரராஜாவால் பிரேரேபணை செய்யப்பட்டு மிஸ்டர் கே. இராமஸ்வாமி ஐயரால் ஆமோதிக்கப்பட்டது. பிறகு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.



### சிவில் கோர்ட்டுகளும் சங்கங்களும்.

5. சிவில் கோர்ட்டுகள் டிக்ரி தேதிமுதல் ஒப்பந்தவட்டி விகிதத்துக்குக் குறைந்த வட்டிதீர்ப்புச் செய்வதாலும் கடன் திருப்பிக்கொடுக்க, குறித்தகெடுவை ஒத்திப்போடுவதாலும் சங்கங்களுக்கு உண்டாகும் மிகுந்த கஷ்டத்தை உத்தேசித்து முறைப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஐக்யச் சங்கங்களைப் பற்றினவரையில் இவ்விஷயங்கள் சம்பந்தமாகத் தற்கால அநுஷ்டானத்தையும் சிவில் புரோசிஜர் கோடில் அடங்கிய சட்ட விதிகளையும் மாற்றவேண்டியது அத்தியாவசியமென்று உறுதியாய்ச் சொல்லுகிறது.

இத்தீர்மானம் மிஸ்டர் ஆகந்தாவால் பிரேரேபணை செய்யப்பட்டு, திருத்துறைப்பூண்டி வாசியாகிய மிஸ்டர் ரங்காச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்டு ஒற்றுமையாய் நிறைவேற்றப்பட்டது.

### பொது நன்மை.

6. சங்க மெம்பர்களுடைய பொதுநன்மை விஷயங்களென்றால் 1912ஆ 11வது ஆக்ட் 34 வது பிரிவில் குறிக்கப்பட்ட தர்ம விஷயங்கள்தான் என்றும் நிகரலாபத்தில் க்ஷேமநிதிக்குப் பிரித்து வைத்ததுபோக பாக்கியில் நூற்றுக்குப் பத்துக்குமேல் அவ்விஷயங்களில் உபயோகப் படுத்தக்கூடாது என்னும் நிபந்தனைகளுக்கு உட்படும் என்றும் ரிவின்யூ போர்டாரவர்கள் மேல்குறித்த சட்டப்பிரிவைக் கொள்ளுவது பிழையென்றும், அச்சட்டத்தின் உட்கருத்துக்கு ஒவ்வாது வென்றும், முக்கியமாய்ப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களில் சட்டப்படி லாபத்தில் க்ஷேமநிதிக்குப் போன பாகம்போக மெம்பர்களுக்குப் பாத்தியமுள்ள பாகத்தை உபயோகப் படுத்துவதைப் பற்றிச் செய்யும் நிர்ப்பந்தம் ஆக்ஷேபனைக்கு உள்படுமென்றும் இந்தக் கூட்டத்தினர் நினைக்கிறார்கள்.

இத்தீர்மானத்தை மிஸ்டர் சி. என். கிருஷ்ணஸ்வாமி ஐயர் பிரேரேபணை செய்தார். மிஸ்டர் டி. ஆர். சீனிவாசய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு பிறகு நிறைவேற்றப்பட்டது. பிறகு செல்லபள்ளி குமாரராஜா கனம் ஸர் ஜான் அட்கின்ஸன் அவர்களுடைய பச்சாதாப குணங்களை எடுத்துக்காட்டி அவருக்கு வந்தனமளித்தார். இதோடு முதல்நாள் கான்பிரன்ஸ் முடிந்தது.

## இரண்டாம் நாள்.

கான்பரென்ஸ் மறுபடியும் 22-ந்தேதி 12 மணிக்கு கனம் மிஸ்டர் எ. பட்டர்வர்த் அக்கிராஸனத்தின் கீழ் கூடிற்று.

### கேடுவு தவறாமல் கடனைத் திருப்பிக்கொடுப்பது.

சேலம் வாசியாகிய மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் பின்வரும் தீர்மானத்தை பிரேரேபணை செய்தார்.

பழைய கடன்களை நாளடைவில் தீர்க்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் புதுப்பித்தும், கணக்கில் மட்டும் வரவுவைத்தும் கடன்களைத் தீராமல் செய்தல் ஐக்கியநாணயம் ஏற்படுத்துவதின் எண்ணங்களுக்கு முழுதும் விரோதமென்றும், ஆகையால் பஞ்சாயத்தார்கள் குறிப்பிட்ட காலங்களில் கடன்களைத் திருப்பிக்கொடுக்கக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும், கடன்களைத் திருப்பிக்கொடுக்கக்கூடிய காரியங்களுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்பது இந்தக் கூட்டத்தின் கருத்து.

மிஸ்டர் ஐயாக்குட்டி ஐயங்காரால் இத்தத்தீர்மானம் ஆமோதிக்கப்பட்டது.

பிறகு ஆர் பஞ்சாபகேசய்யராலும், வெங்கட ரங்காச்சாரியாராலும் சிலாகித்துப் பேசப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## மெம்பர்கள் வெளியில் வாங்கியிருக்கக்கூடிய கடன்களினின்றும் அவர்களை மீட்பது.

8. மெம்பர்கள் வெளியில் வாங்கியிருக்கும் கடன்களினின்று அவர்களை மீட்பதைச் சங்கங்கள் திட்டமான குறியாக வைத்துக்கொண்டு, மெம்பர்களுக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் உண்டுபண்ண ஒழுங்காயும் பலமாயும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பது இந்த மஹாநாட்டின் அபிப்பிராயம்.

மேற்குறித்த தீர்மானத்தை மிஸ்டர் எம். பி. ராமானுஜாச்சாரியார் பிரேரேபணை செய்தார். மிஸ்டர் புருஷோத்தம சம்பூத்ரியால் ஆமோதிக்கப்பட்டது. பிறகு மிஸ்டர் ஆபத்ஸஹாயஐயராலும் இன்னும் மற்ற சிலராலும் சிலாகித்துப் பேசப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## கோ-ஆபரேடிவ் ஸொஸைடிகளின் கணக்குப் பரிசோதனையும், மேல் விசாரணையும்.

பின்வரும் தீர்மானத்தை மிஸ்டர் ஓ. எம். வெங்கடஐயங்காரால் பிரேரேபணை செய்யப்பட்டது.

9. பின்வருவன கான்பரென்ஸின் அபிப்பிராயங்கள்.—

(i) கூட்டுத்தொழில் சங்கங்களைப் பரிஷ்காரமாய் மேல் விசாரணை செய்யும் அதிகாரம் கால அளவில் துணைச்சங்கங்களுக்கும் யூனியன்களுக்கும், கூட்டுச் சங்கங்களுக்கும் பிடால் பாங்குகளுக்கும் வந்து சேரவேண்டுமென்றும்;

(ii) துணைச்சங்கங்கள் சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென்றும்;

(iii) சாத்தியமான இடங்களிலெல்லாம் ஜில்லா கூட்டுச் சங்கங்கள் அமைக்க வேண்டு மென்றும்;

(iv) கூட்டுச் சங்கங்களும் துணைச்சங்கங்களும் உண்டாக உண்டாக சர்க்கார் தணிக்கை செய்யும் வேலையையும், மேல் விசாரணை செய்யும் வேலையையும் குறைத்துக்கொண்டு கடைசியில் சோதனைத் தணிக்கை செய்தலும், மொத்தக்கணக்குச் சோதித்தலும், துணைச்சங்கங்கள் உண்டு பண்ணுவதில் கூட்டுச் சங்கங்களுக்கு உதவி செய்வதையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும்;

(v) ஜில்லாமுழுவதும் கூட்டுச் சங்கங்களும் துணைச்சங்கங்களும், ஏற்படும் வரையில் மேல்விசாரணை செய்யவேண்டிய மட்டும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டுமென்பதும்;

மிஸ்டர் வெங்கட்டப்பையா இத்தீர்மானத்தை ஆமோதித்தார். பிறகு இன்னும் இரண்டு பேர்களால் சிலாகித்துப் பேசப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



## கணக்குத் தணிக்கைக்கு வரி வசூல்.

அடியிற்கண்ட தீர்மானம் மிஸ்டர் ஷிவராவால் பிரேரேபணை செய்யப்பட்டது.

10. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கணக்குத் தணிக்கை செய்வதற்காக இப்போது வரிவசூல் செய்யக்கூடாதென்பது இந்த மஹாநாட்டின் அபிப்பிராயம்.

ராய்பகதூர் நாராயணராவ் இதை ஆமோதித்தார். பிறகு மிஸ்டர் பாபுராஜ முதலியாராலும் இன்னும் சிலராலும் சிலாகித்துப் பேசப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## வித்தியாரம்பப் பள்ளிக்கூடங்களில் ஐக்கியம்.

அடியிற்கண்ட தீர்மானம் மிஸ்டர் எஸ். ஸத்யமூர்த்தியால் பிரேரேபணை செய்யப்பட்டது.

11. இந்தக் கூட்டத்தார் இந்த ராஜதானியிலுள்ள வித்தியாரம்பப் பள்ளிக்கூடங்களில் ஐக்கிய விஷயம், ஏற்பட்டிருக்கும் பாடங்களில் சேர்க்கப்பட வேண்டுமென்று தீர்மானமாய் எண்ணுகிறார்கள்.

மிஸ்டர் சுந்தரேசய்யர் ஆமோதித்தார். மிஸ்டர் ஆபத்ஸஹாய அய்யாராலும் மற்றொருவராலும் சிலாகித்துப் பேசப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## இன்ஸ்பெக்டர்களுக்கும் ஆடிட்டர்களுக்கும் பரீக்ஷை.

அடியிற்கண்ட தீர்மானம் மிஸ்டர் டி. ஆதிநாராயணச் செட்டியாரால் பிரேரேபணை செய்யப்பட்டது

12. சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யவும், சங்கங்களை நடத்தவும் நியமிக்கப்பட்டிருக்கும் பரிசோதகர்கள் முதலிய உத்தியோகஸ்தர்களுக்குக் கூட்டுத் தொழில் முறையைப்பற்றியும், சங்கங்கள் கணக்கு வைத்தலைப்பற்றியும் சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்ள இவர்களுக்குத் தகுந்த பரீக்ஷை ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்பது இக்கூட்டத்தாரின் அபிப்பிராயம்.

மிஸ்டர் புருஷோத்தம நாயக்கரால் ஆமோதிக்கப்பட்டு திருச்சினாப்பள்ளி மிஸ்டர் நாராயணராவால் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## சங்கங்களை ஏற்படுத்துவதும் அதன் கோட்பாடுகளை பிரகடனம் செய்வதும்.

13. பின்வரும் காரியங்களைச் செய்ய நிர்வாகத்தினரை நியமிக்கவேண்டிய சமயம் இதுதான் என்று இந்த மஹாநாட்டின் தீர்மானம்.

(i) வருஷா வருஷம் மஹாநாடு கூட்டவேண்டிய ஏற்பாடுகள் செய்தல்.

(ii) தகுந்த இடங்களில் ஜில்லா மஹாநாடுகள் கூட்டுவது.

(iii) இங்கிலீஷிலும், இந்த ராஜதானியில் பேசப்படும் பாஷைகளிலும் ஒரு கூட்டுத்தொழில் வர்த்தமானிப் பத்திரிகை போடுவதும்,

(iv) தங்களுக்கு அப்போதைக் கப்போது கவர்ன்மெண்டாரிடம் வேண்டிய விஷயங்களைத் தெரிவித்துக் கொள்வதும்.

மிஸ்டர் வெங்கடாச்சாரியார் இதை ஆமோதிக்க மிஸ்டர் வெங்கட்டப்பையரால் ஆதரித்துப் பேசப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அடியிற்கண்ட தீர்மானம் மிஸ்டர் ஆர். லக்ஷ்மண ஐயங்காரால் பிரேரேபணை செய்யப்பட்டு மிஸ்டர் வி. ராமச்சந்திரசாஸ்திரியாரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

14. இந்த மஹாநாடு மாதம் 85-ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட்டுத்தொழில் சங்கங்களுடன் சம்பந்தப்படுவதில் சில அம்சங்களில் ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனைகளை ரத்துசெய்தல் யுக்தம் என்று கவர்ன்மெண்டாருக்கு வற்புறுத்திச் சொல்லுகிறது.

### டிரஸ்டு பண்டு.

ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார் அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபணை செய்தார்.

15. இந்தியன் டிரஸ்டு பண்டுகளைக் கோ-ஆபரேடிவ் சொஸைட்டிகளில் போடும்படி இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் திருத்தப்படவேண்டுமென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப் படுகிறது.

தஞ்சாவூர் மிஸ்டர் டி. ஆர் சீனிவாஸய்யங்காரால் இத்தீர்மானம் ஆமோதிக்கப்பட்டு பிறகு நிறைவேற்றப்பட்டது.

### கான்பரேன்சுக்குக் கொடுத்து உதவப்பட்ட வியாசங்கள்.

அடியிற்கண்ட கான்பரென்சுக்குக் கொடுத்து உதவப்பட்ட பத்திரங்கள் படிக்கப்பட்டதாக பாவிக்கப்படட்டுமென்று புரசவாக்கம் மிஸ்டர் எஸ். வைத்தியமூர்த்தி பிரேரேபணை செய்தார்.

### விஷயங்களும் அதை எழுதியனுப்பினவர்களும்.

1. 'மேல் விசாரணை.'—திவான் பகதூர் ஆர். ராமச்சந்திர ராவ்.
2. 'கூட்டுத்தொழிற் சங்கங்களும் அவற்றின் நீதியோதிக்கும் சங்கியையும்'—மேஜர் ஜி. எச். பாட்லாக்.
3. 'கூட்டுறவின் சில குறைகள்'—திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளை.
4. 'விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழில்'—எச். வி. ஸாம்ஸன்.
5. 'கூட்டுத்தொழிலும் விவசாயத்திற்குரிய திருத்தங்களும்'—கனம் திவான்பகதூர் ஆதிநாராயண ஐயா.
6. 'விவசாய சம்பந்தப்பட்ட கடன்களைக் குறைத்தல்'—ராவ் ஸாஹெப் கே. விஜயராகவாச்சாரியார்.
7. 'மதராஸில் ஒரு ஸ்வதந்தரமான கோஆபரேடிவ் ஆர்கானிசேஷன் தேவை'—கே. ராமசுவாமி ஐயர்.
8. 'சாசுவதமான, கூட்டுத்தொழில் செய்யும் ஏற்பாடுகளை ஒழுங்கு படுத்தும் சங்கம்'—வி. வெங்கடாச்சாரியார்.
9. இவ்விராஜதானியில் சரக்குகளை பிரிவினைச் செய்யும் கூட்டுத்தொழிலின் ஏற்பாடு.—டி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.



10. சரக்குகளை பிரிவினை செய்யும் சங்கங்கள்.—ஆர் லக்ஷ்மண ஐயங்கார்.
11. கூட்டுத்தொழிலாலுண்டாகும் நன்மைகள்—வி. என். கிருஷ்ணசாமி ஐயர்.
12. கூட்டுறவுடன் செய்யும் சேவை.—பி. ராமச்சந்திர சாஸ்திரி.
13. பழகுதல் அவசியம்.—டி. ஆதிநாராயண செட்டியார்.
14. இனிமேல் கூட்டுத்தொழில் முறை இவ்விராஜதானியில் முக்கியமாய் செங்கல்பட்டு ஜில்லாவில் எப்படி நடைபெற வேண்டியது—வி. அருணைய நாயுடு.

இந்தத் தீர்மானம் மிஸ்டர் வி. என். ராமஸ்வாமி சாஸ்திரியாரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

### சேர்மன்செய்த சில குறிப்புகள்.

இம்மாதிரி கான்பரென்சுகளில் மதிராஸில் நடக்கிறது இதுதான் முதலாவது. இதேமாதிரி வருஷா வருஷம் நடக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். அறிக்கைப் புத்தகத்தி லடங்கியுள்ள பத்திரங்களைப் படித்துப் பார்த்ததிலும், நடந்த உபந்யாசங்களைக் கேட்டதிலும் பத்திரங்களை எழுதினவர்களுக்கும், உபந்யாசம் செய்தவர்களுக்கும் குணதோஷ நிரூபணம் செய்வதே நோக்கமாக இருக்கிறதாகக் காணப்படுகிறது. சங்கங்கள் இனிமேல் எப்படி நடைபெற வேண்டுமென்பதற்கு எத்தனையோ பிரபோதங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விராஜதானியை இந்தியாவின் மற்ற பாகங்களோடு ஒப்பிட்டு பார்க்கும்பக்ஷத்தில் இவ்விராஜதானி, சென்ட்ரல் சொஸைடிகள் விஷயத்தில் நான்காவதாயும் நகரச்சங்கங்களின் விஷயத்தில் நான்காவதாயும், நாட்டுச் சங்கங்களின் இலக்கத்தில் மூன்றாவதாயும், தொழில் முதல்விஷயத்தில் முதலாவதாயும், சர்க்கார் உதவி விஷயத்தில் ஏழாவதாயும் நிற்கிறது. மொத்தத்தில் 1000 நாணயச் சங்கங்களிருந்தன.

இவ்விராஜதானியில் சர்க்கார் கிராமங்களின் மொத்தம் 88,000 என்றும் அவற்றில் குறைந்த பக்ஷம் 10,000 சங்கங்கள் இருக்கவேண்டுமென்றும், இவ்விதமாக விருத்தியாவதற்கு நீண்ட காலம் ஆகுமென்றும் திவான் பகதூர் ராஜரத்தின முதலியார் சொன்னார். அதுநிற்க, இவ்விஷயத்தில் அதிக நம்பிக்கை வைக்காதிருக்கும்படி இன்னும் அநேக விதமான மற்ற சங்கதிகள் இருக்கின்றன. அவையாவன:—முதலில் நாணய விஷயமானது இன்னும் ஆரம்பத்திலேயே யிருக்கிறது. கூட்டுத்தொழில் சங்கங்களிலெல்லாம் நாணய சம்பந்தமான கூட்டுத்தொழிலே மிகச் சுலபமானதென்று எத்தனையோ பத்திரங்களில் காட்டப்பட்டிருக்கிறது. அடுத்தாற்போல் யூனியன்களைப் பற்றிய பிரசனை உண்டாகிறது. சிறிய சங்கங்களை ஒன்று சேர்க்கவும் அடக்கியாளவும், யூனியன் முக்கிய கருவியாயிருப்பதால் இவ்விஷயம் மிகவும் முக்கியமானது. ஆனால் வாஸ்தவமாக அப்பேர்ப்பட்ட யூனியன்கள் கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் விருத்தியா யிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட கூட்டுச்சங்கங்கள் இப்போது வெகு அருமையாய் இருக்கின்றன. மிகவும் முக்கியமான விஷயமாகிய மேல் விசாரணையும் இன்னும் இதைப்போன்ற மற்றவிஷயங்களும் சரியாய் பிடிபடாமல் மாதும் ஸ்திதியிலேயே யிருக்கின்றன. ஜாக்கிரதையாய் யோசித்து இனிமேல் நடக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கிறது. மேலும் இப்போது இருக்கிற ரிஜிஸ்திராரும் மிஸ்டர் விஜயராகவாச்சாரியாரும், இப்போதுள்ள பஞ்சாயத்தாரின் தொகுதியின் சில குறைகளைப்பற்றியும் அவர்கள் நடவடிக்கைகளை நடத்தும் மாதி

ரிமையைப்பற்றியும் ஞாபகப்படுத்தி யிருக்கிறார்கள். நாணயக் கூட்டுறவுகூட திருப்தியான நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு முன்னேயே எவ்வளவோ காரியங்கள் அவர்களால் செய்யப்படவேண்டி யிருந்தது. நாணய விஷயத்தைத் தவிர வேறொன்றும் அவர்களால் அனுபோக சாதனமாய்ச் செய்யப்படவில்லை. சரக்குகளைப் பிரிவினை செய்வதிலும் உற்பத்தி செய்வதிலும் கூட்டுறவு அபிவிருத்தியாகவே இல்லை.

கூட்டுறவை விவசாய விஷயங்களில் செலுத்தினால் முன்னுக்கு வா நல்லயார்க்கமா யிருக்குமென்று சொன்னார். மேலும் கிருஷியே முக்கியமான தொழிலாயிருக்கும் தேசத்தில் இவ்வழி மிகவும் முக்கியமானதென்று சொன்னார். நாளடைவில் இந்தக் கான்பரென்ஸினாலும், இப்போது நியமிக்கப்பட்டிருக்கிற சாஸ்வதமான கம்மிட்டியில் உழைப்பாலும் நன்மைகள் உண்டாகக் கூடுமென்று உண்மையாய் நம்பினார். கடைசியில் அங்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் பிறக்கப்போகிற புதுவருஷம் மங்களகரமா யிருக்க வென்று சுபமொழிகூறி கூட்டம் கலைந்ததாகச் சொன்னார்.

---

## தஞ்சை ஜில்லா இரண்டாவது கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

---

1912-ம் ஞு டிசம்பர் மீ 19-ந்தேதி அன்று தஞ்சைஜில்லா இரண்டாவது கோஆபரேடிவ் கான்பரென்ஸ் தஞ்சாவூரில் பெஸண்ட் லாட்ஜில் கூடிற்று. ஜில்லாவின் பல முக்கிய இடங்களிலிருந்தும் 50 பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். அவர்கள் அல்லாது 100 பேர் விஸிடர்களும் கூடியிருந்தார்கள். ஆனரெபில் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி அய்யரை அக்கிராசனாதிபதியாக பூண்டி மிஸ்டர் V. A. வாண்டயார் பிரேரணை செய்தார். உக்கடை ராவ்சாகிப் அண்ணாசாமித்தேவர் அப்பிரேரணையை ஆமோதிக்க ஒருமனதாய்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உபசாரணைக் கமிட்டியின் ப்ரெஸிடெண்டாகிய பாப்பாநாடு ஜமீன்தார் மிஸ்டர் சுவாமிநாத விஜயத்தேவர் காய்ச்சலால் கான்பரன்ஸுக்கு வரக்கூடாமையால், அவருக்காக மிஸ்டர் கணபதி அய்யர், ஆனரபில் அய்யருக்கு அடியிற்கண்ட நல்வரவுப் பத்திரத்தைப் படித்தார். அது பின்வருமாறு :—

கனவான்களே! இத்தஞ்சை ஜில்லா ஐக்கிய நாணயச் சங்கங்களின் பொதுச் சபையின் பிரதிநிதியாக நான் இங்குக்கூடியிருக்கும் கனவான்களுக்கு மனப்பூர்த்தியாக நல்வரவு கூற எனக்கு அனுமதி கொடுத்திருப்பதற்கு நான் மிகுந்த வந்தனமுள்ளவனாயிருக்கிறேன்.

இந்நகரில் பிறந்து வளர்ந்து கல்வியில் தேர்ந்து எல்லாவித நற்குணங்களும் அமைந்து சென்னை இராஜதானிக்கு நாயகமாக விளங்கிக்கொண்டிருக்கும் நமது ஆனரெபில் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி அய்யர் B. A., B. L., C. S. I., C. I. E., அவர்களுக்கு ஏற்பட்ட அபரிமிதமான வேலைகளினிடையில் அவகாச மேற்படுத்திக்கொண்டு நமது ஜில்லாவையும் நம்மவர்களையும் அபிமானித்து பெருமைப்படுத்த இச்சபைக்கு அக்கிராசனாதிபதியாக இருந்து நடாத்த வந்திருப்பதைப்பற்றி நாம் எல்லோரும் நமது கனம் அய்யர் அவர்களுக்கு நல்வரவு கூறுவதுடன் எப்பொழுதும் நன்றி யறிதலுள்ளவர்களா யிருக்கவேண்டியது நமது கடமை.



இத்தஞ்சை ஜில்லா ஐக்கிய நாணயச் சங்கங்களின் சபை முதற்தடவை சென்ற வருஷத்தில் சீடாமங்கலத்தின்கண் நடந்தேறிற்று. அச்சமயம் இத்தஞ்சையில் இவ்வருடம் நடத்தவேணுமென்று ஏற்பாடாயிற்று.

இச்சபையின் நோக்கம் "கூட்டு முயற்சி" "பரஸ்பர நம்பிக்கை" விசாலமாய்ப் பெருகவேணுமென்பதே. ஏழைக் குடியானவர்களும் கைத்தொழிலாளிகளும் கஷ்டப்படாமல் அபிவிருத்தியடைய வேண்டுமென்பது நமது சபையின் நோக்கம். சொற்ப நிலமிருக்கும்படியைக்கொண்டு ஜீவிக்கும் குடியானவர்கள் விதை, உழவுமாடு, எரு முதலானவை வாங்கவும், துரைத்தனத்தாருக்குக் கிஸ்திப்பணம் கட்டவும் கஷ்டப்படுகிறார்கள். கஷ்டப்படுவதினால் கடன் வாங்க ஏற்படுகிறது. இக்கடன் தீர்வது எப்படி? வருஷமெல்லாம் பாடுபட்டு அடைந்த மகசூல் பலன் கடனுக்கே சரியாய் விடுகிறது. பின்னும் கடன்வாங்க ஏற்படுகிறது. இச்சிரமத்தைப் பரிகரிக்க வேண்டியது அவசியம். கிராம ஜனங்கள் ஒன்றுசேர்ந்து தமக்குக் கொஞ்சம் முதல்போட்டு லேவாதேவி சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் கடன் சிரமம் முற்றிலும் நீங்கும். "கடன்பட்டான் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்னும் கம்பர் வாக்குப்படி கடனாளிக்கு எவ்வித சுகமும் கிடையாது.

நமது காருண்ணிய துரைத்தனத்தார் நமது ஏழைக்குடியானவர்கள் நிலைத்த கடனாளியாகிறதைத் தெரிந்து ஐக்கிய நாணயச்சங்கங்கள் பலவிதமாய் ஏற்பாடு செய்கிறதற்கு வேண்டிய சௌகரியங்களும் சாதனங்களும் செய்து கொண்டு வருகிறார்கள். அவ்விஷயத்தை அபிவிருத்தி செய்ய பிரத்தியேகமான ஒரு டிபார்ட்மெண்டும் ஏற்படுத்தி, தெரிந்தவர்களான அதிகாரிகளை நியமித்துத் தகுந்தபடி மேல்பார்த்து வருகிறார்கள். கூட்டு முயற்சி பலிதமாவதற்கு பரஸ்பர நம்பிக்கை வேண்டும். முன்காலத்தில் வாக்கு நாணயத்தாலே சகல விஷயமும் நடந்துகொண்டு வந்திருக்கிறதாகத் தெரிகிறது. தஸ்தாவேஜிகள் அதிகரிக்க அதிகரிக்க நம்பிக்கை குறைந்துகொண்டே வருகின்றது பரஸ்பர நம்பிக்கை எவ்விஷயத்துக்கும் இன்றியமையாதது. "நம்பி செடிவாருலேது" (நம்பிக்கெட்டவர்களில்லை) என்னும் தெலுங்குப் பழமொழி தங்களுக்கெல்லாம் தெரியாததல்ல. பாரமார்த்திகத்துக்கும் நம்பிக்கை அத்தியாவசியமானது. கனவான்களே! தங்கள் அவகாசத்தில் அதிகமாய் மேலிட்டு விட்டேன். இத்தஞ்சையில் நிக்கல்ஸன் டவுன்பாங்கி 1905 ம் வருஷத்தில் ஏற்பட்டது. அது நூதற்கொண்டு நம்மாறு எதிர்பாராத பரோபகார சிந்தையுள்ள நமது பாங்கி காரிய நிர்வாக சபையாருடையவும் மற்றுமுள்ள மெம்பர் முதலியவர்களுடையவும் விடா முயற்சியால் சிறுகச் சிறுக வேலைசெய்துகொண்டு வருகிறதில் ஏழைத்தொழிலாளிகளும் மற்றவர்களும் வெகு நன்மையடைந்து வருகிறார்களென்பதை நிச்சயமாய்ச் சொல்லலாம். ஏனெனில் இந்த டவுனில் வெகுநாளாய் தவணை கட்டிக் கொடுத்து ஏழை ஜனங்களை வாயில் போட்டுக்கொண்ட அநேக தவணைக்கடைகள் சிறிதுகாலமாக மங்கிவிட்டன. எல்லா விஷயங்களைப்பற்றியும் நமது கனம் அய்யர் அவர்கள் சவிஸ்தாரமாக நமக்கு எடுத்துரைப்பார்கள்.

இந்த மகாசபைக்கு அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கப்போகும் நமது கனம் அய்யர் அவர்களுக்கு மறுபடியும் வந்தனோபசாரஞ் செய்வதுடன் இவ்விடம் விஜயம் செய்திருக்கும் எமது நண்பர்கள் எல்லோரையும் நாங்கள் மனப்பூர்த்தியாய்ச் செய்யும் உபசாரணையில் குற்றம் குறையிருந்தாலும் க்ஷமித்து ஒப்புக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## கனம் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அவர்களின் பேச்சு.

பிறகு அக்ராசனாதிபதியாகிய கனம் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அவர்கள் சொன்னதாவது:—தஞ்சாவூர் ஜில்லா கூட்டுத்தொழிலினரின் அனுபோகத்தைத் தாம்கேட்க ஆவலாயிருக்கிறதாகச் சொன்னார். சீடாமங்கலத்தில் மிஸ்டர் டி. ரங்காச்சாரியாரின் அக்கிராசனத்தின்கீழ் நடந்த கான்பிரென்சில் மற்ற இலாகாக்களில் தஞ்சாவூர் வாசிகள் மிகச் சிறப்படைந்திருந்தும் தஞ்சாவூர் ஜில்லா கூட்டுத்தொழில் விஷயத்தில் மாத்திரம் ஊக்கம் குறைந்திருக்கிறது விசனிக்கத்தக்கதென்று காண்பிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிற்பாடு அநேக சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, ராஜதானியில் அதிகச் சங்கங்களுடைய ஜில்லாவில் ஐந்தாவதாக இருக்கிறதைப் பார்க்க அதிக சந்தோஷப்படக்கூடியதாயிருக்கிறது. முதல் முதல் இந்த ராஜதானியில் ஐக்கிய இயக்கம் ஆரம்பித்தபோது, பொறுப்பு வரையறுக்கப்படா நாணய பாங்கிகள் ஏற்படுத்துவது சரிப்படுமோ என்ற பலவித சந்தேகங்கள் உண்டாயின. ஆனால் இப்போதைய அநுபோகத்தில் அப்பேர்ப்பட்ட சந்தேகங்களுக்கெல்லாம் இடமேயில்லை. அப்பேர்க்கொத்த சங்கங்களின் முன்தோற்றம் நம்பிக்கையுள்ளதாகவேயிருந்தது. ஏனென்றால் அவைகள் ஜனங்களுக்குண்டான தேவையை ஐரோப்பா தேசங்களில் கொடுப்பதுபோலவே, இவ்விடமும் கொடுத்துக்கொண்டுவந்தன. இப்போது ஜனங்கள் இந்த ஐக்கிய இயக்கத்தின் நன்மைகளை நன்றாய் அறிந்துகொண்டு விட்டார்கள். இப்போது செய்யவேண்டியதென்னவென்றால், இன்னும் இதை அபிவிர்த்திசெய்ய வழி என்னவென்று பார்க்கவேண்டியதுதான். நபர் ஜாமீன்மேல் கடன்கொடுக்க ஜனங்களுக்கு வரவர தைரியம் அதிகரித்துக்கொண்டு வருவதைப் பார்க்க சந்தோஷமாயிருக்கிறது. இப்போது இவ்விடம் சங்கங்களின் மெம்பர்கள் கூடுவது முனிசிபல் கௌன்சில்களுக்கும் லோகல் போர்டுகளுக்கும் ஒரு கருத்துப் பாடமாக அமையும். திரவிய விஷயத்தில்கூட மதராஸின் அபிவிர்த்தி பலமாகவேயிருந்தது. லோகல் டிபாஸிட்டுகள் அதிகரிக்க முயற்சி செய்யவேண்டும். செண்ட்ரல் பாங்கிகள் அதிக வட்டி கேட்பது மெம்பர்களுக்கு லோகல் டிபாசிட்டுகளை அதிகமாக்க ஒரு தூண்டுகோலாக விளங்கும். இது பலிதான நாணயத்திற்கு ஹேதுவாகும். பிறகு கவர்ன்மெண்டார் மேல்பார்வை எதுவரை இருக்கவேண்டுமென்பதை விசாரணை செய்தார். இச்சந்தர்ப்பத்தில் ரிஜிஸ்டிரார்களுடைய அபிப்பிராயமாகிய செண்ட்ரல் யூனியன்களை ஏற்படுத்துவது மிகவும் பலமானதும் விருப்பத்தக்கதுமென்று சொன்னார். கோ—ஆபரேடிவ் சங்கங்களின் காரியங்களை ஆராய்ச்சி செய்ய கவர்ன்மெண்டாரின் மேல்பார்வை இன்னும் சில காலத்திற்கு அதி அவசியமாயிருக்கிறது. ஜனங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையுண்டாக்கவும் இது ஒரு காரணமாகும்.

மற்றவித கூட்டுத்தொழில்களைப்பற்றிப் பேசும்போது மிஸ்டர் சிவசாமி ஐயர் விவசாய ஐக்கிய சங்கங்களைப்பற்றி பலமாய்ப் பரிந்து பேசினார். திருவல்லிக்கேணியிலுள்ள ஸ்டோரை ஒத்த ஸ்டோர்கள் அநேக பிரயோஜனங்களை உடைத்தாயிருக்கின்றன.

சங்கங்கள், ஜனங்களுடைய ஆரோக்கியத்திற்குச் செய்யவேண்டிய சுகாதாரம், பிரைமெரி எடுகேஷன் முதலான ஸர்வ ஜனோபகாரமான வேலைகள் செய்ய பிரயத்தனம் பண்ணலாம். சேலம் ஜில்லா மத்திகிரியில் மேஜர் ஜி. எச். பாட்டாக் என்னும் ஐரோப்பிய கனவானால் செய்யப்பட்டிருக்கிற அதி ஆச்சரியமான திருத்தங்கள் வெற்றியை ஸ்தாபிக்கின்றன. அவ்விதப் பயிற்சி லோகோபகாரம் செய்யும் குணத்தையும் தொழில் திறமையையும் அதிகரிக்கச் செய்கிறது. கூட்டுத்தொழில் முயற்சியினால் ஊர்களை ஒழுங்கு படுத்துகிற அல்லது ஏற்பாடு செய்கிற பிரசினங்களை விடுவிக்கக்கூடும். இந்த மேன்மையான காரியத்தினிமித்தம் கௌரவத்திற்கு வேலை செய்பவர்களும், சர்க்காரில் பென்ஷன்வாங்கின உத்தியோகஸ்தர்களும் முன்வந்து உதவவேண்டுமென்று விரும்பினார். இந்த ராஜதானியிலுள்ள, மிக்க ஊக்கத்தையும் தகுதியான வழிகாட்டும் திறமையையுமுடையவர்களான, ரிஜிஸ்ட்ரார்களின் உதவியினால் முன்தோற்றம் இப்போதைவிட பிரகாசமாயிருக்குமென்று நம்பப்படுகிறது.



### பின் வருபவை இக்கான்பிரன்சில் படித்த பத்திரிகைகளின் முக்கியமானவற்றின் சுருக்கம்.

### க்ஷேமநிதி.

கீழச்சேரி வாசியாகிய மிஸ்டர் ஜி. அருளைய நாயுடு க்ஷேம நிதியைப் பற்றி தமிழில் ஒரு பத்திரிகை அனுப்பினார். அதில் அவர், கடன்கள் விலை பெரும்படியான ஜாமீன்பேரிலும் 3 நபர் ஜாமீன்பேரிலும் கொடுப்பதால், க்ஷேமநிதிகளை அதிகப்படுத்துவதற்குக் காரணமேயில்லையென்று சொன்னார். தப்பான ஆளுகையினால்தான் வர்த்தக நஷ்டமுண்டாகும்; அப்பேர்பட்ட வர்த்தக நஷ்டத்திற்கு எவ்வளவு பண்டுமிருந்தாலும் போதாது அந்த முறை மற்ற மாகாணங்களில் பலவந்தப் படுத்தப்படவில்லை. யதார்த்தமாய், க்ஷேமநிதிகள் அந்தந்த சங்கங்களிலேயே போட்டு வைக்கவேண்டியது.

## இன்னும் யூனியன்கள் வேண்டும்.

கோயமுத்தூர் மிஸ்டர் ஸி. என். கிருஷ்ணஸ்வாமி ஐயர் மேற்கண்ட விஷயத்தைப்பற்றி எழுதியிருந்தார். இந்த யூனியன் இயக்கம் நாட்டுப்புறங்களில் பரஸ்பர நம்பிக்கை மிகவும் உபயோகமானதென்று எண்ணங்கொண்டார். சொஸைடிகளை ஆதரிப்பதற்காகக் கவர்ண்மெண்டுக்கு வந்தனமளித்தார்.

## யூனியன்கள் ஏற்படுத்தல்.

உத்தரமல்லூர் வாசியாகிய மிஸ்டர் ஓ. எம். வெங்கடநாத ஐயங்கார் கோ ஆபரேடிவ் யூனியன்கள் ஏற்படுத்துவதைப்பற்றிப் பேசினார். அது எல்லாராலும் மிகவும் மதிக்கப்பட்டது.

## கிராம ஸமாஜங்கள்.

மதுரை மிஸ்டர் கே. ராமசாமி ஐயர் பிறகு கிராம கோ ஆபரேடிவ் விவசாய சமாஜங்களைப்பற்றி ஒரு பத்திரம் படித்தார். கிராமக் கூட்டுத்தொழில் சங்கங்களின் உத்தேசம் மெம்பர்களின் கூட்டுப்பொறுப்பினால் பண்டைச் சேகரிக்கத்தான். அப்பேர்ப்பட்ட சங்கங்களினால் பிரகிருதி சம்பந்தமான பிரயோஜனங்களைவிட சன்மார்க்கத்தைக் கற்பிக்கும் உபயோகங்கள் அதிகமாயிருக்கின்றன. அது பரஸ்பர நம்பிக்கையை உண்டாக்குகிறது. சங்கத்தின் ஒவ்வொரு மெம்பரும் ஏதேனும் ஒரு மெம்பரின் நாசம் தன்னுடைய சுகத்தை பாதிக்கும் என்பதை அறிவான். விவசாயிகள் கூட்டுத்தொழிலின் பலனை அறிகிறார்கள். கிராமச்சாவடிகளில் அடிக்கடி கூட்டங்கூடி தங்களுடைய க்ஷேமத்தையும் அபிவிருத்தியையும் ஒட்டிய விஷயங்களை ஆராய்தலினால், தாங்களெல்லாம் ஒன்று சேர்ந்து செய்கிறகாரியம் வெகுவாய் நிறைவேறுமென்பதை அவர்களுக்குத் தெரிவிக்கிறது. மொத்தத்தில், கிராம வாசமானது ஒரே ரீதியாயும் சோம்பலாயும் இல்லாமல் மாறுபாடுள்ளதும் சுறுசுறுப்புள்ளதாகவுமாகிறது.

## விவசாய விளைபொருள்.

நாகபட்டணம் ராவ்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி ஐயர் விவசாய விளைபொருளைப்பற்றிப் பேசினார். விவசாய சம்பந்தமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் அவைகளை விநியோகம் செய்வதற்கும் தகுந்த ஸொஸைட்டிகளை ஏற்படுத்த வேண்டுமென்கிற விஷயத்தை வற்புறுத்தினார். இப்போது கொஞ்சகாலமாக கூட்டுத்தொழில் முயற்சி அபிவிருத்தி மூலமாக இருக்கிறதென்றும், விவசாயத்தை வெகுவாய் அலக்ஷியம் செய்யப்படுகிறதென்பதையும் காண்பித்தார். குடியானவர்களை ஒன்றுசேர்க்க தனித்தனிப் பரீக்ஷை முடியாதென்றும், அதற்காக கூட்டுறவே சரியான வழியென்றும் எச்சரிக்கை செய்தார்.

## டிஸ்ட்ரிக்ட்டு சென்ட்ரல் பாங்கி.

ராவ் பகதூர் வி. கே. ராமாநுஜாசாரியார் பிறகு டிஸ்ட்ரிக்டு சென்ட்ரல் பாங்கிகளின் அவசியத்தைப்பற்றி உறுதியாய்ச் சொன்னார்.

## தீர்மானங்கள்.

**தீர்மானம் 1.** சர்க்கார் உத்யோகஸ்தர்கள் தாங்கள் மிச்சம் பிடித்ததை நாட்டுகூட்டுறவுச் சங்கங்களில் டிபாஸிட் செய்வதைப்பற்றி இப்போதிருக்கிற நிபந்தனைகளை எடுத்துவிட வேண்டுமென்பது இந்த மகாநாட்டின் அபிப்பிராயம்.

ராவ் பகதூர் வி. கே. ராமாநுஜாசாரியார் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்து அதின் விவரங்களை விளக்கிக்காட்டினார். சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் குறுக்கிடுதல் விரும்பத் தக்கதல்லவென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அப்பேர்க்கொத்த பாங்கிகள் விஷயங்களில் அவர்கள் குறுக்கிடுதலினால் யாதொரு பயமுமில்லை.

திருத்துறைப்பூண்டி வாசியாகிய மிஸ்டர் வெங்கடாங்காசாரியார் அதை இன்னும் தாக்கிப்பேசி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இவ்விஷயத்தில் செய்கிறது நல்ல பரிதாபஸ்துண்டாகுமென்று சொன்னார்.

பிரெஸிடெண்டு இந்தத் தீர்மானத்தை வோட்டுக்கு விடுவதற்குமுன், சாதாரணமாய்த் தீர்மானங்களெல்லாம் கவர்ன்மெண்டார் பச்சாதாபத்தோடு கவனிப்பார்கள் என்று சொன்னார். பிறகு எல்லாராலும் ஒரே மனதாய் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 2.** சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு பரஸ்பர நம்பிக்கைக்காக பண்டுகளில் சேர எப்படி அனுமதி கொடுத்திருக்கிறார்களோ அதேமாதிரி தாராளமாய் கூட்டுத்தொழில் சங்கங்களில் மெம்பர்களாக அனுமதி கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மிஸ்டர் ஆர். நடராஜ ஐயர் இந்தத் தீர்மானத்தை பிரேரேபணை செய்து இதற்கும் முந்தின தீர்மானத்திற்குமுள்ள சிறிது வித்யாசத்தைக் காண்பித்தார்.

மிஸ்டர் வி. பஞ்சாபிகேசய்யர் இதை ஆமோதித்தார்.

கனம் பிரெஸிடெண்டவர்கள் இப்போது பிரேரேபணை செய்த வழியில் அநேக ஆக்ஷேபங்கள் உள்ளனவென்று குறித்துச் சொன்னார். பிறகு கொஞ்சம் ஆக்ஷேப சமாதானங்களாய் கடைசியில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 3.** ரிஜிஸ்ட்ராரை, க்ஷேமநிதி போட்டுவைப்பதற்குப் பதிலாக அதை மற்ற கூட்டுத்தொழில் சங்கங்களுக்கு கடனாக கொடுக்க அனுமதி கொடுக்க வேணுமாய், இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.



இதை மிஸ்டர் ஏ. சேதுராமய்யர் பிரேரேபணை செய்ய மிஸ்டர் ஆப்தசஹாய ஐயரால் வெளிகூட்டுப் பேசப்பட்டது. கொஞ்சம் தர்க்கமானபிறகு, பணம் கட்டுதலைப்பற்றிய ரூல்கள் தளர்த்த முடியாதனவல்லவென்றும் அது ஒவ்வொரு சங்கத்தின் விஷயத்தைப் பொருத்ததென்றும் பிரஸிடெண்டு குறிப்பிட்டார்.

**தீர்மானம் 4.** சென்ட்ரல் பாங்கிகள் கோ ஆப்ரேடிவ் சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு வட்டி இப்போது இருக்கிறதை விட குறைக்க வேண்டுமென்றும், அல்லது அந்த சென்ட்ரல் பாங்கிகள் தங்கள் நிகர லாபத்தில் ஏதோ ஒரு பங்கை சரியான தேதியில் கடனைத் திருப்பிக்கொடுக்கும் கோ ஆபரேடிவ் சங்கங்களுக்கு வட்டியைக் குறைப்பதற்காக எடுத்து வைக்கவேண்டுமென்றும், ரிஜிஸ்ட்ரார் தன் அதிகாரத்தால் சென்ட்ரல் பாங்கிகளை ஏவவேண்டுமென்றும், இந்தமகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

ராவ்பகதூர் வி. கே ராமாநுஜாசாரியார் இதின் ஆக்ஷேபணை சமாதானங்களை எடுத்துக்காட்டி பிரேரேபணை செய்தார். மிஸ்டர் டி. ஆர். சீனிவாச அய்யங்கார் (தஞ்சாவூர்) இதைப்பற்றி உறுதியாகப்பேசி பிறகு சம்மதிக்கப்பட்டது.

**தீர்மானம் 5.** கோஆபரேடிவ் ஸொஸைடி இலாகாவில் சிப்பந்திகளை அதிகப்படுத்தினதற்கும் ஆக்டின் பிரகாரமுள்ள அதிகாரத்தை, வேலை சீக்கிரம் முடிவதற்காக இரண்டு உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்ததற்காகவும் சர்க்காருக்கு வந்தனமளிப்பதோடுகூட, இந்தக் கூட்டுத்தொழில் முறையானது இன்னும் பால்யத்திலேயேயிருப்பதால் கவர்ன்மெண்டார், தங்களுடைய ஆதரவை, இன்னும் ஸொஸைடிகள் விருத்தியாக விருத்தியாக, மேல்பார்வை பார்க்கவும், ஆளவும், கணக்குப்பரிசோதனை செய்யவும் அநேக ஆபீசர்களை ஏற்படுத்தி, இப்போதைவிட அதிகமாக இந்த ஸொஸைடிகளுக்கு காரிய சாதகமான வேலைகளைச் செய்து உதவிபுரிய விரும்புகிறவர்களாயிருப்பார்களென்பது இந்தக் கான்பிரன்சின் அபிப்பிராயம்.

தஞ்சாவூர் எம். பி. ராமசாமிஐயர் இதைப் பிரேரேபணைசெய்ய பட்டுக்கோட்டை மிஸ்டர் தேவ ஆசீர்வாதம்பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு பிறகு நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 6** கடன் கொடுத்த தேதிமுதல் அதைத் திருப்பிக்கொடுக்கும் தேதிவரை, கோஆபரேடிவ் ஸொஸைடிகளால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அதிக வட்டிரேட்டை சரியென்று ஒப்புக்கொள்ள நியாய விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு கவர்ன்மெண்டார் விண்ணப்பம் செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளவேண்டியது.

தஞ்சாவூர் மிஸ்டர் ஐ. குமாரசாமிபிள்ளை இதைப்பற்றி பேசினதில் முக்கியமானவர். திருவாரூர் மிஸ்டர் இராமநாத ஐயரால் ஆமோதிக்கப்பட்டது.

---

## மதுரை இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் கான்பரென்ஸ.

---

முதலாவது மதுரை-இராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் கோவாபரேடிவ் கான்பரென்ஸானது மார்ச்சமாதம் 22, 23-ந்தேதிகளில் மதுரை காலேஜ் ஹாலில் ஆனரெபில் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி அய்யரின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. இக் கான்பரென்சுக்கு அநேக இடங்களிலிருந்து சுமார் 200 டெலிகேட்டுகளும் ஐக்கிய

இயக்கத்தில் கவலை யெடுத்துக்கொள்ளும் அநேக உள்ளூர் கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஆனரபில் மிஸ்டர் L. D. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை, ஆனரபில் மிஸ்டர் K. ராமய்யங்கார், திவான் பகதூர் V. ராமபத்திர நாயுடுகாரு, மிஸ்டர் K. விஜயராகவாச்சாரியார், மிஸ்டர் A. வேதாசலம் ஐயர், மிஸ்டர் ஸி. சாம்ஸன், மிஸ்டர் ராபர்ட் போக்ஸ் முதலியோர்களும் வந்திருந்தார்கள். உபசாரணைக் கமிட்டியின் சேர்மனாகிய ராவ் பஹதூர் G. சீனிவாசராவ் கான்பிரென்ஸின் பிரஸிடெண்டாகிய ஆனரபில் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி அய்யரை எதிர்கொண்டழைத்து ஹாலுக்கு அழைத்துச் சென்றூர். மிஸ்டர் சீனிவாஸராவ் டெலிகேட்டுகளுக்கு நல்வரவு கூறினூர்.

## ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரின் பேச்சு.

கவர்ன்மெண்டாரும், ஜனங்களும் கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்தியைப் பற்றி மிகம்பச் சிரத்தையுடன் கவனித்து வருகிறூர்கள். நான் கவர்ன்மெண்ட் மெம்பராகவும் ஜன சமூகத்தில் சேர்ந்தவனுகவும் இருப்பதினுல், நான் இங்கு வந்து உங்களுடன் கலந்துகொண்டு உழைப்பதற்கு எனக்குச் சமயம் நேர்ந்ததைப்பற்றிச் சந்தோஷப்படுகிறேன். கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று ஜனங்களுள் கிளர்ச்சியுண்டாகி ஒன்பது வருஷந்தான் ஆயிற்று. என்றூலும் அது இந்நாட்டில் பலமாக வேரூன்றி விட்டது. அது முன்னுக்கு நல்ல வேலை செய்யும் என்பதற்கு பல அறிகுறிகள் ஏற்பட்டிருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் எங்குமே தழைத்து ஓங்கி விருத்தி யடைந்து வருகின்றன. மதுரை, ராமநாதபுரத்தில் ஏற்பட்டிருக்கும் இச்சங்கம் எந்த விதத்திலும் மற்ற விடங்களிலிருக்கும் சங்கங்களுக்குப் பின்னடைந்திருக்கின்றது என்று சொல்வதற்கில்லை. மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் சுமார் 109 சங்கங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் கூட்டுறவுப் பாங்கி ஒன்று இந்த ஜில்லாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதானது அதற்கு ஒரு பெருமையாகும். அந்தப் பாங்கி, சங்கங்களுக்கு வேண்டியபோது பண உதவி செய்தும் அவைகளின் மேற்பார்வை பார்த்தும் வருகின்றது. ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் இந்த பாங்கி இவ்விதமாய் நடந்து வருகிறதென்ற ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டுக்கு அனுப்பின பொழுது, அதைப் பார்த்து கவர்ன்மெண்டார் அந்தப் பாங்கி மிகப் பிரயோஜனகரமான வேலைகளைச் செய்து வருகின்றது; என்று, குறிப்பிட்டிருக்கிறூர்கள். மற்றப் பாங்கிகளும் இதைப் பின்பற்ற வேண்டும் என்பது என் விருப்பம். ஒத்தக்கடை என்ற ஊரில், ஜனங்கள் ஒன்று சேர்ந்து தலைக்குக் கொஞ்சம் முதல் பணம் போட்டு, சங்கம் ஒன்று ஏற்படுத்தி, விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து வருகிறூர்கள்.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஐரோப்பா கண்டத்தில் ஏராளமாய் ஏற்பட்டிருக்கின்றன. அயர்லாந்தில் அவ்விதச் சங்கங்கள் பலவுள. இங்கிலாந்தில் அவ்விதச் சங்கங்கள் ஏற்படுத்துவதின் அவசியத்தை, இங்கிலாந்து ஜனங்கள் உணர்ந்து வருகிறூர்கள். ஐரோப்பா தேசங்களில் இவ்விதச் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும் என்ற அவசியத்தை ஜனங்கள் உணர்ந்து அப்படியே செய்திருக்க, இந்தியாவில் அவ்விதச் சங்கங்கள் ஏற்படுத்துவதின் அவசியத்தைச் சொல்லவும் வேண்டுமோ? கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதில் பல நன்மைகள் உண்டாகின்றன விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதினுல், விவசாயிகள், சரக்குகளை எவ்விடங்களுக்கு அனுப்பினுல், சீக்கிரம் விலையாகும் என்பதையும் அதிக லாபம் வரும் என்பதையும் வாவழைக்கவே



ண்டிய சரக்குகள் எவ்விடத்தில் சுலபமான விலைக்குச் சிறந்த சரக்குகள் கிடைக்கும் என்பதையும் சுலபத்தில் அறிந்து கொள்ளலாம் கூட்டுறவுச் சங்கங்களினுல் கிராமாந்தரங்களில் கட்சிப்பிரதி கட்சிகள் உண்டாகாது. வியாஜ்யம் விவகாரம் செய்வதற்கு ஜனங்கள் பிரியப்படமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய காலத்தை யெல்லாம் தங்களுடைய பூமிகளின் அபிவிருத்தியைபபற்றியும், தேசத்தின் க்ஷேமத்தைப்பற்றியும், கவனித்து வருவதிலேயே கழித்துவருவார்கள்.

விவசாயத்தில் ஒற்றுமையாய் உழைத்தால் பூமிகளுக்கு வேண்டிய எருக்களைச் சரசமான விலைக்கு வாங்கி வரலாம்: விதைகளையும் கால் நடைகளையும் வாங்குவதற்கு இடமுண்டாகும். நிலங்களுக்குக் கந்தாயம் கட்டுவதற்கு விவசாயிகளுக்குப் பணத்திற்கு தட்டாயிருக்கும் சமயத்தில் விவசாயிகள் தங்களுடைய மாசூல்களின் விலை இறங்கி யிருக்கும்பொழுது விற்றுவிட்டு சர்க்காருக்குப் பணத்தைக் கட்டி விடுகிறூர்கள். அதனுல் அவர்களுக்குப் பெருத்த நஷ்டம் உண்டாகிறது.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருந்தால், விலை ஏறி யிருக்கும் சமயத்தை அறிவதற்கு ஹேதுவாயிருக்கும். தவிர விவசாயச் சங்கங்கள் ஏற்பட்டிருந்தால் சர்க்கார் கிஸ்தி கட்டவேண்டிய அவசரம் நேரிடும்பொழுது அச்சங்கத்திலிருந்து கடன் வாங்கிக்கொடுத்து விட்டு சரக்குகளுக்கு விலை யேறும் காலம் வரும்வரையிலும் பொறுத்திருந்து, பிறகு விற்று லாபம் சம்பாதிக்கலாம். ஐக்கியத்தின்பேரில் வேலை செய்தால் பல விதத்தில் லாபம் உண்டு. மதுரை ஜில்லாவில் பலதரிசு நிலங்கள் இருக்கின்றன. அவைகளுக்குப்போதுமான ஜலம் பாயாததினுல் அவைகள் உபயோக மில்லாத நிலங்களாகக் காணப்படுகின்றன. ஐக்கியச் சங்கத்தார் ஒன்று சேர்ந்து ஆயில் இஞ்சின் ஒன்று வாங்கி பூமிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சினுல் ஏராளமான மாசூலை எடுக்கலாம். ஒரு விவசாயிக்கு தென்னந்தோப்புகள் இருக்கின்றன. அவன் தேங்காய்களை மட்டும் விற்று வருகிறுன். தேங்காய் நாறுகளினுல் கயிறு பின்னும் சாலை ஒன்று ஏற்படுத்தினுல் எவ்வளவு லாபம் சம்பாதிக்கலாம் என்பதை யோசித்துப் பாருங்கள். நகர அமைப்புத்தொழில் தற்காலம் ஒரு பெரிய சாஸ்திரமாக ஆய்விட்டது. நகர அமைப்புச் சாஸ்திர விஷயத்தில் நம்கவர்னருக்கு அதிக சிரத்தை யுண்டு.

நகர அமைப்பில், தெருக்கள் விசாலமாயும் வீடுகள் காற்றோட்ட முள்ளவைகளாயும், ஒழுங்காயும் இருக்கும்படிக் கட்ட வேண்டும். இவைகள் சங்கத்தார் கவனிக்க வேண்டியவை.

## கிராம சுகாதாரம்.

கிராம சுகாதாரத்தை கூட்டுறவுச் சங்கத்தார் கவனித்து வரவேண்டும் என்று சமீபத்தில் கவர்ன்மெண்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வீடுகள் காற்றோட்டமுள்ளவைகளாக இருக்கவேண்டும். குப்பை செத்தைகள் பக்கத்தில் இருக்கக்கூடாது. சுத்தமாக வைத்திருக்கவேண்டும். இவைகள் எல்லாம் கிராமத்தார் அறியவேண்டுமானுல், அவர்கள் கொஞ்சம் படித்தவர்களாக இருக்கவேண்டும். ஆகையால் கூட்டுறவுச் சங்கத்தார் இவ்விஷயத்தைப்பற்றி சிரத்தை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

## ஜன சமூகங்களுக்குப் படிப்பு.

கிராமாந்தரங்களில் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவு விவசாயப்பாங்கு சங்கத்தார், கிராமக் குழந்தைகளின் படிப்பைக் கவனித்து வருவதுடன், அக்குழந்தைகளுக்கு,

கணக்குகள் வைக்கப்படும் முறையைப் போதித்து வருவதற்கான ஏற்பாடு செய்துவர வேண்டும். விவசாய இன்ஸ்பெக்டர்களின் நியமனத் தொகையை அதிகப்படுத்தும்படி நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். தவிர, கிராமாந்தரங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய விஷயத்தை அவர்களுக்குப் போதித்து வரும்படியாய் இன்ஸ்பெக்டர்களை நியமிக்கும்படியும் நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். முற்காலத்தில் கிராமத்தார்களுள் ஐக்கியம் இருந்தது. அது வரவர க்ஷீணதிசை யடைந்துவந்தது. அதை மறுபடியும் முன்னிருந்த நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும் என்று கவர்ன்மெண்டார் இப்பொழுது பிரயத்தனஞ்செய்து வருகிறார்கள். பாரெஸ்ட் கமிட்டி விசாரணையில், கிராமக் காடுகளின் மேற்பார்வையை கிராமப் பஞ்சாயத்தார்களின் வசம் ஒப்புவித்துவிடும்படியாய் பலர் கேட்டுக்கொண்டார்கள். கிராமத்தில் கூட்டுறவு உண்டாகவேண்டுமானால், கூட்டுறவுச் சங்கத்தாரின் மூலமாகத்தான் உண்டாகவேண்டும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். மதுரையிலுள்ள நெசவுக்காரர்கள் தங்களுக்குள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தி, துணிகளை நெய்து அதிக வியாபாரம் செய்து வரலாம் என்று இவ்விதமாய்ப் பேசினார்.

## தீர்மானங்கள்.

(1) விவசாயத் தொழிலை, கூட்டுறவின் மூலமாய் விருத்திசெய்ய வேண்டியதற்கு மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் உதவியும் ஆலோசனையும் வேண்டியிருக்கிறபடியால் மதுரையை தலைமை ஸ்தானமாகக் கொண்ட ஜில்லா கோ ஆபரேடிவ் சங்கமொன்று கீழ்க்கண்ட கருத்துகளுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது. (1) மதுரை இராமனாதபுரம் ஜில்லாக்கள் முழுவதிலும் விவசாய ஐக்கியச் சங்கங்களை ஸ்தாபிப்பது. (2) சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களுக்காகவும் உப சங்கங்களுக்காகவும், விவசாயத்திற்கு உபயோகப்படக்கூடியவைகளை வாங்கி வைப்பது. (3) விளைவுப் பொருள்களைச் சரியான விலைக்கு விற்பதற்குத் தகுந்த இடத்தைத் தேடுவது. [4] நல்ல எருதுகளை வாங்கி வைத்து, மெம்பர்களிடம் வாடகைக்கோ அல்லது விலைக்கோ கொடுத்துதவுவது. [5] விவசாய சம்பந்தமான விஷயங்களை சேகரித்து வைத்தல். [6) இரண்டு ஜில்லாக்களிலும் பல வேறுபட்ட ஸ்தலங்களில் விவசாயப் பொருட்காட்சிகளும் கான்பரன்ஸ்களும் நடத்த ஏற்பாடு செய்வது, [7] விவசாய சம்பந்தமான நூதன விஷயங்களைத் துண்டுப் பத்திரிகைகள் மூலமாயும், ஊரூராய்ச் சுற்றிப் பிரசங்கஞ் செய்தும் சகல ஜனங்களுக்கும் தெரிவிப்பது, [8] கைத்தொழில் சம்பந்தமாயும் விவசாய சம்பந்தமாயுமுள்ள பல விஷயங்களையும் விவசாய இலாகாவுக்கு எடுத்துரைப்பது. [9] விவசாயம் விருத்தியடைந்து க்ஷேம மடைவதற் குரித்தானவைகளெனத் தோன்றும் விஷயங்களைக் கையாளுவது.

[2] மேற்கண்ட முதல் தீர்மானத்தில் கண்ட விஷயங்களை நிறைவேற்றுவதற்காக இருபதுபேர் அடங்கிய கமிட்டி யொன்று ஏற்படுத்த வேண்டும்.

[3] விவசாய சம்பந்தமான கல்வியைச் சிறுவர்களுக்குப் போதிப்பதற்கான பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் வந்து சேருமாறு பிள்ளைகளுக்குத் தகுந்த உதவி செய்யவேண்டும். இத்தகைய பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்படும் உபாத்தியாயர்கள், விவசாயத்தொழில் தெரிந்தவர்களாயிருப்பது அவசியமானதால் அவர்களைப் பரீக்ஷார்த்தமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பண்ணைகளில் பழகும்படி செய்யவேண்டும்.



4. கிராமாந்தரங்களில் சுகாதார நிலைமையைக் குறித்து கோவாபரேடிவ் சங்கங்கள் கவனிக்க வேண்டும். சுகாதாரத்தை விருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை கிராமப் பஞ்சாயத்தாரைக் கொண்டு தயார் செய்வித்து, அப்பேர்ப்பட்ட ஏற்பாடுகளுக்கு லோக்கல் போர்டுகளைத் தகுந்த பண உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளவும் வேண்டும்.

5. கீழ்கண்டவிதமான சங்கங்கள் பொருத்தமான இடங்களில் ஸ்தாபிக்கப்படவேண்டும். (1) கோ-ஆபரேடிவ் (கூட்டுறவு) அரிசி இயந்திர சாலை (2) கோ-ஆபரேடிவ் எருத்தொழிற்சாலை (3) கோ-ஆபரேடிவ் பருத்தித் தொழிற்சாலை. (4) கோ-ஆபரேடிவ் எண்ணெய் இயந்திர சாலை (5) கோ-ஆபரேடிவ் பால் வெண்ணெய் தயாரிக்கும் தொட்டிச்சாலை (6) கோ-ஆபரேடிவ் தான்ய பாங்கி (7) கோ-ஆபரேடிவ் மிருக இன்ஷியூரன்ஸ் ஸொஸைட்டி.

6. நெருக்கமாகக் குடியிருந்து வரும் ஜனங்களுக்கு சௌகரியத்தை யுண்டு பண்ணுவதற்காக அவர்களுக்கு வாஸஸ்தல சௌகரியங்கள் செய்துகொடுக்கும் கோ-ஆபரேட்டிவ் சங்கங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். அப்பேர்ப்பட்ட சங்கமொன்று மதுரையில் ஏற்படுத்தப்படவேண்டும்.

7. கோ-ஆபரேஷன் சம்பந்தமாயும் விவசாய சம்பந்தமாயுமுள்ள புத்தகங்கள், மாதாந்தப் பத்திரிகைகள், கணக்கு விபரங்களடங்கிய ரிப்போர்ட்டுகள் முதலியன அடங்கிய புத்தகசாலை ஸ்தாபிக்கப்படவேண்டும். அந்தப் புஸ்தக சாலைக்கு சகல கவர்ன்மெண்ட் பிரசாரங்களையும், அது நிலை பெற்று நடைபெறுமாறு பொருளுதவியையும் செய்யும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

8. கோர்ட்-ஆப்-வார்ட்ஸ்களி னுடையவும் மத சம்பந்தமானதும் தர்ம ஸ்தாபனங்களைச் சேர்ந்ததுமான நிதிகளை சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கோ ஆபரேடிவ் பாங்கிகளில் டிபாஸிட் செய்யும்படி அதற்குடையவர்கள் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

9. விவசாய சம்பந்தமான விஷயங்களைப்பற்றி கிராமாந்தரங்களிலுள்ள கோ ஆபரேடிவ் சொஸைடிகளுக்கு ஆலோசனை சொல்வதற்காக விவசாய இன்ஸ்பெக்டர் ஒருவரை நியமிக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

10. கோ ஆபரேடிவ் சங்கங்களில் ஜனங்களுக்கு அதிக உணர்ச்சி யுண்டாவதன் பொருட்டும், மெம்பர்கள் சிறிது சிறிதாகச் செலவழிக்கும் தொகையையும் முருதது அதனால் அவர்கள் பலனடையும்பொருட்டும், சிறு தொகையையுங்கூட கோ ஆபரேடிவ் சங்கங்கள் பெற்று ஜனங்களுக்கு கூட்டுறவு ஊக்கத்தை விருத்திப் பண்ணவேண்டும்.

11. பல இடங்களிலும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று வியாபாரம் நடத்திக்கொள்ளவேண்டும்.

12. கோ ஆபரேடிவ் சங்கங்கள் அவைகளைச் சேர்ந்த மெம்பர்களைக் கடன்களினின்று மீட்பதையே நோக்கமாகக்கொண்டிருக்கவேண்டும். இதன் முடிவாக ஒவ்வொரு கோ ஆபரேடிவ் சங்கமும் அதைச் சேர்ந்த மெம்பர்களில் எத்தனைபேர் அவ்வாறு உதவி பெற்றார்களென்றும் வருஷத்திற்கு வருஷம் அத்தகைய மெம்பர்களின்

தொகை எவ்வளவு தூரம் குறைந்திருக்கிறதென்பதையும் காட்டக்கூடிய கணக்குகள் வருஷவாரி தயாரிக்க வேண்டும்.

18. கூட்டுறவு விவசாயம் பலப்படக் கூடிய விதமாக எல்லா கிராமாந்தரச் சங்கங்களும் உபச்சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

14. கிராமாந்தர வாசிகள் கையாடி வரும் கைத்தொழில்கள் அபிவிருத்தியடைய வேண்டுவதற்காக, ஸெண்ட்ரல் கோ ஆபரேடிவ் சொஸைட்டியார் அந்தக் கைத்தொழிலாளிகளுக்கு வேண்டிய விளைபொருள்களைத் தயாரித்து கொடுக்க வேண்டும்.

15. கோ ஆபரேடிவ் சங்க ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு ரிப்போர்ட்டில் சொஸைட்டிகளின் பஞ்சாயத்தார்களின் கவனக் குறைவால் நேரிடும் குற்றங்களைக் குறிப்பிட்டிருப்பதைக் கவனித்து சங்கங்களில் அதிகமாக ரொக்க இருப்பு வைத்திருத்தல், பஞ்சாயத்தார்களுக்குள் கடன் கொடுத்தல், ரசீது கொடுக்க மறுத்துவிடுதல், நபர் ஜாமீன், நிலுவை நிற்கும் தொகைகளை வசூலிக்காதிருத்தல், கடனிருக்கும்போதே கடன் கொடுத்தல், ஒருவன் தனியாகவே ஸொஸைட்டி ஸ்தாபித்து நடத்துதல் முதலியவைகளை நீக்கி குற்றங்களை விலக்கிகொள்ள வேண்டும்.

16. மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் பாலூரில் அதிகாரிகளின் பார்வையில் நடத்தப்பட்டு வரும் விவசாயப் பண்ணையைப் பார்த்து வரும்படி செய்வது கஷ்ட சாத்தியமாயிருக்கிறபடியால், மேற்கண்ட ஜில்லாக்களில் எந்த பாகத்திலாவது அது போன்ற ஒரு பண்ணையை, பரீக்ஷார்த்தமாக ஏற்படுத்த வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை மிஸ்டர் M. மஹாதேவ ஐயர் பிரேரேபிக்க மிஸ்டர் K. S. சுந்தரராஜ ஐயங்காரும், பஞ்சமர்களுக்குப்பிரதிநிதியாக வந்திருந்த அரசன் சாம்பனும் ஆமோதித்தார்கள். அது மற்றவைகளைப் போல் நிறைவேறிற்று

17. சென்னை மாகாணக் கான்பரன்ஸின் முதலாவது கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டபடி மாகாண கோவாபரேடிவ் யூனியன் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பது அவசியமென்பதை இந்தக் கான்பரென்ஸ் உறுதிப்படுத்துவதோடு, அந்த யூனியன் சங்கத்தைச் சீக்கிரத்தில் ரிஜிஸ்டர் செய்யும்படிக்கும் ரிஜிஸ்ட்ராரை கேட்டுக் கொள்கின்றது.

மேற்கண்ட பதினேழு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு முடிந்தவுடன் அக்கிராசனாதிபதியாகிய ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி ஐயர், அந்தக் கான்பரன்ஸில் சந்தோஷமடைந்தவராய், கூட்டத்தாருக்கு உற்சாக முண்டாகும்படி பேசினர். பிராமணரல்லாத வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் அதிகமாக வந்திருந்ததையும், பஞ்சமர்களின் பிரதிநிதி சுலபமாயும் நேருக்கு நேராயும் ஏதோ தனக்குத் தெரிந்த மட்டில் தைரியமாய்ப் பேசியதைப்பற்றி அவர் வந்தார். கான்பரன்ஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சொற்ப ஒத்தாசையை மாத்திரம் கவர்ன்மெண்டிடம் எதிர் பார்ப்பதாயும் பொதுவாய் ஒன்றேனும் மிகபடக் கூறப்பட்டவையா யல்லாமலும் இருந்ததைக் குறிப்பிட்டார். கோ ஆபரேடிவ் நிகழ்ச்சிகளில் ஜெயம் பெற வேண்டுமானால் கோ ஆபரேடிவ் (கூட்டுறவு) உணர்ச்சி ஜனங்களுக்குள் அதிகரிக்க வேண்டும். உத்தியோகத்தினின்றும் நீங்கி பென்ஷன் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களனேகர் முன்



வந்து இவ்விஷயத்தில் பாடுபட்டுழைக்கவேண்டும். ஒரு கூட்டம் பென்ஷன் உத்தியோகஸ்தர்கள் கொஞ்சகாலம் உழைத்த பிற்பாடு அவர்களுக்குப் பதிலாக மற்றொரு கூட்டத்தார் அவ்வேலையைக் கைக்கொள்ள வேண்டும். இந்த சொஸைடிகளும் இது போன்ற இன்னும் அநேக இலாகாக்களும் நிர்வகித்து நடத்தப்படும் முறைகளை ஜனங்களுக்குக் கற்பிக்கவேண்டும். கூட்டுறவு சம்பந்தமாயுள்ள நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு ஜனங்களுக்குள் பரவச்செய்வதால் அவர்களுக்கு அந்நிய தேசத்தில் இம்மாதிரிச் சங்கங்கள் எவ்விதம் நடைபெறுகின்றதெனப் புலப்பட்டு இவ்விஷயத்தில் மிகுந்த ஊக்கமுள்ளவர்களாய் விடுவார்கள். இப்படி அவர் பேசினர்.

இந்தக் கான்பரன்ஸை யொட்டி விவசாயப் பொருட்காட்சி யொன்றும் திறக்கப்பட்டிருந்தது. இந்தப் பொருட்காட்சியில் விவசாயத் தொழிலுக்குரிய சாமான்களும் பலவித எருத்தினுசுகளும் பாரி அண்டு கம்பெனியாரால் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன. 23-ந்தேதியோடு கான்பரன்ஸ் சிறப்பாய் முடிவடைந்தது.

# வங்காள கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

வங்காள கோவாபரேடிவ் கான்பரென்ஸின் 5-வது செஷன், டைட்டெர்ஸ் பில்டிங்கில் பழைய ஆலோசனை சபை மண்டபத்தில் சென்ற ஜனவரி மாசம் 18-ந்தேதி ஆனரபில் மிஸ்டர் லையன் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. மாட்சிமை பொருந்திய லார்ட் கார்மைகேல் ஆனரபில் மிஸ்டர் கூர்லேயுடன் ஒரு எடிகாங் ஸஹிதமாய் வந்து சேர்ந்தார். பிறகு கோவாபரேடிவ் சங்கங்களின் ரிஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் J. M. மித்ரா அங்கு விஜயம் செய்திருந்த மெம்பர்கள் ஒவ்வொருவரையும் மாட்சிமை தங்கிய கவர்னரவர்களுக்கு அறிமுகமாக்கினர்.

## மாட்சிமைபொருந்திய கவர்னர் லார்ட் கார்மைகேலின் உபந்நியாசம்.

மிஸ்டர் லையன், மிஸ்டர் மித்ரா, இன்னும் மற்றுமுள்ள கனவான்களே,—நான் இன்றையதினம் இவ்வங்காளத்திலுள்ள கோவாபரேடிவ் சங்கங்களின் 5-வது மாகாணக் கான்பிரன்ஸின் மெம்பர்களுக்கு நல்வரவு கூறவும் உங்களுடைய ஊழியம் கைகூடும்படி என்னால் என்னசெய்ய முடியுமோ அதைச் செய்யவும் இவ்விடம் வந்திருக்கிறேன். இந்த ஐக்கிய இயக்கத்தின் விஷயத்தில் மதராஸிலும், ஆஸ்ட்ரேலியாவிலும் ஸ்காட்லாண்டிலும் மிக்ககவலை எடுத்துக்கொண்டேன். ஸ்காட்லாண்டில் என் சொந்த கிராமமாகிய ஸ்கர்லிங்கில் எக்ஸொஸைட்டி முதல் முதல் விவசாய விஷயத்தில் கூட்டுமுறை பிரயோகம்செய்ததைச் சேர்ந்தது. இன்றையதினம் இவ்விடம் மிக்க அநுபவமுள்ள அநேக கனவான்கள் இக்கூட்டுமுறையை அபிவிருத்தி செய்து ஜனங்களுக்கு உதவுவதற்காக வந்திருப்பதைக்காண எனக்கு மிக்க ஆநந்த முண்டாகிறது. என்னுடைய சிநேகிதராகிய மிஸ்டர் ஸரோத சான் மித்திரரும், என்னுடைய எக்ஸிக்யூடிவ் கௌன்ஸில் மெம்பர்களும் ஆலோசனை சபையின் அநேக மெம்பர்களும், இன்னும்

என்னுடைய சுற்றுப்பிரயாணங்களில் அறிமுகமாக்கிக் கொண்ட அநேகரும் இவ்விடம் வந்திருப்பதைக் காண ரொம்ப சந்தோஷப்படுகிறேன். ஆனால் இன்றையதினம் இவ்விடம் மிஸ்டர் பூகான் (Mr. Buchan) மாத்திரம் இல்லாதிருப்பது மெத்த விசனமாயிருக்கிறது. ஸ்காட்லாண்டில் மிஸ்டர் பூகானின் கிருகம் என்கிருகத்திற்கு மிகச் சமீபம். நான் இந்தியாவுக்கு வரு முன்னரே அவருடைய குடும்பத்தைப்பற்றி நன்ருய் அறிவேன். நான் வங்காளத்தில் வந்திறங்கிய தினம் அவரைக்கண்டேன். அவர் மிக்க திறமையுடைய ஸிவில் உத்தியோகஸ்தர். அவர் $4\frac{1}{2}$-வருஷகாலமே வங்காளத்தில் கூட்டுமுறையை அடக்கி ஆண்டிருந்தபோதிலும் இவருக்கு ஜனங்களிடத்திருந்த பச்சாத்தாப குணத்தால் இம்முறை மிக விரைவில் விருத்தியடைந்தது. அவருடைய மரணம் என் காதுக்கு இடிவிழுந்தாற்போல் எட்டியது. உங்களுக்கும் இதேமாதிரி யிருக்குமென்று நம்புகிறேன். வருஷந்தோறும் கான்பிரன்ஸ்கள் நடத்துவது வங்காளத்தில் தான் முதல் ஆரம்பித்தது.பிறகு மற்ற ராஜதானிகளும் ஆரம்பித்தன. இக்கான்பிரன்ஸுக்கு பல இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருக்கிருர்கள். பல ஜனங்கள் சேர்ந்த சபை உண்டாக்குவதுதான் இப்பேர்ப்பட்ட விஷயங்களின் முக்கிய உத்தேசம்.

## கவர்ன்மெண்டாருடைய வந்தனம்.

சென்னை ராஜதானியில் இம்முறை சில விஷயங்களில் மேன்மேலும் விருத்தியடைந்திருக்கிறது. சென்னை ராஜதானியின் சில ஜில்லாக்களில் படிப்பு அதிகமாயிருப்பதே இதற்குக் காரணம். ஆனால், சர்க்கார் உத்தியோகஸ்தரும் பொது ஜனங்களும் மிகுதியாக ஒத்து உழைத்தலும் இதற்குக் காரணமாகும். மிஸ்டர் மித்ரா அவருடைய ரிபோர்ட்டில், படித்த வகுப்பினவர்களை இவ்விஷயத்தில் ஒத்தாசை செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிருர். ஐக்கிய இயக்கம் ஜனங்களை சேர்ந்ததா யிருக்க வேண்டும். கவர்ன்மெண்டார் ஆரம்பித்திருக்கிருர்கள்; ஆனல் ஜனங்களே இவ்வேலையைப் பூர்த்தி செய்யவேண்டும். இம்முறையை ஆரம்பிக்க படித்த வகுப்பினர்களின் உதவி அத்யாவசியமா யிருக்கிறது. இவ்வேலைக்காக தங்கள் வேலைக்கிடையில் அவகாச மேற்படுத்திக்கொண்டு உதவிபுரிந்த கனவான்களுக்கு சர்க்காருக்காக நான் வந்தன மளிக்கிறேன். இக்கான்பிரன்ஸைப் பார்த்து அநேகர் இம்முறையில் முயற்சியெடுத்துக்கொள்வார்கள்; தங்கள் அநேக அலுவல்களுக்கிடையில் அவகாசத்தோடு மிஸ்டர் மித்ராவுக்கு உதவிபுரிந்த ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்கும் வந்தன மளிக்கிறேன்.

## கிராமச் சங்கம்.

எனக்கு வங்காளத்தில் தனித் தனிச் சங்கங்களை பார்த்த அநுபோகம் போதாது. ஆனல் இனிமேல் என் சுற்றுப்பிரயாணங்களில் அநேக ஜில்லாக்களுக்குப் போய் அவற்றைப்பற்றி நன்ருய்ப்ரிந்து கொள்வேன். பிறகு கிராமச் சங்கங்களின் விவகாரங்களை அறிவேன். சாதாரணமாய் நகரச்சங்கங்கள்தான் மிக்க நன்மை பயக்குகின்றன, ஆனல் இந்தியாவில் கிராமச்சங்கங்களை ஏற்படுத்துவதுதான் நம்முடைய முக்கிய கவலையாயிருக்க வேண்டும். வங்காளத்திலுள்ள நீங்கள் வெகு சிரத்தையோடு ரெய்பீசன் முறையையே அநுஷ்டிப்பதாக மிஸ்டர் மித்ராவின் ரிபோர்ட்டால் அறிகிறேன். இந்த ரெய்பீசன் கோட்பாடேதான் கிராமக்கூட்டு நாணயம் சித்திக்க அஸ்திபாரமாகும். இம்முறையை அநுஷ்டிக்குமளவு வங்காளத்தில் கிராமங்களில் சங்கங்கள் சித்திக்கும்.



பன்னிரண்டு அஜாக்கிரதையான சங்கங்களைவிட ஒரு நல்ல சங்கம் அதிக பயனைத் தரும் என்று சிம்லா கான்பிரன்ஸில் ஸர் ராபர்ட் கார்லைல் சொன்ன குறிப்பை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லுவதென்னவென்றால் எத்தனையோ இருக்கிற சொஸைடிகளை உயர்ந்த தரத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமே யொழிய, மற்ற ராஜதானிகளில் அபிவிருத்தி அதிகமாயிருக்கிறதே என்று அதைரியப்படக் கூடாதென்பதே. தனிச் சங்கங்களை உன்னத ஸ்திதியில் வைத்திருந்தால் அபிவிருத்தி வெகு நிதானமாயிருந்தாலும் வெற்றி நிச்சயம். மேல் விசாரணையைப்பற்றி சிம்லாகான்பிரன்ஸில் சொல்லப்பட்டதை ஒப்புக்கொள்ளுகிறேன். திரவிய சகாயத்திற்கு கவர்ன்மெண்டாரை எவ்வளவு கொஞ்சமாக நம்புகிறோமோ அவ்வளவு கொஞ்சமாக கவர்ன்மெண்டார் மேல் விசாரணை விஷயத்திலும் நம்பவேண்டும். சங்கங்கள் சர்க்காரையே நம்பிக்கொண்டிருந்தால் இம்முறை வெற்றிபெறாது. ஆகையால் நான் உங்களைத் தூண்டுகிறதென்னவென்றால் நீங்கள் மேல்விசாரணை செய்யும் யூனியன்களின் நம்பர்களையும் திறமையையும் சென்ட்ரல் பாங்குகளின் அடக்கி ஆளுந் தன்மையையும் அதிகப்படுத்த வேண்டுமென்பதே. இவை யெல்லாவற்றையும்விட ஜனங்களை இந்தப் பாங்குகளில் தங்கள் பணத்தைப் போட்டுவைக்கும்படி செய்வதே மிகவும் உத்தமமானது. வங்காள அரசாட்சி விஷயமாய் அநேக சங்கதிகள் உண்டு. சுகாதாரம், விஷஜ்வரம் நிறுத்தல், தண்ணீர்ப்பாசம் முதலியவையெல்லாம் அந்தந்த இடங்களிலிருக்கும் ஜனங்களின் ஒத்தாசையினாலேயே சரியாக நிறைவேறும். இம்மாதிரி ஒற்றுமையுண்டாக்கும் சங்கங்கள் இருந்தால் கவர்ன்மெண்டாருக்கு எவ்வளவோ உபகாரமாயிருக்கும். இந்தப்பேருதவி இச்சங்கங்களே செய்ய முடியும். ஆகையால் நன்கு யோசிக்கும்பக்ஷத்தில் கூட்டுத்தொழிற்சங்கம் விருத்தி யடைந்தால் அரசாட்சிக்கும் சரி பொதுவாய் ஜனங்களின் நன்மைகளுக்கும் சரி, இவை மிகுந்த உபயோகமுள்ளவைகளாயிருக்கும் என்பதற்கு சந்தேகமில்லை. மிஸ்டர் மித்ராவை கொஞ்சம் புகழ்ந்தபிறகு கவர்னர் மீட்டிங்கைவிட்டு புறப்பட்டு போய்விட்டார்.

## மிஸ்டர் லியான் துரையின் பேச்சு.

முதலில் முன்னிருந்த கூட்டுறவு நாணயச் சங்கங்களின் ரிஜிஸ்திரார் மிஸ்டர் பூகான் இச்சங்கத்திற்காக எவ்வளவு உழைத்துப் பாடுபட்டார் என்பதையும், அவருடைய மற்றுமுள்ள குணாதிசயங்களையும்பற்றி மிஸ்டர் லியான் விஸ்தரித்துப்பேசி அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார்:—

“முன் ரிஜிஸ்திரார் மிஸ்டர் பூகான் (Mr. Buchan) இளவயதில் இறந்ததற்காக உண்டான விசனத்தையும் வங்காளத்திலுள்ள கூட்டுறவு நாணயச்சங்கங்களுக்காக உழைத்ததற்காக எங்கள் நல்லுணர்ச்சியையும், இந்த மாகாணத்து கூட்டு நாணயச்சங்கங்களுக்கு அவர் மரித்ததால் உண்டான நஷ்டத்தையும் கஷ்டத்தையும் இந்தச் சபையார் இதனால் வெளியிடுகிறார்கள்.

“மேலும், மேற்சொன்ன ரிஜிஸ்திராரின் பந்துக்களுக்கு அவர்கள் அடைந்த கஷ்டத்திற்காக துக்கிப்பதையும் இச்சபையார் தெரிவிக்கக் கோருகிறார்கள்.”

"மேலும், ரிசல்யூஷன் காபியை இந்தச்சபை ப்ரிசிடெண்டு மூலமாய் மிஸ்டர் பூகான் துரையின் சகோதரர் மிஸ்டர் ஜான்பூகானுக்கு அனுப்புவிக்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள்"

## பிரிசிடேண்டின் ஆரம்ப உபந்நியாசம்.

ஜனவரி 20௳ திங்கட்கிழமை $10\frac{1}{4}$ மணிக்கு ரைடர்ஸ் பில்டிங்கில் சபை கூடிற்று. மகா கனம் பொருந்திய மிஸ்டர் லியான் அக்கிராசனாதிபத்யம் வகித்தார். ஜனக்கூட்டம் அதிகமாய் இருந்தது. பிரஸிடெண்டு சொன்னதாவது:—

தான் முதல் முதல் இந்தக்கூட்டுச் சங்கத்திற்காக பாடுபட்டதையும் அவர் அங்கே வந்தவன்முதற்கொண்டு 11 வருஷ காலமாய் இதற்கு ஸகாயஞ் செய்து விருத்தி பண்ணுவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியைப்பற்றியும் அநேகம் பெரிய மனிதர்களும் ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் அப்பொழுது அவர் பிரயத்தனத்தைப்பற்றி அது முடியாததும் மிகவும் அபாயகரமான காரியம் என்று கண்டித்ததையும் இப்பொழுது மேற்சொன்னவர்கள் பயந்ததெல்லாம் வீணாயிற்று என்பதையும் நன்றாக எடுத்துப் பேசினார். ஒரு நன்மொழிகூட சொன்னார். இச்சங்கங்கள் அதிகரிக்க அதிகரிக்க பெரிய சங்கங்களுக்கு உள்ளாக்க வேண்டும். இந்தப்பெரிய சங்கங்கள் பண விஷயமாக தங்களுக்குள்ளேயே சங்கங்களுண்டாக்கி இச்சங்கங்களை ஒரு சென்ட்ரல்பாங்கியின் கீழ் அடக்க வேண்டும். இந்த சென்ட்ரல் பாங்கு அச்சங்கங்களின் மொத்த சொத்தையும் பலத்தையும் காண்பிக்கும். இவைகளை யெல்லாம் சரியான மேற்பார்வைக்கும் கணக்குப் பரிசோதனைக்கு முன்னாக்கி இன்னும் பலப்படுத்த வேண்டும். இப்படிக்கு கூட்டுச் சங்கங்கள் (Unions) சாதாரண சங்கங்கள் மேலும் சென்ட்ரல் பாங்கி கூட்டுச் சங்கங்கள் மேலும் வைக்கவேண்டும்.

———(●):———

The South Indian Press, Madras.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8 -AUG 1913
MADRAS.

# மதராஸ் புல்லடீன் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் IV.] 1913-ம் ஞு ஜூன்மீ [இலக்கம் 4.

## சென்னை ராஜதானியில் கூட்டுத்தொழில்.

———:(●):———

மிஸ்டர் H. W. உல்ப் (Wolff), கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரவர்களுக்கு 1911-12-ம் ஞுடைத்து அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டைப்பற்றி லண்டன், பால்மால் S. W. ரிபாரம் கிளப்பிலிருந்து 12-3-1913-ல் எழுதிய கடிதம்.

தங்களுடைய புது ரிபோர்ட்டை அனுப்பினதற்காக மிக்க வந்தனமளிக்கிறேன். அந்த ரிபோர்ட்டை அதிக ஆநந்தத்தோடு வாசித்தேன்.

தாங்கள் ஸ்தாவர ஜாமீனைப்பற்றிச் சொல்லியிருக்கும் விஷயம் என்மனதில் நிஜமான பிரீதியை உண்டாக்கிற்று. உங்களுடைய சங்கங்கள் எந்த ரூபத்தை உடையனவாயிருந்தாலும் அவைகள் ஒப்புக்கொள்வதற்குரிய தகுந்த ஜாமீன் அடைமானங்கள் அல்ல. அவைகளுக்குப் பிரத்யேகமான ஒருவித சங்கம் வேண்டும். எளிதில் உபயோகப்படும் விதமாயிருக்கவேண்டிய பணத்தை அடைமானமானது பூட்டிவைத்துவிடுகிறது அன்றியும் அநேக ஐரோப்பிய ஸொஸைடிகள் நஷ்டமடைந்ததற்குக் காரணமான அபாயத்தைப்போன்ற அபாயங்களுக்குள்ளாக்குகின்றது. அடைமானத்தை முழுவதும் ரத்து செய்யமுடியாது. ஆனால் குறைந்தபக்ஷம் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுக்கு அதைக் குறைக்கவேண்டும். எப்படி யிருந்தாலும் அடைமானங்கள், பக்க ஜாமீனாகவாவது (Collateral Security) அதிகப்படி (Additional) ஜாமீனாகவாவது, முன்னெச்சரிக்கிற (Precautionary) ஜாமீனாகவாவது இருக்கவேண்டும். அடைமானத்தை விலக்குவது பாங்கிகளுக்கு மிக்க அசௌகரியத்தை யுண்டுபண்ணும்.

தாங்கள் வழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று உத்தேசிக்கும் மெம்பர்களின் ஜாமீன் மதிப்பு ரிஜிஸ்தர்—ஆக்ராவிலும் அயோத்தியாவிலும் இதை "ஹய்ஸியத்" என்று சொல்லுகிறார்கள்—வெகுவாய் பிரயோஜன முள்ளதாயிருக்கும், ஆனால் அதை மத்யகால ஆவசியகமாகமாத்திரம் உபயோகிக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட ஆலோசனை

யற்ற உபாயங்களெல்லாம் அபாயத்திற்கு அறிகுறியாகின்றன. ரெய்பீஸன் சொல்லுகிறபடி அப்பேர்ப்பட்ட * ஸொஸைடிகள், பொறுப்பும் ஜவாப்தாரித்தனமும் நன்ருய் அறிந்துகொண்டிருக்கும். அவற்றின் கமிட்டியானது ஒவ்வொரு கடனையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டும், ஒவ்வொன்றின் தகைமையையும்பற்றி விசாரிக்கும் வரை மட்டும் சமாளித்துக்கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யும்படி அவைகளை பலப்படுத்துவதற்கே இச்சங்கங்கள் சிறியவையாயிருக்கின்றன. 500-ரூபாய் வரைக்குமே கடன்கொடுக்கக்கூடிய ஒரு அம்சத்தில் 1000-ரூபாய் வரை உங்களுடைய பஞ்சாயத்தார்கள் கடன்கொடுத்தால் அவர்கள் தங்களுடைய கடமையைச் செலுத்தத் தவறினவர்களாகிருர்கள். ஆனல் கௌன்ஸில் (ஆலோசனை சபை) ஒன்று இருந்திருந்தால் அது இப்பேர்ப்பட்ட தவறுதல்களைக் கண்டுபிடித்திருக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயத்தையே நானும் கொண்டிருக்கிறேன். உங்களுடைய சென்டரல் பாங்கிகளுக்கும், டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளுக்கும், வட்டி வியாபாரம் செய்யும் ஐக்கியசங்கங்களுக்கும் (Banking Unions) உள்ள வித்தியாசங்கள் இன்னவையென எனக்கு தெளிவாய்த் தெரியவில்லை. ஆனல் அநேக சங்கங்களுக்கு பணங்கொடுத்துதவ ஏற்பட்டிருக்கும் சங்கம் (Body) எதுவாயிருந்தாலும், உத்தரவாதப் பொறுப்பு கண்டிப்பாய் வரையறுக்கப்பட்டதாயிருக்க வேண்டுமென்கிற அம்சத்தில் எல்லாவித கூட்டுத்தொழிலினர்களின் அபிப்பிராயமும் ஒரே அபிப்பிராயமாயிருக்கிறது. வேறுவிதமான மார்க்கத்தை அநுசரித்தால் அநேக துர்விநியோகங்கள் செய்ய ஹேதுவாகும்.

'அட்மினிஸ்ட்ரேடிவ்' யூனியன்கள் என்று சொல்லப்படும் கார்ய நிர்வாகச் சங்கங்களில் எவ்விதமான 'உத்தரவாதமும்' வேண்டியதில்லை. அவைகள் எதற்காக வேலை செய்யவேண்டும்? அவைகள் பணவுதவி செய்துகொண்டு வரவேண்டியதில்லை. ஆனல் இன்ஸ்பெக்ஷன் முதலான வேலைகள் நடத்திவரவேண்டும். இதற்கு சங்கத்து அங்கத்தினரிடமிருந்து சந்தாவேண்டியிருக்கிறது. அவைகளுக்கே ரொக்கமாவது கடனாவது தேவையில்லை. சங்கம் நடைபெற கொஞ்சம் கையிருப்பு இருந்தால் போதுமானது.

நகரச் சங்கங்களில் பங்குகளோடு தங்கள் உத்தரவாதப் பொறுப்பு வரையறுக்கப்படவேண்டுமோ யில்லையா என்பது மெம்பர்களின் இஷ்டத்தைப் பொருத்ததாயிருக்கிறது. இங்கிலாந்தில் பொறுப்பு வரையறுக்கப்படாத பிரச்னைக்கு இடமேயில்லை; அது சட்டத்திற்கும் விரோதமா யிருக்கிறது. ஆனல் இந்தியாவில் சில சங்கங்களின் மெம்பர்கள் உத்தரவாதப் பொறுப்பு வரையறுக்கப்படாம லிருப்பதால் தங்களுக்கு நிரம்ப கடன்வாங்க சாதகமாகிறது என்று இதனல் மேற்சொன்ன (உத்தரவாதப் பொறுப்பு வரையறுக்கப்படாத) சங்கங்களை உயர்ந்தனவென்று நினைத்தால் அதற்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனல் வெறுப்பான பிரமிப்புகள் உண்டாகு மானதால் உத்தரவாதப் பொறுப்பு வரையறுக்கப்படாததற்கு ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று மெம்பர்களை ஸ்திரமாய் ஞாபகப்படுத்திக்கொண்டே வர வேண்டும். ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் முதல்தரச் சங்கங்கள் என்று நான்

---

* 'அப்பேர்ப்பட்ட சங்கங்கள்' என்பதினல் மிஸ்டர் உல்பு (Wolff) "ஏதாவது ஒரு கூட்டுறவுச் சங்கத்தைக்" குறிப்பிடுவதாக ஊகிக்கத்தக்கதா யிருக்கிறது.

* 1912-ம் வரு 2-வது ஆக்டின்படி வேறுவிதமான மார்க்கத்திற்கு இடமேயில்லை ஆகையால் மிஸ்டர் உல்ப் நினைக்கும் துர்விநியோகங்கள் அபாயங்களுக்கிடமில்லை.



சொல்லும் "ஷேர்பாங்கிகள்" வரையறுக்கப்படாத பொறுப்பை உடையனவாயிருக்கின்றன. ஆனல் இதோடு தங்கள் நடவடிக்கைகளைச் சரியாய்த்தான் நடத்தி வருகின்றன.

இன்ஸ்பெக்ஷன் செய்வதன் அவசியத்தைப் பற்றியும் எங்கு கூடுமோ அங்கே ஸொஸைடிகளே நேராக நன்மை பயக்குவதால் தங்கள் சொந்த செலவில் அப்பேர்ப்பட்ட இன்ஸ்பெக்ஷனுக்கு ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்பதைப்பற்றியும் விஸ்தாரமாய் எழுதியிருப்பது வெகு நலமாயிருக்கிறது. அதற்காக அவர்கள் செலவுசெய்யும் போது தான் அதை அவர்களே நடத்தவேண்டும்; எப்போதும் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கப்படுகிறது என்பதை நிச்சயிக்க ஏதோ ஒருவிதமான கவர்ன்மெண்ட் இன்ஸ்பெக்ஷன் இருந்துகொண்டிருக்க வேண்டியதாயிருக்கிறது. க்ஷேமத்திற்காகத் தாங்கள் நம்பியிருக்கும் இன்ஸ்பெக்ஷன்கள் நாளாவட்டத்தில் யூனியன்களாலேயே நடத்தப்படவேண்டும். இப்படிச் செய்வது கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்ஷனைவிட உயர்ந்தது. நீங்கள் பண்டுகள் விஷயத்தில் கவர்ன்மெண்டு ஒத்தாசையை விரும்பாமலிருப்பதைப்பார்க்க சந்தோஷமாயிருக்கிறது.

கடன்களைப் புதுப்பிக்கும் விஷயத்தைப் பற்றியும், கெடுவைத் தள்ளிவைக்கும் விஷயத்தையும் பற்றி தாங்கள் பேசுவது மிகவும் முக்கியமான விஷயந்தான். பாக்கி அதிகமாயிருந்தால் அது சங்கங்களுக்கு அநுகூலமல்ல. உங்களுடைய கணக்குப் புஸ்தகங்களில் இன்னொரு பத்தி (Column) களுக்கு வரவேண்டிய கடன் வரைந்து அதில் எந்தெந்தக் கடன்கள் பிரஸ்தாப வருஷத்தில் புதுப்பிக்கப்பட்டனவென்பதைக் காண்பிக்கலாம். இதனல் மிக்க அநுகூல மிருப்பதோடுகூட புதுக் கடன்கள் இன்னின்னவை யென்றும் புதுப்பித்த பழைய கடன்கள் இன்னின்னவையென்றும் ஸ்பஷ்டமாய் அறிந்துகொள்ளலாம். புதுப்பிக்கப்பட்ட பழைய கடன்கள் (Re-loans) இல்லாமல் இருக்க முடியாது. ஆனல் நம்மால் சாத்தியப்பட்ட மட்டில் குறைத்துக்கொண்டே வரவேண்டும். கடன் புதுப்பித்தலானது கடன் தொகையில் ஒரு பாகத்தைத் திருப்பிக்கொடுத்தலைச் சார்ந்திருத்தல் வெகு நல்லதுதான். ஆனல் இது பிரத்தியக்ஷமாய் எவ்வளவுசெய்ய சாத்தியமோ அதுவரைதான் நன்ருயிருக்கும்.

தற்காலத்து அபிவிருத்தியை நோக்குமிடத்து தாங்கள் குறித்திருக்கும் விலக்கப்பட்ட மெம்பர்களின் சங்கியையினல் எனக்கு பீதியுண்டாகவில்லை. இதனல் சங்கங்கள் மிகக் கண்டிப்பாய் இருக்கின்றனவென்பது விளங்குகிறது. இதேரீதியாய் வெகுகாலம் வரை நடந்து கொண்டிருக்குமென்பது யாராலும் எதிர்பார்க்கத் தக்கதல்ல. இருந்தபோதிலும், கண்டிப்பில்லாவிட்டால் நிர்ப்பயமா யிருக்கமுடியாது.

உங்களுடைய ரிப்போர்ட்டின் 17-ம்பக்கத்திற் சொல்லியிருக்கிறபடி அநேகர் இக் கூட்டுறவினல் ஆபத்துண்டாகுமென்று முன்னறிவித்ததெல்லாம் பொய்யாகிவிட்டதென்பதை நோக்கும்போது, மிக்க தைரியத்திற்கு இடமுண்டாகிறது. ஆனல் அப்பேர்ப்பட்ட கெட்ட எண்ணங்களெல்லாம் கூட்டுறவின் பலனல் பொய்யாகிவிடுமென்பது நானும் என்னைப்போலொத்த கூட்டுறவினர்களும் சகஜமாய் எதிர்பார்க்கக் கூடியதுதான். கூட்டுறவுக்கு அருமையான கல்விபயிற்றும் சக்தியும், ஜனங்களுக்குள் ஒற்றுமையுண்டாக்கும் தன்மையும் உண்டு. மற்ற கூட்டுறவுப் பிரயோகங்களை அநுஷ்டிக்கும் அபிவிருத்தி அதிக ஆவசியமாயிருக்கிறதே என்று ஆசாபங்கப்படவேண்டியதில்லை. மற்ற கூட்டுறவுப் பிரயோகங்கள் தனிச்சையாய் கட்டாயம்வரும்; மற்ற விஷயங்களில்

161988

கூட்டுறவை பிரயோகம் செய்வதில் முக்யமாய் நான் விவசாய விஷயத்தில் பிரயோகம் செய்வதை ரொம்பவும் எதிர்பார்க்கிறேன். ஐக்கிய மாகாணங்களில் (The United States) "என் விவசாயத்தில் கூட்டுறவு" என்னும் புதுப் புஸ்தகத்தை அங்கீகரித்திருக்கிறதைப் போலவே இந்தியாவிலும் நன்றாய் அங்கீகரிக்கப் படுமென்று ரொம்ப நம்பியிருந்தேன். ஆனால் யாதுகாரணத்தாலோ தெரியவில்லை இந்திய வர்த்தமானப் பத்திரிகைகள் இப்புத்தகத்தைப்பற்றி அலக்ஷியமாயிருந்து விட்டன.

நான் இவ்விடம் செய்திருக்கும் இக்குறிப்புகளைத் தயவுசெய்து வித்தியாஸமாய் எடுத்துக்கொள்ளமாட்டீர்களென்று நம்புகிறேன். மேலும் இக்குறிப்புகளெல்லாம் சிநேக பாவத்தில் செய்தவைகளென்பதும், நான் குறுக்கிடவேண்டுமென்னும் விருப்பத்தாலல்லாமல் தாங்கள் இக்குறிப்புகளை எதிர்பார்ப்பதினால் கூறப்பட்டவை யென்பதும் தங்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே.

இப்படிக்குத் தமது மிகவிசுவாசமுள்ள,

**ஹென்றி W. உல்ப்.**

---

# பொறுப்பு வரையறுக்கப்படாததே தேசத்தின் ஆஸ்தி.

—:(●):—

(மத்திய மாகாணங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் H. R. க்ராஸ்த்வெய்ட் எழுதியது.)

ஒரு தேசத்தின் பெருமையை, அதின் பட்டாளத்தின் பெருக்கத்தையும் பலத்தையும் கொண்டு நிர்ணயிக்க முடியாது. ஆனால் அது அத்தேசத்து பாங்கிகளின் தொகையையும் கீர்த்தியையும் பொருத்ததாயிருக்கிறது என்று பேர்போன ஒரு ராஜாங்க நிபுணர் ஒரு காலத்தில் சொல்லியிருக்கிறார். இப்போதும் இந்தியாவில் பாங்கி ஸ்தாபனங்கள் ஜனங்களின் அவசியத்துக்குப் போதுமானபடி இல்லை. ப்ரொவிடென்ஷி பாங்கிகளும் ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகளும் அநேக மிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் புதுபாங்கிகள் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கின்றன. ஆனால் இவைதெல்லாம் பெரிய நகரங்களுக்குதான் பிரயோஜனமாகும். இந்தியாவின் முக்கிய ஆதாரம் விவசாயம். சாதாரண பாங்கிகள் விவசாய விஷயத்தில் வெகுவாய் யாதொரு சகாயமும் இதுவரை செய்திருப்பதாய்த் தெரியவில்லை. இதற்குக் காரணம் விவசாயிக ளிருப்பிடத்திற்கும் பாங்கிகளுள்ள இடத்திற்குமுள்ள தூரம்தான். சமீபம் நாணயத்திற்கு முக்யமான விஷயம். இந்தியாவானது சிறு சிறு கிராமங்களாலும், குடித்தனத்தாலும், நிறைந்திருக்கிறது. ஆனால் பலதுளிகள் சேர்ந்து பெருவெள்ளமாகிறதல்லவா? இந்தியாவில் நடவுசெய்யும் விதையே ஒரு பெரிய முதலுக்குச் சமானமாகிறது. உழவு மாடுகளும், விவசாயக்கருவிகளும் இலவசத்தில் கிடைப்பதில்லை. ஒவ்வொரு அறுவடையின் மாறுலும் எவ்வளவோ விலையாகிறது: குடித்தனக்காரர்களுக்கு சிக்கன விஷயத்தில் வெகுநாளாய்க் கஷ்டம் இருந்துகொண்டே யிருக்கிறது. அதைப் போக்கடிக்க சரியானவழி தேடவேண்டும்.



இந்தியாவின் பாக்கியத்திற்கு அதன் விவசாயமேபலம் என்பதை ஒப்புக்கொண்டால் பூமியே தேசத்தின் வயிறுபோன்றதாகிறது. நிலம் விவசாயிக்கு அவசியம்; விவசாயி மத்தியஸ்தனை (Middleman)க் காப்பாற்றுகிறான், மத்தியஸ்தனால் தானிய வியாபாரிக்குப் போஷணை யேற்படுகிறது. வியாஜ்யங்களாட விவசாயிகளிடத்தில் பணமில்லாவிட்டால் வக்கீல்களின் கதியென்ன? கிராமாந்தரங்களில் பணமில்லாவிட்டால் டவுன் வியாரிகளிடமிருந்து வாங்குகிறவர்கள் யார்? ஜனங்களுக்கு ஐசுவரியமதிகரிக்க அதிகரிக்க தேவைகளும் அபிலாஷையும் அதிகரிக்கின்றன. ஆசாரத்திருத்தமென்றால் என்ன? ஜனங்களின் சாமர்த்திய சக்தியை அபிவிருத்திசெய்தும், சன்மார்க்கத்தை உத்கிருஷ்டமாக்குவதையும் தவிர வேறில்லை. ஒரு தேசத்தாரின் ஆஸ்தி அவர்களுடைய நிலக்கரி சுரங்கங்களும், விசாலமான வயல்களுமல்லது, ஜனங்களின் சாமர்த்தியமும் யோக்கியதையும்தான் அவர்களின் ஆஸ்தி. இராஜ்யத்தை உருப்படுத்துகிறது நகரவாஸியே அல்லாமல் நகரவாஸியை உருப்படுத்துகிறது இராஜ்யமல்ல. இக்கோட்பாடுகளுக்கிசையத்தான் இந்தியாவில் கூட்டுத்தொழில் முறை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இம்முறையில் இதுவரை ஜயம்பெற்றிருக்கிறதை நோக்க மிகவியக்கத்தக்கதா யிருக்கிறது. ஆகையால் இம்முறையில் அனுசரித்துவரும் ஏற்பாடுகளை விமர்சிப்பது அவசியம்.

பிரடிரிக் வில்லியம் ரெய்பீசன் என்பவருடைய கூட்டுத்தொழில் முறையைக் கல்பித்தபோது அது கல்விக்குச் சாதனமா யிருப்பதையும், கடன் வாங்கும் சிலபேர்கள் பொறுப்பு வரையறுக்கப்படாமையை ஏற்றுக் கொள்வதாலுண்டாகும் பிரயோஜனத்தையும் பற்றி வற்புறுத்தினார். பொறுப்பு வரையறுக்கப்படாத ஐக்கிய நாணயச் சங்கங்களின் முக்கிய நோக்கமென்னவென்றால் ஒருவிசேஷ மாதிரியான ஜாமீனை உண்டாக்குவதுதான். தனித்தனியான நாணயத்திற்குப் பதிலாக, யோக்கியதையும், சத்தியமும் முக்கிய அம்சமாயுள்ள ஒன்று சேர்ந்த உறுதியான நாணயத்தை உண்டாக்குவதுதான் இக்காரியத்தின் வாஸ்தவமான விஷயம். இதை இந்தியாவில் நாம் செய்யக்கூடுமா என்பதை விவாதிக்குங் காலத்தை முன்பே கடந்து விட்டோம். இப்போர்ப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆயிரக்கணக்காயிருக்கின்றன. அவைகளின் நடவடிக்கையை அறிந்தவர்களெல்லாம் அவற்றின் நன்மைகளை மதிக்கக்கூடும். தன்னுடைய கேஸ் ஜாப்தாவில் ஒருவருஷத்தில் 1100-கேசுகள் குறைந்துவிட்டதை அறிந்த ஒரு ஜட்ஜ் உடனே இதற்குக் காரணம் கூட்டுறவுச் சங்கங்களின் செல்வாக்குதான் என்றார். மேலும் வரையறுக்கப்படாத பொறுப்புக்குள்ள சீர் திருத்தும் வல்லமைக்கு அந்த ஜட்ஜியே சாக்ஷியாக யிருக்கிறார். எல்லாப் பக்கங்களிலுமிருந்து இம்மாதிரி அத்தாக்ஷியே வந்துகொண்டிருக்கிறது. சொன்னபடி செய்யத்தவறினவர்கள் ஜாதிப்பிரஷ்டமாக்கப் பட்டதையும், மெம்பர்கள் தங்களோடுசேர்ந்த ஒரு தோழனை வர்த்தக நஷ்டத்தினின்றும் அவமானத்தினின்றும் தப்புவிக்கிறதையும், நாணயங்கெட்ட கடனாளிகளை அவர்களுடைய நாணயமுள்ள கூட்டாளிகள் நன்றாய் தண்டிப்பதையும் நாம் கேள்விப்படுகிறோம். கூட்டுத்தொழில் செய்வதற்குமுன் எல்லாமானத்தையும் இழந்திருந்த அநேக நெசவுக்காரர்கள் சங்கத்தை நான் குறிப்பிடக்கூடும். குடியர்களும், சூதாட்டக்காரர்களும் அற்பமான அநீத வட்டிக்காரர்களுக்கு மிகச் சுலபமான இரையாகிறார்கள். பொறுப்பு வரையறுக்கப்படாததானது ஜனங்களின் அபிப்பிராயமே இல்லாத இடத்தில் இப்போது ஜனங்களின் அபிப்பிராயத்தை உண்டாக்கி யிருக்கிறது. நமது இந்திய வேலைக்காரர்கள், விவசாயிகள் ஆகிய இவர்களுடைய ஜீவனத்தை அறிந்தவர்கள் இதுவே ஒரு பெரும்பாக்யமென்று அறிவார்கள். ஏற்கனவே இந்த நெசவுக்காரர்கள் திருத்தப்பட்ட நெசவுத்தறிகளையும் நல்ல மூலப் பொருள்களையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் அவர்கள் சொந்தக்கடை வைப்பதற்காகக் கேட்டார்கள்;

ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கங்கள் பலப்படுத்தப்பட்டும் புதிய சங்கங்கள் ஏற்பட்டாலுமொழிய கடைவைத்து சமாளிக்க முடியாதென்று சொன்னபொழுது அவர்கள் தாங்களே போய் புது ஆட்களைச் சேர்ப்பதாய்ச் சொன்னார்கள். அநியாய வட்டியால் கைத்தொழில் என்கிற உற்சாகமே அடியோடு அற்றுப்போயிருக்கு உலோஹ வேலைக்காரர்களின் ஒரு சங்கத்தை நான் அறிவேன். பொறுப்புவரையறுக்கப்படாதது என்னும் சக்திக்குள் வந்தவுடன் அவர்கள் திருத்திய கடைச்சல் பட்டடை வேண்டுமென்றும் அதற்காக விளம்பரம் செய்யவேண்டுமென்றும் தெரியப்படுத்தினார்கள். அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்களோடு ஒருவிதமான ஏற்பாடு செய்துகொண்டு கடைசியாக கடன் தீர்க்க நிர்வாகமுடைய தன்மையை தெரிவித்தோம். வரையறுக்கப்படாத பொறுப்பை ஒப்புக்கொண்டதனாலுண்டான ஒன்றுசேர்ந்த பலத்தின் ஆண்மைதான் அவர்களுடைய பேராசைக்குத் தூண்டுகோலாயிருந்தது. வரையறுக்கப்படாத பொறுப்பு என்னும் மந்திரத்துக்குள்ளாகுமுன் வட்டி வீதம் எவ்வளவு அதிகமாயிருந்தாலும் கொடுத்துக்கொண்டும் விதை எவ்வளவு அற்பமாயிருந்தாலும் கடவு செய்துகொண்டுமிருந்த குடித்தனக்காரர்களின் கிராமச் சங்கங்களையான் அறிவேன். இப்பொழுது அவர்கள் சர்க்கார் விதைப் பண்ணையிலிருந்தும் சொந்த விதைப் பண்ணையிலிருந்தும் முதல் தரமான விதை வேணுமென்று கேட்கிறார்கள். மாதாந்திர டிபாஸிட்டுகள் செய்தும் க்ஷேமநிதிகள் கூட்டப்பட்டும் வருகிறது. வட்டி விகித விஷயத்தில் இப்போது அஜாக்கிரதை இல்லை. வரையறுக்கப்படாத பொறுப்புக்கு வெளிக்கு பிரயோஜனப்படாத சாமான்கள்போல் தோற்றும் வஸ்துக்களினின்று நல்ல வஸ்துக்களுண்டாக்க சக்தியுண்டென்பதை காண்பிக்க வேண்டுமென்பதே என் நோக்கம். மூலப்பொருள் எவ்வளவுக்கெவ்வளவு நல்லதாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பலனும் சிறந்ததாயிருக்கும்.

சில மாமூலான ஏற்பாடுகளை ஆலோசனையின்றி அனுசரித்தல், மீந்த பணத்தைப் புதைத்துவைத்தல், சடங்குகளுக்கு ஏராளமாய்ச் செலவுசெய்தல், வியாஜ்ய விவகாரங்களில் மிக்க சந்தோஷப்படல், வித்தையினாலுண்டாகும் நன்மைகளைப்பற்றி அலக்ஷியமாயிருத்தல் ஆகிய இவைகளையெல்லாம் முதிர விடக்கூடாது. முளையிலேயே களைந்துவிடவேண்டும். மேற்சொன்ன விஷயங்களெல்லாம் "வரையறுக்கப்படாத பொறுப்பு" என்னும் சிகிச்சையைக் கண்டமாத்திரத்தில் போனவிடந் தெரியாமல் பறந்துபோகும்.

ஒரு தேசத்தின் நிஜமான ஆஸ்தி அத்தேசத்தாரின் சாமர்த்தியமும் குணமும் தானென்று ஒப்புக்கொள்ளப்பட்டால், பொது நன்மைக்காக வேலைசெய்ய விருப்பமுள்ளவர்களெல்லாம் வரையறுக்கப்படாத பொறுப்பினால் அபிவிருத்திக்காக ஏற்படும் வழிகளை ஏற்றுக்கொள்ளுவார்கள். பொறுப்பு வரையறுக்கப்படவேண்டுமானால் எங்கே மனிதர்கள் பரஸ்பர யோக்கியதையையும் குற்றத்தையும் அறிந்துகொள்ளுகிறார்களோ அங்கே அதைப் பரவச்செய்யவேண்டும். இக்காரணத்தால்தான் பொறுப்பு வரையறுக்கப்படாத கூட்டுறவுச் சங்கங்கள் தனித்தனிக் கிராமங்களை ஒட்டினவையாயும் பிரதி தினமும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டும் ஒவ்வொருவருடைய நடையுடை பாவனைகளையும் பரஸ்பரம் அறிந்துகொள்ளும் சமீபத்திலிருப்பவர்களுக்குள்ளும் சாதாரணமாய்ப்பரவியிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட சங்கத்தில் ஒரு மெம்பர் அயோக்கியத்தனமாயிருந்தால், அது மற்றவர்களுக்கு அருவெருப்பையுண்டாக்குகிறது. மேலும் அப்பேர்ப்பட்ட சங்கத்தில் ஒரு மெம்பர்



உழவுமாடு வாங்கவோ அல்லது கிணறு வெட்டவோ கடன் வாங்கினால் அந்தப்பணம் வாங்கின காரியத்திற்காகச் சரியாய் உபயோகிக்கப் படுகிறதாவென்றும் வாங்கின மாடு நல்லதாவென்றும், வெட்டின கிணறு சரியாயிருக்கிறதாவென்றும் மற்ற மெம்பர்கள் பார்ப்பார்கள். கலியாணச் செலவுக்காக ஒருவன் கடன் கேட்டால் அவன் சக்திக்கு எவ்வளவு செலவு செய்யலாமோ அதற்குமேல் கடன்கொடுக்கமாட்டார்கள். "பொறுப்புவரையறுக்கப்படாத" தானது, வாஸ்தவத்தில், சிக்கனத்தைக் கற்பிப்பதைத் தவிர செலவுசெய்யும் பணம் பிரயோஜனகரமாய் செய்வதால் முதலையும் உண்டாக்குகிறது. கடனாளி அவன் வாங்கின கடன் பணத்தினின்றும் வரும் லாபத்திலிருந்து கடனைத் திருப்பிக்கொடுக்கும்படியாய் வாயிதா கொடுக்கப்படவேண்டும். வெகுவாய், கடன் வாங்குவதால் மனிதனுடைய வரும்படி குறைகிறது; ஏனென்றால் வாங்கின கடனைத் திருப்பிக்கொடுக்குமுன் லாபத்தை வீண்செலவு செய்துவிடுகிறான். இதைத் தடுப்பதுதான் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் முக்கிய நோக்கங்களிலொன்று. சில்லரை வழக்குகளெல்லாம் கோர்ட்டுக்குப் போகாமல் சங்கத்தின் பஞ்சாயத்தாராலாவது மஹாசபையாராலாவது தீர்க்கப்படுகின்றன. ஆகையால் வரையறுக்கப்படாத பொறுப்பு மித வியயத்திற்கும். விவேகத்திற்கும் காரணமாகிறது. மேலும் ஐக்கிய சங்கங்கள் இருக்கும் கிராமாந்தரங்களில் கல்வி வேண்டுமென்கிற விருப்பம் சீக்கிரத்தில் உண்டாகிறது; ஏனென்றால் 'வரையறுக்கப்படாத பொறுப்பானது கல்லாமையாலுண்டாகும் கஷ்ட நஷ்டங்களை நன்றாய்த் தெரிவிக்கின்றது.

சில தேசங்களில் கூட்டுறவு முறையானது நன்றாய் வேரூன்றி செழித்து வளர்வதன் காரணம் சிறந்த கல்வியையுடைய கனவான்கள் கிராமங்களுக்குப் போய் விநயமுள்ள தங்கள் சகோதரர்களாகிய கிராமவாஸிகளுக்கு கல்வி கற்றுக்கொடுத்ததுதான். இப்போது இந்தியாவில் சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாத மற்ற கனவான்கள் கூட்டுறவு முறையின் பொருட்டு வேலைசெய்ய அநேகர் வேண்டியதாயிருக்கிறது. அவர்கள் ஊக்கமும் அறிவுமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்பேர்பட்டவர்கள் கிடைக்கும் பக்ஷத்தில் இந்தியாவில் கூட்டுத்தொழில்முறை தழைத்தோங்கி பிரபலமாக யாதொரு சந்தேகமுமில்லை. நமது சக்ரவர்த்தியார் டில்லியில் சொன்னபிரகாரம் சரியான கூட்டுத்தொழில் முறையை ஆரம்பித்து அதன்பலன்களை அடைந்தால் இந்தியாவின் விவசாயத்தின் பிற்காலம் மிக்க சிறப்புள்ளதாயிருக்கும். மேலும், விவசாயத்தைத் தவிர கைத்தொழிலுக்கும் அவ்விதமே சொல்லலாம். கூட்டுறவுச் சங்கங்கள் அவைகளின் "வரையறுக்கப்படாத பொறுப்பின்" பலத்தின்பேரில் கடன்வாங்குகின்றன. அவைகள் தங்களுக்கு வேண்டிய திரவிய சகாயத்திற்காகவே ஏற்பட்டிருக்கும் சென்ட்ரல் அல்லது ஜில்லா பாங்கிகளோடு லேவாதேவி செய்கின்றன. இந்த சென்ட்ரல் பாங்கிகளில் சங்கங்கள் மெம்பர்களாயிருப்பதோடுகூட கூட்டுறவுப் படிப்புக்காக உழைத்து முன்செல்ல வழிகாட்டுகிற அநேக கனவான்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள். மிராசுதாரர்களும், வக்கீல்களும், வியாபாரிகளும், யதார்த்தத்தில் ஒவ்வொரு வியாபாரத்தையும், உத்தியோகத்தையும் சேர்ந்தவர்களும் சென்ட்ரல் பாங்கிகளின் டைரக்டர்களாயிருக்கிறார்கள். ஆரம்பத்தில் இவர்கள் கௌரவத்திற்காக வேலைசெய்யும் சிப்பந்திகளின் உதவியாலும், கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ராரவர்களுடையவும் அவருடைய சொற்ப சிப்பந்திகளுடைய உதவியாலும் வேலைசெய்து வருகிறார்கள். அடுத்தாற்போல், சென்ட்ரல் பாங்குகள் தங்கள் சொந்த சிப்பந்திகளை நியமிக்கிறார்கள். பிறகு சங்கங்கள் தாங்களே தங்களுடைய சென்ட்ரல் பாங்கிகளின் காரியங்களை நிர்

லகிப்பதில் மிக்க ஊக்கமும் அக்கறையும் எடுத்துக்கொண்டு அவைகளின் செலவுக்கு வேண்டிய பணத்தையும் கொடுத்துதவுகின்றன. சென்ட்ரல் பாங்கிகள் சரியாய் நிர்வாகம் செய்யப்பட்டால் வெளிப்படையான மார்க்கட்டிலிருந்து முதலைப்பெறு விட்டாலும் கோவாபரேடிவ் ப்ரொவின்ஷியல் பாங்கியிலிருந்து முதலைப் பெறுகிறது. இந்தக் கூட்டுறவு ப்ரொவின்ஷல் (நாட்டுக்குரிய) பாங்கியானது சாதாரண வரவு செலவு முன்றக்கும் "வரையறுக்கப்படாத" பொறுப்புமுள்ள சிறு சங்கத்திற்கும் இடையிலுள்ள கொக்கிபோலிருக்கிறது. கூட்டுறவு உண்டானதற்கு ஜனங்களின் நடத்தையே முக்கிய காரணம்; அது செழித்து வளரவேண்டுவது கூட்டுத் தொழிலினர் சுயமாய்த் தங்களுக்கு சீர்திருத்தம் செய்யும் சக்தி உண்டென்பதைக் காண்பிப்பதை பொறுத்ததாயிருக்கிறது. இம்முறை இந்தியாவுக்குப் புதியதுதான்; ஆனால் கூட்டுத்தொழிலின் முதலோ கோடிக்கணக்காயிருக்கிறது. அதின் அபிவிருத்தி துரிதமாயிருப்பதோடுகூட நல்ல ஸ்திதியிலுமிருப்பதாய் நிபுணர்களால் சொல்லப்படுகிறது. கூட்டுத்தொழிலானது சிக்கன அபிவிருத்தியில் கவலையெடுத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் மிக கவனமாய் படிக்கத்தகுந்த சாஸ்திரமாயிருக்கிறது. உலகத்து மார்க்கெட்டுகளில் இந்தியாவோடு போட்டிபோடும் ஒவ்வொரு தேசமும் கூட்டுத்தொழில் முறையை அனுசரித்து வருகின்றன. ஆகையால் வியாபாரம் என்னும் பந்தயத்தில் தன்னுடைய ஸ்தானத்தை ஸ்திரபடுத்திக் கொள்ளவேண்டுமானால், இந்தியாவானது கூட்டுத்தொழில் முறையின் விசேஷத்தை ஒருபோதும் குறைவாய் மதிக்கலாகாது.

---

# ஐக்கிய இயக்கமும் சென்னை ராஜதானியில் அதன் அபிவிருத்தியும்.

(ஸர். வி. ஸி. தேசிகாசாரியார் எழுதியது.)

கூட்டுத்தொழில் முறை ஆரம்பமானதுமுதல் நான் அதில் சம்பந்தப்பட்டவனாயிருக்கிறேன். ஆறுவருஷகாலம் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் காரியதரிசியாக இருந்தேன். அந்த உத்தியோகத்திலிருக்கும்போது முதல் இரண்டு ரிஜிஸ்டிரார்களோடு அடிக்கடி பேட்டிசெய்வதுண்டு. ஆதலால் அந்த இலாகாவில் நடக்கும் ஒவ்வொரு சங்கதியும் எனக்குத் தெரிந்துகொண்டிருந்தது. முதல் இரண்டு ரிஜிஸ்ட்ரார்களும் சென்ட்ரல் அர்பன் பாங்கியை ஒருவித தாய்ச்சங்கம்போல் பார்த்து வந்தார்கள்; புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களுக்குத் தங்கள் காரியங்களைச் சமாளிக்க சென்ட்ரல் அர்பன் பாங்கி வழிகாட்ட வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். புதிய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டவுடனே அச்சமாசாரத்தை இப்பாங்கிக்கு தெரிவித்தும், அச்சங்கத்தின் நிபந்தனைவிதிகளின் ஒரு நகலை அனுப்பியும் வந்தார்கள். முதலாவது ரிஜிஸ்ட்ராரின் முழு உத்தியோக காலத்திலும், அவர்பின் வந்தவரின் உத்தியோக காலத்தில் பாதிவரையிலும் இவ்விருவர்களும் புதிதாய் யாதொரு மாறுபாடுகளையும் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் நிர்வாக போர்டாரோடு கலந்து பேசாமல் வழக்கத்திற்குக் கொண்டுவர மாட்டார்கள்.



மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியை ஸ்தாபித்ததின் முக்கிய நோக்கமென்னவென்றால் ரிஜிஸ்ட்ராரும் அவர் இலாகாவும் பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களை ஏற்படுத்தும்பொருட்டுத்தான். இவ்விராஜதானியில் முதலில் ஸ்தாபிக்கப்பட்ட 10 சங்கங்கள் பொறுப்புவரையறுக்கப்பட்ட சங்கங்கள். சுபாவமாய் ஜனங்கள் "வரையறுக்கப்படாத பொறுப்பைப்" பற்றி ரொம்ப பீதியையடைந்திருந்தார்கள். ரிஜிஸ்ட்ர் செய்யப்பட்ட சங்கங்களில் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி 18-வது சங்கம். அதுவரை ரிஜிஸ்டர் செய்யப்பட்ட 17 சங்கங்களில் 14 சங்கங்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்கள். முதல் ரிஜிஸ்ட்ரார் பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்கள் ஸ்தாபிப்பதில் கொஞ்சம் சிரமப்பட்டார், ஏனென்றால் அப்பேர்ப்பட்ட சங்கங்கள் சொற்ப முதலுள்ள அல்லது முதலே இல்லாத ஏழைஜனங்களைக் கொண்டதாயிருக்கவேண்டியிருந்தது; மேலும் பணக்காரர்கள் சேர்ந்து தங்களுடைய ஏழைச் சகோதரர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு ஜவாப்தாரிகளாயிருக்க இஷ்டமில்லாதவர்களாயிருந்தார்கள். லோகல் கவர்ன்மெண்டாருடைய உதாரமான உதவியும், ஸர். D. M. ஹாமில்டன் பண்டிலிருந்து இவ்விராஜதானிக்காக கொடுக்கப்பட்ட 5,000 ரூபாய் (தயாளகுணமுள்ள ஸர். D. M. ஹாமில்டனால் இந்தியா கவர்ன்மெண்டார் வசம் ஆதிச் சங்கங்களுக்கு திரவிய சகாயார்த்தமாய் கொடுத்திருந்த 25,000 ரூபாயிலிருந்து) பரோபகாரார்த்த நன் கொடையுமில்லாவிட்டால் ஆதியில் அநேகம் சங்கங்கள் வேலை ஆரம்பித்திருப்பது சந்தேகம்தான்.

இளமைச் சங்கங்களுக்கு லோகல் கவர்ன்மெண்டார் சொற்ப திரவிய சகாயம் செய்ய விருப்பமுள்ளவர்களாயிருந்த ஆரம்ப காலத்திலேயே மிக்க சாமர்த்தியசாலியும் முன்னுணர்ச்சியுமுள்ள முதல் ரிஜிஸ்ட்ராரவர்கள் லோகல் கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் திரவிய சகாயம் செய்ய விருப்பமில்லாதவர்களாயிருக்கலாமென்னும் காலம் வருமென்று எதிர்பார்த்திருந்தார்; அப்போது புதுச் சங்கங்கள் ஏற்படுத்துவது ரத்துசெய்யப்படும் அல்லது அந்த ஆசையையே விட்டு விடும்படியாயும் வரும். அப்பேர்ப்பட்ட ஆபத்தை தடுக்கும் வண்ணம் மற்ற சங்கங்களைப் போஷிக்கும் ஒரு பாங்கியை (சுத்தமாய்க் கூட்டுறவு ஸ்தாபனமாயில்லாத) ஸ்தாபிக்க விரும்பினார்; ஆனால் உள்ளூரிலேயே வேண்டிய பண்டை (Fund) சேகரிக்கக் கூடுமான சங்கங்களல்லாத இவ்விராஜதானியிலுள்ள இதர நகரச் சங்கங்களுக்கும் நாட்டுச் சங்கங்களுக்கும் திரவிய சகாயம் செய்வதே அந்த பாங்கியின் முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். முதலாவது ரிஜிஸ்ட்ராரவர்கள் மதராஸில் எப்படி மிக்க கூச்சத்தோடு வீடு வீடாய்ச் சென்று 17-பேர்களை ஒவ்வொருவரையும் 500-ரூபாய் கொண்ட ஒரு ஷேரை (பங்கை) யெடுத்துக்கொள்ளும்படிக்கும் முழு பங்குத் தொகையையும் நீண்டகாலம்வரை செலுத்தவேண்டியிராது என்று உறுதிப் படித்தினதையும் யான் நன்றாய் அறிவேன். பங்கு எடுத்துக்கொள்ளுமுன் இப் பதினேழு பேர்களும் ஒருவரை ஒருவர் கண்டு ஆலோசிக்கவில்லையென்பதையும் அறிவேன். முதலாவது ரிஜிஸ்ட்ரார்தானே ஒரு நோட்டுபுஸ்தகம் வாங்கி தன் கையாலேயே பைலாக்களை (நிபந்தனை விதிகளை) யெல்லாம் எழுதினார். 17 பேர்களும் கையொப்பமிடப்பட்ட ஒரு அப்ளிகேஷன் இச் சென்னை ராஜதானி முழுவதுக்கும் ஒரு சென்ட்ரல் பாங்கி ரிஜிஸ்டர் செய்வதற்காக கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது. அதனுடைய மூலதனம் 25,000 ரூபா யென்று தீர்மானிக்கப்பட்டது. இது 500 ரூபாய் வீழுக்காடான 50 பங்குகளைக் கொண்டது. பாங்கியின ஷேர்ஹோல்டர்களுக்குக்கூட கடன் கொடுக்க இதன் பைலாக்களில் இடமில்லை, ஆனால் இதன் பண்டுகளை உபயோகம் செய்யும் வழி நகரச் சங்கங்களுக்கும் நாட்டு

சங்கங்களுக்கும் கடன் கொடுப்பதுதான். முதலாவது ரிஜிஸ்ட்ரார் எதிர் பார்த்தது சீக்கிரத்திலேயே சம்பவித்து விட்டது. கவர்ன்மெண்டு லோன்கள் (கடன்கள்) தட்டுத் தடங்கலின்றி கொடுக்கப்படமாட்டாதென்றும் அப்பேர்ப்பட்ட லோன்கள் கொடுப்பது ஒவ்வொரு விஷயத்தின் வயணங்களை பொருத்திருக்குமென்றும் 1907-ம் ௵ ஜூன் மாசம் 22-ந் தேதி 1584-ம் நெம்பர் சர்க்கார் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

1908-ம் ௵ ஜூன் ௴ 30-ந் தேதியிலிருந்து அதாவது சர்க்கார் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு சரியாய் ஒரு வருஷத்திற்கெல்லாம் சர்க்கார் கடன் என்பது வெகுவாய் நின்று போய் விட்டது என்று பிரசுரிக்கப்பட்ட சர்க்கார் ரிபோர்ட்டிலிருந்தும் தெரிய வருகிறது. வெகுவாய் என்று சொன்னதின் காரண மென்னவென்றால் 1909-ம் ௵ ஜூன் ௴ 30-ந் தேதியோடு முடிவான வருஷத்தில் கவர்ன்மெண்டார் இரண்டு சங்கங்களுக்கு சொற்ப தொகையாகிய ரூபாய் 250 கடன் கொடுத்தார்கள். முதல் நான்கு வருஷத்தில் கவர்ன்மெண்டார் கொடுத்த கடன் தொகையின் மொத்தம் ரூபாய் 49,150, அல்லது ஏறக்குறைய அரை லக்ஷம் ரூபாய். இது இப்படி யிருக்க ஸர். D. M. ஹாமில்டன் பண்டிலிருந்து இவ்விராஜதானிக்காக பகிர்ந்து கொடுக்கப்பட்ட ரூபாய் 4,987—8—0-ம் 1908-ம் ௵ ஜூன் ௴ 30-ந் தேதியோடேயே செலவாய் விட்டது. மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி ரிஜிஸ்டர் ஆகுமுன் ஆரம்பிக்கப்பட்ட 17 சங்கங்களுக்குள் 15 சங்கங்கள் மொத்தத்தில் ரூபாய் 17,750-0-0 கவர்ன்மெண்டாரிடமிருந்து கடனாகப் பெற்றன; இந்த 15 சங்கங்களுக்குள் 8 சங்கங்கள் ஸர். D. M. ஹாமில்டன் பண்டிலிருந்து மொத்தம் ரூபாய் 3000 பெற்றன. மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி 1906-ம் ௵ பிப்ரவரி ௴ 13-ந் தேதி வேலை தொடங்கிற்று. அப்போது கோவாபரேடிவ் வருஷம் மார்ச்சு ௴ 31-ந் தேதியோடு முடிந்தது. இந்த ஒன்றரை மாதத்திற்குள் மதராஸ் சென்ட்ரல் அர்பன்பாங்கி இரண்டு சங்கங்களுக்கு ஒவ்வொன்றிற்கு 1000 ரூபாய் விழுக்காடு 2000 ரூபாய் கடன் கொடுத்தது. முதலாவது ரிஜிஸ்ட்ரார் 1906-ம் ௵ ஜூலை ௴ 5-ந் தேதி வெளியிட்ட அட்மானிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டில் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்:—"உள்ளூரில் கடன் கிடைக்காத சமயங்களில் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி உடனே முன் வந்து நின்று வேண்டிய பணத்தைக் கொடுக்க ஆஜராயிருக்கிறது." 1907-ம் ௵ கூட்டுத் தொழில் வருஷமானது மூன் வருஷங்களில் மார்ச்சு ௴ 31-ந் தேதி முடிவதைப்போலில்லாமல் அதற்குப் பதிலாக ஜூன் மாதம் 30-ந் தேதியோடு முடியும்படி தீர்மானிக்கப்பட்டது. இவ்விதமாக 1907-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ந் தேதியோடு முடிந்த ௵ 15 மாதங்களை அடக்கியதாயிருந்தது. இப்பதினைந்து மாதங்களில் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி 81 சங்கங்களுக்கு 80,900 ரூபாய் கடன் கொடுத்தது. முதல் ரிஜிஸ்ட்ராரவர்கள் அவருடைய 1907-ம் ௵ ஜூன் ௴ 30-ந் தேதியோடு முடியும் ௵த்தின் அட்மானிஸ்டேரஷன் ரிபோர்ட்டில் பின்வருமாறு எழுதினர்.—"திரவிய சகாயம் வேண்டுமென்ற சங்கங்களுக்கெல்லாம் சென்ட்ரல் அர்பன் பாங்கி கடன் கொடுத்தது. மேலும் இச்சங்கங்களுக்காக நான் சிபார்சு செய்தேன்." நடபடிக்கை நடத்தி வந்த 58 சங்கங்களுக்குள் 81 சங்கங்களுக்கு மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியால் திரவிய சகாயம் செய்யப்பட்டது. மறுபடி ரிஜிஸ்ட்ரார் அவர்களின் ரிபோர்ட்டிலிருந்து பின் கண்டதை எடுத்துக் காட்டுகிறேன்.—"இவ்வருஷத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட 24 கிராம (ரொக்க)ச்சங்கங்களில் ஒவ்வொன்றும் பொறுப்புவரை யறுக்கப்படாதது என்னும் சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டன வென்பது மிக்க கவனிக்கத் தக்கது; மேலும் ஸ்தாபிக்கப்பட்ட 12 நகரச் சங்கங்களுக்குள் கூட இரண்டு சங்கங்கள் பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்கள்."



முதலாவது ரிஜிஸ்ட்ராரவர்கள் இதற்குக்காரணம் மதராஸ்சென்ட்ரல் அர்பன் பாங்கியின் முயற்சிதான் என்று எண்ணங்கொண்டார்; மேலும் அவர் இந்த பாங்கியை ஒரு லோகஹிதமான ஸ்தாபனமாகச் செய்யவேண்டுமென்று ஆவலுற்றார். அவர் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் ஷேர் ஹோல்டர்களுக்கு 100-க்கு 8 விகிதம் ஈவுத்தொகை (dividend) பகிர்ந்து கொடுக்கும்படி அப்பாங்கியின் நிர்வாக போர்டாருக்குச் சொன்னார். இது சாத்தியமாயிருந்தது; ஏனென்றால் சந்தாவாக வாங்கப்பட்ட பங்கு முதலின் தொகை 3 தரமே ஐம்பது, ஐம்பது ரூபாயாக வாங்கப்பட்டிருந்தபடியால்தான். இப்படிச் செய்ததால் ஒரு விசேஷ பயனுண்டாயிற்று. பழைய பங்குக்காரர்கள் இன்னும் அதிகப்படி பங்குக்காக மனு செய்துகொண்டது மல்லாமல் பங்குகளுக்காக புது மனுக்களும் வந்தன. பெறக்கூடிய ஷேர்கள் எல்லாம் 1907-ம் ௵ ஆகஸ்ட் ௴ முதல்தேதி வாக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன; அதாவது 100-க்கு 8 வீதம் ஈவு (dividend) கொடுக்கப்பட்டவுடனே, மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் பங்கு முதலை ரூபாய் 25,000-த்திலிருந்து ரூபாய் 50,000-த்துக்கு உயர்த்த வேண்டுமென்று அந்த பாங்கிக்கு அறிவிக்கப்பட்டது; அதாவது 500 ரூபாய் விழுக்காடான மற்றொரு 50 பங்குகள் வெளிவிட வேண்டுமென்பதுதான். அதன் நடவடிக்கை பாவுதற்காக இந்த 50 புதுப்பங்குகளில் 25 பங்குகள் பாங்கியில் ஏற்கனவே யாதொரு பங்கும் எடுத்துக் கொள்ளாதிருக்கும் புதியவர்களுக்குக் கொடுக்கப்பட்டன; பாக்கி 25 பங்குகளையும் ஏற்கனவே மெம்பராயிருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஷேர் ஹோல்டர்களின் வருஷாந்தர மீட்டிங்கில் பங்கு முதலுக்குரிய பைலாவை திருத்தின பிறகும், அப்படி திருத்தப்பட்டதை ரிஜிஸ்ட்ராரவர்களும் லோகல் கவர்ன்மெண்டாரும் அங்கீகாரம் செய்தபிறகும் 1908-ம் ௵ ஆகஸ்ட் ௴ 1-ந் தேதி இப்புது பங்குகள் வெளிவிடப்பட்டன. 1907-ம் ௵ முதலாவது ரிஜிஸ்ட்ரார் இவ்வேலையினின்றும் ஒதுங்க மிஸ்டர் (இப்பொழுது திவான்பஹதூர்) R. ராமசந்திரராவ் அவர்கள் இவ்வுத்தியோகத்தை வகித்தார். 1908-ம் ௵ ஜூன் ௴ 30-ந் தேதியோடு முடிந்த ௵த்தில், 38 புதிய சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. 1907-ம் ௵ ஜூலை ௴ முதல் தேதி 63 சங்கங்கள் இருந்தன. ரிஜிஸ்டரான 38 சங்கங்களில் 37 சங்கங்கள் பொறுப்புவரை யறுக்கப்படாத சங்கங்கள். இவ்வருஷத்தில் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி 43 சங்கங்களுக்கு மொத்தம் ரூபாய் 1,22,650 கடன் கொடுத்தது. அவ்வருஷத்து அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டில் புது ரிஜிஸ்ட்ராரவர்கள் பின் வருமாறு எழுதுகிறார்:—"பணம் வேண்டும்போது உடனே மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கிக்கு கடனுக்காக மனு செய்துகொள்ளப்படுகிறது." இவ்வருஷத்தில் விசாகப்பட்டணம், கோதாவரி இவ்விரண்டு ஜில்லாக்களிலும் முதல் முதல் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்படியாக இக்கூட்டுறவுமுறை மலையாளம், தென்கன்னடம் இவ்விரண்டு ஜில்லாக்களைத் தவிர ராஜதானியில் எல்லா ஜில்லாக்களிலும் பரவியிருந்தது. புதிய ரிஜிஸ்ட்ராரும் வெகு விரையில் அனுபோகம் பெற்றுவந்தார். 1909-ம் ௵ ஜூன் ௴ 30-ந் தேதியோடு முடிந்த வருஷத்தில் அவர் 80 புதிய சங்கங்களை ரிஜிஸ்டர் செய்தார். இப்படியாக வருஷக்கடைசிநாளில், அதாவது 1909-ம் ௵ ஜூன் ௴ 30-ந் தேதி 180 சங்கங்கள் இருந்தன.

இவ்வருஷந்தான் குறிப்பிட்ட ஜில்லாக்களிலுள்ள நாட்டுகரச் சங்கங்களுக்கு திரவியசகாயம் செய்வதற்காகவும், வெளியூரில் காரிய நிர்வாகத்திற்காகவும் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் ஸ்தாபிக்கவேண்டுமென்கிற எண்ணம் ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு உண்டாயிற்று. உடனே அவர் இரண்டு ஜில்லா பாங்கிகளை ரிஜிஸ்டர் செய்து தன் எண்ணத்தை நிறைவேற்றினர். இந்த ஜில்லா பாங்கிகளுக்கு சென்ட்ரல் பாங்கிகளென்றும்

பெயரிடப்பட்டது. அவைகளி லொன்றாகிய சேலம் ஜில்லா பாங்கி லிமிடெட் 1909 ம௵ ஜனவரி௴ 26 ந்தேதி வேலை துவக்கிற்று. மற்றொரு பாங்கியான திருச்சி ஜில்லாவிலுள்ள குளித்தலை ஜில்லா அர்பன் பாங்கி லிமிடெட் இவ்வருஷத்தில் வேலை துவக்கவில்லை. என்மட்டில் நான் ஜில்லா பாங்கிகள் திரவிய சகாயம் செய்தலும் ஜில்லாவிலுள்ள நாட்டுநகரச் சங்கங்களை மேல் விசாரணை செய்தலும், ஆகிய இரண்டு வேலைகளையும் செய்வது முடியாதகாரியம் என்று அபிப்பிராயம் கொண்டேன். வெளிப் படையாய்ச் சொல்லும் பக்ஷத்தில் சென்ட்ரல் ஸொஸைடிகளால் திரவியசகாயம், மேல் விசாரணை ஆகிய இரண்டையும் தனியாய் சமாளிக்க முடியவே முடியாதென்று முன்னே என் அபிப்பிராயமா யிருந்ததைத் தவிர இப்பவும் அதே அபிப்பிராயத்தை உடையவனா யிருக்கிறேன். இப்படி அபிப்பிராயம் வித்தியாசப்பட்டாலும் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி ரிஜிஸ்ட்ராவர்களுடைய உத்தரவை மிக்க வணக்கத்தோடு நிறைவேற் றிற்று. ஒரு நாளில் மதராஸ் சென்ட்ரல் ஆர்பன் பாங்கி சேலம் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்கிக்கு ரூபாய் 90,800 வரை கடன் சாங்க்ஷன் செய்தது இப்படிக் கொடுக்கப்பட்ட லோன்தொகையானது சேலம் ஜில்லாவிலுள்ள அநேக சங்கங்களுக்கு அப்போதைக் கப்போது 1909 ம௵ எப்ரல்௴ முதல்தேதி வரை மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி யால் கொடுக்கப்பட்டு வந்தது.

ரிஜிஸ்ட்ராரவர்கள் அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டில் பின்வருமாறு எழுதுகி றார்:—"மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி லிமிடெட், 3-வருஷகாலமாக ராஜதானியி லுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்துதவ மூலா தாரமாகவும், அப்படிக் கொடுத்துதவுகிறதில் மிக்க சந்தோஷத்தை யுடையதுமா யிருக் கிறது. பிரஸ்தாப வருஷத்தில் இந்த பாங்கி மிக்க வியக்கத்தக்கதான அபிவிருத்தியை யடைந்திருக்கிறதோடு அதன் லேவாதேவியும் இரண்டு மடங்காய் அதிகரித்திருக்கிறது. அதன் மூலதனம் இரண்டு மடங்காயிருக்கிறது. இப்பாங்கி சர்வஜனோபகாரமாயு மிருக் கிறது" அந்த ரிபோர்ட்டின் கடைசியில் அவ்வருஷத்தின் நடவடிக்கைகளில் விசேஷ மானவைகளைப் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

(1) (செங்கல்பட்டு ஜில்லா) காவேரிப்பாக்கம், தாயல் என்னும் இடங்களி லுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட இரண்டு பெரிய கிராமச் சங்கங்கள் தங்கள் பொறுப்பு வரையறுக்கப்படாதனவாக அவைகளின் சொந்த மனுவின்பேரில் மாற்றிக் கொண்டன.

(2) மதிராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி, சேலம் ஜில்லா பாங்கி ஆகிய இவை களின் துரிதமானதும் மிக்க அற்புதமானதுமான அபிவிருத்தி.

(3) தேனைவி ஸ்டோர்ஸ் என்ற ஒரு சங்கம் மூடப்பட்டது—ராஜதானியில் மூடப் பட்ட முதல் சங்கம்.

ரிபோர்ட் முழுவதிலும் மிக்க விசேஷமான சங்கதி ஒன்று என்னவென்றால், ரிஜிஸ் ட்ராரவர்கள் இனஸ்பெக்டரவர்கள் மூலமாக தற்காலத்தில் பல ஜில்லாக்களிலும் நடை பெறும் வட்டி விகிதம் கூட்டு முறையால் எவ்விதமாக பாதிக்கப்பட்டது என்று செ ய்த விசாரணையின் முடிவுதான். கூட்டுத் தொழில் முறை வேறு எவ்வித நோக்க த்திற்காக போஷிக்கப்படாவிட்டாலும் ஒரு சங்கதிக்காகவாவது அம்முறையை இப் பெரிய ராஜதானி முழுவதும் வியாபிக்கச் செய்ய வேண்டும். அநந்தப்பூர் ஜில்லா, புக்கபட்டணத்தில் நடைபெறும் வட்டி விகிதம் 100 க்கு 18 முதல் 24 வரை யிருந் தது. கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டு மூன்று வருஷங்களுக்குள் வட்டி விகிதம் 100



க்கு 12 விகிதத்திற்கு குறைந்து விட்டது. தர்மாவரத்தில் 100-க்கு 18 வீதத்திலிருந்து 12 வீதத்திற்கு இறங்கிவிட்டது. வஜ்ரகரூரில் 100—க்கு 30 வீதத்திலிருந்து 18 வீதத் திற்கு தாழ்ந்து விட்டது. மேலும் ஹரிசமுத்திரத்தில் 100-க்கு 24-வீதத்திலிருந்து 18 வீதத்திற்கு வந்துவிட்டது. வட ஆற்காடு ஜில்லா சாலவேடு கிராமத்திலும் அதன் சுற்றுப் பக்கங்களிலும் வட்டி வீதம் 100 க்கு- 12 லிருந்து 9 க்கு குறைந்து விட்டது. இதே மாதிரி ஆனைக்காவூரிலும் வேஷாலிங்கரிலும் 100—க்கு 18 வீதத்தி லிருந்து 9 வீதத்திற்கு குறைந்தது. மேற்சொன்ன இரண்டு இடங்களில் சாவுகாரி கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போட்டியாக 100 க்கு $7\frac{1}{2}$ வட்டிக்குக் கூட கடன் கொடுக்க முன் வந்ததாகத் தெரிய வந்தது. கூட்டுறவு பாங்கிக்கு ஒரு இந்திய கிறிஸ் தவ உபாத்தியாயர் காரியதரிசியாக விருந்த சந்திரகிரியில் 100-க்கு 65 விகிதமாயிரு ந்த வட்டி கொஞ்சம் கொஞ்சமாக 24 க்கு இறங்கியது. தலங்கையில் 100 க்கு 36 வட்டி வீதத்திலிருந்து 15 வட்டிக்கு வந்தது. வள்ளுவம்பாக்கத்தில் 80 வீத வட்டியி லிருந்து 18 வீதத்திற்குக் குறைந்தது. தென்னாற்காடு ஜில்லா முடியானூர் மேல் மலையானூர் என்னும் இரண்டு இடங்களிலும் 18 லிருந்து 12 வீதமாக மாறிற்று. மூன்றே மூன்று சங்கங்களிருந்த பல்லாரியில் 100 க்கு 36 வீதத்திலிருந்து 24 வீதத் திற்குக் குறைக்கப்பட்டது. செங்கல்பட்டு ஜில்லாவில் 12 வீதத்திலிருந்து 9 வீதத்தி ற்கு இறங்கிவிட்டது. கடப்பை ஜில்லாவில் கூட்டுத் தொழிலின் பலன்மிக்க ஆச்சரி யகரமாயிருந்தது. நந்தலூரில் 100 க்கு 75 வீதத்திலிருந்து 18 க்குத் தாழ்ந்தது, மத னபல்லியிலும் தாட்டிகுண்டபல்லியிலும் 36 விகிதத்திலிருந்து 18 வீதத்திற்கு இறங் கியது. அதற்கு அடுத்த ஜில்லாவாகிய கர்நூலில் வட்டி வீதம் 36 லிருந்து 28—க்குக் குறைந்தது. வெகு சிறப்பான ஒரு நகர பாங்கி நடைபெறப் பெற்றுள்ள மதுரை ஜில்லாவிலுள்ளதும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளுக்குப்பிரதான ஸ்தலமாகிய மதுரை க்கு அடுத்ததுமான திருமங்கலத்தில் 24 முதல் 36 வரையுள்ள பழைய ரேட்டானது கொஞ்சம் கொஞ்சமாய் 18 முதல் 24 வீதம் வரை குறைந்தது.

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களிலுங்கூட வட்டி கொஞ்சம் குறைந் தது. விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஆகிய இவ் வைந்து ஜில்லாக்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் வட்டி விஷயமாய் யாதொரு வித மான அடையாளத்தையும் அதாவது பலனையும் காட்டவில்லை. சம்க்ஷேபிக்கும் போது ரிஜிஸ்ட்ராரவர்கள் எழுதியதாவது:—"சங்கங்கள் புதிதாய் ஏற்பட்டிருக்கும் இடங்களில் கிராமரேட்டுகள் யாதொரு சலனமுமில்லாமல் நடைபெற்று வருகின் றன; எங்கே நிர்வாகசபையார் அச்சமுள்ளவர்களாயும் அக்கறைபற்றவர்களாயு மிருக் கிறார்களோ அங்கேயும் இதேபலன்தான்; இப்படி யில்லாத பக்ஷத்தில் வட்டி வீதத் தில் குறைவு காணப்படுகிறது."

பிறகு 1910—ம௵ ஜூன் மாதம் 30-தேதியோடு முடியும் வருஷத்துக்கு வரு கிறோம். இதற்குள் கூட்டுமுறை மலையாளமும், தென் கன்னடமும்தவிர மற்ற ஒவ்வொரு ஜில்லாவிலும் அநேகமாய்ப் பரவிவிட்டது. வருஷ ஆரம்பத்தில் 180-சங்கங் களிருக்க, அவ்வருஷத்தில் 198-புதிய சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. ஒரு பழைய சங்கம் மூடப்பட்டது, இப்படியாக வருஷக் கடைசியில் 377—சங்கங்களிருந் தன. இரண்டாவது ரிஜிஸ்ட்ராரவர்களின் கடைசி ரிபோர்ட்டான அட்மினிஸ்ட்ரே ஷன் ரிபோர்ட்டில், இன்னும் ஜனங்கள் பங்குகள் எடுத்துக்கொள்ளவும், பாங்கியின் அஸ்திவாரத்தை விசாலம் செய்யவும் தன் பங்குமுதலை ரூபாய் 50,000-த்திலிருந்து ரூபாய் 1,000,00 (ஒருலக்ஷம்)க்கு அதிகப்படுத்தின மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்

யைப்பற்றி ரொம்பவும் சிலாகித்துப் பேசினார். முதல் 100 பங்குகள் ரூபாய் 500 விழுக்காடாயிருந்தன; இப்புதிய 500 பங்குகள் பங்கொன்றுக்கு ரூபாய் 100 விழுக்காடாய் மேலும்; இருந்தன 100 க்கு 10 விகிதம் அதிகப்படியாயும் (at 10 per cent Premium) இருந்தன. ஒரு மாசத்துக்குள் வேண்டியதைவிட இரட்டத்தனையாய் சந்தாதாரர்கள் மனு வந்தது. இதன் காரணம் முந்தின இரண்டு வருஷங்களில் பாங்கி 100 க்கு 10 வீதம் ஈவு (Dividend)த் தொகை பாகித்ததுதான். 500 புதிய பங்குகளுக்கும் 100 க்குப் பத்துவீதம் அதிகப்படி (Premium) வாங்கிய தொகையாகிய ரூபாய் 5,000 பாங்கியின் க்ஷேமநிதிக்குச் சேர்க்கப்பட்டது. ரிஜிஸ்ட்ரார் எழுதியதாவது:—"பாங்கியின் கீர்த்திக்கு வேறு சாக்ஷி வேண்டியதில்லை. ரிஜிஸ்டர் செய்யப்பட்ட எல்லாச் சங்கங்களிலும் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் வேலைதேவிகள்தான், அதிகமாயிருந்தபோதிலும், மிக ஒழுங்காயும், காலந்தவறாமலும் நிறைவேற்றப் படுகின்றன." சங்கங்களின் மொத்தச்சங்கியை எப்படி சரிக்குச் சரிக்கு மேலாகவே அதிகரித்ததோ அதேமாதிரி சென்ட்ரல் அர்பன் பாங்கியின் வேலைதேவியும் அதே அளவில் அதிகரித்தது. டிபாஸிட்டுகளின் மொத்தம் ரூபாய் 4·45 லக்ஷத்திலிருந்து ரூபாய் 8·16 லக்ஷத்திற்கு அதிகரித்தது; மேலும் இராஜதானி முழுவதிலுமுள்ள நாட்டு நகரச் சங்கங்களுக்கு கொடுக்கும் லோன்களின் தொகை ரூபாய் 4·57 லக்ஷத்திலிருந்து ரூபாய் 9·21 லக்ஷத்திற்கு அதிகரித்தது. இவ்விதமாக இவ்வருஷமானது கூட்டுமுறைச் சரித்திரத்தில் அபிவிருத்தியுள்ள வருஷம். அப்போதிருந்த ரிஜிஸ்ட்ராரவர்கள் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளை திரவிய சகாயம் செய்யவும், மேல் விசாரணை செய்யவும் செய்ததின் தப்பிதத்தைத் தெரிந்துகொண்டாற்போல் காண்கிறது. மேல் விசாரணை விஷயமாய் வெகு சொற்பமாய் செய்யப்படிருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டாலும், அவருடைய உற்சாகத்தாலும், நன்மையையே கோரும் குணத்தாலும் தப்பிதத்தை ஆக்ஷேபணை சமாதான மொன்றும் செய்யாமல் ஒப்புக்கொள்ள மாட்டார். அவர் செய்த முதல் தப்பிதம் என்னவென்றால், இந்த மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி இவ்விரண்டு உத்தியோகத்தையும் ஏற்கனவே பெற்றிருக்கிறது என்று நம்பினதுதான். வாஸ்தவத்தில், கடைசி ரிபோர்ட்டில் எழுதியதாவது :—"தன்னால் கொடுக்கப்பட்டுள்ள லோன்கள் எல்லாம் நல்ல ஸ்திதியிலிருக்கின்றனவா வென்பதை கவனிப்பதற்காக சங்கங்களைப் பரிசோதனை செய்ய பாங்கிக்கு (சென்ட்ரல் அர்பன் பாங்கி) அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் இராஜதானியின் விசாலத்தாலும், ரிஜிஸ்ட்ராருக்கும் பாங்கிக்குமுள்ள ஏகபாவத்தாலும் அது இன்ஸ்பெக்ஷன் செய்யவேயில்லை; ரிஜிஸ்ட்ராரின் இன்ஸ்பெக்ஷனையே சரியென்று பாங்கியால் இதுவரை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி சங்கங்களை இன்ஸ்பெக்ஷன் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது என்பதற்கு யாதொரு ஆதாரமும் இல்லையென்று நான் உடனே சொல்லக்கூடும். இவ்வித தப்பெண்ணத்துடன் அவர் இரண்டு டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளை ஸ்தாபித்தார்; இவை இரண்டும் தங்கள் தங்களுடைய ஜில்லாவில் நாட்டுநகரச் சங்கங்களுக்கு திரவியசகாயஞ் செய்வதும், மேல் விசாரணை செய்வதுமாகிய இரண்டு உத்தியோகத்தையும் வகிக்கவேண்டியது. இவ்விரண்டு வேலையையும் செய்வது அசாத்தியமென்பது அவருக்குத் தெரிந்தது. அவர் ரிமார்க்கு செய்ததாவது:—"இரண்டாவதாக, ஜில்லா பாங்கிகள் தாங்கள் கொடுத்த லோன்கள் சரியான ஸ்திதியிலிருக்கின்றனவா என்று அறியும்பொருட்டு சங்கங்களை சுறுசுறுப்பாய் மேல் விசாரணை செய்யுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் வாஸ்தவத்தில் இதுவரை ஒன்றும் செய்யப்படவேயில்லை." மேற்சொன்ன ரிமார்க்கு 1910 மீ செப்டம்பர்மீ த்தில் செய்யப்பட்டது. அதுவரையில் நாட்டுநகரச் சங்கங்களை டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் யாதொரு விதமான நிர்வாகமும் மேல் விசாரணையும் செய்யவில்லையென்றால் அதுமுதல் இதுவரை



செய்யப்பட்டிருப்பது அதைவிடக் குறைச்சல்தான். இது டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளின் குற்றமாகாது; அந்த ஏற்பாட்டின் குற்றம்தான். ஆரம்பமுதல் திரவிய சகாயவிஷயம் மாத்திரம் முக்கியமாய் கவனிக்கப்பட்டதே யொழிய, நிர்வாகம், மேல் விசாரணை இவ்விஷயங்கள் சரியாய் கவனிக்கப்படவில்லை. ஆரம்பமுதல் ரிஜிஸ்ட்ராரவர்கள் ஜில்லா பாங்கிகளையும் சென்ட்ரல் லொஸைடிகள் என்னப்பட்ட ஒரு வகுப்பின் கீழ் தப்பிதமாக க்ரூப்செய்தார். இதனால் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் கஷ்டப்பட்டன. அதிக ஈவு கொடுப்பதில் இவைகள் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியோடு போட்டி போட்டன. வாஸ்தவத்தில் இப்படிச் செய்ததின் நோக்கம் அவைகளின் நாணயத்தை அபிவிருத்தி செய்யத்தான். நடைபெறும் ஆஸ்தி லாபத்திலிருந்து போதுமான பணம் இல்லாமல் 100-க்கு 9 வீதம் ஈவு கொடுப்பதற்காக ஒரு டிஸ்ட்ரிக்ட் பாங்கி வேறுசில பண்டுகளைக் கைப்பற்றியது. ஜில்லா பாங்கிகள் டிபாஸிட்டுகளை சேகரிப்பதற்காக குறுகிய காலத்திற்குக்கூட அதிக வட்டி கொடுப்பதாக மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியோடு போட்டி போட்டன. இதனாலேயும் அவைகளுடைய எண்ணம் நிறைவேறாததினால் அந்த ஜில்லா பாங்கிகள் தாங்கள் டிபாஸிட்டுக்காகக் கொடுக்கும் வட்டி விகிதத்தைவிட அதிகவட்டி வீதத்திற்கு பெருந்தொகைகள் கடன் வாங்கும்படி நேரிட்டது. ஆனால் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியை ஒட்டின மட்டில் இதற்கு நேர் விரோதமாகத்தான் இருந்தது. அது டிபாஸிட்டர்களுக்கு எவ்வளவு அதிகமான வட்டி கொடுப்பதாகச் சொல்லுகிறதோ அதைவிட சகாயமாகத்தான் கடன்பெறும் இவ்விதமாக டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் கஷ்டப்பட்டமாதிரி இது கஷ்டப்படவில்லை.

டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் திரவிய சகாயம் செய்தல், மேல் விசாரணை செய்தல் என்னும் இரண்டையும் சரியாய் நடத்த முடியவில்லையென்பது ரிஜிஸ்ட்ராரவர்களுக்குத் தெரிந்து அவர் செங்கல்பட்டு ஜில்லா உத்தரமல்லூர் யூனியனை ஸ்தாபித்தார். அதன் அங்கத்தினராகிய சங்கங்களுக்குப் பணம் சேகரிக்கிற காரியமே கிடையாது; அது சுத்தமாய் நிர்வாகமும் மேல் விசாரணையும் செய்யும் சங்கமாக இருந்தது மறுபடி இவ்விடத்திலும் ஒரு சிறிய தப்பிதம் நடந்தது. சேர்க்கப்பட்ட சங்கங்களின் பொறுப்புக்கெல்லாம் இந்த யூனியன் ஜவாப்தாரியாக்கப்பட்டது. இருந்தாலும் இது நன்றாய்த்தான் நடவடிக்கை நடத்தி வந்தது. யூனியனின் முக்கிய நிபந்தனையென்னவென்றால் அதற்கு 5 மைல் விஸ்தீரணத்திற்குள்ளிருக்கும் சங்கங்கள்தான் அதோடு சேரலாம் அந்த யூனியன் அடிக்கடி இன்ஸ்பெக்ஷன்கள் செய்யும். மேலும் அங்கத்தினராகிய சங்கங்களின் கணக்குகளை யூனியனால் நியமிக்கப்பட்டுச் சம்பளம் பெறும் சூபர்வைசர் நன்றாய் பரிசோதிக்கக் கூடும். ஆனால் இந்த ஏற்பாட்டின் பலனை அனுபோகத்தில் அறியுமுன் ரிஜிஸ்ட்ராரவர்கள் மாற்றப்பட்டார். இம்முறைக்கு இதுவரை உண்டாயிருக்கும் அபிவிருத்தியும், ஜெயமும் ரிஜிஸ்ட்ராரவர்களின் விடாமுயற்சி, தீவிரமான சிரத்தை சோர்வில்லாத கார்ய நிர்வாக சக்தி ஆகிய இவைகளின் பலன்தான். ஆனால் சர்க்கார் உத்தியோகத்தின் ஆவசியகத்தால் இவர் இந்த டிபார்ட்மென்டை விட்டு விலகவேண்டிவந்தது. அவ்வருஷத்து அட்மினிஸ்ட்ரேஷனை (கார்யநிர்வாகம்) ப் பற்றி லோகல் கவர்ன்மென்டார் இக்கூட்டு முறையின் அபிவிருத்தியைப் பற்றிய திருப்தியைக் காண்பித்ததைத் தவிர உதவி ரிஜிஸ்ட்ராராகிய திவான் பஹதூர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்களின் மேன்மையான வழிநடத்துதலைப் பற்றி மிகவும் மெச்சியிருக்கிறார்கள். லோகல் கவர்ன்மென்டார் எழுதியதாவது:—"இவ்விராஜதானியில் கூட்டுத்தொழில் முறையின் பூர்வ சரித்திரம் மிக்க நன்மையுண்டாக்குவதாயிருக்கிறது. இதற்கு காரணங்கள் அநேகம் உள. ஆனால் 1907-ஆம்

அக்டோபர் மீ 14-தேதி முதல் கூட்டுமுறை அபிவிருத்திக்கு வழிகாட்டின திவான்பஹதூர் ஆர். ராமசந்திரராவ் அவர்கள் இம்முறையின் அபிவிருத்திக்காக ஏற்படும் கீர்த்திக்கு பெரும்பாலும் பாத்தியப்பட்டவரா யிருக்கிறார் என்னும் போர்டாருடைய அபிப்பிராயத்தைக் கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.'

அவருக்குப்பிறகு இப்போதிருக்கும் ரிஜிஸ்ட்ராரவர்கள் 1911 ம்வூ மார்ச்சுமீ முதல் தேதி வேலைக்குவந்தார். இப்போதைய ரிஜிஸ்ட்ராரவர்கள் யூனியன் ஏற்பாடு—பணம் சேகரிப்பதில் யாதொரு கவலையுமின்றி அங்கங்களாகிய சங்கங்களை நிர்வகிப்பதும்மேல் விசாரணை செய்வதுமே பிரதானமாகஉடைய—நன்றாய் நடந்தேறி வருகிறது என்று எண்ணங்கொண்டிருக்கின்றார் என்று நான் சொல்வது சரியென்று நம்புகிறேன். ஏனென்றால், அதுமுதல்கொண்டு அவர் இன்னும் இரண்டு யூனியன்களை (துணைச்சங்கங்களை) கீழச்சேரியில் ஒன்றையும், மற்றொன்றை மதுராந்தகத்திலும்—ஸ்தாபனம் செய்தார். இப்போதிருக்கும் ரிஜிஸ்ட்ராரவர்கள் அப்போதிருந்த டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் பல ஜில்லாக்களிலும் நாட்டுநகரச் சங்கங்களுக்கு திரவியசகாயம் செய்வதோடு அவைகளை நிர்வாகித்து, மேல் விசாரணை செய்கின்றன வென்பதில் அவ்வளவாக நம்பிக்கை வைக்கவில்லை யென்று பயமின்றி சொல்லக்கூடும். இவற்றையெல்லாம் ரூபிக்க இப்போதிருக்கும் ரிஜிஸ்ட்ராரவர்களின் வார்த்தைகளையே ஆதாரமாகப் பின்னால் எடுத்துக் காட்டுகிறேன்.

(இன்னும் வரும்)

———:(•):———

## காட்டிலாகா பிரசினைகள்.

**(Forest Problems.)**

———:(*):———

(பாபட்லா, ரேவரெண்ட் G. N. தாம்ஸன் எழுதியது.)

தற்கால இந்தியாவானது பழைய புராணங்களில் சொல்லப்பட்டுள்ள இந்தியாவைப்போல் இல்லை என்பதை இத்தேசத்தில் எந்த ரெயில்வே பிரயாணியும் எளிதில் அறியக்கூடும். ஒரு பெரிய மாறுபாடு ஆயிருக்கிறது. இருப்புப்பாதையைவிட்டு வெகுதூரம் போனாலொழிய ஒருவனும் பழையகாலத்திருந்த அடர்த்தியான காடுகளைக் காண்பதரிது. பெரியகாடுகளும் சிறுகாடுகளாகிக்கொண்டு வருகின்றன; மரத்தின் விலை அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஏனென்றால் முன்னிருந்த நேர்த்தியான காட்டுப்பிரதேசமெல்லாம் நஞ்சை நிலங்களாயிருக்கின்றன. மேலும் கவர்ன்மெண்டாருக்கும் ஜனங்களுக்கும் சிறந்த பிரசினைகள் புலப்படுகின்றன. இத்தேசத்தை எப்படி மறுபடியும் ரிஷிகள் வாஸம் பண்ணப்பட்ட நேர்த்தியான காடுகளடர்ந்ததாய் செய்வது என்கிற முக்கியமான சமுசயம் எல்லாருடைய மனதிலும் உண்டாகிறது.

பெரிய காடுகளெல்லாம் கவர்ன்மெண்டார் வசத்திலும், இந்து ராஜாக்கள் வசத்திலும் இருக்கின்றன. சகஜமாய், எவ்விடத்தில் மழை அதிகமோ அவ்விடம் புற்பூண்டு செடிகள் தானாய் முளைத்து செழித்து வளர்கின்றன. ஆனால் பிரகிருதியின் நன்கொடையை துர்விநியோகம் செய்ய இடமுண்டு. புராதன இந்தியாவில் பஞ்சமென்கிறதையே அறியாத சிலபாகங்களில் இப்போது காலக்கிரமமாய் பஞ்சம் சம்பவித்துக் கொண்டே யிருக்கிறது. என்? இதற்குக் காரணம் பெரிய காடுகளெல்லாம் வெட்டுண்டு போய்விட்டதா லென்றுசொல்ல மிக்க விசனகரமாயிருக்கிறது. இத்தேசத்தில்



மிக்க விசனத்தோடு பிரயாணம் செய்யக்கூடிய ஒருபாகம் முன்னே வெகு அழகான காடுகளால் சூழ்ந்த டெக்கான் (தக்ஷிண) தேசம். கோடைகாலத்தில் ரெயில்வண்டியில் போகும் பிரயாணிகள் கதிரவன் கொடுமையாலுண்டாகும் உஷ்ணமான காற்றை உள் வரவொட்டாதபடி தங்களுடைய கம்பார்ட்மெண்டின் ஜன்னல்களை மூடிவைக்க வேண்டியதாகிறது. எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் தேகம் வரண்டுபோகிறது. ஏனென்றால், சரீரத்திலுண்டாகும் வேர்வையை கொடிய வெப்பமானது உடனுக்குடனே ஆவியாக்கிவிடுகிறது. நம்முடைய சரீரத்தின் தோலானது தோற்கடுதாசியைப்போல் வரண்டுபோகிறது. முன் காலத்தில் டெக்கான் தேசமானது, பார்க்க ரம்மியமுள்ளதும் களைத்தவர் இளைப்பாறவும், மழைக்குக் காரணமாயும், எல்லாருக்கும் சந்தோஷத்தை யுண்டாக்கும், அநேக திவ்யமான காடுகளால் சூழப்பட்டிருந்தது. இப்பவும் அப்பேர்ப்பட்ட காடுகளின் சின்னங்களை ஆங்காங்கு காண்கிறோம். ஆனால் அந்தோ! ஒருவன் இப்பொழுது (டெக்கான்) தக்ஷிண தேசத்தில் நூற்றுக்கணக்கான மைல்தூரம் பிரயாணம் செய்தாலும் உலர்ந்துபோன வயல்கள்தான் கண்ணுக்குத் தென்படுகின்றன. மேலும் நகரங்களிலும் ரயத்துகள் வசிக்கும் குக்கிராமங்களிலுங்கூட வெகுவாய் மரங்களே கிடையாது. என்? சிறப்பான காடுகளெல்லாம் அழிக்கப்பட்டு அவ்விடங்களெல்லாம் பருத்திநிலமானதுதான் இதற்குக் காரணம். காடுகளைவிட பருத்திநிலம் ரொம்பலாபகரமா யிருக்கலாம். ஆனால் விவேகமுள்ள ராஜாங்கத்தார் ஒரு பெரிய பிரதேசத்தை ரிசர்வ் காடாக (பாரஸ்ட்டு ரிசர்வு) ஒதுக்கி வைத்திருப்பார்கள். ஒவ்வொரு சதுரமைலுக் கப்பாலும் அழகான புராதனமான காடுகள் நிறைந்திருந்தால் தக்ஷிணதேசம் எவ்வளவு சிறப்பாயிருக்கும்? அவையெல்லாம் சொப்பனம்போல் ஆய்விட்டன. வெகுசாய் இப்போது பருத்தி பயிர் செய்யும் விஸ்தீரணத்தில் அரைப்பங்கே தற்காலம் உற்பத்திசெய்யும் பருத்தி விளையப்போதுமானது. ஏனென்றால் குறித்த சிறிய பாகத்தில் அதிகமான பயிர் செய்வதால் சரக்கின் குணமும், அளவும் அபிவிருத்தியடைகிறது. ஆனால் இதற்கு யாது செய்கிறது? கவர்ன்மெண்டார் அந்நிலங்களையெல்லாம் வாங்கிக் காடாக்க மாளாது; ஆகையால் ஜனங்கள் அந்த திவ்ய நிலங்களை உழுதுகொண்டு சில வேளைகளில், சொற்ப மகசூல்களைப் பெற்றும் மற்ற வேளைகளில் மழைபெய்தல் நிச்சயமில்லாததால், சாகுபடியே யில்லாமலும் இருப்பார்கள். இவ்வெப்பமான காற்று எப்போதும் வீசிக்கொண்டே யிருக்கும். ஏனென்றால் எல்லாருடைய கண்களிலும் புழுதியை யடித்தும், செல்லும் வழியிலுள்ளதையெல்லாம் அழித்துக்கொண்டும் வீசும் அக்காற்றைத்தடுக்க பசுமையான காடுகளில்லை. ஆ! எல்லாப் பிராணிகளும் செடி கொடிகளும் சந்தோஷப்படும்படி காடுகளை மறுபடி உண்டாக்க ஏதாவது ஒரு வழிதேடினால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

இந்தியாவில் காட்டி லாகாவின் பேரில் குற்றம் கண்டுபிடிப்பதே வாடிக்கையாய் விட்டது. ஆனால் வாஸ்தவமாய் அந்த இலாகாவுக்கு நீதியான பச்சாத்தாப குணத்தைக் காட்டவேண்டும். இக்குற்றத்துக்கு காட்டை லாபம் சம்பாதிப்பதற்கான ஒரு சாதனமென்று எண்ணங்கொண்டிருக்கும் கீழ்தர உத்தியோகஸ்தர்கள்தான் பாத்தியதையாவார்கள். இந்தியாவில் விசேஷமாய் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்குள் ஸ்வதேசாபிமானம் வேண்டியிருக்கிறது. காட்டிலாகாவிலுள்ள கூலிகளும், தோட்டக்காரர்களும் கார்டுகளும் (Guards) ரேன்ஜர்களும், ஆகியஇவர்களில் ஒவ்வொருவரும் காடுகளை சீர்திருத்தி தங்களுடைய சுதேசத்திற்காக உழைக்கிறோமென்பதை அறிந்துகொண்டால், காடுகள் தற்காலபரிதாபகரமான நிலைமைக்கு வந்திரா.

இத்தேசத்திலுள்ள காடுகளை சீர்திருத்த ஏதாவது செய்யவேண்டுமென்பதை யாரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். ஆனால் அது எவ்விதமாகச் செய்யவேண்டும்? இக்கனமுறையின் அபிவிருத்தியையும் சீர்திருத்தத்தையும் ஒட்டிய ஒவ்வொரு கேள்விக்கும் இத்தேசத்து ஜனங்கள் ஒரே உத்தரம் கொடுப்பது இத்தியாவின் சாபமாயிருக்கிறது. சிக்கன அபிவிருத்தியும் சீர் திருத்தமும் கவர்ன்மெண்டாரே செய்யவேண்டும் ஐயோ, மிக்க பரிதாபம்! கவர்ன்மெண்டு எல்லாக் குற்றத்துக்கும் ஆளாகி எல்லாக்காரியமும் செய்து, எல்லாருடைய பொறுப்பையும் தாங்கி, நிந்தைகளெல்லாம் கீழ்ப்படிந்து, ஒவ்வொருவரையும் திருப்திசெய்யவும் வேண்டியிருக்கிறது.

இந்தியாவில் கூட்டுறவு ஆரம்பித்து ஜனங்களுக்கு அநேக நன்மைகளை பயக்கினது முதல், இந்தியாவுக்கு ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிருக்கிறது. கூட்டுறவென்றால் கூட்டுறவு நாணயமாத்திரமல்ல. ஜனங்கள் பணப்பேய்பிடித்து சுளுவான வட்டிக்கு எப்படி பணம்பெற முடியுமென்று கணக்காணும் வரையில் கூட்டுறவை திக்குமுக்காடத்தான் செய்கிறார்கள். கூட்டுறவானது நல்லகாரியம் ஒவ்வொன்றிலும் உதவிபுரியும் கவர்ன்மெண்டின் காரியஸ்தன்போ லிருக்கவேண்டியது.

முப்பது வருஷகாலமாக இந்தியாவை அறிந்த ஒவ்வொருவரும் காடுகளைச் சேர்ந்தமட்டில் இந்தியா தேசமானது அப்போதிருந்ததைப்போல் இப்போது இல்லையென்று சாக்ஷிசொல்லக்கூடும். முப்பது வருஷத்துக்குமுன் ஒவ்வொரு கிராமத்து அருகாமையிலும் மரமடர்ந்த வனம் ஒன்று இருந்தது. இப்பொழுது அநேக மரங்களெல்லாம் அழிந்துபோய்விட்டன. இன்னும் சில வாடிக்கொண்டும் வருகின்றன. இச்சோலைகளுக்கு தர்மத்தோப்புகளென்று பெயர். ஐயோ, எத்தனை சோலைகள் அந்தர்த்தான மாகிவிட்டன, எத்தனை நாசமாய்ப்போய்விட்டன. எத்தனை புகையிலை அல்லது பருத்திநிலமாக மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில்தான் கூட்டுறவு தப்புவிக்க வரவேண்டும். கவர்ன்மெண்டார் எல்லா தர்மத்தோப்புகளையும், குளக்கரைகளையும், விலக்கப்பட்ட ரோட்டுகளையும், பொதுவாக எல்லா தரிசு நிலங்களையும் பொது சொத்தாக்கவேண்டும். இப்போது இந்த நிலங்களை கிராமாதிகாரிகளும், அநுக்கிரகம்பெற்ற சிலரும் மேய்ச்சல் நிலமாக அநுபவித்து வருகிறார்கள். யதார்த்தமாக பொதுவிலிருக்கவேண்டிய நிலங்கள் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கிறார்கள். கிராமாந்தரங்களிலுள்ள ஏழைகுடிகளுக்கு சமீபத்தில் மேய்ச்சற்றரையுமில்லை, செட்டான சமையல்செய்ய விறகு கிடைப்பதுமில்லை. இதற்கு என்னசெய்கிறது?

அமெரிக்கா தேசத்தில் ஸ்கூல்களில் கூட்டுறவு ரொம்பகொண்டாடப்படுகிறது. ஆர்பர்டே அல்லது விருக்ஷசம்பந்தமான நாள் என்பது தேசத்துக்குரிய ஒரு பொதுஸ்தாபனமாக ஆய்விட்டது. ஆர்பர்டே கொண்டாடும் ஸ்கூலைத் தவிரவேறு ஆவேசக்காட்சி யாதொன்றும் வேண்டியதில்லை. எல்லா உபாத்தியாயர்களும் மாணாக்கர்களும் அழகான அநேக செடிகளை வெகு சுறுசுறுப்பாய் நடவுசெய்துகொண்டிருக்கிறார்கள். பிறகு அச்செடிகள் மரங்களாகி வேறு ரக்ஷணைவேண்டாமல் தாங்களே வளரும் வரையில் வருஷம் முழுவதும் பரிபாலிக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்களுடைய ரிபோர்ட்டுக்காக ஒட்டுவேலை போன்ற சிறு தோட்டங்களுக்குப் பதிலாக மரங்கள் நடுவதற்காக பெரிய பாத்தியாகவிருக்கலாம். ஒவ்வொரு மாணாக்கனையும் அதமபக்ஷம் வருஷம் ஒன்றுக்கு ஒருமரத்தை நட்டு பரிபாலிக்கும்படி உற்சாகப்படுத்தலாம்.

உபயோகமானதும் கண்ணுக்கு அழகாயுமுள்ள மரங்களைப் பயிர்செய்து கிராமங் சீர்திருத்தலிலும் அழகாக்குவதிலும் வெற்றியடைய வேண்டுமென்றால் ஒவ்வொரு



கிராமமும் ஒரு கூட்டுத்தொழில் சங்கமாகவேண்டும். யூனியன்களின் ஆளுகையும் முனிஸிபாலிடிகளின் ஆளுகையும் எப்படி முறையே யூனியன் பஞ்சாயத்தாராலும் முனிஸிபல் கௌன்ஸில்களாலும் நடைபெற்று வருகின்றனவோ அம்மாதிரியே கிராம ஆளுகையானது ஒரு கூட்டுத்தொழில் பஞ்சாயத்தாரின் கையிலிருக்கவேண்டியது. காட்டு இலாகா ஸ்கூலுக்கு வேண்டிய செடிகள் சப்ளை செய்யவேண்டியது; நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அருகாமையிலுள்ளதும் ரோட்டுகள் வாய்க்கால்களோரமாயுள்ளதுமான தரிசு நிலங்களை நிலைப்படுத்தவேண்டும்; மரங்களை கூட்டுறவுமுறையில் நடவும் உற்சாகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு கிராமாந்தரப் பள்ளிக்கூடத்திலும் கூட்டுறவு முறையைக் கற்பிக்கவேண்டும். உபாத்தியாயர்களுக்கும், உபாத்தியாயினிகளுக்கும் 'ஸிவிக்ஸ' (பட்டண சம்பந்தமான) முறைகளைக் கற்றுக்கொடுப்பதுபோல கூட்டு முறையையும் போதிக்கவேண்டும். காடுகளை சீர்திருத்த அவர்களையே வழிகாட்டிகளாக்க வேண்டும். இப்படிச் செய்தால் இந்தியாவுக்கு நல்ல காலம்பிறக்கும். இந்த நல்லகாலம் இப்போதுதான் உதயமாகிக்கொண்டிருக்கிறது; சீக்கிரத்தில், ஒவ்வொரு நற்காரியத்திலும் கூட்டுறவுப் பிரயோகமே முறைமையாய்விடும்.

———:(●):———

# கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்தி

———:(●):———

## இந்தியா.

### கூட்டுத்தொழிலினர் நாள்.

திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் ஸொஸைடியின் மெம்பர்களால் கூட்டுத்தொழிலினர் நாள் 1913ஆு ஏப்ரல்மீ 13உ கொண்டாடப்பட்டது. மாலை 5-மணிக்கு ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் F. B. டையப்ஜியின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பப்ளிக் மீட்டிங் கூடிற்று. அப்பொழுது ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர், மிஸ்டர் T. வித்யாஸாகர் பாண்டியா, மிஸ்டர் ஸாதுல்லா பக்ஷா ஸாஹிப், மிஸ்டர் G. A. வைத்தியராமன், மிஸ்டர் C. வெங்கட்ரங்கராவ், மிஸ்டர் S. ஸத்யமூர்த்தி, ராவ் பஹதூர் மிஸ்டர் V. A. பார்த்தசாரதி முதலியார், மிஸ்டர் T. செல்வகேசவராய முதலியார், முதலானவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

### நல்வரவுப் பிரசங்கம்.

ஸொஸைடியின் போர்ட் ஆவ் டைரக்டர்களின் பொருட்டு மிஸ்டர் K. B. இராமநாத அய்யர் வந்த மெம்பர்களுக்கு நல்வரவுகூறினார். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

சென்ற வருஷம் கொண்டாடப்பட்ட கூட்டுத்தொழிலினர் நாளுக்குப்பிறகு ஜ்யார்ஜ் டவுனிலும், மைலாப்பூரிலும், சைதாப்பேட்டையிலும் மூன்று புதிய கிளைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவ்விடங்களில் ஏற்கனவே கிளைகளிருந்தன; இப்போது திறக்கப்பட்டவை அவைகளைத் தவிர வேறு கிளைகள். சிறிய அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள விவசாய பொருட்காட்சி இவ்வருஷத்துக் கொண்டாட்டத்

தின் ஒரு புதிய அம்சம். காட்சிப் பொருள்களெல்லாம் அநேக உத்தியோகஸ்தர்களின் உதவியால் சேகரிக்கப்பட்டன; இப்போது மிகச் சொல்பமாய் ஆரம்பித்த இப்பொருட் காட்சி நாளாவர்த்தியில் வருஷா வருஷம், வர வர பிரதான அம்சமாக பலத்துவிடுமென்று நம்புகிறேன்.

ஸொஸைடியின் க்ஷேமத்தை விருத்திசெய்ய வேண்டுமென்பதே எல்லாருடைய கருத்தாயிருக்கவேண்டுமென்றும், அதனால் எல்லாருக்கும் நன்மை யுண்டாகுமென்றும் சொன்னார்.

## நில பாங்கிகள்.

பிறகு மிஸ்டர் ஜீ. வெங்கட்ரங்கராவ் கூட்டுறவு நிலபாங்கிகள் என்பதைப் பற்றி ஒரு அருமையான வியாசத்தைப் படித்தார் அதன் சாராம்சம் பின் வருமாறு:—

இந்து ஜனங்களுக்கு கூட்டுறவின் தத்துவங்களில் ஆதிகாலம் முதற்கொண்டே ரொம்ப பரிச்சயமுண்டு. கிராம சமுதாயங்கள் (Village communities) என்று சொல்லப்பட்ட ஸ்தாபனங்களால் கூட்டுறவு மிக உன்னத தசையை யடைந்திருந்தது என்று வெளிப்படுகிறது. ஆனால், நாணய ஏற்பாடு விஷயமாய் இக் கூட்டுறவை பிரயோகம் செய்வது நன்றாய் அறிந்துகொண்டு அநுபோகத்திற்குக் கொண்டுவர முடியவில்லை. ஆகையால் கற்றறிந்த ஒவ்வொரு இந்திய மகானின் கடமை யென்ன வென்றால், பழைய கோட்பாட்டை மறுபடி உயிர்ப்பித்து கூட்டுத்தொழில் முறையை விருத்திசெய்து, நம் முன்னோர்களால் சொப்பனத்திலும் கண்டிராதபடி அவ்வளவு நன்றாய் கூட்டு முறையை எல்லாக் காரியங்களிலும் வியாபிக்கச் செய்யவேண்டுமென்பது தான். இவ்விராஜதானியின் மொத்தக்கடன் சகிக்கமுடியாததாயிருக்கிறது. சிறிய மிராசுதார்களும் பெரிய மிராசுதார்களும் ஆகிய இவ்விரண்டு வகுப்பார்களும் தாங்க முடியாத கடனால் கஷ்டப்படுகிறார்கள். வாஸ்தவமாய், சிறிய மிராசுதார்களை விட பெரிய மிராசுதார்களுக்குக் கடன் அதிகமாயிருக்கிறது. இதற்குப் பரிகார மென்ன வென்றால், கூட்டுறவைச் சார்ந்த ஒழுங்கான பாங்கிகளை ஏற்படுத்துவது தான். இந்த பாங்கிகள், ஏற்கனவே கடன்பட்டிருக்கும் பட்டாதார்களுக்கு திரவிய சகாயஞ் செய்வதைத் தவிர, சுய உதவியையும் மிதச்செலவு செய்யும் வழக்கத்தையும் அவர்களுக்குப் பழக்குகிறது. வறுமையை யடைந்திருக்கும் மிராசுதார்களுக்கு கஷ்ட நிவாரணம் செய்வதற்காகவே கவர்ன்மெண்டார் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் ஆக்டை 1904-ம்௵ நிறைவேற்றி யிருக்கிறார்கள். மேலும் 1912-ம் ௵த்து ஆக்டால் இதன் நோக்கத்தை விஸ்தரித்துமிருக்கிறார்கள். இந்த ஆக்டால் சொல்ப வட்டிக்குப் பணம் கிடைப்பதும், அஜாக்கிரதையா யிருத்தலை தடுப்பதும், பணம் போட்டுவைக்க நல்ல இடமும், நல்ல மேன்மையான நீதி மார்க்கத்தைத் தழுவ ஹேதுவும் ஆகிய சீர் திருத்தங்களெல்லாம் இத் தேசத்து கிராமாந்தர சிக்கனத்தில் ரொம்ப உண்டாயிருக்கிறது. ஆனால் இந்த ஆக்டின் உத்தேசம் சிறிய மிராசுதார்களின் கஷ்டத்தை நிவாரணம் செய்யும்பொருட்டே யொழிய பெரிய மிராசுதார்களை திரவிய விஷயத்தில் சகாயம் செய்ய வேண்டுமென்பதல்ல. இப்பெரிய மிராசுதார்கள் மிக்க செல்வாக்குள்ள வர்களாயும் குடியானவர்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் மத்யஸ்தர்களாயு மிருந்தார்கள். பெரிய மிராசுதார்களாயிருப்பதால் அவர்கள்தான் விவசாய சீர்திருத்த விஷயங்களில் எப்போதும் முன் நடத்த யோக்கியதையுள்ளவர்கள். இதுவுமல்லாமல் சிறிய மிராசுதார்களால் நடத்தமுடியாத கைத்தொழில் முதலிய முயற்சிகளையும் பெரிய மிராசுதார்கள்தான் அடக்கியாள வல்லவர்கள். முன்காலத்தில் அவர்கள் மிக அசாத்யமான



வகுப்பினர்களாயிருந்தபோதிலும் இப்போது காலவித்யாஸத்திற்குச் சரியாய் நடந்து கொள்ளாவிட்டால் தங்களுடைய செல்வாக்கும் அந்தஸ்தும் போய்விடுமென்று காலத்துக்குத் தக்கபடி நடந்துவருகிறார்கள். இவ்வகுப்பினரில் பெரும்பான்மையோர் பொறுக்க முடியாத கடனாளிகளாகி ஏழைக் குடியானவர்களுக்கு எவ்வளவு சொல்பவட்டிக்கு பணம் வேண்டியிருக்கிறதோ அந்த ஸ்திதியை அடைந்திருந்தார்கள். ஆகையால் தக்ஷணம் கடனினின்றும் விடுபட, அவர்களுக்கு அநியாய வட்டிக்குப் பணம் கொடுத்து மானபங்கம் செய்யும் சாவகாரியிடத்தில் போவதைத் தவிர வேறுமார்க்க மில்லாதிருந்தது. அவர்கள் தங்களுடைய நிலைமையை சீர்திருத்திக் கொள்ளவேண்டுமானால் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒரு சங்கம் ஆரம்பிக்கவேண்டும். சுய ஆட்சியும் பொதுத்திறமையும் அதின் நோக்கமாயிருக்கவேண்டும். அதில் கடன் வாங்குகிறவர்களே மெம்பர்களா யிருப்பார்கள். மேலும் கடன் வாங்குகிறவர்களின், அக்கறையும் கடன் கொடுப்பவர்களின் அக்கறையும் பரஸ்பரம் ஒன்றாயிருக்கும். மிராசுதார்களைச் சேர்ப்படுத்த இத்தகைய சங்கத்தால்தான் சாத்தியமென்று முதல் முதல் எண்ணங்கொண்டவர் பிரஷ்யா (Prussia) தேசத்துச் சக்ரவர்த்தியாகிய ப்ரடிரிக் தி க்ரேட் (Frederic the Great). இவர் 1769-ம் வருடத்தில் ஸைலீஷியா (Silesia) என்னுமிடத்தில் ஒரு நிலபாங்கி (Land Bank) யை ஸ்தாபனம் செய்தார். அப்போது ஏழு வருஷத்துச் சண்டை (Seven Years War) யால் அவ்விடமிருந்த மிராசுதார்களெல்லாம் வறுமையை யடைந்திருந்தார்கள்.

நாணயவிஷயமான பிரசினைகளெல்லாம் மேனாட்டிலும் கீழ்நாட்டிலும் ஒரே மாதிரிதான். கூட்டுறவினால் ஐரோப்பாவில் என்ன பெறப்பட்டிருக்கிறதோ அதை இத்தேசத்திலும் பெறலாம். மேலும் கூட்டுறவுச் சங்கங்களின் ஆக்டால் கிராம நாணயத்தை ஒழுங்குபடுத்துவதில் இதுவரை ஜெயம்பெற்றிருக்கிறதை நோக்கில், கூட்டுறவு நாணயத்தை மற்ற விஷயங்களில் பிரயோகித்தால் நல்ல வெற்றி பெற ஒரு அறிகுறியாயிருக்கிறது.

மிராசுதார்களின் கூட்டுறவு பாங்கி (Landholders Co-operative Bank) ஒன்று ஏற்படுத்த மதராஸ் மிராசுதார்களின் சங்கம் (Madras Landholders Association) எடுத்துக்கொள்ளும் முயற்சியைப்பற்றிக் கொஞ்சம் பேசியபிறகு உபந்யாசக்காரர் ஜெர்மனிதேசத்தில் தற்காலத்தில் நிலபாங்கிகளின் நடவடிக்கைகளைப்பற்றி சம்க்ஷேபமாய் வருணித்தார். ஜெர்மனியில் நிலபாங்கிகள் நியமிக்கப்பட்ட டைரக்டர்களின் சம்மதமன்னியில் லோன்கள் கொடுக்கிறதில்லை. இச்சம்மதம், கடன் வாங்கும் பேர்வழியின் சொத்து முழுக்கடனுக்கும் சரியான ஈடாயிருந்தால்தான், கொடுக்கப்படும். பாங்கிகளும் ஜனங்களிடத்திலிருந்து கடன் சீட்டின் (Debenture) பேரில் கடன் வாங்கி, தங்கள் மெம்பர்களுக்குக் கடனைக் கொடுக்கும். இப்படிப் பெறும் கடன் தொகை மொத்தமாய் ஒரே தவணையில் திருப்பிக்கொடுக்க வேண்டியதில்லை. வருஷா வருஷம் க்லுப்தமாய் ஒரு பாகத்தை செலுத்திக்கொண்டே வரவேண்டியது. கடன் வாங்கும் பேர்வழிகளிடத்தில் பாங்கி நியமித்த காலங்களில் வட்டி பெறும். மேலும் கடன் சீட்டு (Debenture) பெற்றிருப்பவர்களுக்கு பாங்கிகள் தாங்களே பணத்தைத் திருப்பிக் கொடுப்பார்கள்.

இந்த ராஜதானியில் நில பாங்கிகள் ஆரம்பித்தால் ஏராளமான நன்மையுண்டாகும்; அன்றியும் அது மிராசுதார்களின் அபிவிருத்திக்கும் க்ஷேமத்திற்கும் நிரம்ப அநுகூலமாயிருக்கும்.

## ஏழைகளுக்கு உதவி.

பிறகு மிஸ்டர் S. ஸத்யமூர்த்தி "நாம் ஏழை ஜனங்களுக்கு உதவி புரிகிறோமா?" என்பதைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார். ஏழை ஜனங்களுக்குள் மிதச் செலவுசெய்ய உற்சாகப்படுத்துவதற்காக திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சங்கம் பென்னி பாங்கி (Penny Bank) ஒன்று ஆரம்பிக்கவேண்டுமென்று மிஸ்டர் ஸத்யமூர்த்தி ரொம்ப உறுதியாய்ச் சொன்னார். மேலும், மாதம் 10 அல்லது 15 ரூபாய் சம்பளம் பெறும் ஏழை ஜனங்கள் இச்சங்கத்தில் மெம்பர்களாவதற்காக, பங்குத்தொகையை கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டும்படியான சில ஸ்பெஷல் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் சொன்னார். ஏழை ஜனங்களின் நன்மைக்காக இச்சங்கம் அவரவர்கள் நாணயத்திற்குத் தக்கபடி சாமான்களைக் கடனுகக்கொடுக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்.

## சேர்மன் செய்த சில குறிப்புகள்.

அக்ராசனதிபதியாகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் டையட்ஜி அன்று மீட்டிங் யாதொரு குறைவுமில்லாமல் நடை பெற்றதற்காக மெம்பர்களோடு தாமும் மிக்க சந்தோஷித்தார்; வாசிக்கப்பட்ட வியாசங்கள் ஒவ்வொன்றும் பொருளாதாரத்தைப்பற்றிய விஷயமாதலால் மிக அருமையாயிருந்தன. இவ்விடம் வந்துள்ள ஒவ்வொருவரும் இவ்வியாசங்களைக் கேட்டு ரொம்ப ஆனந்தமடைந்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இச்சிக்கனமுறையில் அநேக விஷயங்களுடைய ஞானம் அடங்கியிருக்கிறது. அவை ஒவ்வொன்றும் தனித்தனியே எவ்வளவோ பலனைத் தரத்தக்க திருவல்லிக்கேணி கூட்டுத் தொழில் சங்கம் அநேக நன்மைகளைச் செய்து கொண்டுவருகிறது; கூட்டுறவால் இத் தேசத்திற்கு க்ஷேமகரமுண்டாகும்.

ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அக்ராசனதிபதிக்கு வந்தனமளித்த பிறகு மீட்டிங்கு முடிந்தது.

## கவர்ன்மெண்டு டெலிகிராப் (தந்தி) உத்தியோகஸ்தர்களின் கூட்டுறவுச் சங்கம், மதராஸ்.

1913-ம் வருஷம் மேமீ 11-ந் தேதி கவர்ன்மெண்டு டெலிகிராப் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துவதற்காக ஸெயின்ட் மேரீஸ் சைஹஸ் கூல் ஹாலில் ஒரு கூட்டம் கூடினார்கள். டெலிகிராப் டைரக்டர் மிஸ்டர் R. C. லீஸூம், சூபரின்டெண்டெண்ட் மிஸ்டர் M. F. ஸிஸ்மித்தும் விஜயம் செய்திருந்தார்கள். அப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய ஆனரபில் திவான் பஹதூர் எல். டி. ஸ்வாமிகண்ணுப்பிள்ளை ஒரு பிரசங்கம் செய்தார். மிஸ்டர் லீஸ் அக்கிராஸனம் வகித்தார். ரிஜிஸ்ட்ராரவர்கள சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய அம்சங்களைப்பற்றி நன்கு விளக்கினார். உத்தியோகஸ்தரல்லாத மற்றவர்கள் தங்கள் நிலைமையையும் வரும்படியையும் உயர்த்த அநேக நாணயச் சங்கங்களிருக்கின்றன; ஆனால் அப்பேர்ப்பட்ட நன்மைகள் முழுமையும் சர்க்கார் உத்யோகஸ்தர்களுக்கு கிடைப்பதில்லை யென்று சொன்னார். இருந்தபோதிலும், கூட்டுறவுச் சங்கங்களின் மற்ற மெம்பர்கள்போலவே சர்க்கார் உத்தியோகஸ்தர்களும்



தங்களாலியன்றமட்டும் மிதச்செலவுசெய்து சம்பளத்தில் சொற்பதொகையையாகிலும் மிச்சம்பிடித்து அவர்களுடைய சங்கத்தில் போட்டுவைக்கவேண்டும். கடனாளிகளுக்கு கூட்டுறவுச் சங்கமானது நோயாளிக்கு ஆஸ்பத்திரியைப்போன்றது. நோயாளி எப்படி சொஸ்தப்பட்டு பலவானாகிறானோ அதேமாதிரி கடனாளி கூட்டுத்தொழில் சங்கத்தில் மெம்பராகி, கடன்பெற்று, முன் கடனை அடைத்து, மிதச்செலவு செய்யப்பழகி கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம்பிடித்து ஐசுவரியவானாகிறான். நிர்வாக கமிட்டியார் தங்கள் சங்கத்தின் மெம்பர்கள் கடன்படாமலிருக்கிறார்களா என்பதை கவனிக்கவேண்டும். பிறகு ரெஜிஸ்ட்ராரவர்கள் எல்லோரையும் ஒற்றுமையாயிருக்கும்படி போதனைசெய்தார்.

பிற்பாடு அநேகர், ரெஜிஸ்ட்ராரை பல கேள்விகள்கேட்க அவற்றிற்கெல்லாம் அவர் சரியானபடி உத்தரம் கொடுத்தார்.

கடைசியில் சேர்மன் உபந்நியாசக்காரருக்கு வந்தனமளித்து, சங்க ஸ்தாபனத்தில் மிக்க அக்கரை பாராட்டினதற்காக மிஸ்டர் ஸ்மித்துக்கு எல்லாரும் வந்தனமளிக்க கடமைப்பட்டவர்களாயுமிருப்பதாகச் சொன்னார்.

சேர்மனுக்கு வந்தனமளித்த பிறகு மீடிங்கு கலைந்தது.

1913-ம் வருஷம், மார்ச்சு மாதத்து செல்வநிலைக்கும் சமூகவாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட சமாசார சங்கத்தாரின் புல்லடின் என்னும் பத்திரிகையானது 1909–10-ம், 1910-11-ம் வருஷங்களில் இந்தியாவிலுள்ள நாணயச்சங்கங்களின் செண்ட்ரல் ஆர்கானிசேஷன்களின் நடவடிக்கைகளைப் பற்றி விமர்சிக்கும்போது முடிவில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:—

ஆனால் இக்கூட்டுமுறையானது இந்தியாவில் ஜீவனோடிருக்கிறதென்பதற்கும், இந்த ஜனங்களுக்கு சாதாரண சங்கங்களையும், பலபொருட் கலப்புள்ள இதர சங்கங்களையும் நிர்வாகஞ்செய்ய சாமர்த்திய முண்டென்பதற்கும், ஐக்கிய இயக்கம் துரிதமாய் அபிவிருத்தி யடைந்துவருவதே போதுமான அத்தாக்ஷியாயிருக்கிறது. மூலதனம் சேர்ப்பதில் இப்போது ஸ்தல சங்கங்கள் சர்க்காரை வெகுவாய் நம்பி யிருக்கிறதேயில்லை. மேல்விசாரணை விஷயத்தில் அப்படியில்லை; ஆனால் மேல்விசாரணைசெய்யும் துணைச் சங்கங்களின் அபிவிருத்தியை நோக்கும்போது நாளாவட்டத்தில் சங்கங்களின் மேல் விசாரணையை அவைகளின் செண்ட்ரல் ஆர்கானிஸேஷன்களுக்கு ஒப்புவித்துவிட்டு கவர்ன்மெண்டார் விலகிநிற்கக் கூடுமென்கிற நம்பிக்கை உண்டாகிறது.

## கீழ் பேரமநல்லூர் ஐக்கியநாணய சங்கத்தின் ஆரம்பநாள் கொண்டாட்டம்.

ஷை சங்கத்து காரியதரிசி எழுதுகிறார்:—

இந்த சங்கம் செங்கல்பட்டு ஜில்லா காஞ்சீபுரம் தாலூக்காவைச் சேர்ந்த கீழ் பேரமநல்லூர் கிராமத்தில் சென்ற 1912-ம் வருஷம் மேமீ 7உயில் வேலை தொடங்கிற்று. அந்நாள் மெம்பர்களுக்கு ஞாபகார்த்த கொண்டாட்டமாக ஒரு மஹாசபை சென்ற மேமீ 7உ புதவாரம் ஷை யூரில் நடந்தது. அதற்கு காஞ்சீபுரம் நெசவுத்தொழில் சங்கத்தின் காரியதரிசியும் டவுன்பாங்கியின் வைஸ்பிரசிடெண்டுமாகிய ம-ள-ள-ஸ்ரீ P. இராமச்சந்திர சாஸ்திரியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். காஞ்சீபுரம் டவுன்பாங்கியின் டைரக்டர்களில் இரண்டொருவரும் அக்கம்பக்கத்து கிராமவாசிகளில் சிலரும் ஊர்வாசிகள் எல்லோரும் சங்கத்தின் எல்லாமெம்பர்களும் மாலை

5-மணிக்கு கூட்டம் கூடினார்கள். காஞ்சிபுரம் சர்க்கில் ஐக்கிய நாணய சங்கங்களின் இன்ஸ்பெக்டர் K. நாராயணசாமி முதலியார் அவர்கள் வந்திருந்தார்கள். ஊரில் வசிக்கும் பள்ளிச் சிறுவர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் வாழ்த்துப் பாடல்களும் அபிநயப் பாடல்களும் பாடினார்கள். அவர்களுக்கு சிற்றுண்டி கொடுக்க பிள்ளைகள் அருந்தி சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள் 6-மணிக்கு மீடிங்கு ஆரம்பஞ் செய்து சாஸ்திரியார் அவர்களை வரவேற்க கமிடி செக்ரிடெரியாகிய டைரெக்டர் தி. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் வந்தனோபசாரபத்திரம் வாசிக்கப்பட்டது பின்பு அக்கிராசனாதிபதி அக்கிராசனம் வகிக்கவே அவரால் ஆரம்ப பிரசங்கம் எடுத்துச் சொல்லப்பட்டது. அதில் அவர் தேகத்தின் பல உறுப்புகள் சேர்ந்து ஒரு மனிதனாவதுபோல் கிருமவாசிகள் ஜாதிமத பேதமின்றி எல்லோரும் சகோதரபாவத்துடன் ஒத்துவேலை செய்வதே ஒரு கிராமத்துக்கு ஐக்கியத்தின் லக்ஷணமென்றும் தேகத்துக்கும் அதன் உறுப்புகளுக்கும் உள்ள ஒற்றுமை கிராமத்தின்பேரில் யேற்றி அதின் நன்மையை விளக்கிக்காட்டி ஐக்கியம் கடன்வாங்குவதிலும் கொடுப்பதிலும் எப்படி யேற்படுகிறதோ அப்படியே சாக்குகள் பொதுவில் உற்பத்தி செய்வதிலும் கிருமத்துக்கு வேண்டிய சாக்குகள் பொதுவில் வாங்குவதிலும் உண்டாக வேணுமென்றும் வற்புறுத்திச் சொன்னார். இதுவிஷயத்தில் நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் பிரப்பித்துக்கொடுத்து யிருப்பதற்கு நாம் அவர்களுக்கு நன்றிபாராட்ட வேண்டுமென்றும் கிருமச் சிறுவர்களுக்கு வித்தை புகட்டிவைத்தல் அவசியம் என்றும் எலிமெண்டரி பாடசாலைகள் கிருமங்களில் ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னார். பிறகு சங்கத்தின் விருத்தியைப்பற்றி செக்ரிடெரி ம-ள-ள-ஸ்ரீ V. புருஷோத்தமய்யர் அவர்கள் ஒருரிபோர்ட்டு வாசித்தார். அதில் சங்கத்தில் இப்பொழுது இருப்பது 29-மெம்பர்களென்றும் ஷேர் வசூல் ரூபா 142/—என்றும் பிராவிடெண்டு டிபாசிட்டு ரூபா 62/—என்றும் சென்ட்ரல்பாங்கி கடன் ரூபா 2800/—யென்றும் மெம்பர்களுக்கு கொடுத்திருக்கும் கடன்கள் 41-யென்றும் அதில் பூரா வசூல் 3-கடன்கள் போக பாக்கி 38-கடன்கள் யென்றும் மெம்பர்கள் சலீசில் வட்டியும் அசலுக்கு சிறுசிறு தொகைகளும் சௌகரியமாக செலுத்தி வருகிறார்களென்றும் சங்கம் வைக்குமுன் சங்கம் நடக்குமோ நடக்காதோ என்று தங்களுக்கு யிருந்தபயம் நீங்கிவிட்டதென்றும் ஊரில் ரூபா ஒன்றுக்கு ½ மாக்கால்நெல் வட்டிகொடுத்து வந்ததெல்லாம் நீங்கிவிட்டதென்றும் யெடுத்துக் காட்டினார். அதன்பின்பு இரண்டொருவரால் சில விஷயங்கள் பேசிய பின்ப அக்கிராசனாதிபதி முடிவு பிரசங்கத்தில் சங்கத்திற்கும் சங்கத்தின் மெம்பர்களுக்கும் வாழ்த்து கூறினார். பின்பு உத்திரமல்லூர் O. M. வெங்கடநாத அய்யங்கார் அவர்கள்தான் அன்றுவர சந்தர்ப்பமில்லாமல் இருக்கிறதைப்பற்றி விசனித்து எழுதியகடிதம் வாசிக்கப்பட்டது. மாலைசூட்டி பின்பு சபையாருக்கும் சந்தன புஷ்பாதிகள் கொடுத்தபின்பு ஜியார்ஜ் சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் வாழ்த்துகூறி சந்தோஷத்துடன் இரவு 8½ மணிக்கு சபை கலைந்தது. சங்கம் புதுசங்க மானதால் நடக்கும் வருஷத்தில் மேன்மேலும் விருத்தியடைய பிரார்த்திக்கிறோம்.

---

# காசியில் ஒரு கூட்டுறவு பாற்சாலை.

—:(●):—

## Co-operative Dairy at Benares.

விஸ்வேஸ்வர் கூட்டுறவு பாற்சாலை யென்பது ஆஹிர்களால் ஆரம்பித்து நடைபெற்று வரும் ஒரு சங்கம். இச்சங்கம் 1911-ம் வருஷம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு இதுவரையில் ஆஹிர்களால் பங்குகளுக்காக 354 ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. காசி பாங்கியினால் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கும் 100-ரூபாய் ரொக்க நாணயக்கடனையும் மாட்டுத் தொழுவங்கள் கட்டுவதற்காகக் கடன் வாங்கின தொகையையும் தவிர வேறு முதல் கிடையாது. வியாபார மெல்லாம் ரொக்கவிற்பனைக்குத்தான்.

இக்கூட்டுறவு பாற்சாலைச் சங்கம் ஆஹிர் பங்காளிகளிடமிருந்து பாலை ரூபாய்க்கு 10 சேர் விழுக்காடு வாங்கி 8 சேர் விழுக்காடு ஜனங்களுக்கு விற்கிறது. ஆரம்பத்தில் சில ஆஹிர்களும் வியாபாரிகளும் இச்சங்கத்தை ஒழிக்க எத்தனம் பண்ணினார்கள். ஆனால் ஜில்லா அதிகாரிகளின் உதவியால் இவர்களுடைய எத்தனமெல்லாம் வீணாக்கப்பட்டது இதற்கு எதிர்க்கடையும் ஒன்று திறக்கப்பட்டது. ஆனால் அது க்ஷீண தசையை யடைந்துவருகிறது.

இப்பாற்சாலையில் இப்போது 100 மாடுகள் இருக்கின்றன. இதில் பசுக்களைவிட எருமைகள்தான் அதிகமாயிருக்கின்றன. இப்போது ஒரு நாளைக்கு 9 மணங்கு பால் கறக்கப்படுகிறது, ஆனால் கோடைக்காலத்தில் குறைந்துவிடுகிறது.

ஒரு முதல்தரமான மாட்டுத்தொழுவம் தயாராய்க்கொண்டிருக்கிறது. ஆஹிர்கள் கறவை மாடுகள் வாங்க பணம் வேண்டுமென்றால் இச்சங்கத்தின் கடன் கொடுக்கும் இலாகாவிலிருந்து 100-க்கு 15⅝ வட்டி விகிதத்திற்கு அட்வான்ஸ் கொடுக்கப்படுகிறது.

சுத்தமான நெய் ஸப்ளை செய்வதற்காக ஒரு பிரத்யேகமான சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சங்கமும் உள் நாடுகளில் வசிக்கும் ஆஹிர்களைச் சேர்ந்தது. அவர்களிடமிருக்கும் நெய் யெல்லாம் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு விற்பனைக்கு காசிக்கு அனுப்பப்படுகிறது.

### 1912-ம் வருஷம் டிசம்பர்மீ 31உ யோடு முடியும் அரை வருஷத்தின் அபிவிருத்தி.

பால் விற்பதற்காக சகரத்திற்குள் 5 சாசுவதமான ஷாப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வைந்து ஷாப்புகளிலும் சேர்ந்து தினம் 8 மணங்கு 25 சேர் பால் விற்பனையாகின்றது. இவ்வரை வருஷத்தில் உற்பத்தி 1536 மணங்கு, 37 சேர் 10 சடக்கு பால் இதற்காக ஆஹிர்களுக்கு ரூபாய் 6,147-11-6 கொடுக்கப்பட்டது. இந்த ஆறுமாதத்தில் சொச்சத்தாலோ அல்லது சில்லரை வியாபாரத்தாலோ 81 மணங்கு, 2½ சேர் பால் சேதாரம். மிச்சம் சாதாரணமாக மழை நாட்களில் சம்பவிக்கிறது. 1912ம் வருஷம் ஜூலை, ஆகஸ்ட்டு மாதங்களில் பலமுறை மிச்சம் நின்றுபோய் அதனால் கொஞ்சம் கஷ்டமும் நேரிட்டது.

ஆஹிர்கள், அநேக இடங்களில் பாற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்கிற உற்சாகத்தை காண்பிக்கிறார்கள். ஆனால் பாலை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதிவிரைவில் கொண்டுபோக தகுந்த சாதனமில்லாததினால் அந்த ஏற்பாட்டை யெல்லாம் கைவிட வேண்டியதாயிற்று.

தயிர், பால் செய்யும் சாலையை எத்தனையோ விதத்தில் விருத்தியாக்கலாம். ஸப்ளையை ஒரு காலைக்கு 20 மணங்கு முதல் 30 மணங்கு வரை அதிகரிக்க இஷ்டம் தான். ஜனங்களும் இவ்வளவையும் வாங்கத் தயார்தான். ஆனால் அதிகப்பாலை எப்படி உண்டாக்குகிறது? என்கிற கேள்வி உண்டாகிறது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குள்ள தூரத்தையும், கொண்டுபோக காலதாமதத்தையும் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது.

எல்லாச் செலவும் சேர்ந்து மாதத்திற்கு ரூபாய் 207 ஆகிறது; மொத்த லாபம் மாதத்திற்கு 240 ரூபாய், ஆகையால் நிகரலாபம் மிகக் கொஞ்சம், இதெல்லாம் இத் தொழிலை இன்னும் விருத்தி செய்யவேண்டுமென்பதைக் காண்பிக்கிறது.

---

# ஐக்கியமாகாணங்களில் கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்தி.

## Progress of Co-operation in the United Provinces.

———:(*):———

ஐக்கியமாகாண கோவாபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு மிஸ்டர் எச். டப்ளியூ வுல்ப் அவர்கள் பின்வரும் சாராம்சம் பொருந்திய விஷயங்களடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றனர்.

"எனதன்பார்ந்த ஐயா:—வெகு உற்சாகத்துடன் இப்போதே நான் படித்து முடித்த தங்களது புதிய ரிபோர்ட்டைக் குறித்து மிக்க வந்தனமளிக்கின்றேன். அதில் 16, 17ம் பக்கங்களில் கண்டிருக்கும் விஷயங்களை முற்றிலும் மறுமுறை இங்கு வெளியிட்டிருக்கிறேன். அது படிப்பதற்கு மிக்க மனோகரமாயிருக்கிறது.

### கண்டிதமே சிலாக்கியமான உபாயம்.

கூட்டுறவைப்பற்றிய ஒழுக்கங்களில் யாவும் தாங்கள் செவ்வனே அறிந்தவர்களாய் புலப்படுகின்றமையால் தங்களுக்கு இன்னும் விளக்கிக் காட்டக்கூடியதொன்றுமில்லை. சங்கங்கள் தேவையில்லாத விடத்திலும், திருப்திகரமல்லாத சங்கங்களையும் தாங்கள் முற்றிலும் கலைத்து விடுவது மிக்க உத்தமமான காரியம். மொத்தத்தில் கண்டிதமே சிலாக்கியமான உபாயம். ஜில்லா பாங்கிகள் ஸெண்ட்ரல் பாங்கிகளாய் மாறி வருவதைக்காண எனக்குச் சந்தோஷமுண்டாகிறது. சுய ஆதரவில் நிற்கும் சிறிய சங்கங்களே மெச்சத்தகுந்தவை.

### அபிவிருத்தியின் அறிகுறி.

பிராவிடண்டுபண்டுகளும் அபிவிருத்தியின் அறிகுறியாகும். இந்தியாவைப்பற்றி எனக்கு விசேஷ அனுபோகமில்லை யாதலால் இது விஷயங்களில் இந்தியாவுக்குள்ள சக்தியை நிதானித்தறிய என்னால் முடியவில்லை. சங்க ஸ்தாபகர்களது முக்கிய



போதனையையும் பயிலுவிப்பையும் பற்றி நீங்கள் வற்புறுத்துவது சிலாக்கியம். சிலர் அநுபோகமில்லாத அசடர்களிடமிருந்து நன்மையை எதிர்பார்ப்பார்கள். இது மிகவும் பிசகு. சிற்சில சமயங்களில் நீங்கள் கற்றறிந்த நல்ல காரியதரிசிகள், அருகரல்லாதவர்களாய் உணர்வதுபோல் தெரிகிறது. படித்தவர்களையே காரியதரிசிகளாய் நியமிப்பது எல்லாவிதத்திலும் மேலானது. ஆனால் அவர்களுக்கு, இப்போது அவர்கள் ஸ்வாதீனத்தில் இருப்பதுபோல் தெரியவரும், கடன் வகையறா விவகாரங்களில் அதிகாரமிருத்தல் கொஞ்சம்கூட உதவாது. படிப்பும் விருத்தியாகி கற்றோர்கள் மலிந்து விளங்கும்போது இவைகள் சீர்பாடடையுமென்பதில் சந்தேகமில்லை. அநேகம் சங்கங்களுக்கு, முக்கியமாய் காயமான சங்கங்களுக்கு, அவ்வித காரியதரிசிகளிருப்பது எனக்கு விருப்பமில்லை ஆனாலிப்போது அவர்களின்றி உங்களது காரியம் நடைபெறாது.

### கஷ்டமான வேலை.

க்ஷேமநிதி சேகரிப்பதிலும் அதைக் கையாடும் விதத்திலும் தாங்கள் வெகு ஜாக்கிரதையாயிருப்பதைக் காண எனக்குச் சந்தோஷமுண்டாகிறது. "அசம்பாவித கடன்களுக்கான பிரத்தியேக க்ஷேமநிதி," இது மிகவும் உபயோககரமான ஸ்தாபனமேயாகும். இதுவே உம்மால் விருத்தியடைந்த முறைகளின் முக்கிய அத்தாக்ஷியாகும். நீங்கள் செய்வது முற்றிலும் சரி. உற்பத்திச் சங்கங்கள் மிக்க கஷ்டம் விளைவிக்கக் கூடியவை. அதனாலேற்படும் நஷ்டத்திற்குள்ளாவதற்கு சர்வசித்தமாயிருக்க வேண்டும். அப்படியிருந்தும் சோதித்து அறிந்தே பார்க்கவேண்டும். இருபதுக் கொன்றுதான் பலிதமாகும். இவ்விதமிருந்தும் நீங்கள் இதிலும் சற்று மேம்பாடடைந்திருப்பதாகவே தென்படுகிறது. கூட்டுறவின்பேரில் வேலைக்காரர்கள் கடன் வாங்கி தொழிலேற்படுத்திக் கொள்ளுதல் நல்ல ஆரம்பம்தான். ஆனால் இவைகளெல்லாம் ஒரே தொழிலைப்பற்றினதாயின் சிலாக்கியமானவை யாகும். எவ்வெளவுக்கெவ்வளவு தொழில் விருத்தியோ அவ்வளவுக்கவ்வளவு பணத்தேவை ஏற்படும். பிறகு செய்யப்பட்ட பொருள் விற்பனைவிருத்தியைக் கவனிக்கவேண்டும்.

### காசியில் பாற்சாலை.

விவசாய ரீதியில் காசி பாற்சாலை, யாவரும் பார்த்து இன்னும் அதைப்போல் ஏற்படுத்திக்கொள்ளுமாறு மிக்க சிலாக்கியமாய் வேலை செய்யத் துவக்கியிருக்கிறது. விலையாகா பாலைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. இங்கு நாம் அதை வெண்ணெயாகவும் பாலடைக்கட்டியாகவும் செய்துவிடுகிறோம். தூரத்திலுள்ள ஜில்லாக்களின் பாடு பரிதபிக்கத்தக்கதே. நான் இதில்காணும், முக்கிய சந்தோஷகரமான செய்தி யாதெனில் கவர்ன்மெண்ட் பணச்செலவின் குறைவே. உங்கள் சகாக்கள், அநாவசியமாய் சங்கடப்பட்டுக் கொண்டிருந்ததுபோலில்லாமல் நீங்கள் வெகுவாய் நிறைவேற்றியே வருவதாய் காண்கிறது.

### உயிரின் புனருத்தாரணம்.

உங்களுக் குதவிபுரிய அநேகர் வலுவில் வருவாரென நான் நினைக்கிறேன் இதுவே உழைப்பின் முக்கிய பலனாகும். உங்களுடைய ரிபோர்ட் எனக்கு அதிக மனமகிழ்ச்சி விளைத்துள்ளது. இதனால் யாவரும் சந்தோஷிக்கத் தக்கவாறு இந்திய சங்கங்களின் ஜீவனுக்கு புனருத்தாரண மேற்பட்டிருப்பதுபோல் தெரியவருகிறது".

---

# மற்றதேசங்களில்

## ஜப்பான்.

**கூட்டுறவுச்சங்கங்களின் 1909-ம் ௵த்துச் சட்டத்தின் சாராம்சம் :—** சட்டப் பிரகாரம் ஏற்பட்டுள்ள கூட்டத்தொழில் செய்யும் சங்கங்களை, கூட்டுச் சங்கங்களாக சட்டம் ஒப்புக்கொள்வதோடு அவைகளை 4 உட்பிரிவுகளாகவும் பிரிக்கிறது.

(a) ஐக்கிய நாணயச் சங்கங்கள் : இவைகளின் நோக்கம் தங்கள் மெம்பர்களுக்கு வேண்டிய தொழில் முதலை பெறச்செய்வதும் அவர்களை செட்டாயிருக்கச் செய்வதும்.

(b) கூட்டுத்தொழில் விற்பனைச் சங்கங்கள் : இவைகளின் நோக்கம் தங்களுடைய மெம்பர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்தல்.

(c) பொருள்களை வாங்கும் கூட்டுத்தொழில் சங்க கள்: இவைகளின் நோக்கம் தங்கள் மெம்பர்களின் கைத்தொழிலுக்கும் வியாபாரத்துக்கும் வேண்டிய வஸ்துக்களை வாங்கி மறுபடியும் அவைகளை அவர்களுக்கு விற்பது ; அல்லது அதிஅவசியமான பொருள்களை வாங்குவது.

(d) (பொருள்) உற்பத்திக்கான கூட்டுறவுச் சங்கங்கள்: இவைகளின முக்கிய நோக்கம், தங்கள் மெம்பர்களின் தொழிலுக்கு வேண்டிய அவசியமான வஸ்துக்களை அவர்களுக்கு ஸப்ளைசெய்வது.

கூட்டுத் தொழில் சங்கங்கள் வருமானத்தின் பேரில் போடும் வரியினின்றும், தொழில் வரியினின்றும் வஜாசெய்யப் பட்டிருக்கின்றன.

சட்டப்பிரகாரம் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த வேண்டுமானல் அதமபக்ஷம் 7 மெம்பர்கள் தேவை : கூட்டுறவுச் சங்கஸ்தாபகர்கள், முதலாவது, நிபுணர்களால் அங்கீகரிக்கக்கூடிய விதிகளைத் தயார் செய்ய வேண்டும்.

புது சட்டத்தின் முக்கியபாகம் கூட்டுத் தொழிற் சங்கங்களின் பிடரேஷன் களையும் கூட்டுறவுத் தொழிற் சங்கங்களின் சென்டிரல் அஸோஸியேஷன்களையும் பற்றி விவரிப்பது.

1909ம் ௵த்து சட்டத்தின் 76 வது நிபந்தனை விதியில் குறிக்கப்பட்டுள்ள காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் பிடரேஷன்களாகச் சேரலாம் என்று கூறுகிறது :—

முதலாவது, ஒன்று கூடின சங்கங்களுக்கு கடன்கள் கொடுத்து அவைகளுடைய சிக்கனத்தை விருத்திசெய்து வசதி உண்டாக்குதல் (ஐக்கிய நாணயச் சங்கங்களின் பிடரேஷன்கள்)

இரண்டாவது, ஒன்று கூடின சங்கங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்தல் (விற்பனைக்காக ஏற்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பிடரேஷன்கள்). மூன்றுவது, ஒன்று கூடினசங்கங்களுக்கு வேண்டியவைகளை அவைகளுக்கு விற்றலும், மெம்பர்களுககு விற்பனை செய்யுமுன் அப்பொருள்களை உற்பத்தி செய்தலும். (பொருள்களை வாங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பிடரேஷன்கள்)

சட்டம் இந்த பிடரேஷன்களை ஒப்பந்தக்காரர்களாக (incorporated bodies) ஒப்புக்கொள்ளுகிறது.

பிடரேஷன் மெம்பர்களின் சந்தாவின் உத்தரவாதப் பொறுப்பு வரையறுக்கப் பட்டதாகவாவது, அல்லது சந்தாவுக்குமேல் குறிப்பிட்ட ஒரு தொகை வரையறுக்கப் பட்டதாகவாவது, உள்ள ரூபமான கூட்டுறவுச் சங்கமாக ஏற்படுத்தலாம். பின் கண்டமாதிரியை அனுசரித்தால் ஆசிரயித்த சங்கங்கள் அல்லது ஒன்றுகூடின பிடரேஷன்களின் உத்தரவாதப் பொறுப்பு மெம்பர்களின் சந்தாதொகைக்குள் நிர்ணயிக்கப் பட்டதாயிருக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் ஒரு சென்ட்ரல் அஸோஸியேஷன் உள்ளதையும் சட்டம் ஒப்புக்கொள்ளுகிறது. இது கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவைகளின் பிடரேஷன்களுக்கும் ஜப்பான் முழுவதுக்கும் ஒரு தனிமையான சென்ட்ரல் இன்ஸ்டிட்யூட் அதாவது மத்தியஸ்தாபனம் போல வேலை வருகிறது.

இந்த சென்ட்ரல் அஸோஸியேஷனின் நோக்கங்களாவன:— (1) புதிதாய் பிடரேஷன்களையும் கூட்டுறவுச் சங்கங்களையும் ஏற்படுத்த உற்சாகப்படுத்தல் (2) ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டவைகளின் வளர்ச்சியை மேன்மேலும் விருத்திசெய்தல் (3) சங்கங்களுக்குள் ஒன்றுக்கொன்றுள்ள வியாபாரசம்பந்தத்தை விருத்தி செய்தல்.

1909ம் ௵த்து கூட்டுறவுச்சங்கங்களைப் பற்றி சட்டம் இப்படியிருக்க இச்சங்கங்களும் அவைகளின் பிடரேஷன்களும் 190ம் ௵முதல் 1912ம் ௵ ஜூன் மாதம் 30ந் தேதிவரை செய்திருக்கும் அபிவிருத்தியைப் பற்றி சற்றுகவனிப்போம்.

கூட்டுறவுச் சங்கங்களின் மொத்தம் 1909ம் ௵ ஜூன் மாதம் கடைசியில் 5, 141—ல் இருந்து மூன்று வருஷங்களுக்குள் 9, 394—ஆக அதிகரித்திருக்கிறது. இத்தொகை கீழ்க்கண்ட பலதினுசு கூட்டுறவுச்சங்கங்ளாக பிரிந்திருக்கிறது:— ஐக்கிய நாணயச் சங்கங்கள் 2, 676; விற்பனைக் கூட்டுறவுச்சங்கங்கள் 229 ; (பொருள்சள்) வாங்க கூட்டுறவுச்சங்கங்கள் 761; உற்பத்திச் சங்க கள் 117; வாங்கி விற்பதற்கான கூட்டுறவுச்சங்கங்கள் 584; விற்கவும், உற்பத்தி செய்யவுமான கூட்டுறவுச்கங்கங்கள் 152; வாங்கவும் உற்பத்திசெய்யவுமான கூட்டுத்தொழிற் சங்கங்கள் 54; வாங்கவும், விற்கவும், உற்பத்தி செய்யவுமான கூட்டுறவுச்சங்கங்கள் 246; நாணயத்திற்கும் விற்பனைக்குமான கூட்டுத்தொழிற் சங்கங்கள் 392; நாணயத்திற்கும் பொருள்கள்வாங்கவும் கூட்டுத் தொழிற் சங்கங்கள் 1, 877; நாணயத்திற்கும், (பொருள்கள்) உற்பத்தி செய்வதற்குமான கூட்டுத்தொழிற் சங்கஙகள் 22 நாணயத்திற்கும் (பொருள்கள்) வாங்கவும விற்கவுமான கூட்டுறவுச் சங்கங்கள் 1,714; நாணயத்திற்கும் (பொருள்கள்) வாங்கவும் உற்பத்தி செய்யவுமான கூட்டுறவுச்சங்கங்கள் 30; நாணயத்திற்கும், விற்பனைக்கும், பொருள் உற்பத்திக்குமான கூட்டுறவுச்சங்கங்கள் 45; நாணயத்திற்கும், விற்பனைக்கும், (பொருள்) வாங்கவும் உற்பத்தி செய்யவுமான கூட்டுறவுச்சங்கங்கள் 545;

இம் மூன்று வருடங்களில் கூட்டுத் தொழிற் சங்கங்கள் வருஷத்திற்கு 1, 415 விழுக்காடு அதிகரித்திருக்கின்றன. சென்ற மூன்று வருஷங்களில் சங்கங்களின் ஏற்றம் 1, 074 விட அதிகமில்லாததையும், கூட்டுத்தொழிற் சங்கங்கள் எல்லையற்றனவாக அதிகரிக்காவாதலாலும், 1909ம் ௵த்து சட்டத்தால் கூட்டுத்தொழிற் குரிய தத்துவம் எவ்வளவு என்றாய் கைகூடியிருப்ப தென்பதை நாமே ஊகித்துக்கொள்ளலாம்,

# கூட்டுத்தொழில் போதனைமுறை

## இட்டாலி

——:-: ——

### ரோமாபுரி (Rome)யில் கூட்டு முறையையும் விவசாய ஐக்கியத்தையும்பற்றி கல்விகற்பிக்கும் ஒரு ஸ்தாபனம்.

கூட்டுறவு விவசாயத்திற்குரிய நாஷனல் கமிட்டியார் 1913ம் வருஷ செப்டம்பர் மாதத்தில் ரோமாபுரியில் கூட்டுறவைப்பற்றி ஒரு தொடர்ச்சியாக பாடங்கள் கற்பிக்கவும் பிரசங்கங்கள் செய்யவும் ஏற்பாடு செய்வதற்கு எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி மிக்க கவனிக்கத் தக்கதாயிருக்கிறது. இப்பத்ததி லூயிஜ் லூஜட்டியால் ஆரம்பிக்கப்பட்டு பின்வரும் காரியக்கிரமப் பிரகடனையின்படி நடத்தப்படும்:—

(a) விவசாயத்திற்குரிய சங்கங்களின் பொருட்டும் பரஸ்பர உபகார சங்கங்களின் பொருட்டும் சட்ட நிரூபணம் செய்தல்.

(b) விவசாய கூட்டுமுறையில் வாங்கும் சங்கங்களும், விவசாய விளைபொருள்களும் அவற்றை வாங்குதலும்;

(c) நாட்டு கூட்டுத் தொழில் நாணயச் சங்கங்களும், இட்டாலியில் விவசாயத்திற்குரிய நாணயத்தை அமைத்தலும்;

(d) விவசாய கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களும், விவசாய விளைபொருள்களை விற்றலும்;

(e) விவசாய கூட்டுறவு சங்கங்களும், விவசாய இன்ஷியூரன்ஸ் சங்கங்களை அமைத்தலும்;

(f) கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விவசாய கூட்டுறவு சங்கங்களுக்கும் வேண்டிய வரவு செலவு கணக்கு எழுதும் விதத்தின் கோட்பாடும் பழக்கமும்.

மேற்சொன்ன பாடங்கள் மாறிமாறி பின்குறிக்கப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றிய பிரசங்கங்களோடு கலக்கப்படும்.

(a) ஆடுமாடுகள் சீர்திருத்தும் சங்கங்கள்;

(b) ராஜாங்க லைப் (life) இன்ஷியூரன்ஸ் ஸமாஜமும் இடாலியில் மிதவிரய அபிவிருத்தியும்;

(c) விவசாயத்திற்குரிய அந்யோன்னிய சங்கங்களும் ஆடுமாடுகளுக்குண்டாகும் நோய்களை தடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளுதலும்;

(d) ஆடுமாடுகள் விற்பனை செய்வதற்கான கூட்டுறவுச் சங்கங்கள்.

பின் வரும் யோக்கியதைகளை யுடையவர்கள்தான் இப்பிரசங்கங்களைக் கேட்க அருகரான மாணாக்கர்களாவார்கள்:—

(a) மேல்தர அல்லது அப்பியாச சித்தமான விவசாயம் மிருக வைத்தியம், வியாபாரம் முதலியன கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடங்களில் சர்டிபிகேட் அல்லது யோக்கியதா பத்திரம் பெற்றவர்கள்;



(b) போர்ச் சேவகர்களுக்காக விவசாய சம்பந்தமான பிரசங்கங்கள் செய்ய ஏற்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள்.

(c) உபாத்தியாயர்களை தற்பேத்து செய்யும் பாடசாலையின் உபாத்தியாயர்களும் ஸ்கூல் மாஸ்டர்களும் உபாத்தியாயினிகளும்;

(d) விவசாயத்திற்குரிய சங்கங்களின் மெம்பர்கள்; மனுசெய்துகொண்டால் எப்பேர்ப்பட்டவருக்கும் பிரசங்கங்களுக்கு ஆஜராயிருக்க அனுமதி கொடுக்கப்படும்.

போதனா காலமுடிவில் மாணாக்கர்களுக்கு ஒரு பரீக்ஷையுண்டு. இப்பரீக்ஷையில் தேறினவர்களுக்கு ஒரு விசேஷ யோக்கியதா பத்திரம் (Diploma) கொடுக்கப்படும்.

இவ்விதமாக கூட்டுறவையும், பரஸ்பர நன்மையையும் இத்தேசத்தில் வியாபிக்கச் செய்ய பிரீதியுள்ள கனவான்களின் கம்பனை, ஏற்கனவே கூட்டுறவினாலும் பரஸ்பர உதவியாலும் ஜெர்மனி, ஆஸ்திரியா, பெல்ஜியம் முதலான இடங்களில் அபிவிருத்தியாயிருப்பதுபோல் அதிகரிக்கச் செய்யவேணுமாய் விரும்பப் படுகிறது.

## 2 ஜெர்மனி.

### கூட்டுறவு உத்தியோகஸ்தர்களைப் பழக்குதல்.

ஜெர்மன் கூட்டுமுறையில் நிபுணர்களை பெருகச் செய்யும் வேலை அதிவிரைவாக நடந்து வருகிறதென்பது பிரஸ்தாப வருஷத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் சென்ட்ரல் லீகால் (Central League of Cooperative Societies) ஏற்பாடு செய்திருக்கும் பிரசங்கங்களால் தெரியவருகிறது. இந்த நமூனாவில் அடியிற்கண்ட பிரசங்கங்கள் மிகத் திறமையுள்ள உபந்யாசக் காரர்களால் பிரசிங்கிக்கப்படும்;—கூட்டுறவின் முக்கியமான அங்கங்களும் அவற்றின் சுதந்தரமும் கடமையும்; ஊழியத்திற்குள்ள கூட்டுறவுச் சம்பந்தம்; மேல் விசாரணைக் கம்மிடியாரின் மேல் விசாரணை, அடக்கி ஆளுதல், கையிருப்புசாமான் பார்த்துக் கொள்ளல் (Stock-taking); கணக்கில் பாக்கி சரிப்படுத்தல். மூலதனம், கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்து விருத்திசெய்தல்; கூட்டுறவுச்சங்கங்களின் சென்ட்ரல் லீக்கினுடையவும் அவற்றின் கிளை யூனியன்களுடைய அலுவலும் அவற்றின் கருத்தும்; டிஸ்ட்ரிக்ட் சங்கங்களும் கூட்டுறவுச் சபைகளும்; கூட்டுறவுக்குரிய மொத்த விற்பனையின் கருத்து; லேவாலேவியும், கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்தின் பாங்கின் இலாகாவோடு சங்கங்களின் சாங்கத்தியமும் கூட்டுறவுச்சங்கங்களுக்கு உபயோகமாகும் வரி ஏற்பாடு; கூட்டுறவுமுறை வியாபிக்கச் செய்தலும் மெம்பர்களுக்கு கூட்டுறவு சம்பந்தமான கல்வியைப் பயிற்றலும்; கூட்டுத் தொழிற் சங்கங்களும் அவற்றின் சுபாவமும் கருத்தும்; கூட்டுத்தொழிற் சங்கங்களும் இன்ஷியூரென்ஸும்; ரொக்க வியாபாரம் ஏற்பாடும் அதை சித்திக்கச் செய்வதாலுண்டாகும் ஆசார விசேஷமும் தொழில் விசேஷமும், சென்ட்ரல் லீக்குக்கும் ட்ரேட் யூனியன்களின் பொது கமிட்டிக்குமுள்ள சம்பந்தம்; சர்வஜன சங்கத்திற்குரிய இன்ஷியூரன்ஸ் சட்டமும் விசேஷமாய் சிப்பந்திகளின் இன்ஷியூரன்ஸும் மேற் சொல்லப்பட்ட சென்ட்ரல் கோவாபரேடிவ் லீக்கின் ஏற்பாடும்.

இந்த எத்தனத்தை அமுலுக்குக் கொண்டுவந்த முதல் வருஷமாகிய 1912-ம் வருஷத்திய நமூனாவைவிட இவ்வருஷத்து ஸ்கீம் அநேக புதிய விஷயங்களடங்கி யிருப்பதை நோக்க மிக்க கவனிக்கத்தக்கதா யிருக்கிறது. 1912-ம் வருஷத்தில் ஐந்துவாரம் முதல் ஆறு வாரம் வரையில் கடைசியில் எட்டுவாரம் வரையிலுங்கூட நீண்ட பிரசங்கம்

கள் போர்டு மெம்பர்களுக்காக செய்யப்பட்டன. இதோடு மேல்விசாரணைக் கமிட்டியாருக்காக அநுபந்தமான சில பிரசங்கங்களும் செய்யப்பட்டன. இம்முறைக்கு நல்ல சாமர்த்தியமுள்ள உத்தியோகஸ்தர்கள் அவசியமாக வேண்டியிருப்பதை நோக்கி இம் மார்க்கத்தில் முயற்சியெடுத்துக் கொள்வது அபிவிருத்திக்கு அடையாளமாக பாவித்து கொள்ளவேண்டியது.

---

## கூட்டுறவும் மிதச்செலவும்.

---

இட்டாலியில் விவசாய போர்டாரவர்களின் 1911-ம் வருஷத்து சேஷனில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள்.

**விவசாயம், கிராம ஐக்கியம், மிதவிரயம் முதலியவைகளை எடுத்துக்காட்டுதல்:—** கிராம ஐக்கியத்தை சற்று கவனிப்போம். இதைப்பற்றி விவசாயச் சங்கங்கள் குறிப்பிட்டதை யெல்லாம் நோக்கில் ஏற்கனவே மிதவிரய சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ள பிரசங்கங்கள் போலவே கிராம ஐக்கியம் வியாபிக்க கூட்டுறவைப்பற்றி பிரசங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்கிற கருத்துடையவைபோல் காண்கிறது. மேலும், அநுகூலமான விதிகளை கஜானா ஆபீசர்கள் குயுக்தியான வியாக்கியானம் செய்யாமல் சங்கங்களின் அபிவிருத்திக்கு யாதொரு விக்னமும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதும் அவைகளின் நோக்கமாகும். கடைசியாக அநேக சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் வரவு செலவு கணக்கையும் அவைகளின் நிர்வாகத்தின் கூட்டுறவு ஸ்வபாவத்தையும் சட்டாயத்தின்பேரில் இன்ஸ்பெக்ஷன் செய்ய ஸ்தாபனங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றன. ரிப்போர்ட்டை சமர்ப்பித்தவரின் பிரேரணையின் பேரில் வெளியிட்ட விருப்பங்கள் நிறைவேற போர்டார் ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தார்கள். அத்தீர்மானம், தற்காலத்தில் ஊரூர் திரிந்து மிதவிரயத்தைப் பற்றி பிரசங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்திருக்கும் கவர்ன்மெண்டாருடைய வேலையைப் புகழ்வதோடுகூட பின்வரும் இரண்டு விருப்பங்களையும் வெளியிடுகிறது. அதாவது:—(1) சட்டப் பிரகாரம் சங்கங்களை ஏற்படுத்துவதற்குண்டான மாதிரியை சுலபமாக அமுலிலிருக்கும் சட்டத்தை தகுந்தபடி திருத்தப்படவேண்டுமென்றும், கஜானா ஆபீசர்களுக்கு குயுக்தியான விவரிப்புகளுக்கு இடங்கொடுக்கும் விதிகளுக்கு ஒரு வியாக்யானம் சேர்க்கப்பட வேண்டுமென்றும், (2) சரிப்பட்டால் கூட்டுறவுச் சங்கங்களின் பிடரேஷனால் (Federation) ஏற்படுத்தப்பட்ட விசேஷ பரிசோதனை ஸ்தாபனங்களைக் கொண்டு கிராம நாணயச் சங்கங்களை பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

**மிதவிரயம்:—** சங்கங்களின் தீர்மானங்களை பரீக்ஷித்தபிறகு விவசாயிகளில் கூலியாட்களின் துர்ப்பலம், விருத்தாப்பியம் ஆகிய இவைகளுக்காக ஏற்பட்டுள்ள நாஷனல் சொஸைட்டியில் தங்களை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுகிறவர்களுக்கு விகிதங்கள் (Premium) கட்டுகிறதில் அநேக சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படுமென்று சொல்லி, அவ்விவசாயிகளுக்குள் மிதவிரயத்தன்மை மேன்மேலும் பரவி வியாபித்து அபிவிருத்தியுண்டாகும்படி செய்ய கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்வதாய் போர்டார் தீர்மானித்தார்கள்.

---

## பிற்கால ராஜ்யமும் அதில் கூட்டுத் தொழிலின் ஸ்தானமும்.

---

தென்பாகத்தாரால் (Southern Section) சேர்க்கப்பட்ட மூன்றாவது கான்பரென்சு லண்டன், பாரிங்டன் தெருவு மெமோரியல் ஹாலில் 1913ம் வருஷ ஏப்ரல்மாதம் 26ம் தேதி சனிக்கிழமையன்று மிஸ்டர் R. ரோஸெல் என்பவரின் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. அப்பொழுது ட்ரேட்யூனியன்களிலிருந்தும் சங்கங்களிலிருந்தும் அநேக டெலிகேட்டுகள் விஜயம் செய்திருந்தார்கள். தென்பாகத்து கூட்டுத்தொழிலினர்கள் கூட்டிய மூன்று கான்பிரன்சுகளாலும் எல்லாவித வேலைக்காரர்களுள்ளும் ஐக்கியம் என்பது மேன்மேலும் அதிகரித்திருக்கிறதென்று ஆரம்பத்தில் அக்கிராசனாதிபதி சொன்னார். பிறகு ஸிட்னி வெப் (Mr. Sidney Webb) என்பவர் "பிற்கால ராஜ்யத்தில் கூட்டுத்தொழிலின் ஸ்தானம்" என்பதைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார். அதின் சாராம்சம் பின்வருமாறு:—

எந்தவிதமான யதேச்சையான கூட்டுத்தொழில் செய்யவேண்டுமானாலும் தகுந்த சந்தர்ப்பமும் சாதனங்களும் மிகவும் முக்கியமானவை. ராஜ்யத்திற்கு வேண்டிய எல்லா அங்கங்களையும் ஸ்டோராலும் மொத்த விற்பனைச்சங்கத்தாலும் ஏற்படுத்த முடியாதென்று கூட்டுத்தொழிலினர்கள் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில கூட்டுத்தொழிலினர்கள் தங்களுக்கு உண்டாகும் தேவைகள் எல்லாவற்றையும் கூட்டு முறையால் அடையலாமென்று சொல்லிக்கொள்வது வழக்கம். இப்பொழுது அவர்கள் சர்க்கார் ஸ்தாபனங்கள் பிற்கால ராஜ்யத்தில் முக்கிய ஸ்தானங்களை வகிக்கும் என்பதை ஒத்துக்கொள்ள சித்தமாயிருக்கிறார்கள்.

இப்போது தாங்களிட்டது சட்டமென்று கைத்தொழில்களை யெல்லாம் தங்கள் வசப்படுத்திக் கொண்டிருக்கும் தனித்தனி முதலாளிகளின் கொட்டம் அடங்கும் காலம் எப்போது வருமென்பதை ஆவலுடன் எதிர் பார்ப்பதாகச் சொன்னார். சுயநிர்வாகஞ் செய்யும் வொர்க்ஷாப் என்று சொல்லப்பட்ட தொழிற்சாலைகளைப்பற்றி பரிந்து பேசுகிறவர்களுக்கு இக்கூட்டுறவுமுறையிக்க கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் சுயநிர்வாகஞ் செய்யும் தொழிற்சாலையின் கோட்பாடுகள் சாதாரண கைத்தொழில்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. இம்மாதிரி கூட்டுத்தொழில், ரொம்பமுதல் வேண்டிய கைத்தொழில்களுக்கும், தூரத்தில் அல்லது அயல்நாட்டில் விற்பனை செய்ய இடம்வேண்டும் கைத்தொழில்களுக்கும் அல்லது ஏராளமாய் உற்பத்தி செய்யவேண்டிய கைத்தொழில்களுக்கும் உதவாது.

பிறகு மிஸ்டர் வெப், ஸ்டோர்களால் அடைந்திருக்கும் நன்மைகளைக் குறித்துப் பேசினார். லண்டனிலுள்ள பண்டங்களை வாங்கி உபயோகிக்கிறவர்களின் சங்கங்கள் (Association of Consumers) செழித்து வளர்வது மிக்கசந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. அச்சங்கங்கள் புஸ்தகங்களையும் ந்யூஸ் பேபர்களையும் சுற்றி அனுப்புதலும், சாப்பாடு, சிற்றுண்டி முதலியவைகளைத் தயாரிப்பதும், மருந்து பட்டுவாடாசெய்வதும்,

இறந்தவர்களை அடக்கஞ்செய்வதும் ஆகிய இக்காரியங்களையும் எடுத்துக்கொண்டால் நன்றாயிருக்குமென்று எண்ணங்கொண்டார். கூட்டுத்தொழிலின் முக்கிய அம்சம் அதன் பிரஜாபத்தியம்தான். தொழிலாளிகளில் ஆறில்ஒருபங்கு ஏற்றுமதிக்காக உற்பத்திசெய்கிறார்கள். கவர்ன்மெண்ட் என்றால் என்ன? சர்வவியாபகமாயிருக்குங் கூட்டுறவுதான் கவர்ன்மெண்டு. பிற்காலத்தில் தெருக்கள் ஏற்படுத்துவதும், ரோட்டுகள் போடுவதும் அவற்றை செம்மை செய்தலும், விளக்குப்போடுவதும், சாக்கடைகள் கட்டுவதும் ஊரை சுத்தப்படுத்துவதும் இவையெல்லாம் முனிசிபாலிடியார்தான் செய்வார்கள். லோகல் கவர்ன்மெண்டார் சிறுவர்களை சுகத்தோடு போஷிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வார்கள். லோகல் (ஸ்தல) கவர்ன்மெண்டுக்கு நாட்டுப்புற தேசங்களில் வயல்கள் ஏற்படும்; மேலும் அது தனக்கு சொந்த ஆடு மாடடிக்கும் தொட்டியும், ரொட்டிக்கிடங்கும், பால்டிப்போவும், உடைத்தாயிருக்கும். போஸ்டாபீஸ் காயிதங்கள் வீடுவீடாய்க்கொண்டு போய் கொடுப்பதுபோல் பால், ரொட்டி முதலானதையும் வீடுவீடாய் ஸப்ளைசெய்யும் துல்துகள்செய்கிற இடத்தையும ஸ்தல கவர்ன்மெண்டார் உடைத்தாயிருப்பார்கள். ஆனால் மெம்பர்களுக்கு வேண்டியவைகளை ஸப்ளைசெய்வது கூட்டுறவுச் சங்கங்களைப் பொருத்தது. சென்ட்ரல் கவர்ன்மெண்டார் (சாமான்களை) ஓரிடமிருந்து மற்றொரு இடம்கொண்டு போகவேண்டியதற்கான வசதி, சுரங்கங்கள் வேலைசெய்வது, கப்பல்கள் கட்டுவதும், இரும்பு முதலிய சுரங்கங்கள் எடுப்பதும் ஆகிய தொழில்களை நிர்வகிப்பார்கள். 100-வருஷங்களுக்கு முன் பிரஜாபத்திய கூட்டுத்தொழிலைப்பற்றியும் முனிசிபாலிடிகளைப் பற்றியும் கனக்கூட காணவில்லை. ஆகையால் வருகிற 100-வருஷங்களில் கூட்டுறவுச்சங்கம், முனிசிபாலிடி இவைகளைவிட மேலான ஸ்தாபனங்களெல்லாம் ஏற்படும். கூட்டுறவு முறையில் நாம் அடையும் பெரியலாபம் ஈகாவான சுதந்தரம்தான். சில கூட்டுத்தொழிலினர் ஈவு (dividend)த் தொகையை மாத்திரம் கவனிக்கிறார்கள். சில கமிட்டி மெம்பர்கள் ட்ரேட் யூனியனை விருத்திசெய்வதை கவனிக்காமல் குறைந்த கூலிகொடுக்கவும், நாளைக்கு 8-மணி நேரம் வேலை வாங்கவும் என்ன வழி என்று தேடுகிறார்கள்.

## அபெர்டீனில் கூட்டுறவு மஹாசபை.

பிரிட்டிஷ் கோவாபரேடிவ் காங்கிரஸின் 45-வது வருஷாந்திர மஹாசபை 1913 ஞு மேமீ 12 ந்தேதி ம்யூஸிக் ஹால் அபெர்டீனில் கூடிற்று. அந்த மஹாசபையில், மற்ற சங்கங்களைப்போல் ப்ராவிடெண்ட் அண்ட் ப்ரெண்ட்லி ஸொஸைடிகளின் (Provident and Friendly Societies Act) ஆக்டின்படியில்லாமல் கம்பெனி ஆக்டின்படி ரிஜிஸ்டராயுள்ள ஒரு விசேஷ சங்கத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டது. நார்தெர்ண் கம்பெனி (Northern Company) என்று சொல்லப்பட்ட இச்சங்கம் தற்காலம் 17,911 ஷேர்தார்களையும், 152,961 பவுன் தொழில் முதலையும் உடையதாயிருக்கிறது. சமீபத்தில் சென்ற வருஷத்தில் இச்சங்கத்திற்கு 120, 716 பவுன் லாபம் கிடைத்தது. இதன் வியாபாரமெல்லாம் ரொக்க வியாபாரம்தான். இதில் 1,300 பேர் சிப்பந்திகள் இருக்கிறார்கள். இதற்கு சொந்தமாக 100 கடைகளிருக்கின்றன. இதன் முக்கிய விசேஷமொன்று என்னவென்றால் இது ஸ்தாபிக்கப்பட்டு சென்ற 62 வருஷகாலமாக ஒரு தடவையாகிலும் கோர்ட்டுக்குப்போக நேரவில்லை என்பதுதான். இப்பேர்ப்பட்ட கூட்டுறவில் நிரம்ப ஊக்கமுள்ள இடத்தில் மஹாசபை கூடியது நிரம்ப விசேஷமே. 1911ம் ஞுத்தில் உற்பத்திச் சங்கங்களும் பிரிவினைச் சங்கங்களும் சேர்ந்து 1,561 இருக்க, 1912ம் ஞுத்தில் ஷை சங்கங்களின் சங்கியை 1520க்குக் குறைந்துவிட்டதாக சென்ட்ரல் போர்டின் ரிபோர்ட்டால் தெரியவருகிறது. இருந்தபோதிலும், மெம்பர்



கள், ஷேர்கள் (பங்குகள்). வியாபாரம் முதலியவற்றின் பட்டியை நோக்கும்போது அவைகள் மேன்மேலும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. பிரிவினைச் சங்கங்களின் சங்கியை 1,407 லிருந்து 133 க்குக் குறைந்துவிட்டது. ஆனால் இதோடு சேர்ந்த மற்ற அம்சங்களெல்லாம் நிரம்ப சீர்திருத்தத்தை யடைந்திருப்பதாகக் காணப்படுகிறது; விற்பனையின் மொத்தம் 40-லக்ஷம் பவுனுக்கு அதிகரித்திருக்கிறது. சங்கங்களெல்லாவற்றிற்கும் பிரதிநிதியாயுள்ள இந்த மஹாசபைக்கு 1,500 டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள்; பின்லண்ட் (Finland), ப்ரான்ஸ் (France), ஜெர்மனி (Germany), ஸ்வீடன் (Sweden), முதலிய தேசங்களிலிருந்து கூட்டுமுறைக்குச் சம்பந்தமான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். இன்டர் நாஷனல் அலயன்ஸ் (International Alliance), ட்ரேட் யூனியன் காங்கிரஸ் (Trades Union Congress), நாஷனல் யூனியன் ஆப் டீச்சர்ஸ் (National Union of Teachers), ஆகிய இச்சங்கத்தாராலும் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டிருந்தார்கள். வாழ்நாள் முழுவதும் இக்கூட்டுமுறையின் தொழிலிலேயே ஊழியஞ்செய்துள்ள கூட்டுத்தொழிலினராகிய மிஸ்டர் ஜேம்ஸ் டீன்ஸ் (Mr. James Deans of Kilmarnack) என்பவர் இம்மஹா சபையின் அக்கிராசனத்தை வகித்தார். மிஸ்டர் ஜேம்ஸ் டீன்ஸின் பிரசங்கம் மிக்க அறிவு புகட்டக் கூடியதாயும், ஒப்பத்தக்கதாயுமிருந்தது. இம்முறையின் வியாபார விஷயத்தில் மனோபாவமென்பதே யில்லாமல் மறைந்துவிட்டால், கூட்டுத்தொழிலின் ரூபங்களாகிய கைத்தொழில் ஏற்பாடு, ஆசாரத்திருத்த ஏற்பாடு ஆகிய இவைகள் சீக்கிரத்தில் முடிவுக்கு வந்துவிடும். பிரசிடெண்டின் சொல்படி நிர்வாக சபையாரின் உத்தியோக காலத்தின் அநித்தியம் ஒரு பெருங்குறை. கமிட்டியின் மெம்பர்களை அடிக்கடி மாற்றுவதால் வேலையில் அனுபோக முள்ளவர்களெல்லாம் எடுபட்டுப் போய் சங்கத்தின் நடவடிக்கை முழுவதும் சாஸ்வத உத்தியோகஸ்தர்களின் கையில் நின்று விடுகிறது. இந்தப் பிரகாரம் செய்வதால் நிர்வாக சபையாரின் சாமர்த்தியம் குறைந்து விடுகிறது. இதனால் கூட்டு முறையின் அபிவிருத்திக்கே ஒரு அபாயம் உண்டாகிறது. மற்றொரு பெருங்குறை என்ன வென்றால் வியாபாரத்தில் கடன் கொடுத்தல். ரொக்கவியாபாரம் செய்யாமல் கடனுக்கு வியாபாரம் செய்ய ஆரம்பித்தல் நாளா வட்டத்தில் இது கூட்டுமுறையின் ஜீவனையே அபகரித்து விடும். மூன்றாவது குறை என்ன வென்றால் சங்கங்கள் ஒன்றின்மேல் ஒன்று சார்ந்திருத்தலும், சங்கங்களுக்குள் ஒன்றுக் கொன்று போட்டி போடுவதும்தான்.

பிறகு மிஸ்டர் டீன்ஸ் தற்காலத்தில் வைசலாகாமலுள்ள சில பிரசினைகளைப்பற்றிப்பேசினார். தேசத்தின் மொத்த உற்பத்தியை நோக்கும்போது கூட்டுமுறையில் உண்டாகும் உற்பத்தியின் அளவு மிகவும் சிறிதென்று அவர் அபிப்பிராயப்பட்டார். தவிர, மொத்தவிற்பனைச்சங்கங்கள், ஸ்வதேச சம்பந்தமான உற்பத்திகளை கூட்டுறவில் நடத்த வேண்டுமென்றும், தனித்தனி உள்ள உற்பத்திச் சங்கங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து தேசத்திற்குரிய ஒரு சங்கமாகச் செய்ய வேண்டு மென்றும் பிரசிடெண்டு வற்புறுத்தினார். இது தவிர, கூட்டுமுறையானது மற்ற விஷயங்களோடு தாராளமாய்க் கலக்கவேண்டுமென்று கருதினார். இதைப்பற்றி சபையில் கடைசியில் வெகு மும்முரமாய் விவாதமுண்டாயிற்று. கல்வி விஷயத்தில் அபிவிருத்தி வெகுவாயில்லை என்று தெரிந்து கொண்டு மஹாசபையார் ஒவ்வொரு சங்கத்தையும் சென்ட்ரல் எடுகேஷன் கமிட்டியாரால் (Central Education Committee) தயாரித்திருக்கும் கல்வி விஷயமான விவரங்களடங்கிய பிரகடனையை, ஜனங்களை கூட்டுத்தொழிலில் மெம்பர்களாக்கவும், மெம்பர்களை கூட்டு முறை சித்தாந்தங்களில் பழக்குவதற்காக வித்யாசாலைகள் ஏற்படுத்தவும், அனுசரிக்க வேண்டுமென்று மாகாசபை கேட்டுக் கொள்

ளுகிறது. கூட்டுறவு போதனைக்கும், உற்சாகத்திற்கும் இருப்பிடமாயுள்ள ஹோலியோக் ஹௌஸின் பிரயோசனத்தைப்பற்றி நன்றாய் வெளியிட வேண்டுமென்று மஹாசபையார் சென்ட்ரல் எடுகேஷன் கமிட்டியை தூண்டினார்கள். கூட்டு முறையின் உற்பத்திப்பிரிவை நன்றாய் அபிவிருத்தி செய்ய வேண்டு மென்கிற அநேக கூட்டத் தொழிலினர்களின் அபிப்பிராயத்தை மேற்கொண்டு எல்லாவித உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களையும் மேன் மேலும் வளரச் செய்ய தருந்தகாலம் கிட்டியிருக்கிறது என்று சபையார் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். விடா முயர்ச்சியாலும் ஒற்றுமையாலும் ஐக்கிய இயக்கத்தி லுள்ள சீர்திருத்திய வேலைக்காரர் கூட்டங்களுக்குள் அந்நியோந்நியத்தை உண்டுபண்ணினால் பிற்காலத்தில் கூலி வேலை செய்பவர்களுக்கு க்ஷேமமுண்டாக்கலாம் என்று ஒரு தீர்மானம் பிரேரணை செய்யப்பட்டது. இந்தத் தீர்மானத்தைப்பற்றி பெரும் விவாத முண்டாயிற்று. இப்படிச் செய்வதால் ராஜாங்க லேபர்பார்ட்டி (ஊழியக்காரர் காக்ஷி) யோடு சேர்ந்தார்போல் ஆகுமென்றும் அதனால் கூட்டு முறைக்கே ஹானி எற்படு மென்று சில ஆக்ஷேபணைகள் செய்யப்பட்டன. ஆதலால் இத்தீர்மானம் ட்ரேட்யூனியன் முதலிய சங்கங்களோடு ஒற்றுமையாய் வேலை செய்யலா மென்றும், ராஜாங்கக்கக்ஷியோடு யாதொரு விதமான சம்பந்தமும் கூட தென்றும், சிறிது சீர்திருத்தப்பட்டு கடைசியில் நிறை வேற்றப்பட்டது.

---

# சென்னை ஐக்கிய சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் ஆபீசு.

---

மதராஸ், 1913-ம் வரு மார்ச்சு மீ 8உ.

ஸர்க்புலர், ஆர். ஓ. ஸி. நெ. 5094/12.

## I. கிராம ஐக்கியச் சங்கங்களை இன்ஸ்பேக்டர்கள் பரிசோதனை செய்வதைப்பற்றி.

1. இன்ஸ்பெக்டர்கள் சங்கங்களின் கணக்குக் காரியங்களைப் பார்வையிட்டுவர பரபரப்புடன் போகும் வழக்கத்தை விட்டுவிட வேண்டும். ஒவ்வொரு சங்கமும் தான் செய்யும் வேலையில் உள்ளபடி எவ்வளவு விருத்தியடைந் திருக்கிற தென்பதை நிச்சயிக்க, இன்ஸ் பெக்டர்கள், சங்கத்தினுடைய கணக்கு புத்தகங்களிலும், இலக்கங்களிலும், ஆதாவு சீட்டுகளிலும் (வவுச்சர்களிலும்) வெருமையாய் புள்ளிகுத்திவிட்டு வந்து விட்டால் போதாது. இன்ஸ்பெக்டர்கள் சங்கங்களைப் பார்வையிடப் போகும் போதெல்லாம், மெம்பர்கள் சங்கத்தில் பெற்றுக்கொண்ட கடன்களுக்காக சங்கத்திற்கு எழுதிக்கொடுத்திருக்கும் கடன் பத்திரங்கள் யாவையும் பரிசோதனைச்செய்து சங்கத்தின் கணக்குகளை முற்றிலும் நுட்பமாய் ஆராய்ச்சி செய்துவரவேண்டும். இதுவு மன்றி மெம்பர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டிய வட்டி, அசல், அசலின் பொருட்டு செலுத்தப்படும் ஒரு பாகம், இவை முதலிய தொகைகளைச் சங்கம் காலதாமத மின்றி வசூல் செய்யச் சரியான நடவடிக்கைகள் எடுத்து வருகிறதா வென்பதையும் கவனிக்கவேண்டும்.



2 இன்ஸ்பெக்டர்கள் தங்கள் பாரிப்பிலிருக்கும் ஒவ்வொரு சங்கத்தையும் குறைந்தது மூன்று அல்லது நான்கு மாதங்களுக் கொருவிசையாவது பரிசோதனைச் செய்யக்கூடிய வண்ணம் தங்களுடைய பயணச் சுற்றுகளை (touring) கிரமப்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் தங்கள் கெடில்தலத்தில் (headquarters) தங்கும் போதெல்லாம் கெடில்தலத்திற்கு (எட்குவார்டர்ஸ்) ஐந்து மைல் விஸ்தாரத்திற்குள்ளிருக்கும் சங்கங்களைப் பரிசோதனைச் செய்துவரவேண்டும். ஐக்கியச் சங்க ரெஜிஸ்ட்ரார் ஆபீசைச் சேர்ந்த பிரிவு ஆபீசுகளில் இன்ஸ்பெக்டர்கள் அனுப்புவிக்கும் பயணப் பிரசித்தப்பத்திரிகை, தினக்கணக்கு (டைரி) பயணப்படி, கணக்குசீட்டு, இவையெல்லாம் பரிசோதனைச் செய்யப்பட்டு வரவேண்டும். பயணப் பிரசித்தப் பத்திரிகை ஒப்புக்கொள்ளத் தக்கதாயும், யோக்கியமானதாயும் இருக்கவேண்டுவது மன்றி அதில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் இன்ஸ்பெக்டர்கள் நடந்து கொள்ளாவிட்டாலும், தங்களுக்கு அனுகூலமான தாங்கள் இஷ்டப்பட்ட சில இடங்களுக்கு அடிக்கடி அவர்கள் பிரயாணஞ் செய்திருந்தாலும், அவர்களால் அனுப்பப்பட்ட பயணப்படிக் கணக்குச்சீட்டு ஒத்துக் கொள்ளப்படமாட்டாது. நிர்வாக சக்தி குறைந்த பஞ்சாயத்தை வகித்திருக்கும் சங்கங்களையும் அபகீர்த்தி யடைந்திருக்கும் சங்கங்களையும் அதிக அடிக்கடி பார்வையிட்டுவர இன்ஸ்பெக்டர்கள் வகை எற்படுத்திக் கொள்ளவேண்டும். சங்கத்தை நிர்வகிக்கக்கூடிய சரியான ஆட்களை உடைத்தாயிருக்கும் நல்ல சங்கங்களை இன்ஸ்பெக்டர்கள் ஆறுமாதத்திற் கொருமுறைமாத்திரம் பார்வையிட்டுவந்தால் போதுமானது. இன்ஸ்பெக்டர்கள் செய்யும் பரிசோதனை தீர்க்கமானதா யிருக்கவேண்டியதும் தவிர அவர்கள் அனுப்புவிக்கும் ஒவ்வொரு இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டிலும் பின்வரும் விஷயங்களைப்பற்றி விவரங்கண்டிருக்க வேண்டும்.

(1) சங்கத்திற்கு அதிக கடன்தொகை எதாவது கொடுக்கப்பட வேண்டியிருக்கிறதா? அப்படி கொடுக்கப்படவேண்டியிருந்தால் அக்கடன் என்ன காரணங்களுக்காக கொடுக்கப்படவேண்டியிருக்கிறது. பழயக்கடன்கள் தீர்ப்பதற்காக கொடுக்கப்படவேண்டிய தொகையையும், குறுகிய காலத்தவணையுடைய கடன்களுக்காக கொடுக்கப்பட வேண்டிய தொகையையும், குறிப்பிடவேண்டும்.

(2) யாதாமொரு சங்கம் ஒரேமனிதனால் நிர்வகிக்கப்பட்டுவரும் ஸ்தாபனமாயிருப்பதால் அச்சங்கத்தின் வேலாதேவிகளை அளவுபடுத்த வேண்டியிருக்கிறதா?

(3) சங்கத்தை நிர்வகிக்கச் சரியானபேர்களில்லாததால் மெம்பர்களுக்குச் சங்கம் புதிய கடன்கள் கொடுக்காதபடி செய்தும், அச்சங்கத்திற்கு திரவியச் சகாயஞ்செய்துவரும் காரிய விசாரணை ஸ்தாபனத்திலிருந்து ஷை சங்கத்திற்கு இன்னும் அதிகக்கடன்கள் சாங்க்ஷன் செய்யாமலும் அச்சங்கத்தை கலைந்துபோகச் செய்யவேண்டி யிருக்கிறதா?

(4) கடன் விண்ணப்பஞ் செய்துகொண்ட எல்லா மெம்பர்களுக்கும் அவர்களுக்குத் தேவையிருந்த தொகையளவுக்கு எம்மட்டும் சங்கத்தில் பணம் கிடைக்கக்கூடியதாயிருந்ததோ அம்மட்டும் கடன்கள் பட்வாடா செய்யப்பட்டனவா? அல்லது பஞ்சாயத்தார்களுக்குள்ளேயே பெருத்த கடன் தொகைகள் பட்வாடா செய்துக் கொள்ளப்பட்டனவா?

3. [illegible] சங்கத்தை பரிசோதனைச் செய்யப்போகிற காலத்தில் தவிர மற்ற காலங்களிலெல்லாம் இன்ஸ்பெக்டர் தன்னுடைய வருகை மெம்பர்களுக்கு

தெரிந்திருக்கும்படி, தான்பார்வையிட உத்தேசித்திருக்கும் சங்கத்திற்கு தன்னுடைய வருகையைப்பற்றி ஒருவாரத்திற்கு முன்னமேயே அறிவிக்கவேண்டும்.

4. மதராஸ் புல்லெடின் ஆவ் கோவாபரேஷன் என்னும் சென்னைக் கூட்டுறவுத் தொழில் வர்த்தமானி முதலாவது வால்யூம் 4-வது இலக்கம் 258—268-ம் பக்கங்களில் பிரசுரமாகியிருக்கும் இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டு பாரத்தில் கண்டிருக்கும் விஷயங்களின் மீது இன்ஸ்பெக்டர்கள் கவனம் செலுத்திவர வேண்டும்.

## II. சங்கங்கள் ஸ்தாபிப்பதைப்பற்றி.

5 அடியிற்கண்ட புல்லெடின்களில் பிரசுரமாகியிருக்கும் ரெஜிஸ்ட்ரார் அவர்களின் உத்தரவுகளை இன்ஸ்பெக்டர்கள் கவனித்து வரவேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வால்யூம் | I, | நம்பர் | 2, | பக்கம் | 83—86 |
| ,, | III | ,, | 3 | ,, | 274 |

கௌரவார்த்தமாய்ச் சங்கம் ஸ்தாபிப்பவர்களுக்கு அடியிற்கண்ட புல்லெடின்களில் பிரசுரமாகியிருக்கும் ரெஜிஸ்ட்ரார் அவர்களின் உத்தரவுகளையும் இன்ஸ்பெக்டர்கள் கவனித்தறிய வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வால்யூம் | III, | நம்பர் | 2, | பக்கம். | 252—254 |
| ,, | III | ,, | 3 | ,, | 275 |
| ,, | IV | ,, | 1 | | |
| ,, | II | ,, | 4 | ,, | 421—422 |

6. சங்கம் புதிதாய் ஸ்தாபிக்கப்படும்போதும், சங்கம் வேலைசெய்ய துவக்கும்போதும், சங்கம் கடன்விண்ணப்பஞ் செய்துகொள்ளும் போதும் இத்துடன் சேர்ந்திருக்கும் புதிய ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டு பாரத்தை உபயோகித்துவரவேண்டும். இந்த பாரத்தில் கண்டபடி நிலைபரமான ஒரு ரெஜிஸ்டர் ஒவ்வொரு சங்கமும் வைத்துவர வேண்டும்.

## III. கடன்கள்.

7. அடியில்கண்ட புல்லெடின்களில் முன்னமே பிரப்பித்திருக்கும் உத்தரவுகளுடன்:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வால்யூம் | I | நம்பர் | 1, | பக்கம் | 26—29. |
| ,, | I | ,, | 2 | ,, | 69—71. |
| ,, | I | ,, | 2 | ,, | 75—76, பாரா 2 |
| ,, | I | ,, | 2 | ,, | 82, பாரா 13. |
| ,, | I | ,, | 3 | ,, | 150—151, பாரா 9 ம் 11 ம். |
| ,, | III | ,, | 1 | ,, | 64—65. |

பின்வரும் உத்தரவுகள் பிறப்பிக்கப் படுகின்றன. இவ்வுத்தரவுகளின் பிரகாரமே நடந்துகொள்ள வேண்டுமென்கிற நிர்ப்பந்தமொன்றுமில்லாவிட்டாலும் பின்வரும் விஷயங்களைக் கவனித்துச் சங்கத்தின் வேலையை நடத்தி வருவதால் கூட்டுறவுத் தொழில் தானாகவே விர்த்தியடைந்து வரும்.



8. (1) விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் கடன்கள் இரண்டுவகைப் பட்டன:—

(a) குறுகிய காலத்தவணையின்பேரில் கொடுக்கப்படும் கடன்கள்:—விதை, ஆகாரப் பொருள்கள், விவசாயச் செலவுகள், ஆடுமாடுகளுக்கு தீவனம், முதலியன வாங்குவதற்காக கொடுக்கப்படும் கடன்கள் போல்வன—இம்மாதிரியான கடன்கள் மெம்பர்கள் சங்கத்தில் வாங்கியிருந்தால் எந்த விளைப்பொருள் பயிரிடுவதற்காக மேற்படி கடனை வாங்கினார்களோ அவ்விளைப்பொருளின் அறுவிடை காலத்திலாவது அல்லது இலாபகரமாய் அப்பொருளை விற்பனைச் செய்யக்கூடிய வுடனேயாவது வாங்கின கடன் முழுவதையும் மெம்பர்கள் சங்கத்திற்குத் திருப்பிச் செலுத்திவரவேண்டும். சர்க்கார் கிஸ்தி செலுத்துவதற்காக மெம்பர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களும் இத் தலைப்பின் கீழ்தான் வருகின்றன. தானியங்களைச் சரியானபடியாயும் பந்தோபஸ்தாயும் களஞ்சியம் செய்துவைக்க பஞ்சாயத்தார்களுக்கு சாமர்த்தியமிருந்தால் கடன்வாங்கின மெம்பர்கள் சங்கத்திற்கு திருப்பிக்கொடுக்க வேண்டிய தொகைக்கு பதிலாக அவர்களிடமிருந்து சில குறிப்பிட்ட தானியங்களை சங்கம் பெற்றுக்கொண்டு பெற்றுக்கொண்ட தானியத்தை கடைவிலை லாபகரமாயிருக்கும்போது விற்று, கடன் வாங்கின மெம்பர் சங்கத்திற்கு திருப்பிக் கொடுக்கவேண்டிய தொகையை விற்ற பணத்திலிருந்து எடுத்துக்கொண்டு சங்கத்தின் கணக்கு புத்தகத்தில் வரவு வைக்கலாம்.

(b) நீண்டகாலத் தவணையின்பேரில் கொடுக்கப்படும் கடன்கள்:—வீடுகட்ட, வண்டி, மாடுவாங்க இன்னும் இதைப்போன்ற அநேக வருஷங்களுக்கு உபயோககரமாயிருக்கக் கூடிய காரியங்களுக்கும், அதாவது கிணறுவெட்ட, முதலிய காரியங்களுக்கு கொடுக்கப்படும் கடன்கள் "நீண்ட காலத்தவணையின்பேரில் கொடுக்கப்படும் கடன்கள்" எனப்படும். இம்மாதிரியான கடன்களை மெம்பர்கள் திருப்பிக்கொடுக்கவேண்டிய வாய்தாகெடுவை இரண்டுமுதல் ஐந்து வருஷம் வரையில் நிர்ணயிக்கலாம். மேற்படி வாய்தா கெடுவை பஞ்சாயத்தார்கள் சாவதானத்துடன் நிர்ணயிப்பதுடன் கடன் வாங்கின மெம்பர்களை அக்கெடுவுக்குள் சரிசமானமான குறிப்பிட்ட தடவைகளில் அசலுக்காக பணம் செலுத்திவந்து கடனை அடைக்கும்படிச் செய்யவேண்டும். கடன் வாங்கினவர் முதலில் கொடுக்கப்பட்ட கெடுவுக்குள் அந்தக் காலத்திற்குண்டான வட்டியையும் அசலின் பொருட்டு செலுத்த வேண்டிய பாகத்தையும் செலுத்திவிட்டாலொழிய, அவருக்கிருக்கப் பட்ட மீதி கடனுக்கு பஞ்சாயத்தார்கள் மறுதவணை கொடுக்கக்கூடாது. ஆனால் மறுதவணையானது முதல்கெடுவைவிட ஜாஸ்தியாயிருக்கக் கூடாது.

(2) கைத்தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் கடன்கள்.—கைத்தொழிலாளிகளுக்குக் கருவி அல்லது வேலைக்கு வேண்டிய சாமான்களை வாங்கவும், முன்கடன் தீர்ப்பதற்காகவும் கடன் கொடுக்கலாம். அப்படி கொடுக்கும் கடன்களுக்கு, கடன் திருப்பிக் கொடுக்கவேண்டிய வாய்தா கெடுவை எக்காலத்திலும் ஒரு வருஷத்திற்குமேல் நிர்ணயிக்கக்கூடாது. மேலும் அந்த ஒரு வருஷத்திற்குள் கடன் வாங்கின வரையில் நான்கு அல்லது ஆறு தடவைகளில் வாங்கின கடன் முழுவதையும் சரிபாகமாய்ச் செலுத்திவரச் செய்யவேண்டும்.

(3) வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படும் கடன்கள்.—கடன் திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய வாய்தாகெடு ஒரு வருஷத்திற்கு அதிகப்படாமல், வியாபாரச் சரக்குகள் வாங்குவதற்காக வியாபாரிகளுக்குச் சங்கம் கடன் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கப்பட்ட கடனை வாய்தா தேதிக்குள் மாதமொருவிசையாவது, மூன்று மாதங்களுக்

கொருவிசையாவது சிறிதொகைகளாக அசலுக்காக பணத்தைச்செலுத்திவந்து கடனை அடைக்கும்படிச் செய்யவேண்டும்.

**(4) தினக்கூலிக்காரருக்கும் கைவேலை செய்வோருக்கும் கொடுக்கப்படும் கடன்கள்.**—ஷெ கடன்கள் சாதாரணமாய் அவர்களுடைய மாதவரும்படிக்கு நான்கு அல்லது ஐந்து மடங்குக்கு அதிகப்படக்கூடாது. மேலும் அப்படி கொடுக்கப்பட்ட கடன்தொகை முழுவதையும் மாதமொருதடவையாக பதினறு அல்லது இருபத்து நான்கு மாதங்களில் திருப்பிக் கொடுக்கும்படிச் செய்யவேண்டும். வாஸ்தவமாய் நம்பகமுள்ள யாதாமொரு மெம்பருக்கு ஷெ கடன் கொடுக்க நேரிட்டால் அக்கடனை அவர் மாதாந்தா டிபாசிட் முறைப்படி 24 அல்லது 45 தடவைகளில் திருப்பிச் செலுத்த இடங்கொடுக்க வேண்டும்.

**(5) நெசவுக்காரருக்குக் கொடுக்கப்படும் கடன்கள்**—நூல் முதலியது வாங்க நெசவுக்காரர்களுக்கு வாங்கின கடன் முழுவதையும் வாரத்திற் கொருதடவை அல்லது இரண்டு வாரத்திற் கொருதடவையில் திருப்பிச் செலுத்தப்படவேண்டு மென்னும் ஷரத்துடன் கடன் கொடுத்து வரலாம்.

9. சங்கத்தின் காரியங்களை நடத்திவருவதில் பின்வருகிற விஷயக்குறிப்புகளை பஞ்சாயத்தார்கள் கவனித்து அவைகளை பிரேரேபித்து அதாவது நிறைவேற்றி வரும்படியாய் அவர்களுக்கு அறிவிக்கப் படுகிறது.

(1) சங்கத்தில் பிரதமத்தில் கடன்வாங்க விருப்பங்கொண்ட எல்லா மெம்பர்களும் கடன் பெற்றுக்கொள்ளுகிற வரைக்கும் அல்லது கடன் வேண்டாமென்று மறுத்துவிடுகிற வரைக்கும் எந்த மெம்பரும் சங்கத்தில் இரண்டாவதுவிசை நீண்டகாலத் தவணையுடைய கடன் பெறக்கூடாது.

(2) பத்திரங்களை புதுப்பித்தோ அல்லது கணக்குச் சரிகட்டி காட்டியோ சங்கத்தின் கணக்குகளில் கடன் திருப்பிக்கொடுக்கப்பட்டதாக கணக்கெழுதவது கூடாது. ஆனால் விசேஷித்த சம்பவங்களில் பஞ்சாயத்தார்கள் சரியான நியாயங்களை எழுதிவைத்து மேற்படி விதமாய் நடத்துகொள்ளக்கூடும்.

(3) என்ன காரணத்திற்காக கடன் வாங்கப்பட்டதோ அக்காரணத்தை உத்தேசித்தும், கடன்வாங்கினவருக்கு கடனைத் திருப்பிக்கொடுக்கக்கூடிய தகுதியான காலத்தை உத்தேசித்தும், அவரால் கடன் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டிய முதல் வாய்தா கெடுவை பஞ்சாயத்தார்கள் சாவதானமாய் நிர்ணயிக்கவேண்டும். கடன் வாங்கினவர் தான் வாங்கின கடனுக்கு மறுபடியும் கெடுவுகேட்டால் சுலபமாய் அவருக்கு கெடுவு கொடுத்து விடக்கூடாது. முதல் கொடுத்த கெடுவுக்குள் கடனை திருப்பிச் செலுத்தாததற்கு கடன் வாங்கின மெம்பர் கூறும் நியாயங்களை யெல்லாம் சரிவர ஆராய்ச்சி செய்து எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களினிமித்தம் கடன் வாங்கினவருக்கு கடனை திருப்பிக்கொடுக்க முடியவில்லையென்று நிர்வாக சபையாரால் நிச்சயிக்கப்படப் பட்டாலொழிய அக்கடனுக்கு மறுதவணை கொடுக்கக்கூடாது. இதுவுமன்றி, கடன் வாங்கினவரின் அந்தஸ்து யோக்கியதா லட்சணம் முதலியன, அவருக்கு முதலில் கடன் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து கடனுக்கு அவர் மறுதவணை கொடுக்கும்படி விண்ணப்பஞ் செய்துகொண்ட தேதிவரையிலும், சிதைவுபடாமலிருக்கின்றனவா வென்பதையும் கவனிக்கவேண்டும்.



(4) அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த எல்லா நபர்களுக்கும் கொடுக்கக்கூடிய கடன் அளவு, சங்கத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு மெம்பர் கடன் பெறக்கூடிய மொத்தத் தொகைக்கு அதிகப்படக்கூடாது.

10. மகாசபையார் சம்மதமின்றியும், காரியவிசாரணைக்கூட்டம் (கவுன்ஸில் ஆவ் ஸுபர்விஷன்) உடைத்தாயிருக்கும் சங்கங்களில், காரிய விசாரணைக்கூட்டத்து மெம்பர்களின் சம்மதமின்றியும், பஞ்சாயத்தார்களுக்காவது, அவர்களுடைய (பாகம் பிரியாத உடன் பங்காளிகள், மனைவி, பாகம்பிரிந்த குமாரன், மருமகப்பிள்ளை முதலிய) நெருங்கிய பந்துக்களுக்காவது, அவர்களை அடுத்தவர்களுக்காவது அவர்களுடைய வேலைக்காரர்களுக்காவது நீண்டகாலத்தவணையுடைய கடன்கள் கொடுக்கக்கூடாது. அப்படிச் செய்துவருவதால், பஞ்சாயத்தார்களுக்குள்ளேயே பெருத்த தொகைகள் கடனாக பட்டாடாவாகிப்போவதை தடுக்கக்கூடியதன்மை இதர மெம்பர்களுக்கு ஏற்படுகிறது. மேலும் இப்படிச் செய்வதனால் சங்கத்தில் கடன்பெற தகுதியுடைய எல்லா மெம்பர்களுக்கும் சரியாய் கடனைப் பகிர்ந்துகொடுக்கமுடியும். மேற்குறித்த விஷயங்களுக்கு ஏற்க நிபந்தனைகளில் சீர்திருத்தஞ்செய்துகொள்ள சங்கங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

## IV. ஜாமீன்.

11. குறுகிய காலத்தவணையுடைய கடன்கள்.—அசையாப்பொருள் அடைமானத்தின்பேரில் கடன் கொடுக்கிறதென்றால் காலதாமதமின்றி கொடுக்கமுடியாது. ஆகையால் ஐக்கிய சங்கங்களின் வேலை கூீண தசையடையாமலிருக்க இரண்டு மெம்பர்களின் ஜவாபின்பேரில் நபர் ஜாமீன் கடன்கள் குறுகிய காலத்திற்கு கொடுத்து வரவேண்டும். மேலும் அடைமானம் வைக்க அசையாப்பொருள் ஒன்றும் இல்லாதபேர்களுக்கு ஷெ நபர் ஜாமீன்பேரில் கடன் கொடுக்கக்கூடுமே யொழிய வேறுவிதமாய் அவர்களுக்கு கடன் கொடுக்கமுடியாது. பஞ்சாயத்தார்களும் இதர மெம்பர்களும் முன் ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டு, சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரினுடைய நடவடிக்கை, கொடுக்கல் வாங்கல் முதலியன யோக்கியமுள்ளனவாயும், நாணயம் கெடாமலும் இருக்கின்றனவாவென்றும், கடன்வாங்கின மெம்பர்கள் எக்காரணத்திற்காக கடன் வாங்கினார்களோ அக்காரணத்திற்கே வாங்கின கடனை உபயோகித்துவருகிறார்களாவென்றும், கவனித்துவராவிட்டால் நபர் ஜாமீன் கடனுக்கு ஏற்பட்டிருக்கும் உத்தரவாதம் கெட்டுவிடும்.

(2) வாங்கின கடனை கெடுவுபிரகாரம் திருப்பிக்கொடுக்கும்படி பஞ்சாயத்தார்கள் மெம்பர்களை வற்புறுத்தி வரவேண்டும். கடன்வாங்கினவர் முதலில் கொடுத்த கெடுவுக்குள் அந்தக் காலத்திற்குண்டான வட்டியையும் அசலின்பொருட்டுச் செலுத்தவேண்டிய தொகையையும் செலுத்தியிருந்து ஏதோ சில அசந்தர்ப்பங்களினிமித்தம் தான் வாங்கின கடன் முழுவதையும் முதலில் கொடுத்த கெடுவுக்குள் திருப்பிக்கொடுக்கமுடியாவிட்டால் பஞ்சாயத்தார்கள் பலத்த நியாயங்களையொட்டி அக்கடனுக்கு மறுபடியும் கெடுவு கொடுக்கலாம். அப்படி மறுகெடுவு கொடுக்கும்போதெல்லாம் ஜாமீன்தாரர்களுடைய எழுத்து மூலமான சம்மதம் பெறவேண்டுவது அவசியம்.

(3) ஜாமீன்தாரர்களில் யாராவதொருவர் இறந்துவிட்டாலாவது, சங்கத்தில் மெம்பராயிருப்பதினின்றும் விலகிவிட்டாலாவது, புதிய ஜாமீன்தாரர்கள் கையெழுத்துப் போட்டு மறுபடியும் வேறொரு கடன் பத்திரம் சங்கத்திற்கு எழுதிக்கொடுக்கும்படி கடன்வாங்கின மெம்பரை பஞ்சாயத்தார்கள் கேட்கவேண்டும். கடன் வாங்கினமெம்

பர் அப்படி எழுதிக்கொடுக்கத் தவறினால் அவருடைய கடன் கணக்கை முடிவுகட்டி அவரிடமிருந்து வசூல் செய்யவேண்டிய தொகையை வசூல்செய்ய நடவடிக்கை நடத்தப்படவேண்டும். கடன் வாங்கினவரே இறந்துபோனால் அவரிடமிருந்து வசூல் செய்யவேண்டிய தொகை முழுவதையும் அவருடைய வார்சுவிடமிருந்தாவது, ஜாமீன் தார்களிடமிருந்தாவது வசூல்செய்ய தாமதமின்றி நடவடிக்கை நடத்தப்படவேண்டும்,

(4) சங்கத்தில் கடன்வாங்கும் மெம்பர் அல்லது அவருக்கு ஜாமீன்தாரர்களாயிருக்கும் மெம்பர்கள் கையெழுத்துப்போடத் தெரியாதவர்களாயிருந்தால், கடன் பத்திரத்தில் கடன் வாங்குபவருடையவும் அவருடைய ஜாமீன்தாரர்களுடையவும் பெருவிரல் காட்டுகளை எடுத்து பஞ்சாயத்து மெம்பர்களில் குறைந்தது மூன்றுபேர் கூட சாக்ஷி கையெழுத்து போடவேண்டும்.

(5) கடன் பத்திரத்தில் சாக்ஷி கையெழுத்துப் போடுகிறவர்களும் கைகாட்டுகோரர்களாயிருக்கக்கூடாது.

(6) சங்கத்தின் நிபந்தனைகளில் ஒரு மெம்பர் எவ்வளவு தொகை வரைக்கும் ஜாமீன் நிற்கலாமென்று சொல்லியிருக்கிறதோ அந்த தொகைவரைக்கும் தான் அவர் மற்றொருவருக்கு ஜாமீன் நிற்கலாம். நிபந்தனைகளில் இதைப்பற்றி ஒன்றும் சொல்லியில்லாவிட்டால் எந்த மெம்பரும் தான் சங்கத்தில் கடன் வாங்கக்கூடிய தொகைக்கு இரண்டத்தனைக்கு அதிகப்பட்டு ஜாமீன் நிற்கக்கூடாது.

(7) எந்தெந்த சங்கத்தின் நிபந்தனைகளில் ஒரு மெம்பர் ஜாமீன் நிற்கக்கூடிய அளவை நிர்ணயிக்கப்படாமலிருக்கிறதோ அந்த சங்கங்களின் விதிகளில் திருத்துப்பாடு செய்து மேலே கண்டவிதமாய் நிபந்தனை ஏற்படுத்தவேண்டும்.

(8) சொத்து ஜாபிதாவில் குறித்திருக்கும் ஒரு மெம்பரினுடைய ஆஸ்தி மொத்தத்திற்கு அதிகப்பட்டு எந்த மெம்பரும் சங்கத்திற்கு நேராகவாகிலும், ஜாமீன்தாராகவாகிலும் கடன்பட்டிருக்கக்கூடாது.

(9) ஒரு மெம்பர் நேராக தான் வாங்கும் கடனுக்கும் இதர மெம்பர்களுக்குதான் ஜாமீனாக நின்று வாங்கிக்கொடுக்கும் கடனுக்கும், சங்கத்திற்கு ஒரு மெம்பரால் சேரவேண்டிய கடன் தொகையைக் காட்டக்கூடிய ரெஜிஸ்டர் ஒன்று இப்போது ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ரெஜிஸ்டரை ஒவ்வொரு சங்கமும் வைத்து வரவேண்டும். இந்த ரெஜிஸ்டரை இன்ஸ்பெக்டர்கள் ஜாக்கிரதையாய் பரிசோதனைச் செய்து வரவேண்டும்.

## V. நீண்ட காலத்தவணையின்பேரில் கொடுக்கப்படும் கடன்கள்.

12. சாதாரணமாய், வெறும் நபர் ஜாமீன்பேரில் மாத்திரம் நீண்டக்காலத்தவணையுடைய கடன்கள் கொடுக்கக்கூடாது. ஆனால் சமயாசமயங்களில் பெரிய காணி பூமியுடையவர்களுக்கு, அவர்களுடைய கடன் இருக்குந்திராணியைப்பற்றி யாதொரு சந்தேகமுமில்லாவிட்டால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு நபர் ஜாமீன்கடன் நீண்ட காலத்தவணையின்பேரில் கொடுக்கலாம். சுவல்ப காணி பூமியுடைய சாமான்ய விலக்குத்தகைகாரருக்கு நீண்டகாலக் கடன் கொடுக்க நேரிட்டால், அவர்களுக்கிருக்கும் அசையாப் பொருள்களை முதல் குதுவையாக சங்கத்தில் அடைமானம் வைக்கும்படி வற்புறுத்தி அப்பேர்ப்பட்ட அடைமானத்தின்பேரில் சங்கம் கடன் கொடுப்பது பத்தோபஸ்தாயிருக்கும். இந்த விதியை அனுசரிப்பதால் கிராமச் சங்கங்களுக்கு திரவியசகாயஞ் செய்துவரும் சென்ட்ரல் பாங்குகளுக்கு பாதுகாப்பு ஏற்படுகிறது.



சங்கத்தின் மெம்பர்கள் நபர் ஜாமீன்பேரில் சங்கம் கொடுக்கும் எல்லா நீண்ட காலக் கடன்களுக்கும் ஜாமீன் நிற்பதால், அவர்கள் யார் யாருக்கு ஜாமீன் நின்றார்களோ அவர்களுடைய யோக்கியதை நடவடிக்கை முதலானவைகளை எப்போதும் கவனித்து வர அவர்களால் சாத்தியப்படாதாகையால் அதனால் அவர்களுக்கு நேரிடக்கூடிய கஷ்டத்தை ஷை ஏற்பாடு அப்பேர்ப்பட்ட கஷ்டமொன்றும் வரவொட்டாமல் தடுக்கக்கூடியதாயிருக்கிறது.

நபர் ஜாமீன்பேரில் நீண்ட காலக் கடன் கொடுப்பதால், அக்கடனில் சம்மந்தப்பட்ட நபர்கள் தங்களுக்கிருக்கும் சொத்துக்களை வெளியில் வட்டி வியாபாரிகளிடம் கொதுவை வைத்து இன்னம் அதிகக் கடன்பெற அவர்களுக்கு ஆசையை விளைவித்து அவர்களைச் சோதனைக்குள்ளாக்குகிறது. இந்த நபர்களுக்கு வட்டி வியாபாரிகள் நபர் ஜாமீன்பேரில் கடன் கொடுக்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்களுடைய நபர் நாணயம் முன்னமேயே சங்கத்தில் ஜாமீன் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் தங்களுக்கிருக்கும் அசையாப் பொருள்களைத்தான் அடைமானம்வைத்து தீரவேண்டியிருக்கிறது. முன் சொல்லிவந்த விஷயங்களை அனுசரித்துவந்தால் கிராம ஐக்கியச் சங்கங்களில் சேர்ந்த மெம்பர்களை மீண்டும் வட்டி வியாபாரிகளிடம் கடன்படாமலிருக்கச் செய்யக்கூடும்.

18 அசையாப்பொருள் அடைமானத்தின்பேரில் கடன் கொடுக்கும்போதெல்லாம் அடைமானம் வைக்கப்படும் பொருளை விற்பனைக்கு கொண்டுவர நேரிட்டால், கடன் கொடுக்கப்போகும் தொகை அளவுக்கு விலை எடுபடுமாவென்பதை கவனித்து அப்படி விலை எடுபடக்கூடிய அசையாப் பொருள்களின்பேரிலேயே சங்கம் கடன் கொடுக்கவேண்டும். கடன் வாங்குபவருக்கு வரும்படிச் சம்பாதிக்கக்கூடியத் திறமையிருந்தாலொழிய அவருக்கு வீடு அடைமானக் கடன் கொடுக்கலாகாது. இதை அனுசரித்து கடனை திருப்பிக் கொடுக்கவேண்டிய வாய்தா கெடுவுக்குள் கடன் வாங்குபவரால் எவ்வளவுத்தொகை திருப்பிக்கொடுக்கச் சக்தியிருக்குமோ அதற்கு தக்கபடி அவருக்கு கொடுக்கக்கூடிய கடன் தொகையை நிர்ணயிக்கவேண்டும். வாஸ்தவத்தில், ஒரு மெம்பருக்கு கொடுக்கவிருக்கும் கடனை வசூல் செய்வதைப்பற்றிச் சமுசயமுண்டானாலும் அல்லது வசூல் செய்வது அசாத்தியமென்று ஏற்பட்டாலும் அந்த மெம்பருக்கு கடன் கொடுக்கலாகாது.

## VI, பழயக்கடன் தீர்ப்பதற்காக கொடுக்கப்படும் கடன்களை பஞ்சாயத்தார்கள் ஒழுங்கு படுத்தவேண்டியதைப்பற்றி.

14. மூலதனத்தைச் சதா சுழன்றுக்கொண்டிருக்கச்செய்வதும் அதாவது கைமாறிக் கொண்டிருக்கச்செய்வதும், பணத்தை உத்தமமான வழியில் உபயோகித்து அதற்குச் சரியான பிரதி பிரயோசனமடையும்படி ஜனங்களுக்கு கற்பித்து அவர்களிடத்தில் பணஞ்சேகரிக்கும் தத்துவம் அதிகரிக்கப்படச் செய்வதும், ஐக்கியச்சங்கங்களில் நடந்தேறிவரும் பணம் லேவாதேவியின் (அதாவது கூட்டுத்தொழில் முறையாய் நடந்தேறிவரும் பாங்கின் வேலையின்) முக்கிய நோக்கமென்பதை பஞ்சாயத்தார்களும் இதர மெம்பர்களும் கடைப்பிடிக்கவேண்டும். முற்றிலும் உற்பத்தி உண்டாக்கத்தக்க கிரியைகளில் கடன்கள் உபயோகப் படுத்தப்பட்டாலன்றி இந்நோக்கம் சித்திபெறாது. கடன் வாங்கினவர்தான் வாங்கியக் கடனை மேற்சொன்ன கிரியைகளில் செலவு செய்தால் அதனுடையவும் லாபத்தைக்கொண்டு வாங்கினக்

கடனை திருப்பிக்கொடுத்துவிட முடியும். மேற்கண்டவிதமாய் கடன் வாங்கினதால், கடன் வாங்கினவரின் நிலைமை கடன் வாங்குவதற்கு முந்தியிருந்ததைவிட அதிக நன்றாய் சீர்பட்டு நிற்கும்.

15. சங்கத்தில் சேர்ந்த யாதாமொரு மெம்பருக்குமுன் கடன்கள் இருந்தால், தான் மிச்சம் பிடிக்கக்கூடிய பணத்தை சங்கத்தில் சேகரித்துவைத்து தனக்கிருக்கும் கடனை நாளாவட்டத்தில் தீர்த்துவிடக்கூடும். கிராமபாங்குகளில் அகப்படக்கூடிய பணத்தொகையில் பிரதான பாகத்தை முன்கடன் தீர்ப்பதற்காக மெம்பர்களுக்கு கடன் கொடுப்பது இடையூறு விளைவிக்கக் கூடியதாயிருக்கிறது. இந்த ஏற்பாடு எங்கே வியாபித்திருக்கிறதோ அங்கே பணமும் வேறுமையாய்க் கட்டுப்பட்டு தூங்கிக்கொண்டிருக்கும். அச்சங்கமும் பணம் லேவாதேவிச் செய்யும் சாவுக்கார் கடை மாதிரியாகிவிடும். ஆனால் சாவுக்கார் வட்டியைவிட இச்சங்கம் வசூலிக்கும் வட்டி குறைவுபட்டிருக்கும். ஐக்கிய சங்கத்தின் மெம்பர்களை சங்கத்திற்கு வெளியில் கடன்பெறவிடலாகாது. சங்கத்தில் சேர்ந்தபிறகும் அவர்கள் வெளிக்கடன்கள் கொள்ளக்கூடாது. ஆகையால் அவர்கள் வெளிக்கடன் படாவண்ணம் அவர்களுக்கு நியாயமாய் தேவையாயிருக்கும் பணத்தை சங்கமே சவதரித்து கொடுப்பது தகுதியாயிருக்கும்.

இந்நோக்கம் சித்திபெற வேண்டுமானால், சாவுக்காரிடத்தில் கடன்பெற்ற யாதாமொரு மெம்பர் சங்கத்திலிருந்து, சாவுக்கார் தான் விதித்த வட்டி வீதத்தை குறைக்க மாட்டேன் என்று சொல்வதினாலோ அல்லது வாங்கின கடனைச் சிலாசிலவாய் திருப்பிக் கொடுக்கும்போது அதை பெற்றுக்கொள்ளமாட்டேன் என்று சாவுக்கார் தடுக்கிறதினாலோ, அவர் சாவுக்காரியின் கையினின்றும் விலகிவிட பிரியப்பட்டால் அவருக்கிருக்கும் கடனை சங்கம் தன்பேரில் மாற்றிக்கொண்டு லேவாதேவிக்காரனுக்கு, பணம் அகப்படக் கூடியபோதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் ஷை கடனைச் சங்கமே நாளடைவில் அடைத்துவர உடன்படவேண்டும். இம்மாதிரி தனக்கிருக்கும் கடனை சங்கத்திற்கு பரித்தியாகம் செய்துகொடுத்த ஒரு மெம்பர்தான் சங்கத்தில் நேராய் கடன்வாங்கியிருந்தால் எப்படி அசலில் 10-ல் ஒரு பாகமோ; 5-ல் ஒரு பாகமோ குறிப்பிட்ட தேதிகளில் செலுத்திவர வேண்டுமோ அது பிரகாரமே இப்போதும் சங்கம் ஏற்றுக்கொண்ட கடனுக்காக அசலில் 10-ல் ஒரு பாகமோ 5-ல் ஒரு பாகமோ சங்கத்தின் நிபந்தனைகளில் சொல்லியபடி செலுத்திவருவதோடு, தாய்ச் சீட்டு பத்திரத்தில் (ஒரிஜினல் பாண்டு) கண்டிருக்கும் வட்டி வீதப்பிரகாரம் வட்டியையும் சங்கத்திற்குச் செலுத்திவரவேண்டும். மேற்சொன்னபடி அசலுக்காக மெம்பர் சங்கத்தில் கட்டிவரும் தொகையை அப்போதைக்கப்போது வட்டிவியாபாரி சங்கத்தினின்று பெற்றுக்கொள்ள பிரியப்பட்டால் அத்தொகையையும் மெம்பர் கட்டிவரும் வட்டியையும் சங்கம் அப்போதைக்கப்போது அவ்வட்டி வியாபாரிக்குச் செலுத்திக்கொண்டு வரவேண்டும். ஷை அசலுக்காக சங்கத்தில் செலுத்தப்பட்டுவரும் தொகையை வட்டி வியாபாரி பெற்றுக் கொள்ள சம்மதிக்காவிட்டால் சங்கத்திலேயே அத்தொகையை கடன் வாங்கினவரின் கணக்கில் வரவுவைத்து வந்த லேவாதேவிக்காரனுக்கு கொடுக்கவேண்டிய மொத்தத் தொகைச் சேர்ந்த உடனாவது அல்லது சங்கத்தில் வேறு விதத்தில் போதுமான பணம் அகப்படக்கூடுமானால் அதற்கு முன்னமேயாவது வட்டி வியாபாரியினிடம் சங்கம் ஷை கடனை பற்றற பைசல் செய்துவிடவேண்டும்.

இது முடிந்த உடன் ஷை மெம்பர் சங்கத்திற்கு நேராய் கடன்காரராகிறபடியால், அக்காலத்திலிருந்து சங்கத்தின் நிபந்தனைகளில் விதித்திருக்கும் வட்டி வீதப்பிரகாரம் அவரிடமிருந்து வட்டி வசூல்செய்து வரவேண்டும். அது வரையிலும் சங்கமானது



கடன்பட்டிருக்கும் மெம்பரிடமிருந்து அசலுக்காக அவர் செலுத்திவரும் பணத்தைப் பெற்று லேவாதேவிக்காரனுக்குச் செலுத்திவரும் முகாரியாய் (ஏஜண்டு) இருந்துவரும். கடன்வாங்கின மெம்பர் நிதார்த்தவழியாயும் ஒழுங்குள்ளவராயுமிருந்தால் மேற்கண்ட கட்டளையினால் எல்லாம் லாபமடைவாரே யொழிய நஷ்டமொன்றும் அடையமாட்டார். ஏனெனில் அவர் எவ்வளவுக்கெவ்வளவு ஒழுங்குள்ளவராயிருக்கிறாரோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரத்தில், அவருக்கிருக்கப்பட்ட பழைய கடனை தீர்த்துவிட சங்கத்திற்கு தூண்டுகோல் ஏற்படும். எப்படியாகிலும் அவருடைய நிலங்களை சீர்திருத்தம் செய்வதற்காகவாவது அவருக்குச் சங்கம் கடன் கொடுக்கும். அதனால் அவர் அசலுக்காக செலுத்திவரவேண்டிய பணத்தை அதிக சுலபமாய் செலுத்திவர முகாந்திரம் ஏற்படும்.

16. ஒரு மெம்பர் வட்டி வியாபாரிக்கு தான் வாங்கியிருக்கும் கடன் அசலுக்காக பணம் செலுத்திவருவதற்கு பஞ்சாயத்தார்கள் காரியதுரந்தரர்களாய் இருக்கச் சம்மதிப்பதற்குமுன் ஒவ்வொரு கேசைப்பற்றியும் ஜாக்கிரதையாய் ஆராய்ச்சிசெய்து அதிகரிக்கப்பட்ட லாபத்தைக்கொண்டு 5-அல்லது 10-வருஷகாலத்திற்குள் மெம்பருக்கிருக்கும் முன் கடன் முழுவதையும் அடைத்துவிட முடியுமாவென்பதை கவனிக்கவேண்டும். ஷை கிரமப்படி பஞ்சாயத்தார்கள் செய்யக்கூடாவிட்டால் கடன் பெற்றிருக்கும் மெம்பரை தனக்கிருக்கும் சொத்தில் ஒரு பாகத்தை விற்று அவருடைய கடனை அடைத்துவிடும்படி புத்திசொல்ல வேண்டுமேதவிர அவர் செலுத்திவரும் அசல் தொகையை லேவாதேவிக்காரனுக்கு செலுத்திவர அவர்கள் காரியதுரந்தரர்களாய் நிற்கக்கூடாது. இக்கமணத்திற்கிணங்கி நடப்பதால் வட்டி வியாபாரிகளிடம் கடன் வாங்கியிருக்கும் மெம்பர்களுக்கு அனுகூலம் செய்விக்கக் கூடியவிதமாய்ச் சங்கம் உடன்படிக்கை செய்துகொள்ள இலகுவாகும்.

17. சங்கத்திற்கு நஷ்டம் வரவொட்டாமல் பாதுகாப்பு செய்துகொண்டு அதிக வட்டி விதிக்கப்பட்டிருக்கும் மெம்பர்களுடைய முன் கடன்களை சங்கம் குறைந்த வட்டிக்கு தன் பேரில் மாற்றிக்கொள்ளுதல் தகுதியானதே. ஒவ்வொரு கேஸிலும் பின்வரும் விஷயங்களைப் பற்றிச் சரியான விசாரணைச் செய்யவேண்டும். அதாவது:—

(1) ஆதியில் அக்கடன் ஏற்பட்ட காரணம்.

(2) கடன்வாங்கின மெம்பர் முதலையும் வட்டியையும் தீர்த்துவிட இதற்குமுன் என்ன முயற்சிகள் செய்திருக்கிறார்.

(3) அக்கடனுக்கு என்ன வட்டி வீதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

(4) ஷை கடனுக்கு ஜாமீனாக அடைமானம் வைத்திருக்கும் சொத்து என்ன?

(5) பலவந்தம் பண்ணப்பட்ட விற்பனையில் அந்த சொத்து தரக்கூடிய விலை மதிப்பு.

(6) அடைமானத்தின் ஷரத்துகள்.

(7) யாரிடத்தில் அடைமானம் வைக்கப்பட்டிருக்கிறதோ அவருடைய பெயரும் விலாசமும்.

(8) கடன் வாங்கினவர் தனக்கிருக்கும் கடனை தீர்க்கும்பொருட்டு எவ்வளவு பணம் சேமிக்க சக்தியுடையவர்? கடன் தொகையை திருப்பிச்செய்யும்பொருட்டு [illegible] சங்கத்திலிருந்து எவ்வளவு பணம் கடன் வாங்கவேண்டியிருக்கிறது.

(9) அடைமானம் வைக்கப்பட்டிருக்கும் சொத்தை பலவந்தமாய் விற்பனைக்கு கொண்டுவந்தால் அச்சொத்து விலைபடக்கூடிய தொகை சங்கத்தில் கடன்பெறவேண்டியிருக்கும் தொகையைக் காட்டிலும் குறைந்தது இருமடங்கு அதிகமாயில்லாவிட்டால் கடன்வாங்கின மெம்பர் தனக்கிருக்கும் இன்னும் இதர சொத்து எதையாகிலும் மேல் ஜாமீனாக சங்கத்தில் அடைமானம் வைக்கக்கூடுமா?

(10) சங்கத்திலிருந்து வாங்கும் கடனை திருப்பிக்கொடுப்பதற்கு வேண்டிய வாய்தா கெடுவு.

18. பஞ்சாயத்தார்கள் தங்களிடமிருக்கும் சங்கத்தின் செலவிடக்கூடிய பணத்தைக் கொண்டு மெம்பர்களுக்கிருக்கும் ஒவ்வொரு முன் கடனினுடைய அவசரத்தையும், விசேஷத்தையும் முன்னிட்டு முறையே அக்கடன்களை அடைத்துவர வேண்டும்.

(1) யாதாமொரு மெம்பருக்கிருக்கும் சுவாதீனக் குதுலைக் கடனினின்று அவரை விலக்குவதால் அக்கடனை அடைக்க அவருக்கு அநிகலமான தன்மை ஏற்படும் விஷயத்தில் மற்ற கடன்களைவிட இக்கடனை பஞ்சாயத்தார்கள் முந்தி தீர்க்கவேண்டும்.

(2) அதிக வட்டிவீதம் சுமந்துகொண்டிருக்கும் கடன்கள் குறைந்த வட்டிவீதம் சுமந்துகொண்டிருக்கும் கடன்களைவிட முதன்மையாக கருதப்படவேண்டும். வட்டி வியாபாரியினிடம் ஒரு மெம்பர் பெற்றிருந்த கடனைச் சங்கம் தீர்த்துவிட்ட காலத்தும் கடன் வாங்கின மெம்பரை எச்சரிக்கையில் வைத்திருக்கும்பொருட்டு அவரிடமிருந்து, தாய்ச் சீட்டு பத்திரத்தில் குறித்திருக்கும் பழய வட்டி விகிதப்படியே வட்டி வசூல் செய்துவர வேண்டும். ஆனால் இந்த வட்டி வீதத்திற்கும் சங்கத்தின் நிபந்தனைகளில் ஏற்பட்டிருக்கும் வட்டி வீதத்திற்கும் உண்டான வித்தியாசத்தால் ஏற்பட்ட பணத்தை அம்மெம்பரின் கடன் தீருமட்டும் அவர்பேரால் டிபாசிட்டாகவாவது சேமத்திரவியமாகவாவது (Savings) சங்கத்தில் கட்டப்பட்டு வரவேண்டும்.

19. இந்த சூழ்ச்சியின்படி சங்கங்கள் வேலையை நடத்திவந்தால் மெம்பர்கள் நிச்சயமாய் சிக்கனம் கற்றுக்கொள்வதோடு, சங்கத்தின் உதவியின்றி தங்களுக்கிருக்கும் முன் கடனை அவர்கள் சிறுகச் சிறுகத் தீர்த்துவர முடியாது என்னும் விஷயத்தையும் உண்மையில் அறியக்கூடும். இதுவுமன்றி ஷை உபாயத்தினால் சங்கத்திலிருந்து மெம்பர்களுக்கு கடன் பட்வாடா செய்யப்படும் விஷயத்தில் பஞ்சாயத்தார்மீது குற்றஞ் சாட்டுவாவது அல்லது அவர்கள் ஓரபட்சமாயிருக்கிறார்களென்றாவது சமுசயம் கொள்ள இடமிராது. தனவானும் ஏழையும் சரிசமானமாய் சங்கத்தில் கடன்பெற வழி உண்டாகும். தற்காலம் சங்கங்களில் நடந்துவருகிறமாதிரி ஏழைகளை தனவந்தர்களுக்கு தாழ்ச்சியடையும்படி செய்யமுடியாது. ஆனால் ஷை சூழ்ச்சியை அனுபவத்திற்குகொண்டுவருகிறதென்றால் பஞ்சாயத்தார்கள் பொறுமையுடன் விசாரணை செய்கிறவர்களாயும், சாமர்த்திய முடையவர்களாயும், விவேகசாலிகளாயும் இருக்கவேண்டும். ஷை சூழ்ச்சியை பஞ்சாயத்தார்கள் தெரிந்தறிந்து அதை நிறைவேற்றிவர இன்ஸ்பெக்டர்கள் அவர்களுக்குச் சரியான உதவிபுரிந்து வரவேண்டும்.

## VII. ரொக்க கடன் ஏற்பாடு.

20. வருஷத்தின் எல்லா பருவங்களிலும் சங்கத்தில் சேர்ந்த விவசாயி மெம்பர்களுக்கும், இதர மெம்பர்களுக்கும் தேவையிருக்கும் கடன் தொகையை பூராவாக அவர்களுக்கு கொடுத்து உதவவேண்டும். அதற்காக வருஷம்முழுமையும் சங்கத்தில்



பணம் அகப்படக்கூடியவிதமாய் சங்கம் நிர்வகித்து வரவேண்டும். இதற்காகவேண்டி சங்கம் வாக்கூடிய கடன் பொறுப்பளவை அல்லது அதன் காணயத்தை அடியிற்கண்ட இரண்டு தலைப்பின்கீழ் பகுந்துக்கொள்ளவேண்டும்.

(1) நீண்டகாலத் தவணையின்பேரில் கடன்கொடுக்க தேவையான தொகை.

(2) குறுகியகாலத் தவணையின் பேரில் கடன்கொடுக்க தேவையான தொகை.

21. ஒவ்வொரு மெம்பருக்கும் வருஷாவருஷம் உற்பத்திசெய்யக்கூடிய காரியங்களுக்கு தேவையிருக்கும் பணம்தான் அவருக்கு வேண்டிய "ரொக்கக் கடன்" எனப்படும். இம்மாதிரி ஒவ்வொரு மெம்பருக்கும் தேவையிருக்கும் ரொக்கக் கடனை நிதானித்து மேல் பாராவில் இரண்டாவது பிரிவில் ஏற்படும் தொகையை நிர்ணயிக்கவேண்டும். இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட பிறகுமிகுதியாயிருக்கும் தொகையைத்தான் நீண்டகாலத்தவணையின் பேரில் கொடுக்கும் கடன்களுக்கு உபயோகப் படுத்தவேண்டும். வருஷாவருஷம் சங்கத்தில் ஒரு மெம்பர் பெறக்கூடிய ரொக்கக்கடன் இவ்வளவு தொகையென்று நிர்ணயிக்கப்பட்ட பின் அத்தொகை வரைக்கும் அந்த மெம்பருக்கு அவ்வருஷத்தில் எப்போது வேண்டுமானாலும் கடன் கொடுக்கலாம். சங்கத்தில் ஒரு மெம்பர் பெறக்கூடிய ரொக்கக்கடன் அளவை பஞ்சாயத்தார்கள் ஒவ்வொரு வருஷமும் புதிப்பித்துவர வேண்டும். மேற்சொன்னமாதிரி தீர்மானிக்கப்பட்ட ஒரு மெம்பரின் ரொக்கக்கடன் அளவு சங்கத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு மெம்பர் வாங்கக்கூடிய கடன் அளவுக்கு அதிகப்பட்டிருக்கக்கூடாது. கடனை திருப்பிக்கொடுக்க வேண்டிய வாய்தா கெடுவுக்கு முன்னமேயே ஒரு மெம்பர் தான் வாங்கின கடனை யாதொரு இடையூறின்றி கட்டிவிடலாம். இவ்வேற்பாட்டின்படி சங்கம் சரியாய் வேலைசெய்து வந்தால், ஒவ்வொரு மெம்பருக்கும் பிரதிவருஷம் தேவையிருக்கும் ரொக்கக்கடன் குறைந்துகொண்டேவரும். அதெப்படி யென்றால் ஒரு மெம்பர் உற்பத்தி செய்யக்கூடிய காரியங்களுக்கு சுவல்ப வட்டிக்கு சங்கத்தில் கடன்வாங்கி ஜாக்கிறதையுடன் தான் சம்பாதிக்கும் பணத்தில் மிச்சம் பிடித்து வந்தால் முன்சொன்ன பயனை அடையலாம். ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தில் ரொக்க கடன் பெறுவது போல் ஒவ்வொரு சங்கமும் அதற்கு திரவிய சகாயஞ் செய்துவரும் ஸ்தாபனத்திலிருந்து (சென்டரல் பைனான்சிங் ஏஜன்ஸியினிடமிருந்து) மேற்படி ரொக்கக்கடன் பெறலாம். அதற்காக வேண்டி ஷை திரவியச் சகாயஞ் செய்துவரும் காரியவிசாரணை ஸ்தாபனமும் ஒரு சங்கம் தனது ரொக்கக்கடன் கணக்கிலிருந்து திருப்பிச் செலுத்தும் எல்லாத் தொகையையும் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டுவதும் தவிர கடன்கொடுக்கும் ஒவ்வொரு சமயத்திலும் ரெஜிஸ்ட்ரார் உத்தரவுவேண்டியிராமல் சங்கத்தின் ரொக்கக்கடன் அளவு மொத்தத்தையும் அல்லது ஒரு பாகத்தை அடிக்கடி அவசியமானபோதெல்லாம் புதுப்பித்துக்கொள்ளவுங்கூடும்.

22. குறுகிய காலத்தவணையுடைய கடன்களுக்காக திட்டம் செய்யப்பட்ட தொகையைப் பற்றியும் நீண்ட காலத்தவணையுடைய கடன்களுக்காக திட்டம் செய்யப்பட்ட தொகையைப் பற்றியும் வேறு வேறு கணக்கு வைத்துவரவேண்டும். ரெஜிஸ்ட்ரார் அனுமதியின்றி ஒன்றோடு ஒன்றை கலக்கவாவது, தொகையை அதிகரிக்கவாவது கூடாது. இதற்காக தகுந்தமாதிரி ஒவ்வொரு சங்கமும் நிபந்தனைகள் ஏற்படுத்திக்கொள்வது பிரயோசனமாயிருக்கும். இதுவரையிலும் ரெஜிஸ்டராயிருக்கும் சங்கங்கள் தங்களுடைய தண்டப் பணத்தையெல்லாம் ரெஜிஸ்ட்ராரால் நிர்ணயிக்கப்பட்ட

தொகை சேருமட்டும் குறுகிய காலத்தவணையுடைய கடன் கணக்கில் வரவுவைத்து வந்து நாளாவட்டத்தில் ஷை ஏற்பாட்டின்படி வேலைசெய்யக்கூடும். குறுகிய காலத் தவணையுடைய கடன்கள் மெம்பர்களுக்கு தேவையில்லாதபோதெல்லாம் அத்தலையின் கீழ் வசூலித்தபணத்தை திரவிய சகாயஞ் செய்துவரும் காரியவிசாரணை ஸ்தாபனத்திற்கு (பைனான்சிங் ஏஜன்ஸி) அனுப்பிவிட வேண்டும். தேவையானபோது மறுபடியும் அப்பணத்தை ரெஜிஸ்டிராரிடமிருந்து புது உத்தரவுக்கு எதிர்பாராமல் வரவழைத்துக் கொள்ளலாம். இந்த ஏற்பாட்டின்படி சங்கங்கள் வேலைசெய்துவர அவைகளுக்கு திரவியசகாயஞ் செய்துவரும் காரிய விசாரணை ஸ்தாபனங்கள் ஒத்தாசைசெய்துவர கேட்டுக்கொள்ளப்படுகிறது. ரொக்க கடனைப்பற்றி மேலே சொல்லிவந்த வகையைப் பற்றி இன்ஸ்பெக்டர்கள் பஞ்சாயத்தார்களுக்கு விவரமாய் போதித்து அதன்படி எந்தெந்த சங்கம் வேலைசெய்யக்கூடுமோ அந்த சங்கங்களிலெல்லாம் அதைப்பற்றிய நிபந்தனைகள் ஏற்படுத்திவரவேண்டும்.

23. பிரதிவருஷமும் மெம்பர்களின் சொத்து ஜாபிதாவை புதுப்பிக்கும்போது அவர்களுக்கு கொடுக்கப்படும் ரொக்கக்கடன் அளவையும் பஞ்சாயத்தார்கள் நிர்ணயித்து வரவேண்டும். ஆனதுபற்றி இப்போது வெளிப்படுத்தியிருக்கும் மெம்பர்களின் ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டு பாரத்தில் ஒரு மெம்பருக்கு வருஷ முடிவுக்கும் ஆகும் செலவுக்கு வேண்டிய கடன் அளவை குறிப்பிட இடம் ஏற்படுத்தியிருக்கிறது.

## VIII. ரேஜிஸ்டர்களும், கணக்குகளும்.

24. மதருஸ் புல்லெடின் ஆவ்கோவாபரேஷன் என்னும் சென்னைக் கூட்டுத் தொழில் வர்த்தமானி வால்யூம் II, நெம்பர் 1, டிபார்ட்மெண்டார் உத்தரவு நெம்பர் 8ல் சங்கங்கள் இன்னின்ன ரெஜிஸ்டர்களும் கணக்குகளும் இன்னபடி வைத்துவரவேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் அவர்கள் உத்தரவு செய்திருக்கிறார். அந்த ரெஜிஸ்டர்களின் பெயர்கள் அடியில் காண்க :—

1. மினிட் புக் என்னும் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு புஸ்தகம்.
2. அட்மிஷன் புக் என்னும் பிரவேசப் பதிவு புஸ்தகம்.
3. ரொக்க கணக்கு புஸ்தகம்.
4. ரசீது புஸ்தகம்.
5. கொடுக்கப்படும் கடன் கணக்கு புஸ்தகம்.
6. வாங்கப்படும் கடன் கணக்கு புஸ்தகம்.
7. பைல் புக் (கடிதங்களை ஒட்டிவைப்பதற்கு).
8. பைல் புக் (ரசீதுகளை ஒட்டிவைப்பதற்கு).
9. தணிக்கை உத்தரவு புஸ்தகம்.
10. பங்கு விண்ணப்ப ரெஜிஸ்டர்.
11. கடன் விண்ணப்ப ரெஜிஸ்டர்.
12. சொத்து ஜாபிதா ரெஜிஸ்டர்.
13. கடிதப் புஸ்தகம் (ஆபீஸ் நகல்).

ஒவ்வொரு மெம்பரின் ஆஸ்தியையும் பொறுப்பையும் எளிதில் தெரிவிக்கக் கூடிய விதமாயும், ரொக்கக்கடன் ஏற்பாட்டின்கீழ் ஒவ்வொரு மெம்பருக்கும் கொடுக்கக் கூடிய தொகையை எளிதில் தீர்மானிக்கக்கூடிய விதமாயும், 12—வது நெம்பர் ரெஜிஸ்டரின் பாரத்தை திருத்தஞ் செய்திருக்கிறது. திருத்தஞ் செய்திருக்கும் இந்த பாரம் அச்சடிக்கப்பட்டு புத்தகங் கட்டப்பட்டு பிரசித்திபெற்ற அச்சியந்திரர்களால் சங்கங்களுக்கு சப்ளை செய்யப்படும்.



25. மெம்பர்களிடமிருந்து வசூலாகாமல் பாக்கியாயிருக்கிற தொகையைக் காட்டும் ரேஜிஸ்டர்.—இப்போது ஏற்படுத்தியிருக்கும் பாரம் அச்சடிக்கப்பட்டு அச்சுயந்திரர்களிடம் எப்போதும் கையிருப்பிலிருக்கும். சங்கங்கள் தங்களுக்குபோதுமான பாரங்களை அச்சுயந்திரர்களுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

26. சங்கத்தின் வரவு செலவுக் கணக்கை காட்டும் ரேஜிஸ்டர்.—இந்த ரெஜிஸ்டரில் அன்றுடைய கணக்கை அன்றுடம் பதிவுசெய்து ஒவ்வொரு மாத முடிந்தவுடன் மொத்தம் போட்டுவரவேண்டும். இந்த ரெஜிஸ்டரை வருஷமுழுவதும் சங்கம் பராமரித்து வரும்படி இன்ஸ்பெக்டர்கள் கவனித்து வரவேண்டும். அப்படிச் செய்து வருவதால் சங்கத்தார் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டிய வருஷாந்திரிடர்ன்கள் (விவரக்கணக்குகள்) தயாரிக்க சுலபமாயிருக்கும். இது ரொக்கக்கணக்கு புஸ்தகத்திலிருந்து ஒவ்வொரு நாளும் தொகை யேட்டுகளில் சேர்ப்பிக்க வேண்டிய கூறுபாடே யொழிய வேறில்லை. ஒவ்வொரு மாதம் முடிந்தவுடன் அம்மாதத்தின் மொத்த வரவு செலவுக் கணக்குகளைக் கூட்டிப்போட்டு வரவேண்டும். இந்த ரெஜிஸ்டரில் முன்னேறிவரும் தொகைகளையும் கூட்டி மொத்தம் போட வழிசெய்திருக்கிறது.

27. சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு மெம்பருக்கும் பாஸ்புஸ்தகமொன்று கொடுக்கப் படவேண்டும். அப்புத்தகத்தில் அவரால் டிபாசிட்டு செய்யப்பட்ட தொகை, சங்கத்தில் கடன்பெற்ற தொகை, கடன் வாப்சு செய்யப்பட்ட தொகை, இவைகளை குறிக்கவேண்டும்.

ஐக்கிய சங்கங்களுக்கு ஏற்ற பாஸ் புஸ்தக பாரம் ஒன்று இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஷை பாஸ் புஸ்தகங்கள் அச்சிடப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்ட அச்சுயந்திரர்களிடம் விற்பனைக்கு வைத்துவரப்படும்.

## எல்லாச் சங்கங்களுக்கும் சுற்று விளம்பரம்.

எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கும் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளுக்கும் பணம் அனுப்பும்போது அடியிற்கண்ட விவரங்களை முக்கியமாய் கவனிக்க வேண்டியது.

1. சங்கத்தின் முழுபெயரையும் நம்பரையும் தெளிவாயும் ஸ்பஷ்டமாயும் எழுதவேண்டியது.

2. என்ன காரியத்திற்காக பணம் அனுப்பியிருக்கிறது.

மேற்சொன்ன இரண்டு விஷயங்களையும் குறிக்க சங்கங்கள் தவறினால் அனுப்பின தொகையை அனாமத்து (Suspense)க் கணக்கில் வைக்கப்படும். சங்கத்துக்கும் வட்டி கிடைக்காது.

எல். டி. சுவாமிகண்ணு,
ரெஜிஸ்ட்ரார்.

———:(*):———

# அநுபந்தம் I.

## வட ஸர்க்கார் ஐக்கிய நாணயக் கான்பரென்ஸ்.

(கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களை வட ஸர்க்கார் என்று சொல்வது வழக்கம்.)

ஏப்ரல்மீ 26-ந் தேதியன்று வடஸர்க்கார் முதல் ஐக்கிய நாணய சங்கம் தென்னாலியில் கூடிற்று. ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யர் அக்ராசனம் வகித்தார். ஆனரபில் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை, திவான்பகதூர் M. ஆதிநாராயணய்யா, திவான்பகதூர் N. பட்டாபி ராமராவ், முதலிய பிரமுகர்கள் அநேகர் போயிருந்தார்கள்.

உபசாரணைக் கமிட்டியின் சேர்மனாகிய மிஸ்டர் C. V. சுப்ரமணியம் பிரதிநிதிகளை வரவேற்றுச் சில விஷயங்களைச் சொன்னார். வட ஸர்க்காரில் 78 ஐக்கிய நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளின் மூலதனம் 4 லட்சம்ரூபாய். அதன்றியும், குண்டூர் ஜில்லாவில் 21 சங்கங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலதனம் ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபாய். தென்னாலியில் மாத்திரமே ஒரு நகர ஐக்கிய நாணயச் சங்கம் இருப்பதல்லாமல், லட்ச ரூபாய்க்கு மேல் முதலுள்ள ஒரு ஜில்லா பாங்கும் இருக்கின்றது. ஐக்கிய நியமங்களை அனுசரித்து ஒரு நெசவுச்சாலை ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று தென்னாலியிலுள்ள நெசவுக்காரர்கள் விரும்புகிறார்கள். லார்ட் பெண்ட்லண்ட் சொன்னது போல், 'அவசியமான விஷயங்களில் ஒற்றுமையும், சந்தேகமானவற்றில் அவரவர் அபிப்பிராயப்படி நடக்க சுயேச்சையும், பொதுவாய் எல்லா விஷயங்களிலும் தர்மபுத்தியும் வேண்டியது அவசியம்'' என்று அவர் சொல்லி முடித்தார் [பிறகு அக்ராஸனாதிபதி எழுந்து பின்வருமாறு பேசினார்:—] இந்தக்கூட்டுறவு முயற்சியில் இருக்கிற மதசம்பந்தத்தை முன்பாகச் சொல்லுகிறேன். மனுஷ்யன் கீழ்ப்படிய வேண்டிய சட்டங்களில் எது எல்லாவற்றிலும் சிரேஷ்டமானதென்று ஒருவன் ஒருசமயம் யேசுநாதரைக் கேட்டான். பகவத்பக்தி எல்லாவற்றிலும் சிறந்ததென்றும்; அயலாரை நேசிப்பது அதற்கடுத்தபடியாக சிரேஷ்டமென்றும், அவர் பதில் சொன்னார். பகவானிடத்திலும் மனுஷ்ய வர்க்கத்தினிடத்திலும் அன்புண்டாகுங் காரணத்தி லிருந்து, எல்லா நற்குணங்களும் விருத்தி அடைந்து; எல்லா துர்க்குணங்களும் நசித்து விலகின்றன. ஆகையால் இந்தக் கூட்டுறவு அன்பில் உதிக்கவேண்டும். ஸ்வயப் பிரயோஜனத்தைக் கருதியும் கூட்டுறவு உண்டாகும். ஆனால் அது சாசுவதமாயிராது. நம்மைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். நம்மிடத்தில் நற்குணங்கள் இருப்பது போல் துர்க்குணங்களு மிருக்கின்றன. நமக்கு ஒரு ஸ்திர புத்தி இல்லை. நாம் வெகு ஆரம்பசூரர்கள். விடா முயற்சியும் பிடிவாத புத்தியும் நம்மிடம் இல்லை. நமது முன்னோர்கள் வேதாந்த விசாரணையில் அடைந்திருந்த தீட்சண்ய புத்தி எதிலும் குற்றங் கண்டுபிடிக்க நம்மால் உபயோகப்படுத்தப்படுகிறது. தைரியமும் அஞ்சாக் குணமும் நம்மிடம் இல்லை. தைரியமில்லாதவன் முழுமையும் உண்மை பேசமாட்டான். பலர் சேர்ந்து ஒற்றுமைப்பட்டு ஒரு காரியத்தைச் செய்வதென்றால் விதி



களுக்கும் மேற்பட்டவர்களுக்கும் அடங்கி நடக்கும் குணம் வேண்டும். பயமிருக்கும் வரையில் தான் அடங்கி நடக்கும் குணம் இருக்கிறது. பயம் போய்விட்டால் அதுவும் போய்விடுகிறது. ஒன்று அன்பினால் அடங்கி நடக்குங் குணம் உண்டாகும், அல்லது பயத்தால் உண்டாகும். பயத்தால் உண்டாகையில் மேற்பட்டவனிடத்தில் துவேஷமும் உண்டாகும். ஆகையால் அன்பை அஸ்திவாரமாகக் கொண்டு கூட்டுறவு ஏற்பட்டால்தான் அது சாசுவதமாயிருக்கும்.

கூட்டுறவு முயற்சியின் விருத்தியால் ஜாதி த்வேஷமும் குறைவடைகிறது. உயர் ஜாதி என்றும் தாழ்ந்த ஜாதி என்றும் சொல்லப்படுகிறவர்கள் ஒருவரோடொருவர் அன்னியோன்னியமாகக் கலந்து உழைக்கிறார்கள். ஒருவரை ஒருவர் அறியாத காரணத்தாலேயே மனஸ்தாபமும், வெறுப்பும் உண்டாகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் பல ஜாதிகளும் ஒற்றுமையாகக் கலந்துழைப்பதால், இம்முயற்சி மத சம்பந்தத்தையும் உடையதாகிறது. பொருளாதார சம்பந்தமாயும், தொழில் சம்பந்தமாயும், சன்மார்க்க சம்பந்தமாயும், கூட்டுறவால் உண்டாகக்கூடிய நன்மைகளை உத்தேசித்தே கவர்ன்மெண்ட் இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டது. சன்மார்க்க அபிவிருத்திக்கும் கூட்டுறவுக்கும் என்ன சம்பந்தமென்று நீங்கள் கேட்கலாம். சேலம் ஜில்லாவில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்ட இரண்டொரு கிராமங்களில் குடி அடியோடு ஒழிந்துபோய் விட்டதென்று அவ்விஷயமாகப் பாடுபடும் ஒரு பரோபகாரி சொன்னார்

அவசரம் கூடாதென்று நினைத்து இவ்விஷயமாக ஜாக்கிரதையாகச் செல்ல, கவர்ன்மெண்டார் உத்தேசிப்பதைக் கொண்டு, கூட்டுறவு முயற்சியை விருத்திசெய்து விசாலப்படுத்த கவர்ன்மெண்டுக்கு இஷ்டமில்லை என்று சிலர் தப்பாய்ச் சொல்லுகிறார்கள். இவ்விஷயத்தை ஆரம்பம் செய்தது கவர்ன்மெண்டு தானே? ஆகையால் அவர்களுக்கு சிரத்தை இல்லை என்று சொல்வது தகுதியல்ல; சங்கங்களின் நிர்வாகத்தில் தலையிடக்கூடாதென்று கவர்ன்மெண்டும் ஒதுங்கி விடக்கூடாது. அந்தந்த சங்கம் தன் விஷயங்களை நடத்திக் கொள்ளச்சுதந்தரம் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாயினும் மேற் பார்வை செய்து கணக்குப் பரிசோதனை செய்வதை கவர்ன்மெண்ட் விட்டு விடக்கூடாது.

பஞ்சாயத்து ஏற்பாடு மறுபடி கிராமந்தோறும் வேண்டுமென்று புத்திமான்கள் சொல்லுகிறார்கள். முற்காலத்தில் பஞ்சாயத்து இருந்ததுபோல், இப்பொழுது உண்டாக்க முடியாது. அப்படி உண்டாக்கப்பட்டால், தாழ்ந்தவகுப்பார்களுக்கு அதில் ஸ்தானமும் கிடைக்காது; செல்வாக்கு மிராது. ஆனால் ஐக்கிய நாணயச் சங்கங்கள் அந்த வேலையை நன்றாய்ச் செய்யக்கூடும்.

பதிவு செய்யப்படுவதற்காக 600 புதுச் சங்கங்களிடமிருந்து கவர்ன்மெண்டாருக்கும் ஐக்கிய நாணய ரெஜிஸ்டிராருக்கும் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. பரோபகார நோக்கத்துடன் சங்கங்கள் ஏற்படுவது விருத்தியானாலொழிய சங்கங்களின் தொகை பெருகுவது மாத்திரம் விரும்பத் தக்கதல்ல. ஆகையால் ஜாதிக் கட்டுப்பாடில்லாமல் பரோபகாரச் சிந்தையுடன் சங்கங்கள் ஏற்படுவது தான் இத்தேசத்துக்கு நன்மையை உண்டுபண்ணும். இம்முயற்சியால் உண்டாகக்கூடிய லௌகிக நன்மைகளைக் கருதியே பெரும்பாலோர் இதில் சேருவார்கள். ஆனால் சுயநயத்தைக் கருதாது பரோபகாரச் சிந்தையுள்ள உற்சாக புருஷர்கள் இவ்விஷயத்தில் ஒருவர்பின் ஒருவராய் உழைத்து

வந்தாலொழிய, காலமாக ஆக, இதனாலும் தீங்குண்டாகுமே ஒழிய முழு நன்மையும் உண்டாகாமற் போய்விடும்.

மேற்கண்டவாறு அக்கிராசனாதிபதி பேசி முடிக்க, மறுநாள் நடவடிக்கையைப்பற்றி விஷய கமிட்டி ஆலோசிக்க ஆரம்பித்தது.

## இரண்டாம்நாள் நடவடிக்கை.

27-ந் தேதி கான்பரென்ஸ் மறுபடியும் கூடிற்று. ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் அக்ராஸனத்தை வகித்தார். அநேக தீர்மானங்கள் செய்யப்படக் குறிக்கப்பட்டிருந்தன. அவற்றைப்பற்றிய பிரஸ்தாபம் முழுமையும் தெலுங்கிலேயே நடந்தது.

1. நமது ராஜப்பிரதிநிதிக்கு நேர்ந்த டெல்லி விபத்தைப்பற்றி முதல் தீர்மானம் செய்யப்பட்டபோது சபையோர்கள் எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

2. எல்லாவிதமான கூட்டுறவுச் சங்கங்கள் விஷயமாகவும் அனுஷ்டிக்கப்படும்படி கோ-ஆபரேடிவ் ஆக்டை விசாலப்படுத்தியதற்காக கவர்ன்மெண்டுக்கு வந்தனம் செய்வதாகவும், வட ஸர்க்கார் ஜில்லாக்களில் கூட்டுறவுமுயற்சி மிகுதியா யில்லாதிருப்பதால் அதை விருத்தி செய்வதற்காக விசேஷ கவனம் செலுத்தி, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்குமாறு கவர்ன்மெண்டையும் கோ-ஆபரேடிவ் ரெஜிஸ்டிராரையும் கேட்டுக்கொள்வதாகவும் இரண்டாவது தீர்மானம் செய்யப்பட்டது.

வட ஸர்க்கார் ஜில்லாக்களில் வியாபாரம் மிகுதியாக நடப்பதால் கோ-ஆபரேடிவ் ஆக்டின் நிபந்தனைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து நன்மைபெறக் கூடுமென்றும், விவசாயிகள் விவசாயக் கருவிகளை வாங்க சொற்ப வட்டிக்குப் பணம் கிடைப்பது நன்மையா யிருக்குமென்றும் இத் தீர்மானத்தைப் பிரேரணை செய்தவர் சொன்னார்.

3. கூட்டுறவுச் சங்கங்களை உண்டுபண்ணி விருத்திசெய்யும் விஷயத்தில் வட ஸர்க்கார் ஜனங்கள் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மூன்றாவது தீர்மானம் செய்யப்பட்டது

4. சமீபத்திலுள்ள சங்கங்கள் யூனியன்களாகச் சேரவேண்டியதும், அவைகள் எல்லாம் சேர்ந்து ஜில்லாதோறும் ஒரு ஜில்லா பாங்கை ஏற்படுத்தவேண்டியதும், எல்லா ஜில்லா பாங்குகளும் சேர்ந்து மாகாணத்துக்குப் பொதுவாக ஒரு பாங்கை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமென்று அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.

(5) ஐக்கிய நாணயச் சங்கங்களின் நிர்வாகங்களை நடத்தும் பஞ்சாயத்தார்கள் ஆரம்பப் படிப்பை கட்டாயமாகச்செய்ய முயற்சி செய்யவேண்டுமென்றும், லாகிரி உண்டுபண்ணக்கூடிய வஸ்துக்களின் உபயோகத்தை அடியோடு ஒழிக்க முயற்சி செய்யவேண்டுமென்று அடுத்ததீர்மானம் செய்யப்பட்டது.

(6) கடன்பட்டு கடனைத் தீர்க்காமலிருக்கும் ஐக்கியநாணயச் சங்கங்களின் மெம்பர்களை அந்த நிலைமையிலிருந்து நிவர்த்திக்க வேண்டியது சங்கங்களுக்கு அவசியமென்று அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.



இத்தீர்மானத்தைப் பற்றி ஐக்கியச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய ஆனரபில் திவான்பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை பேசினதின் சாராம்சம் பின்வருமாறு:—

இத் தீர்மானம் வெளியிடங்களில் செய்திருக்கும் நாட்பட்ட கடன்களினின்றும் மெம்பர்களை மீட்கவேண்டிய பஞ்சாயத்தாருடைய கடமையைப் பற்றி வற்புறுத்துகிறது. விவசாயிகளின் நன்மைக்காக கூட்டுறவு நாணயத்தை இரண்டுவழியில் உபயோகப்படுத்தலாம். இத்தீர்மானத்தின்படி நயத்தை வெளியிடங்களில் செய்திருக்கும் தீராக்கடன்களினின்றும் மீட்கலாம். அல்லது, அவனுடைய சீர்திருத்தப்பட்ட நாணயத்தைக்கொண்டு அவனுடைய நிலங்களுக்கு விவசாயசீர்திருத்தங்கள்செய்தாலும்செய்யலாம். கூட்டுறவு நாணயச்சங்கங்களின் முதல்தருமம்,கடனினின்றும் மீட்பது. விவசாய சீர் திருத்தங்கள் செய்யும் திறமைக்கு பீடிகை போன்றதும் முன்னானதுமா யிருக்கும் அர்த்தத்தில் முதன்மையானதாயும், ஆனால் கிருஷிகன் தன்னுடைய நிலைமையை சீர்திருத்திக்கொள்ள தகுந்த உபகாரம் செய்யாவிட்டால் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் பலனும், நோக்கமும் விருதாவாய்ப் போகின்றன என்னும் அர்த்தத்தில் இரண்டாவதாயு மிருக்கிறது. கிருஷிகன் விவசாய முறைகளை சீர்படுத்திக் கொண்டால்தான் அவனுடைய நிலைமையை சீர் திருத்திக்கொள்ளக் கூடும். விவசாய சீர்திருத்தங்கள் மறுபடியும் இரண்டு உட் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன; கிணறு வெட்டுவது, விலையுயர்ந்த சாமான்கள் அல்லது யந்திரங்கள் வாங்குவது ஆகிய விலையுயர்ந்த சீர்திருத்தங்கள் செய்வதும், எரு, நல்லவிதை, நல்ல பலனைத்தரத்தக்கக் கருவிகள் ஆகிய இவைகளைக்கொண்டு மிகச்சுளுவான சீர்திருத்தங்கள் செய்வதும் ரொம்ப திரவிய செலவின்பேரில் செய்யும் சீர்திருத்தங்களுக்காக வாங்கும் கடன்களை அநேக வருஷங்களுக் கப்புறம் தீர்க்கக் கூடும். ஆனால் விதை, எரு முதலானது வாங்குகிறதற்காகச் செய்த கடன்களை எந்த மகசூலைச் சீர் திருத்துவதற்காக இக்கடன் வாங்கப்பட்டதோ அந்த மகசூலைக் கொண்டு அடைத்துவிட வேண்டும். ஆகையால் பஞ்சாயத்தாரால் கொடுக்கப்படும் கடனை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) வெளிக்கடன்களைத் தீர்ப்பதற்காகக் கொடுக்கும் நீண்டகாலத்தவணைக் கடன்கள். (2) விலையுயர்ந்த சீர்திருத்தங்கள் செய்வதற்காகக் கொடுக்கும் நீண்டகாலத்தவணைக் கடன்கள். (3) விதை, எரு முதலானது வாங்கக் கொடுக்கும் சொற்ப காலத்தவணைக் கடன்கள். சங்கங்கள், முக்கியமாக வடசர்க்காரிலுள்ளவைகள், முதலில் குறிக்கப்பட்ட தினுசுக்கடன்களில் மாத்திரம் மனதைச் செலுத்தி மற்ற இரண்டுவிதக் கடன்களை அலக்ஷியம் செய்துவிடுகின்றன. ஆரம்பத்திலிருந்தே மூன்றுவிதக் கடன்களையும் கவனிக்கவேண்டும். பஞ்சாயத்தார்கள் ஒவ்வொரு வருஷத்திற்கு ஒருநிர்ணயித்தகாரிய கிரமத்தைவைத்துக்கொண்டு தாங்கள் கொடுக்கும் கடன்களை மேற்சொன்ன மூன்று தினுசுக் கடன்களின்கீழ் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

முந்தின கடனைத் தீர்க்க மெம்பர்களுக்கு உபகாரம் செய்யும்பொழுது பஞ்சாயத்தார் உற்பத்தி விஷயத்திற்காகக் கொடுக்கும் கடன்களை அலக்ஷியம் செய்வதைத்தவிர பகுத்தறிவில்லாமலிருக்கவும் இடமுண்டு. இங்கேயும் ஒரு காரியக் கிரமவரிசை அவசியமாயிருக்கிறது. ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு ஐந்துவருஷங்களுக்குப் பிறகு, மெம்பர்கள் கடன்களினின்றும் ஜாடாவாக மீட்கப்பட்டு விவசாய முறைகளைச் சீர்திருத்த ஆரம்பிக்க போதுமான சக்தி உண்டாக்கப்பட்ட அநேக கேசுகளையும், அடுத்த 5-வருஷங்களில் இதே மாதிரி சிரம நிவாரணம் செய்யப்போகும் மற்ற கேசுகளையும் குறிப்பிடும்படியான ஸ்திதியிலிருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட நல்ல பலனைக் குறிப்பிடும் நமது சங்கங்களின் தொகை வெகு கொஞ்சம்தான்.] ஆரம்பத்தில் முன்

தின கடனை அடைப்பதற்காக உதவிபெற்ற மெம்பர்கள் 5-வருஷமான பிறகும் அதே விஷயத்திற்காக கடன் வாங்கிக்கொண்டே யிருப்பார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு சங்கத்தின் நடவடிக்கைகளை நோக்கினால் அது ஜனங்களுக்கு உபயோகமான காரியமொன்றும் செய்கிறதில்லை என்கிற முடிவுக்குத்தான் வரவேண்டும். மேலும் அது ஜனங்களுடைய கடன்களைப் படிப்படியாக குறைத்துக்கொண்டு வருவதற்குப் பதிலாக வாஸ்தவமாய் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்கிற எண்ணத்தையும் உண்டாக்குகிறது. நிர்ணயிக்கப்பட்ட இத்தனை வாயிதாக்களுக்குள் திருப்பிக்கொடுத்து விடுகிறது என்று, கடன் வாங்கும்போது பஞ்சாயத்தார் கடன்கொடுக்குமுன் கேட்ட கடன் அத்தனை வாயிதாக்களுக்குள் திருப்பிக்கொடுக்க முடியுமாவென்பதைப் பற்றி தாங்களே திருப்தியடைய வேண்டும். ஆயிரம் ரூபாய் பெறுமான நிலமுள்ள ஒருவன் அந்த நிலத்தின் ஜாமீன்பேரில் 500-ரூபாய் கடன் வாங்க உத்தேசித்தால், மிகக்கடுமையான தன்னடக்கம், சிக்கனம் முதலியவற்றை அநுஷ்டித்தாலொழிய, விவசாயச் செலவு ஆகிய இச்செலவுகளெல்லாம்போக வருஷத்திற்கு வட்டியோடு ரூபாய் 100-செலுத்த முடியாது. சுபாவமாய் முதல் வருஷத்திலேயே பாக்கி விழுந்து விடுகிறது. தான் மெம்பரா யிருப்பதையும், தன் நாணயத்தையும் காப்பாற்றிக் கொள்ள எத்தனையோ உபாயங்கள் செய்கிறான். பஞ்சாயத்தார் இதையெல்லாம் எதிர்பார்த்தே யிருப்பார்கள். ஆகையால் முதலிலேயே பஞ்சாயத்தார் அம்மனிதனுக்கு "இந்த வருஷத்தில் 100-ரூபாய்க்குமேல் உன்னால் திருப்பிக்கொடுக்க முடியாது, ஆகவே 500 ரூபாய் கடன் பெறும் யோஜனையோடு இச்சங்கத்து மெம்பராவதில் யாதொரு பிரயோஜனமுமில்லை" யென்று சொல்லவேண்டியது அவர்களுடைய கடமை. நீண்ட வாயிதாக்கடன் மனுக்கள் ஒவ்வொன்றையும் பஞ்சாயத்தார் பரிசோதித்தால் தங்கள் மெம்பர்களை வெளிப்புறத்துள்ள நாட்பட்ட கடன்களினின்றும் மீட்க தங்களால் இயன்றதைச் செய்யலாம். ஆனால் வந்தவர்களுக்கெல்லாம் ஆலோசனையில்லாமல் கடன் கொடுத்துக்கொண்டிருந்தால் பஞ்சாயத்தாரால் கடன் மீட்க யாதொரு உதவியும் செய்யவே முடியாது.

கடன் வாங்கும் மெம்பர்கள் வாங்கின தொகையைச் சரியான வழியில் செலவிட்டார்களா என்று கவனிப்பது சங்கங்கள் செய்யவேண்டிய வேலை. அவ்விதப் பொறுப்பை சங்கங்கள் ஏற்றுக்கொண்டால், மெம்பர்கள் எதற்காகக் கடன் வாங்கினார்களோ அந்த விஷயத்துக்கே பணத்தைச் செலவிடுவார்கள். ஒவ்வொரு மெம்பருக்கும் உள்ள எல்லாக் கடன்களுக்கும் பஞ்சாயத்துகள் ஒரு கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது.

(7) பல கிராமங்களுக்குப் பொதுவாக ஒரு ஐக்கிய நாணயச் சங்கம் இருப்பது சௌகர்யமாயில்லை என்றும், அந்தந்த ரெவினியூ கிராமத்துக்குத் தனித்தனியாக ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், பொதுவாக இப்பொழுதுள்ள சங்கங்களும் பிரிந்து தனித்தனிச் சங்கங்களாய் விடவேண்டுமென்றும் அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.

(8) மெம்பர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக ஏற்பட்டுள்ள பிரவேசக் கட்டணமும் பங்கின் மூலதனத்துக்காக அவர்கள் பங்குத் தொகை செலுத்தவேண்டி யிருப்பதும் அதிகமாக விதிக்கப்பட்டிருப்பதால் அநேகர்களுக்குச் சேர முடியாமல் கஷ்டமாயிருக்கிறதென்றும், ஆகையால் ஆங்காங்கு சேரக்கூடிய மெம்பர்களின் அந்தஸ்தை உத்தேசித்து அவ்விரு தொகைகளும் கூடியமட்டும் குறைவாக விதிக்கப்பட வேண்டுமென்றும் அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.



(9) விவசாயக் கூட்டுறவு விருத்தி அடைந்து முன்னுக்கு வருகிற வரையில், விவசாயக்கருவிகள், எரு, விதை முதலியவற்றை வாங்க ஐக்கிய நாணயச் சங்கங்களே தொகை கொடுத்து உதவும்படி அனுமதி கொடுக்கப்பட வேண்டுமென்று அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.

(10) மாகாணத்திலுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கூட்டுறவை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்வதாக அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.

(11) மாகாண முழுமைக்கும் பொதுவான ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் வேண்டுமென்று சென்னையில் நடந்த கோ ஆபரேடிவ் கான்பரென்ஸ் தீர்மானஞ் செய்ததை இந்தக் கான்பரென்ஸும் ஆதரிப்பதாகவும், மெட்ராஸ் ப்ரொவின்ஷியல் யூனியனை அவ்வித ஸ்தாபனமாகப் பதிவு செய்து கொள்ளும்படி ரெஜிஸ்டிராரைக் கேட்டுக் கொள்ளுகிறதாகவும் அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.

(12) சங்கங்கள் வியாஜ்ஜியம் செய்யும்படி நேர்ந்தபொழுது சங்கங்களின் விதிகளால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் வட்டியைக் காட்டிலும் குறைந்த வட்டியை ஸிவில் கோர்ட்கள் டிக்ரீ செய்து விடுவதால் சங்கங்களுக்கு விசேஷ நஷ்டமுண்டாய் விடுகிறதாகையால், இவ்விஷயமான விதிகளை மாற்ற வேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்வதாக அடுத்த தீர்மானம் செய்யப்பட்டது.

பிறகு அக்ராஸனாதிபதி பேசினார் :—சௌகார்களையும், செட்டிகளையும் போல் ஐக்கியநாணயச் சங்கங்கள் குறைந்த வட்டிக்குப் பணம் வாங்கி அதிக வட்டிக்குக் கடன் கொடுப்பதால் ஒரு நன்மையும் உண்டாய்விடாது. சங்க மெம்பர்கள் சகோதரர்கள் போல் அன்னியோன்னியமாக இருந்து வீண் செலவு செய்கிறவர்களுக்கு கற்புத்தி சொல்லி அவ்வாறு செய்யாமல் தடுக்கவேண்டும். சங்கத்தில் கடன் வாங்குகிறவன் வீண் செலவு செய்கிறவனா யிருந்தால், குறைந்த வட்டிக்கு அதிகக் கஷ்டப்படாமல் கடன் கிடைப்பதால் அவன் செட்டியிடத்தில் கடன் வாங்குவதால் கெடுவதைவிட அதிகமாகக் கெட்டுப்போய் விடுவான். ஐக்கிய நாணயச் சங்கங்களின் பஞ்சாயத்துகள் ஆரம்பப் படிப்பைக் கட்டாயமாகச் செய்யவேண்டுமென்று செய்த தீர்மானம் மிகவும் கொண்டாடத்தக்கது. விலை பொருள்கள் நமது தேசத்திலிருந்து ஏராளமாகப் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அவைகள் பிறதேசத்தவர்களால் வேலைசெய்யப்படுகின்றன. அவைகளை வேலைசெய்ய நமக்குத் தெரியவில்லை. கல்வியும் பாவி விவசாயம் செய்வதிலும் தற்காலமுறைகள் அனுஷ்டிக்கப்பட்டால், நமது தேசம் பணத்தில் பெருத்துப்போய்விடும். ஆகையால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விவசாயம் விருத்தி யடையுமென்று நான் நம்புகிறேன்.

அக்ராஸனாதிபதி பேசி முடிந்தவுடன் கோ ஆபரேடிவ் ரெஜிஸ்டிராருக்கும், மற்ற பிரமுகர்களுக்கும் வந்தனம் அளிக்கப்பட்டது. பிறகு ராஜ சக்ரவர்த்தியை உத்தேசித்தும், அக்ராஸனாதிபதியை உத்தேசித்தும் சபையோர் ஆரவாரித்து கான்பரென்ஸ் கலைந்தது.

# 5-வது செங்கல்பட்டு ஜில்லா கூட்டுறவினர் கான்பரன்ஸ்.

———:(●):———

## உத்தரமேரூர்.

செங்கல்பட்டு ஜில்லா உத்தரமேரூரில் 1913-ம் ௵ மே௴ 31-ந்தேதியன்று ஷை கான்பரென்ஸ் நடந்தது. அவ்வூர் ஐக்கிய நாணயச் சங்கத்துக்காகக் கட்டப்பட்ட புதி கட்டடம் திருவாங்கூர் சமஸ்தானத்துத் திவானாகிய திவான்பகதூர் P. ராஜகோபாலாசாரியாரால் முதலில் திறந்துவைக்கப்பட்டு பிறகு கான்பரென்ஸ் அந்தக் கட்டடத்திலேயே நடந்தேறியது. செங்கல்பட்டு ஜில்லா கலெக்டராகிய மிஸ்டர் R.A. க்ராஹம் அவருடைய மனைவியார், திவான்பகதூர் M. ஆதிநாராயணய்யா, ராவ் ஸாகிப் K. விஜயராகவாசாரியார், கோ-ஆப்ரேடிவ் இலாகாவின் உதவி ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் A. வேதாசலம் அய்யர் முதலிய பிரமுகர்கள் அநேகர் கான்பரென்ஸுக்குப் போயிருந்தனர்.

உத்தரமேரூர் ஐக்கிய நாணயச் சங்கத்தின் ப்ரெஸிடெண்டும் உபசரணை கமிட்டியில் சேர்மனுமாகிய மிஸ்டர் வெங்கிட கிருஷ்ண அய்யர் பிரதிநிதிகளை உபசாரமாய் வரவேற்றுப்பேசினர். கூட்டுறவு நிகழ்ச்சியில் அந்த ஜில்லா வாசிகளுக் கிருக்கும் பற்றை, புதிதாய்க் கட்டப்பட்டு அன்று திறந்து வைக்கப்பட்ட கட்டடம் விளக்குமென்று அவர்சொல்லி, கூட்டுறவால் அடையக்கூடிய மற்ற நன்மைகளைப்பற்றிப் பேசினர். ஸுகாதாரம், போக்குவரத்து, கல்வி, நீர்ப்பாய்ச்சல் கிராமபஞ்சாயத்து முதலிய அநேக நன்மையான விஷயங்களைக் கூட்டுறவைக்கொண்டு சகிக்கலாமென்பதை எடுத்துச் சொன்னர்.

## பிரசிடெண்ட் செய்த பிரசங்கம்.

கனவான்களே,

செங்கற்பட்டு ஜில்லா கோவாபரேடர்கள் சேர்ந்திருக்கிற இந்த மஹாநாட்டுக்கு அக்கிராசனம் வகிப்பது எனக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இதோ என்னைச்சுற்றிலும் எனக்கு முன்னமே தெரிந்தவர்கள் அநேகரைப் பார்க்கிறேன்; மேலும் சுயநலம் பாராட்டாமல் மிகுந்த உற்சாகத்தோடு ஐக்கிய இயக்க ஆரம்பகாலத்தில் இந்த ஜில்லாவில் என்னோடு வேலைசெய்து முதச்சங்கங்களை ஏற்பாடு செய்வித்து அவைகள் வேலைசெய்யும்படி பண்ணுவித்த என் சிநேகிதர்கள் பலர் இதோ வீற்றிருக்கக் காண்கின்றேன். எப்படி குழைந்தைகள் வளருவதற்குத் தொட்டில் அநுசரணையாய் இருக்கிறதோ அதைப்போல் ஐக்கிய இயக்கத்திற்கு செங்கற்பட்டு ஜில்லா இருந்ததென்னலாம் முதல் முதல் ஏற்பட்ட நகரச்சங்கங்களும் நாட்டுச்சங்கங்களும் இந்த ஜில்லாவில்தான் ஸ்தாபிக்கப்பட்டன; சரக்கு உற்பத்திசெய்யும் சங்கங்களில் முதற்சங்கம் இங்கேதான் ஸ்தாபனமாயிற்று; ராஜதானியில் செவ்வையாய் வேலைசெய்து சித்தி அடைந்திருக்கின்றனவென்று சொல்லப்படுகிற சங்கங்களில் சில இப்போதும் இந்த ஜில்லாவிலிருக்கின்றன; இப்போது ராஜதானியில் வேலைசெய்துவரும் 1000-க்குச் சற்று அதிகமான சங்கங்களில் கொஞ்சங்குறைய 200 சங்கங்கள் செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கின்றன.



சங்கங்களின் எண்ணிக்கையில் நீங்கள் பலத்திருப்பதல்லாமல் குணத்திலும் நீங்கள் சற்று விசேஷித்திருப்பதாக நான் நம்புகிறேன். புதுச்சங்கங்களை ஸ்தாபிப்பதில் உத்தியோகப் பற்றில்லாத ஜனங்கள் செய்யும் வேலை மற்ற ஜில்லாக்களைக் காட்டிலும் இந்த ஜில்லாவில்தான் விசேஷித்திருக்கிறது. ராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள யூனியன்களுள் முதல் மூன்று யூனியன்களும் இந்த ஜில்லாவைச் சேர்ந்தவை. ஐக்கிய இயக்கத்தை ஆரம்பிப்பதில் இந்தவிதமாய் முன்னுக்கு வந்து வேலைசெய்த ஜில்லா இனியும் அந்த இயக்கம் விர்த்தியடைவதில் முன்னைய சிறப்புக்குக் குறையாமலே வேலைசெய்யுமென்று நான் நிச்சயிக்கிறேன். முதல் முதல் நியமனம்பெற்ற ரிஜிஸ்திரார் தான் பழமையாய் வேலைசெய்த இடத்தைத் திரும்பிவந்து பார்க்கும்போது அப்படிப்பட்ட ஜில்லாவைப் பார்ப்பதுதான் தகுதியென்று எனக்குத் தோற்றுகிறது.

2. கூட்டுறவினர்களின் பழைய சகபாடியாகிய நான் அவர்களுடன் பேசும்போது, ஒன்பது வருஷத்துக்கு முன்னே ஐக்கிய இயக்கம் ஆரம்பித்தது முதல் நாளது வரையில் அது அடைந்திருக்கும் விர்த்தியைக்குறித்து நான் விஸ்தரித்துச்சொல்லாமல் அதைப் பிறர் சொல்லும்படி விட்டுவிடுவேனானால், எனது எண்ணத்தைப்பற்றி தப்பபிப்பிராயம் கொள்ளமாட்டார்களென்று நினைக்கிறேன். அந்த இயக்கம் அடைந்த விர்த்தி என்னாலும் எனக்குப்பின் ரிஜிஸ்திரார்களாக வந்தவர்களாலும் வருஷந்தோறும் அனுப்பப்பட்ட வருஷாந்தர ரிப்போர்ட்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த விர்த்தியின் சரித்திரம் உங்களுக்கும் பொதுஜன சமூகத்துக்கும் நன்றாய்த் தெரிந்ததுதான். கனவான்களே, உங்கள் இயக்கத்தில் ஏற்கனவே காணப்பட்ட சிலகுறைகளைக் குறித்தும், இனியும் நேரக்கூடிய அபாயங்களையும் கஷ்டங்களையும் குறித்தும் உங்கள் கவனத்தைச்செலுத்தும்படி செய்வேனானால், தற்போது அது உங்களுக்கு பிரயோஜனகரமாயிருக்குமென்று நம்புகிறேன். அப்படி நான் செய்யும்போது அளவுக்கு மிஞ்சி குற்றத்தையே எடுத்துச் சொன்னவனாய் பாவிக்கப்படவும் கூடும். அப்படிக் குறைகளைக் குறித்து அளவுக்கதிகரித்து சொன்னதாக நான் பாவிக்கப்பட்டபோதிலும், நான் அந்தக் குறைகளைக்குறித்து சொல்வது தகுதிதான் என்று தோன்றுகிறது. ஏனென்றால், ஐக்கிய இயக்கம் இப்போதிருக்கும் நிலைமையில் குறைகளின்மீது நமது கவனத்தை நிலை நிறுத்துவோமானால் அது லாபகரமாயிருக்கும்.

3. எப்படி இந்த ஐக்கிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு வேலைசெய்து வரப்படுகிறதென்பதைப்பற்றி முதலில் சில வார்த்தைகளைச் சொல்லுகிறேன். ஏனென்றால் அதைப்பற்றி நன்றாய் அறிந்துகொண்டால் தான் நான் பின்னால் சொல்லப்போகிற விஷயங்களை நீங்கள் கிரகிக்கமுடியும். இப்போது நம்மோடு நம் தேசத்திலேயே வாசஞ்செய்யும் தீர்க்கதரிசியென்று சொல்லத்தக்க ஒரு கனவானாலேயே இந்தச் சங்கங்கள் நமக்கு உண்டாயிருக்கின்றன. அந்த கனவான் யார் என்றாலோ ஸர் பிரெடரிக் நிகல்ஸன் துரை ராஜதானியெங்கும் பரவிக்கிடக்கும் சிறு குடியானவனும் சிறு கைத்தொழிலாளியும் அவர்கள் வருமானத்தைச் செலவுசெய்யும் நிலைமையை ஆழ்ந்து அறிந்து, அவர்களுக்கு அவசியமானது ஜர்மனி தேசத்தில் ரைபீசன் (Raiffeisen) ஷுல்ஸ்டிலிட்ஸ் (Schulze-Delitzsch) பாங்குகள் என்றும், இத்தாலி தேசத்தில் உல்லம்போர்க் (Wollemborg) லூஜடி (Luzztti) பாங்குகள் என்றும் சொல்லப்படுகிற நாணயச்சங்கங்கள் என்று அந்த துரை முடிவுசெய்தார்.

ஸர் நிகல்ஸன் துரை எழுதிய அழியாப் புஸ்தகத்தில் ஐக்கியத்தைப்பற்றிய அந்த விஷயத்தைக்குறித்து நாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றாலும் பார்த்துத் தெரிந்து

கொள்ளலாம். சில நாளுக்கு முன்தான் அந்தப் புஸ்தகத்தைப்பார்த்து நான் மற்றொருமுறை ஐக்கிய விஷயங்களைக்குறித்து ஞாபகப்படுத்திக் கொண்டேன். அப்படி நான் ஞாபகப்படுத்திக்கொள்ளும்போது கெடுதிகளாகியகுறைகளை அவர்கண்டுபிடித்து அவைகளை வரையறுத்து அவைகளுக்குப் பரிகாரங்கள் இன்னவையென்று அவர்சொல்லியது இப்போதும் ஆச்சரியப்படும்படி சரியாயிருக்கிறதென்று எனக்குப்பட்டது. மேலும் இப்போது நமக்குக் கஷ்டத்தைக்கொடுக்கிற விஷயங்களும் அவை முன்னமே அறிந்தவையென்றும் தோன்றிற்று. ஐக்கிய இயக்கத்தில் எவ்விதமாயாவது ஈடுபடுகிற ஒருவருக்கு நான்சொல்லும் புத்திமதியாவது ஸர் பிரெடரிக் நிகல்ஸன் துரையின் புஸ்தகத்தைக் கவனித்து வாசித்து அவர்சொல்லும் தேர்ந்த அபிப்பிராயத்தையொட்டி காரியம் நடத்தவேண்டுமென்பதுதான். ஸர் நிகல்ஸன் புஸ்தகம் சங்கிரகமாயாவது ராஜதானியில் சுய பாஷைகளில் மொழிபெயர்க்கப் படாமலிருப்பது அநுதாபப்படக்கூடியயிருக்கிறது. கனவான்களே, இந்தப் புஸ்தகத்தைத் தமிழில் மொழிபெயர்க்க எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மிஸ்டர் நிகல்ஸன் தனது வேலையை முடித்து 1898௵ தனது ரிப்போர்ட்டை அனுப்பினார். முதலில் அவர் சொன்னவையெல்லாம் மாறு சொல்லப்படாமல் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அப்போதிருந்த ரிவினியூ போர்டார் அவர் பிரேரபணைகளைக் கண்டித்து பேசினார்கள். சென்னை ராஜதானியில் அவர் பிரேரேபித்த பாங்குகள் நடப்பது அசாத்தியமென்றும் ஒருக்கால் சாத்தியமானாலும் குடியானவனின் கஷ்டங்கள் நிவிர்த்தியாக்கும்படி அவ்வளவு தூரம் வேலை அவை செய்யாவென்றும் சொன்னார்கள். அந்த விஷயத்தைப் பற்றியே அந்தக்காலத்தில் அபிப்பிராயபேதங்கள் இருந்ததாய் எனக்கு ஞாபகமிருக்கிறது. கடைசியாய் மதராசு கவர்ன்மெண்டார் எவ்விதமாயாவது ஒரு முடிவான தீர்மானம் செய்யாமல் நின்றுவிட்டார்கள். ஆனால் பரிக்ஷார்த்தமாக ஒரு பாங்கை ஆரம்பித்து வேலைசெய்யும்படி மிஸ்டர் நிகல்ஸன் வசம் ரூபா 2,000 ஒப்புவித்தார்கள். இது நடந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் இந்த விஷய மொத்தமும் இந்தியா கவர்ன்மெண்டாரால் கவனிக்கப்பட்டு அப்போது வைஸிராயாயிருந்த லார்டு கர்ஸன் பிரபு இந்த விஷயத்தில் தாம் சொந்தமாய் அக்கறை எடுத்துக்கொண்டு ஒரு கமிட்டியை நியமனம் செய்தார். அந்த கமிட்டியில் மிஸ்டர் நிகல்ஸனும் ஒருவர். அந்தகமிட்டியார்கூடி வியவகரித்ததின் பயனாக 1904௵த்திய 10-வது இந்திய ஆக்டு பாஸாகி, ஐக்கியச் சங்கங்களை ஏற்பாடு செய்வித்து அவைகள் திருப்திகரமாய் வேலைசெய்யப் பார்க்கும்படி ஒவ்வொரு ராஜதானியிலும் டிஸ்டிரிக்ட் கலெக்டர் ஹோதாவுள்ள ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கும்படி உத்தரவுமாயிற்று. இந்த உத்தரவை அநுசரித்துத் தான் ஜில்லா கலெக்டர் ஸ்தானத்திலிருந்து மதராஸ் ஐக்கியச் சங்கங்களின் பிரதம ரிஜிஸ்திராராக நான் மாற்றப்பட்டேன். அதனால் இந்த இராஜதானியில் சங்கங்களை ஸ்தாபித்து அவைகளை வேலைசெய்விக்கும்படி எனக்கு நேர்ந்தது.

4. பரிக்ஷார்த்தத்துக்கு முதலில் சரியான கிராமங்களை தெரிந்தெடுப்பதும் அப்படிக் கிராமங்களைத் தெரிந்தெடுத்த பின் ஜனங்களை சங்கங்களாகச் சேரும்படி தூண்டுவதும் பிரயாசையான தொழிலாய்த்தான் இருந்தது. ஆரம்பத்தில் ஐக்கிய கோட்பாடுகள் ஒவ்வொன்றையும் நாம் நடவடிக்கையில் கைவிடும்படி நேர்ந்தது. அப்படிச் செய்யாவிட்டால் நாம் தொடங்கியே இருக்கமாட்டோமல்லவா? வரையறுக்கப்படாத பொறுப்பு என்பது எந்த விடத்திலும் நினைப்பதற்குக்கூட சாத்தியமாயில்லை. நஷ்டமுண்டான காலத்தில் ஒவ்வொரு மெம்பரும் சிறிதளவாவது பாத்தியப்படவேண்டுமென்று கொஞ்சம் பொறுப்பை பிரதி மெம்பர் பேரிலும் நிறுத்திவைப்பதற்குங்கூட ஒப்புக்கொள்வதாயில்லை. பணக்காரர்களாயுள்ளவர்கள் ஏழைகளோடுகூட சேருவதில்



தங்களுக்கு லாபமில்லையென்றார்கள். ஏழைகள் பணக்காரர்களை நம்புவதாயில்லை. ஜில்லாவிலுள்ள உத்தியோகஸ்தர்களின் உதவியை நான் அதிகமாய்ப்பெற்று வேலைசெய்திருப்பேனானால் ஆரம்பத்திலேயே உத்கிருஷ்டமான சங்கங்களாகவும் பல சங்கங்களை நான் வற்புறுத்தி ஸ்தாபித்திருக்கக்கூடும். ஆனால் அப்படிச்செய்வது தவறென்று நினைத்து எனக்கிருக்கும்போதனாசக்தி எவ்வளவு கொஞ்சமாயிருந்தபோதிலும் அதைக்கொண்டே காரியம் செய்வதாய் தீர்மானித்துக்கொண்டேன். கனவான்களே, ஐக்கிய இயக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஸர் பிரெடரிக் நிகல்ஸன் துரை பாடுபட்டது காரணமானால், சென்னைராஜதானியில் அந்த இயக்கம் அடைந்திருக்கும் சித்திக்குக் காரணம் அப்போது மதராஸ் கவர்ன்மெண்டில் ரிவினியூ மெம்பர் ஸ்தானம் வகித்த ஸர் காப்ரில் ஸ்டோக்ஸ் துரை வெகு புத்திசாலித்தனமாய் அது வளர்ந்து வருவதற்கு வழிகாட்டிக்கொண்டு வந்ததுதான். அந்த இயக்கத்தில் ஒவ்வொரு நுட்ப விஷயத்தையும் தான் அறிந்துகொண்டு அந்த துரை அது விர்த்தியடைவதை அதிஜாக்கிரதையுடன் பார்த்துவந்தார். சங்கங்களில் உத்கிருஷ்டமான சங்கம் இது, அதனால் உண்டாகும் பயன் இது, என்று ஜனங்களுக்குச்சொல்லி, அதைஅவர்கள் உணர்ந்துகொண்டு சங்கம் வேண்டும் என்று கோரிவரும் காலம் வரையில் நாம் காத்திருப்பது தவறாகுமென்று அவர் எனக்கு எடுத்துச்சொல்லி, ஏதாவது ஒருமாதிரியில் சங்கத்தை ஆரம்பித்து விடவேண்டுமென்று என்னைத் தூண்டினார். பிறகு அநுபவம் உண்டாக உண்டாக உத்கிருஷ்டவழிக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் சங்கத்தைத் திருப்பிக் கொள்ளலாமென்று சொன்னார். ஆதிகாலத்திலேயே அவர் என்னை இன்னொருவழியில் முயற்சி செய்யும்படி செய்தார். சங்கங்களுக்குப் போதுமான அளவு பணம் கிடைக்கக்கூடிய வழியைத் தேடச்சொன்னார். ஒரு சங்கம் ஏற்பட்டவுடனே அதற்கு வெளியிலிருந்து பணம் கிடைக்காவிட்டால் அது நிலைக்காதென்று அவர் எனக்கு எடுத்துக்காண்பித்தார். இதன் பொருட்டுத்தான் மதராஸ் ஸெண்டிரல் அர்பன் பாங்கியை ஸ்தாபித்தது. இந்த பாங்கின் அமைப்பு எவ்விதமாயிருக்க வேண்டும் என்னும் விஷயத்தைக்குறித்து நான் நிர்தாரணித்து மிஸ்டர் ஸ்டோக்ஸ் துரையோடு கலந்துபேசி முடித்த வழியில்தான் இந்த பாங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு சங்கமும் வேலை முறையை அநுசரித்து சிறிதளவும் பிசகாமல் அமைக்கப்பட வேண்டுமென்று அவர் வற்புறுத்தி சொல்லிவந்தார். மதராஸ் ஸெண்டிரல் அர்பன் பாங்கி எந்த உத்தேசத்தோடு ஸ்தாபிக்கப்பட்டதென்றால், சென்னப்பட்டணத்தில் லாபத்தின் பொருட்டு பிறருக்குக் கொடுக்கப்படும் பணத்தில் ஒருபாகம் நாட்டுச் சங்கங்களுக்குக் கடன்கொடுக்க உதவும்படி திருப்பப்பட வேண்டுமென்பதே. தான் கடன் கொடுக்கும் சங்கங்களின் மேற்பார்வைக்காக நேரும் செலவுக்காகப் பணம் உதவ மறுப்பதனாலும், தனது ஷேர்தாரர்களுக்கு நல்ல வட்டி கொடுப்பதினாலும், மதராஸ ஸெண்டிரல் பாங்கை சிலர் கண்டித்துப்பேசுகிறார்கள். இந்த விஷயத்தைக்குறித்து நான் சொல்வதென்னவென்றால், சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதற்காக ஏற்படும் ஒரு பாங்கை லாபத்தோடு வேலை செய்யும்படி செய்விக்கலாம் என்னும் சங்கதி ஸ்பஷ்டமாய் ருசுவாய்விட்டது. இது மிகுந்த திருப்திகரமானதென்று நினைக்கிறேன். மதராஸ் ஸெண்டிரல் பாங்கு சித்தியடைந்திருக்கிறதென்பதற்கு வேறு சாக்ஷியம் வேண்டியதில்லை. இதைப்போலவே சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதற்காகவே மற்றும் சிலபாங்குகள் தோன்றியிருப்பதே பலத்தசாக்ஷியமாகும். இந்த பாங்குகள் டிஸ்டிரிக்ட் பாங்குகள் என்று சொல்லப்படுகின்றன. கோவாபரேடிவ் சங்கங்களுக்குப் பணம் உதவினால் நல்ல லாபம் கிடைக்குமென்று மதராஸ் ஸெண்டிரல் பாங்கு ருசு செய்திராவிட்டால் மற்ற டிஸ்டிரிக்ட் பாங்குகள் தோன்றியிருக்க மாட்டா. ஐக்கிய இயக்கம் இப்போதடைந்திருக்கும் சித்தியையும் அடைந்திருக்கமாட்டாது.

இந்த ராஜதானியில் கோவாபரேடிவ் சங்கங்களுக்குப் பணம் தேடும் தொழில் ஏவ்வித சிரமத்தையும் கொடுக்கவில்லை இப்படிச் சிரமமில்லாமல் போனது மதராஸ்ஸெண்டிரல் பாங்கினால்தான் என்று சொல்லவேண்டும். இங்கே மதராஸ் ஸெண்டிரல் பாங்கை குறித்து சற்று விஸ்தரித்துப்பேசினேன். ஏனென்றால், நான்ரிஜிஸ்திராராயிருந்தபோதும் அதற்குப் பிறகும் மதராஸ்ஸெண்டிரல் பாங்கு வருஷம் 1-க்கு 100-க்கு 2½ முதல் 6 வரையில் உள்ள வட்டிக்குப் பணம் சம்பாதித்து ஷேர்தாரர்களுக்கு வருஷம் 1-க்கு 100-க்கு 10 முதல் 12 வரையில் லாபம் கொடுக்கும் நிலைமையிலிருந்தும் தான்கொடுக்கும் கடன்களின்பேரில் வருஷம் 1-க்கு 100-க்கு 7 முதல் 7½ வரையில் வட்டி வாங்குகிறதென்று உங்களில் பலர் புகார்செய்திருக்கின்றார்கள். இந்தக்காரியங்களில் எதிலும் தவறு இருப்பதாக எனக்குத்தோற்றவில்லை. சென்டிரல் பாங்கில் இருப்பதுபோல பாங்கின் மூலதனம் அல்லது பங்குத்தொகை கொஞ்சமாயிருந்து கொடுத்தபணம் திரும்பி மறுபடியும் கொடுபடுவதனால் வரவு செலவு அதிகமானால் லாபப்பங்கீடு அதிகமாய்த்தான் இருக்கும். வட்டி விஷயங்களில் வேலை முறைமையன்றித் தயையென்ற வியவகாரமில்லை. இன்னும் நெடுநாளைக்கு சங்கங்களுக்குப் பணம்கொடுத்து உதவவேண்டிய பாங்குக்கும் அந்த சங்கங்களுக்கும் பரஸ்பரம் விரோதமும் நம்பிக்கையின்மையும் இருக்குமானால் அது நாளாவிர்த்தியில் ஐக்கிய இயக்கத்துக்கு மிகுந்த கெடுதியை விளைக்குமென்று நினைக்கிறேன். தான் கடன்கொடுக்கும் சங்கங்களை மேற்பார்வையிடும் செலவு பூராவையுமாவது அதில் ஒரு பாகத்தையாவது ஸெண்டிரல் பாங்கு கொடுக்க மறுக்கிறதென்னும் வழக்குக்கு, நான் சொல்வதென்னவென்றால், அப்படி அது கொடுக்கவேண்டுமென்று அதன் நடவடிக்கைக்கென்று ஏற்படுத்திக்கொண்ட சட்டங்கள் சொல்லவில்லை. ஆகவே தான்செய்வதால் தனக்குக் கொஞ்சம்பணநஷ்டம் உண்டாகும் தொழிலை அது செய்யவில்லையென்று அதை நாம் குறைகூற முடியாது. மதராஸ் ஸெண்டிரல் பாங்கு ஷேர்தாரர்களில் ஒரு சங்கங்கூட இல்லாதிருப்பதுபற்றியும், எல்லாஷேர்தாரர்களும் தனி மநுஷர்களாயிருப்பது பற்றியும், அதுகடன்கொடுக்கும் சங்கங்களின் மேற்பார்வை விஷயமாய் அதற்கு எவ்வளவு சிறியபொறுப்பையும் கொடுப்பது உசிதமென்று தோற்றவில்லை. எந்த உத்தேசத்தைக்கொண்டு மதராஸ் ஸெண்டிரல் பாங்கு ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த உத்தேசத்தை நிறைவேற்றும்படி அதைவிட்டுவிடுவது நலமென்று தோற்றுகிறது. அந்த உத்தேசத்தை இதுவரையில் அந்த பாங்கு மிகுந்த திருப்திகரமாய் நிறைவேற்றி வந்திருக்கிறது

5. இதுவரையில் ஐக்கிய இயக்கத்தில் நாம் அடைந்திருக்கும் விர்த்தி, ஆரம்ப முதல் அந்த இயக்கம் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டால் நடத்தப்பட்டு வருவதனால் என்பதற்கு சந்தேகமில்லை. கவர்ன்மெண்டாரால் பரிபாலிக்கப்படுகிறதென்றகண்ணியமும் அதனால் ஏற்பட்ட நம்பிக்கையும் அந்த இயக்கத்துக்கு இருந்துவருகிறது. மேலும் மதராஸ் ஸெண்டிரல் பாங்கு மிகுந்த திறமையோடு நடத்தப்படுவதனால்சங்கங்களுக்குத் தாராளமாய் பணம் உதவுதல் சாத்தியமாயிருக்கிறது. சென்ற மதராஸ் புரொவின்ஷியல் கான்பரென்ஸில் ஹானரெபிள் ஸர் ஜான் அட்கின்ஸன் பேசியபோது ஐக்கிய நாணயச் சங்கங்கள் பரவிவர, வர்த்தக கம்பெனிகள் குறைந்து விட்டனவென்று சொன்னார். இதற்குக் காரணம் கண்டு பிடிக்க வெகு பிரயாசைப்படவேண்டியதில்லை. நான் இந்த ஜில்லாவில் வேலை ஆரம்பித்தபோது கம்புனி சட்டப்படி ரிஜிஸ்தராயிருந்த அநேக ஸஹாய நிதிகளும் மரணபண்டுகளும் நிலைகுலைந்துபோய் அதனால் ஜனங்களுக்கு சங்க விஷயங்களில் மிக அவநம்பிக்கையிருந்தது. இது எனக்கு அப்போதிருந்த கஷ்டங்களில் ஒன்று. இப்படி அந்த பண்டுகள் கெட்டுப்போனதையே



ஒரு சாதகமாக்கி ஐக்கிய நாணயச் சங்கங்கள் பரவுவதற்குக் காரணமாக்கிக் கொண்டேன். எப்படியென்றால், 1904[illegible]த்திய சட்டப்படி சங்கங்களை மேல் விசாரணை செய்வதற்கும், கணக்குகளைப்பரிசோதிப்பதற்கும், கூடுமானவரையில் அவைகள் வழிதவறி நடவாமலிருக்கப் பார்த்துகொள்வதற்கும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்டினேன். அப்போது உங்களில் அநேகர் கவர்ன்மெண்டார் எவ்விதமான உதவியும் நோய்ச் செய்யவேண்டுவதில்லையென்றும், அவர்கள் தாங்கள் பணங்கொடுத்தாவது அல்லது சங்கங்கள்கொடுத்த பணத்தைத் தாங்கள் வசூலித்தாவது கொடுக்கவேண்டியதில்லையென்றும் சொன்னார்கள். ஆனால் நீங்கள் கவர்ன்மெண்டார் மேற்பார்வையும் கணக்கு சோதனையும் அவசியம் வேண்டுமென்று கோரினீர்கள். இந்த விஷயங்களைகவனிப்பதற்கு ஏற்பாடாயிருக்கதபடியினாலே நீங்கள் நான் சொன்னதைக்கேட்டுச் சங்கங்கள் ஸ்தாபித்தீர்கள். மிகுந்த வேலையெல்லாம் ஸெண்டிரல் பாங்கு செய்தது. ஒரு கிராமத்தில் ஒரு சங்கம் ஸ்தாபனமானவுடனே குடிகளுக்கு அவர்களுக்கு வாஸ்தவத்தில் வேண்டியிருக்கிற பணம்எவ்வளவோ அவ்வளவும் அவர்கள் முன் வாங்கியிருந்த வட்டிவீதத்துக்கு குறைச்சலான வட்டிக்குக் கிடைக்கும் என்னும் சங்கதிதெரிந்தவுடனே சங்கங்கள் அதிகரித்தன. இப்படிச் சங்கங்கள் அதிகரித்ததற்குக் காரணம் அதற்கென்று ஏற்பட்டகவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டும், தாராளமாய்ப் பணம் கொடுப்பதற்கு வாய்ந்த வசதியும்தான்.

6. இந்த சங்கங்களை ஐரோபா தேசத்தைப்பார்த்து நாம்ஸ்தாபித்துக்கொண்டிருந்தபோதிலும் ஐரோப்பா, தேசங்களில் இந்த இயக்கம் விர்த்தியடைந்த விதத்துக்கும் நமது தேசத்தில் அது வளர்ந்த விதத்துக்கும் வித்தியாசம் உண்டு. ஸர் நிகல்ஸன் கீழ்வரும்விதம் எழுதுகிறார். "ஐரோபா தேசத்தில் ஜனங்களுடைய பாங்குகள் என்று சொல்லப்படும் இந்த சங்கங்கள் உத்யோகப்பற்றில்லாத ஜனங்களாலேயே ஆரம்பிக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டன ஜனங்கள் பணத்தை மிகுத்துவைப்பதற்கும், ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொள்வதற்கும, நாணயம சம்பாதித்துக்கொள்வதற்கும செய்துகொண்ட ஏற்பாடுகள் மிகத் தாமதமாய்க் கஷ்டங்களோடு விர்த்தியாயின. ஷல்ஸ் டிலிட்ஸ் சங்கங்கள் மற்றவைகளைவிட சீக்கிரம பரவினபோதிலும பலவருஷங்களாக இடைவிடாது செய்த திறமையான வேலையின் பயனாக ஏற்பட்டவை, குடியானவனுக்காக ஏற்பட்ட ரய்பசன் சங்கங்கள் இன்னும தாமதமாய் பரவினவை. இங்கிலாந்திலும யுனைடெட் ஸ்டேட்விலும உள்ள சேவிங்க்ஸ் பாங்குகளும, கட்டட சங்கங்களும மிக்க சிறியனவாய் ஆரமபிக்கப்பட்டு நடவடிக்கையில் முன்னுக்கு வந்தன. நாணயச்சங்கங்கள் பரவுவதற்கு ஜனங்களோடு வசித்துக்கொண்டு தங்கள் புத்திசாலித்தனத்தினாலும், முன்னறிவாலும அந்த ஜனங்களைவிட விசேஷித்திருந்த மனிதர்கள் காரணமாவார்கள் அப்படிப்பட்ட ஜனங்களால்தான் ஜர்மனி தேசத்திலும இதாலிதேசத்திலும சங்கங்கள் பரவின. ஜனங்களுடைய நாணயச்சங்கங்களுக்கு அல்லது சிறுபாங்குகளுக்கு எவ்விதமான சுதந்தரங்களும கொடுக்கப்படவில்லை. சாதாரணதேசசட்டங்கள் இவைகள் தேசத்தில் பரவுவதின் நிமித்தம மாற்றப்படவுமில்லை. புதுச்சட்டங்கள் இவைகளுக்கென்றே செய்யப்படவுமில்லை. அந்த சங்கம அந்தந்த ஊருக்கே பக்ஷம்தப்பட்டதாயிருந்தமையால், அவைகள் எவ்விதசுதந்தரமுமில்லாமல் வேலைசெய்யக்கூடியவையாயிருந்தன. இந்தச் சங்கங்கள் ஜனசமூகத்துக்குச் சிறந்ததாயிருந்தமையால் இவைகள்ஏற்பட்டபின் அவைகள் சரியாய் நடக்கும்படி சட்டங்கள் செய்யப்பட்டன. ஏனென்றால் சட்டத்தின் உதவியில்லாமலும ஜனசமூகத்தார் உதவியில்லாமலுமிருந்தால் இவைகள் செத்துப்போகுமென்று உடனே கண்டுபிடிக்கப்பட்டது. இந்த பாங்குகள் காரியசித்திபெற்று விருத்தியடைந்ததற்குக் காரணம அவைகள் அதிகாரதோரணையை அநுசரித்து

ஸ்தாபிக்கப்படக் கூடாதவைகளா யிருந்தன. இப்படி ஜனங்கள் விரும்பின பாங்குகள்
தனித்தனி நபர்களால் ஏற்பாடு செய்யப்பட்டனவே யல்லாமல் அதிகார முடையவர்கள்
செய்தவையல்ல. ஷூல்ஸ் டிலிட்ஸ் என்பவர் கஷ்டப்பட்டார் ஜெர்மனியில் சங்கங்
கள் உண்டாயின. ரபிசன் பல வருஷங்கள் கஷ்டப்பட்டுத் தாமாகவே சித்தி
யடைந்தார். பிறகு ஆயிரக்கணக்காய் சங்கங்கள் ஏற்பட்டு அவரை ஐக்கிய சங்கங்
களுக்குத் தகப்பன் என்று பெயர்கொடுத்து "Father Raiffeisen" என்று அழைக்
கின்றனர். லூஜடியும் உல்லம்போர்க்கும் இத்தாலியா தேசத்தில் சங்கம் ஸ்தாபித்தார்
கள். கிரேட் பிரிடெனிலும் யூனைடெட் ஸ்டேட்ஸிலும் ஏற்பட்ட சேவிங்ஸ் பாங்கி
களும் கட்டடங்களும் தனித்தனி நபர்கள் ஏற்பாடு செய்தவை.

7. இந்த பாங்குகள் ஐரோப்பாவில் எப்படி வளர்ந்தனவென்று மேலே சொல்
லிவந்தேன். இந்த தேசத்தில் அவைகள் வளர்ந்தவிதம் வேறு. இங்கேயிருக்கும்
ஐக்கிய சங்கங்கள் ஏறக்குறைய எல்லாம் ஒரு டிபார்ட்டுமெண்டைச் சேர்ந்த கவர்ன்
மெண்ட் உத்தியோகஸ்தரால் ஸ்தாபனமானவை. அந்த டிபார்ட்டுமெண்டு உத்தியோ
கஸ்தர் செலுத்தும் மேல்விசாரணை காரணமாகத்தான் அந்த சங்கங்கள் நல்ல ஸ்திதியி
லிருக்கின்றன நாளைக்கு கவர்ன்மெண்டார் இந்த மேல்விசாரணையை இனி செய்ய
மாட்டோமென்று விலகிக்கொள்வதாக அறிக்கை செய்வார்களானல், இந்த இயக்கம்
எவ்வளவு சீக்கிரத்தில் விர்த்தி யடைந்ததாக ஐரோப்பிய நிபுணர்களும் ஆச்சரியப்பட்
டார்களோ அதைவிட அதிக ஆச்சரியம் அவர்களுக்கு உண்டாகும் வண்ணம் அதிக
சீக்கிரத்தில் இந்த சங்கங்கங்களில் பெரும்பான்மை இருந்தவிடம் தெரியாமற்போய்.
இந்தவிதமாய் நான் சொல்லும்போது எனக்கும் எனக்குப் பின் ரிஜிஸ்திரார்களாய்
வந்தவர்களுக்கும் உதவிசெய்த உத்தியோகப்பற்றில்லாத கனவான்களுக்கு மரியாதை
தாழ்வாக நான் பேசவில்லை. கவர்ன்மெண்டாரும் மேற்சொன்ன விதமாய் விலகிக்
கொள்வார்களென்ருவது அல்லது அப்படி விலகிக்கொண்டால் அவர்கள் செய்கை
நியாயமானதென்ருவது நான் சொல்லவில்லை. நான் உங்கள் மனதில் படும்படி
சொல்வதெல்லாம் கூடி என்னவென்ருல், ஸ்தாபனமாயிருக்கிற சங்கங்களின் எண்
ணிக்கையைக் கொண்டாவது அல்லது அவைகள் ஸ்தாபனமான வேகத்தைக்கொண்
டாவது நமக்குள் ஐக்கியபத்தியம் முதிர்ந்திருக்கிறதென்று அதிகமாய் அளவிட்டுச்
சொல்வது தவருகும் என்பதுதான். நாம் சென்ற வேகம், இந்த சங்கங்களுக்கு
தாயிடமாகிய தேசங்களில் அவைகள் ஸ்தாபனமான வேகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்
போது, வெகு அதிகமென்று தோற்றும். அதனுலேயே ஜெர்மனி அல்லது இத்தா
லியா தேசங்களின் ஜனங்களைக்காட்டிலும் நாம் கூட்டுறவில் விசேஷித்தவர்கள் என்
றும் அவர்கள் அதிருஷ்டவசத்தால் இந்தச் சங்கதிகளைக் கண்டுபிடிக்க நாம் அவை
களைப் பார்த்து சங்கங்கள் ஸ்தாபித்துக்கொண்டோம் என்றும் ஒருவன் நினைக்கக்கூடும்.
இது வாஸ்தவமல்லவாகையால், நாம் ஏற்கனவே அடைந்த சித்தியைக்குறித்து மித
மிஞ்சி சந்தோஷிக்கக்கூடாது என்று சொல்லுகிறேன். இதுவரையில் நாம் செய்திருக்
கும் காரியங்களைப்பற்றி நாம் சந்தோஷிக்கலாம். இப்போது நமக்கிருக்கும் அபாய
மென்னவென்ருல், எண்ணிக்கை ரூபமாய் நாம் அடைந்திருக்கிற விருத்தியைக் குறி
த்து திருப்தி யடையும்போது நமது தவறுகளையும் குறைகளையும் மறந்துவிடுவோம்.

8. பாங்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தும், ஜனங்களிடத்தில் கூட்டுற
வின் தன்மை, சங்கங்கள் அதிகரித்ததற்கொப்ப, அதிகரிக்கவில்லை யென்று நான்
அபிப்பிராயப் படுவதற்குச் சில காரணங்கள் சொல்லுகிறேன். முதலாவதாக, நான்
அறிந்தமட்டில் கவர்ன்மெண்டார் கோரிக்கை யென்னவென்ருல், ஜனங்களுக்கு



மாதிரி சங்கங்களாக இருக்கும்படி போதுமான சங்கங்களைக் கவர்ன்மெண்டார் ஸ்தா
தாபித்துக் கொடுக்கவேண்டும்; பிறகு அவைகளை பார்த்து ஜனங்கள் தாங்களாகவே
சங்கங்களை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும்; அப்படி ஸ்தாபிப்பதனுல் சங்கங்களின்
எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்பது. 1000-சங்கங்களுக்குமேல் இப்போது
ஸ்தாபனமாயிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை கவர்ன்மெண்ட் டிபார்ட்
மெண்டின் முயற்சியால் உண்டானவை. ஒவ்வொரு இடத்திலும் கவர்ன்மெண்டாரே
சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு போகமுடியாது. கவர்ன்மெண்ட் சிப்பந்திகள் வரை
யறை யில்லாமல் அதிகமாக முடியாது. கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டின் உத்தி
யோகஸ்தர்கள் முயற்சி செய்யாமல் சிலநாளிருந்தார்கள். அதன் பலனுகப் புது சங்கங்
கள் ரிஜிஸ்தர் செய்யப்படாமலே அந்த நாள்வரை நின்றுவிட்டன. கடைசியாய் நடந்த
மாகாண கான்பரென்ஸில் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டாலல்லாமல் உத்தியோகப்
பற்றில்லாத ஜனங்களால் புது சங்கங்களை ஸ்தாபிக்கும் தொழில் கைக்கொள்ளப்பட்டு
அதை நன்ருய்ச் செய்யும் காலம் வரவில்லையாவென்று ஸர் ஜான் அட்கின்ஸன் துரை
கேட்டார். இந்தக் கேள்விக்கு நான் ஒரே ஒரு விடைதான் கொடுக்கக்கூடும். அதா
வது, ஒன்பது வருஷம் வேலைசெய்து 1000-சங்கங்களுக்குமேல் ஸ்தாபித்த பிறகு
புது சங்கங்களை ஸ்தாபிக்க போதுமானபடி உத்தியோகப்பற்றில்லாத ஜனங்கள் முன்
வந்து அந்த வேலையை ஏற்றுக்கொண்டு கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டின் உத்தி
யோகஸ்தர்களிடமிருந்து அத்தத் தொழிலைப் பூர்த்தியாயும் கைக்கொள்ளாவிட்டால்
ஐக்கிய இயக்கம் அடைந்திருக்கும் சித்தி மிகக் கொஞ்சமென்றே சொல்லவேண்டும்.
மகாண கான்பரென்ஸில் ஒரு தீர்மானம் சர்வஜனசம்பந்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்டு
பாஸ் செய்யப்பட்டது. அதாவது, ராஜதானியில் உண்மையிலேயே இன்னும் அநேக
நாட்டுச் சங்கங்கள் வேண்டும் என்று ஜனங்கள் கோருகிறபடியினுலே, ஐக்கிய இயக்கம்
திருப்திகரமாயும் அபாயமில்லாமலும் அதிசீக்கிரம் வளருவதற்கு அவசியமான கிரியை
களைக் கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்று அந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்
டது. நமக்கு இன்னும் அதிக சங்கங்கள் வேண்டும் என்று நானும் சொல்லுகிறேன்.
நமக்கு இப்போதிருக்கும் சங்கங்களைப்போல் பதின்மடங்கு சங்கங்கள் இருந்தாலும்
இன்னும் அநேக சங்கங்கள் நமக்கு வேண்டியனவாகவே இருக்கும். ஐக்கியச்
சங்கங்கள் அதிசீக்கிரம் அபாயமில்லாமல் பாவுவதற்கு ஏன் கவர்ன்மெண்டார்
முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் எனக்குத்தெரியவில்லை. மாதி
ரிச்சங்கங்களாக உதவுவதற்கு இப்போதிருக்கும் 1000 சங்கங்கள் போதாவென்று
வாதிக்கப்படுகிறது. ஐக்கிய இயக்கம் தொடங்கப்பட்ட வழியிலிருந்து, எதற்கும் கவ
ர்ன்மெண்ட் உதவி வேண்டுமென்று நாம் விரும்புவது சுபாவம், இந்த இயக்கத்துக்
கும் ஒட்டிக்கொண்டதோ? கனவான்களே, கவர்ன்மெண்டாரால் இன்னும் அதிக
சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று நீங்கள் கேட்பதைச் சற்று நிதா
னித்துக் கேட்கும்படி உங்களுக்குச் சொல்லுகிறேன். புதுசங்கங்களை ஸ்தாபிக்
கும் வேலையைப் பூர்த்தியாகவும் நீங்களே கைக்கொள்ளும்படி சொல்லுகிறேன்.
அப்போது நீங்கள் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட் போகும் வேகத்தைக் காட்
டிலும் அதிவேகமாய் அநேக சங்கங்களை ஸ்தாபிக்கக்கூடும். நான் இப்படிச் சொ
ல்லும்போது என் எண்ணத்தைக்குறித்து நீங்கள் தப்பபிப்பிராயப்படக்கூடாது. நான்
பேசுவதெல்லாம் புதுசங்கங்களை ஸ்தாபிக்கும் தொழிலை யார் கைக்கொள்வ தென்ப
தைப்பற்றிதான். சங்கங்கள் வேலை செய்யத்தொடங்கிய பின் அவைகளை மேல்விசா
ரணை செய்வதையும் கணக்கு சோதனை செய்வதையும்பற்றி நான் மேற்சொன்ன வித
மாய்ப்பேச வரவில்லை. இந்தத்தொழில் சட்டப்பிரகாரம் கவர்ன்மெண்டார் செய்து

தீரவேண்டியவைகள். ஒரு சங்கம் ரிஜிஸ்தரானால், அதனால் கவர்ன்மெண்டாருக்கு அதைமேல் விசாரணை செய்வதும் கணக்கு சோதனைசெய்வதும் ஆகிய வேலைகள் உண்டாகின்றன என்ற காரணத்தால் எந்த சங்கத்தையும் ரிஜிஸ்தர் செய்யாமல் மறுக்கமுடியாது.

9. இப்போதிருக்கும் நிலைமையில், இன்னொரு குறை யென்னவென்றால், இந்த இயக்கத்தால் மற்ற தேசங்களில் உண்டாயிருப்பதுபோல், நம் தேசத்தில் ஐக்கிய கோட்பாடுகளை அறிந்துகொண்டு அவைகளின்படி நடந்து அடையக்கூடிய பலனை அடையவில்லை. படித்துக்கொள்ளுதலாகிய இந்தப் பலனைக் குறித்துத் திரும்பத் திரும்பச் சொல்லுவதில் ஸர் நிகல்ஸன் எப்போதும் சலிப்பதில்லை. ஐரோப்பா தேசங்களில் கோவாபரேடிவ் பாங்குகள் சிக்கனத்தையும், தான் நடந்துகொள்ளும் விதத்தில் அநுசரிக்கவேண்டிய ஜாக்கிரதையையும், தன்னைத்தான் அடக்கி ஆளுதலையும் இன்னும் மற்ற நற்செய்கைகளையும் உண்டுபண்ணி கொடுத்திருப்பதாக ஸர் நிகல்ஸன் தன் புஸ்தகத்தில் எழுதியிருக்கக் காணலாம். இந்தவழியில் இங்கே யாதொரு பலனையும் நாம் அடையவில்லை என்று நான் சொல்லவில்லை. நாம் ஸ்தாபித்திருக்கும் பாங்குகளின் எண்ணிக்கையை நாம் அடைந்திருக்கும் படிப்பின் பலனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அந்தப்பலன் எந்தக் கணக்கிலும் சேர்த்தகுதியில்லாமல் மிகக் கொஞ்சமென்று சொல்லவேண்டும். இந்த விஷயத்தை நீங்கள் கவனிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டார் இந்த விஷயத்தில் அதிகமாய் ஒன்றும் செய்ய முடியாது. இதைப்பற்றி ஏதாவது செய்யப்பட வேண்டுமானால் அது உங்களாலேயே செய்யப்படவேண்டும். மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் ஐக்கிய இயக்கத்தின் படிப்பினையாகிய இந்த அம்சத்தைப்பற்றி பேசினார். அவர் சொன்னதாவது "கூட்டுறவு அபாயமில்லாமல் விர்த்தியடைவதற்கு கூட்டுறவினர்கள் கோட்பாடுகளை நன்றாய்ப் படித்திருக்கவேண்டும். ஜனங்களின் மனதிலும் இருதயத்திலும் கூட்டுறவின் கோட்பாடுகள் வேரூன்றி இருக்கவேண்டும். கூட்டுறவு ஸ்திரமாய் நிலைக்கவேண்டுமானால் ஜனங்களுக்குக் கோட்பாடுகளைப் படிப்பித்து அவைகளை அவர்கள் அறிந்துகொண்டார்களாவென்று பார்க்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் அதைக்கையாளுபவர்கள் தங்களுக்கு அபாயமுண்டாகாமல் காப்பாற்றிக் கொள்வதற்கும் தங்கள் கிராமங்களில் தங்கள் சங்கங்களைத் தாங்களே நிர்வகிப்பதற்கும் ஹேதுவாயிருக்கும்." ஏற்கனவே சொன்னதுபோல் இந்தவிஷயத்தில் ஒரு கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட் ஒன்றும் அதிகமாய்ச் செய்யமுடியாது. பிரதி கிராமத்திலுமுள்ள தலைவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால், தங்கள் கிராமத்தில் உள்ள சங்கம் மதராஸ் ஸெண்டிரல் பாங்கில் பணம் கடன்வாங்கி பணம் வேண்டியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்காக மாத்திரம் இல்லையென்றும், சுகமாய் வாழ்வதற்கு அவசியமான சிக்கனம், சுய உதவி முதலிய ஐக்கிய கோட்பாடுகளைக் கற்றுக்கொடுக்க ஏற்பட்டிருக்கிறதென்றும் தெரிந்துகொள்ளவேண்டும்.

10. ஐக்கிய கோட்பாடுகள் போதுமானபடி படிப்பிக்கப்படாமையால், கடன் வாங்குவதற்கு வட்டி விகிதமும் வாங்கும் வழியில் கஷ்டமும் குறைந்திருக்கவே அதற்குத் தக்கபடி கோவாபரேடர்கள் பட்டிருக்கும் கடனும் அதிகப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்திலேயும் ஸர் நிகல்ஸன் புத்தகத்தைப் படித்து நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நாணயம் அதிக தூரம் பரவவேண்டியதென்பதல்ல நாம் விரும்பவேண்டியது. கடன் வாங்குபவனுக்குக் கோட்பாடுகளைப் படிப்பித்து அவன் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பது நாம் கோரவேண்டுமென்று ஸர் நிகல்ஸன் பலமுறையும்



சொல்ல பின்வாங்குவதில்லை. அவர் புஸ்தகத்திலிருந்து கீழ் வருவதை எடுத்து எழுதுகிறேன். "குறைந்த வட்டிக்கு ஏராளமாய்ப் பணம் கிடைக்கவேண்டுமென்பதல்ல நமது கோரிக்கை. ஐக்கிய நன்மையை அடைய தங்களைத் தகுதியுள்ளவர்களாகச்செய்துகொள்ளாத ஜனங்களுக்குக் குறைந்த வட்டிக்குத் தொந்தரவில்லாமல் அதிக பணத்தைக் கடன்கொடுக்க வேண்டுமென்பதுமல்ல நமதுகோரிக்கை. பின் நாம் கோருவது என்னவென்றால், பணம் மிகுப்பதற்கு வேண்டிய சௌகரியத்தையும், பாங்குகளில் டிபாசிட்டு செய்ய தைரியத்தையும், நாணயத்தின் உண்மை நோக்கம் அதனை உபயோகப்படுத்தும்வழி, அது போகக்கூடிய அளவு ஆகிய இவைகளைக் கற்றுக்கொடுத்தலையும் செய்து கொடுக்கக்கூடிய சங்கங்கள் வேண்டும். இந்த சங்கங்களால் மேற்சொன்ன நன்மைகள் உண்டானால் ஜன சமூகத்துக்கு அவசியமாய் இருக்கவேண்டிய குணங்களாகிய சிக்கனமும் முன்னறிவும் சுய உதவியும் ஏற்பட்டதாய்விடும். குறைந்த வட்டிக்குப் பணம் கிடைப்பதொன்றே போதுமானதல்ல. அது ஒருவேளை கடன் பளுவை அதிகப்படுத்தவும் கூடும். குறைந்த வட்டிக்கு சுலபமாய்ப் பணம்கிடைப்பது மாத்திரம் போதாதென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சுலபமாய்ப் பணம் கேட்டபோது கிடைக்கவேண்டியதுதான். ஆனால் அப்படிக் கொடுக்கப்படும் பணம் கடன் வாங்குபவனைப் படிப்பித்துத் திருத்தி ஒழுங்காய் நடக்கச்செய்வதாயிருக்கவேண்டும். மேலும் அந்தப்பணம், காரியங்களை ஆலோசித்து வரையறுத்து செய்யவும், பணம் மிகுக்கவும் கற்றுக்கொண்ட ஜனங்களுக்குமாத்திரம் கொடுக்கப்படவேண்டும். அந்தப்பணத்தைக் கொடுக்கும்வழி, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளுதல் என்னும் படிப்பினையைத் தெரிந்துகொள்ள செய்வதாயிருக்கவேண்டும். மேலும் அந்தவழி கொடுக்கல் வாங்கலாகிய நாணயத்தில் அந்தப் படிப்பினையை அறிவதல்லாமல் இதர சந்தர்ப்பங்களிலும் உபயோகிக்கும்படி பண்ணுவதாயிருக்க வேண்டும். மிதமிஞ்சின வட்டியை ஒழித்தலோடு ஒழுங்குக்குட்பட்டு அந்தப் பணத்தினால் பிரதிப் பிரயோஜனம் பெருகவேண்டும்.

11. இந்த ஜில்லாவில் கோட்பாடுகளின் குணத்தைச் சொல்லிக்கொடுத்து அதன்பலன் கைக்கு வராமல் நாணயம் அதிகப்பட்டதனால் உண்டாகும் அபாயத்தைத்தடுப்பதற்கு எவ்வளவு தூரம்முயற்சி செய்யப்பட்டதென்பதை அறிய நலமாயிருக்கும். கடைசி மாகாண கான்பரென்ஸில் மாட்சிமை தங்கிய கவர்னரவர்கள் சொல்லியதை இங்கெடுத்துச் சொல்லுகிறேன்.

"குறைந்த வட்டிக்குக் கிடைக்கும் பணத்தினால் அநுகூலங்கள் இல்லாமல்போகலாம். அப்படித்தான் இங்கே இப்போதிருக்கிறது. கடன் அதிகரித்திருக்கிறது. அது அதிகரித்ததற்கு ஒப்ப ஐக்கிய இயக்கம் ஆரம்பித்த பிறகு கூட்டுறவினர்கள் அது விஷயமாய்ச் செய்யவேண்டிய பொறுப்பும் அதிகரித்திருக்கிறது. நாளாக ஆக, கடனதிகரித்தல் நின்றுபோய் மற்ற குணத்திற்கெல்லாம் மேலாய் சிக்கனத்தின் அவசியம் போதிக்கப்பட்டு கூட்டுறவினர்களெல்லாம் அதைக்கைக்கொண்டு அதிகமாய் கடன் வாங்குவதைத் தடுப்பார்களென்று நம்புகிறேன்." கனவான்களே, இந்த விஷயம் முக்கியமானது. இதில் உண்டாகும் கெடுதியைக் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டார் தடுக்க முடியாது. கெடுதிக்கும் பரிகாரம் உங்கள் கையிலிருக்கிறது. அதைத்தேட நீங்கள் பின் வாங்கக்கூடாது. பிரதிகிராமத்திலும் உள்ள தலைவர்களை நான் கேட்டுக்கொள்வதென்னவென்றால் சுலபமாயும் வட்டி குறைச்சலாயும் கிடைத்த பணத்தை நல்லவழிப்படுத்தாது வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பது தான். இந்த சங்கங்க

னால் இந்த ஜில்லாவில் சில கிராமத்தில் ஸ்திரமான நன்மை உண்டாகவில்லையென்று தெரியவருகிறது.

ஏனென்றால் கடன் வாங்குபவர்கள் பணம் சுலபமாய்க் கிடைப்பதால் அதிகமாய் கடன்வாங்கிவிட்டார்கள். இப்படிச் சுலப வட்டிக்குப் பணம் கிடைக்கும்போது அதிகமாய் கடன் வாங்கிவிட்டால் அதிக வட்டிக்குக் குறைச்சலாய் கடன் வாங்கின காலத்தில் கொடுத்த வட்டித்தொகையையே இப்போதும் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதைத்தவிர முன்னையவிட அசல்தொகை இப்போது அதிகமாய்விட்டது. இந்தக் கெடுதியை நீக்கும்பொருட்டுத்தான் ரயிசன் சங்கங்கள் பிரதி பிரயோசனமுள்ள காரியங்களுக்குத்தான் கடன் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கின்றன. நமது சங்கங்கள் எல்லாம் ரயிசன் சங்கங்களின் ஏற்பாட்டை அநுசரித்து ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் இந்தக் கோட்பாட்டை அநுசரிப்பவை அவைகளில் மிகக்கொஞ்சம் என்று சொல்லப்படுகிறது. இயக்க ஆரம்பத்தில் சுலபமாய்ப் பணம் கிடைப்பதின் கெடுதி அதிகமாய்த் தெரிந்திராது. இருந்தாலும் அந்தக்கெடுதி இருக்கவே இருக்கிறது. அது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வரும். நீங்கள் ஒவ்வொருவரும் அதைக் கவனித்துத் தடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.

12. நாணயச் சங்கங்கள் அல்லாத வழியில் ஐக்கிய இயக்கம் நமது தேசத்தில் ஒரு சிறிதும் முன்னேறாதது நம்மிடத்தில் ஐக்கிய பத்தியம் பலப்படவில்லையென்பதற்கு மற்றொரு அறிகுறியாகும். சென்ற மாகாணக்கான்பரென்ஸில் ஆனரெபில் மிஸ்டர் பட்டர்வொர்த் எடுத்துச் சொல்லியபடி நாணயத்தில் நாம் ஒன்று கூடினதற்கு காரணம் அது தொந்தரவில்லாததும் சுலபமாய் இருக்கக்கூடியதுமாயிருப்பதுபற்றி, நாணயச் சங்கங்களை ஸ்தாபித்து அவைகளை வேலை தொடங்குவிக்க ஒரு கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டும் அந்தச் சங்கங்களுக்கு பணம் உதவ மதராஸ் ஸென்டிரல் பாங்கும் இருந்ததனால் நாம் நமது ராஜதானியில் 1000 சங்கங்கள்போல் ஸ்தாபித்தோம். சரக்கு பிரிவினைச் சங்கங்களும் உற்பத்தி சங்கங்களும் எங்கே? ஒரு சமயத்தில் இருந்த இரண்டு உற்பத்திச் சங்கங்களில் ஒன்று மறைந்துவிட்டது என்று அறிகிறேன். மற்றதிலும் எனது நண்பர் மிஸ்டர் பி. இராமசந்திர சாஸ்திரியார் காஞ்சீபுரம் நெசவுக்காரர்களை முன்னுக்குக்கொண்டுவர, தானும் ஏற்றுக்கொண்ட தொழிலில் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார். சரக்குப் பிரிவினைச் சங்கங்களில் சில கலைந்துவிட்டன. இப்போது அந்தச் சங்கங்கள் அரை டஜனுக்குமேலில்லை யென்று சொல்லப்படுகிறது. இந்த சங்கியையில் பாதிகூட நல்லபடி வேலைசெய்வதாய்ச் சொல்லப்படவில்லை. மிகுந்த சித்திபெற்ற சரக்குப் பிரிவினைச்சங்கம் திருவல்லிக்கேணி சங்கம். அது ரிஜிஸ்தர் செய்யப்படுமுன்னமே ஏற்பாடு செய்யப்பட்டு நன்றாய் வேலைசெய்யும் நிலைமையிலிருந்தது. கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டாரிடமிருந்து அந்த சங்கம் கணக்கு சோதனையைத்தவிர வேறே எவ்வித உதவியையும் பெறவில்லை. ரிஜிஸ்திராரும் அவர் சிப்பந்திகளும் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த ஒரு சங்கம்தான் இப்போது ஐக்கிய இயக்கத்தில் காணப்படுகிற எல்லா சங்கங்களைக் காட்டிலும் பலமுள்ளதாயிருக்கிறது. ஸர் ஜான் அட்கின்ஸன் "ஐக்கிய இயக்கத்தில் நாணயம் ஒன்றுதான் விர்த்தியடைந்திருக்கிறது; அந்த நாணய வழியிலும் சிக்கனம் என்பது வளரவில்லை; இப்போது அவசரமாய் வேண்டுவதென்னவென்றால் மற்றவழியில் அந்த இயக்கம் வளரவேண்டியது; ஐந்து ஆறு வருஷங்களாய் வேலைசெய்து வந்த சங்கங்கள் நாணயமல்லாத இதரவழிகளிலும் பரவ சாத்தியமில்லையானால், கூட்டுறவு



வேரூன்றிப் பலப்படவில்லை" என்று அது காட்டும் என்று சொன்னார். நாணயமல்லாத இதர வழிகள் ஏற்பாடு செய்யப்படுவதும் வேலை செய்யப்படுவதும் மிகுந்த கஷ்டமானது. அந்தக் காரணத்தைக்கொண்டே நாம் அவைகளை அசட்டைசெய்யக் கூடாது. ஜனங்கள் கடன்கொடுக்க இருக்கும்போது கடன் வாங்குவது அவ்வளவு கஷ்டமல்ல. கனவான்களே, நாணயச் சங்கமல்லாத இதர சங்கங்கள் பலவிதமானவற்றை ஸ்தாபனம்செய்து அவைகள் நடத்தும் காலம் வந்துவிட்டபடியால் நீங்கள் உங்கள் அவகாசத்தை உபயோகப்படுத்தி அவைகளை ஸ்தாபிப்பீர்களென்று விரும்புகிறேன்.

13. சங்கங்கள் தங்களுக்குத் தாங்களே மேல் விசாரணைசெய்துகொள்ள யூனியன்களாய் சேருவதில் மிகுந்த விர்த்தியாகாதது திருப்திகரமாயில்லை. மற்ற ஜில்லாக்களைக் காட்டிலும் இந்த விஷயத்தில் நீங்கள் முந்தியிருக்கிறீர்கள் என்று நான் சொல்லவேண்டியிருக்கிறது. ராஜதானியிலிருக்கும் நான்கு யூனியனில் மூன்று இந்த ஜில்லாவிலிருக்கிறதென்று எனக்கு சந்தோஷமாயிருக்கிறது. இந்த யூனியன்கள் எப்படி வேலை செய்கின்றனவென்று எனக்கு நேராய்த்தெரியாது. யூனியன்களை நன்றாய் வேலைசெய்வித்து மற்றும் அநேக யூனியன்களை ஸ்தாபிக்க வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தனியாய்க் கடன்வாங்கும் நபருக்கு பலருடன் கூடிச் சங்கமாகி கடன் வாங்குவதால் பலமுண்டானால், தனித்த ஒரு சங்கத்துக்குப் பல சங்கங்களுடன் கூடினால் பலம் உண்டாகுமல்லவா? ஒரு தனிச்சங்கத்தை ஸ்தாபித்து நடத்துவதைப் பார்க்கிலும் ஒரு யூனியனை ஸ்தாபித்து நடத்துவது கஷ்டந்தான். தனிசங்கங்களை செவ்வனே மேல்விசாரணை செய்வதற்கு தகுதியும் போதுமானதுமானவழி யூனியன் மூலமாய்த்தான் என்று மிஸ்டர் ராமச்சந்திரராவ் சொல்லுகிறார். அது சரியென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் யூனியனில் சேர்ந்த சங்கங்கள் மிக சமீபத்தில் இருக்கவேண்டும். வரையறுக்கப்படாத பொறுப்பை ஏற்றுக்கொண்டதால் அவைகள் ஒன்றுடன் ஒன்று பலமாய் கட்டப்பட்டிருக்கவேண்டும். காலக்கிரமத்தில் பிரதி யூனியன் தன்னுள் அடங்கிய சங்கங்களின் பரிபாலனத்தைத் தானே செவ்வையாய்ச் செய்யவேண்டும். இந்த யூனியன்களால் நல்ல பலன் உண்டாகும் என்று உங்களில் பழைய ரிஜிஸ்தரார் மிஸ்டர் ராமச்சந்திர ராவ் அபிப்பிராயப்பட்டிருந்தார். அதுபற்றி அவர் அவைகளைத் தாமதமில்லாமல் ஸ்தாபிக்கவேண்டுமென்று சொன்னார். யூனியன் அமைப்பு எப்படியிருக்க வேண்டுமென்னும் விஷயத்தில் அபிப்பிராயபேதங்கள் இருக்கின்றன. இப்போதிருக்கும் அமைப்பை விட்டு நூதனமான ஒரு அமைப்பை அது கடைசியில் அடையக்கூடும். யூனியன் பலமுள்ளதாயிருக்கவேண்டுமானால் அதைச் சேர்ந்த சங்கங்களின்மீது அதற்குப் பூர்த்தியான அதிகாரம் இருக்கவேண்டும். யூனியனுடைய அக்கறையும் அதைச் சேர்ந்த சங்கங்களின்மீது ஏன் யூனியன்களுக்குப் பூர்த்தியான அதிகாரம் கொடுக்கக்கூடாது. அப்படிச் செய்யும்போது சங்கங்களுக்குப் பணம் உதவிசெய்யும் தொழிலை யூனியனுக்கே கொடுக்க நேர்ந்தாலும் அதைச் செய்வதற்கு ஆலசியம் இருக்கக்கூடாது. அதனால் யூனியனைச் சேர்ந்த சங்கங்கள் தாங்கள் பெறும் பணத்துக்குச் சிறிது அதிக வட்டி கொடுக்க நேர்ந்தாலும் பாதகமில்லை. இந்த விஷயங்களிலெல்லாம் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்களிடமிருந்து வேண்டிய ஆலோசனையையும் உதவியையும் பெறுவீர்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் யூனியன் வேண்டுமென்ற கோரிக்கை உங்களிடமிருந்து வரவேண்டும்.

14. இந்த ஜில்லாவில் ஐக்கிய இயக்கம் இப்போதிருக்கும் நிலைமையில் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது அவசரமாயில்லை. யூனியன் செய்வதற்

காகப் பல இடத்தில் சில சங்கங்களை ஸ்தாபிக்கும்படி நேரலாம். இப்படிச் செய்வதல்லாமல், ஏற்கனவே 200 சங்கங்கள் இருக்கிற உங்கள் ஜில்லாவில் இன்னும் சங்கங்களை அதிகப்படுத்தல் உசிதமாயில்லை. ஏனென்றால் இருக்கும் சங்கங்களைச் சீர்திருத்தி வேலை செய்வித்தால் ஐக்கிய இயக்கத்திற்கே மிகுந்த நன்மை உண்டாகும். எனது நண்பர் ஹானரெபில் மிஸ்டர் சுவாமிக்கண்ணு பிள்ளை சென்ற வருஷத்திய ரிபோர்ட்டில் சில சங்கங்களில் காணப்படும் குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார். கனவான்களே, உங்கள் சங்கங்களில் காணப்படும் குறைகளைத் தாமதமில்லாமல் கண்டுபிடித்து அவைகளைச் சரிபடுத்த நீங்கள் பார்க்கவேண்டும். இவ்வளவு நீண்டு வளரும் இந்த இயக்கத்தில் குறைகள் எப்போதாவது காணப்படாமல் இருக்காது என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. இப்போது நீங்கள் சங்கங்களைப் பெருக்குவதை நிறுத்தி செய்த காரியத்தை திரும்பவும் பார்த்து இருக்கும் குறைகளைச் சீர்திருத்தும் காலம் உங்கள் ஜில்லாவுக்கு வந்திருக்கிறதென்று நினைக்கிறேன். ஆகவே அடுத்தவருஷம் வரையில் யூனியனுக்காக வல்லாமல் புதுசங்கங்களை ஸ்தாபிக்காமல் இருக்கும் சங்கங்களைச் சீர்திருத்துவதில் கவனம் செலுத்துவீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

15. கவர்ன்மெண்ட் மேல்விசாரணையின் முக்கியத்தைக் குறித்து சில வார்த்தைகள் சொல்லுகிறேன். ஐக்கிய இயக்கம் பலப்படவேண்டுமானால் காலக்கிரமத்தில் அது உத்தியோகப்பற்றில்லாத ஜனங்களால் கையாடப்படவேண்டியது அவசியம். கவர்ன்மெண்டார் சங்கங்களின் மேல்விசாரணை தங்களினின்று பெரும்பாகம் பிரியவேண்டுமென்று சில வருஷங்களாகப் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஜனவரி மாதத்திலுங்கூட எப்போதும் உத்தியோகஸ்தர்களின் மேல் விசாரணையின் கீழ் இருப்பது சரியல்லவென்று சொன்னார்கள். வருஷாந்திர ரிபொர்ட்டில் ரிஜிஸ்திரார் எடுத்துக்காட்டின குறைகளை நீக்குவதற்குப் பரிகாரம் இருக்கும் குறைகளை விசாரித்துத் தெரிந்துகொள்ளவும் அவைகள் நடவாமல் எச்சரிக்கையாய்ப் பார்த்துவரவும் மெம்பர்களுக்கு எண்ணத்தை உண்டுபண்ணவேண்டுமென்றும் கூடுமானவரையில் சங்கங்களுக்குப் பணம் உதவும் உத்தியோகப்பற்றில்லாத ஜனங்களைக்கொண்டு மேல்விசாரணை செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள். கடைசியாய் இயக்கம் உத்தியோகப்பற்றில்லாத ஜனங்களால் கையாடப்படுவதற்கு இப்படிச் செய்வது வழியாக விருக்கும். இப்படி உத்தியோகப் பற்றில்லா ஜனங்கள் முன்வருவதற்கு நெடுங்காலம் செல்லுமாகையால் அவர்கள் வருவதற்கும் கவர்ன்மெண்ட் விலகுவதற்கும் மத்தியில் உள்ள காலத்தில் சங்கங்கள் மேல் விசாரணை செய்யப்படாமலிருக்க விரும்பமாட்டா. இந்த விஷயத்தில் உங்களுக்கு ஆயாசம் வேண்டாம். சென்ற டிசம்பர் மாதத்தில் மாக்ஷிமை தங்கிய கவர்னர் அவர்கள் எல்லாச் சங்கங்களுக்கும் பயங்கரமாய் இந்த விஷயத்தைப்பற்றி உறுதி சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதாவது "இனி வருங்காலத்தில் இந்த இயக்கம் கவர்ன்மெண்டார் உதவியில்லாமல் தானாகவே இயங்கும் நிலைமைக்கு வரலாம் அப்படி வருமென்று நான் நம்புகிறேன். ஆனால் அப்படிப்பட்ட காலம் இன்னும் வரவில்லை. கவர்ன்மெண்டினிடமிருந்து சங்கங்கள் அதிகமாய்ப் பணஉதவி பெறவில்லையென்பது திருப்தியை கொடுக்கிறது. இப்போது இன்ஸ்பெக்ஷன் செய்வதையும் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் இன்ஸ்பெக்ஷன் ஆடிட் பலத்தின்பேரில்தான் இந்த இயக்கத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. அப்படி இருக்கும் வரையில் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்ட வேலையைப் போதுமான சிப்பந்திகளைக்கொண்டு செவ்வையாய் நடத்தவேண்டும்."



16. கனவான்களே, கவர்ன்மெண்டின் தலைவரானவர் மேற்சொன்னவிதமாய் உறுதிசெல்லியபிறகு அந்த விஷயத்தில் உங்களுக்குப் பயம் வேண்டாம். உங்களுக்குக் கெடுதியுண்டாகும் வண்ணம் கவர்ன்மெண்ட் மேல்விசாரணை பெரும்பாகம் குறைவுபடும் காலம் வருவதற்குள் நீங்கள் அதைக் கைகொள்வதற்குத் தக்கவர்களாய்ச் செய்துகொண்டு பிறர் உதவியை எதிர்பாராமலே உங்கள் காரியத்தை நீங்களே செய்துகொள்ளவேண்டும். எனக்குப்பின் ரிஜிஸ்திராராய் வந்த மிஸ்டர் ராமசந்திரராவ் நான் விட்டகாலத்தில் இருந்த 68 சங்கங்களிருக்கும்போதே சங்கங்களை ஆழ்ந்து பரிசோதித்தல் கூடாது என்று நான் அவருக்குச் சொன்னதை "மேல் விசாரணை" என்னும் விஷயமாய் அவர் எழுதிய சிறந்த வியாசத்தில் சொல்லியிருக்கிறார். கவர்ன்மெண்ட் இன்ஸ்பெக்டர்களைக்கொண்டு எப்போதும் மேல்விசாரணை செய்வது சாத்தியமுமில்லை உசிதமுமல்ல வென்று அவர் அநுபவத்திலும் கண்டார். ஐக்கிய இயக்கத்தை ஒரு கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டாகச் செய்ய அவருக்கிஷ்டமில்லை. அவர் அபிப்பிராயத்தில் யூனியன்கள் ஏற்படும்வரையில் கவர்ன்மெண்டார் சங்கங்களின் மேல்விசாரணையைச் செய்யக்கடமைப் பட்டவர்கள். யூனியன் ஆக ஆக கவர்ன்மெண்ட் சிப்பந்திகள் குறையலாம். சென்ற மாகாணகான்பரென்ஸில் சங்கங்களின் மேல்விசாரணை காலக்கிரமத்தில் யூனியன்களுக்கும் பெடரல் பாங்குகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தது எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இந்தத் தீர்மானத்தை உங்கள் ஜில்லாவில் ஆசாரத்துக்குக் கொண்டுவரவேண்டும். ஆனால் எப்போதும் கவர்ன்மெண்டார் மேல்விசாரணையில் சிறிது பாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது இயக்கம் எப்படி இயங்கவேண்டும் என்னும் வழியை சுட்டிக்காட்ட பெரும்சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்களைக் கொண்டு நடத்துவதாயிருக்கும்.

17. நான் பேசி முடிக்குமுன் நீங்கள் எனக்கு நல்வரவு கூறினதற்கும், நான் சொன்னதை அமைதியோடு கேட்டதற்கும் வந்தனம் செய்கிறேன். எனது வியாசம் சிறிது நீண்டிருப்பதன்பொருட்டு பொறுத்துக்கொள்ள விரும்புகிறேன். நான் சொன்னவிஷயங்களில் பலவற்றைக்குறித்து அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றனவென்று எனக்குத் தெரியும். நான் சொன்னவையெல்லாம் நீங்கள் அப்படியே ஒப்புக்கொள்வீர்களென்று நான் வீணாய் நினைக்கவில்லை. நாம் இங்கே உங்களுடன் பேசவந்ததற்கென்றால் இயக்கம் இப்போதிருக்கும் நிலைமையில் நீங்கள் அவசியம் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை உங்கள் கவனத்துக்கு எடுத்துக் காட்டும்படி நான் உங்கள் முன்னிலையில் வந்தது. அப்படி நான் செய்ததாக ஏற்படுமானால் நான் இங்கே வீணாக வந்தவனாக நினைக்கமாட்டேன். நீங்கள் எல்லோரும் காரியசித்தியடைய வேண்டும் என்று நான் மனதார விரும்புகிறேன். இந்த ஜில்லாவில் நீங்கள் அடைந்திருக்கும் காரியசித்தி அதிகமாயிருந்தாலும் இன்னும் அதிகமாய் அடையவேண்டியிருக்கிறதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"

அதன் பிறகு கும்பகோணம் மிஸ்டர் T. S. சுப்பிரமணிய அய்யர் "கூட்டுறவின் சில லட்சியங்கள்" என்ற விஷயமாக ஒரு வியாஸம் படித்தார். "கிராமக் கிருஷிகர்கள் கடன்பட்டு இடர்ப்படுவதிலிருந்து அவர்களுக்கு நிவர்த்தி உண்டுபண்ணுவதே கூட்டுறவின் முதல் நோக்கம். இன்னும் கொஞ்சகாலத்துக்குள் இந்த நோக்கம் முழுவதும் நிறைவேறி விடலாம். அதன்பிறகு கூட்டுறவு முயற்சிக்கு வேலை இல்லாமல் சங்கங்கள் அழிந்துபோய்விட வேண்டியதா? கடனிலிருந்து நிவர்த்திப்பதே முக்கிய நோக்கமாயிருக்கக்கூடாது. கூட்டுறவால் அநேக நன்மைகளை லாபிக்கலாம்.

| ரிஜிஸ்டர் நெம்பர். | ஜில்லா. தாலூகா. சங்கத்தின் பெயர். | 1912-ஆம் ஜூன்மீ 30உ யிலிருந்த தொகை. பங்குத்தொகை. | மெம்பர்களிடமிருந்து க்ஷேம வாக்கினை கடன்களும் டிபாஸிட்டுகளும். | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து க்ஷேம வாக்கினை கடன்களும் டிபாஸிட்டுகளும். | இதரசங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்துக்கு தொழிலை நடத்த ஏற்பட்ட தனம். | 1911-12-வருஷத்தில் மெம்பர்களுக்கு அல்லது வேறு சங்கங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம். | 1911-12-ம் வருஷத்திற்கான நிகரலாபம். | 1911-12-ம் வருஷத்திற்கு கட்டுக்குப் பிறகு உள்ள ரிஸர்வ் நிதி. | தவணை தவறின. கேஸுகளின் சங்கியை. | தொகை | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | |
| 391 | சிவபுரம் ... | 222 | 40 | .. | 3500 | 3762 | 2091 | 112 | 175 | ... | ... | |
| 402 | அட்டணநாய்ப்பிடாரியூர்... | 616 | 7 | 7 | 4000 | 4630 | 3460 | 174 | 187 | ... | ... | |
| 409 | மேட்டுப்புதூர் ... | 343 | 59 | 7 | 5000 | 5409 | 1991 | 109 | 185 | ... | ... | |
| 410 | புதூர் புதுப்பாளயம் ... | 100 | ... | ... | 1500 | 1600 | 903 | 25 | 25 | ... | ... | |
| 411 | வாரபாளையம் ... | 223 | .. | ... | 3500 | 3723 | 2133 | 61 | 81 | 1 | 38 | |
| 414 | விருமுண்டாம்பாளையம் ... | 254 | 10 | 70 | 3500 | 3834 | 1881 | 75 | 135 | ... | ... | |
| 415 | சிறுகளஞ்சி ... | 61 | .. | ... | 1000 | 1061 | 700 | 9 | 15 | 2 | 100 | |
| 416 | கஞ்சிகோயில் ... | 290 | 58 | 252 | 5000 | 5600 | 3095 | 95 | 152 | ... | ... | |
| 417 | வடமுகம் காங்கேயம் பாளயம் ... | 282 | 30 | ... | 3500 | 3812 | 2375 | 58 | 109 | ... | ... | |
| 422 | தாலவாய்ப்பாளையம் ... | 174 | ... | ... | 3000 | 3174 | 1175 | 77 | 97 | ... | ... | |
| 423 | தடுபட்டி ... | 125 | 44 | 47 | 2000 | 2216 | 1640 | 30 | 32 | ... | ... | |
| 488 | காமாண்டபாளையம் ... | 136 | 2 | ... | 2000 | 2138 | 865 | 41 | 46 | ... | ... | |
| 501 | மூகாசிபிடாரியூர் ... | 756 | 20 | ... | 5000 | 5776 | 4469 | 115 | 155 | ... | ... | |
| 665 | கூனம்பட்டி ... | 152 | ... | ... | 2500 | 2652 | 2650 | 18 | 18 | ... | ... | |
| 696 | நல்லகவண்டம் பாளையம்... | 310 | ... | 15 | 5000 | 5325 | 5350 | 58 | 58 | ... | ... | |
| 719 | நிச்சம்பாளையம் ... | 147 | ... | ... | 2000 | 2147 | 2200 | 15 | 15 | .. | ... | |
| 720 | குன்னத்தூர் ... | 476 | ... | ... | 4000 | 4476 | 4860 | 110 | 110 | 7 | 210 | |
| 723 | வேள்ளோரிவேளி ... | 233 | ... | ... | 4000 | 4233 | 4340 | 29 | 29 | ... | ... | |
| 795 | நாமக்கல்பாளையம் ... | 329 | ... | ... | 4500 | 4829 | 4805 | 62 | 62 | ... | ... | |
| 838 | முதலிகவுண்டன்வலசு ... | 98 | ... | ... | 1300 | 1398 | 1400 | 4 | 4 | ... | ... | |
| 908 | புரவியகவுண்டன் வலசு.... | 176 | ... | ... | 3000 | 3176 | 3200 | 10 | 10 | ... | ... | |
| | தாராபுரம் தாலூகா. | | | | | | | | | | | |
| 264 | சிவமலை ... | 430 | ... | ... | 3000 | 3430 | 3045 | 84 | 147 | 12 | 1108 | |
| 317 | காங்கயம் ... | 640 | 16 | ... | 3400 | 4056 | 2780 | 169 | 309 | 14 | 676 | |
| | பல்லடம் தாலூகா. | | | | | | | | | | | |
| 546 | சூலூர் ... | 1482 | 55 | 10 | 9000 | 10547 | 9822 | 310 | 409 | ... | ... | |
| 671 | சோமனூர் ... | 123 | ... | ... | 3000 | 3123 | 3100 | 14 | 14 | 1 | 100 | |
| 806 | மனுவாரை ... | 90 | ... | ... | 4000 | 4090 | 4090 | —5 | ... | ... | ... | நஷ்டம். |
| 815 | ராசிபாளையம் ... | 150 | ... | ... | 2000 | 2150 | 2140 | 24 | 24 | ... | ... | |
| 816 | ?வலம்பாளையம் ... | 94 | ... | ... | 1000 | 1094 | 1125 | 9 | 9 | ... | ... | |
| | உடுமலைபேட்டை தாலூகா. | | | | | | | | | | | |
| 360 | காரத்தொழுவு ... | 588 | 500 | 5817 | ... | 6905 | 2810 | 199 | 389 | 6 | 208 | |
| | அவனாசி தாலூகா. | | | | | | | | | | | |
| 757 | தோலம்பாளையம் ... | 239 | ... | ... | 3500 | 3739 | 3725 | 20 | 20 | ... | ... | |

| ரிஜிஸ்டர் நெம்பர் | ஜில்லா தாலூகா சங்கத்தின் பெயர். | 1912-ஞு ஜூன்மீ 30உ யிலிருந்த தொகை. பங்குத்தொகை. | மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாசிட்டுகளும். | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாசிட்டுகளும். | இதர சங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்தின் தொழிலை நடத்த ஏற்பட்ட தனம். | 1911-12-ம் வருஷத்தில் மெம்பர்களுக்கு அவர்கள் கொடுக்க வேண்டிய கடன்களின் மொத்தம் | 1911-12-ம் வருஷத்திற்கான நிகரலாபம். | 1911-12-ம் வருஷத்திற்கு ஆடிட்டிக்குப் பிறகு உள்ள ரிசர்வ் நிதி. | தவணை தவறின. கடன்களின் சங்கியை. | தவணை தவறின. தொகை | ஷரா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5* | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | |
| | திருச்சினப்பள்ளி ஜில்லா. | | | | | | | | | | | |
| | உடையார்பாளயம் தாலூகா. | | | | | | | | | | | |
| 68 | ஜயங்கொண்ட சோழபுரம். | 2299 | 623 | .. | 18600 | 21522 | 9946 | 518 | 1736 | 2 | 48 | |
| 93 | திருமலைவாடி .. | 1465 | ... | ... | 6450 | 7915 | 3943 | 611 | 615 | 2 | 134 | |
| 198 | உடையார் பாளையம் ... | 1122 | 167 | .. | 6390 | 7679 | 4830 | 198 | 274 | 4 | 280 | |
| 199 | தாதம்பட்டி பழூர் ... | 322 | ... | 20 | 1800 | 2142 | 688 | 55 | 92 | 1 | 9 | |
| 200 | மின்சுருட்டி ... | 1026 | ... | ... | 6500 | 7526 | 7845 | 174 | 314 | ... | . | |
| 203 | கீழ்கவுண்டன் குரிச்சி .. | 478 | 50 | ... | 3150 | 3678 | 50 | 111 | 311 | ... | ... | |
| 285 | கள்ளேரி ... | 1908 | ... | ... | 11300 | 13208 | 8985 | 449 | 760 | ... | ... | |
| 531 | கோடாலி கருப்பூர் ... | 226 | 304 | ... | 6000 | 6530 | 4514 | 127 | 145 | ... | ... | |
| 538 | எட கண்ணி ... | 96 | ... | ... | 3700 | 3796 | 1621 | 57 | 67 | ... | ... | |
| 548 | பொர்ப்பதஞ்சநல்லூர் ... | 209 | ... | .. | 7000 | 7209 | 4529 | 101 | 124 | 9 | 409 | |
| 549 | சித்தாமணி ... | 88 | .. | ... | 2000 | 2088 | 570 | 52 | 42 | ... | ... | |
| 550 | உடையார்பாளயம் ஜமீன் கோடங்குடி ... | 117 | ... | .. | 3700 | 3817 | 1580 | 73 | 92 | ... | ... | |
| 587 | அணைக்கூடம் ... | 169 | ... | .. | 7000 | 7169 | 7825 | 123 | 123 | ... | ... | |
| 588 | நாயகரைப்பிரியல் ... | 102 | ... | . | 4000 | 4102 | 4430 | 32 | 32 | ... | ... | |
| 659 | கொக்குடி ... | 206 | ... | . | 9600 | 9806 | 9535 | 65 | 65 | ... | ... | |
| | பெரம்பலூர் தாலூகா. | | | | | | | | | | | |
| 69 | பெரம்பலூர் ... | 1142 | 66 | 22 | 4670 | 5900 | 5005 | 128 | 432 | 3 | 156 | |
| 660 | கல்லகம் ... | 149 | ... | .. | 5300 | 5449 | 5165 | 38 | 38 | ... | ... | |
| | முசிரி தாலூகா. | | | | | | | | | | | |
| 179 | கோலக்குடி | 292 | ... | ... | 3265 | 3557 | 929 | 74 | 222 | 2 | 100 | |
| 180 | அப்பண நல்லூர் ... | 94 | ... | ... | 640 | 734 | 270 | 13 | 51 | 2 | 120 | |
| 183 | நாகய நல்லூர் ... | 562 | 22 | ... | 8800 | 9384 | 8072 | 35 | 411 | ... | ... | |
| 195 | தோட்டியம் ... | 212 | ... | ... | 1475 | 1687 | 300 | 53 | 152 | 1 | 100 | |
| 256 | ஆலத்துடையம்பட்டி ... | 57 | ... | .. | 654 | 661 | ... | 5 | 5 | 3 | 600 | |
| 257 | கரிகாலி ... | 252 | ... | 5 | 7600 | 7857 | 8461 | 116 | 153 | ... | ... | |
| 265 | களத்தூர் ... | 138 | ... | ... | 2900 | 3038 | 3176 | 106 | 155 | ... | 1213 | |
| 813 | நெய்க்குளம் ... | 61 | ... | ... | 1000 | 1061 | 1025 | —11 | ... | ... | ... | நஷ்டம். |
| 814 | சிறுகனூர் ... | 63 | ... | ... | 600 | 663 | 900 | —5 | ... | ... | ... | நஷ்டம். |
| | திருச்சினப்பள்ளி தாலூகா | | | | | | | | | | | |
| 30 | லால்குடி ... | 3290 | 17902 | 4927 | *1400 | 27519 | 13495 | 351 | 2850 | 2 | 150 | |
| 237 | சமயபுரம் ... | 168 | ... | ... | 4300 | 4468 | 750 | 126 | 176 | 3 | 365 | |

* கவர்ன்மெண்டாரிடமிருந்து பெற்ற கடன் ரூ. 1400 சேர்ந்தது.

| ரிஜிஸ்டர் நெம்பர். | ஜில்லா<br>தாலுகா<br>சங்கத்தின் பெயர் | 1912-வது ஜூன் மீ 30உ யிலிருந்த தொகை | | | | | 1911-12-ல் மெம்பர்களுக்கு அல்லது சங்கங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம். | 1911-12-ம் வருஷத்திற்கான இலாபம். | 1911-12-ம் வருஷத்து ஆடிட்டுக்குப் பிறகு உள்ள க்ஷேம நிதி. | தவணை தவறின | | ஷரா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பங்குத் தொகை | மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும் | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும். | இதர சங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்துக்கு தொழிலே நடத்த ஏற்பட்ட தனம். | | | | கேஸுகளின் சங்கியை | தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | ரூ. | ரூ | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | |
| 238 | இருங்களூர் ... | 479 | ... | 225 | 12020 | 12724 | 2805 | 199 | 470 | ... | ... | |
| 273 | வானாடி ... | 406 | 2900 | 9124 | 4000 | 16430 | 13335 | 293 | 565 | ... | ... | |
| 683 | தோப்பை ... | 136 | ... | ... | 5000 | 5136 | 5140 | 32 | 32 | ... | ... | |
| 828 | வீரகளூர் ... | 312 | ... | ... | 7200 | 7512 | 7520 | 71 | 71 | ... | ... | |
| | குழித்தலை தாலுகா. | | | | | | | | | | | |
| 194 | மனவாஸி ... | 327 | ... | ... | 10000 | 10327 | 10547 | 137 | 320 | 4 | 180 | |
| 196 | மலையடிபட்டி ... | 212 | 27 | 320 | 5860 | 6419 | 3059 | 123 | 261 | ... | ... | |
| 197 | மணப்பாறை ... | 253 | ... | ... | 4100 | 4353 | 250 | 94 | 230 | 21 | 9210 | |
| 213 | கே. பெரியபட்டி ... | 114 | ... | ... | 3600 | 3714 | 785 | 64 | 131 | 1 | 200 | |
| 418 | குழித்தலை ஜமீன் பன்னப்பட்டி ... | 130 | ... | ... | 5000 | 5130 | 2147 | 102 | 99 | 1 | 200 | |
| 600 | குமாரவாடி ... | 110 | ... | ... | 3000 | 3110 | 3125 | 27 | 27 | ... | ... | |
| 602 | கே. உடையப்பட்டி ... | 84 | ... | ... | 3500 | 3584 | 3585 | 26 | 26 | ... | ... | |
| 695 | முள்ளிப்பாடி ... | 105 | ... | ... | 3000 | 3105 | 3060 | 3 | 3 | ... | ... | |
| | நாமக்கல் தாலுகா. | | | | | | | | | | | |
| 20 | வேலூர் ... | 5342 | 4387 | 21858 | 3650<br>*1400 | 36637 | 33245 | 189 | 2549 | 2 | 187 | |
| 207 | பரமாத்தி ... | 464 | 3 | ... | 2100 | 2567 | 2495 | 91 | 225 | 2 | 147 | |
| 210 | வெங்கரை ... | 658 | ... | ... | 3350 | 4008 | 600 | 208 | 457 | ... | ... | |
| 216 | துத்திகுளம் ... | 632 | 1171 | 800 | 2200 | 4803 | 2840 | 132 | 341 | ... | ... | |
| 328 | காளப்பநாய்க்கன் பட்டி ... | 1094 | 2063 | ... | 4400 | 7557 | 1100 | 238 | 623 | ... | ... | |
| 342 | சேந்தமங்கலம் ... | 376 | ... | 200 | 1900 | 9076 | 1275 | 44 | 140 | 1 | 100 | |
| 621 | ஓரவாண்டு ... | 226 | 4 | ... | 6000 | 6230 | 6410 | 49 | 49 | ... | ... | |
| 622 | மோஹனூர் ... | 322 | 108 | ... | 8000 | 8430 | 8495 | 54 | ... | ... | ... | |
| 737 | பேட்டைபாளையம் ... | 145 | .... | ... | 3000 | 3145 | 3154 | 17 | 17 | ... | ... | |
| 796 | மேட்டுப்பாளையம் ... | 67 | ... | ... | 1000 | 1067 | 1020 | ... | ... | ... | ... | |
| 797 | காருகுடி ... | 116 | ... | ... | 2000 | 2116 | 2066 | 13 | 13 | ... | ... | |
| 863 | குமாரிபாளையம் ... | 179 | ... | ... | 5000 | 5179 | 5093 | 30 | 30 | ... | ... | |
| 882 | தூரூர் ... | 119 | ... | ... | 2000 | 2119 | 2130 | 13 | 13 | .. | ... | |
| | கரூர் தாலுகா. | | | | | | | | | | | |
| 598 | வார்கல் ... | 444 | 50 | ... | 15000 | 15494 | 16012 | 154 | 154 | ... | ... | |
| 656 | ராஜபுரம் ... | 178 | ... | ... | 5000 | 5178 | 5551 | 40 | 40 | ... | ... | |
| 879 | நேரூர் ... | 114 | ... | ... | 2000 | 2114 | 1865 | —1 | ... | ... | ... | நஷ்டம். |
| 883 | பாஞ்சமாதேவி ... | 200 | 25 | ... | 3000 | 3225 | 3255 | 17 | 17 | ... | ... | |

* ஹாமில்டன் நிதியிலிருந்து பெற்ற ரூ. 1400 கடன் சேர்ந்தது.

| ரிஜிஸ்டர் நெம்பர். | ஜில்லா தாலுகா. சங்கத்தின் பெயர். | 1912-ஆம் ஜூன்மீ 30உ யிலிருந்த தொகை. பங்குத்தொகை. | மெம்பர்களிடமிருந்து வாங்கின கடன்களும் டிபாசிட்டுகளும். | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து வாங்கின கடன்களும் டிபாசிட்டுகளும். | இதர சங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்துக்கு தொழிலை நடத்த ஏற்பட்ட தனம். | 1911-12-ம் வருஷத்தில் மெம்பர்களுக்கு அல்லது சங்கங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம். | 1911-12-ம் வருஷத்திற்கான லாபம். | 1911-12-ம் வருஷத்து முடிவுக்குப் பிறகு உள்ள சேம நிதி. | தவணை தவறின. கேஸ்களின் சங்கியை. | தவணை தவறின. தொகை. | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | மதுரை ஜில்லா. திண்டுக்கல் தாலூகா. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | |
| 221 | வடசந்தூர் ... | 112 | ... | 1500 | 1500 | 3112 | 2105 | 57 | 72 | 1 | 3 | |
| 222 | கோபிலூர் ... | 179 | ... | ... | 4900 | 5079 | 2070 | 98 | 143 | 2 | 35 | |
| 688 | கொசவப்பட்டி ... | 168 | ... | ... | 5000 | 5168 | 5240 | 28 | 28 | ... | ... | |
| 690 | பஞ்சம்பட்டி . | 290 | ... | ... | 5000 | 5290 | 5565 | 78 | 78 | 2 | 210 | |
| 691 | ஆர்-சோம்பை .. | 162 | ... | ... | 3500 | 3662 | 3665 | 20 | 20 | ... | ... | |
| 692 | ரெட்டியப்பட்டி ... | 124 | ... | ... | 3000 | 3124 | 3099 | 14 | 14 | ... | ... | |
| 753 | கூட்டத்துப்பட்டி ... | 109 | ... | .. | 3000 | 3109 | 3100 | 8 | 8 | ... | ... | |
| | பெரியகுளம் தாலூகா. | | | | | | | | | | | |
| 145 | பெரியகுளம் ... | 2543 | 1544 | 7823 | ... | 11910 | 5495 | 524 | 1270 | 7 | 1148 | |
| | திருமங்கலம் தாலூகா. | | | | | | | | | | | |
| 439 | வௌந்தூர் ... | 134 | ... | 3500 | ... | 3634 | 50 | 86 | 141 | ... | ... | |
| 440 | சித்தப்பட்டி ... | 175 | . | ... | 5500 | 5675 | 3055 | 95 | 138 | 7 | 900 | |
| 441 | உசிலம்பட்டி ... | 177 | ... | ... | 10000 | 10177 | 4069 | 170 | 265 | 4 | 228 | |
| 442 | கிரிப்பட்டி ... | 243 | ... | ... | 5000 | 5243 | 2018 | 128 | 219 | 8 | 153 | |
| 447 | அரிபப்பட்டி ... | 117 | ... | 4000 | ... | 4117 | 95 | 108 | 163 | ... | ... | |
| 448 | வெள்ளமலைப்பட்டி ... | 234 | ... | ... | 5000 | 5234 | 1269 | 97 | 178 | 4 | 81 | |
| 463 | வேப்பநத்து ... | 124 | .. | ... | 4500 | 4624 | 2589 | 67 | 104 | ... | ... | |
| 464 | கள்ளப்பட்டி ... | 141 | ... | ... | 4600 | 4741 | 1658 | 72 | 118 | 4 | 162 | |
| 465 | காட்டாட்டம்பட்டி ... | 163 | ... | ... | 4500 | 4663 | 1337 | 86 | 137 | ... | ... | |
| 466 | ஆயமேட்டுப்பட்டி ... | 110 | ... | .. | 4000 | 4110 | 1210 | 43 | 64 | 16 | 962 | |
| 467 | போதம்பட்டி ... | 152 | .. | ... | 4500 | 4652 | 2032 | 71 | 89 | 16 | 612 | |
| 551 | கட்டப்பட்டி .. | 155 | .. | 1500 | 3500 | 5155 | 4675 | 101 | 96 | | ... | |
| 552 | அய்ஞு நளம் ... | 161 | .. | 4000 | ... | 4161 | 930 | 107 | 113 | ... 1 | 50 | |
| 553 | மூதியப்பட்டி ... | 156 | ... | 2500 | 2000 | 4656 | 2556 | 81 | 79 | 8 | 122 | |
| 554 | ஐயம்பட்டி ... | 132 | ... | 4500 | ... | 4632 | 1900 | 106 | 92 | 1 | 200 | |
| 555 | காகாடம்பட்டி ... | 135 | ... | 3000 | 2000 | 5135 | 1150 | 125 | 125 | .. | ... | |
| 556 | குரவக்குடி ... | 112 | ... | 3500 | ... | 3612 | 2280 | 82 | 70 | 3 | 110 | |
| 557 | திருமங்கலம் பாப்பா பட்டி ... | 232 | ... | 4000 | 600 | 4832 | 1788 | 127 | 136 | ... | ... | |
| 558 | மெய்க்கிளார்பட்டி ... | 112 | ... | 3000 | 1500 | 4612 | 2337 | 59 | 59 | 3 | 80 | |
| 560 | பெருமாபட்டி ... | 136 | ... | 5000 | ... | 5136 | 2840 | 109 | 114 | 12 | 533 | |
| 561 | நல்லதேவன் பட்டி ... | 138 | ... | 4500 | ... | 4638 | 2548 | 98 | 99 | 3 | 192 | |
| 562 | திருமங்கலம் மலைப் பட்டி ... | 202 | .. | 3000 | 1500 | 4702 | 2477 | 89 | 120 | 10 | 396 | |
| 563 | நாஞர்பட்டி ... | 115 | ... | 4000 | ... | 4115 | 2235 | 79 | 72 | ... | ... | |
| 564 | வன்னயபட்டி ... | 127 | ... | 5000 | ... | 5127 | 3165 | 96 | 97 | 3 | 150 | |

| ரிஜிஸ்டர் நெம்பர். | ஜில்லா. தாலூகா. சங்கத்தின் பெயர். | 1912-ஞு ஜூன்மீ 30உ யிலிருந்த தொகை. | | | | | 1911-12-ம் வருஷத்தில் மெம்பர்களுக்கு அல்லது வேறு சங்கங்களுக்குப் பட்டுவாடா செய்த கடன்களின் மொத்தம். | 1911-12-ம் வருஷத்திற்கான நிகரலாபம். | 1911-12-ம் வருஷத்தில் நிர்ப்பத்தமாக ஏற்பட்ட நிதிக்குப் பிறகு உள்ள க்ஷேம நிதி. | தவணை தவறின. | | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பங்குத் தொகை. | மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும். | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும். | இதர சங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்துக்கு கிடைத்த தொழிலுக்கு ஏற்பட்ட தனம். | | | | கேஸுகளின் சங்கியை. | தொகை. | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | |
| 888 | கணவாய்ப்பட்டி ... | 86 | ... | ... | ... | 86 | 85 | 6 | 6 | ... | ... | |
| 889 | அயோதிபட்டி ... | 55 | ... | ... | 2500 | 2555 | 2260 | —19 | ... | ... | ... | நஷ்டம். |
| 890 | வாகூரணி ... | 111 | ... | ... | 4000 | 4111 | 3095 | —15 | ... | ... | ... | நஷ்டம். |
| 891 | குருவிலம்பட்டி ... | 122 | ... | ... | 4000 | 4122 | 4130 | —1 | ... | ... | ... | நஷ்டம். |
| 895 | கவண்டன்பட்டி ... | 252 | ... | ... | 4600 | 4852 | 4829 | 45 | 85 | 3 | 240 | |
| 896 | விளாம்பட்டி ... | 82 | ... | ... | 3000 | 3082 | 2865 | —11 | ... | ... | ... | நஷ்டம். |
| 909 | லிங்கப்பநாய்க்கனூர் ... | 162 | ... | ... | ... | 162 | 80 | 29 | 29 | ... | ... | |
| 910 | வில்லணி ... | 120 | ... | ... | 1100 | 1220 | 1211 | 2 | 2 | 3 | 303 | |
| | மதுரை தாலூகா. | | | | | | | | | | | |
| 81 | ஒத்தக்கடை ... | 1096 | ... | ... | 13000 | 14096 | 9530 | 261 | 868 | 17 | 2490 | |
| 763 | மாடகுளம் ... | 132 | ... | ... | 2500 | 2632 | 2350 | 30 | 30 | ... | ... | |
| 862 | திருப்பரங்குன்றம் ... | 148 | ... | ... | 2000 | 2148 | 2150 | —4 | ... | ... | ... | நஷ்டம். |
| | நிலக்கோட்டை தாலூகா. | | | | | | | | | | | |
| 755 | சிலுக்குவார்ப்பட்டி ... | 141 | ... | ... | 4500 | 4641 | 4661 | 18 | 18 | ... | ... | |
| | ராமநாதபுரம் ஜில்லா. | | | | | | | | | | | |
| | சாத்தூர் தாலூகா. | | | | | | | | | | | |
| 147 | வடமலைபுரம் ... | 1041 | 227 | 128 | 8900 | 10296 | 12060 | 107 | 364 | 6 | 598 | |
| 292 | திருத்தங்கல் ... | 304 | 25 | ... | 4550 | 4879 | 2862 | 63 | 138 | 2 | 74 | |
| 412 | ஆலமரத்துப்பட்டி ... | 326 | 123 | 13 | 6400 | 6862 | 4657 | 128 | 154 | 29 | 1699 | |
| 413 | பெத்தசேத்திப்பட்டி ... | 123 | 20 | ... | 2000 | 2143 | 1770 | 39 | 43 | 6 | 435 | |
| 420 | செங்கமலைப்பட்டி ... | 153 | 3 | 14 | 2700 | 2870 | 4584 | 46 | 41 | ... | ... | |
| 433 | வெற்றிலையுறணி ... | 334 | 73 | ... | 5000 | 5407 | 5761 | 11 | 17 | 1 | 25 | |
| 434 | ராமலிங்கபுரம் ... | 197 | ... | ... | 4000 | 4197 | 2598 | 82 | 74 | 30 | 1393 | |
| 435 | மாரனேரி ... | 441 | ... | ... | 4500 | 4941 | 525 | 176 | 192 | 51 | 4258 | |
| 443 | மங்கலம் ... | 515 | ... | ... | 8000 | 8515 | 6474 | 95 | 130 | 19 | 781 | |
| 444 | காளயார்குரிச்சி ... | 120 | ... | ... | 2500 | 2620 | 2430 | 30 | 31 | 2 | 100 | |
| 450 | மேலமாத்தூர் ... | 211 | ... | ... | 4700 | 4911 | 4015 | 90 | 87 | 11 | 500 | |
| 452 | வடப்பட்டி ... | 201 | ... | ... | 4200 | 4401 | 3190 | 114 | 138 | ... | ... | |
| 458 | அமாத்தூர் ... | 163 | ... | ... | 3500 | 3663 | 3457 | 61 | 62 | 13 | 779 | |
| 474 | மேல்தாயிலுப்பட்டி ... | 264 | ... | ... | 3500 | 3764 | 4350 | 110 | 135 | 10 | 1767 | |
| 477 | தடங்கம் ... | 254 | ... | 17 | 5000 | 5271 | 7539 | 95 | 97 | 3 | 105 | |
| 484 | வெள்ளையபுரம் ... | 215 | ... | ... | 4600 | 4815 | 4455 | 105 | 117 | ... | ... | |
| 532 | காட்டசின்னூட்டிப்பட்டி | 127 | 20 | ... | 2800 | 2947 | 2190 | 36 | 55 | 1 | 200 | |
| 533 | சக்ரவாரப்பட்டி ... | 175 | ... | 14 | 4000 | 4189 | 4170 | 66 | 77 | 1 | 100 | |
| 559 | பெரியவாடியூர் ! ... | 138 | ... | ... | 3000 | 3108 | 1515 | 41 | 56 | 17 | 1510 | |
| 583 | கன்னவனியகம்பட்டி ... | 156 | 10 | ... | 2500 | 2666 | 2573 | 47 | 51 | ... | ... | |

| ரிஜிஸ்டர் நெம்பர். | ஜில்லா. தாலுகா. சங்கத்தின் பெயர். | 1912-ளு ஜூன்மீ 30உ யிலிருந்த தொகை: பங்குத்தொகை. | மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும். | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும். | இதர சங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்துக்கு தொழிலை நடத்த ஏற்பட்ட தனம். | 1911-12-ம் வருஷத்தில் மெம்பர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம். | 1911-12-ம் வருஷத்திற்கான லாபம். | 1911-12-ம் வருஷத்து முடிவில் இருந்த ரிஸர்வ் நிதி. | தவணை தவறின: கேஸுகளின் எண்ணிக்கை. | தவணை தவறின: தொகை. | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | |
| 584 | பூவநாதபுரம் ... | 406 | 25 | 25 | 7000 | 7456 | 6843 | 110 | 128 | 6 | 325 | |
| 586 | சாத்தூர் அனேக்குட்டம் ... | 81 | ... | ... | 1500 | 1581 | ... | 44 | 40 | 16 | 1420 | |
| 589 | சால்வார்ப்பட்டி ... | 375 | ... | ... | 7500 | 7875 | 7485 | 116 | 148 | 3 | 140 | |
| 590 | சுப்ரமணியபுரம் ... | 321 | ... | ... | 7500 | 7821 | 7625 | 97 | 106 | ... | ... | |
| 614 | தோல்வார்ப்பட்டி ... | 213 | 9 | ... | 4600 | 4822 | 4825 | 4 | 4 | ... | ... | |
| 653 | ஆவுடையாபுரம் ... | 170 | ... | ... | 3500 | 3670 | 4075 | —13 | ... | ... | ... | நஷ்டம். |
| 654 | சின்னய்யபுரம் ... | 417 | ... | ... | 4820 | 5237 | 5230 | 10 | 10 | 2 | 100 | |
| 664 | இஞ்சார் ... | 167 | 4 | ... | 3000 | 3171 | 3175 | 30 | 30 | 1 | 25 | |
| 686 | முதலிப்பட்டி ... | 214 | 181 | ... | 4000 | 4395 | 4450 | 40 | 40 | ... | ... | |
| 724 | அப்பணநாய்க்கர்பட்டி ... | 68 | ... | ... | 1500 | 1568 | 1510 | —14 | ... | ... | ... | நஷ்டம். |
| 752 | கோட்டூர் ... | 160 | ... | ... | 3000 | 3160 | 3155 | 8 | 8 | ... | ... | |
| 824 | வேப்பிலைப்பட்டி ... | 29 | ... | ... | 1000 | 1029 | 1010 | —18 | ... | ... | ... | நஷ்டம். |
| 825 | வொட்டநத்தம் ... | 54 | ... | ... | 1300 | 1354 | 1320 | 21 | ... | ... | ... | |
| 839 | சின்னவாடி ... | 143 | ... | ... | 3000 | 3143 | 3135 | —6 | ... | ... | ... | நஷ்டம். |
| 943 | குமிங்குளம் ... | 131 | 1 | ... | ... | 132 | 50 | 14 | 14 | ... | ... | |
| | ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகா | | | | | | | | | | | |
| 239 | ஆயர்தருமம் ... | 80 | 2 | ... | 1300 | 1382 | 140 | 15 | 46 | ... | ... | |
| 240 | வெள்ளைப்பொட்டல் ... | 232 | ... | ... | 2800 | 3032 | 1903 | 44 | 81 | 21 | 697 | |
| 451 | தாசகுடி ... | 184 | ... | ... | 3200 | 3384 | 2297 | 53 | 66 | 4 | 885 | |
| 674 | வெள்ளையங்குளம் ... | 207 | 1 | ... | ... | 208 | 200 | 1 | 1 | ... | ... | |
| | சிவகங்கை தாலூகா. | | | | | | | | | | | |
| 733 | இடைக்காத்தர் ... | 202 | 1 | 103 | 7500 | 7806 | 8155 | 13 | 13 | ... | ... | |
| 734 | மிஞ்சல்பட்டணம் ... | 56 | 1 | ... | 1500 | 1557 | 1515 | —29 | ... | ... | ... | நஷ்டம். |
| 735 | மானுமதுரை ... | 466 | 305 | ... | 5000 | 5771 | 5950 | 125 | 125 | 1 | 210 | |
| 855 | பெரியகோட்டை ... | 91 | 2 | ... | 2000 | 2093 | 2075 | —13 | ... | ... | ... | நஷ்டம். |
| 856 | வேம்பத்தூர் ... | 41 | 4 | ... | 1500 | 1545 | 1532 | - 21 | ... | ... | ... | நஷ்டம். |
| 966 | ராஜகம்பீரம் ... | 62 | 1 | ... | ... | 63 | 50 | —5 | ... | ... | ... | நஷ்டம். |
| | திருப்புவனம் தாலூகா. | | | | | | | | | | | |
| 726 | சொக்கநாதரிருப்பு ... | 75 | ... | ... | 1500 | 1575 | 1587 | — 6 | ... | ... | ... | நஷ்டம். |
| | மானுமதுரை தாலூகா. | | | | | | | | | | | |
| 726 | அனுக்கொண்டான் ... | 174 | 174 | ... | 4000 | 4348 | 4357 | 10 | 10 | ... | ... | |
| 736 | சவரியப்பட்டணம் ... | 188 | ... | ... | 3000 | 3188 | 3215 | —9 | ... | ... | ... | நஷ்டம். |
| 881 | சாலை இப்பக்குளம் ... | 228 | 148 | ... | 4000 | 4376 | 4461 | —8 | ... | ... | ... | நஷ்டம். |
| 886 | பனைக்குடி ... | 133 | 68 | ... | 2500 | 2701 | 2810 | —4 | ... | ... | ... | நஷ்டம். |
| 887 | உலக்குடி ... | 200 | 180 | ... | 5000 | 5380 | 5390 | —7 | ... | ... | ... | நஷ்டம். |

| ரிஜிஸ்டர் நெம்பர். | ஜில்லா. தாலூகா. சங்கத்தின் பெயர். | 1912-ஞு ஜூன்மீ 30௳ யிலிருந்த தொகை. | | | | | 1911-12-ம் வருஷத்தில் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம். | 1911-12-ம் வருஷத்திற்கான லாபம். | 1911-12-ம் வருஷத்து முடிவிலிருந்த ரிசர்வ் நிதி. | தவணை தவறின. | | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பங்குத்தொகை. | மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின டெபாஸிட்டுகளும் கடன்களும். | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின டெபாஸிட்டுகளும் கடன்களும். | இதர சங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்துக்கு தொழிலை நடத்த ஏற்பட்ட தனம். | | | | கேஸுகளின் எண்ணிக்கை. | தொகை. | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | |
| | பரமகுடி தாலூகா. | | | | | | | | | | | |
| 727 | பரமகுடிப்புத்தூர் ... | 199 | 1 | ... | 1500 | 1700 | 1200 | 29 | 29 | ... | ... | |
| | திருநெல்வேலி ஜில்லா. | | | | | | | | | | | |
| | கோயில்பட்டி தாலூகா. | | | | | | | | | | | |
| 6 | விளாடிகுளம் ... | 825 | 867 | 872 | *2510 | 5074 | 4652 | 267 | 1256 | 3 | 207 | |
| 13 | நம்பிபுரம் ... | 1360 | ... | †210 | 150 | 1720 | 2200 | 128 | 901 | 13 | 392 | |
| 918 | இட்டன்குளம் ... | 46 | ... | ... | ... | 46 | ... | —9 | ... | ... | ... | நஷ்டம். |
| | திருநெல்வேலி தாலூகா. | | | | | | | | | | | |
| 675 | கெங்கைகொண்டான் ... | 237 | 10 | ... | 3000 | 3247 | 3625 | —14 | ... | ... | ... | நஷ்டம். |
| | ஸ்ரீவைகுண்டம் தாலூகா. | | | | | | | | | | | |
| 678 | புதுக்கோட்டை ... | 101 | 10 | ... | 2400 | 2511 | 2385 | —24 | ... | ... | ... | நஷ்டம். |
| | தஞ்சாவூர் ஜில்லா. | | | | | | | | | | | |
| | தஞ்சாவூர் தாலூகா. | | | | | | | | | | | |
| 78 | ரிட்டை ... | 514 | 1795 | 2370 | ... | 4679 | 3440 | 116 | 271 | 1 | 39 | |
| 829 | மைக்கல்பட்டி ... | 115 | ... | ... | 700 | 815 | 835 | 14 | 14 | ... | ... | |
| 830 | வானரங்குடி ... | 177 | 100 | ... | 3000 | 3277 | 3300 | 33 | 33 | ... | ... | |
| 831 | திருக்காட்டுப்பள்ளி ... | 295 | 110 | 1029 | 2000 | 8434 | 7905 | 75 | 75 | ... | ... | |
| 832 | சாத்தனூர் ... | 232 | 173 | ... | 3300 | 3705 | 3600 | 40 | 40 | ... | ... | |
| 833 | மாரூர் ... | 114 | ... | ... | 1500 | 1614 | 1634 | 13 | 13 | ... | ... | |
| 834 | திருவாதி டீசர்ஸ் சொஸைடி ... | 36 | ... | ... | 400 | 436 | 425 | —7 | ... | ... | ... | நஷ்டம். |
| | கும்பகோணம் தாலூகா. | | | | | | | | | | | |
| 82 | பௌண்டரீகபுரம் ... | 1401 | 2000 | 10155 | ... | 13556 | 5020 | 318 | 1019 | 21 | 3148 | |
| 89 | அணைக்குடி ... | 415 | ... | ... | 500 | 915 | 326 | 46 | 212 | 15 | 345 | |
| 408 | பட்டீசுவரம் ... | 324 | ... | 2500 | 2500 | 5324 | 3848 | 83 | 132 | 1 | 50 | |
| 599 | பாண்டனல்லூர் ... | 54 | ... | ... | 600 | 654 | 600 | —8 | ... | ... | ... | நஷ்டம். |
| 759 | திப்பராஜபுரம் ... | 204 | ... | 630 | ... | 834 | 1832 | —5 | ... | ... | ... | நஷ்டம். |
| 927 | கொரநாட்டுக்கருப்பூர் ... | 114 | ... | ... | ... | 114 | ... | 2 | 2 | ... | ... | ... |
| 968 | நாச்சியார்கோவில் ... | 28 | ... | ... | ... | 28 | ... | —9 | ... | ... | ... | நஷ்டம். |
| | சீர்காழி தாலூகா. | | | | | | | | | | | |
| 79 | வள்ளுவக்குடி ... | 129 | ... | ... | 2200 | 2329 | 3055 | 86 | 394 | 4 | 287 | |
| | நன்னிலம் தாலூகா. | | | | | | | | | | | |
| 76 | சேங்காலிபுரம் ... | 1635 | 2399 | 2000 | ... | 6034 | 3340 | 200 | 680 | 5 | 410 | |

* கவர்ன்மெண்டாரிடமிருந்து பெற்ற கடன் ரூ. 510 சேர்ந்தது.

| ரிஜிஸ்டர் நெம்பர். | ஜில்லா. தாலூகா. சங்கத்தின் பெயர். | 1912-ஞ ஜூன்மீ 30உ யிலிருந்த தொகை. பங்குத்தொகை. | மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும். | மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும். | இதர சங்கங்களிலிருந்து கடன்கள். | இவ்விதமாக சங்கத்திற்கு தொழிலில் நடத்த ஏற்பட்ட தனம். | 1911-12-ம் வருஷத்தில் மெம்பர்களுக்கு அல்லது வேறு சங்கங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம். | 1911-12-ம் வருஷத்திற்கான நிகரலாபம். | 1911-12-ம் வருஷத்திற்குள்ள இருப்புக்குப் பிறகு க்ஷேம நிதி. | தவணை தவறின. கேஸ்களின் சங்கியை. | தவணை தவறின. தொகை | ஷெரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | | ரு. | |
| | மன்னார்குடி தாலூகா. | | | | | | | | | | | |
| 7 | நீடாமங்கலம் விவசாய பாங்கு | 3472 | 1396 | 3155 | 2000 | 10023 | 13915 | 106 | 1992 | 1 | 240 | |
| | திருத்துருப்பூண்டி தாலூகா | | | | | | | | | | | |
| 325 | பஞ்சநதிக்குளம் நடுச்சேத்தி | 263 | ... | ... | 4200 | 4463 | 300 | 99 | 251 | ... | ... | |
| 326 | வண்டுவாஞ்சேரி | 205 | ... | 500 | 2500 | 3205 | 1140 | 67 | 150 | ... | ... | |
| 421 | மருதூர் | 368 | ... | 1500 | 3900 | 5768 | 2820 | 156 | 254 | 1 | 180 | |
| 426 | பாண்டியன்கரை | 180 | ... | ... | 2500 | 2680 | 1854 | 48 | 71 | ... | ... | |
| 489 | வையகாரம்பலம் | 224 | ... | 1300 | 2000 | 3524 | 1910 | 76 | 93 | ... | ... | |
| | புதுக்கோட்டை தாலூகா. | | | | | | | | | | | |
| 31 | அணைக்காடு | ... | ... | 1200 | 4500 | 5700 | 3081 | 159 | 904 | 41 | 2585 | |
| 35 | ராஜாமடம் | ... | ... | ... | 2700 | 2700 | 503 | 40 | 27 | 29 | 1682 | |
| 480 | ஆலத்தூர் | 331 | ... | 900 | 8500 | 9731 | 5066 | 99 | 133 | 4 | 810 | |
| 481 | பலடாலி | 133 | 10 | 800 | 2000 | 2943 | 1560 | 67 | 85 | 2 | 330 | |
| 594 | முன்னூர்ப்பட்டிகாடு | 164 | ... | ... | 3500 | 3664 | 3889 | 50 | 50 | ... | ... | |
| 584 | மூடச்சேரி | 116 | ... | ... | 2000 | 2116 | 2110 | 19 | 19 | ... | ... | |
| | நாகப்பட்டணம் தாலூகா. | | | | | | | | | | | |
| 684 | இளையூர் | 477 | ... | 100 | 1500 | 2077 | 2160 | 113 | 113 | ... | ... | |
| 930 | குன்னியூர் | 35 | ... | ... | ... | 35 | ... | —5 | ... | ... | ... | நஷ்டம். |
| 931 | வாஞ்சியூர் | 79 | ... | ... | ... | 79 | ... | —4 | ... | ... | ... | நஷ்டம். |
| 932 | திருப்புனதி | 222 | ... | ... | ... | 222 | ... | 39 | 39 | ... | ... | |
| 933 | கள்ளிகுடி | 30 | ... | ... | ... | 30 | 20 | —6 | ... | ... | ... | நஷ்டம். |
| 934 | மாங்குடி | 61 | ... | ... | ... | 61 | ... | 1 | 1 | ... | ... | |
| | பாபநாசம் தாலூகா. | | | | | | | | | | | |
| 9 | மெலட்டூர் விவசாய பாங்கு | 4614 | 1025 | 4000 | 1000<br>*690 | 11329 | 9798 | 184 | 2065 | 11 | 900 | |
| 349 | ஆலங்குடிமாகாணம் | 566 | 137 | 2527 | 1540 | 4770 | 3226 | 89 | 152 | 3 | 75 | |
| 917 | பெருங்குடி | 24 | ... | ... | ... | 24 | ... | —1 | ... | ... | ... | நஷ்டம். |
| 928 | விருபாட்சிபுரம் | 23 | ... | ... | ... | 23 | ... | —9 | ... | ... | ... | நஷ்டம். |
| 929 | ஆதிச்சமங்கலம் | 16 | ... | ... | ... | 16 | ... | —10 | ... | ... | ... | நஷ்டம். |
| 941 | பாபராஜபுரம் | 17 | ... | ... | ... | 17 | ... | —10 | ... | ... | ... | நஷ்டம். |

* கவர்ன்மெண்டாரிடமிருந்து பெற்ற ரு. 690 கடன் சேர்ந்தது.



The South Indian Press, G., T. Madras.

# மதராஸ் புல்லிடின் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் V.] 1913-ம் ௵ செப்டம்பர் ௴ 10௳ [இலக்கம் 1.


## கூட்டுமுயற்சி முறையில் விவசாயச் சங்கங்களை ஸ்தாபித்தல்.

(ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்டிரார் ஆனரபில் திவான் பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை M. A, B. L., L. L. B., அவர்கள் எழுதியது.)

ஸெண்ட்ரல் அக்கிரிகல்சரல் கமிட்டியின் (Central Agricultural Committee) வேண்டுகோளின்படி, அதன் ஜாயிண்டு காரியதரிசிகளான ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் M. ஆதிநாராயணய்யா அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ N. பட்டாபிராமராவ் அவர்களும் ஸர்க்கார் விவசாய இலாகாவால் சோதனை செய்யப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாகுபடி வழிகளை ஜனங்களுக்கு நன்குவிளங்கும் விதம் கூட்டு முயற்சி விவசாயச் சங்கங்களை ஸ்தாபனஞ் செய்யத் தகுந்த கிராமங்கள் எவைகளென்று அறியும்பொருட்டு, சென்ற ஜூலை, ஆகஸ்ட்டு, செப்டம்பர் மாஸங்களில் இந்த ராஜதானி தென் ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்தார்கள். இவ்வித விவசாயச் சங்கங்கள் நிர்மாணஞ் செய்யும்பொருட்டே ஸெண்ட்ரல் அக்கிரிகல்சரல் கமிட்டி முக்கியமாய் ஏற்பட்டது. ஆனால்வெவ்வேறு காரணங்களினாலும், விசேஷமாய் கூட்டுத்தொழில் ஸ்தாபனங்கள் அக்காலத்தில் இல்லாமையினாலும், உத்தேசித்த காரியம் கைகூடத் தாமதமாயிற்று. இப்பொழுது ஐக்கிய முயற்சியின் முறை, லேவாதேவி விஷயத்தில் இந்த ராஜதானியெங்கும் ஜாஸ்தியாகப் பரவியிருப்பதால், ஸெண்டரல் அக்கிரிகல்சரல் கமிட்டியின் முக்கிய நோக்கத்தை இதே ஐக்கிய முயற்சியின் வழிகளால் முன்னுக்குக் கொண்டு வரத் தகுந்த காலம்வந்து விட்டது. கிராம விவசாயச் சங்கங்களைக் கொண்டு இதை ஆரம்பித்தால், நெல்லுக்குத்துதல், எண்ணெயாட்டுதல், வெல்லம் சர்க்கரை தயார் செய்தல், பாற்சாலைகளை ஸ்தாபித்தல், முதலிய கிராமாந்தர சிறு தொழில்கள், கூட்டுறவினால் ஏற்பட வெகுநாளாகாது.

இந்நோக்கத்துடன் அக்காரியதரிசிகள் சென்ற ஜூலை மாஸத்தின் முதல் முதலில் கோயமுத்தூருக்குச் சென்று, அங்கு அப்பொழுது நடைபெற்ற விவசாய மாண

வர்கள் சபையின் வருஷோத்சவக் கொண்டாட்டத்திற்கு விஜயஞ் செய்த இராஜதானியெங்கும் ப்ரபலமான விவசாயிகளுடன் இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனைசெய்ய இவர்களுக்கு நல்ல தருணமாகவிருந்தது. மறுநாள் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் F. R. ஹெமிங்வே I. C. S. அவர்கள், விவசாய இலாகா டைரெக்டரவர்கள், விவசாய காலேஜ் லெக்சரவர்கள் கூட்டுத்தொழிற் சங்கங்களின் ரெஜிஸ்திராரவர்கள், விவசாய காலேஜில் அவசரமாய் ஒரு சபை கூட்டினார்கள். அப்பொழுது அந்த ஜாயிண்டு காரியதரிசிகள் விவசாயச்சங்கங்கள் ஏற்படவேண்டிய அத்தியாவசியத்தை அச்சபையிலுள்ளோருக்கு வற்புறுத்திச் சொல்ல, ரெஜிஸ்திராரவர்கள் அச்சங்கங்கள் எவ்விதமாய் எளிதில் பணம் சேகரிக்கக் கூடுமென்பதையும், எப்படி ஐக்கிய முயற்சியின் முறையில் அவைகள் நடைபெறக் கூடுமென்பதையும் எடுத்துச்சொன்னார். வெகுநேரம் வாதித்த பிறகு கலெக்டரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மறுதினம் கூடும் ஜில்லா விவசாயச் சங்கத்தாரால் அந்தத் தீர்மானத்தை முடிவுசெய்ய வைத்துவிட்டு அச்சபை கலைந்தது. அதேமாதிரி நடைபெற்ற அடுத்த மீட்டிங்கில், கிராம விவசாய சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்வதைத் தள்ளிவைக்க வேண்டுமென்றும், ஆனால் அதற்குள் ஜில்லா சங்கத்து மெம்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நிலங்களில், விவசாய அபிவிருத்திக்குரிய ப்ரத்தியேக நூதன முறைகளை உபயோகப்படுத்தி அவைகளினால் கிடைக்கும் லாபத்தை அந்த வருஷ முடிவில் தெரிவிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டில் மெம்பர்கள் தனித்தனி உழைத்துச்செய்யும் வேலையேயன்றி, சங்கங்கள் பொதுவில் எடுத்துக்கொள்ளும் முயற்சி அதிகமில்லை; ஆனாலும் ஒவ்வொரு மெம்பரும் தனித்தனி மிக்க ஊக்கத்துடன் வேலைசெய்தால் நற்பயன்களை எதிர்பார்க்கலாம்.

ஆகஸ்டு முதலில் அந்த ஜாயிண்டு காரியதரிசிகள் தென்னாற்காடு ஜில்லாவுக்குச் சென்று பிறகு இடைவிடாமல், ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாகளுக்குப் பிரயாணஞ்செய்து, செப்டம்பர் மாஸம் 12-ந் தேதி சென்னைக்குத் திரும்பிவந்தார்கள். இவர்கள் ஒன்றுசேர்ந்து சுற்றுப்பிரயாணஞ் செய்வதால் ஜனங்கள் அடையும் சிறந்த அளவற்ற நற்பயன்களைத் தவிர, இவ்விதமாய் தங்கள் அருமையான காலத்தையும் செல்வத்தையும், இந்த இராஜதானியெங்கும் தாங்கள் உத்தேசித்தபடி ஏற்றுக்கொண்ட ஸத்காரியத்தை பரவச்செய்ய, செலவு செய்யும் இவ்வேளாண்மையோரின் திருஷ்டாந்தம், இம்மாதிரி செல்வமும் அவகாசமும் நிறைந்த, விவசாயிகளின் தேசாபிமானி நண்பர்கள் மனதில் தாங்களும் இப்பேர்ப்பட்ட நற்செயல்களைச் செய்யும்படி ஊன்றாமற் போகாது.

தென்னாற்காடு ஜில்லாவில், கலெக்டர் மிஸ்டர் அஸ்ஸஸுடீன் ஸாஹிப் பகதூர் கான்பகதூர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டப்பட்ட ஜில்லா போர்ட் மீட்டிங்கில், இச்சங்கங்கள் ஏற்படுத்துவதைப்பற்றிப் பேசினார்கள். ஆனால், கோயமுத்தூரில் தீர்மானித்ததுபோல், இதைத் தள்ளிவைத்துக்கொள்வது நலமென்றும், ஆனால் அதற்குள் ஏற்கனவேயிருக்கும் ஜில்லா, டிவிஷன், தாலூக்கா சபைகளை புது தினுசான சாகுபடி முறைகளை முன்னுக்குக் கொண்டுவரச்செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இச்சமயத்தில், உயர்ந்த ஜாதி மாடுகள் விருத்தியாகும் நிமித்தம், காங்கேயத்திலிருந்து, ப்ரத்தியேகமாய் வளர்க்கப்பட்ட நல்ல எருதுகளை வரவழைத்து வேலைசெய்யும் சிதம்பரம் ரிவனியூ டிவிஷன் ஆபீசர் மிஸ்டர் பி. என். மகமத் மீரான் ஸாஹிப் பகதூர் அவர்களின் நற்செய்கையை இங்கு கூறத்தகுந்தது. இப்படி 14 எருதுகள், தென்னாற்காடு ஜில்லாவில் பற்பல இடங்களுக்கு, அவர் முயற்சியால் அனுப்பப்பட்டன.



பிறகு அக்காரியதரிசிகள் மதுரைக்குச் சென்றார்கள். அப்பொழுது அங்கே ஜில்லா கலெக்டர் மிஸ்டர் A. R. நாப் I. C. S. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஜில்லா விவசாய சங்கம் கூடிற்று. மதுரை ஜில்லா விவசாயச் சங்கம் சுமார் ரூபா 10,000 மூலதனத்தை யுடையது. அச்சங்கம் கூட்டுமுயற்சி முறையின்படி, தன்னை மறுபடி நிர்மாணஞ் செய்துகொள்ளவும், தன் பழைய மூலதனத்தை மாறுதலடைந்த அந்தப் புதிய சங்கத்திற்கு மாற்ற ஏற்பாடுசெய்யவும் தீர்மானித்தது. இதன் பிறகு மதுரைக் கருகிலுள்ள ஊத்தங்குடியில் ஒரு கிராம விவசாய சங்கமும், மற்றொன்று ராமநாதபுரம் ஜில்லா வடமலைபுரத்திலும், உண்டாக்கப்பட்டன. வடமலைபுரம் கிராம வாசிகள் இதன் நிமித்தம் அப்பொழுது மதுரைக்கு வந்திருந்தார்கள். இந்த இரண்டு சங்கங்களும் ஐக்கிய முயற்சி சட்டத்தின் கீழ் அவைகளுக்குத் தகுந்த அனுபந்த விதிகளுடன் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. மதுரையில் மிக்க அனுபோகமுள்ள ஐக்கிய முயற்சிக்காரராகிய ம-௱-௱-ஸ்ரீ K. ராமஸாமி அய்யர் B. A. B. L. அவர்களும், வடமலைபுரத்தில் அம்மாதிரி உழைக்கும் ம-௱-௱-ஸ்ரீ அனந்தராவ் அவர்களும் முறையே மேற்கூறிய சங்கங்களின் ஸ்தாபகர்கள்.

திருநெல்வேலியில், ஏற்கனவே ஐக்கிய முயற்சியின் முறைப்படி சீர்திருத்தப்பட்ட ஜில்லா விவசாய சங்கமெம்பர்கள், கிராமாந்திரங்களிலும் இவ்விருத்தியை பரவச்செய்ய வேண்டுமென்ற ஆவலுடன் சொன்னார்கள். ஸ்ரீ வைகுண்டம், அம்பா சமுத்திரத்தில் கூட்டங்கள் கூட்டி, ஐக்கிய முயற்சி விர்த்தியின் நோக்கங்கள் நன்கு விளக்கப்பட்டன. இதேமாதிரி, திரும்புகாலில், கோவில்பட்டி, சாத்தூரில், அருகில் வசிக்கும் கிராமவாசிகள் தங்கள் பஞ்சு விளைவிற்பதற்கும், புதிதான கலப்பில்லாத விதை வாங்கவும், ஏற்கனவே ஐக்கிய முயற்சி யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கோவில்பட்டிச் சுற்றிலுமுள்ள கிராமவாசிகள் வருஷந்தோறும் தங்களுக்கு வேண்டிய சுத்தமான கருங்கண்ணிப்பஞ்சுவிதைக்குசர்க்கார் பண்ணையை நம்பியிருக்கிறார்கள். விளைந்த சுத்தமான பஞ்சை மாருலை ஒன்று சேர்த்து யந்திர சாலைக்குக் கொண்டுபோனால் கலப்பிலாத விதை, மற்றவருதவியன்னியில் பெறலாம். ஐக்கிய முயற்சியாலுண்டாகும் இவ்வித நற்பயன்களை அங்கே விஜயஞ்செய்திருக்கும் கிராமவாசிகளுக்கு, அந்த ஜாயிண்டு காரியதரிசிகள் எடுத்துச் சொன்னார்கள்.

அங்குள்ள சர்க்கார் பண்ணை மானேஜரும், மற்றவர்களும் சேர்ந்து, தூத்துக்குடி, கோவில் பட்டித் தாலூக்காக்களில் பஞ்சுவிளையும் விஸ்தீரணங்களில் கூட்டுமுயற்சி விவசாய சங்கங்கள் ஸ்தாபனஞ்செய்ய ஏற்பாடு செய்கிறார்கள்.

அந்தச் சுற்றுப் பிரயாணம், சென்ற செப்டம்பர்மீ 7-ந்தேதியில் சாத்தூரில் ம-௱-௱-ஸ்ரீ, டிவான் பகதூர் M. ஆதிநாராயணய்யா அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடந்த கூட்டுமுயற்சிக்காரர்கள் கான்பரென்ஸுடன் முடிவு பெற்றது. அந்த டிவிஷனிலுள்ள கூட்டுமுயற்சிக் காரர்களுடைய பிரயத்தனத்தினாலும், முக்கியமாய் சாத்தூர் கூட்டுத்தொழிற் சங்கம் ப்ரஸிடென்டு மிஸ்டர் சுப்பிரமணி நாயனார் உதவியாலும், இடையர் கோட்டைச் சங்கம் ப்ரஸிடென்டு மிஸ்டர் அனகிரி நாயுடுவின் முயற்சியாலும், அந்த கான்பரென்ஸு நடைபெற்றது.

அத்தருணத்தில், ஐக்கிய காரியதரிசிகள் கூட்டுமுயற்சியினால் விவசாய அபிவிருத்தி செய்யவேண்டுமென்று அங்கு விஜயஞ்செய்திருக்கும் ஜனங்களுக்கு வற்புறுத்தினார்கள்.

# ஐக்கியஇயக்கமும் சென்னை இராஜதானியில் அதன் அபிவிருத்தியும்.

———(:o:)———

(ஸர் வி. ஸி. தேசிகாச்சாரியார் எழுதியது.)

(115-ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்ற சஞ்சிகையில் விட்டதிலிருந்து இப்போது ஆரம்பிப்போம். 1911-ளு ஜூன்மீ 30-ந் தேதியோடு முடிந்த வருஷத்தில் என்ன நடந்ததென்று யோஜிப்போம். ரெஜிஸ்ட்ராரவர்கள் அநேக சங்கங்களை ஸ்தாபனம்செய்து அவைகளுக்குப் பண உதவிக்காகவும் சில சங்கங்களை ஸ்தாபித்தார். 1910-ம்ளு ஜூலைமீ முதல்தேதி 377 சங்கங்களிருக்க, 1911-ம்ளு ஜூன்மீ 30-ந் தேதி சங்கங்களின் சங்கியை 596-க்கு அதிகரித்து விட்டது. இவற்றில் உத்திரமல்லூர் யூனியனும், 4 ஜில்லா பாங்கிகளும் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியும் ஆக 6-சென்ட்ரல் ஸொஸைடிகள்.; 30-அர்பன் (நகர) ஸொஸைடிகள். இவற்றில் பெரிய காஞ்சீபுரம் நகர நெசவுக்காரர் யூனியன் என்ற சங்கம் ஒன்றுதான் உற்பத்திச் சங்கம், மற்றொரு 6-சங்கங்கள் ஸ்டோர்கள் அல்லது பிரிவினைச் சங்கங்கள், போக பாக்கி 23-ரொக்க நாணயச் சங்கங்கள்; தவிரவும் 560 கிராமச்சங்கங்கள் ராஜதானி முழுவதும் சிதறியிருந்தன.

அவ்வருஷத்து அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட் ரிஜிஸ்ட்ராரால் எழுதப்பட்டது. பிரஸ்தாப வருஷத்தில் சுமார் 23,000 பேர்களுக்கு 30 லக்ஷம் ரூபாய் வரையிலும் கடன் கொடுக்கப்பட்டது. இப்படி கொடுக்கப்பட்ட 30 லக்ஷரூபாய்க்கு நடைபெறும் வட்டிக்கும் கூட்டுறவுச் சங்கங்களால் விதிக்கும் வட்டிக்கும் 1½ லக்ஷம் ரூபாய் வித்தியாசம். இதை ரெஜிஸ்ட்ரார் "ஆக்ட்டு செய்யப்பட்டு அமுலிலிருக்கும் ஏழாவது வருஷத்துப் பலன்" என்று சொன்னார். இது திரவிய சகாய விஷயத்திலுண்டான நன்கொடை, ஆனால் நீதிமார்க்க முபதேசிக்கும் விஷயத்தில் இதைவிட விசேஷமாகத்தானிருந்தது. "நாகரீகமென்பதையே அறியாத கிராமாந்தரங்களில் சங்கங்கள் மிதவிரயம், கட்குடியாமை, சுத்தம் ஆகிய நற்குணங்களை வியாபிக்கச் செய்துவிட்டன." கடனாகக் கொடுக்கப்பட்ட 30 லக்ஷம் ரூபாயில், 2 லக்ஷம் ரூபாய் 44-கிராமச்சங்கங்களால் பெறப்பட்ட டிபாஸிட்டு, அரைலக்ஷம் ரூபாய் மதுரையில் ஒரு நிதியினிடமிருந்து 19 சங்கங்களால் வாங்கபபட்டது, 20 லக்ஷம் ரூபாய் சென்ட்ரல் பாங்கிகளிடமிருந்து பெற்றது; மீதி 7½ லக்ஷம் ரூபாயும் 590 நாட்டு நகரச் சங்கங்களின் பங்கு முதல். இது சராசரி தலைக்குக் கொஞ்சம் குறைய ரூபாய் 1300 ஆகிறது. 5 சென்ட்ரல் பாங்கிகளால் கொடுக்கப்பட்ட கடன் தொகை 20 லக்ஷம் ரூபாய் அதில்; 14 லக்ஷம் ரூபாய் (ஒரு லக்ஷம் பங்கு முதலும், 13 லக்ஷம் டிபாஸிட்டுத் தொகையும்) மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியால் கொடுக்கப்பட்டது. சேலம் டிஸ்ட்ரிக்ட் பாங்கியால் 3 லக்ஷத்துக்குக் கொஞ்சம் அதிகமாகவே கொடுக்கப்பட்டது. அதில் 1½ லக்ஷத்திற்கு மேலேயே இந்தியன் பாங்கியிடமிருந்து கடன் வாங்கப்பட்டது, மற்றச் சங்கங்களிடமிருந்து வாங்கினது 39,000 ரூபாய்; 30,000 ரூபாய் அதின் பங்கு முதல்; போக மீதி 81000



ரூபாய் டிபாஸிட்டுத் தொகை. குளித்தலை டிஸ்ட்ரிக்ட் பாங்கியாயிருந்து பிறகு திருச்சிராப்பள்ளி டிஸ்ட்ரிக்ட் பாங்கியாய் மாறின நகர பாங்கியால் 2லக்ஷம் ரூபாய்கடன்கொடுக்கப்பட்டது. இதற்கு விவரம் பின்வருமாறு:—அதன் பங்குமுதல் 7600 ரூபாய், இந்தியன் பாங்கியிடமிருந்து பெற்றது 20,000 ரூபாய், மற்றச் சங்கங்களிடமிருந்து பெற்றது 3500 ரூபாய், போக பாக்கி 1·65 லக்ஷம் ரூபாய் அதின் டிபாஸிட்டுத் தொகை. கொயமுத்தூர் ஜில்லா பாங்கியாலும் தெனாலி ஜில்லா பாங்கியாலும் ஏறக்குறைய ஒரு லக்ஷம் ரூபாய் கொடுக்கப்பட்டது. புது ரெஜிஸ்ட்ரார் சென்ட்ரல் பாங்கிகள்க்ருப்புகளைப்பற்றிப் பின்வருமாறு எழுதினார்:-"பொதுவாக எல்லா பாங்கிகளினுடையவும், விசேஷமாக மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியினுடைய நிர்வாகமானது மெச்சத்தகுந்ததா யிருந்தது" தவிரவும் "சென்னை ராஜதானியிலுள்ள சென்ட்ரல் பாங்கிகளெல்லாம் நன்மை பயக்கும் ஸ்தாபனங்கள்" என்றும் சொன்னார். வாஸ்தவமாகவே அவைகள் கூட்டுறவு முறைக்கு மிகப்பிரயோஜன முடையவைகள்தான். ஆனால் பதச்சேதம் செய்யின் அவைகள் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லவென்பதைக் குறித்து விசனிக்கிறார். பணம் அதிகமாகவுடைய சங்கங்கள் சொற்ப ஐவேஜுள்ள சங்கங்களிடத்தில் யாதொரு காரியமுமில்லை என்று அபிப்பிராயங்கொண்ட ஒரு கான்பரென்ஸ் பிரசிடென்டைப் பற்றிய ஒரு விஷயம் தற்சமயம் ஞாபகத்திற்கு வருகிறது.

தவிரவும் சொற்ப ஐவேஜுள்ள ஏழைச் சங்கங்கள் பணக்காரச் சங்கங்களின் பேரில் சாராமல் இருப்பது நலமென்பதாகத் தான் கொண்டிருந்த அபிப்பிராயத்தை வெளியிட்டார். ஒரு பொழுதும் அவைகள் சுத்தமாய் கூட்டுறவுச் சங்கங்களாய் ஸ்தாபிக்கப்படவில்லை, அவைகள் கூட்டுமுறைக்கு திரவியசகாயம் செய்வதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டன. அதுபோலவே அவைகள் எல்லாரும் திருப்தியடையும்படி திரவிய சகாயம் செய்துவருகின்றன. மேல் விசாரணையைப்பற்றி யோசிக்கும்போது இந்திய ரெஜிஸ்ட்ரார்களின் 5-வது கான்பரென்ஸில் செய்யப்பட்ட சிபார்சே மிக நல்ல யோசனை என்று என்புத்திக்குத் தோன்றுகிறது. மதராஸில் தனித்தனி ஷேர்ஹோல்டர்களடங்கிய ஒரு சென்ட்ரல் பாங்கி இருப்பதோடுகூட கூட்டுறவுச் சங்கங்களின் சென்ட்ரல் யூனியன் ஒன்று இருக்கவேண்டியது அவசியமென்று அந்தக் கான்பரென்ஸில் ஒரு சிபார்சு தீர்மானித்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த சிபார்சைபற்றி நாம் அறியவேண்டுவது மிக்க அவசியம். இவ்விராஜதானியில் ஒன்றுக்கு மேலேயே சென்ட்ரல் பாங்கிகள் இருக்கின்றனவென்பதை கான்பரென்ஸ் அறியவில்லை என்று சொல்லுவது சரியல்ல. அவர்கள் மதரால் சென்ட்ரல் அர்பன் பாங்கியை மாத்திரம் மனதில் வைத்துக்கொண்டு மற்ற 4 ஜில்லா பாங்கிகளையும் மறந்திருப்பார்கள் என்று சொல்வது தற்புகழ்ச்சியேயாகும். இவ்வனுமானம் சரியாயிருந்தால் அந்த சிபார்சின் கருத்து கூட்டுறவுச் சங்கங்களின் ஒரு சென்ட்ரல் யூனியனை ஸ்தாபிக்கவல்ல, ஆனால் அநேக சென்ட்ரல் யூனியன்களை ஸ்தாபிக்க வேண்டியதென்று வெளியாகிறது. இந்த சிபார்சை ரெஜிஸ்ட்ராரவர்கள் ஞாபகத்தில் வைத்திருந்தாரென்றிருந்தேன். ஆனால் இந்த சிபார்சை அமுலுக்குக் கொண்டுவரும் பிரயத்தினத்தில் மதுரை இராமனாதபுரம் சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி லிமிடெட், என்னும் சங்கத்தை ஸ்தாபித்து அதை டிஸ்ட்ரிக்ட் பாங்கியும் யூனியனும் ஒன்று சேர்ந்தது என்று சொன்னார். அது எல்லாவிதத்திலும் கலப்புதான். அதில் தனி மெம்பர்களும் ஸொஸைடிகளும் சேர்ந்திருக்கின்றன. அதாவது, இரண்டு வகுப்பு ஷேர்தாரர்கள். அது திரவிய சகாயம் செய்யும் வேலையும் மேல் விசாரணைக் கர்த்தாவுமாகிய இரண்டு உத்தி

யோகத்தையும் உடையதாயிருக்கிறது. இதை ரெஜிஸ்ட்ராரவர்கள் பரீக்ஷார்த்தமாகச் செய்யப்பட்டது என்று சொன்னபோதிலும், ஏற்கனவே அவர் இதர டிஸ்டிரிக்ட் யூனியன்களை ஸ்தாபிக்க ரிவின்யூ போர்டாரவர்களுக்கு ஒரு ஸ்கீம் தயார்செய்து அனுப்பியிருக்கிறார். கடைசியாக இந்த டிஸ்ட்ரிக்ட் யூனியன்கள் தங்கள் வேலையைச் செய்வதற்காக ஸ்தல யூனியன்களை நிர்மாணிக்க வேண்டியதுபோல் காண்கிறது. ஆனால் இந்த டிஸ்ட்ரிக்ட் யூனியன்கள் ஸ்தல யூனியன்களுக்கு அவைகள் வேலை நடத்தப் பொது திரவிய சகாயம் செய்யவேண்டியது. இவ்விதமாக வாஸ்தவத்தில் டிஸ்ட்ரிக்ட் பாங்கியும் யூனியனும் கடைசியில் திரவிய சகாயச் சங்கங்களாக வேண்டியதுதான். கிராமச் சங்கங்களை நிர்வாகித்தும் மேல்விசாரணை செய்வதும் ஸ்தல யூனியன்களால் செய்யப்பட வேண்டும். இன்னும் அநேக யூனியன்களை ஸ்தாபிக்கலாம்; அவைகளை ஸ்தல யூனியன்களென்றும் கூப்பிடலாம். அவைகளுடைய முக்கிய நோக்கம் சங்க நிர்வாகமும் மேல் விசாரணையாகவும் மாத்திரம் இருக்கவேண்டும். பணம் சேகரிப்பதில் ப்ரவர்த்திக்கவே கூடாது. அதாவது, டிபாஸிட்டுகள் சேர்ப்பதும் பணம் கடன் கொடுக்கும் சங்கங்களை தேடிச் செல்வதுமாகிய இவைகளை விட்டுவிட வேண்டும். இவ்வலுவலை சென்ட்ரல் அல்லது டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளுக்கு விட்டுவிட வேண்டும். உத்திரமல்லூர் யூனியன் ஸ்தாபனத்திற்கப்பால் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியானது இதர ஸொஸைடிகளுக்குக் கொடுத்த கடனுக்காகப் பெறும் 100-க்கு 7½-வட்டி விகிதத்தில் 30-ல் ஒரு பங்கு அல்லது ¼ வட்டியை யூனியன் செலவுக்காக யூனியனுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறது; இதே மாதிரி அங்கத்தினராகிய சங்கங்களும் தங்கள் சக்தியானுசாரம் செலுத்தி வருகின்றன. இப்படியாக உத்தரமல்லூர் யூனியன் ஸ்தாபிக்கப்பட்டு இரண்டாவது வருஷத்தில் அதின் சூபர்வைஸருடைய சம்பளம் ஏறக்குறைய முழுவதும் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியால் கொடுக்கப்பட்டது. இதே மாதிரியாக கீழச்சேரி யூனியன், மதுராந்தகம் யூனியன் ஆகிய மற்ற இரண்டு யூனியன்களுக்கும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. இதேமாதிரி எந்த யூனியன்கள் ஏற்பட்டபோதிலும் அவைகளெல்லாவற்றிற்கும் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி மேற்சொன்னபடி ஒப்புக்கொள்ளச் சம்மதிக்குமென்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இவ்விதமே டிஸ்ட்ரிக்ட் அல்லது ஜில்லா பாங்கிகளும் இவ்வொப்பந்தத்திற் கிணங்கினால் சங்கங்களை நிர்வகிக்கவும் மேல் விசாரணை செய்யவும் அநேக யூனியன்கள் அல்லது துணைச் சங்கங்களை ஸ்தாபிக்கலாம். அநேக இடங்களில் 12-அல்லது அதற்கு அதிகமான சங்கங்கள் ஒரு நெருக்கமான விஸ்தீரணத்தில் காண்பதரிதாக இருக்கிறது. இப்பேர்ப்பட்ட இடங்களில் ஒரு யூனியன் ஸ்தாபிக்க எத்தனை சங்கங்கள் வேண்டுமோ அத்தனை சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். யூனியன்கள் உள்ள பாகங்களில் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களுக்கு அவ்வளவாக நிரம்ப வேலை இராது. ஆகையால் இப்பாங்குகளில் வருஷாந்திரக் கணக்குப் பரிசோதனைக்குப் போவதைத் தவிர பிரத்தியேகமாக ஒரு தரம் சங்கங்களைப் போய்ப்பார்த்தால் போதுமானதென்று எனக்குத் தோன்றுகிறது. இந்தப் பிரகாரம் 50 அல்லது 60 சங்கங்கள் சேர்ந்த 3 அல்லது 4 யூனியன்களுக்கு இரண்டு சர்க்கார் இன்ஸ்பெக்டர்கள் போதும்; ஏனென்றால் ஒவ்வொரு யூனியனுக்கும் அந்தந்த யூனியனால் நியமிக்கப்பட்டுச் சம்பளம்பெறும் 3 அல்லது 4 சூபர்வைசர்கள் இருப்பார்கள்.

கூட்டுமுறையைப்போன்ற விஷயங்கள் பிற்காலத்தில் எவ்விதம் நடைபெறுமென்பதை ஊஹித்தல் சிரம சாத்தியந்தான். ரிஜிஸ்ட்ராரவர்கள் பரீக்ஷார்த்தமாக ஸ்தாபிக்கும் ஜில்லா பாங்கியும் யூனியனும் ஒன்றுகூடிய ஸ்தாபனங்கள் ஏதாவது



நன்மை பயக்கும் பக்ஷத்தில் நம்முடைய மனோபீஷ்டம் நிறைவேறும். தவிரவும் ஜில்லாக்களை, யெல்லாம் சர்க்கார் மேல்விசாரணையும் ரெஜிஸ்ட்ரார் மேலதிகாரம் ஆகிய இவைகளினின்றும் விலக்கலாம். ஏற்கனவே அநேக நன்மைகளைக் கொடுத்திருப்பதும் பிற்காலத்தில் கிராமவாசிகளுக்கு ஏராளமான நன்மையைக் கொடுப்பதுமான இப்பெரிய கூட்டுமுறையானது, ஏழை கிருஷிகளும் மிக்க தாழ்ந்த நிலைமையிலுள்ள கூலிவேலையாட்களும் நிறைந்த இத்தேசத்தில் வேரூன்றி வியாபிக்க வேண்டுமென்றால் இன்னும் அநேக வருஷங்கள் வரையிலும் சர்க்கார் பரிசோதனையும் இன்ஸ்பெக்ஷனும் இருக்கவேண்டுமென்று இவ்விராஜதானி முழுவதிலும் பொது அபிப்பிராயமாயிருக்கிறது.

அடுத்தாற்போல் 1912-ம்௵ ஜூன் மீ 30௳ யோடு முடிவுறும் வருஷத்தை கவனிப்போம். 1912௵-ம் மார்ச்சு மாதம் முதல் தேதி 1904௵-த்து 10-வது ஆக்டின்பேரில் மிகவும் சீர்திருத்தப்பட்ட 1912-௵த்து 2-வது ஆக்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1911-௵ம் ஜூலை மீ முதல் தேதி சங்கங்களின் சங்கியை 596ய் இருக்க, 1912௵-ம் ஜூன் மீ 30௳ 972க்கு அதிகரித்துவிட்டது அதாவது பிரஸ்தாப ௵த்தில் 376 புதிய சங்கங்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. இவைகளில் அநேகம் 1911௵-ம் நவம்பர்-டிசம்பர் மாசங்களில் அல்லது 1912௵ முன் மாதங்களில் வேலை துவக்கின. மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியிடமிருந்து கடன் பெற இப்புதிய சங்கங்களிடமிருந்து வந்த மனுக்கள் கணக்கிடமுடியாது. 1911ம்௵ ஜூலை மீ முதல் தேதி முதல் டிசம்பர் மாதம் 31ந்தேதி வரையிலும் கடனாகக்கொடுத்த தொகை 2·78 லக்ஷம் ரூபாய். 1912௵ம் ஜனவரி மீ முதல் தேதி முதல் ஜூன் மீ 30-ந் தேதி வரையிலும் கொடுத்ததொகை 6·60 லக்ஷம் ரூபாய் அதாவது சராசரி ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு லக்ஷம் ரூபாய் அதிகமாகிறது. இந்த 376 புதிய சங்கங்களில், செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள கீழச்சேரி, மதுராந்தகம் ஆகிய இவ்விரண்டும் யூனியன்கள், ஒன்று ஜில்லா பாங்கியும் யூனியனும் ஒன்றுகூடினது அதாவது மதுரை இராமனாதபுரம் கோவாபரேடிவ் டிஸ்ட்ரிக்ட் பாங்கி லிமிடெட்; 16 நகரச் சங்கங்கள், இவற்றில் 14 ரொக்கச் சங்கங்கள் (Cash societies), குன்னூர் ஆங்கிலோ இண்டியன் லீக் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், லிமிடெட், என்னும் ஒரு பிரிவினைச் சங்கம், மற்றொன்று உற்பத்தியும் கட்டடச் சங்கமும் சேர்ந்த மாம்பலம் கூட்டுத்தொழிற் சங்கம், போக பாக்கி 357 சங்கங்களும் கிராமச் சங்கங்கள் இவற்றில் நான்கு நீலகிரி ஜில்லாவில் படகர் (Badagas)கள் சங்கங்கள். இச்சங்கங்கள் பூர்வகுடிஜாதியாருக்காகவே ஏற்பட்டவைகள். கீழச்சேரியில் ஒரு தானிய பாங்கி ஸ்தாபிக்கப்பட்டது. மற்றவை ரொக்க நாணயச் சங்கங்கள். [கூட்டுமுறை மொத்தத்திற்கும் வருஷக் கடைசிகளில் இருந்த தொழில்முதலின்தொகை 44·86லக்ஷம் ரூபாய். இதில் ரூபாய்21 லக்ஷம் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியைச் சேர்ந்தது. இக்காலத்திற்குள் இப்பாங்கிதான் வியாபாரத்தை அதிகரித்துக்கொண்டு விட்டது. 100 ரூபாய் விழுக்காடான 1000 புதிய பங்குகள் 100-க்கு 10 விகிதம் அதிகப்படியாக (Premium) வெளியிடப்பட்டு, வெளியிடப்பட்டதை விட ஆறு மடங்கு அதிகமாகவே சந்தாதார்களின் மனுக்கள் வந்தன. அதின் டிபாஸிட்டுத் தொகை 19 லக்ஷம் ரூபாய். ஆயிரம் புது பங்குகளின் பேரில் அதிகப்படியாகக் கிடைத்த 10,000 ரூபாயும் க்ஷேமநிதிக்குச் சேர்க்கப்பட்டது. சேலம் ஜில்லாவில் ப்ளேக் நோயால் சேலம் ஜில்லா பாங்கி வெகுவாக வேலை நிறுத்தவேண்டியதாயிற்று. அதின் தொழில் முதல் முன் வருஷத்திலிருந்ததுபோல் 3-லக்ஷம் ரூபாய்தானிருந்தது. இந்தியன் பாங்கிக்குக் கொடுக்கவேண்டிய அதனுடைய கடன் தொகையும் ஒரே நிதானமாய்த்தானிருந்தது என்றாலும் கொஞ்சம்

ஜாஸ்தியென்றே சொல்லலாம். அதின் பங்குமுதல் 30,000 ரூபாயாகவே யிருந்தது;
ஆனால் டிபாஸிட்டுத் தொகை 81,000 ரூபாயிலிருந்து 1·1 லக்ஷம் ரூபாய்க்கு அதிகரி
த்தது. தவிரவும் மற்றச் சங்கங்களிலிருந்து வாங்கின தொகையை யெல்லாம்
ஜாடாவாகத் திருப்பிக்கொடுத்து விட்டது. இது இப்படியிருக்க திருச்சினப்பள்ளி
டிஸ்ட்ரிக்ட் பாங்கிக்கு அந்த வருஷம் முழுவதும் சுபமாகவே யிருந்தது. குளித்தலை
யிருந்து திருச்சினப்பள்ளிக்கு மாற்றினது முதல் அது வேலைத்திறமையும் ஊக்க
முடைய காரியதரிசியாகிய ராவ்பஹதூர் Y. நாராயணராவ் அவர்கள் ஆளுகைக்குள்
வந்தது; அபரிமிதமாக அபிவிருத்தியாய்க்கொண்டே வந்தது. வாஸ்தவத்தில் இந்த
ஒரு ஜில்லா பாங்கிதான் ஜில்லாவுக்கு வேண்டிய தேவைகளை கொடுத்துதவினது மல்
லாமல் மற்ற ஜில்லா பாங்கிகளுக்கும் வேண்டிய திரவிய சகாயம் செய்தது. 1912-ம் வருஷம்
ஜூன்மீ 30-ந் தேதியோடு முடிந்த வருஷத்தில் அதன் பங்குமுதல் ரூபாய் 7,600
லிருந்து ரூபாய் 20,600-க்கு அதிகரித்தது. அது இந்தியன் பாங்கியிடமிருந்து பெற்ற
கடன் தொகை 20,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயிக்கு அதிகமாயிற்று அதன்
டிபாஸிட்டுத் தொகை 1·65-லக்ஷம் ரூபாயிலிருந்து 3·87 லக்ஷம் ரூபாய்க்கு ஏறிற்று.
இவ்விதமாக அதன் தொழில் முதல் 4·38 லக்ஷம் ரூபாயாயிற்று.

கோயம்பத்தூர் ஜில்லா பாங்கியும் ஏதோ கொஞ்சம் அபிவிருத்தியின் அறிகுறி
யைக் காட்டிற்று. அதன் டிபாஸிட்டுத் தொகை 9,300 ரூபாயிலிருந்து 1·66 லக்ஷம்
ரூபாயிக்கு அதிகரித்தது. ரிஜிஸ்ட்ராரவர்கள் மூலமாய் பாங்கிக்கு 95,000 ரூபாய்
கொண்ட ஒரு தனி டிபாஸிட்டு கிடைத்தது. மற்ற சங்கங்களிடமிருந்து வாங்கப்பட்ட
கடன் தொகை 57,300 ரூபாயிலிருந்து 36,400 ரூபாயிக்குக் குறைக்கப்பட்டது.
அதின் பங்கு முதல் 19,330 ரூபாயிலிருந்து 19,800 ரூபாயிக்கு உயர்ந்தது.

குண்டூர் ஜில்லா தெனாலி ஜில்லா பாங்கிகளின் அபிவிருத்தி பின்வருவனவற்றால்
வெளியாகும். அந்த ஸ்தலத்தில் கூட்டுத்தொழில் முயற்சிக்கு திரவிய சாதனம் கிடைப்
பதைப்பற்றி ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு தப்பு சமாசாரம் கொடுக்கப்பட்டது. அவர் தெ
னாலி பாங்கி ஸ்தாபித்ததும் ஏராளமான பணம் வந்துகுவியுமென்று எண்ணங்கொண்டு
புதிதாய் ஏற்படுத்தப்போகும் தெனாலி ஜில்லா பாங்கியிடமிருந்து 2 லக்ஷம் ரூபாய் பெ
ற்றுக் கொள்ள முடியுமாவென்று, மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியை கேட்டார்.
தெனாலி பாங்கியின் பங்குமுதல் 2450 ரூபாயிலிருந்து 3,500 ரூபாயிக்கு உயர்ந்தது.
அதின் டிபாஸிட்டுத் தொகை 1000 ரூபாயிலிருந்து 5,900 ரூபாயாயிற்று. இவ்வித
மாக அதின் 63,880 ரூபாய் தொழில் முதலுக்காக அது மற்ற சங்கங்களிடமிருந்து
ரூபாய் 54,470 ஆகிய பெருந்தொகை கடன்வாங்க நேரிட்டது.

அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டில் இப்போது இருக்கும் ரிஜிஸ்ட்ராரவர்கள்
பின்வருமாறு எழுதவேண்டியாயிற்று, அதாவது:—"தெனாலி ஜில்லா பாங்கியின்
பங்கு முதலாகிய ரூபாய் 3500 மிகவும் சொற்பமாயிருக்கிறது, ஆகையால் நான் அதை
ஜில்லா பாங்கியும், யூனியனும் ஒன்று கூடின ஸ்தாபனமாக மாற்ற எண்ணங்கொண்
டிருக்கிறேன். வியாதி இன்னதென்று கண்டுபிடித்தாய்விட்டது, இனிமேற் செய்யும்
சிகிச்சை நல்லதோ கெட்டதோ என்பது நாளாவட்டத்திற் தெரியவரும். ஏனென்றால்
ஷை ரிபோர்ட்டிலேயே தான் முதல் முதல் ஜில்லா பாங்கியும் யூனியனும் கூடிய
ஸ்தாபனத்தை பரீக்ஷார்த்தமாக ஏற்படுத்தியிருப்பதாயும் அதின் நடவடிக்கையை ஜாக்
கிரதையாய் கவனித்து வரவேண்டுமென்றும் எழுதியிருக்கிறார். அதிக ஈவு கொடுப்ப
தற்காக பயந்து சந்தா போட்ட பங்குமுதலைக் கூட செலுத்தும்படி வற்புறுத்தாத

ஜில்லா பாங்கிகளும், அதிக வட்டி கொடுப்பதாகச் சொல்லியும் அந்தந்த ஸ்தலங்களி
லேயே டிபாஸிட்டுகள் பெறமுடியாத ஜில்லா பாங்கிகளுங்கூட மற்றச் சங்கங்களிலிரு
ந்தும், விசேஷமாக திருச்சினப்பள்ளிஜில்லா பாங்கியிடமிருந்து கடனாக வேண்டியப
ணம்பெற்றன. ஒவ்வொரு ஜில்லா பாங்கி ஸ்தாபிக்கப்பட்டதும் ரெஜிஸ்ட்ராரவர்களின்
உத்தரவுக்கு வணங்கி மதராஸ் சென்ட்ரல் பாங்கியானது அந்த ஜில்லாவில் நாட்டுப்புறச்
சங்கங்களிடமிருந்துவசூலிக்கப்படாமல் நிலுவையாயிருக்கும்பணத்தை அப்புதியஜில்லா
பாங்கிக்குகொடுத்தது. தவிரவும் அப்படிக்கொடுக்கப்பட்ட கடன்தொகைக்குள்ள 100-க்கு
$7\frac{1}{2}$ விகிதவட்டியில் 30-ல் ஒருபங்கு அல்லது நூற்றுக்குக்கால்வீதம் தள்ளிக்கொடுத்தது.
ஆனால் அப்போதிருந்த ஜில்லா பாங்கிகளுக்குள் இரண்டுபாங்கிகள் மாத்திரம் இந்த ஏற்
பாட்டைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டன. சேலம்ஜில்லா பாங்கிக்கு 90,800ரூபாயும்,
கோயம்பத்தூர்ஜில்லாபாங்கிக்கு 59,300 ரூபாயும்கொடுக்கப்பட்டது. திருச்சினப்பள்ளி
ஜில்லா பாங்கி இப்படிப்பணம்பெறும் பிரயோஜனத்தை அனுபவிக்க அவசியமில்லா
திருந்தது. ஏனென்றால் அந்த ஜில்லாவில் மூன்று அல்லது நான்கு சங்கங்கள்தான்
மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியிடமிருந்து கடன் வாங்கியிருந்தன. தெனாலி ஜில்
லா பாங்கி திருச்சினப்பள்ளி ஜில்லா பாங்கியிடமிருந்து ஏராளமாய்க் கடன்வாங்கிற்று;
ஆகையால் ரெஜிஸ்ட்ரார் அப்பாங்கிக்காகசிபார்சு செய்யப்பட்டகடன் தொகையைப்
பெறவில்லை.

மனித வாழ்க்கையில் அநேக இடையூறுகள் சம்பவிப்பது போல் பொது ஸ்தா
பனங்களின் நடவடிக்கைகளிலும் அநேக துன்பங்கள் நேரிடுகின்றன. 25 சங்கங்களு
க்கு ஒரு சர்க்கார் இன்ஸ்பெக்டர் வீதம் ரிஜிஸ்ட்ராரவர்கள் நியமிக்கலாமென்கிற ஒரு
சங்கேதம் ஒரு காலத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது. இவ்விதமாக காலக்கிர
மத்தில் 700 சங்கங்களின் கார்யங்களை சாமர்த்தியத்தோடு நிர்வகிக்க 28 இன்ஸ்பெக்
டர்கள் போதுமானதென்று நியமிக்கப்பட்டார்கள். 1912-ம் வருஷம் ஜூன்மீ 30-ம் தேதி
யோடு முடிந்த வருஷத்தில் ரெஜிஸ்ட்ராரவர்கள் 376 புதிய சங்கங்களை ரெஜிஸ்ட்டர்
செய்ததற்குப் பதிலாக 104 புதிய சங்கங்களைமாத்திரம் ரெஜிஸ்ட்டர் செய்திருந்தால் கொ
ம்ப நன்றாயிருந்திருக்கும்; ஆனால், பழையசங்கேதத்தை நம்பிக்கொண்டு ரிஜிஸ்ட்ராரவர்
கள் புதிய சங்கங்களை ஸ்தாபித்து ரெஜிஸ்ட்டர் செய்துகொண்டுவந்தார். ஆனால் இன்ஸ்
பெக்டர்களைமாத்திரம் சர்க்கார் அதிகப்படுத்தவேயில்லை. சங்கங்களின் தொகை972-க்கு
ஏறியவுடன் இச்சங்கங்களின் கார்யங்களை எப்படி நிர்வகித்து மேல்விசாரணை செய்வது
என்று ரெஜிஸ்ட்ராரவர்களுக்குப் பெருத்தயோஜனை உண்டாயிற்று. இன்னும் இன்ஸ்
பெக்டர்களை நியமிப்பதற்காக திரவியசகாயம் செய்யும்படி அவர் சில சென்ட்ரல் பாங்கி
களைக் கேட்கும்படியாயிற்று. இவ்வளவில் இனிப் புதுச்சங்கங்களை ஸ்தாபிக்கக் கூடா
தென்று தனக்குள் தீர்மானம் செய்யவேண்டியதாயிற்று. தவிரவும் இன்ஸ்
பெக்டர்களை அதிகரிக்கும் வரையில் புதுச்சங்கங்களை ஸ்தாபிக்க முடியாதென்று ஜனங்
களுக்கும் தெரிவிக்கப்பட்டது. இந்த சமயத்தில் தான் கடைசி அட்மினிஸ்ட்ரேஷன்
ரிபோர்ட்டில் பின்வருமாறு எழுதினார்:—"சுத்த வட்டி வியாபாரம் செய்யும் யூனியன்
களைவிட காரிய நிர்வாகத்திற்கான யூனியன்கள் ஜரூராய் வேண்டி யிருப்பதாய் நான்
இப்போது அறிந்துகொண்டேன். மேலும் கார்ய நிர்வாகத்திற்கான(administrative)
யூனியன் நாணயத்தை மலிவாக்காவிட்டாலும் தனது அங்கத்தினர்களாகிய சங்கங்களை
அடிக்கடி இன்ஸ்பெக்ஷன் செய்தும் நிர்வகித்தும் அவற்றை அதிகப் பலனைக் கொடுக்
கக்கூடிய வைகளாகச் செய்யும்; தனது முக்கிய நோக்கத்தையே அநுசரித்தால், யூனி

யன்கள் ஸ்தாபித்ததிற்கு ஸார்த்தகமாகும்.'' தவிரவும் அவருடைய ரிபோர்ட்டில் இப்போது உண்டாயிருக்கும் 9 முக்கியமான துர்விநியோகங்கள் அல்லது குறைகளை எடுத்துக்காட்டியிருக்கிறார். இக்குறைகளைச் சீர்திருத்த வேண்டுமென்றும் இதற்காகத் திறமையுள்ள நிர்வாகமும் மேல்விசாரணையும் அத்யாவசியமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அக்குறைகளும் துர்விநியோகங்களுமாவன:—

1. நம்பிக்கைத் துரோகத்திற்கும் அபஹாரணத்திற்கும் இடங்கொடுக்கும்படியாய் கையிருப்பில் எதேஷ்டமாய்ப் பணம் வைத்திருத்தல்.

2. கடன் விஷயத்தில் பஞ்சாயத்தார்கள் பிரதம சுதந்திரம் பாராட்டுதலும், இடைக்கூடிய பணத்தில் பெரும்பான்மையை தாங்களே உபயோகித்துக் கொள்ளுதலும்,

3. பிணமிக் கடன்கள்.

4. ரசீது கொடுக்க மறுத்தல்.

5. நபர் ஜாமீனை கெட்டவழியில் உபயோகித்தல்.

6. பாக்கி வசூல் செய்வதில் அசிரத்தையாயிருத்தல்.

7. கணக்குப் புத்தகங்களில் சில சரிக்கட்டும் பதிவுகளாய் முன்னேயே கொடுக்கப்பட்ட ஒரு கடனைப்புதிய கடன்போல் காண்பித்தல்.

8. இம்மாதிரியே சங்கங்கள் முன் கடன்பெற்ற கட்சிக்காரர்களுக்கே பழையகடனைத் திருப்பிக் கொடுப்பதற்காகப் புதுக்கடன் அவர்களிடம் வாங்குதல்.

9. ஒருவரே நடத்தும் சங்கம்; மற்றவர்களுடைய உத்தரவாதம் அல்லது நிர்வாகம் ஒன்றுமில்லாமல் எல்லாவற்றையும் ஒருவர் கையிலேயே விட்டுவிடுதல்.

இவையெல்லாம் ரிவின்யூ போர்டாருக்கு எட்டினபோது, கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களின் நம்பர் 25-லிருந்து 28-க்கு மாத்திரம் உயர்ந்திருக்க, ரிஜிஸ்ட்ராரவர்கள் சங்கங்களின் சங்கியை 596 லிருந்து 972-க்கு உயர்த்தியது முற்றிலும் சரியல்லவென்று அவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். இதைத்தவிர இன்னும் மற்ற அநேக சங்கதிகளையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவைகளைப்பற்றி இவ்விடத்தில் பேசுவது அனாவசியம். எவ்விதத்தாலாகிலும் அதனால் ஒருபலன் ஏற்பட்டது. தற்போதிருக்கும் ரிஜிஸ்ட்ராரவர்கள்பேரில் யாதொரு விதத்திலும் குற்றம் கண்டுபிடிக்க முடியாது என்று கவர்ன்மெண்டார் தெரிந்துகொண்டார்கள். கவர்ன்மெண்டார் போர்டாரின் 1912-ம்௵ அக்டோபர் ௴ 15-ந் தேதி ப்ரோஸீடிங்ஸை விமர்சித்துப் பிறப்பித்த தங்களுடைய 1918-ம் ௵ ஜனவரி ௴ 8-ம் தேதியின் கடைசி உத்தரவில் தொழில் முதல் அதிகரித்திருப்பதும் சங்கங்களின் சங்க்யை 595-லிருந்து 969-க்கு அதிகமாயிருப்பதும் மொத்தத்தில் கூட்டுத்தொழில்முறையின் அபிவிருத்தியே மிக்க திருப்திகரமா யிருப்பதாக வெளியிட்டிருக்கிறார்கள். சர்க்கார் உத்தரவில் இன்ஸ்பெக்டர்களின் தொகையானது 25-லிருந்து 28-க்கு மிகச் சிறிய அளவாக உயர்ந்திருப்பதைப்பற்றி யாதொரு பிரஸ்தாபமு மில்லை.

ஏனென்றால் நிர்வாகத்திற்கும் மேல்விசாரணைக்கும், டிஸ்ட்ரிக்ட் பாங்கியும் யூனியனும்சேர்ந்த ஏற்பாடு விரும்பிய பலனைக்கொடுக்கும் என்கிற அபிப்பிராயத்தை ரெஜிஸ்ட்ராரவர்களோடு கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்போலிருக்கிறது.



இப்படிச் செய்வதால் திரவிய பலமுள்ள அப்பேர்ப்பட்ட ஒரு யூனியன் எந்த சங்கத்
தின் நடவடிக்கையை அங்கீகரிக்கவில்லையோ அச்சங்கத்திற்கு அபராதம் விதித்து தன்
சொந்த இன்ஸ்பெக்ஷன் சிப்பந்திகளைக்கொண்டு தருந்தசிக்ஷைசெய்ய எத்தனிக்கும்.
இவ்வபிப்பிராயத்தைப்பற்றிய குணதோஷங்களை இப்போதுநான் பரீக்ஷிக்கப்போவதில்
லை. நான் காத்திருந்து பார்க்கப்போகிறேன். கவர்ன்மெண்டார் தங்கள் கடைசி உத்தர
வில் இன்ஸ்பெக்டர்களைக் குறித்து மௌனமாயிருந்தபோதிலும் இருந்தாற்போலிருந்து
தங்கள் தயாள குணத்திற்கிணங்க 16-இன்ஸ்பெக்டர்கள் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்
கள். இப்படிச்செய்தது நல்லகாலம்தானென்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இப்
பொழுது ரெஜிஸ்ட்ராரவர்களும் அவருடைய மூன்று உதவி ரெஜிஸ்ட்ரார்களும் சங்
கங்கள் ஸ்தாபிப்பதற்காக வந்திருக்கும் அநேக மனுக்களைப் பார்வையிட்டுப் புதுச் சங்
கங்களை ஸ்தாபிப்பதில் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்கள். 48-இன்ஸ்பெக்டர்
களை வைத்துக்கொண்டால் 48×25 அதாவது 1200 சங்கங்கள் இருக்கவேண்டும்.
இப்பொழுது 972 சங்கங்களிருப்பதால் ரெஜிஸ்ட்ராரவர்கள் இன்னும் 228 சங்கங்
களை ரெஜிஸ்டர் செய்யலாம். அவருடைய மதுரை இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் பாங்
கியும் யூனியனுமாகிய பரீக்ஷார்த்த ஸ்தாபனமானது நல்ல பலனைக் கொடுக்கும் பக்ஷத்
தில் இவ்விரண்டு ஜில்லாக்களிலும் சுமார் 100 சங்கங்களுக்கு சர்க்கார் இன்ஸ்பெக்டர்
களின் மேல்விசாரணை வேண்டியதில்லை. இம்முறையின் பிற்காலம் மிகப் பிரகாசமா
யிருக்குமென்று நாம் நம்பலாம். ஆனால் இதில் எனக்கு ஒரு சந்தேகம். ரெஜிஸ்ட்ரா
ரவர்கள் சட்ட நிரூபண சபையில், புதுச் சங்கங்கள் ரெஜிஸ்ட்டராகாததற்கு இன்ஸ்
பெக்டர்கள் இல்லாதகாரண மல்லவென்று கூறினார்.

இது வாஸ்தவமானால் இன்ஸ்பெக்டர்களின் நம்பர் 28-லிருந்து 44-க்கு உயர்ந்த
தால் இன்னும் புதிய சங்கங்கள் ஸ்தாபிக்கக் கூடாது என்னும் யோசனையில் திடீரெ
ன்று ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்காது. இதற்குள்ளே ரெஜிஸ்ட்ராரவர்கள் எக்காரணத்
தால் புதிய சங்கங்கள் திறக்கக்கூடாது என்று சங்கல்பம் செய்துகொண்டிருந்
தாரோ அக்காரணம் இல்லாமற் போய், இம்முறைக்குண்டான தடங்கல் அக்காரணத்
தோடேயே விலகிவிட்டதென்று நாம் நம்பக்கூடாதா? மிக்க தயாள குணமுள்ள
ஸ்தல கவர்ன்மெண்டார் யாதொரு முறையின் அபிவிருத்தியை தமது உள்ளத்தில்
எக்காலத்திலும் கொண்டிருக்கிறார்களோ அப்பேர்ப்பட்ட முறையின் பொருட்டுச்
செலவுசெய்யப்பின் வாங்கமாட்டார்கள். கூட்டுத்தொழிற் சங்கங்களின் ஆக்ட்டை அமு
லுக்குக் கொண்டுவருவதால் ஸ்தல கவர்ன்மெண்டார் வருஷா வருஷம் செலவு வி
தம் குறைந்துகொண்டே வருகிறது. 1906௵ மார்ச்சு௴ 31-ந் தேதியோடு முடிந்த
வருஷத்தில் அது 100-க்கு 10 விகிதமா யிருந்து, 1912-ம்௵ ஜூன்௴ 30-ந் தேதி
யோடு முடிந்த வருஷத்தில் நூற்றுக்கு 0·371 வீதத்திற்குக் குறைந்துவிட்டது. இத
னால் கூட்டுறவுச் சங்கங்களின் விவஹாரங்கள் ஏராளமாயிருக்கின்றனவென்று நமக்குப்
புலப்படுகிறது. 1912-ம்௵ ஜூன்௴ 30-ந் தேதியோடு முடிந்த வருஷத்தில் இவ்
விலாகாவுக்காக மொத்தச் செலவு 0·80 லக்ஷம் ரூபாய். இவ்விராஜதானியின் விஸ்
தீரணத்தை ஒப்பிடும் பக்ஷத்தில் ஒரு லக்ஷம் அல்லது இரண்டுலக்ஷம் ரூபாய் மிகச்
சொற்பந்தான். ஆலோஜனை சக்தியுள்ள ஜனங்கள் எல்லோரும் இப்பொழுது லோகல்
கவர்ன்மெண்டின் தலைமை ஆதிபத்தியத்தை வகித்திருக்கும் தயாள குணமுடைய
கனவானை, எழுதப் படிக்கத்தெரிந்த சொற்ப ஜனங்களின் பிரயோஜனத்திற்கு
மாத்திர மன்னியில், இருபையும், பச்சாதாபகுணம் நிறைந்த நமது சக்ரவர்த்தி அவர்க
ளால் மாட்சிமைபொருந்திய கவர்னர் அவர்களுடைய பாதுகாப்பில் ஒப்புவிக்கப்பட்

டிருக்கும் சதா கடனாளிகளா யிருக்கும் கிருஷிகர்களும் கூலிவேலைக்காரர்களுமாகிய கோடிக்கணக்கான ஜனங்களுடைய அளவற்ற பிரயோஜனத்திற்காக ஏற்பட்டிருக்கும் முறையாகிய கூட்டுத்தொழில் முறையில் வாஸ்தவமான அக்கரையெடுத்துக்கொள்ளும் படியாய் எதிர்பார்க்கிறார்கள்.

---

# கோயமுத்தூர் கூட்டுமுயற்சிக் கட்டிடச் சங்கம் லிமிட்டெட்,

---

(கோயமுத்தூர் நகரபாங்கியின் காரியதரிசியாகிய ம-ள-ள-ஸ்ரீ C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் M.A., L.T., எழுதியது.)

எப்படித்தீமையினாலும் நன்மை பயப்பதுபோல், மிகக் கொடுமையான பிளேக் உபத்திரவத்தினாலும் இவ்வூரில் நன்மைகள் உண்டாயின. நெருக்கமான தெருக்கள் திருத்தப்பட்டு விசாலமாயின; வியாதிகளை உண்டாக்கும் மிகவும் அசுத்தமான வீடுகள் இடிபட்டன; புதிதாக வீடுகட்டக்கூடிய நல்ல ஸ்தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆகையினால் இவ்விதச் சங்கங்கள் நிலைத்திருக்கவேண்டுமானால், அதில் சேரும் மெம்பர்கள் அவ்விதத்தேவை யுள்ளவர்களாகவும், அதற்கு வேண்டிய மூலதனத்தை, தங்கள் உறவினாற் சேர்க்கப் பிரியமுள்ளவர்களாகவுமிருக்கவேண்டும்.

பிளேகின் கொடுமையினால், ஒருவரும் இதரபாங்கியில் அதிக வட்டிக்குப் பணம் எடுத்து தங்கள் வீட்டைக் கட்டமாட்டார். மாறுதலடைந்த கூட்டுமுயற்சிச் சட்டமானது (1912ம் ௵ இரண்டாவது ஆக்ட்), ஜனங்களுக்கு லேவாதேவி விஷயத்தைத்தவிர, வேறு வழிகளில் இக்கூட்டு முயற்சியை உபயோகப்படுத்த யோஜனைகள் உண்டுபண்ணினதாலும், வெவ்வேறு இடங்களில் சுயநலம் பாராட்டாத பெரியோர்கள் ஐக்கிய முயற்சியை, விளைவு, கைத்தொழில்கள் அபிவிருத்தியாகுமாறு, உபயோகப்படுத்தச் சிரமப்படுதலாலும், இவ்வூரிலுள்ள நுண்ணறிவுடைய தேசாபிமானிகள் சிலர், ஒரு கூட்டுறவுக் கட்டிடச்சங்கம் ஸ்தாபிக்க அபிப்பிராயப்பட்டார்கள். அந்த ஸமயம் இந்த எண்ணத்திற்குத் தகுந்த காலமாயிருந்தது; ஏனென்றால், பட்டினம் விசாலிக்கும் நிமித்தம், 'ஸ்ரீ வெங்கிடேஷ்பேட்டை' என்று அழைக்கப்பட்ட, ஜெயில் ரஸ்தாவில், சுமார் 100 வீடுகள் கட்ட, ஏற்கனவே உத்தரவாகி யிருந்தது.

அந்த சங்கத்தின் நோக்கங்களாவன:—

(1) சங்கத்தின் பொருட்டு வீடுகள் கட்டுதல் அல்லது வாங்குதல்.

(2) அங்கத்தினர்களுக்குப் புதிதாக வீடுகட்டவாவது இடிபட்ட வீட்டை உற்பவிக்கவாவது, பழுதுபார்க்கவாவது, பணம் கடன் கொடுத்து உதவுதல்.

(3) பட்டினம் அகலப்படுத்துகிற ஸ்கீமிலும், அந்தந்த காலங்களில் ஸானிடரி அதிகாரிகளால் சுகாதார சௌகரியங்களில்லை யென்று கண்டனம் செய்யப்பட்ட ஜாகாக்களை சீர்ப்படுத்துதலில் முனிசிபல் கவுன்சிலுடன் ஒத்துமையாய்வேலைசெய்தல்.



(4) கோயமுத்தூர் முனிசிபாலிடியில் வீடுகட்டும் விஷயத்தில் வேறுவிதமான சௌகரியங்களை மெம்பர்களுக்குச் செய்தல்.

இந்த லக்ஷியங்கள் மிகவும் மேன்மையாகத் தோன்றினாலும், மெம்பர்களுக்குத் தகுந்த சௌகரியங்கள் தராது. உதாரணமாக—இரண்டுவித அவசர அத்தியாவசியங்களுக்கு உதவுகிறதில்லை, அதாவது குடிகளுக்குத் தகுந்த வீடுகள் வாங்குதல், குடியிருக்கும் மனைகளின் ஈடுபோடுகளை நீக்குதல். உத்தேசித்தபடி மெம்பர்களுக்கு அனுகூலமாயிருக்கவேண்டுமானால், மேற்கூறிய நோக்கங்களை மாறுதல் செய்யவேண்டும்.

இப்பொழுது அதில் 100 மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள்; பங்குத்தொகை சுமார் ரூபா 2000 க்கு வசூலாயிருக்கிறது. ரூல்ப்படி அச்சங்கம் வசூலான பங்குத்தொகைக்கு ஐந்துமடங்கு கடன் வாங்கலாம்—அதாவது ரூ. 10,000. ஆகையால் ஆரம்பத்தில் வெளியில் கடன்கொடுக்க ரூ. 12,000 இருக்கிறதாக நினைத்துக்கொள்ளலாம். இன்னும் பங்குகள் விற்பனையாகி, அதற்குத் தகுந்த கடன்வெளியில் எடுபட்டாலொழிய, மெம்பர்களுக்கு மறுபடி கடன்கொடுக்கமுடியாது. இதன் முக்கியமான ஸ்தாபகர்களுக்கு, மெம்பர்களுக்கு உதவும்படியாக டிபாஸிட்டுப்பணம் அந்தபாங்கியில் வந்துவிழுமென்ற நம்பிக்கையில்லை.

ஆனால் ஐரோப்பிய அனுபோகத்தையும், சிறுபான்மை நம்ம சொந்த அனுபோகத்தையும், ஒரு நல்ல பாதுகாப்பாய் வைத்துக்கொண்டால், ஏன் இந்த கட்டிடச்சங்கம், எல்லாவகுப்பினரும் விரும்பி தங்கள் மீதிப்பணத்தை டிபாசிட்டில் வைக்கத்தகுந்த வசதியாயிராது? நிர்வாக சபையார் யோக்கியராயும், சக்தியுள்ளவராயும், புத்தியாயும் உஷாராயுமிருந்தாலொழிய மேற்கூறியபடி சங்கம் உயர்ந்தபதவி யடையமுடியாது.

1912-௵ இந்தியா ஆக்ட் இரண்டின்படி இந்த நிபந்தனை நம் சங்கத்துக்குமுண்டு. ஏனென்றால் நம்ம ரிகார்டுகளை யாவரும் பார்க்கலாம், ரெஜிஸ்ட்ரார் அவர்களால் தணிக்கை செய்யப்படுகின்றன. மெம்பர்கள் சங்கம் ஒழுங்காய் நடந்துகொண்டிருக்கிறதா இல்லையா என்று சோதனைபார்த்து மனதைத் திருப்தி செய்துகொள்ளலாம். மோசம், கெட்ட வழியில் நிர்வஹித்தல் இவைகளால் சங்கத்தின் வேலையை முழுவதும் கவிழ்க்க முடியாது. முதல் முதலில் மெம்பர்களுக்குச் சொற்ப வட்டிக்குக் கடன் கொடுத்து, பிறகு அனுபோகத்தால் வேறு உயர்ந்த வேலைகளில் தலையிட்டுக்கொள்ளுதல் என்பது யோசனை. இவ்விதமான உஷாரோடு வேலை செய்தால் வருஷக் கடைசியில் மிக்க ஆவலுள்ள ஜனங்களுக்கு இச்சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒழுங்கை காண்பிக்கலாமென்று தோன்றுகிறது.

எங்கள் சங்கமானது ஒவ்வொரு ஷெயர் ரூ. 50 வீதம் 1000 ஷெயர்களடங்கிய ரூ.50,000 மூலதனத்தையுடையது. இந்தத் தொகையானது ஷெயர் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் ஐந்து தடவைகளில் செலுத்தப்படவேண்டியது. இரண்டு தவணைகளுக்கு இடையில் குறைந்தபக்ஷம் மூன்றுமாத காலதாமதம் இருக்கிறது. வேறு அநேக அசௌகரியங்களுடன், கஷ்டப்பட்டு அதிக வீட்டுவாடகை கொடுத்துவரும் வெகு ஜனங்கள் இதில் சேருவார்களென்று மேற்கூறிய நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மெம்பர்களும் 10 ஷெயர்களுக்கு மேல் வாங்கக்கூடாது. உண்மையில் இனிமேல் ஒவ்வொருவருக்கும் ஒரு ஷெயருக்குமேல் கிடைக்காதென்று நினைக்கப்படுகிறது. புதிதாய் வருகிறவருக்கு இடம் கொடுப்பதற்காக, வட்டிக்கு ஆசைப்பட்டுப் பணம் உதவும் மிருந்த தனிகர்களை உள்ளே விடக்கூடாது. இச்சங்கத்தின் வேலைகள் கோயமுத்தூர் டவுன்

முனிசிபல் எல்லைக்குள்தான். ஆனால் இந்த எல்லை, அதன் ஆசைக்குத் தகுந்தபடி மிகவும் விசாலமாயிருக்கிறது. மற்ற முனிசிபல் பட்டினங்கள் இம்மாதிரிச் செய்யலாம். மதுரை இவ்விதம் ஊக்கத்துடன் வேலை ஆரம்பித்ததைப் பற்றி எல்லோரும் சந்தோஷப்படுகிறோம்.

ஒவ்வொரு கட்டிடச் சங்கத்திற்கும் இதைத்தவிர அத்தியாவசியமுள்ளது ஒழுங்கான முறையில் நிர்வாகித்தல். ஸர். இ. ப்ராபிருக் (Sir. E. Brabrook) என்பவர் சொல்லுவதாவது—ஒரு சங்கத்தின் இன்றியமையாத அவசியம் யாதெனில் எல்லா நற்குணங்கள் பொருந்திய தன் நலம் பாராத நிர்வாகக் கமிட்டியாரையும், பொது நன்மைக்கு உழைக்கும் மிக்க ஊக்கமுள்ள காரியதரிசியையும் தேர்ந்தெடுத்தல் மேற்கூறியபடியே இச்சங்கத்துக்கு எல்லாம் பொருந்தியிருக்கின்றன.

நிர்வாக கம்மிட்டியானது 9 மெம்பர்களடங்கியது. கௌரவத்துக்கு உழைக்கும் இந்த 9 மெம்பர்களாற் சங்கத்தின்பொருட்டு வெளியில் அலைந்து வேலை பார்க்க முடியாததினால், இவர்களில் மூன்றுபேர்கள் அடங்கிய ஒரு அதிகாரக் கமிட்டி உண்டாயிற்று. அதில் காரியதரிசி ஒருவராவர். கடைசியில் தேறின லாபத்திற் கால்பங்கு இவர்களையடையும். சில மெம்பர்கள் முதல் ஜனரல் மீட்டிங்கில் இந்தப் பிரதிப்பிரயோஜனம் அதிகாரக் கமிட்டிக்கு வேண்டாமென்று ஆக்ஷேபணை செய்தார்கள். ஆனால் மிஸ்டர் ப்ராபிருக் (Mr. Brabrook) சொல்லுகிறபடி சம்பளம் வாங்கினாற்றான் சொந்தப் பொறுப்புடன் மனச் சாக்ஷியின்படி உரிய கடமைகளைச் செய்துவரும்.

ஐரோப்பிய அனுபோகப்படி சம்பளம் கொடுத்து ஒரு சர்வேயரையும், ஒரு வக்கீலையும், அச்சங்கத்துக்காக ஆரம்பத்திலேயே நியமிக்கவேண்டும். ஆனால் நாங்கள் ஒரு சிநேகித வக்கீலை ஒரு வருஷத்திற்கு இனாமாய் உதவும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். நிர்வாக கமிட்டியார் இப்பொழுது சர்வேயர் தேவையென்று நினைக்கவில்லை. சங்கத்தின்பொருட்டு இப்பொழுது வீடுகள் கட்ட உத்தேசமில்லாததினாலும் வீடுகள் கட்டுவதிலுள்ள கஷ்டங்களை உத்தேசித்தும், நிபுணர்களின் உதவி இப்பொழுது வேண்டுமென்று போர்டார் அபிப்பிராயப்படவில்லை. இந்த யோசனை நல்லதோ கெட்டதோ இதன் பிரகாரம் நடப்பதாகச் சம்மதித்தாய்விட்டது. வறுமையால் வருந்தும் சகோதரர்களுக்கு 100-க்கு ஒன்பது வட்டி வீதம் பணம் மொத்தத்தில் உதவி, அவர்களிடம் திரும்பி சில்லரையாக அநேக தவணைகளில் வாங்கி உதவி செய்கிறோம். ஏனென்றால், ஏகதேசத்தில் வீடு கட்டும் செலவு ஏழைகளுக்கு மிகவும் பாரமாயிருத்தலால் ஜீவனுக்கு மற்ற இன்றியமையாததான ஆகாரமும் உடையும் குறைந்துபோகின்றன.

ஆனால் இதைத் தவிர இன்னும் உயர்ந்த நோக்கங்களை உத்தேசித்திருக்கிறோம். அதாவது—ஏழை மெம்பர்களுக்கு, ப்ளான், எஸ்டிமேட்டுகள் ஆரம்பத்தில் உதவுதல், வீட்டுக் கட்ட சாமான்களை மொத்தத்தில் லாபகரமாய் வாங்கி பகர்ந்து கொடுத்தல், கூலிகளை ஏற்பட்ட ரேட்டுகளுக்கு இசைத்துவிடுதல், இன்னும் இம்மாதிரியான உதவிகளைச் செய்தலுமாம். இவையெல்லாவற்றைப் பார்க்கிலும், நாங்களே சங்கத்தின் பொருட்டு சுகாதாரப்படிக் கட்டனம செய்யப்பட்ட இடங்களை சீர்திருத்தி, பேட்டைகளைக் கட்டி விற்கவாவது வைத்துக்கொள்ளவாவது ஆசையுள்ளவர்களாயிருக்கிறோம். ஒழுங்காய் வேலை செய்தால் கட்டிடச் சங்கங்கள், மற்ற ஐக்கிய முயற்சிகள்போல், ஜனங்களுக்கு மிக்க நன்மைகளும், ஒற்றுமையும், உண்டாக்கும்.

---

# சென்னைப்பட்டினத்தில் வேலைக்காரர்களின் ஓர் ஐக்கிய முயற்சிச் சங்கம்.

—(:o:)—

(விஜயஞ்செய்த ஒருவரால் எழுதப்பட்டது.)

நாம் தினந்தோறும் உட்கொள்ளும் உப்பு சர்க்கார் உத்தரவின் கீழ் தயார் செய்யப்படுவது யாவருமறிந்தவிஷயமே! ஆனால் அது விசாலமான உப்பளத்திலிருந்து ஏழைக்குடிகளுக்குவருவதற்குமுன், எவ்வளவு ஏழைஜனங்கள் பிழைக்கிறார்களென்றும், எத்தனை தனிகர்களுக்குப் பணம் மேல் மேல் ஓங்குவதென்றும் சிறுபான்மையோர் தாம் அறிவார்கள். இந்த இராஜதானியில் அநேக இடங்களில் உப்பு செய்கிறார்கள். சென்னையிலருகிலுள்ள என்னூர், கோவிலோன் என்னுமிடங்களில் உப்புப்பாத்திகளிருக்கின்றன.

அநேக நூற்றுக்கணக்கான ஏழை ஜனங்கள், உப்பளங்களில் வேலை செய்தும், உப்புப்பாத்திகளை தயார்செய்தும், நல்ல உப்புகள் குறித்த காலத்தில் படியும்படியாக அவைகளில் சமுத்திர ஜலத்தைப் பாய்ச்சியும், பிறகு அவ்வுப்புகளைக் கூட்டிச் சேர்த்தும், தினந்தோறும் தங்கள் வைவயிற்றை வளர்க்கிறார்கள்.

இந்த உப்பளங்களிலிருந்து உப்புகள் 'பக்கிங்ஹாம் கால்வாயிற் (Backingham Canal) செல்லும் படகுகள் மூலமாய் 'ஸால்ட்கொட்டார்ஸ்' என்று சொல்லப்பட்ட சென்னை உப்பு டிப்போவைச் சேருகின்றன. அந்த படகுக்காரர்கள் இந்தவேலைசெய்து எளிமையாய் வசிக்கிறார்கள். சர்க்காரிடத்தில், கூலி விஷயமாய் எவ்வளவு அதிக ரேட்டு வாங்க முடியுமோ அவ்வளவும் வாங்கி இந்த ஏழைப் படகுக்காரர்களுக்கு எவ்வளவு குறைந்த கூலி கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுக்கக்கூடிய பணப்புழக்கமுள்ள கண்டிராக்ட்டர்களிருக்கிறார்கள். இவ்வேழைப் படகுக்காரர்களின் கஷ்டமான உழைப்பால், அக்கண்டிராக்ட்டர்கள் தங்கள் செல்வத்தை அபிவிருத்தி செய்கிறார்கள். படகுகள் நிரம்ப உப்பு ஏற்றப்பட்டுவந்தவுடன், அதை இறக்கவும், கொட்டாரவில் மூடியிருக்கும் குவியல்களைப்போல் சேர்க்கவும் நூற்றுக்கணக்கான கூலிகள் வேலைசெய்துகொண்டு வருகிறார்கள். சர்க்கார் தாமே இந்த வேலைகளை தாங்கள் உள்ளூர்ந்து பார்ப்பது அசாத்தியமானதால், கண்டிராக்ட்டில் ஏற்பட்ட ரேட்டுபடி வேலையைவிட்டு விடுகிறார்கள். கண்டிராக்ட்டர்கள், இவ்விதமாய் உள்ளே பிரவேசித்துப் பணம் சம்பாதிக்க, அச்சம்பாத்தியத்திற்குக் காரணமான கூலிகளோ தங்கள் தினகாலக்ஷேபத்தை கஷ்டப்பட்டு நடத்திக்கொண்டு பரிதாபமான நிலையிலிருக்கிறார்கள். அந்த உப்புக் குவியல்களை ஒருவருஷத்திற்குக் குறையாமல் இருந்தவிடத்தில் இருக்கச் செய்து பிறகு உள்ளூர் வியாபாரிகளுக்காவது, அல்லது கப்பலேற்றி வெளியிடங்களுக்காவது அனுப்புகிறார்கள். இப்பொழுதும், சாக்குகளில் உப்புகளை நிரப்பவும், அவைகளை ரயில்வண்டியில் அடுக்கவும் அல்லது வியாபாரி வண்டிகளுக்குச் சுமக்கவும் கூலிகள்' என்று சில சமயங்களில் இழிவாய்க் கூப்பிடப்பட்ட வேலைக்காரர்களின், உதவி வேண்டியிருக்கிறது. இந்த வேலையிலும், கண்டிராக்ட்டர்கள் சில ரேட்டுகள்

படி வேலையை முடிப்பதாக ஸர்க்காருடன் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு வேலைக்காரர்களுக்கு நாளொன்றுக்கு அணா 8, 10, 12, அல்லது சில சமயத்தில் 14 வீதம் கொடுக்கிறார்கள். இந்த உப்புகளை முதலில் பெரிய வியாபாரிகள் வாங்கி மாமூலாயுள்ள சிறு வியாபாரிகளிடம் விற்கிறார்கள். இவர்களிடமிருந்து சில்லரைக்கடை வியாபாரிகள் மறுபடி வாங்கி சனக்குக் கொடுக்கிறார்கள்.

இவ்விதமாய், உப்பு உண்டாக்குவதிலும், படகுகளில் ஏற்றிக்கொண்டு போவதிலும், உப்புடிப்போவில் அதை இறக்குவதிலும், மறுபடி வியாபாரிகளுக்கு அதைக் கட்டி அனுப்புவதிலும் அதை விற்பதிலும், ஆகிய ஐந்து வழிகளில், தரகுக்காரர்கள் தலையிடுகிறார்கள். உப்பளத்தில் வேலை செய்யும் ஆட்களும், உப்பைச் சுமந்து ஏற்றும் வேலைக்காரர்களும், படகுக்காரர்களும் அல்லது சிறுவியாபாரிகளும் ஒன்று சேர்ந்து இந்தத் தரகுக்காரர்களை உள்ளே நுழைய விடாமற் செய்யலாம். ஏர்ல் கிரே (Earl Gray) என்பவர் சமீபத்திற் செய்த உபந்நியாசத்தில் வற்புறுத்தினபடி அநாவசியமான தரகுக்காரர்களை விலக்குவதுதான் ஐக்கியமுயற்சியின் உண்மையான வேலை. இவ்வேழை வேலைக்காரர்களுக்கு ஐக்கியமுயற்சியின் நன்மையைக் கொடுக்கவேண்டும். ஆனால் இவர்களுக்கு ஒன்றும் தெரியாததினால் ஆரம்பத்தில் உத்தியோகஸ்தர்கள் பார்வையின் கீழ் இவர்களின் பொருட்டு ஒரு சங்கம் ஏற்பட வேண்டும்.

ஸர்க்காரிலேயே இவ்வழியில் ஏற்பாடு எடுத்துக்கொண்டுவிட்டதாகக்கேட்க நான் சந்தோஷப்படுகிறேன். ஒரு ஐக்கிய முயற்சிச்சங்கம் சென்னையில் உப்பு டிப்போவில் வேலை செய்யும் வேலைக்காரர்களின் நன்மைக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சங்கமானது சிலரேட்டுகளுக்கு உப்பை ரயில் வண்டிக்குச்சுமக்கவும் அல்லது உள்ளூர் வியாபாரி வண்டிகளில் அதைப் போடவும் சம்மதித்திருக்கிறது. சர்க்காருக்குக்கட்டவேண்டிய ஜாமீன் பணம்! கட்டியாய்விட்டது. அதிலுள்ள மெம்பர்கள் ஒவ்வொருவரும் சங்கத்தின் கடனுக்கு முழுவதும் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். மெம்பர்கள் தினந்தோறும் உப்பை ஏற்றுகிறார்கள். ஆனால் சங்கம் இரண்டு வாரத்திற்கொருதரம் பில்லைக்காட்டிப் பணம் வாங்கிக்கொள்ளுகிறது.

வேலைக்காரர்கள் தங்களுக்குள்ள ஏற்பாட்டின்படி தினந்தோறும் கூலி பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்பொழுது ஒவ்வொருவரும் முன்புகண்டிராக்ட்டரிடத்தில் சம்பளம் வாங்கினதைக் காட்டிலும் 2 அணா அதிகமாய் அடைகிறார்களென்று அறிகிறேன். அவர்கள் கணக்குகள் எழுத ஒரு குமாஸ்தாவையும் கூலி வேலையைப் பகிர்ந்து கொடுக்க ஒரு மேஸ்திரியையும் நியமித்திருக்கிறார்கள். இவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். வேலைக்காரர்களுக்கும் இவர்களுக்கும் கொடுத்துப் போக பாக்கித் தேறினது சங்கத்தின் ஆதாயமாகும். ஆதாயத்தைப் பிரிக்கும் விதமும் நிர்வகிக்கும் முறைகளும் சங்கத்தின் 25 லிருந்து 34 வரையிலுள்ள அநுபந்த விதிகளில் விவரமாய்ச் சொல்லப்படுகின்றன. சிலவற்றை இங்கு கூறுகிறேன்.

## கூலிவேலை கண்ட்ராக்ட்.

25. ரிஜிஸ்டிராரவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட கூலிவேலை கண்ட்ராக்ட்கள்தான் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

26. சங்கத்தின் எல்லா மெம்பர்களும் வேலைக்கு ஒழுங்காய் ஆஜராகவேண்டியது. எந்த மெம்பரும் பஞ்சாயத்தாரிடம் லீவ்கேட்காமல் வேலையினின்றும் நின்று



விடக்கூடாது. யாராவது ஒரு மெம்பர் குறித்த ஒரு நாளில் வேலைக்கு வராமலிருந்தால், டெம்பரரியாக எத்தனை கூலிகள் வேண்டுமோ, அத்தனை கூலிகளை, மார்க்கட்டு ரேட்டின்படி சேர்க்க அதிகாரமுண்டு. அப்படி இதனால் நேரிடும் நஷ்டத்தை, வேலைக்கு வாராமல் நின்ற மெம்பரிடம் வசூல் செய்யப்படும். இப்படி ஒருவன் 2 வாரத்திற்குமேல் தவறி நடந்து, பஞ்சாயத்தாருக்கும் சரியான முகாந்தரம் கொடுக்காவிட்டால் மெம்பர்கள் ஜாப்தாவினின்றும் அவன் பெயரை பஞ்சாயத்தார் எடுத்து விடுவதோடு, அந்த மெம்பர் ஸ்தானத்திற்கு வேறொருவனை ஏற்பாடு செய்யவாவது அல்லது கூலி வேலை கண்டிராக்ட்டை நிறைவேற்ற டெம்பரரியாய்க் கூலிகளைச் சேர்க்கவாவது, அதிகாரமுண்டு.

27. வருஷத்திற்கொருமுறை கூலியாட்கள் ஒவ்வொருவருக்கும் அவருடைய வேலையின் தாரதம்மியப்படி, எவ்வளவுகூலி கொடுக்கலாமென்று நிர்ணயஞ்செய்ய பஞ்சாயத்தாருக்கு அதிகாரமுண்டு. இப்பொழுது வழங்கும் கூலிரேட்டை ஊர்ஜிதப்படுத்த, முன்பு கண்டிராக்ட்டர்களால் கொடுக்கப்பட்ட ரேட்டு உதவியாயிருக்கும். கூலிரேட்டுகள் ஒருதரம் உறுதி செய்யப்பட்டால், ரெஜிஸ்ட்ராரவர்கள் சாங்க்ஷனன்றி அவ்வருஷத்திற்குள் அவைகள் மாற்றப்படக்கூடாது.

30. சங்கத்தில் வேலைசெய்யும் குமாஸ்தா அல்லது குமாஸ்தாக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கக்கூடிய லாபத்தில் 100-க்கு 2-வீதத்திற்கு மேற்படாமல் வெகுமதி கொடுக்கப்படும்.

31. செக்ரிடரி, குமாஸ்தாக்கள் உதவியைக்கொண்டு, பிரசிடெண்டு அன்றன்றைக்குக் கொடுக்கவேண்டிய கூலியை மெம்பர்களுக்கு அல்லது அவர்களுக்குபதிலாய் வருபவர்களுக்கு, பட்வாடா செய்வார்.

32. சங்கம் ஏற்றுக்கொண்ட கண்டிராக்ட்டுக்காக, கவர்ன்மெண்டாரால் அல்லது வேறு ஏதாவது பொதுக்கூட்டத்தால், அல்லது ப்ரைவேட் மனிதன் அல்லது மனிதர்களால் செலுத்தவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ள பிரசிடெண்டுக்கு அதிகாரமுண்டு.

## லாபம்.

33. வருஷந்தோறும் சங்கத்தின் தேறின லாபத்தில் நான்கில் ஒரு பங்கை ரிஜிஸ்ட்ரார் நிர்ணயித்தபடி க்ஷேமநிதியாகச் செய்யவேண்டியது. மீதியை கவர்ன்மெண்டாரின் பொது சாங்க்ஷனுக்குட்பட்டு, மெம்பர்களுக்குள் அவரவர் செய்த வேலைக்குத்தகுந்தபடி வருஷக்கணக்கு தணிக்கையானபிறகு, ரிஜிஸ்ட்ரார் தீர்மானஞ்செய்யும் பிரகாரம் கொடுக்கப்படும்.

இப்பொழுது 120 மெம்பர்கள் அதில் இருக்கிறார்கள். அச்சங்கம் மிக்க லாபத்துடன் வேலைசெய்கிறதென்று தெரிய வருகிறது. வேலைக்காரர்களிடத்தில் மனமிரங்கும் நம்மவர்கள், இம்மாதிரிச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதைக்காட்டிலும், செய்யும் சிறந்தவேலை வேறு ஒன்றுமில்லை.

## இராஜப்பிரதிநிதி வைஸ்ராயவர்களுக்குச் சென்னை ஐக்கிய முயற்சிக்காரர்களின் டெபுடேஷன்.

ஹிஸ் எக்ஸலென்ஸி வைஸ்ராயவர்கள், நாளது நவம்பர்மாதம் 25ம் தேதி சென்னை நகரில் விஜயம் செய்யுங்காலத்து, சென்னை இராஜதானி ஐக்கிய முயற்சிக்காரர்களின் பொருட்டு, அடியிற்கண்ட கனவான்கள் அடங்கிய ஒரு டெபுடேஷனை ஏற்றுக்கொள்ள சம்மதித்திருக்கிறார்.

| ந. | | பெயர். | ஜில்லா அல்லது சங்கம். |
|---|---|---|---|
| 1. | ம-ா-ா-ஸ்ரீ | திவான்பகதூர் K. கிருஷ்ணஸ்வாமி ராவ்காரு C. I. E. | மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி. |
| 2. | ,, | K. B. ராமநாதய்யர் அவர்கள் M.A., B.L.,L.T. | திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ். |
| 3. | ,, | K. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் B.A., B.L. | மதுரை. |
| 4. | ,, | C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் M.A. L.T. | கோயமுத்தூர் |
| 5. | ,, | ராவ் பகதூர் Y. நாராயணராவ் அவர்கள் | திருச்சிறாப்பள்ளி. |
| 6. | ,, | வெங்கிட்டப்பய்யா | தெனாலி. |
| 7. | ,, | ஆனரபில் ராவ்பகதூர் V. K. ராமாநுஜாசாரியாரவர்கள் B.A. | கும்பகோணம். |
| 8. | ,, | M. ஷிவராவ் அவர்கள் | புத்தூர். |
| 9. | ,, | T. ஆதிநாராயண செட்டிகாரு. | சேலம். |
| 10. | ,, | M. V. ஹயக்கிரீவராவ்காரு | ப்ரஹ்மபூர். |
| 11. | ,, | ரெயி ஸாஹிப் அருணய்யநாயுடுகாரு | செங்கற்பட்டு. |
| 12. | ,, | திவான்பகதூர் M. ஆதிநாராயணய்ய காரு | செங்கற்பட்டு. |

# கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்தி

## இந்தியா

### சென்னை இராஜதானியில் விவசாயக் கூட்டுறவுச்சங்கம்.

#### கோயம்பத்தூர்.

1918ம் வருஷம் ஜூலைமாதம் 13-ம் தேதி கோயம்பத்தூர் விவசாய காலேஜ் ஹாலில் கூட்டுறவு முறையில் இராஜதானியின் பற்பலபாகங்களில் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்க ளேற்படுத்த ஒரு மீட்டிங்கு ஸெண்ட்ரல் விவசாயக் கமிட்டியாரால் கூட்டப்பட்டது. இம்மீட்டிங்கு மிஸ்டர் சார்விக் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது மன்னியில் விவசாயகாலேஜ் ஆக்டிங்கு பிரின்ஸ்பால் மிஸ்டர் ஸாம்ஸன், கோயம்பத்தூர் கலெக்டர் மிஸ்டர் ஹெமிங்வே, திவான்பகதூர் எம். ஆதிநாராயணய்யா, திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை முதலிய பலபிரமுகர்கள் விஜயஞ்செய்திருந்தனர். இப்பிரமுகர்களின் மொத்தஅபிப்பிராயம். 1. இப்போதிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயஅபிவிருத்தி நிமித்தம் விசேஷஅக்கரை எடுத்துக்கொள்ள அவைகளுக்கு ஸ்பெஷல் திரவிய சகாயம் செய்யும்படி ரிஜிஸ்ட்ராரவர்கள் கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்யவேண்டும். 2 கூடுமானவரையில் புதிதாய் ஏற்படுத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்களை விவசாய வழியில் உழைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். 3. புதிதாய் விவசாய விஷயங்களைக் கவனிக்க ஏற்படுத்தப்படும் கூட்டுறவுச்சங்கங்கள் வரையறுக்கப்பட்டதாயிருக்கும்படி செய்யவேண்டும் என்பனவாம். பிறகு மறுநாளாகிய 4ம் தேதி தினம் கோயம்புத்தூர் ஜில்லா விவசாய சங்கத்தார் ஒரு பொது மீட்டிங்கு கூட்டினர். இதன் அக்கிராசனாதிபதியாய் மிஸ்டர் ஹெமிங்வே அவர்கள் அமர்ந்தார். இதற்கும் பல கனதனவான்கள் விஜயஞ்செய்தனர். கடைசியில் கூட்டுறவு முறைப்படி விவசாய விருத்திக்கனுகூலமான பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

#### கடலூர்.

தென்னாற்காடு ஜில்லா விவசாய கமிட்டியார் 1918ம் ளு ஆகஸ்ட்மாதம் 2ம்தேதி சனிக்கிழமை கலெக்டர் கான்பகதர் அலிஸாஹேன் ஸாஹேப்பகதர் கான்பகதூர் அவர்களது அக்கிராசனத்தின்கீழ் கடலூர் கலெக்ட்டாபீஸ் கட்டிடத்தில் ஒரு மீட்டிங்கு கூட்டினர். கூட்டுறவுச் சங்க ரிஜிஸ்ட்ரார் ஆனரபில் திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை, திவான்பகதூர் ஆதிநாராயணய்யா, மிஸ்டர் என். பட்டாபிராமராவ்முதலிய கனவான்கள் இம்மீட்டிங்குக்கு விஜயஞ் செய்திருந்தனர். முதலில் மிஸ்டர் எம். ஆதிநாராயணய்யா அவர்கள் ஜில்லா விவசாய கமிட்டியாரின் முக்கிய கடமைகளையும் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்படுவதுபோல் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்படவேண்டுவது அவசியமென்பதையும் பற்றிப்பேசினார். பிறகு கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களும் கலெக்டர் அவர்களும் ஒருவர் பின் ஒருவராய் நாணயக் கூட்டுறவுச் சங்கத்தாலும் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தாலுமுண்டாகும் நன்மைகளையும் அவைகளுக்குக் கவர்ன்மெண்டா

ரால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் பற்றிக் கூறினார்கள். கடைசியில் எம். ஆதிநாராயணய்யா அவர்களது உபந்யாஸத்துடன் மீட்டிங்கு முடிவுபெற்றது.

## மதுரை.

1913ம் ஞு ஆகஸ்ட்மாதம் 5ம் தேதி மதுரைக் கூட்டுறவுச்சங்கத்தாரால் மீனாக்ஷி வித்தியாசாலை ஹாலில் ஒரு மீட்டிங்கு கூட்டப்பட்டது. இம்மீட்டிங்குக்கு அநேக கனவான்கள் விஜயஞ் செய்திருந்தனர். இவர்களுள் மதுரை இராமநாதபுரம் கூட்டுறவுச் சங்கத்தாரை விவசாயக் கூட்டுறவுச் சங்கமேற்படுத்துமாறு தூண்டுவதற்கென்றே கூட்டுறவுச் சங்க ரிஜிஸ்ட்ரார் ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை, எம். ஆதிநாராயணய்யா, மிஸ்டர் என். பட்டாபிராமையா முதலியோர் முக்கியமாய் வந்தார்கள் முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டன.

## திருநெல்வேலி.

1913ம் வருஷம் ஆகஸ்ட்மாதம் 13ம் தேதி திருநெல்வேலிக் கூட்டுறவு விவசாய சங்கத்தாரது மீட்டிங்கு ராவ்பகதூர் வ. சுந்தர சாஸ்திரியார் அவர்களது அக்கிராசனத்தின்கீழ் கூட்டப்பட்டது. இம்மீட்டிங்கில் திவான்பகதூர் எம். ஆதிநாராயணய்யா அவர்ர், கூட்டுறவுச் சங்கம் இவ்விராஜதானியில் எவ்வாறு பரவியதென்பதும் அது செய்துநும் நன்மைகளையும் இச்சங்கத்தை விவசாயக் கூட்டுறவுச் சங்கமாய் மாற்றினால் ந்தியாவிற்கும், நம் இராஜதானிக்கும் ஏற்படக்கூடிய நன்மைகளையும் பற்றி விரிவாய்க்கூறியுரைத்தார். கடைசியில் அக்கிராசனாதிபதி அவர்கள் மிஸ்டர் ஐயர் அவர்களுக்கு வந்தனமளித்து கொஞ்சம் உபந்யசித்ததுடன் மீட்டிங்கு கலைந்தது.

1913-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 28ந் தேதி சீர்காழியில் கூடின தஞ்சை ஜில்லாக் கான்பரன்ஸில் பிரசிடெண்ட் மிஸ்டர் V.P. மாதவராவ் அவர்கள் செய்த ஆரம்பப் பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்ட்.

## விவசாயம்.

நம்முடைய முக்கிய தொழில் விவசாயம். கைத்தொழில்களுக்குப் பேர்போன இங்கிலாந்தே ஜனங்களை விவசாயவேலையில் அமர்த்தி, அவ்விவசாயத்தை மிக்கப்பலன் தரத்தக்கதாயும், ஜனங்களை தன்னிடத்திற்கு இழுக்கக் கூடியதாயும் இருக்கும்படி செய்ய பிரயத்தனம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் நூற்றுக்கு எண்பது பேருக்கு விவசாயமே தொழிலாயிருக்கும் இந்தியாவில் அதனை சீர்திருத்தாமல் பழைய முறைகளிலிருக்கும்படியே விடுவதால் நம்முடைய கடமையினின்றும் தவறினவர்களாகிறோம். விவசாயிகளின் நிலைமையை ஜனங்கள் பலப்படுத்துவதற்கும், அவர்கள் இதர தேசத்தாரோடு போட்டியில் தங்கள் ஸ்தானத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் கவர்ன்மெண்டார் இது வரையிலும் ஒன்றும் செய்யவேயில்லை. ருஷியாவில்கூட விவசாயி தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளும் சக்திக்கு வந்திருப்பதோடு கூட வீட்டுத் தொழில்கள் ருஷியாவின் எல்லாப் பாகங்களிலும் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. மகாவிசேஷமானதும் நமக்கு தைரியத்தைக் கொடுக்கக்கூடியதுமான சம்பவம் வெகு சீக்கிரத்தில் ஐரிஷ் குடிகள் அடைந்தது முன்னேற்றமேயாகும். சிக்கனமும், முதலுமில்லாதவர்களாயிருந்த ஐரிஷ் குடிகள் கூட்டுத் தொழில் முறையால் தங்கள் தேசத்திற்கு வேண்டிய பொருள்களை உண்டாக்குவதன்றி, இதர தேசங்களுக்கு வேண்டிய



சாமான்களை உற்பத்திசெய்யக்கூடிய குடியானவர்களாகிவிட்டார்கள். இவைகளெல்லாம் பத்து அல்லது பன்னிரண்டு வருஷத்து வேலைதான். இவ்வைரிஷ் குடிகளை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்தது அவர்கள் சுபாவத்தை அறிந்த சில பரோபகாரிகளின் வேலையே. அப்பரோபகாரிகளது செய்கையால் தாரித்ரியத்திலும், அஞ்ஞானத்திலும் மூழ்கிக்கிடந்த ஜனங்களின் குணங்கள் பேதப்பட்டு இப்பொழுது சுயநிலைமையும் சுய கௌரவமும் உடையவர்களாகிவிட்டனர். ஸர் ஹோரெஸ் ப்ளங்கெட் என்பவர்தான் எழுதியிருக்கும் "புதிய நூற்றாண்டில் ஐர் லாந்து தேசம்" என்னும் புத்தகத்தில் ஐரிஷ் விவசாயச் சங்கத்தின் வேலைகளைப்பற்றி விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார். விவசாயம் நன்றாய் அமைக்கப்பெற்று, உதவியான தொழில்கள் உற்பத்தியாக, ஜனங்கள் சுய உதவியால் தொழிற்செய்ய ஆரம்பித்திருக்கின்றார்களென்று கவர்ன்மெண்டார் அறிந்த பிறகு, சர்க்கார் உதவியால் தீங்கு நேரிடாது என்ற நம்பிக்கை வந்தபிறகு கவர்ன்மெண்டாரும் உதவி செய்ய ஆரம்பித்தார்கள். கடைசியாக ஸ்தல சுய நிர்வாகமும் கொடுக்கப்பட்ட இவைகளெல்லாம் கிராமாந்தர ஜனங்களின் பழக்க வழக்கங்களையும், புத்திப் போக்கையும் விசேஷமாக மாற்றிவிட்டன. இவைகளெல்லாம் பன்னிரண்டு வருஷத்திற்குட்பட்ட வேலைதான். ஜனங்களுக்கு வீட்டுவேலையே அதிகமாயிருப்பதால் இராஜாங்க விஷயங்களில் பிரவேசிக்கவேயில்லை.

ஐரிஷ் விவசாய ஆர்கானிஸேஷன் (அமைப்பு) கமிட்டியைப்பற்றியும், சர்க்கார் விவசாய இலாகாவைப்பற்றியும், ஜில்லா கவுன்ஸிலைப்பற்றியும் ஸர் ஹோரெஸ் ப்ளங்கெட் பின்வருமாறு சொல்லுகிறார்:—

"முன்போலில்லாமல் இப்போது பிரத்யேகநோக்கத்தையுடைய ஐரிஷ்குடிகளின் எண்ணத்தையறிந்து அதனையும் மேற்கொண்டு அவர்களின் விருத்திக்கு வேண்டியவைகளைச் செய்யவேண்டியிருக்கின்றன. ஆகையால் 1891ம் வருஷத்திலிருந்த சர்க்கார் உதவி மாதிரியல்லாமல், 1899ம் வருஷத்தில் குடிகளின் நயத்தை அநுசரித்து உதவி செய்யவேண்டியிருந்தது. ஏற்கனவே பஞ்சகாலங்கட்குமுன் சர்க்கார் உதவி கிடையாது. 19ம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் கொடுக்கப்பட்ட சதாவிருத்தியையும் நிஷ்பிரயோஜனமான பஞ்ச நிவர்த்தி வேலைகளையும்விட, ஜனநெருக்கமுள்ள ஜில்லா போர்டின் (Congested District Board) திருத்தவேலை பிரயோஜனமுள்ளதாயிருந்தது! இப்போது விமர்சிக்கப்படுகிற வேலையானது, முன் கூறப்பட்ட நெருங்கின ஜில்லா போர்டு வேலையைவிட அதிக விசேஷமானது. அச்சங்கத்தை ஸ்தாபித்தபோது கவர்ன்மெண்டார் நியமிக்கப்பட்ட பேர்வழிகளை நம்பவேண்டியிருக்குமோ வென்று யோசிக்கப்பட்டது. எட்டு வருஷத்திற்குப் பிறகு இந்த இலாகாவை உண்டாக்கியபோது ஸ்தல சுய ஆட்சியின் அஸ்திவாரம் விசாலப்படுத்தப்பட்டபடியாலும், இப்புதியவழிகளால் ஜனங்களுடைய ஆசாரங்களும் கோட்பாடுகளும் நன்றாய் விட்டபடியாலும், ஜனங்களாலேயே குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளின் வார்த்தையைக் கேட்டுச் செய்ய சாத்தியப்பட்டது."

இவ்விஷயத்தைப் பற்றியே எதிர்க் கட்சியைச் சேர்ந்த மிஸ்டர் ஜான்ரெட்மாண்டு 1907ம் வருஷத்தில் பேசும்போது பின்வருமாறு சொல்லியிருக்கின்றனர்:—

"1898ம் வருஷத்து ஐரிஷ் கவுன்சில் சட்டத்தினால் ஐரிஷ் பாமர ஜனங்கட்கெல்லாம் ஸ்தல நிர்வாகத்தில் பூர்ண அதிகாரமேற்பட்டது. இதனால் ஜனசமூகத்தில் ஒரு மாறுதலுண்டாயிற்று. இதனால் சிலருடைய பழமையான ஆதிக்யம் கெட்டதோடு ஐரிஷ் ஜனங்களே அயர்லாந்தின் அரசிறையிலும் உள்நாட்டு விஷயங்களிலும் அதிக

ரம் பெற்றனர்; தங்களைத்தாங்களே ஆட்சிபுரிய ஐரிஷ்பாமர ஜனங்களின் சக்தியைத் தூண்டுவதற்கு இதைவிட வேறுவித உபாயம் இல்லை."

அவர்கள் சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்தபோது குடியானவன் போதுமான புது சாஸ்திர முறைப்படியுள்ள ஞானத்தை அடையும் வரையில் காத்துக் கொண்டிருக்கவில்லை. இயன்றவளவு கிடைத்தவர்களைக்கொண்டு ஆரம்பித்து அதற்கு மாதிரியான சங்கங்களை ஸ்தாபித்து அதன் மூலமாக விவசாய முதலிய தொழில்களை உற்பத்தி செய்தலிலும், உற்பத்தி செய்தவைகளைச் செலவழிப்பதிலும் உள்ள மேலான பலன்களை ஜனங்கள் அறியும்படி ஏற்பாடு செய்தார்கள்.

இதைப்பற்றி விஸ்தாரமாகப் பேசுவதாயிருந்தால் நான் ஒரு பெரிய புஸ்தகமெழுத வேண்டும். நாம் கவனிக்க வேண்டியதென்னவென்றால் அவ்விடத்தில் இக்காரியம் ஜெயம்பெற்றிருப்பதால் என் நாமும் அவ்விதமே செய்து நமது தொழில்களை அபிவிருத்தி செய்யக்கூடாதென்பதுதான். நம்முடைய ரயித்துகள் ஐரிஷ்குடிகளைக்காட்டிலும், புத்தியிலும் சுய நம்பிக்கையிலும் இளைத்தவர்களல்ல. உண்மையாகவே சிலர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களானாலும், அதனால் அவர்கள் கூட்டுறவால் உண்டாகக்கூடிய பலனை அறிந்துகொண்டு, அவைகளைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள முடியாத அவ்வளவு மூடர்களல்ல. அவர்கள் கூட்டுறவு நாணய முறையின் உள் நோக்கத்தை அறிந்துகொண்டிருக்கிறது உலகத்துக்கே அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இந்த இயக்கத்தால் ஜாதிவேற்றுமை பிரசினை பைசலாகியதோடு விவகார வில்லங்கங்கள்செய்யும் குணத்தையும் மாற்றிவிட்டது. அதன் சக்தியால், கட்குடி, சூதாட்டம் முதலியவை, அவமானத்திற்கு ஹேதுவாகுமென்று கருதப்படுகிறது. மதாவேசம், மதத்தில் குருட்டுபக்தி, மதத்வேஷம் என்பவைகளெல்லாம் மறைந்துபோய், அவர்களிடத்தில் ஏற்கனவே குடிகொண்டிருந்த பரஸ்பரசகாயம், அயலானுக்கு உபகாரம் செய்தல் முதலிய குணங்கள் உயிர்ப்பிக்கப்பட்டன. கூட்டுறவு நாணயத்தால் இவ்வளவு செய்யக்கூடுமானால், பூமியிலிருந்து எவ்விதம் அதிக பலனை யடையக்கூடுமோ அவ்வழியில் கிராமவாசிகளை நடத்துவோமானால் ஜனங்கள் எவ்வளவு வளப்பமும், சுய நம்பிக்கையுமுடையவர்களாயிருப்பார்கள் என்பதை நாம் நன்றாய் அறியக்கூடும். ஜனங்கள் விவேகமுள்ளவர்களாயும், சுறுசுறுப்புள்ளவர்களாயும், அமரிக்கை யுள்ளவர்களாயும் தெய்வபக்தியுள்ளவர்களாயும், ஒழுங்குள்ளவர்களாயு மிருக்கின்றனர். நான் தெய்வபக்தியுள்ளவர்களென்று கூறியது, இவ்வாழ்வு பொய்யென்று தெரிந்துகொண்டிருப்பதால்தான், இப்பூவுலகத்தில் வசிக்கும் ஜனங்களில் இவர்கள்தான் அதிகமாக ஆச்சாரியர்களால் வருத்தப்பட்டவர்களல்ல; அதிக மூட நம்பிக்கையுமில்லாதவர்கள்.

## பஞ்சா கூட்டுறவுச் சங்கம்.

1913-ம் வருஷம் மே மீ 20-ந் தேதி மதராஸ் கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார வர்களுக்கு மங்களூர் சர்க்கில் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ M. சிரியப்பா B. A. அவர்களால் அனுப்பப்பட்ட பஞ்சா கூட்டுறவுச் சங்க ஸ்தாபன ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது:—

1028 நம்பர் பஞ்சா கூட்டுறவுச் சங்கத்தை நானும் புத்தூர் வாசியாகிய மிஸ்டர் ஷிவாரவும் சேர்ந்து 1912-ம் வருஷம் மே மீ 18-ந் தேதி ஸ்தாபித்து வேலை துவக்கினோம்.

2. பஞ்சா என்னும் கிராமம் புத்தூருக்குக் கிழக்கில் 24 மைல் தூரத்திலும் மஹா க்ஷேத்திரமும் மாட்டுத் தவணைக்கும் பேர் போனதுமான சுப்பிரமணியம் என்னும் இடத்திற்கு மேற்கே 12 மைல் தூரத்திலுமுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலுள்ளதால் இந்த இடத்தில் விஷஜ்வரம் அதிகம். விசேஷமாய் ஏப்ரல்



முதல் ஜூன் வரையில் ஜ்வரத்தின் கொடுமை பொறுக்க முடியாமலிருக்கும். இக்கிராமத்தில் கொட்டைப்பாக்கும் தேங்காயும்தான் முக்கிய வியாபாரம். இதற்குச் சுற்றுப்பக்கத்து கிராமங்களில் கொட்டைப்பாக்கும் தேங்காயும் விசேஷமாய் விளைகிறது. ஜூலை முதல் அக்டோபர் வரையில் எல்லாவித போக்குவரத்தும் மழையால் நிறுத்தப்படுகிறது.

இந்த கிராமவாசிகள் கௌடர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அவர்கள் உயரமாயும், கறுப்பாயு மிருக்கிறார்கள். இவர்களில் சிலர் பணக்காரர்களா யிருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் பக்கா குடியர்கள். இவர்கள் குடியர்களாதலால் பணம் வேண்டும்போதெல்லாம் மாப்பிளைகளிட மிருந்து கடன் பெற்று அவர்களுடைய மோசத்துக்குள்ளாகிறார்கள். வாஸ்தவத்தில் 4 ரூபாய் கடனானது ஒரு வருஷத்தில் 400 ரூபாயாகிறது. புத்தூரிலுள்ள சில கொங்கிணி பிராமணர்களும் இந்த கௌடர்களுக்கு கொட்டைப் பாக்கு தேங்காய் பயிர் செய்ய 100-க்கு 30 முதல் 50 விகிதவட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். பஞ்சா கூட்டுறவுச் சங்கமானது இப்படிக் கஷ்டப்படும் ஜனங்களுக்கு அநேக நன்மைகளை யுண்டாக்கலாம்.

4. கையொப்பதாரர்களைத் தவிர சங்க ஸ்தாபனத்தில் 4 பேர்கள் மெம்பர்களானார்கள். அவர்கள் மொத்தத்தில் 45 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மூன்று கிராமங்களிலுமுள்ள செல்வாக்குடையவர்களெல்லாம் மெம்பர்களாய்எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். முதல் கையொப்பக்காரர் மிஸ்டர் பூவாணி ஹெக்டே என்பவர். அவர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேறினவர், தவிரவும் ஒரு பெரிய மிராசுதார். அந்த ஸ்தலத்தில் ஆங்கிலேய பாஷை தெரிந்தவர் அவர் ஒருவரேயாகையால் அவருடைய பெயர் ஆங்கிலேய பூவாணி யென்று வழங்கி வருகிறது. அவருக்கு இக் கூட்டுறவு முறையில் அதிக உற்சாகம். அவர்தான் இச்சங்கத்துப் பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். கணக்கில் தேர்ந்த அவ்வூர் கர்ணம் செக்ரிடெரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். மூன்று கிராமங்களிலுமுள்ள தலைவர்கள் பஞ்சாயத்தார்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விதமாக பஞ்சாயத்தார்கள் மிகுந்த கெட்டிக்காரர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

## பம்பாய் ராஜதானியில் கூட்டுறவு.

### ஒரு மாதிரி கிராமச்சங்கம்.

1913-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 22-ந் தேதி ஸர்ரிச்சர்ட் லாம்ப் என்பவர் ஹோடப்ஸர் என்னும் கிராமத்து ஐக்கிய நாணயச் சங்கத்தின் மூன்றாவது வருஷாந்தர மீட்டிங்கில் அக்கிராஸனத்தை வகித்தார். அப்போது அநேக ஐரோப்பிய, பார்ஸி, ஹிந்து கனவான்களும் சீமாட்டிகளும் அவ்விடத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். வந்தவர்களின் மொத்தம் சுமார் 400 பேர் இருக்கலாம். விவசாயிகளாலும், மற்றவர்களாலும், அவ்வூர்ச் சங்கஸ்தாபனத்திற்குப் பிறகு உண்டாயிருக்கும் நன்மைகளைக் குறித்து மராட்டி பாஷையில் பிரசங்கிக்கப் பட்டது. பேசியவர்களில் முக்கியமானவர் பம்பாய் ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் யூபாங்க் (Mr. Ewbank)

கடைசியில் நடவடிக்கைகள் முடிவு பெறுமுன் கனம் ஸர். ரிச்சர்ட் லாம்ப் மெம்பர்கள் ஒரு மாதிரிச்சங்கத்தை உடைத்தாயிருப்பதற்காக சந்தோஷப்பட்டார். சாதாரணமாய் கவர்ன்மெண்ட் ஜனங்களின் தாய்தந்தைக்குச்சமானமென்று சொல்லப்படுகிறது. கவர்ன்மெண்டார் எப்போதும் ஜனங்களுடைய அபிவிருத்தியை கோரினவர்களாயிருக்கிறார்களென்று வற்புறுத்திச் சொன்னார். தவிரவும் சேவாசதனத்தைச் சேர்ந்த மிஸஸ் ராமாபாய் ரானடே போன்ற அநேகபெண்மணிகள் இப்பேர்ப்பட்ட காரியங்களில் அக்கரையெடுத்துக் கொண்டு வேலைசெய்வதைப் பார்த்து மிகச் சந்தோஷப்பட்டார். அவர்கள் எப்போதும் சங்கத்திற்கு உதவி புரிவார்களென்று நம்புகிறேனென்றார்.

---

### மற்ற தேசங்களில்

## அமெரிக்கா தேசத்து விவசாய சோதனைக் கமிஷன்.

### (1) லண்டனில்.

ஐரோப்பா கண்டத்தில் விவசாய விஷயத்தில் எப்படிக் கூட்டுறவு நாணயம், பிரிவினை, உற்பத்தி ஆகிய இவைகள் பிரயோகிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றனவென்று முற்றும் ஆராய்வதற்காக அமெரிக்கர்கள் கமிஷன் ஒன்று ஏப்ரல் மாதம் கடைசியில் ந்யூயார்க்கை (New York) விட்டுப் புறப்பட்டு இடாலி, ஹங்கரி, ஆஸ்திரியா, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும் கடைசியாக சில தினங்களுக்கு முன் இங்கிலாந்துக்கு வந்தது. குடியானவர்கள், வியாபாரிகள், பாங்கிவியாபாரிகள், விவசாய காலேஜ் உபாத்தியாயர்கள் ஆகியஇவர்களின் பிரதிநிதிகள்தான் இக்கமிஷனில் இருக்கிறார்கள். லண்டனில் நமது சக்ரவர்த்தியின் கவர்ன்மெண்டாரால் இக்கமிஷன் அங்கத்தினருக்குவிருந்தளிக்கப்பட்டது. அப்போது விவசாய போர்ட்டின் ப்ரஸிடெண்டு மிஸ்டர் ரன்ஸிமன் என்பவர் அக்ராஸனம் வகித்தார். அவர் நகரக்கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இப்போதிருப்பதைவிட அதிக அந்நியோந்நியம் ஏற்படவேண்டுமென்று வற்புறுத்தினார். மனிதனை சீர்திருத்துவதே இக்கமிஷனின் முக்கிய நோக்கமே ஒழிய பூமியைச் சீர்திருத்துவது இதன் முக்கிய நோக்கமல்லவென்று அமெரிக்க ராயபாரி சொன்னார். ஐரோப்பாவில் இக்கமிஷனால் அடைந்த ஜெயத்தைப்பற்றி சேர்மன் சந்தோஷப்பட்டார். இத்தேசத்தில் சிறு விவசாயிகள் உடனொத்தவர்களோடு கக்ஷி வித்தியாசமில்லாமல் முக்கிய கைத்தொழில்களில் ஒத்துழைத்தால்தான் நிலத்திலிருந்து சரியான பலனை யடையக்கூடும் என்று அவர் சொன்னார். அயர்லாந்தில் கூட்டுத்தொழில் வெண்ணெய் உற்பத்திச் சாலைகளைக் கமிஷனர்கள் பார்க்கலாம். ஆங்கிலேய விவசாய ஏற்பாட்டில் கூட்டுறவு முக்கியமான விஷயங்களில் ஒன்றாக இல்லை. ஆனால் சென்ற சில வருஷங்களாக கிருஷிகர் தங்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு ஒன்று சேர்வது சகஜமாகிக்கொண்டு வருகிறது. மேலும் பெரிய வியாபார ஸ்தலங்களில் கூட்டுறவு முறைக்கும் விவசாயிகளுக்கும் அதிக அந்நியோந்நியம் உண்டாக வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். இங்கிலாந்திலும் உவேல்ஸிலும் சேர்ந்து 50 சங்கங்கள்தானிருக்கின்றன. இக்கமிஷனர்களின் முக்கிய நோக்கமென்னவென்றால் விவசாயியைச் சீர்திருத்துவதும், நிலத்திலிருந்து அவனுடைய தேகப்பிரயாசையால் கிடைக்கும் பலனை அதிகப்படுத்துவதும்தான்.



### (2) டப்ளினில்.

கூட்டுறவு விவசாய விஷயத்தில் அமெரிக்கன் கமிஷனுக்குத்தகுந்த வழிகாட்டி ஸர் ஹொரேஸ் ப்ளங்கெட்டைத் தவிர வேறு யாருமில்லை. டப்ளினில் கமிஷனை வரவேற்கும்போது ஸர் ஹொரேஸ் பின் வருமாறு சொன்னார்.—

இக்கமிஷனானது ஐரோப்பாவில் கிராமக்குடிகளின் பொருளாதாரம், வாழ்க்கை ஆகிய இவைகளைத் தெரிந்துகொண்டும், ஐரோப்பாவின் மற்ற தேசங்களில் விவசாயிகள் ஒத்துழைக்க ஆங்கிலபாஷை பேசும் தேசங்களில் மாத்திரம் விவசாயிகள் தனித்தனி வேலை செய்வதிலேயே பிடிவாதமாயிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டும், இவ்விடம் வந்திருக்கிறது. இப்போது அக்கமிஷனர்களுக்குத் தங்களுடைய விவசாயிகளை அவர்களுடைய கைத்தொழில்களிலும், விவகாரங்களிலும் கூட்டுத்தொழில் முறையைப்பிரயோகிக்கும்படி எப்படி தூண்டுகிறதென்கிற சமுசயம் உண்டாயிருக்கிறது. கமிஷன் ப்ளங்கெட்ஹௌஸில் கூடினதும் ஒரு விசேஷத்தைக்காண்பிக்கிறது. அயர்லாந்தில் எப்படி ஐரிஷ் அக்ரிகல்சரல் ஆர்கானிசேஷன் ஸொஸைடிக்கு ப்ளங்கெட்ஹௌஸ் பிரதான ஸ்தலமாயிருந்து ஐரிஷ் விவசாயிகளுக்கு வழி காட்டுகிறதோ அதேமாதிரி அமெரிக்க குடியானவர்களுக்கும் ஒரு இடம் ஏற்பட வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிருக்கலாம்.

பிறகு அவர் ஐக்கியமாகாணத்திலும், ப்ரிடிஷ் ராஜ்யத்திலுமுள்ள கிராம வாழ்க்கைப் பிரஸ்னையைப்பற்றிப் பேசினார். தவிரவும் அயர்லாந்து விவசாய முறையைப் பற்றிய கொள்கையும் நடவடிக்கையையும் பற்றிப் பேசி எப்படி இங்கிலாந்திலும், ஸ்காட்லண்டிலும், இப்பேர்ப்பட்ட ஸ்தாபனங்கள் ஏற்பட்டன வென்பதை யெடுத்துக் காட்டினார். ஐரோப்பாவில் இம்முறையின் ஜெயத்திற்குக்காரணம் ஜனங்களுக்குள் உள்ள ஒற்றுமையும், சர்க்கார் உதவியுந்தான். ஆகையால் அக்ரிகல்ச்சரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடியார் விவசாயக் கூட்டுறவையும், படிப்பு விஷயத்தில் சர்க்கார் உதவியையும் பெறத் தக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாய கைத்தொழில் விருத்தி யடைய ஜாயின்ட் ஸ்டாக் முயற்சியை விடக் கூட்டுறவு முயற்சி தான் முக்கியம். இக்கமிஷனை அனுப்பிவித்த ஐக்கியமாகாணத்து விவசாய ஏற்பாட்டின் இயக்கத்தின் முக்கிய நோக்கம் நாணயம்தான். ஆனால் இக்கமிஷன் திரவிய சகாய விஷயத்தைமாத்திரம் கவனித்தால் அவர்கள் அறிந்த கிராமப் பொருளாதாரமானது வியர்த்தமாய் முடியும். ஏனென்றால் அவர்கள் அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டபிறகு பிடான் கவர்ன்மெண்டார் கிராமச் சகாயச் சங்கங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

ஸர் ஹொரேஸ் ப்ளங்கெட்டின் (Sir Horace Plunkett) நல் வரவுப் பிரசங்கத்திற்குப் பிறகு டாக்டர் பட்டர்பீல்ட் பேசினார். ஸர் ஹொரேஸ் ப்ளங்கெட்டின் ப்ரசங்கத்தால் கமிஷன் அங்கத்தினர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் காரியத்தின் ஜவாப்தாரித்தனத்தை அறிந்துகொண்டதாகச் சொன்னார். அவருடைய ப்ரசங்கத்தால் மனதில் உண்டான ஊக்கத்தையும், அதனால் பெறக்கூடிய பலனையும் எப்போதும் மறக்கமாட்டோமென்று சொன்னார். கூட்டுத் தொழிலின் பிரயோஜனத்தைப் பற்றியும் அது சர்க்கார் ஸஹாயமில்லாமல் ஸ்வதேச்சையாயிருக்க வேண்டுமென்பதையும் பற்றி ஸர் ஹொரேஸ் ப்ளங்கெட் தெரிவித்த அபிப்பிராயத்தை மிஸ்டர் H. W.

உல்பும் (H. W. Wolff) அங்கீகரித்துப் பேசினர். ஐரோப்பாவில் அவர்கள் அறிந்த சர்க்கார் உதவி பெற்றிருக்கும் அநேக சங்கங்கள் தானே நடவடிக்கை நடத்தி வரும் சங்கங்களைவிட சொற்ப பலனைத்தான் தரும் என்று எடுத்துக்காட்டினர்.

## ஜெர்மனி

## 1. விவசாய கூட்டுறவின் அபிவிருத்தி.

1912-ம் ஞூத்தில் ஜெர்மனியில் விவசாயக் கூட்டுறவின் அபிவிருத்தி மிக அதிசயிக்கத் தக்கதாயிருக்கிறது. 1541-க்குக் குறையாமல் புதிய விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. பிரஸ்தாப வருஷத்தில் 227 சங்கங்கள் வேலை நிறுத்திவிட்ட படியால் வாஸ்தவத்தில் அதிகரித்த தொகை 1314 தான். இது முந்தின இரண்டு வருஷங்களை விட அதிகமாக யிருக்கிறது. ஏனென்றால் இச்சங்கங்களின் சங்கியை 1910-ம் ஞூத்தில் 813-யும், 1911-ம் ஞூத்தில் 1,087-யும் இருந்தது. ஒவ்வொரு வகுப்பு கோவாபரேடிவ் ஸொஸைடியின் அபிவிருத்தியும் ஏற்றமாய்த்தானிருந்தது. அவைகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தன:—கடனும் ஸேவிங்ஸ் பாங்கியும் 683; வாங்கவும், விற்பனைக்குமான கூட்டுறவுச் சங்கங்கள் 89; மற்ற கூட்டுத்தொழிற் சங்கங்கள் 480.

கடன் கொடுக்கும் பாங்கிகளும், ஸேவிங்ஸ்பாங்கிகளும் ஏற்கனவே அதிகமாயிருந்தபோதிலும், அவைகள் மேன்மேலும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. ஆனல் வாங்கவும், விற்கவுமான கூட்டுறவுச் சங்கங்களின் தொகையும், கூட்டுறவு பாற்சாலைகளின் தொகையும் அவ்வளவாக அதிகரிக்கவில்லை. மேற்சொன்ன சங்கங்களின் அபிவிருத்தி இவ்விதமாயிருக்க, மற்றவைகைச் சங்கங்களின் அபிவிருத்தி அபரிமிதமாயிருக்கிறது. உதாரணமாக, மின்சாரசக்தி ஸப்ளை செய்யும் சங்கங்களின் தொகை ஏற்றமாயிருக்கிறது. அவற்றில் 342 சங்கங்கள் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்கள். ஆடுமாடு விற்பனைக்கான புதுச் சங்கங்கள் 12, ஜலயந்திர விற்பனைச் சங்கங்கள் 27, வேறுவகை யந்திரங்களை கூலிக்குக் கொடுக்கும் சங்கங்கள் 47, குதிரை சீர்திருத்தத்திற்கான சங்கங்கள் 14, மாடுகள் சீர்திருத்தத்திற்காக 18 சங்கங்கள்; மாடுகள் மேய்ப்பதற்கான சங்கங்கள் 18.

## 2.

ரேய்பீஸன் துரையவர்கள் காலமாகிச் சென்ற 25 வருஷங்களில் கூட்டுத்தொழில் முறை மிகவும் பிரபலித்துக்கொண்டு வருகிறது. இது, சங்கங்களின் சங்கியை 1885 வருஷத்தில் 245-லிருந்து 1912-ம் ஞூத்து ஆரம்பத்தில் 4,220-க்கும், மெம்பர்களின் மொத்தம் 24466-லிருந்து 456,611-க்கும், டிபாஸிட்டுகள் 200,000-லிருந்து 28,800,000 பவுனுக்கும் கடன் தொகை 380,000 பவுனிலிருந்து 21,300,000 பவுனுக்கும் அதிகரித்திருப்பதாலும் நன்கு விளங்குகிறது. சமீபத்தில் ஹீடல்பர்க் என்னுமிடத்தில் நடந்த ரெய்பீஸன் காங்கிரஸில் மிஸ்டர் ஹொர் ஸோல்டன் என்பவர் பின்வருமாறு சொன்னர்:—இவ்வபிவிருத்தியானது ரெய்பீஸனின் மேலான எண்ணத்தைத் தெரிகிறது. ஆனல், ஏற்கனவே அடைந்திருக்கும் பலன்களைக் குறித்தே மௌடீகமாய் பின்பற்றிக்கொண்டிருக்காமல் இன்னும் விசேஷ பலனுண்டாகும்படி கூட்டுமுறையை விசாலப்படுத்த வேண்டும்.

## ருஷியா.

ருஷிய குடியானவர்கள் கூட்டுத்தொழிலில் மிகுந்த ஊக்கம் பாராட்டி வருகிறார்கள். வாங்கல், விற்றல், பாங்கி வியாபாரம் ஆகிய இவைகள் விருத்தி யடையத்தக்க ஸாதனங்களை உண்டாக்குவதைத் தவிர, நீதிமார்க்கம், பொருளாதாரம் முதலியவைகளையும் விருத்தியடையத்தக்க வழிகளைத் தேடுவதிலும் ஊக்கம் பாராட்டி வருப்படுகிறது. ஆகையால் ருஷியாவில் கூட்டுமுறை அபிவிருத்தியானது நாகரீக அபிவிருத்தி



யைச் சார்ந்ததாயிருக்கிறது. கூட்டுத் தொழில் கோட்பாடுகளை பாவச் செய்வதற்காக குறித்தகாலத்தில் வெளியிடப்படுகிற 22 சமாசாரப்பத்திரிகைகளிருப்பதாகத் தெரியவருகிறது. தற்காலத்தில் ருஷியாவில் 20,000 நானுவிதக் கூட்டுத்தொழில் பாங்கிகளிருக்கின்றன. அவற்றின் மெம்பர்களின் மொத்தம் 4,660,833; அவைகளின் மூலதனத்தின் மொத்தம் 50,582,000 பவுன். இத்தொகையில் சர்க்காரால் கொடுக்கப்பட்டது 18,222,150 பவுன். ஐரோப்பிய ருஷியாவிலுள்ள கிருகஸ்தர்களில் 1000த்துக்கு 183 பேர் பாங்கி மெம்பர்கள். இக்கோவாபரேடிவ் பாங்கிகளின் முக்கிய நடவடிக்கையென்னவென்றல் குடியானவர்களுக்கு சிறுதொகைகள் பொருள் உற்பத்தி விஷயத்திற்காகக் கடன் கொடுப்பதுதான். சமீபத்தில் இப்பாங்கிகள் குடியானவர்களுக்கு தானியத்தின் பேரிலும், களஞ்சியம் கட்டுவதற்காகவும், யந்திரங்கள் ஸ்தாபிப்பதற்காகவும் கடன் கொடுக்கின்றன. மேலும் விவசாயிகளுக்கு மாகூலை லாபத்திற்கு விற்றுக் கொடுத்து உதவுகிறது.

தற்காலத்தில் ருஷியாவில் சுமார் 400 விவசாயக்கூட்டுத்தொழிற் சங்கங்களிருக்கின்றன. அவைகள் தோட்டவேலை, தேனீவளர்த்தல், பாற்சாலை வைத்தல், ஆடு பன்றி முதலானவைகளை வளர்த்தல் ஆகிய வேலையை நடத்தி வருகின்றன. 1907-ம் வருஷத்தில் மேல்ஸைபீரியாவில் 7 கூட்டுத்தொழிற் பாற்சாலைகளிருந்தன. இத்தொகை 1910-ம் வருஷத்தில் 60 க்கும் 1912ம் வருஷத்தில் 107 க்கும், 1913 ம் வருஷத்தில் 130 க்கும் அதிகரித்திருக்கிறது. ஸைபீரியா கூட்டுத்தொழிற் வெண்ணெய் உற்பத்தி செய்பவர்களின் பிடரேஷன் சென்றவருஷத்தில் 5,000,000 பவுன் பெறுமான வெண்ணெய் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். சென்றவருஷம் மாஸ்கோ (Moscow) வில் குடிகள் பாங்கி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதன் முக்கிய நோக்கம் எல்லாபாங்கிகளுக்கும் வியாபார விஷயத்திலும் திரவிய விஷயத்திலும் உதவி புரிதல்தான். இப்பாங்கியின் முக்கியஷேர்தார்கள் 1,491 கூட்டுத்தொழிற் சங்கங்கள். மூலதனம் 100,000 பவுனுக்கு அதிகமாகவே யிருக்கிறது.

ருஷியாவில் பிரிவினைச் சங்கங்களும் உள. 1912ம் வருஷம் ஜனவரி மாதம் முதல்தேதி ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள அப்பேர்ப்பட்ட 6730 சங்கங்களுக்குள் 4716 சங்கங்கள் கிராமச்சங்கங்கள். இச்சங்கங்களின் மெம்பர்களின் மொத்தம் 10,000,00த்துக்கு மேலேயே யிருக்கிறது. இவைகள் முக்கிய நோக்கம் கிராமக்கடைக்காரர்களின் கொட்டத்தை அடக்குவதுதான். இவைகள் மெம்பர்களுக்கு தினசரி ஜீவனத்திற்கு வேண்டிய எல்லா சாமான்களையும் ஸப்ளை செய்து கிடைக்கும் லாபத்தை அவரவர்கள் வாங்கும் தொகைக்குச் சரியாகப் பங்கிட்டுக் கொடுக்கின்றன. மொத்த விற்பனைச் சங்கங்களிலெல்லாம் மிகப்பெரிது. மாஸ்கோ பிடரேஷன் (Moscow Fedaration) 1911 ம் வருஷத்து வியாபாரத்தின் மொத்தம் 325,600 பவுன். 1912 ம் வருஷத்தில் இத்தொகை 501,400 பவுனுக்கு அதிகரித்தது. இது கீப் (Kieff), ராஸ்டாப் (Rostoff) ஒடெஸ்ஸா (Odessa) என்னும் மூன்று இடங்களிலும் மூன்று கிளைகளை உடைத்தாயிருக்கிறது.

## ஸ்விட்ஸர்லண்ட்.

## போஜன சாமான்கள்பேரில் தீர்வையைப்பற்றியக் கலக்கம்.

ஜீவனச் செலவை குறைப்பதற்காக ஒரு லீக் அதாவது சேர்க்கை ஏற்பாடாயிருக்கிறது. இந்த லீக்கில் அதாவது கட்டுப்பாடில் கூட்டுறவுச்சங்கங்களும் ட்ரேட் யூனியன்களும் சேர்ந்திருக்கின்றன. இவ்விதமாக, போஜன சாமான்களின் விலை யேற்றத்தைத் தடுப்பதற்காக தொழிலாளிகள் ஒன்றாகச் சேர்ந்தது கவனிக்கத் தக்க விஷயமே. இப்படி கோவாபரேடிவ் யூனியன், ஸ்விஸ்ட்ரேட் யூனியன்லீக், ஸ்விஸ் வேலைக்காரர்களின் லீக், ஆகிய இச்சங்கங்களால் ஸ்தாபிக்கப்பட்ட இப்புதிய லீக்கினால் கோரின பலனை அடைவது திண்ணமென்று தோன்றுகிறது.

இப்போது ஆரம்பித்திருக்கும் நீடித்த கலவரமானது சாமான்களை ஸ்வயப்பிரயோஜனம் செய்து கொள்பவர்களின் தேவைகளுக்குத் தகுந்தபடி பத்திரிகைகள் மூலமாயும் பிரசங்கங்கள் மூலமாயும் வியாபாரக் கொள்கையைப் பரவச்செய்தல், சாஸ்த்ரோக்தங்களையும், லோகஹிதமான க்ரந்தங்களையும் பிரசுரஞ்செய்தல், நாட்டின் பொருளாதார நிலைமையைப்பற்றி பட்டிகள் தயார்செய்தல், முதலிய காரியக்கிரமங்களால் வெளியாகிறது.

## ப்ரான்ஸு.

## ப்ரான்ஸில் விவசாயக் கூட்டுறவு.

தற்காலத்தில், உற்பத்தி, பத்திரப்படுத்தல், பொருந்தச் செய்தல், விற்பனை ஆகிய இக்காரியங்களுக்கான விவசாயச்சங்கங்களின் மொத்தம் சுமார் 2600-க்கு அதிகமாகவே யிருக்கிறது. இத்தொகையில் 1800 சங்கங்கள் பழம்வகையறு விற்கின்றன; 500 தயிர், பால், வெண்ணெய் முதலியன உற்பத்தி செய்கின்றன, 80 சங்கங்கள் ஒயின் செய்கின்றன; 20 எண்ணெய் தொழிற்சாலைகள்; 40 கஞ்சிப்பசை பாக்டரிகள், போரடிக்கும் சங்கங்கள் முதலியன. இச்சங்கங்கள் சர்க்கார் ஆளுகைக்குள்ளில்லாமல் ஜனங்களால் சொந்தத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் அவைகள் வாஸ்தவத்தில் நடத்தும் நடவடிக்கைகளின் விவரங்களும் அவைகளால் மெம்பர்களுக்கு எவ்விதப்பிரயோஜனம் கிடைக்கிறதென்பதும் அறியக்கூடவில்லை. ஆனால், மொத்தத்தில் இச் சங்கங்களின் சங்கியை நோக்கும்போது கூட்டுறவுக் கொள்கை கிராமாந்தரங்களில் நன்றாய் வியாபித்து வருகிறதென்பதைக் குறிக்கின்றது.

———(:o:)———

# பிழை திருத்தம்.

## கூட்டுமுயற்சி சங்கங்களின் ரெஜிஸ்டராராபீஸ் 1913ளுவத்திய நெ. 321.

பிரசுரிக்கப்பட்ட 20-வது நெ. இல் இந்த புல்லட்டீன் இரண்டாவது வாலியூம் 4-ஆம் நம்பர் 435-ம் பக்கத்தில் 2-வது பாரா, 4-வது வரியிலுள்ள "ஜூன்மீ 30-ம் தேதி" என்ற வார்த்தைகளை "மேற்கூறிய ஜூன்மீ 30-ம் தேதி" என்றும் அடுத்த 436-ம் பக்கத்தில் முதல் வரியிலுள்ள "ஜூன்மீ 30-ம் தேதி" என்ற வார்த்தைகளையும் அம்மாதிரியே திருத்தவும்.

## அநுபந்தம்.

# கோயமுத்தூர் ஐக்கியநாணயக் கான்பரென்ஸ்.

161782 சென்னை-600

———(·o:)———

முதலாவது கோயமுத்தூர் ஸர்க்கில் கோ–ஆபரேடிவ் கான்பரென்ஸ் 1913-ம்ளு ஜூன்மீ 14, 15-ந் தேதிகளில் கோயமுத்தூர் காலேஜ் தாமஸ் மிமோரியல் ஹாலில் கூடிற்று. அப்பொழுது அந்த ஜில்லாவின் எல்லா பாகங்களிலிருந்தும், பக்கத்து ஜில்லாக்களாகிய மலையாளம், தென்கன்னடம், நீலகிரி முதலிய ஜில்லாக்களிலிருந்தும் அநேக டெலிகேட்டுகளும், கூட்டுத்தொழில் முறையில் மிக்க அக்கரையெடுத்துக் கொள்ளும் அநேக பிரமுகர்களும் விஜயம்செய்திருந்தார்கள். பிரசிடெண்டாய் நியமிக்கப்பட்ட ஸர் பிரடரிக் நிகல்ஸன் துரையவர்கள் தேக அசௌக்கியமாயிருந்தபடியால் கோயமுத்தூர் கலெக்டராகிய மிஸ்டர் F. R. ஹெமிங்வே I. C. S. அக்கிராசனத்தை வகித்தார். அவரை ராவ்பஹதூர் T. S. பாலகிருஷ்ண அய்யர் முதலிய உபசாரணைக் கமிட்டி மெம்பர்கள் வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்விடம் கனம் மிஸ்டர் B. V. நரசிம்ம அய்யர், கனம் திவான்பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை அவர்கள் மிஸ்டர் கிருஷ்ணவர்ம ராஜா, ராவ்பஹதூர் C. நாகோஜிராவ் அவர்கள், ரெவரெண்ட் W. J. ஹாச், மிஸ்டர் C. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர் முதலியோரும் உட்கார்ந்திருந்தார்கள்.

உபசாரணைக் கமிட்டியின் சேர்மனாகிய ராவ்பகதூர் T. S. பாலகிருஷ்ண அய்யரவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றுச் சில விஷயங்களைப் பேசினார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—

கனவான்களே,—கோயமுத்தூர் ஸர்க்கில் கான்பரென்ஸின் உபசாரணைக் கமிட்டியின் பொருட்டு நான் இவ்விடம் விஜயம் செய்திருக்கும் டெலிகேட்டுகளையும் விஸிட்டர்களையும் மனமுவந்து வரவேற்கிறேன். இரண்டுவருஷ காலமாக இக்கான்பரென்ஸை நடத்தவேண்டுமென்பது எங்கள் மனோபீஷ்டமாயிருந்தது. ஆனால் ஊரில் நோய் நொடிகளின் அவஸ்தையால் அது நிறைவேறாமலிருந்ததென்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. இருந்தாற்போலிருந்து இவ்வருஷம் கட்டாயம் நடத்தவேணுமென்று உத்தேசித்து, குளிர்காலத்திற்கு முன்னேயே கான்பரென்ஸை நடத்தி விடுவதென்று தீர்மானித்தோம். அவகாசக்குறைவால், செய்திருக்கும் ஏற்பாடுகளில் ஏதேனும் குறைகளிருந்தாலும் அவற்றைப்பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## சமயபேத சம்பந்தமான இயக்கங்கள்.

சென்ற சில வருஷங்களாக எங்குகண்டாலும் கூட்டுறவுச் சங்கங்கள் வியாபித்துக் கொண்டு வருகின்றன. இவற்றின் அபிவிருத்தி மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. ஆயினும் இவ்வியக்கத்தில் சில குறைகளும் அவநம்பிக்கையும் இருப்பதாகவும் சின்னங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தற்காலத்தில் கான்பரென்ஸ்கள் பலத்துவிட்டன. வருஷந்தோறும் ராஜாங்கக் கான்பரென்ஸ், ஆசாரத்திருத்தக்கான்பரென்ஸ், மதசம்பந்த

மான கான்பரென்ஸ், பொருளாதாரக் கான்பரென்ஸ் என்று இவ்விதமாக அநேக கூட்டங்கள் கூடுகின்றன. தவிரவும், சமயபேத சம்பந்தமான சில கான்பரென்ஸ்களும் நடக்கின்றன. உதாரணமாக, பிராமண, க்ஷத்திரிய, வைசிய கான்பரென்ஸ்கள், ஒக்கலியர், நாடார், தீயர், நாயர், தொண்டைமண்டல வேளாளர் ஆகிய இவர்களுடைய கான்பரென்ஸ்கள். இப்படி பேதப்படுத்திக் கான்பரென்ஸ்கள் நடத்துவது தேசத்தின் கட்டுப்பாட்டைத் தொலைத்துவிடும். ஆகையால் இவ்வித காரியங்களை நிறுத்தத் தகுந்த வழி தேடுவது நம்முடைய கடமையாயிருக்கிறது.

## கூட்டுத்தொழிற் சங்கங்களின் அற்பப்பலன்.

கூட்டுறவுச் சங்கங்களால் நாம் இதுவரையிலும் அடைந்துள்ள பலன்கள் மிக அற்பமானவைகளே. வாஸ்தவமாக, அம்முறையானது இதுவரை ரைத்துகளை கடனாளிகளாக்காமல் பாதுகாப்பதற்கு ஒரு ஸாதனமாக ஏற்பட்டிருக்கிறது; ஆயினும் நாணயத்தின் பேரில் ரைத்துக்குக் கடன்கொடுப்பதே அதன் முக்கிய பலனாயிருந்தால் நாளாவர்த்தியில் குடிகளிடத்தில் மிதவிரயம் சிக்கனம் முதலிய குணங்களே குடிகொள்ளாமல், சொற்பவட்டிக்குக் கடன் கிடைப்பதால், எதேஷ்டமாகக் கடன்பெற்று, பொருள் உற்பத்திக் காரியங்களில் செலவிடாமல், டம்பமான சில காரியங்களுக்குக் கடன்வாங்கின பணத்தைச் செலவழித்துக் கடனாளிகளாகிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றியும் நீங்கள் கவனிப்பது அவசியம்.

## கூட்டுத்தொழில் வேலையை விசாலப்படுத்தல்.

இந்த ஜில்லாவில் கூட்டுத்தொழில் வேலையை விசாலப்படுத்த அநேக வசதிகளிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்து, கிராம சுகாதாரம், கிராம ஜலவசதி பொதுத் தேவைகள், விவசாயம், கைத்தொழில் முதலியவைகளின் சீர்திருத்தம் ஆகிய இப்பேர்ப்பட்ட வேலைகளைக் கூட்டுத்தொழிற் சங்கங்கள் எடுத்துக்கொள்ளக்கூடும். டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளுக்கும் கிராமச் சங்கங்களுக்கும் மாத்திரமேயல்லாமல் இவற்றிலேயே ஒன்றுக்கொன்று பரஸ்பர சம்பந்தம் ஏற்படவேண்டும்.

## கூட்டுத்தொழில் அபிவிருத்தி.

முதலாவது நான் இந்த ஜில்லாவில் கூட்டுத்தொழில் ஆரம்பித்ததைப்பற்றிச் சொல்லவேண்டும். இந்த ஜில்லாவில் முதல் முதல் இவ்வேலை ஆரம்பித்ததற்குக் காரணமாக உள்ளவர்களில் முக்கியமானவர்கள் லோகோபகாரஞ் செய்யும் குணமுள்ள பெருந்துறைவாசிகள் தான். அவர்களில் முக்கியமானவர் சமீபத்தில் காலகதியடைந்த மிஸ்டர் K. N. ரங்ககௌண்டர். பெருந்துறையைச் சுற்றிச் சற்றேறக்குறைய 30 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தில் உழைத்த நம் நகரவாசியாகிய மிஸ்டர் T. ராமசாமி அய்யங்காரின் பெயரும் இச்சந்தர்ப்பத்தில் ஞாபகத்திற்கு வருகிறது. நம்முடைய செக்ரிடரிகளின் முயற்சியாலும் மிஸ்டர் C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஐக்கியச் சங்கங்களின் மாஜிரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் R. ராமச்சந்திரராவ் ஆகிய இவர்களின் முயற்சியாலும் நமது டிஸ்ட்ரிக்ட் அர்பன்பாங்கி ஸ்தாபிக்கப்பட்டது. இருந்தபோதிலும் நம்முடைய பாங்கி விஷயத்தில் அதிக கவலைபாராட்டிவரும் தத்கால ரெஜிஸ்ட்ராராகிய கனம் திவான்பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை அவர்களுக்கும் மிக்க வந்தனமளிக்கக் கடமைப்பட்டவரா யிருக்கிறோம்.



நமது மத்திய ஸ்தாபனமானது டிஸ்ட்ரிக்ட் பாங்கியிலிருந்து ஸர்க்கில் பாங்கியாக விசாலப்பட்டிருக்கிறது அதன் விவகார எல்லை அண்டை ஜில்லாக்களாகிய நீலகிரி, மலையாளம், தென்கன்னடம் முதலிய ஜில்லா முழுமையும் அப்போதைக் கப்போது பரவிவருகிறது. ஆகையால் நடவடிக்கை நடத்த ஏராளமான விஸ்தீரணம் ஏற்படுகிறது. ஆனால் மேற்சொன்ன ஜில்லாக்களில் கூட்டுத்தொழில் அபிவிருத்தி குறைவாகவே யிருக்கிறதென்பது எனக்குத்தெரியும். இவற்றையெல்லாம் உத்தேசித்து கூட்டுமுறையைக் கற்பிப்பதற்காக நாம் அடிக்கடி கான்பரென்ஸ்கள் கூட்டி ஜனங்களோடு கலந்து அவர்களுக்கு வேண்டியவைகளை அறிந்துகொண்டு ஐக்கிய இயக்கம் பரவுதற்கேற்ற வழிதேடவேண்டும்.

## மிஸ்டர் ஹெமிங்வே அவர்களுக்கு உபசாரம்.

கீர்த்திபெற்ற நமது ஜில்லா கலெக்டரான மிஸ்டர் F. R. ஹெமிங்வே அவர்கள் இப்பேர்ப்பட்ட லோகஹிதமான இயக்கங்களில் மிக்க ஊக்கம் பாராட்டி இவ்விடத்திற்கு விஜயம்செய்து கான்பரென்ஸின் அக்கிராசனத்தை வகித்ததற்காக நாமெல்லோரும் அவருக்கு மிக்க கடமைப்பட்டிருப்பதோடு நம்முடைய வந்தனத்தையும் அளிக்கிறோம்.

ராவ் பஹதூர் C. நாகோஜிராவ் அவர்கள், மிஸ்டர் ஹெமிங்வே அவர்களை அக்கிராசனம் வகிக்கப் பிரேரேபிக்க, மிஸ்டர் M. G. ஆரோக்கியசாமி பிள்ளை அதை ஆமோதித்தார். பிறகு ஹெமிங்வே துரையவர்கள் அக்கிராசனத்தை வகித்தார்.

## மிஸ்டர் ஹெமிங்வே அவர்களின் உபந்நியாசம்.

பிரசிடெண்டாகிய மிஸ்டர் ஹெமிங்வே அவர்கள் செய்த உபந்நியாசத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

என் மனதில் இப்பொழுது சந்தோஷம் ஒரு பக்கமும் வெட்கம் ஒரு பக்கமும் உண்டாகிறது. கூட்டுறவைப்போன்ற முக்கிய விஷயசம்பந்தமான கான்பரென்ஸில் அக்கிராசனத்தை வகிப்பது எனக்கு மேன்மேலும் சந்தோஷத்தை உண்டாக்குகிறது; தவிரவும் என்னுடைய பழைய சிநேகிதர்கள் அநேகரும் புதியசிநேகிதர்கள் அநேகரும் இக் கான்பரென்ஸுக்கு விஜயஞ் செய்திருக்கிறார்கள். மிஸ்டர் நாகோஜிராவ், மிஸ்டர் ஆரோக்கியசாமி பிள்ளை, மிஸ்டர் பாலகிருஷ்ண அய்யர் முதலானோர்கள் என்னைப்பற்றி வெகு விசுவாசமாகப் பேசினதற்காக அவர்களுக்கு நான் தகுந்தவாறு வந்தனமளிக்க சக்தியற்றவனா யிருக்கிறேன்.

என்னுடைய சந்தோஷத்தோடு கொஞ்சம் வெட்கமும் கலந்திருக்கிறதென்று சொன்னேன். வெட்கமேதற்காகவென்றால் இந்த ஸ்தானத்தில் உட்கார நான் யோக்கியதை யற்றவனாக இருக்கிறேன். மேலும் இத்தேசத்தில் முதல் முதல் கூட்டுத்தொழிலை ஆரம்பித்தவர்களில் ஒருவராகிய ஸர். பிரடரிக் நிகல்ஸன் அவர்கள் வகித்திருக்கவேண்டிய இந்த ஸ்தானத்தை நான் வகிப்பது எனக்கு மிகவும் வெட்கத்தை உண்டாக்குகிறது. நான்பேசுவதைவிட அவர் பேசி நான் கேட்க மிக சந்தோஷப்படுவேன். அவர் இன்றையதினம் இவ்விடத்திற்குவந்து அவருடைய போதனையையும் புத்திமதியையும் கொடுக்காமற் போனதற்காக நாம் நிரம்பவும் விசனப்படுகிறோமென்பதில் சந்தேகமில்லை. உங்களுக்கு போதனை அல்லது புத்திமதி சொல்ல என்னால் ஆகாது. நான் உங்களிடத்திலிருந்து ஏதாவது கிரகிக்க வந்தேனேயொழிய உங்களுக்குக் கற்றுக்கொடுக்க வரவில்லை.

## மேன்மையான போட்டி.

கூட்டுமுறையின் விசேஷத்தையும் அதனால் உண்டாகும் அளவற்ற பலனையும் நான் நன்றாய் அறிவேன். மற்ற சில ஜில்லாக்களைவிட நம் ஜில்லா பின்னடைந்திருந்தாலும் ஐக்கிய இயக்கம் எவ்வளவோ முன்னுக்குவந்திருக்கிறது. செங்கல்பட்டு ஜில்லாவில் 200-சங்கங்களுக்கு மேலும், சேலம் ஜில்லாவில் 100-சங்கங்களுக்கு மேலுமிருக்க கோயமுத்தூர் ஜில்லாவில் 50-சங்கங்களுக்குக் குறைவாயும், வடமலையாளத்தில் 20-க்குக் குறைவாயும், தென்கன்னடத்தில் 20-க்குக் குறைவாகவுமிருக்கின்றன. நீலகிரி ஜில்லாவில் இப்போதுதான் ஆரம்பம். ஆனால் போனதுபோனாலும் இனிமேலாகிலும் இம்மேன்மையான போட்டியில் ஜெயம்பெற்று சங்கங்களை அதிகரிக்கச்செய்ய வேண்டும்.

## இழிவான செயலல்ல.

பேராசை பிடித்த சாவுகார்களைத் தொலைத்துவிட்டு கிராமங்களிலும், அநேக மத்திய ஸ்தலங்களிலும் சொற்பவட்டிக்கு முதல் பெறும்படிசெய்தது இழிவான காரியமல்ல. மிஸ்டர் T. S. பாலகிருஷ்ண அய்யர் அவர்கள் சொற்பவட்டிக்குக் கடன் பெறுதலின் பிரயோஜனத்தைப்பற்றி முற்றிலும் பேசவில்லை. அப்படி மலிவாய் வாங்கின பணத்தைக் கண்டபடி வீண்செலவு செய்தாலும் செய்யக்கூடும். இப்பேர்ப்பட்ட காரியம் மனுஷசுபாவம் மாறும்வரையிலும் நேரிட்டுக்கொண்டேதான் யிருக்கும். முக்கியமாய் கவனிக்கவேண்டிய தென்னவென்றால், கிராமத்தாருக்கு அவசியமான செலவுக்கோ அல்லது பொருள் உற்பத்திக்கோ அவசரமாக வேண்டிய பணத்தை நியாயமாயுள்ள வட்டி விகிதத்திற்குப் பெறவேண்டுமே தவிர சாவகார்களுடைய வலையில் சிக்கிக்கொண்டு விழிக்கக்கூடாது.

## புதிய ஆக்ட்.

1912-ம்வருஷத்து புதிய ஆக்டால் கூட்டுத்தொழில் வேலையானது விசாலப்படுத்தப்பட்டிருக்கிறதென்று பாலகிருஷ்ண அய்யர் சொன்னதை என்னோடு இங்குள்ள மற்ற கனவான்களும் ஒப்புக்கொள்வார்களென்று நம்புகிறேன். பாலகிருஷ்ண அய்யர் நம்புகிறபடி இப்பொழுது அச்சங்கங்கள் லோகோபகாரமான பொதுவான காரியங்களைச் செய்யவேண்டுமென்பதை நான் அங்கீகரிக்கமாட்டேன். இச்சங்கங்களின் மெம்பர்களுடைய பொருளாதார நன்மைக்கு வேண்டிய காரியங்களையே இப்போது இச்சங்கங்கள் செய்தால் அதுவே போதுமான திருப்தியை யுண்டாக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.

நமது ப்ரோக்ராமில், (Programme) அப்பேர்ப்பட்ட கூட்டுறவானது நகர்களிலும் நாடுகளிலும் எவ்வித வேலைகளைச் செய்யலாமென்பதை விளக்கக்கூடிய இரண்டு உபந்நியாசங்களிருப்பதாகத் தெரியவருகிறது. அவைகளைக் கேட்க நான் மிகவும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். அதனால் நாமெல்லோரும் மிக்க நன்மையை யடையலாமென்று நம்புகிறேன்.

## விஸிட்டர்களுக்கு நல்வரவு.

மலையாளத்திலும், தென்கன்னடத்திலும் கூட்டுத்தொழிலுக்காக நிரம்ப உழைத்து வரும் கிருஷ்ணவர்மராஜா, ஷிவராவ் ஆகிய இவ்விருவர்களும் இவ்விடம் விஜயம் செய்திருப்பதற்காக அவர்களுக்கு நான் மனப்பூர்வகமாக நல்வரவு கூறுகிறேன். ஐக்கிய இயக்கத்தை, படியாத படகர் (Badagas) முதலிய கீழான ஜாதியாரில் பரவச்செய்ய வேண்டிய முயற்சியெடுத்துக்கொண்ட கெயிடி (Kaiti) மணிகாரருக்கும் ஒரு விசேஷ நல்வரவு கூறுகிறேன். கடைசியாக, இவ்விடத்தில் தயவுகூர்ந்து விஜயம்செய்து, உபந்நியாசம்செய்து, நம் நடவடிக்கைகளை கவனித்து நமக்கு வழிகாட்ட வந்திருக்கும் என்னுடைய பழைய சிநேகிதரான திவான்பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை அவர்களுக்கும் நல்வரவு கூறுகிறேன்.



என்னை இன்று உங்களுடைய பிரசிடெண்டாக நியமித்து என்னை கௌரவப்படுத்தின உங்களெல்லோருக்கும் நான் வந்தனமளிக்கிறேன்.

---

## விவசாயத்தில் கூட்டு

திவான்பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை.

ஐக்கிய நாணயச்சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய திவான் பஹதூர் L.D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை அவர்கள் 'விவசாயத்தில் கூட்டு' என்பதைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார். அதன் சாராம்சம் பின் வருமாறு.

சென்னை மாகாணத்து விவசாய நிபுணர்கள் ஒன்றுகூடுமிடமாயும், மாகாணத்தின் விவசாய காலேஜின் இருப்பிடமாயும், விவசாய ஜில்லாக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜில்லாவுமாகிய கோயமுத்தூர் ஜில்லாவின் முக்கிய பட்டணமாகிய இப்பட்டணத்தில் விவசாய விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டுமென்கிற ஆவலை அடக்க முடியாதவனாயிருக்கிறேன். அவ்வாவலுக் கிணங்குவதால் என்னை மன்னிப்பீர்களென்பதில் சந்தேகமேயில்லை. கொஞ்சநாளைக்கு முன்தான் உத்தரமேரூரில் நடந்த அதிகாரியாகிய ஐக்கிய நாணயச்சங்கங்களின் முதலாவது ரெஜிஸ்ட்ரார் திவான் பஹதூர் P. இராஜகோபாலாசாரியாருடைய மிகவும் நேர்த்தியான உபந்நியாஸத்தைக் கேட்டோம். அதில் அவர் மதராஸ் ராஜதானியின் கூட்டுத்தொழிலினர் நாணயச்சங்கங்களல்லாத மற்றவித கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்கத்தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார். இந்த ஆசனையை முன்னிட்டு மதராஸிலுள்ள முக்கிய பத்திரிகைகளும் கூட்டுமுறை ஆரம்பித்து ஒன்பது வருஷங்களாகியும், 1000 சங்கங்களுக்கு மேலேயே ரெஜிஸ்டராயிருந்தும் இன்னும் கூட்டுத்தொழிற் பாதையிலேயே தாமதித்துக்கொண்டிருந்தால், கூட்டுத்தொழிலினர் என்கிற பெயரே நமக்குத் தகாது என்று முறையிடுகின்றன. இவ்விராஜதானியிலுள்ள உள்ள கூட்டுத்தொழிலினரெல்லோரும் இப்புத்திமதியை அங்கீகரித்திருப்பார்களென்று நம்புகிறேன். இதைப்பற்றி தேசசுயபாஷைப் பத்திரிகைகளும் தலையங்கங்களில் பிரஸ்தாபித்து எல்லாஜனங்களுக்கும் தெரியப்படுத்துமென்று நம்புகிறேன்.

## ஸர் ப்ரடரிக் நிகல்ஸன்.

வாழ்நாளெல்லாம் கூட்டுத்தொழிலுக்காக உழைத்துவரும் ஸர். ப்ரடரிக் நிகல்ஸன் துரை அவர்களை இன்றையதினம் இவ்விடத்தில் காணோம். அவர் இந்தியாவுக்கு மாத்திரமேயன்றி இவ்வுலகத்தின் கூட்டுமுறைக்கே உழைத்துவரும்பிரமுகர்களில் ஒருவராயிருக்கிறார். வாழ்நாள்முழுதும் இந்தியதேசத்து விவசாய விஷயத்தில் உழைத்துத் தேர்ந்த அனுபோகம் பெற்ற ஸர் ப்ரெடரிக் நிகல்ஸன் துரை அவர்கள் இன்றையதினம் இவ்விடம் விஜயம்செய்து தம்முடைய முதிர்ந்த அனுபோகத்தை நமக்கெல்லாம் போதனை செய்வார் என்று மிகுந்த ஆவலோடு எதிர் பார்த்திருந்தோம். ஆனால் கடைசியில் கொஞ்சம் தேக அசௌக்கியத்தால் வரமுடியாதென்று தெரிவித்து விட்டதால் நம்முடைய எண்ணமெல்லாம் வீணாய்விட்டது. இருந்தாலும் அவருடைய பிரஸங்கத்தை இன்னொரு சந்தர்ப்பத்தில் கேட்போமென்று நம்புகிறேன்.

## விற்றல் வாங்கலில் கூட்டு.

விவசாயக் கூட்டு என்கிற விஷயத்தை முக்கியமாய் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது, விற்பனைக்கு ஒன்று சேர்தலும், வாங்கலுக்கு ஒன்றுசேர்தலும் விவசாய விற்பனையைப்பற்றி முதலில் பேசுகிறேன். ஐரோப்பா கண்டத்தில் விவசாய விஷயத்தில் உண்டாகும் கூட்டின் முதல் ரூபம் என்னவென்றால் மிகச்சுலபமான விவசாயத்திற்கு அத்யாவசியமான பொருள், கருவிமுதலியவைகளை வாங்குவது தான். அதாவது, உரம், விதை,கருவி முதலானவைகளை வாங்குவது. இந்தியாவில் ரயத்துகள் விதை,எரு,கருவிகள் முதலானவைகளைப்பெற கிராமத்தின் புராதன வழிகளையே நம்பியிருக்கிறார்கள். மேலும் உரம் எங்கிருந்து வாங்கலாமென்பதையும் எவ்விதமாக உரம் வாங்க வேண்டுமென்பதையும் விவசாயிக்கு எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருப்பதும் சுலபமாயில்லை. இவ்விஷயத்தில் விவசாய இலாக்காக்காரர் ரைத்துகளுக்கு அப்போதைக்கப்போது, போதித்துக்கொண்டே வருகிறார்கள். ஏற்கனவே தகுந்த இடங்களில் விவசாயச்சங்கங்கள் ஏற்பட்டு ரைத்துக்களுக்கு வேண்டிய விதை, உரம், கருவி முதலானவைகளை ஸப்ளை செய்துவருகின்றன. ஆனால் ராஜதானியின் மற்ற இடங்களில் வாங்குவதில் ஐக்கியமில்லாமல் விற்பனைக்கு மாத்திரம் ஐக்கியத்தைத் தேடுகிறார்கள். ஜனங்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாய்த் தானிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் மாசூலை விற்கவோ அல்லது விற்ற பணத்தை பத்திரப்படுத்தவோ வேண்டியதாயிருக்கிறது. இதுவும் விவசாயத்தின் நூதன வழிப்பாட்டைச் சேர்ந்ததாயிருக்கிறது. ஏனென்றால் கொஞ்ச காலத்திற்குமுன் கூடப் போக்குவரத்துக்கு சரியான ஸாதனமில்லாதபடியால், சாப்பாட்டுக்குச் செலவழிந்ததுபோக பாக்கிதானியத்தை வீட்டிலேயே களஞ்சியத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் இப்பொழுது ரைத்துக்கு தன்னுடைய மாசூலை உடனே பணமாக மாற்ற அநேக ஸாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது மாசூலை அடுத்த மார்க்கெட்டுக்குக் கொண்டுபோயாவது அல்லது அறுவடையாகு முன்னமேயே அட்வான்ஸ் கொடுத்துவிட்டு தன் வாசலில் வந்து நிற்கும் வியாபாரிக்காவது விற்கலாம்.

## கூட்டுத் தொழில் முயற்சிக்கு நல்ல தருணம்.

விவசாயத்தில் ஒத்து உழைக்கத் தற்சமயம் தகுந்தகாலமாயிருக்கிறது. குறித்த ஆர்கனிசேஷன் இப்பொழுது இல்லாதிருப்பதே கூட்டுமுயற்சிக்கு நல்ல தருணமாயிருக்கிறது. இது ஏன் இப்படி யிருக்கிறதென்பதை அறிய இங்கிலாந்தில் தற்காலமிருக்கும் விவகாரங்களோடு நம்முடைய விவகாரங்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இங்கிலாந்தில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபித்து ஜெயம் பெறுதல் துர்லபம். ஏனென்றால் ஏற்கனவே யிருக்கும் ஸ்தாபனங்களாகிய நாட்டு பாங்கிகள் (Country Banks) ஆங்கில குடியானவர்களுக்கு வேண்டிய கடன் கொடுக்கின்றன. அப்பேர்ப்பட்ட உதவி இந்தியாவில்லாததால் நாம் ஐக்கிய நாணயச்சங்கங்களை ஸித்திபெறும்படி ஸ்தாபிக்க முடிந்தது. இம்மாதிரியாகவே இந்திய ரைத்துகளின் உற்பத்திப் பொருள்களை வாங்க ஏற்ற (Trade Organizations) வியாபார ஸ்தாபனங்களில்லாமையால் விற்பனைக்கான கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்க ஆரம்பிக்கலாம். ஏற்கனவே ரைத்துகளின் உற்பத்திப் பொருள்களாகிய பருத்தி, வேர்க்கடலை ஆகிய இவ்விரண்டை வாங்க ஐரோப்பிய கூட்டு வியாபாரிகளால் முதல்சேர்க்கப்பட்ட அநேக வியாபார ஸ்தாபனங்களிருக்கின்றன. நாளாவர்த்தியில் இதே மாதிரியாய் தானியங்களையும் வாங்க வியாபார ஸ்தாபனங்கள் ஏற்படுமென்று நாம் சொல்லக்கூடும். விற்பனைக்கான கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது நல்ல சமயம் இச்சமயத்தை ஜனங்கள் நழுவவிட மாட்டார்களென்று நம்புகிறேன். ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் 100-க்கு அதிகமான சங்கங்களில்



சிலவற்றிற்காகிலும் இவ்வெண்ணம் உண்டாகக்கூடும். இவ்வெண்ணங் கொண்ட சங்கங்கள் உடனே தங்கள் எண்ணத்தைக் காரியத்தில் காண்பிக்கவேண்டும். ஏனென்றால் இப்பொழுதே ஜனங்கள் காண்பரென்ஸ் முதலானவைகளில் பேச்சே தவிர காரியத்தில் யாதொன்றும் பிரயோசனமில்லையென்று தூஷணை செய்கிறார்கள். அதற்கு இடங்கொடுக்கக்கூடாது.

## செக்ரிடரியின் யோக்கியதை.

ஆரம்பிக்கவேண்டுமென்று யோஜித்துள்ள தொழிலில் ஏற்கனவே பயிற்சியுள்ள சிலர் அவசியம் இருக்கவேண்டும். குறைந்தபக்ஷம் அப்பேர்ப்பட்ட ஒருவராவது வேண்டியது. கிராம நாணயச்சங்கம் ஸ்தாபிப்பதற்கு செக்ரிடரிக்கு முன்யோக்கியதையிருக்கவேண்டியது அவ்வளவு அவசியமில்லை. செக்ரிடெரியாய் நியமிக்கப்படுபவன் யதார்த்தவாதியாயும் லோகோபகார சிந்தையுள்ளவனாயும் நாணயச்சங்கங்கள் வைக்க வேண்டிய சுலபமான கணக்குப் புஸ்தகங்களை வைத்துக்கொள்ளத் தெரிந்தவனாயுமிருந்தால் போதுமானது. ஆனால் ஒரு சங்கம் வியாபார ரீதியாய் வேலை செய்ய எண்ணங்கொண்டால் அச்சங்கத்து செக்ரிடெரிக்கு வியாபார விஷயத்தில் முன்யோக்கியதை வேண்டியதுதான். ஏனென்றால் அப்பேர்ப்பட்ட யோக்கியதை யுடையவர்கள் மிகக் கொஞ்சம்; மேலும் அந்தக் கொஞ்சம்பேர்களுக்கும் ஏற்கனவே தங்களுக்கிருக்கும் அலுவல்களை கவனிக்கவே நேரம் போதாமலிருக்கிறது. இக்காரணத்தால் வியாபாரச் சங்கங்கள் ஸ்தாபிக்க அநேக இடையூறுகள் நேரிடுகின்றன.

## பொருள்களை வாங்கும் சங்கங்கள்.

நான் இப்பொழுது விவசாய விஷயத்தில் கூட்டைப்பற்றிச் சொல்லுகிறேன். அப்பேர்க்கொத்த சங்கங்களுக்கு அத்யாவச்யமாய் வேண்டியவைகளைப் பற்றிப் பேசி நேரம்போக்க எனக்கு இஷ்டமில்லை. ஏனென்றால் நம்முடைய விவசாயத் தொழிலானது இன்னும் ஆரம்பத்திலிருப்பதால், ரைத்துகளுக்கு வேண்டிய விதை உரம் கருவிகள் முதலானதேவைகளை வாங்க அவசியம் ஏற்படவில்லை. அத்தேவை ஏற்படுகிறவரையில் நம்முடைய ரைத்துக்கு சங்கத்தைப் பற்றிப் பேசுவது பிரயோசனமேயில்லை. செக்ரிடரி, நடத்தவேண்டிய காரியத்தில் அனுபோகமுள்ளவனாயிருக்கவேண்டுமென்பதையும் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி ஒருவிதமான அபிப்பிராயமுடையவனாயிருக்கவேண்டுமென்பதையும் தவிர, பொருள்களை வாங்கும் சங்கங்களை ஸ்தாபிக்கும்போது முக்கியமாய் கவனிக்கவேண்டிய சங்கதிகள் இன்னும் இரண்டு உள்ளன. தற்கால விவசாய நிலைமையில் கவனிக்கவேண்டிய முக்கியமான ஷரத்து என்னவென்றால் பொருள்வாங்கும் சங்கத்தின் மெம்பராக ஒருகிராமத்தின் ஒவ்வொரு ரைத்தையும் சேர்ப்பது உசிதமல்ல. விதை எரு அல்லது கருவிகள் வாங்குவதற்காக ஒருடஜன் ரைத்துகள் ஒன்றாய்ச் சேர்ந்தாலும் போதுமானது இஷ்டமில்லாதவர்களையும் சங்கத்தின் நோக்கத்தையே அறியாதவர்களையும் சேர்ப்பதில் யாதொரு பயனுமில்லை. மற்றொரு நிபந்தனை யென்னவென்றால் சங்கத்தின் தொழில்முதல் சங்கத்தின் அங்கத்தினராலேயே போடப்பட வேண்டுமேயொழிய வெளியிடங்களிலிருந்து கடன் வாங்கக்கூடாது. ஏனென்றால் சங்கம் ஆரம்பிக்கும்போதே கடன்வாங்கி வேலை ஆரம்பித்தால், சங்கத்தின் விவகாரம் சரிவர நடப்பது கஷ்டம்; விவசாயச்சீர்திருத்தம் செய்வதும் துர்லபமாகிவிடும்.

## மிஸ்டர் ஆதிநாராயணய்யாவின் சுற்றுப்பிரயாணம்.

இவ்விராஜதானியின் சில ஜில்லாக்களில் சிலமாதிரி(Model)விவசாயச்சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக மதராஸ் ஸெண்ட்ரல் அக்ரிகல்சரல் கமிட்டியாரின் ஜாயிண்ட் செக்ரி

டெரியாகிய திவான்பஹதூர் M. ஆதிநாராயணய்யா அவர்கள் அக்கம்மிட்டியாரின் அதிகாரத்தின்பேரில் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகிறார். கவர்ன்மெண்டாருடைய விருப்பத்தின்பேரில் நானும் இந்த லோகோபகார காரியத்திற்காக ஆவலோடு ஒத்துழைக்க விரும்புகிறேன். நல்ல விவசாயச் சங்கங்களை ஸ்தாபிக்க விருப்பமும், சாமர்த்தியமும் உடைய கூட்டுத்தொழிலினர்கள் எனக்காவது, மிஸ்டர் ஆதிநாராயணய்யா அவர்களுக்காவது தங்களிஷ்டத்தைத் தெரிவித்துக்கொண்டால், நாங்கள் அந்த ஸ்தலங்களுக்கு எங்கள் கவனத்தைச் செலுத்தக்கூடும். பிரசங்கத்தைப் பூர்த்திசெய்யுமுன் மிஸ்டர் உல்ப் அவர்களுடைய "விவசாயத்தில் கூட்டுத்தொழில்" என்னும்புஸ்தகத்தை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன் அதில் விவசாயத்தைப்பற்றிய அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. அதிலடங்கிய சில விஷயங்கள் உங்கள் அனுபோகத்திற்குக் கொண்டுவர முடியுமென்பதை நான் திண்ணமாய்ச் சொல்லுவேன்.

---

## மற்ற வியாசங்கள்.

மிஸ்டர் கிருஷ்ணவர்மராஜா அவர்கள் "மலையாளத்தில் கூட்டுத்தொழில்" என்பதைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார். மலையாள ஜில்லாவானது விஸ்தீரணம், ஜனத்தொகை, படிப்பு முதலிய விஷயங்களில் ராஜதானியின் பிரதான ஜில்லாக்களில் ஒன்றாகவிருந்தாலும் அந்த ஜில்லாவில் கூட்டுத்தொழிற் சங்கங்கள் வெகு கொஞ்சமாகத்தானிருக்கின்றனவென்று சொன்னார். இதற்கு முதற்காரணம் ஜனங்களில் பெரும்பான்மையோரின் கல்லாமையே என்றும் சொன்னார். மற்றொரு கஷ்டமென்னவென்றால் வேண்டிய திரவியம் கிடைக்கிறதில்லை.

மிஸ்டர் M. ஷிவராவ் "தென்கன்னடத்தில் கூட்டுத் தொழில் முறை" என்பதைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார். அந்த ஜில்லாவில் விவசாயிகள் சதா கடனாளிகளா யிருக்கிறார்களென்றும், சாகுபடிக்காக அநியாய வட்டிக்குக் கடன் வாங்குகிறார்களென்றும் சொன்னார். மிஸ்டர் R. ராமசந்திரராவின் நல்ல யோசனையின்பேரில் புத்தூர் சங்கமானது 1909-ம் ஞு அக்டோபர் மீ ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. தற்போதிருக்கும் ஐக்கிய நாணயச்சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரவர்கள் சென்ற 1912ம் ஞு கோடைகாலத்துச் சுற்றுப்பிராயணத்தில் எவ்வளவோ பிரயாசையின்பேரில் சுமார் 10-சங்கங்களை ஸ்தாபித்த விஷயம் மிக்க சந்தோஷப்படத் தக்கதாயிருக்கிறது கிராமச் சங்கங்களுக்கு திரவியசகாயஞ் செய்வதற்காக ஒரு ஸெண்ட்ரல் பாங்கி தேவையென்றும் இக்காரியத்திற்கு மங்களூர் காதலிக் சங்கமானது தகுந்த ஸ்தாபனமென்றும் சொன்னார்.

இந்த வியாசத்தின் சாராம்சத்தை திவான்பஹதூர் L. D. ஸ்வாமிகண்ணுபிள்ளை அவர்கள் சபையோருக்குத் தமிழில் சொன்னார்.

தானிய பாங்கிகளை ஏற்படுத்த வேண்டுமென்று ராவ் பஹதூர் C. நாகோஜிராவ் அவர்கள் தமிழில் பேசினார்.

தென்கன்னட பாங்கிகளின் நடவடிக்கைகள் கோயமுத்தூர் ஜில்லா பாங்கிக்குத் தெரியாதானபடியால், கோயமுத்தூர் ஜில்லா பாங்கி தென்கன்னட பாங்கிகளுக்குக் கடன் கொடுப்பது தனக்கு இஷ்டமில்லையென்று மிஸ்டர் T. A. ராமலிங்கச் செட்டியார் தெரிவித்தார்.



ஜில்லா பாங்கியானது தன் விவகார எல்லையை மலையாளம், தென் கன்னடம். நீலகிரி ஜில்லாக்களில் விசாலித்த விவரத்தைக் குறித்து ஜில்லா பாங்கியின் காரியதரிசியாக மிஸ்டர் C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள்பிரசிடெண்டின் வேண்டுகோளின்பேரில் நன்கு விளக்கினார்.

பிறகு "நீலகிரியில் கீழ்த்தர வகுப்பாரில் கூட்டுத்தொழில்" என்பதைப்பற்றி ஐக்கியச் சங்கங்களின் சிப் இன்ஸ்பெக்டர் C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் ஒரு வியாஸம் வாசித்தார். அதில் அவர் 1911-12ம் வருஷங்களில் நீலகிரி ஜில்லா கலெக்டராயிருந்த மிஸ்டர் S. P. ரைஸ் துரையவர்களின் ஊக்கத்தைப் பற்றியும், படகர் (Badagas) தோடர் (Todas) ஆகிய மலையாளிகளை லப்பைகளிடத்திலும் பள்ளப்பட்டி மகம்மதியர்களிடத்திலும் கடன் படுவதினின்றும் விடுவிக்கிறதற்காக 1912-வது ஞு ஜூன் மீ கடைசியில் 83 மெம்பர்களையுடைய மூன்று சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டதையும் பற்றிச்சொன்னார். இம்மாதிரியே அநேக சங்கங்கள் ஏற்பட வேண்டுமென்று ஆவலுற்றார். இப்பேர்ப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டால் அவர்களுடைய விவசாய உற்பத்திப் பொருள்களாகிய கோதுமை, காபி, உருளைக்கிழங்கு, கடுகு முதலியவைகளை வாங்கி அவர்களுக்கு வேண்டிய ராகி முதலிய தானியங்களை ஸப்ளை செய்யலாம்.

பிறகு மிஸ்டர் T. S. பாலகிருஷ்ண அய்யரவர்கள் "நகரக் கூட்டுத் தொழிலில் சில புதிய ஏற்பாடுகள்" என்பதைப்பற்றி ஒரு வியாஸம் வாசித்தார்.

நடவடிக்கைகள் முடிவுக்கு வருமுன் விஷய கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

## தீர்மானங்கள்.

கோ-ஆபரேடிவ் ஸொஸைடிகள் அபிவிருத்தியின் பொருட்டு வெகு ஊக்கத்துடன் உழைத்து வந்த மிஸ்டர் T ராமஸ்வாமி ஐயங்காரின் மரணத்தைக் குறித்து கான்பரென்ஸ் வருத்தமடைகிறது.

ஒவ்வொரு ஜில்லாவிலும் கோ-ஆபரேடிவ் நிகழ்ச்சிகளை முற்படுத்துவதற்காக உத்தியோகப்பற்றில்லாத கௌரவ ஆர்கனைஸர்களை (organisers) டிபார்ட்மெண்டில் நியமிக்கக் காலம் வந்துவிட்டதென்று இந்த கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகின்றது. அப்படி நியமிக்கப்படக் கூடியவர்களைக் கண்டு டிபார்ட்டுமெண்டுக்குச் சொல்வது அர்பன் பாங்குகளின் கடமையாகுமென்று இந்த கான்பரன்ஸ் நினைக்கிறது.

கோயமுத்தூர் டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்கின் நிர்வாகிகள், மேற்படி பாங்கியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கூடியவரையில் கிராமாந்தரங்களில் இந்நிகழ்ச்சியை பரவச் செய்யவும், பரிசிலனை செய்யவும் வேண்டுமென்று இந்த கான்பரென்ஸ் கேட்டுக்கொள்கிறது.

அர்பன் பாங்குகளில், டிரஸ்டி நிதிகளைப் போட்டு வைக்கலாமென்று தீர்மானித்து அதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறு இந்த கான்பரென்ஸ் சென்னை ஹைகோர்ட்டை வேண்டிக்கொள்ளுகிறது.

கோயமுத்தூர் சர்க்கிளைச் சேர்ந்த நூல் அர்பன் சங்கங்கள், தான்யங்கள், விதைகள், மாடுகள், யந்திரச் சாமான்கள் இவைகளை வாங்கி விவசாயிகளுக்கனுகூலமாக விற்பனை செய்வதற்கேற்றவாறு ஒழுங்குகளைச் செய்யவேண்டுமென்றும் அப்படிச் செய்வதற்குரிய தேவைகள் இருக்கின்றனவா இல்லையா என்று யோசனை செய்யவேண்டுமென்றும் இந்த கான்பரென்ஸ் தெரியப்படுத்திக்கொள்கிறது.

நீலகிரியில் சில பிரத்தியேக வசதிகள் ஏற்பட்டிருப்பதால் கோ-ஆபரேடிவ் ஸொஸைட்டிகள் மூலமாய் அங்கு விளையும் சாமான்களை வெளிப்பிரதேசங்களுக்குக் கொண்டுவரவும் வெளிப்பிரதேங்களிலிருந்து சாமான்களை நீலகிரிக்குக் கொண்டுபோகவும் சௌகரியமான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க ஒரு இன்ஸ்பெக்டரை நியமிக்கும்படி இந்த கான்பரன்ஸ் டிபார்ட்மெண்டை கேட்டுக்கொள்கிறது.

நெசவுத் தொழில்காரர்கள் வசிக்கும் இடங்களிலுள்ள ஸொஸைடிகள், நெசவுத் தொழில்காரர்களுக்கு வேண்டிய நூலை உற்பத்திக்காரர்களிடமிருந்து நேராகவாங்கிக்கொடுப்பதற்குரிய முயற்சிகளை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. பட்டணங்களிலுள்ள கோ ஆபரேட்டர்கள் ஆங்காங்கு கட்டடங்கள் கட்டுதல், நெசவுத் தொழில் நடத்தல், பசுக்கிடை வைத்துப்பால் தயிர் நெய் சேகரித்து விற்றல் முதலிய தொழில்களை ஸ்தாபித்து நடத்துவதற்கு ஸொஸைடிகளை ஸ்தாபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மலையாளம் தென் கன்னடம் ஜில்லாக்களில் தானிய பாங்குகள் வைத்து நடத்துவதற்குச் சில விசேஷ அனுகூலங்களிருப்பதால் அந்த ஜில்லாக்களில் இம்மாதிரி ஸொஸைடிகளை ஸ்தாபிப்பதற்குரிய முயற்சிகள் செய்யப்படவேண்டும்.

சகல ஜாதியாரும் சேர்ந்த சங்கமமைப்பது முடியாத காரியமாய்த் தோன்றினாலொழிய மற்ற சந்தர்ப்பங்களில் ஸொஸைடி ஸ்தாபிப்பதில் ஜாதி வித்தியாசம் பாராட்டக் கூடாது.

கிராமங்களில் கோ-ஆபரேடிவ் உணர்ச்சி ஜனங்களுக்கு விருத்தி யடையுமாறு கோ-ஆபரேடிவ் விஷயங்களை அறிவிக்கும் துண்டுப் பத்திரிகைகள் ஜனங்களின் மனதைக் கவரக்கூடிய வண்ணம் அடிக்கடி பிரசுரிக்கப்படவேண்டும். கிராமந்தரங்களில் கவர்ன்மெண்டார் பொதுப் பணத்தைச் செலவிடும்போதெல்லாம் கிராம கோ-ஆபரேடிவ் ஸொஸைடிகளின் பஞ்சாயத்தார்களோடு கலந்து ஆலோசனை செய்வது உசிதமா, அல்லவா வென்பதை கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தச் சங்கங்கள் அவைகளுக்குக் கிடைக்கும் லாபத்திலொரு பாகத்தை கிராமாந்தரங்களின் சுகாதார விருத்தியிலும் இதர பொது ஜனப் பிரயோஜனமான வழிகளிலும் செலவிடும்படி தைரியப்படுத்தப்படவேண்டும்.

## ப்ரசிடேண்டின் முடிவுப் பேச்சு.

மிஸ்டர் பாலகிருஷ்ணய்யர்! கனவான்களே!—கான்பரென்சு முடிவிற்கு வருமுன் என்னிடமிருந்து சில ரிமார்க்குகளை எதிர் பார்ப்பதாக அறிகிறேன். இக்கான்பரென்சில் விஷயங்களெல்லாம் மிக்க ஊக்கத்தோடு நிறைவேற்றப்பட்டதற்காக நிரம்பவும் சந்தோஷப்படுகிறேன். உங்கள் தீர்மானங்களே எல்லாவிஷயங்களையும் வெளியிடுகின்றன. அவைகளைப்பற்றி நான் மறுபடி சொல்லப்போகிறதில்லை. நாம் காலத்தை வீண் போக்காமல் பிரயோஜனகரமான வேலை செய்துள்ளோமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். என்னைப் பொருத்தமட்டில் நான் உங்களிடத்திலிருந்து கூட்டுத்தொழிலிலுள்ள வாஸ்தவமான கஷ்டங்களையும், கூட்டுத்தொழிலால் நாம் பெறக்கூடும் பலன்களையும் நன்றாய் அறிந்துகொண்டேன்.

ஆனால் ஒரு விஷயத்தைப் ற்றி நான் உங்களை உஷார்படுத்துகிறேன். உற்பத்தி செய்வதற்கும், பிரிவினை செய்வதற்கும் கூட்டுத் தொழில் நல்லஸாதனம்தான். இதர வியாபாரிகளிடத்துள்ள கொடுமை யில்லாததால் கூட்டுத் தொழில் மிகவும் விரும்பத் தக்கதாயிருக்கிறது. ஆனால் அனுபோக மில்லாத இவ்வியாபாரத்தில் அநேக அபாயங்களும் உள்ளன. வருஷக் கணக்காய் வேலை செய்து வியாபாரமே தொழிலாயுடைய அநேகரின் முன் யோசனையும் அறிவும் திடீரென்று வியாபாரம் ஆரம்பிப்பவர்களுக்கு இல்லையாகையால் அவர்கள் அபாயங்களுக்குள்ளாகக்கூடும். ஆகையால் நான் உங்களைக் கேட்டுக்கொள்வதென்னவென்றால் அவசரப்படாமல் நீங்கள் துவக்கப்போகிற முயற்சியின் சாதகபாதகங்களெல்லாவற்றையும் முற்றும் ஆராய்ந்து ஆரம்பிக்கும் காரியத்தில் யாதொரு விக்னமும் ஏற்படாது என்கிற நிச்சயமான எண்ணத்தோடு பிரவேசிக்கவேண்டும். இவ்வித கூட்டுத்தொழில் முயற்சியால் ஏராளமான பலனை அடையக்கூடும்.



இக்கான்பரென்ஸு வெகு விமரிசையாய் நடந்தேறியதற்காக ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். தவிரவும் இவ்விடம் வந்து உபந்நியசித்த கனவான்களுக்கும் வியாசங்கள் வாசித்தவர்களுக்கும், நம்முடைய நடவடிக்கைகளை பொறுமையோடு கேட்டு நமக்கு உதவி புரிந்த திவான் பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை அவர்களுக்கும் வந்தனமளிக்கிறேன்.

பிறகு மிஸ்டர் T. S. பாலகிருஷ்ணய்யரவர்கள் பிரசிடெண்டாகிய மிஸ்டர் ஹைமிங்வே துரை அவர்களுக்கு மனப்பூர்வமாக வந்தனமளித்தார். இதே மாதிரி வந்திருந்த டெலிகேட்டுகளுக்கும், விஸிடர்களுக்கும், கான்பரென்ஸு கூடுவதற்கு இடங்கொடுத்த காலேஜ் அதிகாரிகளுக்கும் வந்தன மளிக்கப்பட்டு கான்பரென்ஸு கலைந்தது.

## அடுத்த கான்பரேன்ஸ்.

மிஸ்டர் N. C. கிருஷ்ண வர்ம ராஜா அவர்கள் அடுத்த கான்பரென்ஸு மலையாளத்தில் கூடலாமென்று தெரிவித்தார்.

---

# கூட்டுத் தொழில் கான்பரென்ஸ்.

---

## சாத்தூர்.

1913-ம் ௵ செப்டம்பர் ௴ 7-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று முதலாவது சாத்தூர் கூட்டுத் தொழில் கான்பரென்ஸ் சாத்தூரில் பெருமாள் கோவிலைச் சேர்ந்த பெரிய கல் மண்டபத்தில் திவான் பஹதூர் M. ஆதிநாராயணய்யா அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. அங்கே கனம் மிஸ்டர் K. ராமய்யங்கார், கனம் திவான் பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை (ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார்) ராவ் சாஹேப் K. விஜயராகவாச்சாரியார், மிஸர்ஸ் C. S. மஹாதேவய்யர், I. A. பீர் முஹமது சாஹேப், N. பட்டாபிராமராவ், அழகிரிசாமி நாயுடு, T. A. நாராயணசாமி சாஸ்திரி, சுப்பராய அய்யர், ராவ் சாஹேப் வேலாயுதம் பிள்ளை முதலோரும், 45 கிராமச் சங்கங்களின் பிரதிநிதிகளாக சுமார் 50 டெலிகேட்டுகளும் விஜயம் செய்திருந்தார்கள். பற்பல கிராமங்களிலிருந்தும் அநேக ரயத்துகளும் வந்திருந்தார்கள். நடவடிக்கைகளெல்லாம் தமிழிலேயே நடைபெற்றன.

## டெலிகேட்டுகளுக்கு வரவேற்பு.

*சாத்தூர் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் ப்ரெஸிடெண்டும், உபசரணைக் கமிட்டி சேர்மனுமாகிய மிஸ்டர் S. சுப்பிரமணிய நாயனுர் அவர்கள் செய்த வரவேற்புப் ப்ரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—*

அர்பன் பாங்கிகளால் கடனாகக் கொடுக்கப்படும் திரவியமானது தர்ம சிந்தனையோடு கொடுக்கப்படுகிறதென்றும், ஒவ்வொருவனும் தனக்கு இஷ்டமுள்ளபோது திரவிய சகாயம் பெறலாமென்றும் தங்களுக்குக் கஷ்ட நிவாரண முண்டாக மற்ற தொழில்களில் அந்நியோந்நியம் ஏற்படவேண்டுமென்றும், ஜனங்களுக்குள் தப்பு அபிப்பிராயமுண்டாயிருக்கிறதென்றும் அது சரியல்லவென்றும் சொன்னுர். ரயத்துகள் வேண்டியதைவிட அதிகப் பணம் வாங்காமல் பங்குகளை அதிகமா யெடுத்துக் கொண்டு மூலதனம் அதிகரிக்கும்படி பார்த்துகொள்ளவேண்டியது, ஒவ்வொரு மெம்பரும் மற்ற பாங்கிகளுக்குச் செய்யவேண்டிய கடமையாயிருக்கிறது. சங்கத்து நடபடிக்கைளெல்லாம் நியாயமாயிருக்க வேண்டியதுதான் மிகவும் முக்கியமான விஷயம். ஜாயிண்டு உத்தரவாதமானது பணக்காரர்களையும், நிலச்சுவான்தார்களையும் சங்கத்தில் சேராதவண்ணம் தடுத்துவிட்டது. ஏனென்ருல் அவர்களுக்கு கடன் வாங்கவேண்டுமென்கிற அவசியமும் கிடையாது, சங்கம் முழுகிப்போனுல் தங்கள் சொத்துக்கள் பேரில் பிரவேசிப்பார்களென்கிற பயமும் அவர்களுக்கு உண்டு. ஆனுல், கடன் கொடுக்குமுன் அப்பேர்பட்ட சங்கடங்கள் யாதொன்றும் நேரிடாதபடி வேண்டிய முயற்சி யெடுத்துக்கொள்ளுகிறபடியால், இவ்விதமான பயம் உண்டாவதற்குக் காரணமேயில்லை.

## பிரஸிடேண்டின் உபந்நியாசம்.

*கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாகிய திவான் பஹதூர் M. ஆதிநாருயணய்யர் அவர்கள் செய்த ப்ரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—*

தற்காலத்தில் இந்த தாலூகாவில் 46-கூட்டுறவுச் சங்கங்களிருக்கின்றன. அவற்றின் மெம்பர்களின் எண்ணிக்கை 3000-க்கு மேலேயே யிருக்கிறது. 1908-ம் வருஷத்தில் தான் முதல் முதல் இந்தத் தாலூகாவில் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அப்படி ஸ்தாபிக்கப்பட்டு சென்ற 5-வருஷங்களுக்குள் உண்டாயிருக்கும் அபிவிருத்தியை நோக்க மிக்க சந்தோஷமுண்டாகிறது. ஆனுல் இப்போது அடைந்திருக்கும் பலன் திருப்திகரமா யிருக்கிறதென்று நீங்கள் சும்மாயிருக்கக்கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்படும் வரையில் நம்முடைய முயற்சியை தளரவிடக்கூடாது. தற்காலத்தில் கூட்டுறவானது மலிவான வட்டிக்குப்பணம் கிடைக்கும் விஷயத்தில் மாத்திரம் பிரயோகிக்கப் படுகிறது. விவசாயிகளின் நன்மைக்காக கூட்டுத்தொழிலானது கவர்ன்மெண்டாரால் முதல் முதல் ஆரம்பிக்கப்பட்டதென்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. உலகமுழுவதும் பொதுவில் விவசாயிகளின் நிலைமையும், விசேஷமாய் சொற்ப பூமியை யுடையவர்களின் நிலைமையும் பரிதபிக்கக் கூடியதாயிருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் கடனாளிகளாயிருக்கிருர்கள். ஆனுல் நம் தேசத்திலோ இவர்களின் நிலைமையானது, கல்லாமையாலும் சாகுபடிக்கு பருவகால மழையை நம்பி யிருத்தலாலும், மிகக் கேடாயிருக்கிறது. எப்பேர்ப்பட்ட கைத்தொழிலும் தன் தொழில் முதலுக்கு அதிக வட்டி கொடுக்க நேரிட்டால் பிழைத்தலரிது. அதிலும் கிருஷித்தொழில் நம்முடைய



தேசத்து நிலைமையில் அபிவிருத்தியடைவது மிகக் கஷ்டம். சிற்சில இடங்களில் விவசாயிகள் கரையேற முடியாத கடனில் மூழ்கி யிருக்கிருர்கள். இதை உத்தேசித்து முதல் முதலில் நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டது சகஜந்தான். ஆனுல் இந்நாணய விஷயத்தைத் தவிர மற்று எத்தனையோ விவகாரங்களிலும் கூட்டுத்தொழிலைப் பிரயோகம் செய்யலாம். விவசாயிகளின் நிலைமையைச் சீர்திருத்த நாணயச் சங்கங்கள் மாத்திரம் போதாது. ஐரோப்பிய தேசங்களிலும் மற்ற இடங்களிலும் விற்பனை, பிரிவினை இலாக்காக்களில், விவசாய விஷயத்தில் மாத்திரமல்லாமல் இன்னும் மற்ற தயிர், பால், வெண்ணெய் செய்தல், கோழி முதலியன வளர்த்தல், திராக்ஷத்தோட்டம் வைத்தல் முதலிய கிராமாந்தர கைத்தொழில்களிலும், கைத்தறிகளில் நெய்தல், எண்ணெய் உற்பத்தி செய்தல் ஆகிய இவைபோன்ற தொழில்களிலும் நல்ல பலன் கிடைத்திருப்பதாக நாம் கேட்டும் படித்தும் இருக்கிருேம். இவ்விஷயங்களில் நம்முடைய தேசத்திலும் அபிவிருத்தி யுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை. ஆனுல் இப்பலனை அடைய உத்தேசமிருக்கும் பக்ஷத்தில் நாம் ஆரம்பிக்கப் போகும் ஒவ்வொரு காரியத்திலும் வாஸ்தவமான கூட்டுமுயற்சியை உடையவர்களா யிருக்கவேண்டும்.

அப்படி உடனே தக்க முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது இப்பக்கங்களில் மிகுதியாக உற்பத்தி செய்யப்படும் பருத்திப் பயிர்களைச் சீர்திருத்தலும், உங்களுடைய விவசாய முறையில், சீர்திருத்தப்பட்ட நவீன முறைகளைப் பிரயோகித்தலும், இவ்விஷயம் எனக்கு விசேஷமான சந்தோஷத்தைத் தரத்தக்கதாயிருக்கிறது; ஏனென்ருல். மதராஸ் ஸெண்ட்ரல் விவசாய கமிட்டியாரின் வேண்டுகோளின்பேரில் என் உடன் உத்தியோகஸ்தரான மிஸ்டர் N. பட்டாபிராமராவும், நானும், விவசாய விஷயத்தில் கூட்டுத்தொழில் கோட்பாடுகளை ப்ரயோகம் செய்ய உங்களைப் பழக்கப்படுத்துவதற்காக இப்பக்கங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிருேம். விவசாய விஷயத்தில் சீர்திருத்தப்பட்ட அநேக முறைகளைக் கண்டுபிடித்து ரூபிப்பதற்காக கவர்ன்மெண்டார் ஒரு விவசாய காலேஜையும், சர்க்கார் பண்ணைகளையும் வைத்து ஆதரித்து வருகிருர்களென்கிற விஷயம் உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. ஆனுல் இவ்விஷயங்களில் ஜனங்கள் தாங்களே ஊக்கத்தைக்காட்டி தங்களுடைய சொந்த நிலங்களில் சீர்திருத்தின நவீன விவசாய முறைகளை உபயோகித்தாலொழிய, விவசாயிகள் தனித்தனி அனுபவிக்கும் கஷ்டங்களைத் தெரிந்து கொள்ளவாவது, நிவாரணம் செய்யவாவது முடியாது. ஆகையால் உங்களுக்குள் மிக்க சாமர்த்தியமும், அறிவு முள்ளவர்கள் ஒன்றுசேர்ந்து, உங்கள் நன்மைக்காக, ஏராளமான திரவியத்தைச் செலவழித்து ரொம்ப கஷ்டப்பட்டும் நவீன முறைகளைக் கண்டுபிடித்து ரூபிக்கும் கவர்ன்மெண்டாருடைய சீர்திருத்தங்களை, உங்கள் நிலங்களில் உபயோகப்படுத்துவதற்காக நீங்கள் சிறு சங்கங்களை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டியது மிக்க அவசியமாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட சங்கங்கள் ஐக்கியமாகிய அஸ்திபாரத்தின்பேரில் சுவேச்சையாகவோ அல்லது ஏற்கனவே ஸ்தாபனமாயிருக்கும் நாணயச்சங்கங்களின் உட்பிரிவுகளாகவோ ஸ்தாபிக்கப்பட்டால் அவைகள் விவசாய சீர்திருத்தத்தின் அபிவிருத்திக்கு நல்ல ஸாதனங்களாகலாம். அப்படி ஏற்பட்ட ஒவ்வொரு சங்கமும் கிராம விவசாயிகளுக்கும், அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கத் தகுந்த ஸாதனமாக ஏற்படும். ஆகையால் அப்பேர்ப்பட்ட சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டுமென்கிற அவசியத்தைக் குறித்து நான் உங்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறேன். ஆனுல் கூட்டு முயற்சியின் நன்மை செல்வப்பெருக்கம் மாத்திரமல்ல. ஐக்கிய இயக்கத்தால்

தேசத்தாரின் நடத்தையும் நல்வழியில் சீர்திருத்தப் படுகிறது. தவிரவும் தேசத்திலுள்ள அநேக ஜாதியாருக்குள் ஒற்றுமையை யுண்டாக்கும்; கூட்டு முயற்சியால் நாமும் நம்முடைய அயலார்களும் அளவற்ற சுகத்தை யடையலாம்.

மிஸ்டர் அழகிரிசாமி நாயுடு அவர்கள் தம்முடைய க்ராமச்சங்கத்தின் நடவடிக்கைகளின் அனுபோகத்தைக் கொண்டு சிலவார்த்தைகள் பேசினார். இதுவரை சாவுகாரிகளின் வலையில் சிக்கிக் கொண்டிருந்த ரயத்துகளுக்கு கூட்டுத் தொழிலானது எவ்வளவோ நன்மையை யுண்டாக்கி யிருக்கிறதென்று சொன்னார்.

### கிராம சுகாதாரம்.

சில தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிராம சுகாதார விஷயங்களை நிர்வகிக்க சாங்க்ஷன் செய்வதாக மாட்சிமை பொருந்திய கவர்னர் அவர்கள் வாக்களித்திருப்பதற்காக அவருக்கு இந்த டிவிஷன் கூட்டுத் தொழிலினர்கள் மிக்கநன்றி யறிவுடையவர்களா யிருக்கிறார்கள்; மேலும் கவர்ன்மெண்டாருடைய இந்த உபகாரமான ஸ்கீமில் ஒத்துழைக்க இந்த டிவிஷனிலுள்ள எல்லாச் சங்கங்களும் சந்தோஷப்படுமென்னும் தாத்பரியத்தையுடைய ஒரு தீர்மானத்தை மதுரை ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் G. ஸோமயாஜி அய்யர் அவர்கள் ப்ரேரேபித்தார்.

### வந்தன மளித்தல்.

ரயத்துகள் விவசாய சீர்திருத்தங்களை அனுசரிப்பதற்காக சிலவிவசாய கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்து ரெஜிஸ்டர் செய்வித்ததற்காக நமது ரெஜிஸ்டிரா ரவர்களுக்கும், அஸிஸ்டண்ட் ரெஜிஸ்டிரா ரவர்களுக்கும், ஸெண்டிரல் அக்ரிகல்சரல் கமிட்டியாரின் ஜாயிண்ட் காரியதரிசி களுக்கும் இக்கான்பரென்ஸ் வந்தனமளிக்கிறது என்னும் தீர்மானத்தை வடமலைப்புறம் மிஸ்டர் அழகிரிசாமி நாயுடு அவர்கள் ப்ரேரேபித்தார்.

### டிவிடெண்டு.

பொறுப்பு வரையறுக்கப் படாத சங்கங்களின் பங்குமுதலின் பேரில் டிவிடெண்ட் போனஸ் (Bonus) அல்லது வட்டி கொடுக்கும்படி உத்தரவளிக்கப்பட வேண்டுமென்று மாகாண கவர்ன் மெண்டாரை வேண்டிக்கொள்ள வேண்டுமென்கிற தீர்மானத்தை மதுரை இராமநாதபுரம் கூட்டுறவு பாங்கியின் காரியதரிசியாகிய மிஸ்டர் K. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் ப்ரேரேபித்தார்.

### திருநெல்வேலி பருத்தி.

கொச்சி மாஜிதிவானும் செண்ட்ரல் அக்ரிகல்ச்சரல் கமிட்டியின் கௌரவகாரியதரிசியுமாகிய மிஸ்டர் N. பட்டாபிராமராவ் அவர்கள் "விவசாய ஐக்கியம்" என்பதைப்பற்றி உபந்யாசித்தார். கடப்பை அவுரியானது எப்படி சென்ற 50 வருஷங்களுக்குள் தன் நற்பெயரை இழந்துவிட்டதோ அதே மாதிரி திருநெல்வேலி பருத்தியும் ஐரோப்பாவில் அதற்குள்ள நற்பெயரை இழந்து விடும் போலிருக்கிறதென்று சொன்னார். இதை நல்ல ஸ்திதியில் வைத்திருக்க வேண்டுமானால் நல்லவிதையை சம்பாதிக்க வேண்டும். ஆனால் தற்கால ரயத்துகள் இதைப்பற்றி அதிகமாக கவனிக்கிறதில்லை; நல்ல விதைகளை சம்பாதித்துப் பயிரிட ஆரம்பித்தால் விவசாயச் சங்கங்களும் அநேக உபகாரமான வேலைகளைச் செய்யக்கூடும். விவசாயச் சங்கங்கள் சொந்தத்தில் விவசாயப் பண்ணைகளை வைத்துக் கொள்ளக் கூடாதென்றும், அப்படி பண்ணைகளை வைக்கவேண்டியது சர்க்காருடைய வேலையென்றும், சங்கங்கள் இதை மேற்கொண்டால் நஷ்டமும் அவமானமும் தான் கிடைக்குமென்றும் உஷார் செய்தார்.



### ரெஜிஸ்ட்ரா ரவர்களின் உபந்யாஸம்.

கனம் திவான் பஹதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை அவர்கள், பைலாவில் சொல்லப்பட்டுள்ள தன் பிரயத்தனம், மிதவிரயம் ஆகிய முக்கியமான இவ்விரண்டு விஷயங்களைப் பற்றி மாத்திரம் பேசப்போவதாகச் சொன்னார். தன் பிரயத்தனமென்பது கூட்டுறவின் முக்கிய ரூபமாக யிருக்கிறது. சுய உதவியால் கூட்டுறவினர்கள், மற்றவர்கள்மேல் சார்ந்திருப்பதால் அடையக் கூடியதைவிட, அதிக நன்மை பெறக் கூடும். வாஸ்தவமாக, கவர்ன்மெண்டார் சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக ரொம்பவும் உழைத்திருக்கிறார்கள். ஆனால் எவ்வெவ்விடங்களில் இந்த இயக்கம் நன்றாய் வேரூன்றி யிருக்கிறதோ அவ்விடங்களில் ஜனங்களே தங்களுடைய முயற்சியால் இம்முறையை அபிவிருத்தி செய்யவேண்டும். கூட்டுத்தொழிற் சங்கங்களுக்கு தன் பிரயத்தனம் அல்லது சுய உதவி என்பது மிகவும் அவச்யமென்பது அனுபோகத்தால் தெரிய வருகிறது.

மிதவிரய விஷயத்தை நோக்கில் இந்தியாவில் ஜனத்தொகையில் பெரும்பான்மையோரான விவசாயிகள் தான் மிதவிரயத்தை அனுஷ்டிக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். விவசாயத்தில் நல்லபலனை அடைய வேண்டுமானால், பழைய கர்நாடக முறைகளையே அனுஷ்டிப்பது சரியல்ல; நவீன முறைகளை மேற்கொள்ள வேண்டும். நவீன முறைகளைத் தெரிந்து கொள்ளவும், கையாளவும், விவசாயச் சங்கங்கள் வேண்டியிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட விவசாயச் சங்கங்களால் விவசாயிகளுக்கு ஆலோசனை சக்தியும் பேசும் சக்தியும் உண்டாகி உயர்ந்த பதவியையும் அடைவார்கள்.

கடைசியில் பிரசிடெண்டவர்கள் சில வார்த்தைகளைச் சொல்லி முடிவு செய்தபிறகு நமது ராஜா சக்ரவர்த்தி யவர்களை உத்தேசித்து சபையோர் ஆரவாரித்து கான்பரென்ஸ் கலைந்தது.

---

## விவசாயக் கூட்டுத்தொழில் கான்பரென்ஸ்

(:o:)

### பர்மா.

பர்மா விவசாய கூட்டுத்தொழில் கான்பரென்ஸின் இரண்டாவது வருஷாந்தர மீட்டிங்கு 1913-ம் வரு ஆகஸ்டு மீ 20 ந்தேதி புதன்கிழமை தினம் மாண்டலே அரண்மனையின் டர்பார்ஹாலில் மிஸ்டர் H. I. ஈல்ஸ் C. S. I. துரை அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் நடைபெற்றது. அக்கான்பரன்ஸுக்கு அநேக சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சுமார் 600 பர்மீஸ் டெலிகேட்டுகளும் விஜயம் செய்திருந்தார்கள்.

சேர்மன் செய்த ஆரம்ப பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

கனவான்களே—இவ்விஷயங்களில் மிக்க அக்கரை யெடுத்துக்கொள்ளும் மாட்சிமை தங்கிய ஸர் ஜார்ஜ் ஷா அவர்கள் இவ்விடத்தில் இன்றையதினம் இல்லாததைப்பற்றி விசனப்படுகிறோம்.

பர்மாவில் நடக்கும் கான்பரென்ஸுகளில் இது இரண்டாவது கான்பரென்ஸ். முதலாவது கான்பரென்ஸில் ஸர் ஹார்வி ஆடம்ஸன் துரை அவர்கள் கான்பரென்ஸ்களின் நோக்கத்தைப்பற்றி சொன்ன விஷயங்கள் அப்போது ஆஜராயிருந்த கனவான்களுடைய ஞாபகத்துக்கு வரலாம். இப்பிரஸ்தாப கான்பரென்ஸ் பர்மா ஐக்கிய இயக்க சரித்திரத்தில் ஒரு முன்னேற்றைத்தைத் தெரிவிக்கிறது.

பிறகு அங்குவந்திருந்த எல்லாக் கனவான்களையும் வரவேற்றுப் பின்வருமாறு பேசினர்:—கூட்டுறவானது வரவர பலத்துவிட்டது. சென்ற கான்பரென்ஸ் கூடி இரண்டு வருஷங்களுக்குள் சங்கங்களின் சங்கியை இரண்டுமடங்காக அதிகரித்துவிட்டது. ஸென்ட்ரல் பாங்கிகள் 2-லிருந்து 4-யும் நகரச் சங்கங்கள் 20-லிருந்து 40-யும் யூனியன்கள் 28-லிருந்து 67-யும், கிராமச்சங்கங்கள் 446-லிருந்து 976-யும், ஆடுமாடு இன்ஷியூரன்ஸ் சங்கங்கள் 6-லிருந்து 57-யும் அதிகரித்திருக்கின்றன. விற்பனைச் சங்கங்கள் மாத்திரம் ஒரே ஸ்திதியிலிருக்கின்றன. மேலும் விற்பனைச் சங்கங்களை வெகு ஜாக்கிரதையாய் பார்க்கவேண்டி யிருக்கிறது. கூட்டுறவானது பர்மாவைப்போலவேறெங்கும் வேரூன்றி ஸ்திரப்படவில்லை. நாம் வருவதற்கு முன்னமே பர்மாவில் கூட்டுறவு இருந்திருக்கவேண்டும். இது மேல் பர்மாவில் ஜனங்களால் வெட்டப்பட்ட குளங்களாலும் விவசாயத்திற்குரிய வாய்க்கால்களாலும் புலப்படும். இக்குளங்களும் வாய்க்கால்களும் ஜனங்களால் பொதுவில் வெட்டப்படுவதைத் தவிர அவர்களாலேயே மராமத்து முதலானதும் செய்யப்பட்டு வருகின்றன. அநேக ஜனங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு புதியகிராமத்தை ஏற்படுத்துவதையும் நாம் பார்த்திருக்கிறோம். கூட்டுத்தொழில் பர்மாவில் அபிவிருத்தி யடைந்ததற்கு மூல புருஷர்களா யிருக்கும் மிஸ்டர் இங்கிலீஷ், மிஸ்டர் மெக்கென்னு, மிஸ்டர் க்ளேய்டன், மிஸ்டர் யூ ப்யா முதலோருக்கு நாம் மிக்க கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம். ஜனங்களும் கூட்டுத்தொழிலுக்குத் தகுந்தவர்களா யிருந்தபடியால் இம்முறையில் அக்கறை யெடுத்துக்கொண்ட பிரமுகர்களுக்கு மிகச் சுலபமாயிருந்தது. இக்கூட்டுத் தொழில் முறையானது சரியான மார்க்கத்தில் செலுத்தப்பட்டால் ஜெயம்பெறுவதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரம் நான் உங்களை உஷார் செய்யவேண்டும். அதாவது இந்த இயக்கத்தை ரொம்பவும் துரிதப்படுத்தக் கூடாது. இக் கூட்டுமுறையால் விவசாய நிலைமை சீர்திருத்தப்படுவதும், விவசாயிகளை கடன்களினின்றும் விடுவிப்பதையும் தவிர ஸ்தல சுய ஆட்சிக்கு வேண்டிய விஷயங்களையும் ஜனங்களுக்கு கற்றுக்கொடுக்கலாம். நம்முடைய குடிகள் பெரிய நகரங்களுடைய ஆளுகையையும், டிஸ்ட்ரிக்ட் போர்ட்டின் நிர்வாகத்தையும் எடுத்துக்கொள்ளுமுன், தங்கள் சொந்த தேவைகளையும் தங்கள் கிராமத்தின் தேவைகளையும் கவனிக்கவேண்டும். பர்மாவிலுள்ள கிராமத்தார்கள் கூட்டுத்தொழிலில் காட்டும் ஊக்கமும் மிக்க அதிசயிக்கத்தக்கதா யிருக்கிறது. சீக்கிரத்தில் சங்கங்கள் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் மேல் விசாரணைக்கும் முடியாமல் அவ்வளவு அதிகரித்துவிடுமென்று பயப்படுகிறேன். 'அதிக அவசரம் குறைந்த வேகம்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. சென்ற சில வருஷங்களாக நம்முடைய அபிவிருத்தி அதிவேகமாக யிருக்கிறது. நாம் சோர்வடையாதபடி ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். பிறகு சேர்மன் அவர்கள் அடுத்த சிலநாட்களில் கான்பரென்ஸின் ஸப் கமிட்டியில் (Sub Committee) விவாதிக்கப்போகும் சில முக்கிய விஷயங்களைப்பற்றிப் பேசினர். அவற்றில் கால்நடை (ஆடுமாடு) இன்ஷ்யூரன்ஸ் சங்கங்களைப் பற்றிய விஷயம் மிக்க கவனிக்கத்தக்கது. நானும், கிளெய்டனும், இவான்ஸும் சேர்ந்து செய்திருக்கும் ரூல்களை இக்கான்பரென்ஸில் தீர விசாரிப்பதாக தீர்மானித்திருக்கிறோம். சென்ற கான்பரென்ஸில் ஸர் ஹார்வி ஆடம்ஸன் அவர்கள் இச்சங்கங்களின் பிரயோஜனத்தைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசியிருக்கிறார். அவைகளையே நான் திரும்பச்சொல்வது அநாவசியமென்று நினைக்கிறேன். இந்த இன்ஷ்யூரன்ஸ் சங்கங்களை ஸ்தாபிப்பதால் ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய ஆடுமாடுகளின் சுகத்தை கவனிப்பதைத் தவிர அயலானுடைய ஆடுமாடுகளின் சுகத்தைப்பற்றியும் கவனிக்கிறான். ஆடுமாடு வைத்திருக்கும் ஒரு பேர்வழியின் அலக்ஷியத்தால் அயலானுடைய ஆடுமாடுகளுக்கு நோய்வந்தால் அதனாலுண்டாகும் நஷ்டத்திற்கு சங்கத்தின் எல்லா மெம்பர்களும் பாத்தியதையாகிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் எல்லா ஆடுமாடுகளின் சுகத்தை பற்றியும் அக்கறை யெடுத்துக்கொள்வார்கள். இப்படி கால்நடைகளின் சுகத்தை நாடுவதாகிய சீர் திருத்தமே இன்ஷ்யூரன்ஸ் முறையின் முக்கியநோக்கமாகும்.



என் பிரசங்கத்தை முடிக்குமுன் ஒரு சந்தோஷ வார்த்தைசொல்ல விரும்புகிறேன். அதாவது கவர்ன்மெண்டாரால் யூபாடாக் என்பவருக்கும் யூப்யா என்பவருக்கும் அவர்கள் கூட்டுத்தொழில் விஷயத்தில் பாராட்டின அக்கறைக்காகவும் ஊழியத்திற்காகவும் அளிக்கப்பட்ட பட்டங்களை கௌரவம் பொருந்திய ஸர் ஜ்யார்ஜ் ஷா அவர்கள் அப்பொழுதே அவர்களுக்குக் கொடாமல் இக்கான்பரென்ஸில் அளிக்கவேணுமென்று ஆலசியம் செய்தது வெகு உசிதமாயிருக்கிறது. அப்படி அவர்களால் சம்பாதிக்கப்பட்ட பட்டங்களை அவர்களுக்குக் கொடுக்கும்படி என்னையே தன்பொருட்டு நியமித்திருக்கிறார்.

## பர்மா விவசாய டைரக்டரவர்களின் ப்ரசங்கம்.

இக்கான்பரென்ஸுக்கு நானாவித தொழில்களின் பிரதிநிதிகளாகிய அநேக மெம்பர்கள் விஜயஞ் செய்திருப்பதை நோக்க இக்கூட்டத்தின் விசேஷம் தானே புலப்படுகின்றது.

சென்ற வருடத்தைவிட இவ்வருஷத்தில் விவசாய விஷயத்தைப்பற்றி இக்கான்பரென்ஸில் அதிகமாக ஆலோசிக்கப்படும். தவிரவும் மாகாணத்தின் விவசாய சம்பந்தமான அமைப்புகளின் அபிவிருத்திக்குத் தகுந்தபடி விவசாய விஷயமான நடவடிக்கைகள் முக்கியமாக கருதப்படும்.

சென்ற கான்பரென்ஸில் விவசாய விஷயமாய் ஆலோஜித்தது படிப்பு விஷயம். இதுவரையில் அத்தீர்மானத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மற்றொரு விசேஷமென்னவென்றால் மாண்டலே முதலிய பண்ணைகளில் உற்பத்தி செய்த விதை நெல்லை ஜனங்கள் ஏராளமாய் வாங்கி உபயோகப்படுத்துகிறார்களென்பதுதான். விதைநெல் விஷயத்தில் ஷ்வெபோ, மாண்டலே, க்யாக்ஸி ஆகிய இம்மூன்று கூட்டுறவுச் சங்கங்களும் மிகஊக்கம் பாராட்டி வருகின்றன. விதைவிஷயத்தில் சீர்திருத்த மில்லாவிட்டால் விவசாயத்திற்கு யாதொரு முன்னேற்றமும் ஏற்படாது.

தற்காலத்தில் விவசாய இலாகாதார்கள் மாண்டலே விவசாயப் பண்ணையில் (Ngaseingi) ங்யாசீங்கி என்னும் ஒருவித நெல்லை பயிர்செய்து 9 காலன்கள் கொள்ளும் ஒரு கவர்ன்மெண்டு கூடை நிறைந்த நெல்லானது 56 பவுண்டு நிறையுள்ளது என்று நிரூபித்திருக்கிறார்கள்.

பரீக்ஷார்த்த வேலைகளில்கூட கூட்டுத்தொழில் சங்கங்கள் ரொம்பவும் ப்ரயோஜனமுள்ளவைகளாயிருக்கலாம். ஆடுமாடுகளின் உணவுக்காக ஐரோப்பாவுக்கு பர்மாபீன்ஸ்

(அவரைக்காய்) இப்போது ஏற்றுமதிசெய்யப்படுகிறதென்பது உங்களுக்கெல்லாம்தெரிந்த விஷயம். ஆனால் அந்த பீன்ஸில் கடுகளவு விஷமிருக்கிறதாகவும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். கடுகளவுள்ள விஷத்தின் காரணத்தால் ஐரோப்பாமார்க்கட்டில் இப்பர்மாபீன்ஸின்விலை மிகக்குறைந்தவிலைக்குத்தான் விற்கிறது. சென்றவருஷம் இம்பீரியல்இன்ஸ்டிடூட்(Imperial Instiute)காரர்கள், மடகாஸ்கர் அல்லது லீமாபீன்ஸ்களை மாதிரிக்குஅனுப்பினார்கள். இங்கிலாந்தில்இதன்விலைபர்மாபீன்ஸைவிட 3மடங்கு அதிகமாயிருக்கிறது. அப்படி அனுப்பபட்ட விதையை விவசாய இலாகா காரர்களாகிய நாங்கள் பரீக்ஷார்த்தமாக மாண்டலேக்கு அருகில் நடவு செய்து பார்த்தோம். ஆனால் நடவு செய்து இன்னும் ஒரு வருஷங்கூட பூர்த்தியாக வில்லை யாதலால் அதன் பலனை இன்னும் சரியாய் அறியக்கூட வில்லை. ஆகையால் இத்தருணத்தில் தனித்தனி விவசாயிகளை இதை பரீக்ஷை செய்யச் சொல்ல நமக்கு தைரியங் கொடுக்கவில்லை. பயிர் செய்து நற்செயலாய் பலனுண்டாகாவிட்டால் வீண் நஷ்டத்திற் குள்ளாவார்கள். இவ்வருஷம் 60 கூடை விதை லண்டனிலிருந்து வந்திருக்கிறது. ஐராவதி நதியோரத்திலுள்ள ஒவ்வொரு யூனியனும் தங்கள் நிலத்தில் சொற்ப பாகத்தில் இந்த பீன்ஸை நட்டு அதனால் நல்லபலன் அடையும் பக்ஷத்தில் பிறகு ஏராளமாய்ப் பயிர் செய்யலாம். இப்படிப் பரீக்ஷை செய்வதற்கு கூட்டுறவு ஏற்பாடுகளில்லா விட்டால் மிகவும் கஷ்ட சாத்தியமாகும். ஆகையால் 'ஆர்கனைஸ்' அல்லது ஒழுங்குபடுத்து என்கிற வார்த்தையே பர்மாவில் விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய தியானமாக இருக்க வேண்டும்.

பர்மாவிலுள்ள விவசாயிகள் முக்கியமாய் கவனிக்க வேண்டியதென்ன வென்றால், தற்கால புது நிலைமைகளுக்குத் தங்களை பொருந்தச்செய்து கொள்ளும் போது நஷ்டத்திற்குள்ளாகி கடனாளிகளானாலும், தங்கள் தங்கள் ஸ்தலத்திலுள்ள பெரியோர்களால் நடத்தப் பட்டு தங்களுக்குள் ஒற்றுமையாயிருந்தால், ஐக்கியத்தின் மகிமையால் கொடியசாவுகாரிகளின் வலையில் சிக்காமல் சுயேச்சையையும், பாக்கியத்தையும் மறுபடியும் அடையலாம்.

## ஐக்கியச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் A. E. இங்கிலீஷ் அவர்கள் செய்த உபந்யாசத்தின் சாராம்சம்.

சென்றவருஷம் கான்பரென்ஸ் கூடினபோது பர்மாவில் மொத்தம் 503 சங்கங்கள் தானிருந்தன, இவ்வருஷம் ஜுன்மீ 30ந் தேதியன்று இருந்த சங்கங்களின் மொத்தம் 1155. அதாவது சென்ட்ரல் பாங்கிகள் 4; நகர பாங்கிகள் 40; யூனியன்கள் 67; கிராமச் சங்கங்கள் 976; விற்பனைச் சங்கங்கள் 9; கால்நடை இன்ஷூரென்ஸ் சங்கங்கள் 57; குடிவார கூட்டுத் தொழில் சங்கங்கள் 2. இவ்விஷயம் கூட்டுத் தொழிலின் அபிவிருத்தியைக் காட்டுகிறது.

மேல்பர்மாவில் அநேக ஜில்லாக்களில் கூட்டுத்தொழில் வேரூன்றி ப்ரபலித்துவிட்டது. கீழ்ப்பர்மாவில் மாத்திரம் அவ்வளவு அதிகமாகப்பரவவில்லை. தற்காலத்தில் சங்கங்கள் மாண்டலே, போகோகூ, ஸாகூ, ஸேஸின் ஆகிய இம்மூன்றுசென்ட்ரல் பாங்கிகளிலிருந்தும் திரவிய சகாயம் பெறுகின்றன. மேல்பர்மா சென்ட்ரல் பாங்கியால் ஜுன்மீ 30ந் தேதி சங்கங்களுக்குக் கடனாக கொடுக்கப் பட்டதொகை 16½ லக்ஷம் ரூபாய்.



தற்காலம் 67 யூனியன்களிருக்கின்றன. சென்ற இரண்டு வருஷங்களிலுண்டாயிருக்கும் கூட்டுத் தொழிலபிவிருத்தி மேற்சொன்ன யூனியன்களின் முயற்சியால் தான். யூனியன்களில்லாவிட்டால் 1000 சங்கங்களையும் மேல்விசாரணை செய்வது ரிஜிஸ்ட்ராரவர்களுக்குச் சிரமம்தான்.

இப்போது தொழிலாளிகளுக்குள்ளும் சில்லரைக்கடை வியாபாரிகளுக்குள்ளும் ஒற்றுமை ஆவச்யகமாயிருக்கிறது. தொழிலாளிகள் தங்கள்வேலைகளுக்கு வேண்டிய சாமான்களை கூட்டாய் வாங்கலாம். மேலும் கூட்டுறவால் நவீன முறைகளையும், கடன் பெறும் சாதனங்களையும் கண்டு பிடிக்கலாம்.

பிறகு கால் நடை இன்ஷியூரன்ஸைப்பற்றிக் கொஞ்சம் பேசினார். கால்நடைகளை இன்ஷியூர் செய்வதால் நாமடையும் பலன்களென்ன வென்றால், இன்ஷியூர் செய்யப்பட்ட ஆடுமாடுகளை, கடன் வாங்கும்போது நல்ல உயர்ந்த ஜாமீனாகக் காட்டலாம்.

கூட்டுத் தொழிலினர்களால் விலக்கவேண்டிய மூன்று அபாயங்களைச் சொல்லுகிறேன். முதலாவது கடன் வாங்குபவர்களுக்கு, மலிவான வட்டிக்குப் பணம் கிடைப்பதால், உற்பத்திக்கு வேண்டியபணத்தைவிட அதிகமாகவாங்கவேண்டுமென்கிற ஆசை உண்டாகிறது. சுலப வட்டிக்குப் பணம் கிடைப்பது அபாயத்திற்கு இடமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் ஜனங்கள் அதில் பழகிப்போனால் அபாயம் குறைந்துவிடுகிறது. அடுத்த அபாய மென்னவென்றால் கொடுத்த கடன் தொகையை நிர்ணயித்த தவணையில் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டியிருக்க, அப்படியல்லாமல் திருப்பிக்கொடுக்க வேண்டிய தவணை வாயிதாவைத் தள்ளிக்கொடுப்பது. மூன்றாவது அபாயம் என்னவென்றால் சங்கத்தின் மெம்பர்கள், சங்கத்தின் கமிட்டியின்பேரிலும், சங்கங்கள், யூனியன் ஆபீசர்கள் பேரிலும், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் பேரிலும் ரொம்பவும் சார்ந்திருத்தல். ஐக்கிய இயக்கத்தின் முக்கிய நோக்கமென்ன வென்றால் சுயஉதவியும், தன்னைத்தானே நம்பியிருத்தலும் தான்.

சரியாக நிர்வாகம் செய்யப்படாத சங்கங்களும், ஐக்கியக் கோட்பாடுகளை சரியானபடி அறிந்துகொள்ளாத சங்கங்களும், கண்டபடி கடன்வாங்குவதும் அல்லது கொடுத்த கடன் தொகைகளை சரிவர வசூல் செய்யாமலிருக்கும் சங்கங்களும் சீக்கிரத்தில் மூடப்படுகின்றன.

சங்கத்தின் முக்கிய லக்ஷணங்களாவன :—

(1) மெம்பர்களெல்லாருக்கும் முக்கியமான ஐக்கியக் கோட்பாடுகளெல்லாம் தெரிந்திருக்கவேண்டும்.

(2) சங்கத்தின் கமிட்டி மெம்பர்கள் பைலாக்களை சந்தேகமற அறிந்துகொண்டிருக்கவேண்டும்.

(3) நல்ல மானேஜ்மெண்டு அதாவது நிர்வாக மிருக்கவேண்டும்.

(4) ஸொஸைடிக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை மெம்பர்கள் காலா காலத்தில் செலுத்த வேண்டியது. சங்கம் சென்ட்ரல் பாங்கிகளோடு ஒழுங்காய் நடவடிக்கைகள் நடத்தவேண்டும்.

(5) சங்கங்கள் தங்கள் தங்கள் ஸ்தலத்திலேயே டிபாஸிட்டுத் தொகைகளையும் சேவிங்ஸ் பாங்கிக்கு வேண்டிய தொகையையும் பெறும்படியான சக்தியை யுடையவைகளாயிருக்கவேண்டும்.

பிறகு சங்கங்களை A. B. C. D. என்று நான்கு வகுப்புகளாகப் பிரிக்கலாமென்றும், அவ்வகுப்புகளின் லக்ஷணங்களைப் பற்றியும் பேசினார்.

கடைசியாக அவர் சொன்னதாவது:—"இன்றையதினம் இவ்விடத்தில் கூட்டுறவு முறையில் மிக்க ஊக்கம் பாராட்டும் கூட்டுறவினர்களும் அப்பேர்ப்பட்டவர்களில் இக்கூட்டுமுறை ஆரம்பமுதல் அதில் ஊழியம் செய்தவர்களும் வந்திருப்பதைக் காண எனக்கு ரொம்பவும் சந்தோஷமுண்டாகிறது. இவ்விடம் விஜயம் செய்திருக்கும் கூட்டுத்தொழிலினர்களல்லாத மற்ற கனவான்களையும் வரவேற்கிறேன். இக்கான்பரென்ஸில் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டு ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தியை மேன்மேலும் பரவச் செய்வார்களென்று நான் நம்புகிறேன்."

## தீர்மானங்கள்.

முதல் மூன்று தீர்மானங்களும் சொந்த விற்பனை (Direct sale)யைப்பற்றியவை. இனிமேல் எப்படி சொந்த நெல் விற்பனை நடைபெறவேண்டுமென்றும், ரெயில்வே வாகன்கள் போதுமானவளவு கிடைக்காமலிருப்பதற்கு வேண்டிய சிகிச்சை எப்படிச் செய்கிறதென்றும், நிலத்தீர்வையை விற்பனைச் சங்கங்கள் சர்க்காருக்குச் செலுத்திவிட்டு அத்தொகையை நெல்விற்ற பணத்திலிருந்து அந்தந்த பேர்வழிகளிடமிருந்து சேரவேண்டிய பணத்தை பத்திக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த நான்கு தீர்மானங்களும் படிகளை திட்டப்படுத்துவதை (Standardisation of Measures)ப் பற்றியவை. அரிசி மில்காரர்கள் அரிசியை நிறுத்துக்கொடுக்க வேண்டுமென்றும், வியாபாரத்தில் 8 காலன் அல்லது புஷெல் (Bushel) படியை உபயோகிக்கவேண்டுமென்றும்; இதற்கு வேண்டிய சட்டங்கள் செய்யப்படவேண்டுமென்றும், ஒவ்வொரு கிராமத்தலைவனிடத்திலும் ஒருபுஷல்படி கொடுத்திருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த இரண்டு தீர்மானங்களும் விதை தெரிந்தெடுப்பதைப்பற்றினவை. முதல் தரமான விதையை பிரிவினை செய்வதற்கு கூட்டுறவுச்சங்கங்கள் பரீக்ஷார்த்த விவசாயப் பண்ணைகளிலிருந்து விதை வாங்கவேண்டுமென்றும், அப்படி வாங்கப்பட்ட விதையானது ஒவ்வொரு கூட்டுத்தொழிற் சங்கத்திலும் ஒன்று அல்லது இரண்டு விவசாயிகளால் பயிரிடப்பட்டு அதிலிருந்து உற்பத்தியாகும் விதையை மற்ற மெம்பர்களுக்கு விற்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

அடுத்த மூன்று தீர்மானங்கள் நகரச்சங்கங்களைப்பற்றியவை. ஒவ்வொரு நகரச் சங்கங்களிலும் சேவிங்ஸ் பாங்கி வைக்கப்படவேண்டுமென்றும், மெம்பர்களுக்கு ரொக்கநாணயக்கடன், கரென்ட் (Current) கணக்கு முதலிய வசதிகள் உண்டாக்க வேண்டுமென்றும், நகரச் சங்கங்களுக்குள் யூனியன்கள் ஏற்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கங்களின் உள் ஏற்பாடுகளை (Interior Organisation) ப்பற்றி 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மட்டக்குதிரைகள் வளர்த்தலைப்பற்றி அடுத்த 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மட்டக்குதிரை வளர்த்தலில் கூட்டுறவுச் சங்கங்கள் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், நல்ல ஜாதிக்குதிரைகளை வளர்ப்பவர்களுக்கு இனாம் முதலியது கொடுத்து உற்சாகப்படுத்தவேண்டுமென்றும், இன்னும் சில விஷயங்களைப்பற்றியும் ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஏழு தீர்மானங்களும் கால் நடை இன்ஷியூரன்ஸ் சம்பந்தமானவைகள். பர்மாவில் இன்ஷியூரன்ஸ் ப்ரீமியம் (Premium) நூற்றுக்கு 5 விகிதம் போதுமானதென்றும், ஒரு சென்ட்ரல் கால்நடை இன்ஷியூரன்ஸ் சங்கஸ்தாபனம் அவச்யமென்றும், கால் நடைகளை வெகு ஜாக்கிரதையாய் வளர்க்கவேண்டுமென்றும், ஆடுமாடுகளுக்கு இனாகுலேஷன், அதாவது, அம்மை குத்தவேண்டுமென்றும், அதற்காக மிருகவைத்தியத்தில் தேர்ச்சியடைந்த சிலரைக்கொண்டு அம்மை குத்துவிக்கவேண்டுமென்றும் ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## விளம்பர விகிதங்கள்.

————:(*):————

கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | |
|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. 15 0 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... ... | ,, 10 0 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... | ,, 6 0 0 | ,, ,, |

மற்றவர்களுக்கு.

| | | | |
|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. 20 0 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... ... | ,, 12 0 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... | ,, 8 0 0 | ,, ,, |

## சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

நான்காம் சம்புடம் முடிவுற்றது சந்தாதார்கள் தயை கூர்ந்து தமது பாக்கியுள்ள சந்தாவுடன் இந்த சம்புடம் ஐந்துக்குள்ள சந்தாவையும் அட்வான்ஸாய்க் கொடுத்துதவும்படிக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு
மானேஜர்,
சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி ஆபீஸ்,
33, அருணசல ஆசாரி தெரு,
திருவல்லிக்கேணி.


## ஐயா! உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இந்தியன் வலித் தைலம்.

நீங்கள், தலைவலி, முதுகுவலி, வாதம், இன்னும் ஆயிரக்கணக்கான வலிகளால் ஏன் இனிமேல் அவஸ்தைப் படவேண்டும். இவைகளை முழுவதும் சொஸ்தம் பண்ணக்கூடிய மருந்து சமீபத்திலிருக்கிறது. இண்டியன் பெயின் பாம் என்று சொல்லக்கூடிய அமிருதாஞ்சனம் மருந்து, மேற்கூறிய வியாதிகளை பறக்கடிக்கச் செய்யுமென்று நம்புங்கள். உபயோகித்த க்ஷணமே ஆரோக்கியத்தைத் தரும், வலியைத் தணித்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும். முன்னுலிருந்த அழகு, சந்தோஷம், ஞானம் இவற்றைக் கொடுக்கும். போன பால்யத்திலுள்ள ரம்மியமான முகத்தையும், புன்சிரிப்புள்ள பார்வையையும், திருப்பிக்கொடுக்கும். உபயோகமற்ற மருந்துகளையும், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத வலி மருந்துகளையும் விலக்குங்கள். வேண்டுமென்றால், அமிருதாஞ்சனத்தைத் தவிர, வேறு மார்க்கட்டில் கிடைக்கும் எவ்வித மருந்துகளையும் வாங்குகிறதில்லையென்று உறுதியாய் ஞாபகம் வைக்கவேண்டும்.




கடி லம்காரிணி

கடி, மேகப்படைகள் முதலானவைகளை சொஸ்தப்படுத்தும் உறுதியான மருந்து.

பற் பொடி.

மலிவாயும் உபயோகமுள்ளதாகவும் உள்ளது. விலை அணா 2-தான்.

இந்தியாவில் மருந்து ஸாமான்கள் விற்கும் வியாபாரிகளிடத்தில் கிடைக்கும்.

அமிர்தாஞ்சனம் டிப்போ,
109, ப்ரீர் ரோட் புது ஜெனரல் போஸ்டாபிசுக்கு எதிரில், தந்திவிலாசம் "அமிருதாஞ்சனம்" பம்பாய்.

# மதராஸ் புல்லடீன் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
MADRAS.

சம்புடம் V ] 1913-ம் ௵ டிசெம்பர்௴ 10௳ [இலக்கம் 2.

## சென்னை ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரவர்கள் ஐக்கிய மாகாணங்கள், மத்திய மாகாணங்கள், பம்பாய் இவைகளிலுள்ள கூட்டுமுறை ஸ்தாபனங்களைப் பார்வையிட்டதில் எடுத்த குறிப்புகள்.

மொரடபாட் ஜில்லா பாங்கி 20-10-1913.

---

மொரடபாட்டிலிருந்து 2 மயில் தூரத்திலுள்ள சீதாபுரியின் பஞ்சாயத்தாரைப் பார்த்தேன்—18 மெம்பர்கள், சீதாபுரியோடு சேர்ந்த சங்கங்களின் காரியதரிசியுடன் இவ்விஷயங்களைப் பற்றிப் பேசினேன்—அவர் அவைகளின் கணக்குகளை எழுதுகிறார். ஒவ்வொரு 6 மாதத்திலும் கிடைக்கக்கூடிய வட்டியில் 8ல் ஒரு பங்கை, அச்சங்கங்கள் ஜில்லா பாங்கியிற் செலுத்துகின்றன ; இந்த நிதியிலிருந்து காரியதரிசிக்கு ரூ 12 மாதச்சம்பளம் கொடுத்துவருகிறார்கள். அவர் மாதத்தில் ஒரு வாரம் சங்கங்களைச் சுற்றிப் பார்வையிட்டும், மற்ற 3 வாரங்கள் ஜில்லா பாங்கியில் வேலை செய்தும் வருகிறார் ஜில்லா பாங்கியால், 19 காரியதரிசிகளும், மொரடபாடுக்கு 19 மயில் தூரத்திலுள்ள காந்து என்னுமிடத்தில் 22 சங்கங்கள் சேர்ந்த ஸென்ட்ரல் பாங்கியால் (ஐக்கிய மாகாணங்களில் ஸ்தல யூனியன்கள் ஸெண்ட்ரல் பாங்கிகள் என்று வழங்கும்: 7 காரியதரிசிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஜில்லா பாங்கிதான் பணம் உதவி செய்யும் சங்கங்களுக்கு போனஸ் ரூ. 400 கொடுத்து வருகிறது. ஒவ்வொரு சங்கத்தின் மெம்பர் விசேஷமாய் 50 அல்லது 60 பிகாக்கள் (9 அல்லது 10 ஏகர்கள்) உடைத்தாயிருக்கிறார். அவர் ஜமீன்தாருக்கு, கிராமாந்தரமாயிருந்தால் பிகா ஒன்றுக்கு அணா 12 லிருந்து ரூ. 1 வரையிலும், பட்டணத்திற்குச் சமீபமாயிருந்தால் பிகா ஒன்றுக்கு ரூ. 5 கொடுத்து வருகிறார். நன்றாய் விளையும் காலத்துவாய் கறிகள், உருளைக்கிழங்கு முதலியவைகளைப் பயிர் செய்வதிலிருந்து ஒவ்வொரு பிகாவுக்கு ரூ. 100 பொரும்படியான பலனை எடுத்து விடுகிறார்கள். குடியிருந்து

அநுபோகித்து வரும் ரயத்தாயிருந்தால், ஜெமீன்தாருக்குச் செலுத்தும் தொகைக்கு மூன்று மடங்கு கடன் கொடுக்கப்படும். நிலங்களை அநுபோகித்து வராத ரயத்தாயிருந்தால், பிகாவுக்கு ஒரு ரூபாய் வீதம் கடன் வாங்கக்கூடும். சோபுரிச் சங்கத்தின் 13 மெம்பர்களும் ரூ. 1,354 கடன் வாங்கியிருக்கிறார்கள். மெம்பர்கள் கொடுத்துவரும் நிலவரிக்கு மூன்று மடங்கு (நிலக்கிரயத்தின் சுமார் மூன்றில் ஓர் பங்கு) அச்சங்கம் வெளியில் கடன் வாங்கலாம்.

கடன் கொடுக்கும் தவணைகள்—விதை வாங்குவதற்கு ஒரு வருஷம், மாடுகள் வாங்குவதற்கு இரண்டிலிருந்து மூன்று வருஷம், நிலங்களை அபிவிருத்திசெய்ய வாங்குவதற்கு 5 லிருந்து 10 வருஷம். நபர் ஜாமீன்பேரில்தான் கடன் கொடுத்துவருகிறது; கையொப்பம் போடக்கூடியவர்கள் சிலர்தான்; கட்டை விரல் அடையாளம் எடுக்கப்படும். வேறு நபர் ஜாமீன்கள் வாங்கப்படும். கடன் வாங்குபவரின் ஜாமீன்தார்களின் பொறுப்பு கடன் முழுவதும் தீருகிறவரையில் நிற்கும். கடன் திருப்பிக்கொடுக்கும் தவணையை மாற்றிப்போட்டாலும் அவர்களின் பொறுப்பு குறையாது. சங்கங்களிலுள்ள கடன் வாங்குபவர்களின் கணக்குப் புஸ்தகங்களில் ஆடிட்டர் கையொப்பக் குறி போடுகிறதில்லை. ஜில்லா பாங்கிதான் கவர்ன்மெண்டு ஆடிட்டரால் தணிக்கை செய்யப்படுகிறது; ஸெண்ட்ரல் பாங்கிகள் (ஸ்தல யூனியன்கள்) ஜில்லா பாங்கியின் மானேஜராலும், மற்ற உத்தியோகஸ்தர்களாலும் தணிக்கை செய்யப்படுகின்றன; ஸூபர்வைஸரும், சில சமயங்களில் ஜில்லா பாங்கியின் மானேஜர் வகையிறாக்களும் சங்கங்களை தணிக்கை செய்துவருகிறார்கள். ரெஜிஸ்ட்ராரவர்கள் ஒவ்வொரு சங்கத்திற்கும் தணிக்கை உத்திரவு அனுப்புகிறதில்லை; ஆனால் ஒவ்வொரு இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டின்பேரில், உத்திரவு அனுப்புகிறார்.

அந்த பாங்கிக்கு அருகில் ஓர் பூமியில், சங்கங்களின் மெம்பர்கள் காரியமாய் அங்கு வரும்பொழுது நேரில் பலனைப் பார்க்கும்வண்ணம், அந்த மானேஜர் பரீக்ஷார்த்தமாக விதை தெளித்திருக்கிறார். சங்கங்களின் மெம்பர்களுக்கு கொய்னாவைக் கொடுப்பதைப் பார்த்தேன்.

பணம் 5 வீத வட்டிக்கு ஏராளமாய் வந்து விழுகிறது. இடமில்லாததினால் சில டிபாசிட்டுகளை மறுக்கவேண்டியிருக்கிறது. 4½ வீத வட்டிக்குப் பணம் நிரம்ப கிடைக்கக் கூடுமென்று அந்த மானேஜர் நம்பிக்கையாயிருக்கிறார். கவர்ன்மெண்டு 5 வீத வட்டிக்கு 5 வருஷத்திற்கு காரண்டி செய்திருந்தது. இப்பொழுது காரண்டி காலம் செல்லாய்விட்டது.

## பாரில்லி ஜில்லா பாங்கி (ஐக்கிய மாகாணங்கள்) 21-10-1913.

பாரிஸ்டராகிய மிஸ்டர் கேகர், அதின் கௌரவ காரியதரிசி. அவர் ஓர் குமஸ்தாவின் உதவியைக்கொண்டு கணக்குகளை தானே வைத்துக்கொண்டிருக்கிறார். மகா உற்சாகமுள்ளவர். பாரில்லியில் ஓர் ஐக்கியமுயற்சி தச்சுப்பட்டறை இருக்கிறது. அதில் அநேக உபயோகமுள்ள சாமான்கள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு வேலைக்காரருக்கும் மரம் கொடுக்கப்படுகிறது. செய்யும் சாமானுக்குத் தகுந்த கூலி அடைகிறார்கள். பங்குகள் எடுத்திருக்கும் வேலைக்காரர்கள் தங்களுள் லாபத்தைப் பிரித்துக் கொள்ளுகிறார்கள்.

## ஸான்டிலா அர்பன் பாங்கியும், ஸான்டிலா நூல் ஸ்டோர்ஸும் 22-10-1913.

டிவிடெண்டை 10 வீதத்திற்குப் பிரித்துச்கொள்ளக் கூடாதென்று ஓர் ரூல் ஏற்பட்டிருக்கிறது. ஸெண்ட்ரல் பாங்கியால் 103 சங்கங்கள் பண உதவி செய்யப்படுகின்றன. தொழில் தனம் ரூ. 2 லக்ஷம். ஜூன் மாதம் 30-ந்தேதி வரையில் சங்கங்களுக்குக் கடன் கொடுத்தது ரூ. 1-82 லக்ஷம்.



## யூனோ டௌவுன் பாங்கி (ஐக்கிய மாகாணங்கள்) 23-10-1913

225 சங்கங்களுக்கு இது ஜில்லா பாங்கி. ஐக்கிய மாகாணங்களில் இவ்வளவு சங்கங்களுள்ள ஜில்லா வேறு ஒன்றுமில்லை.

ஜில்லா பாங்கிகளின் பங்குக்காரர்கள் சங்கங்களாகவும், தனி நபர்களாகவும் இருக்கலாம்; ஆனால் பாங்கிங் யூனியன்களில் பங்குக்காரர்கள் அவைகளைச் சேர்ந்த சங்கங்களாய்த்தானிருக்கவேண்டும். யூனியன்கள் தங்கள் மானேஜரைக் கொண்டு சங்கங்களை சோதனை செய்கின்றன; ஜில்லா பாங்கிகள் தங்கள் மானேஜர் வகையிறாக்களைக்கொண்டும் ஸ்தல இன்ஸ்பெக்டர்களைக் கொண்டும் யூனியன்களை சோதித்து வருகின்றன.

## மத்திய மாகாணங்கள்

## அகோலா ஸெண்ட்ரல் அர்பன் பாங்கி 25-10-1913.

96 சங்கங்களுக்குப் பணம் உதவுகின்றது; அதின் சேர்மன் மிஸ்டர் டாம்லி. டைரெக்டர்களில் 10 சங்கங்களின் பிரதிநிதிகளிருக்கிறார்கள். அவர்கள் ஆபிசின் காலம் ஒருவருஷம்; டைரெக்டர்கள் தேர்ந்தெடுக்கும் பொழுது, சங்கங்களுக்கு பதிலாக அவைகளின் பிரஸிடெண்டுகள் ஆஜராவார்கள். பாலபூர் தாலூக்கா அதிகச் சங்கங்களுடையது. சோதனை நிதிக்கு சங்கத்தின் மெம்பர் ஒவ்வொருவரும் ரூ. 1 வருஷந்தோறும் செலுத்துகிறார். அந்த பாங்கியானது ஸ்தலத்திலிருந்து 6 வீத வட்டிக்கும், புரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் பாங்கியிலிருந்து 7 வீத வட்டிக்கும் பணம் எடுத்து, சங்கங்களுக்கு 9 வீத வட்டிக்கு கடன் கொடுக்கின்றது. சங்கங்கள் மெம்பர்களிடம் 12 வீத வட்டி வாங்குகின்றன.

சுற்றுப் பிரயாணஞ் செய்யும் அஸிஸ்டெண்ட் ஒருவருக்கு மாதம் ரூ. 25ம் படி ரூ. 7½ம் சோதனை நிதியிலிருந்து கொடுத்து வருகின்றது.

எல்லா ஸெண்ட்ரல் பாங்கிகளும் ஆடிட்டு செலவுக்கு பணம் உதவுகின்றன. யூனியன், சட்டப்படி, ஓர் சங்கமாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது, சோதனை நிதியானது யூனியன் வசத்திலிருக்கிறது; அதிலிருந்து அஸிஸ்டெண்டுக்கும் ஆடிட்டர்களுக்கும் சம்பளம் கொடுக்கப் படுகிறது.

தொழில் தனம் வருஷக் கடைசியிலுள்ளது ரூ. 141 லக்ஷம். சங்கங்களுக்கு முந்தின வருஷத்தில் கடன் கொடுத்தது ரூ. 31 லக்ஷம், இவ்வருஷத்தில் கொடுத்தது ரூ. 1.73 லக்ஷம்.

பாங்கியின் நிதிகள், ரெஜிஸ்ட்ராரவர்கள் சம்மதப்படி அகோலாவிலுள்ள பாங்கரிடம் போடப்பட்டிருக்கின்றன.

கடைசியில் ஏற்பட்ட டிவிடெண்டு 100-க்கு 4½ வீதம், பழையகடனைத் தீர்ப்பதற்குக் கடன்வாங்கும் தொகையை 5 வருஷ தவணையிற் செலுத்தலாம்; ஆனால் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட முதல் வருஷத்தில் இப்படி கடன்கொடுக்கிறதில்லை. இனிமேல் இந்த ரூலையும் ரத்துசெய்ய யோஜனை; வெளியில்விடும் தொகையில் 100ல் 67 பங்கு விளைவை விருத்திசெய்வதற்கும், 24 பங்கு பழையகடனை தீர்ப்பதற்கும் கடன் கொடுக்கப்பட்டன.

சுத்தமான ரோஜாப்பஞ்சை யந்திரத்தில் கொடுப்பதற்கும், சாகுபடிக்கு வேண்டிய சாமான்களை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கும் பாராஸ் அர்பன் ஸொஸைடி ஸ்தாபிக்கப்பட்டது.

ரெஜிஸ்டிரார்களின் கான்பரென்ஸில் சொன்னபடியில்லாமல், நகரபாங்கியில் கடன் வாங்கும்பொழுது, சங்கத்தின் பிரசிடெண்டும், காரியதரிசியும் மாத்திரம் அங்கே போகிறதுண்டு; மற்ற மெம்பர்கள் போகிறதில்லை. மத்தியமாகாணங்கள், பொாரில், ஒரேகிராமத்தில் அல்லது 12 மெம்பர்களடங்கின 5 அல்லது 6 சங்கங்களிருப்பதுண்டு; அவைகள் பிரத்தியேக ஜாதிகளுக்கு ஏற்பட்டவைகளல்ல, அகோலாவுக்கு அருகிலுள்ள கேஜம் கிராமத்தில் இம்மாதிரி அநேகசங்கங்கள் ஒன்றுக்கொன்று சமீபமாய் வேலைசெய்வதை பார்வை யிடப்பட்டன. நகரபாங்கியானது தன்வசத்திற்போட்ட க்ஷேமநிதிக்கு 6 வீதம் வட்டி கொடுக்கிறது. இனிமேல் க்ஷேமநிதியை ஸர்க்காரிடம் கடன்கொடுத்து கவர்ன்மெண்டு பேபராக மாற்றுகிறார்கள். ஜப்பல்பூரிலுருக்கும் மாகாண ஐக்கியமுறை பாங்கிக்கு, நகரபாங்கியானது லக்ஷ ரூபாய் ரொக்கக் கடன் கொடுத்திருக்கிறது. இதுவரையில் நகரபாங்கி யார் மேலாவது வியாஜியம் பண்ணினதில்லை. விவசாய கெஜட்டு இரண்டாம்பாகத்தில் 'கூட்டுத்தொழில் வர்த்தமானி' இங்கிலீஷில் பிரசுரம் செய்யப்படுகின்றது. அதின் வருஷச்சந்தா ரூ. 1.

## பம்பாய்.

### பம்பாய் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கி 26—10—13.

இந்தபாங்கி 5 லக்ஷத்திற்கு டிபென்சர் (debenture) பாண்டுகள் வெளியில் விட்டிருக்கின்றது. வாங்கிக் கொள்ளுபவர்களுக்கு நம்பிக்கைவர, அந்த டிபன்சர்களுக்கு ரூ. 100-க்கு 4-வீதம் வட்டி கவர்ன்மெண்டார் தாங்கள் கொடுப்பதாக காரண்டி (Guarantee) செய்திருக்கிறார். இதுவரையில் 160 சங்கங்கள் பண உதவி செய்யப்பட்டன. ஒவ்வொரு கடன் விண்ணப்பமும், பரிசோதனைசெய்யும் உத்தியோகஸ்தரால் விஜாரித்து எழுதப்பட்டு ரெஜிஸ்ட்ராரவர்கள் சிபார்சுபண்ணினபிறகு, ஸென்ட்ரல் பாங்கியால் மறுபடி சோதனை செய்யப்படுகின்றது. பாங்கியின் விசாரிக்கும் உத்தியோகஸ்தருக்கு மாதச்சம்பளம் ரூ. 100-0-0. இப்படி விசாரிப்பதில் மாம்லதார்கள் (mamlatdars) உதவி செய்கிறார்கள். மாம்லதார்களை நீக்க கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுவதால், அவர்களுக்கு பதிலாக சூபர்வைஸர்கள் பாங்கியால் நியமிக்கப்படும். இந்தபாங்கி, மூன்றுமாதம் அல்லது இன்னும் குறைந்த காலத்திற்கு டிபாஸிட்டுகள் மற்ற பாங்கிகளிலிருந்து வாங்குகிறது. விசேஷமாய் அவைகள் டிபாஸிட்டை திருப்பிவாங்க நெருக்குகிறதில்லை. ஆனால் பாங்கியின் வட்டி உயர்ந்தால், தங்களுக்கும் அதிக வட்டி வேண்டுமென்று அறிவிப்பார்கள். சங்கங்கள் 7 வீதம் வட்டி கொடுக்கிறது, பாங்கியே காலத்திற்குத் தகுந்தபடி 5 லிருந்து 6 வரையில் வீதம் வட்டிக்குப் பணம் எடுக்கிறது. தனி நபர்களிடமிருந்து $9\frac{1}{2}$ வீதம் வட்டி வாங்குகிறது; சங்கங்கள் 5 வருஷத்திற்குள் கடன்களை திருப்பிக்கொடுக்க சம்மதிக்கின்றன. ஆனால் ஒழுங்காய் திருப்பிக் கொடுத்து வந்தால் காலத்தை 10 வருஷத்திற்கு மாற்றிப்போடக்கூடும்.

அந்த பாங்கி வெளி ஜனங்களிடமிருந்து டிபாஸிட்டுகள் அடையவில்லை. பொறுப்பு வரையறுத்த சங்கங்களுக்குக் கடன் கொடுக்கிறதில்லை. மானேஜர் கௌரவத்திற்கு வேலை செய்து வருகிறார். ரூ. 100 சம்பளம் வாங்கும் விசாரிக்கும் உத்தியோகஸ்தரைத் தவிர, ஓர் அக்கௌண்டென்ட் ரூ. 100 லும், 2 பியூன்கள் ரூ. 12, 13 லும் இருக்கிறார்கள்.



### மெஹ்ஸவல் ஐக்கிய நாணயச் சங்கம், பம்பாய்.

(பொறுப்புவரை யறுக்காதது) 26-10-1913.

48 மெம்பர்கள்: ஒவ்வொரு மெம்பரும் பிரவேசகட்டணம் ரூ. 1-4-0 கொடுக்கிறார்கள்; மாதம்தோறும் அணா 8 செலுத்தும்படி பர்ன, பத்து ரூபாய் டிபன்சர்களில் 2 எடுத்துக்கொள்ளவேணடும். டிபன்சர் வைத்திருப்பவர்களுக்கு 10-வருஷத்திற்குப் பிறகு பணம் திருப்பிக்கொடுக்கப்படும். இவர்களுள், இச்சங்கம் ஏற்படுவதின்முன், குடி மிகவும் அதிகமாயிருந்தது. இச்சங்க மெம்பர்கள் குடியாமலிருப்பது மிக்க அவசியமாதலால் இக்கெட்ட வழக்கம் நின்றுபோய்விட்டது. ரூ. 1-க்கு பைசை 3 வீதம் வட்டி கொடுக்கிறார்கள். இதுவரையில் ரூ. 4267, மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது; மாதத் தவணையாக ரூ. 6 லிருந்து 10 வரையில் திருப்பிக்கொடுத்துக் கொண்டுவரலாம். சங்கத்து அநேகதார்களின் டிபாஸிட்டுகள் ரூ. 31,975; அதற்கு வட்டி 9 வீதம். மெம்பர்களின் டிபாஸிட்டு ரூ. 208, அதற்கு வட்டி 12 வீதம். டிபென்சருக்காக ரூ. 32-ம், வட்டிக்காக ரூ. 57-4-0 இதுவரையில் வந்திருக்கின்றன. இச்சங்கம் ஏற்பட்டு 2 மாதமாகிறது.

### தார்தேவ் மில் வேலைக்காரர்களின் ஐக்கிய நாணயச் சங்கம்.

(பொறுப்புவரை யறுக்காதது)

21 மெம்பர்கள். பங்குகளின் விலை ரூ. 10. 10 மாதத் தவணையிற் செலுத்தலாம். பிரவேசக் கட்டணம் அணா 8, புஸ்தகங்களுக்கு அணா 4.

கடன் வெளியில் எடுப்பதாக உத்தேசமில்லை. மெம்பர்களுக்கு இதுவரையில் ரூ. 305கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ரூ. 118 வந்துவிட்டன. மெம்பர்கள்மாதத்திற்கு இரண்டுதரம் கூடுகிறார்கள்.

### தார்வார் (28-10-1913) தென் மஹாராட்டிய அர்பன் நாணயச் சங்கம்.

(பொறுப்புவரை யறுத்தது)

மூல திரவியம் ரூ. 2,10,000; ஒவ்வொரு பங்கின் விலை ரூ. 3; இதுவரையில் வசூலான பங்கு திரவியம் ரூ. 1,02,000; டிபாஸிட்டுகள் ரூ. 1,60,000; 15 விவசாயச் சங்கங்களுக்கு ரூ. 50,000 கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது; வட்டி 7 வீதம்; அவ் விவசாயச் சங்கங்கள் மெம்பர்களிடமிருந்து $9\frac{3}{8}$ வீதம் வட்டி வாங்குகின்றன.

காலம் குறித்த ஸ்தாபர டிபாஸிட்டுகளுக்கு 6 வீத வட்டி; அடிக்கடி போட்டு வாங்கும் டிபாஸிட்டுக்கு $3\frac{3}{4}$ வீத வட்டி; மெம்பர்களின் சங்கியை 1,340; கடைசியிற் கொடுத்தடிவிடெண்டு 12 வீதம்; ஸ்தாபர சொத்துக்களும் ஆள் நபரும், ஜாமீன்கள்; ஒவ்வொரு மெம்பருக்கும் ரூ. 6,000 மேல் கடன் கொடுக்கக்கூடாது. மெம்பர்களிடம் வாங்கும் வட்டி ரூ. 5000 வரையில் $12\frac{1}{2}$ வீதம் அதற்குமேல் $9\frac{3}{8}$ வீதம்.

டைரெக்டர்களின் சங்கியை 10; காரியதரிசியின் சம்பளம் ரூ. 48; குமாஸ்தாக்களின் சம்பளங்கள் ரூ. 28, 24, 10, 12; பிராவிடெண்டு பண்டுக்காக, மாதச் சம்பளங்களில் 12ல் ஒரு வீதம் பிறத்தி அதற்கு 6 வீதம் வட்டி கொடுக்கிறார்கள். வசூலாகும் வட்டியில் 100க்கு ஒன்று வீதம், இவர்களுக்கு வெகுமானம் (bonus) கொடுக்கிறார்கள்.

க்ஷேம நிதி ரூ. 19,000, சர்க்கார் பிரொ நோட்டிலிருக்கிறது; சென்ற மாதத்தில் தினசரி டிபாசிட்களின் மொத்தம் ரூ. 35,000 பாங்கியின் ரொக்கத்தை, போஸ்டா பீசு ஸேவிங்கஸ் பாங்கியிலும், ஆபீசு இரும்புப் பெட்டியிலும், சேர்மன் வீட்டிலும் வைக்கிறார்கள். ஆடிடர்களின் வெகுமானம் ரூ. 250; அடிக்கடி ஆடிட் செய்யப்படு கின்றன.

## தார்வார் நேசவுக்காரர்களின் ஐக்கிய முயற்சி யூனியன்

[பொறுப்பு வரை யறுக்காதது].

லாபம் ரூ.1,693; பங்கு திரவியம் ரூ 5,000; கவர்ன்மெண்டு கடன்கொடுத்தது ரூ. 1440; தென் மஹாராட்டிய நாணய சங்கத்திலிருந்து கடன் வாங்கினது ரூ. 2,000; க்ஷேமநிதி ரூ. 423-0-0; டிவிடெண்டு 9 வீதம் கொடுபடவேண்டியது ரூ. 453-0-0; வாங்கினவர்களுக்குக் கொடுக்கவேண்டிய போனஸ் ரூ. 806-0-0; மொத்த தொழில் முதல் ரூ. 18,000.

116 மெம்பர்கள்; விசேஷமாய் தார்வாரிலுள்ள நெசவுக்காரர்களெல்லாம் இதில் சேர்ந்திருக்கிறார்கள். 4 மெம்பர்கள் மாத்திரம் நாஞழி நெசவுதறியை உபயோகப்படுத் துகிறார்கள். நாஞழி நெசவுதறியில் மிகவும் அநுபோகமுள்ளவரின் உதவி கிடைக்காத தினால், மற்றவர்களுக்கு அதை உபயோகப்படுத்த தெரியவில்லை.

பங்குதனம் சிறுகச்சிறுக சேர்ந்து வருகின்றது. காரியதரிசி மாதம் ரூ 15. இன்ஸ்பெக்டர் ரூ. 15 சம்பளம் வாங்குகிறார்கள். இன்ஸ்பெக்டர், தார்வார், ஹப்ளி நெசவுச்சங்கங்களை தணிக்கை செய்து வருகிறார். பம்பாய் ராஜதானியில் 22 நெசவுச் சங்கங்களிருக்கின்றன.

## தார்வார், கவர்ன்மெண்டு நெசவு பள்ளிக்கூடம். (28-10-1913).

நெசவு கற்பித்துக்கொடுக்கும் மிஸ்டர் உலாங்குக்கு ரூ. 75-0-0 சம்பளம்.

பழகுங்காலம் ஒரு வருஷம்; சாதாரண நெசவு தறியினால் செய்யும் வேலையை விட இரண்டு பங்கு நாஞழி யந்திரத்தினால் செய்கிறார்கள். ஒரு ஸாரியை 7 மணியில் நெய்கிறார்கள். அந்த பள்ளிக்கூடத்தில், 3 உதவி உபாத்தியாயர்களும், 9 டிமான்ஸ்ட் ரேட்டர்களுமிருக்கிறார்கள். சுற்றுப்பிரயாணஞ்செய்யும் உபாத்தியாயரும், டிமான்ஸ்ட் ரேட்டரும், இரண்டு நெசவுதறிகளை யெடுத்துக்கொண்டு வெளியே போகிறார்கள். எவர் கற்றுக்கொள்ளவேணுமென்றாலும், கற்றுக்கொடுக்கிறார்கள். இப்பள்ளிக்கூடங்கள், ரிஜிஸ்ட்ராரவர்களின் கீழில்லை. கவர்ன்மெண்டாரின் கீழிருக்கின்றன.

---

# சென்னை மாகாண கூட்டுமுறை விவசாய யூனியன்.

(மதுரை ராமநாதபுரம் ஜில்லா பாங்கியின் காரியதரிசியான
ம-ா-ா-ஸ்ரீ K. ராமஸாமி அய்யர் B. A. B. L. அவர்கள் எழுதியது)

---

சென்னை மாகாண ஐக்கிய முயற்சி முதல் கான்பரென்ஸில் அக்கிராசனம் வகி
த்தபொழுது, ஸர் ஜான் அட்கின்ஸன் சொன்னதாவது—ஐக்கிய முறை வளர்ச்சிக்கு
முதலில் அவசியமானது அவ்விஷயத்தைப்பற்றி ஜனங்களுக்கு போதனை செய்தல்.
இரண்டாவது அவசியம், ஸ்தாபனஞ் செய்தல்; ஆனால் இதில் கஷ்டம் அதிகமாயிருக்
கிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத கனவான்கள் போதனை விஷயங்களுக்கு
உதவி செய்கிறதுபோல், சங்க ஸ்தாபனங்கள் அவர்களால் செய்யக்கூடும் தன்மை
யைப்பற்றி யோஜிக்கவேண்டும். சர்க்கார் உதவியன்னியில், சங்கங்களை தாங்களே
உண்டாக்கி தகுந்தபடி நடத்திக்கொள்ள காலம் சமீபிக்கவில்லையா? இது ஜனங்கள்
காரியமாதலால், தகுந்த பந்தவஸ்துடன் அவர்களிடமே இதை ஒப்புவிக்கவேண்டும்.

இத்தேசத்திலுள்ள ஐக்கிய முயற்சிக்காரர்களின் நோக்கங்கள் இம்மாதிரியேயிருக்
கின்றன. இந்தியா கவர்ன்மெண்டாரும், ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தி இன்ன
வழியில்தான் செல்லவேண்டியதென குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்முறையில் கவர்ன்
மெண்டார் முழுவதும் தலையிடுவதை ஆக்ஷேபிக்கிறார்கள். ஸர்க்கார் உத்தியோகஸ்த
ரல்லாத கனவான்கள் ஏராளமாய் இதன் உதவிக்கு வருவார்களென்றும், பொது ஜனங்
கள் கூட்டுமுறையின் லக்ஷணங்களை நன்றாய் அறியவேண்டுமென்றும் எதிர்பார்க்கப்
படுகின்றது.

இப்பொழுது இந்த ராஜதானியில் கூட்டுமுறையானது ஸர்க்கார் வசத்திலிருந்து
கொண்டுவருகிறது. கூட்டுமுயற்சிக்காரர்கள் தங்கள்மேல் இப்பொறுப்பு ஒரு காலம்
வந்துவிழக்கூடுமென்று யோஜித்து, எல்லோரும் சேர்ந்து இவ்விஷயமாய் ஓர் மத்திய
ஸ்தாபனம் ஏற்படுத்த விருப்பம் கொண்டார்கள். சென்னையில் நடந்த முதல் மாகாண
ஐக்கியமுயற்சி கான்பரென்ஸில், இம்மாதிரி ஸ்தாபனம் ஏற்படவேண்டியது அவசிய
மென்று தீர்மானம் செய்யப்பட்டது. அத்தீர்மானத்தை முடிவுக்குக் கொண்டுவர
ஓர் கம்மிட்டியார் தங்களை ஓர் ஸ்தாபனச் சங்கமாக ஏற்படுத்திக்கொண்டு, 1912-ளு
த்திய 2-வது சட்டப்படி அந்த யூனியனை ரெஜிஸ்ட்ராவர்களுக்கு ரெஜிஸ்டர்செய்ய
லாம். ஸர்க்கார்விண்ணப்பஞ் செய்தார்கள். யூனியனின் நோக்கங்களை இப்பொழுது சொ
ல்வது அவசியம். உத்தியோகஸ்தர்களல்லாத கனவான்கள் வேண்டியபேர்கள் இவ்
யூனியன் நோக்கங்களைப் பூர்த்திசெய்ய வருவார்களா என்றும் அதற்கு வேண்டிய பண
உதவி கிடைக்குமாவென்றும் அநேகருக்கு ஸந்தேகமுண்டு. ரெஜிஸ்ட்ராரவர்களும், அவ
ருடைய கீழ் உத்தியோகஸ்தர்களும் இப்பொழுது செய்துவரும் வேலைகளாவன :—

(1) ஜனங்கள் கூட்டுமுறை யியக்கத்தில் பிரீதியடைய போதித்தல்.
(2) சங்கங்களை ஸ்தாபித்தல்.
(3) சங்கங்களை மேல் விசாரணை செய்தல்.
(4) சங்கங்களின் கணக்குகளை தணிக்கைசெய்தல்.

இம்முறை ஆரம்பத்தில் இவர்கள் ஜனங்களுக்கு போதித்ததுபோல், இப்பொழுதில்லை. இந்த ராஜதானியில் கூட்டுத்தொழில் முறையைப்பற்றி இன்னும் அறியாத விசாலமான பாகங்களிருக்கின்றன. இப்பொழுது ஏற்படுத்தும் யூனியனின் நோக்கங்களாவன:—(1) ராஜதானியில் எல்லாப் பக்கங்களிலும் கிராமவாசிகளைக் கூட்டி, அவர்களுக்கு கூட்டுமுறை இயக்கத்தைப்பற்றி பிரசங்கம் செய்ய மெம்பர்களை அனுப்புதல் (2) ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களின் மெம்பர்களுக்கு, கான்பரென்சு கூட்டுவதில் உதவி செய்தல். (3) கூட்டுத்தொழில் வர்த்தமானியை பிரசுரம் செய்தல். இந்த வர்த்தமானி எவர்களுக்காக உத்தேசிக்கப்படுகிறதோ அவர்களுடன் இவ்வூனியனின் ஆபீசர்கள் அடிக்கடி கலந்துகொள்ள ஸந்தர்ப்பங்களிருப்பதால், வர்த்தமானியை யாவரும் ஆவலுடன் விரும்பத்தக்கதாகச் செய்ய உத்தேசிக்கிறோம்.

அடுத்த வேலை, சங்கங்களை புதிதாய் ஸ்தாபித்தல். இப்பொழுது ரெஜிஸ்ட்ராரவர்கள் இந்த வேலையை உத்தியோகஸ்தரல்லாத கனவான்களிடம் கொடுத்துக்கொண்டு வருகிறார். இப்பேர்ப்பட்ட கனவான்கள் இந்த ராஜதானியில் 5 அல்லது 6 பேர்களுக்கு மேலில்லை. இவ்வேலை செய்பவர்களின் யோக்கிதைகள் எப்படி இருக்கவேண்டுமென்று குறிக்கப்படவில்லை. யூனியன் இவ்வேலையை எடுத்துக்கொண்டால், தன் உத்தியோகஸ்தர்களிடம் இதைக் கொடுப்பதற்குமுன், அவர்கள் உடைத்தாயிருக்க வேண்டிய யோக்கிதையை நிர்ணயிக்கும். வேண்டிய பழக்கப்பட்ட சங்க ஸ்தாபனஞ் செய்பவர்களை இந்த யூனியன் எப்பொழுதும் உடைத்தாயிருக்குமென்று நம்புகிறோம். சங்கங்களின் மேல் விசாரணை செய்தலை நகர பாங்கிகளும், ஸ்தல யூனியன்களும் எடுத்துக்கொள்ளும் காலம் வருகிறவரையில், ரிஜிஸ்டிராரவர்களின்கீழ் இருந்துகொண்டு வரும். யூனியனால் அவ்வேலையை எடுத்துக்கொள்ளப்படுமென்று தோன்றவில்லை. அதைப்பற்றிச் சொல்லும் பைலாக்கள் ஒன்றுமில்லை. கவர்ன்மெண்டாரால் தணிக்கை எப்பொழுதும் செய்யப்பட்டு வருமென்று நம்பப்படுகிறது.

யூனியன்களின் மேற்கூறிய வேலைகளைச் செய்யத்தகுந்த ஜனங்கள் வருவார்களா? என்பது கேட்கப்படும். சென்னையிலும், மற்ற இடங்களிலும், கம்மிட்டியாரால் கூட்டப்பட்ட மீட்டிங்குகளில், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத சுயநலம்பாராத கனவான்கள் ஏராளமாய் விஜயம் செய்ததே இவ்யூனியன் வேலைகளில் மிக்க ஆவலுடன் கூட்டமாய்வந்து உதவிசெய்வார்களென்பதற்கு அறிகுறி.

இதற்கு அடுத்த தடையாய்ச் சொல்லக்கூடியது பணவிஷயம். முதலில் பங்குகளினாலும், வேறு பண உதவியாலும், இதன் மூலதனத்தை உற்பத்து செய்யலாமென்று யோஜனை செய்தோம். ஆனால் இதில் ஊதிய மில்லாததினால், ஒருவரும் பங்குகள் வாங்காமலிருக்கலாம். இந்த ஸ்தாபனத்தில் பொறுப்பு அனைவருக்கு மிருப்பதற்கு, மூலதனம் பங்குகளாயிருப்பது நலம். சங்கங்களின் நன்மைக்கு இது மிகவும் இன்றியமையாததாயிருப்பதால், அவைகள் இதன் பங்குகளை எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம். எல்லாதேசங்களிலும், இம்மாதிரி யூனியன்களைச்சேர்ந்த சங்கங்களின் உதவியினால்தான், அவ்யூனியன்களின் மூலதனம் ஏற்படுகின்றது. இவ்வுதவியாலும், கவர்ன்மெண்டார் உதவும் கொடையினாலும், இவ்யூனியனின் நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படுமென்று நம்புகிறோம்.

---

# கிராம வாசிகளும் கோ-ஆப்ரேஷனும்.*

(கோயமுத்தூர் ஜில்லா பாங்கி காரியதரிசியாகிய
ம-ா-ா-ஸ்ரீ, கிருஷ்ணசாமி அய்யர் M. A. L. T. அவர்கள் எழுதியது)

திருப்பூரில் சில வருஷகாலமாக ஆடுமாடுகள், குதிரைகள் முதலியவற்றில் நல்ல தினுசுகளாகப் பொறுக்கிச் சந்தைகூட்டி வருவதில், இந்தக்காரியம் என்னத்திற்காக நடந்து வருகிறதென்பது இப்பொழுது அனேகமாய் இங்குவந்திருப்பவரனைவருக்கும் தெரியும். தெரியாத சிலருக்கு இக்காரியம் நிர்வகித்து வரும் விவசாய சங்கத்தார் விளக்கிக் காட்டுகிறார்கள். ஆகலால் அதைப்பற்றி நான் பேசப்புகவில்லை

ஆனால் இப்படிக் கூடும் சந்தையில் பல திக்குகளிலிருந்தும் கிராமவாசிகளாகிய மகா ஜனங்கள் நூற்றுக் கணக்காக வந்திருப்பதாலும், அவர்களுடைய க்ஷேமத்திற்குக் கோ-ஆபரேஷன் என்னும் பரஸ்பர சகாய முறையை யனுசரித்து உழைப்பது இனி வெகு அவசியமாயிருப்பதாலும், அவ்விஷயத்தைக் குறித்து ஏதோ தெரிந்ததை இச்சந்தர்ப்பத்தில் பேசும்படி அந்த டிபார்ட்மெண்டு அதிபதிகளிலொருவராகிய திருச்சி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரவர்கள் ஆக்ஞாபித்தபடியாலும், நான் உங்கள் முன்னிலையில் இரண்டொரு அம்சங்களைப்பற்றிப் பேச உத்தேசிக்கிறேன்.

நமது கிராமங்களையும் அவற்றிலுள்ள மகா ஜனங்களையும் கவனிப்பவருக்குச் சில லக்ஷணங்கள் பொதுவாயிருப்பது யாருக்கும் எளிதில் விளங்கும். அனேகமாய்க் கிராமவாசிகளுக்குக் கிருஷி என்றால், பூமி சாகுபடி செய்வதே முக்கிய தொழிலாகும். அதைத் தள்ளிப்பார்த்தால், சில விடங்களில் ஆடுமாடு முதலிய பண்டங்களைப் பெருக்கி விற்று ஜீவனம் நடக்கிறது. கைத்தொழில்களென்பவை விசேஷமாகக் காணுவதில்லை; வியாபாரமும் சில்லரையாகத்தான் நடப்பது.

இத்தொழில் வகைகளில் ஒவ்வொன்றையும் சற்று தீர விசாரித்தால், அவற்றில் பல தோஷங்கள் காணப்படுகின்றன. அவைகளைப் பரிகரிக்கவேண்டிய நமது நாட்டில் சர்க்கார் தரபில் பல வருஷங்களாகப் பிரயத்தனம் நடந்துவருகிறது. என்றாலும், மகாஜனங்களுக்குள் கல்வி யில்லாததாலும், விவேகிகள் முன்னுக்கு வந்து காரியம் நடத்த முயலாததாலும் நாளதுவரையில் அவைகள் பரிகாரமாகவில்லையென்றே சொல்லவேண்டும்.

முதலாவது, கிருஷியைப்பற்றி ஆலோசிப்போம். எந்தக் கிராமத்தைப் பார்த்தாலும், பூமியை வேண்டியபடி,' வழிமுட்டு போட்டு சாகுபடி செய்பவர் பத்திலொருபங்கு காணுவது அபூர்வம். தெரியாத்தனத்தினால் இப்படியிருப்பவர் வெகு சொற்ப பெயரேயாம். பெரும்பாலர்க்கு இல்லாக் கொடுமையே காரணமாம். காலாவதியில் உழுது, நல்ல விதையை விதைத்து, வேண்டிய தண்ணீர் கட்டி வந்தால் விளைச்சலுக்குக் குறைவேது? வானம்பார்த்த பூமிகளைப்பற்றி நாம்பேசவேண்

* கோயமுத்தூர் விவசாய சங்கத்தாரின் ஆதரவில் 1913-ம் வருஷம் மே மாதம் 28-ந்தேதி திருப்பூரில் நடைபெற்ற கால்நடைக் (ஆடுமாடு, குதிரைகள்) காட்சியில் வாசித்த வியாசம்.

டியதில்லை. நஞ்சைகள், தோட்டங்கள் இவைகளை மட்டுமே கவனிப்போம். இவைகள் நமக்குக் கொடுக்கக்கூடிய பலனைப் பூராவாக நாம் அனுபவிக்கிறோமா? இல்லையென்றால் அந்த தோஷந்தானே. அதைப்பரிகரிக்க உபாயந்தேட வேண்டியது அவசியமாயிற்றே. ஏன் இதுவரையில் பரிகாரம் ஏற்படவில்லை? ஒன்று மட்டுமல்ல, கிருஷிகர் பூமியைப் பிடித்துச் சாகுபடி செய்வதனால், விளைச்சல் கைக்கெட்டும் வரை அவர்களுக்குச் சாப்பாட்டிற்கு வகை வேண்டும், பூமிக்கு அவர்கள் சொந்தக்காரரானால், அதற்கு வாயிதாப் பணம் வேண்டும். குஞ்சு குழந்தைகளுக்கு ஏதாகிலும் சுபசோபனங்களும் நடக்கவேண்டும்.

இப்படி பல வகையிலும் செலவுமட்டும் நியதியாக ஏற்பட்டிருக்க, அதற்கு வரும்படி மட்டும் நியதியாக நம்மில் அனேகமாய் 100ல் 95 பெயருக்கு ஏற்படுகிறதேயில்லை. என்றாலும் செலவாகியே தீரவேண்டி வருவதில், கிருஷிகருள் பெரும்பாலார் கடனில் முழுகியோ, அரைக்கஞ்சி குடித்தோ வருகிறார்கள். இந்த ரகசியம் நமது சர்க்காருக்கு வெகு காலமாய்த் தெரியும். ஆகவே இதற்குப் பரிகாரம் அவர்கள் தேடி வெகுகாலமாகப் பல உபாயங்கள் நடத்திவந்திருக்கின்றனர். இரண்டொன்று உங்களுக்கு நன்றாய்த் தெரியும். விவசாயம் விர்த்தியாகவேண்டிச் சர்க்கார் தரபில் தாலூக்காவிலிருந்து கடன் கொடுப்பது பழைய சங்கதி. ஆனால் அதைப்பற்றி அதிகமாகச் சொல்லிக்கொள்ளுவதற்கில்லை. ஜனங்கள் அதிகமாக அந்த வகையிலும் பிரயத்தனம் செய்வதுமில்லை. செய்தவர்கள் நல்ல பலனடைந்ததாகவுமில்லை. சர்க்கார் தரபை யொழித்துப் பார்த்தால் நம்மவர்களுடைய லேவாதேவி யிருக்கிறது. ஆனால் அந்த வகையிலும் ஏழைக்குடியானவர் முன்னுக்கு வருவதற்கில்லை. ஏனெனில் பணமானது வெகுகாலமாகப் "பள்ளமுள்ள விடத்தில் தண்ணீர் சேரும்," என்னும் நியாயத்தை அனுசரித்துப் பெருகிவருகிறது.

ஆகவே நம்மவருடைய லேவாதேவியினால் பசையுள்ளவருக்கு ஏதாகிலும் நன்மை கிடைப்பதேயொழிய வேறு பெயருக்கில்லை. ஒரேர்ப் பண்ணையம் வைக்க ஒருவன் வேண்டினாலும், விதை வகைக்கு ஏதாகிலும் ரூ. 50-க்குள் வேண்டிவந்தாலும், இவ்வகைக் குடியானவனுக்குப் பணம் விசேஷமாகக் கிட்டுவதில்லை. கிட்டினாலும் 100-க்கு 18 அல்லது, 33 வட்டி கொடுக்கவேண்டியிருக்கும் இதிலும் மோசமான பேர்வழிகளாகிய பறையர், சக்கிலியர் முதலியோருக்கோ கந்துக்கடையேதான் கதிமோக்ஷம். பள்ளப்பட்டி லப்பைகள் முதலிய கிராதகர்கள்தான்! இவர்களுக்கு ரூ. 5 அல்லது 10 கொடுத்து அவர்களுடைய உயிரைப்பிழிந்து வருகிறார்கள். தவிர சொத்தின்பேரில் பணம் கொடுப்பவர்கள், அது நல்ல முதலாகவிருந்தால், அதன்பேரில் ஒரு திருஷ்டிவைத்துக் கொண்டேதான் பணம் கொடுப்பது.

நம்மவருடைய லேவாதேவியை யொழித்துப் பேசுமிடத்து, நாட்டுக்கோட்டையார், ஜாயிண்டு ஸ்டாக்கு நிதிகளென்று இருவகை யோருண்டு அவர்களில் நாட்டுக் கோட்டைச் செட்டிமாரிடத்தில் "மாடு அடித்துச் செருப்புதானம் செய்வதாகிய" பெருந்தோஷம் வெகுநாளாகக் காணுவதாம். பாங்குகளோ, ரூல்படி கண்டிப்பாய் நடந்துவருவதால், நம்மவர்களாகிய ஏழைகள் இம்மூலமாய் முன்னுக்கு வருவது வெகு அபூர்வமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இப்படி யெல்லாமிருப்பதில் குடித்தனக்காரருக்குப் பிழைக்கும் வழி மெத்தவும் சிரமம் வாலதப்படுவது பிரத்தியக்ஷம். இதைப் பரிகரிக்கவேண்டி சர்க்கார் வெகு தூரம் முயன்று வருவதாக மேலே குறிப்பிட்டோமல்லவா? ஆனால் இதுவரையில் அது



சரியான பலன் கொடுக்கவில்லை யென்றும் நமக்கு விளங்கியிருப்பதில், ஏனிப்படியாயிற்றென்பதை நாம் இப்பொழுதறியவேண்டிய ரகசியம். இதை யறிந்தால், தக்க பரிகாரமின்னதென்றும் நமக்கு விளங்கும்.

இந்த ரகசியமென்னவென்றால், மேற்கூறிய பரிகாரங்களிலெல்லாம் கக்ஷிபிரண்டுபட்டதே அவைபலியாமற் போனதற்குக் காரணமாம். பணம் கொடுப்பவனொருவன், வாங்குகிறவனொருவனானால் கொடுப்பவனுக்கு வேகிறவீட்டில் பிடுங்கினது லாபமாகவட்டியென்றும், தரகென்றும், மகிமையென்றும், தீபாவளியென்றும், தெண்டமென்றும், துரோகமென்றும் எவ்வகையாலும் வரண்ட மரத்திலும் நார் உரித்துக் கொள்ளை. கொள்ளை பார்ப்பது சகஜம். வாங்குபவரிலும் பலர் வாங்கியதைக் கொடாமல் ஏமாற்றப்பார்ப்பது மனித சுபாவம். இப்படிக் கக்ஷி பிரண்டாவதில் பலன் நல்லதாவதில்லை. சர்க்கார் பணம் வாங்கப்போனாலும் இவ்வகைத் தோஷங்கள் இருவகையிலும் காணுவதால், கிரகஸ்தராகிய மகா ஜனங்கள் அதை யபேக்ஷிப்பதில்லை.

சரி, இதெல்லாம் இப்படித்தானென்று வைத்துக்கொள்வோம். பரிகாரமென்ன? கக்ஷி பிரண்டுபடாமலெப்படிக் காரியமாகும்? என்று நீங்கள் கேட்கலாம்.

இந்தக் கக்ஷி விவகாரங்களை யொழிக்கவேண்டினால், அதற்குக்கோ ஆபரேஷன் என்னும் ஒரு முறையொழிய வேறுவழியில்லை. ஆகவே, கோ ஆபரேஷன் என்பது இன்னதென்று நாமறிந்து அனுஷ்டிப்பது இப்பொழுது அவசரமாக வேண்டிய காரியம்.

மேலே நாம் கிருஷிகருடைய குறைகளைக் கொஞ்சம் விவரித்ததில், அக்குறைகளுக்கெல்லாம் மூலகாரணமாகப் பணமில்லாத குறையையே பெரிதாக்கினோம். வாஸ்தவத்தில் அதுதான் மகத்தான குறைவு. ஆதலால் அவ்விஷயத்தில கோஆப்ரேஷன் என்பது சகாயம் செய்வதாக நமக்குத் தெரிந்தால், மற்ற விஷயங்களிலும் கோ ஆபரேஷன் மூலமாக நாம் நன்மை யடையலாமென்பது நிச்சயம். ஆகவே, இம்முறையில் எங்கேயாவது லேவாதேவி நடந்துவந்தால், அங்குள்ள கிரகஸ்தரை விசாரித்துத் தெரிவது நலம். ஆயிரமுறை உபதேசிப்பதைவிட ஒரு முறை நடத்திக் காட்டுவது திறமல்லவா?

தெய்வாதீனம், திருப்பூருக்கருகில் இரண்டோரிடங்களில் இம்மாதிரி லேவாதேவி ஏற்கனவே நடந்துவருகிறது. அதை நடத்தும் தருமகர்த்தாக்களில் யாராகிலும் இந்தச் சபையிலிருந்தால், அவர்கள் முன்னுக்கு வந்து தங்கள் அனுபவத்தைச் சொல்லவேண்டும். மண்ணரை, வேலம்பாளையம், சோமனூர், ஆலூர், இவைகளில் இம்மாதிரி லேவாதேவி யிரண்டொரு வருஷமாக நடந்துவருகிறது. பெருந்துறை பிர்க்காவில் விசாரித்தால் சுமார் 30 கிராமங்களுக் கதிகமாகவே இம்மாதிரி வியாபாரம் நடத்தி வருகின்றனர். இவைகள் நடந்துவருவதில் யாருக்கென்ன விசேஷ நன்மையென்று நீங்கள் கேட்கலாம். அது கீழே தெளிவாகும். இவைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ-லி ஸோ என்ற சங்கேதப் பெயரும் நெம்பரும் கொடுத்திருக்கிறது. கிராமப் பாங்கென்பது சாமான்னியப் பெயர்.

நாளது வரையில் இந்தப்பாங்குகள் அனேகமாயெல்லாம் செழித்தே வந்திருக்கின்றன. சில விடங்களில் வெகு நன்றாய் வேரூன்றி வந்திருக்கின்றன. ஜனங்களுக்குக் கல்வியும் விவேகமும் அதிகரிக்கு மளவிற்கு எந்தக்கிராமத்திலும் இம்மாதிரிப்பாங்கு முதல்தரமாக நடந்து வரலாமென்பதில் ஆக்ஷேபமில்லை. குறைவுகள் கண்டால், அது

ஜனங்களுடைய மூடத்தனத்தினாலும், மூரட்டுத்தனத்தினாலும் உண்டாவதொழிய, வழியைத் தப்பு வழியென்பதற்கில்லை.

ஒவ்வொரு பாங்கும் ஒரு கிராமத்திற்கென்றோ, அல்லது அடுத்துள்ள பல மஜராக்களுக்கென்றோ ஏற்பட்டிருக்கிறது. சுமார் 40 மெம்பர்கள் முதல் 300 மெம்பர்கள் வரை காணலாகும். இந்த மெம்பர்களெல்லோரும் சேர்ந்து சில விசேஷ விதிகளுக்குக் கட்டுப்பட்டு இந்தியா ஆக்ட்டு 12-ம் வருஷத்திய 2-வதின்படி ரிஜிஸ்தர் செய்துகொண்டு, பங்குப்பணம் முதலிய உள்ளூர்ப்பணத்தையும், வெளியில் கோயமுத்தூர் ஸகரபாங்கு போன்ற இடங்களிலிருந்து கடனாக வாங்கும் பணத்தையும் சேர்த்துத் தங்களுக்குள் ஆவசியகம் போலக் கடன் கொடுத்து வாங்கிவருகிறார்கள். பாங்கியின் லாபநஷ்டங்கள் மெம்பர்களனைவரையும் பொறுத்தது. வெளியிலிருந்து வாங்கும் பணத்திற்கு மெம்பர்களுடைய சர்வசொத்தும் ஜாமீனாக விருப்பதால் கடனும் சுலபமாயகப்படுகிறது. வாங்குபவரும் ஜாக்கிரதையாகவே வாங்குகிறார்கள். இதைச் சமயம்போல வாங்கி வேண்டியவர்களுக்குக் கொடுக்கப் பஞ்சாயத்தார் ஏற்பட்டிருக்கிறார்கள். வாங்கும்போதும் பட்டுவாடா செய்யும்போதும் வட்டி $7\frac{1}{2}$ அல்லது குறைந்த விதமென்றும், சராசரி 9 அல்லது குறைந்த விதமென்றும் முறையே நிபந்தனைகளை வெகு கண்டிப்பாய் ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்தார் மனம் போனபடி நடந்தால் அதனால் வரும் லாப நஷ்டங்களுக்கு அவர்களும் சர்வ சொத்துடன் பாத்தியப்படவேண்டி வருவதால், உஷாராகவே நடக்கவேண்டியிருக்கிறது. இவ்வளவு ஏற்பந்தத்திலும் தப்புவழியில் போகிறவர்களை தட்டியெழுப்பிச் சவுக்கடி வேண்டுமானால் கொடுப்பதற்குக் கனம் ரிஜிஸ்ட்ராரவர்களும் அவர்களுடைய சிப்பந்தியும் இடைவிடாமல் உழைத்து வருகிறார்கள்.

இப்படி நடப்பதினால் இந்த லேவாதேவியில் மேல் நாம் குறிப்பிட்ட பெரிய தோஷத்திற்கு இடமில்லையென்பது இப்பொழுது விளங்கும். அதாவது, கக்ஷி பிரண்டுபடுவதற்கு இம்மாதிரிபாங்குகளில் சிறிதும் இடமில்லை. பஞ்சாயத்தார் அக்கிரமமாக வட்டி வகைரா ஏற்படுத்தவோ, வசூலிக்கவோ கூடாதென்று நிர்ப்பந்தமிருப்பதால் சாமான்னியமாய் அவர்கள் அதை மறைத்து நடப்பதற்கில்லை. அவர்கள் அதிக வட்டி வாங்கி யாருக்கும் உபயோகமாவதில்லை. ஏனென்றால், வருஷ முடிவில், கணக்குகளைப் பரிசோதித்து லாபம் இவ்வளவென்று கண்டபின், அந்தலாபத்தொகை பாங்கியின் க்ஷேமநிதியாகிறதேயல்லது, பாங்கியைச்சேர்ந்த யாருக்கும் லாபமாகப் பகிர்ந்து கொடுக்கத்தக்கதன்று.

திருப்பூர்ப்பக்கத்தில் அதிகமாகப் பாங்குகள் பிரபலிக்காததால், இங்கு வந்திருக்கும் குடியானவராகிய மகா ஜனங்களுக்குள் சிலருக்கு விஷயம் தெரிந்திருந்தபோதிலும், பெரும்பாலருக்குத் தெரிந்திராதென்றெண்ணியும், பாங்குகள் மட்டுமே நாளதுவரை கோ ஆபரேஷன் முறையில் நடந்துவருவதால், அவைகளைச் சற்று விவரித்துப் பேச நேரிட்டது. இது அனாவசியமென்று யாருக்காகிலும் கண்டால், அவர்கள் இந்த நியாயத்தைக் கவனித்து மன்னிப்பாராக.

இப்படிப்பட்ட பாங்குகள் ஒவ்வொரு கிராமத்திலுமேற்பட்டு, அதிலுள்ள குடியானவர், கூலிக்காரர், சக்கிலியர், பறையர் முதலிய சமஸ்தமான ஜனங்களும் இதில் மெம்பராகி, வெளியிலிருந்து முதன் முதல் கொஞ்சகாலம் பணம் வாங்கவேண்டியிருந்தாலும் காலக்கிரமத்தில் உள்ளூர்ப் பணமே அதிகரித்து, ஏழைகளுக்கு வேண்டியபோதெல்லாம் அல்ப வட்டியில் பணம் கிட்டவேண்டுமென்பதும், அதனால் அவ்வேழைகள் தத்தம் தொழில்களில் அப்பணத்தை யுபயோகித்து முன்னுக்குவந்து, தாங்களும் சிறிது சிறிதாகச் சேர்த்துவைத்து, தரித்திரம் நீங்க வகைபார்க்க வேண்டுமென்பதுமே சர்க்காருடைய நோக்கமாம். அதற்கென்றே மேற்கூறிய ஆக்ட்டில், இம்மாதிரிப் பாங்குகளில் மெம்பர்களாயிருப்பவருக்கு ஸ்டாம்பு வகைரா செலவு வேண்டாமென்றும், ரிஜிஸ்தர் வகைரா செலவு தேவையில்லையென்றும் விதித்திருக்கிறார்கள். பாங்குகளைக் கணக்குவழக்கு வகையில் பரிசோதிக்க உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். இன்னும் எவ்வகையாலும் சகாயம் செய்யத் தயாராயிருக்கிறார்கள்.



இவ்வாறு நமது நாடெங்கும் கோ ஆபரேடிவ் பாங்குகள் பரவினால், மேற்குறித்த தோஷங்கள் எல்லாம் ஒவ்வொன்றாய்க் குறைவது நிச்சயம். ஏனெனில், இந்த பாங்குகளில் கக்ஷிபிரண்டில்லையென்பது பிரத்தியக்ஷம். ஆதலால் பகற்கொள்ளை யடிப்பவருமில்லை, அதற்குச் சௌகரியமுமில்லை. நல்ல முதல் வைத்திருப்பவன் யோக்கியனாயிருந்தால் அந்த முதல் அவனுக்கும், அவன் பரம்பரைக்கும் சாசுவதமாக உதவலாம். பறையர் சக்கிலியர் முதலிய அப்பாவிகள் பன்னப்பட்டி லப்பைகளுக்காக பாடுபட்டு பிராணனை விடவேண்டியதில்லை. நாட்டுக்கோட்டைப் பிரபுக்கள் மாடடிக்க வேண்டியதுமில்லை, செருப்பு தானஞ் செய்யவேண்டியதுமில்லை. பள்ளமுள்ள விடத்திலேயே தண்ணீர் போய்த் தங்கவேண்டியதுமில்லை. பாங்கின் முதலாளிகளும், பாங்கில் வியாபாரஞ் செய்பவரும் ஒரே ஜாதியாராதலால் ஊர் இரண்டுபடுவதற்கு நியாயமேயில்லை.

ஆதலால் கிருஷிகராகிய கனவான்கள் இதையெல்லாம் யோசித்து, அவரவர்களில் சீக்கிரம் இம்மாதிரிப் பாங்குகள் ஏற்படவேண்டி முயலவேண்டும். யாருக்கும் இதனால் நஷ்டமேகிடையாது. இப்பொழுது 10, 12 விதம் வட்டி வாங்குபவருக்குக் கோர்ட்டுக்குப் போவது, வட்டி தள்ளுவது முதலிய உபத்திரவங்கள் இருப்பது நன்றாய்த் தெரியும். இந்த உபத்திரவமொன்றுமில்லாமல் தங்கள் பணத்திற்கு 7 வரையில் வட்டிப்பணம் 6 மாதத்திற்கொருமுறையோ வீடு தேடிவந்தால், நாம் குதிபோட்டுக்கொண்டு வாழலாமல்லவா? இப்பாங்குகள் பலப்படுமளவிற்கு இந்தச் சௌகரியம் நிச்சயமாயேற்படும். ஆதலால் பணக்காரர், ஏழைகள் ஆகிய இருதிறத்தாரும் இக்காரியத்தில் தாராளமாய்ப் பிரவேசித்து, நடத்திவரலாம். இனியொருமுறை திருப்பூர்க் கால்நடைச் சந்தை கூடுமுன் இங்கு ஒரு பாங்கு ஏற்படவேண்டுமென்றும், திருப்பூரிலுள்ள ஏழைகளுடைய கஷ்டம் ஒருவாறு விடியவேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்கவேண்டியவர்கள்.

இதுவரை பாங்குகளை வருணித்துவந்ததில், கோ ஆபரேஷன் என்னும் முறையைப் பிரபலப்படுத்துவதாலுண்டாகும் நன்மைகள் ஒருவாறு விளங்கலாம். அதாவது கிராமங்களிலுள்ள யோக்கியரும் கிரகஸ்தருமான குடி ஜனங்களுக்கு இப்பொழுதிருக்கும் இடறுகளில் பல நீங்கிப்போகுமென்றும், அதனால் பாடுபட அக்கறையுள்ள யாவரும் முன்னுக்கு வரச் சௌகரியமுண்டாகுமென்றும் நாம் அறியவேண்டியதாம். இம்மட்டேயன்றி இதன் மூலமாய் இந்திரஜாலம் ஒன்றும் சித்திக்காதென்பதை நாம் லகுவாய்ப் பிடித்து மனத்திற் கொள்ளவேண்டும். இதையொரு மந்திரமாகவைத்து உருச்செபித்தால், நமக்கு உட்கார்ந்தவிடத்தில் புதையலகப்படு மென்றெண்ணுவது பிசகிலும் பிசகு. கோ-ஆபரேஷனைக் கைப்பற்றிப் பணத்தை வேண்டியமட்டில் வாரிக்கொட்டிக் கொள்ளலாமென்றும் இருப்பவரையெல்லாம நமக்கு ஏவலாக்கிக் கொண்டு அதிகாரம் செலுத்தலாமென்றும் நினைத்து இதில் யாரும் முன்னுக்கு வரக்கூடாது. "நாம் பெரிய தனக்காரர், நமது

பேக்கர்க்குப் பதில் யாரும் சொல்லக்கூடாது. நம்முடன் தாழ்ந்த ஜாதியாரொருவனும் சேரக்கூடாது,'' என்றிருந்தபடி அகங்கார முற்றிய பெரிய மனிதருக்கு இதின் காரியமேயில்லை. ஏனெனில் கோ-ஆபரேஷன் என்பது ஏழையைக் கைதூக்கி முன்னுக்குக் கொண்டுவரும் உற்றதுணையாகும். அதில் சேர்ந்து உழைப்பவர்களெவரும் ஒரே பதவி வகித்து பரஸ்பரம் சகாயம்செய்து முன்னுக்கு வரவேண்டியவர்கள்.

இவ்வாறு கோ ஆபரேடிவ் பாங்குகள் எங்கும் மலிவது நல்லதென்று உங்களுக்குத் தோன்றினால், நமது கிராமங்களுக்கும், கிராமத்தவராகிய மகாஜனங்களுக்கும் இனி வெகு நல்ல தசை யென்பது நிச்சயம். பாங்குகள் மட்டும் மலிந்து, ஜனங்களுக்குக் கோஆபரேஷனுடைய அருமை தெரியட்டும். பிறகு இன்னின்ன வகைகளில் கோ ஆபரேஷன் பிரபலிக்கு மென்பதை நாம் வருணிக்க முடியாது. ஆனால் அவற்றுள் சிலவற்றைமட்டும் நாம் இங்கு குறிப்பிடுவோம்.

முதலாவது, ஆடு, மாடு, குதிரை, கோழி முதலிய பண்டங்கள் இப்பொழுது சந்தைக்கு வந்திருப்பனவைகளில் முதல்தரமாயிருப்பவை பட்டக்காரர் முதலிய சில பெரிய மனிதர்களுடைய உடைமை மட்டுமேயாம். மாடு, எருது, எருமை, குதிரை, முதலியவைகளுக்கு இப்பொழுது என்ன கிராக்கி யேற்பட்டு வருகிறதென்பது நீங்கள் நன்கு அறிந்தவிஷயம். ஆதலால் சௌகரியமுள்ள விடங்களில் இன்னும் எத்தனையோ ஆயிரம் ஏழைக்குடிகள் பண்டங்களைப் பெருக்கித் தாங்களும் சுகித்து அவற்றை வாங்குவோருக்கும் சுகமுண்டாக்கலாம். ஆனால் ஏழைக் குடிகளில் ஒவ்வொருவனும் தானாகச் செய்வதென்றால, அனேகமாய் யாவருக்கும் இது சாத்தியமாகாது. இதைவிட்டுக் காங்கய நாட்டில் வசதியான இடங்களில் கிராமவாசிகள் பலர் சேர்ந்து ஒரு ஸொஸைட்டியாகவோ அதிகமாகவோ ரிஜிஸ்தர் செய்துகொண்டு, தாங்களும், கூடிய பணம் சேகரித்து, நகரபாங்கு போன்ற இடங்களிலிருந்து வேண்டியமட்டில் கடனுக்கொண்டு ஆடு, மாடு, எருமை, குதிரை போன்ற பண்டங்களில் தக்கவற்றைத்தக்க சகாயத்துடன் வாங்கிப் பெருக்கிவிற்றால் திருப்பூர் சந்தைக்கு இன்னும் எத்தனை ஆயிரம் பண்டங்கள் வரக்கூடாது? கோகுல மாக விளங்குமென்பதில் சந்தேகமேயில்லை. இப்படிபாவதில் கூடும் லாபத்தையோ மெம்பர்களல்லாமல் வேறு யாருவம் அடைவதில்லை.

இப்படிப் பண்டம் பெருகச் சாதனமேற்பட்டால், அதை யனுசரித்து வேறு வகைகளிலும் தொழில் பிரபலிக்கலாம். மாடுகளிருக்குமிடத்தில், பால், தயிர் முதலிய சாமான்கள் பெரும்படியாகச் சேருவதால், அவற்றைச் சேர்த்துத் தக்கவிடங்களில் விற்று லாபமடைய ஹேதுவுண்டாகும். சரக்குகளை மொத்தமாய் விற்பதற்குச் சங்கங்களேற்பட்டால், வேறிடங்களிலிருந்து சரக்குகளை மொத்தமாய் வாங்குவதற்கும் அவைகள் உதவும்.

வாங்கவேண்டிய சரக்குகளென்ன? எத்தனையோ ஆயிரமுண்டு. கொஞ்சம் யோசிப்பவருக்கு இது எளிதில் விளங்கும். இதுவரை நமது கிராமங்களில் விவசாயம் நடந்துவருவது ஒரு நிலை. அதாவது, அவனவன் காரியத்தை யவனவன் பார்த்துப் போவதேயாம். இனியப்படி நடவாதென்பது உங்களில் சிலருக்காவது தெரியவரலாம். ஏனெனில் நமது உணவுப்பொருள்களாகிய நெல், சோளம், ராகி முதலிய தானியங்களுக்கும், பருத்தி, கரும்பு முதலியவற்றிற்கும் தூரதேசத்திலிருந்து கிராக்கி கூடி வருவதால், அந்த கிராக்கியை யனுசரித்தும், க்ருஷி டிபார்ட்மெண்டார் நமது நன்மைக்காக அனுபவபூர்வமாய்ச் சொல்லும் உபாயங்களைக் கைப்பற்றியும், இனி விவசாயம் நடக்கவேண்டியிருப்பது நிச்சயம். அப்படி நடப்பதினால், இரும்புக்கலப்பை இரு



ப்பானை, எண்ணெய் யந்திரம், ஏரு, முதலிய க்ருஷிச் சாதனங்களை அவரவர் தாமாகத் தருவிப்பது நல்லதா, பலர் ஒன்றுகூடித் தருவிப்பது நல்லதா, விவேகிகள் சொல்லட்டும். தவிர இப்படித்தருவித்து, விளைச்சலைப்பலப்படுத்தினால், அந்தக் காலமறிந்து விலை கூடும்போது விற்பது நல்லதா விளைய விளைய ஆக்கப் பொறுத்தும் ஆறப்பொறாமல், அடுத்த சந்தையிலோ, அல்லது வேறுவகையிலோ அட்டாதுட்டியாகப் போன விலைக்கு விற்பது நல்லதா, சொல்லுங்கள். நல்லதின்னதென்று எந்தக் குழந்தையும் சொல்லும். ஆனால் நல்லதென்று தெரிந்தால்மட்டும் பிரயோஜனமில்லை. அது ஏட்டுச் சர்க்கரையாயிற்று. தெரிந்ததை யனுஷ்டிக்கவேண்டும். கோ ஆபரேடிவ் முறையில் சங்கங்களேற்பட்டால், ஒன்றைப்பற்றி யொன்றாகப் பலவகைகளில் கிராமத்தவருக்கு லாபம் பெருகும். ஆனால் அதை விவரிப்பதற்கு இங்கு அவகாசமில்லை.

இம்மட்டேயல்ல. கோ ஆபரேடிவ் பாங்குகளோ, வேறுசங்கங்களோ கிராமங்களில் வேரூன்றிச் செழித்தால், அதை நிர்வகிக்கும் பஞ்சாயத்தவருக்கும் தரும குணம் பரோபகாரம் முதலிய லக்ஷணங்கள் மலிந்து, அதனால் ஊரில் இப்பொழுது காணும் பல அவலக்ஷணங்கள் குறையுமென்பது நிச்சயம். ஊரைச்சுற்றிப் படைக்கள்ளி வளர்ந்திருப்பதும், வாசனை வீசுவதும், இட்டேரிகளில் வண்டிகள் குடைசாய்வதும், மதங் காதவழிபோவதும், மாறி சுப லக்ஷணங்கள் பெருகும். குடிகிணர், பால் தயிர் முதலியவையும் மலியும். கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் அதிகரித்து தற்குறிகள் மட்டுப்பட்டு சிவில், கிரிமினல் தாவுகளில் வியாச்சியங்களும் குறைந்து, அதனால் நமது வக்கீல் இஷ்டமித்திரருக்குக் கொஞ்சம் துர்த்தசை மேலிட்டாலும் மேலிடும்.

இப்படி பல வகையாலும் கிராம மகா ஜனங்களுக்கு க்ஷேமத்தைப் பெருக்குவதற்கு கோ ஆபரேஷன் என்பது ஏற்ற சாதனமாயிருப்பதால், அந்த முறையில் தற்காலம் சாத்தியமாக விருக்கிற பாங்குகளென்னும் சாதனங்களை மலியச்செய்ய நீங்கள் தாமதமின்றி பிரயத்தனப்படவேண்டும். ஏனெனில் அதுதான் எல்லாவற்றிலும் சுலப சாத்தியமானது. தவிர மற்றெல்லாக் காரியங்களுக்கும் அது அவசியமானது. ஆதலால் அதை முதலில் ஆரம்பிக்கவேண்டும். அதை ஆரம்பித்து நடத்தினால், விஷயந்தெரிந்தவர் அடிக்கடி உங்களூர்களுக்கு வருவதற்குச் சந்தர்ப்பமுண்டாகும். உங்களுக்கும் அநுபவ முதிர முதிர யுக்தி யதிகரிக்கும். அதை யனுசரித்துப் புதிது, புதிதாகக் காரியமாரம்பிக்க உற்சாக முண்டாகும். மொத்தத்தில் க்ஷேமம் பெருகும். உங்களூர்களிலுள்ள ஏழைகள் தாங்கள் பாடுபட்டுச் சம்பாதிப்பதைத் தங்கள் குழந்தைகளுக்கிட்டு, குடி முதலிய அவலக்ஷணங்கள் குறைந்து, கொலை முதலிய குற்றங்கள் நீங்கி, படிப்பு முதலிய சற்காரியங்கள் பெருகி, காலரா முதலிய வியாதிகளுக்கிடமின்றி, எல்லோருக்கும் கிரகஸ்த மார்க்கமாய்ப் பிழைக்க வழியுண்டானால், அது யாருக்கு விரோதம் செய்யும்? அதனால் யாருக்கு நஷ்டமுண்டாகும்? நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை யல்லவா?

இப்படிக் காலக்கிரமத்தில் சுகித்து வாழ்ந்து இகபரங்களிரண்டையு மடைவது நல்லதென்று உங்களுக்குக் கண்டால், சும்மாயிராமல் இதோ வந்திருக்கும் கனம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் முதலிய பெரியோர்களைச் சுற்றிக்கொண்டு மன்றாடி பாங்குகளுக்கு உழைப்பதென்று தீர்மானஞ் செய்துகொள்ளுங்கள், இந்த ஆக்கிரகம் யாராவது சிலருக்காவதுண்டாகுமானால் நான் இங்கு நின்று இந்நேரம் உங்களை வாதித்ததற்கு வேண்டி விசாரப்படமாட்டேன். இதுவரையில் பொறுமையாயிருந்து கேட்டதற்காகச் சகலருக்கும் என் வந்தனம்கூறி நிறுத்துகிறேன்.

# செங்கற்பட்டு ஜில்லா கிழச்சேரி கூட்டு முயற்சி கான்பரென்ஸ்.

## முதல் நாள்.

சென்ற டிஸம்பர் மாதம் 21-ந்தேதியில், காஞ்சீபுரம், பொன்னேரி, திருவள்ளூர், சைதாப்பேட்டை தாலூக்காக்களிலுள்ள கூட்டுத்தொழிற் சங்கங்களின் டெலிகேட்டுகளும், பிரமுகர்களும், கிழச்சேரில் நடக்கும் கூட்டுத்தொழிற் கான்பரென்சுக்கு விஜயஞ் செய்திருந்தார்கள். ஜில்லா கலெக்டரவர்கள் மிஸ்டர் பி. எஸ். பி. லாஸ், அப்பொழுது அங்கே வரமுடியாததினால், டிப்டி கலெக்டரான மிஸ்டர் எஸ். திருமலை அய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகித்தார். உபசரணை கமிட்டியின் சேர்மனாகிய மிஸ்டர் பி. ராமச்சந்திர சாஸ்திரி அவர்கள், எல்லாருடைய வரவை ஏற்றி, ஜில்லாவிலுள்ள சங்கங்களின் குறைவுகளையும், அவைகளின் பரிகாரங்களையும் நன்கு எடுத்துச்சொன்னார்.

ராவ்ஸாகிப் மாரியப்ப முதலியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ராவ்ஸாகிப் வி. அருளய்ய நாயிடு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, மிஸ்டர் எஸ். திருமலை அய்யங்காரவர்கள் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கிராசனாதிபதி, ஐக்கிய நாணயம் அந்த ஜில்லாவில் மிகவும் அபிவிருத்தியாயிருக்கிறதென்றும், விவசாயிகளுக்கு அவசியமான, விதைகள், கருவிகள், எருக்கள் முதலியவைகளை சங்கங்கள் கொடுத்தும் விளைவுப் பொருள்களை தங்கள் மூலமாய் விற்பனை செய்தும் உதவவேண்டுமென்றும், மதராஸ் நகர பாங்கிக்கு அதிக சிரமம் கொடுக்காமல், ஸ்தலங்களிலிருந்தே டிபாஸிட்டுப் பணம் அதிகமாய் வந்துவிழச் செய்யவேண்டுமென்றும், எடுத்துச் சொன்னார்.

### செங்கற்பட்டு ஜில்லாவுக்கு ஓர் ஜில்லா பாங்கிங் யூனியன்.

பிறகு ஆனரபில் திவான்பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளையவர்கள் மேற்கூறிய விஷயத்தைப்பற்றிப் பேசினதின் சாராம்சம் பின்வருமாறு:—ஜில்லா கலெக்டர் மிஸ்டர் லாஸ் இங்குவந்து அக்கிராசனம் வகிக்க முடியாமையைப்பற்றி அநுதாபப்படுகிறோம். அவருடைய உதவியால் நீலகிரியில் படகர்களுக்காக சில சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மிஸ்டர் அருளய்யநாயுடு அவர்களின் செல்வாக்கினால் ஜனங்கள் நிரம்ப விஜயஞ்செய்திருக்கிறார்களென்று எண்ணுகிறேன். ஸர் ராபர்ட்டு கார்லைல் சென்னைக்குச் சென்ற டிஸம்பர்மாதம் 19 தேதி விஜயஞ் செய்திருந்தபொழுது, சில சங்கங்களின் மெம்பர்கள் அவருடன் கலந்து இவ்விஷயங்களைப்பற்றி பேசினார்கள். சென்னை அர்பன் பாங்கியின் கணக்குகளை நன்றாய்ப் பரிசோதித்து, பொதுவில் சங்கங்கள் ஒழுங்காய் வேலைசெய்து வருகின்றன என்று மிகவும் திருப்தியடைந்தார். காஞ்சிபுரம் நெசவுக்காரர்களில் யூனியன் மிகவும் ஒழுங்காய் நடக்கிறதென்றறிந்து, பணம்



அதற்கு உதவி செய்யும்படி, கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கிறார். செங்கற்பட்டு ஜில்லாவில், மொத்த தொழில் தனத்திற்கு, பங்கு திரவியங்கள், டிபாஸிட்டுகளின் விகிதங்கள் மிகவும் குறைந்திருக்கின்றன. ஆனால் பஞ்சாப்பில் அவ்விகிதங்கள் மிகவும் அதிகமாயிருக்கின்றன. ஸ்தல டிபாஸிட்டுகள் நிரம்ப வராமலிருத்தல் இதற்கு காரணம். இக்குறையை நிவர்த்தி செய்யவும், சங்கங்களின் மேல்விசாரணையை பார்த்துக் கொள்ளவும், ஜில்லா பாங்கிங் யூனியன் ஒன்றை ஸ்தாபிக்கவேண்டியதவசியம். மற்ற மாகாணங்களில் பாங்கிகள் வெளியிலிருந்து பணம் வாங்கும் வட்டிக்கும், மெம்பர்களுக்குக் கடன்கொடுக்கும் வட்டிக்கும் அதிக வித்தியாசமுண்டு. இந்தராஜதானியில் 100-க்கு ½-விகிதம் தான் வித்தியாசமிருக்கிறது. சென்னை நகர் அர்பன் பாங்கி பணம் எடுக்கும் வட்டியைவிட மிகவும் குறைவான விகிதத்திற்குக் கடன்வாங்க ஓர் பாங்கிங் யூனியனை ஸ்தாபிக்கவேண்டும்." ஓர் பாங்கியை ஏற்படுத்துவதற்கு மூன்று விஷயங்கள் தேவை, அதாவது, மனிதர்கள், திரவியம், தகுந்த ஸ்தலம். முதலில் கூறிய அவசியம் இம்மூன்றில் முக்கியமானது. இந்த ஜில்லாவில், தகுந்த கனவான்கள் முன்னிட்டு வருவார்களென்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது. வேண்டிய திரவியம் இந்த ஜில்லாவிற் கிடைக்குமென்பதிற் சந்தேகமில்லை. அநேகரின் அபிப்பிராயப்படி, யூனியனை ஏற்படுத்தத் தகுந்த ஸ்தலம் காஞ்சீபுரம் என்று தோற்றுகிறது.

### மிஸ்டர் அருளய்ய நாயுடுகாருவுக்கு ஸம்மானம்.

கவர்ன்மெண்டாரால் மிஸ்டர் அருளய்ய நாயுடுக்கு ராவ் சாகிப் என்னும் பட்டம் அளிக்கும் ஸமயம் உத்தேசித்து, இந்த ஜில்லாவிலுள்ள மற்ற கூட்டுமுயர்ச்சிக்காரர்கள் சேர்ந்து அவருடைய சுயநலம் பாராத அருமையான வேலைகளை அங்கீகாரம் செய்ததற் கறிகுறியாக, ஓர் தங்கக் கெடிகாரமும் சங்கிலியும் அவருக்கு அப்பொழுது ஸம்மானம் பண்ணினார்கள் இரண்டு உபசாரணை வியாசங்கள், தமிழிலும்,தெலுங்கிலும் வாசிக்கப்பட்டன. பிறகு சேர்மன் அவ்வெகுமதியை அவருக்குக் கொடுத்தார். மிஸ்டர் நாயுடு அவர்களும் தகுந்த பதில் சொன்னார்.

### கால்நடைகளுக்கு இன்ஷியூரென்ஸு.

ஐக்கிய முறைச் சங்கங்களுக்கு ஸ்பெஷல் டிப்டி கலெக்டரான ராவ் பகதூர் தர்மரெங்காராஸு அவர்கள், அந்தஜில்லாவில் கால்நடைகள் இன்ஷியூரென்ஸு சங்கங்கள் வேண்டியதைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். அவைகள் ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியத்தையும், அதனால் அடையக்கூடும் நன்மைகளையும், நன்கு விளங்கச் சொல்லுவதுடன், அம்மாதிரிச் சங்கங்கள் ஏற்படுத்துவதைப் பற்றி ஆலோசனை செய்யக் கான்பரென்ஸைக் கேட்டுக்கொண்டார்.

பிறகு பெரிய காஞ்சீபுரம் டௌவுன் பாங்கி, பிச்சிவாக்கம் கிராமச் சங்கம் இவைகளின் ரிப்போர்ட்டுகள் வாசிக்கப்பட்டன.

## இரண்டாவது நாள்.

இரண்டாவது நாள் கான்பரென்ஸு திவான்பகதூர் M. ஆதிநாராயணய்யா அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அடியிற்கூறிய தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன —

I. (a) சங்கங்களுக்குப்பணம் உதவியும், மேல்விசாரணையும் செய்ய, ஜில்லாபாங்கிங் யூனியன் ஒன்றை ஸ்தாபிக்க சமயம் வந்து விட்டது. அதில், சங்கங்களும், தனி நபர்களும் பங்குகள் எடுத்துக்கொள்ளலாம்.

(b) அடியிற்கண்ட மெம்பர்கள் (பெயர்கள் எழுதாமல் விடப்பட்டன) பைலாக்களை உண்டாக்கவும், தங்களை ஜில்லா பாங்கிங் யூனியனாக ரெஜிஸ்டர் செய்துகொள்ளவும் ஸப் கம்மிட்டியாவார்கள்.

II. இந்த ஜில்லாவில் ஆடுமாடுகளை இன்ஷ்யூர் செய்ய ஓர் சங்கம் ஏற்படவேண்டிய அவசியம் என்று இந்த கான்பரென்ஸு அபிப்பிராயப்படுகிறது.

III. சங்கத்தினின்று கடன்வாங்கி ஒழுங்காய் திருப்பிக்கொடுத்த மெம்பர்களுக்கு அச்சர்கம் தொகைக்குத் தகுந்தபடி போனஸ் கொடுக்கவேண்டுமென்று கான்பரென்ஸு அபிப்பிராயப்படுகிறது. இந்த போனஸ் சங்கத்தின் லாபத்திலிருந்து எடுக்கப்படவேண்டியது.

IV. ஐக்கிய முயற்சியின் தற்கால நிலைமையை உத்தேசித்து, கவர்ன்மெண்டாரின் மேல் விசாரணையையும், கணக்குப் பரிசோதனையையும் எடுத்துவிடக்கூடாதென்றும், அதற்காக சங்கங்களிலிருந்து பணம்வசூல்செய்யப்படாதென்றும் இந்தகான்பரென்ஸு அபிப்பிராயப்படுகிறது.

அக்கிராசனாதிபதிக்கு வந்தனமளித்த பிறகு, கான்பரென்ஸு கலைந்தது.

---

# கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்தி

---

## இந்தியாவில்.

### சென்னை.

சென்ற 1913ஆம் ஜூன் மாதம் 30ந்-தேதியோடு முடிவுபெற்ற கோவாப்ரேடிவ் வருஷத்தில், ஸெண்ட்ரல் பாங்கிகள் 6 விருந்து 7-க்கும், மேல் விசாரணை செய்யும் யூனியன்கள் 3 விருந்து 4 க்கும் அதிகரித்தன. முதலில் கூறியவைகளில் மெம்பர்களின் சங்கியை 643 விருந்து 835 க்கும், பின் கூறியவைகளில் சங்கங்களின் சங்கியை 93க்கும் உயர்ந்தன. விவசாயச் சங்கங்கள் 916 (52,006 மெம்பர்கள்) விருந்து 1,000 (64,007 மெம்பர்கள்) க்கும், வேறு வகைச் சங்கங்கள் 47 (13,507 மெம்பர்கள்) விருந்து 59 (17,481 மெம்பர்கள்)க்கும் அதிகரித்தன. சங்கங்கள் மிகுதியாயுள்ள ஜில்லாக்கள் செங்கற்பட்டு (193), அனந்தபூர் (148), மிகவும் குறைந்துள்ள ஜில்லாக்கள் சொஞ்சம் (4), பெல்லாரி (3). ஸெண்ட்ரல் பாங்கிகளின் (யூனியன்களுன்பட) மொத்த தொழில் தனம் ரூ. 40.39 லக்ஷம்; விவசாயச் சங்கங்களினது ரூ. 44.38 லக்ஷம்; மற்றச் சங்கங்களினது ரூ. 10.70 லக்ஷம். அவ்வருஷத்தில், விவசாயச் சங்கங்களால் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 23.05 லக்ஷம்; மற்றச் சங்கங்களால் கொடுக்கப்பட்டது ரூ. 8·43 லக்ஷம். தானியச் சங்கங்கள் 3-ம், உபாத்தியாயர்களின் சங்கங்கள் 3-ம், சென்னை ஸால்ட் கோடார்ஸில் வேலை செய்யும் கூலியாட்களின் சங்கம் ஒன்றும், சேலம் முனிஸிபாலிட்டி தோட்டிகளின் சங்கம் ஒன்றும், இவ்வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டன, இவ்வருஷத்தில், ஸெண்ட்ரல், விவசாயம், வேறுவிதச் சங்கங்களின் ரிகாலாபம் முறையே ரூ 76,604, ரூ. 1,03,000 ரூ. 55,500. எல்லாச் சங்கங்களின் க்ஷேமநிதி ரூ. 3,00,986 விருந்து ரூ. 4,43,357க்கு உயர்ந்தது. ஒரு மாகாண கான்பரென்ஸும், 5 ஜில்லா கான்பரென்ஸுகளும்



அவ்வருஷத்தில் நடைபெற்றன. அவ்வருஷத்தில் 106 சங்கங்கள்தான் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டன. ஏற்கனவே யிருக்கும் சங்கங்களின் நடவடிக்கைகளை அதிகமாய் கவனிக்கப்பட்டது. இந்த ஆக்ட்டை அனுபோகத்துக்குக் கொண்டுவருவதில், கவர்ன்மெண்டாருக்கு சென்ற வருஷத்தில் ரூ. 8[illegible],12[illegible], இவ்வருஷத்தில் ரூ. 92,610ம் செலவாயிற்று, இச்செலவு தொகை, சென்ற வருஷத்தில், வரவு செலவு தொகைகளுக்கு 100-க்கு 4 விகிதமும், இவ்வருஷத்தில், வரவுசெலவு தொகைகளுக்கு 8·4 விகிதமும் ஏற்படுகிறது.

### பம்பாய்.

அபிவிருத்தி எங்கும் திருப்திகரமாயிருக்கிறது. இந்த ராஜதானியில் (ஸிந்து நீங்கலாக) 515 சங்கங்களிருக்கின்றன. அவைகளின் மொத்த தொழில் தனம் ரூ. 41,31,942. இவைகளில் 409 விவசாயச் சங்கங்கள்; சராசரி ஒவ்வொருமெம்பருக்கு ரூ. 80 இருக்கிறது. கிராமாந்திரங்களில் படிப்பு அதிகமில்லாததினால், இதின் அபிவிருத்திக்கு இடைஞ்சலாயிருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திசெய்ய, ஜில்லா பாங்கி யூனியன்கள் ஏற்படுத்துவதாக உத்தேசம். அப்படி 5 யூனியன்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஸெண்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியின் லேவாதேவி முதல் ரூ. 11,84,452. அது கிராமச்சங்கங்களுக்கு நேரிலாவது, பாங்கி யூனியன்கள் மூலமாயாவது, பணம் உதவத்தயாராயிருக்கிறது. நீரா கால்வாயிலிருக்கும் கரும்புக்காரர்களின் சங்கங்கள் 29-க்கும் ஸெண்ட்ரல் பாங்கி ரூ 8 லக்ஷம் உதவியிருக்கின்றது. இப்பாங்கி, வெல்லம் குறைந்த விலைக்கு ரயத்துக்களுக்குக் கொடுக்கவும், முத்துக்கொட்டை புண்ணுக்கு முதய எருக்கள் அவர்களுக்கு மிகவும் குறைந்த விலைக்கு விற்கவும், டிப்போக்கள் ஏற்படுத்தியிருக்கின்றது.

இரண்டு எரு விற்கும் சங்கங்களும் 2 விவசாயக் கருவிகள்விற்கும்ஸ்டோர்களும், பாற்சாலையொன்றும், 12 விதைகள் விற்கும் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டன நூல்கள் இலகுவாய்க் கிடைப்பதற்கு நெசவுகாரர்களின் சங்கங்கள் 24 இருக்கின்றன.

### வங்காளம்

இவ்வருஷத்திய ஐக்கிய முயற்சியின் குறைவுகளை சீர்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்ட போதிலும், ஐக்கிய இயக்கம் விருத்தியடைந்திருக்கின்றது. சங்கங்களின் சங்கியை 939 விருந்து 1,121-க்கும், மெம்பர்களின் எண்ணிக்கை 40,000 விருந்து ரூ. 59,000 க்கும், தொழில் தனம் ரூ. 26 லக்ஷத்திலிருந்து ரூ. 46 லக்ஷத்திற்கும் அதிகரித்தன சங்கங்களுக்கு மேல் விசாரணை செய்வதற்கும், பணம் உதவுதற்கும், புதிதாக ஸெண்ட்ரல் பாங்கி யூனியன்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இது விஷயமாக அர்பன் பாங்கிகளையும் பாங்கி யூனியன்களாக மாற்[illegible]ன. சங்கங்களின் நிர்வாகம் திருப்திகரமாயிருக்கிறது இவ்வருஷத்தில் பொது ஜனங்கள் இம்முறையில் மிகவும் சிரத்தை யெடுத்துக்கொண்டதே, அபிவிருத்திக்கு அறிகுறி. கூறைப்பாய் உழைத்து வேலைசெய்யும், சர்க்கார் உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் இவ்வைக்கிய முறையில் இங்கே அதிகமாயில்லாமற்போதிலும், கூட்டுத்தொழிலின் நற்பலன்களை நிதர்சனமாய் ஜனங்கள் அறிவதால், அக்கனவான்கள் ஏராளமாய்ச் சேர்வார்களென்று நம்பப்படுகிறது.

சங்கங்கள் மெம்பர்களுக்குக்கொடுக்கும் தொகையின் வட்டி விகிதத்தைக்குறைக்க யோஜனை செய்யப்பட்டது. அந்த மாகாணத்தில் வழங்கும் வட்டி $18\frac{3}{4}$ வீதம்; ஆனால் இப்பொழுது $12\frac{1}{2}$ விருந்து 15 வரையில் விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

புதிய சட்டப்படி இவ்வருஷத்தில் மெம்பர்கள் பெறும் டிவிடெண்டு விகிதம் $12\frac{1}{2}$க்கு மேல் போகக்கூடாதென்று விதிகள் ஏற்பட்டபடியால், ஸெண்ட்ரல் அர்பன் பாங்கிகளுக்கு அதிக அபிவிருத்திக்கு இடம் உண்டாயிருக்கிறது.

## பேகாரும் ஓரிஸ்ஸாவும்.

சங்கங்கள் 538 லிருந்து 595க்கு அதிகரித்திருக்கின்றன. விசேஷமாய் எல்லாம் கிராமச் சங்கங்கள்.

8 ஸெண்ட்ரல் பாங்கிங் யூனியன்கள் முன்னமே ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இனி மேல் இதை அதிகப்படுத்துவதாக உத்தேசம்.

## ஐக்கிய மாகாணங்கள்.

இவ்வருஷத்தில் நகரச் சங்கங்கள் 28லிருந்து 51க்கும், அவைகளின் மொத்த தொழில் தனம் ரூ. 36 லக்ஷத்திலிருந்து 44 லக்ஷத்துக்கும், அதிகரித்தன. நகரச் சங்கங்கள் விசேஷமாய் ரிஜிஸ்டரான சங்கங்களுக்குப் பணம் கடன் கொடுக்கின்றனவே யொழிய தனி நபர்களுக்குக் கொடுப்பதில்லை. நகரச் சங்கங்களெல்லாம் சோதனை செய்யும் உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்திருக்கின்றன. வெகுமானம் அதிகமாயிருப்பதால், அவ்வேலைக்கு நல்ல படித்தவர்களாய் வருகிறார்கள்.

ரெஜிஸ்ட்ராரவர்களால் பழக்கப்பட்டு, சிபார்சு செய்யப்பட்டவர்களைத் தான் அச்சங்கங்கள் நியமித்துக் கொள்ளுவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றன. இவ்வேலைக்காரர்களடங்கிய மாகாண ஜாப்தா ஒன்று ஏற்பட்டிருக்கிறது. வெவ்வேறு பாங்கிகளில் இவர்களுக்குள் மாற்றுதல் அடிக்கடி உண்டு. இவர்கள் பழகும் காலம் 3 மாதம். விவசாயச் சங்கங்கள் 1,743 லிருந்து 2,304க்கு அதிகரித்தன. புதிய சங்கங்கள் உண்டாவதை மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. திரவியம் கிடைப்பதில் அதிகக் கஷ்டமில்லை. சங்கங்கள் அநியாயமாய் ஏற்படுவதை காரணத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சங்கத்து மெம்பர்களின் சராசரியான சங்கியை 34 லிருந்து 39-க்கும், ஒவ்வொரு மெம்பரின் சராசரியான திரவியம் ரூ. 39·6 லிருந்து ரூ. 43·3-க்கும் அதிகரித்தன.

விவசாயச் சங்கங்களல்லாத மற்றவைகளின் சங்கியை 165 லிருந்து 175-க்கு விருத்தியாயின. இச்சங்கங்களின் வேலைகள் மற்றவைகளைக் காட்டிலும் மிகவும் கஷ்டமாயிருப்பதால், இவைகளை ஏற்படுத்துவதில் உஷாராகவே யிருக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மெம்பரின் சராசரி திரவியம் ரூ 62·5 லிருந்து ரூ 71.1-க்கு உயர்ந்திருக்கிறது.

இவ்விருவகைச் சங்கங்களிலும் நிலுவைகள் அதிகமில்லை. மெம்பர்களின் ஐக்கிய முறைப் படிப்பைப்பற்றி அதிக கவனம் செலுத்திவருகிறது. ஸான்டிலாவிலும், கான்பூரிலுமுள்ள ஸ்டோர்கள் மிகவும் நன்றாய் வேலைசெய்து வருகின்றன. ஸாண்டிலாவிலுள்ள நெசவுக்காரர்களின் நூல் ஸ்டோர் மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. காசியிலுள்ள பாற்சாலை சரிவர நடந்துவருகிறது. இவ்வருஷத்தில் காசி இந்து காலேஜில் ஓர் ஜனரல் ஸ்டோரும், பாரில்லியில் ஓர் தச்சப்பட்டரையும் ஸ்தாபிக்கப்பட்டன. பூடான் ஜில்லாவில் கால்நடை இன்ஷியூரன்ஸ் சங்கமொன்றும், காசி ஜில்லாவில் நெய் விற்கும் சங்கம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. இவைகளைப்பற்றி இப்பொழுது அபிப்பிராயம் சொல்லமுடியாது. சென்ற வருஷம் முடிவானது முதல் 3 யாத்திரைகள் உண்டாயின.



எல்லாச் சங்கங்களும், விவசாய அபிவிருத்தி செய்வதில் மிகவும் விமரிசையாயிருக்கின்றன. நல்ல விதைகளை அநேக யிடங்களுக்கு உதவியும், புதிய விவசாயக் கருவிகளின் உபயோகத்தை ஜனங்களுக்கு எடுத்துக்காட்டியும், புதிய சாகுபடி முறைகளை தாங்களே அனுபோகத்திற்குக் கொண்டுவந்தும், அநேக சங்கங்கள் வேலை செய்துவருகின்றன.

## பஞ்சாப்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1914

இவ்வருஷத்தில் 1,076 சங்கங்கள் அதிகமாய் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றில் 8 நகரச்சங்கம், 1,063 விவசாயச் சங்கம், 5 மற்றவைகள். இப்பொழுது சங்கங்களெல்லாம் சேர்ந்து 2,845; மெம்பர்களின் சங்கியை 134,770. நகரச் சங்கங்களின் தொழில் தனம் இப்பொழுது ரூ. $28\frac{1}{2}$ லக்ஷம். ரூ. $12\frac{1}{2}$ லக்ஷம் அதிகம். விவசாயச் சங்கங்களின் தொழில்தனம் இப்பொழுது சுமார் ஒரு கோடி ரூபாயாயிருக்கிறது. ரூ. $40\frac{3}{4}$ லக்ஷம் அதிகம்; மற்றச் சங்கங்களின் தொழில் முதல் இவ்வருஷத்தில் அதிகம். ரூ. $1\frac{1}{2}$ லக்ஷம்தான். ஏனென்றால் அவைகளில் அதிக அபிவிருத்தி இவ்வருஷத்தில் இல்லை.

மெம்பர்களின் வேறு சௌகரியங்களுக்குப் பணம் உதவினதோடு, அவர்களின் பழைய கடனை அடைப்பதற்கு ரூ 25 லக்ஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கணக்குப் பார்த்ததில் சங்கங்கள் மூலமாய் மெம்பர்களின் கடன் ரூ. 50 லக்ஷத்திற்கு அடைபட்டிருக்கிறது.

விளைவுப்பொருள்களை லாபத்திற்கு விற்றுக்கொடுக்கும் சங்கங்கள் ஏற்படவேண்டியது மிகவும் அவசியம். இவ்விஷயத்திற்கு மூன்று பெரிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகள் ஜனங்களுக்கு மிகவும் உபயோகமுள்ளதென்று தெரியவருதலால், இம்மாதிரிச் சங்கங்கள் அதிகமாய் ஏற்படுவதை எதிர்பார்க்கப்படுகிறது.

இனி, மாகாணத்தின் தன்மையை அபிவிருத்தி செய்வது அவசியம். பஞ்சாப்பில் இம்முறையில் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை.

விவசாயச் சங்கங்களின் பங்கு திரவியம் இப்பொழுது சுமார் ரூ. 23 லக்ஷமிருக்கிறது. இத்துடன் இவ்வருஷத்து லாபமாகிய ரூ. $9\frac{1}{4}$ லக்ஷமும் சேர்ந்தால், மொத்த திரவியத்தில் 100-க்கு 34 விகிதம் சொந்த திரவியமாகின்றது. வெளி வியாபாரங்களைப் பார்க்கும்பொழுதெல்லாம், கடன் வாங்கும் திரவியத்திற் சார்ந்திருப்பது மிகவும் அபாயமென்று காரணத்துடன் தோற்றுகிறது.

மெம்பர்களின் டிபாஸிட்டுகள் ரூ $14\frac{3}{4}$ லக்ஷத்திற்கும், மற்றவர்களின் டிபாஸிட்டுகள் இப்பொழுது ரூ. 17 லக்ஷத்திற்கும் அதிகரித்திருக்கின்றன.

எல்லா வழிகளிலுமுள்ள அபிவிருத்தியை உத்தேசம்பண்ணினால், மிகவும் திருப்திகரமாயிருக்கிறதென்றே உறுதியாய்ச் சொல்லலாம்.

இவ்வருஷத்தில் எல்லாச் சங்கங்களின் லேவாதேவி செய்த மொத்தத் தொகை ரூ. 2,36,28,000 அல்லது 15,74,870 பவுன்கள் சிறிய தொகையல்ல.

## பர்மா.

இவ்வருஷத்தில் கிராமச் சங்கங்கள் அதிகரித்தன. மேல் பர்மா ஸெண்ட்ரல் பாங்கி வளர்ச்சி யடைந்தது. மெம்பர்களின் பழைய கடன்கள் அதிகமாய் அடைபட்டன. ஓர் ஸெண்ட்ரல் கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கம் ஸ்தாபனத்தைப்பற்றியும்

ஐக்கிய முறையில் நெல்லு, கோதுமை, பஞ்சு, மரக்கட்டைகள் விற்பதற்கும், அரிசி வாங்குவதற்கும் சங்கங்கள் ஏற்படுவதைப்பற்றியும், இனிமேல் அதிகமாய் கவனிக்கப்படும். மாகாண போஸ்டு ஆபீசு ஐக்கிய நாணயச் சங்கமொன்றும், அமராபுரியில் பட்டுத் தொழிலுக்காக ஓர் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டன.

ஏற்கனவே யிருக்கும் சங்கங்களை சீர்திருத்தியும், ஜனங்களுக்கு வாங்கினகடன் திருப்பிக்கொடுக்கும் முறைகளையும் மற்ற ஐக்கிய முறையின் வகைகளையும் நன்கு விளக்கிக் காட்டி வந்ததினால், புதுச்சங்கங்கள் அதிகமாய் ஏற்பட வில்லை, இம்முறையின் லக்ஷணங்களை ஜனங்களுக்கு போதிக்க யூனியன்கள் ஏற்பட்டபடியால்; அவ்யூனியன்கள் எவ்விடங்களில் சங்கங்கள் ஸ்தாபனஞ்செய்யலா மென்று அறிவிக்கின்றனவோ அவ்விடங்களில் புதுச்சங்கங்கள் மெதுவாக உண்டாக்கப்படுகின்றன.

கிராம நாணயச்சங்கங்களின் மொத்த லேவாதேவி ரூ. 59,59,921 7-3: வேலை செய்யும் செலவுகள் (யூனியன்களின் ரேட்டு உள்பட) ரூ. 33, 254-4-5. தகுந்த ரஸ்தாக்களில்லாததினாலும், பணம் அனுப்புவதினாலுண்டாகும் அதிகச்செலவால், செலவு தொகை அதிகமாகக்காணப்படுகிறது.

## மத்திய மாகாணங்கள்.

இவ்வருஷத்தில், ரெஜிஸ்டராக விண்ணப்பஞ்செய்த 981 சங்கங்களில்,107தான் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன, பாக்கி தள்ளப்பட்டன. தொழில் தனம் ரூ. 10,28, 592 லிருந்து, ரூ. 34,43,390க்கும், மெம்பர்களின் சங்கியை 12,136லிருந்து 27 571க்கும், சங்கங்கள் 885லிருந்து, 1,449க்கும் அதிகரித்தன. எல்லாச்சங்கங்களின் லேவாதேவி இவ்வருஷத்தில் ரூ.1,26.95,210;க்ஷேமநிதி ரூ.34,484 லிருந்து ரூ.1,07,032க்கு உயர்ந்தது. மெம்பர்களின் டிபாஸிட்டுக்களும், வேறு ஸ்தல டிபாஸிட்டுகளும் திருப்திகாமாய் விழுந்து கொண்டிருக்கின்றன. ஸென்ட்ரல் பாங்கிகளின் டிபாஸிட்டுகளின் தொகை ரூ. 4,69,207; கிராமச்சங்க மெம்பர்களின் டிபாஸிட்டுத்தொகை ரூ. 79,571. இவ்வருஷத்தில் மத்திய மகாணங்கள் கோவாப்ரேடிவ் பாங்கிகளின் யூனியன் ஸ்தாபிக்கப்பட்டது. இதைத் தவிர வேறு வகைச்சங்கங்கள் உண்டாயின.

## அஸ்ஸாம்.

சங்கங்களின் எண்ணிக்கை 142லிருந்து 188க்கும், மெம்பர்களின் சங்கியை 9,758லிருந்து 10,945க்கும, தொழில் தனம் ரூ. 4,91,411லிருந்து ரூ. 5,56,0 98க்கும் அதிகரித்தன. 3 யூனியன்களும், 4 பாங்கிங் யூனியன்களு மிருக்கின்றன. அங்குள்ள ரெஜிஸ்ட்ராரவர்களுக்கு இந்த இலாகாவேலைகளைத்தவிர வேறு இலாகாவேலைகளையும் கொடுத்திருப்பதாலும், சர்க்கார்உத்தியோகஸ்தரல்லாதகனவான்கள் இவ்வேலையைச்செய்ய அதிகமாய் வராததினாலும், சங்கஸ்தாபனங்கள் தவக்கப்படுகின்றன. இதுவரையில் ஏற்பட்ட சங்கங்கள் நாணயச்சங்கங்கள் தான். இனி, இம்முறையில் வேறு வகைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படு மென்று நம்பப்படுகிறது.

## குடகு.

ஐக்கிய நாணயச் சங்கங்கள் திருப்திகரமாய் வேலை செய்துவருகின்றன. அவைகளின் மூலதிரவியம் 78,792; க்ஷேமநிதி ரூ. 15,043. 6-கால் நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்கள் இதுவரையில் ஸ்தாபிக்கப்பட்டன. மிகவும் விமரிசையாய் நடந்து வருகின்றன. இந்த மாகாணத்தினால் கவர்ன்மெண்டாருக்கு உண்டாகும் மொத்தச்செலவு ரூ. 240 தான்.



## ஆஜ்மீர் மீர்வாரா.

ஸென்ட்ரல் பாங்கி ஏற்பட்டு மூன்று வருஷந்தானாகிறது. அதற்குள் அதின் தொழில்தனம் ரூ. 4,21,900-10-5க்கு உயர்ந்திருக்கிறது. அது தன் மெம்பர்களுக்கு ரூ. 74,103ம், 191 கிராமச் சங்கங்களுக்கு ரூ. 5,57,987-7-7,ம் கடன் கொடுத்திருக்கிறது.

இவ்வருஷத்தில் இரண்டு புதிய ஸென்ட்ரல் பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டன. விவசாயச்சங்கங்கள் 160லிருந்து 279க்கும், மெம்பர்களின் சங்கியை 4,259லிருந்து 8,115க்கும் அதிகரித்தன. சங்கங்களின் தொழில் தனம் ரூ 5,03, 204-15-0.

ஆஜ்மீரிலுள்ள ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தியைப்பார்த்து, அருகிலுள்ள சுதேச ராஜ்யங்கள் கூட்டு முறைச்சங்கங்கள் ஸ்தாபனஞ்செய்ய முயலுகின்றன.

## பரோடா.

சங்கங்களின் இலக்கம் 124லிருந்து 189 க்கும், மெம்பர்களின் சங்கியை 2,934 லிருந்து 5,465க்கும், தொழில் தனம் ரூ. 2,11,000 லிருந்து ரூ. 3,36,000 க்கும் அதிகரித்தன. இவ்வருஷத்திய நிகரலாபம் ரூ 23,000.

ஜில்லா பாங்கி ஒன்றும், பாங்கிங் யூனியன் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டன. விவசாயபாங்கிகள் கிராமச்சங்கங்களுக்குப் பணம்உதவி செய்வதால், கவர்ன்மெண்டு உதவி நின்றுவிட்டது. விவசாயப்பரீக்ஷையில்தேறின பட்டதாரிகளை, யூனியன்களின் மானேஜராக நியமிப்பது மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. புதிதான சாகுபடிவழிகளை ஐக்கிய முறைச்சங்கங்களின் மூலமாய் ஜனங்களறிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அனுழியந்திர நெசவுதறிகளை உபயோகப்படுத்தும் வழிகளை பிரத்தியக்ஷமாய் காண்பிக்கப்படுகின்றன.

## மைசூர்.

சங்கங்களின் சங்கியை 218லிருந்து 343 க்கும் மெம்பர்களின் இலக்கம் 13,148 லிருந்து 24,538க்கும், தொழில் தனம் ரூ. 6,75,312 லிருந்து ரூ. 12,89,338க்கும், க்ஷேம நிதி 18,833லிருந்து ரூ. 30,600க்கும், மொத்தநிகரலாபம் ரூ. 34,836லிருந்து ரூ. 62,520க்கும் அதிகரித்தன.

ஐக்கிய முயற்சியானது ராஜ்யம் எப்பக்கத்திலும் வியாபித்திருப்பதால், வேலைக்காரர்கள், தொழிலாளிகள், தாழ்ந்த வகுப்பினர்கள் கூட தங்கள் தங்களுக்குத் தகுந்தபடி சங்கங்கள் ஸ்தாபித்துக்கொள்ள முயலுகிறார்கள்.

# மத்திய மாகாணங்கள் கோவாப்ரேடிவ் பாங்கிகளின் யூனியன்.

---

சென்னை ராஜதானியில் ஓர்மாகாண கோப்ரேடிவ் யூனியன் ஏற்படுவதை உத்தேசித்து, கீழ்க்கூறிய பைலாக்கள் உபயோகப்படுமென்று நினைக்கப்படுகிறது:—

**பெயர்.**

1. இச்சங்கத்தின் பெயர் ஸென்ட்ரல் பிராவின்ஸஸ் யூனியன் ஆப் கோவாப்ரேடிவ் பாங்க்ஸ், லிமிடெட். அதின் ஆபிசு-ஜப்பல்பூர்.

**மெம்பராகுதல்**

2. மத்திய மாகாணங்களிலும் பேராரிலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட எந்த கோவாப் ரேடிவ் பாங்கியும் அத்துடன் சேர்ந்த சங்கங்களும் இதில் மெம்பராகலாம்.

3. யூனியனின் நோக்கங்களாவன:—

**நோக்கங்கள்.**

(i) மெம்பர்களாய்ச் சேர்ந்த சங்கங்களையும், பாங்கிகளையும், ஒழுங்கான மேல் விசாரணை, தணிக்கை முதலானவைகள் செய்தல்.

(ii) மத்தியமாகாணங்களிலும் பேராரிலுமுள்ள ஐக்கிய முயற்சிச்சங்கங்களில், ஒரேவிதமான வழக்கங்களை உண்டாக்குதல், அவைகளின் நோக்கங்களிலும் செயல்களிலும் ஒரு விதமான ஒற்றுமையை உற்பவித்தல்

(iii) ஐக்கிய முயற்சிக்காரர்களின் பொது நன்மைக்கு உழைத்தல்; விசேஷமாய் ஐக்கிய முயற்சித்தொழில் அபிவிருத்தியான வழியில் நடந்து கொண்டு வருகிறதா என்று பாதுகாத்தல்.

**யூனியன் வேலைகளை நிர்வகித்தல்.**

4. நான்கு மெம்பர்கள் அடங்கிய ஓர் சத்யாலோஜனை கம்மிட்டியார் உதவியைக்கொண்டு, ஓர் கவர்னர் யூனியனின் காரியங்களை நிர்வகிப்பார்.

**கவர்னரைத் தேர்ந்தெடுத்தல்.**

5. ஒவ்வொரு ஸென்ட்ரல் பாங்கியும் தனக்குப்பிரதிநிதியாகவும் வோட்டு தனக்காக கொடுக்கவும், ஓர் டெலிகேட்டை யூனியன் காங்கிரஸுக்கு அனுப்பவேண்டியது. இந்த காங்கிரஸால் கவர்னர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**யூனியன் காங்கிரஸின் மீட்டிங்.**

6. கவர்னரையும், கம்மிட்டியையும் தேர்ந்தெடுக்கவும், மெம்பர்கள் கொண்டு வரும் விஷயங்களை ஆலோசிக்கவும், யூனியன்காங்கிரஸ் வருஷத்திற்கு ஒரு முறையாவது கூடவேண்டும் மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸு கூடும் தேதிகளுக்குச் சமீபதினத்தில், இது கூட்டப்படும். காங்கிரஸ் மெம்பர்கள் எதாவது விஷயத்தைப்பற்றி காங்கிரஸ் வாதிக்கவேண்டுமென்று விருப்பங்கொண்டால், காங்கிரஸ் நடைபெறும் தேதிகளுக்கு இரண்டுமாதத்திற்கு முன்னமே அவ்விஷயமாய் யூனியன் காரியதரிசிக்குத் தெரியப்படுத்த வேண்டியது.



**நடவடிக்கைகளைப் பற்றிய நோட்டீசு**

7. நிகழும் காங்கிரஸில் பேசவேண்டிய விஷயங்களை, காங்கிரஸ் மெம்பர்களுக்கு 6-வாரத்திற்கு முன்னமே எழுத்துமூலமாய் தெரியப்படுத்த வேண்டியது.

8. காங்கிரஸின் ஒவ்வொரு வருஷமீட்டிங்கிலும், கவர்னர், யூனியன் காங்கிரஸிலிருந்து 4 மெம்பர்கள் தனக்கு சத்யாலோசனை கம்மிட்டியாராக, தேர்ந்தெடுப்பார். இவர்கள் அடுத்த காங்கிரஸ் கூடுகிறவரையில் சத்யாலோசனை கம்மிட்டியாராகயிருப்பார்கள்.

**கவர்னர் ஆபீஸின் காலம்.**

9. கவர்னர் ஆபீஸின்காலம், இறந்து போவதாலும், ராஜிநாமா கொடுத்தலாலும், அல்லது யூனியன் காங்கிரஸிலுள்ள, மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்களின் அபிப்பிராயத்தாலும், முடிவு பெறும்.

**யூனியன் காரியதரிசி**

10. புரோவின்ஷியல் பாங்கியின் மானேஜர், இதற்கு கௌரவ காரியதரிசியாக கவர்னரின் உத்தரவின் கீழ் வேலைசெய்ய வேண்டும்.

**பொறுப்பு**

11. யூனியன் மெம்பர் ஒவ்வொருவரின் பொறுப்பானது, 12, 13, 14, 15, 16. 17, 23, 24, 25, 26, 27, 28 பைலாக்களிற் சொல்லியவரையில்தான்.

12. யூனியன் மெம்பராயிருக்கும், ஒவ்வொரு ஸென்ட்ரல் பாங்கியும், கோவாப்ரேடிவ் வருஷம் முடிவுபெறும் இரண்டு மாதத்திற்கு முன்னமே, யூனியன் கவர்னர் ஏற்படுத்திய பாரத்தில் அடியிற் கூறியவைகளைப்பற்றி எழுதி அனுப்பவேண்டியது.

**வருஷ பட்ஜட்**

i. அடுத்த கோவாப்ரேடிவ் வருஷத்தில் நியமிப்பதாய் உத்தேசம் செய்யும், யூனியன் வேலைக்காரர்களின் பெயர்களும், அவர்களின் சங்கியையும்,

ii. அவர்களின் சம்பளம்.

iii. பாங்கியின் சங்கங்களுக்கு, காகிதம், தபால் ஸ்டாம்பு முதலியவைகளை வாங்குவதற்கும், அச்சு அடிப்பதற்கும் வேண்டிய சுமாரான தொகை.

iv மேற்கூறிய செலவுகளுக்குப் பணம் கிடைக்கக்கூடிய வழிகள்.

**யூனியன் நிதிக்கு வருஷக் கொடை கொடுத்தல்**

13. ஒவ்வொரு ஸென்ட்ரல் பாங்கியும் அத்துடன் சேர்ந்த சங்கங்களும் வருஷந்தோறும் யூனியனது ஸ்திரமான பண்டுக்குக் கொடை கொடுக்க வேண்டும். அக்கொடையானது, 12-வது பைலா 2-வது 3-வது பிரிவினைகளிலும் ஏற்பட்ட தொகையில் காற்பங்குக்குக் குறையாமலிருக்க வேண்டும்.

**யூனியன் பண்டுகளை செலவு செய்தல்**

14. மேற் கூறியவை யல்லாத யூனியனது வேறு பண்டுகளை முதலில் யூனியன் செலவுக்கு உபயோகப் படுத்தவேண்டியது. பாக்கியை யூனியன் கவர்னர் சொல்லுகிறபடி பிரயோஜனப்படுத்த வேண்டியது.

15. 13-வது பைலாவிற் சொல்லிய வருஷக் கொடைகளை அதே ஸென்ட்ரல் பாங்கிகளுக்கு முறையே கொடுத்து, அவைகளின் பங்கு முதல்களை பெருகச் செய்யும்.

16. இப் பங்குகளின் தொகையை ஸென்ட்ரல் பாங்கிகள் வியாபாரத்தில் உபயோகப் படுத்தலாமே யொழிய, பங்குகளை யூனியன் பெயரில்தானிருக்கவேண்டும்,

**யூனியன் பங்குகளின் லாபம்**

17. யூனியன் பங்குகளால் கிடைக்கும் டிவிடெண்டுகளை கவர்னரிடம் கொடுக்கவேண்டும். அவர் அதை பஞ்ச இன்ஷியுரென்ஸ் நிதியாக நல்ல இடத்தில் போடுவார்.

**பஞ்சம் இன்ஷியுரென்ஸ் நிதி.**

18. பஞ்ச காலங்களில், விளைச்சல் மிகவும் குறைவாயிருக்கு மாதலால். பணம் வெளியில் கிடைப்பது சிரமம். இந்த பஞ்ச நிதியிலிருந்து புரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்கிக்கு பழைய வட்டி விகிதம் கடன் கொடுக்க யூனியன் கவர்னருக்கு அதிகாரமுண்டு. காலம் ஒழுங்கான பிறகு இப்பணத்தை வட்டியுடன் அப்பாங்கி திருப்பிக் கொடுக்க வேண்டியது.

**யூனியன் வேலைக் காரர்கள்**

19. கூட்டு முயற்சித் தொழிலின் வேலைகளில் பழகினவனென்றும், அவைகளைச் செய்யத் தகுந்தவனென்றும் யூனியன் கவர்னரிடம் யூனியன் ஸர்டிபிகேட்டைப் பெறாத வேலைக்காரனை எந்த கோவாப்ரேடிவ் பாங்கியாவது, சங்கமாவது நியமிக்கக் கூடாது. ஆனால் ரூபா 10-க்குக் குறைந்த சிறு வேலைக்காரர்களுக்கு இந்த ரூல் இல்லை.

**யூனியன் ஆடிட்டர்கள்**

20. யூனியன் ஆடிட்டர்கள், யூனியன் கவர்னருக்குக் கீழேயாவது, அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்ட யூனியன் ஆபீசருக்குக் கீழேயாவது எல்லா விஷயங்களிலும் இருக்கவேண்டும். ஆனால் இந்த ஆடிட்டர்கள் ரெஜிஸ்டிராரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

**யூனியனின் மற்ற வேலைக்காரர்கள்.**

21. யூனியனின் மற்ற வேலைக்காரர்கள் எந்த ஸெண்ட்ரல் பாங்கியில் வேலை செய்கிறார்களோ, அந்த பாங்கியின் கீழ் நடக்கவேண்டும்.

**யூனியன் வேலைக்காரர்களுக்கு பிராவிடெண்டு பண்டு.**

22 சம்பளம் வாங்கும் யூனியன் வேலைக்காரர்களெல்லாம் பிராவிடெண்டு பண்டுக்குப் பணம்செலுத்தவேண்டியது. அந்த பண்டின் விதிகளின்படி நடக்கவேண்டியது.

**பிராவிடெண்டு பண்டுக்குச் செலுத்தும் தொகை.**

23. யூனியன் வேலைக்காரர் ஒவ்வொருவரும் தன் சம்பளத்தில் 10ல் ஒரு பங்கை பிராவிடெண்டு பண்டுக்குச் செலுத்த வேண்டியது சம்பளம் கொடுக்கும்பொழுதே அதைப் பிடித்துக்கொள்வார்கள்.

**பிராவிடெண்டு பண்டு இருக்கும் வசம்.**

24. யூனியன் வேலைக்காரர்கள் எந்தெந்த பாங்கிகளில் வேலைசெய்து வருகிறார்களோ, அந்தந்த பாங்கிகளால் இவர்களின் பிராவிடெண்டு பண்டுகளை தங்கள் தொழில் முதலாக உபயோகப்படுத்தப்படும்.

**பிராவிடெண்டு பண்டின் வட்டி.**

25. பிராவிடெண்டு பண்டுக்கு 100-க்கு 6 விகித வட்டி வருஷந்தோறும், பண்டோடு சேர்க்கப்படும். யூனியன் வருஷமுடிவிற் கொடுக்கும் போனஸ் இத்துடன் சேரும்.

**பிராவிடெண்டு பண்டு பெறும் காலம்.**

26. எந்த யூனியன் வேலைக்காரர், 15வருஷம் வேலை செய்தும் குற்றங்கள் பண்ணினதாக தள்ளுபடியாகாமலிருக்கிறாரோ, அவர் வேலையைவிட்டு நீங்கும்பொழுது, இந்த பண்டை மொத்தமாய் வாங்கலாம்

27. எந்த யூனியன் வேலைக்காரர் 15வருஷத்திற்குள் இறந்து அல்லது தானாகவே வேலையைவிட்டு நீங்கிப்போகிறாரோ; அவர் செலுத்தின பணமும், அதின்மேல் 3 விகிதம் வட்டியும் அவருடைய வார்சதாராவது அல்லது அவராவது பெறக்கூடும்.



**மோசத்திற்கு சிக்ஷை.**

28. எந்த யூனியன் வேலைக்காரன், மோசம் முதலிய குற்றங்களுக்காக நீக்கப்படுகிறானோ, அவன் தன் பிராவிடெண்டு பண்டை வாங்குவதற்கு அருகனல்லன். ஆனால் யூனியன் காங்கிரஸ் சிபார்சு செய்தால், இவன் செலுத்திருக்கும் தொகையை பூராவாவது அல்லது அதில் ஓர் பாகமாவது கவர்னர் அவனுக்குக் கொடுப்பார்.

**வெகுநாள் புகழத் தகும்படி செய்த வேலை.**

29. எந்த யூனியன் வேலைக்காரர் 30 வருஷம் நன்றாய் வேலை செய்திருக்கிறாரோ, அவருக்கு மேற்கூறிய பிராவிடெண்டு பண்டைத் தவிர, வாங்கின கடைசி இரண்டு வருஷ சம்பளத்திற்கு மேல் போகாமல், யூனியன் காங்கிரஸால் வெகுமதியாகக் கொடுக்கப்படும்.

**யூனியன் கணக்குகளின் ஆடிட்.**

30. ஸெண்டரல் பாங்கியால் வைக்கப்பட்ட யூனியன் கணக்குகள், ரெஜிஸ்டிரார் டிபார்ட்டுமெண்டு ஆடிட்டரால் மற்றக் கணக்குகளுடன் வருஷந்தோறும் தணிக்கை செய்யப்படும்.

31. புரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் பாங்கியின் கணக்குகளை தணிக்கை செய்யும் ஆடிட்டர் தலைநகரிலிருக்கும் யூனியன் கணக்குகளை; அப்பொழுதே தணிக்கை செய்வார்.

32. யூனியன் பங்குகளும், பண்டுகளும் யூனியனின் ஸ்திரமான ஆஸ்திகள். அதைவிட்டு நீங்கும் மெம்பர்களுக்கு அவைகளில் யாதொரு பாத்தியமும் இல்லை.

33. கவர்னரும், சதியாலோசனை கம்மிட்டியாரும் ரிபோர்ட்டு செய்த பிறகு, எந்த பாங்கியாவது, அல்லது சங்கமாவது யூனியன் காங்கிரஸ் மெம்பர்களில மூன்றில் இரண்டுபாக மெம்பர்களின்வோட்டின் அபிப்பிராயத்தால் யூனியனிலிருந்து நீக்கப்படும். இப்படிச் செய்வதற்கு பைலா 7-ல் சொல்லியபடி நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டும்.

34. யூனியன் காங்கிரஸ் மெம்பர்களில் 3-ல் 2-பாக மெம்பர்களின் வோட்டின் அபிப்பிராயத்தா லொழிய, வேறு எவ்விதமாயும் இந்த பைலாக்கள் மாறுதலடையாது ஆனால் மாறுதலடைய வேண்டுமானால் 6-மாத நோட்டீஸ் இது விஷயமாய் எல்லா மெம்பர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

---

## ராஜப்பிரதிநிதி, வைஸ்ராய் அவர்களுக்கு சென்னை ஐக்கிய முயற்சிக்காரர்களின் டெபுடேஷன்,

1913-ம் வருஷம் நவம்பர்மாதம் 24 தேதியில், ஐக்கிய முயற்சிக்காரர்களின் ஓர் டெபுடேஷன் பாங்கட்டிங் ஹாலில் மாட்சிமைதங்கிய வைஸ்ராய் அவர்களின் பேட்டிக்கு காத்திருந்து, திவான்பகதூர் K. கிருஷ்ணஸாமி ராவ் C. I. E அவர்கள் சென்னை ஐக்கிய முயற்சிக்காரர்களின் நிமித்தம் வரவேற்பு வாசகம் பின்வருமாறு வாசித்தார்:—சென்னை ராஜதானியின் ஐக்கிய முயற்சிக்காரர்களாகிய நாங்கள் இம்மாகாணத்திற்கு, மாட்சிமைதங்கிய தங்கள் வரவை மிகுந்த மரியாதையுடன் ஏற்கிறோம். ஐக்கிய இயக்கத்தை ஆரம்பித்ததற்கும், அதற்கு மாட்சிமை பொருந்திய தாங்கள் கொடுக்கும் உதவிக்கும், இந்தியகவர்ன்மெண்டாருக்கு நாங்கள் இராஜவிஸ்வாசத்துடன் மிகுந்த வந்தன மளிக்கிறோம். இத்தேசத்தின் விவசாயிகளுக்கு மிகவும் நன்மையை பய

க்கக்கூடியதென்று, நமது மாட்சிமைபொருந்திய சக்கிரவர்த்தியார் முன்னமேகூறிய இக்கூட்டுமுறை இயக்கமானது, மாட்சிமைதங்கிய தங்கள் கவர்ன்மெண்டால் என்றும் குறையாத உதவிபெறுமென, நாங்கள் உறுதியாய் நம்புகிறோம்.

நல்வரவுப்பத்திரத்தை ஓர் சிறியபெட்டியில் வைத்து, மாட்சிமைதங்கிய வைஸ்ராயிக்கு சம்மானம் செய்யப்பட்டது. பிறகு திவான்பகதூர் கிருஷ்ணசாமி ராவ், டெபுடேஷனில் அடங்கிய மெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் வைஸ்ராய் அவர்களின் பேட்டி செய்வித்தார்.

மாட்சிமைதங்கிய வைஸ்ராய் அவர்களின் மறுமொழி பின்வருமாறு:—

சென்னை ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் பிரதிநிதியாக வந்திருக்கும் கனவான்களே? உங்களுடைய ராஜவிஸ்வாசமான பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள எனக்கு மிகவும் சந்தோஷம்.

இந்த ராஜதானியில் ஐக்கியமுறை ஸ்தாபனங்களின் அபிவிருத்தி மிகவும் திருப்திகரமாயும், மேன்மேல் வளர்ந்து ஓங்கும் ஸ்திதியில் இருக்கிறது. சென்னை ராஜதானியில் இதின் அபிவிருத்தியைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. ஏனென்றால் சென்னை உத்தியோகஸ்தர் ஒருவராகிய ஸர் பிடரிக் நிக்கல்ஸன்தான் முதல் முதலில் இவ்விந்தியா தேசத்திற்கு இம்முறையைக் கொண்டுவந்தார். இம்முறையின் அபிவிருத்தியாலுண்டாகும் பலவித நன்மைகள் எனக்குத்தெரியும். பொது ஜன நன்மைக்காக இவ்வேலையிற் புகுந்து உழைத்துவரும் நீங்கள், எடுத்துக்கொள்ளும் பிரயத்தனங்கள் கவர்ன்மெண்டாரின் உதவியை எப்பொழுதும் பெறுமென்று, உறுதியாய் நம்பலாம்.

## தென்கன்னடத்தில் ஐக்கியமுயற்சி

### புத்தூர் ஐக்கிய முயற்சிச் சங்கங்கள்.

தென்கன்னடம் ஜில்லாவில் புத்தூரைச் சுற்றிலுமுள்ள கிராமங்களில், கௌரவ சங்க ஸ்தாபனராகிய மிஸ்டர் மொல்ஹல்லி ஷிவராவ் அவர்களால், 10 கூட்டு முயற்சிச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு ரெஜிஸ்ட்ராரவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு சங்கத்தின் பைலாக்களை அந்தந்த கிராமவாசிகளுக்கு, அவராலும், அவருடன் வேலை செய்துவந்த புத்தூர் சங்கத்தின் பஞ்சாயத்தாராலும் நன்கு விளங்கச் சொல்லப்பட்டன. பொறுப்பு வரையறுக்காக் கடன்களின் இலக்ஷணங்கள் அவர்கள் மனதில் வற்புறுத்தப்பட்டன. சங்கங்கள் ஸ்தாபனம் செய்யவேண்டியது அவசியமென்று தோன்றினதாலும், அவைகளை நிர்வகிக்கத் தகுந்த கனவான்கள் கிடைத்ததாலும், அவர் ஏற்படுத்தினார்.

பணம் விஷயம் யோஜிக்குமிடத்து, 3 சங்கங்களுக்கு நகர பாங்கியின் பண உதவிதேவையில்லை. புத்தூர்ச்சங்கத்தில் டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்து விழுவதால், மற்றச் சங்கங்கள் இதின் மூலமாய் எளிதில் உதவிபெறும். அந்த ஜில்லாச் சங்கங்களுக்குப் பண உதவி செய்ய, புத்தூரில் ஓர் ஜில்லா கோவாப்ரேடிவ் பாங்கி ஒன்று ஏற்படுத்துவதாக உத்தேசம். அதின் பைலாக்கள் எழுதப்பட்டன. ரெஜிஸ்டர் செய்ய விண்ணப்பம் காலக்கிரமத்தில் ரெஜிஸ்ட்ராரவர்களுக்குக் கொடுக்கப்படும். அது ஏற்படும்வரையில், புத்தூர்ச் சங்கம் மற்றவைகளுக்குப் பணம் உதவிவரும்.

அந்த தாலூக்காவில் ஐக்கிய இயக்கத்தைப் பரவச்செய்வதில் கவலைகொண்ட புத்தூர்ச் சங்கமானது தன் சமீபத்திலுள்ள 7 சங்கங்களைத் தற்காலத்தில் மேல் விசா



ரணை, தணிக்கைகள் செய்துவரக்கூடும். இவ்விஷயமாய் சிப்பந்திகள் நியமிக்க, ஜில்லா பாங்கியின் பைலாக்களின் குறிப்பில், ஏற்பட்டிருக்கிறது. ஜில்லா பாங்கி ஏற்படாமற் போனால், எல்லாச் சங்கங்களையும் புத்தூருடன் சேர்த்து ஓர் யூனியனாக உண்டாக்கிவிடக்கூடும்.

### மாமண்டூர் கோவாப்ரேடிவ் மீட்டிங்.

கோவாப்ரேடிவ் சங்கங்களின் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் T. கிருஷ்ணஸாமி அய்யரின் வேண்டுகோளின்படி, சென்னை கார்பரேஷன் ரிவினியு ஆபீசராகிய மிஸ்டர் T. விஜயராகவாசாரியார் M. A. அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் மீட்டிங் கூடிற்று.

மாமண்டூர் சுற்றிலுமுள்ள, 17 சங்கங்களில், 12 சங்கங்களின் பிரதிநிதிகளும் அநேக மெம்பர்களும் மாமண்டூர் சத்திரத்தில் கூடினார்கள்.

அக்கிராசனாதிபதி உத்திரவின்படி, மிஸ்டர் T. கிருஷ்ணசாமி அய்யர், அந்த 17 சங்கங்கள் வேலைசெய்துவரும் ரிபோர்ட்டை வாசித்தார். தான் அவைகளை தணிக்கை செய்யும்பொழுது கண்ணுற்ற தவறுதல்களையும், அவைகளை இனிமேல் சீர்திருத்தும் வழிகளையும், எடுத்துச் சொன்னார். சங்கங்களிருக்கு மிடங்களில் ஐக்கியமுறை நோக்கங்களின்படி வழுவாமல் மெம்பர்கள் நடந்துவந்தாலொழிய, தங்களுடைய கஷ்டங்கள் நிவர்த்தியாகாதென்றார்.

மெஸர்ஸ் N. A. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்களும், T. வெங்கிடசுப்பய்யா அவர்களும் அவ்விஷயங்களைப்பற்றிப் பேசினபிறகு, அம்மாதிரி தப்பிதங்கள் வாராததற்கு வழிகளையும் சொன்னார்கள்.

அக்கிராசனாதிபதி, மீட்டிங் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதில், மற்ற கோவாப்ரேடிவ் கான்பரென்ஸுகள் போலல்லாமல், சங்கங்களின் தப்பிதங்களை மிஸ்டர் கிருஷ்ணஸாமி அய்யர் எடுத்து காண்பித்தது மிகவும் நல்லதென்றும், இம்மாதிரி மீட்டிங்குகள் பொது ஐக்கியத்திற்கும், தனிச்சங்கங்களுக்கும் மிகவும் நன்மையை பயக்குமென்றும், சங்கங்கள் நெருக்கமாயிருக்குமிடங்களில் இப்படி மீட்டிங்கள் அடிக்கடி கூடவேண்டுமென்றும், சொன்னார்.

## சேலத்தில் தோட்டிகளின் ஒரு கோவாபரேடிவ் சங்கம்.

சேலம் முனிசிபாலிடியார் அந்த முனிசிபாலிடியில் வேலைசெய்யும் தோட்டிகளின் சௌகரியத்திற்காக தனியே ஒரு கோ-ஆபரேடிவ் நாணயச் சங்கம் ஒன்று ஸ்தாபித்திருக்கிறார். அநேகமாய் எல்லா முனிசிபாலிட்டிகளிலும், தோட்டிகள் மார்வாரிகளிடத்திலும், சொற்பத்தொகையை அதிக வட்டிக்குக் கொடுத்து ஜீவனஞ்செய்யும் இதர வகுப்பாரிடத்திலும், சிக்கிக் கொண்டிருக்கிறார்களென்பது மறுக்கக்கூடாத விஷயம். முனிசிபாலிட்டியில் சம்பளம் கொடுக்கிற வரையில் தோட்டிகள் பொறுப்பதில்லை. அதற்கிடையிலேயே கடன்வாங்கிச் செலவு செய்கிறார்கள். சம்பளம் கிடைத்தவுடன் கடன்காரர்களிடம் கொடுத்துவிட்டு மீண்டும் கடன்வாங்கத் தலைப்படுகிறார்கள். இப்படி நாளடைவில் கடன் அதிகரித்துவிட்டால் ஒருவருக்கும் சொல்லாமல் ஓடிப்போய் விடுகிறார்கள். அப்போது முனிசிபாலிடி, ஆட்களின்றி வருந்த, ஜனங்களும் நகரத்தின் அசுத்தங்கள் வெளிப்படுத்தப் படாமையால் வருந்த நேரிடுகிறது. சேலம் முனிசிபாலிடியார், இவர்களின் கஷ்டத்தை யகற்றி, அவர்களிடத்தில் சிக்கனமுண்டாகும்படி செய்ய கைக்கொண்டிருக்கும் வழி புகழ்ச்சிக் குரியது. முனிஸிபல் செகிரிட்டெரி

யின் மேல்பார்வையின்கீழ், கோ ஆப்ரேடிவ் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது. அந்தச்சங்கம் வருஷத்துக்கு 100க்கு 7½ வட்டி வீதம் 2000 ரூபா ஜில்லா பாங்கியிலிருந்து கடனுக வாங்கி வைத்துக்கொண்டது. அப்பணத்திலிருந்து, தோட்டிகள் பட்டிருந்த பல சில்லரைக் கடன்கள் தீர்த்துவிடப்பட்டன. இதனுல் தோட்டிகள், கடன் கொடுத்தவர்களிடத்தில் படவேண்டிய உபத்திரவம் அவர்களிடம் இனிமேல் இராது.

சிலதோட்டிகளுக்குக் குடிசைகளும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இவைகள் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும் திருப்தியையும் கொடுக்குமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. தோட்டிகள் தற்போது கோ—ஆபரேடிவ் சங்கத்தில் வாங்கியிருக்கும் கடன்கள் அவர்களுடைய மாதச்சம்பளத்திலிருந்து சிறிது சிறிதாக வசூல் செய்யப்பட்டு வருவதால் கஷ்டமில்லாமலே அத்தொகை ஈடுபட்டுப்போம். இதர முனிசிபாலிடிகளும் இவ்விஷயத்தில் சேலம் முனிஸிபாலிடியைப் பின்தொடருவது விரும்பத்தக்கது.

---

# சென்னை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் கூட்டுமுயற்சிச்சங்கம் (லிமிடெட்:)

1912-13 வருஷத்திய ஆடிட் ரிபோர்ட்டு.

---

(1) 980—வது நெம்பர் சென்னை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் கூட்டு முயற்சிச் சங்கத்தினது 1912-13 வருஷத்தியக் கணக்குகளை ம-ா-ா-ஸ்ரீ A. வேதாசலமய்யர் B A அவர்கள் தணிக்கை செய்தார். அதன் வரவுசெலவு, லாப கஷ்டம், ஆஸ்தி கடன், ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2. அவ்வருஷத்திய நிகரலாபம் ரூ. 1040-11-11. இத்தொகையில் கால்பாகம் அதாவது ரூ. 260-3-0, க்ஷேமநிதியைச் சேரவேண்டியது. மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில், இந்த க்ஷேமநிதியைப் போடக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. இந்த இராஜதானியில் ஸர்க்கார் வேலைக்காரர்களின் நன்மையின் பொருட்டு ஏற்பட்டது இது முதற்சங்கம். அதின் அபிவிருத்தியை ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. நன்றாய் ஆரம்பித்திருக்கிறது. விசேஷமாய் எல்லா ஆபீசு வேலைக்காரர்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள். கடன் சிறிய சம்பளக்காரர்களுக்கு விசேஷமாய்க் கொடுக்க டைரெக்டர்கள் அதிக ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். இதுவரையில் கொடுபட்ட கடன் தொகையில், பாதிக்குமேல், ரூ. 50 க்குக் குறைந்த சம்பளக்காரர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

4. இவ்விதத் திருப்திகரமான ரிபோர்ட்டைப் பெறும் விதம் டைரெக்டர்கள் இச்சங்கத்தை நடத்திவந்ததை ரெஜிஸ்ட்ராரவர்கள் மிகவும் மெச்சினுர். அதின் காரியதரிசியான ம-ா-ா-ஸ்ரீ S. கிருஷ்ணமாச்சாரியார் B. A. அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமம் புகழத்தக்கது.



## சென்னைச்சட்ட நிரூபணசபையில் ஐக்கியமுறை விஷயங்களைப்பற்றி கேள்விகளும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

அடியிற்கண்ட கேள்விகள் 1913ம் ஞு நவம்பர்மாதம் 11 தேதியிற் கூடின சட்ட நிரூபண சபையில் கேட்கப்பட்டு, மறுமொழிகள் கூறப்பட்டன.

### ஆனரபில் ராவ்பகதூர் V. K. ராமானுஜாச்சாரியார் அவர்கள்.

கேள்வி—3. கவர்ன்மெண்டார் தயவுசெய்து அடியிற் கூறியவைகளுக்கு உத்தரம் சொல்லுவார்களா?

(a) கோவாப்ரேடிவ் ஸெண்ட்ரல் பாங்கிகளில், டிரஸ்ட்பெண்டுகளை (Trust funds) டிபாஸிட்டு செய்ய அதிகாரமுண்டாக இந்தியன் டிரஸ்ட்டுஸ் ஆக்ட்டை சீர்திருத்தஞ் செய்யவேண்டி, சென்னை மாகாண ஐக்கிய முயற்சிக்காரர்களது முதல் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை, கவர்ன்மெண்டார் கவனிப்பார்களா?

(b) இவ்விஷயத்தில் அவர்கள் ஏதாவது நடவடிக்கை யெடுத்துக்கொண்டிருக்கிறார்களா?

(c) இம்மாதிரியே, கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஆக்ட் (Court of wards Act) சீர்திருத்தப்படுமோ?

மறுமொழி—3—மேற் கூறப்பட்ட தீர்மானத்தை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பாததினுல், நடவடிக்கைகள் அவ்விஷயமாய் எடுத்துக்கொள்ளவில்லை. அந்தப் பிரஸ்தாபத்தைப்பற்றி, ரெவினியு போர்டார், கோர்ட் ஆப் வார்ட்ஸ், இவர்களின் அபிப்பிராயம் கேட்கப்படும்

### ஆனரபில் மிஸ்டர் B. V. நரசிம்ம அய்யர்.

கேள்வி—39:—டிரஸ்ட்டு பண்டுகளை டிபாஸிட்டு பெற உத்திரவுபெற்ற ஹைகோர்ட்டு ரூல்களிற் சொல்லிய பாங்கிகளில், ஜில்லா அர்பன் கோவாப்ரேடிவ் பாங்கிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென கோயமுத்தூர் ஸர்க்கில் கான்பரென்ஸில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை, அக்கான்பரென்ஸின் காரியதரிசி ரெஜிஸ்ட்ராரவர்களுக்கு அனுப்பி, இது விஷயமாய் ஹைகோர்ட்டாரையும், கவர்ன்மெண்டாரையும் எழுதிக் கேட்க அவரைக் கேட்டுக்கொண்டாரா?

(d) ரெஜிஸ்ட்ராரவர்கள் இவ்விஷயமாய் நடவடிக்கைகள் ஏதாவது எடுத்துக்கொண்டாரா?

(c) கவர்ன்மெண்டார், ரெஜிஸ்ட்ராரவர்களையும், அட்வகேட்டு ஜெனரல் அவர்களையும் கலந்துகொண்டு ஹைகோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்ய தயவுசெய்வார்களா?

மறுமொழி—39 (a) (b) ம்:—கான்பரென்ஸு காரியதரிசி ரெஜிஸ்ட்ராரவர்களுக்கு அனுப்பின விஷயம் கவர்ன்மெண்டாருக்குத் தெரியாது.

(c) கவர்ன்மெண்டாரால் அவ்விஷயம் யோஜனை செய்யப்படும்.

### ஆனரேபில் மிஸ்டர் V. S.. ஸ்ரீனுவாஸ சாஸ்திரியார்.

கேள்வி—97 (a) சிவில் சர்வீஸ் ரெகுலேஷன்ஸ் மதராஸ் ஸப்ளிமெண்டில் சொல்லியபடி, கோவாப்ரேடிவ் சங்கங்களின் கௌரவ ஸ்தாபனர்களுக்கு நான் ஒன்

றுக்கு ஒரு ரூபாய் படியும், ரெயில் வழியாய்ச் சென்றால் இரண்டாவது வகுப்புச் சார்ஜ் ஒன்றும், பிரயாணம் 20 மயிலுக்கு மேற்பட்டால் ஒவ்வொரு மயிலுக்கு அணா 2. படியும், கொடுத்துவருகிறது உண்மையா?

(b) கௌரவ ஸ்தாபனர்களாய் இப்பொழுது வேலை செய்துவருபவருடைய வும், இனி வேலை செய்யக்கூடியவருடையவும், அந்தஸ்துக்களை உத்தேசித்து, சிவில் சர்விஸ் ரெகுலேஷன்ஸில் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளுக்கு விதித்தபடி, நாளுக்கு ரூ. 3 படியும், இரண்டு இரண்டாவது வகுப்பு ரெயில் சார்ஜும், 5 மயிலுக்கு மேற்பட்ட பிரயாணத்திற்கு மயில் ஒன்றுக்கு அணா 4-ம், இவர்களுக்கும் கொடுக்க கவர்ன்மெண்டார் தயவுசெய்து உத்திரவு செய்வார்களா?

மறுமொழி (a) ஆம்.

(b) இப்பொழுது இருக்கும் படி ஜாப்தா, ரெஜிஸ்ட்ராரவர்கள் சிபார்சின் பேரில்தான் ஏற்பட்டது. இப்பொழுது இதை மாற்றத்தகுந்த காரணம் இல்லை யென்று கவர்ன்மெண்டாரால் நினைக்கப்படுகிறது.

கேள்வி—39 (a) கோவாப்பரேடிவ் சங்கங்களின் இன்ஸ்பெக்டர்களுக்கு, (ரூ. 60 லிருந்து ரூ. 150 வரையில் சம்பளம் வாங்குபவர்களுக்குக்கூட) வேலைக்காரன் ஒரு வன் கொடுக்கிறதில்லையென்பது உண்மையா?

(b) ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் ஒரு பியுன் கவர்ன்மெண்டார் தயவு செய்து கொடுப்பாரா?

மறுமொழி (a) ஆம்.

(b) இன்ஸ்பெக்டர்களுக்கு பியுன்கள் கொடுப்பது, அவசியமென்று கவர்ன் மெண்டார் நினைக்கவில்லை.

கேள்வி—99. கூட்டுத்தொழில் வேலையை உத்தேசம் பண்ணி இந்த ராஜதானி யைப் பிரிவினை செய்த ஒவ்வொரு ஸெக்ஷனில், சென்ற ஜூன் மாதம் 30-ந்தேதி வரையில், ரெஜிஸ்ட்டர் செய்யவேண்டி அனுப்பப்பட்டு இன்னும் பைசலாகாத விண் ணப்பங்களின் சங்கியையும், அந்தத் தேதியுடன் முடிவுபெற்ற கோவாப்ரேடிவ் வரு ஷத்தில் ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட சங்கங்களின் சங்கியையும், கவர்ன்மெண்டார் தயவுசெய்து சொல்லுவார்களா?

மறுமொழி 99:—அதற்கு வேண்டிய தகவல் பின்வருமாறு:—

| | 1913௵ ஜூன் மீ 30 தேதி வரையில், பைசலாகாத விண்ணப்பங்களின் சங்கியை. | சென்ற கோவாப்ரேடிவ்வருஷத்தில் ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட சங்கங்களின் சங்கியை |
|---|---|---|
| ரெஜிஸ்ட்ரார் ஸெக்ஷன் | 111 | 23 |
| திருச்சிறாப்பள்ளி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ஸெக்ஷன் | 244 | 52 |
| பெஸ்வாடா அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ஸெக்ஷன் | 327 | 11 |
| வேலூர் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ஸெக்ஷன் | 195 | 20 |
| மொத்தம் | 881 | 106 |



பைசலாகாத விண்ணப்பங்களில் சிலது ரெஜிஸ்ட்டராகக்கூடாதவைகளுமிருக் கின்றன.

மிஸ்டர் ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள், பெஸ்வாடா வேலூர் ஸெக்ஷன்களில், பைசலாகாத விண்ணப்பங்களின் சங்கியைக்குத் தகுந்தபடியல்லாமல், ரெஜிஸ்ட்டரான சங்கங்களின் சங்கியை மிகவும் குறைவாயிருப்பதின் காரணம் என்னவென்று கேட் டார்.

ஆனரபில் மிஸ்டர் அட்கின்ஸன் அவர்கள் இக்குறைவுக்கு அநேக காரணங்க ளிருக்கின்றனவென்றும், அவைகளில் விண்ணப்பங்கள் பூர்த்தியாக எழுதப்படாம லிருப்பது ஓர் காரணமென்றும் மறுமொழி சொன்னார். இவ்விஷயத்தில் சீக்கிரம் கவனமெடுத்துக் கொள்ளப்படுமென்று உறுதியாய்ச் சொன்னார்.

---

# தணிக்கை உத்திரவுகள்.

---

## மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன்பாங்கி லிமிடெட்.

## 1912-13 ௵த்திய தணிக்கை உத்திரவு.

மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியினது 1912-13 வருஷத்தியக் கணக்குகளை அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராராகிய ம-ா-ா-ஸ்ரீ A. வேதாச்சலமய்யர் B. A. அவர்கள் தணிக்கை செய்தார். அதின், வரவு செலவு, லாப நஷ்டம், ஆஸ்திக்கடன் ஸ்டேட் மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2. அவ்வருஷத்தில் பாங்கியின் நிகரலாபம் ரூ. 52,090-4-7. பாங்கியின் 17-வது பை. லாவின்படி, நிகரலாபத்தில் 8-ல் 3-பங்கு—அதாவது ரூ 19,533-13-9. க்ஷேமநிதிக்குக் கொண்டுபோகவேண்டியது. இத்தொகையை மதராஸ்பாங்கியில் போட கேட்டுக் கொள்ளப்பட்டது. லாபத்தில் பாக்கயிருக்கும் தொகையை அதாவது ரூ. 32,356-6-10, பாங்கு தீர்மானிக்கும் பிரகாரம், டிவிடெண்டு, போனஸ், முதலிய வைகளுக்கு உபயோகப்படுத்தப்படும்.

3. ரெஜிஸ்ட்டரான சங்கங்களின் சங்கியை அவ்வருஷத்தில் மிகவும் குறைவா யிருந்த போதிலும், பாங்கியின் லேவாதேவிகள் அதிகரித்தன. பாங்கியின் டிபாஸிட்டு கள் (மதராஸ், இந்தியன், பாங்கிகளிலிருந்து எடுத்த தொகையுள்பட) ரூ. 18·99 லக்ஷ த்திலிருந்து, ரூ. 32·16 லக்ஷத்திற்கும். கடன் வாங்கின தொகையின் வட்டி ரூ. 0·78 லக்ஷத்திலிருந்து, ரூ. 1·09 லக்ஷத்திற்கும், சங்கங்களிலிருந்தும், மெம்பர்களிட மிருந் தும் வரவேண்டிய தொகை ரூ. 20·91 லக்ஷத்திலிருந்து ரூ. 23·81 லக்ஷத்திற்கும் அதி கரித்தன.

சங்கங்கள், ஸெண்ட்ரல் பாங்கியிலிருந்து வாங்கின கடனில் திருப்பிக்கொடுத் தது சென்ற வருஷத்தில் ரூ. 2·17 லக்ஷம், ஆனால் இவ்வருஷத்தில் ரூ. 3·60 லக்ஷம். இதனால், சென்ற வருஷத்தில் கடன் வசூலாகாமல் நிலுவையிலிருந்த தொகை ரூ. 2·79 லக்ஷமானது, இவ்வருஷத்தில் ரூ. 1·89 லக்ஷத்திற்குக் குறைந்துவிட்டது. நிகர லாபமானது 100-க்கு 22·6 விகிதம் அதிகரித்தன. அபராதவட்டி சென்ற வருஷத்தில் ரூ. 362-ம் இவ்வருஷத்தில் ரூ. 673-0-0 வசூல் செய்யப்பட்டன. முதலிற் கூறிய வட்டியானது, 1912-13 வருஷம் ஆரம்பத்திலுள்ள கடன் நிலுவைத்தொகை யாகிய

ரூ. 14·13 லக்ஷத்தின் பேரிலும், பின் கூறிய வட்டி 1912-13 வருஷம் ஆரம்பத்திலுள்ள கடன் நிலுவை ரூ. 20·68 லக்ஷத்தின் பேரிலும் வசூலிக்கப்பட்டன

4. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரின் ஆடிட் ரிபோர்ட்டு 22-வது பாராவில் கூறிய வைகளுக்கு பாங்கியின் கவனம் செலுத்தப்படவேண்டும். அதில் பாங்கியின் ஆலோசனைக்கு சில சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

முதலாவது.—மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கி சடன் கொடுக்கும் தொகையின் வட்டியைக்குறைக்க காலம் வந்துவிட்டதென்று ரெஜிஸ்ட்ராரவர்கள் நம்புகிறார்

இரண்டாவது:—வட்டி கணக்கிடும் பொழுது, 15 நாட்களுக்குக் குறைந்த தினங்களை 15 நாள் என்று கணக்குச் செய்யாமல், வட்டி கொடுக்கவேண்டிய தினங்களை மாத்திரம் கணக்கிடும்படியாக, பாங்கிக்கு யோசனை சொல்லப்படுகிறது.

மூன்றாவது.—எல்லா நடவடிக்கைகளில், இதரச்செலவுகளுடன் அணா ஒன்று அதிகமாய் வாங்குவதை நிறுத்தவேண்டும்.

நான்காவது.—ஸெண்ட்ரல் பாங்கியில் டிபாஸிட்டு செய்த சங்கங்களின் க்ஷேமநிதிக்கு 100-க்கு 5 விகித வட்டிக்கு அதிகம் கொடுக்க யோசனை செய்வது தகுதியான காரியம்.

ஐந்தாவது.—ஸெண்ட்ரல் பாங்கியானது விசாரிக்கும் உத்தியோகஸ்தரை ஒருவருக்குக் குறையாமல் நியமிக்கவேண்டுமென்று ரெஜிஸ்ட்ராரவர்கள் மறுபடியும் வற்புறுத்துகிறார். 1912-ம்வருஷம் செப்டம்பர்மாதம் 7-ந்தேதியிற்கூட்டிய பங்குக்காரர்களின் மீட்டிங்கில், பாங்கியின் பிரசிடெண்டு அவர்கள் கூறிய இவ்யோசனையின் ஆக்ஷேபணைகளை ரெஜிஸ்ட்ராரவர்கள் வாசித்தார் இதர ஜில்லாக்களில்இந்தபாங்கியின் வேலாதேவிகளைப் பாதுகாக்க, இப்பொழுது ரெஜிஸ்டராரும் அவருடைய சிப்பந்திகளும் அதற்கு வேண்டிய விஷயமாய் வெளியில் விசாரித்து வருகிறார்கள். விசாரிக்கும் செலவில் கவர்ன்மெண்டாருக்கு பாங்கியானது ஒத்துக்கொடுக்கவேண்டுமென்பதற்கு, பாங்கியின் லேவாதேவிகள் விசாலித்திருக்கின்றன என்று பதில் சொல்லுகிறார்கள். பணம் உதவப்படும் சங்கங்கள் அதிகமாகவேற்பட கவர்ன்மெண்டாருக்குச்செலவு அதிகமாகின்றது. இன்னும் அநேக வருஷங்களுக்கு கவர்ன்மெண்டார் இச்செலவை தாங்களே பொறுக்கவேண்டுமென்று பாங்கி விரும்பப்படுகிறது

வருஷந்தோறும், டிவிடெண்டு 12 விகிதம் கொடுத்தபிறகு பாக்கியுள்ள லாபத் தொகையை ஒன்று சேர்த்துக்கொண்டு இப்படிச் சொல்வது அழகல்ல. பாங்கியின் உத்தியோகஸ்தர்களுக்கு சங்கங்களின் கணக்குகளை சோதனை செய்ய அதிகாரமில்லையென்னும் ஆக்ஷேபணையானது, கவர்ன்மெண்டார், அவர்களுக்குத்தகுந்த அதிகாரம்கொடுத்துவிட்டால், நிவர்த்தியாகும். பம்பாயிலுள்ள ஸெண்ட்ரல் பாங்கியானது விசாரிக்கும் உத்தியோகஸ்தர் ஒருவரை நியமித்ததாக, வருஷாந்திர ரிபோர்ட்டில் ரிஜிஸ்டிராரவர்கள் எழுதியிருப்பதை கவனிக்கவேண்டும் சென்னை ஸெண்ட்ரல் பாங்கி இதற்கு சம்மதமில்லாமலிருந்தால், தன் லேவாதேவிகளைப் பார்த்துக்கொள்ள ஜில்லா பாங்கிகளுக்காவது அதிக கமிஷன் கொடுக்கவேண்டும்.

5. பாங்கியானது மிகவும் திருப்திகரமாய் வேலை செய்துவருவதால், அதை மிகவும் பிரபலம் செய்ய உத்தேசித்து மேற்கூறிய யுக்தங்களை ரெஜிஸ்ட்ராரவர்கள் சொல்லுகிறார். இந்த பாங்கியின் உதவியால், சென்னை ஐக்கிய இயக்கம் மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. பாங்கியின் டைரெக்டர்களும் நிர்வாக உத்தியோகஸ்தர்



களும் சுயநலம் பாராமல் பாங்கியின் வேலைகளை நடத்திவந்தது மிகவும் மெச்சத்தகுந்தது.

## மதுரை ராமநாதபுரம் ஸெண்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கி (லிமிடெட்)
## 1912-13-வருஷத்திய தணிக்கை உத்திரவு.

30—6—13-யில் முடிவுபெற்ற கோவாப்ரேடிவ் வருஷத்திய, மதுரை ராமநாதபுரம் ஸெண்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியின் கணக்குகள் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டி. என். ராமசந்திர ராவ் அவர்களால் தணிக்கை செய்தபடி, அங்கீகரிக்கப்பட்டன.

2. அவ்வருஷத்தில் பாங்கியின் நிகரலாபம் ரூ. 3,057-3-10; பைலா 21-ல் கூறியபடி இந்த லாபம் அடியிற் கண்டபடி பிரிபடவேண்டியது:—

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| 1. | க்ஷேம நிதி ... | ... 764—4—11. |
| 2 | காரியதரிசிக்கு வெகுமதி ... | ... 382—2—5. |
| 3. | டிவிடெண்டுக்கும், போனஸுக்கும் கொடுபடவேண்டிய தொகை | ... 1910—12—6. |

100-க்கு 9 விகிதத்திற்குமேல் டிவிடெண்டு கொடுக்கக்கூடாதென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள தொகையை டிவிடெண்டு சமப்படுத்தும் நிதிக்கு கொண்டுபோகவேண்டியது.

3. பாங்கியானது ஆரம்பத்திலேயே ஒழுங்காயிருக்கிறது. அதின் டைரெக்டர்களில் இரண்டுபேர்கள் மெஸ்ஸர்ஸ் ஆர். அனந்தராவ் அவர்களும், கே. ராமஸாமி அய்யர் அவர்களும், தங்களுக்கு அவகாசமுள்ள காலங்களில் பரிசோதனை செய்து வருகிறார்கள். இவ்வகை சோதனை செய்தல் போதாது. பாங்கியானது தன்னுடன் சேர்ந்த சங்கங்களை ஏற்பாடாய் சோதனை செய்துவரத் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வளவு குறைந்த காலத்தில், இச்சங்கத்தை மிகவும் அபிவிருத்திக்கு வரும்படி, டைரெக்டர்கள், விசேஷமாக ம-௱-௱-ஸ்ரீ கே. ராமஸாமி அய்யர் அவர்கள், பாங்கியின் வேலையை நடத்திவந்தது மிகவும் புகழத்தக்கது. இந்த ராஜதானியிலுள்ள ஜில்லா கோவாப்ரேடிவ் யூனியன்களில், முதன்மையாயிருப்பவைகளில் ஒன் இச்சங்கம் உயர்ந்து விளங்குவதில் ஆக்ஷேபணையில்லை.

## தஞ்சாவூர் ஜில்லா கோவாப்ரேடிவ் ஸெண்ட்ரல் பாங்கி (லிமிடெட்)
## 1912-13-ம் வருஷத்திய தணிக்கை உத்திரவு.

தஞ்சாவூர் ஜில்லா கோவாப்ரேடிவ் ஸெண்ட்ரல் பாங்கியின் அவ்வருஷத்தியக் கணக்குகள், இன்ஸ்பெக்டர் மிஸ்டர் சி. கோவிந்தஸாமி முதலியாரவர்களால் தணிக்கை செய்தபடி அங்கீகரிக்கப்பட்டன.

2. பாங்கியின் வருஷத்திய நிகரலாபம் ரூ. 339-8-0; பைலா 20-இன் பிரகாரம் மேற்கூறிய லாபம் பின்வருமாறு பிரிக்கப்படவேண்டியது.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | க்ஷேமநிதி ... ... ... ... | 84 | 14 | 1 |
| 2. | காரியதரிசிக்கு வெகுமானம் ... ... | 42 | 7 | 0 |
| 3. | டிவிடெண்டு, போனஸ், தர்மகாரியங்கள் முதலான இவைகளுக்குப் பிரிபட வேண்டிய தொகை ... | 212 | 8 | 4 |

3. இந்த பாங்கி ஏற்பட்டு 5 மாதம்தான் வேலை செய்திருக்கிறது. நன்றாய் ஆரம்பித்திருக்கிறது. காரியதரிசி மிக்க ஊக்கத்துடன் வேலைசெய்து வருகிறார். பாங்கியின் நடவடிக்கைகளில், நிர்வாக கம்மிட்டி மெம்பர்கள் பொறுப்பு எடுத்துக் கொள்ளுவதாகத் தோன்றுகிறது. இது மிகவும் மெச்சத்தக்கது. இப்பாங்கி யேற்படும்பொழுது, ஸ்தல டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்து விழுமென்று எண்ணப்பட்டது. நினைத்தபடி முழுவதும் பூர்த்தியாகவில்லை. ஆனால், மற்ற ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருந்தும் கடன் வாங்காதபடி, இனி ஸ்தல டிபாஸிட்டுகள் நிரம்பவந்து விழுமென்று நம்பப்படுகிறது.

## சேலம்ஜில்லா அர்பன் பாங்கி, (லிமிடெட்)
## 1912-13 ௵த்திய தணிக்கை உத்திரவு.

சேலம் ஜில்லா அர்பன் பாங்கியின் 1912-13 ௵த்தியக் கணக்குகள் மிஸ்டர் ஆர். தேசிகாசாரியார் அவர்கள் தணிக்கை செய்தபடி, அங்கீகரிக்கப்பட்டன.

2 பாங்கியின் நிகரலாபம் ரூ. 6742-14-10; அது 19-வது பைலாவிற் சொல்லியபடி, கீழ்க்கூறியவிதம் பகுபட வேண்டியது:—

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. க்ஷேமநிதி ... ... ... ... | 1685 | 11 | 9 |
| 2. காரியதரிசிக்கு வெகுமானம் ... ... | 300 | 0 | 0 |
| 3. டிவிடெண்டாகப் பிரித்துக்கொடுக்கும் தொகை ... | 4737 | 8 | 1 |
| | 6742 | 14 | 10 |

3. பெரிய இன்ஸ்பெக்டர் காண்பித்த குறைவுகளை பாங்கியானது கவனிப்பதோடு, வேண்டிய கணக்குகளையும் ரிஜிஸ்டர்களையும் ஒழுங்காய் வைத்துக்கொள்ள வேண்டும்.

4. க்ஷேமநிதித் தொகையாகிய ரூ. 1685-11-9-ல் மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியால் 1913-௵ ஜூன் மாதமுடிய கொடுக்கப்பட்ட வட்டி ரூ. 90-14-1 போக, பாக்கியுள்ள ரூ. 1594-15-8, தொகையை மேற்கூறிய பாங்கியில்போட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் க்ஷேமநிதியின் மொத்த தொகை இதுவரையில் ரூ 5137-2-9.

5. காரியதரிசியான மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் அவர்கள் மிக்க ஊக்கத்துடன் பாங்கியை நிர்வகித்து வந்திருக்கிறார். பாங்கியானது பங்குக்காரர்களுக்கு நல்ல டிவிடெண்டு கொடுத்தபோதிலும், இந்தியன் பாங்கியிலிருந்து வாங்கின கடனை சீக்கிரத்தில் அடைக்கப் பிரயத்தினம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

## தெனாலிஜில்லா அர்பன் பாங்கி (லிமிடெட்)
## 1912-13 ௵த்திய தணிக்கை உத்திரவு.

தெனாலிஜில்லா பாங்கியின் 1912-13 ௵த்தியக் கணக்குகள், இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் வி. பாஸ்கரராவ் நாயுடுகாருவாலால் தணிக்கை செய்தபடி அங்கீகரிக்கப்பட்டன.



2 பாங்கி வேலைசெய்ய ஆரம்பித்து 3 வருஷமாகின்றது. இவ்வருஷ ஆரம்பத்தில் 61 மெம்பர்களும், முடிவில் 67-ம் இருந்தார்கள்; பங்கு திரவியமானது ரூ. 3,500 லிருந்து ரூ. 3,900க்கு அதிகரித்தது. ஸ்தல டிபாஸிட்டுகள் மிகவும் குறைவு; இதர ஸெண்ட்ரல் பாங்கிகளிடமிருந்து ரூ 60,500 கடன்வாங்கி யிருக்கிறது. சங்கங்களின் க்ஷேமநிதி டிபாஸிட்டுகளின் தொகை ரூ. 6994-14-6.

8. பாங்கியின் வருஷத்திய நிகரலாபம் ரூ. 550-14-3; 17-வது பைலாவிற் கூறியபடி பின்வருமாறு பகுபடவேண்டியது:—

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. க்ஷேமநிதி (நான்கில் ஓர் பங்கு) ... ... | 137 | 11 | 7 |
| 2. காரியதரிசியின் வெகுமதி (எட்டில் ஓர் பங்கு) ... | 68 | 13 | 10 |
| 3. பொதுநன்மை நிதி (எட்டில் ஓர் பங்கு) ... | 68 | 13 | 9 |
| 4. டிவிடெண்டாய்க் கொடுக்கவேண்டிய தொகை ... | 275 | 7 | 1 |

பழைய வட்டியாகிய 0-5-7 போக, பாக்கியாயுள்ள க்ஷேமநிதி ரூ 137-6-0 யை மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியிற் போடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. க்ஷேம நிதியின் மொத்தம் இத்துடன் ரூ 223-0-6 யாயிற்று.

4. 1912௵த்திய 2-வது ஆக்ட்டு 34-வது பிரிவினைப்படி நிகரலாபத்தில் ரூ 100க்கு ரூ $7\frac{3}{4}$ விகிதத்திற்குமேல் பொது நன்மைநிதிக்குக் கொண்டுபோகக் கூடாது. இப்பொழுது சேர்க்கப்பட்ட ரூ. 68-13-9 தொகையில், சட்டத்திற் கூறிய தொகையைக் காட்டிலும் ரூ. 27-8-9 அதிகமாயிருக்கிறது. இத்தொகையை வேறுவழியில் செலவுசெய்யலாம். 17-வது பைலாவை தகுந்தபடி சீர்திருத்தஞ் செய்ய, பாங்கியைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது

## மற்ற தேசங்களில்

### ஜர்மனி.

1911-௵த்தில் 7,831 பாங்கிகளின் மொத்த விற்பனைத்தொகை பவுன் 5,550,457. அவ்வருஷத்தில் 15,126 ஜெர்மன் நாணயச் சங்கங்களை நடத்துவதில் உண்டான சராசரி (ஒவ்வொரு சங்கத்திற்கும்) ச்செலவு பவுன் 36. 11 ஷி. சுமார் 15,850 நாணயச்சங்கங்க ளிருக்கின்றன. 13,943 சங்கங்களின் டிபாஸிட்டுகள் பவுன் 100,000,000 க்கு உயர்ந்திருக்கின்றன; வெளியில் கடன் கொடுத்த தொகை சுமார் 97,000,000பவுன்; அவைகளின் ஆஸ்திகள் பவுன் 123,327,955; அவைகளின் கடன்கள் பவுன் 122,909,760; அவைகளின் லாபங்கள் பவுன் 545,160; நஷ்டங்கள் (செலவுகள்) பவுன் 115,225. ஜெர்மனி தேசத்தில் கூட்டுமுறை விவசாயச் சங்கங்கள் எல்லாப் பக்கங்களிலும் உண்டாயிருக்கின்றன. 2,388 ஜர்மனியர்களுக்கும், 8,220 ஜர்மன் நகர்களுக்கும், ஓர் சங்கம் விகிதம் ஏற்பட்டிருக்கிறது.

### இங்கிலாந்து.

சென்ற மார்ச்சு மாதம் 31-ந்தேதி வரையில், ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களின் சங்கியை 456; அவைகளில் 163 சங்கங்கள் வேண்டியசாமான்கள் வாங்குவதற்கும், 38 சங்கங்கள் கோழிமுட்டைகள் வியாபாரம் செய்வதற்கும், 26 பாற்சாலைச் சங்கங்களும் 229 சங்கங்கள் வேறு பற்பல லக்ஷியங்களுக்கும் ஏற்பட்டன. 37,264 மெம்பர்களிருந்தார்கள். மொத்த விற்பனையின் தொகை பவுன் 1,828,432. சிறு குடித்தனக்

காசர்களுக்கு, நிலம் நிதானமான கிரயத்திற்கு வாங்கிக்கொடுக்க சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளுக்கு அதிக இடைஞ்சலிருப்பதால், அபிவிருத்தியடையவில்லை. இம்மாதிரிச் சங்கங்கள் விருத்தியடைந்தால் இங்கிலாந்து தேசத்திற்கு க்ஷேமமுண்டு,

### அயர்லாந்து.

1911-ம் வருஷத்தில் 45,725 மெம்பர்களடங்கிய, பவுன் 146,870 திரவியத்தையுடைய 326 ஐக்கிய முயற்சி (வெண்ணெய் யெடுக்கும்) சங்கங்களிருந்தன; 18,738 மெம்பர்களடங்கிய பவுன் 6,854 திரவியத்தையுடைய 171 வியாபாரச் சங்கங்களும் 19,505 மெம்பர்களடங்கிய, பவுன் 56,554 திரவியத்தையுடைய 236 நாணயச் சங்கங்களும் 1325 மெம்பர்களடங்கிய பவுன் 706 முதலுள்ள 20 வீட்டுத்தொழில் விருத்தி செய்யும் சங்கங்களும், 18 கோழிகள் விருத்திசெய்யும் சங்கங்களும் வேறு வகை 31 சங்கங்களுமிருந்தன. 249 மெம்பர்கள் சேர்ந்த பவுன் 8,517 திரவியத்தையுடைய 2 பீடரேஷின்கள் இருந்தன.

---

## ஸர்க்குலர்

### 1913-ௗ அக்டோபர் ௴ 13உ-யில் உத்திரவு செய்யப்பட்ட ஆர். ஓ. ஸி. நெ. 2035.

ரெஜிஸ்டிரேஷன் இலாகாவில் ஜனங்களின் நன்மையை உத்தேசித்து கொடுக்கப்பட்ட உதவிகளை, சில ஐக்கிய முயற்சிச்சங்கங்களின் பிரசிடெண்டுகளும் காரியதரிசிகளும் வேறுவழியில் எடுத்துக் கொள்ளுகிறார்களெனக் கேட்க ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரவர்கள் அனுதாபப்படுகிறார். ஈட்டு தஸ்தவேஜின் ஸர்டிபிகேட்டை வாங்க சப் ரெஜிஸ்ட்ராருக்கு விண்ணப்பம் கொடுப்பதில், ஓர் சங்கத்தின் பிரசிடெண்டு, நாகரீகமான வாசகம் எழுதவில்லையென்று ரெஜிஸ்டிராரவர்களுக்கு ரிபோர்ட்டு செய்யப்பட்டது. இன்ஸ்பெக்ட்டர்கள் சங்கங்களைப் பார்வையிடும் காலங்களில், அவைகளின் பிரெஸிடெண்டுகளும் காரியதரிசிகளும் தங்கள் வேண்டுகோளை மரியாதையான வாசகங்களிலெழுதவும், இனிமேல் மேற் கூறிய முறைப்பாடுகள் வராமலிருக்கவும்படி பார்க்க அவர்களைக்கட்டாயப் படுத்தவேண்டியது.

அநுபந்தம்.

# மத்திய மாகாணங்கள், பேரார் இரண்டாவது மாகாணக் கூட்டு முயற்சி கான்பரென்ஸ்.

---

இரண்டாவது மாகாண ஐக்கிய முயற்சிக் கான்பரென்ஸ் சென்ற செப்டம்பர் மாசம் 15ௗ தேதி ஜப்பல்பூரில் கூடிற்று. அப்பொழுது அநேக பிரமுகர்களும், அம்மாகாணங்கள் ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரும், சீப் கமிஷனரும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

மத்திய மாகாணங்கள், பேராரின் சீப் கமிஷனராகிய ஆனரபில் ஸர் பென்ஜமின் ராபர்ட்ஸன், K. C. S. I., C. I. E., கான்பரென்ஸ் சபையைத் திறக்கும்பொழுது பேசின பிரசங்கத்தின் சாராம்சம் பின் வருமாறு :—

"சுமார் ஒருவருஷத்திற்கு முன் நீங்கள் முதல் மாகாண கான்பரென்ஸுக்கு நாகப்பூரில் கூடினீர்கள். இப்பொழுது முக்கியமான வெவ்வேறு விஷயங்களைப் பற்றி யோஜனைசெய்ய மறுபடியும் கூடியிருக்கிறீர்கள். நீங்கள் செய்யவேண்டிய வேலை அதிகமாக இருப்பதால், நான் தாமதமாக உங்களை நிறுத்தவில்லை.

முதலில் இந்த ஜில்லாக்களில் ஐக்கிய முயற்சி முறையின் அபிவிருத்தியைப் பற்றிக் கூறுகிறேன். இரண்டு வருஷத்திற்கு முன் ஐக்கிய மாகாணங்களிலும், பேராரிலும், 9,000 மெம்பர்களடங்கிய ரூ. 5,00,000 தொழில் தனத்தையுடைய 300 சங்கங்கள் இருந்தன. இப்பொழுது 300,000 மெம்பர்களடங்கிய ரூ 38,00,000 முழுதனத்தையுடைய 1,580 சங்கங்களிருக்கின்றன. சென்ற ஜூன் மாதம் 30ௗ தேதியோடு முடிவுபெற்ற 15 மாதங்களில், ஐக்கியமுயற்சி நாணயச் சங்கங்களும் வேறு சங்கங்களும் ரூ. 1,26,95,000 லேவாதேவி செய்திருக்கின்றன.

கனவான்களே! இப்பொழுது நான் உங்கள் மனதில் அழுந்தச்சொல்ல விரும்புவது யென்னவென்றால், கூட்டுமுயற்சித் தொழிலானது கூட்டுமுயற்சியாலுண்டானது பற்றி சாதாரணத் தொழிலின் முறையினின்றும் வேறுவழியதென்று நினைக்கக்கூடாது. ஐக்கியமுயற்சி லேவாதேவி அபிவிருத்தியாக வேண்டுமானால், உங்கள் வேலைத்திறமை மிகவும் நுண்ணியதாகவும், ஒவ்வொரு சில்லறை விஷயத்திலும் பிரயாசை யெடுத்துக்கொள்ளுவது மிருக்கவேண்டும். எங்கே நாணயச்சங்கங்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றனவோ, அங்கே மிக்கப் பாதுகாப்புடனும், ஜாக்கிரதையாயும் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. உங்கள் சங்கங்கள் ஒழுங்காய் நிர்வகிக்கப்படுகின்றன வென்று ஜனங்கள் ஒரு சமயம் திருப்தியுடன் அறிந்தால், டிபாஸிட்டுப் பணம் அவைகளுக்கு ஏராளமாய்க் குவியும். ஆகையினால் நாம் முன்னேறிச் செல்லுவதில் கருத்துள்ளவர்களா யிருந்தபோதிலும், நமுதல் கடமை நாம் செய்யும் வேலை உறுதியானதா வென்று நிச்சயிக்கவேண்டும். எனக்கே ஒரு சந்தேகமிருக்கிறது. அதாவது, உங்கள் சங்கங்கள் ஜனங்களின் உண்மையான ஒற்றுமையால் வளர்கின்றனவா அல்

லது ஸர்க்காருடைய இம்ஸைக்கு பயந்து, ஜனங்கள் சேர்க்கையின்றி போலிச் சங்கங்களாக வளர்கின்றனவா? இதை அறியும்பொருட்டுச் சென்ற வருஷம் செப்டம்பர் மாதத்தில் பிஹோரா என்னுமிடத்திற்குப்போய், அங்குள்ள சங்கத்தின் கணக்குகளைப் பரிசோதனை செய்தேன். மெம்பர்களுடன் இவைகளைப்பற்றிப் பேசினேன். அவர்களனைவரும் எல்லா நடவடிக்கைகளையும் அறிந்ததாகக் காணப்பட்டதால், கூட்டுமுயற்சிச் சங்கம் உறுதியான ஸ்திதியிலிருக்கிறதென்று மிகவும் திருப்தியடைந்தேன். ஆனால் இந்த நாணயச் சங்கங்களில் அநுபோகஸ்தர்களாகிய தொழிலாளிகள் சொல்லும் சில விஷயங்களை இங்கு உரைக்க விரும்புகிறேன். முதலாவது, ஐக்கிய முயற்சிச் சங்கங்கள் லேவாதேவி செய்யும் ஸ்தாபனங்கள் மாத்திரமல்ல, ஆனால் மெம்பர்களுடைய பணத்தைச் சேகரித்துப் பாதுகாத்துக்கொடுக்கும் "ஸேவிங்க்ஸ் பாங்கிகள்" என்று நினைக்கப்படவேண்டும். ஸென்ட்ரல் பாங்கியானது, ஸ்தலத்திலுள்ள பணத்தை டிபாஸிட்டு மூலமாய்ப் பெற்றுக்கொள்ளுவதற்கும், கிராம பாங்கி தன் மெம்பர்கள் சேகரித்துவைத்த சிறிய தனங்களை அவர்களிடத்தில் லேவாதேவி செய்வதற்கும், ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வருஷத்திற்குமுன், விவசாயச்சங்கங்கள் மெம்பர்களின் டிபாஸிட்டு ரூ 57,000 இருந்தது, இப்பொழுது ரூ. 1,16,400. 1911௵ ஆரம்பத்தில் ஸென்ட்ரல் பாங்கியின் டிபாஸிட்டுகள் மிகவும் அற்பமாயிருந்தது. 1912௵த்தில் அவைகள் ரூ. 1,12,000க்கு அதிகரித்தன. இன்றைக்கு ரூ. 5,00,000க்கு நிற்கின்றன. பொது ஜனங்கள் கூட்டுமுயற்சி நாணய சங்கங்களில் வைக்கும் உண்மையான நம்பிக்கையானது, அந்த பாங்கிகளில் வந்துவிழும் டிபாஸிட்டுகளின் உயர்வுநலும் தாழ்வுநலும் நன்கு விளங்கும்.

இரண்டாவது, பாங்கிகளின் முக்கிய பாகமாகிய பாதுகாப்பு நிதிகளின் தொகையை சோதித்துப் பார்க்கிறேன். 1911-ம் வருஷத்தில் இவைகள் ரூ. 19,000-க்கும், 1912-ம் வருஷத்தில் ரூ. 34,000-க்கும் நின்றன. இப்பொழுது இவைகள் ரூ. 1,00,000-க்கு அதிகரித்திருக்கின்றன. இந்த நிதியை சீக்கிரத்தில் மிகவும் அதிகப்படுத்தினால் பாங்கிகளுக்கு ஆழ்ந்த அஸ்திவாரங்களாகும். நீங்கள் இந்த நிதியை எடுத்து பாங்கிகளில் வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுக்க மிகவும் ஆசையுள்ளவர்களா யிருக்கிறீர்கள். இந்த நிதி பாங்கிகளுக்கு இன்றியமையாத பொருளாதாரமாயிருப்பதால், ரெஜிஸ்ட்ரார் இதை வேறு விதத்திற்கு உபயோகப்படுத்தக் கூடாதென்று மறுத்ததை நான் முழுவதும் அங்கீகரிக்கிறேன்.

மூன்றாவது, சங்கங்களின் நாணயமானது மெம்பர்களின் ஜாயிண்டிலும் பொறுப்பு வரையறுக்காததிலும் (unlimited liability) சார்ந்திருக்கிறது. ஆனால் மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்ட (limited liability) சங்கங்களின் யோக்கியதையானது, டைரக்டர்களின் அந்தஸ்திலும், தற்சமயத்தில் மெம்பர்களாய்ச் செலுத்தப்பட்ட ரூ. 11,00,00J தனத்திலும் இருக்கிறது. இந்த தனம் அதிகமாயிருப்பதால் சங்கங்கள் அபிவிருத்தி யாகிறதென்றே சொல்லவேண்டும்.

நான்காவது, சங்கங்கள் வாங்கின கடன்களை ஒழுங்காக குறித்த காலத்தில் செலுத்தி வருகின்றன ஆகையினால் திருப்திகரமா யிருக்கிறது. உங்கள் சங்கங்களை சரியான வழியில் நடத்துவதற்கும், மேற்பார்வையாயிருப்பதற்கும், கூட்டுமுயற்சிச்சங்கங்களின் ஸென்ட்ரல் பிராவின்ஸிஸ் யூனியன் (Centrl Provinces Union) உண்டாவதை நான் மிக்க ஆவலுடனும், திருப்திகரமாகவும், பார்த்தேன். நீங்கள், கணக்குகள் வைப்பதற்கும், தணிக்கை செய்வதற்கும், வேறு செலவுகளுக்கும் உங்கள் மெம்பர்களிடமிருந்து மாதந்தோறும் சுமார் ஒரு அணா வாங்குவது



மிகவும் புத்திசாலித்தனமான காரியமென்று நினைக்கிறேன். இதனால் மெம்பர்களுக்கு சிரமம் கொடுப்பதாக நினைக்கவேண்டாம். உங்கள் பாதுகாப்பு நிதியானது, செலுத்த வேண்டிய கடன்களைவிட மிகவும் அதிகமாகிவிட்டால், அப்பொழுது ஒருசமயத்தில் அதன் வட்டியிலிருந்து வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுத்தால் நியாயமாகத் தோன்றும். ஆனால் இப்பொழுது அம்மாதிரிச் செய்யவேகூடாது. கூட்டுமுயற்சிக்காரர்களில் சுய உதவியாகிய ஊக்கத்தைப் பரவச்செய்வது உங்களுடைய கடமை. இச்சங்கங்கள் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தரல்லாத மற்ற கனவான்களும் ஒன்றுசேர்ந்து மனப்பூர்வமாய் ஒத்து உழைத்ததனால்தான், அபிவிருத்தியடைந்தது."

## மிஸ்டர் கிராஸ்வேயிடின் ஐக்கிய இயக்கத்தின் உயர்ந்த நோக்கங்கள்.

மத்திய மாகாணங்கள் பேரரின் கூட்டுமுயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் கிராஸ்த்வேயிட் அக்கிராசனம் வகித்தார்; அவர் 'ஐக்கியமுயற்சி நாணய சங்கங்களும் பொது ஜனங்களின் படிப்பும்' என்ற விஷயத்தைப்பற்றி ஆரம்பப் பிரசங்கம் செய்தார், அதன் சாரம்சம் பின்வருமாறு :—

கூட்டுமுயற்சிச் சங்கத்தின் உறுதியான நிலைமையும், பெருமையும் அதின் மெம்பர்களின் யோக்கியதையிலும் அந்தஸ்திலுமிருக்கிறது. கூட்டுமுயற்சியின் பிரயோஜனம் ஸன்மார்க்கத்தில் நடத்துவதும், செல்வத்தைப் பெருக்கச்செய்வதுமாம். ஏழையாயும், படிப்பும் குறைந்த ஜனங்களால் ஏற்படுத்தப்படும் ஓர் புதிய சங்கமானது இவ்வித பிரயோஜனங்களைக் கொடுக்க வெகுநாளாகும். எவ்வளவோ சௌகரியங்களைக் கொடுக்கக் கூடியதானாலும், உண்மையில் அநுபோகத்தில் மிகவும் சொற்ப பலனைத்தான் கொடுக்கிறது. ஐக்கிய முயற்சிக்காரர்கள் தங்கள் தங்கள் பொறுமையாலும், இடைவிடாத ஊக்கத்தினாலும் இந்த உண்மையான பலனை அபிவிருத்தி செய்ய வேண்டியதுதான் தங்கள் கடமை. இந்த நோக்கம் பூர்த்தியாக வேண்டுமானால் அவர்கள் புத்தி விசாலமாகத் தகுந்த படிப்பைக் கொடுக்கவேண்டும். மிஸ்டர் ஊல்ப்பு தாம் எழுதியிருக்கும் 'விவசாயத்தில் ஐக்கிய முயற்சி என்னும் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதாவது, "படிப்பில்லாமல் எந்தக் கூட்டுமுயற்சியும் ஓங்கிவளராது. அதற்குத் தகுந்த படிப்பு பரவும் வழிகளை நாமே தெரிந்துகொண்டு அவ்விதம் விருத்திசெய்யலாம்."

கூட்டுமுயற்சியின் தன்மையைத் தெரிந்துகொள்ளவும், சாகுபடியின் யுக்திகளை நன்றாயறியவும், படிப்பு, மிகவும் அவசியமாயிருக்கிறது. மிஸ்டர் கிராஸ்த்வேயிட், கூட்டுமுயற்சி நாணயச் சங்கங்களின் அபிவிருத்தி மெம்பர்களுக்கு கடன் கொடுக்கும் தன்மையில் மாத்திரம் இருக்கக்கூடாது, ஆனால் பொது ஜனங்களுக்கு நன்மையைத்தரும் மற்ற சங்கங்களுக்கும் உதவிசெய்யும் தன்மையிலுமிருக்க வேண்டுமென்றும் ஸர்க்கார் உதவியை ஜாக்கிரதையாய் உபயோகப்படுத்த வேண்டும். மற்ற தேசங்களில் நடந்துவரும் ஐக்கிய முயற்சியில் உயர்ந்த வழிகளை இவ்விடத்தில் ஏற்படுத்துவதில் அவசரப்படக் கூடாது.

மிஸ்டர் கிராஸ்த்வெயிடின் அடியிற்கண்ட நான்கு தீர்மானங்கள் கான்பிரன்ஸால் அங்கீகரிக்கப்பட்டன :—

1. விசேஷமாய் கல்வியிற் சிறந்தவர்கள் மெம்பர்களாகவும், டைரெக்டர்களாகவுமுடைய நம் கூட்டுமுயற்சி ஜில்லா பாங்கிகளின் அபிவிருத்தியானது, பணம் கடன் கொடுப்பதில் மாத்திரமல்ல, மெம்பர்களா யிருக்கும் கிராமச் சங்கங்கள் ஐக்கிய முயற்சியின் முறையை நன்கு பரவச் செய்வதிலும் இருத்தல் வேண்டும்.

2. உழைத்து வரும் கல்வி கற்றவர்களின் மனப்பூர்வமான உதவி எப்பொழுதுமிருக்க வேண்டுமானால் இந்நாணய சங்கங்கள் அவர்கள் மனதைக்கவர்ந்து, பொதுஜன அபிவிருத்திக்கு தாங்கள் ஏற்பட்டனவைகளே யன்றி, ஒரு வகையினர்களின் சௌகரியத்திற்காக உண்டானவைகளல்ல என்று தெளிவாய் அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்.

3. இந்த யோஜனை பூர்த்தியாக, ஸர்க்கார் வேண்டிய உதவி செய்யவேண்டும், ஆனால் அவ்வுதவி மிகவும் அதிகமாயாவது அல்லது மிகவும் குறைந்தாவது இருக்கக்கூடாது. ஏனென்றால் இரண்டு வழிகளிலும் அபாயமிருக்கிறது. வேண்டிய உதவியை ஒழுங்காய்க் கொடுத்தலால் நல்ல பாதுகாப்பு ஏற்படுகிறது.

4. மற்ற தேசங்களிலுள்ள கூட்டுறவின் முன்னேற்றமான வழிகளை விரும்பி அவசரமாய் இங்கு ஏற்படுத்தக்கூடாது. முழுவதும் ஸர்க்கார் உதவியைக்கொண்டு நடத்தப்படும் சங்கங்களை ஸ்தாபனம் செய்வதைப் பார்க்கிலும், ஐக்கிய முறைப் படிப்பின் பலனை எதிர்பார்த்துப் பொறுப்பது மிகவும்நலம். எந்த ஏற்பாட்டில், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத மற்ற கூட்டு முயற்சிக்காரர்கள் தங்களுக்குரிய வேலையை செய்யக்கூடிய ஸ்திதியிலிருக்கிறார்களோ, அதைத் தான் ஆரம்பித்துச் செய்யவேண்டும்.

## சாதாரணமாய் அனுபவித்துவரும் நிலங்களை கூட்டு முயற்சிச் சங்கங்களின்மேல் மாற்றக்கூடுவதின் அவசியம்.

ராவ்பகதூர் என். கே. கெல்கார் மேற்கூறிய விஷயத்தைப்பற்றி ஓர் வியாசம் வாசித்தார். முடிவில் அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறியது:—"கான்பரென்ஸ் அபிப்பிராயத்தில், மத்திய மாகாணங்களின் சுதந்தர அநுபோகச் சட்டமானது (Tenancy Law) கூட்டு முயற்சிச் சங்கங்களின் மெம்பர்களுக்கு தங்கள் சங்கங்களிடத்தில் தங்கள் நிலங்களை 10 வருஷத்திற்கு அதிகப்படாமல் அடமானம் வைக்க, இடங்கொடுக்கவேண்டும்."

## இரண்டாவது நாள்

### சங்கம் உற்பத்தி செய்பவரின் அநுபோகங்கள்.

மிஸ்டர் ஆர். வி. மஹாஜன் மேற்கூறிய விஷயத்தைப்பற்றி ஓர் வியாசம் வாசித்தபிறகு, அடியிற்கண்ட அம்சங்களைப்பற்றி கான்பரென்ஸின் ஆலோசனையைக் கேட்டார்.

(1) ஜில்லா பாங்கிகள், நகர பாங்கியின் பண உதவியை முழுவதும் நம்பி கிராமச் சங்கங்களை அதிகமாய் ஸ்தாபித்தல் உசிதமா?

(2) அப்படி இல்லையானால், இச்சங்கங்களுக்குத் தகுந்த காலங்களில் உதவி வேண்டுமானால் எங்கு கிடைக்குமா? அவ்வூர்களிலுள்ள தனிகர்களின் உதவியை அடைவதெப்படி?

அக்கிராசனாதிபதி முடிவில் ஜில்லா நாணயச் சங்கங்கள் நகர நாணயச்சங்கத்தின் மீது முழுவதும் சார்ந்திருக்கக்கூடாதென்றும், அவ்விடங்களிலுள்ள பணம் கிடைக்கும் மார்க்கங்களைத்தேடி, ஜில்லாச் சங்கங்களை மிகவும் ஜாக்கிரதையாய் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் சொன்னார்

### நகர பாங்கியின் வேலை.

மிஸ்டர் கே. டி. டிழூடக்னே என்பவர் மேற்கூறிய விஷயத்தைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார். பிறகு அடியிற்கண்ட தீர்மானம் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டது:—



இந்த கான்பரென்ஸானது, மத்திய மாகாணங்களிலும் பேராரிலுமுள்ள, நகர, ஜில்லா கூட்டு முயற்சி நாணயச் சங்கங்களில் ஸர்க்கார் வேலைக்காரர்கள் தங்கள் டிபாஸிட்டு பணத்தைப் போடலாமென்று உத்திரவு செய்த ஆனரெபில் ஸர் பென்ஜமின் ராபர்ட்ஸன், K. C. S. I., C. I. E., அவர்களுக்கு நன்றறிவுடன் மிகுந்த வந்தனம் அளிக்கின்றது. [முதல் நாள்போல், வெவ்வேறு ஐக்கிய முயற்சி விஷயங்களைப் பற்றி வியாசங்கள் வாசிக்கப்பட்டபிறகு, அக்கிராசனாதிபதி முடிவிற்சொன்னதாவது:

"கனவான்களே! இவ்வூருக்கு உங்கள் வரவை ஏற்க எனக்கு மிகவும் ஆனந்தத்தைத் தருகின்றது. இந்த கான்பரென்ஸ்களால், அச்சமயங்களில் நடக்கும் வேலையின் பிரயோஜனத்தைத் தவிர, கூட்டு முயற்சிக்காரர்களில் ஒருவிதம் ஒற்றுமையும், சிநேகத்தன்மையும் உண்டாகின்றன. இந்த ராஜதானியில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத கனவான்கள் ஐக்கிய முயற்சி விஷயத்தில் மிகுந்த ஆவலுடன் உழைப்பதால், கூட்டு முறையின் அபிவிருத்திக்குத் தடையில்லை. தனிகர்களும், ஏழைகளும், படிப்பினர்களும், அறிவினர்களும் வேற்றுமையில்லாமல் ஒன்றுசேர்ந்து இம்முறையில் வேலை செய்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. பணத்தையும், காலத்தையும், இம்முறை அபிவிருத்தியின்பொருட்டு உழைத்த கனவான்களுக்கு நான் வந்தனம் அளிக்கிறேன்."

அக்கிராசனாதிபதிக்கு வந்தனம் அளித்தபிறகு சபை கலைந்தது.

---

# பூனாவில் பம்பாய் மாகாணம் ஐக்கியமுயற்சி கான்பரென்ஸ்.

---

## மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களின் பிரசங்கம்.

கௌன்ஸில்ஹாலில், கான்பரென்ஸ் சபையைத்திறக்கும்பொழுது, மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் பேசிய பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—கொஞ்ச நாளைக்கு முன்புதான், இந்த ஹாலில் விவசாயக் கான்பரென்ஸ் பிரதிநிதிகளை மிகுந்த சந்தோஷத்துடன் வரவு ஏற்றினேன். இப்பொழுதும், விவசாயிகளுக்கு உபயோகமாயுள்ள தொழில்களை அபிவிருத்தி செய்வதில் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொள்ளும் உங்கள்வரவை இச்சபைக்கு ஏற்க எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. உங்கள் கூட்டுமுறையானது, இப்பொழுதுபோல், எப்பொழுதும் தகுந்த நற்பலன்களைக் கொடுக்க நான் விரும்புகிறேன். அங்கத்தினர்களின் பிரசித்தமான நோக்கமாகிய "ஒவ்வொருவரும் எல்லோருக்கும், எல்லோரும் ஒவ்வொருவருக்கும்" என்ற கொள்கையை உங்கள் மனதில் வற்புறுத்துவது எனது எண்ணம். மிஸ்டர் ஈபாங்கு வாசித்த ரிபோர்ட்டு சங்கங்களின் வளர்ச்சியைக் காண்பிக்கின்றது. ஸர்க்கார் உதவியன்னியில் சங்கங்கள் ஒழுங்காய் நடந்து வருகின்றன. விவசாயிகளின் உதவிக்கு ஸர்க்காரிலேயே ஓர்ஸ்கீம் கொண்டுவருதால், இந்த வழிகளில் அப்பியாசமில்லாத ஜனங்களுக்கு சந்தேகம் கொடுக்கின்றது. அம்மாதிரியே கூட்டு முயற்சிச் சங்கங்களிலும் சந்தேகம் குறையாது. புத்திசாலித்தனமாய் ஸென்ட்ரல் பாங்கிகள் ஏற்படுத்தினவர் வித்தல்தாஸ் தாக்கர் அவர்களுக்கு வந்தனம் அளிக்கிறேன். இம்மாதிரிச் செய்கைகள் ராஜாங்க விஷயங்களைச் சேர்ந்தவைகளல்ல, மதமார்க்கங்களில் தலையிடுவதல்ல; ஆனால் ஜனங்கள் தங்கள் சொந்தப்பிரயத்தனத்தினால் தங்கள் நிலைமையை அபிவிருத்தி செய்

து கொள்ளுகிறார்கள். கூட்டுமுறையாவது என்ன என்பதைப்பற்றி ஏர்ல் கிரே (Earl Grey) சொல்லுவதாவது—"கூட்டுமுறைப் பிரயோகத்தால் நம் ஜனங்கள் அடையும் பயன் யாது? ஒற்றுமையான ஏற்பாட்டால் வாங்கியும், விற்றும், உற்பவிக்கப்பட்டவர்களும், உபயோகிக்கப்பட்டவர்களும் நடுமனிதர்களாகிய தரகுக்காரர்களுதவியன்னியில், நேரே சந்தித்துக் கொள்ளுகிறார்கள். அதனால் விலை மிகவும் ஸரஸமாகிறது. ஆகையினால் கூட்டுமுறை யென்றால் நடுவில் நிற்கும் அனாவசியமான தரகுக்காரர்களை நீக்குவதும், மிகவும் அவசியமான தரகுக்காரர்களுக்கு வேலைக்குத்தகுந்த பிரயோஜனம் செய்வதும் தான்." பிரபுக்களே! இதை மனதில் வைத்துக்கொண்டு வேலை செய்வீர்களென்று நம்புகிறேன். எல்லோரும், ஜாதி, மத பேதமில்லாமல் ஒன்று சேர்ந்து இத்தேசத்துக்குரிய பெரிய தொழில்களை இம்முறையினால் தங்களாலான வரையில் அபிவிருத்தி செய்வீர்களென்று எண்ணுகிறேன்."

அக்கிராசனாதிபதிக்கு வந்தனமளித்தபிறகு சபை அன்றைக்குக் கலைந்தது.

## இரண்டாவது நாள்.

ஸர் வித்தல் தாஸ் தாக்கர்ஸே, "கூட்டுமுறைக்கு முதல் அத்தியாவசியம் படிப்பு" என்ற விஷயத்தைப்பற்றி வாசித்த வியாசத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

இந்த ராஜதானியில், ஐக்கிய முயற்சிச் சங்கங்களை ஏற்படுத்தியும், நிர்வகித்தும், மேற்பார்வை பார்த்துவரும் கனவான்கள், விவசாயிகளுக்குப் படிப்பு இருந்துவிட்டால், தங்கள் வேலைகள் இலகுவாயிருக்குமென்று ஒத்துக்கொள்ளுவார்கள். நான் இது விஷயமாக அநேக கிராமங்களுக்குப் போனேன். அப்பொழுது ஆனரபில் மிஸ்டர் லல்லுபாய் ஸாமல்தாஸும், மிஸ்டர் தேவதாரும் மிக்க உத்ஸாகத்துடன் எனக்கு உதவி புரிந்தார்கள். இவ்விஷயங்களைப் பற்றி ஜனங்கள் மனதில் வற்புறுத்த நான்கு ஐந்து தடவைகள், அந்த கிராமங்களுக்கு போகவேண்டியதாயிற்று. பிறகு கூட்டு முயற்சிச் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்று அக்கிராம வாசிகளே வலுவில் வந்தார்கள். ஒவ்வொரு சமயங்களில், பக்கங்களில் குடியிருக்கும் ஸாவகார்கள், கிராம வாசிகள் நம்பும்படியாகப்புகல் வார்த்தைகளைச் சொல்லி, அவர்களைக் கலைத்துவிடுகிறார்கள். கிராமவாசிகள் அதிகப் படிப்பில்லாததினால் இவ்வார்த்தைகள் உண்மையென்று நம்பி கூட்டுமுயற்சி சங்கங்களைப் பற்றி சந்தேகிக்கிறார்கள்.

இக்குறையை நிவர்த்திசெய்வதெப்படியென்று யோஜித்துப் பார்ப்போம். அநேகர் அநேகவிதமான யோசனை செய்தார்கள். ஆனால் இதற்குத்தகுந்த பரிகாரம் படிப்பில்லா வகுப்பினர்களில் படிப்பை பரவச்செய்தல்; ஸர்க்காரில் பிரைமரிப் படிப்பை விருத்திசெய்ய, ஒவ்வொரு பக்கங்களிலும் புதிதாய் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துகிறார்கள். பலவந்தமாய் பிரைமரிப் படிப்பை ஏற்படுத்தினாலொழிய, படிப்பில் அபிவிருத்தி மிகவும் தாமதந்தான் நான் சொல்லும் உபாயம் என்னவென்றால்:— ஸெண்ட்ரல் பாங்கியும் ஜில்லா பாங்கிகளும், இன்னும் கூட்டுமுறைச் சங்கங்களுக்கு உதவி செய்பவர்களும், அச்சங்கங்களின் மெம்பர்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக் கூடத்திற்கு அனுப்பாமலிருந்தால், அம்மெம்பர்களுக்குப் பணம் உதவி மறுத்தலே. பம்பாய் ஸெண்ட்ரல் பாங்கி இப்பிரசினத்தை எடுத்துக்கொள்ளுவது முன், மிக்க அனுபோகஸ்தர்களாயுள்ள இக்கான்பரென்ஸ் மெம்பர்களின் அபிப்பிராயத்தைத் தெரிய விரும்புகிறேன். பள்ளிக்கூடமில்லாத விடங்களில், படிக்கக்கூடிய பிள்ளைகள் அதிகமாக யிருக்கிறார்களென்று காண்பித்தால், ஸர்க்கார் வித்தியா சாலை இலாகாவிலேயே புதிதாகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவார்கள். இந்த உபாயத்தில் பலவந்தமான செயல் உண்டாகின்றது. ஆனால் விவசாயிகளுக்கு இதனால் மிக்க நன்மை



யும், சங்கங்களைத் தாங்களே நிர்வகிக்கும் சக்தியும் வரும் என்பதிற் தடையில்லை. ஸெண்ட்ரல் பாங்கியும் வேண்டிய உதவிகளைக் கொடுக்கும். இந்த ஸ்கீமினால் ஜனங்களுக்கு, நன்னடத்தை, சுகாதாரம், புத்தி தீக்ஷண்ணியம், ஒற்றுமை, சுறு சுறுப்பு, இவைகள் உண்டாகும். ஆகையினால் இந்த ஸ்கீமை கான்பரென்ஸ் அங்கீகாரஞ் செய்ய சிபார்சு பண்ணுவதில் எனக்கு மிகவும் சந்தோஷம்.

## ஐக்கிய முயற்சியில் வீடுகளை வாங்கி வாடகைக்கு விடும் சங்கங்கள்.

மிஸ்டர் B. W. கிஸ்ஸன், I. C. S. அடியிற்கண்ட தீர்மானத்தை பிரரேபித்தார்.

ஏழ்நிலைமையிலுள்ள குடிகள் பட்டணங்களில் குடியிருக்க, ஸம்பாத்தியத்திற்குத் தகுந்தபடி யல்லாமல் அதிகமாய் வாடகை கொடுக்கவேண்டியிருப்பதால், அவ்வாடகையைக் குறைக்கும் நிமித்தம், இங்கிலாந்திலுள்ள கூட்டு வியாபாரச் சங்கங்களின் (Co Partnership Societies)பிரகாரம் ஐக்கிய முயற்சிக் குடியிருப்பு சங்கங்களை அவசரமாய் ஸ்தாபிக்கவேண்டும்.

## மில் வேலைக்காரர்களில் ஐக்கியம்,

அடியிற்கண்ட யோசனைகள் கான்பரென்ஸ் அங்கீகாரத்திற்குக் கொண்டுவரப் பட்டன:—

கடன் கொடுக்கவேண்டியவர்கள் அதிகமாயும், அவர்களில் சிலர் எழுதப்படிக்கத் தெரிந்துமுள்ள வேலைக்காரர்கள் நிறைந்த ஓர் மில்லைத் தேர்ந்தெடுக்கவேண்டும். மில் சொந்தக்காரர் இவ்வேலைக்காரர்களுக்கு, பிரசங்கத்தினாலேயும் படங்களினாலேயும் ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் பரவியிருக்கும் ஐக்கியமுயற்சியின் இயக்கத்தையும் அதினால் இவர்கள் அடையக்கூடும் நற்பயன்களையும் எடுத்துக்காட்டவேண்டும். அம்மாதிரிச் சங்கங்களை நடத்தும் விதிகளையும் வேலை செய்யும் வழிகளையும் தெளிவாய் அவர்களுக்குச் சொல்லவேண்டும். முதலில் அவர்களுள் ஓர் ஐக்கியமுறை கடனைச் சங்கம் ஏற்படுத்தி பிறகு கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ் ஒன்று ஸ்தாபிக்கவேண்டும். வரும் லாபத்தை சங்கத்தின் பங்குகளாக மாற்றவேண்டும்.

## ஜில்லா பாங்கிகள்.

ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பம்பாய் ஸெண்ட்ரல் பாங்கிகளிலும், ஜில்லா பாங்கிகளிலும், யூனியன்களிலும் பங்குகள் வாங்கவாவது, டிபாஸிட்டுகள் போடவாவது கூடாது என்ற உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென இந்த கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது. அப்படி ஸர்க்கார் பிரியப்பட்டால், அவர்கள் நிர்வாககம்மிட்டியில் மெம்பர்களாயிருக்க வேண்டாம்.

## கூட்டுறவுச் சங்கங்களின் குறைகள்.

சங்கங்கள் ஸ்தாபனம் செய்வதில் உஷாராயிருப்பது தவிர, கீழே சொன்ன ஏற்பாடுகளை இயன்ற வரையில் அநுசரிக்கலாமென்று சப் கமிட்டி சிபார்சு செய்கின்றது.

(1) தாலூக்கா கான்பரென்ஸ்களை ஏற்படுத்துதல்.

(2) மேல் விஜாரணை செய்வதற்கு தாலூக்கா யூனியன்களை உண்டாக்குதல்.

(3) ஒவ்வொரு தாலூக்காக்களில் கௌரவத்திற்கு வேலை செய்யும் சங்க ஸ்தாபனம் செய்பவர்களை நியமித்தல்.

(4) இளைத்த சங்கங்களை வருஷத்திற்கு இரண்டு அல்லது அதிக தணிக்கைகள் செய்தல்.

# மைசூர் மூன்ருவது மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்.

---

கோவாபரேடிவ் சங்கங்களின் மூன்ருவது மாகாணக்கான்பரென்ஸை 6-ந் தேதியன்று ரங்காச்சார்லு மெமோரியல ஹாலில் யுவராஜா திறந்துவைத்தார். அச்சமயம் திவானும் கவுன்ஸிலர்களும், சமஸ்தானத்தின் பற்பல பாகங்களிலிருந்து 500 டெலிகேட்டுகளும் போயிருந்தார்கள். கோவாப்ரேடிவ் சங்கததின் ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் எம். வ நாராயண அய்யங்கார், யுவராஜாவுக்கு ஒரு அட்ரெஸ் வாசித்துக்கொடுத்தார் அதற்கு உவராஜா பின்வருமாறு பதில்ச்சொன்ஞர்.—நான் டப்ளின் நகரில், ஐக்கிய நாணயச்சங்க நிர்வாக நிபுணர்களில் சிரேஷ்டரான ஸர் ஹோரஸ் ப்ளன் கெட்டைச் சந்தித்து, அவருடன் கொஞ்சம் நேரில் பேசினதில் இந்தியாவின் பொருளாதாரத் திறமையின்மைக்குப் பரிகாரம் ஒத்துழைப்பே என்று அறிந்துகொண்டேன். அயர்லாந்தின் நிலமை, பலவிதங்களில் மைசூரின் நிலைமைக்குப் பொருந்தியிருந்தபோதிலும் ஒத்துழைப்பினுல் அயர்லாந்தின் நிலைமை மாறிவருகிறது. ஆகையால் நாமும் அதே ஊக்கத்துடன் ஒத்துழைத்துவந்தால் முன்னேற்றம் அடைவோம் என்பதிற் சந்தேகமில்லை என்று யுவராஜாகன்னடத்தில் பதில்ச்சொன்ஞர். அதன்பிறகு பிரஸிடெண்டு திவான்பகதூர் கே. பி. புட்டண்ண செட்டி அவர்கள் நாணயச்சங்கங்களின் உற்பத்தி, நிலைமை முதலியன்வகளைப்பற்றி நீண்டதோர் உபந்நியாசஞ் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—

கனவான்களே! ஐக்கியமுறை இந்தியா தேசத்திற்குப் புதிதல்ல என்று சொல்லுவார்கள். அதற்கு உதாரணமாக அநேக பழைய ஸ்தாபனங்களை எடுத்துச் சொல்லுவார்கள். யோசித்துப்பார்க்கப் போனுல் நாம் நாள்தோறும் செய்யும் காரியங்களில் கூட்டுறவு இருக்கின்றன. ஆனுல் இவைகளைக்கண்டு நாம் திருப்தியடையக்கூடாது. வெவ்வேறு கூட்டு முயற்சியினுல் எவ்வளவு ஸாதகம் அடையக்கூடுமென்று நாம் தீர்க்காலோஜனை செய்யவேண்டும். இவ்வேலையில் உழைக்கும் உங்களுக்கு கூட்டுமுறையில் வெவ்வேறு வழிகளை எடுத்துச்சொல்லுவது அவசியம். ஆனல இந்தராஜாங்கத்தில் வெறுப்பு வரையறுக்காத ஐக்கியநாணயச்சங்கங்கள் மிகுதியாயிருக்கின்றன. இச்சங்கங்கள் புத்தியில்லாமல் அவசியமாய் கடன்வாங்க இடம் கொடுக்கிறதென்று இம்முயற்சியில் அநுபோகமுள்ள கனவான்கள் சொல்லுகிருர்கள். அப்படிச் செய்வதால் அச்சங்கங்களுக்கு ஐக்கிய நாணயச்சங்கங்கள் என்ற பெயர்தகாது. இவைகளால், ஜனங்களுக்கு, செட்டு, ஒற்றுமை முதலானவைகள் உண்டாகவேண்டும். இவைகள் பொறுப்பு வரையறுக்காச் சங்கங்களானதால், அனவசியமாய்க் கடன் வாங்கினுல் சங்கங்கள் அடியோடழிந்துவிடும். பொருப்பு வரையறுக்காததுவே நம் கிராமத்தா சங்கங்களுக்கு ஆஸ்தியாகும். விவசாயச் சங்கங்களும் தொழிற் சங்கங்களும அதிகமாய் உற்பத்தியாவதைப் பார்க்கவிரும்புகிறேன். பரம்பரையாக விவசாயமே நம்ம தேசத்திற்கு நிலையுள்ள தொழிலாயிருக்கிறது ஐரோப்பிய தேசங்களில் விவசாயக் குறைவினுல் எற்பட்டிருக்கும் குழப்பங்களைக் கண்டறிவதால் நாம் அந்த விஷயத்தில் அதிர்ஷ்டசாலி யென்றே சொல்லவேண்டும். தொழிற்களை மாத்திரம் முக்கியமாய்ச் செய்துவரும் அத்தேசங்கள் விவசாயம் குறைந்ததினுல்த்தான் இக்கெடுதிகளெல்லாம் வந்தனவென்று அறிந்து விவசாயத்தை விருத்தி செய்ய ஏற்பாடு பண்ணுகின்றன.



ஏழைக்குடியானவர்கள், நல்ல விதைகள் அடைவதற்கும், உபயோகமான உழவுமாடுகள், உயர்ந்த கலப்பைகள், முதலிய இன்னும் சாகுபடிக்கு வேண்டிய அவசிய கருவிகள் வாங்குவதற்கும், சங்கங்கள் உற்பத்தியாகவேண்டும். இவைகளை ஏற்படுத்துவதில் முதலில் கஷ்டங்களிருந்தாலும், நாம் கொஞ்சமும் தளராமல் சிரமப்பட்டு ஸ்தாபித்து வேலை செய்யவேண்டும். இவ்விஷயங்களில் இராஜாங்க விவசாய இலாகா, இந்த ஐக்கியமுறை இலாகாவுடன் ஒற்றுமையாய் உழைக்குமென்று நம்புகிறேன். ஐக்கிய முறையில் பட்டுத்தொழிலை அபிவிருத்தி செய்யலாம். ராஜாங்கத்தில் செவுக்காரர்கள் அதிகமாயிருப்பதால், இத்தொழிலும் மிகவும் விருத்தியடைந்து, அவர்களுடைய கஷ்டத்தையும் நிவர்த்திசெய்யுமென்று நினைக்கிறேன்.

## கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ்.

பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் கூட்டுமுறை ஸ்டோர்களின் எண்ணிக்கையை உத்தேசித்தால், நாம் அதிக ஸ்டோர்கள் ஸ்தாபித்திருக்கிறதாகச் சொல்லலாம். ஆனுல் விற்ற தொகை மிகவும் குறைந்திருக்கிறது. மார்க்கட்டிலுள்ள போட்டாபோட்டியினுலும், மானேஜர்களின் தொழிற்குறிய தந்திரங்கள் தெரியின்மையினுலும், இக்குறைவு வருகிறது. வியாபாரத்தில் சாமர்த்தியமுள்ள ஓர் மானேஜரை நியமிப்பதால் எல்லாம் ஒழுங்குக்குவரும். ஒவ்வொரு தாலுக்காவிலும், கலப்பில்லாத உணவுப்பொருள்கள், ஆடைகள், முதலியவைகளை சரியான விலைக்கு விற்கும் நல்ல ஸ்டோர் ஒன்று ஏற்படுவதைக் கேட்க விரும்புகிறேன். இப்படி உண்டாகும் ஸ்டோர்களுக்கு வேண்டிய தகுந்த சாமான்களைக் கொடுத்துதவியும், மிகுதியான சாமான்களை ஒரு ஸ்டோரிலிருந்து மற்ருென்றுக்கு அனுப்பி சரிப்படுத்தும் பெரிய தாய் ஸ்டோர் ஒன்றை ஜில்லா தலைநகரில் ஏற்படுத்துவது எல்லா ஐக்கிய முயற்சிக்காரர்களின் உத்தேசமென்று எண்ணுகிறேன்.

## பிரத்தியேக பிரியங்களுக்கு ஏற்பட்ட சங்கங்கள்.

மூன்றுவித ஐக்கிய முறைகளைத் தவிர, பிரத்தியேகச் சங்கங்களிருக்கின்றன என்று அறிகிறேன். கட்டடச் சங்கமொன்று பெங்களூரிலிருக்கிறது. அம்மாதிரி மற்ற பட்டணங்களிலும் ஏற்படுத்தலாம். சென்ற வருஷத்தில், கூலி வேலைக்காரர்களுக்கும், சொற்ப சம்பளக்காரர்களுக்கும் அநேக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. தீண்டக்கூடாத ஜாதிகள் என்று சொல்லப்பட்ட மடிகர்கள், ஹொலியர்களுக்கும் இம்முறை எட்டியிருக்கிறது. கூட்டுமுறையினுல், குடித்தல், மிதமிஞ்சின செலவு செய்தல் இவைகள் மிகவும் குறைந்துபோகுமென்பதிற் றடையில்லை.

## ஐக்கியமுறை பிரசினைகள்.

ஐக்கிய இயக்கத்தைச் சேர்ந்த அநேக பிரசினைகளில் முக்கியமானது, சங்கங்களின் மேல்விசாரணை. ஜனங்கள் அதிகப் படிப்பில்லாமலும், அதனுல் நம்பிக்கை குறைவாயுமிருப்பதால், இது மிகவும் அவசியம். ஸர்க்கார் இதை கைவிடாமற் நீண்டகாலத்திற்கு வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிருேம். கிராம நாணயச் சங்கங்களுக்கு வேண்டிய காலங்களில் உதவி புரிய, ஸெண்டரல் பாங்குகள் ஏற்படுத்தப்பட்டன. இச்சமயத்தில், மைசூர் பாங்கியைப்பற்றிக் கூறவேண்டியது அவசியம். அது ரூபா 20 லக்ஷம் முதலுடன் சென்ற மே மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு வேண்டும்பொழுது பணம் உதவி செய்வது, அதன் முக்கியமான எண்ணங்களில் ஒன்று. நம் மகாராஜாவின் விருப்பத்தை உத்திரவாக நினைக்

2

கவேண்டும். தேசாபிமானிகளே! இப்பொழுதாவது விழித்துக்கொண்டு ஒற்றுமையாய் வேலை செய்ய வேண்டுகிறேன்"

அக்கான்பரென்ஸில், ஐக்கியமுறை விஷயங்களைப்பற்றி வெவ்வேறு வியாசங்கள் வாசிக்கப்பட்டன.

அடியிற் கண்ட தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன:—

1. பல தொழில்களை உண்டாக்குவதாலும் ஜனங்களுக்குள், ஒற்றுமை, நன்னடத்தை, செல்வம் ஆகிய இவற்றை அபிவிருத்தி செய்வதாலும்கூட்டுமுறைச் சங்கங்களை தகுந்த இடங்களில் ஸ்தாபனம் செய்யவேண்டும்.

2. எந்த விடங்களில் சௌகரியங்க ளிருக்கின்றனவோ, அந்த விடங்களில், விவசாயத்திற்கும், தொழில்களுக்கும் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும்.

3. தாலூக்காச் சங்கங்கள் வருஷத்திற்கு இரண்டு தடவைகளுக்குக் குறையாமலும்; கிராமாந்திரச் சங்கங்கள் வருஷத்திற்கு நான்கு தடவைகளுக்குக் குறையாமலும், பொதுவில் எல்லாச் சங்கங்கள், வருஷத்திற்கு ஒரு தடவையும் தணிக்கை செய்யப்படவேண்டும்.

4. சங்கத்தின் அநுபந்த விதிகளை அச்சு அடித்து ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு காப்பி கொடுத்து படிப்பில்லாத மெம்பர்களுக்கு அவ்விதிகளைத் தெளிவாய் உரைக்கவேண்டும்.

5. எல்லாக் கிராமாந்தரச்சங்கங்களும், பொறுப்பு வரையறுக்காதவைகளாயிருக்கவேண்டும். முதல் சேர்க்கமுடியாத மற்றச் சங்கங்களையும் இம்மாதிரியே உண்டாக்கலாம்

6. அநுபந்த விதிகளிற் சொல்லிய கடமைகளைப் பஞ்சாயத்தார் பக்ஷபாதமன்னியில் நடத்தவேண்டும். பஞ்சாயத்தாரை ஜாக்கிரதையுடன் தெரிந்தெடுக்கவேண்டும்.

7. அநுபந்த விதிகளிற் கூறியபடி, பொறுப்பு வரையறுக்கப்படாச் சங்கங்களில், சொத்து விபர ஜாப்தா ஒன்று இருக்கவேண்டும்.

8. சங்கத்திற்கு டிபாஸிட்டுப் பணம் வரத்தகுந்தபடி ரெஜிஸ்ட்ரார் ரூல்களை மாறுதல் செய்யவேண்டும்.

9. ஏற்கனவே ஸேவிங்க்ஸ் பாங்கிக் கணக்கு (Savings Bank Account) வைத்திருக்கும் சங்கங்கள், ரெஜிஸ்ட்ரார் ரூல்களை விபரமாய் மெம்பர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் போடும் தொகை சிறியதாயிருந்தாலும் வாங்கிக்கொள்ள வேண்டும்.

10. க்ஷேம நிதியை எந்த சமயத்திலாவது தொழில் முதலாக, ரெஜிட்ரார் பிரத்தியேக உத்திரவன்னியில், உபயோகப்படுத்தக் கூடாது.

11. பங்குக்கார மெம்பர்கள் அடையும் டிவிடெண்டு ஒருபொழுதும் 100-க்கு 12-வீதத்திற்கு மேல் உயரக்கூடாது.

12. எந்த சௌகரியமான இடங்களில், தொழிற்செய்யும் சாமர்த்தியமுள்ள கைத்தொழில் முயற்சிக்காரர்கள் இருக்கிறார்களோ, அந்த இடங்களில் ஸ்டோர்ஸ் ஏற்படுத்தவேண்டும்.



13. நெசவுத்தொழிலை அபிவிருத்தி செய்ய, புதிதாக அதிகச் சங்கங்களை ஏற்படுத்தி, மெம்பர்கள் புதிய கருவிகள் வாங்குவதற்கும் ஸர்க்காரில் பணம் கொடுத்து உதவவேண்டும்.

14. பெரிய டவுன்களில், மெம்பர்களுக்கு சுகாதாரமான வீடுகள் கட்டுவதில் உதவிசெய்ய கட்டடச் சங்கங்களை ஸ்தாபனம் செய்யவேண்டும்.

15. ஐக்கிய முறையால், கல்லுக் குத்துதல், பித்தளைப் பாத்திரம் செய்தல் கருப்பஞ்சாறு பிழிதல், வெல்லம் தயார் செய்தல், பட்டு உண்டுபண்ணுதல், முதலிய தொழில்களை அபிவிருத்தி செய்யப் பிரயத்தனஞ் செய்யவேண்டும்.

16. ஒவ்வொரு ஜில்லாவில் ஒரு பிடரல் யூனியன் (Federal Union) க்குக் குறையாமல் ஏற்படுத்தி, ஜில்லா பிடரல் யூனியன்களை அதிகப்படுத்தவேண்டும்.

17. ஐக்கிய முறையின் இயக்கம் இன்னும் இளமைப்பருவத்திலிருப்பதால், ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாக, இந்த இலாகா மேல் விசாரணை, தணிக்கை செய்வதைத் தவிர, ரிவினியு அதிகாரிகளும் உதவி செய்யவேண்டும்.

18. சங்கங்களை மெம்பர்களாகவுடைய, கோவாப்ரேடிவ் யூனியன் ஒன்றை, மைசூர் இராஜாங்கத்தில் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், மாகாண கான்பரென்ஸை நடத்துவதற்கும், கூட்டுத்தொழில் வர்த்தமானி வியாசங்களை பிரசுரம் செய்வதற்கும், ஒவ்வொரு சங்கத்திலிருந்து, சிறிய கட்டணம் வாங்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ரெஜிஸ்ட்ரார் அவர்களும், மற்றவர்களும், அக்கிராஸனாதிபதிக்கு வந்தனம் அளித்த பிறகு, கான்பரென்ஸு கலைந்தது.

## கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரிஜிஸ்டரார்களது ஏழாவது கான்பரன்ஸ்.

1913வருஷம் அக்டோபர் மாதம் 16, 17,18 ம்தேதிகளில் ஸிம்லாவில். கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார்களது ஏழாவது கான்பரென்ஸ் கூடிற்று.

கான்பரென்ஸ் துவக்க முதலில் ஆனரபில் ஸர் எட்வர்ட் மக்ளாகன் அவர்கள், இக்கான்பரன்ஸை ஸர் ராபர்ட் கார்லைல் அவர்கள் தமது சிறு உபந்நியாசத்துடன் ஆரம்பிக்கப் பிரியப்பட்டதாயும் ஆனால் பற்பல மாகாணங்களிலுள்ள கோவாப்ரேடிவ் சங்கங்களின் விருத்தி கிஷ்கரிஷையாய்த் தெரிய கொஞ்சம் சிரமமேற்பட்டதால் அக்டோபர் 18ம் தேதி சனிக்கிழமை ஒத்திவைத்திருப்பதாயும் கூறினார்.

## பற்பல மாகாணங்களின் விருத்தியாம்சம்.

பிரஸிடெண்ட் அவர்களது வேண்டுகோளின்மேல் ரிஜிஸ்டரார்கள் சென்றவருஷம் அவரவர்கள் மாகாணத்தில் அடைந்திருக்கும் விருத்தியாம்சத்தைக் குறித்து சிறிது கூறினார்கள்.

## கிராமச்சங்கங்களை நிருவகிப்பதிலேற்படும் கஷ்டங்கள்.

இதைப்பற்றி மிஸ்டர். எம். ஜீ. டெஷ்பாண்டி அவர்கள் கான்பரென்ஸ் முன்பாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். இதில் கிராமச்சங்கங்களை நிருவகிப்பதிலேற்படும் கஷ்டங்கள் யாவும் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரால் ஆமோதிக்கப்பட்டு ஆக்ஷேப சமாதானங்கள் சொல்லப்பட்டன. இவைகளில் முக்கியமானது யூனியன்கள் ஏற்படுத்தி குமஸ்தாக்கள் மூலமாய் அவைகளை

நிருவகித்தல், கிராம பஞ்சாயத்தார்களது ஆதரவில் சங்கங்களை நிருவகித்தல், சங்கங்களுக்கு ரொக்க லேவாதேவிமேல் உண்டி கொடுத்து நிருவகித்தல் முதலியன. கடைசியில் மிஸ்டர் கிராஸ்த்வெய்ட் அவர்கள், எல்லாம் அடிக்கடி சோதனைசெய்வதால் நிருவகிக்கக்கூடுமென்பதை நிர்ப்பந்திக்க அந்த விவாதம் முடிவுபெற்றது.

## கிராமச்சங்கங்களது பொக்கிஷக்காப்பு.

மிஸ்டர் லாங்லி அவர்கள், கிராமச்சங்கங்கள் ஆயிரக்கணக்காய் ரூபாய் கையிருப்பு வைத்துகொண்டிருப்பது கவலைக்கிடமாயிருப்பதால் அதற்கு ஒருவிதகாபந்து ஏற்படுத்த இவ்விஷயத்தைப்பற்றி கான்பரென்ஸ் முன்பாக ஒருதீர்மானம் கொண்டுவந்தார்.

மிஸ்டர் இயுபான்க் அவர்கள், பம்பாய் போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ்பாங்க் 42 (K) சட்டப்படி பின் கூறப்பட்டுள்ள சௌகரியங்கள், கோவாப்ரேடிவ் சங்கங்களால் போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள பப்ளிக் அகவுண்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

(1) தந்தி ஆபீஸ்களுமுடைய தாலூக்கா தலைநகரங்களிலும் ஜில்லா தலைநகரங்களிலுமுள்ள போஸ்டாபீஸ்களெல்லாவற்றிலும் 3 நாட்கள் முன் நோட்டீஸ்மேல் ரூபா 3,000 சங்கங்கள்பெறலாம். (2) மற்றெல்லா போஸ்டாபீஸ்களிலுமிருந்து 7 நாட்கள் முன் நோட்டீஸ் மேல் ரூபா 300 பெறலாம். (3) எல்லாபோஸ்டாபீஸ்களிலுமிருந்து 10 நாட்கள் முன் நோட்டீஸ் மேல் ரூ. 300க்கு மேல் ரூபா 10,000க்குட்பட்ட தொகைகள் பெறலாம்.

பிரஸிடெண்டவர்கள், இவ்வித அநுகூலங்களை போஸ்டாபீஸ் அதிகாரிகள் செய்தது காம் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கக் கூடியதற்கு மேலென அங்கீகரித்துக் கூறினர். மிஸ்டர் சடர்ஜி அவர்கள் இதன்மேல், இந்தியா கவர்ன்மெண்டார் ஸப்-டிரஷரிகளிலும், ஜில்லா டிரஷரிகளிலும் பாங்குகளின் பணப்பெட்டியை வைத்துக்கொள்ளும்படி அனுமதிகொடுக்க ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர்.

மிஸ்டர் இங்லிஷ் அவர்கள் பர்மாவில், எல்லா சங்கங்களும் போலீஸ் ஸ்டேஷன்களிலும், டிரஷரிகளிலும் ஸப் டிரஷரிகளிலும் தமது பணப்பெட்டியை வைத்துக் கொள்ளும் சௌகரியமிருப்பதாயும் ஆனால் அவைகள் பூர்ணபரிபக்குவத்துடன் நடைபெறவில்லையென்றும், டிரஷரி உத்தியோகஸ்தர்களுக்கும் ஸப்-டிரஷரி உத்தியோகஸ்தர்களுக்கும் இடைஞ்சலன்னியில், மேற்படி ஆபீஸ்களில் இடமிருந்தால் சங்கங்களின் பணப்பெட்டியை வைத்துக்கொள்ளலாமென இந்தியா கவர்ன்மெண்டாரது உத்தரவிருப்பதாயும் சொன்னார்.

## கவர்ன்மெண்ட் டாகாவி கடன்கள்.

மிஸ்டர் சாட்டர்ஜி அவர்கள் கவர்ன்மெண்ட் டாகாவிகடன்களைப்பற்றி ஒரு மசோதாகொண்டு வந்தனர். இந்த மசோதா ஏற்கனவே ரிஜிஸ்ட்ரார்களின் மூன்றாவது கான்பரென்ஸில் கொண்டுவரப்பட்டு அதன்மேல் இந்தியா கவர்ன்மெண்டார், சொந்தத்தில் ஸ்தாவர சொத்துக்களுடைய சங்கத்துக்கே டாகாவிகடன் கொடுக்க அநுமதி கொடுத்துள்ளதாயும் இந்த நிபந்தனையை ரத்து செய்யவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது இத்தீர்மானத்தைப் பற்றியும் முன் யாது காரணம் பற்றி அவ்வித நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது என்ற கேள்விகளுக்கு பிரஸிடெண்டவர்கள் மறுமொழியாக இந்தியா கவர்ன்மெண்டின் உத்திரவை பின்வருமாறு வாசித்தார்:—



1. கோவாபரேடிவ் சங்க ரிஜிஸ்ட்ரார்கள் ஆறாவது கான்பரென்ஸில் முடிவுக்குக் கொண்டு வந்த தீர்மானத்தை கவனிக்க நான் உத்தரவு செய்யப்பட்டிருக்கிறேன். அதில் டாகாவி கடன், சங்கங்களுக்காவது சங்கங்கள் மூலியமாவது கொடுத்தலை சட்ட சம்மதமென அங்கீகரிக்கவாவது, அப்படிச் செய்தல் இப்போது முடியாத காரியமெனத் தோன்றினால் விவசாயிகளது கடன் வாங்கும் சட்டத்தை அதற்கனுகூலமாய்த் திருத்தவாவது செய்யவேண்டும்.

(2) 1909ம் வருஷம் ஜூன்மாதம் 24ம் தேதி வெளியிடப்பட்ட இந்த டிபார்ட்மெண்ட் ஸர்க்யுலர் நெம்பர் 9-ல் விவசாயிகளது சட்டப்பிரகாரம் சங்கங்களுக்கு கடன்கள் கொடுக்கும் விஷயத்தில் அவைகள் விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் சொந்தத்திலாவது அநுபோகத்திலாவது வைத்துக்கொண்டு மேற்படி ஆக்ட் 4-வது செக்ஷன்படி ஏதாவது ஒரு காரணத்தின் பொருட்டு செலவழித்தாலொழிய கடன் கொடுக்க முடியாதெனவும் ஆனால் அந்த ஏஜண்டுகள் மூலமாய் சங்கமெம்பர்களுக்கு டாகாவி கடன் கொடுத்தல் சட்ட விரோதமானதா யில்லையெனவும், இக்கேள்வி விவாதிக்கப்பட்டிருக்கிறது. சங்கங்களுக்கு முன்பணம் கொடுக்கும் ஏற்பாடை சட்டத்துக்குரித்தானதாய் ஏற்பாடு செய்ய கான்பிரென்ஸில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா கவர்ன்மெண்டார் ஜாக்கிரதையாய் இப்போது ஆலோசனை செய்திருக்கின்றனர். 1914ம் வருஷம் ஏப்ரல் மாதம் 29ம்தேதி வெளியிடப்பட்ட தீர்மானம் நெ. 1-63-3 26-வது பத்தியில் கூறப்பட்டுள்ளநோக்கத்தை யொட்டினதாய், சங்கங்களுக்கு ஸ்டேட் எய்ட் திரவிய உபசரணையைக் கொடுத்த லனாவசியமென அவர்கள் கருதுகிறார்கள். சொற்ப வருஷ அநுபோகங்களுக்குள்ளாக அநேக மாகாணங்களில் கவர்ன்மெண்டார் சங்கங்களுக்கு திரவிய சகாயம் செய்தலை நிறுத்திவிட்டனர். 1904ம் வருஷத்து தீர்மானத்தின்படி சொற்ப உதவி செய்தலையும் இனி வேண்டாமென்று நிறுத்துவதாக தோற்றப்படுகிறது. விவசாயிகளது கடன் சட்ட ஏற்பாட்டின்படி சங்கங்களுக்குக் கடன்கொடுப்பதால் ஒருவிதலாபமு மேற்படுவதாய்த் தெரியவில்லை. யாதொரு சட்ட நிபந்தனையுமின்றி சங்கங்களுக்கு கடன் கொடுத்தல் அவசியமென்று தோன்றும்போதும், 1912-வது வருஷத்து கோவாபரேடிவ் சங்கங்கள் ஆக்ட் 44-வது செக்ஷன் பிரகாரம் கவர்ன்மெண்டாரிட மிருந்து பெறும் கடனை ரெவினியூ நிலவரிபோல் விவசாயிகளது கடன் ஆக்ட் பிரகாரம் வாங்கும்படி செய்ய கவர்ன்மெண்டாருக்கு ஸ்வாதீனமுண்டு. இந்தக் காரணங்களால் கோவாபரேடிவ் சங்கங்களுக்கு அந்த ஆக்ட் பிரகாரம் முன் பணம் கொடுத்துதவும்படி விவசாயிகளது கடன் ஆக்டைத் திருத்த அசம்மதர்களாயிருக்கின்றனர்.

3. கோவாபரேடிவ் சங்கங்களின் மெம்பர்களுக்கு டாகாவி கடன் கொடுத்தல் சங்கங்கள் மூலமாய்க் கொடுக்கிறதா அல்லது நேரிட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் மூலமாய்க் கொடுக்கிறதா என்பது லோகல் கவர்ன்மெண்டாரது இஷ்டத்தைப் பொறுத்தது.

மிஸ்டர் இங்லிஷ், மிஸ்டர் சட்டர்ஜி முதலினோர் இதனாலேற்படும் கஷ்ட நிஷ்டூரங்களை எடுத்துக்கூற கடைசியில் சங்கங்களுக்கு டாகாவி கடன்கள் கவர்ன்மெண்டார் கொடுத்துதவ டாக்காவி ஆக்ட்டை திருத்த அவசியமென தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை கான்பரென்சுக்கு வந்திருந்த பம்பாய் மெம்பர்களும் மிஸ்டர் கிராஸ்த் வெய்ட்டும் அங்கீகரிக்கவில்லை.

## ஐக்கிய நாணயச் சங்கங்களின் மெம்பர்களது பழைய கடனைத் தீர்க்க வேண்டிய சிறந்த மார்க்கம்.

ராவ் ஸாஹேப் கெ. ஜி. டாம்லி அவர்கள் இவ்விஷயமாய் கான்பரென்ஸார் முன்பாக ஒரு மசோதா கொண்டுவந்தனர். இதிலடங்கிய முக்கியவிஷயங்களாவன—சங்கங்களே இதர மனிதர்கள் செய்யும் லேவா தேவி விஷயங்களை கைக்கொள்ளலாம். இதற்கு மெம்பர்களது பழைய கடனை பாக்கி யன்னியில் தீர்த்துவிட வேண்டும். சரியான ஜாமீன் இல்லாமல் கடன்கொடுத்தல் கூடாது முதலிய இவ்விஷயம் ரிஜிஸ்ட்ரார்கள் யாவராலும் தம் தம் மாகாண திருவாக மூலமாய் தமக்கேற்பட்டுள்ள அநுபோகங்களை வெளியிட, கடைசியில் பிரஸிடெண்டவர்கள், மாகாணங்கள் ஒவ்வொன்றும் விஸ்தீரணத்தில் மாறுபட்டிருப்பதால் இதைப்பற்றி பொதுவான சட்டமொன்றும் ஏற்படுத்த சாத்தியப்படாதென்றும் மெம்பர்களது அபிப்பிராயங்களடங்கிய குறிப்பு ஆறுவிது விஷயத்தில் எடுத்துக்கொள்ளப்படு மென்றும் கூறினர்.

## ஐக்கிய நாணயச் சங்கங்களால் ஸிவில் கோர்ட்டுகளில் செய்யப்பட்ட வியாஜ்ஜியங்களும் அவர்கள் விதித்த எதிர் வட்டியும்.

மிஸ்டர் சாட்டர்ஜி அவர்கள், சங்கங்கள் அதிகவட்டிக்குப் பணம் வாங்கி மெம்பர்களுக்கு சப்ளை செய்ய மெம்பர்கள் இதைக் கொடுக்காமல் போகவே ஸிவில் கோர்ட்டில் வியாஜ்யம்செய்ய கோர்ட்டார் எதிர்வட்டி கட்டிக் கொடுக்காமலும் முதலுக்கே 100-க்கு 6-வட்டி வீதம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செலுத்தும்படி உத்தரவிடுகின்றனர். இதனால் பெருத்த கஷ்டமுண்டாகிறதென ஒரு மசோதா கொண்டுவர மிஸ்டர் இயுபாங்க் அவர்கள் இங்கிலீஷ் ஆக்ட்டிலுள்ள சட்டங்களை எடுத்துக் கூறி அவைகளை இங்கு அநுபோகத்துக்குக் கொண்டுவந்தால் ஸிவில் ப்ரோஸீஜர் கோட் சட்டப்படி ஸப்-ஜட்ஜின் அதிகாரத்திற்கு பங்கம் செய்வதுபோ லாகுமென கூறினர். பிரஸிடெண்டும் இதர ரிஜிஸ்ட்ரார்களும் இதை ஒத்துக்கொண்டு மிகவும் தீர்க்காலோசனை செய்தே இதில் பிரவேசிக்க வேண்டுமென கடைசியில் கூறப்பட்டது.

## ஐக்கிய நாணயச் சங்க மெம்பர்களது கடனை நிஷ்கரிஷை செய்ய சுலப வழி.

கோவாபரேடிவ் சங்கங்களின் மெம்பர்களது கடனை நிஷ்கரிஷை செய்ய கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்ட் சீர்திருத்த அவசியமென மிஸ்டர் ஆர். ஜி. நாயக் அவர்கள் கான்பிரென்ஸ் முன்பாக ஓர் தீர்மானம் கொண்டுவந்தனர். ரிஜிஸ்ட்ரார்கள் இதை விவரிக்க, கடைசியில் பண்டில் கண்ட் என் கம்பேர்டு எஸ்டேட்டுகள் ஆக்ட் (Bundlekhand Encumbered Estates' Act) போல் ஒருவித சட்டம் அவசியம் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

## தொழில் தனத்தின் தொகையை கணக்கிட சிறந்த வழி.

மிஸ்டர் மித்ரா அவர்கள் இதுவிஷயத்தைப்பற்றி விவாதிக்க ஒரு மசோதா கொண்டுவந்தனர். பிரஸிடெண்டு வேண்டுகோளின்படி மிஸ்டர் இங்லிஷ் அவர்கள் சப் கமிட்டியார்கள் கொண்டுவந்த ரிபோர்ட்டை பின் வருமாறு வாசித்தார்:—தொழில்தனமாவது, ஆஸ்தியையும் கடனையும் பற்றிய ஸ்டேட்மெண்டில் கடன் என்று காணப்படும். மொத்த தொகையிலிருந்து, 19, 20, 24 காலங்களிலுள்ள (Columns) தொகைகள் போக, பாக்கியுள்ளது பிறகு ரிஜிஸ்ட்ரார்களது அபிப்பிராயங்கள் வெளிவந்ததும், பிரஸிடெண்டவர்கள், சப் கமிட்டியார்களது ரிப்போர்ட்டின் ஆதாரவைக் கொண்டு பிறகு தீர்மானிக்க வேண்டுமெனக் கூறினர்.



## கோவாபரேடிவ் சங்கங்களின் பகிரங்கமான தஸ்தவேஜுகளின் அங்கீகரிக்கப்பட்ட காப்பிகளை ஜனங்களுக்கு சப்ளை செய்தல்.

மிஸ்டர் மித்ரா அவர்கள் இதை விவாதத்திற்குக் கொண்டுவந்தார். பிரஸிடெண்டு அவர்களது வேண்டுகோளின்மேல் ஸப் கமிட்டியாரது ரிபோர்ட்டை மிஸ்டர் இங்லிஷ் வாசித்தார். இந்த ரிப்போர்ட்டின் அம்சங்களை எல்லா ரிஜிஸ்ட்ரார்களும் அங்கீகரிக்கவே கடைசியில் இது ஒத்துக்கொள்ளப் பட்டதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

## மெம்பர்களுக்கு அவர்கள் பங்குகளுக்குத் தகுந்தபடி கடன் கொடுத்தல்.

மிஸ்டர் மித்ரா அவர்களே இதையும் விவாதத்திற்குக் கொண்டுவந்தனர். வழக்கப்படி பிரஸிடெண்டவர்களது வேண்டுகோளின்படி மிஸ்டர் இங்லிஷ் சப் கமிட்டியார்களது ரிப்போர்ட்டை வாசித்தனர். கடைசியில் ஸப் கமிட்டியார்களது ரிப்போர்ட்டே யுக்தமென யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## மாகாண கோவாபரேடிவ் கான்பிரென்ஸ்களின் ரிப்போர்ட்டை எழுதவேண்டிய தோரணை.

ரெவினியு அண்டு அக்ரிகல்சர் (விவசாயம்) இலாகாதாரால் தயாரிக்கப்பட்ட குறிப்புகள் கான்பிரன்ஸார்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டது. இப்போதும் இதைப்பற்றி ஸப் கமிடியாரால் கொண்டுவரப்பட்ட ரிப்போர்ட் மிஸ்டர் இங்லீஷால் வாசிக்கப்பட்டது. கடைசியில் இத்தீர்மானமே ரிஜிஸ்ட்ரார்களுக்கு இனி உதவக்கூடிய சிறந்த வழியாகுமென ஒத்துக்கொள்ளப்பட்டது.

## கோவாபரேடிவ் சங்கங்களில் வழங்கும் சில மொழிகளை வரையறுத்தல்.

மிஸ்டர் இயூபாங்க் அவர்கள் இதைப்பற்றி விவாதத்திற்குக் கொண்டுவந்தார். அவர் பங்கு திரவியங்களுக்கும் இதர மூலதனங்களுக்கும் வித்தியாச மேற்படும்படி ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கூறினர். பிறகு சப்கமிட்டியார்களது ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. ரிஜிஸ்ட்ரார்கள் இதன் பிறகு வெகு நேரம் விவாதித்துக் கடைசியில் சப்கமிட்டியார்களது ரிப்போர்ட்டை சிற்சில விடங்களில் தமக்கு அநுகூலமாய் மாற்றி அங்கீகரித்தனர்.

## சங்கங்கள் டிரஷரிகளில் பணம் செலுத்துதல்.

மிஸ்டர் லாங்லி அவர்கள், பிரெஸிடெண்டு அவர்களது வேண்டுகோளின்படி விவாதத்திற்கு 2 ஸப்-கமிட்டியாரது ரிப்போர்ட்டை வாசித்தார். மிஸ்டர் இங்கிலீஷ் அவர்கள் ஸப்-கமிட்டியாரது ரிப்போர்ட்டை பலமாய் ஆதரித்துப்பேச, கடைசியில் அந்த ரிப்போர்ட்டே ஸிலாக்கியமென அங்கீகரிக்கப்பட்டது.

## வருஷாந்தர ரிப்போர்ட்டில் க்ஷேமநிதியை எவ்விதம் காண்பிக்கவேண்டுமென்பது.

ரெவினியு அண்டு அக்ரிகல்சர் இலாகாதாரால் வெளியிட்டுள்ள குறிப்புகள் கான்பிரென்ஸார் முன்பாக விவாதத்திற்கு வந்தன. பிரெஸிடெண்டவர்களது வேண்டுகோளின்மேல் 2 சப் கமிட்டியாரது ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. கடைசியில் அந்த ரிப்போர்ட்டைக் கொஞ்சம் சீர்திருத்தி அங்கீகரித்தனர்.

## கோவாபரேடிவ் பாங்குகளும் பொதுஜனக் கல்வியும்.

மிஸ்டர் கிராஸ்த்வெய்ட் அவர்கள் மேற்குறித்த விஷயத்தைப்பற்றி கான்பிரன்ஸார் முன் விவாதத்திற்குக் கொண்டுவந்தனர்.

இது ரிஜிஸ்ட்ரார்களால் செவ்வனே விவாதிக்கப்பட்ட பிறகு அதில் முக்கியமான விஷயங்களை மட்டிலும் கான்பிரன்ஸார் கடைசியில் அங்கீகரித்தனர்.

### கால் நடைகளை இன்ஷியூர் செய்தல்.

மிஸ்டர் இங்கிலீஷ் அவர்கள் இவ்விஷயத்தை கான்பிரன்ஸ் முன்பாக கொண்டு வந்தனர். பிரசிடெண்ட் அவர்களது அநுமதியின்மேல் பிறகு இரண்டாவது பர்மா அக்ரிகல்சரல் அண்டு கோவாபரேடிவ் கான்பரென்ஸில் ஆலோசிக்கப்பட்ட தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. கடைசியில் விவசாய அபிவிருத்தி உத்தேசமாய் லோகல் கவர்ன்மெண்டார்கள் அச்சங்கங்களுக்குதவி செய்யவும் அவைகளை பர்மாவில் மிஸ்டர் இங்கிலீஷால் நிருவாகிக்கப் படுகிறபடி நிருவாகஞ் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

### கால் நடை இன்ஷியூரனஸ் சங்கங்களுக்கு கவர்னமெண்டார் உதவி.

மிஸ்டர் கஸ்டாவ் ஹால்லர் அவர்கள் மேற்படி விஷயத்தை கான்பரென்ஸாருக்கு முதல் முதல் அறிவிக்கையிலேயே ஜெர்மனியில் கால்நடை இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் எவ்விதம் நடைபெறுகின்றன வென்றும் இதை யொட்டி குடகில் எவ்வாறு இவ்விதச் சங்கங்கள் நிருவாகஞ் செய்யப்பட்டு வருகின்றன வென்பதையும் விரிவாய்க் கூறினர். கடைசியில் இதற்குமுன் விஷயம் தீர்மானிக்கப்பட்ட விதம் இதுவும் தீர்மானிக்கப்பட்டது.

### கோவாபரேடிவ் பாற்சாலை சங்கங்கள் ஸ்தாபனம்.

மிஸ்டர். சாடர்ஜி அவர்கள் இதைப்பற்றிய மசோதாவொன்று தீர்மானத்துக்குக் கொண்டு வந்தனர். ரிஜிஸ்ட்ரார்கள் இதை விவாதித்த பிறகு பிரசிடெண்டு அவர்கள் இப்பாற்சாலை சங்கங்கள் ஸ்தாபன விஷயம் விவசாய போர்டாரது அடுத்த மீட்டிங்கில் செவ்வனே விவாதிக்கப்படுமெனகூற முடிவுபெற்றது. பிறகு பிரசிடெண்டு அக்கான்பிரென்சுக்கு வந்திருந்த உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்கள் யாவர்க்கும் தமது அன்பார்ந்த வந்தனத்தை வெளிப்படுத்தினர். மிஸ்டர் ஹாமில்டன் கடைசியாக பிரசிடெண்டு அவர்களுக்கு, ஆங்கு விஜயஞ்செய்திருந்த யாவர்க்கும் பிரதிநிதியாய் வந்தனமொழிகள் கூற அன்றயதின மீட்டிங்கு முடிவடைந்தது.

---

### மூன்றுவதுநாள் மீட்டிங்கு.

## அக்கிராசனாதிபதி அவர்களது உபந்நியாசம்.

---

1913-வது வருஷம் அக்டோபர் மாதம் 18-ம் தேதி ஐக்கியச்சங்க ரிஜிஸ்ட்ரார்களது கான்பரென்ஸ் முடிவுபெற்றது. ஆனரபில் ஸர், ராபர்ட் கார் லைல் அவர்கள் பின்வருமாறு உபந்நியசித்தார்.—

கனவான்களே! நான் ஏழு வருஷங்களுக்கு முன்பு கோவாபரேடிவ் கான்பரென்சுக்கு வந்திருந்தேன். அதுமுதல் ஊர்ஜிதமாய் இதைப்பற்றி வேலை செய்யப்பட்டு வருகிறது. 1907-வது வருஷத்தில் இருந்த குழந்தை இப்போது சிறுபிராயமாய் விளங்குகிறது. சென்ற வருஷம் சங்கங்கள் ஒரு கோடிக்குமேல் அதிகக்கடன் கொடுத்திருக்கிறது. அதே காலத்தில் சங்கங்களின் மொத்த மெம்பர்கள் 5,73,000 ல் 160,000 மெம்பர்கள் அதிகரித்திருக்கின்றனர். மெம்பர்களின் குடும்பத்தார்கள் உள்பட ஐக்கிய சங்கங்களின் க்ஷேமாபி விருத்தியை நாடுபவர் 3,000,000 ஜனங்களாகும். இச்சங்கங்களால் நன்மை யடைந்தவர் பலர். ஐக்கிய சங்கங்கள் பலமாயுள்ள இடங்களில் முதலாளிகள் தாம் வழக்கமாய் கொடுத்துவந்த வட்டி விகிதத்தையும் குறைத்துவிட்டதாய்த் தெரிகிறது. சுமார் 6,000,000 ஜனங்கள் வரையில் ஐக்கிய சங்கங்களால் நன்மை யடைந்திருப்பதாய் இவ்வித உதாரணங்களால் கூறலாம். நாம் இங்கு கூடியிருப்பதின் முக்கிய காரணம் ஐக்கிய முறையில் மலிவாய்க் கடன் பெறுதலான உபாயங்களைக் கண்டுபிடிப்பதாகும். மலிவாய்க் கடன் பெறுதலவசியம். பணமின்றிக் காரியமேதும் நடைபெறாது. பணத்தைச் சரியானவழியில் செலவிடத் தெரியாதவனுக்குக் கடன் கொடுப்பதால் அவனுக்கு யாம் கேடு செய்தலாகும். ஆகவே நாம் ஒருவனுக்கு மலிவாய்க் கடன் கொடுப்பதற்கு முன்பாக அப்பணத்தைச் சரியானவழியில் செலவிட அவனுக்கு யாம் கற்றுக்கொடுத்த லவசியமாகும். இந்தியாவில் நமக்குண்டான பழக்கத்தாலேயே ஐக்கியச் சங்கத்தால் பல நன்மையுண்டாகுமென நமக்கு நன்றாய் விளங்குகிறது. ஐக்கிய சங்கங்கள் நன்றாய் வேரூன்றித் தழைத்துத் தளிர்த்து விளங்கும். ஐர்லாந்திலோ ஸர் ஹோரேஸ் பிளங்கட்டால் எவ்வளவு ஆச்சரியகரமான காரியங்கள் எளிதில் நடைபெறுகின்றன வென்பதை நேரிற்சென்று கண்ணுற்றாலே தெரியவரும். ஒரு கடனாளியை கடனில்லா புது மனிதனாகச் செய்வது எளிதான காரியமல்ல. பல விவசாயிகள் ஒன்று சேர்ந்து கடன் பாரத்து விஷயத்தில் அக்கறை கொள்ளவேண்டுவது அவசியம். இதைப்பற்றி கவர்ன்மெண்டார் பலதுறைகளில் ஜனங்களைத் தூண்டுதல் செய்து பற்பல விதத்தில் உதவி செய்கின்றனர். ஆனால் இவைகளெல்லாம் கடனாளிக்கு வெகு அனுகூலமாயிருப்பதாயில்லை. ஆகவே தான் நான் உங்களெல்லோரையும் புதுச்சங்கங்களை யுண்டாக்கும் போதெல்லாம் ஜாக்கிரதையாய் சரியாய் ஐக்கியச்சங்கமென்னும் கட்டிடத்திற்குச் சரியான அஸ்திவாரம் போடுகின்றோமாவென்று ஊகித்துச் செய்யவேண்டுமென்று வற்புறுத்துவது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஜாக்கிரதை எடுத்துக் கொள்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நன்மை பயக்கும். நீங்கள் கைக்கொண்டுள்ள கைங்கரியம் உங்களுக்கு புகழுண்டாக்குவது. உண்மையான ஐக்கிய முயற்சியால் இந்தியாவின் நிலைமையை மாற்றிவிடலாம். இந்த மார்க்கத்தால் தவிர வேறு மார்க்கங்களால் ஜனங்களுக்கு எளிதில் வித்தைபுகட்டவும், உள்தேச வர்த்தமானத்தை நிர்வகிக்க சக்தி யுண்டுபண்ணுவதும் முடியாது. இதனால் இராஜாங்க நிருவாகத்திற்கும் பல உதவிகளேற்படும். விவசாயத்தை விருத்தி செய்ய வழிதேட விரும்பினால் ஐக்கிய முயற்சி யின்வழிக்குத் தான் வரவேண்டும், கனவான்களே, ஐக்கிய முயற்சியை எவ்விதம் ஜனங்களுக்குப் புகட்டி நிர்வகிப்பதென்பதை விவரித்து உங்களுக்கு யான் கூறவேண்டுவதனாவசியம். ஆனால் உலகத்தார்களெல்லோருக்கும் பொதுவான சில மார்க்கங்களுண்டு. இவைகளை நிதானித்து நன்றாய்ச் செய்யவேண்டுவது அவசியமாகும். இப்படிச் செய்யாதுபோனால் நிருவகிப்பது கஷ்டமாவதோடுகூட நமதெண்ணம நிறைவேறுவதும் கஷ்டம். சுலப வட்டிக்கு பணம் பெறுதலென்னும் வழியைத் தவிர இதர வழிகளிலும் விருத்திசெய்ய முயலவேண்டும். ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு தொழிலையே செய்துவர வற்புறுத்தவேண்டும். அப்போதுதான் சங்க நிருவாகம் எளிதாய்ப் புலப்படும். சங்க நிருவாகம் எளிதாய்ப் புலப்பட்டால்தான் சங்கம் நன்றாய் வேலை செய்யும். சங்கம் நன்றாய் வேலை செய்தால்தான் ஐக்கிய முயற்சி என்னும் மரத்தின்வேர் நன்றாய் வேரூன்றி நிற்கும். ஒரு சங்கத்து பல மெம்பர்கள் மற்றொரு சங்கத்து மெம்பர்களாகவுமிருந்து வேறு வழிகளிலும் வேலை செய்தால் நன்மைகள் பல ஏற்படுமென்று நாம் திட்டமாய்க் கூறலாம். ஒவ்வொரு சங்கத்துக்கும் பற்பல கஷ்டங்கள் ஏற்படுவது சகஜம் தான். ஆனால் இவைகளெல்லாம் ஐக்கிய முயற்சியின் லக்ஷணங்களை நன்றாயறிந்துள்ள

வர்களால் தான் எளிதில் நிவர்த்திக்க முடியும். சங்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்பாக அதன் மெம்பர்கள் ஐக்கிய முயற்சியின் தத்துவங்களை அறிந்திருத்தலவசியம். அவ்விதம் அறிந்திருந்தும் சங்காரம்பத்தில் நிருவகிப்பது சுலபமென தோன்றுவதெல்லாம் பிறகு நமக்கு கஷ்டமானதாய்ப் புலப்படும்.

ஐக்கிய சங்கங்களுக் குதவியாய் ஐக்கிய பாங்கி ஏற்படுத்தினால் ஐக்கிய சங்கங்கள் விருத்தியடைய ஐக்கிய பாங்கியும் விருத்தியடைகின்றது. ஆனால் ஐக்கிய பாங்கியானது க்ஷேமமுற்று சிலகாலமான பிறகு ஐக்கிய சங்கங்களுக்கு உதவியாயிருக்குமாவென சந்தேகிக்கின்றேன். ஏனெனில் அவர்களது தொகையில் பெரும்பாகம் சங்கங்களில் முடக்கப்பட்டுப்போக திரும்ப அச்சங்கங்களிடமிருந்து தமது தொகையை எளிதில் பெற முடியாதெனத் தெரியும்போது கடன் கொடுக்கு மேற்பாட்டை நிறுத்தினாலும் நிறுத்திவிடும். ரிஜிஸ்ட்ரார் போய் பார்க்கவேண்டிய சங்கங்களை எடுத்துக்கொள்வோமாயின் ரிஜிஸ்ட்ரார் பற்பலவிதச் சங்கங்களுடன் போராடவேண்டியிருக்கின்றது. முதல் முதல் ரிஜிஸ்ட்ரார் அச்சங்கங்களுடன் பழகிவரும்போது ஒருவித பொது அபிப்பிராயத்தோடு சிநேகம் பாராட்டி வருகிறார் பிறகு அதன் நடவடிக்கையால் அச்சங்கங்களின் உள்ளெண்ணங்களையும் ஆராய்ந்தறிய வேண்டிய சிரமமேற்படுகின்றது. ஒரு ரிஜிஸ்ட்ரார் தமது ஸ்தானத்தைக் காலி செய்துவிட்டால் பிறகு அந்த ஸ்தானத்திற்கு வரவேண்டிய மற்றொருவர் ஐக்கிய முயற்சியின் தத்வங்களையும் சங்கங்களின் மர்மங்களையும் அவசியம் அறிந்திருக்கவேண்டிய நிர்ப்பந்த மேற்படுகின்றது. இதை நாம் சில மாகாணங்கள் மூலமாய் நன்றாயறிந்துள்ளோம். இந்த வழிகளில் கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய நீதி என்னவென்று நீங்கள் என்னைக் கேட்கலாம். அதற்கு என்னுடைய பதில் யாதெனில், ஜனங்களுடைய அபிமானத்தை வளரச் செய்யவும் சங்கங்கள் சரியான மார்க்கத்தில் வேலை செய்யவும் தூண்டக்கூடிய வழியை யாம் கடைப்பிடித்து வேலை செய்யவேண்டுமென்பதே. தமக்குள் தாம் உதவி செய்துகொள்ளுதலே ஐக்கிய முயற்சியின் முக்கிய தத்துவமாகும். சங்கங்கள் தாமே நிருவகித்துக்கொள்ளக்கூடிய நிலைமையிலிருக்கையில் கவர்ன்மெண்டாரிடமிருந்து எவ்வித உதவியையும் எதிர்பார்க்கக்கூடாது. ஆனால் கவர்ன்மெண்டாரும் தமது உதவியை நாடும் சங்கங்களை புறக்கணித்தல் கூடாது. இவ்விதம் ஒருவரும் செய்யத் துணியாரென்றே கருதுகிறேன்.

முடிவில், இச்சங்கத்தின் காரியதரிசிகளாயிருந்து பேருதவி செய்துவந்த மெஸர்ஸ் லாங்லேக்கும் நாய்ஸிக்கும் எனது அன்பார்ந்த வந்தனத்தை யளிக்கின்றேன்.

மிஸ்டர் லல்லுபாய் சாமல்தாஸ் அவர்கள் கடைசியில், ஸர் ராபர்ட் கார்லைல் அவர்கள் உபந்நியாசித்த வெகு புத்திமதிகள் புகட்டக்கூடிய உபந்நியாசத்தைப் புகழ்ந்தும், லோகல் கவர்ன்மெண்டார்கள் ஸர் ராபர்ட் கார்லைல் அவர்கள் அத்தியாவசியமானதெனக் கூறியவைகளை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்களென கட்டிச் சொல்லியும் அவருக்கு வந்தனோபசாரம் செய்ய பிரேரேபிக்க யாவரும் வெகு குதூகலத்துடன் கலந்து ஆரவாரித்தனர்.

---


# விளம்பர விகிதங்கள்.

:(•):

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 6 | 0 | 0 | ,, ,, |

## மற்றவர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |


# சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

நான்காம் சம்புடம் முடிவுற்றது சந்தாதார்கள் தயை கூர்ந்து தமது பாக்கியுள்ள சந்தாவுடன் இந்த சம்புடம் ஐந்துக்குள்ள சந்தாவையும் அட்வான்ஸாய்க் கொடுத்துதவும்படிக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு

மானேஜர்,

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி ஆபீஸ்

33, அருணாசல ஆசாரி தெரு,

திருவல்லிக்கேணி.

# ஐயா! உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இந்தியன் வலித் தைலம்.

நீங்கள், தலைவலி, முதுகுவலி, வாதம், இன்னும் ஆயிரக்கணக்கான வலிகளால் ஏன் இனிமேல் அவஸ்தைப் படவேண்டும். இவைகளை முழுவதும் சொஸ்தம் பண்ணக்கூடிய மருந்து சமீபத்திலிருக்கிறது. இண்டியன் பெயின் பாம் என்று சொல்லக்கூடிய அமிர்தாஞ்சனம் மருந்து, மேற்கூறிய வியாதிகளை பறக்கடிக்கச் செய்யுமென்று நம்புங்கள். உபயோகித்த க்ஷணமே ஆரோக்கியத்தைத் தரும், வலியைத் தணித்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும். முன்னிருந்த அழகு, சந்தோஷம், நிதானம் இவற்றைக் கொடுக்கும். போன பாலியத்திலுள்ள ரம்மியமான முகத்தையும், புன்சிரிப்புள்ள பார்வையையும், திருப்பிக்கொடுக்கும். உபயோகமற்ற மருந்துகளையும், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத வலி மருந்துகளையும் விலக்குங்கள். வேண்டுமென்றால், அமிர்தாஞ்சனத்தைத் தவிர, வேறு மார்க்கட்டில் இண்டாகும் எவ்வித மருந்துகளையும் வாங்குகிற தில்லை யென்று உறுதியாய் ஞாபகம் வைக்கவேண்டும்.




கடி லபக்காரிணி

கடி, மேகப்படைகள் முதலானவைகளை சொஸ்தப்படுத்தும் உறுதியான மருந்து.

பற் பொடி.

மலிவாயும் உபயோகமுள்ளதாகவும் உள்ளது. விலை அணா 2-தான்.

இந்தியாவில் மருந்து ஸாமான்கள் விற்கும் வியாபாரிகளிடத்தில் கிடைக்கும்.

அமிர்தாஞ்சனம் டிப்போ,

169, ப்ரிர் ரோட் புது ஜெனரல் போஸ்டாபிசுக்கு எதிரில், தந்திவிலாசம் "அமிருதாஞ்சனம்" பம்பாய்.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
... 1914
MADRAS.

# மதராஸ் புல்லடீன் ஆவ் கோவாபரேஷன்.

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் V] 1914-ம் ஞு மார்ச்சுமீ [இலக்கம் 3.

## கூட்டுத்தொழில் முயற்சி விற்பனைச் சங்கங்கள்.

மைசூர் கோவாப்ரேடிவ் சங்கங்களின் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார்
ம-ா-ா-ஸ்ரீ ஆர். ரெங்காராவ் அவர்கள் எழுதியது.

:(*):

ஐரோப்பா தேசத்தில், ஐக்கிய நாணயச் சங்கங்களுக்குப் பிறகு ஜனங்கள் மிகவும் விருப்பத்தக்கது, ஐக்கிய முயற்சி விற்பனைச் சங்கங்கள். தொழிலாளிகளுக்கு டவுன் ஸ்டோர்கள் எப்படி சாதகமாயிருக்கின்றனவோ, அவ்விதமே இவைகள் விவசாயிகளுக்கு உதவுகின்றன. இவ்விரு ஐக்கிய முறைகளின் நோக்கங்கள் ஒரு வகைத்தாயினும், கிராம விற்பனைச் சங்கங்கள் டவுன் ஸ்டோரைக் காட்டிலும் ஜனங்களுக்கு விலையுள்ள நற்பயன்களைத் தருகின்றன. டவுன் ஸ்டோரானது ஒரேவழி ஐக்கிய முறையைக் காட்டுகிறது; ஆனால் விவசாயச் சங்கங்களோ, உற்பத்தி, விற்பனை வழிகளில் அநேக ஐக்கியமுறைகளை ஏற்படுத்துவதற்குக் காரணமாயிருக்கின்றன. சாமான்களை மலிவாய் வாங்குவதும் அல்லது மொத்தத்தில் வாங்கி ஏற்பட்டிருக்கும் பழைய கிரயத்திற்கு நல்ல சாமான்களை மெம்பர்களுக்கு விற்பதே இச்சங்கங்களின் நோக்கம். இந்த கூறும் சாமான்களாவன, விசேஷமாய் விவசாயக் கருவிகள், எருக்கள், விதைகள், எண்ணெய்கள், முதலியன. இச்சங்கங்கள் குடித்தனத்திற்கு வேண்டிய உணவுப்பொருள்களையும், இரும்பு சாமான்களையும் அபூர்வமாய்த்தான் விற்கின்றன. சில்லறை வியாபாரிகளின் விரோதம் வந்து சேருமென்று கடையிற் கூறிய சாமான்களை விற்கிறதில்லை. இச்சங்கங்களின் நற்பயன்களை விவரித்துச் சொல்லுவது அனாவசியம். யாவரும் அறிந்த விஷயமே! மெம்பர்களுக்கு நல்ல சாமான்களைக் கொடுப்பதுடன், சங்கங்கள் ஏராளமாய் வாங்குவதால் சுத்தமுள்ளதாய் சேகரிக்க வேண்டிய சௌகரியங்களை உடைத்தாயிருக்கின்றன. மலிவாயும் கிடைக்கின்றன. இவை எல்லா நன்மைகளிலும் மிகச் சிறந்தது, மெம்பர்களுக்குள் ஓர்வித ஒற்றுமையும், விவசாய அபிவிருத்தியில் ஊக்கமும், சிக்கனமும் தொழில் செய்யும் தன்மையையும் உண்டாக்கின்றன.

இச்சங்கங்களின் மூலதனம் சிறு பங்குகளாற் சேர்ந்த தொகையாகும். இத்தொகையே விசேஷமாய் போதுமாதலால், கடன் வாங்கவேண்டிய அவசியமில்லை. இவைகள் பெரும்பான்மை பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்கள். இவ்வகைச் சங்கத்தின் நடவடிக்கைகள், நாணய பாங்கிகளைக்காட்டிலும் மிகவும் விசாலித்திருக்கின்றன. எவ்வளவுக்கெவ்வளவு இது விசாலித்திருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வியாபாரங்கள் விருத்தியடைந்து சுமை கூலி, சிப்பந்திச் செலவு முதலியவைகள் மிகவும் குறைந்து, சாமான்களின் விலைகளும் குறையும். இத்தொழில் நடத்தும் முறைகள் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறாயிருக்கின்றன. விசேஷமாய் மெம்பர்கள் தங்களுக்குத் தேவையான சாமான்களையும், வேண்டிய அளவையும் சங்கத்திற்குத் தெரியப்படுத்துவார்கள். சங்கமானது ஸெண்ட்ரல் சங்கத்திலிருந்து அவைகளை வரவழித்து மார்க்கட்டு ரேட்டு விகிதம் இவர்களுக்குக் கொடுக்கும் ஆனால் வருஷக்கடைசியில் ஏற்படும் லாபத்தை தாங்கள் வாங்கின தொகைக்கு தகுந்தபடி மெம்பர்கள் பிரித்துக் கொள்ளுவார்கள். இச்சங்கங்களின் மெம்பர்களை மிக்க அபிமானத்துடன் மனப் பூர்வமாய் ஒத்து உழைத்தால் மிகவும் விருத்தியடையலாம்.

இச்சங்கங்கள் விவசாயிகளுக்குத் தேவையான சாமான்களை மாத்திரம் வியாபாரம் செய்யவேண்டுமோ அல்லது குடித்தனத்திற்கு வேண்டியவைகளையும் விற்பது தகுதியா என்று பார்ப்போம். சிலர் கடைசியிற் கூறிய சாமான்களை வியாபாரம் செய்தால், சில்லறைக் கடைக்காரர்கள் விரோதிகளாவரென்கிறார்கள். ஆனால் இப்படிச் சொல்வது நியாயமல்ல. நாணயச் சங்கங்கள் ஏற்பட்டால், லேவாதேவிக்காரரின் விரோதம் வருகிறது, அதற்கு யாம் என்ன செய்கிறோம். ஆகையால் ஸ்தலங்களுக்குத் தகுந்தபடி எந்தெந்த சாமான்கள் அவசியமானதோ, அவைகளை இச்சங்கங்கள் மெம்பர்களுக்கு சப்ளை செய்யவேண்டும். உதாரணமாக, டென்மார்க்கு ஐக்கியமுறை விற்பனைச் சங்கங்களின் முக்கியமான நோக்கம் வீட்டுக்கு வேண்டிய பொருள்களை மெம்பர்களுக்கு விற்பதே. ஸ்விட்ஸர்லெண்டிலும் இம்மாதிரியே. யூனிஸ்ஸார்த் சங்கத்தில் எல்லாவித சாமான்களும் விற்கப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் ரயித்துகளின் வீடுகளுக்கு அவசியமுள்ள பொருள்கள் மிகவும் குறைவாயிருப்பதால், இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு வேண்டியவைகளை சப்ளை செய்தல் உரிமை.

விற்பனைச் சங்கங்களில் மெம்பர்களுக்கு நம்பிக்கையில் கடனாக சாமான்களைக் கொடுக்கலாமா என்பது முக்கியமான கேள்வி. கடனில் வியாபாரம் செய்தால், மூலதனத்தைத் தவிர வேறு தொழில்தனமில்லாமையால், சங்கத்தின் வியாபாரம் வரவரக் க்ஷீணமடையும் அப்படி மெம்பர்கள் இவ்வித சாதகமுமடைய விரும்பினால், இச்சங்கங்களுடன் நாணயச் சங்கங்களையும் ஸ்தாபிக்கவேண்டும். வேண்டிய தொகையை நாணயச் சங்கங்களிலிருந்து மெம்பர்கள் கடன் வாங்கி, ரொக்கத்திற்கு விற்பனை சங்கங்களிலிருந்து சாமான்களைப் பெறுதல், நல்ல ஏற்பாடாய்த் தோன்றுகிறது. இந்தியாவில் இவ்விஷயமாய் யாதொரு ஏற்பாடும் எடுக்கப்படவில்லை.

இந்தியாவில் ஐக்கிய முறையின் அபிவிருத்தி நாணயச் சங்கங்களுடன் நிற்கிறது. இம்முறையில் சங்கங்கள் விருத்தியடைந்திருப்பதால், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இவ்வழியிலேயே செல்லுகிறார்களே யொழிய, வேறு முறைகளிற் சென்று அவைகளினாற் ஜனங்களடையும் ஊதியங்களைக் காண்பிப்பவர்களல்ல. விவசாயிகள் நூதன சாகுபடி வழியில் நன்றாய் பழக்கப்பட்டாலொழிய புது சாகுபடி யந்திரங்களின் அருமையை அவர்கள் அறியார்; சங்கமும் விருத்தியடையாது. விவசாயிகள் தங்கள் சாகுபடி



செய்யும் விதம் மிகவும் குறைவாயிருக்கிறதென்று இப்பொழுதறிந்து வருகிறார்கள். கவர்ன்மெண்டார், விவசாயிகளை முன்னுக்குக் கொண்டுவர, ஊக்கத்துடன் அநேக வழிகளில் உழைத்து வருகிறார்கள். இப்பொழுது ஐக்கியமுறையில் விவசாய சங்கங்களை ஏற்படுத்தினால், நாணயச் சங்கங்கள் எப்படி ஓங்கியிருக்கின்றனவோ, அவ்விதமே செழிப்படைந்து, விவசாயிகளின் கஷ்டங்களை நிவர்த்தித்து செல்வத்தைப் பெருகச் செய்யும்.

---

# விவசாயிகள் யெப்படி லாபமடையலாம்?

வடமலைபுரம் ம-া-া-ஸ்ரீ ஆர். ஆனந்தராவ் அவர்கள் எழுதியது.

---

நம் தேசத்தில் விவசாயிகளுடைய நிலைமையும் விவசாய விஷயமாய் மேற்படியார்களுக்குப் பிடிக்கும் செலவையும் கணக்கிட்டுப் பார்த்தால் ரொம்பவும் பரிதாபமான நிலைமையிலிருக்கு மென்பதை யாவரும் அறிவார்கள். விவசாய சம்மந்த விஷயமாய் யெந்த விஷயத்தை யெடுத்தாலும் வருஷா வருஷம் செலவு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதனால் விவசாயிகள் படும் கஷ்டம் விவசாயம் நிறைந்த கிராமாந்தரங்களிற் சென்று பார்த்தால்தான் தெரியவரும். காலை 4-மணி முதல் 9-மணி வரை விவசாயிகள் அன்று செய்யவேண்டிய வேலைகளுக்கு வேண்டிய சாதனங்களை சேகரித்துக் கொடுத்து வேலைக்காரர்களை வேலைக்கு அனுப்புவதில் படும் கஷ்டம் சொல்லி முடியாது. காலத்தின் இயற்கையால் யெல்லா விஷயம் மாறுபடுவதைப்போல் விவசாயிகள் தாங்கள் செய்யும் விவசாய வேலைகளில் மாறுதலடையவில்லை. புதுமாதிரியான விவசாயமும் கற்றுக் கொள்வதில கவலையெடுப்பதில்லை. பழைய முறைகள் லாபகரமல்லவென்று போதித்தாலும் அதில் நம்பிக்கை இல்லை. இவ்விதமாய் தெரியாத் தன்மையாலும் பணமுடையாலும் நம் விவசாயிகள் கஷ்டப்படுவதை உத்தேசித்து நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் விவசாய விஷயமாய் புதுமாதிரிகளை தெரிந்துகொள்ள விவசாய டிபார்டுமெண்டையும் சகாய வட்டிக்கு கடன் தேவையானால் வாங்கிக்கொள்ளும்படி கோவாபரேடிவ் டிபார்டுமெண்டையும் யேற்படுத்தி வேண்டிய உதவிசெய்து வருகிறார்கள். இந்த இரண்டு டிபார்டுமெண்டாரால் யெவ்விதமான உதவி அடையலாம்? அவ்வித உதவியால் விவசாயிகளின் நிலமை யெவ்விதம் உயர்வடையுமென்பதை கவனிப்போம். கோவாபரேடிவ் டிபார்டுமெண்டாரால் வடமலைபுரம் கிராமத்தார் யெவ்வளவு நன்மை பெற்றிருக்கிறார்களென்பது இதனடியிற்காணும் ஸ்டேட்மெண்டால் தெரியவரும்.

| வருஷம் | மூலதனம் | க்ஷேம நிதி | இதர இடத்தில் வாங்கினால்யேற்படும் நஷ்டம். | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1407 | 14 | 42 | 0 | 0 |
| 2 | 4155 | 72 | 142 | 8 | 0 |
| 3 | 12505 | 170 | 375 | 0 | 0 |
| 4 | 16651 | 107 | 501 | 0 | 0 |
| 5 | 21865 | 208 | 657 | 12 | 0 |

இச்சங்கம் மெம்பர்களுக்கு மாதம் 1-க்கு 100-க்கு ¾ ரூ. வீதம் வட்டிக்கு கடன் கொடுத்து வருகிறது. இச்சங்கம் கொடாதிருந்தால் மேற்கண்ட தொகை பூராவும் மெம்பர்கள் பக்கத்தில் கடன்வாங்கிச் செலவு செய்யவேண்டியவர்கள்தான். அவ்விதம் வாங்குவதினால் மாதம் 1-க்கு 100-க்கு 1 ரூபா வட்டிக்கு மேற்பட்டுதான் வாங்க வேண்டும். 1 ரூபாய் வட்டிக்கு வாங்குவ

தாய் வைத்துக் கொண்டுதான் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதனால் சங்கத்தில் வாங்குவதினால் வருஷா வருஷம் நூற்றுக்கணக்காய் லாபம் அடைந்திருப்பது திண்ணம். மேலும் கடன் வாங்குவதற்காக யேற்பட்டிருக்கும் ஸ்டாம்பு ரிஜிஸ்டர் சிலவு லாபம். ஆனால் விவசாயிகள் கடன் தேவையானால் வாங்குவதற்கு ஐக்கியச் சங்கமே சரியான இடமென்று தெரிந்துகொள்ளலாம்.

ரொக்க லேவாதேவிக்கு மாத்திரம் இச்சங்கம் உபகாரம் செய்யுமென்பதல்ல விவசாயிகளுக்கு வேண்டிய இதர சாதனங்களையும் செய்ய தகுதியுள்ளது. வடமலைபுரத்தில் நாணயச் சங்கம் வேலை செய்துவருவதில் டிபார்ட்மெண்டாருடைய திருப்தியை அடைந்து விவசாய முயற்சிக்கு வேண்டிய சாதனங்கள் யெல்லாம் உதவிவரும்படி விவசாயச் சங்கமொன்று சென்ற ஆகஸ்டு மாதத்தில் மதறாஸ் சென்டரல் அக்ரிகல்சுரல் கமிட்டியின் கௌரவ காரியதரிசிகள் பிரத்தியத்தினத்தின்பேரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலை நடந்துவருகிறது இச்சங்கம் வேலைசெய்ய ஆரம்பிக்கவும் விவசாய டிபார்ட்மெண்டாரால் கோவில்பட்டி சர்க்கார் விவசாய பண்ணையிலிருந்து நயமான கருங்கண்ணிப் பருத்தி விதையை விலைக்கி வாங்கி மெம்பர்களுக்கு பொதி 1-க்கு ரூபா 13-8-0 வீதம் விற்கப்பட்டது. அதே காலத்தில் மற்ற வியாபாரிகள் அவ்வளவு நயமில்லாத விதையை பொதி 1-க்கு ரூபா 16-க்கு விற்று வந்தார்கள். இப்பக்கங்களில் விபசாயிகளுக்கு முக்கியமாய் வேண்டியதாயிருக்கிற தோல்களை துலாம் 1-க்கு ரூ. 26 முதல் 30-ரூ. வரை சங்கத்தில் விற்பனை செய்தது. இதர வியாபாரிகள் ரூ. 30 முதல் 34 வரை விற்று வருகிறார்கள். இப் புதுச் சங்கம் மெம்பர்களின் மாசூலை மொத்தமாயும் லாபகரமாயும் விற்பதற்கு வேண்டியதை செய்து வருகிறது. இதற்கு விவசாய டிபார்ட்மெண்டார் வேண்டிய முயற்சியும் உதவியும்செய்து வருகிறார்கள். இச்சங்கத்தின் மெம்பர்களை புதுமாதிரியான விவசாயம் செய்யும்படி அதற்கு வேண்டிய கருவிகளைக் கொடுத்துவருகிறார்கள் அதை உபயோகிக்க வேண்டிய கற்பனைகளை தங்கள் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு கற்பித்துக் கொடுக்கிறார்கள். ஆகையால் விவசாயிகள் தங்கள் க்ஷேமத்தைக்கருதி இம்மாதிரியான விவசாய ஐக்கியச் சங்கம் ஒன்றை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியது அவசியம். நாணயச் சங்கத்தைவிட இச் சங்கத்தில் ஜாஸ்தியான வேலையும் கணக்குகள் வைத்தலுமுண்டு ஆனால் இப்பொழுது கிராமத்திய ஜனங்கள் கணக்குகளிற் தேர்ந்துவருவதால் இம்மாதிரிச் சங்கத்துக் கணக்குகள் அவர்களுக்கு கடினமாகயிராது. ஒவ்வொரு நாணயச் சங்கமும் ஒரு விவசாயச் சங்கத்தை யேற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம். தற்காலத்தில் ஒவ்வொரு நாணயச் சங்கமும் அவ்விதம் யேற்படுத்திக்கொள்வது சாத்தியமில்லாதவரை தங்களுக்குத் தேவையான சௌகரியங்களை பக்க சங்கத்தாருடன் ஒப்பந்தம் செய்து சௌகரியத்தை அடையலாம். இப்பொழுது வடமலைபுரத்தில் ஒரு விவசாய ஐக்கியச்சங்கம் வேலைசெய்து வருவதில் பக்கசங்கத்தார் தங்களுக்குத் தேவையானதுகளை இச்சங்கத்தின் மூலமாய் பெறலாம். இதினால் இரண்டு சங்கத்திற்கும் லாபமுண்டு. வடமலைபுரம் சுற்றிலுமுள்ள கிராமங்களில இரவைக்கு ஜாஸ்தியான தோல் சிலவாகிறது. ஒவ்வொரு சங்கத்தின் மெம்பர்களுக்கு ஷை தோல் இல்லாதவரை வேலை முடியாது. இப்பொழுது ஒவ்வொரு மெம்பரும் தனித்தனியே வியாபாரிகளிடத்திற் போய் வாங்குவதில் ஜாஸ்தி நஷ்டமடைகிறார்கள். அவ்விதமில்லாமல் ஒவ்வொரு நாணயச் சங்கத்தின் மெம்பர்களும் ஒன்றுசேர்ந்து தங்களுக்குவேண்டிய தோல் வகையறா வியசாயத்துக்கு வேண்டிய சாமான்களை இவ்வளவென்று தீர்மானித்துக்கொண்டு அதை வடமலைபுரம் சங்கத்தாருக்குத் தெரிவித்தால் அவர்கள் தங்களுக்குத் தேவையான சாமான்களுடன் மற்றச் சங்கத்துக்குத் தேவையானதுகளையும் தருவித்துக் கொடுப்பார்கள். இவ்விதம் சுற்றிலுமுள்ள சுமார் 10 சங்கங்கள் ஒன்றுசேர்ந்து தருவித்தால் விலை சரசமாய் கிடைக்கும். மொத்தமாய் வாங்க நேரிடுவதால் எந்த சாமான் யெந்த இடத்தில் விலை சரசமாய் கிடைக்குமோ, அந்த இடத்திலேயே வாங்குவதால் மத்தியிலுள்ள தரகர்கள், வியாபாரிகள், இவர்களுக்குக் கிடைக்கும் லாபம் இச் சங்கங்களுக்குக் கிடைக்கும். ஆகையால் ஒவ்வொரு சங்கத்தாரும் இதை கவனித்து நடந்தால் மேன்மையாயிருக்கும். 10 சங்கங்களுக்கு மத்தியில் 1 சங்கம் இம்மாதிரி வேலையை கைக்கொள்ள வேண்டியது அவசியம் அங்கங்கேயிருக்கும் சங்க பிரமுகாள் ஒன்று சேர்ந்து ஆலோசித்து சாமான் வாங்கவும் தங்கள் மாசூல்களை மொத்தமாய் லாபகரமான இடத்தில் விற்கவும் யேற்பாடு செய்துகொண்டு அவரவர்கள் சுகத்தை யடையவேண்டுமென்றும் ஐக்கிய இயக்கத்தை விர்த்திக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சி செய்யவேணுமாயும் பிரார்த்திக்கிறேன்.



---

# தாழ்ந்த வகுப்பினர்களும் கூட்டு முயற்சியும்.

அஸிஸ்டேண்டு ரெஜிஸ்ட்ரரர் ம-ா-ா-ஸ்ரீ நாகேசராவ் பந்துலுகாரு எழுதியது.

---

1 நம்முடைய இனத்தாருள் தாழ்ந்த வகுப்பினர்களுக்கு உதவி புரிந்து அவர்களை சமூக வாழ்க்கையிற் தகுந்த ஸ்தானத்தை வகித்து மேன்மை யடையும்படி செய்ய வேண்டியது நம்மெல்லோருடைய கடமையாயிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் இப்பேர்ப்பட்ட சீர்திருத்தம் செய்ய சர்வ ஜன சம்மதமானதும் சரியானதுமான வழி இன்னதென்று இதுவரை நிச்சயமாகவில்லை. ஆகையால் இம்மார்க்கத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு உழைப்பாளியும் அவரவருக்குத் தெரிந்த வழியில் சீர்திருத்தங்கள் செய்கிறார்கள். சில சமயங்களில் இப்பேர்ப்பட்ட ஒழுங்கீனமான பிரயத்தனங்களாற் கெடுதிகளும் சம்பவிக்கின்றன.

2. தயாள குணமுள்ள ஒருகனவான் தனக்கு அவகாசமுள்ளபொழுது மாலா மாதிகா என்னும் கீழ்வகுப்பினர்களின் குடிசைகளுக்குப்போய் அவர்களோடு பேதமில்லாமற் கலந்து அவர்களுக்குச்சிற்றுண்டி, காசு முதலானது கொடுத்துவிட்டு சாயந்திரத்தில் வீட்டுக்குத் திரும்பு காலையில் தான் தாழ்ந்த வகுப்பினர்களை மேல் வகுப்பினர்களாக்கும் வேலையில் தனது கடமையைச் செலுத்திவிட்டதாய் நினைத்து வருகிறார். இன்னொரு கனவான் ஒரு பஞ்சமப் பள்ளிக்கூடத்தில் வெகுமானம் விநியோக (Prize distribution) சமயத்தில் அக்கிராசனத்தை வகித்து தன்னால் இயன்ற திரவிய சகாயமும் செய்ததற்காக தனக்குள் தானே சந்தோஷப்பட்டுக் கொள்ளுகிறார். மாலா (பறையர்) குடிசைகளிருக்கும் இடத்தில் அதாவது பறைச்சேரியில் ஒரு கிணறு வெட்டி, சில லாந்தர்களும் போடுவித்ததால் சீர் திருத்தவேலையிற் தன்னுடைய கடமையைச் செய்துள்ளதாக மற்றொரு தர்ம சிந்தனையுள்ள கனவான் பாவித்துக்கொள்ளுகிறார். இன்னொருவர் தாழ்ந்த வகுப்பினர்களைச் சீர் திருத்தச் சரியான மார்க்கம் பள்ளிக்கூடங்கள் வைத்து கீழ்த்தரப் படிப்பு கற்றுவிப்பதுதானென்று நினைத்து தினசரிப் பத்திரிகைகளில் தனக்குத் தெரிந்த வரையில் எழுதி வருகிறார். இம்மார்க்கத்திலேயே உழைத்துவரும் கிறிஸ்துவப் பாதிரிகள் இவர்களை மேன்மைப்படுத்த மார்க்கம்

கவர்ன்மெண்டிலிருந்து நிலங்களை இனமாக இக் கீழ் ஜாதியார்களுக்கு வாங்கிக்கொடுப்பதானென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

3 இம்மார்க்கத்தில் வேலைசெய்யும் ஒவ்வொருவரும் நல்ல எண்ணத்தோடுதான் வேலை செய்கிறார்கள். இவர்களுடைய முக்கிய நோக்க மென்னவென்றால் மிகுந்த தாழ்ந்த நிலைமையிலுள்ள தங்களுடைய சகோதரர்களை உயர்ந்த நிலைமைக்கு வரும்படி உதவி புரிவதுதான். அடிக்கடி பறைச்சேரிக்குப்போய் அவர்களோடு சுயேச்சையாய்க் கலந்து சம்பாஷிப்பதால் பஞ்சமர்கள் அதை அதிக கௌரவமென்று பாவித்து கிராமாந்தரங்களில் மேல் ஜாதியார்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்யாமல் அவமதிக்கிறார்கள். அவர்களுக்கு திரவிய சகாயம் செய்தல் அவர்களை சோம்பேறிகளாக்குகிறது அல்லது அப்பணத்தைக்கொண்டு அவர்கள் மிதுபானம் முதலியவை செய்கிறார்கள். சுகாதார சீர்திருத்தங்கள் அவர்களுக்கு நன்மையுண்டாக்குகின்றன; ஆனால் ஒருதரம் சீர்திருத்தம் செய்ததை அந்நிலைமையிலேயே வைத்துக்கொள்ள சக்தியற்றவர்களா யிருக்கிறார்கள். இவர்களுக்கு கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட நிலங்களெல்லாம் சாவுகாரிகளிடத்தில் கடனுக்காக அடைபட்டிருக்கின்றன. ஆகையால் எவ்வளவு சீர்திருத்தங்கள் செய்தபோதிலும் யதாஸ்தானத்திலேயே யிருக்கின்றார்கள்.

4. ஆகையால் இம்முக்கியமான சீர் திருத்தத்திற்கு வேறு யாதானு மொரு மார்க்கம் தேடவேண்டும். அந்த ஜாதியாருக்குள்ளேயே உண்டாகும் சீர் திருத்தம் வெளியிலிருந்து செய்யும் சீர் திருத்தத்தைவிட உறுதியாயிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. கீழ் ஜாதியாரை தன் நிலைமைக்குக் கொண்டுவர முதல்தரமான உபாயமென்னவென்றால் சுய உதவி செய்துகொள்ளும்படி அவர்களுக்கு உபகாரம் செய்வதுதான். அயலார்மேற் சார்ந்திருத்தல் பயன்படாது. இப்பேர்ப்பட்ட சுய உதவி கூட்டுமுறையால் அடையலாம். கூட்டுமுறையின் முக்கிய அம்சங்களாகிய சுய உதவி ஐக்கம், தன்னைத்தானே நம்பியிருத்தல், மிச்சம் பிடித்தல் ஆகிய இவைகள் கீழ் ஜாதியாரை உயர்த்தத் தகுந்த கருவிகளாயிருக்கின்றன. இம்முறையை பரவச் செய்வதால் நம்முடைய ஆசாரத் திருத்தக் காரர்கள் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். இம்முறையைப்பற்றி பிரசங்கம் செய்வதைப் தவிர பிரத்தியக்ஷமாகவும் ரூபிக்கவேண்டும். ஆனால் பலன் கைகூட கொஞ்சம் காலமாகும்; ஏனென்றால் அவர்களும், மௌட்டீகமும் லாவுக்குமிஞ்சின செலவும் நீங்க வெகு பொறுமையோடு காத்திருக்கவேணடும். ஆனால் ஒருதரம் கொஞ்சம் இம்முறை அவர்களுக்குள் வேரூன்றிவிட்டால் ஜன்ம ஜன்மத்திற்கு அவர்கள் இதைக் கைவிடாமல் உலகம் ஆச்சரியமடையும்படி அவ்வளவு உன்னத நிலைமைக்கு வந்துவிடுவார்கள். கூட்டுமுறையால் அவர்களுடைய வரும்படி அதிகரிக்க அதிகரிக்க மேன்மையான வாழ்க்கையில் புத்தியோடும். இதினால் வித்தையையும் சுகாதாரத்தையும் கைக்கொள்ளுவார்கள். இந்த சீர்திருத்தங்களெல்லாம் சுயமாய் அவர்களுக்குள்ளேயே உண்டாகுமானதால் குடியர்களும் குற்றவாளிகளும் வெறியற்றவர்களாயும் யோக்கியர்களாகவும் மாறிவிடுவார்கள். கூட்டுமுறையின் பலனாக இந்த ஜாதியார்கள் ஜன சமூகத்தில் ஒரு முக்கிய அம்சமாய் விளங்குவார்கள்

5. ஆனால் மேற்சொன்னவை ஏதோ மனோபாவமே யென்று நினைக்கக்கூடும். ஆனால் கூட்டுமுறையை பிரத்தியக்ஷ பூர்வகமாக எப்படி ப்ரயோகிக்கலாமென்பதை பின்வருவனவற்றாற் தெரிந்துகொள்ளலாம்: —

6. தெலுங்கு தேசங்களில் பஞ்சமர்களில் அநேகர் நெய்தல் தொழில் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு சேரியிலும் குறைந்தபக்ஷம் ஒரு டஜன் தறிகளிருக்கும்.



துணிகள் கொஞ்சம் முரடா யிருந்தபோதிலும் நெசவு உறுதியாயும் வெகுநாளைக்குக் கிழியாமலிருப்பதால் குடியானவர்கள் அத் துணிகளை ரொம்ப விலைக்கிக்கிறார்கள். ஆனால் வேண்டிய அளவு நூல் வாங்க அந்தமாலர்கள் (பறையர்கள்) சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் வட்டிக்காரர்களிடத்தில் கடன்வாங்கி துணியை அவர்களுக்கே சொற்பவிலைக்கு விற்பதாய் ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறார்கள். இப்படியாக அவர்களுக்கு சரியான லாபம் கிடைக்கிறதில்லை. இம்மார்க்கத்தில் கூட்டுத்தொழிலினர்கள் நன்றாய் உழைக்கலாம். கூட்டுத் தொழிலினர்கள் இதில் குறுக்கிட்டு தரகுக்காரர்களை நீக்கிவிட்டு லாபம் முழுவதையும் கூலியாட்கள் அடையும்படி வேலை செய்யலாம்.

7. தெலுங்கு தேசங்களில் மாதிகர்களென்று சொல்லப்பட்டவர்கள் சக்கிலியர்கள். கிராமத்தில் ஜனங்களுக்கு வேண்டி ஜோடு, செருப்பு முதலியவை தைக்கிறவர்கள். ஆனால் யாரும் மாதிகர்களுக்கு சரியான விலை கொடுக்கிறதில்லை. வருஷாந்தரத்தில் சாகுபடி காலத்தில் மாமூலாய்க் கொடுக்கப்படும் சொற்பதானியமே அவர்கள் செய்யும் வேலைக்கு அதிகமான உதவி யென்று சொல்லுகிறார்கள். இவ்வழியிலும் கூட்டுமுயற்சிக்காரர்கள் பிரவேசித்து மாதிகர்கள் செய்யும் சாமான்களுக்கு சரியான விலை ஏறும்படி செய்யலாம்.

இம்மாலர்களும் மாதிகர்களும் (Malas and Madigas) அற்ப வரும்படிக் காரர்களானதால் எப்பொழுதும் சாவகாரிகளிடத்தில் கடன் பட்டவர்களாகவே யிருக்கிறார்கள். கடன் தொகைக்குப் பதிலாக இவர்கள் சாவுகாரிக்கு ஊழியம் செய்கிறார்கள். யதார்த்தமாகச் சொல்லும் பக்ஷத்தில், இவர்கள் தினசரி சம்ரக்ஷணைக்கு வேண்டிய உப்பு, தானியமுதலியவைகளெல்லாம் எப்பொழுதும் ரொக்கப்பணம்கொடுத்து வாங்குவதே யில்லை. கடன் கொடுக்கும் வழக்கத்தால் கிராமத்திலுள்ள ஒருவன், கோமுட்டிக்கு வாழ்நாட்க் கடன் படுவதல்லாமல் அவன் பின் சந்ததியார்களும்கூட அந்த வலையிற் சிக்கிக்கொள்ளுகிறார்கள். இக் கோமுட்டிகள் வெகு நயமாகப் பேசி சாமான்களை வீட்டண்டையே கொண்டுவந்து வீட்டு ஸ்திரீகளினிடத்தில் கொடுத்துப் போவார்கள். இம்மார்க்கத்திலும் கூட்டு முறைக்காரர்கள் உழைக்கலாம். இக்கீழ்ஜாதியார்கள் மிகவும் யோக்கியர்களாதலால் அவர்களுடைய வியாபாரமும் மிகவும் யோக்கியமாயிருக்கும். இந்த யோக்கியதாம்சம் கூட்டுத்தொழில் முறைக்கு நிரம்பமுக்கியமானது. இந்தயோக்கியதைக்குத் தகுந்தபடி கடன்கொடுத்து இவர்களை சாவுகார்களுடைய வலையினின்றும் விடுவிக்கலாம்.

9. தற்காலம் இந்த ஜனங்கள் தங்களுடைய மீதிப் பணத்தைப் போட்டுவைக்க சரியான இடமில்லை. முக்கியமாய் வயல்களில் வேலை செய்யும் கூலியாட்கள் இக் கஷ்டத்தை யடைகிறார்கள். அநேகமாய் கிராமத்திலுள்ள மோசகர்கள் சிலர் இவர்களை ஏமாற்றுகிறார்கள். ஆகையால் இவர்களுக்கு உபயோகமாக ஒரு சேவிங்க்ஸ் பாங்கி புதிதாக வைத்தல் பெரிய உபகாரமாக யிருக்கும்.

10. கீழ்ச் சாதியாருக்கு உதவ கூட்டுமுறைப் பிரயோகம் செய்வதைப்பற்றிய அநேக வழிகளில் சிலவற்றைக் கூறினேன். ரக்ஷண்ய சேனைக்காரர் குற்றவாளி ஜாதியார்களை சீர்திருத்துவதற்காக அங்கங்கே விடுதிகளேற்படுத்துவதையே உதாரணமாகக் கொண்டு நாம் கொண்ட எண்ணம் நிறைவேற வேண்டுமானால் நன்றாய் உழைக்க வேண்டு மென்பதைத் திண்ணமாய் நம்பவேண்டும். கீழ் ஜாதியாருக்காக உழைத்து வரும் கூட்டத்தாருள் (Depressed classes Mission) சிலர் கூட்டுமுறையை பிரயோகித்தால் நாளடைவில் நல்ல பலனைத் தருமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

11. கூட்டுத்தொழில் முறையானது ஏழைகளுக்கும் கதியற்றவர்களுக்கும் முக்கியமென்றும் கீழோர்களுக்கும் ஹிம்சைப் படுவர்களுக்கும் புகலிட மென்றும் ஊல்ப் துறையவர்கள்தான் எழுதி யிருக்கும் "கோவாபரேடிவ் பாங்கிங்" என்னும் புத்தகத்தில் வெகு வுளக்கத்தோடு எழுதி யிருக்கிறார். நாம் நம் தேசத்தில் ஆசாரமுறையில் கீழ் ஸ்தானத்தை வகித்திருக்கும் ஜாதியார்களின் நிலைமையை உயர்த்த மேற்சொன்ன உறுதிமொழியைக் கைக்கொண்டு அதன்பலனை அடையப் பிரயத்தனம்செய்வோமாக

---

## தற்கால நிதிகளும் ஐக்கிய முயற்சியும்.

மதுரை ம-ா-ா-ஸ்ரீ P. S. வேங்குஸாமி அய்யர் அவர்கள் எழுதியது.

---

*நிதிகள் தற்காலத்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடி மெம்பர்களுக்குப் பணம் உதவும் சங்கங்கள்.*

ஐக்கிய இயக்கம் இந்த ராஜதானியில் விசாலித்த பிறகு, நிதிகளைச் சேர்ந்தவர்கள் அவைகளையும் அம்முறையிலேயே நடத்த ஏற்பாடு செய்தனர். அவைகளிற் சிறந்ததில் ஐக்கிய நாணயச் சங்கங்களைப்போல் மெம்பர்களுக்கும் மெம்பர்களல்லாதவர்களுக்கும் ஸ்தாபர ஜங்கம சொத்துக்கள்பேரில் கடன் கொடுத்தும், ஆறுமாதத்திற்கு ஒருமுறை வட்டிவாங்கியும் வருகின்றன. ஆகையினால் இவைகள் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் பணம் உதவி லாவுகாரரின் இம்சையிலிருந்து காப்பாற்றுகின்றன. ஸர் பிடரிக் நிக்கல்ஸனால் காண்பிக்கப்பட்ட குறைகளை, இவைகள் நிவர்த்தி செய்துகொண்டு வருகின்றன. கவர்ன்மெண்டாரும் இவைகளை பலமுள்ள ஸ்திதியில் வைக்க, 1913-ம் வருஷம் இந்தியன் கம்பெனி ஆக்ட்டில் புதிசட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிறார். முன் போலில்லாமல் இப்பொழுது ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு வோட்டுஉண்டு. டைரெக்டர்களும், நிர்வாக கம்மிட்டியாரும் தங்களுக்கேற்பட்ட காலமானபிறகு, வேலையை விட்டு நீங்குகிறார்கள். அநேக நிதிகள், இப்பொழுது நடந்துவரும் கெட்ட வழிகளை உத்தேசம் பண்ணி டைரெக்டர்களைத் தேர்ந்தெடுக்க, எலக்ட்டரல் போர்டு ஒன்றை ஏற்படுத்தி யிருக்கின்றன. கௌரவ உத்தியோகஸ்தர்களது அதிகாரங்கள் குறைக்கப்பட்டன- ஜாமீன்பேரில் காரியதரிசிகள் சம்பளத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நிதிகளின் வேலைகளைப்பற்றி டைரெக்டர்களுக்கு உத்திரவாதமாவார்கள்.

### கடனுக்கு ஜாமீன்.

ஐக்கிய நாணயச் சங்கங்களைப்போல், அநேக நிதிகள் நபர் ஜாமீன்பேரில் கடன் கொடுக்கின்றன. இக்கடன்களை சிறு சிறு தொகையாகத் திருப்பிக்கொடுக்கலாம். செலுத்தின தொகைபோக பாக்கியுள்ளதின் பேரில்தான் வட்டி உண்டு. மதராஸ் நிதிகளின் ரிப்போர்ட்டைப்பார்த்தால் ஐக்கிய நாணயச் சங்கங்களில் எவ்வளவு டிபாஸிட்டுகள் வந்து விழுகின்றதோ, அவ்வளவு நிதிகளிலும் விழுகின்றன வென்று தெரிய வருகிறது.

ஆனால் நிதி ரூல்களில் மிகவும் ஆக்ஷேபிக்கத் தக்கது, லாபத்திற் பெரும்பான்மை டைரெக்டர்கள் அடைவதே. ஐக்கிய முயற்சித் தொழில்கள் ஏற்பட்டவுடன் நிதிகளின் மெம்பர்கள் சுயநலம் கருதும் டைரெக்டர்களது எண்ணத்தைப் பரிகாசஞ்செய்து அவர்களடைந்து வரும் லாப பங்கை மிகவும் குறைத்துவிட்டார்கள். இன்னும் கொஞ்சகாலத்தில் டைரெக்டர்கள் கௌரவத்திற்கு உழைப்பார்களென்று நம்பப்படுகிறது.

## மதருஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியன், லிமிடெட் நெ. 1130.

---

### நிபந்தனைகள்.

1. இந்தச் சங்கம் "மதுருஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியன் லிமிடெட்" என்ற பெயரால் வழங்கி வரும். இதில் பின்னால் கண்ட நிபந்தனைகளிலும் இச்சங்கம் "மதருஸ் புரொவின்ஸியல் கோவாப்ரேடிவ் யூனியன்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் முன்பின் தொடர்ச்சியினால் விரோதமொன்று மில்லாவிட்டால் வெறும் "யூனியன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. மதருஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியன் லிமிடெட், ஆனது 1912-வது வருஷத்திய 2-வது சட்டத்தின்படி ஒரு ஐக்கியச் சங்கமாக ரிஜிஸ்தர் செய்யப்படுகிறது.

அதின் மேல்விலாசம் "சென்னை நகர்." அதின் விவகாரங்கள் சென்னை ராஜதானியின் எல்லா பாகங்களுக்கும் வியாபிக்கின்றன.

3. கூட்டுத் தொழில் முறைகளைப் பரவச் செய்வதும், கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதும், அவைகளின் பாத்தியதைகளை கவனித்து வருவதும், சென்னை ராஜதானியில் கூட்டுறவுப்பெயர்ச்சி பலமாய் தாபரமாகுவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்வதும் மதருஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனின் நோக்கங்கள்.

4. சங்கத்தின் மூல திரவியம் தற்காலம் ரூ. 50,000. இது பங்கு ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் 10,000 பங்குகள் கூடியது.

### மெம்பராய்ச்சேருதல், பங்குகள் எடுத்தல், பணக்கோடை பெறுதல்.

5. மதருஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனுடைய மெம்பர்கள் பின்வரும் வகுப்பினி லொன்றிற் சேர்ந்தவர்களா யிருக்கவேண்டும்.

(a) 6-வது நிபந்தனையின்படி நிர்வாக சபையாரால் மெம்பராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 1904-ம் வருஷத்திய இந்தியா 10-வது ஆக்ட்டின்கீழ் அல்லது 1912-ம் வருஷத்திய இந்தியா 2-வது ஆக்ட்டின் கீழ் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட சங்கங்கள்.

(b) குறைந்தது ஒரு பங்காவது எடுத்திருக்கும் தனி நபர்கள்.

(c) சங்கத்தின் நிதியின்பொருட்டு ரூபாய் 100-அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சகாய திரவியமாகக் கொடுத்து உதவுகின்ற நிர்வாக சபையாரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட "பரிபாலர்கள்" என்று அழைக்கப்படும் தனி நபர்கள்.

6. சென்னை ராஜதானிக்குள் எங்கேயாவது வாசம் செய்யும் 18-அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள எவரும், 1904-ம் வருஷத்திய இந்தியா 10-வது ஆக்ட்டின்கீழ் அல்லது 1912-வருஷத்திய இந்தியா 2-வது ஆக்ட்டின்கீழ் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட எந்தச் சங்கமும் இந்த யூனியனில் மெம்பராய்ச் சேர விண்ணப்பம் செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட விண்ணப்பம் காலத்துக்குக் காலம் நிர்வாக

சபையாரால் நியமிக்கப்பட்டு வரும் பாரத்துல் செய்யப்படவேண்டும். அவ்விண்ணப்பத்தை அக்காலத்திற்குண்டான நிர்வாக சபையாரின் முன்னிலையில் வைக்கப்படும். அதை அங்கீகரிக்கவும் அல்லது யாதொரு காரணமும் சொல்லாமல் தள்ளவும் நிர்வாக சபையாருக்கு அதிகாரமுண்டு.

(a) ஒவ்வொரு பங்குத் தொகையையும் பங்கொன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் செலுத்தி 5-வருஷத்தில் பூர்த்தி செய்து விடவேண்டும்.

(b) யாதொரு மெம்பரும் யூனியனில் தான் வைத்திருக்கும் பங்குத் தொகையை மற்றவர்களுக்கு மாற்றக்கூடாது.

(c) பங்குத் தொகை மூலியமாக மெம்பர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டிய பணத்தை மதராஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனுக்குச் சேரவேண்டிய கடனை வசூல் செய்வதுபோல் வசூல் செய்யப்படும்.

(d) யூனியனால் கொடுபடவேண்டிய கடனுக்காக மெம்பர்களுடைய பொறுப்பானது அவர்களால் கையொப்பமிடப்பட்ட பங்குத் தொகை வரைக்கும் கட்டுப்பட்டு நிற்கும்.

(e) எந்த மெம்பரும் தான் கையொப்பமிடப்பட்ட பங்குத் தொகையை முழுதும் செலுத்துகிற வரைக்கும் மெம்பராயிருப்பதினின்று விலக அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

8. பின்வரும் முகாந்தரங்களைக் கொண்டு யூனியனில் ஒருவர் மெம்பராயிருப்பது நின்றுவிடும்:—

(a) ஒரு மெம்பர் தான் சங்கத்தினின்று விலகிவிடுவதைக் குறித்து காரியதரிசிக்கு எழுத்து மூலமான நோட்டீசு கொடுத்து சங்கத்தினின்று விலகி விட்டால், ஆனால் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட அந்த மெம்பர் சங்கமாவது ஷை மாதிரி நோட்டீசு கொடுத்துக்கொண்டால் அந்த நோட்டீசில் அச்சங்கத்தின் அக்கிராஸனாதிபதியினுடையவும் காரியதரிசியினுடையவும் கையொப்பமிட்டிருக்கவேண்டும்.

(b) யாராகிலும் ஒரு மெம்பர் கோர்ட்டாரால் சொத்தில்லாதவன் என்று நிஷ்கரித்து விடப்பட்டாலும் அல்லது மெம்பராயிருக்கும் யாதாமொரு சங்கம் கலைந்து விட்டாலும்.

(c) யாராகிலும் மெம்பர் இறந்துவிட்டாலும்.

(d) யாதாமொரு மெம்பர் சங்கத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்ற கருத்துடன் 30 மெம்பர்களுக்கு குறையாத கூடப்படும் மெம்பர்களின் சபையில் ஆஜரான மெம்பர்களில் குறைந்தது 3-ல் 2-பாகமாவது ஷை மெம்பரை நீக்கிவிடவேண்டுமென்று தீர்மானித்தாலும்;

இந்த நிபந்தனையில் (a) அடையாளமிட்ட உட்பிரிவிற்கண்ட நோட்டீசு ஆனது ஜூலை மாதம் முதல் தேதியில் கொடுத்திருந்தால் அந்த தேதியிலேயும், இல்லாவிடில் மறு வருஷம் ஜூலை மாதம் முதல் தேதியிலேயும் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

8. A. மேலே சொல்லிய நிபந்தனையில் (a) அல்லது (d) அடையாளமிட்ட பகுதிகளிற் கண்டவிதமாய் யாதாமொரு மெம்பர் சங்கத்தினின்று விலகிவிட்டால் அம்மெம்பர் பங்குத் தொகைக்காகச் செலுத்தியிருந்த பணம் முழுவதையும் அவரால் சங்கத்திற்குச் சேரவேண்டிய பணம் ஏதாவதிருந்தால் அதை ஷை பங்குத் தொகையிலிருந்து கழித்துக்கொண்டு மிகுதியை அவருக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டியது.



8 B. 8-வது நிபந்தனை (b) பகுதியிற் கண்ட விதமாய் ஒரு மெம்பர் யூனியனிலிருந்து விலகிவிட்டால் சங்கத்தின் மூல திரவியத்தில் அவருக்குள்ள பங்கு அல்லது பாத்தியதையை சங்கத்திற்கு அவரால் வரவேண்டிய தொகை ஏதாவதிருந்தால் அதைக் கழித்துக் கொண்டு மிகுதியை சட்ட சம்மதிப்படி உபயோகிக்கவேண்டும்.

8 C. (a) சங்கத்தின் யாதொரு மெம்பர் இறந்து போவதன்மேல் அவருடைய பங்கு அல்லது பாத்தியதை யாருக்கு போய்ச் சேரவேண்டுமென்று ஷை மெம்பர் ஒரு நபரை நியமிக்கவேண்டும். அம்மெம்பர் இறந்துபோகும் காலத்தில் சங்கம் ஷை நியமனத்தை அமுலுக்குக் கொண்டுவரும். ஆனால் (i) ஷை நியமனப் பத்திரம் இறந்துபோன மெம்பரால் குறைந்தது இரண்டு சாக்ஷிகள் முன்னிலையில் கையெழுத்து செய்திருக்கவேண்டும். தவிர (ii) இதற்காக வேண்டி சங்கத்தில் வைத்துவரும் புத்தகங்களில் அந்த நியமனம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கவேண்டும். (iii) இதுவுமன்றி நியமிக்கப்பட்ட நபர் யூனியனில் முன்னமேயே யாகிலும் அல்லது தாவாகாலத்திலாகிலும் நிர்வாக ஸபையாரால் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

(b) இறந்துபோன மெம்பரின் பங்கு அல்லது பாத்தியதையை அனுபவிக்க நியமிக்கப்பட்ட நபர் ஒருவருமில்லாவிட்டால இறந்துபோன மெம்பரின் வார்சு அல்லது சட்ட சம்மதமான பிரதிநிதி யாரோ அவராகிலும் அல்லது ஷை யாரால் மெம்பர் இறந்துபோன தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நியமிக்கப்பட்ட நபர் யாரோ அவராகிலும் 2-வது நிபந்தனையின்படி நிர்வாக சபையாரால் முன்னமேயே அல்லது தாவா காலத்தில் யூனியனில் மெம்பராய் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தால், இறந்துபோன மெம்பருடைய பங்கு அல்லது பாத்தியதையை அவர் அடையலாம்.

(c) இந்த நிபந்தனையின் (a) அல்லது (b) பகுதியிற் கண்டபடி இறந்துபோன மெம்பரின் பங்கு அல்லது பாத்தியதையை அடையாவிட்டால் சங்கம் இறந்துபோனவரால் நியமிக்கப்பட்ட நபருக்காவது, அப்படியில்லாவிட்டால் அவருடைய வார்சு அல்லது பட்ட சம்மதமான பிரதிநிதிக்காவது ஷை மெம்பர் இறந்துபோகும் காலத்தில் சங்கத்தில் ஷை யாருக்கு இந்த பங்கு அல்லது பாத்தியதையின் அளவு பிரகாரம் சங்கத்தின் நிபந்தனைகளை அனுசரித்து ஏற்பட்ட தொகையைக் கொடுத்துவிட வேண்டியது.

8 D. சங்கத்திலிருந்து விலகின ஒரு மெம்பர் பேரில் சங்கத்தினால் அவர் விலகின தேதியில் கொடுக்கப்பட வேண்டிய கடனுக்காக 7-வது விதி (e) அடையாளமிட்ட உட்பிரிவின்படி உண்டான பொறுப்பு அவர் விலகின தேதி முதல் இரண்டு வருஷம் வரைக்கும் அவர்பேரில் நின்றிருக்கும்; ஒரு மெம்பர் இறந்த காலத்தில் சங்கத்தினால் கொடுபடவேண்டிய கடனுக்காக 7-வது விதி (e) அடையாளமிட்ட உட்பிரிவின்படி இறந்தவர்பேரில் உண்டான பொறுப்பானது அவர் இறந்த தேதி முதல் ஒரு வருஷம் வரைக்கும் அவர் ஆஸ்தியின்பேரில் நின்றிருக்கும்.

## மகா சபை.

9. மதராஸ் மகாசபை புரொவென்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுடைய மகா சபையானது பங்கெடுத்திருக்கும் சங்கங்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளாலும், தனி நபர்களாலும் கூடப்படும்.

10. பங்கெடுத்திருக்கும் ஒவ்வொரு சங்கமும் சாதாரணமாய் கூடப்படும் சங்கத்தின் ஏதாவது ஒரு மகா ஸபையில் சங்கத்தின் மெம்பர்களில் ஒருவரை ஒவ்வொரு கோவாப்ரேடிவ் வருஷத்திற்கும் (அதாவது ஜூலை மாதம் 12-முதல் அதற்கடுத்த

ஜூன் மாதம் 30-ந் தேதி வரைக்கும் ஏற்பட்ட 12—மாதத்திற்கும்) பிரதிநிதியாக நியமிக்க வேண்டும். ஆனால் அவ்வருஷத்திற்குள் பிரதிநிதி மாற்றினாலும் மாற்றலாம். அப்படி ஒரு புதிய பிரதிநிதியை ஏற்படுத்தும் பக்ஷத்தில் பழய பிரதிநிதியை ஏற்படுத்திய நியமனம் ரத்துசெய்யப்படும்.

11. மஹா சபை வேலை நடத்துவதற்கு, 10 மெம்பர்கள் ஆஜர் ஆகவேண்டும்.

12. மதராஸ் புரொவென்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுடைய எந்த மஹா சபையிலும் பங்கெடுத்திருக்கும் சங்கங்களைச் சேர்ந்த எந்த மெம்பரும் ஆஜர் இருந்த சபையின் எல்லா பிரஸ்தாபங்களிலும் பேசலாம். ஆனால் பிரதிநிதி மெம்பர்களுக்கு மாத்திரந்தான் அவர்களுடைய சங்கத்தி னிமித்தமாக ஓட்டு கொடுக்க சுதந்தரம் உண்டு.

13. மதராஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனுடைய மகா சபையானது சென்னை ராஜதானிக்குள் நிர்வாக சபையாரால் காலத்துக்கு காலம் நிர்ணயிக்கப்படும் இடத்தில் அவர்களால் நிச்சயிக்கப்பட்ட தேதியில் கூடப்படும். ஒவ்வொரு கோவாப்ரேடிவ் வருஷத்திலும் அப்பேர்பட்ட சபையானது குறைந்தது ஒரு விசையாவது கூடவேண்டும். மெம்பர் சங்கங்களும் சேர்ந்து மொத்தம் 30 மெம்பர்களுக்குக் குறையாத பேர்கள் ஒரு மகாசபை கூடப் பிரியப்பட்டால் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவது நிர்வாக சபையாரின் கடமையாகும்.

14. மகா சபை கூடும்பொழுது அக்கிராஸனாதிபதி ஆஜரிருந்தால் அவர் அந்த ஆதிபத்தியத்தை வகிக்கக்கடவர். அவர் சபைக்கு வராமலிருந்தால் உப அக்கிராஸனாதிபதி அக்கிராசனம் வகிப்பார். இருவரும் சபைக்கு வராமலிருந்தால் யூனியனைச்சேர்ந்த எந்த மெம்பரையாவது அல்லது ஓட்டுகொடுக்க உரிமைவாய்ந்த எந்த பிரதிநிதியையாவது சபையார் அந்த ஸ்தானத்திற்கு ஏற்படுத்தலாம்.

15 8-வது நிபந்தனை (d) அடையாளமிட்ட உட்பிரிவிற் கண்டபடி மெம்பர்களை சங்கத்தினின்று நீக்கிவிடும் விஷயம் தவிர மற்ற எல்லா பிரஸ்தாபங்களிலும் ஆஜரிருந்து ஓட்டு செய்யும் மெம்பர்களின் பெரும்பான்மையோர் அபிப்பிராயந்தான் மகா சபையாரின் தீர்மானம். அபிப்பிராய பேதங்கள் சமமாயிருக்கும் பட்சத்தில் அக்கிராஸனம் வகிக்கும் மெம்பர் எந்த அபிப்பிராயத்தில் கலப்பாரோ அந்த அபிப்பிராயமே சபையார் தீர்மானமாகும்

16. வருஷாந்திர மஹா சபையாருக்குரிய அதிகாரங்களும் கடமைகளும் பின் வரையப்பட்டிருக்கின்றன.

(a) அக்கிராஸனாதிபதியையும், உப அக்கிராஸனாதிபதியையும், நிர்வாக சபையின் மெம்பர்களையும், நியமனஞ் செய்வது.

(b) யூனியனுடைய யோசனைகளை வரையறுக்கவாவது அல்லது மாற்றவாவது.

(c) நிர்வாக சபையாரால் தயார் செய்யப்பட்ட வருஷாந்திர ரிப்போர்ட்டையும் கணக்குகளையும் வாசித்து அங்கீகாரஞ் செய்வதும்.

(d) யாதாவது மெம்பரைச் சங்கத்தினின்று தள்ளுதல்.

(e) நிர்வாக சபையின் மெம்பர்களின் பேரில் கொண்டுவரப்பட்ட குற்றங்களை விசாரித்து தீர்மானிப்பதும்.



(f) விதிகளில் திருத்துபாடுகள், மாறுதல்கள் செய்வதும், புது விதிகள் ஏற்படுத்துவதும்.

(g) மகா சபைக்கு அடுத்த இன்னும் இதர காரியங்களை நிறைவேற்றுவதும்.

## நிர்வாக சபையின் அதிகாரங்கள்.

17. மதராஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியன் நடத்திவரும் விவகாரங்களும், ஷை யூனியன் விஷயமாய் நடத்தப்படும் எல்லா விவகாரங்களும் நிர்வாக சபையாரின் அநுமதிக்குட்பட்டிருக்கும்.

நிர்வாக சபையார் மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது சபை கூடவேண்டும்.

18. சங்கத்தின் காரியதரிசியை ஏற்படுத்தவும் தள்ளிவிடவும் நிர்வாக சபையாருக்கு அதிகாரமுண்டு. காரியதரிசியினுடைய வேலைகளையும் அவருக்குக் கொடுக்க வேண்டிய சன்மானத்தையும் நிர்வாக சபையார் அப்பொழுதைக்கப்பொழுது தீர்மானித்து வரவேண்டும்.

19. நிர்வாக சபையானது அக்கிராஸனாதிபதி, உப அக்கிராஸனாதிபதி, இன்னும் 20 இதர மெம்பர்களைச் சேர்ந்தது. நிர்வாக சபையின் எல்லா மெம்பர்களும் வருஷா வருஷம் நியமிக்கப்படுவார்கள். நிர்வாக சபை வேலை நடத்துவதற்கு 7 மெம்பர்கள் ஆஜராகவேண்டும். மத்தியகாலத்தில் நிர்வாக சபை மெம்பர்களுக்குள் ஏதாவது காலி உண்டானாலும் அதை அவர்களே பர்த்தி செய்துக் கொள்ளக்கூடும்.

20. மதராஸ் புரொவென்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனுடைய நிதியை ஷை யூனியனுடைய நோக்கங்களை அபிவிர்த்தி செய்யும் விஷயங்களில் உபயோகப்படுத்த வேண்டுமே தவிர மற்ற எந்த விஷயத்திற்காகவும் ஷை நிதியை செலவிடக்கூடாது. ரிஜிஸ்ட்ரார் அனுமதிக்குட்பட்டு ஷை நிதியை நிர்வாகஸபையார் ஆக்ஞாபிக்கும் மாதிரியாய் வட்டிக்கு போட்டு வைக்கவேண்டும். இந்த நிபந்தனையின்படி வரும் வருமான வட்டியைக் கொண்டுதான் சங்கம் அப்பப்போ எதிர்படும் செலவுகளை சமாளிக்க வேண்டும்.

21. யூனியனுடைய நிகர லாபத்தில் காலில் ஒரு பாகம் க்ஷேமநிதிக்குக் கொண்டுபோக வேண்டியது, நிகர லாபத்தின் மீதித் தொகையை 21-வது நிபந்தனையின்படி யூனியனுடைய நிதியின் ஒருபாகம் என்று கருதப்படவேண்டும். க்ஷேம நிதி பிரிக்கக்கூடாத ஒரு முதல். இது சங்கத்தின் எல்லா மெம்பர்களுடைய பொது சொத்து; எதிர்பாராத கஷ்டங்களை கடைக்க ஏற்பட்டுள்ளது. எந்த மெம்பரும் இதில் ஒரு பாகத்தை தனக்கு பிரித்துக் கொடுக்கும்படி கேட்க அதிகாரமில்லை. இதை கவர்ன்மெண்டு சேவிங்ஸ் பாங்கிலாவது அல்லது ரிஜிஸ்டிரார் ஆக்ஞாபிக்கும் வேறெந்த மாதிரியாவது கட்டிவைக்க வேண்டியது. ரிஜிஸ்ட்ராருடைய உத்திரவு இல்லாமல் க்ஷேமநிதியினின்றும் பணத்தை எடுக்கவே கூடாது. சங்கத்தை முடிவு கட்டின காலத்துக்கும் க்ஷேம நிதியை மெம்பர்கள் பங்கிட்டு எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் அக்காலத்திற் கேற்பட்டுள்ள மெம்பர்களின் யுக்தப் பிரகாரம் ஒரு பொது நன்மையான காரியத்துக்கு உபயோகப் படுத்தவேண்டும்.

22. யூனியனுடைய எல்லா உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தவும், நீக்கிவிடவும், அவர்களை உத்தியோகத்தினின்று தள்ளி வைக்கவும் அவர்களுக்கு அபராதம் விதிக்கவும், அவர்களுடைய வேலை, சம்பளம், சன்மானம் முதலியவைகளை குறிக்கவும் நிர்வாக சபையாருக்கு அதிகாரமுண்டு.

23. 1912 வது வருஷத்திய இந்தியா 2-வது ஆக்ட்டிலாகிலும், இந்த நிபந்தனைகளிலாகிலும் அல்லது வேறெந்த விஷயத்திலாகிலும் சந்தேகம் ஏற்பட்டால் அச்சந்தேகத்தை ரிஜிஸ்ட்ராருக்குத் தெரிவித்து அவருடைய உத்திரவு பிரகாரம் நடக்கவேண்டியது. நிர்வாக சபையாரின் கடமையாகும்.

24. இந்த நிபந்தனைகளில் யாதொரு திருத்துப்பாடாகிலும், மாறுதலாகிலும் அல்லது புதுவிதிஏற்படுத்துவதாகிலும் ஆக்ட்டின்படி ரிஜிஸ்ட்ராரால் ரிஜிஸ்ட்டர் செய்யப்படுகிற வரைக்கும் அமுலுக்கு வரத்தக்கதல்ல. ஆனால் ரிஜிஸ்ட்ரார் அனுமதி பெற்று விதிகளில் செய்த மாறுதல் அல்லது திருத்துப்பாடுகள் அல்லது அப்படி ஏற்படுத்திய புதுவிதி யூனியனில் பங்கெடுத்திருக்கும் மெம்பர்கள் அல்லது சங்கங்கள் யூனியனின் கடனுக்காக எடுத்திருக்கும் பொறுப்பினையுடைய சுபாவத்திற்கும் அளவிற்கும் சம்பந்தப்பட்டிருந்தால் மேற்சொன்ன விதிகளில் செய்த மாறுதல்கள் அல்லது திருத்துப்பாடுகள், அல்லது ஏற்படுத்திய புதுவிதிகள் கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கிற வரைக்கும் அமுலில் வரத்தக்கதல்ல.

25. ஜூன்மாதம் 30-ம் தேதியோடு முடிவாகும் கோவாப்ரேடிவ் வருஷம் முடிவான 15 நாளைக்குள் அந்த வருஷத்தினுடைய (a) சங்கத்தின் வரவு செலவு கணக்கும் (b) அந்த வருஷக் கடைசிதினத்தில் சங்கத்திற்கு இருந்த ஆஸ்திக்கடன் கணக்கையும் நிர்வாக சபையார் தயார்செய்து தாமதமில்லாமல் ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அனுப்பவேண்டியது. அந்த கணக்குகளை ரிஜிஸ்ட்ரார் பரிசோதித்து ஆடிட் சர்டிபிகேட் கொடுத்தபிறகு அவர் உத்திரவு செய்யும் மாதிரியாக அந்தக்கணக்குகளை பிரசுரப்படுத்த வேண்டியது.

# சேலத்தில் தோட்டிகளின் வாசஸ்தலம்.

19ந் தேதி காலை சேலம் கலெக்டர் மிஸ்டர் E. W. லே I. C. S. முனிஸிபல் தோட்டிகள் குடியிருப்பதற்குக் கட்டப்பட்ட புதிய ஸ்தலத்தைத் திறந்து வைத்தார்.

அந்த ஸ்தலம் குகையென்ற வார்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது திறந்து வைக்கப்பட்ட தினத்தன்று நடந்த வைபவத்தை பார்ப்பதற்குப் பலர் வந்து கூடினார்கள்.

முனிசிபல் சேர்மனான ராவ்பகதூர் மிஸ்டர் E. S. ராமஸ்வாமி அய்யர், திறப்பு தினத்து நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்படியாய் கலெக்டரைக்கேட்டுக்கொண்டு அடியில் வருமாறு பேசினார்.—

கவர்ன்மெண்டாரால் சாங்கிஷன் செய்யப்பட்ட ரூபாய் 15,363 இன்று திறக்கப் போகும் கட்டடங்களைக் கட்டுவதற்காக செலவழிக்கப்பட்டது. 63 வீடுகள் கட்டுவதற்காக ரூபாய் 15363 மதிப்புத்திட்டம் போடப்பட்டது. அவைகளில் இப்பொழுது 38 வீடுகள் தோட்டிகள் குடியிருப்பதற்கு லாயக்காய் கட்டி முடிவு பெற்றன; இதுவரையிலும் இந்தத் தோட்டிகள் சுகாதாரக் குறைவான இடங்களில்தங்கள்சொந்தத்தில் குடிசைகள் கட்டிக்கொண்டு அவைகளில் வசித்து வந்தார்கள். அப்பொழுது கட்டிக் கொண்டிருந்த குடிசைகளின் நிலைமையையும், இப்பொழுது அவர்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கும் வீடுகளின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பின் சொன்ன வீடுகள் முற்கூறிய குடிசைகளைவிட பலவிதங்களில் சிறப்படைந்திருக்கின்றன என்பதை அனைவரும் அறிவார்கள். இப்பொழுது இந்த முனிஸிபாலிடியில் 90 குடும்பங்கள் அடங்கிய தோட்டிகள் இருந்து வருகிறார்கள். பறையர்கள், சக்கிலியர்கள், பள்ளர்கள், ஒட்டர்கள், என்ற வகுப்புகள் அவர்களில் உண்டு.



அவர்களில் 65 குடும்பங்களுக்கு இங்கே குடியிருப்பதற்கு இடவசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பள்ளர்கள் வசிப்பதற்காக 12 வீடுகள் அம்மாப்பேட்டையில் கட்டிக்கொடுக்கப்படும். அதற்கு கவர்ன்மெண்டார் ரூபா 3707 சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். அக்கட்டடங்களுக்கு ப்ளான்களும் மதிப்புத் திட்டங்களும் தயார்செய்து அனுப்பியதை ஒப்புக்கொண்டு விட்டார்கள். அவைகளின் கட்டடவேலை சீக்கிரம் ஆரம்பிக்கப்படும். வேறு தண்டான இடத்தில் ஒட்டர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் சீக்கிரத்தில் செய்யப்படும். இந்த ஏழை ஜனங்கள் குடியிருப்பதற்கு இடவசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதில் தாராளமாய் பண உதவி செய்த கவர்ன்மெண்டாருக்கு நாம் வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஏழைகளின் க்ஷேமத்தைக் கருதி அவர்களுக்கு ஐக்கிய நாணயச் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது. அது அவர்களுக்கு நிரம்பப் பிரயோஜனமாயிருக்கிறது. அவர்கள் எவ்வளவு தூரம் ப்ரயோஜனம் அடைந்திருக்கிறார்கள் என்ற விஷயம், ஐக்கிய நாணயக் கான்பரென்ஸின் ரிபோர்ட்டை வாசிக்கத்தெரியவரும்.

பொங்கல் பண்டிகையின் போது, இச்சங்கத்தார் 300-ரூபாய்க்குத் துணிகள் வாங்கித் தீண்டா வகுப்பாருக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் கொடுத்தார்கள்: இச்சங்கம் கோ-ஆப்ரேடிவ் சங்கங்களின் அஸிஸ்டண்ட் ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் A. வேதாசல மய்யரின் சிரத்தையால் ஏற்படுத்தப்பட்டது. அவர் ஒரு காலத்தில் சேலம் ஜில்லாவில் டிவிஷனல் ஆபீஸராயிருந்தபொழுது சேலத்தில் முனிஸிபல் சேர்மனாக இருந்தவர். மேற்கண்ட தீண்டா வகுப்பார்களுக்கு ஜீவனோபாய வழியும் இருப்பதற்கு வீடும் ஏற்பட்டுவிட்டன. இனி அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டிய விஷய மொன்றுண்டு. அதாவது அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஸ்கூல்கள் ஏற்படுத்துவதேயாம். தோட்டிகள் தங்களுக்குச் செய்யப்பட்டிருக்கும் உபகாரத்திற்காக கவர்ன்மெண்டாருக்கும் முனிசிபாலிடிக்கும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

முனிஸிபல் சேர்மன் அவர்களுடைய கட்டடங்களைத் திறந்து வைக்கும்படியாய் ஒரு வெள்ளிச் சாவியை கலெக்டரின் கையில் கொடுத்தார். கலெக்டர் அதை எடுத்துக்கொண்டு அக்கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

அச்சமயம் கலெக்டர் பின்வருமாறு பேசினார்:—"இந்த டவுன் முனிசிபல் கவுன்ஸிலர்களும் சேர்மனும் சேர்ந்து தீண்டா வகுப்பார்களின் நிலைமையை விருத்தி செய்வதில் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் கைகூடியிருப்பதையும் அவர்கள் ஐக்கிய நாணயச் சங்கமொன்று ஏற்படுத்தியிருப்பதையும் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன்."

பிறகு அங்கு வந்து கூடியிருந்த தோட்டிகள் களிக்கூத்தாடினார்கள். அவர்களுக்கு கட்குடியாமை, அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல், கடமையைக் கவனித்தல் முதலிய விஷயங்களைப்பற்றி சில புத்திமதிகள் சொல்லப்பட்டன. கவர்னர் சேலத்திற்கு விஜயஞ்செய்தபொழுது கவர்னரின் வரவேற்புக் கமிட்டியில் மிச்சமான ஐம்பது ரூபாயைக்கொண்டு அன்று அவர்களுக்குச் சாப்பாடு போடப்பட்டது.

## திருக்காட்டுப்பள்ளி ஐக்கியநாணயச் சங்கத்தின் வருஷோற்சவக் கொண்டாட்டம்.

1914 ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 தேதி சனிக்கிழமை யன்று 831—திருக்காட்டுப்பள்ளி ஐக்கிய நாணயச்சங்கத்தின் வருஷாந்தர உற்சவமான் வெகு விமரிசையாக மனோகோஷத்துடன் நடந்தேறியது. நமது மதராஸ் சட்ட நிருபணசபை மெம்பராகிய ராவ்பஹதூர் கனம் ம-ா-ா-ஸ்ரீ V. K. ராமானுஜசாரியாரவர்கள் கருணை புரிந்து அக்கிராசனாதிபதியாயிருந்து சபையை வெகு ஊக்கத்துடன் நடத்தினார்.

ம-ா-ா-ஸ்ரீ நீடாமங்கலம் சேதுராமய்யர் அவர்களும் ம-ா-ா-ஸ்ரீ தஞ்சை சீனிவாச அய்யங்காரவர்களும் இன்ஸ்பெக்டர் ஆர். பாரதாசாரியாரவர்களும், ஊரைச் சுற்றியுள்ள மற்றேழு சங்கங்களின் பஞ்சாயத்தார்களும், சங்கத்தின் சுமார் 200 மெம்பர்களும் வந்து இருந்தார்கள்.

மெம்பர்களுக்கு சிற்றுணவு அளித்தவுடன் சங்கத்தின் பிரசிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆர். கோபால கிருஷ்ண சாஸ்திரியவர்கள் எல்லாரையும் நல்வரவுகூறி யழைக்க பஞ்சாயத்து ம-ா-ா-ஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரியவர்கள், ம-ா-ா-ஸ்ரீ ராமானுஜாசாரியவர்களை அக்கிராசனாதிபதியாயிருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

சங்கத்தின் காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ பஞ்சாபகேசய்யரவர்கள் சங்கத்தின் நடவடிக்கைகளையும் வரவு செலவையும் விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார். அதிலிருந்து சங்கம் எவ்விதத்திலும் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்று நன்கு புலப்பட்டது.

ம-ா-ா-ஸ்ரீ சீனிவாசய்யங்கார் அவர்கள், கூட்டுறவும், தேசநன்மையும் என்ற விஷயத்தைப்பற்றி விரிவாய் தெள்ளிய நடையில் உபந்நியசித்தார். லேவாதேவி மாத்திரமேயல்லாது விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கல்வி, இன்னும் மற்ற சுஜீவனத்துக்குரிய எவ்வித சாதனங்களையும் ஐக்கிய சங்கங்கள் நமக்கு அளிக்குமென, பல திருஷ்டாந்தங்கள் பூர்வமாக வற்புறுத்திச் சொன்னார்; மேலும், நமது நாட்டில் குடிகொண்டு நம்மை முன்னுக்கு வரவொட்டாமல் பீடித்து வருகின்ற ஒற்றுமையின்மை தரித்திரம், அஞ்ஞானம், இன்னும் இவைபோன்ற நோய்களுக்கெல்லாம் கூட்டுறவுச் சங்கம் ஒரு பேர் அவுஷதமாகும் என்றுஞ் சொன்னார்.

ம-ா-ா-ஸ்ரீ சேதுராமய்யர் அவர்கள் பயிர்த்தொழிலில் கூட்டுறவுச் சங்கம் எவ்வாறு உதவிசெய்யக் கூடும் என்ற விஷயத்தைப்பற்றிச் சொன்னார். சத்துள்ள எருக்களையும் புஷ்டியுள்ள விரைகளையும் வாங்கி உபயோகித்துவந்தால் குடியானவர்கள் எவ்வளவோ பலனை அடையலாமென்றும் தற்காலத்தில் பல காரணங்களினால், நீர்வளம் நிறைந்த இப்பாகங்களிற்கூட தண்ணீர் தட்டு ஏற்படுகிறபடியால், நாற்று முதலியவை தயார் செய்வதற்கு பத்துப்பேர் சேர்ந்து பெரிய கிணறொன்றிறக்கி இஞ்சின் ஒன்று வைத்து தண்ணீர் இறைப்பது நல்லதென்றும் சீமைக் கலப்பை முதலிய நவீன கருவிகளை வாங்கி உபயோகிப்பதினால் பூமி செழிக்குமென்றும், இவ்வித சாதனங்களைத் தேடுவது நமது, ஏழைத் தேசத்தில் ஒருவரால் தனியாய் முடியாததால் பல மெம்பர் ஒன்று சேர்ந்து இதைப்போன்ற கிரெடிட் ஸொஸைடியில் பொது விற் கடன்வாங்கி சாகுபடி அபிவிர்த்தியின் பொருட்டு மேற்சொன்னவைபோன்ற பல காரியங்களை சித்தித்துக்கொண்டு ஊதியமடையலாமென்றும் சொன்னார்.



ம-ா-ா-ஸ்ரீ ராமானுஜாசாரியாரவர்கள் இச்சங்கம் குழந்தைப் பருவத்திலுள்ளதே யென்று சொல்லக்கூடியதாயினும் மெம்பர்கள் 188 பேர் சேர்ந்திருப்பதைப்பற்றியும் சங்கம் வரவு செலவு செய்கின்ற தொகையில் ரூ 3,500 வரையில் மெம்பர்களினது டிபாஸிட்தொகை என்ற விஷயமும், பஞ்சமர்களும் பெண்பாலர்களும் மெம்பர்களாய்ச் சேர்ந்து இச்சங்கத்தை நடத்துகிறார்களென்பதும் மனதுக்கு மிக சந்தோஷத்தை கொடுப்பதுடன், இதுவே இச்சங்கம் மேன்மேலும் ஓங்கிவளர்ந்து அளவிலா நன்மை பயக்குமென்பதற்கு ஒரு அறிகுறி யாகுமென்றார்.

இச்சங்கம் கூலி கொடுப்பதற்கே ஏற்பட்டதென்று எண்ணியிராமல் ஒவ்வொரு மெம்பரும் ஏதாவது மிச்சம் பிடித்து டிபாஸிட் செய்யவேணுமென்றும், கடன் வாங்கினவர்கள் குறிப்பிட்ட காலத்தில் தவறாமல் கடனை திரும்பக்கொடுப்பது அவசியமென்றும், கட்குடித்தல் பொய் சொல்லுதல், மற்ற கெட்ட நடவடிக்கையுள்ளவர்களை சங்கத்தில் சேர்க்கக்கூடாதென்றும் ஐக்கிய சங்கங்களினால் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் எடுத்துச் சொன்னார்கள்.

அக்கிராசனாதிபதிக்கும் ஏனையோர்க்கும் வந்தனம் அளிக்கப்பட்டது.

———:(*):———

## மங்களம் கிராம நாணயச்சங்கம்.

443 ம் நெ. மங்களம் ரூரல் கிரெடிட் ஸொஸைடியானது கனம் ரிஜிஸ்டிராரவர்களால் 1910 ம் வருஷம் அக்டோபர் மாதம் 11-டையில் வரையறுக்கப்படாத பொறுப்பினையுடைய ஓர் ஐக்கிய நாணயச்சங்கமாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டு 191' வருஷம் டிசம்பர் மாதம் 2-டையில் விவகாரங்கள் நடத்த வாரம்பித்தது.

பிரதமத்தில் ஜனங்கள் வரையறுக்கப்படாத பொறுப்பைப்பற்றி நிரம்ப பீதி யடைந்திருந்தவர்கள், பஞ்சாயத்தார் மெம்பர்களின் விடாமுயற்சி போதனை முதலியவைகளால் நன்கு தெரிந்து நாளாவட்டத்தில் சங்கத்தில் சேர முன்வந்தார்கள்.

1910—11 ம் வருஷத்திலும் 1911—12 ம் வருஷத்திலுமாகச் சேர்ந்த 114 மெம்பர்களில் இறந்து போனதும் விலகிப்போனதுமான 4 மெம்பர்கள் போக பாக்கி 110 மெம்பர்கள் 531 பங்குகள் வரை எடுத்துக்கொண்டார்கள். 1912-13 ம் வருஷத்தில் 120 மெம்பர்கள் சேர்ந்து 474 பங்குகள் எடுத்துக்கொண்டார்கள். மேற்படி மெம்பர்களில் சுமார் 20 மெம்பர்கள் விவசாயத்தோடு இதர வருமான முள்ளவர்கள்; மற்றவர்கள் பூரா விவசாயிகள். வரவரசங்கத்தில் மெம்பர்கள் ஜாஸ்தியாய் அதிகப்பங்குகள் எடுத்துக்கொள்ளவே முதலில் சங்கம் வாங்கக்கூடிய மொத்தக்கடன் தொகையான ரூபாய் 10,000விருந்து ரூ. 20,000க்கு கனம் திருச்சி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிராரவர்களால் உயர்த்தப்பட்டது. சங்கத்தில் உயர்ந்த ஜாதியார்கள் முதல் தாழ்ந்த பஞ்சமஜாதியார்கள்வரை மெம்பராய்ச் சேர்ந்திருக்கிறார்கள். 15 மெம்பர்கள் தவிர சங்கத்திற் சேர்ந்த மற்றவர்களெல்லாம் கடன் பெற்றிருக்கிறார்கள். கடன்கள் ரூபாய் ஐந்து முதல் கொடுபட்டு வருகின்றன. பிரதி வருஷம் ஜனவரிமீ முதல் ஜூன்மாதம் வரை, முன்கடன் தீர்த்தல், கிணறு வெட்டுதல், நிலம் வாங்குதல், வீடுகட்டுதல், வண்டி மாடு வாங்குதல் போன்ற காரியங்களுக்கும், ஜூலைமாதம் முதல் டிசம்பர் மாதவரை

ஆடுமாடுகளுக்குத் தீவனம் வாங்குதல், நிலங்கள் உழுது பருவஞ் செய்தல், போன்ற விவசாயக் காரியங்களுக்கு கடன்கள் சாங்க்ஷன் செய்யப்படுகிறது. கடன்களுக்குத் தவணைகள் காரியத்துக்குத் தக்கவாறு ஒருவருஷத்திற்கு மேற்படாததுமான தனித்தனி தீர்மானங்களுள்ளவைகள். சங்கத்தில் மெம்பர்களுக்குக் கடன் கொடுத்துதவி வருவதோடு சில நெசவுக்கார "சேடர்" என்ற மெம்பர்களின் வேண்டுகோளின்படி கனம் திருச்சி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிராரவர்கள் அனுமதிபெற்று மதுரை தூத்துக்குடி முதலிய நூல் உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து மொத்தமாய் நூல்வாங்கி கொள்முதல் விலைக்குமேல் ரூபாய் ஒன்றுக்கு 2 பைசா லாபத்திற்கு கடன்களுக்குப்பதிலாக நூலாகக் கொடுத்து வரப்படுகிறது. இதினால் மேற்படியார்கள் 12 மைல் தூரத்திற்கு மேற்போய் அதிக விலைகொடுத்து வேலை கஷ்டமடைவதினின்று, வேண்டிய நூலை அப்போதைக்கப்போது உள்ளூரிலேயே சமயமாயும் விலை சாசமாகவு மடைந்துவருகிறார்கள் வியாபாரிகளின் இம்சைகளினால் அன்னியர்களிடம் கொடுத்து குறைந்தவிலைக்கு சரக்குகளை விற்பதுபோய், தாங்களே சந்தை முதலிய விடங்களில் நேரில்போய் சரியான விலைக்கு விற்று வருகிறார்கள் வர வர சங்கத்தின் விவகாரங்கள் அதிகப்பட்டதால் நூல் வாங்கிக் கொடுத்துவந்ததை நிறுத்தும்படி நேரிட்டது. இந்த கிராமத்திலும் அதன் மஜராக்களிலும் 2, 3, வருஷங்களுக்கு முன்னர் 18,20, 24 வரை வட்டி தாரணையிருந்தது. சங்கம் வைத்ததின் பின் மேற்படி வட்டி 12 வரை குறைந்திருக்கிறது. இது பெரிய கிராமமானதால் பூராக்குடிகளுக்கும் உதவ சாத்தியமில்லை என்றாலும் சேர்ந்த மெம்பர்களுக்கு விவசாயக் காரியங்களுக்கெல்லாம் தடையின்றி கடன் கொடுத் துதவி வருகின்றது. இதன் மஜராவாகிய சொக்கம்பட்டி என்னுமூரில் அதிகமாக, கள், சாராயம், முதலியவைகளைக் குடித்து அதிக வட்டிக்கு கடன் வாங்கி தோன்றியச்செலவுகள் செய்து, பிழைக்க வழியின்றி, ரங்கூன், கொழும்பு முதலிய அன்னிய நாடுகளுக்கு வருஷந்தோறும் 50,60 நபர்கள்வரை போய்வருவது வழக்கமாயிருக்கின்றது. இப்போது அவ்வூரிலுள்ளவர்களையெல்லாம் சங்கத்தில் மெம்பராய்ச் சேர்த்து அவர்களின் விவசாயச் செலவுக்கு வேண்டிய தொகைகள் மட்டும் கொடுத்து வந்ததினால் மெம்பராய்ச் சேராத 6 நபர்கள்தான் இவ்வருஷம் ரங்கூன் முதலிய அன்னிய நாடுகளுக்குப் போயிருக்கிறார்கள். ஷெயார்கள் கட்குடியை மறந்து, அதிகவியயஞ் செய்யாமல் செட்டாய்ப்பிழைத்து வருகிறார்கள். ஷெயார்களிடம் கட்குடி இனி உபயோகிக்கிறதில்லை என்றும், அதவாய்த் தெரியவந்தால் ரூபாய் 50 சங்கத்திற்கு அபராதம் கட்டுவதாயும் மூச்சலிக்கா எழுதி வாங்கப்பட்டிருக்கிறது. இது விஷயங்களைக் கவனித்துவரத் தக்கதேற்பாடும் செய்திருக்கிறது. இவ்வருஷத்தில் 50 பஞ்சாயத்து மீட்டிங்குகளும் 9 மஹாசபை மீட்டிங்குகளும் நடந்திருக்கின்றன. கொடுப்பட்ட 216 கடன்களில் 191 நபர்ஜாமீன்பேரிலும் 25 ஸ்தாவர ஈட்டின்பேரிலும் பட்டுவாடாச் செய்யப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து மெம்பர்களிருவரால் இடையில் சில அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தது நீங்கி பிறகு ஞாயிற்றுக்கிழமை தோறும் சங்கத்தின் நன்மைகளை யுத்தேசித்து மீட்டிங்குகள் கூடி சங்கத்தின் விவகாரங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

---

# பேரிலி ஐக்கிய முயற்சி சாமான் தொழிற் சாலையின் பைலாக்கள்.

(1) இச்சங்கம், பேரிலி ஐக்கியமுறை சாமான் தொழிற்சாலையென்று வழங்கும். ரெஜிஸ்டர் செய்யப்பட்ட இதின் ஆபீஸ்—பேரிலி.

(2) இத்தொழிற்சாலையின் முக்கிய நோக்கங்களாவன:—மெம்பர்களுக்கு அவசிய விஷயங்களின் பொருட்டு குறைவான வட்டி விகிதம் கடன் கொடுத்தல்; பேரிலியிலுள்ள தச்சர்களுக்குள், ஸர்வித ஒற்றுமை, சிக்கனம், சுய உதவி, தொழில்செய்யும் தன்மை, முதலியவைகளை அபிவிருத்தி செய்தல், ஒற்றுமையால் சாமான்கள் செய்யும் தொழிலை பெருகச்செய்தல் ஐக்கிய முறையில் இவ்விதம் வேலைசெய்யும் தச்சர்களது செய்து முடிந்த சாமான்களை விற்று முதல் செய்யத்தகுந்த மார்க்கட்டு ஒன்றைத் தேடுதல்.

3. சங்கம் ரெஜிஸ்டர் செய்யுங்காலத்து சேர்ந்துள்ளவர்களும், இந்த பைலாக்களின்படியும், கோவாபரேடிவ் சங்கங்களின் ஆக்ட்டின்படியும் சேர்ந்துள்ள பங்குக்காரர்களும் மெம்பர்களாகலாம்.

4. பேரிலி ஜில்லாவில் 18 வயதுக்குமேல் புத்தி ஸ்வாதீனத்திலுள்ள தச்சர்களெல்லாம் இதில் பங்கு எடுத்துக்கொள்ளலாம்.

5. ஒவ்வொரு பங்கின் விலை ரூபா 50-0-0; இதை ஒரே தடவையிலாவது அல்லது மாதம் ரூபா 1 வீதம் 12 தவணைகளிலாவது செலுத்தலாம்.

6. டைரெக்டர்களின் உத்திரவில்லாமல், ஒருவரும் 20 பங்குகளுக்குமேல் அதில் வைத்துக்கொள்ளக்கூடாது; ஒருவரும் தம் வார்சுதார்களைத்தவிர மற்றவர்களின் பேரில் தம் பங்கை மாற்றக்கூடாது. 1½ மாத காலத்திற்குப் பிறகுதான் ஒருவர் தம் பங்கை மற்றவர்பேரில் மாற்றலாம். ஒரு மெம்பர் தொழிற்சாலையின் சம்பந்தத்திலிருந்து விலக்கிக்கொண்டும், பங்கை வாங்க ஒருவரு [illegible]மில்லையானால், தொழிற்சாலையே ஏற்பட்ட விலைக்கு அதை மறுபடி வாங்கிக்கொள்ளும். தொழிற்சாலைக்குக் கடன் கொடுக்கவேண்டிய மெம்பர்களும், மற்ற மெம்பர்களின் கடனுக்கு ஜாமீனாய் ஏற்றுக்கொண்ட மெம்பர்களும், கடன் பூராவும் தீர்ந்தபிறகுதான் தங்கள் பங்குகளை மற்றவர்கள்பேரில் மாற்றலாம்.

7. தொழிற்சாலையின் பங்குகள் 100 க்கு 10 விகிதத்திற்கு மேற்படாமல டிவிடெண்டு பெறும்.

8. தொழிற்சாலையின் மூலதனம் 1,000 பங்குகளுடை[illegible]து. மஹாசபை தீர்மானித்து, பிறகு ரெஜிஸ்ட்ரார் அங்கீகாரஞ் செய்தாலொழிய பங்குகளை உயர்த்தக்கூடாது.

9. பங்கை ஏற்பட்ட கிரயத்திற்குமேல் விற்கக்கூடாது. மைனரும் புத்தி ஸ்வாதீனத்திலில்லாதவரும் பங்கு வாங்கிக் கொள்ளக்கூடாது.

10. தொழிற்சாலையின் கடன்களுக்கு, மெம்பர்கள் ஏற்றுக் கொள்ளும் பொறுப்பு தாம் செலுத்தியிருக்கும் பங்குத் தொகைக்கு இரட்டிப்பாகும்.

11. பங்கு எடுத்துக்கொள்ளும் மெம்பர்கள் பணத்தை சரியான தவணைகளிற் செலுத்தத் தவறினால், தவறின தேதிமுதல் கட்டவேண்டிய தொகைக்கு 100க்கு 6 விகிதம் வட்டி வசூல் செய்யப்படும். அத்தொகையை மூன்று மாசத்திற்குமேல் பாக்கி வைத்துக்கொண்டால், டைரெக்டர்கள் அம்மெம்பர்களுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு, க்ஷேமநிதியுடன் அதைச் சேர்த்து விடுவார்கள்.

யாதொரு மெம்பர் தொழிற்சாலையில், யோக்கிதைக்குக் குறைவான காரியங்கள் செய்தாலும் அல்லது கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடாமலிருந்தாலும் அல்லது தொழிற்சாலையின் அந்தஸ்த்தைக் கெடுக்க முயன்றாலும், பங்குக்காரர்கள் கூடிய மஹா சபையில், மூன்றில் இரண்டுபங்கு பங்குக்காரர்களின் அபிப்பிராயத்தால் அவர் சங்கத்தினின்றும் நீக்கப்படுவார்.

## நிர்வாகம்.

12. ஆறு டைரெக்டர்கள் சேர்ந்த ஒரு போர்டால் இத்தொழிற்சாலை நிர்வகிக்கப்படும்.

13. வருஷாவருஷம் டைரெக்டர்கள் பொது சபையில் பங்குக்காரர்களால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். டைரெக்டர்கள் அஜாக்கிரதையாயும், யோக்கியதை குறைவாயும் வேலைசெய்தால், பங்குக்காரர்களால் நீக்கப்படுவார்கள். அப்படிக் காலியாகும் ஸ்தானங்களுக்கு டைரெக்டர்கள் தாங்களே ஒருவரை நியமித்துக் கொள்ளுவார்கள்.

* * * * * *

15. டைரெக்டர்களுக்கு அடியிற்கண்ட அதிகாரங்களும், கடமைகளுமுண்டு:—

(1) உபசேர்மனைத் தேர்ந்தெடுத்தல்.

(2) தொழிற்சாலையின் சிப்பந்திகளை நியமிக்கவாவது, அவர்களுக்கு அபராதம் போடவாவது அவர்களை நீக்கவாவது செய்தல்; ஜாமீன் கட்டவேண்டியதாய்த் தோன்றினால், சிப்பந்திகளை கட்டச்செய்தல்.

(3) மொத்தம் வரையறுக்கப்பட்ட தொகைக்கு மேற்படாமல் சங்கத்திற்காகக் கடன் வாங்குதல்.

(4) பங்குகளை மாற்ற அநுமதி கொடுத்தல், பைலா 6-ல் சொல்லியபடி பங்குகளை வாங்குதல்.

(5) 27-வது பைலாவிற் கூறியபடி மஹாசபை கூட்ட ஏற்பாடு செய்தல், தொழிற்சாலையின் வருஷாந்திர ரிபோர்ட்டுகளையும், பங்குக்காரர்களுக்கும், ரெஜிஸ்ட்ராரவர்களுக்கும் அனுப்பவேண்டிய வரவு செலவு ஸ்டேட்மெண்டுகளையும் தயார் செய்தல்.

(6) தொழிற்சாலையின் வருஷாந்திர வரவுசெலவுக் கணக்குகளைப் பிரசுரம் செய்தல்.

(7) சங்கத்தைச்சேர்ந்த கோர்ட்டு நடவடிக்கைகளை, ஓர் மெம்பர் மூலமாயாவது மானேஜர் மூலமாயாவது நடத்திக்கொள்ளுதல்.



(8) கடன் தொகைகள், டிபாஸிட்டுகள், டிபன்சர்கள் (Debentures) முதலியவைகளின் வட்டி விகிதத்தை ஏற்படுத்துதல்.

(9) மெம்பர்களின் கடன் விண்ணப்பங்களைப் பரிசோதித்து, கடன் கொடுக்கலாம் அல்லது வேண்டாமென்று உத்திரவிடுதல்.

(10) கடன் வாங்கப்பட்ட தொகையை, மெம்பர்கள் குறித்த பிரத்தியேக காரியங்களுக்கு உபயோகப் படுத்துகிறார்களாவென்று பார்வையிடுதல்.

(11) கடன் திருப்பிக்கொடுக்கும் தேதிகளை ஏற்படுத்துதல், தவணைகளை நல்ல காரணத்தின்பேரில் மாற்றிப்போடுதல்.

(12) கடன்களை திருப்பிக்கொடுக்கத் தவறினாலும் அல்லது வேறுவழிகளில் உபயோகப்படுத்தினாலும், அதை வசூல்செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதல்.

(13) புது பங்குக்காரர்களைச் சேர்த்தல்; பங்குகளை மெம்பர்களுக்குப் பிரித்துக் கொடுத்தல்.

(14) ஒவ்வொரு பங்குக்காரர்களும் கடன் எடுக்கக்கூடிய தொகையை வருஷந்தோறும் தீர்மானித்தல்.

(15) தொழிற்சாலைக்கு ஓர் ஆடிட்டரையும் ஓர் வக்கீலையும் நியமித்தல்.

(16) தொழிற்சாலையின் கணக்குகளைப் பரிசோதனை செய்தல்; ரெஜிஸ்ட்ரார் அனுமதியின்பேரில், தொழிற்சாலையின் கணக்குகளுக்கும், தஸ்தவேஜுகளுக்கும் பாரங்கள் ஏற்படுத்தல்.

(17) கம்மிட்டியாராலாவது, மானேஜராலாவது ஏற்படும் சில்லரைச் செலவுகளை ஸாங்க்ஷன் செய்தல்.

(18) தினசரி ஆபீஸ் நடவடிக்கைகளை பர்த்திசெய்தல்.

(19) தொழிற்சாலையை சரிவர அடக்கி ஆளும்படி ஏற்பாடு செய்தல்.

(20) வரவு செலவுகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்து, பணம் முதலானவைகளையும் தொழிற்சாலை சாமான்களையும் தகுந்தபடி காப்பாற்றுதல்.

(21) தொழிற்சாலை வேலைக்காரர்களை மேல் விசாரணைசெய்ய விதிகள் நிர்ணயித்தல்; தொழிற்சாலைக்கு வேண்டிய சாமான்களை வாங்கவாவது செய்யவாவது ஏற்பாடு எடுத்துக்கொள்ளுதல்; வேலைமுடிந்த சாமான்களின் விலைகளை தீர்மானித்தல்.

(22) டிவிடெண்டு, நிகர் லாபம் முதலிய விஷயங்களில் மகாசபைக்கு ஆலோசனை சொல்லுதல்.

(23) தொழிற் சாலையின் நிமித்தம் எல்லா தஸ்தவேஜுகளில் கையொப்பமிடுதல்.

16. டைரெக்டர்கள் தங்களுக்குள் மூன்றுபேர்களடங்கிய ஓர் வேலைசெய்யும் கம்மிட்டியை, தங்களுக் குரித்தான கடமைகளைச் செய்ய, நியமிக்கலாம்.

17. டைரெக்டர்கள் தங்களுக்குள்ளாவது, வெளியிலிருந்தாவது, கௌரவத்திற்காவது சம்பளத்திற்காவது வேலைசெய்யும் ஓர் மானேஜரையும் அஸிஸ்டெண்டு மானேஜரையும் தொழிற் சாலையை மேல்விசாரணை செய்ய தங்கள் கீழ் நியமிக்கலாம்.

18. மானேஜராவது, அஸிஸ்டெண்டு மானேஜராவது நியமிக்கப்பட வேண்டுமானால், முதல் இரண்டு வருஷம் இவர்கள் பேரிலி ஜில்லாபாங்கியால் தேர்ந்தெடுக்கப்படுவோர்கள். அவர்களின் கடமைகளின் முக்கியமானவைகள் பின்வருமாறு:—

(1) ஆபீஸின் வேலையை மேல்விசாரணை செய்தல்; கணக்குகளை சரிவர ஒழுங்காய் வைத்துக்கொள்ள உத்தரவாதியாதல்.

(2) ரூல்களின்படி வேலையை நடத்தி, அடிக்கடி டைரெக்டர்களுக்கு ரிபோர்ட்டு அனுப்புதல்.

(3) டைரெக்டர்கள் உத்திரவிட்டபடி, விண்ணப்பங்களை தீர்மானித்தல்.

(4) 15-வது பைலாவிற் கூறியபடி தொழிற் சாலையின் பணத்தை வாங்கவும், அதின் நிமித்தமாய் செலவும் செய்தல்.

(5) பைலாவிற் சொல்லியபடி தொழிற் சாலையிற் செய்யும் சாமான்களை விற்பனை செய்தல்.

(6) டைரெக்டர்கள் ஏற்படுத்திருக்கும் தொகைக்குள் தொழிற்சாலையின் சில்லரைச் செலவுகள் செய்தல்.

(7) விற்ற சாமான்களுக்கு ரசீது கொடுத்தும், டைரெக்டர்கள் எழுதிய தஸ்தவேஜுகளில் கையொப்ப மிடுதல்.

* * * * * *

(10) வருஷ வரவு செலவு கணக்குகளை டைரெக்டர்களும், ரிஜிஸ்ட்ராரவர்களும் வேண்டிய பொழுது தயார்செய்து கொடுத்தல்.

(11) தொழிற் சாலையின் நிமித்தமாய் டைரெக்டர்கள் குறிப்பிட்டுச் சொல்லிய வேலையைச் செய்தல்.

19. அஸிஸ்டெண்டு மானேஜர், மானேஜரின் மேற்பார்வையில், டைரெக்டர்கள் தீர்மானிக்கிறபடி சில அதிகாரங்களையும், கடமைகளையும் வகிப்பார்.

20. தொழிற் சாலையின் பணத்தை வாங்கிக் கொள்ளவும், உத்திரவிட்டபடி செலவு செய்து பாக்கித் தொகைக்கு நாள்தோறும் தங்களுக்கு உத்தரவாதமாகும்படி டைரெக்டர்கள் ஓர் பொக்கிஷக்காரரை நியமிப்பார்கள்.

## டைரெக்டர்கள் கூடுதல், வேலைசெய்யும் கமிட்டி மஹாசபை கூடுதல்.

21. தொழிற்சாலையின் வேலைக்குத் தகுந்தபடி டைரெக்டர்கள் அடிக்கடி கூடுவார்கள். எப்படியும் மாதத்திற்கு ஒரு முறையாவது மீட்டிங் நடக்கும். மூன்று டைரெக்டர்களின் வேண்டு கோளினாலாவது, சேர்மனுடைய வேண்டுகோளினாலாவது எந்த சமயத்திலும் ஸ்பெஷல் மீட்டிங் கூட்டப்படும்.

22. தேவையான காலங்களில் வேலைசெய்யும் கமிட்டியார் கூடுவார்கள்.

23. டைரெக்டர்களின் மீட்டிங் நடைபெறுதற்கு நான்கு டைரெக்டர்களுக்குக் குறையாமல் ஆஜராயிருக்கவேண்டும்; வேலைசெய்யும் கமிட்டிக்கு, இரண்டு மெம்பராவது ஆஜராக வேண்டும்.

மேற்கூறிய மீட்டிங்குகளில், ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு வோட்டு உண்டு; வோட்டுகள் சமனாயிருந்தால், சபை அக்கிராசனாதிபதிக்கு, எதாவது ஓர் கக்ஷியைச் சேர்ந்துகொள்ள, ஓர் வோட்டு உண்டு.

25. வேண்டிய டைரெக்டர்கள் ஆஜராகவில்லையென்று மாற்றிப்போட்ட மீட்டிங்குகளில் மூன்று டைரெக்டர்கள் ஆஜராயிருந்தால் அவைகள் நடைபெறும்.



26. மீட்டிங்குகளின் நடவடிக்கைகள் மானேஜர் வைத்திருக்கும் பிரத்தியேக புஸ்தகத்தில் ரிகார்டு செய்யப்படும். அதில் மீட்டிங்கு சேர்மன் கையொப்பமிடுவார்.

(2) பங்குக்காரர்களின் மஹாசபை கூட்டவேண்டிய காலங்கள்:—

(a) ஒவ்வொருவருஷம் ஜூலைமாதம்; இது வருஷ மீட்டிங்கு என்று வழங்கும்.

(b) ஒவ்வொருவருஷம் ஜனவரி மாதம்; இது ஆறுமாத மீட்டிங்கு என்று வழங்கும்.

(c) சேர்மன், அல்லது டைரெக்டர்களில் பெரும்பான்மையோர், அல்லது ஐந்தில் ஒரு பங்கு மெம்பர்கள், இவர்களின் வேண்டு கோளினால் மஹாசபை கூட்டப்படும்.

28. சேர்மனாவது, வைஸ்சேர்மனாவது, சபைக்கு வராமற்போனால், பங்குக்காரர்கள் தங்களுள் ஒருவரை சபை அக்கிராசனத்திற்குத் தேர்ந்தெடுப்பார்கள்.

29. மஹாசபை கூடும் ஒருவாரத்திற்கு முன்னமேயாவது, பங்குக்காரர்களுக்கு நடைபெறும் சபையைப்பற்றித் தெரிவிக்கவேண்டும்.

30. பங்குக்காரர்கள் மூன்றில் ஒருபங்கு ஆஜராயிருந்தாற்றான் மஹாசபை நடைபெறும். இவ்விதம் நடைபெறாத மீட்டிங்கு நான்கில் ஓர்பங்கு மெம்பர்கள் பின்பு ஆஜராயிருந்தால் நடைபெறும்.

31. ஒவ்வொரு பங்குக்காரர்களுக்கும் எவ்வளவு பங்குகளிருக்கின்றனவோ, அவ்வளவு வோட்டுகள் உண்டு. ஆனால் கோஷாஸ்திரீகளைத்தவிர, மற்ற மெம்பர்கள் சபையில் ஆஜரானால்தான் வோட்டுகள் கொடுக்கலாம்.

32. பங்குக்காரர்கள் மெஜாரிட்டியின் அபிப்பிராயமே (பைலாவிற் கூறியவைகளைத்தவிர) எவ்விஷயத்திலும் சபையின் தீர்மானமாகும்.

33. வருஷ மகாசபை மீட்டிங்கில், டைரெக்டர்கள் வருஷ வரவு செலவு கணக்குகளை பங்குக்காரர்களுக்கு தாகல் செய்வார்கள்.

34. வருஷ மீட்டிங்கில், பங்குக்காரர்கள் செய்யவேண்டிய கடமைகளாவன:—

(1) மறுவருஷத்திற்கு டைரெக்டர்களைத் தேர்ந்தெடுத்தல்.

(2) வருஷ ரிபோர்ட்டையும், வரவுசெலவுக் கணக்கையும் பரிசோதனை செய்து டிவிடெண்டு இன்னதென்று ஏற்படுத்தி, பைலாக்களிற் சொல்லியபடி ரிசர்வபத்தை என்னசெய்வதென்று தீர்மானித்தல்.

(3) பைலாக்களிற் சொல்லியபடி, டைரெக்டர்கள் தொழிற்சாலையின் நிமித்தம் மறுவருஷத்தில் செலவுசெய்யும் தொகையை தீர்மானித்தல்.

(4) தொழிற்சாலையில் எதாவது நஷ்டம் வருமாயின், க்ஷேமநிதியிலிருந்து அதை ஈடுபண்ண சம்மதித்தல்.

(5) டைரெக்டர்களால் தங்களுக்கு முன்னால் கொண்டுவரப்பட்ட நடவடிக்கைகளை பைசல் செய்தல்.

35. மெம்பர்களுக்குத்தான் கடன் கொடுக்கப்படும். அவர்களின் பங்குத்தொகைக்கு நான்கு மடங்குக்குமேல் கடன் கொடுபடமாட்டாது. பங்குத்தொகைக்கு அதிகமாய் வாங்கும் கடனுக்கு இரண்டு அல்லது அதிக ஜாமீன்கள் வாங்கப்படும்.

36. கடன் வாங்கவேண்டிய காரியங்களை கடன் விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும். அவைகளுக்குத் தகுந்தபடி கடன் திருப்பிக்கொடுக்கும் தேதிகளை குறிப்பிடப்படும்.

37. தவணைப்படி கெடுத்தொகையைச் செலுத்தத்தவறினால், முழுத்தொகையையும் டிமாண்டு பிராமிசரி நோட்டுபோல் வசூல் செய்யப்படும்.

38. கடனின் வட்டி விகிதம், ரெஜிஸ்ட்ராரவர்களாலும், பேரிஜில்லா டைரெக்டர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும்; 100-க்கு 12 விகிதத்திற்கு மேற் போகாது

39. பாக்கிவிழும் கடன் தொகைக்கு 100-க்கு 6 வீதம் வட்டி வாங்கப்படும்.

### நிகர் லாபம், க்ஷேமநிதி.

40. வருஷ லாபத்தில் நான்கில் ஒரு பங்கை க்ஷேமநிதிக்குக் கொண்டுபோக வேண்டியது.

41. பாக்கியுள்ள நிகர் லாபத்தை (1) 100-க்கு 10-விகிதத்திற்கு மேற்படாமல் பங்குத் தொகையின் டிவிடெண்டுக்கும், (2) பங்குக்காரத் தச்சர்கள் வாங்கின தினசரிக் கூலியின் பிரகாரம் அவர்களுக்கு 10 விகிதத்திற்குள்ளாக போனஸுக்கும் (3) தச்சர்களின் பிள்ளைகளின் படிப்புக்கும், (4) வாங்கின கடனை அடைப்பதற்கும், (5) க்ஷேமநிதியை பலப்படுத்துவதற்கும், உபயோகப்படுத்த வேண்டியது.

42. தொழிற் சாலை ஜீவிக்கும் வரையில், க்ஷேமநிதியானது ஓர் பிரிக்க முடியாதத் தொகையாகும். முறிபட்டால், தொழிற் சாலையின் கடன்கள்போக பாக்கியுள்ள க்ஷேமநிதியை ரிஜிஸ்ட்ரார் தீர்மானப்படி உபயோகப் படுத்தவேண்டியது.

43. பங்குக் காரர்களுக்கும், தொழிற்சாலைக்கும் வாக்குவாதங்கள் வந்தால், டைரெக்டர்களால் முடிவு செய்யப்படும். ஆனால் அந்தத் தீர்மானத்திற்கு மஹாசபைக்கு அப்பீலுண்டு.

44. மஹாசபையிற் கூடப்பட்ட மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்களின் அபிப்பிராயத்தாலும், ரிஜிஸ்ட்ராரவர்களின் சம்மதத்தாலும், தொழிற்சாலை முறிவடையும்.

45. பங்குக்காரர்கள் கூடப்பட்ட மீட்டிங்கில், மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்களின் அபிப்பிராயத்தால், ரெஜிஸ்ட்ராரவர்களின் சம்மதத்துடன், பைலாக்கள் மாறுதலடையும்.

---

# தணிக்கை உத்திரவுகள்.

## திருவல்லிக்கேணி அர்பன் கோவாப்ரேடிவ் ஸொஸைடி, லிமிடெட்.

### 1912-13, வருஷத்திய தணிக்கை உத்திரவு.

15-வது நெம்பர் திருவல்லிக்கேணி அர்பன் கோவாப்ரேடிவ் ஸொஸைடியின், 1913-ம் வருஷம் ஜூன் மாதம் 30 தேதியோடு முடிவுபெற்ற கோவாப்ரேடிவ் வருஷத்திய கணக்குகள், சீப் இன்ஸ்பெக்டர் ம-௱-௱-ஸ்ரீ கே. வேதாசல மய்யாவர்கள் தணிக்கை செய்தபடி, அங்கீகரிக்கப்பட்டன. வரவு செலவு, லாபநஷ்டம், ஆஸ்திக் கடன், ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2 சங்கம் ஏற்பட்டு 9 வருஷமாகிறது. சங்கத்தின் வியாபாரங்கள் ஒவ்வொரு வழியிலும் அதிகரித்திருக்கின்றன. மெம்பர்களின் சங்கியை 20,24 லிருந்து, 2,343 க்கும், பங்குத்தொகை ரூ. 23,546-13-5 லிருந்து ரூ. 29,250-10-9 க்கும், மெம்பர்களின் டிபாஸிட்டின் தொகை ரூ. 24,608-6-9 லிருந்து ரூ. 42,166-2-0க்கும், மெம்பர்களுக்குக் கடன் கொடுத்த தொகை ரூ. 5,018-4-10 லிருந்து ரூ. 9752-2-9 (மாம்பலம் சங்கத்திற்குக் கடன் கொடுத்த ரூ. 3000 யைத்தவிர) க்கும் அதிகரித்திருக்கின்றன. மெம்பர்களுக்குக் கொடுத்த 355 கடன்களில், 263 கடன்கள் ரூ. 50க்கு மேற்படாதவைகள்; கடனாக கொடுக்கப்பட்டதொகை ரூ. 19,005-8-0ல் ரூ. 14,958-8-0 உணவுப்பொருள்கள் வாங்கக் கொடுக்கப்பட்டது. இதினால் ஏழை மெம்பர்கள் மிகவும் நன்மையடைகிறார்களென்பதிற் சந்தேகமில்லை.

3. சங்கமானது சென்ற வருஷத்தில் ரூ. 20,528-9-5 ம், இவ்வருஷத்தில் ரூ. 21,181-14-10 ம் நிகரலாபம் அடைந்தது. இத்தொகையில், பிரிவினை பகுதியில் ரூ. 20 949-13-9 நிகரலாபமும், நாணயபகுதியில் ரூ 232-1-1 நிகரலாபமும் ஏற்பட்டிருக்கிறது. க்ஷேமநிதியுடன் சேரவேண்டிய தொகைகள் பின்வருமாறு.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| (1) நாணயப்பகுதியின் நிகரலாபம் முழுமையும் ... | 232 | 1 | 1 |
| (2) வருஷத்திற்சேர்ந்த பிரவேசக்கட்டணத்தொகை முழுமையும் | 124 | 8 | 0 |
| (3) சீட்டுபண்டிலிருந்து கிடைக்கக்கூடியது ... | 78 | 6 | 11 |
| (4) பிரவேசக்கட்டணம், சீட்டு பணம் நீங்கலாகப்போக பாக்கியுள்ள பிரிவினை பகுதியின் நிகரலாபத்தில் நான்கில் ஒன்றும் ... | 5186 | 11 | 9 |
| | 5621 | 11 | 9 |

முன்னமேயிருக்கும் க்ஷேமநிதியுடன் இதையும் சேர்த்தால் இப்பொழுது க்ஷேமநிதியின் தொகை ரூ. 23,821-3-11 ஆகும்.

4 வருஷ முதலில் பொதுதர்மநிதியின் தொகை ரூ. 8,943-2-3 யிருந்தது. 1911-12 வருஷத்திய தணிக்கை உத்திரவின்படி, இத்துடன் ரூ. 4,514-1-11 ம், அதன்

வட்டி ரூ. 509-4-8 சேர்க்கப்பட்டன. இவ்வருஷத்தில் சேரவேண்டிய தொகை ரூ. 1,570-11-2 உடன், பொதுதர்ம நிதி ரூ. 12,395-13-8 ஆகிறது.

5. டிவிடெண்டு சமப்படுத்தும் நிதி வருஷாரம்பத்தில் ரூ 484-3-11 யிருந்தது. இவ்வருஷத்தில் அதற்குச் சேரவேண்டியது ரூ 655-10-4. அதில், ரூ. 641-3-11 இவ்வருஷத்தில் எடுக்கப்பட்டது. ஆகையால் வருஷக்கடைசியில் பாக்கியுள்ளது ரூ. 498-10-4.

6. சென்ற வருஷத்திய தணிக்கை உத்திரவின்படி, பங்குத்தொகையின் வட்டியும், டிவிடெண்டும், சிப்பந்திகளின் போனசும், சேர்ந்து ரூ. 5,328 15-2 யிருந்தது இத்துடன் இவ்வருஷத்தில், டிவிடெண்டு சமப்படுத்து நிதி [illegible] ருந்து ரூ 157 சேர்ந்தது. ஆனல் ரூ. 8,986-4-3. டிவிடெண்டாயும், போனஸாயும், கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜாஸ்தித் தொகையாகிய ரூ. 3,5[illegible] 5-1. [illegible] முன்னதாக யெடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினல், டிவிடெண்[illegible], பங்கு [illegible] க்கு வட்டி, பொது தர்மநிதி போனஸ், இவைகளுக்குச் [illegible] ரூ. 12,059-14-0 ஆகும்.

7. இச்சங்கம் மிகவும் பிரபலமாகும்படி, டைரெக்டர்கள் உழைத்தது மிகவும் மெச்சத்தகுந்தது.

---

## உத்தரமேரூர் ஐக்கிய நாணயபாங்க்.

---

### 1912–13 வருஷத்திய தணிக்கை உத்திரவு.

41-வது நெ. உத்தரமேரூர் ஐக்கிய நாணயச் சங்கத்தின் 1912 13 வருஷத்தியக் கணக்குகள், யூனியன் ஸுபர்வைஸர் தணிக்கை செய்தபடி, அங்கீகரிக்கப்பட்டன. சங்கத்தின் வரவுசெலவு, லாபநஷ்டம், ஆஸ்திக்கடன் ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2. மெம்பர்களின் சங்கியை இவ்வருஷத்தில் 472 லிருந்து 487-க்கும், டிபாஸிட்டுகளும், வேறு கடன்களும் சேர்ந்து ரூ. 87,552-9-8 லிருந்து ரூ 9[illegible],599-9 3க்கும் அதிகரித்தன. மெம்பர்களுக்குக் கொடுத்த கடன்களின் நிலுவைத்தொகை ரூ. 88,379 லிருந்து ரூ. 83,479க்குக் குறைந்தது. இவ்வருஷத்தில் கொடுக்கப்பட்ட 460 கடன்களில், 261 கடன் தொகைகள் ரூ. 50க்குக் குறைந்தவைகளாயும், [illegible]46 கடன்கள் ரூ. 100க்குக் குறைந்தவைகளாயுமிருக்கின்றன. ஏழைகளுக்கும், பணம் தேவையுள்ளோருக்கும் இச்சங்கம் உதவுகின்றதென இதினுல் தெரியவருகிறது.

3. இவ்வருஷத்தில் சங்கத்தின் நிகரலாபம் ரூ. 1029 12-7. இதிலிருந்து, பைலா 38 A யின்படி பொது தர்மநிதிக்குச் சேரவேண்டிய ரூ. 102-15-8ம், க்ஷேம நிதியின் வட்டியாகிய ரூ. 343-4-7ம் போக பாக்கியுள்ள ரூ. 583-8-4 மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கிக்கு அனுப்ப, சங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது

4 இந்த ராஜதானியிலுள்ள முதல்தரமான சங்கங்களில் இது ஒன்ருகும். அபிவிருத்தி யடைந்துகொண்டே யிருக்கிறது. இச்சங்கம் இவ்விதம் மேன்மையடைய பஞ்சாயத்தார் வேலே செய்தது மிகவும் புகழத்தக்கது.

---

அநுபந்தம்.

# ஆருவது வங்காளமாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

---

### கார்மிகேல் பிரபுவின் திறப்பு உபந்நியாஸம்.

1914-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ம் தேதி பகல் 12-மணிக்கு, ரைடர்ஸ் கட்டடத்திலிருக்கும் பழைய வங்காள சட்டச்சபை சேம்பரில், வங்காள கோவாபரேடிவ் சங்கங்களது ஆருவது வருஷ கான்பரென்ஸ் கவர்னர் ஹிஸ் எக்ஸலன்ஸி லார்டு கார்மிகேல் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஆனரபில் மிஸ்டர் பி. ஸி. ல்யான் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். அச்சமயம் உள்ளூர் மெம்பர்கள் மட்டுமல்லாது, ஹௌராவிலிருந்தும், அதைச் சுற்றிலுமுள்ள இதர ஜில்லாக்களிலுமிருந்தும், சுமார் 80-கனவான்களுக்குக் குறைவில்லாமல் விஜயம் செய்திருந்தனர்.

ஹிஸ் எக்ஸலன்ஸி கவர்னர் அவர்கள் கான்பரன்ஸைத் திறந்துவைக்கும்பொழுது உபந்நியசித்ததாவது:—

நான் உங்களை மறுபடியும் இங்கு அன்புடன் வரவழைத்து கோவாபரேடிவ் க்ஷேமாபிவிருத்தியில் எனக்கு அதிக அவாவிருப்பதாய் தங்களுக்குக் காண்பிக்க என க்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. சென்ற வருஷம் நீங்கள் இங்கு கூடினதுமுதல் உங்களுடைய விருத்தியாம்சத்தை வெகு ஊக்கத்துடன் கவனித்து வருகிறேன். எனக்கு கான்பரென்ஸில் விசேஷ நம்பிக்கையுண்டு; முக்கியமாய் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களும் கூடும் கான்பரென்ஸில் நம்பிக்கை அதிகம். இங்கே கோவாபரேடிவ் விருத்தியாம்சத்தில் விசேஷ ஊக்கங்கொண்டவர்களும், தமது அநுபவத்தை உபந்நியாச பூர்வகமாய் வெளியிடவும் பிறர் வெளியிடுவதை வெகு அன்பாய்க் கேட்கவும் கூடிய பல நிபுணர்களடங்கிய சபையை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள். சென்ற வருஷம் வெகு ஊர்ஜிதமாய் அங்கீகரிக்கப்பட்ட யோசனைகள் யாவும் சர்க்காரால் இவ்வருஷத்தில் அநுபோகத்திற்குக் கொண்டு வரப்பட்டபடியால் நல்ல பலனைக்கொடுத்து உண்மையான விருத்தியாம்சத்தை யுண்டுபண்ணி யிருக்கின்றன. உங்களுடைய வேலையை வெகு சந்தோஷத்துடன் உற்றுநோக்கி வருகிறேன். நான் அதை விஸ்தரித்துச் சொல்லவேண்டியது அனுவசியம். என்னைக்காட்டிலும் உங்களுக்கு இதன் விஷயங்கள் நன்ருய் ஞாபகத்திலிருக்கும், ஆனல் என் மனமானது ஐக்கியபந்தவ்ய மென்னும் யோசனையில் விசேஷமாய் அழுந்தி யிருக்கின்றது. புதிதாய் ஒன்றை ஸ்தாபிப்பதைக் காட்டிலும் ஏற்கனவே, ஏற்பட்டிருந்தவற்றை பலப்படுத்தல் மிகவும் நல்லது. மிஸ்டர் மித்ரா அவர்கள் அவரது ரிபோர்ட்டில் விவரித்துள்ளபடி சங்கங்கள் விருத்தியில் தடையேற்படுத்தப்பட்டும் 100-க்கு 20-வீதம் விருத்தியடைந்தே யிருக்கின்றன,' மெம்பர்களின் சங்கியையோ இரட்டித்திருக்கிறது; சங்கங்களின் மூலதனம் நான்குமடங்கு அதிகரித்திருக்கிறது. இதனின்றும் பழைய சங்கங்கள் நன்ருய் வேறூன்றி வேண்டும்பொழுதெல்லாம் மெம்பர்களுக்குதவியும், நிர்வகிக்க விசேஷ சக்தி அடைந்திருக்கின்றன

வென்றும் அறிந்துகொள்ளலாம். வருஷாந்தர ரிப்போர்ட்டைப் படித்தமாத்திரத்தில் என்மனதிற்பட்ட மற்றொரு அம்சமாவது, சங்கங்கள் வசூல் செய்யமுடியாத நிலுவை கடன்களேற்படவில்லை யென்றும் தெரிகிறது. கடன் பாபத்தில் வெளிநிற்கின்ற 12½ லக்ஷ ரூபாயில் ரூபா 25,000 அல்லது 100-ல் இரண்டுபாகம் கெடுதப்பி யிருக்கிறது. இவற்றில் சொற்பபாகமே விசாரத்திற்கிடங்கொடுக்கிறது. இம்மாகாண முழுவதிலுமுள்ள சங்கங்களுக்கெல்லாம் உதவியாய் ஒரு ஸெண்ட்ரல் பாங்கி ஏற்படுத்த வேண்டிய காலமும் வந்துவிட்டதென்று நினைக்கின்றேன். இந்த ஏற்பாட்டைக் குறித்து முன்பு என்னிடம் பிரஸ்தாபித்தபொழுது நான் தீர்க்காலோசனையின்றி செய்யக்கூடா தென்று அபிப்பிராயப்பட்டேன். சங்கங்கள் அநேகமாய் விவசாயிகளோடேயே வர்த்தகம் செய்து வருகின்றன; ஆகவே பணம் அதிகரிக்க நியாயமில்லை. விவசாயிகள் யாவரும் ஒரே காலத்தில் ஏகமாய்வந்து பணம் கேட்கின்றார்கள். சில காலங்களில் பணமுடையே அவர்களுக்கேற்படாமலிருக்கிறது. வியாபாரிகளுக்குப் பணம் தேவையாயிருக்கும் காலமும் விவசாயிகளுக்குப் பணம் தேவையாயிருக்கும் காலமும் சிலவேளை ஒத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு வியாபாரம் தொழில், விவசாயம், ஆக இம்மூன்றுக்கும் பணம் உதவி ஒழுங்காய் வகிக்கக்கூடிய பொது நிருவாக ஸ்தலம் ஒன்று மிக்கத் தேவையாயேற்படும். இந்த பொது நிருவாகத்தன்மை கோவாபரேடிவ் தோரணையில் ஏற்படுத்துவதே உசிதமென நான் நினைக்கின்றேன். இந்த ஏற்பாட்டைத் தாங்கத் தகுந்த இங்கிலாந்து பாங்கிக்காரர்களது தயவும் உத்தியோகஸ்தர்களது தயவும் வேண்டும். இந்த ஸ்தாபனம் எவ்வளவு முக்கியமானதென்பதையும் இதனால் பிறகு கல்கத்தா பாங்கிக்காரர்களுக்கு நேரிடக் கூடிய ஊதியத்தை நன்கு விளக்க இவ்விஷயத்தைப் பற்றிய குறிப்பொன்று தயார் செய்ய நான் வேண்ட நேர்ந்தது. விவசாயம், தொழில், வியாபாரம், ஆக இம்மூன்றுக்கும் பணம் உதவும்படி இணைக்கக்கூடிய ஒரு பாலமொன்று ஏற்பட்டால் தேசத்திற்கே க்ஷேமமேற்படுமென்று கருதுகின்றேன். ஐரோப்பியர்கள், கூட்டுறவால் சாதிக்கக்கூடியவற்றை முன்னமே யறிந்திருக்கின்றனர். ஆனால் இந்தியர்களோ இவ்வொற்றுமையால் அநேக நற்பயன்கள் கைகூடுமென்று துரிதமாய் அறிந்து வருகின்றனர். ஐரோப்பாவிலேற்பட்டிருக்கும் பலன்கள் எவ்விதம் அங்கு நன்மையை விளைவித்து இன்றியமையாததா யிருக்கின்றனவோ அவ்விதமே இந்தியாவிற்கும் அவசியமாயிருக்கும். ஜனங்கள் கடைசியாக இப்போது விவசாயிகளது கஷ்டத்தை நிவர்த்திக்கக்கூடிய ஔஷதத்தைக் கண்டுபிடித்து விட்டனர். இந்திய ஜனங்களில் பெரும்பாலோர் தரித்திர தசையிலிருப்பதை அநேக நண்பர்கள் என்னிடம் விவரித்துக் கூறியிருக்கின்றனர். அநேகருக்கு தினமொருவேளை ஆகாரம் கிடைப்பதுகூட வருத்தமாயிருக்கிறது. உணவுப் பொருளின் விலையேறினாலும் அல்லது வயல்கள் சாவியாய் பலன் கொடுக்காமல் போனாலும், சரியான பண முதலில்லாததினால் திண்டாடக்கூடிய நிலைமையிலிருப்போர் பலர். கவர்ன்மெண்ட் நிருவாக உத்தியோகஸ்தர்களால் இவ்வித குறைகளைத் தீர்க்க முடியாது. அர்த்த சாஸ்திர வழியில் பணம் அதிகமாய் சுழன்றால்தான் இது நிவர்த்தியாகக் கூடியது. கோவாபரேஷன்தான் அதனஸ்திவாரம். இதனால் திரவியம் குவியல குவியலாய் வரக்கூடியது மன்னியில் ஜனங்களைச் செட்டாய்க் காலக்ஷேபம் செய்யவும் நல்ல நடத்தையாயிருக்கவும் கற்றுக்கொடுக்கும். தம் நேயர்களது க்ஷேமார்த்தம் யாதொரு பலனையும் எதிர் பார்க்காமல் அவர்களுடைய க்ஷேமம் நம்முடையதென எண்ணம் தோன்றி பாடுபடச் செய்யும். இவ்வித வேலைக்கு வங்காளச் சிறுவர்கள் மிக்கத் தகுந்தவர்கள். பாதுவான் வெள்ளப்பெருக் அவர்கள் எவ்விதம் பாடுபட்டார்களென்பதும் இப்போது மிதுனபுரி டிவிஷனில்



எவ்விதம் இன்னும் ஜனங்களுக் குதவி புரிந்து வருகின்றனரென்பதும் எனக்குத் தெரியும். பிறருடைய சுகவாழ்வுக்கு எவ்வளவுதூரம் அவர்கள் சுயநலத்தைவிடத் துணிந்தவர்களென்பதும் பின்பு தெரியவந்தது. கோவாபரேஷன் துறையில் அவர்களுக்கு வெகு விஸ்தாரமான இடம் இருக்கின்றது. அங்கே அவர்கள் தமது கோரிக்கையை பூர்ணமாய் பூர்த்தி செய்து கொள்ளலாம். ஆனால் அது சௌர்ய பிரதாபத்தைக் கொடுக்கக் கூடியதல்ல எனினும் பலருக்குபகாரமான பணப்பெருக்கை உற்பவிக்கும். ஒரு போர்த்தலைவன் சைனியத்தை நடத்திச் செல்லக்கூடும்; ஆனால் அவன் வீரர்களின்றி யாது செய்வான். ரெய்பீஸன் ஐரோப்பாவில் கோவாபரேஷன் கொள்கையை ஏற்படுத்தினர். ஆனாலதை நிறைவேற்றியது அவருடன் உழைத்த அநேக ஜனங்களாகும். சென்ற வருஷம் பொது ஜனங்களிடமிருந்து ரிஜிஸ்ட்ராருக்குக் கிடைத்த உதவியை நினைக்க சந்தோஷமுண்டாகிறது. கோவாபரேஷன் க்ஷேமார்த்தம் பாடுபடுபவர்களாய் இங்கு விஜயம் செய்துள்ள மகாஜனங்களுக்கு எனதன்பார்ந்த வந்தனத்தை கவர்ன்மெண்டார் தரப்பில் யான் தெரிவிக்கிறேன். சென்ற வருஷம் கிராமாந்தரங்களில் பாங்கி பஞ்சாயத்தார்களா யிருந்து உதவிசெய்த மெம்பர்களுக்கும் எனதன்பார்ந்த வந்தனத்தைத் தெரியப்படுத்தவும் வேண்டுகின்றேன். மெஸர்ஸ் இமர்ஸன் ஸ்ட்ராங்கு, பிராட்லிபர்ட், வுட்ஹெட், ஸ்ப்ரோ முதலிய ஸப் டிவிஷனல் ஆபீஸர்களுக்கும் கலெக்டர்களுக்கும் என் வந்தனத்தை தெரியப்படுத்துகின்றேன். மிஸ்டர் மித்ரா அவர்கள் உழைத்ததற்குத் தகுந்தபலன் கிடைத்ததைக் குறித்து நான் அவரை மெச்சிப் புகழ்கிறேன். அவருடைய ரிப்போர்ட்டானது மிகுந்த உபயோகமுள்ள டாக்குமெண்டாகும். அதில் கோவாபரேடிவ் சம்பந்தமாய் செய்யக்கூடிய சகல வேலைகளுமடங்கியிருக்கின்றன. மிஸ்டர் மித்ரா அவர்கள், அவர் வகிக்கும் பொறுப்புள்ள உத்தியோகத்திற்கு மிகவும் ஏற்றவரென்று நடந்து காண்பித்திருக்கின்றார்; அவரால் அநேக நன்மைகள் உண்டாயிருக்கின்றன.

கனவான்களே, எனக்கு பதிலாய் மிஸ்டர் ல்யான் அவர்களை அக்கிராசனாதிபத்தியத்தை வகிக்கும்படி இப்போது கேட்டுக்கொண்டு உங்கள் வியவகாரத்தை செவ்வனே நடத்திக்கொள்ளும்படி உங்களை நான் தனியாய்விட்டு விடுகிறேன்.

## கான்பரென்ஸின் நடவடிக்கைகள்.

இதன்பிறகு கவர்னர் அவர்கள் போய்விட்டார். சங்கங்களின் பிரசிடெண்ட் ஆனரபில் மிஸ்டர். பி. ஸி. ல்யான் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். மிஸ்டர் ல்யான் அவர்கள், சென்ற கான்பரென்ஸுக்கு மிகுந்த உதவி செய்த ரெவரெண்ட் இ. எம். வீலர் இப்பொழுது வரக்கூடாமையைக் குறித்து விசனப்பட்டு, பிறகு சென்ற வருஷம் கோவாபரேடிவ் சங்கங்களின் மூலமாய் வங்காளத்தில் ஏற்பட்டுள்ள நன்மையையும் மேற்படி சங்கங்கள் எவ்வளவு தூரம் விருத்தியடைந்திருக்கிறதென்றும் கூறினார். இதன்பிறகு அக் கான்பரென்ஸில் விவாதத்திற்கு கொண்டு வரப்பட்ட அநேக விஷயங்களையும் அபிப்பிராயங்களையும் எடுத்துக்கொண்டு அவைகளைத் தீர்க்க அநேகம் சப் கமிட்டிகள் ஏற்படுத்தி ஒவ்வொரு கமிட்டியும் அதற்கான விஷயங்களை முடிவு செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்து அக்கான்பரென்ஸ் மறுதினம் முதல் ஆரம்பமாகி அதின் மறுநாளுடன் முடிவு பெறுமென்று வெளியிட்டார்.

மீட்டிங்கு ஏழு கம்மிட்டிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு கம்மிட்டி கிராமச் சங்கங்கள் நகரச் சங்கங்கள் கணக்குப் புத்தகங்கள் வைத்துக்கொள்ள வேண்டிய விதம் முத

வியவைகளைக் குறித்துப் பேசித் தீர்மானிக்க ஏற்பாடாயிற்று. இரண்டாவது ஸென்ட்ரல் பாங்கி நிருவாகம் அதற்கான சட்டச் சீர் திருத்தம் முதலியவற்றைப் பேசி பிரித்தது. மூன்றாவது, மாகாண பாங்கி அதன் அங்கங்கள் முதலியவற்றைப் பேசத் தலைப்பட்டது. நான்காவது கோவாபரேடிவ் டிப்பார்ட்மெண்டுக்கும் விவசாய டிபார்ட்மெண்டுக்கு முள்ள பாந்தவ்யத்தையும் டாக்கா பாடசாலைக்கும் இதர பாடசாலைகளுக்கும் சேர்ந்த கஷ்டங்களைப் பற்றியும் விசாரிக்கப் புகுந்தது. ஐந்தாவது மேனாட்டிலுள்ள கோவாபரேடிவ் தோரணைக்கும் இந்தியாவிலுள்ள தோரணைக்குமுள்ள வற்ற வித்தியாசம், மேற்படி சங்க நிருவாக கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ளக்கூடிய வழிகள் முதலியவைகளைப்பற்றி பேசப் புகுந்தது. ஆறாவதும் ஏழாவதும், தானிய பாங்கிகள் அர்பன் பாங்கிகள், அதற்கான ட்டங்கள், முதலியவைகளைப் பற்றித் தனித்தனியே முறையே பேச ஆரம்பித்தது.

## இரண்டாவது நாள்.

பிரசிடெண்டு ஆனரபில் மிஸ்டர் பி. ஸி. ல்யான் அவர்கள் பின்வரும் சாராம்சம் பொருந்திய விஷயங்களை உபந்நியசித்தார்.—

சென்ற சனிக்கிழமை யன்று ஹிஸ் எக்ஸலென்ஸி லார்டு கார்மிகேல்வர்கள் உங்கள் நன்முயற்சியைப்பற்றி மிக்கச் சிலாகித்துப் பேசியதினின்றும் நீங்கள் பாடுபடும் ஒவ்வொரு அம்சமும் கவர்ன்மெண்டாருக்கு நன்றாய்த் தெரிகின்றதென நிதர்சனமாகின்றது. அவர் ரிஜிஸ்ட்ராரது ரிபோர்ட்டினின்றும் எடுத்துக்காட்டிய ஒரு விசேஷாம் சத்தைப்பற்றி நான் திரும்பப் பேச விரும்புகிறேன். அதாவது எல்லா சங்கங்களையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்பது. இதனால் எல்லாச் சங்கங்களையும் ஒரே விதமான ஒழுங்கு பாட்டிற்குக் கொண்டுவரவேண்டு மென நாம் கிராமச் சங்கங்களினின்றும் பேசப்புகுவோம். கிராமச்சங்கங்கள் சொற்பத் தொகை மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டு அதனால் அநேக மனிதர்களுக் குதவுகின்றன. இவ்வித சங்கங்கள் ஒழுங்காய் ஆகேகம் ஸ்தாபனமான பிறகு ஸென்ட்ரல்பாங்கியின் ஆதீனத்தில் குட்படுத்தினோம் ஸென்ட்ரல்பாங்கி அதிகாரிகள் இச்சங்கங்களை அடிக்கடி மேற்பார்வையிட்டும் அதற்கு திரவிய உதவி செய்தும் காப்பாற்றுகிறார்கள். இப்போது ஸென்ட்ரல் பாங்கிகளைப் பார்வையிடவும் அதற்கு திரவிய உதவி செய்யவும் மாகாண பாங்கி ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது. இம்மாகாண பாங்கி விருத்தியடைந்தால் கவர்ன்மெண்டார் தம்மாலியன்ற உதவிசெய்து அடிக்கடி மேர்பார்வையிட்டும் தணிக்கை செய்தும் வருவார்கள்.

இந்த ஏற்பாட்டிற்கு ஒர்நற்சமயம் வாய்த்திருக்கிறது. என்னவெனில் இந்தியாவின் இதரபாகங்களில் ஏற்பட்டுள்ள பாங்கிகளின் முறிவால் ஜனங்களுக்கு பாங்கிகளின் மீதிருந்த நல்லபிப்பிராயமும் நம்பிக்கையும் முற்றிலும் போய்விட்டது. நீடித்துழைக்கும் கோவாபரேடிவ் சங்கங்களின்மீது அபிமானம் வைத்துதவிசெய்ய காலமேற்பட்டிருக்கிறது.

இப்பாங்கிகள் விவசாயிகளுக்கு மிக்க உதவியாயிருக்கும்படி செய்தல் மிக அத்தியாவசியமானது. இதைப்பற்றிய அபிப்பிராயத்தை முன்னரே ரிஜிஸ்ட்ரார்கள் பல கான்பிரன்ஸ்களில் வெளியிட்டிருக்கின்றனர். கிராமச் சங்கங்கள் மூலமாக கிராம நிருவாகமும் பலப்பட்டு கவர்ன்மெண்டாரும் விசேஷ கவனமும் செலுத்திப் பாடுபடுவோமாக.



## கமிட்டிகளின் தீர்மானங்கள்.

ஆனரபில் மிஸ்டர் பி. ஸி. ல்யான் அவர்களது உபந்நியாசம் முடிந்ததும் ஸப் கமிட்டிகளது தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு தீர்மானமும் சரிவர ஆமோதிக்கப்பட்டு கடைசியில் சில சீர்திருத்தப்பட்டும் சில அடியோடு நீக்கப்பட்டும் சில அப்படியே அங்கீகரிக்கப்பட்டும் முடிவுபெற்றன.

## மூன்றாவது நாள்.

மூன்றாவதுநாள் மீட்டிங்கு தினம் சரோத சரன் மித்தர் அவர்கள் மிஸ்டர் ல்யான் அவர்கள் வரும்வரையில் அக்கிராசனம் வகித்தார். பிறகு ல்யான் அவர்கள் அக்கிராசனம் வகித்து மீட்டிங்கை நடத்தினார். திரும்பவும் இன்றுதினம் ஸப் கமிட்டியார்களது தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன, கடைசியில் சில தீர்மானங்கள் இவ்வருஷ நடைப்பழக்கத்திற்கும் பெரும்பாலும் அடுத்த வருஷ கான்பரென்ஸ் விவாதத்திற்கும் விவரித்து முடிவு செய்யப்பட்டன.

## இரண்டாவது சென்னை மாகாண கோவாப்பரேடிவ் கான்பரென்ஸு.

1914 வருஷம் ஜனவரி மாதம் 3-ம் தேதி திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் விக்டோரியா ஹாலில் கனம் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் ஸி. எஸ். ஐ. இ. அவர்களது அக்கிராசனத்தின் கீழ் இரண்டாவது சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ் நடைபெற்றது. சென்னையிலிருந்தும் வெளியிடங்களிலிருந்தும் சுமார் 120 டெலிகேட்டுகள் வரையில் விஜயம் செய்திருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் திவான்பகதூர் கே. கிருஷ்ணசாமி ராவ், மிஸ்டர் டி. ரெங்காசாரியார், திவான்பகதூர் எம். ஆதிநாராயணய்யா, ராவ்பகதூர் என் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸர். வி. ஸி. தேசிகாசாரி, ராவ் பகதூர் என் பட்டாபிராம ராவ். ராவ்பகதூர் ஜெ தர்மரங்கராஜு மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டி, மிஸ்டர் வி. அருணாசல நாயுடு, மிஸ்டர் கெ. ஜி. வெங்கடசுப்பையர், திவான் பகதூர் எல். ஏ. கோவிந்தராகவய்யர், ஆனரபில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர், செல்லப்பள்ளி குமாரராஜா, ஆனரபில் திவான்பகதூர் எல் டி. ஸ்வாமிகண்ணுபிள்ளை (சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார்) ராவ்ஸாஹேப் கே. விஜயராகவாசாரியார் (அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்), மிஸ்டர் டி. டி. சாட்விக் (விவசாய இலாகா டைரக்டர்.)

## வரவேற்பு உபசரணை உபந்நியாசம்.

வரவேற்பு உபசரணைக்கமிட்டியின் சேர்மன் திவான்பகதூர் கெ. கிருஷ்ணஸ்வாமிராவ் ஸி. ஐ. இ. அவர்கள் பின்வருமாறு உபந்நியசித்தார்.

டெலிகேட்டுகளாய் விஜயஞ்செய்துள்ள கனவான்களே,—இரண்டாவது சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ் வரவேற்புக் கமிட்டியாரது தரபில் நான் உங்களை வந்தனத்துடன் வரவேற்கின்றேன். தமக்குள்ள வேலைகளையெல்லாம் விட்டு இந்த கான்பரென்ஸின் அக்கிராசனாதிபதியாயிருக்க மனமுவந்ததைப்பற்றி கனம் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்களுக்கு யாவரும் வந்தனமளிக்க கடமைப்பட்டிருக்கின்றனர். இந்த கான்பிரன்ஸிற்கு நமக்குதவிசெய்து ஆதரிக்கக்கூடிய கனம் ஐயரவர்களைத் தவிர வேறு தகுந்த யோக்கியதை யுள்ளவர்கள் நமக்குக் கிடைக்கக்கூடியது துர்லபம்;

இக்கான்பரென்ஸில் விவரிக்கக்கூடிய முக்கிய அம்சமென்னவெனில், கவர்ன்மெண்டார் சங்கங்களை மேற்பார்வையிடுவதும் சீர் திருத்துவதும் அவசியந்தானா, அவசியமானால் அவர்களுக்குண்டாகும் செலவை சங்கங்கள் கட்டிக்கொடுக்குமாவென்பது. இந்த பிரஸ்தாபம் 10 வருஷகாலமாயிருந்து வருகிறது. சங்கங்களின் க்ஷேமகரம் யாவும் கவர்ன்மெண்டாருடைய நன்முயற்சியாலாகும். இந்தியாவின் தற்கால ஸ்திதியையும் அநேக ஜனங்கள் படிப்பு வாசனையே தெரியாதவர்களாயிருப்பதையும் யோஜித்துப் பார்க்கும்பொழுது நாம் கவர்ன்மெண்டாருடைய உதவியின்றி எதையும் தனியே கைக்கொள்ள அசக்தர்களென விளங்கும். சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து கவர்ன்மெண்டாருக்கு மேற்படி சங்கங்களைப் பார்வையிடுவதனாலேற்படும் செலவைக் கட்டிக்கொடுத்து வரும்படியாம். தமது லாபத்தில் 100-க்கு 5-பங்கு வீதம் கொடுக்க கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்துவருவதாய் ஒருபிரஸ்தாபம். இந்த வீதமானது இன்கம்டாக்ஸ் வரியைவிட இரட்டிப்பு மடங்கு அதிகமாயிருப்பதைப் பார்க்க பயமுண்டாகிறது. சில வருஷங்களுக்குப் பிறகு இது அவசியமாயிருந்தாலுமிருக்குமேயொழிய இப்போது இவ்வித பளுவைப்பொறுக்க சங்கங்களுக்கு சக்தியிருக்குமென்பதாய் எனக்குத் தோற்றவில்லை. இவ்வித ஏற்பாடு உடனே சாங்க்ஷனாகி விட்டால் இந்தியா கவர்ன்மெண்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள இன்கம்டாக்ஸ் வரி நிலுவை, ஸ்டாம்பு வரி நிலுவை பத்திரங்கள் ரிஜிஸ்தர் நிலுவை முதலிய ஸ்வதந்திரங்களுக்கு பங்கமேற்படுத்துவதாகும். படிப்பறியா கிராம ஜனங்கள் இந்த புதிய வரியைச் கண்டதும் கவர்ன்மெண்டார்மீது தப்பபிப்பிராயம் கொள்ளவும் காரணமேற்படும். கோவாபரேடிவ் நோக்கமானது ஜனங்களுக்குள் செவ்வனே வேரூன்றி ஒவ்வொரு ஜில்லா, தாலூக்கா கிராம மூலைகளிலும் நிலைபெறுமானால் யாம் எடுத்துச் சொல்லவேண்டிய சிரமமேயின்றி ஜனங்கள் தாங்களே உதவிபுரிய முன்வருவார்கள். இந்த வதந்திக்கு ஆதாரமிருக்குமாயின், இவ்வெண்ணம் தீர்மானமாகுமுன் சங்கங்கள் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுகின்றன.

இந்த மாகாணத்தில் கோவாபரேடிவ் சங்கங்கள் இந்தியாவின் மற்ற பாகங்களிலுள்ள கோவாபரேடிவ் சங்கங்களைவிட குறைந்த வட்டி வீதத்திற்கு விவசாயிகளுக்கு திரவிய முபகாரம் செய்துவருகின்றன. ஆனால் அவைகள் விவசாய விருத்தியிலும் சரக்கு விற்பனையிலும் விசேஷ ஊக்கங்கொண்டுழைக்கவில்லை. இந்த விஷயத்தில் மதராஸ் பம்பாய் மாகாணத்தைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டுவது பல. பம்பாயில் 29 கரும்பு பயிரிடும் சங்கங்களும் 2 எரு விற்பனை சங்கங்களும் 12 விதை விற்பனை சங்கங்களும் 24 நெசவுச் சங்கங்களும் இருக்கின்றன. தேச நன்மையையும் நம் ஜன நன்மையையும் நாடி மிகவுழைக்கும் திவான்பகதூர் எம். ஆதிநாராயணையா காருவும் மிஸ்டர் என். பட்டாபி ராமராவ் பந்துலுகாருவும் இம்மாகாண பற்பல கோவாபரேடிவ் சங்கங்களிடமும் சென்று அநேக மகாஜனங்கள் முன்பாக சமீபத்தில் விவசாயச் சங்கங்கள் ஸ்தாபனம் செய்யவும் விற்பனைச் சங்கங்கள் உற்பத்திச் சங்கங்கள் ஏற்படுத்தவும் உபந்நியாசம் செய்து வந்தனர். இவர்கள் விஜயஞ்செய்த ஒவ்வொரு விடத்தும் ஜனங்கள் குதூகலமாய் வரவேற்றுபசாரஞ் செய்தனர். இவர்கள் கஷ்டப்பட்டதின் பலன் ஆனால் சீக்கிரத்தில் கிடைக்கக்கூடியதல்ல. அவர்களுக்கு யாம் வந்தனம் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

1912-13 கோவாபரேடிவ் வருஷமானது இதற்கு முந்திய வருஷங்களைவிட (புதிய சங்கங்கள் ஏற்படுவதில்) மிகவும் பிந்திவிட்டது. கோவாபரேடிவ் அங்கஸ்தாபனத்தில் முதன்மையாயுள்ள செங்கற்பட்டு ஜில்லாவையே யாம் ஆதாரமாய் எடுத்துக்



கொண்டு பேசின் ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது 4,800 சங்கங்கள் இருக்கவேண்டும்: ஆனால் 1,100 சங்கங்கள்தானிருக்கின்றன. ஜெர்மனியை ஆதாரமாகக்கொண்டு பேசின் ஆறுகோடியே இருபது லக்ஷம் ஜனத்தொகையுள்ள அந்த தேசத்தில் 20,000 சங்கங்களிருக்கின்றன. இந்த ரீதியில் நான்கு கோடியே இரண்டு லக்ஷம் ஜனங்களுள்ள மதராஸில் 14,000 சங்கங்களிருக்க வேண்டும். இவைகளெலாம் யாம் செய்யவேண்டிய வேலையின் அளவாகும். இதனால் நம்முடைய மாகாணத்திலும் இவ்வளவு சங்கங்கள் விரைவாய் ஏற்படவேண்டுமென்று யான் அபிப்பிராயப்படவில்லை. மெதுவாயும் ஊர்ஜிதமாயும் சங்கங்கள் ஏற்படுவது சிலாக்கியந்தான். இவ்வளவெல்லாம் யான் கூறவந்ததற்குக் காரணம் 1912-13 கோவாபரேடிவ் வருஷத்தை நாம் சங்காபிவிருத்தியின் முக்கிய வருஷமாய் நாம் கவனிக்கக்கூடாது. ஒவ்வொரு வருஷமும் தன் பிந்திய வருஷத்தைவிட சில சிலாக்கியமா முற்போக்கைத் தெரிவிக்கக்கூடியதாயிருக்கவேண்டும்.

1918-ம் வருஷம் டிசம்பர் மாதம் இரண்டாம் தேதி வெளிவந்துள்ள போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சட்டக்குறிப்புகள் கவனிக்கத்தக்கவை. அவைகள் பிற்கால கோவாபரேடிவ் சங்கங்களின் க்ஷேமத்தை மிக்கவும் பொருத்தவை. அச் சட்டங்களைக் குறித்து நாம் நமது எண்ணங்களை வெளியிடவேண்டியத காலம் நெருங்கிவிட்டது. இனி நாம் தாமதிக்கக் கூடாது. இந்த கான்பரென்ஸார் இந்தச் சட்டங்களை கவனிப்பார்களாக. இதைத்தவிர இக்கோவாபரேடிவ் விஷயத்தில் விசேஷ ஞானமுள்ள மகான்கள் அனுப்பியுள்ள விஷயங்களையும் படித்துக் காட்டுதலவசியம். அச்சிடப்பட்டுள்ள பிரதிகள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கவர்ன்மெண்டார் சட்டக்குறிப்புகளைப் பற்றியதாயிருக்கின்றன.

உங்களுடைய காலத்தில் மிகுதியான பாகத்தை நான் எடுத்துக்கொண்டு விட்டதாய்த் தோற்றுகிறது, கனம் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்களது காருண்ய ஆதரவின்கீழ் இம்மாகாண இரண்டாவது கோவாபரேடிவ் கான்பரென்ஸ் செவ்வையாய் நடைபெறும்படியாய் நான் கடவுளைப் பிரார்த்தனை செய்கிறேன்.

## ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி ஐயர்.

ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி ஐயர் அவர்கள் பிறகு பின்வருமாறு உபந்நியசித்தார்:—

கனவான்களே, இன்று மாலை இங்கு நடைபெறும் கான்பிரன்ஸின் அக்கிராசனாதிபதியாய்த் தேர்ந்தெடுத்து என்னைக் கௌரவப் படுத்தியதற்கு நான் என தன்பார்ந்த வந்தனத்தை யளிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். மற்ற மாகாணங்களைக் காட்டிலும் மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ் கூட்டுவதில் சிற்சில விஷயங்களில் நாம் பின்னடைந்திருந்த போதிலும் சென்ற கான்பரென்ஸின் பலனாய் இவ்வருஷமும் நாம் கான்பரென்ஸ் கூடும்படி ஏற்பட்டதைக் குறித்து நாம் திருப்தியடையவேண்டியதே. வேறு சில மாகாணங்களில் கான்பரென்ஸ் கூடுவதும் அதற்காக வேண்டிய காரியங்கள் செய்வதும் ரிஜிஸ்ட்ரார்களுடைய கைங்கரியமாயிருந்தன. இங்கு மாகாண கான்பரென்ஸ் ஏற்பட்டதன் காரணம் 1912 ம் வருஷம் கூடிய செங்கற்பட்டு கோவாபரேடிவ் கான்பரென்ஸாலேற்பட்டதாகும். இக்கான்பரென்ஸின் தோரணையும் ஜனங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உற்சாகமும் இது ஸ்திரமாய் நடைபெறுமென்ற நல்ல நம்பிக்கை நமக்கேற்படுகிறது. புதிய சங்கங்களைத்

படுத்தும் விஷயத்தில், 1912–13 கோவாபரேடிவ் வருஷமானது அதற்கு முந்திய வருஷங்களைக் காட்டிலும் மிகவும் பின்னடைந்திருப்பதாய் வரவேற்பு உபசாரணைக் கமிட்டி சேர்மன் அவர்கள் விசனித்துக் கூறினர். அவர் கூறியதினின்றும், ஐரோப்பா தேசங்களில் ஏற்பட்டிருக்கும் முற்போக்கையும் நாம் இன்னும் விருத்தி யடையவேண்டிய அம்சத்தைக் குறித்தும் ஒப்பிட்டுப் பார்த்ததினின்றும் சகஜமாய் எவருக்கும் ஏற்படக்கூடிய அதிருப்தி யென்றே கூறலாம். புதிதாய் சங்கங்கள் ஸ்தாபிக்கும் விஷயத்தில் 1912–13 கோவாபரேடிவ் வருஷமானது ஆதாரமான வருஷமாக கருதப்பட மாட்டாதென்பதை நாம் நிச்சயமாய்க் கூறவோம். இம்மாகாண ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் கோவாபரேடிவ் சங்கங்கள் ஸ்தாபிப்பதில் ஜனங்களுக்குள்ள அவ்வளவு ஊக்கம் கவர்ன்மெண்டாரிடமு மிருக்கின்றது. ஒவ்வொரு யந்திரத்தையும் இடையிடையே பிரித்து சுத்தஞ்செய்து எண்ணெயிட்டுக் கஷ்டமின்றி ஓடக்கூடியதாய்ச் செய்யவேண்டுவது அவசியம்போல் சங்கங்கள் ஏற்பாட்டிலும் அடிக்கடி அவைகளைச் சோதனை செய்து ஒழுங்கு படுத்துவது அவசியமாகும்.

1913-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதியில் 881 சங்கங்கள் கையில் ரிஜிஸ்ட்டர் செய்யப்படாமல் நிலுவை வைக்கப்பட்டதன் காரணத்தை சென்ற சட்டச்சபை மீட்டிங்கில் ஆனரபில் ஸர் ஜான் அட்கின்ஸன் அவர்கள் கூறியிருக்கின்றனர். சங்கங்களுக்குள் ஏற்பட்டிருந்த ஒழுங்கு ஹீனங்களையும் குற்றங்களையும் களைந்து சீர்படுத்துவதில் ரிஜிஸ்ட்ராரும் அவருடைய சிப்பந்திகளும் தங்களுடைய காலங்களில் பெரும் பாகத்தைச் செலவிட்டிருக்கின்றனர். ரிஜிஸ்டர் செய்து கொள்ளும்படி அனுப்பப்பட்ட மனுக்கள் திருப்திகரமா யில்லாததனால்த் தான் ரிஜிஸ்ட்டர் செய்வதில் தடையேற்பட்டிருக்கிறது. ரிஜிஸ்ட்ராருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஜாஸ்தியான சிப்பந்திகளாலும் அதிக ஸர்க்கிலின் விஸ்தீரணக் குறைவாலும் மிகுந்த சங்கங்கள் 1913-14-ல் ரிஜிட்டராகு மென்று கருத இடமுண்டு மற்ற மாகாணங்களிலும் அதே வருஷத்தில் ரிஜிஸ்ட்டரான சங்கங்களின் சங்கியை குறைந்திருப்பதைப் பார்க்க நமக்கு ஒரு ஆறுதலேற்படும். பர்மாவிலும் வங்காளத்திலும் அதிகாரிகள் அங்கிருக்கும் சங்கங்களை சீர்திருத்தி ஒன்றுசேர்ப்பதில் தங்கள் கவனத்தைச செலுத்தி வந்தார்கள்.

சென்ற வருஷத்தின் ஐக்கிய இயக்கத்தின் ஏற்றத்தை கவனிக்கப்புகின் அதிருப்திக்கு கொஞ்சமும் இடமில்லை. 1913-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதியில் கோவாபரெடிவ் சங்கங்களின் மொத்த மூலதனம் ரூபா 95 லக்ஷ சொச்சம்; ஆனால் 1911–12 வருஷத்திலோ ரூபா 74-லக்ஷம்தானிருந்தன. 1911-12 வருஷத்தில் விவசாயச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் நூற்றுக்கு 51-49 வீதம் அதிகரித்தது. 1912-18 வருஷத்திலோ அக்கடன் நூற்றுக்கு 56-02 வீதம் ஆக அதிகரித்திருக்கிறது. விவசாயச் சங்கங்களின் மொத்த வரும்படிக்கு அசல் லாபம் நூற்றுக்கு 2-84 விகிதம் அதிகரித்திருக்கிறது. ஸெண்ட்ரல் பாங்கிகளின் அபிவிருத்தி, மொத்தத்தில் இரண்டே சங்கங்கள் அதிகரித்திருந்தபோதிலும், திருப்தியடையத்தகுந்தது பாங்கி மெம்பர்களுக்குச் சார்ந்துள்ள சங்கங்களை மேற்பார்வை யிடுவதற்கு அவைகளுக்குச் சக்தியுண்டாகுமென்றும் கருதப்படுகிறது. கோவாபரேடிவ் துறையில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் தவிர இதர சங்கங்கள் ஜொலிக்க கூடிய தன்மைக்கு இன்னும் வரவில்லை. திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யாகாரு அவர்களது நன்முயற்சியாலும் மிஸ்டர் என். பட்டாபி ராமராவ் அவர்களது நன்முயற்சியாலும் ஜனங்களுக்குள் பரவியிருக்கும் உணர்ச்சியின் பலனாகவும் இனி கோவாபரேடிவ் துறையில் விவசாயச் சங்கங்கள் போன்ற பல சங்கங்கள் ஏற்படுமென்று கருதுகிறோம். மெம்பர்



களது கூலியை யுயர்த்தியும் தரகுக்காரர்களின் லாபத்தை நீக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள மதராஸ் உப்புப் பொதிக்காரர்கள் சங்கம் சேலம் தோட்டிகள் சங்கம், முதலிய இவைபோன்ற பல சங்கங்கள் ஏற்படுமென்றே கருதப்படுகிறது. சென்ற கோவாபரேடிவ் வருஷத்தில் கோயம்பத்தூர் கோவாபரேடிவ் கட்டடச் சங்கம் ஏற்படுத்தப்பட்டதைக் கேட்க எனக்கு மிக்க உவப்பை விளைவிக்கின்றது. கோயம்பத்தூரைவிட ஜன நெருக்கமுள்ள மதுரை போன்ற அநேக நகரங்களிருக்கின்றன. இவ்விஷயங்கள் விசாரிக்க வேண்டியது மிக்க அவசியம். அயல் தேசங்களில் கோவாபரேடிவ் முயற்சியால் நகரவிசாரிப்பு வெகு ஒழுங்காய் நடைபெற்று சீர்பெற்றிருப்பது போல் இம்மாகாணத்திலும் இக்கட்டடச் சங்கங்களின் நன்முயற்சியால் நன்மையுண்டாகு மென்றே யாம் கருதுவோம்.

வட ஜில்லாக்களாகிய கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி ஜில்லாக்களிலும் பெல்லாரி, கடப்பை, கர்நூல் முதலியஜில்லாக்களிலும் திருப்திகரமாய் கோவாபரேடிவ் சங்கங்கள் ஏற்படவில்லை. ரிஜிஸ்ட்ராருக்கும் அவரது சிப்பந்திகளுக்கும் உதவியாய் கௌரவார்த்தமாய் உழைக்கக்கூடிய நண்பர்கள் முன்வந்து கூடிய சீக்கிரத்தில் அங்கு பல கோவாபரேடிவ் சங்கங்கள் ஏற்படும்படி உழைப்பார்களென்று நான் கருதுகிறேன்.

திவான் பகதூர் கெ. கிருஷ்ணஸ்வாமி ராவ் அவர்களது கருணையால் இக்காண்பரென்ஸில் தீர்மானத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் விஷயங்களடங்கிய குறிப்பொன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. அவைகளில் ஒரு தீர்மானம் சங்கங்களை தணிக்கை செய்வதா லேற்படும் செலவைக்கட்டிக் கொள்ளும்படி சங்கங்களுக்குத் தணிக்கைத் தீர்வை விதித்தல். இவ்வேற்பாடு கவர்ன்மெண்டாருடைய யோஜனையிருக்கிறது இதன் முடிவு யாதாமோ அறியேன். இதைப்பற்றிய ஒரு வகைத் தீர்மானமேற்படு முன் இக்காண்பரென்ஸின் அபிப்பிராயத்தை உத்தேசித்து முடிவு செய்வார்களென்பதற்கு ஆக்ஷேபணையில்லை.

மற்றொரு தீர்மானத்தின் அம்சமாவது நகரச் சீர்திருத்தம் முதலிய லோகல் வியவகாரங்களில் பொதுப் பணத்தை செலவிடுவது கோவாபரேடிவ் பஞ்சாயத்தார்களது ஆதீனத்திலிருக்க வேண்டுமென்பதை கவர்ன்மெண்டார் யோஜனை செய்து அநுகூலம் செய்ய வேண்டுமென்பது. கிராமபஞ்சாயத்து ஏற்படுத்துவதைக் குறித்து கவர்ன்மெண்டார் யோஜனை செய்து வருகின்றனர். இது நிலைபெருமானால் இவ் யோஜனை பலஹீனமடையுமென்று கருதுகிறேன். ஆனால் கோவாபரேடிவ் சங்கங்கள் ஜனங்களுக்குள் சுய ஆட்சிமையை விருத்தி செய்வதில் முக்கிய உதவியா யிருக்கும். கவர்ன்மெண்டார் உங்கள் ஆலோசனையைப்பற்றியும் யோஜனை செய்வார்கள்.

இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் அநேக தீர்மானங்களைப் பற்றி பிரத்தியேகமாய் ஒவ்வொன்றிற்கும் என்னபிப்பிராயத்தை இச் சமயத்தில் வெளியிட எனக்கு விருப்பமில்லை. சென்ற வருஷம் ஆனரபில் ஸர் ஜான் அட்கின்ஸன் அவர்கள் கூறினது போல் நாங்கள் இங்கு நடைபெறும் வாதங்களைக் கவனித்து ஒருவித அபிப்பிராயம் இதைப்பற்றி கற்றறிந்துகொள்ள வந்திருக்கின்றோம், கவர்ன்மெண்டார் இக்காண்பரென்ஸாரால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானங்களில் சிலவற்றை அங்கீகரிக்க மறுப்பாராயின் அவ்விதம் மறுப்பதின் காரணம் கோவாபரேடிவ் துறையில் அபிமானமின்மையாலென்று எண்ணற்க.

## சங்கங்களின் ரிப்போர்ட்டுகள்.

சில நல்ல சங்கங்கள் கான்பரென்ஸில் தமது ரிப்போர்ட்டுகளை வாசித்தன. அவைகளில் முக்கியமானவை 1. சேலம் தோட்டிகள் சங்கம் 2. மதுரை ஜில்லா கள்ளர்கள் சங்கம் 3. கீழச்சேரி சங்கம் 4. மங்கலம் சங்கம்.

இதன் பிறகு தீர்மானங்களைப்பற்றி வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

## தணிக்கைவரி விதித்தல்.

மிஸ்டர் வி. வி. கங்காதர சாஸ்திரியார் அவர்கள் முதலில் எழுந்து கவர்ன்மெண்டார் கோவாபரேடிவ் சங்கங்கள் மீது தணிக்கை வரி விதித்தல் இப்பொழுது பொருந்தாது என்றும் இதனால் அவைகளுக்கு பலக்குறைவு அதிகமாகுமென்றும் தீர்மானத்தைக் கூறினார். காஞ்சிபுரம் மிஸ்டர் பி. ராமச்சந்திர சாஸ்திரி அவர்களும் ராவ் ஸாஹேப் வி. ஏ. பார்த்தசாரதி முதலியார் அவர்களும் இதனை ஆதரித்துப் பேசினார். இதன்பிறகு ரிஜிஸ்ட்ரார் கனம் திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக் கண்ணுபிள்ளை அவர்கள், வேறு மாகாணங்களில் இதைப்பற்றி என்ன ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றதென்பதை விளக்கிக் காட்டவேண்டிக் கொள்ளப்பட்டனர். மிஸ்டர் பிள்ளை அவர்கள் இதர மாகாணங்களில் தணிக்கை வரியென்று பிரத்தியேகமான வரி ஏற்படுத்தாவிட்டாலும் தணிக்கைச் செலவுக்குச் சில விதங்களில் கட்டிக் கொடுத்து வருகின்றனவென்றும் இது விசேஷமாய் ஐக்கிய மாகாணங்களில் நடைபெற்று வருகின்றதென்றும் கூறினார். கடைசியில் இத்தீர்மானம் ஐக்கிய பத்தியமாய் அங்கீகரிக்கப்பட்டது.

அடியிற்கண்ட தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன :—

(1) சங்கங்களை, மேல்விசாரணை, பரிசோதனை, தணிக்கை, முதலியவைகள் செய்ய, ஸென்ட்ரல் பாங்கிங் யூனியன்கள் ஏற்படுவதற்குத் தகுந்தகாலம் வந்துவிட்டது. அவ்யூனியன்களின் பங்குகளை விசேஷமாய் சங்கங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(2) கோவாப்ரேடிவ் பஞ்சாயத்தார் வசத்தில் சுகாதாரம், படிப்பு, தண்ணீர்பாய்ச்சுதல், முதலிய கிராமாந்திர கைங்கரியங்களில் உழைத்துச் செலவுசெய்ய கிராமம்பொதுப்பணத்தை ஒப்புவிக்க, கவர்ன்மெண்டாரை இக்கான்பரென்ஸ் வேண்டுகிறது.

(3) சங்கங்கள் அடையவேண்டிய டிக்ரித்தொகைக்கு, டிக்ரியான தேதிமுதல், சங்கங்கள் நஷ்டமடையாதபடி, தகுந்தபட்டி கோர்ட்டார் உத்திரவிடும்படி இக்கான்பரென்ஸு அபிப்பிராயப்படுகிறது.

## இரண்டாவது நாள் மீட்டிங்கு.

மறுநாட் காலையிலும் கனம் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்களது அக்கிராசனத்தின் கீழ் கான்பரென்ஸ் நடைபெற்றது.

சில சட்டக்குறிப்புகளைப்பற்றி விவாதிக்கப்பட்டது. அவைகளுள் முக்கியமானது ஜனோபகாரப் பொது நிதியைப்பற்றியதாகும். ஜனோபகாரப் பொது நிதியைச் செல



விடுவதில் சிற்சில குறிப்பு விதிகள் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கின்றதையும் அது எவ்வாறு சங்கங்களுக்கு இடைஞ்சலாயிருக்குமென்றும் கூறப்பட்டது. ரிஜிஸ்ட்ராரவர்கள் பிறகு எழுந்து கவர்ன்மெண்டார் சங்கங்கள் விருத்தியைக் குறித்து எவ்வளவோ அநுகூலங்கள் ஏற்படுத்தினதினால்தானுண்டான இந்த ஏராளமான நிதியைக் குறித்தும் சில விதிகளேற்படுத்த எந்த விதத்திலும் அநுமதி பெற்றவர்கள் என்று கூறினார். இதன்பிறகு க்ஷேமநிதி, டிவிடெண்டு, சங்கங்களை ரிஜிஸ்டர் செய்தல், பள்ளிக்கூடங்களில் கோவாபரேஷன், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், விவசாயத்தில் கோவாபரேஷன் முதலியவைகள் விவாதிக்கப்பட்டன.

அங்கீகாரம் செய்யப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு :—

(1) டிசம்பரம் மாதம் 2-ம் தேதியில் பிரசுரம் செய்த போர்ட்டு ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் தெரிவித்த சட்ட விதிகளின் குறிப்பின்படி, பைலாக்களின் குறிப்பை ரெஜிஸ்ட்ரார் அங்கீகரித்தபின், அவர் கூறிய சீர்திருத்தங்கள் நீங்கலான பாக்கியுள்ளவைகளை மறுபடி பொது ஜனசபையின் அபிப்பிராயத்திற்கு அனுப்புவது அனாவசியமென்று இந்த கான்பரென்ஸு நினைக்கிறது.

(2) குறிப்பு விதிகளிற் சொல்லியபடி, சங்கங்கள் தாங்கள் பிரத்தியேகமாய் பொது நற்காரியங்களுக்கென்று ஒதுக்கிவைக்கும் லாபத்தொகையின் பகுதியானது, எந்தப் பிரத்தியேக காரியங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றதென குறிப்பிட்டுச் சொல்ல கட்டாயப்படுத்தக்கூடாது.

(3) குறிப்பு விதிகளிற் கூறியபடி, பொறுப்பு வரையறுக்காச் சங்கங்களின் மெம்பர்கள் தாங்கள் செலுத்திய பங்கு முதலுக்கு வட்டியும், டிவிடெண்டும் அடையாவண்ணம் ஏற்பாடு செய்யக்கூடாது.

(4) பொறுப்பு நிதிகளை (Trust Funds) ஐக்கிய நாணயச் சங்கங்களில் டிபாஸிட்டுச் செய்யும்படி, இந்த டிரஸ்ட்டு ஆக்ட்டை சீர்திருத்த வேண்டுமென்றும், அதுவரையில் அப்படி டிபாஸிட்டு செய்யும் வண்ணம் ஹைகோர்ட்டார் இவ்விஷயமாய் சட்டம் ஒன்று உண்டாக்கும்படி கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொள்ளுகிறது.

(5) இந்த ராஜதானியிலுள்ள எலிமெண்டரி பள்ளிக்கூடங்களிற் சொல்லிக்கொடுக்கும் பாடங்களில், ஐக்கிய முயற்சி விஷயமாய் பாடம் ஒன்று சேர்க்க வித்தியா இலாகா டைரெக்டரவர்களை இந்த கான்பரென்ஸு கேட்டுக் கொள்ளுகிறது.

(6) ரூ 35-க்கு மேற் சம்பளம் வாங்கும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கோவாப்ரேடிவ் சங்கங்களிற் சேர்ந்து, உழைத்து, வேலை செய்யக்கூடாதென்ற சட்டத்தை ரத்து செய்ய கான்பரென்ஸு விரும்புகிறது.

(7) ஐக்கிய முயற்சி விவசாயச் சங்கங்களும், கவர்ன்மெண்டால் பணம் உதவப்பட்ட பாற்சாலைகளும் ஏற்படவேண்டுமென்று, கான்பரென்ஸு அபிப்பிராயப்படுகிறது.

## மதராஸ் ப்ரோவின்ஷியல் யூனியன் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

பிறகு ஆனரபில் மிஸ்டர் எல். டி. ஸ்வாமிக் கண்ணுபிள்ளை, கோவாபரேடிவ் சங்கங்களின் ரிஜிஸ்ட்ராரவர்கள் மதராஸ் ப்ரொவின்ஷியல் யூனியன் ரிஜிஸ்தர் செய்யப்பட்டதைக் குறித்துப்பேசினர். திவான்பகதூர் எம். ஆதிநாராயணய்யா அவர்கள் கான்பரன்ஸார் தரபில் இதைப்பற்றி ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு மிக்க வந்தனமளித்தார்.

மிஸ்டர் வி. குருஸ்வாமி சாஸ்திரியார் பிறகு கோவாபரேடிவ் சங்கங்களுள்ள விடங்களில் கட்டாயப் படிப்பிருக்க வேண்டுமென்றும் மிஸ்டர் கெ. ராமஸ்வாமி ஐயர் ஸெண்ட்ரல் பாங்கிகள் தமது வரவு கடன்பாபத்தில் ஏற்படுத்தியுள்ள 6-மாதகால வரையறையை ஒருவருஷத்திற்கு நீடித்து வைக்கவும் கூறினர். இதன் பின்னர் திவான் பகதூர். எல். ஏ. கோவிந்தராகவய்யர் அவர்கள் கனம் மிஸ்டர் பி எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள் அக்கிராசனாதிபதியாய் அமர்ந்து உதவி புரிந்ததைச் சிலாகித்துக் கூறி வந்தன மளித்தனர்.

## பிரசிடேண்டு.

ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி ஐயர் அவர்கள் கான்பரென்ஸை முடிவுக்குக் கொண்டுவரும்பொழுது பின்வருமாறு கூறினர்.

இக்கான்பரென்ஸானது திருப்திகரமாய் நடைபெற்றது. மெம்பர்கள் யாவரும் கோவாபரேடிவ் விஷயங்களைக்குறித்த சில சந்தேகங்களையும் அச்சந்தேகங்களை நிர்வகிக்க அவசியமாய் வேண்டிய முறைகளைப் பற்றியும் செவ்வனே விவகரித்துத் தெரிந்துகொண்டனர். விவாதங்களைக்கேட்டு மிக்க சந்தோஷ மடைந்தேன். இவைகளெல்லாம் வீண்போகாது ஏதாவது பலனுண்டாகுமென்றே கருதுகின்றேன். கவர்ன்மெண்டாரும் இத் தீர்மானங்களைச் செவ்வனே ஆலோசித்து உதவி புரிவார்கள். முக்கிய ஜமீந்தார்களில் ஒருவராகும் செல்லப்பல்லி ஜமீந்தார் அவர்களும் கோவாபரேஷன் விஷயத்தில் விசேஷ அக்கறைகொண்டுழைப்பதைக் காண மிக்க சந்தோஷமுண்டாகின்றது. ஜமீந்தார் நாடுகளில் கோவாபரேஷன் விஷயமே முற்றிலும் மறைந்திருக்கிறது. அங்கு விசேஷமாய் அக்கறையெடுத்துழைக்க வேண்டியது அவசியம். இந்த ஜமீந்தார் விஜயத்தால் அவ்விஷயத்தில் அதிக பயமில்லையென்று கூறலாகும். திவான் பகதூர் ராஜரத்தினமுதலியார் அவர்கள் இந்த மாகாணத்தில் 33,000 கிராமங்கள் இருக்கின்றனவென்றும் இம்மட்டோடு சங்காபிவிருத்தி நில்லாமல் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு சங்கம் ஏற்படுகிறவரையில் உழைக்கவேண்டு மென்றும் கூறினர். ஏன் அவர் ஜமீந்தாரி கிராமங்களை முற்றிலும் விட்டொழித்துப் பேசினரோ அறியேன். கவர்ன்மெண்ட் கிராமங்களிலுள்ள ஒவ்வொரு ஜனங்களுக்கும் கோவாபரேஷன் முறைகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் ஜமீந்தாரி கிராமவாசிகளுக்கும் உண்டு. கனம் செல்லப்பல்லி குமாரராஜா அவர்கள் இக் கான்பரென்சுக்கு விஜயஞ் செய்ததின் பலனாய் ஜமீந்தாரி கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் சென்று கோவாபரேடிவ் விஷயத்தைக் குறித்துப் பேசி ஆங்குள்ள ஜனங்களுக்கு ஐக்கிய முறையில் ஞானதீபத்தை ஏற்றுவாரெனக் கருதுகி



றேன். இதர ஜமீந்தார்களும் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் பெற்று விளங்குவதாலும் அவர்கள் ஜனங்கள்மீது அன்பும் அவர்கள் க்ஷேமலாபத்தைப்பற்றிப் பாடுபடவும் விசேஷ பாத்தியப்பட்டவர்களானபடியாலும் இனி ஜமீந்தாரி கிராமங்களில் இதனால் விசேஷ நன்மை ஏற்படும். சென்ற வருஷம் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் மதராஸ் பிரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் ஆரம்பமாகி விட்டதைக் காண மிக்க சந்தோஷமடைந்தேன். இனி இம்மாகாணத்தில் கோவாபரேஷன் சம்பந்தமான பல சங்கங்கள் உற்பத்தியாக அவைகள் நிரந்தரமாய் எந்நாளும் நடைபெறும்படியான காலம் நெருங்கிவிட்டதென்று இதனாற் தெரிகிறது. எந்த நோக்கங்களைக் கொண்டு மேற்படி யூனியன் ஏற்படுத்தப்பட்டதோ அவைகளெல்லாம் சித்திபெறும்படி மிக்கக் கவலையுடனும் பொறுமையுடனும் வேலை செய்தால் சகல காரியமும் கைகூடுமென்பதற்கு ஆக்ஷேபணையில்லை.

---

அநேக உபந்நியாசகர்கள் பேசிய விஷயங்களில் முக்கியமான படிப்பு விஷயம் நாம் இப்போது கவனிக்கவேண்டிய விஷயங்களுள் ஒன்றாகும். எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் கூட்டுறவு நூல் என்பதைக் கட்டாயப் படிப்பாக ஏற்படுத்தும்படி கல்வியிலாகா டைரக்டர் அவர்களுக்கு எழுதிக்கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நேற்று ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானம் அவசியமானதென்று நமக்குத் தோன்றினபோதிலும் அப்படிப்பை எலிமெண்டரி வகுப்பிலேயே வைக்கத் தகுந்ததா என்பதை யாம் சற்று ஆலோசிக்க வேண்டியதாகும். விவசாய இலாகாதாரரும் சுகாதார இலாகாதாரரும், கூட்டுறவு இலாகாதாரரும் எலிமெண்டரிபள்ளிக்கூடங்களில் தம் தம் விஷயங்களைப் பற்றிய நூல்களை பிள்ளைகளுக்குப் போதிப்பது அவசியமென்று கூறுகிறீர்கள். பிள்ளைகளின் வயதையும் அவர்கள் புத்தி சாதுர்யத்தையும் அவர்கள் கற்கவேண்டிய விஷயங்களையும் அவகாசத்தையும் பற்றி நாம் அளவிடும்போது ஒன்றும் நிறைவேறக் கூடுமானதாய்த் தோற்றவில்லை. இவைகளை மேல்வகுப்புகளின் பாடமாய் நடத்தினால் மிக்க யோக்கியமானதா யிருக்குமெனத் தோற்றுகின்றது. பிள்ளைகளுக்கு எவ்விதமாய் எளிதாக இந்த அம்சத்தைக் குறித்துப் போதிக்க வேண்டுமென கல்வியிலாகா டைரெக்டருக்குச் சொல்லுதின்முன்பு திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலைப்போன்ற பள்ளிக்கூடமொன்றில் திருஷ்டாந்தமாக ஒவ்வொருவகுப்பிலும் வைத்து நடத்தி எந்தவகுப்பு மாணவர்கள் வெகு சுலபமாய் மேற்படி விஷயங்களை கிரகிக்கக்கூடிய சக்தியுள்ளவர்களாயிருக்கின்றனரென்று ஆய்ந்தறியலாம். இவ்விதம் பாடப்பட்டி ஒன்று ஏற்படுத்தி மைசூரில பள்ளிக்கூடங்களில் வைத்து நடத்துகின்றனர். அங்கே இதுபலிதமாகுமென்று தோன்றினால் இங்கும் அவைகளை வைத்துநடத்தலாம். பிரைவேட் மானேஜ்மெண்டில் நடைபெறும் இவ்விடத்துப் பள்ளிக்கூடங்களில் நடத்தி சித்திபெற்றால் கல்வியிலாகா டைரக்டருக்கு மனுசெய்து நம் எண்ணத்தைப் பூர்த்திசெய்து கொள்ளலாம்.

தவிர, இம்மாகாணத்து ஜனங்கள் யாவருள்ளும் கோவாபரேஷன் வேரூன்றும்படி செய்தலவசியம். இதற்கு கௌரவார்த்தமாய் உழைக்கக்கூடிய மகான்கள் சொற்பமா யிருக்கின்றனர். திவான்பகதூர் ஆதிநாராயணய்யா மிஸ்டர் பட்டாபிராமராவ் போன்ற மகான்கள் இன்னும் அநேகர் தோன்றி உழைத்தால்தான் செம்மையாய் இந்த எண்ணம் கைகூடும். பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கும் பெரிய உத்தியோகஸ்தர்கள் தங்கள் காலத்தில் சொற்ப பாகத்தை இத்துறைகளில் வேலை செய்தால் உப

காமமாயிருக்கும். பிரபலமான தமிழ் பத்திரிகைகள் மூலமாயும் உழைக்கலாம். பத்தி
ராசிரியர்கள் தங்கள் பத்திரிகையின் ஓர் பாகத்தை கூட்டுறவு விஷயங்களுக்கே பிர
த்தியேகப்படுத்தி அடிக்கடி ஜனங்கள் மனதுள் புகட்டி வந்தால் எவ்வளவோ நன்
மையுண்டாகும். டிரஸ்டு பண்டுகளை இச்சங்கங்களில் சேமித்து உதவி புரியலாம். முக்
கியமாய் தேவஸ்தானங்களில் வட்டி முடக்கமாய் முடங்கிக்கிடக்கும் பணங்களைக்
கொண்டு நடத்தலாம். ஜனங்களில் அநேகர் இச்சங்கங்கள் தாம் பணம் கடன் வாங்கிக்
கொள்வதற்காகவே ஏற்பட்டனவென்று எண்ணியிருப்பதை முற்றிலும் நீக்கி அதில்
தங்கள் பணத்தை சேமித்து வைக்கும் எண்ணத்தை உண்டாக்கவேண்டும். இதோடு
கோவாபரேஷன் சம்பந்தமான பல சங்கங்கள் ஏற்படுத்தி செவ்வையாய் அவைகள்
நடைபெறும்படி செய்யவேண்டும். அப்போதுதான் இம்மாகாணத்தில் கோவாபரே
ஷன் என்னும் மரத்தின்வேர் நன்றாய் நிலைபெற்று விட்டதென்று கருதக்காரணமு
ண்டு என்று கூறி முடித்தார். இத்துடன் கான்பரென்ஸ் முடிவு பெற்றது.

---

## மத்தியமாகாண

## கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

ஜேம்ஸ் மேஸ்டனுடைய உபந்நியாசம்.

---

1914-ம் வருஷம் ஜனவரி மாதம் 29-ம் தேதி லக்னௌ நகரத்தில் மத்தியமாகாண
ஆறாவது கோவாபரேடிவ் கான்பரென்ஸ் நடைபெற்றது.

கான்பரென்ஸுக்கு விஜயம் செய்த டெலிகேட்டுகளையும் இதர ஜனங்களையும்
லெவ்டினண்டு கவர்னர் கனம் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் இரண்டாவது தடவை அவர்கள்
வரவேற்றி கோவாபரேஷன் மர்மங்களைப்பற்றி உபந்நியாசித்தார். அவர் கவர்ன்
மெண்டாரால் சமீபத்தில் வெளியிடப்பட்ட தீர்மானங்களைப்பற்றி 1913-ம் வருஷம்
ஜூன் மாதம் 30-ம் தேதியோடு முடிவாகும் டிபார்ட்டுமெண்டு ரிபோர்ட்டையும்
பற்றிப்பேசினார். அந்த ரிப்போர்ட் பிரகாரம் சங்கங்களின் சங்கியை 100-க்கு 26 விகி
தம் அதிகரித்தன. கிராம பாங்கிகளுக்கும் ஜில்லா பாங்கிகளுக்கும் நடுநின்று
திரவிய உபகாரம் செய்யும் ஸெண்ட்ரல் பாங்கிகள் அதிகமாய் இதரவித
பாங்கிகளைக்காட்டிலும் விருத்தியடைந் திருப்பதாய்க் கூறினார். இந்த ஸென்



ட்ரல் பாங்கிகளின் விருத்தியம்சத்தால் கிராம பாங்கிகளுக்கும் ஜில்லாபாங்
குகளுக்கும் மிக்க க்ஷேமமுண்டு. புதிய மாதிரியான பாங்கிகளும் சங்கங்
களும் உண்டாயிருக்கின்றன. உத்தியோகஸ்தர்களுக்கும் நெய் வியாபாரிகளுக்
கும் அநுகூலமான சங்கங்களும் கால்நடைகளை இன்ஷியூர் செய்துகொள்வதற்
கனுகூலமான சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது தவிர நாம் கவனிக்
கத் தக்கது யாதெனில் மிஸ்டர் காக்கர் அவர்கள் விசேஷ அக்கரையுடன் வேலை
செய்யும் பாரிலிபட்டணத்திலுள்ள தச்சர்கள் வேலைச்சங்கமாகும். இதற்கு ஆரம்பத்
தில் அநேக இடையூறுகள் சம்பவித்தபோதிலும் போகப்போக இதன் அநுபவம் பிடி
பட இடையூறுகள் நீங்கி நன்றாய் இச்சங்கம் வேலைசெய்யும். இம்மாதிரியான
கான்பிரன்ஸ்கள் நடை பெறுவதின் முக்கிய நோக்கம் யாதெனின் ஒவ்வொருதேச
மூலை முடுக்குகளிலுள்ள ஜனங்கள் ஒன்று கூடி தமது சந்தேகங்களையும் கஷ்டங்க
ளையும் நிவர்த்தித்துக் கொள்வதற்காகவே. மத்திய மாகாணத்திலுள்ள ஜனங்கள்
சுகவேலைகளுடன் மட்டும் நில்லாது விவசாயத்திலும், படிப்பிலும், சுகாதார
முறைகளிலும் ஜில்லா கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கு வெகுவாய் உதவி புரிந்
திருக்கின்றனர். லெவ்டினண்டு கவர்னர் அவர்கள் அங்கு நேரிட விஜயஞ்செய்ததன்
முக்கிய நோக்கம் கோவாபரேஷன் விருத்தியம்சத்தைக் குறித்து கவர்ன்மெண்டார்
விசேஷ அக்கரைகொண்டு அதிக விசுவாசத்துடன் கவனித்து வருகின்றார் என்பதை
ஜனங்கள் அறியும் பொருட்டே.

கனம் கவர்னர் அவர்கள் பிறகு ரிஜிஸ்ட்ரார் தமது வருஷாந்திர ரிப்போர்ட்டில்
குறிப்பிட்டுள்ள முக்கிய மகாஜனங்களின் பெயரை வாசித்தார். ஜகாங்கீரபாத் ராஜா
போன்ற பிரபல லிலச்சவான்தாருடைய விஜயத்தைக் குறித்தும் மிக்க உழைப்பாளி
யான மிஸ்டர் சாட்டர்ஜி போன்ற உத்தமர்களது கைங்கரியத்தைக் குறித்தும் மிக்கச்
சிலாகித்து பின்னர் கூறப்பட்டது.

### கோவாபரேஷனும் விவசாய இலாகாவும்.

கவர்னர் அவர்கள் பிறகு கான்பிரன்ஸை விட்டு விலகும் வேலையில், பிரசிடெண்
டாய் அப்போது விளங்கிய விவசாய இலாகா டைரக்டர் கனம் மிஸ்டர் எச். ஆர். ஸி.
ஹெய்லி அவர்கள் ஓர் உபந்நியாசம் செய்தார். அது பின்வருமாறு:—

### விதை சப்ளை செய்தல்.

விவசாயிகளுக்கு வேண்டிய சாமான்களை விசாரணை செய்யின் அவைகள் பலவுள
வென விளங்கும். விவசாயத்திற் வேண்டிய முக்கிய சாமான்கள் கலப்பை முதலிய
கருவிகள், விதைகள், எருக்கள், எருதுகள், தண்ணீர் முதலியனவாகும். அறுவடை
முடிந்ததும் அவர்கள் மார்க்கட்டிலுள்ள வியாபாரிகள் கையிலகப்பட்டுத் தொங்கவேண்
டியிருக்கின்றது. அவர்களுடைய சாமான்களில் அநேகம் தற்கால சீர்திருத்தமாயும்
விலை சரசமாயும் கிடைப்பது துர்லபம். உதாரணமாக விதைகளைப்பற்றிப் பேசுவோம்.
இம்மாகாணங்களில் விவசாயவிருத்திக் கனுகூலமான நல்ல விதைகள் கிடைப்பது
கஷ்டமாயிருக்கிறது. இப்போது விவசாயிகள் பானியாவியாபாரிகளிடம் செல்லவேண்
டியிருக்கின்றது. இவ்வியாபாரிகளோ விதைகளின் குணத்தைப்பற்றி விசேஷமாய்

கருதுபவர்களல்ல. பருத்தி விதைகளாக விருந்தாலோ அவைகள் பருத்திசாலையினின்றும் சுலபவிலைக்கு வாங்கிவிடுகின்றனர். கோதுமை கேழ்வரகு முதலிய தானியவிதைகளோ பூச்சிகளால் சேதப்பட்டு சிலாக்கியமாய் கிடைப்பதரிதாகிறது. எவ்விதையானாலும் நல்லவிதையாய்க் கிடைப்பது கஷ்டம்.

இதனால் பல விதத்திலும் விவசாயிகளுடைய நிலைமை திருப்திகரமான நிலைமையல்ல. பானியா வியாபாரிகள் விதம் விதமாயும் தரமாதிரியாயும் விதைகளைத் தேர்ந்தெடுத்து வைக்கிறதில்லை. இப்பொழுது விவசாய இலாகாதாரருடைய முக்கிய நோக்கமாவது ஒழுங்காய் இவைகளைச் சீர்படுத்த வேண்டுமென்பதே. மேலும் சொற்ப ஜனங்களுக்கே மேற்படி நல்ல விதைகள் இலாகாதாரரால் சப்ளை செய்ய முடியும். ஆனால் விதைகள் தரமாதிரியாய் சிலாக்கியமாய் பாதுகாத்து வைத்து சப்ளை செய்யமுடியும். இவ்வேலையை கோவாபரேடிவ் சங்கத்தார் கைக்கொண்டால் அநேக ஜனங்களுக்கு விதை சப்ளை செய்து நல்ல லாபம் அடையலாம். இந்தச் சங்கங்களின் மெம்பர்கள் சரசவிலைக்கு நல்ல விதைகளை வாங்கி சப்ளை செய்யக்கூடும். சில சங்கங்கள் இம்மாதிரியான நல்ல கைங்கரியங்களை ஏற்கனவே கைக்கொண்டு வேர்க்கடலைவிதை, பருத்திவிதை, கோதுமைவிதை இவைகளை சப்ளை செய்து வருகின்றன. படிகாரில் உருளைக் கிழங்குவிதைகள் பூச்சிகளால் கெட்டுப்போகாதபடி வெகு பத்திரமாய் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இவர்கள் இந்தவியாபாரத்தால் நல்ல இலாபமும் அடைந்து வருவதாய்த் தெரிகிறது. கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டார் பல சங்கங்களுக்கு முன்பணமும் கொடுத்து விவசாயிகளுக்கு அநுகூலமாய் விதைகள் சப்ளைசெய்ய ஏற்பாடுகளும் செய்திருக்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு க்ஷேம மேற்படுமென்றே கருதப்படுகிறது.

## மாடுகள் வளர்த்தல்.

இந்த மாகாணத்தில் நல்ல இனத்து எருதுகள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. இந்த டிபார்ட்மெண்ட் இருவகைப்படும். ஒன்று கீழ்தர இனத்தை வளர்த்தல் மற்றொன்று மேனாட்டுஜாதி யினத்தை வளர்த்தல். இவ்வெருதுகளை ஒவ்வொரு விவசாயியும் வாங்கி வைத்துக்கொள்ளுதலென்பது கஷ்டம். சங்கத்தார் வளர்த்து விவசாயிக்கு வேண்டியபோது கொடுத்துதவுதலென்பது எளிது. இவ்விதமே பசுக்களையும், எருதுகளுக்கு வேண்டிய தீவனங்களையும் காப்பாற்றுதலுமாகும்.

## தண்ணீர் சப்ளை.

இம்மாகாணத்தின் பெரும் பாகத்தில் தட்டில்லாமல் தண்ணீர் கிடைப்பது அரிது. எனக்கு அடிக்கடி இதைப்பற்றியே மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. நான் கோவாபரேடிவ் சங்கங்களின் உதவியைக்கொண்டு கிணறு கால்வாய்கள் வெட்டிவைத்து தண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றேன். சொற்ப ஜனங்களுக்கே டிபார்ட்மெண்டார் உதவிபுரியக்கூடும். கும்டி, கோச்ரா முதலிய சிறு நதிகளில் பம்புவைத்து இறைத்துத் தண்ணீர் சப்ளைசெய்ய அநேக மனுக்கள் வந்துக்கொண்டிருக்கின்றன. மனுதாரர்கள் தண்ணீர்த் தீர்வை செலுத்த சித்தமாயிருக்கின்றார்களே தவிர யந்திரங்கள் வாங்கி வேலைசெய்ய முற்றிலும் அசக்தர்களாயிருக்கின்றனர். இவைகளெல்லாம் கோவாபரேடிவ் சங்கத்தார்களால் சாதிக்கக் கூடிய சுலபகாரியங்களாகும்.



## மாசூல் விற்பனை செய்தல்.

மாசூல் விற்பனை விஷயத்திலும் அற்ப விவசாயி மிக வருத்தமடைய வேண்டியிருக்கிறது. இவனிடத்தில் சொற்பதானியமே விற்பனைக்கிருப்பதால் சிறு வியாபாரியிடமே கொடுக்கவேண்டி வருகிறது. இவ்வியாபாரியோ மார்க்கட்வரி, அளவுவரி முதலிய வரிகளை அதன் தலையில் கட்டி, அளவும் சற்று அதிகமாய் அளந்து மணங்குக்கு ரூபா 1 க்கு மேல் தனக்கு லாபம் கிடைக்கும்படி செய்து கொள்ளுகிறான். பெரிய வியாபாரிகள் கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கிக்கொள்ள பிரியப்படமாட்டார்கள். விவசாயிகள் யாவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய்த் தமது தானியங்களை விற்பனை செய்துகொள்ள பிரியப்படுவோர்களாயின் நல்ல இலாபமுண்டு. இதற்கு ஒரு சிறு உதாரணமுண்டு. அதாவது ஒரு ஸொஸைடியின் சில விவசாய மெம்பர்கள் அந்த ஸர்க்கிள் விவசாய டிப்டி டைரக்டரின் போதனையால் தமது நிலங்களில் மணிலாக்கொட்டைப் பயிர் செய்தனர். கடைசியில் உள்ளூர் வியாபாரிகள் அவர்கள் மாசூலுக்கு மிக்க அற்ப விலைகொடுக்கவே சம்மதித்தனர். இதை இவர்கள் டைரக்டர் அவர்களுக்குத் தெரிவிக்க அவர் கான்பூரிலுள்ள ஒரு பெரிய வியாபாரக் கம்பெனியிடத்தில் தகுந்த விலை கொடுக்க ஏற்பாடுசெய்தார். இதுகண்ட உள்ளூர் வியாபாரிகள் தாமே அவ்விலைக்குமேல் கொடுப்பதாய்முன்வந்து எல்லா சரக்கையும் எடுத்துக் கொண்டார்.

## பீஹார் ஒரிஸா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

1912ம் வருஷம் டிசம்பர் மாதம் 11ம் தேதி பங்கிப்பூரிலுள்ள கிளப் ஹாலில் பீஹார் ஒரிஸ்ஸா மாகாண முதல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் நடைபெற்றது. ஏறக்குறைய 40 பேர்கள் விஜயஞ்செய்திருந்தனர். லெப்டினண்ட் கவர்னர் அவர்கள் முதன் முதல் கான்பரென்ஸைத் திறந்துவைத்து கான்பரென்ஸ் செவ்வையாய் நடைபெறுமாறு பிரார்த்தனை செய்து சென்றார். பிறகு ஆனரபில் மிஸ்டர் மாடி அவர்கள் அக்கிராசனம் வகித்து கான்பரென்ஸை நடத்தினார்.

## சங்கங்களை தணிக்கை செய்வதும் பரிசோதிப்பதும்.

மிஸ்டர் காலின்ஸ் அவர்கள் சங்கங்களைத் தணிக்கை செய்வதையும் பரீக்ஷை செய்வதையும் பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். இது விரிவாய் விவாதிக்கப்பட்ட பிறகு பின்வருமாறு திருத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

1. தணிக்கை செய்வது அவசியம்.

2 தற்காலம் தணிக்கை செய்துவரும் நிலைமைக்கு எப்பொழுதும் தாழக்கூடாது.

3. ஸெண்ட்ரல் பாங்கியார்களால் தணிக்கை செய்யப்படுவதைத்தவிர, பிரத்தியேகமான தணிக்கை யிருக்கவேண்டும்.

4. வருஷத்திற்கு இரண்டு முறை தணிக்கை செய்வது நல்லதென்றாலும் பிரத்தியேகமான வருஷத் தணிக்கையொன்றிருந்தாற் போதும்.

ஸெண்ட்ரல் பாங்கிக்காரர்களுக்கு இவ்வித சக்தி வந்ததும் நல்ல யோக்கியதையுள்ளவர்களை நிறுத்தி வைத்துக்கொண்டு தகுந்த சம்பளம் கொடுத்து ஆதரித்துவர வேண்டும்.

## டிபாஸிட்கேள்.

மிஸ்டர் மொஹியுதீன் ஆமத் அவர்கள் மெம்பர்கள் சங்கங்களில் கட்டாய டிபாஸிட்கேள் போடவேண்டிய தவசியமென்பதைக் குறித்துப் பேசினார். பிரிஸிடெண்டு அவர்கள் கடைசியிலதை கண்டனம் செய்து பின்வருமாறு தீர்மானித்தார்.

இந்த காண்பரென்ஸார் டிபாஸிட்கேள் கட்டாயமாய் போடப்பட வேண்டுமென்பதைக்குறித்து சிபார்சுசெய்யவில்லை. சில குறிப்பிட்ட விடங்களில் இதைப் பரீக்ஷித்து பிறகு பேசவேண்டுமெனக் கருதப்பட்டது.

மேலும் ஒரு மெம்பர் பாங்கியில் வாங்கிய தனது கடன் பூராவும் அடைபட்டபிறகு டிபாஸிட்கேள் கட்டாயமாய் வைத்துக்கொள்ளவேண்டுவது அவசியமென்பதை விளக்கிக்காட்டி வற்புறுத்தவேண்டியது.

அடுத்த வருஷத்தில் சுயேச்சையாய்வரும் டிபாஸிட்கேளைப் பெறவேண்டிய வழியிலே மிக்க உழைக்கவேண்டும்.

## விவசாய கோவாபரேஷன்.

மிஸ்டர் காலின்ஸ் அவர்கள், பீஹார்–ஒரிஸ்ஸாவில் தற்காலத்தில் கால்வாய் இன்ஷிபூரன்ஸ் பலன் தருமாவென்றும், இரிகேஷன் விஷயமாய் போதிக்க முடியுமாவென்றும், மொத்த தானிய விற்பனைக்கு வழியிருக்கின்றதாவென்றும், கோவாபரேடிவ் பாற்சாலை ஏற்பட மார்க்கமிருக்கின்றதாவென்றும் காண்பரென்ஸார் தெரிவிக்கவேண்டிக்கொண்டார்.

பிரஸிடெண்டவர்கள் பின்வரும் தீர்மானங்கள் கொடுத்தார்:—கால்வாய் இன்ஷிபூரன்ஸ் முதலிய விவசாய விருத்திக்குரிய முறைகளில் உழைக்கவேண்டியதற்குக் காலமிதுவல்ல. இப்போது கூட்டுமுறையில் கடனைச்சங்கங்களேற்படுத்தி அதன் மூலமாய் சீர்திருத்தமான வழியில், விவசாயம் செய்தல், இரிகேஷன் செய்தல், முதலியவைகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

## இரண்டாவதுநாள் மீட்டிங்கு.

முதநாள் காண்பரென்ஸ் கூடிற்று. ஆனரபில் எம். மாடி அவர்கள் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

## கைத்தொழி லபிவிருத்தியின் பொருட்டு மாகாணத்தை ஸர்வே செய்தல்.

ப்ரொபஸர் சமாதார் அவர்கள், கைத்தொழிற் கோவாபரேடிவ் சங்கங்கள் ஆங்காங்கே ஸ்தாபிதம் செய்ய மாகாண கைத்தொழில் ஸர்வே செய்ய வேண்டுவது அவசியமென்பதைக் கூறினார். இதற்கு மிஸ்டர் காலின்ஸ் அவர்கள் கூறியதாவது. மத்திய மாகாணத்தில் இவ்விதம் நடத்தி பலித மேற்படவில்லையென்றும் எங்கேயாவது ஓரிடத்தில் பரீக்ஷார்த்தமாய் நடத்தினபிறகு பலிதமேற்பட்டால் ஏதாவது முயற்சி செய்யலாமென்றும் கூறினார். பிரஸிடெண்டு அவர்கள் பின்னரெழுந்து பாட்னா நகர ராய்பஹதூர் பூர்ணேந்து நாராயணசிங் அவர்களது அபார உழைப்பைக் குறித்துப் பேசினார். கடைசியில் கொஞ்சம் விவாதிக்கப்பட்டபிறகு பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. இந்த காண்பரென்ஸானது மாகாணக் கைத்தொழில் ஸர்வே செய்யவேண்டிய தவசியமென்றும், ஆனால் பாட்னா காலேஜில் நடக்கும் சோதனைச் செய்திகளையும் எல்லாப்பக்கங்களிலும் நடந்த கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சுசெய்ய



வேண்டுகிறது. இப்போது கைத்தொழில் செய்யும் ஏழைகளுக்கும் கொஞ்சமேனும் உதவியாய் கூட்டுமுறை கடனைச் சங்கங்களேற்படுத்தி ஒருவாறு சீர்திருத்தம் செய்ய எண்ணங்கொண்டிருக்கிறது.

## புதிய சங்கங்களுக்குப் பணமுதவுதல்.

மிஸ்டர் காலின்ஸ் அவர்கள், ஒரு சங்கமேற்படுமுன்பாக எவ்விதம் அதன் பழைய கடனைத் தீர்ப்பது என்ற கேள்வி கேட்டார். இது வெகு விரிவாய் விவாதிக்கப்பட்டு கடைசியில் மகாஜனங்களுடைய ஆதாரணையி லடங்கியிருக்கும் விவசாயிகள் ஒரு சங்க மெம்பராய்த் தாம் வந்து சேர்வதற்கு முன்பாக தமது கடனைத் தீர்த்தவிட்டபிறகே மெம்பராய்ச் சேரவேண்டுமென்றும், ஆனால் சிற்சில விஷயங்களில் இது புத்தாநுபவத்தை பொறுத்து நடத்து கொள்ளவேண்டியதாயிருக்குமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## மாகாண கோவாபரேடிவ் வர்த்தமானி.

மிஸ்டர் காலின்ஸ் அவர்கள் இதைப்பற்றி அடுத்த வருஷம் பேசுவோமென்றும், இப்போது ஸெண்ட்ரல் பாங்கிக் காரர்களும் கௌரவ உத்தியோகஸ்தர்களும் பம்பாயில் வெளியாகும் காமர்ஸ் அண்டு 'கோவாபரேஷன்' என்னும் வர்த்தமானியைத் தருவித்துக்கொள்ளும்படியும் கூறினார்.

எம். மொஹிதீன் ஆமத் அவர்கள் அம்மாகாணத்தில் வெளியாகும் ஒரு ஹிந்தி ஒரு உருது, ஒரு இங்கிலீஷ் பத்திரிகையை எடுத்துக்கொண்டு அவைகளின் ஒரு பக்கத்தில் முறையே கோவாபரேஷன் விஷயத்தை வெளியிட்டு வந்தால் மிக்க உபகாரமாயிருக்குமென்று கூறினார்.

## ஸர்டிபிகேட் பிரோஸீஜர்.

ஸர்டிபிகேட் பிரொஸீஜரைப்பற்றி அநேகவித சந்தேகமான கேள்விகள் கேட்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டன. மிஸ்டர் காலின்ஸ் அவர்களும் மிஸ்டர் ஹமாண்டு அவர்களும் இது விஷயத்தில் ஏகமனதுள்ளவர்களாயிருந்தனர், ரிஜிஸ்ட்ரார்களுக்கு அதிகாரமும் முனிசிபல்களுக்கு ரூபா 500–க்கு மேற்பட்ட வழக்குகளை விசாரணை செய்யக்கூடிய அதிகாரமும் கவர்ன்மெண்டார் அநுமதிகொடுக்க வழக்காடப்பட்டது. கடைசியில் தீர்மானிக்கப்பட்டதாவது:—1. மெம்பர்கள் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய கடனைச் சுலபமாய் வசூல் செய்ய ஸர்டிபிகேட் பிரொஸீஜரை ரிஜிஸ்டிரார் உபயோகப்படுத்த அதிகாரம் கொடுக்கும்படி இக்காண்பரென்ஸ் சிபார்சு செய்கிறது.

2. ரிஜிஸ்ட்ராருக்கு முன் கூறப்பட்டுள்ளபடி கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்க அசம்மதமாயிருந்தால், முனிசிபல்களுக்கு ரூபா 500-வரையிலுள்ள வழக்குகளை விசாரணை செய்யக்கூடிய அதிகாரம் கொடுக்கவாவது வேண்டுமென இக்காண்பரென்ஸ் கேட்டுக்கொள்கிறது.

## மாகாண பாங்கி.

ரிஜிஸ்ட்ராரவர்கள் கேட்டுக்கொண்டபடி மாகாண பாங்கியொன்று ஏற்படுத்த மிஸ்டர் காலின்ஸ் அவர்கள் பேசினார். ஏற்படுத்தவது அவசியமென்று காண்பரென்ஸ் அங்கீகரித்தது.

## பிராவிடண்டு பண்டு.

பாங்கி உத்தியோகஸ்தர்களுக் கனுகூலமாய் பிராவிடண்டுபண்டு ஏற்படுத்தும் ஏற்பாட்டையும், டைரெக்டர்கள் பஞ்சாயத்தார் முதலியவர்கள் ஜன சங்கங்கள்

பொது நன்மைக்காகப் பாடுபடும்போது எற்படும் வழிப்பிரயாணச் செலவுகளை அந்தந்த சங்கங்களோ, ஸெண்ட்ரல் பாங்கிகளோ கட்டிக்கொடுத்துதவி செய்யவேண்டு மென்பதையும் கான்பிரன்ஸார் அங்கீகரித்தனர்.

சப் கமிட்டி கொண்டுவந்த தீர்மானங்களில் செலவாகும் குமாஸ்தாக்கள் சம்பளம் கோவாபரேடிவ் வருஷம், வருஷாந்திர ரிப்போர்ட் முதலியவைகள் விவாதிக்கப்பட்டன. கடைசியில் கோவாபரேடிவ் வருஷகால நிர்ணயத்தைப்பற்றி தீர்மானிக்கப்பட்டதாவது, அநேகமாய் எல்லா மெம்பர்களும் தமது சங்க வருஷாந்தர வரவு செலவு கணக்குகளை ஒவ்வொரு வருஷ டிசம்பர் 31ம் தேதிக்குள் முடிவுசெய்ய சம்மதித்திருப்பதால் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் மே மாதம் 31ம் தேதி யன்று குறிப்பிட்டப்படி கான்பரென்ஸை அங்கீகரித்தது. ஆகவே மேற்படி மே மாதம் 31-ம் தேதிக்குள் தமது வருஷாந்தரக் கணக்குகளை ஒவ்வொரு சங்கமும் இஷ்டமானால் முடித்துக்கொள்ளலாம்.

பிறகு பிரஸிடெண்டு அவர்களுக்கு வந்தனோபசார மொழிகள் கூறப்பட்டதுடன் கான்பரென்ஸ் கலைந்தது.

———:(•):———

# பரோடா முதல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

---

## மாட்சிமைபொருந்திய கெய்க்வார் மகாராஜாவின் மேன்மையான உபந்நியாசம்.

சென்ற பிப்ரவரி மாதம் 20-ந் தேதி கூடிய கான்பரென்ஸில் ஹிஸ் ஹைனஸ் கெய்க்வார் வசனித்ததாவது.—

என்னுடைய சமஸ்தானத்தில் முதல் முதலில் கூடும் இக் கோவாபரேடிவ் கான்பரென்ஸைத் திறந்து வைக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டபொழுது நான் வெகு சந்தோஷத்துடன் ஒத்துக்கொண்டேன். இந்த சந்தர்ப்பமானது நான்கு ஜில்லாக்களினின்றும் வரும் கோவாபரேடிவ் சங்கப் பிரதிநிதிகளை வரவேற்றழைக்கவும், இதில் எனக்குள்ள ஆஸ்தையை வெளிப்படுத்தவும் எனக்கு அநுகூலமா யேற்பட்டிருக்கிறது. ஜனங்களுக்கு நல்ல நடத்தையையும், ஒற்றுமையையும் விசேஷ முற்போக்கையும் உண்டுபண்ணக் கூடிய எவ்வித பிரயத்தனமும் என்னுடைய அங்கீகாரத்த போஷணையைப்பெறும். இது உத்தேசமாய் என்னால் செய்யக்கூடிய எவ்வித உதவியையும் நான் செய்யத் தயாராயிருக்கின்றேன். இக் கோவாபரேடிவ் சங்கங்கள், ஜனங்களுக்குள் வியாபாரம், ஒற்றுமை, சிக்கனம், கைத்தொழில், கல்வி முதலிய சகல சம்பத்தையும் பரவச்செய்யக்கூடிய சாதகங்களா யிருக்கின்றமையால் இவை முக்கியமானவை யென்றே நினைக்கவேண்டும். கோவாபரேஷன் என்பது கிராமவாசத்திற்கும், பட்டணவாசத்திற்கும் வேண்டிய சாதனங்களை யெல்லாம் கொடுக்கக்கூடிய கருவியாயிருக்கிறது. கிராமாந்தரங்களில் ஜனங்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து சாமான்களைவாங்கி விற்பனை செய்தும், மாகுல் அபிவிருத்திசெய்து ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தால் அவர்கள் க்ஷேமலாபம் திருப்திகரமாகவேயிருக்கும். தினந்தோறும் அவர்களுக்கு சாதாரணமாய் சம்பவிக்கக்கூடிய இடையூறுகளெல்லாம் நீங்கி என்னுடைய கவர்ன்மெண்ட் அவர்களுக்கு உதவிபுரிய எத்தனித்திருக்கும் சீர்திருத்தங்களால் மிக்க நன்மையை பயக்கும்.



### விவசாயிகள்.

இப்போது உங்களுடைய கைங்கரியங்கள், விவசாய வகுப்பாரை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுவதைக் குறித்திருக்கின்றன. விவசாயமானது நம்முடைய முக்கியமான கைத்தொழிலாகும். 100க்கு 75க்கு மேற்பட்ட நம்முடைய ஜனங்கள் இதனால் ஜீவனம் செய்து வருகின்றனர். நம்முடைய விவசாயம் நல்லஸ்திதியிலில்லை. ஜெர்மனி, யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிட்டிஷ் இந்தியா கவர்ன்மெண்டுகளுள்ளடங்கிய விவசாய இலாகா டிபார்ட்மெண்டார்கள் விவசாயத்தில் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றனர். அவைகளால் நாமும் நல்ல இலாபமடையலாம். என்னுடைய உத்தியோகஸ்தர்களும் வெகு கவனமாய் இவைகளைக் கவனித்து ஜனங்களை முன்னுக்குக் கொண்டு வருவார்களென்றே கருதுகின்றேன். இப்போது நம்முடைய விவசாயிகளோ ஒன்றும் தெரியாதவர்களாகவும், ஒரு போதும் முன்னேற்றம் அடைய முடியாத ஈன ஸ்திதியிலுள்ளவர்களாகவும் தோன்றுகின்றனர் அவர்களுக்கு புதுமாதிரியாய் உழுதல், புது கருவிகளைக்கொண்டு தமது செலவுகளையும் தேகச் சிரமங்களையும் குறைத்துக் கொள்ளுதல், கொஞ்சமேனும் தெரியாது. அவர்கள் முன்கால பழக்க வழக்கத்திற்கும் தொழிலுக்கும் அடிமைகளாய்த் திண்டாடுகின்றனர். அவர்கள் வரும்படி வரவைக் குறைந்து செலவு வரவு அதிகமாகி நாளுக்குநாள் கடனுக்குட்படுகின்றனர். தவிர சிறு சண்டைகளாலும், மூட கட்டுப்பாடுகளாலும் அடிக்கடி தொந்தரவடைந்து மிக்க பரிதாபகரமான நிலைமையிலிருக்கிறார்கள்.

### கோவாபரேஷனின் வெற்றி.

செட்டுத்தன்மை யென்பதை எந்த விதத்திலும் சட்ட திட்டங்களால் கட்டுப்படுத்தி நடத்தமுடியாது. கோவாபரேஷன் என்னும் விதையை சர்வ சமூகத்திலும் விதைத்துப் பயிர் செய்தால்தான் முடியும். மூடத்தன்மை, ஏழ்மைத்தனம், துர்நடத்தை முதலியவைகளுக்கு கோவாபரேஷன் என்னும் மருந்தே சிலாக்கியமானது. ஜெர்மனி, ஹாலண்டு, டென்மார்க், முதலிய தேசங்களில் நடைபெற்றிருக்கும் இதன் ஆச்சரிய விருத்தாந்தங்களை நீங்கள் கற்றறிந்திருந்தால் கோவாபரேடிவ் சங்கங்கள் மூலமாய் கோவாபரேஷனை ஜனங்கள் மனத்தில் பதியவைப்பதற்கு மிஞ்சியது வேறொன்றுமில்லை யென்பதை நன்கு யறிவீர்கள். நான் மேற்சொல்லிய தேசங்களில் கோவாபரேஷன் என்பது மிக்க ஆச்சரியகரமான செயல்களை விவசாயிகட்குள் செய்திருக்கின்றன தரித்திரமிருந்த விடத்தில் சம்பத்தும் சேம்பல், கலகம் முதலியவைகள் குடிகொண்டிருந்த விடங்களில் சுறுசுறுப்பு சமாதானம் முதலிய சம்பத்தையுமுண்டாக்கியிருக்கின்றன. இவைகளெல்லாம் தேச க்ஷேமத்திற்கு அஸ்திவாரமாகவு மிருக்கின்றன. இவ்விதம் பரோடாவிலும் கோவாபரேஷன் விஷயமாய்ப் பாடுபடுபவர்கள் உண்மையாய் வேலை செய்வார்களாயின் மேற்சொல்லப்பட்ட சுகங்களையும் யாம் பெறலாம்.

பரோடாவிற் சென்ற 25 வருஷ காலங்களாக குடி ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டி அநேக ஏற்பாடுகள் சமஸ்தானத்திற்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நிலவரியை நிதானப்படுத்தி புதிய சட்ட திட்டங்களும் உண்டுபண்ணி யிருக்கின்றன. விவசாயத்திற்கு அனுகூலமாய் ரஸ்தாக்களும், ரெயில்வேக்களும், குளங்களும், கால்வாய்களும் வெட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பட்டணங்களிலும் கிராமங்களிலும் இலவசமாய் படிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் பொது லைப்ரெரிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கைத்தொழில், விவசாயம் முத

வியவைகளும் இடத்துக்குத் தகுந்தபடி சீர்திருத்தி நல் நிலைமைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவைகள் யாவற்றுடனும் இன்னும் இவைகள் முற்போக்கை உத்தேசித்து எவ்வளவோ செய்யவேண்டி யிருக்கின்றன. யாவும் காலடைவி லேற்பட்டு சமஸ்தானம் சுபீக்ஷமடையுமென்றே கருதுகின்றேன். இவைகளுக்கெல்லாம் சட்டதிட்டங்களும் நிருவாக சக்தியும் போதாது. ஜன சமூகத்தாரின் ஒற்றுமையான உதவி மிக்க அவசியமானது.

## கோவாபரேஷனின் அபார சக்தி.

கோவாபரேஷனுக்கு அபாரமான சக்தியுண்டு. இது ஒரு மனிதனுக்கு சுலபத்தில் பணமும் தன் சரக்கை சுலபமாய் தகுந்த விலைக்கு விற்பனைசெய்யத்தகுந்த மார்க்கமும் ஏற்படுத்திக் கொடுக்கும். உலகானுபவமும் தன் நடையுடை பாவனைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளக்கூடிய காலத்தையும் சௌகரியப்படி கொடுக்கும். ஜனங்களை கோவாபரேஷன் என்பது ஒற்றுமைப்படுத்தி செட்டாய்ச் செலவுசெய்யவும் தன் வருமானத்தில் கொஞ்சம் மிச்சம் பிடித்து மிகுத்துக்கொள்ளவும் அதை விவசாய பாங்கிகள் மூலமாய் விருத்திசெய்து கொள்ளவும் புத்தி புகட்டும். அது துர்க்கூட்டத்தை, குடி முதலியவைகளைக் களைந்து, கௌரவம், தயாளத்துவம், திருப்தி, ஒற்றுமை முதலிய சகல சத்குணங்களையும் ஜனங்களுள் புகட்டும். இதனால் கிராமாந்தர சுகாதார சீர்திருத்தம், கிராம நிருவாகம் முதலியவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

இந்த முயற்சியின் பலன் அல்லது ஜெயம் இது விஷயமாய் உழைக்கும் உத்தியோகஸ்தர்களின் உண்மையைப் பொறுத்ததாகும். ஒவ்வொருவருக்கும் நல்லகாலம் பிறந்திருக்கிறது. கோவாபரேஷன் விதையைச் செவ்வனே விதைக்கவேண்டிய தத்துவங்களைக் கற்றுணர்ந்து விதைத்தால் ஜனங்கள் யாவரும் எக்காலும் உங்களை வாழ்த்தக்கூடிய அழியாப் புகழை யடைவீர்கள்.

## கோவாபரேஷனின் தாராளத்துவம்.

கோவாபரேஷனால் விளைவிக்கக்கூடிய ஒரு நன்மையுண்டு. அதை எவரும் மறக்கக்கூடாது. சென்ற நூற்றுக்கணக்கான வருஷங்களாக நம் தேசமானது ஒருவிதத்திலும் விருத்தி யடைந்துள்ளதாகத் தெரியவில்லை. நம்மிந்திய ஜனங்கள் அநேகஜாதி மதப்பிரிவினைகளுக்குள்ளடங்கி யிருக்கின்றனர். அவர்களது தொழிலும் நாகரீகமும் மிகவும் கேவலமான ஸ்திதியிலிருக்கிறது. தற்காலத்தில் ஜாதிமதத்தை முக்கியமாய்க் கருதாமல் நம்முடைய தொழிலை பலவிதத்திலும் விருத்தி செய்துகொள்ள முயற்சிக்க வேண்டும். கோவாபரேஷன் என்பது நமக்கு உயிரும் சக்தியுமாய் இவ்விஷயத்திலிருக்கும்.

எனக்குத் தெரிந்தவரையில் பரோடாவில் ஏறக்குறைய 4½ லக்ஷ ரூபாய் மூலதனத்தில் சுமார் 6,000 மெம்பர்களடங்கிய 236 சங்கங்களிருக்கின்றன. இது சமஸ்தானத்து ஜனத்தொகையையும் விருத்தியாம்சத்தையும் பொருத்தமட்டில் மிக்க அற்பமாய்த் தோற்றியபோதிலும், வேலை துவக்கினமுதல் விருத்தி யடைந்திருக்கிறது. விருத்தியாம்சத்தைப் பொருத்தமட்டில் மிக்கத் திருப்திகரமானதென்றே சொல்லவேண்டும். கவர்ன்மெண்டாருடைய சட்ட திட்டங்களால் கோவாபரேடிவ் சங்கங்களை ஏற்படுத்தமுடியாது. குடியானவர்களுக்குக் கல்விச் செல்வத்தை புகட்டவேண்டும். அவர்கள் ஒருவரையொருவர் நேசித்துக்கொண்டு ஐக்கிய பத்தியமாயிருக்க கற்கவேண்டும். கோவாபரேஷன் விருத்தியின் பொருட்டு அநேகம் சீர்கேடான சங்கங்களிரு



ப்பதைக்காட்டிலும் நல்ல நிலைமையிலுள்ள சொற்ப சங்கங்களிருப்பதே போதுமானது. ஒரு நல்ல சங்கமென்பது மற்ற சங்கங்களிதைப்பார்த்துக் கற்றுக்கொள்ளக்கூடிய நல்ல அம்சங்களை யுடைத்தானதா யிருக்கவேண்டும்.

## கோவாபரேஷனும் ஸ்டேட் உதவியும்.

கோவாபரேடிவ் சங்கங்களின் விருத்தியைக் குறித்து எவ்வித ஸ்டேட்கள் உதவி செய்யக்கூடுமோ அவ்வளவையும் யான் செய்யத் தயாராயிருக்கின்றேன். ஆனால் ஸ்டேட் உதவி எவ்வளவு தூரம்தான் கிடைக்கக்கூடியது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஜனங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும்படி ஸ்டேட் உதவி கிடைக்கவேண்டும். கோவாபரேடிவ் சங்கங்களானவை, தன்னைத்தானே உதவி செய்துகொள்ளுதல், ஜனங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கை பரவச்செய்தல், என்னும் உட்கருத்தைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டனவாகும். ஸ்டேட் உதவியானது இவ்வித நற்குணங்களை ஜனங்களுக்குள் பரவச்செய்யாதுபோனால், அதைச் சரியான வழியில் பிரயோகப்படுத்தாததைக் குறிக்கும். இவ்விடம் விஜயம் செய்திருக்கும் ஒவ்வொருவரும் இதை நன்றாய்க் கற்றறிந்து ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவர முயற்சிப்பாராயின் எல்லாக் காரியமும் கைகூடும். நானும் என் கவர்ன்மெண்டாரும் இந்த விஷயத்தில் எவ்விதத்திலும் உதவிபுரிய சர்வ சம்மதமுள்ளவர்களா யிருக்கின்றோம்.

ரெவினியு டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் இக்கோவாபரேஷன் முயற்சியில் விசேஷ அக்கரை கொண்டுழைப்பவர்களாய்த் தெரிகிறது. இவர்கள் கிராமவாசம் சீர்திருத்தமான விவசாயம் இவைகளைப்பற்றி நன்றாயறிந்திருக்கவேண்டும். இவைகளெல்லாம் நம்முடைய இராஜ்ய நிர்வாகத்திற்குதவியாயிருப்பதுமல்லாமல் இதைப்போல் இன்னும் முக்கியமான வழிகளில் நம் புத்தியைச் செலவிடவும் அவகாசம் கொடுக்கும். ஆகவே ஒவ்வொரு ரெவினியு டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தரும் விவசாய விருத்தியைக் குறித்துக் கற்றறிய வேண்டியது ஆவசியகமாகயேற்பட்டிருக்கிறது மல்லாமல் ஜனங்களுக்குள்ளும் அவைகளைப் புகட்ட முயற்சிக்க வேண்டுமெனத் தெரிகிறது. இந்த வழியில் புத்தியைச் செலவிடாத உத்தியோகஸ்தர் எவ்விதத்திலும் பிரயோஜனமில்லையென்று திட்டமாய்ச் சொல்லலாம். எனக்கு இந்த முயற்சியை என் ஆபீஸ் விவகாரங்களுள் ஒன்றாய் ஏற்படுத்திக்கொள்ள மனமில்லை. ஜனங்களுக்கு மிக்க உபகாரமா யிருக்கும்படி ஆங்காங்கு ஜனங்களே சங்கங்கள் ஏற்படுத்திக்கொள்வார்களாயின் அவைகள் என் கவர்ன்மெண்டின் எவ்வித உதவியையும் பெறுமென்பதற்கு ஆக்ஷேபணையில்லை.

நம் ஸ்தாபனம் செய்யும் கைங்கரியங்களில் சில பொது ஜனோபகாரிகளும் ரிஜிஸ்டிராருக்குதவியாய் உதவிபுரிய முன்வந்திருப்பதைக்காண எனக்குச் சந்தோஷமுண்டாகின்றது. இவர்களைப்போல் இன்னும் அநேகர் முன்வருவார்களென நான் கருதுகின்றேன். எல்லா ஜனங்களும் ஒரு மனதாய் தேச நன்மையையும் தம் நன்மையையும் நாடி உழைக்கக்கூடிய ஒருகாலம் கூடிய சீக்கிரம் வருமென நான் எண்ணுகிறேன். ஐரோப்பாவில் ரெய்பீசன், கவுண்ட் லூஸாடி, ஸர் ஹோரேஸ் பிளங்கட் முதலிய பிரமுகர்களது பெருபகாரத்தால் எவ்வளவோ ஆச்சரிய சம்பவங்கள் ஆங்குண்டாயிருக்கின்றன.

## லோகல் சுய ஆட்சிக்கு ஆதாரம்.

ஜில்லாக்களில் கோவாபரேஷன், விவசாயவிருத்தி முதலியவைகளைக் கவனிப்பது லோகல் போர்டார்களது பல வேலைகளில் ஒன்றாகும். இவைகளில் அவர்கள்

விசேஷ கவனஞ் செலுத்துவதாய் எனக்குத் தோற்றவில்லை. எவ்விதம் அவர்கள் இவ்விஷயத்தில் பாடுபட வேண்டுமென்பதைச் சற்றுச் சொல்கிறேன். நீங்கள் அவரவர்கள் ஊர்களுக்குச் செல்லுமுன்பாக என் மந்திரியைக் கண்டு செல்லும்படி உங்களுக்குச் சொல்ல ஆவலுள்ளவனா யிருக்கின்றேன். இக் கோவாபரேஷனால் திரவியப் பெருக்கு கிராமங்களில் ஏற்படுவது மல்லாமல் தாலூக்கா போர்டுக்கு மிக்க பலம் கொடுக்கக்கூடிய பெரிய பிரபுக்களையு முண்டுபண்ணும். கோவாபரேடிவ் சங்காபிவிருத்திக்குப் பாடுபடும் சிலர்கள் கிராம விவசாயாபிவிருத்தியைக் குறித்து எவ்வித நன்மைபுரியவும் முன்வருவார்கள். கிராமங்களுக்கு என்னென்ன அத்தியாவசியமென்பது அவர்களுக்கு நன்றாய்த்தெரியும். நீங்கள் அவர்களை நம்பி எவ்விதக் காரியத்தையும் சாதித்துக்கொள்ளலாம். இவ்விதத்தில் கிராம நிருவாகங்கள் பலப்படுவது மட்டுமல்லாமல் லோகல் சுய ஆட்சிக்கும் பலமேற்படும். இன்னும் நான் உங்களுக்குச் சொல்லப் பிரியப்படுவது யாதெனில், விவசாய விருத்தியை நீங்கள் தனித்தனியாகவும் போர்டுகள் மூலமாகவும் முன்னுக்குக் கொண்டுவர முயற்சிப்பது உங்கள் கடமையாகும்.

இந்தக் கான்பரென்சுக்கு உங்களை யழைப்பதில் இன்னுமொரு எண்ணம் எனக்குண்டு. என் ஜனங்கள் சௌக்கியாபிவிருத்தியை நாடி நல்லொழுக்க விஷயத்திலும் சுகாதார விருத்தியிலும் இன்னும் அநேக வழியிலும் எவ்வளவோ சீர்திருத்தங்கள் நான் செய்திருக்கின்றேன். அவைகளெல்லாம் கூடிய சீக்கிரம் பலன் கொடுக்கும். அவைகளை நிறைவேற்றும் விஷயத்தில் உங்களுடைய ஒற்றுமையான உதவி அத்தியாவசியமாயேற்பட்டிருக்கிறது. இதனால் நல்ல லோகல் சுய ஆட்சியும் ஏற்படுவதாயிருக்கிறது. என் ஜனங்களுக்குள் நீங்கள் முக்கியமான விஷயங்களிற் கலந்து அபிப்பிராயங்கொடுத்திருப்பது எனக்கு திருப்திகரமாயில்லை. கிராமாந்திரங்களிலும் சுகாதார விஷயத்தைக் கருத்தாய்க் கவனிக்க அபிப்பிராயங் கொண்டிருக்கின்றேன். இதில் நீங்களும் மனப்பூர்வமாய் என்னுடன் கலந்து கைவிடாமல் எனக்குதவி செய்வீர்களென்று நம்புகின்றேன்.

### கனத்த மூலதனம்.

விவசாய விருத்தியிலும், விவசாயிகள் முற்போக்கிலும் விசேஷ கவனஞ் செலுத்துவதோடு கைத்தொழில் விஷயத்திலும் அதே கவனஞ் செலுத்தாம லிருக்கக்கூடாது. தேச திரவியாபி விருத்தியான விவசாயத்தில் எவ்வளவு முன்னேற்றம் நாளுக்கு நாளேற்படுகிறதோ அவ்வளவு முன்னேற்றம் கைத்தொழிலிலும் ஏற்படவேண்டும். பரோடாவில் இதன் முன்னேற்றத்திற்கு அநேக மார்க்கங்களிருக்கின்றன. சென்ற 25 வருஷங்களாக இதன் விருத்தியாபிருத்தியை நாடி அநேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளால் அநேக நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. நம்மிடம் சொற்பமுதலும் அதைக்கொண்டு தொழில் செய்வதில் அநேக கஷ்டங்களும் நமக்குண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நம் பழைய கைத்தொழிலையும் புதிய கைத்தொழிலையும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற எண்ணத்துடன் அதிக தொகையை சொற்ப வட்டிக்கு ஜனங்களுக்குக் கொடுத்துதவிபுரிய பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கின்றேன். நம் சமஸ்தானத்திற்கு மிக்க தேவையான கைத்தொழி லின்னதென்பதையும் அவைகளை எவ்வாறு ஏற்படுத்த வேண்டுவது என்பதைப்பற்றியும் நான் ஒருவாறு அபிப்பிராயங்கொண்டு குறித்து வைத்திருக்கின்றேன். என் உழைப்பாளிகளான ஜனங்கள் பலர் முன்வந்து அதன் பலனை அநுபவித்துச் சுகிப்பார்களென்று கருதுகின்றேன்.



கைத்தொழில் விருத்தியை நாடியுழைக்க உத்தியோக மெம்பர்களும் உத்தியோகஸ்தரில்லாத மெம்பர்களும் கூடிய சதியாலோசனை கமிட்டியொன்று சமீபத்தில் ஏற்படுத்த எண்ணங்கொண்டிருக்கின்றேன். ஜனப் பிரதிநிதிகள் இது விஷயத்திற் கலந்து ஒருவித அபிப்பிராயத்தை எனக்குத் தெரிவித்து உதவிசெய்வார்களென்று நம்புகின்றேன்.

### முடிவு.

பிரபுக்களே, தற்கால நாகரீகத்திற்கு வெகுவாய்ப் பின்னடைந்திருக்கும் விவசாயிகளுடையவும் கிராமாந்தர ஜனங்களுடையவும் க்ஷேம லாபங்களையும் சுகாதார நன்மைகளையும் உத்தேசித்து நான் எவ்வளவோ இப்போது சொல்லிவந்த யாவற்றையும் நீங்கள் நன்றாய் செவிசாய்த் தருளினீர்களென்று நம்புகிறேன். அவைகளை யுத்தேசித்து நம்மாலியன்றவரையில் முயன்று அவர்கள் கண்விழித்துப் பிழைக்குமாறு பாடுபடுவோம். அவர்கள் ஒற்றுமையாய் தம்முடைய கடமைகளையும் தங்கள் சக்தியையும் அறிந்து கொள்ளட்டும். இவ்விடம் விஜயம்செய்து என் வார்த்தையைக்கேட்டவர்கள் மீது தங்கள் பொறுப்பேற்றின பெரும் பாரத்தையும் கடமையையும் ஏற்றுழைக்க பின்னடைய மாட்டார்களென்று பூர்ணநம்பிக்கை எனக்கு உண்டு. பரோடா கிராமங்களில் புதியமாதிரியான விவசாயத்தையும், புத்திசாலித்தனமாய் காரியம் சாதித்துக் கொள்வதையும், நாகரிகமாய் காலங்கழிப்பதையும் விரும்பும் ஜனங்களாயிருக்கவேண்டும். இந்த கோவாபரேஷன் என்னும் மருந்தினால் பிறருக் குதவியும் தேசத்திற்கு க்ஷேமத்தையும் உண்டுபண்ணுவது மன்றி நமக்கும் சந்தோஷத்தையும் சுலபமாய்க் காலங்கழிக்கும் மார்க்கத்தையும் சாதித்துக் கொள்கின்றோம்.

---

## தஞ்சாவூர் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

---

தஞ்சாவூர் கலெக்டர் மிஸ்டர் ஆர். பி. வுட் ஐ.ஸி.எஸ். அவர்களது அக்கிராசனத்தின்கீழ் அம்மாபேட்டையில் 1914-ம் வருஷம் ஜனவரிமாதம் 10-ம்தேதியில் தஞ்சாவூர் ஜில்லா மூன்றாவது கோவாபரேடிவ் கான்பரென்ஸ் நடைபெற்றது. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்து சுமார் 100 டெலிகேட்டுகள் வரையில் விஜயஞ்செய்திருந்தனர். இதுதவிர பொதுஜனங்கள் பலரும்வந்து கூடியிருந்தனர். வரவேற்புக் கமிட்டி சேர்மன் ராவ்பகதூர் வ. அண்ணாஸ்வாமித்தேவர் அவர்கள் டெலிகேட்டுகளை வரவேற்றுபசரித்தனர். ராவ் பகதூர் என். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு அக்கிராசனத்தமர்ந்த பிரசிடெண்டவர்கள் பின்வருமாறு உபந்நியாசித்தார்.

### மிஸ்டர் ஆர். பி. வுட்டின் உபந்நியாசம்.

இந்தக் கான்பரென்ஸ் இஜ்ஜில்லாவின் மூன்றாவது கோவாபரேடிவ் கான்பரென்ஸென்று நினைக்கின்றேன். இக்கான்பரென்ஸை நடத்த மிக்க முயற்சிசெய்தவர்களுக்கும் முக்கியமாய் டெலிகேட்டுகளையும் என்னையும் வரவேற்றுபசரித்த ராவ்பக

ஆர். எ. அண்ணுசாமித்தேவர் அவர்களுக்கு நான் மிக்க வந்தனம்செலுத்த கடமைப்பட்டவனாயிருக்கின்றேன். இப்பேர்ப்பட்ட ஜில்லா கான்பரென்ஸானது முன் நாமிருந்த நிலைமையையும் இப்போது நாமிருக்கும் நிலைமையையும் இனி நாமிருக்கவேண்டிய நிலைமையும் யோஜித்து அதற்குத்தகுந்தபடி நாம் நடந்துகொள்ள நம்மைத் தூண்டுதல் செய்கின்ற தானபடியால் மிக்க சிலாக்கியமானதென்றே புகழ்ந்து கொண்டாடவேண்டும். மேலும் இக்கான்பரென்ஸ் பொதுஜனங்களை பலவிதத்திலும் தூண்டுதல் செய்து இவ்வுலகின் பலபாகங்களில் நடைபெறும் கூட்டுறவு முறைகளின் அம்சங்களைக் கற்றுணர்ந்து மேன்மேலும் தாம் விருத்தியடையவேண்டிய மார்க்கத்தை காடியுழைக்க கற்பிக்கும். உங்கள் சங்கங்களை கவர்ன்மெண்டார் நிர்வகிக்க ஏற்படுத்தியிருக்கும் சட்டதிட்டங்களும் ஒருவாறு மாதருலடையுமென்று நீங்கள் கருதுவதாகவும் எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் தீர்மானத்திற்குக் கொண்டுவந்துள்ள பல அம்சங்கள் மிக்க அனுபவக் குறைவை யுணர்த்துகின்றன.

கூட்டுறவு முயற்சியின் நூலானது நாளுக்குநாள் விருத்தியடைந்து, இந்த நூலின் விசேஷ பிரக்ஞையுள்ளவர்களுக்கும் சந்தேகங்களை சில சந்தர்ப்பங்களில் உண்டாக்கிவிடுகின்றது. எனக்கு விசேஷ பயிற்சியில்லாத இந்த விஷயத்தைப்பற்றி என்னை உபந்நியசிக்கும்படி நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பதால் நான் மிக்க தர்ம சங்கடமான நிலைமையிலிருக்கின்றேன். நான் உபந்நியசிக்கும்போது கோவாபரேடிவ் முறையின் சுலப சமாசாரங்களை விளக்குவதிலும் தப்பிப்போகலாம். நான் இவ்விஷயத்தில் நன்றாய்க் கற்றறிந்தவனல்ல. ஆததால் பிழைகளைத் தள்ளி குணங்களைக் கிரகித்து என்னை கௌரவிக்க வேண்டுகின்றேன். இந்தக் கான்பரென்ஸில் படிக்கப்படும் வியாசங்களினின்றே நான் மிக்க கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்களை எதிர்பார்க்கின்றேன்.

முதல் முதல் நான் எனக்குத் தெரிந்தவரையில் ஆதிகாலத்தில் எந்த நிலைமையில் கோவாபரேஷனிருந்த தென்றும் இப்போது எங்ஙனமிருக்கின்ற தென்றும் ஒத்திட்டுச் சொல்லுகின்றேன். சமீபத்தில் நான் தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இந்துதேச சரித்திரத்தைப் படித்தேன். அதில் ஹிந்துஸ்தானத்தில் முதல் முதல் வசித்து ஜீவனம் செய்து வந்தவர் கோல்ஸ்ஜாதியார்களும், திராவிடர்களுமாகுமென்றும், பின்னர் துரானியர் படையெடுத்து அவர்கள் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனரென்றும் அதன் பின்னர் ஆரியர்கள், பாரஸிகர்கள், கிரேக்கர்கள், ஸித்தியர்கள் முதலிய பல ஜாதியார்கள் படையெடுத்து ஒருவரையொருவர் முறையே ஜெயித்து ஜீவனம்செய்து வந்தனரென்றும் கூறப்பட்டிருந்தது. அதில் ஆரியர்கள் துரானிபரையும் இதர ஜாதியார்களையும் ஜெயித்து இந்தியாவிற்குத் தென்கோடிக்கும் மலைப்பிரதேசங்களுக்கும் அவர்கள் ஓடிப் பிழைக்கும்படி ஏற்பாடுசெய்து தங்கள் ஜனங்களை இந்தக் கூட்டுறவு முறையால்தான் வேலைகளை வகுத்துக்கொண்டு சுகமாய் ஜீவனம் செய்து வந்தனர். அதினால் வந்ததுதான் இப்போது உங்களுள் காணப்படும் ஜாதிப்பிரிவினை. அவர்களுள் பூஜைசெய்யும், தொழிலையும் நூல்கற்கும் தொழிலையும், ஒருவர் ஏற்றுக் கொண்டனர்; அவர்களை பிராமணர் என்னப்படுபவர். சண்டை செய்யும் தொழிலை ஒருவர் ஏற்றுக்கொண்டனர்; அவர்களை க்ஷத்திரிய ரென்னப்படுபவர். பிறகு வியாபாரம் செய்ய வைசியரென ஒருவகுப்பாரையும், மேற்சொன்ன மூன்று வகுப்பாருக்கு உதவி புரிய சூத்திரரென்ற நான்காம் வகுப்பாரையும் ஏற்படுத்திக்கொண்டனர். கூட்டுறவால் ஏற்பட்ட அந்த ஜாதிக்கட்டுப்பாடானது எவ்விதப் படையெழுச்சிக்கும், பஞ்சத்திற்கும், சண்டைக்கு மசையாமல் நாளது தேதிவரையில் யாதொரு பங்கமுமின்றி நிற்கின்றன.



அதன்பிறகு புதுமாதிரியான கூட்டுமுறை யுணர்ச்சி மனிதர்களுக்குண்டாகியது. முன்காலத்தில் ஒரு ஜில்லா மற்றொரு ஜில்லாவோடும் ஒரு கிராமம் மற்றொரு கிராமத்தோடும் சேரமுடியாதபடி நடுவே பெரிய காடுகள், கொள்ளைக்கூட்டத்தார்கள் இருந்தனர். ஆகையினால் ஒவ்வொரு கிராமத்தாரும் ஜில்லாதாரரும் தமது ஜீவனத்திற்கு வேண்டிய பொருள்களை சம்பாதித்துக்கொள்ள கூட்டுமுறையை யொட்டினபடி சிலர் கொத்துவேலையும், சிலர் தச்சவேலையும் சிலர் கொல்லுவேலையையும் பகிர்ந்து கொண்டு பஞ்சாயத்தார்க்குட்பட்டதாய் காலங்கழித்து வந்தார்கள். இம்மாதிரியான கிராமங்கள் சில இத்தஞ்சை ஜில்லாவிலும் சிற்சில விடங்களிலிருக்கின்றன.

ஆகையினால் முன்காலத்திலேற்பட்ட கூட்டுமுறையெல்லாம் ஜாதிக் கட்டுப்பாட்டைக் காத்துக்கொள்வதற் கேற்றதெனக் கூறலாகும். மனிதர்கள் அக்காலத்தில் ஒற்றுமையாயில்லாது போனால் ஒவ்வொருவரும் காலந்தவறாது கஷ்டப்பட்டிருப்பார்கள். இப்போதோ கவர்ன்மெண்டார் அவ்வித எண்ணங்களையெல்லாம் முற்றிலுமாற்றி ஒவ்வொருவரும் தம் தம் ஜீவனத்தை தம்முதவியாலேயே சாதித்துக்கொள்வதற்கான அநுகூலங்களை யேற்படுத்தியிருக்கின்றனர். இப்போது புதிய மாதிரியாயேற்பட்டிருக்கும் கூட்டுமுறையால் ஜாதி மதங்களுக் கொருவித அநுகூலங்களு மேற்படாது. ஜனங்களுக்குள் அதிக ஒற்றுமை பரவும். ஒவ்வொருவருக்கும் மிகுந்தலாபமேற்படும். சந்தேகமின்றி இந்தியாவில் கூடிய சீக்கிரத்தில் இப் புதுமாதிரியான கூட்டு முறையானது பரவி மிக்கச் சிறப்புற்று விளங்கும்.

தற்காலத்து கூட்டு முயற்சியானது ஐக்கிய நாணயம், ஐக்கிய விற்பனை ஐக்கிய வியாபாரம் என்றும் பல பாகங்களாய் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாணயமின்னதென்பது உங்களெல்லோருக்கும் தெரியும். இந்தியாவின் கிரவியாபிவிருத்தியை யுத்தேசித்து மிக்க உழைத்திருக்கும் ஸர் பிரெடரிக் நிக்கல்ஸன் அவர்களுக்கு யாம் மிக்க வந்தன மளிக்கவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் கூட்டுறவு முயற்சியானது வெகு தீவிரமாய் விருத்தியடைந்து வருகிறது. தஞ்சாவூர் 62 சங்கங்களைத் தான் பெற்றிருக்கின்றது. இதற்குக் காரணம் தஞ்சாவூர் மிராசுதார்கள் ஐக்கிய நாணயத்தின் மூலமாய் குறைந்த வட்டிக்குப் பணத்தை வாங்கி தம் காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டிய அவ்வளவு கேவல ஸ்திதியிலில்லையெனத் தெரிகிறது. இவர்கள் பணத்தை வட்டிக்கு விடுகிறவர்களே தவிர வட்டிக்கு வாங்குகிறவர்களல்ல. இம்முயற்சிக்குத் தலைமை வாய்ந்து நடத்தவேண்டியவர்களிவ்வித ஸ்திதியிலிருக்கும்போது ஏழைகள் யாது செய்வார்கள். அவர்கள் தாமே செய்து கொள்ளக்கூடிய காரியமொன்றுமில்லை. இந்த ஜில்லாவிற் கற்றுத் தேர்ந்த கனவான்களதிகம். அவர்கள் முயன்றால் ஒவ்வொரு கிராமத்திலும் கோவாபரேடிவ் சங்கங்களைக் காணக்கூடும். இச்சங்கங்கள் இந்த ஜில்லாவிற்கு மிக்கத்தேவைதான். பணம் வட்டிக்கு விடும் லேவா தேவிக்காரர்கள் 100 க்கு 8 அல்லது 10 வீதத்திற்குக் குறையாமல் வட்டிக்கு விடுகின்றனர். 100 க்கு 18 அல்லது 20 வீதம் வட்டிக்கு விடுகிற சில புண்ணியவான்களிருக்கிறதாயும் நான் கேட்டிருக்கின்றேன். சில மிராசுதார்கள் வட்டிக்கு விட மன சம்மதமின்றி தங்கள் வீட்டுக்கூரையிலும், சட்டியில் போட்டு பூமிக்குள் புதைத்தும் வைத்திருக்கின்றனர். பணத்தை விருதாவாய் சேமித்து வைத்தல் நஷ்டமல்லவா? கடைசியில் அப்பணம் அவர்களுக்கு ஆபத்தாகவுமிருக்கும். கூட்டுமுறைச் சங்கங்களில் பணத்தைப் போட்டுவைத்தால் ஏழைகளுக்குதவியாகவும் தங்கள் பணத்துக்கு விருத்தியாம்சமாகவு மிருக்கும். கற்றறிந்த பெரியோர்கள் பணத்தைக் கட்டித் தூங்கவைத்திருப்பவர்களைத் தூண்டுதல்செய்து சங்கத்தில் போட்டுவைக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்.

கோவாபரேடிவ் விற்பனைச் சங்கங்களும் இதரசங்கங்களும் உங்களைப் போலொத்த புத்தி சாலிகளுக்கும் நிர்வகிப்பதற்குக் கஷ்டமான அநேக பிரிவுகளுடையன. ஆனாலுங்களுக்குத் தெரியவேண்டிய அம்சங்கள்யாவும் ரிஜிஸ்ட்ராரிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளக்கூடும். எம்மாதிரியான சங்கங்வைத்து நடத்தினபோதிலும் உங்களிடம் "கண்ணியமும் நன்னம்பிக்கையு மிருக்கவேண்டும். உங்களுக்கிதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகின்றேன். நான் மலையாளத்திலிருந்தபோது அநேகர் ரப்பர் கம்பெனியார்க்குத் தமது நிலத்தை வாடகைக்கோ விற்பனையாகவோ கொடுத்தனர். நான் அவர்களை ஏன் நீங்கள் கம்பெனியாக ஒன்றுசேர்ந்து ரப்பர்பயிர் செய்யக்கூடாது? என்று கேட்டேன். அதற்கவர்கள் எங்களிடம் ஒற்றுமையில்லை, ஐயா என்றனர். இவ்வூர் ஏழை மிராசுதார்கள் சிலரையும் யான் நீங்கள் ஏன் ஒற்றுமையாய் அரிசியந்திரம் வைத்து வேலைசெய்யக்கூடாதென்று கேட்டேன். அதற்கு அவர்கள் அதே பதிலைத்தான் கொடுத்தனர். இச்சங்கங்கள் நிச்சயமாய் உங்களுக்குள் ஒற்றுமையும் நன்னம்பிக்கையு மேற்படுத்தும். அவ்வித முண்டாக்காதுபோனால் நிச்சயமது நிலைகுலைந்து போகும்.

கனவான்களே, உங்களை நான் அதிகநேரம் காத்துவைக்க எனக்கிஷ்டமில்லை. இக்கான்பிரன்ஸின் பலனாய் அநேக வித சங்கங்கள் இந்த ஜில்லாவிலேற்பட்டு ஒவ்வொன்றும் நாளுக்குநாள் விருத்தியடைந்து க்ஷேமமாயிருப்பது என் பிரார்த்தனை. ஜனங்கள் யாவரும் ஒற்றுமையாயுழைத்து வேலைசெய்வீர்களாக.

இதன்பிறகு தஞ்சை ஜில்லாவிலிருந்த கோவாபரேடிவ் சங்கங்களின் சென்ற வருஷாந்திர ரிப்போர்ட்கள் வாசிக்கப்பட்டன. சென்ற வருஷமிருந்த மொத்த மெம்பர்களின் சங்கியை 5071; அதற்கு முந்திய வருஷத்திலோ 3184 பேர்கள்தானிருந்தனர். மூலதனம் ரூபா 205,426 விருந்து ரூபா 344, 139க் கதிகரித்திருக்கிறது. இவற்றில் ரூபா 50,729 உள்ளூரிலிருந்து கிடைத்தது. சுமார் 3643 பேர்கள் ரூபா 3,19,666 வரையில் கடன்வாங்கியிருக்கின்றனர்.

கான்பரென்ஸ் திரும்பமாலையில் கூடியபோது கலெக்டரின் பெர்ஸனல் அஸிஸ்டண்டாகும் மிஸ்டர் கே. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

I. லிமிடெட் (பொறுப்பு வரையறுக்கப்பட) சங்கங்களிலும் அன் லிமிடெட் (பொறுப்பு வரையறுக்கப்படாத) சங்கங்களிலும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணத்தை போட்டுவைக்கும்படி ஏற்படுத்தியிருக்கும் சட்டதிட்டங்கள் சிலவற்றை சீர்திருத்தவேண்டும்.

II. கவர்ன்மெண்டார் தமது உத்தியோகஸ்தர்கள் இச்சங்கங்களில் மெம்பர்களாய் சேர்ந்துழைலவாதேவி வைத்துக்கொள்ளும்படி அநுமதிகொடுக்க இக்கான்பரென்ஸ்வேண்டிக்கொள்கிறது.

III. மெம்பர்களிடமிருந்து சில வேளைகளில் சங்கங்கள் தாம்கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதில் வியாஜ்யம் செய்து பெறவேண்டியிருக்கிறது. அச்சமயத்தில் கோர்ட்டார் தமதிஷ்டம்போல் தீர்ப்புச்செய்கின்றனர். இக்கான்பிரன்ஸார், அவ்விதம் செய்யாது தகுந்தபடி வட்டி நஷ்டமின்றி தீர்ப்புச் சொல்லுவதற் கனுகூலமாய் ஸிவில் ப்ரோஸீஜர் கோட் 34-வது செக்ஷனைத் திருத்த இந்தியா கவர்ன்மெண்டாரை இக்கான்பரென்ஸ் வேண்டிக்கொள்கிறது.

IV. டிரஸ்ட் பண்டுகளை கோவாபரேடிவ் சங்கங்களில் போட்டு வைக்கும்படிக்கும், இதற்கு அதிகாரம் கொடுக்கும்படி ஹைகோர்ட்டாரால் ஒருவித சட்ட மேற்படுத்தும்படிக்கும் 1882-வது வருஷத்து இந்தியன் டிரஸ்ட் ஆக்டை சீர்திருத்தவும் இக்கான்பிரென்ஸ் வேண்டிக்கொள்கிறது.



V. இந்த ஜில்லாவில் தகுந்த விடங்களில் பின்வரும் மாதிரியான சங்கங்களை ஏற்படுத்த இக்கான்பரென்ஸ் வேண்டிக்கொள்கிறது.

(a) கோவாபரேடிவ் விவசாயச் சங்கங்கள்.
(b) கோவாபரேடிவ் பாற்சங்கங்கள்.
(c) கோவாபரேடிவ் நெசவுச்சாலைகள்.
(d) கோவாப்ரேடிவ் கட்டடச்சங்கங்கள்.
(e) கோவாபரேடிவ் அரிசிச்சங்கங்கள், வேர்க்கடலை விற்பனைச் சங்கங்கள், நெல் விற்பனைச் சங்கங்கள், எண்ணெய் ஆலைகள் முதலியன.
(f) கோவாபரேடிவ் கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்கள்.
(g) கோவாபரேடிவ் எரு உற்பத்திச் சங்கங்கள்.

VI. ஒத்தக்கடைச் சங்கம் பைலா நெ 17 பிரகாரம் கூட்டுக்கடன் வாங்கு மேற்பாட்டைப்பற்றி சட்டமேற்படுத்தியிருப்பது, விவசாயக் கூட்டுறவு ஏற்பாட்டில் செய்திருக்கும் முதல்சட்ட மாகுமென்று இக்கான்பரென்ஸ் அபிப்பிராயங் கொள்கிறது. ஆகையினால் அம்மாதிரி பைலா ஒன்று உண்டாக்க வேண்டிக்கொள்ளுகிறது.

## இரண்டாவது நாள்.

கும்பகோணம் ராவ்பகதூர் என். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் கிராம சுகாதார விஷயத்தில் கூட்டுறவு அங்கத்தினர் யாதுசெய்ய சாத்தியமாகுமென்பதைப்பற்றி பின்வருமாறு உபந்நியசித்தார்:—

அநேக சீர்திருத்தங்களுக்குதவியாய் கோவாபரேஷன் நிற்பதுள் சுகாதாரச் சீர்திருத்தமுமொன்றாகும். கவர்ன்மெண்டார் இதைப்பற்றி வெகுநாட்களாய் யோஜித்துக் கொண்டிருக்கின்றனர். கவர்ன்மெண்டாருடைய நோக்கத்திற்கு மாறுதலாய் ஜனங்கள் வெவ்வேறு விதமாய் அபிப்பிராயப்படுதலால் அவர்களுக்கு தங்களெண்ணத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் சிரமமேற்படுகிறது. நாமும் இதனுந்தேசமாய் பணத்தையும் காலத்தையும் பாராமல் வேலை செய்யவேண்டியதவசியம். நமக்கிதர வேலைகளனந்தமிருப்பினும், ஜன சௌக்கியார்த்தம் நாம் முதலில் பாடுபடுவதையே லக்ஷியமாகக் கொள்ளவேண்டும். நமது இலாபத்தில் சிலபாகத்தை, இப்போது புதிதாய் ஏற்பட்டிருக்கும் ஆக்ட் உணர்த்துவதை யொப்ப தர்மச் செலவுசெய்ய எண்ணங்கொள்ளவேண்டும். இவ்வித தர்மம் செய்வதில் கிராமத்திலுள்ள எளிய ஜனோபகாரத்தைவிட மேலானவழி வேறில்லையென்பது எனதெண்ணம். கிராம சுகாதார நிமித்தம் நமது கையிலுள்ள தர்மபண்டும் போறாமல் தலைவரி விதித்துப்பெறவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டாலும் நாம் அவ்வரியைச் செலுத்தத் தயாராகவே யிருக்கவேண்டும். முதலில் ஏககாலத்தில் எல்லாக்கிராமங்களுடைய சுகாதார சௌக்கியத்தையும் சீர்திருத்தல் சம்பாவியமலாது. ஆதலினாலே நல்ல நிலைமையில் தக்க கோவாபரேடிவ் சங்கங்களைப் பெற்றிருக்கும் கிராமங்கள் தங்கள் சங்கத்தின் வரும்படியின் சொற்பபாகத்தையோ பெரும்பாகத்தையோ கொண்டும் பிறகு ஜனங்கள் அவரவரிஷ்டப்படி உதவும் தொகையைக்கொண்டும் சுகாதார சீர்திருத்தம் செய்துகொள்ளவேண்டும். ஆனாலவர்களெண்ணம் ஆரம்பமுதலிலேயே ஆடம்பரமாயிருக்கக்கூடாது. முதலில் கிராமப்பாதைகளை சீர்திருத்திக்கொள்ளுதல், ஸ்நானபானத்திற் குதவியாகும் நீர் நிலைகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளுதல், மற்றை யொட்டி நோய் நொடிகள் விளைவிக்கக்கூடிய அசுத்தங்களை மைத்துக்கொள்ளா

மல் அப்போதைக்கப்போது சுத்தஞ்செய்தல், ஆகிய இவைகளை சௌகரியப் படுத்திக்கொள்ள முயலவேண்டும். இவ்விதம் சிறுகச் சிறுக கிராமப் பஞ்சாயத்தார்கள் தமது சௌகரியங்களை யேற்படுத்திக்கொள்வதோடு தமது அதிகாரத்தையும் விருத்தி செய்து கொள்ளலாம்.

மிஸ்டர் டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் ஐக்கிய நாணயச்சங்கங்களை நிருவகிக்கும் ஏற்பாட்டைப்பற்றி ஓர் வியாஸமெழுதிப்படித்தார்.

மதராஸ் ஸென்ட்ரல் அர்பன்பாங்கியானது கோவாபரேடிவ் சங்கங்களிலொன்றாய்ப் பதிவு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்ற போதிலும் சிற்சில அம்சங்களில் அப்பாங்கி கூட்டுமுறைக்கேற்ற ஸ்வாதீனங்களை மட்டுப் படுத்துகின்ற அம்சங்களைப்பெற்றிருப்பதாய்த் தெரிகிறது. எது எப்படியிருந்தபோதிலும் இவ்வளவு வருஷகாலமாய அது நடைபெற்று வந்ததின்பலனாய் அநேக சங்கங்களுக்கு திரவிய முதவிசெய்யக்கூடிய ஸ்திதியிலிருக்கின்றது. கோவாபரேடிவ் சங்கங்கள் ஒன்றுக்கொன்று சமீபத்திலிருக்கும் அநேக கிராமங்கள் ஒன்று சேர்ந்து ஒரு யூனியனை யேற்படுத்திக்கொண்டு தமது சங்கங்களை மேற்பார்வையிடவோ வேறுபல சௌகரியங்களை ஸென்ட்ரல் பாங்கியாரிடமிருந்து பெறுவதுபோல் செய்துகொள்ளக்கூடும். இவ்வித யூனியனை கிராமச்சங்கங்கள் தாம் பெறும் கைம்மாறுக்குப் பிரதி பலனாய் ஆதரிக்கவேண்டிய தவசியம்தான். இவ்விதம் அநேக யூனியன்கள் ஏற்பட்டால் இவைகளைக்கொண்டு இதற்குமேல் அதிகாரத்தை வகிக்கக்கூடிய ஸென்ட்ரல் யூனியன்கள் ஸ்தாபிதம் செய்துகொள்ளலாம். இவ்விதம் ஐரோப்பாவில் அநேக யூனியன்களும் ஸென்ட்ரல் யூனியன்களு மேற்பட்டு நல்ல ஸ்திதியிலிருக்கின்றன. நம்மாகாணத்தில் அவ்வாறே ஏற்படுத்திக்கொள்ள பலவருஷங்களாய் பிரயத்தனித்தும் இதுவரையில் அவ்விதம் ஏழுலோகல் யூனியன்கள்தான் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வித யூனியன்களின் உதவியால் வேண்டிய விடங்களில் புதுச்சங்கங்களை ஏற்படுத்திக்கொள்ளவும் வேண்டியபடி பணப்புழக்கம் செய்து கொள்ளவும் கூடும்.

பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

(a) கோவாபரேடிவ் சங்கங்கள் தங்களுக்குள்ளடங்கிய பிராந்தியங்களில் எலிமெண்டரி ஸ்கூல்கள் ஏற்படுத்தி அதில் எல்லாப்பிள்ளைகளும் படித்துக் கற்கும்படியாய் ஏற்பாடு செய்யும்படி இக்கான்பரென்ஸ் தூண்டுகிறது.

(b) நல்ல நிலைமையிலிருந்து லேவாதேவி செய்து வருகிற சங்கங்களின் நிழ் லோகல் போர்டார்கள் தமது பள்ளிக்கூடங்களில் சிலவற்றை மேர்ப்பார்வையில் வைக்க வேண்டுகிறது.

(c) கிராம சுகாதார விஷயத்திலும், கிராம ரஸ்தாக்கள் விஷயத்திலும் கோவாபரேடிவ் சங்கத்தார் தலையிட்டுதவிபுரியும்படி லோகல்போர்டார்கள் தூண்டுதல் செய்ய வேண்டும்.

இந்த ஜில்லாச் சங்கப் பஞ்சாயத்தார்கள், சங்கமெம்பர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதிலும், சங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கியிடமிருந்து தாம் வாங்கிய கடனைத் திரும்பச்செலுத்துவதிலும் அதிக நாணயமாயிருக்கும்படி நிர்ப்பந்திக்க வேண்டியதென்று இக்கான்பரென்ஸ் ஞாபகமூட்டுகின்றது.

எலிமெண்டரிப் பள்ளிக்கூடங்களிலும் எலிமெண்டரி டிரெயினிங் பள்ளிக்கூடங்களிலும் கூட்டுறவு நூலையும் ஒருபாடமாய்க் கற்பிக்கும்படி நிர்ப்பந்திக்க கல்வி இலாகா டைரக்டரை இக்கான்பரென்ஸ் வேண்டிக்கொள்கிறது.



மதராஸ் கவர்ன்மெண்டாரால் 1913-ம் வருஷம் டிசம்பர்மாதம் 2-ந்தேதி "போர்ட் ஸேன்ட் ஜார்ஜ்" கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கும் சட்டக்குறிப்புகளை பின்வருமாறு சீர்திருத்தியபின் அமுலுக்குக் கொண்டுவர இக்கான்பரென்ஸ் பிரார்த்திக்கின்றது.

1. 5-வது சட்டப்படி ரிஜிஸ்ட்ராருடைய அங்கீகாரத்திற்குப் பிறகு ஒருசங்கம் தமது சட்டவிதிகளைத் திரும்ப ஜனப்பொது மீட்டிங்கு முன்பாகக் கொண்டு வரவேண்டுவது அவசியம். ரிஜிஸ்ட்ரார் அங்கீகாரம்செய்த சட்ட அம்சங்களை சங்கங்கள் அறிந்தவுடன் அமுலுக்குக் கொண்டுவரலாம்.

2. பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களிலுள்ள பங்குத்தொகைகளுக்கு 100-க்கு ஆறு வீதம் டிவிடெண்டு அல்லது இலாபவட்டி கிடைக்கும் கிஷ்கரிஷையை ஏற்படுத்தவேண்டும். இப்பங்கு வட்டியைப் பிரத்தியேகப்படுத்திய பிறகுதான் நிகரலாபத்தை கணக்கிட வேண்டும்.

3. 1912-வது வருஷத்து ஆக்ட் 11 செக்ஷன் 34 பிரகாரம் தமது இலாபத்தில் சொற்பபாகத்தை க்ஷேமநிதியில் சேர்ப்பித்தபிறகு மிகுதியான இலாபத்தொகையில் சொற்பபாகத்தை ஜனோபகாரார்த்தம் செலவழிக்கும் வழிகள் இன்னவைகளென சங்கங்களைக் கூறும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது. அப்படி நிர்ப்பந்திப்பதாயிருந்தால் 1890-ம் வருஷத்து தர்மநிதி ஆக்ட் இரண்டாவது செக்ஷன் பிரகாரம் அவர்கள் இலாபத்தில் மிகச்சொற்ப பாகத்தைத் தாங்கள் நினைக்கும் வண்ணந்தான் கட்டுப்படுத்தலாம்.

4. எல்லாச் சங்கங்களின் க்ஷேம நிதிகளை தங்கள் வியாபாரத்தில் ரெஜிஸ்டிரார் உத்திரவின்படி உபயோகப் படுத்த 11-நம்பர் விதியை மாறுதல் செய்ய வேண்டும்.

5. சங்கங்கள்மீது தணிக்கைவரி விதிக்க கவர்ன்மெண்டார் நினைப்பது இப்போது காலம் வாவில்லை யென்றும் ஏற்படுத்தினால் சங்கங்கள் மிகவு பலவீனமடையுமென்றும் இந்தக் கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.


# ஐயா! உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இந்தியன் வலித் தைலம்.

நீங்கள், தலைவலி, முதுகுவலி, வாதம், இன்னும் ஆயிரக்கணக்கான வலிகளால் ஏன் இனிமேல் அவஸ்தைப் படவேண்டும். இவைகளை முழுவதும் சொஸ்தம் பண்ணக்கூடிய மருந்து சமீபத்திலிருக்கிறது. இண்டியன் பெயின் பாம் என்று சொல்லக்கூடிய அமிருதாஞ்சனம் மருந்து, மேற்கூறிய வியாதிகளை பறக்கடிக்கச் செய்யுமென்று நம்புங்கள். உபயோகித்த க்ஷணமே ஆரோக்கியத்தைத் தரும், வலியைத் தணித்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும். முன்னிருந்த அழகு, சந்தோஷம், நிதானம் இவற்றைக் கொடுக்கும். போன பாலியத்திலுள்ள ரம்மியமான முகத்தையும், புன்சிரிப்புள்ள பார்வையையும், திருப்பிக்கொடுக்கும். உபயோகமற்ற மருந்துகளையும், ஒன்றுக்கும் பிரயோஜன மில்லாத வலி மருந்துகளையும் விலக்குங்கள். வேண்டுமென்றால், அமிருதாஞ்சனத்தைத் தவிர, வேறு மார்க்கட்டில் கிண்டாடும் எவ்வித மருந்துகளையும் வாங்குகிற தில்லை யென்று உறுதியாய் ஞாபகம் வைக்கவேண்டும்.




கடிம் லகாரிணி

கடி, மேகப்படைகள் முதலானவைகளை சொஸ்தப்படுத்தும் உறுதியான மருந்து.

பற் போடி.

மலிவாயும் உபயோகமுள்ளதாகவும் உள்ளது. விலை அணு 2-தான்.

இந்தியாவில் மருந்து ஸாமான்கள் விற்கும் வியாபாரிகளிடத்தில் கிடைக்கும்.

அமிர்தாஞ்சனம் டிபோ,
109, ப்ரீர் ரோட் புது ஜெனரல் போஸ்டாபிசுக்கு
எதிரில், தந்திவிலாச "அமிருதாஞ்சனம்" பம்பாய்.


161982

## விளம்பர விகிதங்கள்.

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 6 | 0 | 0 | ,, ,, |

### மற்றவர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

## சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்.

நான்காம் சம்புடம் முடிவுற்றது சந்தாதாரர்கள் தயை கூர்ந்து தமது பாக்கியுள்ள சந்தாவுடன் இந்த சம்புடம் ஐந்துக்குள்ள சந்தாவையும் அட்வான்ஸாய்க் கொடுத்துதவும்படிக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு

மானேஜர்,

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி ஆபீஸ்.

33, அருணாசல ஆசாரி தெருவு,

திருவல்லிக்கேணி.